

முதல் முறை
இதை விறுவிறுப்பான
மர்ம நாவலாய்
படிப்பீர்கள்.
ஆனால் மர்மம்
தீர்ந்த பின்னும்
மீண்டும் மீண்டும்
படிக்க வைப்பதில்
இருக்கிறது
அமானுஷ்யனின்
சிறப்பு!
அமானுஷ்யன்!
என். கணேசன்

# அமானுஷ்யன்

- என்.கணேசன்

1

**அ**ந்த புத்த விஹாரத்தின் கூரையில் தொப்பென்று ஏதோ விழுந்து உருண்டு வாசற்புறத்தில் கீழே விழுந்தது நடுநிசியின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு கேட்டது. உறக்கத்தில் இருந்த புத்த பிக்குகள் கண் விழித்தார்கள். இளம் பிக்கு ஒருவர் சொன்னார். "ஏதோ மரம் விழுந்து விட்டது போலிருக்கிறது"

இமயமலைச்சாரலில் உள்ள அந்த புத்த விகாரத்தின் மீது மரக் கிளைகளும், வேரறுந்த மரங்களும் விழுவது புதிதல்ல.

ஆனால் அவர்களின் குருவான, எழுபது வயதைக் கடந்த மூத்த பிக்கு அமைதியாகச் சொன்னார். "சத்தத்தை வைத்துப் பார்த்தால் விழுந்தது மரமாகத் தெரியவில்லை. மனிதனோ விலங்கோ தான் விழுந்திருக்க வேண்டும். போய்க் கதவைத் திறந்து பார்"

அவர் சொன்னவுடன் எழுந்த அந்த இளம் பிக்கு இரண்டடி வைத்த பின் தயங்கினார்.

என்ன என்று மூத்த பிக்குவின் கண்கள் கேட்டன.

"மனிதன் என்றால் பரவாயில்லை. ஏதாவது விலங்காய் இருந்தால்..." இளம் பிக்குவிற்கு விலங்கிடம் மாட்டிக் கொள்ள விருப்பமில்லை.

"மனிதனாயிருந்தாலும் சரி, விலங்காய் இருந்தாலும் சரி, பிரக்ஞை இருக்க வாய்ப்பில்லை. விழுந்த விதத்தைப் பார்த்தால் அப்படித் தான் தெரிகிறது. விழுந்த சத்தத்தைத் தவிர வேறு சத்தமில்லை. பிரக்ஞை இருந்திருந்தால் கண்டிப்பாக கத்தியிருக்க வேண்டும். எழுந்து ஓடின சத்தமும் இல்லை பார்த்தாயா. போய்ப் பார்"

இளம் பிக்கு தன் குருவை வியப்புடன் பார்த்தார். எதையும் புரிந்து கொள்ள கிழவருக்கு அதிக நொடிகள் தேவையில்லை. இது வரையில் அவர் எதையும் தவறாகப் புரிந்து கொண்டதுமில்லை. ஆனால் அவரும் மனிதர் தானே? எதற்கும் ஒரு ஆரம்பம் என்றும் இருக்கிறதே?....இளம் பிக்குவிற்கு இன்னும் தயக்கமாகவே இருந்தது.

மூத்த பிக்கு தன் பார்வையை மற்ற பிக்குக்களிடம் திருப்ப அவர்களில் இருவர் எழுந்து கையில் விளக்குகளை எடுத்துக்

கொண்டு இளம் பிக்குவிற்குத் துணையாகக் கிளம்பினார்கள். இளம் பிக்கு அசட்டுச் சிரிப்புடன் போய் புத்த விஹாரத்தின் பெரிய மரக் கதவைத் திறந்தார். வெளியே இருந்து பனிக்காற்று பலமாக வீச ஒரு பிக்கு கையில் இருந்த விளக்கு அணைந்தது. மற்ற விளக்கின் வெளிச்சத்தில் விழுந்தது என்ன என்று பார்த்தார்கள்.

வெளியே ஒரு மனிதன் ரத்த வெள்ளத்தில் கிடந்தான்.

*******

**அ**தே நேரத்தில் டில்லியில் ஒரு மனிதன் உறக்கம் வராமல் தவித்துக் கொண்டிருந்தான். சுவர்க் கடிகாரம் ஆமை வேகத்தில் நகர்வதாக அவனுக்குத் தோன்ற, டீப்பாயின் மீது வைத்திருந்த தன் கைக்கடிகாரத்தை எடுத்துப் பார்த்தான். மணி இரண்டிலும் இரவு ஒன்று பத்து தான். அவன் எதிர்பார்த்த போன்கால் வராமல் அவனால் இன்று உறங்க முடியாது. அந்த போன் கால் மணி ஒன்று நாற்பத்திரண்டிற்கு வந்தது. பதட்டத்துடன் அவன் அந்த செல் போனை எடுத்தான். "ஹலோ"

"ஆபரேஷன் சக்ஸஸ்"

அந்த மனிதன் நிம்மதிப் பெரு மூச்சு விட்டான். "எல்லாத்தையும்

விவரமா சொல்லுங்க"

பதினேழு நிமிடங்கள் கழித்து அந்த மனிதன் அந்த செல் போனில் இன்னொரு நபருக்குப் போன் செய்தான். மறுபக்கம் போனை எடுத்தவுடன் சொன்னான். "முடிச்சுட்டோம்"

சில வினாடிகள் மறுபக்கம் மௌனம் சாதித்தது. பிறகு அங்கிருந்து கேள்வி எழுந்தது. "உடம்பை என்ன செஞ்சாங்க"

"மலயுச்சில அவனைத் துப்பாக்கில சுட்டுருக்காங்க. குண்டு பட்டவுடனே அவன் பேலன்ஸ் தவறி உச்சியில் இருந்து கீழே விழுந்துட்டான். அந்தப் பக்கம் பெரிய பள்ளத்தாக்கு. குண்டு படாம விழுந்தாலே எந்த மனுஷனும் பிழைக்க முடியாது......"

"ஃபீல்டுல பலரும் அவனை மனுஷனாய் நினைக்கிறதில்லை. அவனுக்கு அமானுஷ்யன்னு ஒரு பேர் இருக்கு தெரியுமா?"

அந்தக் குரலில் லேசாகப் பயம் இருந்ததாகத் தோன்றியது. உடல் கிடைக்கவில்லை என்ற செய்தி மறுபக்கத்தை சங்கடப்படுத்தியதாகத் தோன்றியது. இரண்டு நாட்களுக்கு முன் CBI அடிஷனல் டைரக்டரையே சுட்டுக் கொன்ற போது அவர் பெரிதாய் அலட்டிக் கொள்ளவில்லை. அந்த அளவு அதிகார

வர்க்கத்தின் உயரத்தில் இருக்கும் இத்தனை பெரிய மனிதரையே பயமுறுத்தும் அந்தக் குண்டடிபட்டு செத்தவனை நினைக்கப் பொறாமையாக இருந்தது.

மறுபக்கம் மறுபடி சொன்னது. "அவன் பிணத்தை அந்தப் பள்ளத்தாக்குல தேடச் சொல்லுங்க. அவன் கிட்ட ஏதாவது பேப்பர்ஸோ, வேறெதாவதோ இருந்தா எடுத்து அனுப்பச் சொல்லுங்க. பிறகு புதைச்சுட்டோ, எரிச்சுட்டோ தகவல் தெரிவிக்கச் சொல்லுங்க...."

"இந்த டிசம்பர் குளிரில் இமயமலைப் பள்ளத்தாக்குல ஒரு பிணத்தைத் தேடறது சுலபமில்லை....."

"எத்தனை செலவானாலும் பரவாயில்லை. வேலையை முடிக்கச் சொல்லுங்க.... உங்க பணம் ஸ்விஸ் அக்கவுண்ட்ல ஐம்பது லட்சம் டெபாசிட் ஆயிருக்கு. அவங்களுக்குத் தர வேண்டிய பணத்தை வழக்கமான இடத்தில் இருந்து நீங்க எடுத்துக்கலாம்..."

"தேங்க்ஸ் சார்"

இணைப்பு துண்டிக்கப்பட்டது. அந்த மனிதன் செல் போனில் மீண்டும் ஒரு எண்ணிற்குப் பேசினான். தனக்குத்

தெரிவிக்கப்பட்டதை தானும் அந்த எண்ணில் பேசிய மனிதனுக்குத் தெரிவித்தான். பின் செல்போனை சைலன்ஸ் மோடில் மாற்றி சமையலறைக்குப் போய் பெரிய எவர்சில்வர் டப்பாவை எடுத்து அதில் நிறைந்திருந்த துவரம்பருப்பின் அடியில் அந்த செல்போனைப் பதுக்கி வைத்தான். ஒரு போலி நபர் பெயரில் பதிவாகி இருந்த அந்த செல்போனை இந்த ஆபரேஷனுக்கு மட்டுமே அவன் பயன்படுத்தி வருகிறான்....

********

"உயிர் இருக்கிறது"

"தலையில் அடிபட்டிருக்கிறது. தோள்பட்டையில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்திருக்கிறது..."

புத்த பிக்குகள் பரபரப்பாய் வந்து சொல்ல, மூத்த பிக்கு உடலை உள்ளே எடுத்து வரச் சொன்னார். "தூக்கி வரும் போது முடிந்த வரை உடலை அசைக்காமல் கொண்டு வரப்பாருங்கள்". இன்னொரு பிக்குவிடம் தண்ணீரைச் சூடாக்கச் சொன்னார். தனதறையில் வைத்திருந்த ஒரு மரப்பெட்டியை எடுத்து வந்து பிரித்தார். அதில் பல விதமான கத்திகள், ப்ளேடுகள், பஞ்சு, தூய்மையான துணிகள், கூரிய கம்பிகள் எல்லாம் இருந்தன.....

உள்ளே எடுத்து வரப்பட்டவனுக்கு வயது 25லிருந்து 30க்குள் இருக்கலாம் என்று மூத்த பிக்கு கணக்கு போட்டார். மாநிறமாக சுமாரான உயரத்துடன் இருந்தான். ஒல்லியாக இருந்தாலும் உறுதியான உடலமைப்பைக் கொண்டவனாக இருந்தான். உடலில் பல இடங்களில் இருந்த வடுக்கள் அவன் அடிபடுவது புதிதல்ல என்று சாட்சி சொல்லின.

மூத்த பிக்கு அமைதியாகத் தன் சிகிச்சையை ஆரம்பித்தார். காயங்களைச் சுத்தம் செய்யும் போது அவன் மயக்க நிலையிலேயே இருந்தான். ஆனால் அவர் அவன் தோள்பட்டையில் இருந்து குண்டை எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போது அதிகமாய் வலித்திருக்க வேண்டும். கண்களைத் திறந்து அவரைப் பார்த்தான். அவர் ஹிந்தியில் அவனிடம் சொன்னார். "கொஞ்சம் பொறுத்துக் கொள். அசையாதே. இரண்டே நிமிடம் தான்...."

அவன் அதன் பிறகு அசையவில்லை. மூத்த பிக்கு அவனுடைய மன உறுதியைக் கண்டு வியந்தார். மயக்க மருந்து இல்லாமல் செய்யப்படும் இந்த சிகிச்சையில் வலி எந்த அளவு இருக்கும் என்பதை அவர் அறிவார். அவன் பற்களைக் கடித்துக் கொண்டு வலியைப் பொறுத்துக் கொண்ட விதம் அவரைப் பாராட்ட வைத்தது. குண்டை எடுத்து விட்டு மூலிகை மருந்துகளால்

உறுதியாகக் கட்டுப் போட்ட பிறகு வலி குறைந்திருக்க வேண்டும். மீண்டும் உறக்க நிலைக்குச் சென்றான்.

மீண்டும் அவன் விழித்த போது அதிகாலையாகி இருந்தது. மூத்த பிக்குவும் இளம் பிக்குவும் அருகில் இருந்தார்கள். அவர்களைக் கண்டவுடன் புன்னகைத்தான். புன்னகைத்த போது முகம் பிரகாசமாகி அழகாகத் தெரிந்தான்.

மூத்த பிக்குவும் புன்னகைத்தார். அவருக்கு ஏனோ அவனை மிகவும் பிடித்துப் போனது. கருணையுடன் ஹிந்தியில் கேட்டார். "எப்படி இருக்கிறது?"

அவன் பரவாயில்லை என்பது போல் தலையாட்டினான்.

"உன் பெயர் என்ன?" அவர் அன்புடன் கேட்டார்.

அவன் விழித்தான். கண்களை இரண்டு மூன்று முறை கசக்கிக் கொண்டு யோசித்தான். ஒன்றுமே தெரியவில்லை. மனத்திரையில் எல்லாமே வெறுமையாக இருந்தது. அவன் தமிழில் தாழ்ந்த குரலில் கேட்டான். "நான் யார்?"

பிக்குகள் இருவரும் விழித்தார்கள். ஹிந்தியில் மூத்த பிக்கு

கேட்டார். "என்ன கேட்டாய்?"

அவன் சிறிதும் யோசிக்காமல் ஹிந்தியில் மறுபடியும் கேட்டான். "நான் யார்?". கேட்ட பின் தான் தன் கேள்வியின் விசித்திரம் அவனுக்கு உறைத்தது போலிருந்தது. அவன் மூளையைக் கசக்கிக் கொண்டு யோசித்தது தெரிந்தது. முகத்தில் படர்ந்த குழப்பம் நீங்காமல் நிறைய நேரம் தொடர்ந்தது. அவனுக்கு அவனைப் பற்றி எதுவுமே நினைவுக்கு வரவில்லை.

மூத்த பிக்குவும் இளம் பிக்குவும் அவனைத் திகைப்புடன் பார்த்தார்கள்.

---

## அமானுஷ்யன் -2

CBI டைரக்டர் மஹாவீர் ஜெயின் தன் அலுவலகத்தின் முன் காரில் இருந்து இறங்குகையில் பத்திரிகை நிருபர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

"சார் அடிஷனல் டைரக்டர் ஆச்சார்யாவைக் கொலை செய்தது யார் என்று தெரிந்து விட்டதா?"

"உங்களுக்கு யார் மீதாவது சந்தேகம் இருக்கிறதா?"

"CBI அடிஷனல் டைரக்டர் கொலைக்கு அரசியல் காரணங்கள் இருக்கும் என்று நினைக்கிறீர்களா?"

மஹாவீர் ஜெயின் கைகளை உயர்த்தி மேலும் வரவிருக்கும் கேள்விகளை நிறுத்தினார். "அவரைக் கொன்றவர்கள் யார் என்பதை கூடிய சீக்கிரம் கண்டு பிடிப்போம். அவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்ப முடியாது. அவரைக் கொன்றவர்களைக் கண்டு பிடிக்க போலீஸ் ஒரு சிறப்புக் குழு அமைத்துள்ளது. அவர்களுக்கு இதில் முழு ஒத்துழைப்பு தருவதுடன் எங்கள் தரப்பிலும் விசாரணை நடக்கும். இப்போதைக்கு வேறெதுவும் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். நன்றி"

நிருபர் கூட்டத்திலிருந்து ஒரு குரல் வந்தது. "உங்களுக்கும் ஆச்சார்யாவுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் இருந்தன என்று கூறுகிறார்களே அது பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

மஹாவீர் ஜெயின் புன்னகையுடன் சொன்னார். "எனக்கும் என் மனைவிக்கும் இடையே எக்கச்சக்கமான கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.....எங்களுக்குத் திருமணமாகி இருபத்தி எட்டு வருடங்கள் ஆகின்றன. என் மனைவி இன்னும் இருக்கிறார்.....என்னை அதிகாரம் செய்து கொண்டு"

பலத்த சிரிப்பலைகள் எழ மஹாவீர் ஜெயின் தன் அலுவலகத்திற்குள் நுழைந்தார். தன் அறை நாற்காலியில் அமர்ந்த போது கடைசியாகக் கேட்கப்பட்ட கேள்வி அவர் மனதை நெருடியது. அவருக்கும் இறந்த ஆச்சார்யாவுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள்....

எத்தனையோ கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஆச்சார்யா மீது அவருக்கு பெரும் மரியாதை இருந்தது. மனிதர் மிக நேர்மையானவர். நல்லவர். ஆனால் அவர் சில விஷயங்களில் ரகசியமாக இயங்கி வந்தார். கடைசியில் எல்லாம் முடிந்த பிறகுதான் ஜெயினுக்கே தெரிவிப்பார். உதாரணமாக, சென்ற வருடம் ஒரு போதை மருந்து கடத்தல் கும்பலை சட்டத்தின் பிடியில் கொண்டு வந்த விதம். CBI ஆட்கள் அந்த கேஸில் ஈடுபடுத்தப்படவில்லை. யாரோ ரகசியமாகத் தெரிவித்தார்கள் என்று சொல்லி, தகவல் தெரிவித்தவருக்கு பெரும் தொகை ஒன்றையும் அவர் பெற்றுத் தந்தார். ஆனால் ஜெயினுக்குத் தெரியும் யாரோ வெளியாட்கள் சிலரை வைத்துக் கண்டுபிடித்திருக்கிறார் என்று. அது பல நாட்கள் செய்த வேலையின் பலன். ஆனால் தகவல் தெரிவித்ததாகச் சொன்ன நபர் அல்லது கண்டு பிடிக்க உதவிய நபர் அல்லது நபர்கள் யார் என்று இன்று வரை ஜெயினுக்குத் தெரியாது. ஆச்சார்யா தன் சொந்த அதிகாரத்தில் அதை வெளிப்படுத்த மறுத்து

விட்டார்.

ஜெயினுக்கு அவருடைய ரகசியத்தன்மை பெரும் எரிச்சலைக் கிளப்பியது. பல முறை வெளிப்படையாகவே அதை அவரிடமும், மற்ற உயர் அதிகாரிகளிடமும் தெரிவித்தும் இருந்தார். CBI வெளி மனிதர்களைத் தங்கள் துப்பறியும் வேலைகளுக்குப் பயன்படுத்துவது புதிதல்ல என்றாலும் முழுக்க முழுக்க யாரோ ஒரு சில வெளியாட்களை அவர் பயன்படுத்துவது தவறு என்று ஜெயின் சொன்ன போது, இங்குள்ளவர்களுள் ஒரு சிலர் மூலம் வெளியாருக்கு தகவல்கள் சுலபமாகச் செல்கிறது என்பதுதான் காரணம் என்பது போல ஆச்சார்யா சொன்னார். யார் அந்தப் புல்லுருவிகள் என்று கேட்டதற்குச் சரியாகத் தெரியவில்லை என்பது அவரது பதிலாக இருந்தது.

வழக்கமான கேஸ்களை அவருடைய டிபார்ட்மெண்ட் ஆட்களே கவனித்து வந்தார்கள் என்றாலும் இப்போதும் ஏதோ ஒரு பெரிய கேஸை அவர் திரை மறைவில் துப்பறிந்து வந்தார் என்று ஜெயினுக்கு சந்தேகம் தோன்றியிருந்தது. அதை உறுதிப்படுத்தும் வகையில் இறப்பதற்கு சில மணி நேரங்கள் முன்பு இரவில் ஆச்சார்யா ஜெயினுக்குப் போன் செய்திருந்தார்.

"சார். நாட்டையே அதிர வைக்கிற மாதிரியான சில தகவல்களை

ஆதாரத்தோட வைத்திருக்கிறேன். நாளைக்குக் காலையில் உங்க டேபிள்ல வைக்கிறேன்."

அப்போதைக்கு என்னவோ ஜெயினுக்கு எரிச்சலாகத்தான் இருந்தது. அவருக்குத் தெரியாமல் தானாகவே ஒரு கேஸை எடுத்துக் கொண்டு திரைமறைவில் இந்த முறையும் ஆச்சார்யா துப்பறிந்து சொல்ல வருவது அவருக்குப் பிடிக்கவில்லை. ஆனால் ஆச்சார்யா சொல்ல வருவதற்கு முன் கொலை செய்யப்பட்டு விட்டார்.

ஆச்சார்யாவின் மனைவி பெங்களூரில் ஒரு திருமணத்தில் கலந்து கொள்ள சென்றிருந்ததால் ஆச்சார்யா வீட்டினுள் தனியாகவே அன்று இருந்திருக்கிறார். நள்ளிரவில் அவர் வீட்டுக்குக் காவல் இருந்த போலீஸ் கான்ஸ்டபிள் முதலில் தாக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார். பின் அவருடைய வீட்டுக்குள் கொலையாளியோ, கொலையாளிகளோ நுழைந்திருக்கிறார்கள். கதவு உடைக்கப்படவில்லை என்பதால் உள்ளே நுழைந்த நபர் அல்லது நபர்கள் ஆச்சார்யாவுக்குத் தெரிந்தவர்களாகவே இருந்திருக்க வேண்டும். ஆள் யார் என்று பார்க்காமல் நள்ளிரவில் கதவைத் திறப்பவரல்ல அவர். உள்ளே நுழைந்த நபர்/கள் அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டு அவருடைய வீட்டுப் பொருள்களைக் கண்டபடி துவம்சம் செய்து விட்டுப் போயிருக்கிறார்கள்....

போலீஸ் விசாரணையின் போது அவரிடமும் கேள்வி கேட்டார்கள். அப்போது ஜெயின் கடைசியாக ஆச்சார்யா செய்த போன் கால் பற்றி சொல்லவில்லை. அந்த போன் காலை அவர் ஏதோ ஒரு காயின் பாக்ஸ் போனிலிருந்துதான் செய்திருந்தார் என்பதால் போலீசிடம் அந்தத் தகவல் இருக்கவில்லை. இவராகவும் அதை சொல்லவில்லை. போலீசில் இருந்து பத்திரிகைகளுக்கு இந்தத் தகவல் கசிவதை அவர் விரும்பவில்லை.

இதை தங்கள் தரப்பிலிருந்தே ரகசிய விசாரணை செய்வது நல்லது என்று ஜெயின் நினைத்தார். அதுவும் இப்போதைய தலைமை அலுவலகத்தில் இல்லாத, தங்கள் வட்டார அலுவலகத்தில் உள்ள ஏதாவது ஒரு திறமையான அதிகாரியைக் கொண்டு விசாரணை நடத்துவது உத்தமம் என்று தோன்றிய உடனேயே அவருக்கு ஒரு பெயர் நினைவுக்கு வந்தது. உடனே சென்னை அலுவலகத்திற்குப் போன் செய்தார்.

*******

அவன் இன்னும் தன் மூளையைக் கசக்கிக் கொண்டு யோசித்துக் கொண்டுதான் இருந்தான். எதுவுமே நினைவில்லை. அவனுக்கு நினைவிற்கு எதுவும் வரவில்லை என்பது தெரிந்த மூத்த பிக்கு

அவனுடைய சட்டை, பேண்ட் ஆகியவற்றை பரிசோதித்துப் பார்த்தார். ஒரு சிறிய காகிதம் கூட இருக்கவில்லை. சட்டை, பேண்ட் இரண்டும் ரெடிமேடாக இருந்ததால் தையல்காரன் பற்றிய தகவல் கூட இருக்கவில்லை. பிறகு மூத்த பிக்கு சொன்னார். "இப்போது எதுவும் நினைவுக்கு வரா விட்டால் பரவாயில்லை. கவலைப்படாமல் தூங்கு. இன்னொரு முறை தூங்கி எழுந்தால் எல்லாம் நினைவுக்கு வரும்" அவர் ஏதோ விதைகளைக் கசக்கி முகர வைத்து அவனை மறுபடி உறங்க வைத்தார்.

அவன் மறுபடி எழுந்து இப்போதும் யோசிக்கிறான். உலகத்திலேயே ஒரு மனிதனுக்கு மிகவும் பரிச்சயமான பெயர் தன் சொந்தப் பெயராகத்தான் இருக்க வேண்டும். ஆனால் ஏனோ அதுவே அவனுக்கு நினைவுக்கு வரவில்லை. அவனுக்கு நினைவு இருப்பதெல்லாம் புத்த பிக்குகளும் இந்த புத்த விஹாரமும்தான். மற்றதெல்லாம் துடைத்தெடுத்தது போல் நினைவரங்கம் வெறுமையாக இருந்தது. தலையில் அடிபட்டது காரணமாக இருக்குமா? தோள்பட்டையில் குண்டு பாய்ந்திருந்ததை மூத்த பிக்கு சிகிச்சை செய்து எடுத்தாரே, யார் சுட்டார்கள்? ஏன் சுட்டார்கள்?

தலையும், தோளும் வலித்தது பெரிதாகத் தோன்றவில்லை. எதுவும் நினைவுக்கு வராதது பயங்கரமாக இருந்தது.

அப்போது புத்த விஹாரத்தின் வெளியே சலசலப்பு கேட்டது. அவன் காதைக் கூர்மையாக்கினான்.

வெளியே இரண்டு இளைஞர்கள் இளைய பிக்குவிடம் கேட்டுக் கொண்டிருந்தார்கள். "இங்கே ஏதாவது மனித உடல் விழுந்திருந்ததா?"

அவர்கள் கேட்ட விதத்திலேயே அவர்கள் உயிருள்ள உடலைத் தேடவில்லை, செத்த பிணத்தைத்தான் தேடுகிறார்கள் என்பது அந்த இளைய புத்த பிக்குவிற்குத் தெரிந்து விட்டது. அவர்களை இதுவரை அந்தப் பகுதியில் பார்த்ததில்லை. அவர்கள் நினைப்பது போல் அவன் சாகவில்லை உயிர் பிழைத்து விட்டான் என்று சொல்ல நினைத்த இளைய பிக்கு வந்திருந்த ஆட்களின் முகத்தைக் கூர்மையாகப் பார்த்தார். நல்ல மனிதர்களாகத் தெரியவில்லை. கண்களில் ஒருவித கொடூரம் தெரிந்ததை அவர் கவனித்தார். இவர்கள் கொலை செய்ய முயன்ற கூட்டத்தாராகக் கூட இருக்கலாம். இல்லையென்றால் இவர்களுக்கு எப்படி ஒரு பிணம் இந்தப் பகுதியில் விழுந்து கிடக்கும் என்று தெரியும்? அப்படி எதுவும் இந்தப் பகுதியில் விழவில்லை என்று சொல்வதே உள்ளே உள்ள வாலிபனுக்கு பாதுகாப்பு என்று தோன்றியது. ஆனால் இந்த புத்த விஹாரத்தில் சேரும் போது அவர் சத்தியம் செய்திருக்கிறார்- எந்தக் காரணத்தை வைத்தும் பொய் சொல்ல மாட்டேன் என்று!

செய்த சத்தியம் பெரிதா உயிர் பெரிதா என்று தனக்குள் கேட்டுக் கொண்ட இளைய பிக்கு சத்தியம் திரும்பவும் செய்து கொள்ளலாம், ஆனால் உயிர் போனால் திரும்பி வருமா? என்று யோசித்து முகத்தில் ஆச்சரியத்தைக் காட்டி "இல்லையே" என்றார்.

வந்தவர்களில் ஒருவன் திரும்பத் தயாரானான். அடுத்தவன் அவனைத் தடுத்து நிறுத்தி புத்தவிஹாரத்தின் கதவைக் காட்டினான். கதவில் இரத்தக் கறை இருந்தது......

இளைய பிக்குவிற்கு ஒரு கணம் இதயத்துடிப்பு நின்று போனது

அமானுஷ்யன்-3

இரத்தக் கறையை முதலில் கவனித்தவன் இளைய பிக்குவிடம் சொன்னான். "நாங்கள் உள்ளே போய் பார்க்க வேண்டும்"

இளைய பிக்கு தயங்கினார். அவரது தயக்கத்தைப் பார்த்தவன் தன் அடையாள அட்டையை நீட்டினான். "போலீஸ்"

"நீங்கள் பிணத்தைத் தேடுகிறீர்கள். நாங்கள் பிணத்தை உள்ளே வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறோம்?"

"இது என்ன ரத்தக் கறை?" கதவைக் காட்டி அவன் கேட்டான்.

மூத்த பிக்கு தன் கையில் பேண்டேஜுடன் வெளியே வந்தார். "என்ன விஷயம்?"

இளைய பிக்கு சொன்னார். "ஏதோ பிணத்தைத் தேடுகிறார்கள். இந்த ரத்தக் கறையைப் பார்த்து உள்ளே வந்து பார்க்கணும்னு சொல்கிறார்கள்"

"இது நேற்று என் கையில் அடிபட்ட காயத்தினால் ஆனது." மூத்த பிக்கு தன் கையில் கட்டியிருந்த பேண்டேஜைக் காட்டினார்.

அவனுக்கு சந்தேகம் நீங்கினாலும் ஏதோ ஒரு எண்ணத்தால் நகராமல் அங்கேயே நின்றான்.

மூத்த பிக்கு கேட்டார். "யாருடைய பிணத்தைத் தேடுகிறீர்கள்?"

"தீவிரவாதி ஒருவன் பிணத்தை"

"என்ன பெயர்?"

அவன் ஒன்றும் சொல்லாமல் தன்னுடன் வந்தவனை

ஆலோசனையுடன் பார்த்தான். உடன் வந்தவன் அவனிடம் மெல்லிய குரலில் சொன்னான். "வேறு இடத்தில் போய் தேடலாம். இவர்கள் சொன்னது போல் பிணத்தை இவர்கள் ஏன் உள்ளே வைத்துக் கொள்ளப் போகிறார்கள்"

"அவன் பிணத்தைக் கண்ணால் பார்க்கிற வரை, அவன் உடலை எரிக்கிற வரை அவன் செத்து விட்டான் என்று நம்ப முடியாது என்கிறார்கள்."

"இத்தனை உயரத்திலிருந்து குண்டடி பட்டு விழுந்தவன் எப்படி உயிர் பிழைக்க முடியும்?"

"தெரியவில்லை. ஆனால் அவனைப் பொறுத்த வரை எதுவும் நடக்கலாம் என்கிறார்கள்"

குரலைத் தாழ்த்தி அவர்கள் பேசிக் கொண்ட போதிலும் மூத்த பிக்கு அருகில் இருந்ததால் முழுமையாகக் கூர்ந்து கேட்டார்.

"எதற்கும் நாங்கள் உள்ளே சென்று பார்த்து விடுகிறோம்" என்று தீர்மானமாகச் சொன்னான் அவர்களிடம் பேசியவன்.

வேறு வழியில்லாமல் மூத்த பிக்கு தலையசைத்தார். இளைய பிக்கு

முகத்தில் வருத்தமும் பயமும் படர்ந்தது.

வந்தவர்கள் இருவரும் உள்ளே செல்ல பிக்குகள் இருவரும் பின் தொடர்ந்தார்கள்.

அது ஒரு பெரிய புத்த விஹாரம். அவர்கள் இருவரும் எந்த இடத்தையும் விட்டு வைக்காமல் பார்க்க ஆரம்பித்தார்கள். அவர்கள் தேடிய நபரைப் படுக்க வைத்திருந்த அறைக்குள் நுழைந்த போது மூத்த பிக்குவிற்கும், இளைய பிக்குவிற்கும் இதயங்கள் வேகமாகவும் சத்தமாகவும் துடிக்க ஆரம்பித்தன. உள்ளே சென்று தேடியவர்கள் இருட்டான மூலைகளைக் கூட கையில் கொண்டு வந்திருந்த டார்ச் லைட்டால் வெளிச்சமாக்கிப் பார்த்தார்கள். அவன் அங்கு இருந்ததற்கான அறிகுறியே இல்லை. அவன் படுத்திருந்த மரக் கட்டில் ஒரு ஓரத்தில் இருந்தது. அதில் சில புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவர்கள் கீழே மட்டுமல்லாமல் அண்ணாந்து மேலேயும் பார்த்தார்கள். விட்டத்தில் கூட அவன் இருக்கலாம் என்பது போல் அவர்கள் தேடல் இருந்தது.

அதற்குள் அவன் எங்கு போயிருப்பான் என்று இரண்டு பிக்குகளும் அதிசயித்தனர்.

அடுத்ததாக அவர்கள் தியான மண்டபத்திற்குள் நுழைய முற்பட்ட போது மூத்த பிக்கு தாழ்ந்த குரலில் வேண்டிக் கொண்டார்.

"எல்லாரும் தியானத்தில் இருக்கிறார்கள். முடிந்த வரை தொந்தரவு செய்யாமல் பாருங்கள்"

இருவரும் தலையாட்டினார்கள். தியான மண்டபத்தின் மத்தியில் ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அந்த விளக்கின் மங்கலான ஒளியில் புத்த பிக்குகள் தியானத்தில் இருந்தார்கள். சிலர் கையில் ஜபமாலை உருண்டு கொண்டிருந்தாலும் அவர்கள் பார்வை வந்தவர்கள் மேல் இருந்தது. மற்றவர்கள் நிஜமான தியானத்தில் இருந்தார்கள். அவர்களுக்கு எதிரே ஒரு பெரிய புத்தர் சிலை இருந்தது. புத்தர் சிலைக்குப் பின்புறம் இருட்டு இருந்ததைப் பார்த்த இருவரும் வேகமாகச் சென்று அங்கே டார்ச் லைட்டை அடித்துப் பார்த்தார்கள். அங்கும் யாரும் இல்லை.

வந்தவர்கள் தியான மண்டபத்தை விட்டு வெளியே வந்து மற்ற அறைகளையும் பார்த்தார்கள். பின் திருப்தியுடன் வெளியே வந்தார்கள்.

உள்ளே அவனைக் காணாததால் இரண்டு பிக்குகளுக்கும் வியப்பு தாளவில்லை. போலீஸ் என்று சொல்லி வந்த அந்த இருவரையும் மூத்த பிக்கு மீண்டும் கேட்டார். "அந்த தீவிரவாதி பெயர் என்ன?"

ரத்தக் கறையைப் பார்த்து ஆரம்பத்தில் சந்தேகப்பட்டவன்

சொன்னான். "ஒரு பெயர் இருந்தால் சொல்லலாம். அவனுக்கு ஆயிரம் பெயர். எதைச் சொல்வது? எது உண்மையான பெயர் என்று யாருக்குத் தெரியும்?"

இருவரும் கிளம்பினார்கள். போகும் போது சலிப்புடன் தன் கூட வந்தவனிடம் சொன்னான். "இனி எங்கே என்று தேடுவது? அவன் பிணத்தை ஏதாவது காட்டு விலங்கு கூட எடுத்துக் கொண்டு போயிருக்கலாம்...."

********

மஹாவீர் ஜெயின் நீட்டிய அந்த •பைலை வாங்கிய ராஜாராம் ரெட்டி அமைதியாக அதைப்படித்தார்.

ராஜாராம் ரெட்டி CBIல் மிகுந்த நன்மதிப்பைப் பெற்ற உயர் அதிகாரி. நாணயத்திற்குப் பெயர் போனவர். எத்தனையோ கேஸ்களை வெற்றிகரமாகக் கையாண்டவர். இரண்டாண்டுகளுக்கு முன் ஒரு மந்திரியின் கிரிமினல் நடவடிக்கைகள் பற்றி கண்டு பிடித்து வெளிக் கொண்டு வரக் காரணமானவர். ஆனால் அந்த வழக்கு நீதிமன்றத்தின் முன் வந்த போது வக்கீல்கள் அவர் கண்டு பிடித்த ஆதாரங்களில் இருந்த சில்லறை ஓட்டைகளைப் பெரிதாக்கி அதிசாமர்த்தியமாக வாதாடி 'போதிய ஆதாரங்கள் இல்லை' என்ற தீர்ப்பை வரவழைத்து அந்த மந்திரியை விடுதலை செய்ய வைத்து

விட்டனர். அந்த மந்திரியின் ஆதரவாளர்கள் தன் முன் நீதிமன்ற வளாகத்தில் ஆடிய ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ரெட்டி நீண்ட நாட்கள் அலுவலகத்தின் பக்கமே வரவில்லை. ஜெயின் அவருடைய வீட்டுக்குப் போய் அவரை சமாதானப்படுத்தி தான் மீண்டும் அந்த சமயத்தில் அழைத்து வந்தார்.

ஆனாலும் வந்த பின் ராஜாராம் ரெட்டிக்கு வேலையில் இருந்த பழைய துடிப்பு இருக்கவில்லை. ரிடையர்மெண்டுக்கு மீதமுள்ள மூன்றாண்டுகளை பிரச்சினை இல்லாமல் கழிக்க வேண்டும் என்ற மனநிலையில் தான் வேலையை இயந்திரத்தனமாக செய்து வந்தார். ஆனாலும் அவரது கூர்மையான அறிவுக்காக அவ்வப்போது அவரிடம் ஜெயின் ஆலோசனைகள் கேட்பது வழக்கம். இப்போதும் தான் தேர்ந்தெடுத்த ஆள் பற்றி அவருடைய கருத்து என்ன என்று அறியத் தான் அந்த •பைலை அவரிடம் கொடுத்து படிக்கச் சொன்னார்.

படித்து முடித்த ரெட்டி முகத்தில் ஒருவித வருத்தம் தெரிந்தது.

"என்ன ரெட்டி?"

"இவ்வளவு புத்திசாலித்தனம், துடிப்பு இருக்கிற ஆளை எத்தனை நாளுக்கு இந்த உலகம் இப்படியே இருக்க விடும்னு தோணுது"

அவர் இன்னும் அந்தப் பழைய மந்திரி கேஸை மறக்க முடியாமல் கஷ்டப்படுகிறார் என்பது ஜெயினுக்குப் புரிந்தது. "சில பேர் கடைசி வரைக்கும் அப்படியே இருந்துடறாங்க ரெட்டி. நம் ஆச்சார்யா இருக்கவில்லையா"

"அவரைக் கொன்னுட்டாங்களே சார்"

ஜெயினுக்கு ஆச்சார்யாவை உதாரணம் காட்டியிருக்க வேண்டாம் என்று தோன்றியது. "ஆனந்தைத் தேர்ந்தெடுத்தது பற்றி என்ன நினைக்கிறீங்க?"

"அருமையான தேர்வு. அதில் சந்தேகமேயில்லை."

"ரெட்டி. ஆச்சார்யாவைக் கொலை செய்தவர்களைக் கண்டு பிடிப்பது CBIக்கு ஒரு கௌரவப் பிரச்சினை. அவர் வழிமுறைகள் நம்மால் ஏற்க முடியாதிருக்கலாம். ஆனால் அவர் நம் தேசத்தின் மீது வைத்திருந்த பக்தியும், அவருடைய நாணயமும் அப்பழுக்கில்லாதது. அவர் ஒரு தடவை CBIக்குள்ளேயே வெளியாட்களுக்குத் தகவல்கள் தரும் ஆட்கள் இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். யார் என்று கேட்டதற்கு சரியாகத் தெரியவில்லை என்று சொன்னார். அதனால் தான் நான் நம் ஆபிஸ் ஆட்களை இதில் ஈடுபடுத்தாமல்

ஆனந்தைத் தேர்ந்தெடுத்தேன்"

ரெட்டி ஜெயினையே ஓரிரு நிமிடங்கள் பார்த்தார். பின் வருத்தத்துடன் சொன்னார். "ஆச்சார்யா கேஸ்ல போலீசுக்கு எந்தத் துப்பும் கிடைக்கலை. அவர் உங்களுக்கு செய்த போன் காலை வச்சு நாம் தான் இப்ப அவர் கண்டுபிடிச்ச புது கேஸ் காரணமாயிருக்கும்னு சந்தேகப்படறோமே ஒழிய போலீஸ் ஏதோ அவர் கண்டுபிடிச்சு தண்டனை வாங்கிக் கொடுத்த பழைய கேஸ்கள் மேல் தான் சந்தேகப்படறாங்க. பழைய கேஸோ, புது கேஸோ அவர் வீட்டு சாமான்களை உடைச்சு அட்டூழியம் பண்ணியிருக்கறதைப் பார்த்தால் பழி வாங்கிற மாதிரி வர்ற சந்தேகம் ஆதாரமில்லாதது போல தோணலை சார். இந்தப் புது கேஸ் தான் காரணமா இருக்குன்னா அது எந்த மாதிரி கேஸா இருக்கும்னு நீங்க சந்தேகப்படறீங்க?"

"தெரியலை. ஆனா எனக்கு அப்படி சாமான்களை எல்லாம் அடிச்சு துவம்சம் செஞ்சிருக்கறது போலீசை திசை திருப்பறதுக்கா இருக்கும்னு தான் தோணுது. ஆச்சார்யா மறு நாள் ஏதோ ஆதாரங்களை என் டேபிள்ல வைக்கிறதா சொல்லியிருந்தார். அந்த ஆதாரங்களைத் தேடி அந்த சாமான்களை விசிறி எறிந்திருக்கலாம். கடைசியில் வேணும்னே அந்த சாமான்களை உடைச்சு ரௌடியிசம் மாதிரி காண்பிக்கிற முயற்சி தான் அதுன்னு நினைக்கிறேன்."

ரெட்டி யோசித்து விட்டு இருக்கலாம் என்று தலையசைத்தார். "சரி அந்த ஆதாரங்கள் அந்த கொலைகாரர்கள் கையில் கிடைச்சிருக்குமா? நீங்க என்ன நினைக்கிறீங்க"

"அது தான் தெரியலை" என்று சொன்ன ஜெயின் பெருமூச்சு விட்டார்.

## அமானுஷ்யன் – 4

மூத்த பிக்குவும் இளைய பிக்குவும் வந்தவர்கள் இருவரும் கண்ணை விட்டு மறையும் வரை நின்று பார்த்து விட்டு பரபரப்புடன் புத்த விஹாரத்தினுள் நுழைந்தார்கள். அவன் எப்படி மாயமாயிருப்பான் என்று வியப்புடன் தியான மண்டபத்திற்குள் இருந்த பிக்குகளிடம் போய் மூத்த பிக்கு "அவன் எங்கே போனான் பார்த்தீர்களா?" என்று கேட்டார்.

"நான் எங்கேயும் போகவில்லை. இங்கேயே தான் இருக்கிறேன்" என்ற குரல் புத்த பிக்குகளின் மத்தியில் இருந்து கேட்டது. மூத்த பிக்குவும், இளைய பிக்குவும் குழப்பத்துடன் புத்த பிக்குகளின் மத்தியில் அவனைத் தேடினார்கள்.

புன்னகையுடன் ஒரு புத்த பிக்குவாக அவன் எழுந்தான். அவன்

பேண்ட் ஷர்ட்டிற்குப் பதிலாக புத்த பிக்குகளின் சந்தன நிற உடையில் இருந்தான். ஒரு சந்தன நிறத் துணியைத் தலையில் கச்சிதமாகக் கட்டியிருந்தது பிக்குவைப் போல மொட்டைத் தலையுடன் இருப்பது போன்ற தோற்றத்தை அந்த மங்கலான விளக்கொளியில் ஏற்படுத்தியது. அவன் தலையில் இருந்த கட்டையும் மறைத்தது. மார்பில் குறுக்கு வாட்டாக புத்தபிக்குகளைப் போல அணிந்திருந்த ஆடை அவன் தோளில் இருந்த கட்டை மறைத்தது.

மூத்த பிக்கு அவனை பிரமிப்புடன் பார்த்தார். "அவர்கள் உன்னை இங்கே கண்டுபிடித்திருந்தால்...."

"அவர்கள் தேடி வந்த ஆள் பேண்ட், ஷர்ட் போட்டிருப்பான். குண்டடி பட்டிருப்பான். பிணமாக இருக்கலாம். படுத்தபடி இருக்கலாம். ஒளிந்தும் இருக்கலாம். ஆனால் கண்டிப்பாக புத்தபிக்குவாக தியான நிலையில் இருக்க மாட்டான். மனிதன் எதிர்பார்ப்பதைத் தவிர வேறு எதையும் காண்பதில்லை குருவே.... இங்கு தியான மண்டபத்தில் வந்த போது அவர்கள் புத்த பகவானின் பின் புறத்தில் இருட்டைப் பார்த்தார்கள். இருந்தால் அங்கேதான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். அதற்குப் பின் அவர்களுக்கு அரைகுறை வெளிச்சத்தில் இருப்பவர்களைப் பார்க்கும் அளவுக்குப் பொறுமையில்லை. வெளிச்சத்தில்

இருந்தவர்களைக் கூட உன்னிப்பாகப் பார்க்க வேண்டும் என்பதை யாரும் அவர்களுக்குக் கற்றுத் தரவில்லை போலிருக்கிறது...."

இளைய பிக்கு மனதில் அவன் ஹீரோவாகி விட்டான். சந்தோஷமாக இளைய பிக்கு கைகளைத் தட்ட மூத்த பிக்கு புன்னகையை மறைத்துக் கொண்டு கடுமையாகப் பார்க்க முயற்சித்தார். ஆனால் அவர் கவனம் பிக்குவின் உடையில் இருக்கும் மற்றவனின் மீதே இருந்தது. தலைக் காயமும், தோள் காயமும் எந்த அளவு வலியை அவனுக்குத் தந்து கொண்டிருக்கும் என்பதை உடலியல் சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்ற அவர் அறிவார். உடல் ரீதியான இந்தப் பிரச்சினையை விடத் தன் பெயர் உட்படப் பழைய நினைவுகள் மறந்து போன அவனுடைய மனநிலை எப்படி இருக்கும் என்பதையும் அவரால் அனுமானிக்க முடிந்தது. ஆனால் எல்லாவற்றையும் மறந்த அவன் எப்படி உயிருடன் இருப்பது என்ற கலையை மிகச் சிறப்பாக நினைவில் வைத்திருக்கிறான். ஒரு வேளை அது அவனுடய உயிரில் கலந்திருக்கிறதோ என்னவோ.

"உன்னுடைய பேண்ட் ஷர்ட் எங்கே?" என்று மூத்த பிக்கு அவனிடம் கேட்டார். வந்தவர்கள் அவற்றை எங்காவது ஒரு மூலையில் பார்த்திருந்தால் கூட நிலைமை விபரீதமாகப் போயிருக்கும்.

"அதையெல்லாம் மடித்து அதன் மேல் உட்கார்ந்து தான் தியானம் செய்தேன்...." அவன் குறும்பாகச் சொல்லிப் புன்னகைத்தான். புன்னகைக்கும் வரை சாதாரணமாகத் தெரிந்த அவன் புன்னகைத்த போது மிக அழகாகத் தெரிந்ததை அவர் மறுபடியும் கவனித்தார்.

அவன் குற்றவுணர்ச்சியோடு சொன்னான். "அவர்கள் உள்ளே வந்து தேடக் கூடும் என்ற சந்தேகம் வந்த போது அந்த அறையில் மடித்து வைத்திருந்த இந்த உடையை உங்கள் அனுமதியில்லாமல் எடுத்துப் போட்டுக் கொண்டேன். மன்னிக்கணும். நான் இதைத் துவைத்து உங்களுக்குத் தந்து விடுகிறேன்...."

இளம் பிக்கு உற்சாகமாகச் சொன்னார். "அது பரவாயில்லை. அது என்னுடைய உடைதான்...."

மூத்த பிக்கு அவனைக் கூர்மையாகக் கவனித்தார். அவன் அந்த உடைகளை அணிந்திருந்த விதம் கச்சிதமாக இருந்தது. முதல் முதலில் ஒரு பிக்குவின் ஆடையை அணிபவர்கள் போல் சிறு சிறு குறைபாடுகள் கூட இல்லை. அவன் நிமிடத்திற்கு நிமிடம் அவரை ஆச்சரியப்படுத்தினான். வந்தவர்கள் அவனைத் தீவிரவாதி என்றார்கள். ஆனால் அவனைப் பார்த்தால் அவருக்கு துளியும் அப்படித் தோன்றவில்லை. மாறாக வந்தவர்களைப் பார்த்தால்தான் அவருக்குத் தீவிரவாதிகளாகத் தோன்றுகிறது.

அவனைத் தேடி வந்தவன் சொன்னது நினைவுக்கு வந்தது. "அவனைப் பொறுத்த வரை எதுவும் நடக்கலாம் என்கிறார்கள்" . மூத்த பிக்கு புன்னகைத்தார். 'அவர்கள் சொன்னபடிதான் இவன் நடந்து கொள்கிறான்.'

அவர் புன்னகையைப் பார்த்த அவன் கேட்டான். "ஏன் சிரிக்கிறீர்கள்?"

"வந்தவர்கள் சொன்னார்கள். 'உன்னைப் பொறுத்த வரை எதுவும் நடக்கலாமாம்'"

அவன் முகம் ஒரு கணம் களையிழந்தது. "அவர்கள் என்னைப் பற்றி வேறு எதாவது சொன்னார்களா?"

"உன் பெயர் என்ன என்று கேட்டேன். 'உனக்குப் பல பெயர் இருப்பதாகச் சொன்னார்கள்"

அவன் ஆழ்ந்த யோசனையுடன் சொன்னான். "அதில் எனக்கு ஒரு பெயர் கூட ஞாபகம் வரவில்லை"

மூத்த பிக்கு அவன் அருகில் வந்து சொன்னார். "உன் பெயர்

எதுவாக இருந்தாலும் நீ சாதாரணமானவன் அல்ல என்றே எனக்குத் தோன்றுகிறது. மலை உச்சியில் இருந்து விழுந்திருக்கிறாய். இங்கு கூரையிலிருந்து கீழே விழுந்த இடத்தில் இருந்த கல்லால் உன் தலையில் அடிபட்டிருக்கிறதே தவிர உன் எலும்புகள் எதுவும் முறியவில்லை. சில நுணுக்கமான மூச்சு வித்தைகள் தெரிந்தால் நம் உடலை மிகவும் லேசாக்கிக் கொள்ளலாம். அப்படி செய்து லகுவாக விழுந்திருந்தால் மட்டுமே எலும்புகள் உடையாது தப்பிக்க முடியும். அதுவும் தோளில் துப்பாக்கிக் குண்டு பட்ட காயம் இருக்கையில் அது போன்ற மூச்சுப் பயிற்சியை செய்ய முடிவது சாதாரணமானதல்ல. மேலும் உன் குண்டை எடுக்கையில் கூட நீ பொறுத்துக் கொண்ட விதம் ஒரு ஹத யோகியின் கட்டுப்பாடாக இருந்தது...."

".... நீ விழித்தவுடன் 'நான் யார்' என்று கேட்டாய். அது ஏதோ ஒரு தென்னிந்திய மொழி. அது உன் தாய் மொழியாக இருக்கலாம். நான் ஹிந்தியில் பேசியவுடன் சுலபமாக நீ ஹிந்திக்கு மாறினாய். நீ அரை மயக்கத்தில் இருந்த போது காஷ்மீரியிலும், உருதுவிலும் பேசினாய். உனக்குப் பல மொழிகள் தெரியும் என்று தோன்றுகிறது. உன்னைத் தேடி ஆட்கள் வந்திருக்கிறார்கள் என்று தெரிந்தவுடன் மின்னல் வேகத்தில் இந்த உடைகளுக்கு மாறியது, உன் பேண்ட் ஷர்ட்டை அப்படியே விட்டு விடாமல் அதைக் கொண்டு வந்து சமயோசிதமாய் தியானம் செய்து கொண்டிருந்த கூட்டத்தில் சேர்ந்து கொண்டது

இதெல்லாம் நீ ஒரு அதிபுத்திசாலி என்பதை உணர்த்துகிறது...."

அவன் அவர் சொன்னதற்குப் பெருமைப்பட்ட மாதிரி தெரியவில்லை. அவன் குறுக்கிட்டுக் கேட்டான். "நான் அரை மயக்கத்தில் காஷ்மீரியிலும் உருதுவிலும் ஏதோ பேசினேன் என்றீர்களே. என்ன சொன்னேன்?"

அவர் சொன்னார். "எனக்கு சரியாகப் புரியவில்லை". ஆனால் உண்மையில் அவன் பேசியது அவருக்கு நன்றாகப் புரிந்தது. அவன் அரை மயக்கத்தில் சொன்னது இது தான். "என் வழியில் வராதீர்கள். வருவது எமன் வழியில் வருவது போலத்தான்"

*****

"ஹலோ"

"CBIயில் ஆச்சார்யா கொலைக் கேஸ் பற்றி துப்பு துலக்க சென்னையிலிருந்து 'ஆனந்த்'ங்கிற ஆபிசரை வரவழைக்கப் போகிறார்கள்" CBIயைச் சேர்ந்த அந்த மனிதன் தெரிவித்தான்.

"ஆள் எப்படி?"

"அவனோட ·பைலை இப்போதுதான் படிச்சு முடிச்சேன். இந்தக் கொலையில் நாம் ஏதாவது தடயம் விட்டு வைத்திருந்தால் கண்டிப்பாய் அவன் கண்டுபிடிக்காமல் விடமாட்டான். ரொம்பவே ஸ்மார்ட்...."

"நாம் ஏதாவது தடயம் விட்டு வைத்திருக்கிறோமா?"

"இல்லை... ஆனால் அப்படித்தான் ஒவ்வொரு கொலைகாரனும் நினைக்கிறான். ஆனந்தை CBI தேர்ந்தெடுத்தது நல்ல சகுனமாக எனக்குப் படலை, சார். அந்த ஆள் கடமைக்கு வேலை செய்யற டைப் அல்ல. ஒவ்வொரு கேஸையும் தனக்கு பர்சனல் சேலஞ்சாய் நினைக்கிற ஆள் அவன். எதற்கும் நாம் ஜாக்கிரதையாக இருக்கிறது நல்லது..."

"அவன் CBIக்கும் அரசாங்கத்துக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டியவன். அவனை எப்ப வேணும்னாலும் நாம் விலக்கிக்கலாம். அப்படி வர்றப்ப நான் பார்த்துக்கறேன். ஆனந்தை விடுங்கள். யார் கட்டுப்பாட்டிலும் இல்லாமல் உலாவும் ஒரு மனிதனை நினைத்து நான் கவலைப்படுகிறேன். எனக்கு அந்த அமானுஷ்யனைப் பற்றி சொல்லுங்கள். அவன் பிணம் கிடைத்ததா?"

"துரதிஷ்டவசமாக கிடைக்கலை, சார். ஆனால் அவன் அந்த உயரத்திலிருந்து குண்டடியும் பட்டு கீழே விழுந்ததால் பிழைக்க வாய்ப்பே இல்லை சார். என்னோட ஆட்கள் அங்கே வலை வீசித் தேடிகிட்டுருக்காங்க..."

மறுபக்கத்திலிருந்து சில வினாடிகள் பேச்சில்லை. யாரோ தாழ்ந்த குரலில் ஃபோன் பேசிக் கொண்டிருந்த நபரிடம் ஏதோ சொன்னது போல் இருந்தது. பின் அந்த மனிதர் கேட்டார். "மலையுச்சியில் இருந்து அவன் கீழே விழுந்தால் உத்தேசமாக எங்கே விழுவான் என்று உங்கள் ஆட்களால் கணக்குப் போட முடியவில்லையா?"

"அவனைச் சுட்டு அவன் விழுந்தது நள்ளிரவு நேரத்தில் சார். அவன் விழுந்தது எங்கே என்று அவர்களுக்குத் தெரியவில்லை. விடிந்தவுடன் அவர்கள் கணக்குப் போட்டுப் பார்த்ததில் ரெண்டு இடங்களில் அவன் விழுந்திருக்க வாய்ப்பு இருந்திருக்கு... அவன் நேராக விழுந்திருந்தால் பல்லாயிரக்கணக்கான அடிகளுக்கு கீழே இருக்கிற பாறைகளில் விழுந்து சிதறியிருக்கணும் சார். அப்படி ஆகியிருந்தால் அவன் உடலை அங்கிருக்கும் மிருகங்கள் சாப்பிட்டிருக்கும்.அவன் கொஞ்சம் டைவர்ட் ஆகி விழுந்திருந்தால் அதில் கால் வாசி தூரத்தில் இருக்கிற புத்தவிஹாரம் ஒன்றின் முன் விழுந்திருக்கலாம்."

"அந்த புத்த விஹாரத்தைச் சேர்ந்தவர்கள் என்ன சொல்கிறார்கள்? உங்கள் ஆட்கள் அங்கே சோதனை செய்தார்களா?"

"அந்த புத்த பிக்குகள் அப்படி ஒரு உடல் விழுந்ததாகத் தெரியவில்லை என்கிறார்கள். அந்த வட்டாரத்தில் அவன் உடலும் கிடைக்கவில்லை. என் ஆட்கள் அந்த புத்த விஹாரத்தின் உள்ளே கூடப் போய் நன்றாகப் பார்த்து விட்டார்கள். அவன் உடல் கிடைக்கவில்லை."

"அந்த அடிமட்டப் பாறைகளைப் போய்ப் பார்த்தார்களா?"

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால்தான் போன் செய்தார்கள். உடல் எதுவும் கிடைக்கலை. பாறைகளை ஐஸ் கவர் செய்திருப்பதால் ரத்தக்கறை இருக்கான்னு பார்க்க முடியலை...."

மறுபக்கத்தில் மறுபடி தாழ்ந்த குரலில் ரகசிய ஆலோசனை. அவன் உடல் கிடைக்கவில்லை என்பது அவர்களை நிறையவே கலவரப்படுத்தி உள்ளது என்பதை உணர்ந்த CBI மனிதன் சொன்னான். "சார்! நீங்க பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. அவன் உயிர் பிழைக்க வாய்ப்பே இல்லைங்கறதுதான் அந்த இடத்துல இருந்த ஆள்கள் எல்லாருடைய கருத்தும்...."

ஒரு நிமிட அசாதாரண மௌனத்திற்குப் பின் மறுபக்கத்திலிருந்து குரல் வந்தது.

"உங்களுக்கு நிலைமை புரியலை. அவனைப் பற்றியும் தெரியலை. நாம் நேரில் சந்திக்கறது அவசியம்னு தோணுது....."

அமானுஷ்யன் (5)

மஹாவீர் ஜெயின் தன் எதிரே அமர்ந்து ·பைலில் மூழ்கியிருந்த ஆனந்தையே பார்த்துக் கொண்டிருந்தார். எத்தனையோ சினிமா கதாநாயகர்களை விட ஆனந்த் அழகாயிருந்தான். வயது 29 என்று ரிகார்டில் இருந்தாலும் இன்னும் இளமையாகத் தெரிந்தான். ஆனால் முகத்தில் ஒரு வித சோகம் கூட இருந்ததாகத் தோன்றியது. ஆச்சார்யாவின் கொலை பற்றிய பைலைப் படித்துக் கொண்டிருப்பதால் ஆச்சார்யாவை நினைத்து சோகமா, இல்லை வேறு ஏதோ வருத்தத்தில் அவன் இருக்கிறானா என்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அவன் படிப்பதை முடித்த பிறகு கொலை நடந்த இடத்தின் புகைப்படங்களை ஆராய்ந்தான். ஆச்சார்யாவின் பிணத்தின் புகைப்படத்தை விட அதிகமாக அவர் வீட்டுக்கு காவலில் இருந்த போலீஸ்காரர் பிணத்தின் புகைப்படத்தை ஆராய்ந்தான். பிறகு போலீஸ் ரிப்போர்ட்டைப் படித்து விட்டுச் சொன்னான். "போலீஸ்

இது ஏதோ பழைய பகை என்று காண்பிக்கவே முயற்சி செய்திருக்கிறார்களே ஒழிய பல விஷயங்களை கண்டுகிட்ட மாதிரியே தெரியலை"

"உதாரணமா..."

"இந்த போலீஸ்காரர் முன்னந்தலையில் பெரிய தடியால் அடித்து அவரைக் கொன்றிருக்கிறார்கள்...."

"ஆமாம். அதற்கென்ன?"

"அப்படியானால் அவர் எதிரே வந்துதான் அடித்திருக்க முடியும்"

"ஆமாம்"

"துப்பாக்கியுடன் காவலுக்கு நிற்கிற ஒரு போலீஸ்காரர் எதிரே யாராவது தடியுடன் வந்தால் சும்மாவா இருப்பார். எவ்வளவு வேகமாக எதிராளி வந்தாலும் குறைந்த பட்சம் துப்பாக்கியையாவது எடுக்காமல் இருப்பாரா. இதில் துப்பாக்கியை எடுத்த மாதிரியே தெரியவில்லையே"

ஜெயினுக்கு அவன் அறிவுக் கூர்மை பிடித்திருந்தது. "அந்தப்

போலீஸ்காரருடன் யாராவது பேசிக் கொண்டிருந்தே இருந்து விட்டு திடீர் என்று அவர் எதிர்பார்க்காத போது அடித்திருக்கலாம்...."

"அப்படியானால் அது அந்த போலீஸ்காரருக்கு நன்றாகத் தெரிந்த மனிதராக இருந்திருக்க வேண்டும். பிறகு ஆச்சார்யாவும் வந்தவருக்கு அந்த இரவு நேரத்தில் கதவைத் திறந்திருக்கிறார் என்றால் அவருக்கும் கொலையாளியை நன்றாகவே தெரிந்திருக்க வேண்டும். அப்படியானால் கொலையாளி இரண்டு பேருக்கும் நன்றாகவே தெரிந்த, அவர்கள் சந்தேகப்படாத ஆள். அதனால் கொலையாளி கண்டிப்பா போலீஸ் சந்தேகப்படற மாதிரி முந்தைய பகையாளியாய் இருக்க முடியாது..."

ஜெயின் தலையாட்டினார். அவன் சில நிமிடங்களிலேயே அந்த உண்மையை அடைந்தது அவரை மனதினுள் சபாஷ் போட வைத்தது. தன் தேர்வு சரிதான் என்ற பூரண நம்பிக்கை அவருக்கு வர "ஆனந்த் அந்த ·பைலில் இல்லாத சில விஷயங்களையும் நீ தெரிந்து கொள்ள வேண்டும்...." என்று அவனிடம் மறைக்காமல் ஆச்சார்யா சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் சொன்னார்.

ஆச்சார்யாவின் பழைய வில்லங்கமான கண்டுபிடிப்புகளை வெளியே யாரையோ வைத்து அவர் செய்த விதம், அந்த நபர்கள்

யாரென "பாதுகாப்பு" காரணங்களுக்காக வெளியே சொல்ல மறுத்தது, அந்த ஆபிசிலேயே புல்லுருவிகள் இருப்பதாக அவர் சொன்னது, கடைசி நாளில் சாவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னதாக அவர் ஃபோன் செய்தது என எல்லாவற்றையும் விளக்கமாகச் சொன்னார்.

கவனமாக எல்லாவற்றையும் கேட்ட ஆனந்த், "அவர் கண்டுபிடிக்கப் பயன்படுத்திய வெளியாள் யாராக இருக்கும் என்று ஏதாவது யூகம் இருக்கிறதா?" எனக் கேட்டான்

"இல்லை"

"ஆபிசில் வேறு யாருக்காவது தெரிந்திருக்க வாய்ப்பு இருக்கா?"

"இல்லை"

"அவர் கடைசியா போனில் சொன்னதை அப்படியே சொல்லுங்க சார்"

"சார், நாட்டையே அதிர வைக்கிற மாதிரியான சில தகவல்களை ஆதாரத்தோட வைத்திருக்கிறேன். நாளைக்குக் காலையில் உங்க டேபிள்ல வைக்கிறேன்னார்"

"அவர் இறந்தது இரவு ஒன்றரை மணிக்கு. உங்களுக்குப் ஃபோன் செய்தது எத்தனை மணிக்கு?"

"சுமார் பத்து இருக்கும்"

"அப்படின்னா அவர் வைத்திருக்கிறதா சொன்ன ஆதாரங்கள் அவர் கையிலேயோ வீட்டிலேயோதான் இருந்திருக்க வாய்ப்பு அதிகம்"

"ஆமாம். அந்த ஆதாரங்கள் அவர் வீட்டிலேயே இன்னமும் இருக்க வாய்ப்பு இருக்கா?"

"பெரும்பாலும் அந்த ஆதாரங்கள் அந்தக் கொலையாளிகள் கையில் கிடைத்து அவர்கள் எடுத்துக் கொண்டு போயிருப்பாங்கன்னு தோணுது."

*********

இரவு மணி பதினொான்று. டில்லி நகரின் புறப்பகுதியில் ஆள் நடமாட்டமில்லாத பகுதியில் ஒரு கார் தனியாக நின்றிருந்தது. CBI மனிதன் தன் காரை அரை கிலோ மீட்டர் தள்ளியே நிறுத்தி நடந்து வந்து அந்தக் காரை அடைந்தான். யாரும் அவனைப் பின்

தொடரவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு அந்தக் கார் ஜன்னலைத் தட்டினான். முன் கதவு திறக்கப்பட்டது. உள்ளே நுழைந்து அமர்ந்தான். உள்ளே விளக்கு இல்ல. தூரத்து தெரு விளக்கின் அரைகுறை வெளிச்சத்தில் சரியாகப் பார்க்க அவனுக்கு சில வினாடிகள் தேவைப்பட்டன.

டிரைவர் சீட்டில் அமர்ந்திருந்த நபரை நேரில் சந்திப்பது அதுவே முதல் முறை. வயது அதிகபட்சம் இருபத்தொன்று இருக்கலாம். குறுந்தாடியுடன் சிவப்பாக இருந்தான். அந்த மனிதன் CBI மனிதனை உணர்ச்சியே இல்லாமல் கூர்ந்து பார்த்தான். அவன் முகம் இறுகி இருந்தது. CBI மனிதன் அவனைப் பார்த்து "ஹலோ" என்றான். அந்த நபர் அவனுடைய ஹலோவை அங்கீகரிக்கவில்லை. பார்வையைத் திருப்பிக் கொள்ளவுமில்லை.

பின் சீட்டில் இருந்து குரல் கேட்டது. "உங்க ஆள்கள் அங்கே இருந்து ஃபோன் செய்தாங்களா?"

CBI மனிதன் பின்னால் திரும்பி வணக்கம் சொன்னான். பின்னால் இருந்த மனிதர் வெறுமனே தலையசைத்தார்.

"செய்தாங்க. ஆனா அவன் பிணம் இன்னும் கிடைக்கலை..."

குறுந்தாடியும், பின்னால் இருந்த மனிதரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அதைக் கவனிக்கத் தவறாத CBI மனிதன் பொறுமையாகச் சொன்னான். "பாருங்க... அவனைப் பற்றி நான் அவங்க கிட்ட தெளிவாய் சொல்லியிருக்கேன். நீங்க சொன்ன மாதிரி அவன் பயங்கரமானவன், அவனுக்குப் பல பேர் இருக்கு, பல வேஷம் போடுவான். அதனால சின்ன அலட்சியம் கூட இருக்கக்கூடாதுன்னு சொல்லி இருக்கேன். அவங்களும் அதை மனசுல வச்சுதான் தேடிகிட்டிருக்காங்க. ஆனா பர்சனலா எனக்குத் தோணறதை மறுபடியும் சொல்றேன். என்னதான் அசகாய சூரனே ஆனாலும் உயிர் இருந்தாத்தானே நாம் கவலைப்படணும். குண்டடி பட்ட அவன் கீழே தண்ணியிலேயோ, மணல்லயோ விழுந்தா பிழைக்க வாய்ப்பு இருக்கு. மலையில இருந்து விழுந்திருக்கான்கிறப்ப......"

பின்னால் இருந்த நபர் அவனுடைய சைகையாலேயே நிறுத்தினார். தன் கோபத்தை அடக்கிக் கொண்டு சொன்னார். "எங்களைப் பொறுத்த வரை அவன் உடம்பு கிடைக்கிற வரை நிம்மதியாய் இருக்க முடியாது. அவனைப் பத்தி முழுவதும் தெரிஞ்சாதான் உங்களுக்கு எங்க கவலை புரியும்.... முதல்ல இந்த பேப்பர்ஸைப் படிங்க"

சொன்னது அவரென்றாலும் அந்தக் காகிதங்களை குறுந்தாடிதான்

நீட்டினான். வாங்கிக் கொண்ட காகிதங்கள் பல இருப்பதைப் பார்த்த CBI மனிதன் "நான் வீட்டுக்குப் போய்ப் படிக்கிறேனே" என்றான். இந்த அரையிருட்டில் படிப்பதுதான் எப்படி. மேலும் இவர்களையே இந்த அளவு பயமுறுத்துபவன் வித்தியாசமானவனாக இருப்பான் போல் இருக்கிறது. புரிந்து கொள்ள நிதானமாய்த்தான் படிக்க வேண்டும்.

பின்னால் இருந்தவர் சொன்னார். "இங்கேயே படிங்க"

தன் கையில் இருந்த டார்ச் லைட்டை அந்தக் காகிதங்களில் அடித்து அவன் படிக்க குறுந்தாடி வசதி செய்தான். அந்தக் காகிதங்களைத் தன்னிடம் தந்தனுப்ப விரும்பவில்லை என்பதைப் புரிந்து கொண்ட CBI மனிதன் அந்த டார்ச் லைட் வெளிச்சத்தில் படிக்க ஆரம்பித்தான்.

படிக்க ஆரம்பித்தவன் சிறிது நேரத்தில் மற்ற எல்லாவற்றையும் மறந்தான். சரியாக நாற்பது நிமிடங்கள் படித்து அவன் முடித்த போது அந்தக் குளிரிலும் அவனுக்கு முத்து முத்தாக வியர்த்தது. "என்னால நம்ப முடியலை....."

"காரணம் நீங்க அவனைப் பார்த்ததில்லை. நாங்க பார்த்திருக்கோம்...."

குறுந்தாடி கண்களில் ஏதோ ஒரு அழுத்தமான உணர்ச்சி வந்து போனது. பயமா? கோபமா?

CBI மனிதன் அதைக் கவனித்தபடியே கேட்டான். "இதுல இருக்கறதுல எல்லாமே உண்மையா?" அவன் அதில் பாதியாவது பொய்யாயிருக்கலாம் என்று எண்ணினான்.

"இதுல உண்மையை வடிகட்டி எழுதியிருக்கிறாங்க. வடிகட்டிப் பார்க்காத விஷயங்க நிறைய இருக்கு. அதையும் எழுதறதுன்னா ஒரு புஸ்தகம் பத்தாது..." பின் சீட்டிலிருந்தவர் சொன்னார்.

அமானுஷ்யன் என்ற பெயர் அந்த செத்துப் போன மனிதனுக்கு மிகவும் பொருத்தம்தான் என்று தோன்றியது. ஒரு வேளை தப்பித் தவறி அந்த அமானுஷ்யன் இறந்து போகாமல் இருந்தால்.... CBI மனிதன் கைக்குட்டையால் வியர்வையைத் துடைத்துக் கொண்டான். இவர்கள் பயத்தின் காரணம் மெள்ள புரிய ஆரம்பித்தது.

அவனையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த குறுந்தாடி முதல் முறையாக வாயைத் திறந்தான். "அவன் பிணத்தைக் கண்ணால் பார்த்து எரிச்சு சாம்பலாகிறதையும் கண்ணால் பார்த்தால் ஒழிய

அவன் செத்துட்டான்னு பல பேர் நம்ப மாட்டாங்க. அதனால அவன் செத்துட்டான்கிறதை எப்படியாவது உறுதிப்படுத்துங்க"

## அமானுஷ்யன் (6)

அவன் நன்றாக ஓய்வு எடுத்துக் கொண்டான். நிறைய நேரம் தூங்கினான். ஆனால் அவன் விழித்திருக்கும் பொழுதுகளில் புத்தபிக்குகளுக்குப் பெரும் உதவியாக இருந்தான். புத்த விஹாரத்தை சுத்தம் செய்ய, உணவு சமைக்க, துவைக்க என்று இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தான். அவன் வேலை செய்வதில் கச்சிதத் தன்மை இருந்தது. அதிகமாக அலட்டிக் கொள்ளாமல் எதையும் லாவகமாக, வேகமாக செய்து முடித்தான்.

மூத்த பிக்கு மற்ற பிக்குகளிடம் சொன்னார். "பாருங்கள். அவன் வேலை செய்யும் போது கூட சக்தியை அனாவசியமாய் விரயம் செய்வதில்லை. செய்ய வேண்டியதை முழுக்கவனத்துடன் சிறப்பான முறையில் சோர்வு ஏற்படுத்திக் கொள்ளாமல் செய்வது எல்லோருக்கும் முடிந்ததல்ல"

அவனை அந்த புத்த விஹாரத்தில் அனைவருக்கும் மிகவும் பிடித்து விட்டது. ஒவ்வொருவரைப் பார்க்கும் போதும் அவன் முகத்தில் படரும் ஆத்மார்த்தமான புன்னகைதான் அவனுடைய மிகப்பெரிய மனம் கவரும் அம்சமாக இருந்தது. மற்ற சமயங்களில்

சாதாரணமாகத் தெரியும் அவன் முகம் புன்னகைக்கும் சமயங்களில் ஒரு வசீகரனாக அவனை ஆக்கியது. எல்லோரும் அவனால் வசீகரிக்கப்பட்டார்கள். என்றாலும் இளைய பிக்கு அவனுடைய பரம ரசிகராகி விட்டார்.

ஒரு முறை அவன் தூங்கி எழுகையில் அருகில் அமர்ந்திருந்த இளைய பிக்கு சொன்னார்.

"நீ தூங்குவது ஒரு குழந்தை தூங்குவது போல இருக்கிறது. அவ்வளவு அமைதியாகத் தூங்குகிறாய். உன்னால் எப்படி முடிகிறது?"

அதில் என்ன இருக்கிறது என்பது போல அவன் இளைய பிக்குவைப் பார்த்தான்.

இளைய பிக்கு தயக்கத்துடன் விளக்கினார். "உன்னை யாரோ கொலை செய்ய முயற்சித்திருக்கிறார்கள். உன் பிணத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். உனக்கோ நீ யார் என்று நினைவேயில்லை. அப்படி இருக்கையில் ஒரு மனிதனுக்குத் தூக்கம் இப்படி வருமா என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது...."

அவன் ஒன்றும் சொல்லாமல் இளைய பிக்குவையே பார்த்தான்.

அவன் முகத்தில் லேசாக வாட்டம் வந்து வேகமாக மறைந்தது. பிறகு புன்னகையுடன் இளைய பிக்குவிடம் சொன்னான். "கடந்த காலம் எல்லாவற்றையும் என்னை மாதிரி மறக்க முடிவது ஒரு விதத்தில் பெரிய வரப்பிரசாதம் இல்லையா? எத்தனை பேர் எல்லாவற்றையும் மறந்து ஒரு புதிய வாழ்க்கை வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். ஆனால் பழையதை மறக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். எனக்கு கடவுள் கேட்காமலேயே அந்த வரப்பிரச்சாதத்தைக் கொடுத்திருக்கிறார்..."

இளைய பிக்கு அவனையே கூர்ந்து பார்த்தார். அவன் தன் கவலையை மறைத்து இப்படிப் பேசுகிறானா இல்லை நிஜமாகவே சொல்கிறானா? "சரி உன்னைக் கொல்ல ஆட்கள் முயற்சி செய்தது?"

"ஒருவன் எப்போது சாக வேண்டும் என்று தீர்மானிப்பது கடவுள்தான். இவர்கள் எல்லாம் முயற்சி செய்து என்ன ஆகப் போகிறது? அவர்கள் முயற்சி செய்து நான் பிழைத்துக் கொள்ளவில்லையா? அப்படி நான் நாளைக்கே சாக வேண்டும் என்று கடவுள் முடிவு செய்திருந்தால் நான் கவலைப்பட்டு மாற்றவா முடியும்? இல்லா விட்டாலும் மனிதன் என்றாவது ஒரு நாள் செத்துத்தானே ஆக வேண்டும். அது நாளையானால் என்ன இன்னும் நாற்பது வருஷம் கழித்து ஆனாலென்ன?"

இளைய பிக்கு அவனைத் திகைப்புடன் பார்த்தார். அவர் முகத்தில் இன்னும் அவனைப் பற்றிய கவலை இருப்பதைப் பார்த்த அவன் மனம் நெகிழ்ந்து சொன்னான். "ஒரு மனிதனுக்கு ஒரு விதிதான் இருக்க முடியும், பிக்குவே. கவலைப் படுவதால் அந்த விதியை யாரும் மாற்றி விட முடியாது"

இளைய பிக்குவிற்கு அவன் வார்த்தைகளில் இருந்த உண்மையை விட அந்த உண்மையை அவன் வாழும் விதம் மிகவும் பிடித்திருந்தது. அது போல் பேசும் பலரை அவர் பார்த்திருக்கிறார். ஆனால் நிஜவாழ்க்கை என்று வரும் போது அப்படிப் பேசுபவர்கள் படும் கவலை சாதாரணமானதல்ல. ஆனால் இவன் முகவாட்டமும் கவலையும் ஒருசில நிமிடங்களுக்கு மேல் இவனிடம் தங்குவதில்லை. வந்தவுடன் அதை விரட்டும் வித்தை அவன் கற்றிருக்கிறான்..

அவன் சாதாரணமானவன் அல்ல என்று மூத்த பிக்கு சொன்னது நினைவுக்கு வந்தது. நேற்றைய தினம் அவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த போது அவன் முதுகில் கழுத்துக்கும் சற்று கீழே முதுகுத்தண்டின் மேற்பகுதியில் இருந்த ஒரு பெரிய மச்சத்தை மூத்த பிக்கு நீண்ட நேரம் ஆராய்ந்தார். ஒரு பாம்பு படமெடுப்பது போல் அந்த மச்சம் இருந்தது. மூத்த பிக்கு மனிதர்களின் சாமுத்திரிகா

லட்சணத்தை நன்றாக அறிந்தவர். அவர் அந்த மச்சத்தின் அறிகுறி என்ன என்று ஆர்வமாகக் கேட்ட இளைய பிக்குவிடம் அவன் சாதாரணமானவன் அல்ல என்று மட்டும் சொன்னார் ....

இளைய பிக்கு அவனிடம் ஆர்வத்துடன் கேட்டார். "இந்த மச்சம் உனக்கு சிறு வயதிலிருந்தே இருக்கிறதா?"

"எந்த மச்சம்?"

"உன் முதுகின் மேல் புறத்தில் இருக்கும் மச்சம்"

அவன் விழித்தான். இளைய பிக்குவிற்குத் தன் தவறு புரிந்தது. பழையவை எதுவும் நினைவில்லாத அவனிடம் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்க வேண்டாம் என்று தோன்றியது. அவன் அவரிடம் அந்த நாக மச்சத்தைப் பற்றி விளக்கமாகக் கேட்டுக் கொண்டான். என்ன நிறம், என்ன நீள அகலம், பார்க்க எப்படி இருக்கிறது என்றெல்லாம் அவன் கேட்டுத்ு தெரிந்து கொண்ட போது பாவமாக இருந்தது. தன் உடல் பற்றியே அடுத்தவரிடம் கேட்டறிய வேண்டியது எப்படிப்பட்ட துர்ப்பாக்கியம்?

இளைய பிக்கு விரைவில் பேச்சை மாற்றினார். "உன் காயங்கள் சீக்கிரம் ஆறி வருகின்றன என்று குரு சொன்னார்"

அவன் முகத்தில் புன்னகை அரும்பியது. "வலி நிறையவே குறைந்து விட்டது.... மருந்து பாதி ஓய்வு பாதி"

"அப்படியென்றால்?"

"நன்றாக ஓய்வெடுத்துக் கொள்ளும் உடலில்தான் மருந்து நன்றாக வேலை செய்யும்."

'இப்படிப் பெரிய பெரிய உண்மைகள் எல்லாம் தெரிகிற இவனுக்கு தன்னைப் பற்றிய உண்மை நினைவில்லையே' என்று நினைத்து இளைய பிக்கு பெருமூச்சு விட்டார்.

*******

CBI மனிதன் மனதில் அமானுஷ்யனே நிறைந்திருந்தான். படித்த அந்தப் பக்கங்களில் இருப்பதெல்லாம் உண்மையானால் அவர்கள் பயப்படுவது நியாயமே என்பது அவனுக்குப் புரிந்தது. ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு அவன் தன்னுடைய ஆளிற்கு ஃபோன் செய்தான்.

"அவனைச் சுட்ட அந்த ராத்திரியில் என்ன நடந்ததுன்னு எனக்கு

சின்ன விஷயம் கூட விடாம சொல்லு"

மறுபக்கத்தில் அந்த இரவின் நிகழ்ச்சிகள் மறுபடியும் விளக்கப்பட்டன. எல்லாவற்றையும் பொறுமையாகவும் கவனமாகவும் கேட்டு விட்டு ஒரு கேள்வியை மிக நிதானமாக CBI மனிதன் கேட்டான். "நீங்க அவனைச் சுட்ட பிறகு அவன் தவறி அந்த மலையுச்சியில் இருந்து விழுந்தானா? இல்லை மலையுச்சியிலிருந்து அவனாகவே குதித்தானா?"

மறுபக்கம் சிறிது நேரம் பதிலளிக்க எடுத்துக் கொண்டது. "சார்...அவனாகவே குதித்த மாதிரிதான் தோணுது"

சிறிது நேரம் மௌனம் சாதித்த CBI மனிதன் சொன்னான். "எனக்கு அந்த புத்த விஹாரத்தை சோதனை செய்த ரெண்டு பேர்ல எவனுக்கு அதிக மூளை இருக்கோ அவன் கிட்ட பேசணும். எவ்வளவு சீக்கிரம் பேச முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பேசணும். என்னோட நம்பருக்குப் ஃபோன் செய்யச் சொல்லு"

"சார். அவங்க அந்தப் பிணத்தைத் தேடிட்டு இருக்கிற இடங்கள்ல பெரும்பாலும் டவர் கிடைக்கிறதில்லை. அவனைப் பிடிக்கிறது கஷ்டம். ஆனா முடிஞ்ச அளவு சீக்கிரம் உங்க கிட்ட பேசச் சொல்றேன்......"

CBI மனிதன் தூங்கவில்லை. அவன் அந்த ஃபோன் காலுக்காகக் காத்திருந்தான். காத்திருந்த போது நிமிடங்கள் யுகங்களாக நகர்ந்தன. அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்தவன் எழுந்து சென்று தானே காபி தயார் செய்து குடித்தான். காபியின் லேசான கசப்பை கண்களை மூடிக் கொண்டு அனுபவித்தவன் ஆச்சார்யாவை சபித்தான். "எங்கிருந்து பிடித்தான் இந்த ஆள் அந்த அமானுஷ்யனை?"

மலையுச்சியில் இருந்து அவனாகவே விழுந்தது CBI மனிதனுக்கு நெருடலாக இருந்தது. ஒரு வேளை அவன் அந்தப் புத்தவிஹாரத்தின் அருகில் விழுந்து அவர்கள் அவனை எடுத்துக் காப்பாற்றி இருந்தால்....? என்ற கேள்வி பூதாகரமாக மனதில் எழுந்தது. சிந்திக்க ஆரம்பித்தான்.

சரியாக இரண்டு மணி முப்பத்திரண்டு நிமிடங்கள் கழிந்த பின் அவன் எதிர்பார்த்த ஃபோன் வந்தது.

CBI மனிதன் நேரடியாக விஷயத்திற்கு வந்தான். "பிணத்தைத் தேடிகிட்டு போன உங்களுக்கு புத்த விஹாரத்தின் உள்ளே போய்ப் பார்க்கணும்னு எப்படி தோணிச்சு?"

"கதவுல இரத்தக்கறை இருந்தது சார்"

"அப்புறம்"

"அங்கே கையில் கட்டு போட்டுகிட்டு ஒரு வயசான பிக்கு வந்தார். அவர் கையில் அடிபட்ட காயம்னு புரிஞ்சது. ஆனாலும் எதுக்கும் உள்ளே போய் பார்த்துடலாம்னு உள்ளே போய் ஒரு இடம் விடாமல் பார்த்தோம்....."

"அங்கே கரண்ட் இருக்கா?"

"இல்லை சார். உள்ளே இருட்டுதான். அங்கங்க விளக்கு வச்சிருந்தாங்க. மீதி இருட்டான இடத்தையும் நாங்க டார்ச் அடிச்சுப் பார்த்துட்டோம். ஒரு இடத்தையும் மிச்சம் வைக்கலை...அவன் பிணம் இல்லை"

"நீங்க ரெண்டு பேரும் உள்ளே நுழைஞ்சதுல இருந்து பார்த்த ஒவ்வொன்னையும் சொல்லு பார்க்கலாம்"

அவன் விவரித்தான். முழுவதையும் கேட்டுக் கொண்ட CBI மனிதன் கடைசியில் கேட்டான். "அந்த தியான மண்டபத்தில் நிறைய பிக்குகள் தியானம் செய்துட்டு இருந்தாங்களே அவங்கள்ல

ஒருத்தனாய் அவன் இருந்திருந்தால்....? நீங்க ஒவ்வொருத்தர் முகத்தையும் சரியா கவனிச்சீங்களா?"

"அங்கே பிக்குகள் மட்டும்தான் இருந்தாங்க சார்"

"நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு. அவங்க ஒவ்வொருத்தரையும் டார்ச் அடிச்சுப் பார்த்தீங்களா?"

தயக்கத்துடன் பதில் வந்தது. "..... இல்லை சார்."

CBI மனிதனுக்குப் புரிந்தது. அமானுஷ்யன் பற்றியறிந்த விவரங்கள் படித்திரா விட்டால் அப்படிப் பார்க்க வேண்டிய அவசியம் தனக்கே புரிந்திருக்காது என்கிற போது அவனைக் குறை சொல்வதில் அர்த்தம் இல்லை. அவன் அந்த பிக்குவின் கைக்காயத்தைப் பார்த்த பின் கூட உள்ளே போய் பார்த்ததே பெரிய விஷயம்!

"சரி உடனடியா பத்து பேராவது அந்த புத்த விஹாரத்துக்குப் போங்க. வலுவான ஆள்களா பெரிய டார்ச் லைட்களோட போங்க. அங்கே இன்னொரு தடவை செக் பண்ணுங்க. ஒவ்வொரு ஆளையும் ஒவ்வொரு இடத்தையும் செக் பண்ணுங்க. ஒரு வேளை அவன் மாறு வேஷத்துல கூட இருக்கலாம். அவன் அங்கே இருந்தா துப்பாக்கி ரவையில மூளையைக் குறி பார்த்து சுடுங்க. இதயத்தைக் குறி

பார்த்து சுடுங்க. அவன் செத்தாலும் அவனை எரிச்சு அவன் சாம்பலானவுடன் எனக்கு சொல்லுங்க....நான் உங்க பாஸ் கிட்டயும் இப்பவே ஃபோன் செய்து சொல்றேன். உடனே கிளம்புங்க."

அமானுஷ்யன் - (7)

ஆனந்த் ஆச்சார்யாவின் கொலை வழக்கு சம்பந்தமாக சேகரித்திருந்த எல்லா பத்திரிகைக் குறிப்புகளையும் படித்து முடித்தான். படித்த எதிலும் பெரிய உபயோகமான தகவல்கள் இருக்கவில்லை. அவன் கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஒன்பதரை. அம்மாவுக்கு ஃபோன் செய்ய வேண்டிய நேரம்.... செல்லை அழுத்தினான்.

"ஹலோ" சாரதாவின் குரல் களைப்புடன் இருந்தது.

"நான் ஆனந்த் பேசறேன்ம்மா. ஏன் உன் குரல் களைப்பாய் கேட்கிறது?"

"அப்படியொண்ணும் இல்லைப்பா. உனக்கு ஓட்டல் ரூம் எல்லாம் சௌகரியமாய் இருக்கா?"

"இது ஸ்டார் ஓட்டல்ம்மா. நல்லாவே சௌகரியமாய் இருக்கும்மா"

"சாப்பிட்டாயா?"

"எட்டு மணிக்கே சாப்பிட்டாச்சு. நீ?"

சாரதா சில வினாடிகள் எடுத்துக் கொண்டு தாமதமாகப் பதிலளித்தாள். "ஆச்சு"

அம்மா பொய் சொல்கிறாள் என்பது ஆனந்திற்கு புரிந்தது. மனதில் ஏற ஆரம்பித்த சுமையை ஒரு கணம் பொருட்படுத்தாமல் கேட்டான். "நீ என்ன செய்துகிட்டிருந்தாய்?"

"லலிதா சஹஸ்ரநாமம் சொல்லிகிட்டு இருந்தேன். பாதியில் நிறுத்தியிருக்கேன். நான் வைக்கட்டா. நாளைக்கும் மறக்காம போன் பண்ணு...."

அவன் சரி என்று சொல்வதற்கு முன் ஃபோன் வைக்கப்பட்டது. இது ஒன்றும் புதிதில்லை என்ற போதும் இன்னமும் ஏனோ புதிதாக வலிக்கிறது. இது நாள் வரை அம்மாவிடம் அவன் ஐந்து நிமிடங்களுக்கு மேல் தொடர்ந்து பேசியதாக அவனுக்கு நினைவில்லை. அவன் சௌக்கியமாய் இருக்கிறான் என்ற ஒரு செய்திக்கு மேல் அவளுக்கு வேறு எதையும் தெரிந்து கொள்ள ஆர்வமிருப்பதில்லை. அந்த ஒரு செய்தி தெரிந்து கொள்ள அதிக

நேரம் ஆவதில்லை....

இன்று அவனும் இல்லை என்பதால் அம்மா சமைத்தே இருக்க மாட்டாள் என்று நினைத்தான். எதாவது ஒரு கடவுளை வேண்டி உபவாசம் இருந்திருப்பாள். வெறும் பாலோ, பழமோ தான் இன்றைய ஆகாரமாய் இருந்திருக்கும். இந்த லலிதா சஹஸ்ரநாமம் முடிந்த பின் இன்னும் எத்தனையோ ஸ்தோத்திரங்கள் படித்து அவள் என்னேரம் உறங்குவாளோ அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம். சுமார் இருபத்தி நான்கு வருடங்களாகக் கும்பிட்டும், உபவாசங்கள் இருந்தும் அந்தக் கடவுள்கள் அவளிடம் கருணை காட்டியதாகத் தெரியவில்லை.

சாரதாவை இந்த நிலைக்குக் கொண்டு வந்த சம்பவம் ஒரு பிள்ளையார் சதுர்த்தி சமயத்தில் நடந்தது. வித விதமான பிள்ளையார்கள் ஊர்வலமாகப் போக வெளியே நின்று தன் இரண்டு பிள்ளைகளுடன் வேடிக்கை

பார்த்துக் கொண்டிருந்த அவள் ஊர்வலம் முடிந்து பார்க்கையில் அவளுடைய இளைய மகன் மூன்று வயது அக்ஷய் காணாமல் போயிருந்தான். ஆரம்பத்தில் அவன் ஊர்வலத்தோடு போயிருக்கலாம் என்று எல்லோரும் நினைத்தார்கள். எல்லா போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. நண்பர்களும், உறவினர்களும் எல்லா இடங்களிலும் தேடினார்கள்.

அவன் கிடைக்கவில்லை. காணாமல் போன அக்ஷயின் புகைப்படத்தைப் பிரசுரித்து அவன் முதுகின் மேற்பகுதியில் நாகம் படமெடுப்பது போல் இருக்கும் மச்சத்தைப் பற்றியும் குறிப்பிட்டு விளம்பரப்படுத்திப் பார்த்தார்கள். ஆனால் பயனில்லை. அவன் மாயமாய் மறைந்திருந்தான். கணவனை முன்பே இழந்திருந்த சாரதாவை இளைய மகனின் இழப்பு நடைப்பிணமாகவே ஆக்கி விட்டது. அப்போது ஆனந்திற்கு ஐந்து வயது.

அன்றிலிருந்து சாரதாவின் கவனத்தை அவளுடைய காணாமல் போன இளைய மகனே ஆக்கிரமிக்க ஆரம்பித்தான். சாப்பிட அமர்கையில் காணாமல் போன மகனுக்கு சாப்பிட உணவு கிடைக்கிறதோ இல்லையோ என்ற கவலை அவளுக்கு வர ஆரம்பித்தது. நல்ல உடை ஏதாவது உடுக்கையில் மகனுக்கு நல்ல உடை கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற கவலை தோன்ற ஆரம்பித்தது. யாராவது அவனை எடுத்துக் கொண்டு போய் பிச்சை எடுக்கக் கூடப் பயன்படுத்தலாம் என்று ஒரு நபர் சொல்லப் போய் அவள் பயம் பலமடங்காய் அதிகரித்தது. மழலை மாறாத தன் மகனைக் காப்பாற்ற அவளுக்கு கடவுளைத் தவிர வேறு வழி தெரியவில்லை. அப்போது ஆரம்பித்த வழிபாடுகள் இன்று வரை குறையவில்லை.

ஒரு அரசாங்க உத்தியோகத்தில் இருந்த அவள் நடைப்பிணமாக

வேலைக்கு சென்று வந்தாள். ஆனந்தை மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டாள். அவன் பத்திரமாக வீடு வந்து சேரும் வரை நிம்மதியிழந்து தவிப்பாள். அவன் வந்து சேர்ந்த பின் அவனுக்கு சாப்பிடக் கொடுத்த பின் அவள் மனதில் மறுபடி இளைய மகனின் நினைவுகளே வந்து அலைக்கழிக்கும்.

ஆனந்த் தாயின் கவனத்தைத் தன் பக்கம் திருப்ப பல காலம் முயன்றிருக்கிறான். முதல் ரேங்க் வாங்கிக் கொண்டு வந்து தாயிடம் காண்பிக்கையில் அவளைக் கூர்ந்து கவனிப்பான். அவள் முகத்தில் மகிழ்ச்சி ஒரு கணம் வந்து போகும். அடுத்த கணம் தன் இளைய மகன் படிக்காமல் எங்கே என்ன செய்து கொண்டிருக்கிறானோ என்ற கவலையில் அவள் மூழ்குவது தெரியும். பத்தாம் வகுப்பில் அவன் தங்க மெடல் வாங்கி பத்திரிகைகளிலெல்லாம் பெயர் வந்தது. அதை வாங்கிப் பார்த்தும் அவள் அழத்தான் செய்தாள். 'அந்தக் குழந்தை என்ன செய்கிறதோ!'. பள்ளியில் ஒரு நாள் அவளையும் அழைத்து பாராட்டு விழா நடத்தினார்கள். அன்று எடுத்த புகைப்படம் இன்றும் அவனிடம் இருக்கிறது. அவன் தாயின் பார்வையில் மகிழ்ச்சிக்குப் பதிலாக வேதனைதான் தெரிந்தது.

இல்லாத தன் தம்பியிடம் தாயைப் பறிகொடுத்து விட்டோம் என்பதை பின்னாட்களில் ஆனந்த் முழுவதுமாக உணர்ந்தான். அவன் தாயின் கவனத்தைக் கவர முயல்வதைப் பின் விட்டு

விட்டான். தன்னால் முடிந்த வரை தாயிற்குக் கவலை ஏற்படுத்தாமல் பார்த்துக் கொண்டான். வீட்டுக்கு வர வேண்டிய நேரத்தில் அவன் வரா விட்டால் சாரதா பைத்தியம் பிடித்தது போல் ஆகி விடுவாள். ஆகவே ஐந்து நிமிடம் தாமதமாவது போல் இருந்தாலும் அவளுக்கு ஃபோன் செய்து சொல்லி விடுவான். அவன் பத்திரமாக இருக்கிறான் என்று உறுதியாகத் தெரிந்த பிறகு அவள் அவனைப் பற்றி நினைப்பது போல் தெரியவில்லை.

மூன்று வருடங்களுக்கு முன் ஞான திருஷ்டியில் பார்த்து எதையும் சொல்லக் கூடிய ஒரு சாதுவைப் பற்றி சாரதா தன் அலுவலக தோழி ஒருத்தி மூலம் கேள்விப்பட்டு ஆனந்திடம் சொன்னாள், "நீ போய் அவரைப் பார்த்து அக்ஷயைப் பத்திக் கேளேன்"

CBI ல் சேர்ந்த பின் பல போலி சாமியார்களைப் பற்றி நிறையவே அறிந்திருந்த ஆனந்திற்கு அந்த சாதுவை சந்திப்பதில் உடன்பாடு இருக்கவில்லை. ஆனால் அந்த நபர் மீது எந்தப் புகாரும் இல்லை, ஏதோ சக்தி வாயந்த மனிதராகத்தான் தென்படுகிறார் என்றும் டிபார்ட்மென்டிலேயே சிலர் சொன்னார்கள். மேலும் சாரதா தனக்கென எதையும் அவனிடம் இது வரை கேட்டதில்லை. அதனால் சென்று அந்த சாதுவைச் சந்தித்தான். பார்க்க அந்த மனிதர் மிகச் சாதாரணமாகத்தான் தெரிந்தார்.

அவன் தன் தம்பியைப் பற்றி சொன்னவுடன் அவர் கண்களை மூடிக் கொண்டு சிறிது நேரம் அமர்ந்திருந்தார். பின் சொன்னார். "அவன் உடம்பில் பின் புறம் ஏதோ நாகம் மாதிரி மச்சம் தெரிகிறது...."

ஒரு கணம் அவனுக்கு மெய் சிலிர்த்தது. பின் அவன் தொழிலுக்கே உரிய சந்தேகம் வந்தது. 'அம்மா தன் மகனின் அங்க அடையாளத்தைச் சொல்லும் போது பிரத்தியேகமான அந்த நாக மச்சத்தைப் பற்றி எல்லோரிடமும் சொல்வது வழக்கம். இதைப் பற்றி அவள் அலுவலக தோழியிடம் கூட சொல்லி இருக்கலாம். அவள் மூலம் இவருக்கு தெரிந்திருக்கலாம்'.

அவர் கண்களை மூடியபடியே தொடர்ந்தார். "அவன் இந்த தேசத்தில் இல்லை. வேறேதோ தேசத்தில் இருக்கிறான். நிறைய புத்த துறவிகள் தெரிகிறார்கள்... அவன் ஏதோ அங்கு கற்றுக் கொண்டிருக்கிறான்...." பின் நிறைய நேரம் அவர் ஒன்றும் சொல்லவில்லை. அவர் தூங்கி விட்டாரோ என்று ஆனந்த் நினைக்கையில் கண்களைத் திறந்தார்.

"ஆனால் அவனை நிறைய அபாயம் சூழ்ந்திருக்கிறது. எதிர்காலத்தில் அவன் நிறைய அபாயங்களை சந்திக்க வேண்டியிருக்கும்...."

ஆனந்திற்கு அவர் சொல்வதை நம்புவதா வேண்டாமா என்று தெரியவில்லை. "என்ன ஆகும்?"

அவர் மேலே கைகாட்டினார். "அவன் தீர்மானிக்கிறபடி ஆகும். அவன் தீர்மானம் விளங்கவில்லை. ஆனால் ஒன்று....."

ஆனந்த் அவரைப் பார்த்தான். அவர் சொன்னார். "உன் தம்பி சாதாரணமானவனில்லை"

வீட்டுக்கு வந்து ஆனந்த் அவர் கண்களை மூடிக்கொண்டு சொன்னதை மட்டும் சொன்னான். அவனுடைய நாக மச்சத்தைப் பற்றி அவர் சொன்னார் என்றதுமே சாரதா அவரை பரிபூரணமாக நம்பி விட்டாள்.

புத்த துறவிகளிடம் ஏதோ கற்றுக் கொண்டிருக்கிறான் என்று முடித்த ஆனந்த் "அவர் ஞான திருஷ்டிக்கு வேறெதுவும் தெரியவில்லை" என்றான்.

மறுநாள் சாரதாவின் பூஜையறைக்கு ஒரு புத்தர் சிலையும் வந்து சேர்ந்தது. புத்த பூர்ணிமா அன்று அவள் ஒரு பிரத்தியேக விரதமும் இருக்க ஆரம்பித்தாள்...

**********

சூரியோதயத்திற்கு முன்பு பத்து நபர்கள் நவீன துப்பாக்கியுடன் அந்த புத்த விஹாரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அந்த விஹாரத்தின் கதவைப் பலமாகத் தட்டி புத்த பிக்குகளை எழுப்பினார்கள். கதவைத் திறந்த இளைய பிக்கு திடகாத்திரமான அந்த நபர்களைப் பார்த்து திகைத்துப் போனார். மூன்று பேர் கைகளில் பெரிய டார்ச் லைட்டுகளும் இருந்தன. அவர்களில் ஒருவன் முன்பே 'அவனை'த் தேடி வந்தவன். மற்றவர்கள் அவர் இது வரை பார்த்திராதவர்கள். அவர் பின்னால் வந்து நின்ற மற்ற பிக்குகளும் துப்பாக்கிகளுடன் நின்ற அந்த தடியர்களைப் பார்த்து பேச்சிழந்து நிற்க பேச முடிந்தவர் மூத்த பிக்குவே.

"என்ன வேண்டும்?"

"நாங்கள் அந்தத் தீவிரவாதியைத் தேடி வந்திருக்கிறோம்" முன்பு வந்தவனே இப்போதும் பேசினான்.

"அதுதான் அன்றே வந்து பார்த்து விட்டுப் போனீர்களே"

"நாங்கள் பார்த்தது சரியில்லை என்று மேலிடத்தில் சொல்கிறார்கள். அதுதான் மீண்டும் சரியாகத் தேட வந்தோம்"

"இது ஒரு புத்த விஹாரம். இங்கு இது போல் துப்பாக்கிகளுடன் நுழைவது சரியல்ல"

"என்ன செய்வது? அரசாங்க உத்தரவு" சொல்லி விட்டு அவன் தலையசைக்க அந்தக் கும்பல் அவரைப் பொருட்படுத்தாமல் உள்ளே நுழைந்தது. வேறு வழியில்லாமல் புத்த பிக்குகள் விலகி வழி விட்டார்கள். முதலில் அவர்கள் ஒவ்வொருவர் மீதும் டார்ச் லைட் அடித்து அவர்களை நன்றாக ஆராய்ந்து அவர்களில் 'அவன்' இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு மிகக் கவனமாக புத்த விஹாரத்தில் தேடினார்கள். புத்த விஹாரத்தை தங்கள் டார்ச் லைட்களால் ஒளிமயமாக்கிப் பார்த்தார்கள். சுமார் ஒரு மணி நேரம் தொடர்ந்த சோதனையில் அவன் கிடைக்கவில்லை.

வேறு வழியில்லாமல் அவர்கள் திரும்பிச் செல்ல யத்தனித்த போது இளைய பிக்கு அவர்களை நிறுத்தினார்.

"நீங்கள் சொல்வது போல் அவன் உண்மையிலேயே தீவிரவாதிதானா?"

"ஆமாம்"

"அப்படியானால் நீங்கள் பாதாள அறையையும் பார்த்து விட்டால் எங்களுக்கு நிம்மதியாக இருக்கும்" என்ற இளைய பிக்கு ஒரு மூலையில் இருந்த ஒரு சிறிய புத்தர் சிலையை நகர்த்திக் காட்டினார். அங்கு சென்று அவர்கள் டார்ச் லைட் அடித்துப் பார்க்க கீழே மரப்படிகள் தெரிந்தன.

மூத்த பிக்கு இளைய பிக்குவை முறைக்க, மற்ற பிக்குகள் இளைய பிக்குவை திகைப்புடன் பார்க்க, அவரோ யாரையும் பார்க்காமல் தலை குனிந்து நின்றார்.

அமானுஷ்யன் (8)

ஒரு வேளை அவன் இந்த புத்த விஹாரத்திற்குள் உயிருடன் இருக்கிறான் என்றால் அவன் மறைந்திருக்க கண்ணுக்குத் தெரியாத இந்த சுரங்கப் பாதை உள்ள பாதாள அறைதான் பொருத்தமான ரகசிய இருப்பிடம் என்பதில் வந்தவர்களுக்கு சந்தேகமிருக்கவில்லை.

மூத்த பிக்கு அமைதியாகச் சொன்னார், "அது ஒரு காலத்தில் பாதுகாப்புக்காக கட்டப்பட்ட அறை. அதில் சில புத்தகங்களும், சிலைகளும் மட்டுமே இருக்கின்றன. அதுவும் எங்களுக்கு மட்டுமே தெரிந்த இருப்பிடம். நீங்கள் தேடும் ஆள் அங்கு வந்து ஒளிய வாய்ப்பேயில்லை"

இளைய பிக்கு இப்போதும் தலையைக் குனிந்து கொண்டு நின்றாரே தவிர வாயைத் திறக்கவில்லை.

அங்கு இரண்டாவது முறையாகத் தேடிக் கொண்டு வந்தவன் அலட்சியமாகச் சொன்னான், "பயப்படாதீர்கள். உங்கள் புத்தகங்களும் சிலைகளும் எங்களுக்கு வேண்டாம். நாங்கள் அதையெல்லாம் ஒன்றும் செய்ய மாட்டோம். அவன் அங்கு இல்லையென்றால் எங்கள் பாட்டுக்குப் போய் விடுவோம். இனி வந்து தொந்தரவு செய்ய மாட்டோம். நீங்கள் எல்லோரும் ஒதுங்கி எங்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் நில்லுங்கள். அல்லது இந்த இடத்தை விட்டுப் போய் ஏதாவது ஒரு அறைக்குள் பத்திரமாக இருங்கள்"

ஒரு வேளை அவன் அங்கு இருந்தால் என்ன செய்வார்கள் என்பதற்கு பெரிய ஆராய்ச்சி தேவைப்படவில்லை. அவர்கள் கையில் இருந்த நவீனத் துப்பாக்கிகள் அதை சந்தேகத்திற்கு இடமில்லாமல் தெரிவித்தன. மூத்த பிக்கு சில அடிகள் பின் வாங்கி சுவற்றை ஒட்டினாற் போல் நிற்க, இளைய பிக்கு உட்பட மற்ற பிக்குகளும் அப்படியே செய்தனர்.

அவரிடம் பேசியவன் தன் சகாக்களிடம் சொன்னான், "ரெண்டு பேர்

புத்த விஹார வாசற்கதவு பக்கம் நில்லுங்கள். ரெண்டு பேர் இந்த சுரங்கப் பாதைக்கு வெளியே நில்லுங்கள். மற்றவர்களில் மூன்று பேர் முதலில் உள்ளே போகலாம். மீதியுள்ள மூன்று பேர் இரண்டு நிமிட இடைவெளி விட்டு உள்ளே தொடர்ந்து வரட்டும். எல்லாரும் தயாராய் இருங்கள்...."

டார்ச் லைட்டைப் பிடித்தபடி முதலில் ஒருவன் மெல்லச் செல்ல துப்பாக்கியை நீட்டியபடி இருவர் பின் தொடர்ந்தனர். அவர்கள் சென்று சரியாக இரண்டு நிமிடம் கழித்து அடுத்த மூன்று பேரிலும் ஒருவன் டார்ச் ச்லைட்டுடன் முன்னே செல்ல துப்பாக்கியுடன் இருவர் பின் தொடர்ந்தனர். இருவர் பாதாள அறையின் நுழைவு துவாரத்தை நோக்கி துப்பாக்கியை நீட்டியபடி தயாராக நிற்க மற்ற இருவர் புத்த விஹார கதவுப் பக்கம் துப்பாக்கியை நீட்டியபடி தயாராக நின்றனர்.

சுமார் இருபது நிமிடங்கள் கழித்து பாதாள அறையிலிருந்து உடல் உடையெல்லாம் தூசியும், ஒட்டடையுமாக பரிதாபமாக தும்மிக் கொண்டே வெளியே வந்தனர். சிலர் அங்குமிங்கும் சொறிந்து கொண்டு வந்தார்கள். அவன் அங்கு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. உள்ளே போகாத நான்கு பேரும் தங்கள் சகாக்களைப் பார்த்து லேசாகச் சிரித்தார்கள்.

மூத்த பிக்குகளிடம் முன்பு பேசியவன் இளைய பிக்குவை சந்தேகத்தோடு பார்த்தான். இளைய பிக்குவிற்கு முதலில் அவனை சரியாக அடையாளம் தெரியவில்லை. பின் கேட்டார், "அவன் அங்கேயும் இல்லை அல்லவா? நாங்கள் இனி அவனுக்குப் பயப்படாமல் இருக்கலாம் அல்லவா?"

சந்தேகம் தீராமல் அவன் தலையை மட்டும் அசைத்தான். தன் சகாக்களைப் பார்த்து தலையசைத்து விட்டு அவன் முன்னால் செல்ல அவர்கள் அனைவரும் அவனைத் தொடர்ந்து வெளியேறினார்கள்.

அவர்கள் போன பிறகு இளைய பிக்குவைப் பார்த்து மூத்த பிக்கு கேட்டார், "என்ன இதெல்லாம்?"

இளைய பிக்கு சொன்னார். "நாம் வருடக் கணக்கில் உபயோகிக்காத பாதாள அறையைச் சுத்தம் செய்ய வேண்டும் என்று நீங்கள் பல நாட்களாக சொல்லிக் கொண்டிருந்தீர்கள். நான் ஒரு நாள் எட்டிப்பார்த்த போது உள்ளே முழுவதும் சிலந்தி வலைகளும் தூசியுமாய் இருந்தது...... இவர்கள் இப்போது அதை எல்லாம் நிறையவே எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். இனி நமக்கு சுத்தம் செய்வது சுலபம்"

மற்ற பிக்குகள் புன்னகைக்க மூத்த பிக்கு இளைய பிக்குவை ஊடுருவிப் பார்த்தார். இளைய பிக்கு தன் தலையைத் தாழ்த்திக் கொண்டார். இளைய பிக்குவிற்கு அந்தப் பெயர் அறியாத இளைஞன் மேல் இருந்த பாசமும் அதனால் அவனைக் கொல்லத் துடிக்கிற மனிதர்கள் மீதிருந்த கோபமும் முற்றும் துறந்தவர்களுக்கு சிறிதும் பொருத்தமானதல்ல என்பதை மூத்த பிக்குவின் பார்வை சொல்லியது. புத்த பிக்குவாக மாறி அந்த புத்த விஹாரத்திற்கு அவர் வந்து ஒரு வருட காலமே ஆகி இருந்தது. புத்த மத நூல்களைப் படிப்பதிலும், அனுஷ்டானங்களைப் பின் பற்றுவதிலும் அவர் குறுகிய காலத்திலேயே நல்ல தேர்ச்சி பெற்று விட்டிருந்தாலும் மனம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் அவர் இன்னும் உண்மையான பிக்குவின் தன்மைகளைப் பெற்று விட்டிருக்கவில்லை என்பது மூத்த பிக்குவின் கணிப்பாக இருந்தது. அதை உறுதிப்படுத்தும் விதத்தில் இளைய பிக்கு நடந்து கொள்ளும் போதெல்லாம் வார்த்தைகளின்றி பார்வையாலேயே மூத்த பிக்கு சுட்டிக் காட்டுவது வழக்கம்.

அவன் மீது அவர் வைத்திருந்த அன்புதான் வந்தவர்கள் மீது கோபத்தை ஏற்படுத்தி விட்டிருக்கிறது என்பதை அவர் பார்வையால் சுட்டிக் காட்டியதற்கு இளைய பிக்கு வாய் திறந்து எதிர்க் கேள்வி கேட்டார். "நிராதரவாய் நிற்கும் மனிதர்கள் மீது அன்பு காட்டுவது தவறா குருவே?"

மூத்த பிக்கு சொன்னார், "அன்பு உயிர்கள் அனைத்தின் மீதும் பொதுவாக இருப்பது தெய்வீகத் தன்மை. ஆனால் அது தனிப்பட்ட மனிதர்களிடம் தேங்கும் போது துக்கத்தையே தரும்"

இளைய பிக்கு மௌனம் சாதித்தார். மூத்த பிக்கு சொன்னார், "இன்னொரு விஷயம்..."

என்ன என்பது போல் இளைய பிக்கு பார்க்க, மூத்த பிக்கு சொன்னார், "பேச்சில் சாமர்த்தியம் பல சந்தர்ப்பங்களில் நம்மை உண்மையை நழுவ விடச் செய்வதுண்டு...."

குனிந்த தலை நிமிராமல் இளைய பிக்கு நகர்ந்தார். ஆனால் சிறிது நேரத்தில் அவருடைய சிந்தனை அவனை நோக்கிச் சென்றது. அவன் வருவதை முன் கூட்டியே அறியும் சக்தி படைத்தவனாக இருந்ததாகத் தோன்றியது. அவன் நேற்று இரவு அங்கிருந்து கிளம்புவதாகச் சொன்ன போது மூத்த பிக்கு உட்பட அனைவருமே அது தேவையுமில்லை, உசிதமுமில்லை என்று சொன்னார்கள். மூத்த பிக்கு அவனிடம் கேட்டார், "நீ ஏன் போக வேண்டும் என்று நினைக்கிறாய்?"

"அவர்கள் என்னை மறுபடி தேடி வரலாம் என்று தோன்றுகிறது"

இளைய பிக்கு சொன்னார். "அவர்கள்தான் ஒரு முறை பார்த்து விட்டுப் போய் விட்டார்களே. இனி உனக்கு இதுதான் பாதுகாப்பான இடம். இனி இங்கே தேடி வர மாட்டார்கள்"

அவன் அமைதியாக விளக்கினான், "நீங்கள் உங்களுக்குத் தேவையான ஒரு முக்கியமான பொருளைத் தொலைத்து விட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அதை வைத்திருக்கக் கூடிய எல்லா இடத்திலும் தேடுகிறீர்கள். அது கிடைக்கவில்லை. நீங்கள் முயற்சியைக் கைவிட்டு விடுவீர்களா? மாட்டீர்கள் அல்லவா? முதலில் மேற்போக்காகத் தேடிய இடத்தில் எல்லாம் மறுபடி நிதானமாகவும் மேலும் கவனத்துடனும் தேடுவீர்கள் அல்லவா? அதே போலத்தான் அவர்களும் என் உடல் எங்கும் கிடைக்கவில்லை என்றான பிறகு மறுபடி தேடிய இடத்திலேயே தேட வருவார்கள்...."

"நீ இன்னும் முழுதும் குணமடையவில்லை. இந்த நிலையில் நீ எங்கே போவாய்? என்ன செய்வாய்? உனக்கு என்ன பாதுகாப்பிருக்கிறது?"

அவன் புன்னகைத்தான். "இது வரை காப்பாற்றிய கடவுள் இனியும் காப்பாற்றுவார். ஏதாவது வழி காட்டுவார்"

இளைய பிக்கு மூத்த பிக்குவைப் பார்த்தார். மூத்த பிக்கு ஏதாவது

அவனிடம் சொல்லி அவன் மனதை மாற்றுவார் என்று எதிர்பார்த்தார். ஆனால் மூத்த பிக்கு அவன் முகத்தைப் பார்த்தே அவன் எடுத்த முடிவில் இருந்த உறுதியை அறிந்ததால் பேசாமல் இருந்தார்.

துப்பாக்கிக் குண்டால் துளைக்கப்பட்ட சட்டையின் துளையை மறைக்க ஊசி நூலால் மிகக் கச்சிதமாக அவன் தைத்துக் கொண்டான். அவனுக்கு எடுத்துச் செல்ல எதுவும் இருக்கவில்லை. அந்த இரவு வேளையில் அவன் கிளம்பிய போது மூத்த பிக்கு அவனிடம் சிறிது பணத்தைத் தர முன் வந்தார். அவன் தயங்கினான். "இங்கு எங்களைப் போன்றவர்கள் பணம் தந்து உங்களை ஆதரிக்க வேண்டுமேயல்லாமல் உங்களிடம் இருந்து பணம் பெறுவது முறையல்ல, குருவே. நீங்கள் எனக்கு நிறையவே உதவி செய்து விட்டீர்கள். இனி நீங்கள் எனக்குத் தர வேண்டியதெல்லாம் ஆசிகள் மட்டுமே" என்றவன் அவர் காலில் விழுந்து வணங்கினான்.

அதைப் பார்த்த இளைய பிக்கு கண் கலங்கினார். மூத்த பிக்கு கண்களை மூடி அவனை ஆசீர்வதித்தார்.
பின் அவனிடம் அந்தப் பணத்தைத் திணித்தார். "இதில் அதிகமில்லை. சில நாட்கள் உணவுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும். வைத்துக் கொள்". அவன் நன்றியுடனும் தயக்கத்துடனும் அதை வாங்கிக் கொண்டான்.

மற்ற பிக்குகளைக் கை கூப்பி வணங்கினான். அவர்களும் கண்களை மூடி ஒரு கணம் அவனுக்காகப் பிரார்த்தித்தனர்.

அவன் ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக சொல்லிக் கொண்டு விடை பெற்றான். கடைசியில் இளைய பிக்குவின் அருகில் வந்த போது அவருடைய கலங்கிய கண்களைக் கண்டு அவன் நெகிழ்ந்து போனான். அவன் கண்களும் ஈரமாயின. அவர் ஒரு சால்வையை அவனுக்குத் தந்தார். இந்தக் கடுங்குளிரிலிருந்து காத்துக் கொள்ளவும் அவன் தலை, தோள் காயங்கள் வெளியே தெரியாமல் இருக்கவும் அது பயன்படும் என்று நினைத்தார். அவன் நெகிழ்ந்த மனதுடன் சொன்னான், "ஒருவேளை நான் பிழைத்து, எனக்கு நினைவு திரும்பி என் குடும்பத்தோடு இணைந்தால் அவர்களைக் கூட்டிக் கொண்டு நிச்சயம் ஒரு நாள் இங்கு வருவேன், பிக்குவே. என்னையே நான் அறியாமல் நிராதரவாய் இருந்த போது என்னைக் காப்பாற்றி என்னிடம் அன்பு காட்டியவர்கள் என்று உங்கள் அனைவரையும் நான் அறிமுகப்படுத்தி வைப்பேன்...." அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை.

பனி பெய்யும் கடுங்குளிரான இரவு வேளையில் அவர் தந்த சால்வையைப் போர்த்திக் கொண்டு அந்தப் புத்த விஹாரத்திலிருந்து அவன் வெளியேறினான்.

நேற்றைய நிகழ்வில் இருந்து மீண்ட இளைய பிக்குவிற்கு இங்கிருந்து நேற்று இரவு போன அவன் எங்கு சென்றானோ, தற்போது என்ன செய்கிறானோ என்று யோசிக்காமல் இருக்க முடியவில்லை.

## அமானுஷ்யன் (9)

ஆச்சார்யா பணிபுரிந்த CBI தலைமை அலுவலகத்தில் எல்லோரிடமும் ஆச்சார்யா பற்றி விசாரித்தான் ஆனந்த். மேல்மட்டத்திலிருந்து அடிமட்டம் வரை பேசிப் பார்த்தான். எல்லோரும் அவரைப் பற்றி உயர்வாகவே சொன்னார்கள். அவருடைய சகாக்களும் அவர் டிபார்ட்மென்டில் அவருக்குக் கீழே வேலை செய்தவர்களும் அவர் நாணயத்தைப் பற்றி உயர்வாகப் பேசினார்கள். அதோடு அவர் ரகசியமானவர், நினைப்பதை வெளியில் சொல்லாதவர் என்பதையும் சொன்னார்கள். அவர் கொலை அவர்களைப் பாதித்துள்ளது பேசும் போது தெரிந்தது. அவர்களில் பெரும்பாலானோர் கொலைக்குப் பழைய பகை காரணமாயிருக்கலாம் என்றுதான் நினைத்தார்கள்.

ராஜாராம் ரெட்டியிடம் பேசும் போது அவனிடம் ஒரு விஷயத்தைச் சொல்லலாமா வேண்டாமா என்று தயங்கியது போல் தெரிய ஆனந்த் அவர் நினைப்பதை வெளிப்படையாகச் சொல்லச் சொன்னான்.

ராஜாராம் ரெட்டி தயக்கத்துடன் சொன்னார், "இங்கே சைபர் க்ரைம்ஸைக் கண்டுபிடிக்கும் டிபார்ட்மென்டில் ஒருவன் இருக்கிறான். அவன் பெயர் மகேந்திரன். கம்ப்யூட்டரில் அவனுக்குத் தெரியாததே எதுவும் கிடையாது என்று சொல்லலாம். ஆனால் கேரக்டர் அவ்வளவாக சரியில்லை. மூளை அதிகம், அதனால் தலைக்கனமும் அதிகம். அடுத்தவர்கள் தங்கள் கம்ப்யூட்டரில் ரகசியமாய் வைத்திருக்கிற டேட்டாவை ஆராய்வது அவனுடைய ஹாபி. எல்லாருமே கம்ப்யூட்டரில் ஏதாவது ப்ரச்னை என்றால் அவனைத்தான் கூப்பிடுவோம். அதை அவன் சீக்கிரம் சரி செய்தும் விடுவான். ஆச்சார்யா அடிக்கடி அவனைக் கூப்பிட்டு சந்தேகம் கேட்பார். அவனும் மணிக்கணக்கில் அவர் கம்ப்யூட்டரில் உட்கார்ந்து அவருக்குச் சொல்லிக் கொடுப்பான். அவன் திறமைசாலி என்பதால் ஆச்சார்யாவிற்கு அவனைப் பிடித்திருந்தது. அவனிடம் நிறைய பேசுவார். அவர் அப்படிப் பேசும் போது ஏதாவது வாய் விட்டுச் சொல்லி இருக்கலாம்...."

அவர் நிறுத்தினார். ஆனந்த் மேலே சொல்லுங்கள் என்பது போல் அவரைப் பார்த்தான்.

"ஆச்சார்யாவின் ரகசியங்கள் ஏதாவது அந்தக் கம்ப்யூட்டரில் இருந்திருந்தால் அவர் அவனிடம் சொல்லா விட்டாலும் கூட அவன் அதைக் கண்டுபிடிக்க வாய்ப்பு இருந்திருக்கிறது...." அதற்கு மேல் சொல்வது சரியல்ல என்று அவர் நிறுத்தியது ஆனந்திற்குப் புரிந்தது.

"கேரக்டர் சரியில்லை என்றால் எந்த விதத்தில்?"

".....பல பெண்கள் கிட்ட சகவாசம் இருக்கிறது. இந்தக் காலத்துல அது பெரிய விஷயம் இல்லைதான். நான் அந்தக் கால மனுஷன். அதனாலேயே அதை ஜீரணிக்க கஷ்டமாக இருக்கிறது"

"வேலையில் எப்படி?"

"குறை சொல்ல முடியாது...."

மகேந்திரன் ஆனந்தை விட இளமையானவனாக இருந்தான். கண்ணாடி அணிந்திருந்தான். ஆனந்தை அவன் தூரத்திலிருந்தே எடை போடுவது ஆனந்திற்குத் தெரிந்தது. ஆனந்த் அவனிடம் பேசிய போது அவனும் மற்றவர்கள் சொன்னதையே சொன்னான்.

நல்லவர், நேர்மையானவர், ரகசியமானவர்....

"எத்தனை ரகசியமானவராய் ஒருவர் இருந்தால் கூட அவர் ஒரு சிலரிடமாவது மனம் விட்டுப் பேசுபவராக இருப்பார்..." ஆனந்த் சொல்லி நிறுத்தினான். மகேந்திரன் ஒன்றும் சொல்லாமல் அவனையே பார்த்தான்.

ஆனந்த் சொன்னான், "அவர் உங்களிடம் அதிகம் பேசுவார் என்று சொன்னார்கள்?"

"யார் சொன்னார்கள்?" அவன் உடனடியாகக் கேட்டான்.

ஆனந்த் யோசனை செய்து விட்டுச் சொன்னான். "யாரோ சொன்னார்கள். நினைவில்லை"

அவன் நினைவில்லை என்றதை மகேந்திரன் நம்பியது போல் தெரியவில்லை. ஆனால் அதைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் ஆச்சார்யா பற்றி சொன்னான். "புதிதாக எதையும் தெரிந்து கொள்வதில் அவருக்கு ஆர்வம் அதிகம். கம்ப்யூட்டர் சம்பந்தமாக அடிக்கடி கேட்பார். அதைப் பற்றித்தான் பேசுவோம்"

"அவர் இங்கு கம்ப்யூட்டரில் ஏதாவது ரகசிய டேட்டா

வைத்திருந்தாரா?"

"அவர் ஜாக்கிரதையானவர். ஆஃபிஸ் கம்ப்யூட்டரில் எதையும் வைத்துக் கொண்டது போல் தெரியவில்லை."

"உங்களிடம் கம்ப்யூட்டர் தவிர வேறெதைப் பற்றியும் அவர் பேசியதில்லையா?"

அவன் ஒரு கணம் மௌனம் சாதித்து விட்டு கவனமாகச் சொன்னான், "சொல்லிக் கொள்கிற மாதிரி எதுவும் பேசியதில்லை."

"அவரை யார் கொலை செய்திருக்கலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?"

"யாராயிருந்தாலும் அரசியல் பக்கபலம் இருக்கிற ஆள்தான் கொலை செய்திருக்கணும் என்பதில் சந்தேகம் இல்லை. இல்லை என்றால் CBI அடிஷனல் டைரக்டரையே கொலை செய்யத் துணிச்சல் வந்திருக்காது. எதற்கும் நீங்கள் ஜாக்கிரதையாய் இருப்பது நல்லதென்று நான் நினைக்கிறேன்....."

அவன் எச்சரிக்கை எந்த எண்ணத்தில் சொல்லப்பட்டது என்பதை ஆனந்தால் தீர்மானிக்க முடியவில்லை. அவனிடம் மேலும் பேசிக்

கொண்டிருந்த போது உபயோகமான தகவல் எதுவும் கிடைக்கா விட்டாலும் அவன் வெளியே சொல்லாத எதையோ அறிந்திருக்கிறான் என்பதை மட்டும் ஆனந்த் ஊகித்தான்.

அடுத்ததாக ஆச்சார்யா கொலை வழக்கை விசாரிக்கும் போலீஸ் உயர் அதிகாரிகளை ஆனந்த் சந்தித்தான். அவர்களுடைய உபசாரம் பலமாக இருந்தது. என்ன சாப்பிடுகிறீர்கள், என்ன உதவி வேண்டுமானாலும் கேளுங்கள் என்றெல்லாம் சொல்லி அன்பு மழையில் நனைய வைத்தார்கள். ஆனந்த் உடனடியாக விஷயத்திற்கு வந்து வழக்கைப் பற்றி விசாரிக்க, அவர்கள் ஆச்சார்யா கண்டுபிடித்த பழைய கேஸ்களில் சம்பந்தப்பட்டவர்களை விசாரித்து வருவதாகவும் கூடிய சீக்கிரம் கொலையாளியைப் பிடித்து விடுவோம் என்றும் தெரிவித்தார்கள். தங்கள் ·பைலை அவனிடம் காட்டினார்கள்.

அவர்கள் வைத்திருந்த ·பைலில் பழைய கேஸ் விவரங்கள் நிறைய இருந்தன. அதை மேலோட்டமாகக் கூடப் பார்க்காமல் ஆனந்த் அவர்களிடமிருந்த ஆச்சார்யா கொலை செய்யப்பட்ட இடத்தின் புகைப்படங்களை ஆராய்ந்தான். பெரும்பாலான புகைப்படங்கள் மஹாவீர் ஜெயின் வைத்திருந்த ·பைலில் இருந்தவைதான் என்றாலும் அவன் பார்க்காதஒருசிலவும் இருந்தன. அதில் அவன் கவனத்தை ஈர்த்தது எரிந்த நிலையில் இருந்த கம்ப்யூட்டர் ஹார்ட்

டிஸ்க்கின் புகைப்படம்.

அவன் அதை அதிகமாக ஆராய்வதைப் பார்த்த ஒரு அதிகாரி சொன்னார். "கொலையாளி தனியாக வந்தது போலத் தெரியவில்லை. ஒரு சில பேரோட வந்திருக்கலாம். அவர்களுக்கு ஆச்சார்யா மேல் இருந்த பகை அங்கே இருக்கிறதை எல்லாம் துவம்சம் செய்ய வைத்திருக்கிறது. கம்ப்யூட்டரையும் சில புத்தகங்களையும் எரித்திருக்கிறார்கள். மற்ற புத்தகங்களை எல்லாம் விசிறி எறிந்திருக்கிறார்கள். அவர் வீட்டு விலை உயர்ந்த பொருட்களை எல்லாம் உடைத்திருக்கிறார்கள். எதிலுமே கைரேகைகள் கிடைக்கவில்லை...."

"ஹார்ட் டிஸ்கை எரித்ததற்குக் காரணம் அதில் தங்கள் பற்றிய தகவல் ஏதாவது இருக்கலாம் என்பதாகக் கூட இருக்கலாம் இல்லையா?"

அந்தக் கேள்வி அவர்களை தர்மசங்கடப் படுத்தியது ஆனந்திற்கு நன்றாகவே தெரிந்தது.

"அந்தக் கோணமும் நாங்கள் யோசிக்காமல் இல்லை. புதுக் கேஸ் ஏதாவது சம்பந்தப்பட்டிருந்தால்தான் அந்தக் கோணம் அர்த்தமுள்ளதாகிறது. ஆனால் உங்கள் அலுவலகத்தை நாங்கள்

விசாரித்த வரையில் அவர் எந்தப் புது கேஸையும் துப்பறிந்து கொண்டிருக்கவில்லை என்றார்கள்".

ஆனந்த் அதற்கு மேல் அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. "நான் கொலை நடந்த இடத்தைப் பார்க்க வேண்டும்"

"ஜெயின் சார் பிரத்தியேகமாகச் சொன்னதால் அந்த இடத்தை நாங்கள் சுத்தம் செய்யப் போகாமல் அப்படியே வைத்திருக்கிறோம். எங்கள் ஆட்கள் யாராவது உதவிக்கு உடன் வர வேண்டுமா?"

"வேண்டாம். நன்றி"

ஆச்சார்யாவின் வீடு ஒரு நடுத்தர வர்க்கத்தினரின் இரண்டு பெட் ரூம் வீடாக இருந்தது. வீட்டினுள் எல்லாமே சின்னாபின்னமாகக் கிடந்தன. கொலைகாரர்கள் எந்தப் பொருளையும் விட்டு வைக்கவில்லை. ஆச்சார்யாவின் குடும்பப் புகைப்படங்கள் கண்ணாடி விரிசல்களுடன் ஆங்காங்கே விழுந்திருந்தன. ஆச்சார்யா, மனைவி, மகளுடன் சந்தோஷமாகச் சிரித்தபடி இருந்த புகைப்படத்தை ஆனந்த் எடுத்துப் பார்த்தான். எல்லோர் முகத்திலும் உண்மையான சந்தோஷம் தெரிந்தது. இன்னொரு உடைந்த புகைப்படத்தில் ஆச்சார்யாவின் மகளும், மருமகனும் இருந்தார்கள்.

ஆனந்த் கருகியிருந்த கம்ப்யூட்டர் ஹார்ட் டிஸ்கைப் பார்த்தான். அதனுடன் சில புத்தகங்களும் கருகி இருந்தன. முக்கால் வாசி கருகியிருந்த ஒரு புத்தகத்தை எடுத்துப் பார்த்தான். அது புத்தகமல்ல, ஆச்சார்யாவின் இந்த வருடத்தைய டைரி. பாதி எரிந்திருந்த இன்னொரு புத்தகத்தை எடுத்துப் பார்த்தான். ஏதோ ஆங்கில நாவல். கொலயாளிகளின் முக்கிய குறி கம்ப்யூட்டரும் டைரிகளும்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது தெரிந்து விடாதிருக்க வேறுசில புத்தகங்களையும் சேர்த்து எரித்திருக்கிறார்கள் என்பது புரிந்தது.

நிதானமாக அந்த இடத்தை ஆனந்த் ஆராய்ந்தான். எல்லாம் உடைந்தும், நொறுங்கியும், கலைந்தும் எரிந்தும் இருந்தன. அத்தனை அலங்கோலங்களுக்கு மத்தியில் ஒரு அழகான புத்தர் சிலை கீழே தரையில் அமர்ந்த நிலையிலேயே இருந்தது. இந்த அலங்கோலங்களால் பாதிக்கப்படாமல் புத்தர் சாந்த மயமாக தியானத்திலிருந்தார். அந்தப் புத்தர் சிலையைப் பார்த்தவுடன் அம்மா நினைவும், காணாமல் போன தம்பி நினைவும் வந்தன....

மனதை மீண்டும் அந்த இடத்தை ஆராயத் திருப்பினான். எந்தத் தடயமும் கிடைக்கவில்லை. இது எதிர்பார்த்தது தான். கொன்றவர்கள் கச்சிதமாகத்தான் இயங்கியிருக்கிறார்கள்.

கிளம்பத் தயாரான போது ஒரு ரசீது மூலையில் கிடந்ததைப் பார்த்து அதை எடுத்தான். ஆச்சார்யா கொலை செய்யப்படுவதற்கு ஐந்து நாட்கள் முன்பு புத்தகம் வாங்கியதன் ரசீது. "Bodhidharma-Osho" என்று ரசீதில் எழுதியிருந்தது. அதுதான் ஆச்சார்யா கடைசியாக வாங்கிய புத்தகமாக இருக்கலாம் என்று தோன்ற ஆனந்தின் உள்ளுணர்வு அந்தப் புத்தகத்தை அந்த அலங்கோலங்களுக்கு மத்தியில் தேடச் சொன்னது.

ஆச்சார்யா பல புத்தகங்கள் வைத்திருந்ததால் அந்தப் புத்தகத்தை அங்கு கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. சுமார் இருபது நிமிடம் தேடி அந்தப் புத்தகத்தை ஆனந்த் கண்டுபிடித்தான். "Bodhidharma-The Greatest Zen Master" என்ற அந்தப் புத்தகத்தை எடுத்துப் பிரித்தான். அதில் ஆச்சார்யா 32 பக்கங்கள் படித்திருந்தார் என்பதற்கு அடையாளமாக அங்கு முனையை மடித்திருந்தார். ஆனந்த் அந்தப் புத்தகத்தை வெறுமனே புரட்ட உள்ளே இருந்து ஒரு தாள் கீழே விழுந்தது.

எடுத்துப் பார்த்த ஆனந்த் மெல்ல விசிலடித்தான்.....

அமானுஷ்யன் (10)

"எதாவது தடயம் அல்லது தகவல் கிடைத்ததா?" மஹாவீர் ஜெயின் கேட்டார்.

ஆனந்த் ஒன்றும் சொல்லாமல் அந்தக் காகிதத்தை அவரிடம் நீட்டினான்.

அவர் அதனை ஆராய நிறைய நேரம் எடுத்துக் கொண்டார். அதில் இருந்தது தில்லியின் வரைபடம். அதில் ஏழு இடங்கள் சிவப்பு மையால் குறியிடப்பட்டிருந்தன. சாந்த்னி சௌக், இந்தியா கேட், ரயில்வே ஸ்டேஷன், கனாட் ப்ளேஸ், சன்சாத் மார்க், லோட்டஸ் டெம்பிள், பாரக்கம்பா ரோடு என்று குறிகளுக்கு அருகே எழுதப்பட்டிருந்தது. அந்தக் கையெழுத்து ஆச்சார்யாவினுடையது என்பதில் ஜெயினுக்கு சந்தேகம் இல்லை.

பின் நிமிர்ந்தவர் ஆனந்தைக் கேட்டார், "இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ அதையேதான் நினைக்கிறேன் சார்"

அவன் பதில் ஜெயின் முகத்தில் புன்னகையை வரவழைத்தது. நாட்டின் தற்போதைய நிலவரத்தில் நல்லதை நினைக்க

முடிவதில்லை....

"இந்த மேப் பழையதாகக் கூட இருக்கலாம். எத்தனையோ வருடங்களுக்கு முன் கூட அவர் இந்தக் குறிகளை செய்திருக்க வாய்ப்பிருக்கல்லவா?"

"இல்லை சார். சாவதற்கு ஐந்து நாட்கள் முன்னால் அவர் வாங்கிய புத்தகத்திற்குள்தான் இந்த மேப் இருந்தது. அவர் கடைசி நாட்களில் படித்துக் கொண்டிருந்த புத்தகம் அது. ஜென் புத்தமதத்தின் முதல் குரு போதிதர்மா பற்றிய அந்தப் புத்தகத்தில் 32 பக்கங்கள் தான் படித்திருக்கிறார்....... புதிதாக வாங்கிப் படித்துக் கொண்டிருந்த புத்தகத்திற்குள் இருக்க வேண்டுமென்றால் இந்த மேப் கடைசி நாட்களில் குறியிட்டதாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்..."

மஹாவீர் ஜெயின் யோசித்தபடி சொன்னார். "..... நமக்கு சில சந்தேகங்கள் எழுகின்றன என்றாலும்
இந்த மேப் எதையும் தீர்மானமாய் சொல்லவில்லை...."

ஆனந்த் ஒன்றும் சொல்லவில்லை. அவரை யோசிக்க விட்டான்.

"....இந்தக் குறியீடுகளை வேறு காரணங்களுக்காகக் கூடச்

செய்திருக்கலாம்...."

ஆனந்த் அமைதியாகப் பார்த்தான்.

மஹாவீர் ஜெயின் கேட்டார். "நீங்கள் ஏன் ஒன்றும் சொல்ல மாட்டேன்கிறீர்கள்?"

"எனக்கென்னவோ இது சீரியஸான விஷயமாகத்தான் இருக்கும் என்று தோன்றுகிறது. ஆச்சார்யா கொலையானதற்கும் இதற்கும் கண்டிப்பாக சம்பந்தமிருக்கும் என்று நினைக்கிறேன். அதைய தான் நீங்களும் நினைக்கிறீர்கள் என்பதும் புரிகிறது... அப்படி இல்லாமல் இருக்கலாம் என்று நம்ப நீங்கள் இப்போது ஏதாவது ஆறுதலான காரணங்களைத் தேடுகிறீர்கள்.... அப்படி ஏதாவது இருந்து விட்டால் சந்தோஷம்தான்"

ஜெயின் பெருமூச்சு விட்டார். "இதெல்லாம் முக்கியமான இடங்கள் ஆனந்த்.... நாம் சந்தேகப்படுவது போல் இந்த இடங்களில் ஏதாவது அசம்பாவிதம் நடக்கப் போகிறது என்றால் அது எப்போது, யாரால் என்ற கேள்வி வருகிறது...."

"அதுதான் தெரியவில்லை சார். ஆச்சார்யா வீட்டில் ஆன அளவு தேடிப் பார்த்து விட்டேன். கிடைக்கவில்லை.

ஆச்சார்யாவுக்குத்தான் அந்தத் தகவல்கள் தெரிந்திருக்கலாம். எங்கெல்லாம் அந்தத் தகவல்கள் இருக்கும் என்று சந்தேகம் இருந்திருக்கிறதோ அதை எல்லாம் அவரைக் கொன்றவர்கள் அழித்து விட்டார்கள். இந்த மேப் கூட அவருடைய ஜென் புத்தகத்தில் வைத்திருந்ததால்தான் தப்பித்து நம் கையில் கிடைத்திருக்கிறது..."

"அப்படியானால் அந்த விடை அவரைக் கொன்றவர்களைக் கண்டுபிடித்தால் ஒழியக் கிடைக்காது. இல்லையா?"

"இல்லை. ஆச்சார்யாவிற்கு அந்தத் தகவலைக் கொடுத்த நபர், அல்லது நபர்களைக் கண்டுபிடித்தால் கூட அந்தத் தகவல் நமக்கு கிடைக்கலாம் சார்..."

"ஒருவேளை அந்த நபர் அல்லது நபர்களையும் அவர்கள் கண்டுபிடித்துக் கொன்றிருந்தால்....?"

"அப்படிக் கொன்றிருந்தால் நீங்கள் சொன்னபடி கொலையாளிகளைக் கண்டுபிடித்தால்தான் பதில் கிடைக்கும். ஆனால் அந்தத் தகவல் தரும் நபர் அல்லது நபர்கள் இறந்து விட்டார்கள் என்பது உறுதியாகும் வரை நாம் அவர்களையும் கண்டுபிடிக்க முயல்வோம். ஆனால் அது வரை நம் இருவரைத் தவிர

வேறு யாருக்கும் இந்த மேப் விஷயம் தெரியாமல் இருப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன், சார்..."

"ஆனால் வெளியே சொல்லாமல் இருந்து, நாம் கண்டுபிடிப்பதற்கு முன்பே ஏதாவது அசம்பாவிதம் இந்த இடங்களில் நடந்து விட்டால் தவறாகிப் போய் விடுமே, ஆனந்த்"

"ஆச்சார்யா வீட்டில் இருந்து கிடைத்தது என்று தெரிந்தால் கொலையாளிகள் உஷாராகி விடுவார்களே, சார்..."

இந்த இக்கட்டான நிலையில் என்ன செய்வது என்று ஜெயின் யோசித்த போது ஆனந்த் சொன்னான். "வேண்டுமானால் புதுதில்லியில் முக்கியமான இடங்களுக்கு ஆபத்து என்பது போல் மொட்டையாக ஃபோன் காலோ, கடிதமோ அனுப்பி வைக்கலாம். பாதுகாப்பு ஏற்பாடுகள் உஷார்ப்படுத்தப்பட அது உதவும்... நாம் உடனடியாக நம் துப்பு துலக்கும் வேலையை முடுக்கி விடலாம்..."

சிந்தித்த போது அவன் சொல்வதே சரியென்று அவருக்குத் தோன்றியது. கூடுதல் தகவல்கள் இல்லாத இந்த வெறும் வரைபடம் வெளியிடப்படுவதில் பெரிய நன்மை விளைந்து விடும் என்று தோன்றவில்லை. ஆனந்த் சொல்வது போல் கொலையாளிகளை உஷார்ப்படுத்தத்தான் உதவும் என்று தோன்றியது. "உங்களுக்கு

உதவிக்கு யாராவது வேண்டுமா?..."

"வேண்டாம், சார். எனக்குத் தேவைப்படும் விவரங்களை நம்பிக்கையான ஆட்களிடமிருந்து நானே பெற்றுக் கொள்கிறேன்....சார். ஒரு கேள்வி. உங்கள் ஆபிசில் இருக்கும் மகேந்திரன் எப்படி?"

"கம்ப்யூட்டரில் புலி. புத்திசாலி. ஏன் கேட்கிறீர்கள்?"

"ஆச்சார்யா அவனிடம் நிறையப் பேசுவார். கம்ப்யூட்டரில் சந்தேகம் கேட்பார் என்றெல்லாம் சொன்னார்கள். அவனுக்கு மற்றவர்கள் கம்ப்யூட்டர்களில் புகுந்து வேவு பார்க்கும் பழக்கமும் இருக்கிறது என்றார்கள். அதனால்தான் கேட்டேன்...."

ஜெயின் சற்று யோசித்து விட்டுச் சொன்னார், "உண்மைதான். அவனுக்கு அரசியல் செல்வாக்கும் இருக்கிறது. அவனை வேலைக்குச் சேர்த்ததே அந்த செல்வாக்குதான். ஆனாலும் வேலையில் அவனிடம் குறை சொல்வதற்கில்லை....."

ஆனந்த் மேற்கொண்டு அவரிடம் மகேந்திரனைப் பற்றி எதுவும் கேட்கப் போகவில்லை. சற்று நேரத்திற்கு முன் ஜெயினின் அறைக்குள் நுழையும் போது கூட அவன் கழுகுப் பார்வை பார்த்தது

மனதில் நெருடியது....

*************

வெளியே பனிக்காற்றின் தீவிரம் அதிகமாயிருந்தது. அவன் புத்த விஹாரத்தை விட்டு வந்து இரண்டு மணி நேரம் ஆகியிருந்தது. அவன் உறைபனி லேசாகப் போர்த்தியிருந்த பாறைகளில் ஏறிப் பயணம் செய்தான். முடிந்த வரை மனிதர்கள் செல்லக் கூடிய பாதைகளை அவன் தவிர்த்தான். இந்த நள்ளிரவில் வெளியே யாரும் அந்தப் பகுதியில் பயணிப்பது அபூர்வம் என்றாலும் அவன் அனாவசியமாக ஆபத்துகளை எதிர்கொள்வதைத் தவிர்க்க எண்ணினான். ஆங்காங்கே பனிக்கரடிகளைக் கண்டான். அவை அவனை வெறித்துப் பார்க்க அவன் புன்னகையுடன் அவற்றைப் பார்த்து கையசைத்து விட்டுத் தன் பயணத்தைத் தொடர்ந்தான். ஒரு பனிக்கரடி அவனை சிறிது தூரம் பின் தொடர்ந்து வந்தது. ஆனால் அவனுக்கு சிறிதும் பயம் இருக்கவில்லை. மனிதர்களை விட இந்த விலங்குகள் எத்தனையோ மேல். அவசியமில்லாமல் அடுத்தவர்களை இம்சிப்பதில்லை.

நீண்ட பயணத்திற்குப் பின் ஒரு நெடுஞ்சாலையை அடைந்தான். மறைவாக நின்று ஒரு மணி நேரம் அமைதியாக அந்த நெடுஞ்சாலையைக் கவனித்தான். ஆள் நடமாட்டம்

இல்லையென்றாலும் அந்த ஒரு மணி நேரத்தில் ஒரு லாரியும், ஒரு மிலிட்டரி ட்ரக்கும் அந்த சாலையில் சென்றன. பனியினூடே அந்த வண்டிகளின் விளக்குகள் மங்கலாகத் தெரிந்து மறைந்தன. அங்கு நின்ற அந்த வேளையில் அவன் மனம் அந்த புத்த பிக்குகளை நன்றியுடன் எண்ணிப் பார்த்தது. பேண்ட் பையில் இருந்த பணமும் அவன் உடலை சுற்றியிருந்த சால்வையும் அவர்களுடைய அன்பின் அடையாளமாய் அவனை நெருங்கி இருப்பதை உணர்ந்தான். 'எப்படி இவர்களுக்கு கைம்மாறு செய்யப் போகிறேன்?' என்று கேட்டுக் கொண்டான். அப்படியொரு சந்தர்ப்பம் கிடைக்கும் வரையாவது உயிருடன் இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

நெடுஞ்சாலை ஓரமாக இருந்த பனி படர்ந்த மரங்களை ஆராய்ந்து ஒரு மரத்தைத் தேர்ந்தெடுத்தான். பதுங்கியபடியே சென்று அந்த மரத்தில் ஏறிக் கொண்டு அமைதியாகக் காத்திருந்தான். அந்தக் காத்திருத்தலில் பதட்டம் இருக்கவில்லை. அவசரமோ, அலுப்போ இருக்கவில்லை. சுமார் அரை மணி நேரம் கழித்து ஒரு சரக்கு லாரி வருவது பனியை லேசாக ஊடுருவி வந்த விளக்குகள் மூலம் தெரிந்தது. அந்த லாரி அந்த மரத்தைக் கடந்த போது சத்தமில்லாமல் அந்த லாரியில் குதித்தான். அந்த லாரி தார்ப்பாயில் இருந்த பனியை கைகளால் அப்புறப்படுத்தி மல்லாந்து படுத்துக் கொண்டான்.

பனிக்கால இரவின் ஆகாயம் மங்கலாகத் தெரியும் நட்சத்திரங்களுடன் பேரழகாய்த் தெரிந்தது. சிறிது நேரம் ரசித்தவன் களைப்பில் அப்படியே உறங்கிப் போனான். அந்த உறக்கத்தில் கூட அவன் உடல் அந்த லாரியின் வேகத்தை மிகச்சரியாக உணர்ந்திருந்தது. வேகம் குறைய ஆரம்பித்த போது தானாக விழித்துக் கொண்டான். தலையை லேசாக உயர்த்திப் பார்த்தான். அதிகாலை ஆகியிருந்தது. தூரத்தில் ஒரு டீக்கடை தெரிந்தது.

அந்த டீக்கடை முன் ஒரு டூரிஸ்ட் பஸ்ஸும், ஒரு வேனும் நின்றிருந்தன. லாரியை அங்கு நிறுத்தி டீ குடிக்க டிரைவரும் க்ளீனரும் போக சரியாக இரண்டு நிமிடங்கள் கழித்து மறைவாய் லாரியில் இருந்து இறங்கிய அவன் அந்த டூரிஸ்ட் பஸ்ஸை சுற்றிக் கடந்து சென்று டீக்கடையை அணுகினான். லாரி டிரைவரும், க்ளீனரும் அவன் அந்தப் பஸ் பயணி என்று நினைத்தார்கள். அங்கு டீ வாங்கிக் குடித்தபடியே அங்குள்ளவர்களை ஆராய்ந்தான். அங்கிருந்தவர்களில் யாரும் முக்காடு போட்டிருந்த அவன் மீது ஆர்வம் காட்டவில்லை. அவனும் ஆர்வத்தைத் தூண்டும்படியாக வித்தியாசமாக நடந்து கொள்ளவில்லை.

அப்போது இன்னொரு பஸ் எதிர்ப்புறத்தில் இருந்து வந்தது. அந்த நெடுஞ்சாலையில் ஒரு மைல் தூரத்தில் இருந்த வேறொரு டீக்கடையில் முன்பே பயணிகளுக்காக நிறுத்தி இருந்ததால் அந்த

பஸ் அந்த டீக்கடை முன் நிற்காமல் விரைந்தது. அந்தப் பஸ்ஸில் இருந்த ஒரு பயணி ஜன்னல் வழியாக வேடிக்கை பார்த்து வந்தவன் டீக்கடையில் இருந்த முக்காட்டு மனிதனை உற்றுப் பார்த்தான். அவனும் தன்னை உற்றுப் பார்க்கும் மனிதனைக் கூர்ந்து பார்க்க அந்த மனிதன் அவனை அடையாளம் கண்டு கொண்டது போல் தெரிந்தது. பார்த்தது சில வினாடிகள் என்றாலும் அந்தப் பயணியின் முகத்தில் தெரிந்த பீதி அவனுக்கு அபாயச் சங்கு ஊதியது.

## அமானுஷ்யன் 11

ஹலோ"

"ஊம்... சொல்லுங்கள்... அவன் பிணம் கிடைத்ததா?"

"இல்லை, சார். அவன் பிழைத்திருந்தால் அந்த புத்த விஹாரத்தில்தான் இருந்திருக்க வேண்டும் என்று நினைத்து அங்கே பத்து பேரை அனுப்பினேன். அங்கே இரண்டாவது தடவை போனதால் அவங்களுக்கே பயம் வந்து அவர்களின் பாதாள அறையைக் கூடத் திறந்து காட்டியிருக்கிறார்கள்...அங்கேயும் உள்ளே போய் ஆட்கள் பார்த்திருக்கிறார்கள். அவன் இல்லை....

ஏதாவது விலங்கு அவன் உடம்பை எடுத்துக் கொண்டு போய் இருக்கும் என்று என் ஆட்கள் சந்தேகப்படுகிறார்கள்...."

மறுபுறத்தில் இருந்து ஏளனமாக குரல் வந்தது. "உங்கள் ஃபோன் கால் என்று தெரிந்தவுடன் நல்ல சேதிதான் வந்திருக்கும் என்று நினைத்தேன்....."

CBI மனிதன் தன் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு சொன்னான். "நல்ல செய்தியை நிதானமாகச் சொன்னாலும் பரவாயில்லை. கெட்ட செய்தியைத்தான் உடனடியாகத் தெரிந்து கொள்வது புத்திசாலித்தனம். ஆச்சார்யா வீட்டில் ஆனந்துக்கு ஏதோ ஒரு தடயம் கிடைத்தது போல் இருக்கிறது.."

"அப்படி இருக்க வாய்ப்பில்லையே... என்ன என்று தெரிந்ததா?"

"ஜெயினும் அவனும் வாயைத் திறக்க மாட்டேன்கிறார்கள். ஆனால் ஏதோ கிடைத்திருக்கிறது என்பது மட்டும் உறுதியாய்த் தெரிகிறது. நாம் ஏதாவது உடனடியாகச் செய்ய வேண்டும்... இல்லை என்றால் சிக்கலாக வாய்ப்பிருக்கிறது"

இந்த விஷயம் மறுபக்கத்தை யோசிக்க வைத்தது போல் தெரிந்தது. சில வினாடிகள் கழித்து "அதற்கு சீக்கிரம் ஒரு ஏற்பாடு

செய்கிறேன்...."

"ஆனந்த் நாளைக்கு பெங்களூர் போகிறான்"

"ஏன்?"

"ஆச்சார்யா மனைவியைப் பார்த்துப் பேசப் போகிறான்"

"ஆச்சார்யா மனைவியிடம் எதாவது சொல்லி இருக்க வாய்ப்பிருக்கிறதா?"

"அவர் ஆஃபிஸ் விஷயத்தை மனைவியிடம் சொல்வதில்லை.... ஆனால் அந்த ஆனந்த் கையில் என்ன தடயம் கிடைத்திருக்கிறது என்றும் அது பற்றி ஆச்சார்யாவின் மனைவிக்கு என்ன தகவல் தெரியும் என்றும் தெரியவில்லை"

"ஆச்சார்யா கேஸை நான் சீக்கிரமே முடித்து வைக்கிறேன். நீங்கள் அந்த ஆள் பிணத்தை சீக்கிரம் கண்டுபிடியுங்கள். ஏதோ விலங்கு சாப்பிட்டிருக்கலாம் என்கிற அனுமானம் எல்லாம் வேண்டாம். விலங்கு கூட மனிதனை முழுவதும் சாப்பிடாது. மிச்சம் ஏதாவது வைக்கும். அந்த மிச்சத்தைக் கண்டுபிடியுங்கள்....."

********

அவன் மனதில் அந்த பஸ் பயணியின் முகத்தில் தெரிந்த உணர்ச்சியும் பீதியும் சிறிது நேரம் அப்படியே நின்றன. யாரவன்? அவனைத் தேடும் கூட்டத்தில் ஒரு நபரா? இல்லை வேறேதாவது விதத்தில் நன்றாகப் பரிச்சயமானவனா? நன்றாகப் பரிச்சயமானவனாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் முக்காட்டில் முகம் மட்டும் தெரியும்படியாக இருக்கும் மனிதனை அடையாளம் கண்டு கொள்வது மிக நன்றாகத் தெரிந்தவர்களுக்கு மட்டும்தான் முடியும்... ஏனப்படி அவன் பயப்பட்டான்? உயிருடன் இருக்கிறானே என்ற அதிர்ச்சியை விட பயம் அதிகமாக இருப்பதாக அல்லவா தோன்றுகிறது? ஏதோ பேயைப் பார்த்தது போல் அவன் முகம் மாறியதே....

அவன் யோசித்துக் கொண்டிருக்கும் போது ஒரு கார் வந்து நின்றது. டிரைவர் சீட்டில் ஒரு அழகான இளம் பெண் இருந்தாள். அவளும் ஒரு ஆறு வயதுச் சிறுவனும் இறங்கினார்கள். பையன் துறுதுறுவென்று இருந்தான். அப்போதுதான் உறக்கத்திலிருந்து விழித்திருக்கிறான் என்பது பார்க்கையிலேயே தெரிந்தது. ஆனால் கையில் ஒரு பந்துடன் இறங்கியவன் தாயுடன் வீர நடை போட்டு டீக்கடைக்கு வந்தான். பையனுடன் டீக்கடைக்கு வந்த அந்த இளம் பெண் மிகவும் களைத்துப் போனது போல் தெரிந்தாள். காரின் பின்

சீட்டில் இருந்து ஒரு வயதான பெண்மணி எட்டிப் பார்த்தாள்.

"உனக்கு டீ வேணுமாடா?" அந்தப் பெண் அவனிடம் தமிழில் கேட்டாள். அவனுக்கு நினைவு வந்த பின் கேட்கும் முதல் தமிழ் பேச்சு அதுதான். அப்போதுதான் அவனுக்கு இன்னொரு உண்மை உறைத்தது. அவன் சிந்திப்பதும் தமிழில்தான். அவன் தமிழ்நாட்டவனோ?

டீக்கு பதிலாக சாக்லேட் கேட்ட மகனை அவள் முறைத்து விட்டு இரண்டு டீ ஆர்டர் செய்தாள். அந்தச் சிறுவன் அந்தக் கடையில் தான் கேட்ட சாக்லேட் இருக்கிறதா என்று எட்டி எட்டி பார்த்து சலித்துப் போனான். அவள் இரண்டு டீ வாங்கிக் கொண்டு ஒன்றை அந்தக் காரின் பின் சீட்டில் அமர்ந்திருந்த வயதான பெண்மணிக்குக் கொடுக்கப் போக அதே வீர நடையுடன் தாயுடன் அந்தச் சிறுவன் விரைந்தான்.

அந்த நேரத்தில் அந்தச் சிறுவனின் கையிலிருந்த பந்து தவறி விழுந்து தெருவுக்குச் செல்ல, அவன் பந்தை எடுக்க ஓடினான். மேலிருந்து மிக வேகமாக வந்து கொண்டிருந்த ஒரு லாரியின் டிரைவர் திடீரென்று பையனை சாலை நடுவில் எதிர்பார்க்காததால் தடுமாறுவது தெரிந்தது. அந்த ஒரு கணத்தில் டீ குடித்துக் கொண்டிருந்த அவனுக்கு அந்த டிரைவர் அவசரமாக ப்ரேக்

போட்டாலும் வண்டி சிறுவனின் மீது ஏறிப் போய்த்தான் நிற்கும் என்பது புலனாக டீ டம்ளரை வீசி விட்டு வேகமாக இயங்கினான். கண்ணிமைக்கும் நேரத்தில் அவன் குறுக்கே பாய்ந்து அந்தச் சிறுவனுடன் எதிர்பக்கம் உருள அந்த லாரி சிறிது தூரம் போய் பெருத்த சத்தத்துடன் நின்றது.

நடந்தது என்ன என்று அங்குள்ளவர்களுக்குப் புலனாக சிறிது நேரம் தேவைப்பட்டது. அந்தப் பையனின் தாயும், பின் சீட்டு மூதாட்டியும் அதிர்ச்சியில் உறைந்து போய் பார்த்துக் கொண்டிருக்க, அந்தச் சிறுவன் என்ன நடந்தது என்று உடனடியாக அறிய முடியாமல் திருதிருவென விழித்தான். சிறுவனைத் தூக்கிக் கொண்டு எழுந்த போது அவனுக்கு லேசாக சிராய்ப்புகள் இருந்தன. சிறுவனுக்கு ஒன்றும் ஆகவில்லை. அதிகாலை அரைத் தூக்கத்தில் இருந்தவர்கள் அனவரும் முழுவதுமாக விழித்துக் கொண்டு அது பற்றிப் பரபரப்புடன் பேசிக் கொள்ள ஆரம்பித்தார்கள். அங்கிருந்தவர்களுக்கு அவன் உடனே ஹீரோ ஆகி விட்டான். பலரும் அந்தச் சிறுவனைக் காப்பாற்றிய அவனுக்குக் கை கொடுத்துப் பாராட்டினார்கள். ஒரு சர்தார்ஜி ஓடி வந்து அவனைத் தழுவிக் கொண்டார். "என்ன டைமிங்...என்ன ஸ்பீட்....அசாத்தியம்". சிறுவன் அவனைப் பார்த்து சினேகமாகப் புன்னகைத்தான்.

அந்தச் சிறுவனின் தாயிற்கு அதிர்ச்சி விலக சில வினாடிகள்

தேவைப்பட்டன. கண்ணீர் வழிய ஓடிச் சென்று மகனைக் கட்டிக் கொண்டாள். மகனுக்கு ஒன்றும் ஆகவில்லை என்று உறுதிப்படுத்திக் கொண்ட பின்பு அவன் பக்கம் திரும்பிய அந்தப் பெண் கண்களில் இன்னும் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. தன் கைகள் இரண்டையும் கூப்பி வணங்கினாள். "நீங்கள் கடவுள் மாதிரி...." என்று ஹிந்தியில் குரல் தழுதழுக்கச் சொன்னாள். அவளுக்கு அவன் தமிழன் என்று தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

அந்தக் கைகூப்பலும், வார்த்தைகளும், மற்றவர்களின் பாராட்டுகளும் அவனை தர்மசங்கடப்படுத்தின. அவனுக்கு உண்மையில் தான் பெரிதாக சாதித்தது போல் தெரியவில்லை. மேலும் அவன் பலர் கவனத்தையும் ஈர்த்து விட்டதும் ஒரு அபாய நிலையை அங்கு உருவாக்கியதாக அவனுக்குத் தோன்றியது. பஸ்ஸில் அவனைப் பார்த்த பயணி யாரிடம் கூப்பிட்டு சொல்வான், இனி யார் எப்போது அவனைத் தேடி வரப் போகிறார்கள் என்பதெல்லாம் அவனுக்குத் தெரியவில்லை.

அவன் வந்த லாரியின் டிரைவரும் க்ளீனரும் கிளம்பினார்கள். அங்கிருந்த அத்தனை பேர் கவனமும் அவன் மீது இருந்ததால் மறைவாகச் சென்று அந்த லாரியில் ஏறிக் கொள்வது சாத்தியமில்லை. டூரிஸ்ட் பஸ்ஸ¤ம், வேனும் கூடக் கிளம்பத் தயாராயின. அந்தப் பெண்ணும் அவனிடம் நூறாவது தடவையாக

நன்றி சொல்லி விட்டுக் கிளம்பத் தயாரானாள். அவனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. மறைவாக இருக்கவும், மறைவாகப் பயணம் செய்யவும் இரவு நேரம் உகந்தது. ஆனால் நன்றாக விடிந்து விட்ட இந்த நாள் இனி என்ன செய்யப் போகிறான்?

********

குறுந்தாடி மனிதன் அன்று காலை சற்று தாமதமாகத்தான் எழுந்தான். முந்தைய தினம் இரவு ரகசிய சந்திப்பு ஒன்றில் அவன் உட்பட ஏழு பேர் கலந்து பேசி முடிய நள்ளிரவைத் தாண்டி இருந்தது. அவர்கள் திட்டம் எல்லாம் கச்சிதமாக அரங்கேறிக் கொண்டிருக்கிறது. அந்த அமானுஷ்யன் பிணமும் பார்க்கக் கிடைத்து விட்டால் கவலையில்லாமல் முன்னேறலாம். அவன் தன் காலைக் கடன்களை எல்லாம் முடித்து விட்டுத்தான் காலை எட்டரைக்கு செல் ஃபோனைப் பார்த்தான். யாரோ 17 முறைகள் அழைத்திருந்தார்கள். ஸ்விட்ச் ஆ·ப் செய்து விட்டு உறங்கி இருந்தான். யாரெல்லாம் அழைத்திருக்கிறார்கள் என்று பார்த்தான். எல்லாம் ஒரே எண். அவர்கள் இயக்கத்தின் ஒரு உறுப்பினர்தான் அத்தனை முறை அழைத்திருந்தான். காலை ஆறு பத்திலிருந்து விடாமல் தொடர்ந்து அழைத்திருக்கிறான்.

குறுந்தாடி மனிதன் அந்த எண்ணைத் தொடர்பு கொண்டான்.

"அந்த சைத்தான் இன்னும் உயிரோடுதான் இருக்கிறான்." எந்த முன்னுரையும் இல்லாமல் படபடப்பாக தகவல் வந்தது.

தலையில் இடி விழுந்தது போல குறுந்தாடி உணர்ந்தான். "உனக்கு ஆள் மாறாட்டம் ஆகவில்லையே"

"அவன் போல இன்னொரு சைத்தான் இருக்க முடியுமா? காலையில் ஐந்தரை மணிக்கு அவனைப் பார்த்தேன். பார்த்தவுடனே ஃபோன் செய்யலாம் என்றால் டவர் கிடைக்கவில்லை. டவர் கிடைத்த போது நீங்கள் எடுக்கவில்லை. ....."

எதிர்முனையில் தெரிந்த படபடப்பு அவனை நம்பச் சொன்னது. அவன் சொன்னது போல் அவன் போல் இன்னொரு சைத்தான் கண்டிப்பாக இருக்க முடியாது. "எங்கே அவனைப் பார்த்தாய்? எப்போது பார்த்தாய்? ஒரு சின்ன தகவல் கூட விடாமல் எனக்கு விவரமாய் சொல்"

குறுந்தாடி அவருக்காகப் பொறுமையிழந்து காத்துக் கொண்டிருந்தான். அவன் சீக்கியரைப் போலத் தலைப்பாகை இட்டு மாறுவேடத்தில் இருந்தான். அவரை எப்போதும் அவன் அலுவலகத்தில் வந்து சந்தித்ததில்லை. ஆனால் இப்போதைய செய்தி மிக முக்கியமென்பதால் இரவு வரை காத்திருக்க அவனுக்கு நேரமில்லை. ஒரு பொதுத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஒரே ஒரு வார்த்தைதான் அவரிடம் சொல்லியிருந்தான். "அவசரம்"

அவன் குரலைக் கேட்ட அவர் அலுவலகத்துக்கு பதினோரு மணிக்கு வரச் சொன்னார்.

அவன் கடிகாரத்தைப் பார்த்தான். மணி பதினொன்றரை. அரசியல்வாதிகளுக்கும் நேரம் தவறாமை என்ற நல்ல பழக்கத்திற்கும் ஏனோ சம்பந்தமே இருப்பதில்லை. கிட்டத்தட்ட பன்னிரண்டு பேர் கைகளில் மனுக்களுடன் காத்திருந்தார்கள். அடியாட்கள், அன்னக்கைகள் என்று நாலைந்து பேரும் அங்கிருந்தனர்.

அவர் வந்த போது மணி பதினொன்று ஐம்பத்தைந்து. செயலர், இரண்டு அரசு அதிகாரிகளுடன் உள்ளே நுழைந்தவர் அவனைக் கண்டது போலவே காட்டிக் கொள்ளவில்லை. மற்றவர்கள் சல்யூட் அடிக்க அவர் கைகள் கூப்பி அவர்களுக்கு பணிவாக வணக்கம்

தெரிவித்து விட்டு தனதறைக்குள் நுழைந்தார். ஆனால் முதலில் கூப்பிட்டனுப்பியது அவனைத்தான்.

அவன் உள்ளே நுழைந்த போது தன் செயலருக்கு ஏதோ சில ஆணைகள் பிறப்பித்துக் கொண்டிருந்த அவர் அவனை உட்கார சைகை காட்டி விட்டு செயலரிடம் போகும் போது கதவை சாத்திக் கொண்டு போகச் சொன்னார்.

கதவை சாத்திக் கொண்டு செயலர் போன பிறகு கேட்டார், "அப்படி என்ன தலை போகிற அவசரம்?"

"அவன் உயிரோடு இருக்கிறான்"

அவர் முகத்தில் இருந்து இரத்தம் வடிந்தது. "என்னது?"

"அவன் உயிரோடு இருக்கிறான்" என்று மீண்டும் சொன்ன அவன் தொடர்ந்தான். "என் ஆள் ஒருவன் அவனை நேரில் பார்த்திருக்கிறான்."

அவருக்கு அதை நம்ப முடியவில்லை. அவன் அன்று காலை தனக்கு வந்த ஃபோன்காலை விவரித்தான். பேச்சில்லாமல் திகைத்துப் போய் அமர்ந்திருந்த அவர் பேச முடிந்த போது வார்த்தைகள்

பலவீனமாய் வந்தன. "அவன் எப்படி பிழைத்திருக்க முடியும்?"

"தெரியவில்லை."

"அது சரி, பார்த்த இடத்திலேயே அவனை சுட்டுத் தள்ளாமல் இருந்தது எதனாலாம்...?" அவர் குரல் பலம் பெற ஆரம்பித்தது. கோபத்தில் பொரிந்து தள்ளினார். "ஃபோனில் தகவல் தெரிவிக்க டவர் கிடைக்கவில்லை, சரி. பஸ்ஸை அங்கேயே நிறுத்தி இறங்கி அவனை சுட்டுத் தள்ளியிருக்கலாமே அந்த ஆள்? நீங்கள் கேட்கவில்லையா? அவனைப் பார்த்தவுடனே பயந்து போய் விட்டானா? இந்த மாதிரி பேடிகளை எல்லாம் ஏன் கட்டிக் கொண்டு அழுகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை"

"சார், அவன் பேடி அல்ல. பல பேரைக் கொன்றவன் அவன். போலீசில் ஒரு தடவை மாட்டி சித்திரவதை அனுபவித்த போது கூட வாய் திறந்து யாரையும் காட்டிக் கொடுக்காதவன். அவன் அந்த அமானுஷ்யன் விஷயத்தில்தான் பயப்படுகிறான். அந்த பயத்திற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அந்த மலையுச்சியில் ஆறு பேர் துப்பாக்கியால் சுட்டு கிட்டத்தட்ட 15 குண்டுகளில் ஒரே ஒரு குண்டுதான் அவன் மேல் பாய்ந்திருக்கிறது. இத்தனைக்கும் அவனுக்கு அந்த மலையுச்சியில் நகர முடிந்த இடம் குறைவு. அப்படிப்பட்டவனைத் தனியாக தாக்கப் போவது புத்திசாலித்தனம்

இல்லை என்று கூட சொல்லலாம்.... "

அவர் அங்கலாய்த்தார். "இப்படிப்பட்டவன் நம் பக்கம் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!"

அதை அவன் காதில் போட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை. அவன் கவலை வேறாக இருந்தது. "அவன் உயிரோடு இருந்தால் நமக்கும் நம் திட்டத்திற்கும் ஆபத்து. நான் எங்கள் ஆட்கள் ஏழெட்டு பேரை உடனடியாக அவனைப் பார்த்த இடத்திற்கு போகச் சொல்லியிருக்கிறேன்... அவன் அங்கே இருந்தால் அவனை உயிரோடு அவர்கள் விட மாட்டார்கள்"

"நான் இப்போதுதான் அந்த ஆச்சார்யா கொலைக் கேஸிற்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு வந்தேன். அதற்குள் இந்தப் பிரச்சினை வந்து விட்டது.... இத்தனை பேர் அவனுக்காக வலை வீசி தேடிக் கொண்டிருக்கும் போது அவன் ஏதோ ஒரு டீக்கடையில் சாவகாசமாய் டீ குடித்துக் கொண்டிருக்கிறான் என்றால் அவன் மனிதனே இல்லை. அவன் உங்கள் ஆட்கள் போகிற வரை அங்கேயே இருப்பானா?" அவர் குரலில் அவன் இன்னமும் அங்கேயே இருப்பான் என்ற நம்பிக்கை இருக்கவில்லை.

*************

அந்தப் பெண் தன்னுடைய விசிட்டிங் கார்டை அவனுக்குத் தந்தாள். "எப்பவாவது டெல்லி பக்கம் வந்தால் கண்டிப்பாக என்னை வந்து பாருங்கள்."

அவன் அந்த விசிட்டிங் கார்டைப் பார்த்தான். சஹானா என்பது அவள் பெயர் என்றும் அவள் பிரபல டிவி ஒன்றில் ரிப்போர்ட்டராக வேலை பார்க்கிறாள் என்பதும் தெரிந்தது. புன்னகையுடன் தலையசைத்தான். அந்த பஸ்ஸ¤ம், வேனும், லாரியும் கிளம்பிச் செல்ல ஆரம்பித்தன. அப்போதுதான் அவள் அங்கு வேறு எதுவும் வண்டிகள் இல்லாததைக் கவனித்தாள். "நீங்கள் அந்த பஸ்ஸில் வந்திருப்பவர் என்று நினைத்தேன். நீங்கள் இங்கேயே இருப்பவர்தானா?"

"இல்லை....." அதற்கு மேல் அவன் விவரிக்க முனையவில்லை.

அவள் குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள். அவன் ஒன்றும் சொல்லாததைப் பார்த்து தானாகச் சொன்னாள். "நீங்கள் டெல்லி பக்கம் போகிறவராக இருந்தால் காரில் ஏறிக் கொள்ளுங்கள். நான் உங்களை டிராப் செய்கிறேன்..."

அங்கு இனியும் தங்குவது ஆபத்து என்பதை நன்குணர்ந்த அவன்

"உங்களுக்கு ஒன்றும் சிரமமில்லையே" என்றான்.

"இதில் என்ன சிரமம் இருக்கிறது...உங்கள் லக்கேஜ் எங்கேயிருக்கிறது?"

"லக்கேஜ் எதுவும் இல்லை"

"அப்படியானால் ஏறிக் கொள்ளுங்கள்" என்று அவள் காரின் பின் பக்கக் கதவைத் திறக்க அவன் தயக்கத்துடன் ஏறிக் கொண்டான். கார் கிளம்பியது.

அவன் அருகில் அமர்ந்திருந்த வயதான பெண்மணி உணர்ச்சியே இல்லாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தச் சிறுவனும் முன் சீட்டில் மண்டியிட்டபடி பின்னால் திரும்பி அவனையே பார்த்தான். அவன் பார்வையில் சினேகம் இருந்தது. அவன் தாய் சொன்னாள். "வருண், சரியாய் சீட்டில் உட்கார்"

"நான் பின்னால் அங்கிள் உடன் உட்காரப் போகிறேன்" என்றான் அந்த சிறுவன்.

"பாட்டியும் அங்கிளும் சௌகரியமாய் உட்காரட்டும்..."

"பரவாயில்லை. வருவதானால் வரட்டும்" என்று அவன் சொல்ல வருண் தாயைப் பார்த்தான். அவள் தலையசைக்க வருண் கைகளை நீட்ட அவன் சிறுவனைத் தூக்கி தன்னருகில் அமர வைத்துக் கொண்டான். வருண் அவனை ஒட்டினாற்போல் உட்கார்ந்து அவனைப் பார்த்து புன்னகைக்க அவனும் புன்னகைத்தான். அவனுக்கு அந்த சிறுவனை மிகவும் பிடித்து விட்டது.

அவன் பின்னால் திரும்பிப் பார்த்தான். எந்த வாகனமும் அவர்களைப் பின் தொடர்வதாகத் தெரியவில்லை.

வருண் அவன் கைகளில் இருந்த சிராய்ப்புகளைப் பார்த்து சொன்னான். "அங்கிள் உங்கள் கையில் ரத்தம்.."

அப்போதுதான் சஹானா பின்னால் திரும்பி அவனுடைய சிராய்ப்புக் காயங்களைக் கவனித்தாள். மகன் காப்பாற்றப்பட்டவுடன் அவனுக்கு ஏதாவது காயம் பட்டிருக்கிறதா என்று அவன் தலையில் இருந்து கால் வரை ஆராய்ந்து பார்த்தவளுக்கு அவனைக் காப்பாற்றிய மனிதனுக்கு ஏதாவது ஆகியிருக்கலாம் என்ற எண்ணம் கூடத் தோன்றாதது ஒரு மாதிரியாக இருந்தது. "சாரி, நான் கவனிக்கவில்லை. இங்கேயே முதலுதவிப் பெட்டி இருக்கிறது...." என்றவள் காரை ஓரமாக நிறுத்தினாள்.

அவனுக்கு அந்த இடத்திலிருந்து எவ்வளவு வேகமாகப் போக முடியுமோ அவ்வளவு வேகமாகப் போய் விட வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே இருந்தது. "இதெல்லாம் பெரிய காயமில்லை. நீங்கள் காரை நிறுத்த வேண்டாம்" என்று சொல்லிப் பார்த்தான். அவள் கேட்பதாக இல்லை. அவள் நிதானமாக முதலுதவிப் பெட்டியின் சாவியைத் தேட ஆரம்பித்தாள்.

அவன் என்னேரமும் எதிரிகளை எதிர்பார்த்திருப்பதை அவளிடம் சொல்ல முடியாமல் தவித்தான். அவன் பார்வை பின் பக்கமாகவே இருந்தது......

********

மஹாவீர் ஜெயினும் ஆனந்தும் பேசிக் கொண்டிருந்த போது ஜெயினின் ஃபோன் அடித்தது. அழைத்தவர் சிட்டி போலீஸ் கமிஷனர். "சார், உங்கள் அடிஷனல் டைரக்டர் ஆச்சார்யாவைக் கொன்றவனைக் கைது செய்து விட்டோம்...."

அதிர்ந்து போன ஜெயின் கேட்டார். "யார் கொலையாளி? நீங்கள் அவனை எப்படிப் பிடித்தீர்கள்?"

"அந்தக் கொலையாளியைக் கைது செய்த விஷயம் பிரஸ்ஸ¤க்கும்,

டிவிக்கும் யாரோ தெரியப்படுத்தி விட்டதால் இதே கேள்வியை போலீஸ் அதிகாரிகளிடம் கேட்க நிருபர்கள் கூட்டம் அங்கே மொய்த்துக் கொண்டிருக்கிறது....நீங்கள் டிவியை ஆன் செய்தால் முழு விவரமும் தெரியும். 'ப்ளாஷ் நியூசாக காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள்....."

நன்றி தெரிவித்து விட்டு ஃபோனை வைத்த ஜெயின் ஆனந்தை அழைத்துக் கொண்டு அலுவலகத்தில் டிவி வைத்திருக்கும் ஹாலுக்கு விரைந்தார்.

## அமானுஷ்யன் (13)

சஹானா நிதானமாய் முதலுதவிப் பெட்டியைத் திறந்து டெட்டால், பஞ்சு எல்லாம் எடுக்க அவன் உள்ளுக்குள் பொறுமையிழந்து போனாலும் வெளிப்பார்வைக்கு அமைதியாக பதட்டமில்லாமல் பார்த்திருந்தான். அவனுக்குள் ஒரு குரல் கேட்டது.

"அவசரப்படாதே. அவசரப்படும் போது காலத்தை இழக்கிறாய்....". யாரோ எப்போதோ சொன்னதாய்த் தோன்றிய அந்த வார்த்தைகள் அவனுடைய கடந்த காலத்தின் முதல் நினைவாய்த் தோன்றியது. யார் இதைச் சொன்னார்கள்? எப்போது சொன்னார்கள்?....அவனுக்கு நினைவில்லை.

அவள் தந்த முதலுதவிப் பொருள்களால் வெளிப்பார்வைக்குத் தெரிந்த சிராய்ப்புக் காயங்களை சுத்தம் செய்து மருந்து தடவிக் கொண்டு அவளுக்குப் புன்னகையுடன் நன்றி தெரிவித்தான். அவனுடைய ஒவ்வொரு அசைவிலும் ஒருவித நிதானமான கச்சிதத்தை சஹானா கவனித்தாள். அவன் புன்னகை அவனை மிக அழகாகப் பிரகாசிக்க வைத்ததாக அவளுக்குத் தோன்றியது.

நல்ல வேளையாக அவள் காரை மீண்டும் கிளப்பும் வரை பின்னால் யாரும் தொடர்ந்து வரவில்லை. ஆனால் அவன் அருகில் அமர்ந்திருந்த அந்த வயதான பெண்மணி அவனையே உன்னிப்பாகப் பார்த்த விதம் அவனுக்கு என்னவோ மாதிரியாக இருந்தது. அவன் அவளைப் பார்த்தும் புன்னகைத்தான். ஆனால் அவள் முகத்தில் எந்த சலனமும் இல்லை.

"அங்கிள், உங்கள் பெயர் என்ன?" வருண் கேட்டான்.

"அங்கிள்" என்று அவன் புன்னகைக்க வருண் கலகலவென சிரித்தான். அந்த சிறுவன் அதை நகைச்சுவையாக எடுத்துக் கொண்டதால் சிறிது நேரத்திற்குத் தப்பித்தோம் என்று அவன் நினைத்தான்.

சஹானா கேட்டாள். "உங்களுக்கு எங்கே போக வேண்டும்?"

"டெல்லி.." அவனுக்கு அவள் டெல்லி போகிறவள் என்பதால் அதே பெயரைச் சொல்லத் தோன்றியது.

"டெல்லியில் எங்கே?" என்று கேட்க வாய் திறந்த சஹானா அதைக் கேட்காமல் விட்டாள். அவளுக்கு அவன் ஒரு புதிராகத் தோன்றினான். அவனிடம் சூட்கேஸோ, பையோ இல்லாதது அவளுக்கு விசித்திரமாகத் தோன்றியது. ஏதோ அதிகாலை நடை நடக்கக் கிளம்பியவன் போல கையில் ஏதும் இல்லாமல் இந்த மலைச்சாரலில் அவன் வந்த விதம் இயற்கையாக இல்லை. மகனைக் காப்பாற்றியவனிடம் அதைத் துருவித் துருவிக் கேட்பது நாகரிகமில்லை என்று அவளுக்குத் தோன்றியது.

ஆனால் வருண் அவனை விடுவதாய் இல்லை.

"அங்கிள், சொல்லுங்கள்... உங்கள் பெயர் என்ன?"

அப்போது சஹானாவும் கண்ணாடி வழியாக பின்னால் இருந்த அவனைப் பார்க்க மூவரும் அவன் பதிலை எதிர்ப்பார்க்கிறார்கள் என்பது அவர்கள் பார்வையிலேயே அவனுக்குப் புரிந்தது. ஒரு கணம் வாயிற்கு வந்த பெயரைச் சொல்லித் தொலைக்கலாமா என்று

தோன்றியது. ஆனால் அவர்கள் நல்ல மனிதர்களாக அவனுக்குத் தோன்றினார்கள். அவர்களிடம் பொய் சொல்ல அவன் துணியவில்லை. அவன் சொல்வதைக் கேட்டு விட்டு அவர்கள் இதே சினேகத்தில் அவனுடன் பேசுவார்களா என்று தெரியவில்லை. ஆனாலும் அவன் உண்மையைச் சொல்லத் தீர்மானித்தான்.

"உண்மையைச் சொன்னால் எனக்கு என் பெயரே தெரியாது....."

அவர்கள் மூவரும் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள்.

ஒரு புத்த விஹார வாசலில் மரணத்துடன் போராடிக் கொண்டு அவன் விழுந்திருந்ததைக் கண்ட புத்த பிக்குகள் அவனைக் காப்பாற்றிய அந்த நள்ளிரவிலிருந்து ஆரம்பித்தான். அவனுக்குத் தெரிந்த அவன் வாழ்க்கையின் ஆரம்பம் அதுவே. அவன் அவர்களிடம் எதையும் மறைக்கவில்லை. அவனைத் தேடி வந்தவர்கள் அவனைத் தீவிரவாதிகள் என்று சொன்னதைக் கூட அப்படியே அவர்களிடம் சொன்னான். அவன் சொல்லச் சொல்ல அவர்கள் ஏதோ மர்மக் கதை கேட்பதைப் போல் கேட்டார்கள். வருணும் அந்த பெண்மணியும் அவன் மேல் வைத்த கண்ணை எடுக்காமல் கேட்டார்கள் என்றால் சஹானா சாலையையும், கண்ணாடி வழியாக அவனையும் மாறி மாறி பார்த்தபடியே காரை ஓட்டினாள்.

அந்த புத்த பிக்குகளின் அன்பைச் சொன்ன இடங்களில், முக்கியமாக அவன் கிளம்பும் போது அவர்கள் செய்த பிரார்த்தனை, கொடுத்த பணம், சால்வை பற்றிச் சொல்லும் போது அவனுக்கு நா தழுதழுத்தது. கடைசியில் அங்கிருந்து கிளம்பி லாரி ஒன்றில் பதுங்கி வந்ததையும், தேனீர் குடிக்க இறங்கியதையும் சொல்லி நிறுத்திய போது அங்கு ஒரு கனத்த மௌனம் நிலவியது. அவர்கள் திகைப்பின் எல்லைக்கே போய் விட்டார்கள் என்றே சொல்ல வேண்டும்.

சிறிது நேரம் கழித்து சஹானா கேட்டாள், "இனி நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்?"

"எனக்கு நான் யார், என்னை ஏன் சிலர் கொல்ல முயற்சிக்கிறார்கள் என்று தெரிய வேண்டும். அதைத் தெரிந்து கொள்கிற வரை உயிரோடு இருக்க வேண்டும்"

"சரி. டெல்லியில் எங்கே தங்குவீர்கள்?"

"இத்தனை பெரிய பிரபஞ்சத்தில் நான் ஒருவன் தங்குவதற்கு இடமில்லையா என்ன? என்னை டெல்லியில் ஆள் நடமாட்டம் அதிகமில்லாத ஒரு பொது இடத்தில் இறக்கி விடுங்கள். நான் பிறகு

பார்த்துக் கொள்கிறேன்"

அவன் வாய் வார்த்தைக்காகச் சொல்லவில்லை என்பதும் எங்கே எப்படித் தங்குவோம் என்ற கவலை சிறிதும் அவனிடம் இல்லை என்பதும் அவன் முகத்தைப் பார்க்கும் போதே அவளுக்குப் புரிந்தது. அவன் சொல்வதைப் போன்றதொரு சூழ்நிலையில் அவனைப் போல் அமைதியாக வேறு ஒருவன் இருக்க முடியும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. ஆனால் அவன் நிலைமையைத் தெரிந்து கொண்ட பிறகு அவனை அப்படியே விட்டுப் போவது தர்மமல்ல என்று சஹானா நினைத்தாள். அவன் அவள் மகனின் உயிரைக் காப்பாற்றியவன்.. அவனுக்கு அவள் நிறையவே கடன்பட்டிருக்கிறாள்....

"நீங்கள் சில நாட்கள் எங்கள் வீட்டில் தங்குங்களேன்"

அவன் ஒரு கணம் திகைத்தான். பின் நெகிழ்ச்சியுடன் சொன்னான், "நீங்கள் சொன்னதற்கு மிகவும் நன்றி. ஆனால் என்னை டெல்லியில் இறக்கி விடுங்கள். அதுவே பெரிய உதவி"

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"என்னைக் கொல்ல ஒரு கூட்டமே அலைகிறது போலத்

தோன்றுகிறது. ஒருவேளை நான் அவர்கள் சொல்வது போல தீவிரவாதியாகக் கூட இருக்கலாம். அதனால் எனக்கு அடைக்கலம் கொடுக்கிறவர்களுக்குக் கூட ஆபத்து வரலாம். ஒரு குடும்பத்திற்கு என்னால் ஆபத்து வருவதை என்னால் சகிக்க முடியாது. உங்கள் நல்ல மனதிற்கு நன்றி...." அவன் உறுதியாகச் சொன்னான்.

அவன் மறுத்தது அவள் மனதில் இருந்த தர்மசங்கடத்தைப் போக்கியது. ஒருவேளை அவன் சம்மதித்து வந்திருந்தால் அது பல பிரச்சினைகளை உண்டாக்கி இருக்கும் என்பதில் அவளுக்கு சந்தேகமில்லை....

*********

CBI அலுவலகத்தில் டிவி உள்ள ஹாலில் முன்பே ராஜாராம் ரெட்டி, மகேந்திரன் உட்பட பலரும் மிக ஆர்வமாக டிவியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு உயர் அதிகாரி நிருபர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார், ".... உண்மையில் ஆச்சார்யாவைக் கொலை செய்தவனை இவ்வளவு சீக்கிரம் கண்டு பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை ஆரம்பத்தில் எங்களுக்கு இருக்கவில்லை. கைரேகையோ, வேறு தடயங்களோ கொலையாளி விட்டுப் போகவில்லை என்பதுதான் அதற்கு முக்கிய

காரணம். அவருக்குத் தனிப்பட்ட பகைவர்கள் கிடையாது என்பது இன்னொரு காரணம். அதனால் கொலையாளி அவருடைய பழைய வழக்குகள் சம்பந்தப்பட்டவராய் இருக்கலாம் என்ற கோணத்தில் பார்க்க ஆரம்பித்தோம். எத்தனையோ வழக்குகளில் எத்தனையோ குற்றவாளிகளுக்கு அவர் தண்டனை வாங்கித் தந்தவர் என்பதால் அந்தக் குற்றவாளிகள், அல்லது அவர்களுக்கு வேண்டியவர்கள் பழி வாங்கும் நோக்கில் இந்தக் கொலையைச் செய்திருக்கலாம் என்று சந்தேகப்பட்டோம். சென்ற வருடம் போதை மருந்து கடத்தல் வழக்கில் அவர் பிடித்துக் கொடுத்தவர்கள் நிறைய நஷ்டத்தை சந்திக்க வேண்டியிருந்ததால் அவர்கள் அவரைப் பழி வாங்க துடித்துக் கொண்டிருந்தார்கள் என்ற தகவலும் எங்களுக்குக் கிடைத்தது. எனவே எங்கள் விசாரணை அந்தக் கும்பலைக் குறி வைத்தது. கடைசியில் நான்கு பேர்களை சந்தேகத்தின் பேரில் கண்காணிக்க ஆரம்பித்தோம்."

"அவர்களில் ஒருவன் மீது எங்கள் சந்தேகம் வலுக்க ஆரம்பித்தது. அவன் அந்த போதை மருந்து கடத்தல் கும்பல் தலைவனின் தம்பி. நேற்று அவன் வீட்டை சோதனை போட்ட போது அவன் ஆச்சார்யாவைக் கொலை செய்ய உபயோகப்படுத்திய துப்பாக்கியைக் கைப்பற்றினோம். பிறகு அவனைக் கைது செய்தோம். ஆரம்பத்தில் அவன் மறுத்தாலும் கடைசியில் ஒப்புக் கொண்டான்...."

அவர் மனப்பாடம் செய்து சொன்னது போல் சொல்லி முடித்த பிறகு கொலையாளியின் புகைப்படத்தைக் காண்பித்தார்கள். அவன் சுமார் 35 வயதானவனாகத் தெரிந்தான்.....

ஆனந்த் ஜெயினைப் பார்க்க ஜெயினும் ஆனந்தைப் பார்த்தார். இருவரும் ஒன்றும் சொல்லிக் கொள்ளவில்லை. ஆனந்த் அங்கு இருந்தவர்களைப் பார்த்தான். மகேந்திரன் வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்ததை ஆனந்த் அப்போதுதான் கவனித்தான். ஆனந்த் என்ன நினைக்கிறான் என்றறியும் ஆர்வத்திலேயே அவன் கவனித்ததாகத் தோன்றியது.

அங்கு இருந்தவர்கள் சிலர் கைதட்டி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். மகேந்திரன் அந்தக் கைதட்டலில் கலந்து கொள்ளவில்லை. கைதட்டலில் கலந்து கொள்ளாத இன்னொரு நபர் ராஜாராம் ரெட்டி. அவர் முகத்தில் களைப்பு தெரிந்தது.

கடைசியில் ஜெயினும் கைதட்ட ஆரம்பித்தார். ஆனந்தும் கைதட்ட ஆரம்பித்தான். மகேந்திரனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டான். ராஜாராம் ரெட்டி அப்போதும் அந்தக் கைதட்டல் மகிழ்ச்சியில் இணைந்து கொள்ளவில்லை. மகேந்திரனின் பார்வை ஆனந்த் மேலிருந்து விலகி ரெட்டி மீது பதிந்தது. அவரையே கூர்மையாக

ஊடுருவிப் பார்த்த மகேந்திரன் முகத்தில் மிக மெல்லிய புன்னகை வந்து போனதாக ஆனந்திற்குத் தோன்றியது.....

## அமானுஷ்யன் (14)

அவனும் வருணும் குறுகிய நேரத்திலேயே நண்பர்களாகி விட்டதை சஹானா கவனித்தாள். வருண் அவனிடம் தன் நண்பர்களைப் பற்றியும், பள்ளிக்கூடத்தைப் பற்றியும் மிக உற்சாகமாக சொல்லிக் கொண்டிருந்தான். ஆரம்பத்தில் ஹிந்தியில் பேசிக் கொண்டிருந்த வருண் ஒரு கட்டத்தில் அவனுக்குத் தமிழும் தெரியும் என்று அறிந்த பின் தமிழுக்கு மாறினான். வருணின் பேச்சை மிகப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த அவன் அடிக்கடி பின்னால் திரும்பிப் பார்ப்பதைக் கவனித்தாள்.

"நீங்கள் அவர்கள் பின் தொடரலாம் என்று எதிர்பார்ப்பது போல் தெரிகிறது. நீங்கள் இங்கே இருப்பது அவர்களுக்கு எப்படித் தெரியும் என்று நினைக்கிறீர்கள்?"

"நான் அந்த டீக்கடையில் டீ குடித்துக் கொண்டிருந்த போது அந்த வழியாகப் போன பஸ்ஸில் இருந்த ஒருவன் என்னை அடையாளம் கண்டு கொண்ட மாதிரி தெரிகிறது. அவன் முகம் போன போக்கைப் பார்த்தால் அவர்கள் கூட்டத்தாளாகத்தான் இருப்பான் என்று தோன்றுகிறது. அவன் போய் சொல்லி யாராவது வரலாம் என்று

நினைக்கிறேன். ஒரு வேளை அப்படி வருவது போல் இருந்தால் உங்களுக்குத் தொந்தரவு இல்லாமல் காரில் இருந்து இறங்கி விடலாம் என்றுதான் பார்க்கிறேன்...."

அவளுக்கு என்னவோ போல் இருந்தது. தன் காரின் வேகத்தைக் கூட்டினாள். மறுபடி வருண் அவன் நண்பன் ஒருவனின் விரதீரப் பராக்கிரமங்களைச் சொல்ல இடையிடையே ஆர்வத்துடன் "அப்புறம்" என்று அவன் கேட்டுக் கொண்டிருந்தான். மகன் உயிரைக் காப்பாற்றிய ஒருவனைத் தன் உயிருக்குப் பாதுகாப்பில்லாமல் டெல்லி வீதிகளில் உலாவ விட்டு விடுவது சரியா என்று மனசாட்சி உறுத்தியது. அதுவும் வாய் வார்த்தைக்கு அவனைக் கூப்பிட்டு அவன் மறுத்த பின் நிம்மதியடைந்த விதம் அவளுக்கே ஜீரணிக்க முடியாத செயலாகப் பட்டது. வாழ்வில் என்றுமே அவள் நியாயமானவளாகத்தான் வாழ்ந்திருக்கிறாள். ஆனால் இவன் விஷயத்தில் அவள் செய்வது தர்மமல்ல என்று தோன்றியது. மகனை அவன் காப்பாற்றிய போது பெருகி நின்ற நன்றியுணர்வு அந்தக் காலத்து மணல் கடிகாரத்தின் துகள்களாய் வடிந்து குறைந்து கொண்டே போவது போல் தோன்றியது.

ஆனால் வீட்டில் வேறு ஆண் துணையில்லாமல் மகன், மாமியாருடன் வாழும் அவள் அவனுக்கு எப்படி அடைக்கலம் தர முடியும் என்பதும் சஹானாவுக்கு விளங்கவில்லை. அவள் நிலைமை

அந்த புத்த பிக்குகளைப் போல் எளிதானதல்ல. தன் மாமியார் மரகதம் என்ன நினைக்கிறாள் என்று அறிந்து கொள்ள சாய்ந்து கண்ணாடி வழியாகப் பார்த்தாள். மரகதம் அவனையே உணர்ச்சியில்லாமல் பார்த்துக் கொண்டு இருந்தாள். அவள் முகபாவனையிலிருந்து அவள் என்ன நினைக்கிறாள் என்பதை எந்நாளும் சஹானாவால் ஊகிக்க முடிந்ததில்லை.

சஹானாவின் மனம் அவன் சொன்னதையும், நடந்து கொண்டதையும் எல்லாம் மீண்டும் எண்ணிப் பார்த்தது. அவள் மகனை அவன் காப்பாற்றாமல் இருந்திருந்தால் அவன் யார் கவனத்தையும் ஈர்க்காமல் அந்த லாரி ஏறித் தன் வழியே போயிருப்பான்.... திடீரென்று அவன் பின்னால் திரும்பிப் பார்த்ததன் பொருள் விளங்கியது. காப்பாற்றியதால் பலரும் அவனைப் பார்த்து இருப்பார்கள். அவனைத் தேடி வருபவர்கள் விசாரித்தால் அங்கிருக்கும் மனிதர்கள் அவன் இப்படி ஒரு காரில் போனான் என்று சொல்லக் கூடும்... அவள் காரின் வேகம் மேலும் கூடியது

*******

"ஹலோ" CBI மனிதன் தூக்கக் கலக்கத்துடன் செல்லை எடுத்துப் பேசினான்.

"அவன் உயிரோடிருக்கிறான்"

CBI மனிதனின் தூக்கம் முழுவதுமாகக் கலைந்தது. கேட்ட தகவல் கனவில்லையே என்று உறுதிப்படுத்திக் கொள்ள அவனுக்கு சில வினாடிகள் தேவைப்பட்டன. ஆனாலும் அதிர்ச்சி மாறாமல் கேட்டான். "என்ன?"

"அவன் உயிரோடிருக்கிறான். அவனை நம் ஆள் ஒருவன் பார்த்திருக்கிறான்."

"விவரமாய் சொல்லுங்கள்"

மறுபக்கம் எல்லா நிகழ்ச்சிகளையும் விரிவாகச் சொன்னது.

"அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பார்கள். அவன் அங்கே முக்காடு போட்டுக் கொண்டு டீ குடித்துக் கொண்டு நின்றான் என்றால் நம்ப முடியவில்லை"

"எனக்கும் நம்பப் பிடிக்கவில்லைதான். ஆனால் அது உண்மை மாதிரிதான் தெரிகிறது"

"சார் முதலில் நன்றாக யோசியுங்கள். அவன் பார்த்த நேரம்

அதிகாலை. நல்ல வெளிச்சமில்லாத நேரம். முக்காடு போட்ட மனிதனை அடையாளம் காண்பதும் அவ்வளவு சுலபமில்லை. அவன் டீக்குடித்து நின்றதாய் சொல்லும் இடம் நாம் அவன் இருக்கலாம் என்று தேடிய இடத்திலிருந்து மிக தூரத்தில் இருக்கிறது...."

"உயிரோடு இருக்கிற மனிதனுக்கு வாகனமும் கிடைத்தால் அவன் அந்த தூரத்திற்குப் போவது ஒன்றும் பெரிய விஷயமில்லை"

"அது உண்மைதான்...." என்று ஒப்புக் கொண்ட CBI மனிதன் கேட்டான். "அது சரி அந்த இடத்திற்கு ஆட்களை அனுப்பினீர்களா?"

"உம்... போனார்கள். இவர்கள் போன போது அந்த இடத்தில் டீக்கடைக் காரர்கள் இரண்டு பேர் தவிர வேறு யாரும் இருக்கவில்லை. அந்த இரண்டு பேரும் இவர்கள் காண்பித்த போட்டோவைப் பார்த்து கிட்டத்தட்ட அதே மாதிரி ஆள் அன்று காலை அங்கு வந்து டீக் குடித்ததாகச் சொன்னார்கள்..."

"கிட்டத்தட்ட என்பதற்கும் அதே ஆள் என்பதற்கும் இடையே நிறையவே வித்தியாசம் இருக்கிறது"

"ஆனால் அவர்கள் பார்த்த ஆள் செய்ததாகச் சொன்ன விஷயம் மட்டும் அந்த 'கிட்டத்தட்ட' என்ற வார்த்தையை விலக்கி விட்டது....."

ஒரு சிறுவன் லாரியில் அடிபட்டு சாகாமல் காப்பாற்றப்பட்ட கதையை மறுபக்கம் அப்படியே ஒப்பித்தது. "அவர்கள் அவனுடைய தீவிர ரசிகர்களாய் மாறி இருந்தார்கள்... அவர்கள் சொன்ன விதத்தைப் பார்த்தால் அவனைத் தவிர வேறு ஒருவனால் அப்படி அந்தப் பையனைக் காப்பாற்றியிருக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. அந்த விஷயம் தெரிகிற வரை எனக்கிருந்த கொஞ்ச நஞ்ச சந்தேகமும் அதைக் கேட்ட பிறகு போய் விட்டது."

CBI மனிதனின் முகத்தில் கவலையின் ரேகைகள் படர்ந்தன.

மறுபக்கம் தொடர்ந்து சொன்னது, "அவன் அந்தப் பையன் வந்த காரிலேயே போனான் என்று சொல்கிறார்கள். அந்தக் காரில் பெண்ணும் பையனும்தான் இருந்தார்கள் என்று டீக்கடைக்காரன் ஒருவன் சொல்கிறான். இன்னொருத்தன் இன்னொரு ஆளும் அந்தக் காரில் உட்கார்ந்திருந்த மாதிரி இருந்தது என்று சொல்கிறான். நம் ஆட்கள் அந்தக் காரின் அடையாளங்களை வாங்கிக் கொண்டு அந்த வழியாகப் போயிருக்கிறார்கள்...."

CBI குழப்பத்தில் ஆழ்ந்தான். "சார் அப்படி அங்கு வந்து டீ சாப்பிடும் அளவுக்கும், அந்தப் பையனை அனாயாசமாய் காப்பாற்றும் அளவுக்கும் அவன் ஆரோக்கியமாய் இருந்தால் அவன் செய்திருக்கக்கூடிய முதல் வேலையே போலீசுக்கோ, பத்திரிகைகளுக்கோ தனக்குத் தெரிந்ததை ஃபோன் செய்து சொல்லியிருப்பதுதான் என்று எனக்குத் தோன்றுகிறது"

"அவன் சொன்னால் யார் நம்புவார்கள்?"

"சார், உங்கள் எதிரிகள் கண்டிப்பாக நம்புவார்கள். உண்மையா பொய்யா என்பதைப் பற்றி எதிரிகள் எப்போதும் கவலைப்படுவதில்லை. அவர்களைப் பொறுத்த வரை எதிரியைப் பற்றிக் கேள்விப்படும் மோசமான விஷயங்கள் எல்லாம் உண்மையே."

"அரசியலில் இத்தனை வருஷங்கள் இருந்தாலும் எனக்குப் பெரிய எதிரிகள் இல்லையே"

அது உண்மை. வயதில் எவ்வளவு சிறியவரானாலும் மிகுந்த மரியாதையுடன் பன்மையிலேயே பேசும் அவர், அதிகமாக எப்போதும் நிதானமிழக்காத அவர் அதிக எதிரிகளை சம்பாதித்துக் கொண்டதில்லை.

"ஆனாலும் நீங்களிருக்கும் பதவியில் தான் வந்து உட்கார எதிர்பார்த்திருப்பவனுக்கு நீங்கள் எதிரிதானே"

மறுபக்கம் மௌனம் சாதித்தது. அரசியலில் அவன் சொன்னது மிகப்பெரிய சத்தியம்தானே. "ஆனாலும் அவன் கையில் ஆதாரம் இருந்தால்தானே அவன் சொல்வது எடுபடும். ஆதாரம் எதுவும் இல்லாததால் அவன் சும்மா இருந்திருக்கலாம்..."

CBI மனிதனுக்கு எங்கோ இடித்தது. அந்த ·பைலில் படித்த மனிதன் நடந்து கொள்ளும் விதம் இப்படி இருக்காது என்று உள்ளுணர்வு சொன்னது. இந்தக் காலத்தில் பள்ளிக் கூடத்திற்கு வரப் பிடிக்காத மாணவன் 'பள்ளிக்கூடத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருக்கிறது' என்று மர்மமாகப் ஃபோன் செய்து சொன்னால் கூட பள்ளிக்கூடத்திற்கு விடுமுறை விட்டு பட்டாளமாகப் போய் அங்கு வெடிகுண்டைத் தேடும் காலக் கட்டத்தில் இவர் சொல்வது போல் இருக்காது என்றே தோன்றியது. சிறிது நேர சிந்தனைக்குப் பின் சொன்னான். "இன்னொரு காரணம் கூட இருக்கலாம்"

"என்னது?"

"தனிப்பட்ட முறையில் வந்து பழி வாங்கும் நோக்கமாகக் கூட

இருக்கலாம்"

மறுபக்கம் பீதியுடன் வேகமாகச் சொன்னது. "அவனை உடனடியாக தீர்த்துக் கட்டுவது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. அவன் உயிரோடு இருந்தால் எங்கே போவான் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?"

"கண்டிப்பாய் அவன் வீட்டுக்கோ, அவனுக்கு நெருங்கியவர்கள் வீட்டுக்கோ போக மாட்டான். அங்கு போனால் நாம் அங்கே காத்துக் கொண்டிருப்போம் என்று அவனுக்குத் தெரியும். எதற்கும் அவன் வீட்டு ஃபோனை டேப் செய்வது நல்லது என்று தோன்றுகிறது"

"அதை உடனடியாகச் செய்கிறேன். நீங்கள் அவன் வீட்டைக் கண்காணிக்க இன்னும் ஆட்களை அதிகப்படுத்துங்கள்...."

"ஓகே. அந்த மாதிரியான காரைப் பார்த்தால் நிறுத்தி அவன் இருந்தால் அவனைப் பிடிக்கவும், அவன் இல்லா விட்டால் அவனை எங்கே அந்தப் பெண் இறக்கி விட்டிருக்கிறாள் என்று கேட்டுக் கண்டு பிடிக்கவும் போலீஸ் மூலம் ஏற்பாடு செய்கிறேன்... உங்கள் ஆட்களை மட்டுமே இதில் நம்புவது போதாது என்று நினைக்கிறேன். நமக்கு விஷயம் தெரிந்ததே தாமதமானதால் அந்தக்

கார் அவர்களுக்குக் கிடைப்பது கஷ்டம் என்று தோன்றுகிறது"

மறுபக்கம் நிம்மதிப் பெருமூச்சு விட்டது. "நல்லது. அப்படியே செய்யுங்கள்... அந்த ஆச்சார்யா கேஸை முடித்த மாதிரி இவனுக்கும் ஒரு முற்றுப் புள்ளி வைத்தால் நிம்மதியாயிருக்கும்"

"ஆச்சார்யாவின் கொலையாளியை ஆனந்தும் ஜெயினும் முழுவதும் நம்பின மாதிரி தெரியவில்லை.... தனிப்பட்ட முறையில் அவர்கள் துப்புத் துலக்கப் போகலாம் போல் தெரிகிறது"

மறுபக்கம் வாய் விட்டுச் சிரித்தது. "போகட்டும். அவர்கள் எதையும் கண்டுபிடிக்கப் போவதில்லை. கொலையாளி என்று ஒருவனைப் பிடித்து விட்டதால் இதில் போலீஸ் உதவி இனி கிடைக்கப் போவதில்லை. டிபார்ட்மெண்ட் மூலமாகவும் அவர்கள் ஒன்றும் செய்ய முடியாது....."

மறுபக்கம் ஃபோன் வைக்கப்பட்டது. அவர் அளவுக்கு சுலபமாக CBI மனிதனால் ஆனந்தையும் ஜெயினையும் ஒதுக்கி விட முடியவில்லை. சில வினாடிகள் யோசித்து விட்டு அந்தக் காரைக் கண்டு பிடிக்கும் ஏற்பாடுகளை ஆரம்பித்தான்.

அவனுடன் பேசிக் கொண்டே வந்த வருண் ஒரு கட்டத்தில் அப்படியே அவன் மடியில் தலை வைத்துப் படுத்து விட்டான். அதைப் பார்த்த சஹானா "சாரி. அவனை எடுத்து முன் சீட்டில் வைத்துக் கொள்கிறேன்" என்றாள்.

"பரவாயில்லை" என்று சொல்லிப் புன்னகைத்தவன் தூங்கும் வருணையே சினேகத்துடன் பார்த்து விட்டுச் சொன்னான். "உங்கள் மகன் புத்திசாலி. ஒரு நாள் பெரிய ஆளாக வருவான் பாருங்கள்".

சஹானா புன்னகைத்தாள். தன் குழந்தை புகழப்படுவதைக் கேட்பதை விடத் தாயிற்கு இனிமையானது ஏதாவது இருக்க முடியுமா? ஆரம்பத்தில் மிக வேகமாகக் காரை ஓட்டிய சஹானா பிறகு யாரும் வராததைப் பார்த்து சாதாரண வேகத்திற்கு மாறியிருந்தாள். அவள் மனமும் ஒரு தெளிவை அடைந்திருந்தது. அவன் ஜன்னல் வழியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான். டெல்லி இன்னும் 37 கிமீ என்று மைல் கல் தெரிவித்தது.

"என்னை டெல்லிக்கு நுழைவதற்கு முன்னாலேயே ஆள் நடமாட்டமில்லாத ஓரிடத்தில் இறக்கி விடுங்கள்" என்றான் அவன்.

"நீங்கள் முக்காடு போட்டுக் கொண்டிருந்தது யாரும் அடையாளம் தெரிந்து கொள்ளக் கூடாது, உங்களை யாரும் முழுவதுமாகப் பார்த்து நினைவு வைத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காகத்தானே"

அவள் அதை ஏன் கேட்கிறாள் என்று தெரியாத அவன் ஆமாம் என்று தலையாட்டினான்.

"ஆனால் என் மகனைக் காப்பாற்றினால் எல்லார் கவனமும் உங்கள் பக்கம் திரும்பும், பலர் உங்களைப் பார்ப்பார்கள், ஞாபகம் வைத்துக் கொள்வார்கள் என்று தெரிந்தும் நீங்கள் ஏன் அவனைக் காப்பாற்றினீர்கள்?"

"அந்த நேரம் யோசிக்கிற நேரமில்லை. ஒரு குழந்தையின் உயிருக்கு ஆபத்து என்ற நிலை வரும் போது அதைக் காப்பாற்றுவதைத் தவிர வேறொரு வழி இருக்கிற மாதிரி எனக்குத் தோன்றவில்லை"

அவள் சிறிது நேரம் ஒன்றும் பேசவில்லை. பின் கேட்டாள், "இது போன்ற உயர்ந்த மனம் உங்களுக்கு மட்டும்தான் இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு இருக்கக் கூடாது என்று நீங்கள் நினைப்பது நியாயமா?"

"எனக்குப் புரியவில்லை"

"தங்க இடமில்லாமல், நீங்கள் யாரென்று உங்களுக்கே தெரியாமல் நீங்கள் இருக்கிறீர்கள். உங்களைக் கொல்ல யாரோ முயற்சி செய்கிறார்கள். அப்படி இருக்கையில் உங்களை நான் மட்டும் அனாதரவாய் எங்கேயோ இறக்கி விட்டு எப்படிப் போக முடியும்?"

"நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?"

"எங்களுடன் எங்கள் வீட்டுக்கு நீங்களும் வந்து சில நாளாவது தங்குங்கள். ஏதாவது நல்ல மறைவிடம் கிடைத்த பின் நீங்கள் போங்கள்....."

"மேடம், நீங்கள் உங்கள் கணவரைக் கேட்காமலேயே வேகமாய் முடிவு செய்கிறீர்கள்"

"வருணின் அப்பா போன வருடம் ஒரு விபத்தில் இறந்து விட்டார்"

"ஓ சாரி" என்று உண்மையாகவே வருத்தப்பட்டவன் பின் அமைதியாகச் சொன்னான், "மேடம், உங்கள் நல்ல மனதுக்கு நன்றி. ஆனால் ஆண் துணையில்லாத வீட்டில் நான் வந்து சில நாட்கள் இருப்பது சரியல்ல. நீங்களே யோசித்துப் பாருங்கள்"

"நான் யோசிப்பதெல்லாம் நீங்கள் என் மகனைக் காப்பாற்றிய போது எதையும் யோசிக்கவில்லை என்பதுதான்..."

பக்கத்தில் இருந்த வயதான பெண்மணி சஹானாவின் தாயாரா, மாமியாரா என்று அவனால் தீர்மானிக்க முடியவில்லலை. வருண் அவளைப் பாட்டி என்று உரிமையுடன் சிறிது நேரத்திற்கு முன் கூப்பிட்டது மட்டும் தெரியும். அவளாவது சஹானாவின் யோசனையை ஆட்சேபிப்பாள் என்று ஆவலுடன் அவளைப் பார்த்தான். அவள் சம்பந்தமே இல்லாதது போல உணர்ச்சியில்லாமல் இருந்தாளே ஒழிய ஒன்றும் சொல்லவில்லை.

"மேடம், அவர்கள் சொன்னது போல நான் நிஜமாகவே தீவிரவாதியாகக் கூட இருக்கலாம்...."

"தீவிரவாதியாக இருப்பவன் அடுத்தவர் உயிர்களைப் பற்றிக் கவலைப்படாதவன். தன் உயிரைப் பணயம் வைத்து அடுத்தவர் உயிரைக் காப்பாற்ற மாட்டான்"

இவளிடம் பேசி ஜெயிப்பது கஷ்டம் என்று தோன்ற பெருமூச்சு விட்டான்.

அவள் சொன்னாள், "அந்த புத்த விஹாரத்தில் நீங்கள் உயிருக்குப் போராடிக் கொண்டு இருக்கையில் அந்த புத்த பிக்குகள் உங்களைக் காப்பாற்றுவதைத் தவிர வேறெதையும் நினைத்துப் பார்க்கவில்லை. என் மகன் உயிருக்கு ஆபத்து என்று வந்த போது நீங்களும் லாப நஷ்டங்களைக் கணக்குப் போடவில்லை. உலகம் இப்போதும் இயங்கிக் கொண்டிருப்பது இது போன்ற நல்லெண்ணங்களினால்தான் என்று நான் திடமாக நம்புகிறேன்..."

"மேடம், நான் முன்பே சொன்னது போல் என்னை ஆபத்து சூழ்ந்து இருக்கிறது. அது எனக்கு அடைக்கலம் கொடுப்பவர்களுக்குக் கூட வந்து விடக்கூடாது என்று நான் நினைக்கிறேன்...."

"என்னைப் பார்த்தால் உங்கள் டீச்சராகவோ, உங்கள் முதலாளியாகவோ தெரிகிறதா?"

அவன் குழப்பத்துடன் சொன்னான். "இல்லை"

"அப்படியென்றால் என்னை மேடம் என்று கூப்பிடாதீர்கள். என் பெயர் சஹானா"

அவன் வாய் விட்டுச் சிரித்தான்.

******

விதி அந்த அமானுஷ்யனுக்கு சாதகமாக இருப்பதாகவே சிபிஐ மனிதனுக்குப் பட்டது. இல்லாவிட்டால் அவனைப் பார்த்த தகவல் தர கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் ஆகியிருக்குமா? அவன் உயிருடன் இருப்பான் என்று முழு நம்பிக்கை இப்போதும் அவனிடம் இல்லையென்றாலும் அந்த சிறுவனைக் காப்பாற்றிய ஒருவன் அவனைப் போன்ற ஒரு பராக்கிரமசாலியே என்பதில் அவனுக்கு சந்தேகமில்லை. ஒருவேளை அவன் அமானுஷ்யனே ஆனால் அந்த செய்தி மோசமானதுதான்.

அவனுடைய இடத்தில் தன்னை இருத்தி நிறைய யோசித்த சிபிஐ மனிதன் தனக்கு மிகவும் பழக்கமுள்ள வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து அப்புறப்படுத்தும் ஒரு உயர் அதிகாரிக்குப் ஃபோன் செய்து சிறிது நேரம் குசலம் விசாரித்து விட்டு "இப்போது வெடிகுண்டுகளின் பின்னால் ஓடும் வேலையெல்லாம் குறைந்திருக்கிறதா? இல்லை இப்போதும் வேலைகள் நிறைய வருகின்றனவா?"

"பெரிதாக ஒன்றும் இல்லை. பின் இந்தத் துறையில் ஃபோன் கால்கள் வருவது சகஜம்தான். சிறிது நேரத்திற்கு முன்னால் கூட டெல்லியின் முக்கியமான இடங்களை வெடிகுண்டு வைத்து அழிக்கத் திட்டமிட்டு இருக்கிறார்கள் என்று மொட்டையாக

ஃபோனில் யாரோ தெரிவித்தார்கள். தேதியோ மற்ற தகவல்களோ இல்லாமல் வரும் ஃபோன்கால்களை வைத்துக் கொண்டு என்ன செய்வது? இப்போதெல்லாம் சிலர் போரடிக்கும் போது கூட இப்படி ஃபோன் செய்து எங்களைக் கோமாளிகளைப் போல் ஓட விடுகிறார்கள்...."

ஃபோனை வைத்தவன் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தான். "அந்தப் ஃபோன் அவன் செய்ததல்ல. அவனாக இருந்தால் இப்படிப் பொத்தாம் பொதுவாக சொல்லியிருக்க மாட்டான்...."

அந்தக் கார்க்காரியைக் கண்டுபிடிப்பதும் சுலபமாக இருக்கவில்லை. மலை மேல் ஏறும் போது பாதை ஒன்றுதான் ஆனாலும் மலை இறங்கி விட்டால் பல பாதைகள் இருக்கின்றன. அவள் கார் எந்தப் பக்கம் போனதோ அவனை அவள் எங்கு இறக்கி விட்டாளோ தெரியவில்லை. மலையின் மீது சுங்கச் சாவடி ஒன்று இருந்தது. அங்கும் விசாரித்துப் பார்த்தாகி விட்டது. டிக்கெட் கிழித்துக் கொடுத்து காசு வாங்குவதோடு சரி வாகனங்களின் எண்ணை எல்லாம் எழுதி வைக்கும் வழக்கம் இல்லையாம். இரண்டு மூன்று குழுக்களை அந்த மலைப்பாதைக்கு அனுப்பிப் பார்த்தாகி விட்டது. அவர்களுக்கும் அந்தக் கார் கிடைக்கவில்லை. நிறைய கால தாமதமாகப் போனதன் விளைவு. ஒரே ஒரு குழு மட்டும் சொன்னது, "அந்த மாதிரியான காரை ஒருத்தி மிக வேகமாக ஓட்டிச் சென்றதை

சிலர் பார்த்திருக்கிறார்கள். ஏதோ ரேஸில் போவது போலப் போனாளாம்...ஆனால் அவள் அருகில் யாரும் இருக்கவில்லையாம். பின் சீட்டில் இருந்தால் தெரிந்திருக்க வாய்ப்பில்லை....."

ஆனால் அவள் டெல்லிக்காரியாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது. அவளது உடை, வேகமாகக் காரை ஓட்டிய முறை எல்லாம் பெருநகரத்துப் பெண்மணியாகவே அவளைக் காட்டியது. ஆனால் அவளைக் கண்டு பிடித்தாலும் எங்கே இறக்கி விட்டாய் என்று கேட்கலாமே ஒழிய அவன் வேறு தகவல்களைத் தந்திருக்க வாய்ப்பில்லை. அவன் டெல்லிக்கே அவளுடன் வந்து விட்டால் அது நல்ல அறிகுறியல்ல.... அவன் என்ன செய்வான் என்று ஊகிக்க முடியவில்லை.... அவனுடைய மும்பை பங்களாவின் முன் கண்காணித்துக் கொண்டிருந்த ஆட்கள் "வயதான வேலைக்காரன்தான் கடைக்குப் போய் வருகிறான். வேறு யாரும் அந்த வீட்டுக்கு வரவில்லை" என்றார்கள்.

சிபிஐ மனிதன் ஒரு எண்ணிற்கு ஃபோன் செய்து கேட்டான். "அந்த வீட்டுக்கு ஃபோன் ஏதாவது இந்த இரண்டு மூன்று நாட்களில் வந்ததா?"

"இரண்டு ஃபோன் கால்கள் வந்திருந்தன. ஒன்று உள்ளூர் கால். அந்த எண்ணை விசாரித்து விட்டோம். அது அந்த

வேலைக்காரனின் மகள் செய்தது...."

"இன்னொன்று?"

"சீனாவிலிருந்து ஃபோன் வந்திருக்கிறது. அந்த எண்ணையும் விசாரித்து விட்டோம். அது அங்கே உள்ள ஒரு புத்த மடாலயத்திலிருந்து... அந்தக் கால் ஒரு நிமிடம்தான் பேசப்பட்டிருக்கிறது"

அவனைக் கேட்டு ஃபோன் வந்திருக்கலாம். அந்த வேலைக்காரன் சொன்ன பதிலோடு அந்த பேச்சு முடிந்திருக்கிறது. தன் முன் உள்ள தகவல்களை ஆராய்ந்த சிபிஐ மனிதன் பெருமூச்சு விட்டான். அந்த வீட்டையும் ஃபோனையும் கண்காணிப்பதிலும் பெரிய பயன் இல்லை என்று தோன்றியது. கடந்த ஒரு வருட காலத்தில் அவன் அந்த வீட்டில் ஓரிரண்டு நாட்கள் மட்டுமே தங்கியிருக்கிறான். தலைமறைவாக இருப்பது அவனுக்கு ஒன்றும் புதிதல்ல.....

அமானுஷ்யன் (16)

ஜெயின், ஆச்சார்யா கொலை வழக்கில் கைதானவனைப் பற்றிய அனைத்துத் தகவல்களும் தன் மேசையில் 24 மணி நேரத்திற்குள் வர வேண்டும் என்று தன் டிபார்ட்மென்டில் திறமை வாய்ந்த இருவரிடம் பொறுப்பை ஒப்படைத்திருந்தார். 23 மணி நேரம் 25 நிமிடத்தில் அவர் மேசையில் அந்தத் தகவல்கள் இருந்தன. அந்த இரண்டு பேரும் ஓரிரு மணி நேரம் அன்று தூங்கியிருந்தால் அது அதிகம். ஆனால் மிக முக்கியம் என்று தலைமை கருதும் விஷயங்களை அந்த கெடுவுக்குள் முடித்துத் தரும் திறமையாளர்கள் தகுந்த விதத்தில் கவனிக்கப்படுவதால் அந்த சந்தர்ப்பத்தை விவரமறிந்தவர்கள் நழுவ விடுவதில்லை.

தன் முன் வைக்கப்பட்ட விவரங்கள் முழுவதையும் பொறுமையாகப் படித்த ஜெயின் ஆனந்திடம் அவற்றைக் காண்பித்தார். பெயர்-கிஸான்சந்த், வயது-39, போதை மருந்தில் பிடிபட்ட கும்பலின் தலைவன் ப்ரகாஷ்சந்தின் இளைய சகோதரன் என்று ஆரம்பித்து சொல்லப்பட்ட விவரங்கள் பலவும் அவன் பெற்றோர், உடன்பிறந்தோர், பழக்க வழக்கங்கள், படித்த பள்ளிக்கூடம், மனைவி, குழந்தைகள், அவர்களைப் பற்றிய விவரங்கள் என்று பக்கம் பக்கமாக இருந்தன. ஆனால் ஆனந்தைக் கவர்ந்த விவரங்கள் இரண்டு மூன்றை அவன் சிவப்பு மசியால் கோடிட்டான். அவன் கோடிட்ட இடங்கள்:

போதை மருந்து கடத்தலைக் காட்டிலும் அதிகமாக அவன் போதை மருந்தை உட்கொள்வதில் ஈடுபட்டான். போதை மருந்தை உட்கொண்டு பொது இடங்களில் தகராறு செய்வதில் பல முறை போலீசில் பிடிபட்டு அண்ணன் ப்ரகாஷ்சந்தால் வெளியே கொண்டுவரப் பட்டிருக்கிறான்.

குடும்பத்தாரால் பலவீனமானவனாகக் கருதப்பட்டான்.அவனுக்குத் தற்போது கேன்சர் கடைசிக் கட்டத்தில் இருக்கிறது. அதிகபட்சம் ஒரு வருடத்திற்கு மேல் தாங்குவது கஷ்டம் என்று மருத்துவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

அவன் கோடிட்ட இடங்களைப் பார்த்து புன்னகைத்தார் ஜெயின். ஏகப்பட்ட தேவையற்ற தகவல் சமுத்திரத்தில் வேண்டிய தகவல் முத்தை மட்டும் எடுப்பது மிகப்பெரிய கலை. அவன் அந்த விதத்தில் சாமர்த்தியசாலியாக இருந்தான். அவனுடைய பல மேலதிகாரிகளும் அவனை மிகவும் மெச்சியிருப்பது எதனால் என்று புரிந்தது.

ஆனந்த் சொன்னான். "எப்படியும் ஒரு வருடத்தில் சாகப்போகிறவனைப் பேரம் பேசி பிடித்திருக்கிறார்கள். அந்தக் கும்பல் சம்பந்தப்பட்ட ஒருவன் என்பதால், அவனே ஒப்புக் கொண்டு விட்டான் என்பதால் இதை யாரும் அலசிப் பார்க்க மாட்டார்கள் என்று நினைத்திருக்கிறார்கள். இந்த வழக்கு

விசாரணை முடிவதற்குள் அவனே செத்து விடுவான். ஆளும் முடிவான், வழக்கும் முடியும் என்பது அவர்கள் கணக்கு....."

"அதனால்...?"

"அதனால் அதிகார வர்க்கத்தினர் ஆசீர்வாதத்துடன்தான் ஆச்சார்யா கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்பதில் நமக்கு சந்தேகமில்லை. இப்போது நம் கேள்வி யார் அந்த அதிகார வர்க்கம்?"

ஜெயின் பதில் ஒன்றும் சொல்லாமல் அமர்ந்திருந்தார். அவர் மனம் கனக்க ஆரம்பித்திருந்தது. அவருடைய சக அதிகாரியை, நாட்டுப் பற்று, நேர்மை, நாணயம், மிக்க ஒரு உயர் அதிகாரியைக் கொல்ல ஆனந்த் சொன்னது போல அதிகார வர்க்கமே கூட்டு நின்றால் இந்தப் பாதகத்தை என்னவென்று சொல்வது?...
இப்படியே போய்க் கொண்டிருந்தால் நேர்மையான அதிகாரிகள் எத்தனை பேர் மிஞ்சுவார்கள்?

"சார். என்ன யோசிக்கிறீர்கள்?"

"ஆச்சார்யா ரகசியமாய் வேலைகள் செய்து கடைசியில் திடுதிப்பென்று தன் கண்டுபிடிப்புகளைச் சொல்வது எனக்கு என்றுமே பிடித்ததில்லை, ஆனந்த். ஆனால் அவர் போல் நல்ல

திறமையான மனிதர்களைப் பார்ப்பது கஷ்டம். அவரைக் கொன்றவர்களைத் தப்பிக்க விடுவது நம் துறைக்கே அவமானம். அவருக்கு ரகசியத் தகவல் தரும் மனிதன் அல்லது மனிதர்கள் நமக்குக் கிடைத்தாலும் போதும். நாம் உண்மையை நெருங்கி விடுவோம். அதைப் பற்றி எதாவது நீங்கள் யோசித்தீர்களா ஆனந்த்?"

"இது போன்ற விஷயங்களில் பெரும்பாலும் தகவல் தருபவன் தனி மனிதனாகவே இருக்கிறான். ஆச்சார்யாவைக் கொன்றவர்கள் அவர் கையில் இருந்த தகவலுக்காகத்தான் அவரைக் கொன்றார்கள் என்றால் அவனை மட்டும் விட்டு வைப்பார்கள் என்று நான் நம்பவில்லை. அவனையும் அவர்கள் கொன்று இருப்பார்கள் என்றுதான் தோன்றுகிறது சார்..."

"ஒரு வேளை அவன் அவர்களிடம் சிக்காமல் தப்பித்திருந்தால்....?" ஜெயின் கேட்டார்.

"அப்படியிருக்க வாய்ப்பு இருப்பதாகத் தோன்றவில்லை. ஆனாலும் அவனைப் பற்றி நாம் தெரிந்து கொள்வது அவசியம்தான். ஆச்சார்யாவின் மனைவிக்கு ஏதாவது தெரிந்திருக்கலாம். அவர்களைப் பார்த்துப் பேசினால் தெரிய வரலாம்....."

********

சஹானாவின் செல் போன் அடிக்க அவள் எடுத்து பேசினாள். "ஹலோ"

"சஹானா. நான் மது...". மதுசூதனன் அவளுடைய நண்பன். அவளுடன் பணி புரிபவன். இமயமலைச்சாரலில் வசிக்கும் சில மலைவாழ் மக்களைப் பற்றிய நிகழ்ச்சி ஒன்றின் படப்படிப்புக்காக சஹானாவுடன் வந்த குழுவில் அவனும் ஒருவன். சஹானா அந்த படப்படிப்பு முடிந்து அருகில் இருந்த ஒரு கோயிலுக்கு மாமியாரையும் மகனையும் அழைத்துச் சென்று காண்பித்து விட்டுத் திரும்பி விட்டாள். மதுவும் மற்றவர்களும் வேறொரு இடத்தையும் பார்த்து வரப் போனதால் சற்று தாமதமாக திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள்.

"சொல்லு, மது"

"சஹானா எதாவது பிரச்சனையா?"

சஹானா திகைத்தாள். "இல்லையே. ஏன்?"

"இங்கே மலைப்பாதையில் உன் காரை விவரித்து உன்னைப் பற்றி

சிலர் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் கேட்டேன்."

சஹானா தன் பின்னால் அமர்ந்திருந்த அவனைப் பார்த்தபடியே கேட்டாள். "என்ன என்று விசாரிக்கிறார்கள், மது..."

"உன் காரை யாராவது பார்த்தார்களா என்று விசாரிக்கிறார்கள். உன்னைத் தெரியுமா என்று கேட்கிறார்கள். உன் காரில் வேறு யாராவது ஒரு இளைஞன் இருந்ததைப் பார்த்தவர்கள் உண்டா என்று கேட்கிறார்கள்..."

"நீ எதுவும் சொல்லி விடவில்லையே...."

"இல்லை. ஒரு தீவிரவாதி உன் காரில் ஏறியிருக்கலாம் என்று சந்தேகப்படுவதாக சொல்கிறார்கள். நான் என் விசிட்டிங் கார்டைக் காண்பித்து விட்டு முழுத் தகவலும் சொல்லச் சொன்னேன். தொலைக்காட்சி என்றவுடன் அவர்கள் ஜகா வாங்கி விட்டார்கள்.... என்ன விஷயம் சஹானா?"

"ஒன்றுமில்லை. நான் நேரில் பார்க்கிற போது சொல்கிறேனே"

"பிரச்சினை எதுவும் இல்லையே?"

"இல்லை. பயப்படாதே" என்று சொல்லி இணைப்பைத் துண்டித்தாள் சஹானா.

பின்னால் இருந்த அவன் கேட்டான். "அவர்கள் என்னை உங்கள் காரில் தேட ஆரம்பித்து விட்டார்கள். அப்படித்தானே?"

ஆமாம் என்று தலையசைத்த அவள் தன் நண்பன் சொன்னதை அப்படியே சொன்னாள்.

அவன் அவளிடம் சொன்னான். "தயவு செய்து என்னை இங்கேயே இறக்கி விடுங்கள். நான் உங்களுக்கு இதற்கு மேலும் ஆபத்து விளைவிக்க விரும்பவில்லை."

அவள் சொன்னாள், "அவர்கள் உங்களை இன்னும் மலைப்பாதையில்தான் தேடுகிறார்கள். மலைப்பாதையிலிருந்து இறங்கி விட்டால் எத்தனையோ வழிகள் இருக்கின்றன. அவர்கள் உங்களைத் தேடுவது ரகசியமாகவே இருக்கட்டும் என்று நினைக்கிற மாதிரி தெரிகிறது. காரணம் தெரியவில்லை. அவர்களுக்கு என் வண்டி எண்ணோ, என்னைப் பற்றிய வேறு தகவல்களோ தெரியவில்லை என்பது அவர்கள் கேள்வியில் இருந்தே தெரிகிறது...."

அவன் அவளுக்கு எப்படி உணர்த்துவது என்று புரியாமல் விழித்தான்.

"கவலைப்படாதீர்கள். எங்கள் வீட்டில் சில நாட்கள் இருங்கள். அதற்குள் உங்களுக்கு நினைவு திரும்பலாம். அப்படியில்லாவிட்டாலும் ஒரு பாதுகாப்பான இடத்தைஏற்பாடு செய்து உங்களை அங்கே அனுப்பி விடுகிறேன். இது உங்களுக்காக நான் செய்வதாக நினைக்காதீர்கள். எனக்காகவேதான் செய்கிறேன். உங்களை இங்கேயே இறக்கி விட்டுப் போனால் என் மனசாட்சி காலம் பூராவும் என்னை சித்திரவதை செய்யும்."

"நீங்கள் அக்கம் பக்கத்தாரிடம் என்னை என்ன என்று சொல்வீர்கள்?"

"எங்கள் மாமியாரின் தங்கை மகன் என்று சொல்வேன்"

அவளுடைய மாமியார் அப்போதும் வாய் திறக்காததை அவன் கவனித்தான்.

"நீங்கள் நன்றாக யோசித்துதான் சொல்கிறீர்களா?"

"ஆமாம்"

அவன் பெருமூச்சு விட்டான்.

*********

எந்த பீடிகையும் இல்லாமல் அவர் கேட்டார். "ஏதாவது தகவல்...?"

போனில் சிபிஐ மனிதன் அமைதியாகச் சொன்னான், "இல்லை. நாம் தேட ஆரம்பிப்பதற்குள் அவள் நிறைய தூரம் போயிருக்க வேண்டும்".

சிறிது நேரம் அமைதியாய் இருந்து விட்டு மறுபக்கம் சொன்னது. "வேறு வழியில்லை. நாம் ரகசியமாய் அவனைத் தேட முடியாவிட்டால் பத்திரிக்கைகளிலும் டிவியிலும் அவன் படத்தைப் போட்டு விளம்பரப் படுத்த வேண்டியதுதான். என்ன சொல்கிறீர்கள்?"

"வேறு வழி இருக்கிற மாதிரி எனக்கும் தெரியவில்லை. ஆனால் இதில் கவனமாக நான் அடியெடுத்து வைக்க வேண்டும். அவனுக்கும் ஆச்சார்யாவிற்கும் இடையே இருக்கிற தொடர்பு மட்டும் வெளியே வந்து விட்டால் நமக்குத்தான் ஆபத்து"

"அப்படியானால் என்ன செய்யச் சொல்கிறீர்கள்?"

"அவனைப் பற்றி ஒரு கதை உருவாக்கிப் பின்னால் விளம்பரப்படுத்தினால்தான் யாருக்கும் சந்தேகம் வராது. அதை நான் யோசித்து என்ன செய்ய வேண்டும் என்று இரண்டு நாளில் சொல்கிறேன். அது வரையில் பொறுங்கள்...."

"ஏன் இப்போதே யோசித்து சொல்லக் கூடாது?" அவர் பொறுமையிழந்து கேட்டார்.

"அவனை விளம்பரப்படுத்தும் போது பலரும் அவனைப் பற்றிக் கேட்பார்கள். ஏன் என்ன எப்படி என்று வரும் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் போது நாம் கவனமாக பதில்களைத் தயாரித்திருக்க வேண்டும். பத்திரிகை, தொலைக்காட்சி நிருபர்கள் எல்லாம் சேர்ந்து கேட்பார்கள். நாம் எந்த விதத்திலும் பதில்களில் ஓட்டை இல்லாமல் பார்த்துக் கொள்வது அவசியம்...."

"அதற்குள் அவன் ஏதாவது செய்து விட்டால்...?"

"அவன் ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்திருந்தால் முன்பே செய்திருக்கலாம். இனி செய்வது சந்தேகம்தான். ஆனால் ஒரு விஷயம்"

"என்ன?"

"எதையும் அவன் செய்யாமல் இருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது..... ஏன் என்பது என் அறிவிற்கு எட்டவில்லை. சரி அவனை விடுங்கள்..... ஒரு முக்கியமான தகவல்- ஆனந்த் இன்று பெங்களூர் போகிறான். ஆச்சார்யாவின் மனைவியைப் பார்த்துப் பேச"

## அமானுஷ்யன்-(17)

சஹானா ஒரு ரெடிமேட் ஷோரூம் முன்பு காரை நிறுத்தினாள். அவனை ஆடைகள் வாங்கிக் கொள்ளச் சொன்னாள். அவன் ஆடைகள் தேர்ந்தெடுத்த வேகத்தைக் கண்டு அவள் அசந்து போனாள். பெண்கள் அளவுக்கு ஆண்கள், உடைகளைத் தேர்ந்தெடுக்க நேரம் எடுத்துக் கொள்வதில்லை என்ற போதும் இந்த அளவு மிகக் கச்சிதமான ஆடைகளை மிகக்குறுகிய நேரத்தில் தேர்ந்தெடுக்கிற ஆண்களை அவள் இது வரை பார்த்ததில்லை. பின் அவளே பில் பணத்தைக் கட்டினாள். அவனுக்கு தர்மசங்கடமாக இருந்தது. ஒருவரிடம் எவ்வளவு உதவிதான் பெறுவது! மூத்த பிக்கு

தந்த பணத்தை எடுத்து அவளிடம் நீட்டிய போது மறுத்தாள். "எல்லாக் கணக்கையும் எழுதி வைத்துக் கொள்கிறேன். ஒரு நாள் உங்களிடம் இருந்து வாங்கிக் கொள்கிறேன் போதுமா?"

அவன் நன்றியுடன் தலையாட்டினான்.

அவள் கேட்டாள். "வேறெதாவது வாங்க வேண்டுமா?"

அவன் சொன்னான். "மூக்குக் கண்ணாடி வாங்க வேண்டும்"

அவள் அடுத்ததாக கண்ணாடிக் கடை முன் காரை நிறுத்தினாள். அவன் ஒரு தங்க ப்ரேம் போட்ட கண்ணாடி வாங்கிக் கொண்டான். அதற்கும் அவளே பணம் தந்தாள்.

காரில் திரும்ப வந்து உட்கார்ந்தவுடன் அவன் கண்ணாடியை அணிந்து கொண்டு தன் தலைமுடியை வித்தியாசமாக வகிடெடுத்து வாரிக் கொண்டான். அடுத்த நிமிடம் அவன் வித்தியாசமாகக் காட்சியளித்தான்.

அவள் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள். அவன் சொன்னான். "இன்னும் மீசையையும் எடுத்து விட்டால் என்னை அடையாளம் கண்டு பிடிப்பது கஷ்டமே. இல்லையா?"

அவள் ஆமாமென்று தலையாட்டினாள்.

"பெரியம்மா நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று சஹானாவின் மாமியாரிடம் அவன் கேட்டான்.

அவள் அவனை திகைப்புடன் பார்த்தாள். அவன் சொன்னான். "நான் உங்கள் தங்கை மகன் என்றால் எனக்கு நீங்கள் பெரியம்மாதானே?"

சற்று முன் அவனை மாமியாரின் தங்கை மகனாக மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தப் போவதாக சஹானா சொன்னது நினைவுக்கு வர மரகதம் முகத்தில் ஒரு லேசான புன்சிரிப்பு வந்து மறைந்தது.

வருண் சொன்னான், "அங்கிள் நீங்கள் என்னிடம் கேட்கவேயில்லையே."

"சாரி, வருண். முக்கியமான ஆளை முதலில் கேட்க மறந்து விட்டேன். நீ சொல்" அவன் தன் விரலால் மீசையை மறைத்துக் கொண்டு கேட்டான்.

"மீசை எடுத்தால் உங்களுக்கு நல்லாவே இருக்காது" வருண் பெரிய

மனித தோரணையில் தன் கருத்தைச் சொன்னான்.

சஹானா கேட்டாள். "அவர்கள் இங்கும் உங்களைத் தேடுவார்கள் என்று நினைக்கிறீர்களா?"

"இன்றைக்கில்லா விட்டாலும் நாளைக்காவது என்னைத் தேடாமல் இருக்க மாட்டார்கள் என்று தோன்றுகிறது. அவர்களிடம் என் புகைப்படமும் இருக்கிறது..... அந்த புகைப்படத்தில் உள்ள நபரை அவர்கள் தேடாமல் இருக்க மாட்டார்கள்...."

**********

ஆச்சார்யாவின் மனைவி லலிதா கணவரை இழந்த துக்கத்திலிருந்து இன்னும் மீளாதவளாக இருந்தாள். ஆனந்த் சிபிஐயிலிருந்து வந்திருப்பதாகவும், சில கேள்விகள் கேட்க வேண்டி இருப்பதாகவும் சொன்ன போது அவள் முகத்தில் களைப்பு தெரிந்தது. வீட்டில் தனியாக இருந்த அவள் தயக்கத்தோடுதான் ஆனந்தை உள்ளே விட்டாள்.

"நான் எல்லாவற்றையும் போலீசில் சொல்லியாகி விட்டது. இனி புதிதாக சொல்ல ஒன்றும் இல்லை" என்றவள் ஆனந்திடம் கேட்டாள், "கொலையாளியைத்தான் போலீஸ் பிடித்தாகி விட்டதே.

இனியும் ஏன் விசாரிக்கிறீர்கள்? நீங்களும் அவன்தான் கொலையாளி என்று நம்பவில்லையா?"

ஆனந்த் அந்த நீங்களும் என்ற சொல்லைக் கேட்டு ஆச்சரியத்துடன், "வேறு யார் நம்பவில்லை?" என்றான்

"என் மகள். அவள் டிவியில் அந்தக் கொலையாளியைப் பார்த்தவுடனேயே சொன்னாள். இவனைப் பார்த்தால் பழிவாங்கத் துடிக்கிற ஆள் மாதிரி தெரியவில்லை, பரிதாபமாகத் தெரிகிறான் என்றாள். அவள் ஆபீஸ் போயிருக்கிறாள்"

ஆனந்த் சொன்னான், "நாங்கள் நம்பவில்லை என்று சொல்ல முடியாது. ஆனால் எதையும் உறுதிப்படுத்திக் கொள்வது நல்லதல்லவா? அதனால்தான் எங்கள் பக்க விசாரணையைத் தொடர்கிறோம்"

அவள் தலையாட்டினாள், "எதாவது சாப்பிடுகிறீர்களா?"

"வேண்டாம் நன்றி. நான் உங்கள் நேரத்தை அதிகமாக எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. அதனால் நேரடியாகவே விஷயத்திற்கு வருகிறேன். ஆச்சார்யா கடைசியாக ஒரு புதிய கேஸை ரகசியமாக விசாரித்துக் கொண்டு இருந்ததாகத் தெரிகிறது. அது பற்றிய விவரம்

ஏதாவது தெரியுமா?"

"அவர் ஆபீஸ் விஷயங்களைப் பற்றி எதுவும் என்னிடம் சொன்னதில்லை. எனக்கும் அது பற்றி தெரிந்து கொள்ள ஆர்வம் இருந்ததில்லை."

"அவர் பல கேஸ்களுக்கு யாரோ ஒருவரை அல்லது ஒரு சிலரைப் பயன்படுத்தி இருக்கிறார். அவர்களில் யாரையாவது உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது..."

"அம்மா, நன்றாக யோசித்து சொல்லுங்கள். அந்த நபரை அவர் எங்கள் ஆபீசில் சந்தித்துப் பேசி இருக்க வாய்ப்பில்லை. வீட்டிலோ, வெளியிலோதான் அது அதிகம் நடந்திருக்க வேண்டும். நேரில் உங்கள் வீட்டுக்கு வந்து அவருடன் பேசும் நபர், அல்லது ஃபோன் செய்து அவருடன் பேசும் நபராக இருக்கலாம். அதில் யாராவது அந்த நபராக இருக்கக்கூடும் என்று யாரையாவது நினைக்கிறீர்களா?"

லலிதா சிறிது யோசித்து விட்டு சொன்னாள், "எங்கள் வீட்டுக்கு ஆபீஸ் சம்பந்தப்பட்ட நபர்களோ, அது சம்பந்தமாகப் பேச

வருபவர்களோ குறைவு. அவர் வீட்டையும், வேலையையும் பிரித்தே வைத்திருந்தார். கூட வேலை பார்ப்பவர்களில் கூட ராஜாராம் ரெட்டியையும், மகேந்திரனையும் தவிர யாரும் அதிகம் வீட்டுக்கு வந்ததில்லை."

மகேந்திரன் பெயரைக் கேட்ட ஆனந்த் ஆச்சரியப்பட்டான். ராஜாராம் ரெட்டி சம வயது, சமமான பதவியில் இருப்பவர். ஆனால் மகேந்திரன் இளைஞன். மேலும் அவன் கீழ் உத்தியோகஸ்தன். அப்படி இருக்கையில் அவன் ஏன் அவர் வீட்டுக்குப் போனான்?

"மகேந்திரன் என்ன விஷயமாக அவரைப் பார்க்க வருவான்?"

"அவன் எங்களுக்குப் பக்கத்து வீதியில்தான் இருந்தான். சில சமயம் அவருக்கு கம்ப்யூட்டரில் ஏதாவது சந்தேகமோ, இல்லை கம்ப்யூட்டரில் ஏதாவது கோளாறோ வந்தால் அவனைக் கூப்பிடுவார்...."

அப்படியானால் மகேந்திரனுக்கு ஆச்சார்யாவின் வீட்டு கம்ப்யூட்டர் வரை கூட வந்து பார்க்கும் சுதந்திரம் இருந்திருக்கிறது. ஆனால் ஆனந்திடம் பேசும் போது மகேந்திரன் அது பற்றி சொல்லவில்லை.....

"அம்மா, நேரில் வந்து பேசா விட்டால் கூட போனில் அந்த நபர் அவரிடம் அடிக்கடி பேசுபவராக இருக்கலாம். தெரிந்த நண்பர்களல்லாத யாராவது அவரிடம் அடிக்கடி ஃபோனில் பேசிய ஆள் இருக்கிறார்களா?"

லலிதா யோசித்து விட்டுச் சொன்னாள். "ஒருவர் எப்போதுமே இரவு பத்து மணிக்கு மேல்தான் ஃபோன் செய்வார். அவர் அந்த ஆளின் ஃபோன் வந்தால் உடனேயே மொட்டை மாடிக்குப் போய் விடுவார். இரண்டு பேரும் நிறைய நேரம் பேசுவார்கள். ஆனால் அது நீங்கள் நினைக்கிற ஆளா என்று எனக்குத் தெரியாது..."

ஆனந்த் உற்சாகமாகச் சொன்னான், "பெரும்பாலும் அது அதே நபராகத்தான் இருக்க வேண்டும். அந்த ஃபோனில் பேசிய நபர் பற்றி ஆச்சார்யா உங்களிடம் ஏதாவது எப்போதாவது சொல்லி இருக்கிறாரா? தயவு செய்து நன்றாக யோசித்து சொல்லுங்கள்"

லலிதா சிறிது யோசித்து விட்டுச் சொன்னாள், "எதுவும் அவர் சொன்னதில்லை. ஆனால் பேசி முடித்து விட்டு வரும் போது சில சமயங்களில் பரபரப்பாக இருப்பார்...."

"அது போன்ற சமயங்களில் உங்களிடம் ஏதாவது சொல்லி இருக்கிறாரா?"

"இல்லை. சில சமயங்களில் பேசி முடித்து நேராகப் போய் கம்ப்யூட்டரில் ஏதாவது வேலை செய்வார்."

"அந்த ஆள் பெயர் ஏதாவது தெரியுமா?"

"தெரியாது"

"ஆச்சார்யாவுக்கு அந்த ஆள் ஃபோன் செய்யும் எல்லா நேரங்களிலும் ஆச்சார்யாவே ஃபோனை எடுத்திருக்க முடியாதல்லவா? அவர் அந்த இடத்தில் இல்லாமல் இருந்து நீங்கள் கூட ஃபோன் எடுத்துப் பேசியிருக்கலாம் அல்லவா?"

"பெரும்பாலும் அந்த ஆள் இரவு பத்து மணியிலிருந்து பத்தரைக்குள் ஃபோன் செய்வது வழக்கம். அந்த நேரத்தில் இவர் காத்திருப்பார்.... நீங்கள் சொன்ன மாதிரி ஓரிரு முறை அவர் பாத்ரூமிலோ, வெளியிலோ இருந்த போது நானும் பேசியிருக்கிறேன். அந்த ஆள் ஒரு இளைஞன்தான். அவன் அவரைக் கேட்பான். நான் கூப்பிட்டு அவரிடம் ஃபோனைக் கொடுத்து விடுவேன்."

"அவன் அந்த சமயத்தில் யார் பேசுவதாகச் சொல்வான்?"

"அவருடைய நண்பன் பேசுவதாகச் சொல்வான். பெயர் சொன்னதில்லை. நான் கூட அவரிடம் கிண்டல் செய்வதுண்டு. உங்கள் நண்பனுக்குப் பெயர் எதுவும் கிடையாதா என்று கேட்பேன். அவர் சிரித்துக் கொண்டே ஒரு தடவை சொன்னார். 'அவனுக்கு நிறைய பெயர்கள் இருக்கின்றன. அதில் எதை சொல்வது என்று தீர்மானிக்க முடியவில்லை போலிருக்கிறது'. ஆனால் அவரும் பெயரைச் சொன்னதில்லை."

"அந்த ஆள் ஃபோன் செய்ய ஆரம்பித்து எத்தனை காலம் இருக்கும்?"

"இரண்டு மூன்று வருடங்கள் இருக்கலாம்"

"நீங்கள் அது யார் என்று அவரிடம் எப்போதுமே கேட்டதில்லையா?"

"கேட்டிருக்கிறேன். அவரும் அவனைப் போலவே "என் நண்பன்" என்று சிரித்துக் கொண்டே சொல்வார். ஆனால் அவர் அவனிடம் பேசிய போதெல்லாம் முகத்தில் ஒரு பிரகாசம் இருக்கும். என் மகளிடம் பேசும் போது எப்படி இருப்பாரோ அப்படித்தான் அவனிடம் பேசும் போதும் இருப்பார். சில சமயம் நான் அவனைத் தன் மகனாகவே நினைக்கிறாரோ என்று கூட எண்ணுவேன்.

அதனால் அந்த நண்பன் நீங்கள் சொன்னது போல் கேஸ் சம்பந்தமாகத் தகவல் தரும் ஆளாக இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை...."

ஆனால் ஆனந்திற்கு சந்தேகமேயில்லை. அந்த இளைஞன் அவர்களுக்கு வேண்டிய அதே நபர்தான். "அந்த ஆள் பற்றி வேறெதாவது எப்போதாவது சொல்லி இருக்கிறாரா?"

"அவன் ஒரு அசாதாரணமான மனிதன் என்று ஒரு தடவை என்னிடம் சொல்லி இருக்கிறார். அவனிடம் பல சக்திகள் இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்"

"வேறு ஏதாவது தகவல் எப்போதாவது சொன்னதாக நினைவிருக்கிறதா?"

அவள் யோசித்து விட்டுச் சொன்னாள், "இது எந்த அளவுக்கு உங்களுக்கு உபயோகப்படும் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒரு தடவை அவர் என்னிடம் அந்த சக்திகள் எல்லாம் அவனிடம் இருக்கக் காரணம் அவன் முதுகின் மேற்புறம் இருக்கும் நாக மச்சம்தான் என்று சொன்னார்"

ஆனந்த் மின்சாரம் தாக்கியது போல உணர்ந்தான்.

## அமானுஷ்யன் (18)

லலிதா திகைப்புடன் கேட்டாள், "என்ன ஆயிற்று?"

அப்போதுதான் ஆனந்த் தான் எழுந்து நின்றிருப்பதை உணர்ந்தான். அவன் மனதை ஏதோ அழுத்தியது. அவன் இதயம் படுவேகமாக அடித்துக் கொண்டிருந்தது. "ஒன்றுமில்லை..." என்று சொல்லி விட்டு மீண்டும் உட்கார்ந்தான்.

வந்த கணம் முதல் அமைதியே வடிவாக இருந்த அவன் இப்படி திடீரென்று மாறியதைப் பார்த்த லலிதா அவனுக்கு உடல்நிலை சரியில்லை என்று சந்தேகப்பட்டாள். "நான் டாக்டரைக் கூப்பிடட்டுமா?"

அவன் அவசரமாகச் சொன்னான், "வேண்டாம்... வேண்டாம்"

ஆனாலும் அவள் விரைந்து சென்று ஒரு தம்ளர் தண்ணீர் கொண்டு வந்து தந்தாள். "நன்றி..." என்று சொல்லி அதை வாங்கி மடமடவென்று குடித்த அவன் மீண்டும் பழைய நிலைக்கு வர சிறிது

நேரமாயிற்று.

அவள் அவனைக் கவலையோடு பார்த்தது அவன் மனதை நெகிழ்த்தியது. சாதாரணமாகத் தன் தனிப்பட்ட விஷயங்களை யாரிடமும் பேசிப் பழக்கம் இல்லாத அவன் இந்த அபூர்வ சந்தர்ப்பத்தில் அவளிடம் மனம் விட்டுத் தன் காணாமல் போன தம்பியைப் பற்றி சொன்னான். மூன்று வயதில் காணாமல் போன அவனுக்கு முதுகின் மேற்பகுதியில் நாகமச்சம் இருந்ததையும், அவன் காணாமல் போனதில் இருந்து தன் தாய் ஒரு நடைப்பிணமாய் இருப்பதையும் சொன்னான். அவள் இருக்கும் விரதங்களயும் சொன்னான்.

அவள் கண்களில் நீர் கோர்த்தது. ஒரு தாயான அவளுக்கு இன்னொரு தாயின் வேதனையைப் புரிந்து கொள்ள முடிபுரிந்தது. "நீங்கள் அது உங்கள் காணாமல் போன தம்பிதான் என்று நினைக்கிறீர்களா?"

"உறுதியாக சொல்ல முடியவில்லை. ஆனால் முதுகில் மேற்பகுதியில் நாக மச்சம் இருக்கும் மனிதர்கள் எத்தனை பேர் இருக்க முடியும்?"

"எத்தனையோ வருடங்கள் கழித்து தம்பியைப் பற்றிக்

கேள்விப்படுகிறீர்கள். சந்தோஷப்படுவதற்குப் பதிலாக நீங்கள் பயப்படுவது போலத் தெரிகிறதே ஏன்?"

அவன் வாடிய முகத்துடன் சொன்னான், "உங்கள் கணவரைக் கொன்றவர்கள் அவனையும் கொன்றிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. சிபிஐயின் அடிஷனல் டைரக்டரையே கொன்றவர்கள் அவனைப் போன்ற ஒரு சாதாரண மனிதனை விட்டு வைப்பார்கள் என்று தோன்றவில்லை"

"அவர் அவனை ஏதோ தெய்வப் பிறவி என்பது போல சொன்னார். அந்த நாக மச்சம் குண்டலினி சக்தியைக் காட்டுவதாகக் கூட சொன்னார். அவர் அவன் மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பார்த்தால் அவனை அவ்வளவு சீக்கிரம் கொல்ல முடியும் என்று தோன்றவில்லை. ஒரு தாயார் வருடக் கணக்கில் செய்த பிரார்த்தனை வீண் போகாது. பயப்படாதீர்கள். உங்கள் தாயைப் பார்க்காமல் அவன் சாக மாட்டான்"

அவள் குரலில் தெரிந்த உறுதி அவனை ஆச்சரியப்படுத்தியது. பல நேரங்களில் அதிகமாகத் தெரிந்திருப்பதே ஒருவனை அவநம்பிக்கை கொள்ள வைக்கிறது. குறைவாகத் தெரிந்திருப்பவர்கள் நம்பிக்கையுடனேயே இருப்பது போல் தோன்றியது.

"அப்படி அவன் உயிருடன் இருந்தாலும் அவன் ஆபத்தில்தான் இருக்கிறான். அதிகார வர்க்கம், போலீஸ் எல்லாம் எதிரே நிற்பதாகத் தோன்றுகிறது" என்றவன் தான் மூன்று வருடங்களுக்கு முன் ஒரு சாதுவை சந்தித்ததையும், அவர் அந்த மச்சத்தைக் குறிப்பிட்டு அவனை ஆபத்துகள் சூழ்ந்திருப்பதாகச் சொன்னதைச் சொன்னான்.

அவள் ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டு விட்டு சொன்னாள், "கடவுள் கூட இருந்தால் யார் எதிராக நின்று வெற்றி பெற முடியும்?"

அவனுக்கு அந்த வார்த்தைகள் மெய் சிலிர்க்க வைத்தன. கணவரைப் பறி கொடுத்து தானே துக்கத்தில் இருந்த போதும் அந்த பெண்மணி நல்ல வார்த்தைகள் சொல்லி அவனை தைரியப்படுத்துவது அவளின் உயர்ந்த மனதைக் காட்டுகிறது என்று நினைத்துக் கொண்டான்.

"அவர் அவனை எங்கே முதல் முதலில் பார்த்திருப்பார் என்று உங்களால் யூகிக்க முடிகிறதா?"

லலிதா சற்று யோசித்து விட்டு சொன்னாள், "சரியாகத் தெரியவில்லை...."

அவன் மெள்ள எழுந்தான். "ஏதாவது சின்ன தகவல் நினைவுக்கு வந்தால் கூட எனக்குச் சொல்வீர்களா?" தன் விசிட்டிங் கார்டை நீட்டினான்.

அவள் அதை வாங்கிக் கொண்டே சொன்னாள், "கண்டிப்பாக சொல்கிறேன்"

வாசல் வரை சென்றவன் திரும்பி நின்று கேட்டான், "நீங்கள் அவன் குரலைக் கேட்டிருக்கிறீர்கள் அல்லவா? அவன் குரல் எப்படி இருக்கும்?"

அவளுக்கு மனம் நெகிழ்ந்தது. யோசித்து விட்டுச் சொன்னாள். "கம்பீரமான, அமைதியான குரல்...."

*********

"ஹலோ" சிபிஐ மனிதனின் குரல் களைத்துப் போயிருந்தது. அவன் அன்று முழுவதும் உறங்கியிருக்கவில்லை. அமானுஷ்யன் அவனை உறங்க விடவில்லை.

ஆனால் அவன் களைப்பை மறுபக்கம் உணர்ந்ததாகத் தெரியவில்லை. "என்ன நிலவரம்?"

"அவன் இப்போது டெல்லியில் இருக்கலாம் என்று நினைக்கிறேன்...."

"எதனால் அப்படி நினைக்கிறீர்கள்?"

"அப்படித்தான் உள்ளுணர்வு சொல்கிறது. அவன் பழி வாங்க முயற்சிக்கலாம் என்று தோன்றுகிறது. எதற்கும் நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள். பாதுகாப்பை இன்னும் அதிகப்படுத்துங்கள். பொது இடங்களுக்கு தனியாகப் போகாதீர்கள். அந்தத் தாடிக்காரனையும் மறைந்தே இருக்கச் சொல்லுங்கள்..."

மறுபக்கம் சிறிது நேரம் மௌனமாக இருந்தது. பின் பேசிய போது குரலில் நடுக்கம் தெரிந்தது. "அவன் என்னை நெருங்க முடியாது...."

அந்த வார்த்தைகளின் அர்த்தத்துக்குப் பதில் குரலின் நடுக்கத்தின் அர்த்தத்தை எடுத்துக் கொண்டான் சிபிஐ மனிதன். உயிர் என்று வரும் போது பெரிய மனிதன் சிறிய மனிதன் என்ற வித்தியாசம் இல்லை. எல்லாம் ஒன்றுதான்.

தன்னை பயமுறுத்தியதால் மறுபக்கம் கோபம் வந்து கேட்டது. "நீங்கள் அவன் விஷயத்தில் என்னதான் செய்தீர்கள்? நம் ஆளும்

(தாடிக்காரன்) என்னை ஃபோனில் நச்சரித்துக் கொண்டே இருக்கிறான்."

"பிரச்சினை இந்த அளவு முற்றியதற்கே அவன்தான் காரணம். எந்த தகவலும் எந்த நேரமும் வரலாம், அதெல்லாம் முக்கியமானவை என்ற நிலைமை இருக்கையில் செல் போனை ஆ·ப் செய்து விட்டு யாராவது தூங்குவார்களா? அப்போது ஆன தாமதத்தால்தான் இத்தனை விவகாரமும்..."

"அவன் சொல்கிறான் இமயமலையில் அவனை சுட்டுத் தள்ளுவதில் உங்கள் ஆட்கள் கோட்டை விட்டதால்தான் இத்தனை பிரச்னையும் என்று. இப்படி ஒருவரை ஒருவர் குறை சொல்வதில் அர்த்தமில்லை...."

சிபிஐ மனிதன் பெருமூச்சு விட்டான். "அவன் டெல்லிக்கு வந்திருப்பான் என்ற சந்தேகம் வந்தவுடனேயே டெல்லியில் இருக்கும் எல்லா லாட்ஜ்களுக்கும் ஆட்களை ஃஅவன் போட்டோவுடன் அனுப்பி வைத்தேன். அவன் எந்த லாட்ஜிலும் வந்து தங்கவில்லை...."

"அவனுக்குத் தெரிந்தவர்கள் யாராவது டெல்லியில் இருக்கிறார்களா?"

"அதுவும் இருக்கிற மாதிரி தெரியவில்லை....."

"சரி இனி என்ன செய்யலாம்? ஏதோ யோசித்து செய்ய வேண்டும் என்றீர்களே, யோசித்தீர்களா?"

'இரண்டு நாளில் யோசித்துச் சொல்கிறேன்' என்றவனிடம் ஒரு நாள் கூட முடிவதற்கு முன் இப்படி கேட்கும் அவர் மீது சிபிஐ மனிதனுக்குக் கோபம் வந்தாலும் அவன் அதைக் காண்பித்துக் கொள்ளவில்லை. அமானுஷ்யனை வெளியே சுதந்திரமாக வைத்திருப்பது சம்பந்தப்பட்ட எல்லாருக்குமே பேராபத்து என்பது நன்றாகவே தெரியுமாதலால் அவன் சொன்ன அளவு காலம் எடுத்துக் கொள்ளாமல் வேகமாகவே யோசித்து வைத்திருந்தான்.

"அவன் நம்மைத் தேடி வருவதற்குப் பதிலாக ஓடி ஒளிய வேண்டும். நாம் தேர்ந்தெடுத்த ஆட்கள் மட்டும் அவனைத் தேடுவதற்கு பதிலாக போலீஸ் துறையே அவனைத் தேட வேண்டும். அதற்கு ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். நகரத்தில் ஒரு தீவிரவாதி வெடிகுண்டு வைத்து விட்டதாகவும் அதை வெடிக்கும் முன் போலீஸ் கண்டு பிடித்து விட்டதாகவும் ஒரு கதையை உருவாக்குவோம். அவன் படத்தைக் கொடுத்து யாரையாவது படம் வரையச் சொல்லுங்கள். தீவிரவாதியைப் பார்த்த ஒருவன் சொல்லிய

அடையாளங்களை வைத்து அந்தப் படத்தை வரைந்ததாகச் சொல்லி அதை பத்திரிகைகளுக்கும் டிவிக்கும் கொடுப்போம். அவனைப் பற்றி தகவல்கள் தருபவருக்கு நல்ல தொகை சன்மானம் தருவதாக அறிவிப்போம்...."

மறுபக்கம் அந்த திட்டத்தை வரவேற்றது. "சபாஷ்".

சிபிஐ மனிதன் சொன்னான். "இந்த வேலைக்கெல்லாம் பொருத்தமான ஆட்களை தேர்ந்தெடுத்து செய்யுங்கள். முடிந்த வரை நாம் நேரடியாக ஈடுபடாதவரை நமக்கு நல்லது"

## அமானுஷ்யன் (19)

அவன் ஒரு மேக்கப் சாதன கடையருகே காரை நிறுத்தச் சொல்லி உள்ளே போய் சில பொருட்கள் வாங்கிக் கொண்டு வந்தான். வரும் போது ஒரு காதில் இக்காலக் கல்லூரி இளைஞர்கள் போடும் ஒரு சிறு வளையம் இருந்தது. அவன் நடையே மாறி இருந்தது. மிக இளையவனாகத் தெரிந்தான். அவன் காரில் ஏறும் முன் யாரோ ஒரு வழிப்போக்கன் ஏதோ கேள்வி கேட்க நுனிநாக்கு ஆங்கிலத்தில் ஏதோ பதில் சொன்னான்.

அவனிடம் ஏற்பட்டிருந்த மாறுதலைக் கண்டு சஹானா திகைத்தாள்.

முன்பு காரில் ஏறிய மனிதனே வேறு இப்போது தெரியும் மனிதனே வேறு என்று சொல்லும்படி இருந்தான். போட்டுக் கொண்ட கண்ணாடியாலும், தலை வாரிய விதம் மாறியதாலும் மட்டுமல்ல... எத்தனையோ சிறு சிறு வித்தியாசங்கள் அவனிடம் தெரிந்தன. மேலும் பேச்சும், நடையும், பாவனையும் ஒரு புதிய மனிதனாகவே அவனைக் காட்டின. வயது இன்னும் குறைந்தது போலவும், பட்டணத்துப் பகட்டான இளைஞன் போலவும் தெரிந்தான்.

வீடு நெருங்க ஆரம்பித்த போது அவனிடம் சஹானா சொன்னாள், "உங்களுக்கு ஒரு பெயர் இப்போது அவசியமாகத் தேவைப்படுகிறது. என்ன பெயர் வைத்துக் கொள்ளலாம்"

"இந்த வயதில் பெயர் வைத்துக் கொள்கிற முதல் ஆள் நானாகத்தான் இருப்பேன்" என்று சொன்ன அவன் புன்னகையுடன் வருணிடம் கேட்டான், "எனக்கு ஒரு பெயர் தேர்ந்தெடு வருண்"

வருண் தனக்குக் கிடைத்த முக்கியத்துவத்தில் மகிழ்ந்தான். யோசித்து விட்டுச் சொன்னான், "அக்ஷய். அது என் வகுப்பில் படிக்கும் என் நெருங்கிய நண்பனின் பெயர்"

"சரி. இனி மேல் நான் அக்ஷய்"

ஐம்பது வீடுகள் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் வசித்து வந்த சஹானா அங்கு வந்து இறங்கிய போது பக்கத்து வீட்டு பஞ்சாபிக்காரர் சத்தமாக வருணை அழைத்துக் கொண்டே அவர்களை நெருங்கினார்.

சஹானா அவனிடம் மெல்லிய குரலில் சொன்னாள், "இவர் எங்கள் பக்கத்து ஃப்ளாட் காரர். பெயர் ஜெய்பால்சிங். ஓய்வு பெற்ற வங்கி ஊழியர். அடுத்தவர்கள் வீட்டு விஷயங்களைத் தெரிந்து கொள்வதில் அலாதி பிரியம். ஆனால் நல்ல மனிதர். இப்போது உங்களைப் பார்த்து விட்டதால் முழு ஜாதகமும் தெரிந்து கொண்டுதான் அடுத்த வேலை பார்ப்பார். ஜாக்கிரதை"

அழைத்தது வருணை என்றாலும் ஜெய்பால்சிங்கின் பார்வை எல்லாம் காரில் இருந்து இறங்கிய இளைஞன் மீதுதான் இருந்தது. சஹானா புன்னகையுடன் அவனை அவருக்கு அறிமுகப்படுத்தினாள்: "ஹாய் அங்கிள். இவர் அக்ஷய். என் மாமியாரின் தங்கை மகன்.....அக்ஷய்! சார் ஜெய்பால்சிங். எங்கள் பக்கத்து ஃப்ளாட்டில் இருக்கிறார்."

அக்ஷய் புன்னகையுடன் அவர் கையைக் குலுக்கினான். அவர் அவனை உற்றுப் பார்த்துக் கொண்டே கேட்டார், "நீங்கள் இதற்கு முன் இங்கே வந்ததில்லையே"

"நான் அமெரிக்காவில் இருந்தேன்...."

"இப்போது அங்கே நம் ஆட்களையெல்லாம் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் இல்லையா, அதுதான் நீங்களும் வந்து விட்டீர்கள் போல இருக்கிறது"

அக்ஷய் முகத்தில் லேசான வருத்தத்தைத் தருவித்தான். அவர் சொன்னார், "கவலைப்படாதீர்கள். இங்கேயே நல்ல வேலை கிடைக்கும்"

அவன் நன்றி தெரிவித்தான்.

"தலையில் என்ன காயம்?"

தலையைப் புதிய விதமாய் வாரியதில் அந்தக் காயம் நன்றாகவே வெளியே தெரிந்தது. சஹானாவும், மரகதமும் அவனைப் படபடப்புடன் பார்க்க அவன் கண் இமைக்காமல் புன்னகையுடன் ஜெய்பால் சிங்கின் காதில் ரகசியமாய்ச் சொன்னான், "ஒரு அழகான பெண்ணைப் பார்த்துக் கொண்டே பைக் ஓட்டியதில் விபத்து ஆகி விட்டது"

ஜெய்பால்சிங் வயிறு குலுங்க சிரித்தார். ஒளிவு மறைவில்லாமல் பேசும் அந்த இளைஞனை அவருக்கு நிறையவே பிடித்து விட்டது.

அதிகமாய் அவரிடம் பேச்சுக் கொடுக்காமல் அங்கிருந்து அவர்கள் நகர ஜெய்பால்சிங் சத்தமாய் அக்ஷயிடம் சொன்னார்,"அப்புறமாய் பேசலாம்"

அவன் கண்ணடித்துக் கொண்டே சொன்னான், "கண்டிப்பாக"

சஹானாவின் வீடு இரண்டு படுக்கையறைகள், ஒரு வரவேற்பறை, சமையலறை கொண்ட நடுத்தரவர்க்க வீடாக இருந்தது. இது வரை ஒரு படுக்கையறையை சஹானாவும், இன்னொன்றை அவள் மாமியாரும் உபயோகித்து வந்தார்கள். அக்ஷயை எங்கே இருத்துவது என்று சஹானா யோசித்த போது மரகதம் சொன்னாள், "அவருக்கு என் அறையைத் தந்து விடு சஹானா. நான் வெளியே சமாளித்துக் கொள்கிறேன்..."

அக்ஷயிற்குத் தர்மசங்கடமாக இருந்தது. பெண்கள் மட்டுமே உள்ள ஒரு வீட்டில் ஒரு ஆணைத் தங்க அனுமதிப்பதில் எத்தனையோ அசௌகரியங்கள் உண்டு. "சஹானா.. இதற்குதான் சொன்னேன்..."

அவன் என்ன சொல்ல வருகிறான் என்பதை ஊகித்த சஹானா சற்று

எரிச்சலுடன் சொன்னாள், "கீறல் விழுந்த ரிகார்டு போல் அதையே சொல்லாதீர்கள். நீங்கள் இங்கேதான் தங்குகிறீர்கள். எப்படி என்பதை மட்டும் யோசித்தால் போதும்." என்றவள் தனது மாமியாரிடம் திரும்பி, "அத்தை உங்களுக்கு தொந்தரவு ஒன்றும் இல்லையே" எனக் கேட்டாள்

"ஒரு தொந்தரவும் இல்லை. அவர் அந்த அறையில் தங்கட்டும்"

அக்ஷய் இருவரையும் நன்றியுடன் பார்த்தான். பின் மரகதத்திடம் சொன்னான், "நன்றி. ஒரு கேள்வி உங்களிடம் கேட்கலாமா?"

மரகதம் அவனைப் பார்த்தாள்.

"என்னைப் பார்த்தால் உங்களை விட வயதானவனாய்த் தெரிகிறேனா?"

மரகதம் முகத்்தில் லேசாகச் சிரிப்பு வந்தது. "இல்லை"

"அப்படியானால் தயவு செய்து என்னை அவர் இவர் என்று கூப்பிடாதீர்கள். பார்க்கிறவர்களுக்கும் சந்தேகம் வரும்"

மரகதம் தலையாட்டினாள்.

அப்போது டிவியைப் போட்ட வருண் சொன்னான், "அங்கிள், உங்கள் படம் டி.வி.யில் தெரிகிறது"

மூவரும் திகைத்துப் போய் டிவியைப் பார்த்தார்கள். அவனுடைய படத்தை டிவியில் காண்பித்துக் கொண்டிருந்தார்கள். செய்தி வாசிப்பவர் சொன்னதை அக்ஷய் கூர்ந்து கவனித்தான்.

"இன்று அதிகாலை டில்லி புறநகர்ப் பகுதியில் உள்ள ஒரு பேருந்து நிறுத்தத்தில் ஒரு வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்ததைப் போலீசார் கண்டு செயலிழக்கச் செய்தனர். மிகவும் சக்தி வாய்ந்த அந்த வெடிகுண்டு வெடித்திருந்தால் கிட்டத்தட்ட ஐநூறு மீட்டர் தூரத்திற்கு பெருத்த சேதத்தை உண்டாக்கி இருக்கும் என்று வெடிகுண்டு நிபுணர்கள் கருத்து தெரிவித்தனர். காவல்துறையின் துரிதமான நடவடிக்கையை போலீஸ் கமிஷனர் பாராட்டினார். போலீசார் தீவிரமாக விசாரித்ததில் அங்கு வெடிகுண்டு வைத்த ஒரு மர்ம மனிதன் பற்றி தகவல் கிடைத்தது."

"அந்தப் பேருந்து நிறுத்தத்திற்கு சற்று தள்ளி வசித்துவரும் தரம்சந்த் என்ற பதினான்கு வயது சிறுவன் அந்த மர்ம மனிதனைப் பார்த்திருக்கிறான். அவன் சொன்னதாவது..."

அந்தச் சிறுவனைக் காண்பித்தார்கள். அவன் பரபரப்புடன் சொன்னான், "நான் அதிகாலையில் வீட்டுக்குப் பால் வாங்க வெளியே வந்த போது அந்த ஆள் ஒரு கருப்பு ப்ளாஸ்டிக் பையுடன் எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்தான். அந்தப் பேருந்து நிறுத்தம் வந்தவுடன் அங்கே நின்றான். நான் பால் வாங்கி விட்டுத் திரும்பி வரும் போது அவன் வந்த வழியே போய்க் கொண்டிருந்தான். அவன் கையில் வைத்திருந்த கருப்புப் பை அந்த நிறுத்தத்தில் மூலையில் விழுந்து கிடந்தது. நான் அவன் தவறி அதை விட்டிருக்க வேண்டும் என்று நினைத்து அந்த ஆளைக் கூப்பிட்டு சொன்னேன். அந்த ஆள் கோபமாக அது தன் பை அல்ல என்று சொல்லி விட்டுப் போய் விட்டான். நான் வீட்டுக்குப் போனவுடன் அப்பாவிடம் சொன்னேன். அவர் வந்து பார்த்துச் சந்தேகப்பட்டுப் போலிசிற்குப் ஃபோன் செய்தார்"

காமிரா பையனை விட்டு ஒரு வெடிகுண்டு நிபுணர் மீது தாவியது. அவர் அந்த வெடிகுண்டு காலை ஒன்பது மணிக்கு இயங்கும்படி செய்யப்பட்டிருந்ததென்றும் அந்த நேரத்தில் அங்கு பள்ளிக் குழந்தைகள் மற்றும் வேலைக்குப் போகிறவர்களின் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்பதால் அது வெடித்திருந்தால் பெரும் உயிர்ச்சேதம் உண்டாகி இருக்கும் என்றும் தெரிவித்தார்.

சிறுவன் சொன்ன அடையாளங்களை வைத்து அந்த தீவிரவாதியின்

படத்தை நிபுணர்கள் வரைந்தார்கள் என்றும், அங்கு காட்டப்படும் மனிதனைப் பற்றிய தகவல்கள் ஏதேனும் தெரிவித்தால் ஐந்து லட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என்பதையும், சொன்னவர் பற்றிய விவரங்கள் வெளியே தெரியாமல் பாதுகாக்கப்படும் என்பதையும் ஒரு போலீஸ் அதிகாரி தெரிவித்தார். வெடிகுண்டு வைத்தவன் ஏதாவது தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த ஆளாக இருக்குமா என்று நிருபர்கள் கேட்டதற்கு தற்போதைக்கு இதற்கு மேல் எதுவும் சொல்வதற்கில்லை என்று சொல்லி விட்டார்.

செய்திகள் முடிந்த போது சஹானா வீட்டில் மயான அமைதி நிலவியது.

20

சஹானா அக்‌ஷயை அதிர்ச்சியுடன் பார்த்தாள். அவன் முகத்திலோ ஒரு அசாதாரணமான அமைதி தெரிந்தது.

"என்ன அக்‌ஷய் அநியாயமாய் இருக்கிறது. நீங்கள் அந்தப் பையன் சொன்ன நேரத்தில் இமயமலைச் சாரலில் இருந்தீர்கள். வருணைக் காப்பாற்றினீர்கள். உங்களை டில்லியில் ஏதோ வெடிகுண்டு வைத்து விட்டுப் போனீர்கள் என்று அந்தப் பையன் பொய்

சொல்கிறான். நீங்களும் அமைதியாக இருக்கிறீர்கள்"

"சஹானா அவர்களுக்கு எதனாலோ என்னைப் பிடித்தாக வேண்டும் என்கிற அவசரம் தெரிகிறது. அதற்கு சட்டபூர்வமான வழிகள் எதுவும் அவர்களுக்கு தென்படவில்லை போல் இருக்கிறது. அதனால்தான் இந்த மாதிரியெல்லாம் சொல்லி விளம்பரப்படுத்துகிறார்கள். காசுக்காக யாராவது கண்டிப்பாக காட்டிக் கொடுப்பார்கள் என்று கணக்குப் போடுகிறார்கள்....." என்று அமைதியாக அவன் விளக்கினான்.

காரில் வரும் போதே அவன் முன்யோசனையுடன் நடந்து கொண்டு உருவத்தை மாற்றிக் கொண்டது இப்போது எவ்வளவு நல்லதாகப் போய் விட்டது என்று சஹானா நினைத்துக் கொண்டாள். பழைய உருவத்திலேயே வந்திருந்தால் பக்கத்து வீட்டுப் பஞ்சாபிக்காரரே இந்நேரம் பணத்திற்காக போன் செய்திருப்பார். ஆனால் இந்த அநீதி அவளை மனம் கொதிக்க வைத்தது.

"அக்ஷய் இப்போதே போலீசுக்கு போன் செய்து உண்மையைச் சொல்லட்டுமா? அந்த நேரம் நீங்கள் என் மகன் உயிரைக்

காப்பாற்றினீர்கள் என்று சொல்கிறேன். அந்த டீக்கடைக்காரர்களும் சாட்சி....."

"அவர்களிடம் சொல்வது நான் இருக்கும் இடத்தைக் காட்டிக் கொடுப்பது போல சஹானா. அவர்களுக்கு என்னைக் கொல்வது சுலபமாகப் போய் விடும்"

அவன் வார்த்தைகளில் இருந்த சத்தியம் அவளை அந்த எண்ணத்தைக் கைவிட வைத்தது. அவனை எதற்காக யார் கொல்ல முயல்கிறார்கள்?

"உங்கள் எதிரி சக்தி வாய்ந்த ஆளாகத் தெரிகிறான், அக்ஷய்"

அக்ஷய் புன்னகைத்தான். "நான் சக்தியில்லாத ஆளாகவா தெரிகிறேன்?"

அவளுக்கு அப்படித் தெரியவில்லை. இந்த அளவு அமைதியாக

இருக்க முடிந்த மனிதனை சக்தி குறைந்தவன் என்று எப்படிச் சொல்ல முடியும்? "அப்படி சொல்லவில்லை அக்ஷய். உங்கள் எதிரி நினைத்தவுடன் இப்படி எல்லாம் போலீசைச் சொல்ல வைக்கிற அளவு பலம் வாய்ந்தவனாக இருக்கிறான் என்று சொல்ல வந்தேன். ஆனால் இவ்வளவு ஆன பின்னும் உங்களால் எப்படி இவ்வளவு அமைதியாக இருக்க முடிகிறது?."

இளைய பிக்குவிடம் சொன்ன அதே பதிலை அக்ஷய் அவளிடமும் சொன்னான். "ஒரு மனிதனுக்கு ஒரு விதிதான் இருக்க முடியும் என்று நான் ஆழமாக நம்புகிறேன் சஹானா. அதனால் எதைப் பற்றி கவலைப்பட்டும் எதுவும் ஆகப்போவதில்லை...."

மரகதம் அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள். வருணுக்கு நடப்பதெல்லாம் ஓரளவுதான் புரிந்தது. அக்ஷய் முகத்தில் இருந்த அமைதி அவனுக்கு நம்பிக்கை தருவதாக இருந்தது. இந்த அங்கிளை யாரும் எதுவும் செய்து விட முடியாது என்று அவனுக்குத் தோன்றியது. அவன் அக்ஷயின் மடியில் சென்று அமர்ந்து கொண்டான். "அங்கிள், நீங்கள் சூப்பர்மேனா?"

அக்ஷய் நாயகன் கமல் குரலில், "எனக்குத் தெரியலையேப்பா" என்று சிரித்துக் கொண்டே சொன்னான். பின் இருவரும் ஏதேதோ பேசிக் கொள்ள ஆரம்பித்தார்கள். டிவியில் சொன்ன செய்தி அவனை சிறிதும் பாதிக்கவில்லை என்பது போல் அக்ஷய் இருந்தான்.

சஹானா மாமியாரைப் பார்த்தாள். மரகதம் இன்னும் அவனை ஏதோ அதிசயப் பிறவி போல பார்த்துக் கொண்டு இருந்தாள்.

அன்றிரவு படுக்கச் செல்லும் வரையில் வருண் அக்ஷயுடன்தான் இருந்தான். அக்ஷய் அவனுக்குக் கதைகள் சொன்னான். காகிதத்தில் பொம்மைகள் செய்து தந்தான். அவனுடன் கேரம் போர்டு விளையாடினான். இப்படி ஒரு போதும் அவன் தன் தந்தையுடன் நெருக்கமாய் இருந்து சஹானா பார்த்ததில்லை.

தூங்கச் செல்லும் முன் அவள் அறைக்கு வந்தவன் சொன்னான், "நான் அங்கிள் கூடவே படுத்துக் கொள்ளட்டுமா?"

அவள் மெள்ள தலையாட்டினாள். அவன் சந்தோஷமாக ஓடினான்.

அவளுக்கு உடல்நிலை சரியில்லாத சமயங்களில் எத்தனையோ முறை பாட்டியுடன் போய்ப் படுத்துக் கொள் என்று வருணிடம் கெஞ்சி இருக்கிறாள். ஆனால் அவன் அடம் பிடித்து அவளுடனேயேதான் படுத்துக் கொள்வான். முழுதாக ஒரு நாள் கூடப் பழக்கமில்லாத ஒரு அன்னியனிடம் அவன் இந்த அளவு நெருங்கி விட்டது ஒரு விதத்தில் அவளை என்னவோ செய்தது. தன் குழந்தையை அவனிடம் வேகமாய் இழப்பது போல் ஒரு பிரமை வந்தது. மனம் ஒரு கணம் பதறியது. அதே சமயம் அந்த அன்னியன் மட்டும் இல்லாமலிருந்திருந்தால் தன் குழந்தையை என்றென்றைக்குமாய் இழந்திருப்போம் என்ற எண்ணம் வந்த போது மனம் சமாதானம் அடைந்தது.

சிறிது நேரம் கழித்து மகன் உறங்கி விட்டானா என்று அவள் பார்க்கச் சென்றாள். அவன் உறங்கி விட்டிருந்தான். ஆனால் அக்ஷய் எங்கோ வெளியே செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். அவளைப் பார்த்தவுடன் சொன்னான். "சஹானா நான் வெளியே போக வேண்டும். எனக்கு வாசற்கதவின் சாவியைத் தர முடியுமா? நான் எப்போது வருவேன் என்று சொல்ல முடியாது. அனாவசியமாக உங்களைத் தூக்கத்திலிருந்து எழுப்ப வேண்டும்"

அவள் அவனையே கூர்ந்து பார்த்தாள். "அக்ஷய், அவர்கள் உங்களை தேடிக் கொண்டிருக்கிறார்கள்"

"அவர்கள் தேடுவது வேறு மனிதனை. என்னை அல்ல" அவன் அமைதியாகச் சொன்னான். நிஜமாகவே வேறு மனிதனைப் பார்ப்பது போலத்தான் இருக்கிறது என்றாலும் அவள் அவனுக்காகப் பயந்தாள்.

அதைப் புரிந்து கொண்டது போலச் சொன்னான், "சஹானா. இது வரை எனக்கு நான் யார் என்று தெரிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அந்த புத்த விஹாரத்தில் என்னைத் தேடி இரண்டு பேர்கள் வந்த போது நான் பலவீனமாக இருந்தாலும் அவர்களைச் சுலபமாக என் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து அவர்களிடம் "உங்களை யார் அனுப்பினார்கள்?" என்று கேட்டுத் தெரிந்து கொண்டிருப்பேன். ஆனால் நான் அங்கிருந்து வந்த பிறகு எனக்கு உயிர் கொடுத்த அந்த நல்ல பிக்குகளுக்கு என்னால் எந்தத் தொந்தரவும் வந்து விடக்கூடாது என்ற எண்ணம்தான் என்னைத் தடுத்தது. இப்போது டிவியில் காண்பித்த அந்தப் பையன் மூலம் எனக்கு ஒரு நூலிழை கிடைத்திருக்கிறது. நான் என்னை முழுவதுமாக காத்துக் கொள்ள வேண்டுமென்றால் நான் யார்,

என்னை எதற்காக யார் கொல்லப் பார்க்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளத்தான் வேண்டும்...."

அவளுக்குப் புரிந்தது. தலையாட்டினாள். வாசற்கதவின் சாவியை எடுத்துக் கொண்டு வந்து நீட்டினாள்.

அவன் அதை வாங்கிக் கொண்டபடியே கேட்டான், "நன்றி சஹானா. எனக்கு அந்தப் பையன் இருக்கும் அந்தப் பகுதிக்கு எப்படிப் போவது என்று சொல்ல முடியுமா?"

"நீங்கள் இந்த நேரத்தில் சபர்பன் ரயிலில் போவதுதான் ஒரே வழி...." என்றவள் ரயில் நிலையம் எங்கே, ரயிலில் போய் எங்கே இறங்க வேண்டும், இறங்கி விட்டு எப்படிப் போக வேண்டும் என்றெல்லாம் அவனுக்கு வழியை சொல்லித் தந்தாள். அவன் கிளம்பும் போது சொன்னாள், "ஜாக்கிரதை..."

அவன் நன்றியுடன் தலையசைத்து விட்டுக் கிளம்பினான்.

வெளியே வந்தவன் தெருக்கோடியில் இருந்த ஒரு கடையில் சூயிங்கம் வாங்கி வாயில் போட்டுக் கொண்டான். பெருநகரத்து நவீன இளைஞனாக மாறினான். ரயில் நிலையம் சஹானா வீட்டிலிருந்து நடக்கும் தூரம்தான். செல்லும் போது அவன் கவனம் தன்னைச் சுற்றிலும் முழுமையாக இருந்தது. யாரும் அவன் மீது தனிப்பட்ட அக்கறை செலுத்தியதாகத் தெரியவில்லை.

ரயிலில் ஏறிய பின் அவன் அமர்ந்த இடத்திற்கு அருகில் இருந்த நபர் அவனை ஏற இறங்க பார்த்தார். அக்ஷயிற்கு அந்த ஆளைப் பார்த்தவுடன் விடாமல் பேசிக் கேள்வி கேட்டு உயிரை எடுக்கக் கூடிய ஆளாகத் தெரிந்தது. உட்கார்ந்தவுடன் கண்களை மூடியவன் இறங்கப் போகும் இடம் வரும் போதுதான் கண்களைத் திறந்தான்.

அந்தச் சிறுவன் இருக்கும் பகுதிக்கு வந்த போது மணி பதினொன்றாகி இருந்தது. அந்தப் பகுதியில் ஆள் நடமாட்டம் அதிகமிருக்கவில்லை. அந்த இடம் தனக்கு மிகவும் பழக்கமான இடம் என்பது போல் நடந்த அக்ஷயிற்கு சுண்ணாம்பு கண்டு பல காலமாகி இருந்த அந்தப் பழைய சிறிய வீட்டைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருக்கவில்லை. அங்கிருந்த அத்தனை வீடுகளும்

அப்படித்தான் இருந்தன என்றாலும், தன் வீட்டின் முன்புறம் நின்று கொண்டு அந்தச் சிறுவன் டிவியில் பேசிய போது வெளிப்புறச் சுவரில் ப்ரூஸ்லியின் ஸ்டிக்கர் ஒட்டி வைக்கப்பட்டிருந்ததை அவன் கவனித்திருந்ததால் வீட்டைக் கண்டுபிடிப்பது சுலபமாக இருந்தது.

சற்று தொலைவில் நின்று சூழ்நிலையைக் கவனித்தான். அந்த வீட்டில் விளக்கு அணைந்திருந்தது. இரண்டு பக்க வீடுகளிலும் கூட உறங்கியிருந்தார்கள். வலது புற மூன்றாவது வீட்டில் இருந்து டிவியின் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. தெருக்கோடியில் இரண்டு இளைஞர்கள் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அக்ஷய் அமைதியாகச் சென்று அந்த சிறுவனின் வீட்டுக் கதவைத் தட்டினான்.

அக்ஷய் கதவைத் தட்டியவுடன், தூக்கக் கலக்கத்துடன் உள்ளேயிருந்து குரல் கேட்டது. "யாரது?"

அக்ஷய் அமைதியாகச் சொன்னான்,"போலீஸ்". சொல்லிக் கொண்டே தன் கண்ணாடியைக் கழற்றி சட்டைப்பையில் வைத்துக் கொண்டான். தலைமுடியை பழையபடி வாரிக்கொண்டான்.

விளக்கைப் போட்டு அவசர அவசரமாக ஒரு ஆள் கதவைத் திறந்தான். அந்தச் சிறுவனின் தந்தையாக இருக்க வேண்டும் என்று அக்ஷய் அனுமானித்தான். அந்த ஆள் வந்தது போலீஸ் அல்ல என்று உணர்வதற்குள் அக்ஷயின் வலது கை, அவன் கழுத்துப் பகுதிக்கு மின்னல் வேகத்தில் விரைந்தது. அடுத்த கணம் அந்த ஆள் கழுத்து ஒரு பக்கமாய் சாயச் சிலையாய் நின்றான். அவன் கண்கள் பயத்துடன் வெறித்துப் பார்த்தன. சத்தம் தொண்டையில் இருந்து எழவில்லை. தாங்க முடியாத வலியில் அவன் துடிப்பது விகாரமாய் மாறிய அவன் முக பாவத்திலிருந்து தெரிந்தது.

அவன் மனைவியும் மகனும் பீதியுடன் அவனையும் அக்ஷயையும் பார்த்தனர்.

அக்ஷய் அமைதி மாறாமல் வீட்டுக் கதவை உள்ளே இருந்து தாள் போட்டான். சமையலறையையும் சேர்த்து மூன்றே சிறிய அறைகள்

உள்ள அந்த வீட்டில் சாமான்கள் நிறைந்திருந்தன. நடப்பதற்கும் படுப்பதற்கும் மட்டுமே தேவையான இடம் விடப்பட்டிருந்தது. அங்கிருந்த ஒரு நாற்காலியில் அக்ஷய் உரிமையுடன் உட்கார்ந்தான்.

சிறுவனின் தாய் பயத்துடன் கேட்டாள், "நீங்கள் யார்?"

"நான்தான் உங்கள் பகுதியில் வெடிகுண்டு வைத்தவன். உங்கள் மகனுக்கு என்னை நன்றாய்த் தெரியும்"

தாய், மகன் இருவர் முகத்திலும் கலவரம் குடியேறியது.

"அவரை நீங்கள் என்ன செய்தீர்கள்? அவர் ஏன் இப்படி நிற்கிறார்?"

"என்ன செய்தேன் என்பதை உங்கள் மகனிடமும் செய்து காட்டவா?"

அவள் பயத்தின் உச்சத்திற்கே சென்று மகனைத் தன்னருகில் இழுத்துக் கொண்டாள். "நான் இப்போது சத்தம் போட்டால் எங்கள் பகுதியில் உள்ள ஆட்கள் அத்தனை பேரும் கூடி விடுவார்கள். தெரியுமா?"

"தாராளமாய் சத்தம் போடு. உன் கணவனை பழையபடி ஆக்க என் ஒருவனால்தான் முடியும் என்பதை ஞாபகம் வைத்துக் கொண்டு சத்தம் போடு. டெல்லியின் பெரிய பெரிய ஆஸ்பத்திரிகளில் கூட சேதாரமில்லாமல் அவனை சரி செய்ய முடியாது." அவன் அமைதி குறையாமல், குரலை சிறிதும் உயர்த்தாமல் சொன்னான்.

அவள் தன் கணவனைப் பார்த்தாள். அவன் பரிதாபமாக அவளைப் பார்த்தான். அவன் முகத்தில் வேதனை தெரிந்தது. லேசாக நகர முயற்சித்தான். ஆனால் வலியில் உயிரே போவது போல் இருந்தது. கழுத்து சிறிது அசைந்தாலும் அவனால் வலி தாங்க முடியவில்லை. அதை உணர்ந்த அவள் அக்‌ஷயிடம் அவசரமாகக் கேட்டாள், "ஏன் அவரை இப்படிச் செய்தீர்கள்?"

"வெடிகுண்டு வைக்கிற தீவிரவாதி என்ன வேண்டுமானாலும் செய்வான். இப்போது நான் செய்தது வெறும் ஒரு சின்ன வித்தைதான். இதை ஒரு நொடியில் சரி செய்து விட முடியும். இன்னும் எத்தனையோ எனக்குத் தெரியும். இப்போது நான் திருகி விட்ட நரம்பையே சிறிது பலப்பிரயோகம் செய்து செயல் இழக்க வைத்து விட்டால் அவன் காலம் பூராவும் ஒரு ஜடமாய் படுக்கையில் இருக்க வேண்டியிருக்கும். செய்யட்டுமா?"

அவன் குரலில் கோபம் இருக்கவில்லை. குரல் உயரவில்லை.

முகத்தில் குரூரம் இருக்கவில்லை. ஆனால் அந்த அமைதியே ஒரு இனம் புரியாத திகிலை அவளுள் ஏற்படுத்தியது. "நீங்கள் யார்? மந்திரவாதியா?"

அவளைப் பொறுத்த வரை மந்திரவாதி ஒருவனால்தான் இப்படியெல்லாம் செய்ய முடியும். அக்‌ஷய் ஒன்றும் சொல்லாமல் அந்தச் சிறுவனையே பார்க்க, அந்தச் சிறுவன் தந்தைக்கேற்பட்டிருந்த நிலையைப் பார்த்திருப்பதால் லேசாக நடுங்கினான்.

மகன் நடுக்கத்தையும் பார்த்த பிறகு அக்‌ஷயின் மௌனத்தையே கேள்வியாக எடுத்துக் கொண்ட அந்தப் பெண் மெல்லிய குரலில் சொன்னாள், "நாங்கள் என்ன செய்ய முடியும். போலீஸ் இவரிடம் இப்படி சொல்லா விட்டால் பொய் வழக்கு பதிவு செய்து விடுவோம் என்று பயமுறுத்தினார்கள்...."

அவள் எதையும் ஒளிக்காமல் சொன்னாள். அவள் கணவன் சிறு சிறு திருட்டுக் குற்றங்களில் ஈடுபட்டு ஓரிரு முறை சிறைக்கும் போய் வந்தவன். நேற்று இரவு இரண்டு போலீசார் வந்து அவனைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். தாங்கள் கூறியபடி மகனைக் கூற வைக்க வேண்டும் என்றும், தவறினால் பத்து வருடங்களுக்கு வெளியே வர முடியாதபடி வழக்கு பதிவு செய்து

விடுவோம் என்று காவல் நிலைய போலீஸ் அதிகாரி கூறியதால் வேறு வழியில்லாமல் அவள் கணவன் ஒத்துக் கொண்டிருக்கிறான். அவள் மகன் தெரு நாடகங்களில் நன்றாக நடிக்கக் கூடியவன். அவனுக்கு டிவியில் எல்லாம் வருவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாக இருந்ததால் அவர்கள் சொன்னபடி சொல்லி கச்சிதமாகத் தன் வேலையைச் செய்து முடித்திருக்கிறான். மற்றபடி அவர்கள் வெடிகுண்டைப் பார்க்கவுமில்லை. வைக்கவுமில்லை. அதை போலீசிற்கு வேண்டப்பட்ட யாரோதான் செய்திருக்க வேண்டும் என்பது அவளுடைய கருத்தாக இருந்தது.

அக்ஷய் கேட்டான், "அப்படி சொல்லச் சொன்ன போலீஸ் அதிகாரி பெயர் என்ன?"

அவள் திகிலுடன் சொன்னாள். "அதை வெளியே சொன்னது தெரிந்தால் அந்த ஆள் எங்களை என்ன வேண்டுமானாலும் செய்து விடுவார்"

அக்ஷய் எழுந்து கிளம்பத் தயாரானான். அதைக் கண்ட மூவர் கண்களிலும் மேலும் திகில் கூடியது. அவள் சொன்னாள்,"இவரை சரி செய்து விட்டுப் போங்கள்"

அவன் ஒன்றும் சொல்லாமல் கதவருகே சென்றான். அவள்

அவசரமாகச் சொன்னாள், "அந்த அதிகாரி பெயர் ப்யாரி லால்"

"எந்த காவல் நிலையம் அந்த ஆள்?"

அதையும் அவள் அவசரமாகச் சொன்னாள். அதை மனதில் குறித்துக் கொண்ட அவன் சொன்னான், "ஒரு வேளை நான் போன பிறகு சத்தம் போட்டாலோ, நான் இங்கே வந்து விட்டுப் போனதை நீங்கள் யாரிடமாவது சொன்னீர்கள் என்று தெரிந்தாலோ நான் மறுபடி வருவேன். வந்தால் உங்கள் மகனை நான் நல்ல முறையில் கவனிக்க வேண்டியிருக்கும்."

போவதற்கு முன் மறுபடி மின்னல் வேகத்தில் சிலையாக நின்றிருந்த மனிதன் கழுத்தில் லேசாகத் தட்டினான். இயல்பு நிலைக்கு உடனடியாக வந்த அந்த மனிதன் நடந்ததை நம்ப முடியாமல் தன் கழுத்தைத் தடவிக் கொண்டு திரு திருவென்று விழித்தான். அதிர்ச்சியில் இருந்து மீள அவர்களுக்கு நிறைய நேரம் ஆயிற்று.

**********

"சஹானா என்னதான் ஆயிற்று? நீ போனில் கூட சரியாக ஒன்றும் சொல்லவில்லை"

கேட்ட தன் நண்பனைக் களைப்புடன் சஹானா பார்த்தாள். மது அவளுடைய கல்லூரி நண்பன். இப்போது கூட வேலை பார்ப்பவனும்தான். அவர்கள் இருவருக்கும் இடையே ஒளிவு மறைவு இருந்ததில்லை. அவன் அவளுடைய நலம் விரும்பி. தேவைப்பட்டால் அவன் அவளுக்குத் தன் உயிரையும் கூடக் கொடுக்கத் தயங்க மாட்டான் என்பது அவளுக்குத் தெரியும். அவனிடம் அவள் எதையும் எப்போதும் மறைத்ததில்லை. மனம் விட்டு அவனிடம் பேசியது போல் அவள் இது வரை தன் வாழ்க்கையில் வேறு ஒருவரிடம் பேசியதில்லை.

இரவெல்லாம் சரியாக அவள் சரியாக உறங்கியிருக்கவில்லை. அக்ஷய் திரும்பி வரும் வரை அவளுக்கு இருப்பு கொள்ளவில்லை. அவன் போகும் வழியில் யாரிடமாவது அகப்பட்டுக் கொள்வான் என்று பயமா, இல்லை அவனைத் தேடி யாராவது இங்கே வந்து விடுவார்கள் என்ற பயமா என்று அவளுக்குத் தெரியவில்லை. அவன் நள்ளிரவு மூன்று மணிக்கு வந்தான். வந்தவுடன் சென்று படுத்துக் கொண்டான். பின்தான் அவள் லேசாகக் கண் மூடினாள்.

சஹானா மதுவிடம் வருணுக்கு நேரவிருந்த விபத்திலிருந்து ஆரம்பித்து வெளியே சென்ற அக்ஷய் இரவு மூன்று மணிக்கு வந்து சேர்ந்தது வரை விவரித்து சொன்னாள்.

அவனுக்கு ஏதோ ஆங்கில நாவல் படிப்பது போல் இருந்தது. "சஹானா, அவனை ஆபத்து சூழ்ந்திருக்கிறது என்று தெரிந்த பின்னும் அவனை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்தது போல ஒரு முட்டாள்தனம் வேறில்லை"

"இருக்கலாம் மது. அவனை வழியிலேயே இறக்கி விட்டு வருவதே புத்திசாலித்தனமாக இருக்கலாம். அவனும் அதையேதான் பல தடவை என்னிடம் சொன்னான். ஆனால் நிர்க்கதியாய் அவனை அப்படியே வழியில் இறக்கி விட்டு வந்திருந்தால் அது இதயமில்லாத தன்மையாய் இருந்திருக்கும். அதை விட முட்டாள்தனமே தேவலை இல்லையா?"

தன் சிநேகிதியை அவன் கனிவாகப் பார்த்தான். அவள் தன் மகன் மீது உயிரையே வைத்திருக்கிறாள். அவன் இறந்திருந்தால் அவள் வாழ்க்கையில் எல்லாம் அஸ்தமனம் ஆகியிருக்கும் என்பதை அவன் அறிவான். அந்த நன்றிக்காகத்தான் அவள் அக்ஷய் என்று பெயர் சூட்டப்பட்ட அந்த மனிதனை தன் வீட்டுக்கு அழைத்து வந்திருக்கிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது. ஆனால் போலீஸ் வலை வீசித் தேடும் ஆசாமியை அவள் வீட்டுக்குள் வைத்திருப்பது அபாயமே என்று அவனுக்குத் தோன்றியது.

"சஹானா ஒரு வேளை அவன் தீவிரவாதியாகவே இருந்தால்?"

"மது, ஒளிந்து இருக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் ஒருவன் ஒரு உயிருக்கு ஆபத்து என்று வந்த போது கொஞ்சம் கூட யோசிக்காமல் திரை மறைவிலிருந்து வெளியே வந்து காப்பாற்றுகிறான் என்றால் அவன் கண்டிப்பாக தீவிரவாதியாக இருக்க முடியாது. அதுவும் போலீஸ் நேற்று அவன் குண்டு வைத்தான் என்று சொல்வது பச்சைப் பொய். அதற்கு நானே சாட்சி"

"ஆனாலும் அவன் அந்தப் பையன் வீட்டுக்குப் போய் விட்டு வந்தது முட்டாள்தனம். போலீஸ் அவனைப் பின் தொடர்ந்து வந்திருந்தால் உன் நிலைமை என்ன தெரியுமா, சஹானா?"

சஹானா ஒன்றும் சொல்லவில்லை.

"சரி அந்தப் பையன் வீட்டுக்குப் போய் விட்டு வந்தவன் என்ன நடந்தது என்றாவது சொன்னானா?"

"காலையில் நான் என்ன ஆயிற்று என்று கேட்டேன். எதையும் குறைவாகத் தெரிந்து கொள்வது எனக்கு நல்லது என்றான். நான் அதற்கு மேல் கேட்கவில்லை"

அவள் வீட்டில் இருந்து கொண்டு தன்னிஷ்டப்படி நடந்து

கொள்ளும் அந்தப் புதிய மனிதனை மதுவிற்குப் பிடிக்கவில்லை. "சஹானா நான் அவனைப் பார்க்க வேண்டும்" என்றான்.

## 22

அவன் காலை எழுந்தவுடன் மீசையை மழித்துக் கொண்டான். கண்ணாடியில் பார்க்கையில் இன்னும் வித்தியாசமாகத் தெரிந்தான். பக்கத்து வீட்டு ஜெய்பால்சிங் செய்தித்தாளை வாங்கும் சாக்கில் வந்தவர் அவனை வித்தியாசமாய் பார்த்தார். "அக்ஷய் உங்களுக்கு என்ன ஆயிற்று?"

அவன் கண்ணடித்துக் கொண்டே சொன்னான். "ஒரு பந்தயத்தில் தோற்று விட்டேன்..." அவர் வாய் விட்டு சிரித்தார். "என்ன பந்தயம்....?"

"அது வெளியே சொல்ல முடியாத பந்தயம்... " என்று பிடி கொடுக்காமல் பேசிய அக்ஷய் செய்தித்தாளில் என்ன விசேஷம் என்று கேட்க அவர் பாராளுமன்ற அமளியைப் பற்றி உற்சாகமாகச் சொல்ல ஆரம்பித்தார். நல்ல வேளையாக அவர் மனைவி டீ சாப்பிடக் குரல் கொடுக்க அவர் போய் விட்டார்.

செய்தித்தாளில் அவனுடைய புகைப்படத்தோடு நேற்று டிவியில் சொன்ன செய்திகள் வந்திருந்தன. ஒரு வரி விடாமல் படித்தான். புதிதாக ஒன்றுமில்லை. அதை ஜெய்பால்சிங் படித்திருக்க வேண்டும். அவருக்கு சந்தேகம் எதுவும் வராதது அவனுக்குத் திருப்தியைத் தந்தது.

வருண் காலையில் எழுந்து அவனைப் பார்த்தவுடன் சொன்னான். "நீங்கள் மீசை எடுத்தது நன்றாகவே இல்லை. நான் அப்போதே சொன்னேனல்லவா?"

அக்ஷய் அதைக் கேட்டவுடன் முகம் வாடியது போல் நடிக்க வருண் அவசரமாகச் சொன்னான். "இல்லை..இல்லை. சும்மா தான் சொன்னேன். இப்போது வேறு மாதிரியாக நன்றாகத் தான் தெரிகிறீர்கள்"

சஹானா காலை எழுந்தவுடன் கூட மகன் தன்னருகே அதிகம் வராதத்தைக் கவனித்தாள். வருண் எழுந்ததிலிருந்து அவனுடனேயே இருந்தான். அவன் எங்கு சென்றாலும் அவன் பின்னாலேயே செல்வது, அவனுடனேயே சேர்ந்து சாப்பிடுவது, பள்ளிச்சீருடையுடன் கழுத்தில் டை கட்ட அவனிடமே கொண்டு வந்து தருவது என்று அவனை விடவேயில்லை. அவன் வருணுக்கு டை கட்டிக் கொண்டு இருந்த போது சஹானா அவர்களையே

பார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்டான். அவள் முகத்தில் தெரிந்த திகைப்பும், அதனுடனே தெரிந்த இனம் புரியாத உணர்ச்சியும் அவனுக்கு அபாய மணி அடித்தது. அவளுடைய உரிமைகளை அவன் பறித்துக் கொள்வதாக நினைத்துக் கொள்கிறாளோ? ஆனால் தன்னோடு விடாப்பிடியாக ஒட்டிக் கொள்ளும் குழந்தையோடு ஒட்டாமல் இருந்து அந்தப் பிஞ்சு மனதைப் புண்படுத்தவும் அவனுக்கு மனமில்லை. அவன் தன்னைக் கவனித்ததை உணர்ந்த சஹானா அங்கிருந்து நகர்ந்தாள்.

காலை பள்ளிக்கூட பஸ்ஸில் ஏற்றி விடக்கூட வருண் அக்ஷயையே அழைத்துக் கொண்டு சென்றான். அந்த அடுக்கு மாடிக் குடியிருப்பில் வசித்த மற்ற வீட்டுக்காரர்கள் வருணுடன் வந்த புதிய மனிதன் மீது பெரிய ஆர்வமோ, சந்தேகமோ கொள்ளவில்லை. அவரவருக்கு அவரவர் வேலைகளே தலைக்கு மேல் உள்ள பெருநகரத்து வாழ்க்கை முறையில் அதற்கு மேல் யாருக்கும் நேரமில்லை, மனமுமில்லை. ஓரிருவர் மட்டும் வருணிடம் நட்புடன் யாரது என்று கேட்டார்கள். வருண் பெருமையுடன் சொன்னான். "என் அங்கிள். பெயர் அக்ஷய்". அவன் வைத்த பெயரென்பதால் அதைச் சொல்வதில் அவனுக்கு ஒரு தனி சந்தோஷம்.

வருண் போன பின் டிபன் சாப்பிடும் போது சஹானா அக்ஷயிடம் முந்தைய தினம் அந்தச் சிறுவனின் வீட்டுக்குப் போனதைப் பற்றிக்

கேட்ட போது 'எவ்வளவு குறைவாக தெரிந்து கொள்கிறீர்களோ அவ்வளவு நல்லது' என்று மட்டுமே சொன்னான். அவள் அதிகம் அறிவது வீணே பயத்தை உண்டாக்கும் என்று நினைத்தான். அனாவசியமாக தன் விஷயங்களில் இதற்கு மேலும் அதிகம் அவர்களை ஈடுபடுத்துவது சரியல்ல என்று அவனுக்குத் தோன்றியது. அவளும் அதற்கு மேல் அவனிடம் எதுவும் கேட்கவில்லை.

சஹானாவும் வருணும் போன பின் அவனும் மரகதமும் மட்டுமே வீட்டில் இருந்தார்கள். அவன் வந்ததில் இருந்து மரகதம் பேசிக் கேட்ட வார்த்தைகளை விரல் விட்டு எண்ணி விடலாம். பெரும்பாலும் அவள் சமையலறையில் வேலையில் இருந்தாள். வீட்டில் இருப்பதே தெரியாத வண்ணம் இருந்த அவளிடம் சஹானாவும், வருணும் கூட அதிகம் பேசாதது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

சமையலறைக்கு சென்று எட்டிப் பார்த்தான். அவள் காய்கறிகளை எடுத்து நறுக்க அப்போது தான் உட்கார்ந்திருந்தாள். அவள் விரலில் ஒரு பேண்ட் எய்டு ப்ளாஸ்டர் போடப்பட்டு இருந்தது.

"உங்கள் விரலில் என்ன காயம்?"

திடுக்கிட்டு அவனை நிமிர்ந்து பார்த்த அவள் மெல்லச் சொன்னாள். "நேற்று காய் நறுக்கும் போது காயமாகி விட்டது"

"கொடுங்கள் நான் காய் நறுக்குகிறேன்"

"ஐயையோ வேண்டாம்" என்று அவள் அவசரமாக மறுத்தாலும் அவன் பலவந்தமாக அவளிடமிருந்து காய்கறிகளையும் கத்தியையும் வாங்கினான். "பரவாயில்லை கொடுங்கள் நான் உங்கள் மகன் மாதிரி. உட்கார்ந்து தின்றால் எனக்கும் செரிக்காது."

அவன் கச்சிதமாக காய்கறிகளை வேகமாக நறுக்கியதைப் பார்த்த போது அவன் தன் வீட்டில் தன் தாயிற்கோ, மனைவிக்கோ தினசரி காய்கறி நறுக்கித் தருபவனாக இருக்க வேண்டும் என்று மரகதம் நினைத்துக் கொண்டாள். ஆனால் ஒரு ஆணிடம் இந்த வேலையைத் தந்து விட்டது அவளுக்கு ஒரு மாதிரியாக இருந்தது.

"வீட்டுப் பெண்கள் மற்றவர்கள் கண்கள் படும்படி வளைய வரக்கூடாது" என்பது சிறுவயதில் அவள் தந்தையின் கடுமையான விதியாக இருந்தது. அவள் தாயும், அவளும் வீட்டின் முன் பகுதிகளுக்கு வருவதே அவளுடைய தந்தையில்லாத சமயமாகப் பார்த்து தான். சத்தமாய்ப் பேசக்கூடாது என்பது அவருடைய அடுத்த கட்டளை. அதனால் சிறு வயதில் இருந்தே மெல்லப்

பேசியே மரகதம் பழகி விட்டாள். திருமணம் ஆகி வாழ்க்கைப்பட்டதோ ஒரு கோபக்கார, குடிகாரக் கணவனிடத்தில். எதிர்த்துப் பேசினாலோ, பிடிக்காததைச் செய்தாலோ கையில் கிடைத்ததை எடுத்து எறியும் பழக்கம் அவனிடத்தில் இருந்தது. அதற்குப் பயந்து அப்போதும் வீட்டுக்குள்ளே மறைந்தும், மௌனமாகவும் இருந்தே பழகி விட்டது. மகன் அவளை ஒரு பொருட்டாக என்றும் மதித்ததில்லை. படிப்பறிவில்லாத, பட்டிக்காடான தாயிடம் அவனுக்கும் பேச மனம் இருந்ததில்லை.

அப்படியே வாழ்ந்து வந்து விட்ட மரகதத்திடம் முதல் முதலில் அன்பான கரிசனம் காட்டிய ஆண் அக்ஷய் தான்.

"உங்களுக்கு வேறெதாவது வேலை செய்து தர வேண்டுமா?"

"ஐயோ வேண்டாம். இதுவே அதிகம்"

அவன் சென்று சிறிது நேரம் டிவி செய்திகள் பார்த்தான். பிறகு அறைக்குச் சென்று தியானத்தில் அமர்ந்தவன் காலத்தை மறந்தான். சிறிது நேரம் கழித்து அவன் என்ன செய்கிறான் என்று மெள்ள எட்டிப்பார்த்தாள் மரகதம். ஆழ்ந்த தியானத்தில் இருந்த அவன் முகத்தில் ஏதோ ஒரு தேஜஸ் தெரிந்தது.

மரகதம் சத்தமில்லாமல் நகர்ந்தாள்.

மதியம் சாப்பிட அழைக்க வரும் போது அவன் விழித்திருந்தான். "சாப்பிட வருகிறீர்களா?"

எழுந்து அவளைப் பின் தொடர்ந்து வந்தவன் சாப்பிடும் போது கேட்டான். "உங்களுக்கு நான் இங்கு வந்தது பிடிக்கவில்லையா?"

"ஐயோ அப்படியெல்லாம் இல்லை"

"பின் ஏன் பேசவே மாட்டேன்கிறீர்கள்?"

"அதிகமாய் பேசி பழக்கமில்லை"

"ஏன்?" அவன் விடுவதாய் இல்லை.

அவனிடம் தன் தந்தையைப் பற்றியும், கணவனைப் பற்றியும் மனம் விட்டுச் சொன்னாள். மகனைப் பற்றி மட்டும் சொல்லவில்லை. அவன் அவள் சொன்னதையெல்லாம் பொறுமையாகக் கேட்டான். 'இன்னும் இந்த நாட்டில் இப்படி ஒடுக்கப்பட்ட பெண்கள் இருக்கிறார்கள்' என்று நினைக்கையிலேயே மனம் கனத்தது. 'என்ன வாழ்க்கை இது'.

"உங்கள் மகனிடம் கூட அதிகம் பேச மாட்டீர்களா?" கடைசியில் கேட்டான்.

"அவனும் அதிகம் பேசாத ரகம். படிப்பு வேலை என்று இருப்பான்". அதற்கு மேல் பேசினால் மகனைப் பற்றியும் எல்லாம் சொல்லி விடுவோம் என்று பயந்த மரகதம் "வருண் பள்ளியில் இருந்து வரும் முன் மத்தியானம் ஒரு குட்டித் தூக்கம் போடுகிற பழக்கம்..." என்று எழுந்து விட்டாள். ஆனால் எழுந்த போது அவள் மனம் லேசாக இருந்தது. மனம் விட்டுப் பேச முதல் முறையாகக் கிடைத்த மனிதனான அவன் மீது ஒரு தனிப்பாசம் பிறந்திருந்தது.

சஹானா வரும் போது இரவு எட்டு மணியாகி இருந்தது. வரும் போதும் வருண் அக்ஷயுடம் அமர்ந்து வீட்டுப்பாடம் எழுதிக் கொண்டிருந்தான். மாமியார் முகத்தில் தெரிந்த மாற்றம் அவளை ஆச்சரியப்பட வைத்தது. எப்போதுமே இறுக்கமாகவே இருக்கும் மாமியார் முகத்தில் இறுக்கம் காணாமல் போகக் காரணம் புது மனிதனாகவே இருக்க வேண்டும் என்பதில் அவளுக்கு சந்தேகம் இல்லை. 'எவ்வளவு சீக்கிரம் எல்லோரையும் தன் பக்கம் இழுத்துக் கொள்கிறான்' என்று அவள் வியந்தாள்.

அவன் ஒரு வித்தியாசமான மனிதன் என்பதில் சந்தேகமேயில்லை அவனைப் பார்க்க வேண்டும் என்று மது சொன்ன போது "தற்போது

வேண்டாம். பின்னொரு நாளில் பார்க்கலாம்" என்று சொல்லி சமாளித்திருந்த சஹானா அவன் இவனைப் பார்த்த பின் என்ன சொல்வான் என்று யோசித்தாள்....

********

அந்த ரெடிமேட் கடைக்காரன் பத்திரிக்கையில் பிரசுரமாகி இருந்த அந்தப் புகைப்படத்தைக் கூர்ந்து பார்த்தான். சந்தேகமேயில்லை. இது நேற்று அவன் கடைக்கு ஆடைகள் வாங்க ஒரு பெண்ணுடன் வந்திருந்த அதே ஆள் தான். அவன் தீவிரவாதி, தகவல்கள் சொல்பவருக்கு பணம் என்பதை எல்லாம் படித்த அவன் ஆர்வமாகப் போலீசுக்கு போன் செய்ய ஆரம்பித்தான்.

23

"ஹலோ சஹானா" மதுவின் குரல் பரபரப்பாகக் கேட்டது.

"சொல்லு மது"

"அவன் இருக்கிறானா?"

"இல்லை. வெளியே போயிருக்கிறான்."

"எங்கே?"

"அவனாகச் சொல்லவில்லை. நானாகக் கேட்கவில்லை"

"ஒவ்வொரு நாளும் இரவானால் வெளியே போகிறான். இன்று போனது எங்கே என்று உனக்குத் தெரியவில்லை. நேற்று போனவன் என்ன செய்தான் என்றும் தெரியவில்லை. அவனைத் தீவிரவாதி என்று போலீஸ் வேறு தேடுகிறது. நீ ஆபத்தை விலை கொடுத்து வாங்கிக் கொண்டிருக்கிறாய் சஹானா, தெரியுமா?"

"மது. எனக்குப் புரிகிறது. ஆனால் என் மகன் பிழைத்திருப்பது அவனால் தான். அதனால் அவனுக்கு ஒரு பாதுகாப்பான இடத்தைத் தயார் செய்யாமல் நான் அனுப்பப் போவதில்லை. என்ன ஆனாலும் சரி"

மது பெருமூச்சு விட்டான். "சஹானா, நான் இன்றைக்கு அவன் தான் வெடிகுண்டு வைத்தவன் என்று அடையாளம் காட்டிய பையன் வீட்டுக்குப் போயிருந்தேன்...."

"சொல் மது. அவர்கள் வீட்டில் என்ன சொன்னார்கள்"

"அங்கே அந்தப் பையன், அவனுடைய அப்பா, அம்மா மூன்று பேருமே ஏதோ பேயைப் பார்த்த மாதிரி பயந்து போயிருக்கிறார்கள். அந்த வீடே ஒரு மாதிரியாய் இருக்கிறது. நான் டிவி சேனலில் இருந்து வருகிறேன் என்று சொன்னதும் அந்தப் பையனின் அம்மா ஒருத்தி தான் வாயைத் திறந்தாள். அதுவும் "தயவு செய்து எதுவும் கேட்காதீர்கள்" என்று சொல்லத்தான். சொல்லச் சொல்ல அழுதே விட்டாள். அந்தப் பையனும், அவன் அப்பாவும் ஏதோ பெரிய ஆபத்தை நான் கொண்டு வந்திருப்பது போல் என்னை கலவரத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். எந்நேரமும் எதுவும் ஆகலாம் என்று பயந்தது மாதிரி தெரிந்தது. இதெல்லாம் உன் ஆள் போய் வந்ததன் விளைவு தான் என்பதில் சந்தேகமில்லை"

மகனும் மாமியாரும் அருகில் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின் சஹானா குரலைத் தாழ்த்திக் கொண்டு சொன்னாள். "மது. எனக்கு நீ சொல்வதை நம்ப முடியவில்லை. என் வீட்டில் நேர்மாறாக நடந்திருக்கிறது. என் மகன் அவன் இருக்கிற வரை அவனுடனே அட்டை போல் ஒட்டிக் கொண்டிருக்கிறான். என் மாமியாரை உனக்குத் தெரியுமே எப்போதும் ஒரு எந்திரம் மாதிரி தான் இருப்பார்கள். இன்றைக்கு அவரே நிறைய மாறியிருப்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனை அவர் பாசத்துடன் பார்த்தது போல் அவருடைய மகனைப் பார்த்ததாக எனக்கு நினைவில்லை...."

"சஹானா. அப்படியானால் அவன் பெரிய புதிராக இருக்கிறான். அவனை நான் கண்டிப்பாய் பார்க்க வேண்டும். நாளைக்கே."

சஹானா சற்று யோசித்து விட்டு சொன்னாள். "சரி மது. நான் நீ என் நண்பன். வேறு ஒரு விஷயமாய் வீட்டுக்கு வருகிறாய். உன் மூலமாய் விஷயம் போகாது என்று சொல்லி அவனைத் தயார் செய்து வைக்கிறேன். வா"

போனை வைத்த பிறகு சஹானா நிறைய நேரம் அவனைப் பற்றியே யோசித்தாள். யாரவன்? ஒரு குடும்பத்தைக் கிலியின் பிடியிலும் இன்னொரு குடும்பத்தை அன்பின் பிடியிலும் கட்டிப் போட முடிந்த, பெயர் கூடத் தெரியாத அந்த அசாதாரண மனிதன் உண்மையில் யார்? ஏன் அவனைக் கொல்லச் சிலர் முயற்சிக்கிறார்கள்? ஏன் போலீஸ் தேடுகிறது?

மதுவிடம் கூட சொல்லாத இன்னொரு விஷயமும் அவளை அலைக்கழித்தது. வருணும், மரகதமும் மட்டுமல்ல அவளும் கூட அவனால் அதிகம் மாறிக் கொண்டிருக்கிறாள். அவனிடம் ஒருவித காந்த சக்தி இருப்பதாக உணர ஆரம்பித்திருந்தாள். அவன் புன்னகை பூத்த போதெல்லாம் அவள் இதயம் ஒரு கணம் துடிக்க மறந்தது. அவன் பேசுவது, உட்கார்வது, நடப்பது எல்லாவற்றிலும்

ஒரு அழகு கலந்த கம்பீரம் இருப்பதாகத் தோன்ற ஆரம்பித்திருந்தது. மது சொன்ன ஆபத்தை விட இது பேராபத்து என்று தோன்ற ஆரம்பித்தது.

********

ஆச்சார்யா கடைசிக் கேஸில் உபயோகித்த நபர் தன் தம்பியாக இருக்கலாம் என்ற சந்தேகத்தை ஆனந்த் ஜெயினிடம் கூடச் சொல்லவில்லை. டெல்லி வந்தவுடன் மறுபடியும் லலிதாவிற்குப் போன் செய்து அந்த விஷயத்தை எக்காரணத்தைக் கொண்டும் சிபிஐ உட்பட யாரிடமும் இனி சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ள அவளும் ஒத்துக் கொண்டாள்.

ஜெயினிடம் வந்து அந்த நபரைப் பற்றிச் சொன்ன போது யாரோ ஒரு இளைஞன் ஆச்சார்யாவிடம் தினமும் இரவு பத்து மணிக்கு மேல் அடிக்கடி பேசினான், அவன் பெயர் சொன்னதில்லை என்பது மட்டும் சொன்னான்.

ஜெயின் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தார். வெடிகுண்டுத் தாக்குதல் டெல்லியில் பல இடங்களில் வெடிக்கப் போகிறது என்ற அளவில் மட்டும் தெரிந்த செய்தி மேற்கொண்டு எந்தத் தகவலும் இல்லாமல் தலைக்கு மேல் கத்தியாகத் தொங்கிக் கொண்டிருந்தது. எந்த நாள்,

யாரால் வைக்கப்படலாம் என்பதை அறிந்த அந்த நபர் உயிருடன் இருக்கிறானா இல்லையா என்பது கூடத் தெரியவில்லை.....

"ஆனந்த். நேற்று டெல்லி புறநகர் பகுதியில் குண்டு வைத்ததாக ஒரு தீவிரவாதியின் படத்தை வெளியிட்டிருந்தார்கள். அவனும் நாம் வெடிகுண்டு வைக்கப் போவதாக நினைக்கும் கூட்டத்தில் உள்ள ஆளாக இருக்கலாமோ"

"நானும் பார்த்தேன். இருந்தாலும் இருக்கலாம். ஆனால் நாம் தேடிக் கொண்டிருக்கும் கூட்டம் டெல்லியின் முக்கியமான பகுதிகளில் வைக்கப் போகிற கூட்டம் என்று சந்தேகப்படுகிறோம். இந்தக் குண்டு வைத்த இடம் அந்த அளவு முக்கியமான பகுதி அல்ல. அதனால் இது வேறு கூட்டமாக இருக்கலாம். ஆனால் எதற்கும் அந்த தீவிரவாதி பற்றி வேறெதாவது தகவல் கிடைக்கிறதா என்று பார்த்து முடிவு செய்யலாம்"

"அதுவும் சரி தான்" என்றவர் போனை எடுத்தார்.

*********

இரண்டு முறை அடித்து ஓய்ந்த செல் போனை எடுத்துப் பார்த்தான் சிபிஐ மனிதன். இரவு மட்டுமே பேசக் கூடிய அந்த நபர் அலுவலக நேரத்தில் போன் செய்கிறார் என்றால் அது மிக

முக்கியமான விஷயமாகத் தான் இருக்க வேண்டும். அமைதியாக எழுந்து பாத்ரூமிற்குச் சென்றான். உள்ளே தாளிட்ட பின் தன் செல் போனை எடுத்து சிம்மை மாற்றினான். சமையலறையில் துவரம்பருப்பு டப்பாவில் தனியாக வைத்திருந்த செல் போன் சிம்மிற்கு இப்போது அமானுஷ்யனால் வேலை கூடி விட்டது. சதா காலமும் தன்னுடனேயே வைத்திருக்க வேண்டிய கட்டாயம் சிபிஐ மனிதனுக்கு வந்து விட்டது.

"ஹலோ"

"சொல்லுங்கள் சார்"

"அவன் அந்தப் பெண்ணுடன் தன் கடைக்கு வந்ததாக டெல்லியில் உள்ள ஒரு ரெடிமேட் கடைக்காரன் போன் செய்திருக்கிறான். அவன் சில ஆடைகள் வாங்கியதாகவும் அதற்கு அந்தப் பெண் தான் பணம் தந்தாள் என்றும் அவன் சொல்கிறான்..."

சிபிஐ மனிதன் மூளை மின்னல் வேகத்தில் கணக்குப் போட்டது. இருக்கலாம்.

"அவனிடம் அந்தப் பெண் பற்றியும் எல்லா விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அந்த பெண்ணின்

அடையாளங்களை வைத்து வரையக் கூடிய ஆட்களையும் அனுப்புங்கள். அந்தக் கடை விலாசத்தைச் சொல்லுங்கள்" கேட்டு மனதில் அப்படியே குறித்துக் கொண்டான்.

மறுபக்கம் ஆவலோடு கேட்டது. "அப்படியே அந்தப் பெண்ணின் படத்தையும் டிவியிலும், பத்திரிகைகளிலும் போட்டு விளம்பரம் செய்தால் என்ன?"

"வேண்டாம். அது ஆபத்து. அவளை விளம்பரப்படுத்தி அவள் கிடைத்து அந்த அமானுஷ்யன் குண்டு வைத்த தீவிரவாதியாக இருக்க முடியாது என்று சொல்லி அதுவும் பத்திரிக்கைகளிலும், டிவியிலும் வந்தால் நம் திட்டத்திற்கே ஆபத்து"

"யார் அவளை நம்புவார்கள்? நாம் அவளையும் அவன் கூட்டாளி என்று சொல்லி விடலாம். அதற்கு போலீசை வைத்து ஆதாரங்களையும் தயார் செய்தால் போயிற்று"

"சார். நாம் விளம்பரப்படுத்திய அவனுடைய படத்தை, அந்த இமயமலைப் பாதையில் இருந்த டீக்கடை முன் நிறுத்தப்பட்டிருந்த டூரிஸ்ட் பஸ்ஸில் வந்து டீக்கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தவர்கள் கூடப் பார்த்திருப்பார்கள். அவனாக இருக்கலாம் என்று சந்தேகம் வந்தால் கூட, அந்த நேரத்தில் அவன்

இங்கிருந்தான். அதனால் டெல்லியில் வெடிகுண்டு வைத்திருக்க முடியாது, அதனால் இது வேறு யாரோ என்று விட்டிருப்பார்கள். இவளையும் விளம்பரப்படுத்தி இவளும் அதைச் சொன்னால் ஆமாம் பார்த்தோம், நாங்கள் சாட்சி என்று டீக்கடைக்காரனும், அந்த ஆட்கள் சிலரும் சேர்ந்து சொன்னால் நாம் உருவாக்கி வைத்த இந்தக் கேஸ் பிசுபிசுத்துப் போகும். அதனால் நீங்கள் அவசரப்பட்டு எதையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று எதையும் செய்து விடாதீர்கள். அப்புறம் இன்னொரு விஷயம் அந்த ரெடிமேட் கடைக்காரன் அமானுஷ்யன் பற்றியும் அந்தப் பெண் பற்றியும் சொன்ன தகவல்கள் எல்லாம் உங்களுக்கு நம்பிக்கையான போலீஸ் அதிகாரிகள் தவிர, போலீசிலேயே மற்றவர்களுக்கு அதிகம் தெரியாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். அந்தப் பெண் படம் வரையப்பட்ட பிறகு எனக்கு ஒரு நகல் அனுப்பி வையுங்கள். நான் வேறு வழியில் அதை துப்பறிகிறேன். எப்போதாவது அவனையோ, அவளையோ பார்க்க நேர்ந்தால் உடனடியாக அந்த ரெடிமேட் கடைக்காரனைத் தெரிவிக்கச் சொல்லுங்கள். தாராளமாய் பரிசுப்பணம் கிடைக்கும் என்று சொல்லுங்கள்"

"சரி அப்படியே செய்கிறேன். போலீசில் எனக்கு வாக்கு கொடுத்திருக்கிறார்கள். அமானுஷ்யனை இன்னும் இரண்டு மூன்று நாளில் பிடித்துக் கொடுக்கிறோம் என்று"

"அப்படி செய்வது எல்லோருக்கும் நல்லது. ஒரு காலத்தில் அவனை விட்டு வைத்த அவன் எதிரிகள் யாரும் மிஞ்சவில்லை என்பதை நீங்கள் கொடுத்த ஃபைலில் படித்ததாய் ஞாபகம். சரித்திரம் திரும்பாமல் பார்த்துக் கொள்ளுங்கள்"

## 24

அந்தக் காவல் நிலையத்தில் நுழைந்த அந்தக் கிராமத்தானைப் பார்த்து "யார் நீ, என்ன வேண்டும்" என்று ஒருவரும் கேட்கவில்லை. இத்தனைக்கும் யாரும் எந்த முக்கியமான வேலையிலும் இருக்கவில்லை. இரவு ஒன்பது மணிக்கு மேல் திருதிருவென்று விழித்தபடி உள்ளே நுழைந்த அந்த கிராமத்தான் யாராவது தன்னைப் பார்ப்பார்களா என்று பொறுத்துப் பார்த்தான். ஆனால் அவனைக் கவனித்தாலும் பெரிய முக்கியத்துவம் எதுவும் தர வேண்டியதில்லை என்பது போல முன் மேசையில் இருந்த ஒரு போலீஸ்காரன் தன்னருகே நின்றிருந்த இன்னொருவனிடம் சொந்தக் கதை ஏதோ பேசிக் கொண்டிருந்தான்.

அந்தக் கிராமத்தான் வெற்றிலையால் காவி நிறமாயிருந்த பற்களைக் காட்டி முன்னால் இருந்த அந்த இரண்டு போலீஸ்காரர்களிடமும் வணக்கம் தெரிவித்தான்.

"என்ன?" என்று உட்கார்ந்திருந்த போலீஸ்காரர் எரிச்சலுடன் கேட்டான்.

"ப்யாரிலால் சாரைப் பார்க்க வேண்டும்"

"வீட்டுக்குப் போய் விட்டார். நாளைக்கு காலையில் தான் வருவார்"

என்ன செய்வது என்று யோசித்தபடி அந்த கிராமத்தான் தன் கையிலிருந்த பையிலிருந்து சில கட்டுப் பணத்தை எடுத்து ஆலோசனையுடன் பார்த்தான். அந்தக் கட்டில் முன்னும் பின்னும் இருப்பது மட்டும் தான் ரூபாய் நோட்டுகள், நடுவே இருப்பதெல்லாம் காகிதத்தாள்கள் என்பதை அறியாத அந்தப் போலீஸ்காரர் ஆர்வத்துடன் கேட்டார். "என்ன விஷயம்?"

"கிஷோர் சார் இந்தப் பணத்தை சார் கையில் கொடுத்து விட்டு வரச் சொன்னார். மற்ற விஷயத்தைப் போனில் சொல்லிக் கொள்கிறேன் என்றார். ஆனால் அவர் இல்லையே என்ன செய்வது?"

"என்னிடம் கொடுத்தால் நான் நாளை காலையில் கொடுத்து விடுகிறேன்"

கிராமத்தான் விவரமாக மறுத்தான். "என் பணமாய் இருந்தால்

உங்களிடம் கொடுத்து விட்டுப் போவேன். கிஷோர் சார் பணத்தை அப்படித் தர முடியாது. அவர் கோபித்துக் கொள்வார்"

யார் அந்த கிஷோர் சார் என்று கேட்கும் சிரமத்தை அந்தப் போலீஸ்காரன் எடுத்துக் கொள்ளவில்லை.

"ப்யாரிலால் சார் வீடு பக்கமா தூரமா?" கிராமத்தான் கேட்டான்.

"பக்கம் தான். ஆனால் அவர் வீட்டுக்கு யாரும் போய் பேசுவதை விரும்ப மாட்டார்"

"அப்படியானால் இந்தப் பணத்தை கிஷோர் சாரிடமே திருப்பிக் கொடுத்து விடுகிறேன். நான் இரவு 12 மணி ரயிலுக்குப் போயாக வேண்டும்" என்று சொன்ன கிராமத்தான் கிளம்பத் திரும்பினான்.

போலீஸ் ஸ்டேஷன் வரை வந்த கட்டு கட்டான பணத்தைத் திரும்ப அனுப்புவது ப்யாரிலாலுக்குக் கோபத்தை உண்டாக்கும் என்று முடிவு செய்த அந்த போலீஸ்காரன் "ஒரு நிமிஷம் பொறு" என்று அவசரமாக அந்த கிராமத்தானை நிறுத்தி ப்யாரிலால் செல்லுக்கு போன் செய்து விஷயத்தைச் சொன்னான்.

ப்யாரிலாலுக்கு கிஷோர் என்ற பெயரில் இரண்டு மூன்று

நபர்களைத் தெரியும் என்றாலும் எவனும் பணம் கொடுத்து அனுப்புபவன் அல்ல. குடிபோதையில் இருந்த ப்யாரிலாலுக்கு கட்டு கட்டாய் பணம் என்று சொன்ன பிறகு அனுப்பியது யார் என்பதில் அக்கறை இருக்கவில்லை. "அந்த ஆளை வீட்டுக்கு அனுப்பு" என்று கட்டளையிட்டான்.

அந்தப் போலீஸ்காரன் ப்யாரிலாலின் வீட்டு அடையாளத்தைச் சொல்லிக் கிராமத்தானை அனுப்பினான்.

ப்யாரிலால் வீட்டில் தனியாகத் தான் இருந்தான். குடித்துக் கண்கள் சிவந்திருந்தன. அந்தக் கிராமத்தானின் வணக்கத்தை அலட்சியத்துடன் ஏற்றுக் கொண்டான்.

கிராமத்தான் பையிலிருந்து பணத்தை எடுத்தபடியே சொன்னான். "கிஷோர் சார் கொடுக்கச் சொன்னார். அவர் உங்களிடம் போன் செய்து மற்ற விவரத்தை எல்லாம் சொல்கிறாராம்"

அவன் ஏதோ யோசனை செய்பவன் போல பணத்தை மறுபடி பையிலேயே போட்டு கையைப் பையிலிருந்து எடுத்தது மட்டும் தான் ப்யாரிலாலுக்குத் தெரியும். அடுத்த கணம் அவன் கை ப்யாரிலாலின் நெற்றிப் பொட்டில் தட்ட ப்யாரிலால் சுயநினைவை இழந்தவனாய் கீழே சரிந்தான். அவனுக்கு சுயநினைவு வந்த போது

அவனுடைய கைகளும், கால்களும் கட்டப்பட்டிருந்தன. ப்யாரிலாலுக்கு நடப்பது கனவா நனவா என்று ஒரு கணம் விளங்கவில்லை. விளங்கிய போதோ வந்த கோபத்திற்கு அளவேயில்லை.

"டேய் யார் நீ? போலீஸ் அதிகாரியைத் தாக்கினால் என்ன ஆகும் தெரியுமா?"

அக்‌ஷய் அமைதியாகச் சொன்னான். "கோபப்படுவதற்கு முன் உன் நிலைமையைப் புரிந்து கொள்"

"என்னடா என் நிலைமை?"

அக்‌ஷய் தரையில் அவனருகில் அமர்ந்தான். "மனித உடலில் எத்தனையோ மர்ம ஸ்தானங்கள் இருக்கின்றன. அந்த இடங்களில் தேவையான அளவு வேகத்துடன் மிகச்சரியாக அடித்தால் எந்த ஆயுதமும் இல்லாமலேயே எத்தனையோ பாதிப்புகளை ஏற்படுத்தி விட முடியும். மரணம், பக்கவாதம், மூளையை செயலிழக்க வைப்பது, கோமா என்ற மயக்க நிலைக்குப் போக வைப்பது எல்லாம் மிக சாதாரணம். இப்போது பாரேன்..." கையை ஏதோ முத்திரை நிலைக்குக் கொண்டு வந்து ப்யாரிலாலின் மூக்கிற்குக் கீழே ஒரு அடி அடித்தான். அடுத்த கணம் ப்யாரிலால் தாங்க

முடியாத வலியுடன் அலறினான். அவன் கண்களில் இருந்து கண்ணீர் கொட்ட ஆரம்பித்தது.

"உன்னை மயக்கமடைய வைத்த முதல் அடி, இப்போது தந்த இந்த சின்ன அடி எல்லாம் உனக்கு எந்த நிரந்தர பாதிப்பும் ஏற்படுத்தாது. ஆனால் இப்போது அடித்த அடியையே முத்திரையை◌ மாற்றி உன் தாடையில் அடித்திருந்தால் உனக்கு பக்க வாதம் வந்து விடும். நெற்றிப் பொட்டில் அடித்தால் கோமாவுக்குப் போய் விடுவாய். நம்பிக்கை இல்லா விட்டால் செய்து காட்டட்டுமா?"

ப்யாரிலாலுக்கு அவனுடைய அமைதியான முகமும், சலனமே இல்லாமல் சொன்ன விதமும் பெரும் கிலியை ஏற்படுத்தியது. இவனால் எதுவும் முடியும் என்பதில் அவனுக்கு சந்தேகமே இல்லை. அனுபவித்துக் கொண்டிருந்த வலியுடன் கத்தினான். "வேண்டாம். வேண்டாம். உனக்கு என்ன வேண்டும்? அதைச் சொல்"

"யாரோ ஒரு தீவிரவாதி குண்டு வைத்ததாக ஒரு சிறுவனை சொல்லச் சொன்னாயே அந்த தீவிரவாதிக்கும் உனக்கும் எதாவது முன்பகை இருக்கிறதா?"

ப்யாரிலால் சொன்னான். "இல்லை."

"பின் ஏன் சொல்லச் சொன்னாய்"

அவன் சற்றுத் தயங்க அக்ஷய் தன் வலது கை விரல்களைக் கூராக்க ஆரம்பித்தான். ப்யாரிலால் அவசரமாகச் சொன்னான். "அப்படி சொல்லச் சொல்லி மேலிடத்து உத்தரவு."

"யாரந்த மேலிடம்"

"டிஐஜி கேசவதாஸ்"

"அந்த டிஐஜிக்கும் அவனுக்கும் ஏதாவது பகையா?"

"இல்லை....தெரியவில்லை.... அவருக்கு அவருக்கும் மேலே இருந்து வந்த உத்தரவு என்றார். சத்தியமாக அதற்கு மேல் ஒன்றும் எனக்குத் தெரியாது"

"சரி. நீ செய்தது சட்டப்படியான நியாயமான செயலா?"

"இல்லை"

"அப்படியானால் அது தண்டனைக்குரிய செயல் தான். இல்லையா?"

ப்யாரிலாலின் முகம் வெளிறியது. "தயவு செய்து எதுவும் செய்து விடாதே. உனக்கு பணம் வேண்டுமானால் தருகிறேன்"

"எவ்வளவு?"

"இருபதாயிரம் தருகிறேன்"

அக்ஷய் முகத்தில் புன்னகை வந்தது. "என் தீர்ப்பில் நீ ஐந்து லட்சமாவது தர வேண்டும்"

"அவ்வளவு என்னிடம் இல்லை"

"அப்படியானால் நீ தண்டனையை அனுபவித்தாக வேண்டும். துரதிர்ஷ்டசாலி நீ. சொல். பக்கவாதம் பரவாயில்லையா, கோமா பரவாயில்லையா?"

ப்யாரிலால் அவனை முழுவதும் நம்பினான். அவன் வெற்று வாய் சவடால் அடிப்பவன் அல்ல என்பது புரிந்தது. எந்த அடிக்கும் அவன் அதிகமாய் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் கச்சிதமாக செய்ய வேண்டியதை செய்ய முடிந்தவனாக அவன் இருந்தான். படுத்த படுக்கையாக இருந்து விட்டால் சேர்த்த செல்வமெல்லாம் என்ன சுகம் தர முடியும்?

"சரி கட்டவிழ்த்து விடு. தருகிறேன்"

"எங்கிருக்கிறது என்று சொல். நான் எடுத்துக் கொள்கிறேன்."

ப்யாரிலால் முதலில் தயங்கினான். கடைசியில் பணம் இருக்கும் பீரோவையும், சாவி வைத்திருக்கும் இடத்தையும் சொன்னான்.

அக்ஷய் தன் கைகளுக்கு உறையை மாட்டிக் கொண்டான். பீரோவைத் திறந்து பார்த்த போது பணக்கட்டுகளும், நகைகளும் கொட்டிக் கிடந்தன. எண்ணி ஐந்து லட்சம் பணத்தை மட்டுமே எடுத்துக் கொண்டு பீரோவைப் பூட்டி சாவியை எடுத்த இடத்திலேயே வைத்தான்.

ப்யாரிலாலின் அருகில் வந்த அக்ஷய் அவன் வயிற்றில் ஓங்கி ஒரு குத்து விட்டான். வலியில் உயிரே போவது போல இருந்தது. ப்யாரிலால் சுயநினைவை இழந்தான். சிறிது நேரம் கழித்து சுயநினைவு திரும்பிய போது அவன் கை கால் கட்டுகள் அவிழ்க்கப் பட்டு இருந்தன. ஆனால் வலி மட்டும் அப்படியே இருந்தது. நிறைய நேரம் அப்படியே படுத்திருந்த ப்யாரிலால் தன்னை இப்படியொரு நிலையில் மாட்டி விட்ட கேசவதாஸை மனதார சபித்தான்.

************

ஆனந்திற்கு இரவு உறக்கம் வரவில்லை. அவன் நினைவெல்லாம் தம்பியாகவே இருந்தான். ஆச்சார்யாவின் நண்பன் என்று சொல்லப்பட்ட அந்த நாக மச்சமுள்ள இளைஞன் தன் தம்பியாகவே இருப்பான் என்று தோன்ற ஆரம்பித்த பின் அவன் உயிருடன் இருப்பானா, இல்லையா என்ற சந்தேகம் அவன் மனதை அரித்துக் கொண்டே இருந்தது. எங்கிருந்தாலும் மகன் நன்றாய் இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்வதையே வாழ்க்கையின் முக்கியக் குறிக்கோளாக வைத்துக் கொண்டு வாழும் அம்மாவை நினைக்கையில் மனம் ரணமானது.

மூன்று வருடங்களுக்கு முன் ஞான திருஷ்டியில் பார்த்துச் சொன்ன அந்தச் சாதுவின் நினைவு வந்தது. அவர் அன்று 'எதிர்காலத்தில் அவன் உயிருக்கு ஆபத்து இருக்கிறது' என்று சொன்னது எவ்வளவு உண்மையாக இருக்கிறது என்று எண்ணிக் கொண்டான். திடீரென்று ஒரு யோசனை வர கடிகாரத்தைப் பார்த்தான். மணி பத்தரை. அம்மா தூங்கியிருக்க மாட்டாள். அம்மாவிற்குப் போன் செய்து நலம் விசாரித்து, அவள் கேள்விகளுக்கு சிறிது நேரம் பதில் சொல்லி விட்டு கேட்டான்.

"அம்மா மூன்று வருஷங்களுக்கு முன் உங்கள் தோழி ஒருத்தி ஒரு

சாதுவைப் பற்றி சொன்னாள் ஞாபகமிருக்கிறதா? நான் கூட தம்பியைப் பற்றிக் கேட்டேன். அந்த ஆள் இப்போது எங்கே இருக்கிறார்?"

"தெரியவில்லையே. அவளிடம் கேட்டால் தான் தெரியும். எதற்கு கேட்கிறாய்?"

"இங்கே ஒருவருக்கு அவரைப் பார்க்க வேண்டுமாம். அது தான் கேட்டேன்"

"சரி நான் காலையில் கேட்டுச் சொல்கிறேன்"

"மறக்காமல் கேளம்மா. நான் காலையில் போன் செய்கிறேன்"

போனை வைத்த ஆனந்த் மறுநாள் காலைக்காகக் காத்திருந்தான். இப்போது அவனுக்குத் தெரிந்த ஒரே வழி அந்த சாது தான்!

## 25

சஹானா வேலைக்கும், வருண் பள்ளிக்கும் சென்று விட்டார்கள். வீட்டில் அக்ஷயும், மரகதமும் மட்டுமே இருந்தார்கள். பக்கத்து வீட்டு பஞ்சாபிக்காரர் ஜெய்பால்சிங் வந்து அரைமணி நேரம்

அவனிடம் பேசிக் கொண்டிருந்தார். அவனைப் பற்றிய எல்லா விவரங்களையும் கேட்க அவன் சிறிதும் தயக்கமில்லாமல் உளறாமல் எல்லாவற்றிற்கும் பதில் சொன்னான். ஒரு உண்மை கூட சொல்லாமல், பொய் என்பதை அவர் அறியாதபடி சுவாரசியமாக அவன் சொன்ன விதம் மரகதத்தை வியக்க வைத்தது.

தான் இப்போது இருப்பது அலகாபாத்தில் என்றும் அங்கு ஒரு முஸ்லிம் பெண்ணைக் காதலிப்பதாகவும் இரு வீடுகளிலும் கடும் எதிர்ப்பு என்றும் ஆனால் ஒரு நாள் கண்டிப்பாகக் கல்யாணம் செய்து கொள்வோம் என்றும் உறுதிபடக் கூறினான். இந்தக் காதல் விவகாரத்தைக் கேட்டவுடன் ஜெய்பால்சிங் மற்ற அனாவசியக் கேள்விகளை விட்டு விட்டு காதலின் சரித்திரத்தைக் கேட்டார். முதலில் எங்கே எப்போது பார்த்தாய் என்று ஆரம்பித்து யார் முதலில் காதலைச் சொன்னார்கள் என்பது போன்ற கேள்விகள் கேட்டு இனி என்ன செய்வதாக உத்தேசம் என்று கேட்டு மனிதர் அவன் காதல் பற்றிய அனைத்து தகவல்களையும் சேகரித்து விட்டுப் போனார்.

போகும் போது மரகதத்திடம் சொன்னார். "அம்மா நீங்கள் உங்கள் தங்கைக்குப் புத்தி சொல்லுங்கள். காதலைப் பிரிப்பது மகா பாவம். மதம், சாதி எல்லாம் மனிதனாகக் கண்டுபிடித்தது. கடவுள் எல்லாருக்கும் ஒன்று தான். அக்ஷய் நல்ல பையன். பெற்றோர்

சம்மதத்துடன் தான் திருமணம் செய்ய வேண்டும் என்று நினைக்கிறான்......"

மரகதம் தலையாட்டினாள். அவர் போனவுடன் வாய் விட்டுச் சிரித்தாள். அவளுக்குத் தெரிந்து திருமணமான நாளில் இருந்து அவள் வாய் விட்டுச் சிரிப்பது அது தான் முதல் முறை.

அவனும் அவளுடன் சேர்ந்து சிரித்தான். மரகதம் முகத்தில் இருந்த இறுக்கம் குறைந்திருப்பதை உணர்ந்தான். அவள் தன் தந்தையிடமும், கணவனிடமும் பட்ட கஷ்டங்களை எல்லாம் சொன்னதில் இருந்து அவனுக்கு அவள் மீது நிறையவே இரக்கம் தோன்றி இருந்தது. அங்கு வந்ததில் இருந்து அவளைக் கவனித்து வருகிறான். அவள் ஒரு நிமிடம் சும்மா இருந்ததில்லை. ஏதாவது வேலை செய்து கொண்டே இருந்தவள் வேலை இல்லாத நேரங்களில் ஸ்தோத்திரம் படித்துக்கொண்டு இருந்தாள்.

அவள் கை விரல் காயம் இன்னும் ஆறாததைக் கவனித்த அக்ஷய் அவளிடம் சொன்னான். "இன்றைக்கு நீங்கள் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நான் சமையல் செய்கிறேன். என்ன செய்ய வேண்டும். எந்த அளவில் எதைப் போட வேண்டும் என்பதை மட்டும் சொல்லுங்கள். போதும்"

அவள் மறுத்த போது உரிமையுடன் அவளைப் பிடித்து சமையலறையில் இருந்த நாற்காலியில் உட்கார வைத்தான்.

"எனக்கும் பொழுது போக வேண்டும் பெரியம்மா. நீங்கள் என்னை வேறு ஆளாய் நினைக்க வேண்டாம். உங்கள் மகன் போல நினைத்துக் கொள்ளுங்கள்"

அவள் கண்களில் பெருகிய நீரைக் கஷ்டப்பட்டு மறைத்தாள். அவள் மகன் என்றுமே அவள் மீது அக்கறை கொண்டதில்லை.....

அவள் சொல்லச் சொல்ல அவன் சமைத்தான். அவளுக்கு சும்மா உட்கார்வது மிகவும் சிரமமாய் இருந்தது. அவள் சொன்னாள். "எனக்கு வேலை செய்வது சிரமமில்லை. சும்மா உட்கார்வது தான் கஷ்டம். வேலை செய்யும் போது மனதிற்கு வேலை இருக்காது. சும்மா இருந்தால் மனம் வேண்டாததைப் பற்றி எல்லாம் நினைக்க ஆரம்பிக்கும். எனக்கு நினைக்க நல்ல விஷயங்கள் எப்போதுமே இருந்ததில்லை"

அவனுக்குப் புரிந்தது. "வேலை இல்லாத போது ஏதாவது ஸ்தோத்திரம் படித்துக் கொண்டே இருக்கிறீர்களே. கடவுளிடம் என்ன கேட்பீர்கள்?"

"வேலை செய்ய முடிகிற வரையில் மட்டும் என்னை உயிரோடு வை கடவுளே. அது முடியாமல் போவதற்குள் என்னை கூட்டிக்கொண்டு போ என்று தான்."

அவன் அதற்கு மேல் அவளை எதுவும் கேட்கவில்லை. அவள் அவன் வேலை செய்யும் லாவகத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள். அவனுடைய எந்த ஒரு அசைவும் அனாவசியமானதாகவோ ஒரு நேர்த்தியில்லாததாகவோ இருக்கவில்லை. எடுத்த பொருளைக் கையொடு அந்தந்த இடத்தில் வைப்பதில் இருந்து அவனுடைய ஒவ்வொரு வேலையும் கச்சிதமாக இருந்தது. அதிகம் அலட்டிக் கொள்ளாமல், பதற்றமே இல்லாமல் வேகமாக எல்லாவற்றையும் செய்து முடித்தான். அவனிடம் கற்றுக் கொள்ள வேண்டியது நிறையவே இருக்கிறது என்று அவள் நினைத்தாள்.

அவளை உட்கார வைத்து அவனே பரிமாறினான். அவள் மறுத்த போது சொன்னான். "இன்றைக்கு ஒரே நாள்..."

அவள் முதல் கவளத்தை வாயில் வைத்த போது அவள் கண்கள் கலங்கின.

அவன் கரிசனத்தோடு கேட்டான். "என்ன பெரியம்மா காரம் அதிகமாய் விட்டதா?"

அவள் பேசினால் அழுது விடுவோமோ என்று பயந்து தலையை மட்டும் இல்லை என்று அசைத்தாள். அவன் யார் என்ன என்று தெரியா விட்டாலும் ஒன்று மட்டும் அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. "இவனைப் பெற்றவள் பாக்கியசாலி."

*********

"ஹலோ" என்றார் மஹாவீர் செயின்.

டிவியிலும், பத்திரிக்கைகளிலும் காட்டியிருந்த தீவிரவாதியைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்தால் தெரிவிக்கச் சொல்லி தனக்கு மிகவும் நெருக்கமான, அந்த குறிப்பிட்ட துறை போலீஸ் அதிகாரி ஒருவரிடம் மஹாவீர் ஜெயின் முன்பே போன் செய்திருந்ததற்கு அந்த அதிகாரி திரும்ப செய்த போன் கால் தான் அது.

"சார். அந்தத் தீவிரவாதியை நேரில் ஒரு பெண்ணுடன் பார்த்ததாக யாரோ போன் செய்திருந்தார்கள். ஆனால் போன் செய்த அந்த ஆளை ரகசியமாக விசாரித்திருக்கிறார்கள். டிபார்ட்மெண்டுக்குள்ளேயே பல பேருக்கு அந்த விவரம் தெரிவிக்கவில்லை. சம்பந்தப்பட்ட விசாரணை ஆள்களுக்கே

தெரியாமல் மூடு மந்திரமாக ஏதோ நடக்கிறது. அந்த ஆள் என்ன சொன்னான், மேற்கொண்டு என்ன செய்யப் போகிறார்கள் என்பது தெரியவில்லை..."

எல்லாத் துறைகளிலும் மிக மிக ரகசியமான சில தகவல்கள் வெளியே கசிந்தால் விசாரணை தடைப்பட்டுப் போகும் என்பதால் இப்படி மூடி மறைப்பது உண்டு என்பதால் ஜெயின் அதைப் பற்றிப் பெரிதாக நினைக்கவில்லை. ஆனால் போன் செய்த அதிகாரியும் அதை அறியாதவர் அல்ல என்பதால் கேட்டார். "சில சமயங்களில் நாம் எல்லோருமே அப்படி செய்கிறோமே, இதில் என்ன ஆச்சரியம்?"

"இதில் மேல் மட்ட அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதி யாருக்கோ ஆர்வம் இருக்கிறது என்றும் அவர் உத்தரவுப்படிதான் எல்லாமே நடக்கிறது என்றும் நம்பத் தகுந்த வட்டாரத்தில் இருந்து எனக்குத் தகவல் கிடைத்தது. வெடிகுண்டு விசாரணைகளில் அரசியல்வாதிகள் பின்னால் இருந்து காய் நகர்த்துவது நாம் அதிகம் பார்க்காதது...."

ஜெயினுக்கும் அது ஆச்சரியமாகத் தான் இருந்தது. "யார் அந்த அரசியல்வாதி என்று தெரிந்ததா?"

"அது பரம ரகசியமாக இருக்கிறது"

"நன்றி. வேறு ஏதாவது புதிய தகவல்கள் கிடைத்தால் கண்டிப்பாகச் சொல்லுங்கள். நான் இதில் ஆர்வம் காட்டுவது யாருக்கும் தெரிய வேண்டாம்"

*******

அதே நேரத்தில் சிபிஐ மனிதன் அந்த அரசியல்வாதிக்குப் போன் செய்தான்.

"ஹலோ சொல்லுங்கள்" - மறுபக்கத்தில் குரல் களைப்பாகக் ஒலித்தது.

"சார். ஏதாவது புதிய தகவல் கிடைத்ததா?"

"இல்லை. அந்தத் தாடிக்காரன் ஒரு நாளைக்கு நாலு தடவை போன் செய்கிறான். அந்த அமானுஷ்யனைக் கண்டு பிடித்து விட்டீர்களா என்று கேட்டுக் கொண்டே இருக்கிறான். நீங்கள் ஏதாவது கண்டு பிடித்தீர்களா..."

சிபிஐ மனிதன் சொன்னான். "அந்தப் பெண்ணைப் பற்றிய தகவல்கள் எதுவும் கண்டுபிடிக்க முடியவில்லை. அது வேலைக்குப் போகிற பெண்ணாய்த்தான் இருக்க வேண்டும். ஆனால் டெல்லியில் தேடுவது அவ்வளவு சுலபமாயில்லை. ஆனால் இன்னொரு முக்கிய தகவல் இருக்கிறது. அமானுஷ்யனை அடையாளம் கண்டு சொன்னதாய் ஒரு பையனை விளம்பரப்படுத்தினோமே அவனும் அவன் குடும்பமும் எங்கே போனார்கள் என்று தெரியவில்லை. நேற்று இரவோடு இரவாக எங்கேயோ போய் விட்டார்கள். அவர்கள் எங்கே போனார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை....."

"என்ன ஆயிருக்கும்?"

சிபிஐ மனிதன் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் அடுத்த தகவலைச் சொன்னான். "அந்த இன்ஸ்பெக்டர் ப்யாரிலால் இன்றைக்கு வேலைக்கு வரவில்லையாம். போய்ப் பார்த்த ஏட்டு அந்த ஆள் எதோ பேயைப் பார்த்த மாதிரி இருப்பதாய் சொல்கிறான்"

மறுபக்கம் தாழ்ந்த குரலில் சொன்னது. "அமானுஷ்யன்..?"

"அப்படித் தான் தோன்றுகிறது. இன்னும் ப்யாரிலால் அந்தப் பையன் போல் தலைமறைவு ஆகவில்லை. அதற்கு முன் அவனைப்

பார்த்து நாம் பேசுவது நல்லது...."

"நாம் நேரடியாக ஈடுபட வேண்டாம் என்று நினைக்கிறேன். நீங்களும் அப்படித் தான் சொன்னதாய் ஞாபகம். வேண்டுமென்றால் தகுந்த ஆட்களை நீங்களே அனுப்புங்கள்"

"அமானுஷ்யனைப் ப்யாரிலால் நேரில் பார்த்திருக்கிறான் என்றால் ப்யாரிலாலிடம் நாம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. சில விஷயங்களுக்கு நாம் நேரில் போவது போல் அடுத்தவரை அனுப்பினால் ஆகாது....அதே நேரத்தில் நாம் யார் என்பதைப் ப்யாரிலால் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை"

"அதெப்படி?"

சிபிஐ மனிதன் என்ன செய்ய வேண்டுமென்பதை விளக்கினான்.

மறுபக்கம் திருப்தியுடன் சொன்னது. "சரி அப்படியே செய்கிறேன்"

"இன்னொரு விஷயம்"

"என்னது?"

"டிஐஜி கேசவதாசை ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லுங்கள். பாதுகாப்பை அதிகப்படுத்திக் கொள்ளச் சொல்லுங்கள்"

"அவனிடம் ப்யாரிலால் அவர் பற்றி சொல்லி இருப்பான் என்று நினைக்கிறீர்களா?"

"ப்யாரிலாலும் மனிதன் தானே'

"கடவுளே...."

## 26

அந்தச் செய்தித்தாளில் பார்த்த புகைப்படம் அக்‌ஷயிற்கு நல்ல பரிச்சயமான முகம். ஆனால் அந்தப் புகைப்படம் அவனுக்கு வேறெந்த நினைவையும் ஏற்படுத்தவில்லை. அந்தப் புகைப்படத்துடன் வந்த செய்தியை அவன் ஆர்வமாகப் படிக்க ஆரம்பித்தான். அந்த மனிதர் பெயர் ஆச்சார்யா என்றும், அவர் சிபிஐயின் அடிஷனல் டைரக்டர் என்றும் அவர் சில தினங்களுக்கு முன் கொல்லப்பட்டதாகவும் அவரைக் கொன்ற கொலையாளியிடம் தற்போது விசாரணை நடந்து வருவதாகவும் எழுதியிருந்தது.

அவரைக் கொன்ற தேதிக்கு மறுநாள் தான் அவனையும் யாரோ கொல்ல முயற்சி செய்திருக்கிறார்கள். அவனுக்கு நன்றாகப் பரிச்சயம் உள்ள நபராக அவர் இருப்பதால், அவரைக் கொன்றதையும் அவனைக் கொல்ல முயற்சி செய்ததையும் சேர்த்துப் பார்க்கும் போது அவரைக் கொன்றவர்களே தான் அவனையும் கொல்ல முயற்சி செய்கிறார்கள் என்று தோன்றியது. அவன் அந்த செய்தியுடன் கொலைகாரன் என்று போட்டிருந்த இன்னொரு புகைப்படத்தைக் கூர்ந்து பார்த்தான். பெயர் கிஸான்சந்த் என்று இருந்தது. அந்த முகம் அவனுக்கு அன்னியமானதாக இருந்தது. ஆச்சார்யாவைக் கொன்றவனைப் பிடித்து விட்டார்கள் என்றால் இப்போது அவனைக் கொல்லத் துடிப்பவர்கள் யார்?

அந்தப் புகைப்படத்தையே கூர்ந்து பார்த்தான். அந்தக் கண்களில் உயிர் இல்லை. கிஸான்சந்த் ஏதோ வியாதியால் பலமாக பாதிக்கப்பட்டவன் போலத் தெரிந்தான்.....

"எதை அவ்வளவு சுவாரசியமாகப் பார்க்கிறீர்கள்?" - சஹானாவின் குரல் கேட்டது.

அக்‌ஷய் நிமிர்ந்தான். சஹானா அவனுக்கு எதிரில் நின்றிருந்தாள். சாதாரண உடைகளிலும் மிக அழகாகத் தோன்றும் இவள் வழக்கம்

போல் வேண்டுமென்றே தன் அழகைக் குறைத்துக் காண்பிக்க முயற்சி செய்தும் தோற்றுப் போயிருப்பதை அவன் உணர்ந்தான். கணவன் இறந்த பின் அழகாகத் தெரியக் கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டு நடந்து கொள்வது போலத் தோன்றியது. எனவே ஆரம்பத்தில் அவன் கவனிக்கத் தவறிய அழகை அவன் பின்னர் தான் உணர ஆரம்பித்தான். இப்போது கூட ஒரு மங்கிப் போன சுடிதாரை உடுத்திக் கொண்டிருந்தாலும் அவள் தேவதை போலத் தான் தெரிந்தாள்.

"ஹலோ பழையபடி நீங்கள் உங்களை மறந்து விடவில்லையே" அவள் விளையாட்டாகக் கேட்டதும் அவன் சிரித்தான்.

"இல்லை.... இந்தப் பத்திரிகையில் இருக்கும் இந்த மனிதர் எனக்கு நன்றாகப் பரிச்சயமானவர் போல இருக்கிறது. அதனால் தான் பார்த்துக் கொண்டிருந்தேன்"

அவள் அவன் எதிரில் அமர்ந்து அந்த செய்தித்தாளை வாங்கி அவன் காட்டிய புகைப்படத்தைப் பார்த்தாள். "இவர் ஆச்சார்யா. சில நாட்களுக்கு முன் கொல்லப்பட்ட சிபிஐ அடிஷனல் டைரக்டர். இவர் போட்டோவைப் பார்த்த பிறகு வேறெதாவது உங்களுக்கு நினைவுக்கு வருகிறதா?"

அவள் ஆர்வத்தோடு கேட்க அவன் முகம் வாட இல்லையென்று தலையசைத்தான். அவன் முகவாட்டம் எல்லாம் ஒரு கணம் தான். மறுகணம் அது ஒரு பெரிய விஷயமல்ல என்பது போல் முகம் பழைய நிலைக்குத் திரும்பியது. சற்று முன் அவளைப் பார்த்தவுடன் கூட அவன் பார்வையில் தெரிந்த இனம்புரியாத உணர்ச்சி என்ன என்று அவள் கண்டுபிடிப்பதற்குள் அவன் முகம் மாறி விட்டிருந்தது. அவன் என்ன நினைக்கிறான் என்பதைக் கண்டுபிடிப்பது கஷ்டம் என்று தோன்றியது.

"நான் இவர் பற்றி பத்திரிகைகளில் வந்த செய்திகளை எல்லாம் சேர்த்து எடுத்துத் தர என் நண்பன் மதுவிடம் சொல்கிறேன். அதைப் படித்துப் பாருங்கள். பின் வேறு ஏதாவது நினைவுக்கு வருகிறதா என்று பார்ப்போம்... இன்றைக்கு இரவு மது வருவான். அவன் மிகவும் நல்லவன். அவனிடம் உங்களைப் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். அவன் மூலம் உங்களைப் பற்றிய தகவல் எதுவும் வெளியே போகாது. அதை நீங்கள் உறுதியாக நம்பலாம்....."

அவள் சொல்லி விட்டு அவன் ஏதாவது மறுப்புத் தெரிவிக்கிறானா என்று அவனைக் கூர்ந்து பார்த்தாள். அவன் ஒன்றும் சொல்லாமல் அவளையே அமைதியாகப் பார்த்தான். தன் மனதில் உள்ள எதையும் வெளிப்படுத்தாமல் இருக்கும் இவனை மதுவிற்குப் பிடிக்காது என்று

அவளுக்குத் தோன்றியது.

"உங்களுக்கு நம்பிக்கையில்லாவிட்டால் அவனை வர வேண்டாம் என்று சொல்கிறேன்"

"அவர் வரட்டும். நீங்கள் நம்புகிற ஆளை நானும் நம்புகிறேன்"

*********

அம்மாவின் போன் வரும் வரை ஆனந்திற்கு இருப்பு கொள்ளவில்லை. காலையில் அவள் போன் செய்தபோது பரபரப்புடன் உடனே எடுத்தான்.

"சொல்லும்மா"

"ஆனந்த் அவர் இப்போது ஹரித்வாரில் இருக்கிறாராம். அங்கே சங்கர மடத்தில் இருக்கிறாராம். அடுத்த வாரம் நேபாளத்திற்குப் போகிறாராம்"

"சரிம்மா. நான் என்னிடம் கேட்டவரிடம் சொல்லி விடுகிறேன்"

"ஆனந்த்"

"சொல்லும்மா"

"அவரைப் பார்க்க யார் போனாலும் அவன் இப்போது எங்கே, எப்படி இருக்கிறான்னு கேட்கச் சொல்லுடா"

அவனுக்குத் தொண்டையை அடைத்தது. சமாளித்துக் கொண்டு சொன்னான். "சொல்றேன்ம்மா"

"அவர் என்ன சொல்றார்னு கேட்டு எனக்கு மறக்காமல் போன் செய்"

"சரிம்மா"

அவன் அவசரமாக ஹரித்வாரிற்குக் கிளம்பினான்.

**********

ஹரித்வாரில் சங்கரமடத்திற்கு ஆனந்த் போனபோது அந்தச் சாது அங்கு இருக்கவில்லை. ஹரித்வாரிலேயே இருக்கும் மானசதேவி கோயிலில் தியானம் செய்வதற்காகப் போயிருக்கிறார் என்றார்கள். ஆனந்த் மானசதேவி கோயிலிற்குப் போனான். கோயிலில்

அதிகமாய் கூட்டம் இல்லை. கோயிலின் வெளிப்பகுதியில் ஒரு ஓரமாக அமர்ந்து கண்களை மூடிக் கொண்டு தியானம் செய்து கொண்டிருந்த அவர் அருகில் சென்று நின்றான். பத்து நிமிடம் கழித்துக் கண்களைத் திறந்தவர் "என்ன?" என்று கேட்டார்.

தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட ஆனந்த் மூன்று வருடங்களுக்கு முன்னால் அவரை சந்தித்துத் தன் காணாமல் போன தம்பி பற்றிக் கேட்டதை நினைவுபடுத்தினான். அவருக்கு நினைவிருந்ததாகத் தெரியவில்லை.

"சரி இப்போது என்ன வேண்டும்?"

"தம்பியைப் பற்றி இப்போதைய தகவல் ஏதாவது....."

தனக்கு எதிரில் அவனை அமரச் சைகை காட்டிய அவர் கண்களை மூடி தியானத்தில் ஆழ்ந்தார். சுமார் எட்டு நிமிடங்கள் கழித்து கண்களைத் திறக்காமல் சொன்னார். "நீ சந்தேகப்படுகிற மாதிரி உன் தம்பி இன்னும் சாகவில்லை. உயிரோடு தான் இருக்கிறான்...."

தன் சந்தேகத்தை அவர் சரியாகச் சொன்னதில் ஆனந்திற்குத் தூக்கிவாரிப் போட்டது. அதே சமயம் அவன் உயிரோடு இருக்கிறான் என்ற தகவல் வயிற்றில் பாலை வார்த்தது.

அவர் தொடர்ந்தார். ".....அவன் வீட்டுக்குள்ளே இருக்கிறான். அவன் மடியில் ஒரு பையன் உட்கார்ந்திருக்கிறான். எதிரில் ஒரு பெண் உட்கார்ந்திருக்கிறாள். சிறிது தள்ளி ஒரு வயதான அம்மாள் நின்றிருக்கிறாள்....."

தன் தம்பிக்குத் திருமணம் ஆகிவிட்டதோ என்ற சந்தேகம் ஆனந்திற்கு வந்தது.

"அவன் இருக்கும் இடம் எங்கே என்று சொல்ல முடியுமா?"

அவர் தெரியவில்லை என்பது போல் கண்களை மூடியபடியே தலையசைத்தார். சிறிது நேர மௌனத்திற்குப் பின் அவர் தொடர்ந்தார். "அவனை நிறைய ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது......."

சற்று முன் கிடைத்த நிம்மதி இப்போது காணாமல் போனது. ஆனந்த் அவரையே கவலையோடு பார்த்தான். அவர் கண்களை மூடிக் கொண்டிருந்தாலும் அவர் ஏதோ காட்சியை உள்ளுக்குள்ளே பார்த்துக் கொண்டிருந்தார் என்று ஆனந்திற்குத் தோன்றியது. ஆனால் அவர் ஒன்றும் சொல்லவில்லை. கண்களைத் திறந்தவர் சரி நீ போகலாம் என்பது போல் தலையசைத்தார்.

"நீங்கள் ஏதோ பார்த்தது போல் தெரிந்தது. ஆனால் எதுவும் சொல்லவில்லையே"

"எதிர்காலத்தில் நடப்பது எல்லாமே தெரிந்து கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை.. பல சமயங்களில் அப்படித் தெரிந்து கொள்வது மிகப் பெரிய பாரம். அது தேவையில்லை..."

அவனுக்கு அதைத் தெரிந்து கொள்ளாவிட்டால் மண்டை வெடித்து விடும் போலத் தோன்றியது. "என்னவாக இருந்தாலும் பரவாயில்லை சொல்லுங்கள்"

அவனையே கூர்ந்து பார்த்தவர் சிறிது நேரம் பேசாமலிருந்தார். அவன் மறுபடியும் சொல்லச் சொன்னான்.

அவர் சொன்னார். "உன் தம்பி ரத்த வெள்ளத்தில் விழுந்து கிடப்பதைப் பார்த்தேன்."

அவன் முகம் வெளுத்தது. அவரைப் பரிதாபமாகப் பார்த்தான். அவரை வற்புறுத்திக் கேட்டிருக்க வேண்டாம் என்று தோன்றியது. அம்மா நினைவு வரக் கண்களில் நீர் நிறைந்தது.

அவனையே பார்த்துக் கொண்டிருந்த சாது அமைதியாகச் சொன்னார். "ஒரு காட்சி முழு உண்மையையும் சொல்லி விடுவதில்லை. எல்லாவற்றையும் நடத்தும் இறைவன் இருக்கிறான். அவனை நம்பு. பிரார்த்தனை செய். இந்த மானசதேவி மனதாரச் செய்யும் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவதற்குப் பெயர் போனவள்"

ஆனந்த் தலையசைத்தான். பின் தன்னை சுதாரித்துக் கொண்டு கேட்டான். "உங்களுக்குத் தெரிந்த காட்சி ஏதாவது இதுவரை பொய்யாகி இருக்கிறதா?"

இரக்கத்துடன் அவனைப் பார்த்தபடி அவர் சொன்னார். "இல்லை"

27

மது சஹானா வீட்டில் நுழைந்த போது ஹாலில் அந்தப் புதிய மனிதன் இருக்கவில்லை. "எங்கே அந்த ஆள்?" என்று சைகையால் அவன் சஹானாவிடம் கேட்டான்.

சஹானா அக்‌ஷய் இருந்த அறையைக் காட்டினாள்.

"வருண் எங்கே?"

"அவன் நண்பனின் பிறந்த நாள் என்று போயிருக்கிறான். இல்லாவிட்டால் எந்நேரமும் அக்ஷய் கூடத்தான் இருப்பான்."

மரகதம் சமையலறையில் இருந்து எட்டிப் பார்த்துவிட்டு மறுபடித் தன் வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள். சஹானாவின் திருமணத்திற்குப் பிறகு அவன் பல முறை அந்த வீட்டுக்கு வந்திருக்கிறான். ஆனால் என்றுமே மரகதம் அவனிடம் ஓரிரு வார்த்தைக்கு மேல் பேசியதில்லை. அவனைப் பார்த்து புன்னகைத்தது கூட இல்லை. அவனிடம் என்று இல்லை எல்லோரிடமும் அப்படித்தான் என்று சஹானா அவனிடம் சொல்லி சமாதானப்படுத்தி இருக்கிறாள். ஆனால் அப்படிப்பட்டவள் அந்தப் புதிய மனிதனிடம் பாசத்துடன் பழகுகிறாள் என்பதைக் கேள்விப்பட்ட போது மதுவிற்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது.

அந்தப் புதிய மனிதன் சஹானாவின் வீட்டில் தனியறை ஒன்றில் வீட்டில் ஒருவர் போல் செட்டிலாகி விட்டதையும் அவனால் ரசிக்க முடியவில்லை. இத்தனை காலம் அவளுடன் பழகியும் தனக்குக் கிடைக்காத ஒரு சலுகை அவனுக்கு அந்த வீட்டில் கிடைத்ததை ஜீரணிக்க அவனுக்குக் கஷ்டமாக இருந்தது.

சஹானாவைத் தொடர்ந்து அந்த அறையை அடைந்த மது அங்கு அவனை அந்த நிலையில் காண்போம் என்று கனவிலும் நினைத்திருக்கவில்லை. சஹானாவும் திகைத்துத்தான் போனாள். அறையின் நடுவில் அவன் பத்மாசனத்தில் அமர்ந்து தியானத்தில் இருந்தான். உட்கார்ந்திருந்த விதம் அவனுக்கு இயல்பானது போல சிறிதும் இறுக்கமோ, கஷ்டமோ தெரியாமல் இருந்தது. அவன் முகத்தில் பேரமைதி தெரிந்தது. அவன் அவள் வீட்டில் இல்லாமல் ஒரு மடத்திலோ, மலையிலோ இருந்திருந்தால் மது அவனை ஒரு சாமியாராகத்தான் நினைத்திருப்பான். விழுந்து கும்பிட்டு கூட இருக்கலாம். ஆனால் சஹானா வீட்டில் அவனை அப்படிப் பார்ப்பதில் ஏதோ போலித்தனம்தான் தெரிந்தது.

அவன் உடலில் தேவையில்லாத சதை என்று எதுவும் இல்லாததை மது கவனித்தான். நன்றாக உடற்பயிற்சி செய்பவனாக இருப்பான் என்று நினைத்துக் கொண்டான். தன்னை ஒரு கணம் பார்த்துக் கொண்டான். லேசாக தொப்பை வர ஆரம்பித்திருந்தது. 'இந்த பாழாய் போன வேலையில் உடற்பயிற்சி செய்ய எங்கே நேரம்?'. மது அவனை மறுபடியும் கூர்ந்து கவனித்தான். அவன் தன்னை விட அழகில் குறைவு தான் என்று தோன்ற மனதில் ஒரு அற்ப சந்தோஷம் வந்து போனது.

அவனை எழுப்பலாமா வேண்டாமா என்று இருவரும் யோசித்துக்

கொணடிருந்த போது அவன் கண்களைத் திறக்காமல் தெளிவான குரலில் சொன்னான். "01126734678"

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அவன் மெள்ள கண்களைத் திறந்தான். மறுபடியும் அதே எண்களைச் சொன்னான். அவர்களைப் பார்த்தும் எந்த உணர்ச்சியும் முகத்தில் காட்டாமல் எழுந்து மேசையில் வைத்திருந்த ஒரு பென்சிலை எடுத்து அருகில் இருந்த காகிதத்தில் அந்த எண்களை எழுதினான். பின் அவர்களைப் பார்த்து புன்னகைத்தான். அடுத்த கணமே அவன் மிக அழகானவனாக மாறிப் போனான். மதுவுக்கு மீண்டும் பொறாமை வந்து போனது.

"நீங்கள் தான் மது என்று நினைக்கிறேன்...." அருகில் வந்து அவன் கை குலுக்கிய போது மது அவன் கைகளின் உறுதியை உணர்ந்தான்.

"ஹலோ" - மதுவின் குரல் வேண்டா வெறுப்பாய் வெளி வந்தது.

சஹானா கேட்டாள். "அந்தக் காகிதத்தில் என்ன எழுதினீர்கள்?"

"ஆச்சார்யா பற்றி யோசித்துக் கொண்டே இருந்து விட்டுத் தியானம்

செய்ய ஆரம்பித்தேன். அப்போது இந்த நம்பர் மனதில் கிடைத்தது" அக்‌ஷய் சொன்னான்.

அந்தக் காகிதத்தை எடுத்துப் பார்த்த மது "இது ஏதோ போன் நமபர் போல தெரிகிறது" என்றான்.

சஹானாவும் அந்த எண்ணைப் பார்த்தாள். "011 டெல்லியின் எஸ்.டி.டி கோட். மீதி இருப்பது போன் நம்பர்...."

பரபரப்புடன் போனை எடுத்தான் மது. அந்த எண்களை அழுத்தினான். "இந்த எண் உபயோகத்தில் இல்லை" என்ற தகவல் வந்தது.

"எதற்கும் இந்த நம்பரை நான் நாளைக்கு விசாரிக்கிறேன்" என்ற மது அந்தக் காகிதத்தை மடித்து பேண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டான். பின் "மிஸ்டர்....." என்று ஆரம்பித்தான்.

"அக்‌ஷய். இப்போதைக்கு அது தான் எனக்குப் பெயர்" அக்‌ஷய் சொன்னான்.

"அக்‌ஷய் நாம் இருவரும் வெளியே போய் பேசலாமா?"

அக்ஷய் சரியென்று தலையசைக்க சஹானா ஒருவித தர்மசங்கடத்துடன் இருவரையும் பார்த்தாள். இருவருக்கும் ஒத்துப் போகப் போவதில்லை என்ற உள்ளுணர்வு அவளுக்கு முன்பே ஏற்பட்டிருந்ததால் அவர்கள் தனியாகச் செல்வது அவளுக்கு நெருடலாக இருந்தது. ஆனால் அவள் எதுவும் சொல்வதற்கு முன்பே இருவரும் வெளியே செல்லத் தயாராகி விட்டார்கள்.

வெளியே வந்தவர்கள் தெருவில் நடக்க ஆரம்பித்தார்கள். சந்தடி குறைந்த பகுதிக்கு வரும் வரை இருவரும் எதுவும் பேசவில்லை. பிறகு மது சொன்னான். "அக்ஷய். கிட்டத்தட்ட நாம் இருவரும் ஒரே வயதினராக இருப்பதால் ஒருமையில் பேசுவதில் தவறில்லை என்று நினைக்கிறேன். உன்னை எனக்குப் பிடிக்கவில்லை"

அக்ஷய் அவனை லேசான புன்னகையுடன் பார்த்தான். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை.

"சஹானா உன்னை நம்பும் அளவுக்கு நான் உன்னை நம்பவுமில்லை. ஏதோ கதையில் வருகிற மாதிரிதான் உன் ஞாபக மறதியும் எனக்குத் தோன்றுகிறது"

அக்ஷய் அமைதியாகச் சொன்னான். "மது நீ வெளிப்படையாகப் பேசுவது எனக்குப் பிடித்து இருக்கிறது"

தெருவோரப் பூங்கா ஒன்றின் வெளியே போட்டிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்த மது அவனையும் அருகில் உட்காரக் கை காண்பித்தான். மதுவுக்கு அவன் பிடித்திருக்கிறது என்று சொன்னது ஏனோ ஒருவித எரிச்சலைக் கிளப்பியது. அதை வெளியே காண்பிக்காமல் இருக்க முயன்றபடி மது அவனிடம் கேட்டான்.

"சஹானாவைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?"

"மிகவும் நல்ல பெண்....."

"ஆனால் வாழ்க்கையில் அவள் நிறையவே அடிபட்டவள். அந்த நல்ல மனதுக்கு இது வரை எந்த நல்லதும் நடந்ததில்லை. சின்ன வயதில் அம்மாவை இழந்தாள். கல்யாணம் ஆனவுடன் அப்பாவை இழந்தாள். பிறந்த வீட்டில் இருக்கும் ஒரே உறவான அண்ணன் ஒரு ஜப்பான் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு அமெரிக்காவில் செட்டில் ஆகி விட்டான். அவன் இவள் கல்யாணத்திற்குப் பிறகு ஒரே தடவை தான் போன் செய்து பேசியிருக்கிறான். "என்னால் ஏதாவது உதவி வேண்டுமென்றால் கேள்" என்றான். உதவி எதுவும் தேவையில்லை என்ற பின் போன் செய்வதும் இல்லை....."

சொல்லச் சொல்ல மதுவின் முகத்தில் தெரிந்த கோபத்தை அக்ஷய் கூர்மையாகக் கவனித்தான். தெருவில் நடந்து போகும் ஒரு ஜோடி அவனைப் பார்த்துக் கொண்டே போனதையும் கூட அவன் கவனிக்கவில்லை.

அவன் தொடர்ந்தான். "....அவளுடைய கல்யாணம் ஒரு பெரிய நரகத்தில் அவளைத் தள்ளி விட்டது. அவள் கணவன் பார்க்க சுமாராய் இருப்பான். நல்ல படிப்பு, கை நிறைய சம்பளம், என்று எல்லாம் இருந்தாலும் அவன் நல்ல கணவனாய் இருக்கவில்லை. அவன் சந்தேகப்பிராணியாய் இருந்தான். அவள் எந்த ஆணிடம் பேசினாலும் சந்தேகப்பட்டான். தெருவில் போகும்போது அவளை யாராவது ஒரு ஆண் பார்த்துக் கொண்டே போனால் போதும். வீட்டிற்குப் போனவுடன் வார்த்தைகளாலே அடிப்பான். பல பேர் பார்ப்பதற்காகத் தான் அவள் நன்றாக டிரஸ் செய்வதாய் சொல்வான். அவள் நன்றாக டிரஸ் செய்வதையே விட்டு விட்டாள். ஆனாலும் சில பேர் பார்த்தார்கள். அதற்கும் அவன் அவளை ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பான். அவள் வேலைக்குப் போவதும் அவனுக்குப் பிடிக்கவில்லை. கல்யாணத்திற்கு முன்பிருந்தே இருந்த வேலையை மட்டும் விட அவள் தயாராக இருக்கவில்லை. அதற்கு அவனிடம் அவள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. நரக வாழ்க்கைதான் வாழ்ந்தாள். அவன் அந்த விபத்தில் அடிபட்ட பின் மூன்று நாள் ஆஸ்பத்திரியில் இருந்தான். அவன்

கடைசியாக அவளிடம் சொன்னது என்ன தெரியுமா?"

அக்ஷய் அவனையே பார்த்தான். மது பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னான். "நான் செத்த அடுத்த நாளே யார் கூடவாவது படுக்கப் போய் விடாதே. என் மகனை நன்றாக வளர்க்கப் பார்" என்று சொன்னான் அந்த....."
அவன் வாயிலிருந்து கெட்ட வார்த்தை ஆக்ரோஷமாய் வந்தது.

அகஷயிற்கு சஹானாவை நினைக்கையில் பாவமாக இருந்தது. அவள் ஏனொ தானோவென்று உடை உடுத்துவதன் காரணம் இப்போது தான் அவனுக்குப் புரிந்தது.

மது தொடர்ந்தான். "....அவன் செத்தது எவ்வளவு நிம்மதியை எனக்குத் தந்தது என்று என்னால் சொல்ல முடியாது அக்ஷய். ஒன்றாம் வகுப்பில் இருந்தே அவள் கூடப் படித்தவன் நான். இத்தனை வருடங்கள் பழகிய நான் அவளைப் போல அவ்வளவு நல்ல ஒரு பெண்ணைப் பார்த்ததில்லை. அவள் கஷ்டப்பட்டால் என்னால் தாங்க முடியாது. இப்போது உன்னால் அவளுக்கு ஆபத்து வரும் என்று நினைக்கையில் எனக்குத் தாங்க முடியவில்லை"

அக்ஷய் அமைதியாக மதுவிடம் கேட்டான். "நீ ஏன் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. அவளை இவ்வளவு தூரம்

நேசிக்கிறாய். நீ அவளுக்கு நல்ல கணவனாக இருந்திருப்பாய்"

மதுவுக்கு அந்தக் கேள்வி தூக்கிவாரிப் போட்டது. ஒரு நிமிடம் ஒன்றும் சொல்லவில்லை. பின் மெல்ல சொன்னான். "அவள் அப்பா தங்கள் ஜாதியிலேயே அவளுக்குக் கல்யாணம் செய்து தர வேண்டும் என்றிருந்தார். அப்புறம் நானும் அவளும் நல்ல நண்பர்கள் தான்....."

"நீ அவளைக் காதலித்திருக்கிறாய் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது"

எரிச்சலுடன் மது அவனைப் பார்த்தான். ஆனால் அக்ஷயின் அமைதியான பார்வை அவனைப் பலவீனமாக ஒத்துக்கொள்ள வைத்தது. "அவள் என்னை நல்ல நண்பனாகத்தான் என்றுமே பார்த்தாள். அதனால் நான் அவளிடம் அதைச் சொல்லி நட்பை இழக்க விரும்பவில்லை.. நண்பனாக இருக்கவே தீர்மானித்தேன். ஒருவிதத்தில் பார்த்தால் காதலை விடவும் நட்பு உயர்ந்தது இல்லையா?"

அக்ஷய் தலையசைத்தான். சிறிது நேரம் இருவரும் பேசவில்லை. பிறகு அக்ஷய் கேட்டான். "உங்கள் நட்பை சஹானாவின் கணவன் சந்தேகப்படவில்லையா?"

"தெருவில் போகிறவனையே சந்தேகப்படுகிறவன் என்னைச் சந்தேகப்படாமல் இருப்பானா? கூடவே வேலை பார்க்கிறேன், சிறு வயதிலேயிருந்தே நண்பன் என்றெல்லாம் ஆன பிறகு முதல் சந்தேகமே என் மேல் தான். அவன் சந்தேகத்தைப் போக்கவே நான் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டேன். அப்படியும் அவன் சந்தேகம் போகவில்லை. ஆனால் சஹானா அதை சட்டை செய்யவில்லை. என்னிடம் பேசாமலோ, பழகாமலோ இருந்ததில்லை......"

"உன் மனைவி சந்தேகப்படவில்லையா?"

"எல்லாம் சொல்லித்தான் அவளைக் கல்யாணம் செய்து கொண்டேன். அவள் மிகவும் நல்ல பெண். சஹானாவுக்கும் அவள் நல்ல தோழி. இப்போது பிரசவத்திற்குப் போயிருக்கிறாள்....."

அக்‌ஷய் ஆத்மார்த்தமாய் சொன்னான். "மது உன்னை எனக்கு மிகவும் பிடித்து இருக்கிறது, நீ மிக நல்லவன்"

மது அவனையே வெறித்துப் பார்த்தான். இப்படிப்பட்டவனை வெறுக்கவும் அவனுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனாலும் அவனை ஏற்றுக் கொள்ள மதுவால் முடியவில்லை.

# 28

"உடம்பு சரியில்லையா?" ஜெயின் ஆனந்திடம் கவலையுடன் கேட்டார். அவனுடைய ஷேவ் செய்யாத வாடிய முகம் அப்படி அவரைக் கேட்க வைத்தது.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை" என்றான் ஆனந்த்.

ஆனால் ஹரித்வாரில் அந்தச் சாது சொன்னதைக் கேட்டதில் இருந்து அவன் இப்படித்தான் இருந்தான். அந்தச் சாது எதிர்காலத்தைப் பற்றிய எல்லாத் தகவலும் முன்பே தெரிவது நல்லதல்ல என்று சொல்லியும் வற்புறுத்திக் கேட்டுத் தெரிந்து கொண்ட தகவல் அவனை நிறையவே பாதித்து விட்டது. சிறு வயதிலிருந்தே தாயின் பக்தியையும், விரதங்களையும் பார்த்துச் சலித்துப் போன அவனுக்கு கடவுள் மீது பெரிய ஈடுபாடு இருக்கவில்லை. ஆனால் எல்லா வாசல்களும் மூடப்படும் போது கடைசியில் ஒரே புகலிடம் ஆக தெய்வ நம்பிக்கை வந்து விடுகிறது.

"ஒரு காட்சி முழு உண்மையையும் சொல்லி விடுவதில்லை. எல்லாவற்றையும் நடத்தும் இறைவன் இருக்கிறான். அவனை நம்பு.

பிரார்த்தனை செய். இந்த மானச தேவி மனதார செய்யும் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவதற்குப் பெயர் போனவள்" அந்த சாதுவின் வார்த்தைகள் மீண்டும் அவன் காதுகளில் ஒலிக்க அவனும் கடவுளே கடைசி புகலிடம் என்று நம்பினான்.

நிறைய நேரம் மானசதேவியிடம் மனம் உருகி பிரார்த்தித்தான். தன் தாயிற்காகவாவது தம்பியைக் காப்பாற்றும்படி வேண்டினான். ஒரு மணி நேரம் கண்கலங்கிப் பிரார்த்தித்து விட்டு டெல்லி திரும்பியவன் ஹரித்வாருக்குத் தன் தாயின் ஒரு வேண்டுதலை நிறைவேற்றப் போனதாக மட்டும் ஜெயினிடம் தெரிவித்தான்.

அவன் எதையோ மறைக்கிறான், கவலையில் ஆழ்ந்திருக்கிறான் என்று தெரிந்தாலும் ஜெயின் அவனுடைய தனிப்பட்ட விஷயங்களை குடைந்து கேட்க விரும்பாமல் விட்டு விட்டார்.

"ஆனந்த், அந்தத் தீவிரவாதி பற்றி விசாரணை எது வரை இருக்கிறது என்று தெரிந்து கொள்ள நான் என் நண்பர் ஒருவரிடம் கேட்டிருந்தேன் அல்லவா? அவர் நேற்று எனக்கு போன் செய்தார்...." என்று ஆரம்பித்து அவர் சொன்னதை எல்லாம் தெரிவித்தார். ஆனந்த் கவனமாகக் கேட்டான். அவனுக்கும் இதில் ஏதோ மர்மம் அடங்கி இருப்பதாகத் தோன்றியது.

"உண்மையில் அந்த விசாரணை யார் தலைமையில் நடக்கிறது சார்"

"பல அதிகாரிகள் இருக்கிறார்கள் என்றாலும் எல்லாவற்றையும் கண்காணிப்பது டிஐஜி கேசவதாஸ் தான். ஆனால் அவருக்கும் மேலே இந்த விசாரணையில் ரகசியமாய் ஈடுபாடு காண்பிக்கும் அரசியல்வாதி தான் யார் என்று தெரியவில்லை."

"அந்த டிஐஜி கேசவதாஸ் எப்படி சார்"

"மனிதர் மிகவும் புத்திசாலி. அனுபவஸ்தர். டிபார்ட்மெண்டில் அவருக்கு நல்ல பெயர் தான் இருக்கிறது. மிக நாணயமான ஆள் என்றும் சொல்ல முடியாது. அதே மாதிரி மிக மோசமான ஆள் என்றும் சொல்ல முடியாது. பிழைக்கத் தெரிந்த மனிதர்....."

**********

ப்யாரிலால் தனக்கு நேரம் தற்போது சுத்தமாகச் சரியில்லை என்று நினைத்துக் கொண்டான். தீவிரவாதி என்று பெயர் சூட்டப்பட்ட அந்த ஜகதலப்பிரதாபன் வந்த அந்தக் கணம் முதல் சனியன் தன்னைப் பிடித்து விட்டது என்பது அவனுடைய கணிப்பாக இருந்தது. பணம் போனதை விட அதிகமாக மானம் போனதை

அவனால் சகிக்க முடியவில்லை. அந்த ஆள் போய் வெகு நேரம் வரை வயிற்றைப் பிடித்துக் கொண்டு சுருண்டு படுத்தவனுக்கு வலி இன்னும் முழுவதுமாக நீங்கவில்லை. உடல்நிலை சரியில்லை என்று லீவு போட்டு வீட்டில் இருந்தவனுக்கு மேலிடத்தில் இருந்து உடனடியாக ஓரிடத்திற்கு வரும்படி உத்தரவு வந்தது.

போனில் "எனக்கு நிஜமாகவே உடம்பு சரியில்லை. வர முடியாத சூழ்நிலை" என்றெல்லாம் சொல்லிப் பார்த்தான்.

"வேண்டுமானால் ஸ்டிரெச்சரை அனுப்புகிறோம்" என்று சொல்லி கடுப்பேற்றினார்கள். வேறு வழியில்லாமல் ஒத்துக் கொண்டான்.

அவனை அழைத்துச் செல்ல டாக்சி ஒன்று வந்தது. போலீஸ் வாகனம் வராமல் டாக்சி வந்தது அவனுக்கு சந்தேகத்தைக் கிளப்பியது. ஆனால் வேறு வழியில்லாமல் ஏறிக் கொண்டான். அது நகரத்தை விட்டு வெளியே நிறைய தூரம் வந்து ஒரு குடோன் முன் நின்றது.

தன் வீட்டிற்கு வந்து தன்னை அடித்துப் போட்டு பணத்தையும் எடுத்துக் கொண்டு போனவனுடைய திருவிளையாடலாக இருக்குமோ என்று சந்தேகித்த அவன் டாக்சியில் இருந்து இறங்கும் முன் தன் மேலதிகாரிக்குப் போன் செய்து "நீங்கள் வரச் சொன்ன

இடம் புறநகரில் இருக்கும் ஒரு குடோன் தானா?" என்று உறுதிப்படுத்திக் கொண்டான். "ஆம்" என்று சுருக்கமாகப் பதில் சொல்லி அவர் வைத்து விட்டார். ப்யாரிலாலிற்கு வயிற்றைப் புரட்டியது. என்னவோ நடக்கிறது, யாரும் பிடி கொடுத்துப் பேச மாட்டேன்கிறார்கள் என்று எண்ணுகையில் பயமாக இருந்தது.

இறங்கிய போது குடோன் வாசலில் நின்றிருந்த ஒருவன் செல்போனில் யாரிடமோ பேசுவதைக் கண்டான். அதுவும் சுருக்கமாகத் தான் இருந்தது.

"உள்ளே போகலாம்" என்றான் அந்த ஆள். அவன் உள்ளே நுழைந்தவுடன் குடோன் கதவை அந்த ஆள் சாத்தி விட்டான்.

குடோனில் முன் பாதி ஒளிவெள்ளத்தில் இருந்தது. பின் பகுதி இருட்டாக இருந்தது. விளக்கின் ஒளி உள்ளே நுழைந்தவுடன் அவன் முகத்திலேயே விழுந்ததால் அவன் கண்கள் கூசின. அதைத் தாண்டி அவன் உள்ளே நுழைய யத்தனித்த போது இருட்டிலிருந்து குரல் கேட்டது. "அங்கேயே நில்"

பல்லைக் கடித்துக் கொண்டு அங்கேயே நின்றான் ப்யாரிலால். அந்தக் குரல் அவனுக்குப் பரிச்சயமான குரல் அல்ல. அவனுடைய மேலதிகாரிகளில் யாருடைய குரலுமல்ல.

"ப்யாரிலால். நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட முக்கியமான, ரகசியமான ஒரு விசாரணையில் நாம் இருக்கிறோம். அதனால் உங்களுடைய முழு ஒத்துழைப்பை நாங்கள் எதிர்பார்க்கிறோம்...."

ப்யாரிலால் தலையாட்டினான்.

"மூன்று நாளுக்கு முன்னால் நாம் ஒரு தீவிரவாதி பற்றி விளம்பரம் செய்தோம். அதில் சாட்சி சொல்ல ஒரு பையனையும் ஏற்பாடு செய்தோம். அந்தப் பையனிடமும் அவன் பெற்றோரிடமும் நீங்கள்தான் போய் பேசினீர்கள். சரி தானே"

அவன் தலையாட்டினான்.

"பதிலை வாய் திறந்து சொன்னால் நன்றாக இருக்கும்"

"ஆமாம்"

"டிவியில் அந்தப் பையனைக் காண்பித்த பிறகு அந்தப் பையனோ, அவன் பெற்றோரோ உங்களை வந்து பார்த்தார்களா? பேசினார்களா?"

"இல்லை"

"அந்தப் பையனும் அவன் குடும்பத்தாரும் சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டு அவசரமாக எங்கேயோ போய் விட்டார்கள். அது உங்களுக்குத் தெரியுமா"

"தெரியாது"

"அவர்கள் அப்படிப் போக என்ன காரணம் இருக்கும் என்று உங்களால் யூகிக்க முடிகிறதா?"

'அந்த சைத்தான் அங்கும் போயிருக்கிறான், வேறென்ன காரணம் இருக்க முடியும்' என்று மனதில் நினைத்துக் கொண்டாலும் அதைச் சொல்லாமல் ப்யாரிலால் "இல்லை" என்றான்.

"ஒரு வேளை உங்களை வந்து பார்த்த அந்த தீவிரவாதி அவர்களையும் போய் பார்த்திருக்கலாமோ?"

ப்யாரிலாலிற்கு வியர்த்தது. அவன் வீட்டுக்கு அந்த ஆள் வந்தது இவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள்....இனம் புரியாத பயம் அவனைக் கவ்வ ஆரம்பித்த அதே நேரத்தில் அவனுக்கு ஒரு விஷயத்தை நினைக்கையில் லேசாக சிரிப்பும் வந்தது.

"நீங்கள் ஏன் சிரிக்கிறீர்கள் என்று தெரிந்து கொள்ளலாமா?"

ப்யாரிலால் சிரிப்பு நின்றது. "அந்தத் தீவிரவாதி கூடப் பேசும் போது தன்னைத் தீவிரவாதி என்று சொல்லிக் கொள்ளவில்லை. மூன்றாம் மனிதனைச் சொல்வது போல 'அந்தத் தீவிரவாதிக்கும் உனக்கும் ஏதாவது முன்பகையா?' என்று கேட்டான். அவனும் 'அந்தத் தீவிரவாதி' என்கிறான். நீங்களும் 'அந்தத் தீவிரவாதி' என்கிறீர்கள். உண்மையில் இரண்டு பேரும் யாரைப் பற்றிப் பேசுகிறீர்கள் என்பது தான் விளங்கவில்லை"

சிபிஐ மனிதன் புன்னகை செய்தது ப்யாரிலாலுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. சிபிஐ மனிதன் கவனமாக வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசினான். "அவன் மேல் ஒரு வழக்கை நாம் ஜோடிக்க வேண்டி இருந்தது என்பதாலேயே அவன் தீவிரவாதி இல்லை என்று சொல்ல முடியாது. அவன் மிகவும் ஆபத்தானவன். அவனை நேரில் சந்தித்த உங்களுக்கு அதில் எந்த சந்தேகமும் இல்லையே?"

ப்யாரிலாலுக்கு அதில் சிறிதும் சந்தேகம் இல்லை என்பது அவன் முகத்தைப் பார்த்த போதே தெரிந்தது.

சிபிஐ மனிதன் சொன்னான். "அவன் எப்படி வந்தான், என்ன செய்தான், என்ன சொன்னான் என்பதை ஒன்றுவிடாமல் சொல்லுங்கள்"

ப்யாரிலால் தர்மசங்கடத்துடன் நின்றான். பல் பேருக்கு சிம்ம சொப்பனமாக இருந்த அவனை கேலிக்கூத்தாக்கிய கதையை அவன் எப்படி சொல்வான்?

"அவனுடைய கூட்டாளியாக உங்களை நாங்கள் முடிவு செய்ய வேண்டாம் என்றால் தயவு செய்து சீக்கிரம் எல்லாவற்றையும் சொல்லுங்கள்"

ப்யாரிலால் முகத்தில் இருந்து ரத்தம் வடிந்தது. புலிவாலைப் பிடித்த கதை என்பது இதுதானோ? வேறு வழியில்லாமல் தயங்கித் தயங்கி எல்லாவற்றையும் சொல்ல ஆரம்பித்தான். டிஐஜி கேசவதாஸின் பெயரைச் சொன்னதைச் சொல்லலாமா வேண்டாமா என்று அவன் தயங்கிய போது சிபிஐ மனிதன் தானாக அவனுக்கு உதவி செய்தான்.

"பரவாயில்லை சொல்லுங்கள். உங்கள் நிலைமையில் யார் இருந்தாலும் அதைத் தான் செய்திருப்பார்கள். நீங்கள் அவர் பெயரைச் சொல்ல வேண்டி வந்தது. மேலே சொல்லுங்கள்"

நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி தொடர்ந்த அவனுக்குத் தன் பணத்தை பறி கொடுக்க வேண்டி வந்ததைச் சொல்லும் போதும் தயக்கம் வந்தது. ஆனால் உண்மையைச் சொன்னான்.

எல்லாம் கேட்டு முடித்த பிறகு சிபிஐ மனிதனும், உடன் இருந்த அந்த அரசியல்வாதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அந்த அரசியல்வாதியின் குரல் பிரபலமானது என்பதால் அவர் வாயையே திறக்கவில்லை.

சிபிஐ மனிதனுக்கு அமானுஷ்யன் கேட்ட கேள்விகள் ஆச்சரியப்படுத்தின. "உனக்கும் அந்த தீவிரவாதிக்கும் முன்பகையா, டிஐஜிக்கும் அவனுக்கும் ஏதாவது பகையா" என்ற கேள்விகள் அமானுஷ்யன் கேட்க வேண்டிய அவசியம் அவனுக்கு விளங்கவில்லை. அவன் அந்தக் கேள்விகள் கேட்டது உண்மை தானா என்பதை இன்னொரு முறை ப்யாரிலாலிடம் கேட்டு உறுதிப் படுத்திக் கொண்டான்.

பிறகு கேட்டான். "அவன் உங்களிடம் பேசும் போது கோபப்பட்டானா?"

ப்யாரிலால் சொன்னான். "கொஞ்சம் கூட கோபப்படவில்லை."

"நீங்கள் அவனைப் பார்த்து நிறையவே பயந்திருப்பது தெரிகிறது. ஏன்?"

ப்யாரிலாலுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. பின் சொன்னான். "அவனைப் பார்த்தால் சாதாரண மனிதன் மாதிரியே தெரியவில்லை. அவன் மிரட்டியது எதுவுமே பயமுறுத்த அல்ல என்பது எனக்குப் புரிந்தது. அவன் நினைத்திருந்தால் சுலபமாக என்னை கோமாவில் ஆழ்த்தியிருக்கவோ, சாகடித்திருக்கவோ முடிந்திருக்கும் என்பதில் எனக்கு சந்தேகமே இல்லை. ஆயுதம் எதுவுமில்லாமல் ஒரு மனிதன் இப்படியெல்லாம் செய்ய முடியும் என்பதே எனக்கு ......."

சிபிஐ மனிதன் அவன் முடிக்க முடியாமல் திண்டாடுவதைப் பார்த்தான். ப்யாரிலால் பேச முடியாமல் நிறுத்திக் கொண்டு அடுத்தது என்ன என்பது போல் முன்னால் தெரிந்த இருட்டைப் பார்த்தான்.

"ப்யாரிலால். நீங்கள் சொன்ன தகவல்களுக்கு நன்றி. அவன் இன்னொரு தடவை உங்களைப் பார்க்க வரக் கூடும். வந்தால் உடனடியாக நீங்கள் உங்கள் மேலதிகாரிக்குத் தகவல் சொல்ல வேண்டும். சரியா..."

ப்யாரிலாலின் முகத்தில் பீதி வெளிப்படையாகத் தெரிந்தது. இன்னொரு தடவை அந்த சைத்தானைப் பார்க்க அவனுக்கு சிறிதும் விருப்பமில்லை. அவன் இன்னொரு தடவை வர முடியும் என்ற எண்ணமே இது வரை இல்லாமல் இருந்ததால் இது என்னடா புதிய தலைவலி என்ற திகில் அவனிடம் குடியேறியது. அவன் பலிகடாவைப் போலத் தலையாட்டினான்.

"நீங்கள் அவனை மறுபடி பர்த்து ஏதாவது செய்து அவனைக் கொல்ல முடிந்தால் உங்களுக்கு உடனடியாக உத்தியோக உயர்வும், பத்து லட்ச ரூபாயும் சன்மானமாகக் கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது"

ப்யாரிலால் நினைத்துக் கொண்டான். 'அவனை இன்னொரு தடவை பார்த்த பின் முதலில் நான் உயிரைத் தக்க வைத்துக் கொள்ளப் பார்த்துக் கொள்கிறேன். நாசமாய் போனவன்களா. நீங்கள் தைரியமிருந்தால் அவனுடன் நேரடியாக மோதினால் அதில் அர்த்தம் இருக்கிறது. அதை விட்டுக் கீழ் உத்தியோகஸ்தனான என்னை ஏனடா பலிகடாவாக்குகிறீர்கள்?"

"நீங்கள் ஏதோ நினைக்கிறாற் போல இருக்கிறது, அது என்ன ப்யாரிலால்"

"ஒருவேளை அடுத்த தடவை வந்தால் எப்படி அவனை பிடிப்பது என்று யோசித்தேன் சார்"

"ஏதாவது திட்டம் பிடிபட்டதா?"

"இல்லை"

"அவன் உங்கள் அருகில் வருவதற்கு முன் அவனைச் சுட்டு விடுங்கள் ப்யாரிலால். அதைத் தவிர வேறு வழியில்லை. ஏனென்றால் அவன் உயிருடன் இருக்கும் வரை மறுபடியும் வரச் சாத்தியமிருக்கிறது. அவனைத் திரும்பப் பார்க்க உங்களுக்கு ஆசை இருக்கிறதா?"

ப்யாரிலாலுக்குக் காய்ச்சல் வருவது போல் இருந்தது. "கண்டிப்பாய் இல்லை" என்று பரிதாபமாகச் சொன்னான்.

ப்யாரிலால் போய்ச் சரியாக பதினேழு நிமிடங்கள் கழிந்து, வெளியே யாரும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு சிபிஐ மனிதனும், அந்த மந்திரியும் அந்தக் குடோனிலிருந்து கிளம்பினார்கள்.

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" காரில் செல்லும் போது மந்திரி சிபிஐ மனிதனைக் கேட்டார். ப்யாரிலால் கிளம்பிய பிறகு ஆழ்ந்த சிந்தனையில் இருந்த சிபிஐ மனிதன் ஒன்றும் பேசாமல் இருந்தது அவருக்கு என்னவோ போல் இருந்தது. தனக்கே இன்னும் புரியாத புதிய பிரச்னை ஏதோ இருந்து அவன் கண்டுபிடித்துக் கொண்டிருப்பது போல அவருக்குத் தோன்றியது.

அவர் முகத்தில் படர்ந்த கவலையைப் பார்த்த சிபிஐ மனிதன் புன்னகையுடன் சொன்னான். "பயப்படாதீர்கள். புதிர் விடுபட்டு விட்டது"

"என்ன அது?"

"அமானுஷ்யன் உயிரோடு இருந்தும் பத்திரிகைகளையோ, எதிர்க்கட்சிக் காரர்களையோ, அரசாங்க உளவுத் துறையையோ தொடர்பு கொள்ளாதது எதனால் என்ற கேள்வி என்னை இத்தனை நாளாய் அரித்துக் கொண்டிருந்தது. இப்போது தான் பதில்

கிடைத்தது"

"அதுதான் என்ன என்று கேட்கிறேன்"

"மலையுச்சியில் இருந்து அமானுஷ்யன் விழுந்ததில் அவனுக்குப் பழைய நினைவுகள் எல்லாம் அழிந்து போயிருக்க வேண்டும்"

மந்திரி சிபிஐ மனிதனை ஒரு மாதிரி பார்த்தார். அந்த சிந்தனையே சினிமாத்தனமாக அவருக்குப் பட்டது.

அந்தப் பார்வையைப் பொருட்படுத்தாமல் சிபிஐ மனிதன் சொன்னான். "அமானுஷ்யன் தன் எதிரி யார் என்றே தெரியாமல் குழம்புவதால் தான் ப்யாரிலாலிடமும், அந்தப் பையனிடமும் போய் விசாரித்திருக்கிறான்."

"எனக்குப் புரியவில்லை"

சிபிஐ மனிதன் பெருமூச்சு விட்டான். அரசியல்வாதிகளுக்குத் தலையில் சரக்கு குறைவாக இருந்தும் பட்டவர்த்தனமாகப் பல அட்டூழியங்கள் செய்தும், இவ்வளவு பணத்தையும் சம்பாதித்து அதிகாரத்தையும் தக்கவைத்துக் கொள்ள முடிகிறதென்றால் அது அதிர்ஷ்டத்தால் தானே ஒழிய வேறெதாலும் இல்லை என்று

நினைத்துக் கொண்டு பொறுமையாக விளக்கினான். "அமானுஷ்யனுக்கு உங்களை அடையாளம் தெரியும். உங்கள் திட்டமும் தெரியும். அப்படிப்பட்டவன் நேராக பத்திரிகைகள், டிவி, எதிர்க்கட்சிக்காரர்கள் என்று போகாமல், மொட்டைக் கடுதாசியோ, பெயரில்லா ஒரு போன்காலோ கூடப் போடாமல் யார் உங்களை இப்படிச் செய்யச் சொல்லியிருக்கிறார்கள் என்று கேட்டுக் கொண்டு அந்தப் பையனையும், ப்யாரிலாலையும் போய்க் கேட்கக் காரணம் வேறு என்ன இருக்க முடியும்?"

மந்திரிக்கு மெல்ல விளங்கியது. ஆனால் சந்தேகம் தெளியாமல் கேட்டார். "அப்படி மறந்தவன் எப்படி தன் வித்தைகளை எல்லாம் மறக்காமல் இருக்க முடியும். ப்யாரிலாலை எப்படி பயமுறுத்தியிருக்கிறான் என்பதைப் பார்த்தீர்கள் அல்லவா?"

"அந்த வித்தையெல்லாம் அவனுக்கு மூச்சு விடுவது மாதிரி அவன் உயிரோடு கலந்து விட்ட விஷயம். அதனால் அவனுக்கு இப்போதும் இயல்பாக வருகிறது. இது போன்ற நினைவுகள் எல்லாம் மூளையின் வேறு பக்கம் சம்பந்தப்பட்டது. விழுந்தபோது அந்த இடத்திற்கு அடிபட்டு அவன் சம்பவங்களை மறந்திருக்கலாம்"

"உங்கள் அளவு நான் படித்ததில்லை. எனக்கென்னவோ இன்னும் நம்பக் கஷ்டமாக இருக்கிறது. சரி நீங்கள் அவனுக்கு மறுபடி

நினைவுகள் திரும்பும் என்று நினைக்கிறீர்களா?...."

"கண்டிப்பாக ஒரு கட்டத்தில் நினைவு திரும்பலாம்"

அந்தப் பதில் அவருக்கு அதிருப்தியைத் தந்தது. சிறிது யோசித்து விட்டுக் கேட்டார். "அதுசரி நீங்கள் உண்மையாகவே அமானுஷ்யன் அந்த ப்யாரிலாலைப் திரும்பப் போய்ப் பார்ப்பான் என்கிறீர்களா?"

"ஆமாம். அந்தப் பையன் மூலம் ப்யாரிலால் பற்றி அறிந்து அங்கே போனவன், இப்போது ப்யாரிலால் மூலம் கேசவதாஸ் பற்றித் தெரிந்து கொண்டதால் அங்கே போவான். கேசவதாஸுக்கு இப்போது செக்யூரிட்டி கூடி இருப்பதைப் பார்த்த பிறகு கண்டிப்பாக நாம் கண்டுபிடித்ததைப் புரிந்து கொண்டிருப்பான். அதனால் ப்யாரிலாலிடம் அவன் வந்த விஷயத்தை யாரிடம் சொன்னான் என்று கேட்கப் போக நிறையவே வாய்ப்பிருக்கிறது"

"அப்படியானானால் ப்யாரிலால் வீட்டு முன்னால் காவலுக்கு ரகசியமாய் ஆட்களை ஏற்பாடு செய்யுங்கள். அமானுஷ்யனுக்கு நினைவு திரும்புவதற்கு முன்னால் அவனைக் கொன்று விடுவது தான் நல்லது...."

***********

டிஐஜி கேசவதாஸுக்குத் தன் வீட்டில் அதிகப்படுத்தியிருந்த பாதுகாப்பு மிகவும் அசௌகரியமாக இருந்தது. எந்நேரமும் ஒரு தீவிரவாதியின் தாக்குதலுக்குத் தயாராக இருப்பது போல் சீருடையிலும் மாற்றுடையிலும் இருந்த போலீசார் அவருடைய அமைதியைக் குலைப்பதாகவே அவருக்குத் தோன்றியது. அவருடைய மகனும், மகளும் தங்கள் அதிருப்தியை அவரிடம் தெரிவித்து விட்டார்கள். வெளியே எங்கே போனாலும் அவர்களுக்குப் பின்னால் கூட ரகசியமாக போலீசார் போகிறார்களாம். அவர்களுடைய தனிமனித சுதந்திரம் பறிபோனதாகச் சொல்லிப் பொருமினார்கள்.

அவருடைய மனைவி மட்டும்தான் அதை ஒரு கௌரவமாக நினைத்துப் பெருமைப்பட்டாள். அவளுக்கு ஏன் அந்தப் பாதுகாப்பு என்பது பற்றி எதுவும் தெரியாது. அவளைப் பொறுத்த வரை அதிகமான ஆட்கள் காவலுக்கு நின்றால் அது தன் கணவரின் முக்கியத்துவம் கூடி வருகிறது என்பதுதான் பொருள்.

டிஐஜி கேசவதாஸ் தன் வாழ்க்கையில் என்றும் பயந்தாங்கொள்ளியாக இருந்தவரல்ல. தன் பல வருட போலீஸ் அலுவலில் ஒரு முறை கூட குற்றவாளிகளின் தாக்குதலுக்குப்

பயந்தவரல்ல. யாரையும் சமாளிக்கக் கூடிய சாமர்த்தியமும் தைரியமும் கொண்டிருந்த அவர் அந்த மந்திரியிடம் எத்தனையோ சொல்லிப் பார்த்தார். "சார். அவன் வரட்டும். அவன் எப்படிப் பட்ட கொம்பனாக இருந்தாலும் என்னை எதுவும் செய்ய முடியாது. இந்த வீட்டின் உள்ளே வந்தவன் வெளியே செல்ல முடியாதபடி நான் பார்த்துக் கொள்கிறேன். தேவையில்லாமல் இந்தப் போலீஸ் பட்டாளம் வேண்டாம்"

ஆனால் அந்த மந்திரி அதை எல்லாம் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ஏதோ ஒரு தீவிரவாதிக்காக இவ்வளவு தூரம் ஏன் பயப்படுகிறார் என்று புரியாமல் கேசவதாஸ் யோசித்துக் கொண்டிருந்த அந்த இரவு வேளையில் தான், அவருடைய நெருங்கிய நண்பரும் மும்பை டிஐஜியுமான சட்டர்ஜி போன் செய்தார்.

வழக்கமான பரஸ்பர விசாரிப்புகளுக்குப் பின்னர் சட்டர்ஜி கேட்டார். "இந்தப் போன் பாதுகாப்பானது தானே"

தன்னுடைய போனை வேறு யாரும் ஒட்டுக் கேட்க வாய்ப்பில்லை என்று கேசவதாஸ் உறுதியளித்த பிறகு அவர் கேட்டார். "கேசவ், ஏதோ தீவிரவாதியின் போட்டோவை இரண்டு நாள் முன்னால் விளம்பரப்படுத்தினீர்களே. விசாரித்ததில் அதெல்லாம் உன்

தலைமையில் தான் நடக்கிறது என்று சொன்னார்கள். என்ன தான் நடக்கிறது அங்கே?"

இந்த விஷயத்தில் தன் நண்பரின் ஆர்வம் கேசவதாஸிற்கு வியப்பை அளித்தது. "வழக்கமான ஒரு தீவிரவாதியைப் பற்றிய விசாரணை தான். ஏன் கேட்கிறாய்?"

"அவனைப் பற்றி உனக்கு நன்றாய் தெரியுமா கேசவ்"

"உண்மையைச் சொல்லப் போனால் எனக்கு ஒன்றும் தெரியாது என்பதுதான் உண்மை."

"அப்படியானால் இதற்கு யார் சூத்திரதாரி?"

தன் நண்பரிடம் ஒளிவு மறைவு தேவையில்லை என்பதால் அந்த மந்திரி பெயரைச் சொன்னார்.

அந்தப் பெயர் சட்டர்ஜியையும் திகைக்க வைத்தது போலத் தெரிந்தது. சில நொடிகள் பேசாமல் யோசித்த சட்டர்ஜி சந்தேகத்தோடு கேட்டார். "அவனுக்கும் அவருக்கும் என்ன பகை?"

"தெரியவில்லை. என்னிடம் அவன் ஒரு தீவிரவாதி என்றும்

அவருக்கும் எதிரி என்றும் சொன்னார். அவனை சாதாரண வழிகளில் பிடிக்க முடியாது, அவன் கவனமாக நடந்து கொள்பவன் அதனால் அவனை ஜோடித்த வழக்கில்தான் பிடிக்க வேண்டும் என்றும் சொல்லி அவரே இந்த திட்டத்தையும் சொன்னார். ஆமாம் உனக்கு அந்த ஆளைத் தெரியுமா?"

"தெரியும்... "

"யாரவன்?"

"அவனைப் பற்றி சுருக்கமாகச் சொன்னால் உனக்குப் புரியாது. உன் ஃபேக்சில் அவனைப் பற்றி முழு விவரம் அனுப்புகிறேன். பத்து நிமிஷம் பொறு......

"நீ சொல்வதைப் பார்த்தால் அவன் பிரபலமான ஆள் போலத்தான் தெரிகிறது. பின் ஏன் எங்கள் விளம்பரத்திற்கு உள்ளூர் ஆள் ஒருவனைத் தவிர வேறு யாரும் தொடர்பு கொள்ளவில்லை"

"அவனுடைய எதிரிகள் அவன் விஷயத்தில் தலையிட விரும்ப மாட்டார்கள். அவனுடைய நண்பர்கள் இமயமலை, திபெத் போன்ற இடங்களில் உள்ள யோகிகள், பிக்குகள், லாமாக்கள்.....அவர்களும் உங்களிடம் தொடர்பு கொள்ள விரும்ப மாட்டார்கள்.. அப்புறம் ஒரு

விஷயம்...."

"என்ன?"

"அவனிடம் ஜாக்கிரதையாயிரு கேசவ்....."

சட்டர்ஜி போனை வைத்து விட்டார். கேசவதாஸிற்குத் தலை சுற்றியது. நண்பர் சொல்வதைப் பார்த்தால் அவன் சாமியார் போலத் தெரிகிறது. மந்திரியோ அவன் பல கொலைகள் செய்தவன் என்று சொன்னார். இதில் எது உண்மை?. ஃபேக்ஸ் வரும் வரை அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை.

சட்டர்ஜி சொன்னபடி பத்து நிமிடத்தில் பேக்ஸில் பக்கம் பக்கமாய் அவனைப் பற்றிய தகவல்கள் வந்தன. எல்லாவற்றையும் எடுத்து வைத்துப் படிக்க ஆரம்பித்த கேசவதாஸ் காலத்தை மறந்தார். இரவின் அமைதியில் அவர் படித்த விஷயங்கள் நண்பரிடமிருந்து வந்ததாக இருந்திராவிட்டால் கண்டிப்பாக கற்பனை என்று சொல்லியிருப்பார். படித்து முடித்த போது அதிகாலை நான்கு மணியாகியிருந்தது. மனதில் பிரமிப்புதான் மிஞ்சியது.

அவனுக்கு யாரோ வைத்திருந்த அந்தப் பெயர் அவரை மிகவும் கவர்ந்தது. "அமானுஷ்யன்". எவ்வளவு பொருத்தமான பெயர்!

அபாயகரமானவன் என்றாலும் அவனை ஒரு முறை பார்க்கும் ஆவல் அவருக்குள் எழுந்ததது. அத்துடன் சட்டர்ஜியின் கேள்வி அவருள்ளும் பெரிதாக எழுந்தது. இந்த அமானுஷ்யன் அந்த மந்திரி வாழ்க்கையில் எப்படி குறுக்கிட்டான்?

30

"என்னை நல்லவன் என்பதை நான் எல்லாம் பேசி முடித்த பிறகு நீ சொல்வது தான் சரியாக இருக்கும்" என்றான் மது.

"நீ என்ன சொல்ல வருகிறாய் என்பது எனக்கு முதலிலேயே தெரியும்" என்று புன்னகையுடன் அக்ஷய் சொன்னான்.

"சொல் பார்க்கலாம்"

"சஹானா ஆரம்பத்தில் இருந்தே நிறையவே கஷ்டப்பட்டிருக்கிறாள். அவளுக்கு நீயும் கஷ்டம் தருபவனாக இருந்து விடாதே. உன்னை முதலிலேயே போலீஸ் தேடுகிறது. நீ இங்கே இருப்பது தெரிந்தால் அவளுக்கு ஆபத்து. அதனால் சீக்கிரம் அவள் வீட்டை விட்டுப் போய் விடு. அதைத் தானே சொல்ல வந்தாய்"

மது அவனைத் திகைப்புடன் பார்த்தான். ஆமாம் என்று அவன் தலையசைந்தது.

"பயப்படாதே மது. நீ சொல்லும் முன்பே நான் தீர்மானித்து விட்டேன். நான் இரண்டு நாளில் போய் விடுகிறேன்"

"எங்கே போவாய் நீ?" மதுவால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

"எங்கேயாவது"

"நீ வேண்டுமானால் என் வீட்டுக்கு வந்து விடு. என் வீட்டில் மனைவியும் பிரசவத்திற்குப் போயிருப்பதால் வீட்டில் நான் தனியாக இருக்கிறேன்."

அவன் சொன்னது அக்ஷய் முகத்தில் புன்னகையை வரவழைத்தது. "என்னைப் பிடிக்காத ஆள் வீட்டில் நான் தங்குவது சரியாக இருக்குமா மது?"

மதுவுக்கு அவனைப் பிடிக்கவில்லை என்று பட்டவர்த்தனமாகச் சொல்லி இருக்க வேண்டாம் என்று தோன்றியது. தர்மசங்கடத்துடன் யோசித்த மதுவிடம் அக்ஷய் புன்னகை மாறாமல் சொன்னான். "விளையாட்டுக்குச் சொன்னேன் மது. நீ

என்னை வரச் சொன்னதற்கு நன்றி. நான் ஓட்டலில் போய் தங்கிக் கொள்கிறேன்"

"ஓட்டலில் போய்த் தங்கப் பணம்?"

"எனக்கு வர வேண்டிய பணம் ஒரு பெரிய தொகை என் கைக்கு வந்து விட்டது. இப்போது எனக்கு பணம் ஒரு பிரச்னையே அல்ல மது"

"எப்படி பணம் வந்தது. யார் கொடுத்தார்கள்?"

"சில விஷயங்கள் எவ்வளவு குறைவாகத் தெரிகிறதோ அவ்வளவு நல்லது மது"

மது அதற்கு மேல் எதுவும் கேட்கவில்லை. இருவரும் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். வீட்டை நெருங்கும் முன் மது சொன்னான். "நான் சஹானாவின் பழைய கதையைப் பற்றி சொன்னது அவளுக்குத் தெரிய வேண்டாம் அக்ஷய். அவளுக்கு மற்றவர் இரக்கம், அது சம்பந்தமான கேள்விகள் எல்லாம் பிடிப்பதில்லை. உன்னிடமே நான் அதை ஏன் சொல்ல வந்தேன் என்றால் முதலிலேயே நிறைய கஷ்டப்பட்டவள் அவள். அவளை நீயும் சேர்ந்து கஷ்டப்படுத்தி விடாதே என்று சொல்லத்தான்....."

"புரிகிறது மது..."

வீட்டுக்குள் நுழைந்த இருவரையும் சஹானா கூர்ந்து பார்த்தாள். மது அவள் பார்வையை ஏனோ தவிர்த்தான். அக்ஷயோ இயல்பாகப் புன்னகைத்தான். ஒரு கணம் அவள் இதயம் துடிக்க மறந்தது.

நண்பனின் பிறந்த நாள் விழாவில் இருந்து வருண் வந்து விட அவள் அவர்களிடம் எதுவும் கேட்கப் போகவில்லை. வருண் வந்தவுடன் அக்ஷயிடம் சென்று ஒட்டிக் கொண்டான். மதுவைப் பார்த்து புன்னகை செய்த சிறுவன் பின் யாரையும் கண்டு கொள்ளவில்லை. அக்ஷய் மடியில் அமர்ந்து கொண்டு தன் நண்பனின் பிறந்த நாள் விழாவில் யாரெல்லாம் வந்திருந்தார்கள், என்ன பரிசெல்லாம் அவனுக்குக் கிடைத்தது, சாப்பிட என்ன எல்லாம் தந்தார்கள் என்றெல்லாம் அவனிடம் விளக்க ஆரம்பித்தான். அக்ஷயும் ஆர்வத்துடன் அவர்களை எல்லாம் மறந்து கேட்க ஆரம்பித்தான்.

அவர்களுடைய அன்னியோன்னியத்தை கவனித்த சஹானாவும் மதுவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். சிறிது நேரத்தில் மது கிளம்பினான்.

மறு நாள் ஆபிசிற்குப் போன பிறகு சஹானா மதுவிடன் கேட்டாள். "அவனை வெளியே கூட்டிக் கொண்டு போய் நீ என்ன பேசினாய்?"

மது அவளைப் பற்றி அவனிடம் சொன்னதை சொல்லா விட்டாலும் அக்ஷயைப் போய்விடச் சொல்லப் போனதையும் அவன் அதற்கு முன்பே போகத் தீர்மானித்திருந்ததாகச் சொன்னதையும் சொன்னான்.

சஹானாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. ஆனாலும் மதுவாக அவனைப் போகச் சொல்ல வேண்டியிருக்கவில்லை என்று அவளுக்குத் தோன்றியது. அவள் நலனில் அக்கறை மிகுந்த அக்கறை கொண்டவன் அவன். அவள் நிர்க்கதியாக நின்ற சமயங்களில் அவளுடைய அண்ணன் கூடக் கண்டு கொள்ளாமலிருந்த சந்தர்ப்பங்களிலும் மது மட்டுமே அவளுக்கு உதவியவன். அந்த வகையில் அவன் சொல்லப் போனதில் தவறில்லை என்ற போதும் அவள் மனம் ஏனோ வலித்தது.

அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தபப்டியே மது மெல்லச் சொன்னான். "யாருமில்லாமல் அனாதையாக நிற்கிறான் என்றாய் சஹானா. ஆனால் இரண்டு மூன்று நாட்களிலேயே அவன் நிறைய பணம் எங்கிருந்தோ கொண்டு வருகிறான். எங்கிருந்து என்று சொல்லவும் மாட்டேன்கிறான். எனக்கு இப்போதும் அவன்

அபாயமானவன் என்று தான் தோன்றுகிறது. அப்படியில்லாமல் அவன் நல்லவனேயாக இருந்தால் கூட அவனை வீட்டில் வைத்திருப்பது அபாயம் தான். தயவு செய்து புரிந்து கொள் சஹானா"

சஹானா தலையாட்டினாள். யோசித்த போது இத்தனை வருடங்கள் அவள் மனதில் ஏற்ப்பட்டிராத சலனம் இப்போது தோன்ற ஆரம்பித்ததை நினைக்கும் போது அவன் போவதும் ஒருவிதத்தில் நல்லதே என்று தோன்றியது. ஆனாலும் அவள் மனம் எதையோ இழக்கப் போவதைப் போல கனத்தது.

அவன் போனால் வருண் தான் மிக அதிகமாகப் பாதிக்கப்படுவான் என்று தோன்றியது. நாளுக்கு நாள் அவன் தான் அவனிடம் மிக ஆழமாக நெருங்கி வருகிறான். இப்போதெல்லாம் அவனும் அக்ஷயும் சேர்ந்து தான் குளிக்கிறார்கள். குளியலறையில் இருந்து வரும் பேச்சு, சிரிப்பு, தண்ணீரை வாரியிறைத்துக் கொள்ளும் ஓசை இதெல்லாம் அவளுக்குப் புதிது. குளித்து முடித்த பிறகும் வருண் பள்ளிக்குப் போகும் வரை எல்லாமே அக்ஷய் தான் பார்த்துக் கொள்கிறான். அவளிடம் என்றால் ஆயிரம் பாடு படுத்தும் வருண் சமர்த்தாய் சந்தோஷமாய் அக்ஷய் சொல்லும்படியெல்லாம் கேட்பது அவளை ஆச்சரியப்படுத்தியது. இது போல் ஒரு கணத்தை அவள் கணவன் மகனுக்குத் தந்ததில்லை. இது போல் வாய் விட்டுச்

சிரிக்கும் சத்தம் அந்த வீட்டில் இது வரை கேட்டதில்லை.

வேலையில் மனம் செல்லாததால் மேலதிகாரியிடம் சொல்லி விட்டு வீட்டுக்குச் சீக்கிரமே வந்தாள். வருண் இன்னும் பள்ளியில் இருந்து வந்திருக்கவில்லை. அவள் உள்ளே நுழையும் போது மரகதமும் அக்‌ஷயும் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். மரகதம் முகத்தில் பெரும் சோகம் பரவியிருந்ததை சஹானா கவனிக்கத் தவறவில்லை. அவள் போனவுடன் அவர்களுடைய பேச்சு நின்றது. மரகதம் சமையலறைக்குப் போய் விட்டாள்.

சஹானா அக்‌ஷயிடம் சொன்னாள். "மது நீங்கள் சொன்ன போன் நம்பர் பற்றி விசாரித்தான். அது கொலை செய்யப்பட்ட ஆச்சார்யாவின் வீட்டினுடையது தானாம்"

அக்‌ஷய் தலையசைத்தான்.

"அவர் இறந்த பின்னால் அவர் மனைவி வீட்டைக் காலி செய்து விட்டு பெங்களூரில் இருக்கும் தன் மகள் வீட்டிற்குப் போய் விட்டாராம். அதனால் தான் நேற்று போன் செய்த போது உபயோகத்தில் இல்லை என்று வந்தது."

அவன் அப்போதும் ஒன்றும் சொல்லாமல் அவளைப் பார்த்து

சரியென்று மறுபடியும் தலையசைத்தான். வர வர அவனுடைய பார்வை அவளை என்னவோ செய்ய ஆரம்பித்தது. இத்தனைக்கும் மேலோட்டமாய் பார்க்கையில் அவன் சாதாரணமாய் பார்ப்பது போலத் தான் தெரிந்தது. ஆனாலும் அவன் பார்வையில் இனம் புரியாத ஒன்று அவளை அலைக்கழித்தது. அவன் என்ன நினைக்கிறான்?.

அக்ஷய் மெல்ல சொன்னான். "சஹானா. எனக்கு ஒரு நல்ல தொகை கிடைத்திருக்கிறது. அதனால் ஏதாவது ஓட்டலில் போய் தங்கிக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். முடிந்தால் நாளைக்கே போகலாம் என்று இருக்கிறேன்..."

மாமியாரின் முகத்தில் இருந்த சோகத்திற்குக் காரணம் புரிந்தது. அவளிடமும் அவன் போவதைச் சொல்லி இருக்க வேண்டும்.

சஹானாவுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. அவள் தலையசைத்தாள்.

அக்ஷய் அறைக்குப் போய் ஒரு பார்சலை எடுத்துக் கொண்டு வந்தான். அவளிடம் தந்தான்.

"என்ன இது?"

"வருண் பிறந்த நாளுக்கு வாங்கினேன். அந்த நாள் அவனிடம் கொடுத்து விடுங்கள்"

அப்போது தான் வரும் திங்கள் கிழமை வருண் பிறந்த நாள் என்கிற ஞாபகம் சஹானாவுக்கு வந்தது. பிறந்த நாள் உடையை இரண்டு வாரம் முன்பே தைத்தாகி இருந்தது. அக்ஷய் வரவிற்கு முன் வரை தினமும் வருண் தன் பிறந்த நாளுக்கு அப்படிச் செய்ய வேண்டும் இப்படிச் செய்ய வேண்டும் என்றெல்லாம் அவளிடம் சொல்லிக் கொண்டிருந்தான். அக்ஷய் வரவிற்குப் பின் அவளிடம் பேசும் நேரமே குறைந்து போயிருந்ததால் அந்தப் பேச்சு அவளிடம் வரவில்லை.

ஆனால் அவளிடம் வருண் அது பற்றிப் பேசவில்லையே ஒழிய அக்ஷயிடம் தினமும் அது பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான். அந்த நாள் வரை அங்கு இருந்து விட்டுப் பின் மறுநாளே அங்கிருந்து கிளம்ப வேண்டும் என்று நினைத்திருந்த அக்ஷய் மது அவனிடம் பேசிய பின் மனதை மாற்றிக் கொண்டான். வருண் பிறந்த நாள வரை காக்க வேண்டாம் என்று தீர்மானித்து விட்டான்.

சஹானா அதைப் புரிந்து கொள்ள முடிந்தது. "அவன் பிறந்த நாளுக்கு மூன்று நாள் தானே இருக்கிறது. அதை முடித்து விட்டே

பிறகு போங்களேன்"

"இல்லை. என்னேரமும் என்னால் உங்களுக்கு ஆபத்து வரலாம்"

சஹானாவுக்கு மது மேல் கோபம் வந்தது. அதை அப்படியே விழுங்கிக் கொண்டு அமைதியாகச் சொன்னாள். "நீங்கள் போய் விட்டால் வருண் பிறந்த நாளை சந்தோஷமாய் கொண்டாடுவான் என்று நினைக்கிறீர்களா?"

அக்ஷய் தர்மசங்கடத்துடன் பார்த்தான்.

சஹானா கண்டிப்புடன் சொன்னாள். "திங்கட்கிழமை பிறந்த நாள் என்றால் செவ்வாய் கிழமை போங்கள். நான் தடுக்க மாட்டேன்." அவன் தந்த பார்சலை அவனிடமே திருப்பித் தந்தாள். "இதை அன்றைக்கு நீங்களே அவனுக்குத் தந்து விடுங்கள்"

அவன் மௌனமாக சம்மதித்தான். சிறிது நேரம் இருவரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. ஒரு கனத்த மௌனம் அவர்களுக்குள் நிலவியது.

அந்த மௌனத்திற்குக் காரணமாக இருந்த எண்ணங்களின் சுமை தாளாமல் அக்ஷய் இனி ஆக வேண்டியதை யோசித்து

சஹானாவிடம் கேட்டான். "பெங்களூரில் இருக்கும் ஆச்சார்யாவின் மகளின் போன் நம்பர் கிடைக்குமா?"

சஹானா சொன்னாள். "மதுவிடம் சொல்கிறேன். கண்டிப்பாகக் கண்டுபிடித்துச் சொல்வான்"

## 31

ப்யாரிலால் களைத்துப் போய் வீட்டுக்கு வந்தான். அவன் வீட்டைத் தூரத்தில் இருந்தே சாதாரண உடையில் கண்காணித்துக் கொண்டிருந்த இரண்டு ரகசியப் போலீசாரை அவனால் அறிய முடிந்தது. ஆட்கள் மாறினாலும் காவல் மாறவில்லை. அந்த பாழாய்ப் போன தீவிரவாதி(?) கண்டிப்பாக அவனிடம் வருவான் என்று அவனுடைய மேலதிகாரிகள் நினைப்பது எதனால் என்று அவனால் ஊகிக்க முடியவில்லை.

உள்ளே நுழைந்து அவன் விளக்கைப் போட்டுத் திரும்பிய போது அவனுக்கு ஒரு கணம் இரத்தம் உறைந்தது. அந்த சைத்தான் அங்கு ஒரு நாற்காலியில் அமைதியாக அமர்ந்திருந்தான்.

"டிஐஜி கேசவதாஸ் வீட்டுக்குத் தான் காவல் அதிகமாயிருக்கிறது

என்றால் உன் வீட்டுக்கும் ரகசியமாய் காவல் அதிகமாயிருக்கிறது. அதுவுமில்லாமல் நீ எங்கு போனாலும் தூரத்தில் பாதுகாப்புக்குப் போலீஸ் பின் தொடர்கிறது. உனக்கு ஏதாவது பதவி உயர்வு கிடைத்திருக்கிறதா ப்யாரிலால்"

மிக அமைதியாகக் கேட்டவனை ப்யாரிலால் கிலியுடன் பார்த்தான். 'அந்த இரண்டு பேர் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு இவன் எப்படி உள்ளே வந்தான்?'

அவன் மனதில் எழுந்த கேள்விக்கு அக்‌ஷய் அமைதியாகப் பதில் சொன்னான். "உன் பின் வீட்டில் ஆட்கள் இல்லை ப்யாரிலால். அதற்கு வாசல் பின் தெருவில் இருக்கிறது. இருட்டு நேரத்தில் அந்த வீட்டுக்கு வந்து அந்த மொட்டை மாடியில் இருந்து ஜாக்கிரதையாய் உன் வீட்டு மாடிக்கு உள்ளே வருவது ஒன்றும் கஷ்டமான வேலை அல்ல....."

"உனக்கு என்ன வேண்டும்?"

"நான் இங்கு வந்து போனதை நீ யாருக்குச் சொன்னாய் என்று தெரிய வேண்டும்?"

"நானாய் யாரிடமும் சொல்லவில்லை. அவர்களாய் என்னைக்

கூட்டிக் கொண்டு போய்க் கேட்டார்கள்....."

"டிஐஜி கேசவதாஸ்?"

"இல்லை. அவரல்ல....."

"பின் யார்?"

"தெரியவில்லை..." என்ற ப்யாரிலால் பின் சிறிதும் யோசிக்காமல் நடந்ததை எல்லாம் ஒன்று விடாமல் தெரிவித்தான். அவனுக்கு இந்த ஆள் அபாயகரமானவனாகத் தெரிந்தான். எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த ஆளை அவன் பகைத்துக் கொள்ளத் தயாராக இல்லை. அவனிடம் ஏற்பட்ட ஒரு அனுபவம் வாழ்நாள் முழுவதற்கும் போதும். அவனுக்கும் அந்த மேல் மட்டத்திற்கும் ஏதாவது பகை என்றால் அவர்களாக அதை எப்படியாவது தீர்த்துக் கொள்ளட்டும். அவர்களுக்கு இடையே நசுங்கிச் சாக அவனுக்கு மனமில்லை.

அவன் சொன்னதையெல்லாம் அக்ஷய் மிகவும் பொறுமையாகக் கேட்டான். சில இடங்களில் இன்னொரு முறை சொல்லச் சொன்னான். கடைசியில் கேட்டான். "இருட்டில் இருந்து பேசினது உங்கள் போலீஸ் டிபார்ட்மெண்ட் ஆள் தானா? குரல் உனக்கு

பரிச்சயமானது தானா?"

"இல்லை. எனக்குப் பரிச்சயமான குரல் அல்ல. கேள்வி கேட்ட விதம் எங்கள் டிபார்ட்மெண்ட் ஆட்கள் கேட்கிற மாதிரி தான் இருந்தது. டில்லி அதிகாரிகள் யாராவதாக இருந்தால் நான் கண்டு பிடித்திருப்பேன். அதனால் அது டில்லி அதிகாரி அல்ல"

"அந்த இருட்டில் இருந்தது ஒரு ஆள் தானா? இல்லை வேறு சிலரும் இருந்தார்களா?"

"ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை கேள்வி கேட்டது ஒரு ஆள் தான் என்றாலும், அவன் கூட வேறு ஒன்றிரண்டு ஆட்கள் இருந்திருக்கலாம் என்று எனக்குத் தோன்றியது"

"அதற்குப் பிறகு கேசவதாஸ் எப்போதாவது உன்னைத் தொடர்பு கொண்டாரா?"

"இல்லை"

அக்‌ஷய் எழுந்தான். "நான் போகிறேன். அவர்கள் பதவி உயர்வையும், பத்து லட்ச ரூபாயையும் ஆசை காட்டியதை மனதில் வைத்து நீ ஏதாவது முட்டாள் தனம் செய்தால் வாழ்நாள் பூராவும் நீ

கோமாவில் கிடக்க வேண்டி இருக்கும் ப்யாரிலால். அது மட்டுமல்ல அபராதமாய் உன் பீரோவில் இருக்கும் பணம் நகை எல்லாவற்றையும் நான் எடுத்துக் கொள்வேன்"

ப்யாரிலால் அவசர அவசரமாகச் சொன்னான். "எனக்கு பதவி உயர்வோ, பத்து லட்சமோ வேண்டாம். இரண்டு பக்கத்திலிருந்தும் எனக்கு எதுவும் தொந்தரவு வராமல் இருந்தால் போதும்."

"நீயாக என் வாழ்க்கையில் இன்னொரு தடவை குறுக்கிட்டால் ஒழிய நான் இனி வர மாட்டேன் ப்யாரிலால்."

ப்யாரிலால் கையெடுத்துக் கும்பிட்டான். "நான் சத்தியமாய் உன் வழிக்கு வர மாட்டேன். வேலையே போனாலும் பரவாயில்லை. ஆனால் நீ வந்து போனது தெரிந்து அவர்கள் மறுபடி கூப்பிட்டால்..."

"நீயாகச் சொன்னால் ஒழிய அவர்களுக்குத் தெரியாது"

"போன தடவை நானாகச் சொல்லாமலேயே அவர்களுக்குத் தெரிந்து விட்டதே"

"போன தடவை அந்தப் பையன் வீட்டுக்காரர்களும், நீயும் பயந்து

போய் விட்டதைப் பார்த்து அவர்கள் யூகித்தார்கள். இப்போது யூகிக்க நீயாக எதுவும் செய்யாதே"

அவன் மாடியேறி இருட்டில் மறைந்தான். ப்யாரிலால் அரை மணி நேரம் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. அவன் போகும் போது வெளியில் இருக்கும் யாராவது ஒரு ரகசியப் போலீஸ் பார்த்து விட்டால் என்ன ஆகும் என்று பயத்துடன் யோசித்துக் கொண்டிருந்தான். ஆனால் வெளியே எந்த மாற்றமும் நிகழ்ந்ததற்கு அறிகுறியே இல்லாமல் போன பிறகுதான் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

****************

"ஏதாவது தகவல் கிடைத்ததா?" சிபிஐ மனிதன் போனில் கேட்டான்.

"இல்லை உங்கள் பக்கத்தில் ஏதாவது முன்னேற்றம் இருக்கிறதா?"

"ஆனால் ஆனந்த் திடீரென்று ஹரித்வார் போய் வந்திருக்கிறான். அவன் போவது தெரிந்தவுடன் நான் ஹரித்வாரில் அவனைக் கண்காணிக்க ஆட்களை ஏற்பாடு செய்தேன். அவன் அங்கே சங்கரமடம் போய் பின் மானச தேவி கோயிலிற்குப் போயிருக்கிறான். அங்கே அவன் சந்தித்த ஒரே மனிதன் ஒரு

சாமியார் மாதிரி தெரிந்திருக்கிறான்...."

"அப்புறம்?" மந்திரியின் குரலில் சுவாரசியம் தெரிந்தது.

"அங்கே அந்த ஆள் முன்னால் உட்கார்ந்து ஏதோ சிறிது நேரம் பேசியிருக்கிறான். பேசி விட்டு கோயிலின் உள்ளே கும்பிடப் போனவன் நிறைய நேரம் கழித்துதான் வெளியே வந்திருக்கிறான். அவன் போன பின் அவனை இரண்டு பேர் தொடர்ந்து போக, வேறு இரண்டு பேர் அந்த சாமியார் மாதிரி தெரிந்த ஆசாமியிடம் போயிருக்கிறார்கள். "போலீஸ்" என்று சொல்லி காட்டிய அடையாள அட்டையை அந்த ஆள் கண்டு கொள்ளவேயில்லையாம்."

"அவர்கள் 'சிறிது நேரத்திற்கு முன் உங்களிடம் ஒருவன் பேசி விட்டுப் போனானே அவன் என்ன கேட்டான், நீங்கள் என்ன சொன்னீர்கள்?' என்று அந்த சாமியாரிடம் கேட்டிருக்கிறார்கள். அந்த சாமியார் 'போலீஸ்' என்று சொன்ன நம் ஆளிடம் "மற்றவன் சமாச்சாரம் எல்லாம் அப்புறமாகத் தெரிந்து கொள். முதலில் கால் உடைந்து இருக்கிற உன் சம்சாரத்தை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு போ" என்று சொல்லியிருக்கிறார். அந்த சாமியார் சொல்லச் சொல்ல நம் ஆளின் செல்போன் அடித்திருக்கிறது. எடுத்துப் பேசினால் அந்த ஆளின் மனைவிக்கு உண்மையாகவே

அப்போதுதான் காலுடைந்து போனதாகத் தகவல் வந்திருக்கிறது. நம் ஆள் அதற்கு மேல் வாயைத் திறக்காமல் வீட்டுக்கு ஓடியிருக்கிறான்"

"இன்னொருவன் கூட இருந்தானே அவனாவது அந்த சாமியாரிடம் ஆனந்த் என்ன சொன்னான் என்று கேட்டானா?"

"அந்த ஆள் அந்த சாமியார் தான் ஏதோ ஏவல் செய்து தன் சகாவின் மனைவி காலை உடைத்திருக்கிறான் என்று சந்தேகப்படுகிறான். அதனால் மேற்கொண்டு எதுவும் அவனும் கேட்கவில்லை"

"என்ன இது அந்த ஆட்கள் இப்படித் தொடை நடுங்கிகளாக இருக்கிறார்கள்"

"அவர்கள் அமானுஷ்யனை இமய மலை உச்சியில் பார்த்திருக்கிறார்கள். அத்தனை பேர் விடாமல் சுட்டு ஒரே ஒரு குண்டு தான் அவன் மீது பாய்ந்திருக்கிறது. அவன் அந்தக் குண்டுகள் படாமல் மின்னல் வேகத்தில் நகர்ந்த விதம் எல்லாம் சினிமாவில் கூடப்பார்க்க முடியாது என்கிறார்கள். அவன் சம்பந்தப்பட்ட வேலைகளில் எல்லாம் ஏதோ ஒரு அமானுஷ்ய சக்தி இருப்பதாக அவர்கள் நினைக்கிற மாதிரி தெரிகிறது. இந்த விஷயமும் இப்படியானதில் அவர்களுக்கு இனம் புரியாத பயம்

இருக்கிற மாதிரி தெரிகிறது."

"அப்புறம்?"

"ஆனந்தைத் தொடர்ந்தவர்கள் அவன் டில்லிக்குத் திரும்பி விட்டதாகச் சொன்னார்கள். அந்த சாமியார் யார் அவனை எதற்கு ஆனந்த் சந்திக்கப் போனான். அமானுஷ்யன் விஷயம் தானா இல்லை ஏதாவது தனிப்பட்ட விஷயமா என்று தான் தெரியவில்லை. நான் மறு நாள் வேறு ஆட்களை விட்டு அந்த சாமியாரைப் போய் பார்க்கச் சொன்னேன். அந்த ஆள் யார் கண்ணிற்கும் அகப்படவில்லை. எங்கேயோ போய் விட்டிருக்கிறார்."

அந்தத் தகவலைக் கேட்டு சிறிது நேரம் மௌனமாயிருந்து விட்டு மந்திரி சொன்னார். "கேசவதாஸ் மறுபடி போன் செய்து அமானுஷ்யன் பற்றிக் கேட்டார். எப்போதும் நான் சொன்னதற்கெல்லாம் மறு பேச்சுக் கேட்காமல் செய்யக் கூடிய அவர் இப்படி மறுபடி கேட்டது எனக்கு சந்தேகத்தைக் கிளப்புகிறது"

"ஆச்சார்யா கேஸில் நீங்கள் அவரை நேரடியாக ஈடுபடுத்தவில்லை அல்லவா?"

"இல்லை. அவருக்குக் கீழே இருக்கிற எனக்கு வேண்டப்பட்ட மற்ற அதிகாரிகளை வைத்துத்தான் காய்களை நகர்த்தினேன்."

"நல்லது. அந்தக் கேசுக்கும் இந்தக் கேசுக்கும் சம்பந்தம் இருப்பதாகக் கேசவதாஸுக்குத் தெரியாமல் இருப்பது நல்லது. தெரிந்தால் இரண்டும் இரண்டும் நான்கு என்று அந்த ஆள் கண்டுபிடித்து விட வாய்ப்பு இருக்கிறது"

"அமானுஷ்யனுக்கு நினைவு திரும்புவதற்கு முன்னால், மற்றவர்கள் எல்லாம் இந்தக் கேஸில் ஆர்வம் காட்ட ஆரம்பிப்பதற்கு முன்னால் அவனைக் கண்டு பிடித்துக் கொன்று விட்டால் நன்றாயிருக்கும். இப்போதைக்கு நான் செய்யக் கூடியது வேறெதாவது இருக்கிறதா"

"இப்போது நாம் செய்யக் கூடியதெல்லாம் அவனைப் பற்றி ஏதாவது ஒரு தகவல் வரும் வரை பொறுமையாகக் காத்திருப்பது தான்."

அது தான் கஷ்டம் என்பது போல் மந்திரி பெருமூச்சு விட்டபடி கேட்டார். "ஏதாவது தகவல் வரும் என்று எதிர்பார்க்கிறீர்களா?"

"ஆமாம். கூடிய விரைவில் கிடைக்கும் என்று என் உள்மனம் சொல்கிறது"

ராஜாராம் ரெட்டிக்கு ஆரம்பத்தில் இருந்தே மகேந்திரனைப் பிடித்ததில்லை. எப்போதுமே அடுத்தவர் விஷயங்களில் மூக்கை நுழைப்பது, அவனுடைய பொழுது போக்காக இருந்ததுதான் காரணம். கம்ப்யூட்டரில் அவனுக்கு இருந்த அசாத்திய அறிவு ஆபிசில் பலரையும் அவன் உதவியை நாட வைத்தது என்றாலும் ராஜாராம் ரெட்டி அவனை எதற்கும் அண்டியதில்லை. அவருக்குத் தெரிந்து அவனிடம் அதிகமாய் நட்பு பாராட்டாத இன்னொரு நபர் டைரக்டர் மஹாவீர் ஜெயின். அரசியல் சிபாரிசில் வந்தவன் என்பதால் அவர் அவனிடம் அவசியமானதற்கு மட்டும் பேச்சு வார்த்தை வைத்திருந்தார். ஆச்சார்யா ஒருவர் தான் ஆபிசிலேயே அவனிடம் மிக நெருக்கமாக இருந்திருக்கிறார். ரெட்டிக்குத் தன்னைப் பிடிக்காது என்று தெரிந்திருந்தும் இன்று ஏனோ மகேந்திரன் மதிய சாப்பாட்டு வேளையில் அவரருகே வந்து சாப்பிட உட்கார்ந்தான்.

அவன் உட்கார்ந்த பிறகு எழுந்து போவது அநாகரீகம் என்பதால் ராஜாராம் ரெட்டி எழுந்து போகவில்லை. அதே சமயம், அவனிடம் பேசவும் முயற்சிக்கவில்லை.

ஆனால் அவனே வலியப் பேசினான். “சார். ஆனந்த் இப்போது எந்த கேஸ் பார்க்கிறார்?”

“வந்ததே ஆச்சார்யா கொலை கேஸிற்குத் தானே”

“அதில்தான் கொலையாளி கிடைத்து விட்டானே. கேஸ் முடிந்த பிறகும் இங்கே ஏன் இருக்கிறான்? வேறு புதிய கேஸ் கொடுத்திருக்கிறார்களா?”

“எனக்குத் தெரிந்து இல்லை. ரகசியமாக ஜெயின் கொடுத்திருந்தால் அது எனக்குத் தெரியாது”

“ஜெயின் சார் உங்களிடம் பெரும்பாலும் எல்லாவற்றையும் சொல்வாரே அதனால் தான் கேட்டேன். அந்த ஆனந்தும், அவரும் ரகசியமாக ஏதோ அடிக்கடி பேசிக் கொள்கிறார்கள். ஒரு வேளை ஆச்சார்யா கொலைக் கேஸில் நமக்குத் தெரியாத விஷயங்கள் இன்னும் இருக்கிறதோ?”

“நான் என்னிடம் அவர்களாகச் சொன்னால் ஒழிய எதையும் கேட்பதில்லை”

அவர் எழுந்து விட்டார். அவன் அவரை சந்தேகத்துடன் பார்த்தான்.

********

அக்ஷய் சஹானா வீட்டில் இருந்து ஐந்து மைல் தூரத்தில் உள்ள டெலிபோன் பூத்தில் இருந்து பெங்களூருக்குப் போன் செய்தான். அவனுக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை. ஆச்சார்யா மனைவிக்கு அவனைத் தெரியுமா, தெரிந்தால் எந்த அளவிற்குத் தெரியும், அவனுடைய பழைய வாழ்க்கை பற்றி முழுவதுமே தெரிந்திருக்க வாய்ப்பிருக்கிறதா என்ற கேள்விகள் அவனுள் இருந்து குழப்பின. அறிமுகப்படுத்திக் கொள்ள பெயர் கூடத் தெரியாதவன், என்ன சொல்லி எதை அறிந்து கொள்ள முடியும்? போன் மணி பல முறை அடித்த பின்தான் எடுத்தார்கள்.

“ஹலோ” ஒரு பெண்மணியின் களைப்பான குரல் கேட்டது.

“ஹலோ” என்றான்.

ஒரு கணம் லலிதாவிற்கு வார்த்தைகள் வரவில்லை. இந்தக் குரல் அவனுடையது. ஆனந்த் வந்து போனதில் இருந்து அவன் தாயைப் பற்றிச் சொன்னது அவள் மனதில் இருந்து கொண்டே இருந்தது. எப்போதாவது அவன் பேசக் கிடைத்தால் நல்லது என்ற எண்ணம்

அவ்வப்போது வந்து போனது. இப்போது அவனே போன் செய்கிறான்.....

அக்ஷய் வார்த்தைகளைக் கவனமாகத் தேர்ந்தெடுத்துப் பேசினான். “ஆச்சார்யா சார் இறந்தது எனக்கு தாமதமாகத் தான் தெரிய வந்தது. தெரிந்த பிறகு உங்கள் மகள் போன் நம்பர் கிடைக்கவும் இரண்டு நாளாகி விட்டது. அவர் மரணம் எதிர்பாராதது.....”

கணவனின் மரணத்தைப் பற்றிய பேச்சு வந்ததும் அவள் முகத்தில் சோகம் படர்ந்தது. “பரவாயில்லை. அவர் எப்போதும் உங்களைப் பற்றி நல்ல அபிப்பிராயம் வைத்திருந்தார். சில சமயங்களில் எங்களுக்குப் பிறக்காத மகனாய் உங்களை நினைக்கிறாரோ என்று கூட எனக்குத் தோன்றும். அந்த அளவிற்கு அவர் உங்களை நேசித்தார்....”

இப்போது அவனுக்கு வார்த்தைகள் வரவில்லை. அப்படியானால் அவனை ஆச்சார்யாவிற்கும் அவர் மனைவிக்கும் நன்றாகத் தெரியும்.... அவனைப் பற்றித் தெரிந்த ஒரு நபர் இன்னும் உயிருடன் இருக்கிறார்.!

லலிதா தொடர்ந்தாள். “நாம் இருவரும் போனில் மட்டுமே பேசி இருக்கிறோம் என்றாலும் நேரில் பார்க்க நான் நிறைய முறை

நினைத்ததுண்டு.... உங்கள் அண்ணன் மூன்று நாள் முன்னால் வந்திருந்தார்...."

அவனுக்கு ஒரு கணம் மெய்சிலிர்த்தது. அவனுக்கு ஒரு அண்ணன் இருக்கிறான்......

அவன் மௌனத்தைத் தவறாகப் புரிந்து கொண்ட லலிதா அவசர அவசரமாகச் சொன்னாள். "நான் ஒரு முட்டாள். உங்களுக்கு எப்படி அவரைத் தெரிந்திருக்கும்? நீங்கள் தான் மூன்று வயதிலேயே அவர்களை விட்டுப் பிரிந்து விட்டீர்களே..... உங்கள் அண்ணன் எல்லாவற்றையும் சொன்னார். உங்கள் நாக மச்சம் பற்றியும் சொன்னார். உங்களுக்காக உங்கள் அம்மா கும்பிடாத கடவுள் இல்லை, இருக்காத விரதம் இல்லை என்று சொன்னார். அப்போது நான் அவருக்குத் தைரியம் சொன்னேன் "உங்கள் அம்மா பிரார்த்தனை வீண் போகாது உங்கள் தம்பி கண்டிப்பாய் கிடைப்பார்" என்றேன். மூன்றே நாளில் நீங்கள் போன் செய்கிறீர்கள். இது தான் தெய்வ சங்கல்பம் என்பது. இன்னொரு விஷயம். உங்கள் அண்ணா கூட சிபிஐயில் தான் வேலை செய்கிறார். நீங்கள் பேசக் கிடைத்தால் உடனடியாகச் சொல்லச் சொன்னார். உங்கள் போன் நம்பர் கொடுங்கள். நான் அவரை உங்களிடம் பேசச் சொல்கிறேன்"

அவள் பரபரப்புடன் சொன்னவற்றைக் கேட்டு அக்‌ஷயின் உற்சாகம் வடிந்து போனது. மின்னல் வேகத்தில் அவன் மனம் யோசித்து இதில் ஏதோ சூது இருப்பதாக முடிவு செய்தது. யாரோ சிபிஐயிலிருந்து அவனைத் தேடுகிறார்கள். அவர்கள் ஆச்சார்யாவைக் கொன்ற கூட்டத்தவர்களாகக் கூட இருக்கலாம். ஆச்சார்யா மனைவியை ஏமாற்ற அண்ணன் என்று சொல்லி இருக்கலாம். அம்மா செண்டிமெண்டை உபயோகித்திருக்கலாம். மூன்று வயதில் காணாமல் போய் விட்டான் என்று வசதியான பொய்யைச் சொல்லி இருக்கலாம். அப்போது தான் அவன் பேசக் கிடைத்தவுடன் அந்தம்மாள் தகவல் தெரிவிப்பாள் என்று நினைத்திருக்கலாம். இந்த சினிமாத் தனமான கற்பனைகள் நிஜ வாழ்க்கையில் இருக்க கண்டிப்பாகச் சாத்தியமில்லை.

"ஹலோ..." லலிதாவுக்கு மறுபக்கம் அவன் இருக்கிறானா இல்லையா என்ற சந்தேகம் வந்து விட்டது.

“அம்மா நீங்கள் எங்கள் அண்ணாவின் போன் நம்பர் கொடுங்கள். நானே பேசுகிறேன்”

லலிதாவிற்கு அதில் எதுவும் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. “சரி. ஒரு நிமிஷம்..... உம். எழுதிக் கொள்ளுங்கள்....”

அக்ஷய் எழுதிக் கொண்டான்.

"ஹலோ. இன்னொரு முக்கியமான விஷயம். உங்கள் அண்ணா உங்கள் உயிருக்கு ஆபத்து என்று சொன்னார். ஜாக்கிரதையாக இருங்கள்"

“நன்றிம்மா. இன்னொரு நாள் சாவகாசமாகப் பேசுகிறேன்" என்று சொல்லி போன் இணைப்பைத் துண்டித்தான்.

அக்ஷயிற்கு சந்தேகமே இல்லை. அண்ணன் என்ற பெயரில் வந்திருப்பது எதிரியாகத் தான் இருக்க வேண்டும். லலிதா நம்பிக்கையைப் பெற அண்ணன் அம்மா செண்டிமெண்ட் என்றால் அவன் நம்பிக்கையைப் பெற அவன் உயிருக்கு ஆபத்து என்ற ரகசியத் தகவல் மாதிரி அந்த ஆள் சொல்லி இருக்கிறான். அப்போது தான் உடனடியாகப் போன் செய்வேன் என்று எதிர்பார்த்திருக்கிறான் முட்டாள்.....

*************

லலிதாவிற்கு ஒருவித சந்தோஷம் மனதில் நிறைந்திருந்தது. உடனடியாக ஆனந்திற்கும் போன் செய்தாள்.

“ஹலோ…ஆனந்த் நான் பெங்களூரில் இருந்து லலிதா பேசுகிறேன். உங்கள் தம்பி போன் செய்தார்…இப்போது தான்….உங்கள் செல்போன் நம்பரை அவரிடம் கொடுத்திருக்கிறேன். அவரே போன் செய்கிறேன் என்று சொன்னார்”

ஆனந்திற்கு லலிதாவுக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை. கண்களில் நீர் தேங்கியது. வார்த்தைகள் தொண்டையிலேயே தடுமாற நன்றி சொல்லி விட்டு தன் செல் போன் அடிக்கக் காத்திருந்தான்…. காத்திருந்தான்… காத்துக் கொண்டே இருந்தான்…. அவன் செல்போன் அடிக்கவேயில்லை. எடுத்து சார்ஜ் இருக்கிறதா டவர் இருக்கிறதா என்று பார்த்தான். எல்லாம் சரியாகத் தான் இருந்தது. ஒவ்வொரு கணமும் யுகமாய் நகர்ந்தது. ஆனால் அவன் தம்பி அவனை அழைக்கவேயில்லை…..

**********

வருணும் அக்ஷயும் கைநிறைய பொருள்களுடன் ஷாப்பிங் போய் வந்தார்கள்.

வருணின் பிறந்த நாளுக்கான ஏற்பாடுகள் அக்ஷயின் தலைமையில் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. வருணுக்கு என்ன எல்லாம் பிடிக்கும் என்று யோசித்து யோசித்து அக்ஷய் ஒவ்வொரு

பொருளாக வாங்கி வந்தான். சிலவற்றிற்கு வருணையே அழைத்துச் சென்று தேர்ந்தெடுக்க வைத்தான். வருணுக்கு சந்தோஷம் தாங்கவில்லை. சஹானா ஒருவித சோகத்தோடு மகன் சந்தோஷத்தைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

அவள் கணவன் இருந்த வரை வருணின் பிறந்த நாள் உடை கூட வருண் விருப்பப்படி இருக்காது. விலை உயர்ந்த உடை தான் மகனுக்கு அவன் வாங்கித் தருவான் என்றாலும் அவன் தனக்குப் பிடித்ததைத் தான் வாங்கித் தருவான். ஆரம்பத்தில் "இதிலாவது அவனுக்குப் பிடித்ததை வாங்கித் தரலாமே" என்று சஹானா சொல்லிப் பார்த்திருக்கிறாள்.

“அவனுக்கு என்ன தெரியும்? நாம் தான் சரியானதை தேர்ந்தெடுக்க வேண்டும்” என்பான். வருண் கடையை விட்டு வெளியே வருகிற வரை ஏக்கத்தோடு தனக்குப் பிடித்த ஆடைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் காட்சியை ஒரு முறை பார்த்து விட்டு தனியே அழுதிருக்கிறாள். அதன் பிறகு அவள் அவர்களுடன் போவதில்லை. அதை எல்லாம் பார்க்க அவள் மனதில் சக்தியில்லை.

இப்போது வருணும் அக்‌ஷயும் ஷாப்பிங் போய் வரும் போது கை நிறைய பொருள்களுடன் வரும் போதும் அவளால் அவள் கணவன் காலத்தை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

“அம்மா இன்றைக்கு என்ன எல்லாம் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறோம் சொல் பார்க்கலாம்” என்ற வருண் டிவியில் தாய் வருவதைப் பார்த்தவுடன் “அம்மா உன் ப்ரோக்ராம்” என்று உற்சாகமாகச் சொன்னான்.

இமயமலைச் சாரலில் இருந்த ஒரு பழமை வாய்ந்த கோயிலையும் அந்தப் பகுதியில் இருந்த பழங்குடி மக்கள் பற்றியும் சஹானா விளக்கியது டிவியில் வந்து கொண்டிருந்தது.

சஹானா அக்‌ஷயிடம் சொன்னாள். “நாங்கள் உங்களை முதலில் பார்த்தது இந்த ப்ரோகிராம் ஷூட்டிங் முடித்து வந்து கொண்டிருந்த போது தான்”

துரதிர்ஷ்ட வசமாக அதே நிகழ்ச்சியை அந்த ரெடிமேட் கடைக்காரனும் பார்த்துக் கொண்டிருந்தான். “அட இந்தப் பெண் அந்த ஆள் கூட வந்தவள் தானே”. அவனுக்குத் தன் அதிர்ஷ்டத்தை அவனாலேயே நம்ப முடியவில்லை. முதலில் கிடைத்த பணத்தை விட அதிகமாகத் தருவதாக அவர்கள் சொல்லி இருந்ததால் பரபரப்புடன் தன் செல்போனை எடுத்தான்.

*******************************************

33

ஆனந்த் பெங்களூர் டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் லலிதாவின் போன் நம்பரையும், அக்ஷய் அவளுக்குப் போன் செய்த நேரத்தையும் சொல்லி அந்த போன் எங்கிருந்து வந்தது என்று கேட்டிருந்தான். சிறிது நேரத்தில் அந்த போன் நம்பரை அவர்கள் சொன்னார்கள். டில்லி டெலிபோன்ஸில் அந்த போன் நம்பரைக் கொடுத்து விசாரித்ததில் அது ஒரு பப்ளிக் டெலிபோன் பூத்தினுடையது என்பது தெரிந்தது. அங்கும் சென்று விசாரித்தான். அந்த பப்ளிக் பூத் காரனுக்கு அந்த நேரத்தில் போன் செய்தவனுடைய எந்த அங்க அடையாளமும் நினைவு இருக்கவில்லை. 'இதையெல்லாம் யாராவது நினைவு வைத்திருப்பார்களா, இத்தனை பேர் வந்து போகும் இடத்தில்' என்பது போல ஆனந்தைப் பார்த்தான்.

டில்லியிலேயே தன் தம்பி இருந்தும் அவன் தன்னிடம் தொடர்பு கொள்ளாதது ஆனந்திற்கு மனதை என்னவோ செய்தது. அந்த டெலிபோன் பூத்தின் வெளியே நின்று சந்தடி மிக்க அந்த ஜனக்கூட்டத்தைப் பார்த்தான். இதில் ஒருவன் அவன் தம்பியாக இருந்தாலும் தோற்றத்தை வைத்து அவனால் அடையாளம் கண்டுபிடிக்க முடியாது...

"தம்பி நீ எங்கிருக்கிறாய்?" மனம் கூக்குரலிட்டது.

*************

"அந்த ரெடிமேட் கடைக்காரன் இப்போதுதான் போன் செய்தான். அந்தப் பெண் யார் என்று தெரிந்து விட்டது" பரபரப்புடன் மந்திரி குரல் கேட்டது.

"யார்?"

"ரெயின்போ டிவியில் வேலை பார்க்கிறாள். இப்போது அவள் நிகழ்ச்சி ஒன்று ஒளிபரப்பாகியதைப் பார்த்து அந்த ரெடிமேட் கடைக்காரன் போன் செய்தான்."

"வீட்டு விலாசம் எங்கே என்பது தெரிந்ததா?"

"அதுவும் தெரிந்து விட்டது. ஆபீஸ் விலாசமும் என் மேசை மேல் இருக்கிறது"

"ஆபிசிற்கு வேண்டாம். அதுவும் டிவி ஆபிஸ் என்றால் உடனே அது விளம்பரம் ஆகும். இப்போது மணி இரவு ஏழரையாகி விட்டதால்

அந்தப் பெண் அவள் வீட்டிலேயே இருக்கலாம். இல்லா விட்டாலும் அவள் வரும் வரை வீட்டு ஆட்களை விசாரிக்கலாம். அதிகமான ஆட்கள் வேண்டும். திறமையான போலீஸ் அதிகாரிகள் இரண்டு பேரை உடனடியாக அனுப்புங்கள். எதற்கும் இரண்டு பேரிடமும் துப்பாக்கி இருக்கட்டும்"

**************

"ஆச்சார்யா மனைவியிடம் பேசினீர்களா?" சஹானா கேட்டாள்.

அக்ஷய் "ம்" என்றான்.

"ஏதாவது தகவல்?"

"கிடைத்தது. ஆனால் நான் எதிர்பார்த்த தகவல் இல்லை......" என்றவன் லலிதா சொன்னதெல்லாம் சொன்னான்.

"உங்களுக்கு அந்தம்மாள் சொன்னதில் நம்பிக்கை இல்லையா?"

"அந்தம்மாவை யாரோ ஏமாற்றியிருக்கிறார்கள்"

"எப்படி சொல்கிறீர்கள்?"

"சஹானா. ஆச்சார்யா கொலை பற்றிய பத்திரிகை செய்திகள் எல்லாம் பார்த்தீர்களா? சிபிஐ அடிஷனல் டைரக்டரை கொன்றிருக்கிறார்கள். எவனோ ஒரு ஆளைப் பிடித்து போலீஸ் அவன் தான் கொலைகாரன் என்கிறது. அவனைப் பற்றிப் படித்தால் அவன் சதா போதையுடன் இருந்தவன், பல பேரிடம் சண்டை சச்சரவு என்றிருந்த மூன்றாம் தர போதை நோயாளி மாதிரி தோன்றுகிறது. ஆனால் ஆச்சார்யாவைக் கொன்ற ஆளோ கச்சிதமாகக் கொலை செய்த திறமைசாலியாக இருக்கிறான். சிபிஐக்கு இவன் கொலை செய்யவில்லை என்று தெரியாமலா இருக்கும். ஆனாலும் மௌனமாக இருக்கிறது என்றால் அவர்களுக்குள்ளேயே கொலையாளி இருக்கக்கூடும். இல்லாவிட்டால் அவர்கள் ஒத்துழைப்போடு கொலை நடந்திருக்கக்கூடும். இப்போது யாரோ ஒரு சிபிஐ அதிகாரி வந்து ஆச்சார்யா மனைவியிடம் சொல்கிற இந்தக் கதையைக் கேட்டால் என்னைப் பிடிக்க அந்தம்மாளை பகடைக்காயாய் பயன்படுத்துகிற மாதிரி இருக்கிறது. என்னையும் பிடித்து கொன்று விட அவர்களும் முயற்சி செய்கிற மாதிரி தோன்றுகிறது..."

அவளுக்குத் தலை சுற்றுகிற மாதிரி இருந்தது. "அந்தம்மாள் கொடுத்த போன் நம்பரைப் பற்றி விசாரித்தீர்களா? மதுவிடம் வேண்டுமானால் கேட்டு சொல்லச் சொல்லட்டுமா?"

"நம்பர் கையில் இருந்தால், பணமும் செலவு செய்யத் தயாராக இருந்தால் எல்லாவிதமான தகவல்களும் கிடைக்கும் சஹானா. நான் அதைப் பற்றி எல்லாம் விசாரித்தாகி விட்டது. நாளைக்கு வருண் பிறந்த நாள். அது முடிந்து இங்கிருந்து போன பிறகு அவனைக் கவனிக்கிறேன்....." என்றவன் அது பற்றிய பேச்சு அத்துடன் முடிந்தது என்பது போல் மௌனமானான்.

அவன் 'கவனிக்கிறேன்' என்று சொன்ன விதம் அவளுக்கு இயல்பான விதத்தில் சொன்னது போல் தெரியவில்லை. மது அவன் சில நாட்களுக்கு முன் அந்தப் பையன் வீட்டுக்குப் போய் வந்த பிறகு அந்தப் பையன் வீட்டுக்கு மது போய் வந்து அவர்கள் பயத்தைப் பற்றி சொன்னது நினைவுக்கு வந்தது. சற்று முன் மது போன் செய்து இன்னொரு தகவல் சொன்னான். 'சஹானா, அந்தப் பையன் வீட்டுக்காரர்கள் இரவோடு இரவாக யாருக்கும் சொல்லாமல் எங்கேயோ போய் விட்டார்கள். வீடு பூட்டிக்கிடக்கிறது'

அவனைப் புரிந்து கொள்வது இன்னமும் சஹானாவிற்கு கஷ்டமாக இருந்தது. அவன் மனதில் என்ன ஓடுகிறது என்பதைப் புரிந்து கொள்ள அவளால் முடியவில்லை. அதுவும் சில சமயங்களில் அவன் கண்கள் அவளுடைய இதயத்தின் ஆழம் வரை போய்ப் பார்ப்பதுபோல் தெரிந்தது. சில வினாடிகளில் ஒன்றுமே நடக்காதது

போல் அவன் இருந்தான். ஆனாலும் அந்த ஆழமான பார்வையின் போது அவளுடைய இதயத்தின் ஆழத்தில் இருந்து அவளையும் அறியாமல் ஏதோ பதில் அவளைப் போய்ச் சேர்ந்தது போலிருந்தது.

அவள் கேட்டாள். "ஏன் அந்த ஆளை இங்கிருந்து போன பிறகு போய் பார்க்கிறேன் என்கிறீர்கள்?"

"இனி வரப் போகும் காலங்கள் அபாயமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது சஹானா. அதில் உங்களை எல்லாம் ஈடுபடுத்த எனக்கு மனமில்லை"

அவள் முகத்தில் கவலை படர்ந்தது. "இங்கிருந்து போன பிறகும் ஜாக்கிரதையாய் இருங்கள்"

அவன் புன்னகைத்தான். "சஹானா கடவுள் எனக்காகக் குறித்து வைத்திருக்கிற நேரத்திற்கு ஒரு நிமிஷம் முன்னாலும் நான் சாக முடியாது. ஒரு நிமிஷம் பின்னாலும் நான் சாக முடியாது. அதனால் இதில் பயம் கவலை இதற்கெல்லாம் அர்த்தமில்லை"

சொல்லிவிட்டு அக்ஷய் சுற்றும் முற்றும் பார்த்தான். மரகதம் சமையலறையில் ஏதோ வேலையாக இருந்தாள். அவள் சமையலறையில் வைத்திருந்த டேப் ரிகார்டரில் விஷ்ணு

சஹஸ்ரநாமம் கேட்டுக் கொண்டிருந்தது. வருண் பள்ளியில் எங்கோ பிக்னிக்கிற்கு கூட்டிக் கொண்டு போயிருந்தார்கள். அவன் வர இரவு எட்டரை ஆகி விடும்.

அவன் குரலைத் தாழ்த்திக் கொண்டு சொன்னான். "சஹானா நான் போவதற்குள் உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும். நீங்கள் என்னைத் தப்பாக நினைக்கக் கூடாது"

அவளுக்கு இதயம் ஒரேயடியாகப் படபடத்தது. "சொல்லுங்கள்"

அவன் ஒன்றும் சொல்லவில்லை. அவன் பார்வை ஜன்னல் வழியே கீழே தெரிந்த காட்சியில் ஐக்கியமாகி இருந்தது. அவன் திடீரென்று அவள் கண் முன்னாலேயே சிலை போல ஆனான்.

என்ன பார்க்கிறான் என்று ஆச்சரியத்துடன் எழுந்து சஹானா தானும் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். அவர்கள் ஃப்ளாட்டின் வாசலில் போலீஸ் ஜீப் ஒன்றிலிருந்து மூன்று போலீஸ் அதிகாரிகள் இறங்கினார்கள். இருவர் அவர்கள் மெயின் கேட்டைக் கடந்து உள்ளே வர ஒரு இளம் போலீஸ் அதிகாரி அந்த ஜீப்பில் சாய்ந்து நின்று கொண்டார். அவர் கையில் வயர்லஸ்
இருந்தது.

சஹானாவின் முகம் வெளிறியது. "அக்ஷய் நீங்கள் இங்கிருந்து ஓடி விடுங்கள்" என்று அவசரமாகச் சொன்னாள்.

அக்ஷய் அசையக் கூட இல்லை. அவன் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான்.

"அக்ஷய்! சீக்கிரம் ....."

அவளுடைய அவசரம் அவனை அவசரப்படுத்தவில்லை. அவன் நிதானமாக எழுந்தான். "சஹானா பயப்படாதீர்கள்"

அழைப்புமணி ஒலித்தது. சஹானா கேட்டாள். "என்ன செய்யப் போகிறீர்கள்?"

"கதவைத் திறக்கப் போகிறேன். நீங்கள் முடிந்த வரை வாயைத் திறக்காதீர்கள்" என்று அவளிடம் தாழ்ந்த குரலில் சொல்லிவிட்டு அக்ஷய் கதவைத் திறந்தான்.

## 34

அக்ஷய் கதவைத் திறந்த போது வெளியே அந்த இரண்டு போலீஸ் அதிகாரிகளும் நின்றிருந்தார்கள். இரண்டு பேரும் கிட்டத்தட்ட 25 முதல் 50 வயதுடையவர்களாக இருந்தார்கள்.

ஒருவர் பாதி வழுக்கைத் தலையுடன் பருமனாக இருந்தார். மற்றவர் ஒடிசலாக பெரிய மீசை உடையவராக இருந்தார்.

"போலீஸ்" என்று வழுக்கைத் தலையுடையவர் தன் அடையாள அட்டையைக் காட்டினார்.

வாசலில் இருந்து வழி விடாமல் அமைதியாக அந்த அடையாள அட்டையை வாங்கிப் பார்த்த பின்தான் அக்ஷய் அவர்களை உள்ளே விட்டான்.

"உள்ளே வாங்க சார். உட்காருங்கள்"

சஹானா ஸ்தம்பித்துப் போயிருந்தாள். போலீஸைப் பார்த்தவுடன் இம்மியளவும் அசராமல் அவன் அந்த அடையாள அட்டையைப் பரிசோதித்த விதம் நிலைமையை முழுதும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரு புதிய அக்ஷயை அவளுக்கு அறிமுகப்படுத்தியது.

"உங்களுக்கு யார் வேண்டும்?" அக்ஷய் இயல்பாக அவர்களிடம் கேட்டான்.

"நீங்கள் யார்?" வழுக்கைத் தலை கேட்டார். அவர்கள் கணக்கில்

வீட்டில் ஒரு கிழவி, சஹானா, சஹானாவின் மகன் மட்டுமே இருந்தார்கள்.

"அக்ஷய்" என்றவன் மரகதத்தைக் காண்பித்து "அவருடைய தங்கை மகன்" என்றான்.

"சஹானா என்கிறது....." வழுக்கைத் தலை இழுத்தார்.

சஹானாவைக் காண்பித்து "இவர் தான்" என்ற அக்ஷய் "சஹானாவின் மாமியார் அவர்கள். அவர்கள் தங்கை மகன் நான். என்ன விஷயம் சொல்லுங்கள்" என்றான்.

சஹானா பக்கம் திரும்பிய மீசைக்காரர் "நாங்கள் ஒரு தீவிரவாதியைத் தேடிக் கொண்டிருக்கிறோம். அந்தத் தீவிரவாதி உங்களுடன் இமயமலைச் சாரலில் இருந்து காரில் பயணம் செய்ததாக எங்களுக்குத் தகவல் கிடைத்தது...

சஹானா யோசிப்பது போல் பாவனை செய்தாள்.

"அந்த ஆளைப் பற்றி நாங்கள் இரண்டு மூன்று நாட்கள் முன்னால் பத்திரிக்கைகளிலும் டிவியிலும் கூட விளம்பரம் செய்தோம். ஆனாலும் துரதிர்ஷ்டவசமாக நீங்கள் எந்தத் தகவலும் எங்களுக்குத்

தெரிவிக்கவில்லை"

சஹானாவிற்குக் கோபம் வந்தது. "நீங்கள் இங்கே வெடிகுண்டு வைத்ததாக ஒரு ஆளைக் காண்பித்தீர்கள். கிட்டத்தட்ட அதே மாதிரி தோற்றமுள்ள ஆள் அந்த நேரத்தில் என்னுடன் காரில் வெகுதூரத்தில் இருந்தான். ஒரே ஆள் இரண்டு இடத்தில் ஒரே நேரத்தில் இருக்க முடியாது என்பதால் நான் அது வேறு ஆளாக இருக்கும் என்று நினைத்தேன்"

போலீஸ் அதிகாரிகள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பின் மீசைக்காரர் கவனமாகச் சொன்னார். "இது அரசாங்க பாதுகாப்பு விஷயம் என்பதால் நாங்கள் முழுத் தகவல்கள் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறோம்......"

"சஹானா, நீங்கள் சொன்னதும் சரியாக இருந்து இவர்கள் சொன்னதும் சரியாக இருக்க வாய்ப்பிருக்கிறது" அக்ஷய் ஆலோசனையுடன் சொன்னான்.

எல்லோரும் அவனையே பார்த்தார்கள். அக்ஷய் சொன்னான். "அவனும் இவனும் இரட்டைப்பிறவியாக இருக்கலாம்"

போலீஸ் அதிகாரிகள் முகங்களில் ஈயாடவில்லை. ஆனால் அக்ஷய்

கருத்திற்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் வழுக்கைத் தலை சஹானாவிடம் சொன்னார். "அந்த ஆளை நீங்கள் சந்தித்த நேரத்தில் இருந்து அவனைப் பற்றி எல்லா விவரங்களையும் நீங்கள் எங்களுக்குச் சொல்ல வேண்டும்"

சஹானாவிற்கு வாய் ஒட்டிக் கொண்டது போல் இருந்தது. அக்ஷய் சொன்னான். "சார் நான் சொல்கிறேன்...."

"உங்களுக்கு எப்படி அவனைத் தெரியும்?" மீசைக்காரர் சந்தேகத்தோடு கேட்டார்.

"சஹானா சொல்லித்தான். சார்.... உங்களுடைய விளம்பரத்தில் காட்டிய போட்டோவைப் பார்த்ததில் இருந்து சஹானா குழம்பிப் போய் விட்டார்கள்.. படம் பார்த்தால் அந்த ஆள் மாதிரி இருக்கிறது. ஆனால் அந்த ஆள் அந்த நேரத்தில் இங்கே இருக்க வாய்ப்பே இல்லையே என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். ஆனால் எனக்கு அந்த ஆள் நடவடிக்கையைப் பற்றி அவர்கள் சொன்னதெல்லாம் சந்தேகத்தை நிறையவே கிளப்பியது. அப்போதே அதை சஹானாவிடம் சொல்லியும் இருக்கிறேன்....."

"சந்தேகப்படுகிற மாதிரி என்ன நடவடிக்கை?" வழுக்கைத் தலை கேட்டார்.

"சார். ஆரம்பத்தில் இருந்தே சொல்கிறேனே"

"அதை ஏன் சஹானாவே சொல்லக் கூடாது?" மீசைக்காரர் சொன்னார்.

"சார் சாகப்போகிற உங்கள் மகனை ஒரு ஆள் காப்பாற்றினால், அவன் குற்றவாளி அல்ல என்று உங்களுக்கு நம்பிக்கை இருந்தால், நாளைக்கு அந்த ஆள் ஒரு குற்றவாளி என்று யார் சொன்னாலும் காட்டிக் கொடுப்பீர்களா? நீங்கள் மனதைத் தொட்டு பதில் சொல்லுங்கள்"

மீசைக்காரர் எந்த பதிலையும் சொல்லாமல் அவனையே கூர்ந்து பார்த்தார்.

ஆனால் அதையே ஒரு பதிலாக எடுத்துக் கொண்ட அக்‌ஷய் அவருக்கு எதிரில் இருந்த சோபாவில் சாய்ந்தபடியே சொன்னான். "அதே நிலைமை தான் சஹானாவுக்கும். நீங்கள் அவன் வெடிகுண்டு வைத்ததாகச் சொன்ன நேரம் தான் சஹானாவை அவனுக்கு சாதகமாக நினைக்க வைக்கிறது"

போலீஸார் இருவரும் சஹானாவைப் பார்த்தார்கள். அவள் ஒரு

பிரபல டிவி சேனலில் வேலை பார்ப்பவளாக இருந்திரா விட்டால் அவர்கள் அவளை விசாரித்திருக்கும் விதமே வேறு மாதிரியாக இருந்திருக்கும். மிகக் கவனமாக அணுக வேண்டிய கேஸ் இது என்று அவர்களுக்கு பல முறை எச்சரிக்கை விடப்பட்டிருந்ததால் தயங்கினார்கள். பின் வழக்கைத் தலையர் அவர்களிடம் ரகசியமாய் சொல்வது போல் சொன்னார். "ஒரு பயங்கரமான தீவிரவாதியை நேர் வழியில் பிடிக்க முடியாத சூழ்நிலையில் நாங்கள் இருக்கிறோம். அதனால் தான் இந்த குழப்பங்கள் எல்லாம்...."

சஹானா அக்ஷயைப் பார்த்தாள். அக்ஷய் சொன்னான். "என்ன நடந்ததோ அதைச் சொல்வதில் என்ன பிரச்னை சஹானா?"

சஹானா பேசாமல் இருந்தாள். என்ன செய்வது, என்ன சொல்வது என்று அவளுக்குத் தெரியவில்லை. அக்ஷய் அவள் தயக்கத்திற்கு வேறு அர்த்தம் உள்ளது போல் பெருமூச்சு விட்டபடி போலீஸ் அதிகாரிகளிடம் திரும்பினான்.

"சார். அந்த நாள் இவர்கள் மகன் வருண் ஒரு லாரியில் அடிபட்டு சாக இருந்தான். அந்த சமயத்தில் நீங்கள் சொன்ன ஆள் வந்து எப்படியோ காப்பாற்றி விட்டான். அவனுக்கு நன்றி சொல்லி இவர்கள் தன்னுடைய விசிட்டிங் கார்டு கொடுத்திருக்கிறார்கள். அவன் அதைப் பார்த்து விட்டு நானும் டில்லி தான் போக வேண்டும் என்று சொல்லி இருக்கிறான். இவர்கள் ‘வேண்டுமானால் காரில்

ஏறிக் கொள்ளுங்கள். நான் டில்லியில் இறக்கி விடுகிறேன்" என்றிருக்கிறார்கள். அவனும் இவர்கள் காரில் ஏறி இருக்கிறான். அப்போது தான் அவனிடம் லக்கேஜ் எதுவும் இல்லை என்பதை இவர்கள் கவனித்து இருக்கிறார்கள். அது பற்றி கேட்ட போது அவன் சொன்ன பதில் தான் எனக்கு அவன் மேல் முதல் சந்தேகத்தைக் கிளப்பியது...."

சொல்லி நிறுத்தி அவர்களை எதிர்பார்ப்போடு பார்த்தான். வழுக்கைத் தலை ஆர்வத்துடன் கேட்டார். "என்ன சொன்னான்"

"யாரோ அவனை அடித்துப் போட்டு அவனிடம் இருந்து துணிமணி, பணம் எல்லாம் கொள்ளையடித்துக் கொண்டு போய் விட்டார்கள் என்று கதை அளந்திருக்கிறான். ஏன் சார் சஹானா சொல்வதை வைத்துப் பார்த்தால் அவன் நல்ல திடகாத்திரமான ஆளாய்த்தான் தெரிகிறான். அப்படி இருக்கையில் ஆள்களே அதிகம் இல்லாத அந்த இடத்தில் இவனை அடித்துப் போட்டு பணம் மட்டுமல்ல துணிமணியும் எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள் என்றால் நம்பவா முடிகிறது? இந்தக் காலத்தில் துணிமணியைத் திருடுகிற தரித்திர கொள்ளைக்காரன் இருக்கிறானா சார்?"

சரியாகத் தான் சந்தேகப்பட்டாய் என்பது போல வழுக்கைத் தலை தலையாட்டினார். தண்ணீர் குடிக்கிற சாக்கில் யோசிக்க அக்ஷய்

சிறிது சமயம் எடுத்துக் கொண்டான். சஹானாவையும் அவனையும் சேர்த்துப் பார்த்து அடையாளம் காட்டி இருக்கிற ஆள் யாராக இருந்தாலும் அது மலைச்சாரலில் இருந்த டீக்கடைப் பக்கத்தில் இருந்திருக்க முடியாது என்று நம்பினான். அதிகாலை நேரம் முழு வெளிச்சம் இல்லாத நேரம் அது என்பதால் அந்தக் கணக்குப் போட்டான். அடுத்ததாக அவர்கள் இருவரையும் சேர்ந்து பார்த்தது ரெடிமேட் கடைக்காரனும், கண்ணாடிக் கடைக் காரனும்தான். இருவரில் ஒருவன் டிவியில் காண்பித்த போட்டோவை வைத்து அடையாளம் கண்டிருக்க வாய்ப்பு இருக்கிறது.

கண்ணாடிக் கடைக்காரன் அவர்களை வேண்டா வெறுப்பாகத்தான் கவனித்தான். அந்த நேரத்தில் அவன் கடைக்கு வந்திருந்த இளம்பெண் ஒருத்தியைக் கவர பிரம்மப் பிரயத்தனம் அவன் செய்து கொண்டிருந்ததால் அவன் அவர்களை அடையாளம் சொல்லும் அளவு கவனித்த மாதிரி தெரியவில்லை. அந்த ரெடிமேட் கடைக்காரன்தான் அவர்களை முழுவதுமாகக் கவனித்தவன். அவன் கடையில் டிவியும் கூட இருந்தது. அவன் தான் அந்த விளம்பரத்தையும், சஹானா டிவி நிகழ்ச்சியில் வந்ததையும் கவனித்துப் போன் செய்திருக்க வேண்டும். மின்னல் வேகத்தில் முடிவுக்கு வந்த அவன் தண்ணீர் குடித்து முடித்தவுடன் மீண்டும் தொடர்ந்தான்.

"சார்! அப்புறமாய் டில்லி வரை இவர்கள் கூட வந்த அவன் தன்னைப் பற்றி எந்தத் தகவலும் சொல்லவில்லை. வீடு டில்லியில் கரோல்பாகில் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறான். வேறெதாவது உதவி வேண்டுமா என்று சஹானா கேட்டதற்கு எனக்கு ரெடிமேட் ஆடைகள் ஏதாவது வாங்கிக் கொடுத்தால் பரவாயில்லை என்று சொல்ல இவர்களும் அவனுக்கு
வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். பிறகு திடீர் என்று ஒரு சிக்னலில் 'நான் இங்கேயே இறங்கிக் கொள்கிறேன்' என்று அவசர அவசரமாக இறங்கிப் போய் இருக்கிறான். அதுவும் இறங்கியவன் அடுத்த வினாடியே எங்கே போனான் எப்படிப் போனான் என்று தெரியவில்லை என்று சஹானாவே சொல்கிறார்கள். எனக்கென்னவோ இதெல்லாம் ஏதோ சந்தேகத்தைக் கிளப்புகிற மாதிரி இருக்கிறது"

போலீசார் இருவரும் ஒருவரை ஒருவர் மறுபடியும் பார்த்துக் கொண்டார்கள். அவர்களுக்குக் கிடைத்த தகவல்களை எல்லாம் வைத்துப் பார்க்கையில் இவன் சொன்னதில் பொய் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த ரெடிமேட் கடைக்குப் போயிருக்கிறார்கள் என்று அவர்களுக்குத் தெரிந்த தகவலைக் கூட இந்த இளைஞன் தானாகவே சொல்லியிருக்கிறான்.

ஆனால் மீசைக்காரருக்கு அவன் மேல் ஏனோ சந்தேகம் நீடித்தது. அவர் அவனை சந்தேகக் கண்ணோட்டத்திலேயே பார்த்தார்.

35

அக்‌ஷய் அந்த மீசைக்காரரின் சந்தேகத்தைக் கவனித்தாலும் அலட்டிக் கொள்ளவில்லை. சஹானாவிடம் சொன்னான். "சஹானா. நான் அவனைப் பற்றி சந்தேகப்பட்டது எல்லாம் உண்மையாகி விட்டது பார்த்தீர்களா. இனியாவது வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பி விடாதீர்கள்"

சஹானா ஒன்றும் சொல்லாமல் அவனைப் பார்த்தாள். ஆரம்பத்தில் இருந்து அலட்டாமல், பதறாமல் சற்று சோம்பலாக சோபாவில் சாய்ந்து கொண்டு பேச அவனால் எப்படி முடிகிறது என்று அவள் திகைத்தாள்.

"சஹானா. உங்கள் டிவி ரேட்டிங் உடனடியாக ஒரு வழி சொல்கிறேன் கேளுங்கள். அந்தத் தீவிரவாதி உங்களுடன் மணிக்கணக்கில் காரில் பயணம் செய்து வந்திருக்கிறான். ஆனால் அதே நேரத்தில் அவன் இங்கேயும் வெடிகுண்டு வைத்திருக்கிறான். இதிலிருந்து இன்னொருவன் அவன் முகஜாடையிலேயே இருக்கிறான் என்று தெரிகிறான். அதை சொல்ல இந்த

போலீஸ்காரர்கள் சங்கடப்பட்டாலும் நமக்கு அப்படித்தான் தோன்றுகிறது. அவர்கள் இரட்டைப் பிறவியாக இருக்கலாம். இல்லை அவன் தன்னைப் போலவே இன்னொருவனை சர்ஜரி கூட செய்திருக்கலாம். அவனை வைத்து நீங்கள் பெரிய பரபரப்பை உண்டாக்கலாம். அவன் நல்லவனா, கெட்டவனா? உயிரைக் காப்பாற்றும் உத்தமனா, உயிரைக் குடிக்கும் எமனா? என்றெல்லாம் முதலில் சில நாட்கள் விளம்பரம் செய்து அவன் பற்றி நீங்கள் துப்பறிய ஆரம்பிக்கலாம். தீவிரவாதியுடன் ஐந்து மணி நேரப் பயணம் என்று சொல்லி நீங்கள் தனிப்பட்ட முறையில் கூட பிரபலம் ஆகலாம். எனக்குத் தோன்றுகிறது சஹானா இது உங்களுக்கு ஒரு பொன்னான சந்தர்ப்பம். நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அவ்வளவு தான் நான் சொல்வேன்"

அவ்வளவு தான் நான் சொல்வேன் என்று முடித்தது போலீஸ்காரர்கள் வயிற்றில் புளியைக் கரைத்தது. 'அடப்பாவி இதற்கு மேல் என்னடா சொல்ல வேண்டும்" எனறு மனதினுள் பொரிந்து தள்ளிய மீசைக்காரர் அந்த அதிகப்பிரசங்கியை முறைத்து விட்டு சஹானா பக்கம் திரும்பினார்.

"மேடம் தயவு செய்து இந்த முட்டாள்தனம் எல்லாம் செய்து விடாதீர்கள். இது நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விஷயம். அதனால் நீங்கள் இதைப்பற்றி யாரிடமும் எதுவும் சொல்லக்கூடாது

என்று நாங்கள் எச்சரிக்கிறோம். முக்கியமாக உங்கள் டிவிக்கெல்லாம் சொல்லவே கூடாது"

அக்‌ஷய் கிண்டலாகச் சொன்னான். "சார் இது மீன்குட்டியிடம் நீந்தக்கூடாது என்று சொல்கிற மாதிரி இருக்கிறது. அவர்கள் தொழிலே இந்த மாதிரி பரபரப்பை விற்பது தானே சார்"

வழுக்கைத்தலையருக்கு அவன் வாயில் ப்ளாஸ்திரி எதாவது ஒட்டி வைத்தால் என்ன என்று தோன்றியது. இவன் சொல்வதை எல்லாம் அந்தப் பெண் கேட்டு இதை விளம்பரப்படுத்தினால் அதை விடப் பெரிய பிரச்னை வேறு இருக்க முடியாது என்பதில் சந்தேகம் இல்லை.

"தம்பி. பரபரப்பு என்ற பெயரில் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி விடக்கூடாது." என்று சொன்னார்.

மீசைக்காரரர் அங்கிருந்து முக்கியமாய் அவனிடமிருந்து கிளம்பினால் போதும் என்ற முடிவுக்கு வந்தவராக எழுந்தார்.

சஹானாவிடம் சொன்னார். "மேடம். உங்களிடமிருந்து நாங்கள் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம். இந்த விஷயம் பற்றி எங்களைத் தவிர யாரிடமும் பேசாதீர்கள். அவன் பெரிய தீவிரவாதி என்பதில்

எங்களுக்கு எந்த சந்தேகமும் இல்லை. அவன் உங்களுக்கு எந்த பிரச்னையையும் செய்யாமல் இருந்தது உங்கள் நல்ல நேரம். அவனைப் பிரபலப்படுத்தினால் எங்கள் வேலையும் கெடும். அவனும் உங்களை தண்டிக்க வரலாம். அதனால் தயவு செய்து ரகசியமாகவே இதை வையுங்கள். அவன் எப்போதாவது வந்தாலோ, போனில் தொடர்பு கொண்டாலோ உடனடியாக எங்களுக்குத் தெரிவியுங்கள்"

அவர் நீட்டிய விசிட்டிங் கார்டை சஹானா வாங்கிக் கொண்டாள்.

மீசைக்காரர் மரகதம் பக்கம் திரும்பினார். "அம்மா நீங்களும் ஜாக்கிரதையாக இருங்கள். அவன் வந்தால் எங்களுக்கு தகவல் சொல்லுங்கள்"

அவர் பேசப் பேச மரகதத்திற்கு வியர்த்தது. வயிற்றைக் கலக்கியது.

அவள் முகத்தைப் பார்த்த அக்ஷய் சிரித்தபடி சொன்னான். "பெரியம்மா. பயப்படாதீர்கள். அவன் கண்டிப்பாக வருவான் என்று அவர் சொல்லவில்லை. வந்தால் சொல்லுங்கள் என்கிறார் அவ்வளவு தான்."

மரகதத்திற்கு இன்னும் வியர்த்தது. என்ன மனிதனிவன்? கொஞ்சம்

கூட பயமே இல்லாமல் யாரையோ பற்றி சொல்வது போல் அனாயாசமாகப் பேசுகிறானே.

மீசைக்காரர் மரகதத்தை தைரியமூட்டும் வகையில் பார்த்தார். பின் அக்ஷய் பக்கம் திரும்பினார். "நீங்களும் தான். அவனைப் பற்றி எதாவது தகவல் தெரிந்தால் சொல்லுங்கள்"

"நான் நாளை சஹானாவின் மகன் பிறந்த நாள் முடிந்தவுடன் போய் விடுவேன் சார்......"

மீசைக்காரர் அவன் எங்கு போகப் போகிறான். அவன் விலாசம் என்ன என்று விசாரித்து அவனைப் பற்றிய எல்லா விவரமும் சேகரிப்பது நல்லது என்ற முடிவுக்கு வந்தார். அவர் அவனைப் பற்றி கேட்க வாய் திறந்த போது அவன் முந்திக் கொண்டு அவரிடம் ரகசியமாய் நெருங்கி வந்து கேட்டான். "சார் உண்மையில் அவனும், இங்கு குண்டு வைத்தவனும் கூட்டாளிகளா, இல்லை இரட்டையர்களா?..."

"நான் அவனைப் பற்றிய ரகசியத் தகவல்கள் எதுவும் அவன் பிடிபடும் வரை சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். மன்னிக்கவும்" என்றவர் அவசரமாகத் தன் சகாவைப் பார்த்து தலையசைத்தார். இருவரும் கிளம்பினார்கள். மரகதமும்

சஹானாவும் நிம்மதிப் பெருமூச்சு விட அக்ஷய் அவர்களைப் பின் தொடர்ந்தான்.

"சார் ஒரு நிமிஷம்...."

போலீஸ்காரர்கள் இருவரும் நின்றார்கள்.

"நான் கண்டிப்பாக சஹானாவிடம் பேசி அவன் வந்தாலோ, பேசினாலோ ரகசியமாக உங்களுக்குத் தெரிவிக்க ஏற்பாடு செய்கிறேன். எனக்கு உங்களால் வேறு ஒரு உதவி ஆக வேண்டும். செய்வீர்களா?"

"என்ன உதவி" மீசைக்காரர் சந்தேகத்தோடு பார்த்தார்.

மிக ரகசியமாக அவர் அருகில் வந்து சொன்னான். "நான் ஒரு முஸ்லீம் பெண்ணை மனதாரக் காதலிக்கிறேன். அவள் ஆக்ராவில் இருக்கிறாள். அவர்கள் வீட்டிலும் எங்கள் வீட்டிலும் எங்கள் கல்யாணத்திற்கு பெரிய எதிர்ப்பு இருக்கிறது. ஒரு வேளை நாங்கள் இருவரும் ரகசியத் திருமணம் செய்து கொண்டால் உங்கள் போலீஸ் டிபார்ட்மெண்ட் எங்களுக்குப் பாதுகாப்பு தருமா?"

அவர்கள் நின்று கொண்டிருந்தது ஜெய்பால்சிங் வாசலில்

என்பதாலும், அவர் வாசலில் தான் நின்று கொண்டிருந்தார் என்பதாலும் அவன் ரகசியமாக சொல்லிக் கொண்டிருந்ததைப் பின்னால் வந்து நின்றபடி கேட்கத் தவறவில்லை.

"ஓ நீங்கள் இரண்டு பேரும் போலீசா?"

இரு போலீசாரும் அக்‌ஷயை முறைத்தனர். அக்‌ஷய் அவர்களுக்காக பதில் சொன்னான். "ஆமாம்"

ஜெய்பால்சிங் அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார். "அக்‌ஷய் நீ ஏன் பயப்படுகிறாய். நீங்கள் போலீஸ் ஸ்டேஷனில் போய் நின்றால் அவர்கள் கண்டிப்பாகப் பாதுகாப்பு தந்து தான் ஆக வேண்டும். அது அவர்கள் கடமை. ஏன் சார் நீங்கள் பாதுகாப்பு செய்ய மாட்டீர்களா?"

வழுக்கைத்தலையர் சொன்னார். "இவர் சொல்வது ஆக்ராவில். அதனால் அந்தப் போலீஸ்காரர்கள் தான் இவருக்கு உதவ முடியும். ஆனால் சட்டப்படி இரண்டு பேரும் மேஜரானால் இதில் பிரச்னை இருக்க வாய்ப்பில்லை"

அக்‌ஷய் முகத்தில் கவலை விலகி லேசாக நம்பிக்கை தெரிந்தது.

"உங்களுக்கு ஆக்ராவில் தெரிந்த போலீஸ் அதிகாரி இருக்கிறார்களா? ப்ளீஸ் எனக்காக நீங்கள் அவர்களிடம் பேச முடியுமா?"

ஜெய்பால்சிங் அவனுக்காக பரிந்து பேசினார். "சார் பையன் நல்ல பையன். உயிருக்கு உயிராக அந்தப் பெண்ணைக் காதலிக்கிறான். முடிந்தால் உதவி செய்யுங்களேன்"

மீசைக்காரருக்கு அங்கிருந்து போனால் போதுமென்றாகி விட்டது. "அங்கு என் நண்பர்கள் யாராவது இருக்கிறார்களா என்று பார்க்கிறேன். இருந்தால் கண்டிப்பாகச் சொல்கிறேன். எங்களுக்கு அவசரமாகப் போக வேண்டும். எக்ஸ்க்யூஸ் மீ"

இருவரும் அங்கிருந்து வேகமாக நடந்தார்கள்.வெளியே வந்தவுடன் முதல் வேலையாக மீசைக்காரர் செல்போனில் தன் மேலதிகாரியிடம் சொன்னார். "சார். அந்தப் பெண்ணிடம் பேசி விட்டு வந்தோம்....." அவர் சுருக்கமாகச் சொன்னதைக் கேட்டு விட்டு அந்த அதிகாரி சொன்னார். "இது விஷயமாய் இன்னொருவர் உங்களிடம் பேச விரும்புகிறார். அவர் தான் இந்த வழக்கை மேல் மட்டத்தில் பார்த்துக் கொண்டு இருக்கிறார். அவர் சிறிது நேரத்தில் பேசுவார். அவரிடம் விவரமாகச் சொல்லுங்கள். நீங்கள் அங்கிருந்து கிளம்பும் முன்னால் பேச வேண்டும் என்று அவர் சொல்லி இருக்கிறார்.."

சிறிது நேரத்தில் சிபிஐ மனிதன் மீசைக்காரருக்குப் போன் செய்தான். "அங்கே போனதிலிருந்து வரும் வரை நடந்ததெல்லாம் எனக்கு ஒன்று விடாமல் சொல்லுங்கள்"

அவன் யாரென்று மீசைக்காரருக்குத் தெரியாது என்றாலும் அவன் பேசிய தோரணை மேலதிகாரி சொன்ன நபர் தான் என்பதைத் தெரிவித்தது. மீசைக்காரர் சொல்ல ஆரம்பித்தார். இடைமறிக்கா விட்டாலும் ஆரம்பத்திலேயே சஹானா வீட்டில் இருந்த அந்த இன்னொருவன் சிபிஐ மனிதனின் மனதில் பெரிய சந்தேகத்தைக் கிளப்பினான். அதுவும் சஹானாவுக்குப் பதிலாக நடந்ததை எல்லாம் அவன் தான் சொன்னான் என்று தெரிந்த போது அவன் சந்தேகம் பலத்தது. உடனே இடைமறித்தான். "ஒரு நிமிஷம்... அந்த ஆள் ஏன் நாம் தேடும் ஆளே மாறு வேஷத்தில் இருப்பவனாக இருக்கக் கூடாது?"

36

"**எ**னக்கும் ஆரம்பத்தில் அவன் மேல் சந்தேகம் இருந்தது சார். ஆனால் அவன் அந்தத் தீவிரவாதியாகக் கண்டிப்பாக இருக்க முடியாது சார். இவன் ஆக்ராவில் ஒரு முஸ்லீம் பெண்ணைக் காதலித்துக் கொண்டிருக்கும் ரோமியோ சார். வாயைத் திறந்தால்

மூட மாட்டேன்கிறான். இவன் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள தவித்துக் கொண்டிருக்கிறான். இவனை சஹானா பக்கத்து வீட்டுக்காரருக்கெல்லாம் நன்றாகத் தெரிந்திருக்கிறது. இவனை மட்டுமல்ல. இவன் காதலைக் கூட அந்த ஆள் தெரிந்து வைத்திருக்கிறார். இவன் கல்யாணத்தை எப்படியாவது நடத்திக் கொடுக்க அந்த ஆளும் கெஞ்சுகிறார்...."

சிபிஐ மனிதன் சந்தேகம் ஓரளவு தீர்ந்தது. அந்த இளைஞன் அமானுஷ்யனாக இருந்தால் இப்படி எல்லோரிடமும் நட்பு பாராட்டுபவனாகவோ, வாயாடியாகவோ இருக்க வாய்ப்பில்லை. "சரி மேலே சொல்லுங்கள்"

மீசைக்காரர் நடந்தது அனைத்தையும் ஒன்று விடாமல் சொன்னார். கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த சிபிஐ மனிதனுக்கு அந்தப் பெண் சஹானா டிவிக்காரியாக இல்லா விட்டால் இன்னும் ஒழுங்காக விசாரித்திருக்கலாம் என்று தோன்றியது. இப்போதைக்கு ரகசியமே பிரதானமான விஷயமாக இருப்பதால் அவளுக்கு அதிக நெருக்கடி தருவது உசிதமல்ல என்று அவனுக்குத் தோன்றியது. அந்த அதிகப்பிரசங்கி சஹானாவிற்கு ஆலோசனை சொன்னது போல அந்த ரெயின்போ டிவிக்காரர்கள் இதை மேலும் குடைந்து ஒன்று கிடக்க ஒன்று ஆகி விட்டால் பிரச்னை சிக்கலாகி விடும் என்று தோன்றியது.

எல்லாம் கேட்டு முடித்த பின் சிபிஐ மனிதன் சொன்னான். "அவள் வீட்டுக்கு வெளியேயும் காவலுக்கு மாறு வேடத்தில் ஆள்களை நிறுத்துங்கள். அந்த வீட்டு நபர்கள் அந்த புதிய ஆள் உட்பட யார் எங்கே போனாலும் பின் தொடர ஏற்பாடு செய்யுங்கள். அவள் ஃபோனை டேப் செய்யவும் ஏற்பாடு செய்யுங்கள்..."

*********

மீசைக்காரர் வெளியில் ஜீப்பருகே நின்று போனில் நிறைய நேரம் பேசுவதைப் பார்த்து விட்டு வீட்டுக்குள் நுழைந்த அக்ஷய் மரகதத்தின் படபடப்பு இன்னும் குறையாததைக் கவனித்தான்.

"என்ன பெரியம்மா! அந்தத் தீவிரவாதியைத்தான் அன்றைக்கே இறக்கி விட்டாயிற்றே. இன்னும் என்ன பயம்?" அக்ஷய் சிரித்துக் கொண்டே கேட்டான்.

"உன்னால் எப்படி இவ்வளவு அமைதியாய் இருக்க முடிகிறது என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு மாரடைப்பே வந்து விடும் போல இருந்தது" மரகதம் படபடப்பு நீங்காமல் சொன்னாள்.

"பயம்தான் முதல் எதிரி பெரியம்மா. அது மனதில் வந்து விட்டால்

நாம் அகப்பட்டுக் கொள்வது நிச்சயம். எதிரிக்குப் பலம் கிடைப்பதே நம் பயத்தால்தான்....."

"எல்லாம் சொல்லும் போது கேட்க நன்றாய் தான் இருக்கிறது. ஆனால் இது மாதிரியான சந்தர்ப்பம் வரும் போது கைகால் எல்லாம் வெடவெட என்று நடுங்குகிறது..."

மரகதத்தைப் பரிவுடன் அக்ஷய் பார்த்ததை சஹானா பார்த்தாள். அவள் கணவன் ஒரு நாளாவது மரகதத்தை அப்படிப் பார்த்ததாக அவளுக்கு நினைவில்லை.

மரகதம் கேட்டாள். "நீ அப்படியானால் இனி இங்கே இருந்து போக வேண்டியதில்லை அல்லவா? அவர்கள் தான் நீ சொன்னதை நம்பி விட்டார்களே"

"இல்லை பெரியம்மா. இனி நான் இங்கிருப்பது ஆபத்து. நான் இனியும் இங்கிருந்து உங்களுக்கெல்லாம் பெரிய ஆபத்தை ஏற்படுத்த விரும்பவில்லை"

மரகதம் முகத்தில் வாட்டம் தெரிந்தது.

அக்ஷய் தொடர்ந்தான் "... பெரியம்மா, சஹானா இரண்டு பேரும்

நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். நான் இங்கிருந்து போன பின் முடிந்த அளவு எச்சரிக்கையாகத்தான் இருக்கப் போகிறேன். ஆனால் விதி எனக்காக என்ன எழுதி வைத்திருக்கிறது என்று தெரியவில்லை. நான் அவர்களிடம் பிடிபடலாம். இல்லை அவர்களால் கொல்லப்படலாம்...."

சஹானா மரகதம் இருவரும் அவனைத் திகிலோடு பார்த்தார்கள்.

அவன் குரல் மென்மையாகியது. "நெருப்பு என்கிறதால் வாய் வெந்து விடாது. ஒரு பேச்சுக்காகச் சொன்னேன். எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. அதனால் தான் சொன்னேன். ஒருவேளை அப்படி ஆகி விட்டால் நீங்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்பட்டதாகக் காட்டிக் கொள்ளக் கூடாது. நான் உங்களுக்கு வேண்டப்பட்டவன் என்பது போல் யாருக்கும் சந்தேகம் வந்து விடும்படி நடந்து விடக்கூடாது. உங்களைப் பொருத்த வரை வருணைக் காப்பாற்றியதற்காக எனக்கு காரில் நீங்கள் லிஃப்ட் தந்தீர்கள். டிரஸ் வாங்கித் தந்தீர்கள். அதோடு நீங்கள் என்னைத் தலைமுழுகி விட்டீர்கள். நான் போலீசில் மாட்டினாலும், செத்தாலும் அதில் உங்களுக்கு எந்த பெரிய வருத்தமும் இல்லை என்பது போல் நடந்து கொள்ள வேண்டும்"

மரகதத்தின் கண்களில் நீர் திரையிட்டது. சஹானா அவனிடம் கேட்டாள். "ஏன் எங்களை என்னென்னவோ சொல்லி பயமுறுத்துகிறீர்கள்?"

"சஹானா, நான் சொன்னது போல் நீங்கள் நடந்து கொள்ளா விட்டால் உங்களுக்கும் அவர்களிடம் இருந்து ஆபத்து வந்து விடும். நான் செத்தாலும் பரவாயில்லை. ஆனால் என்னால் உங்களுக்கெல்லாம் ஆபத்து வருகிறது என்றால் என்னால் தாங்க முடியாது. இந்த வீட்டில் என்னைத் தங்க வைத்து சாப்பாடு போட்டு இருக்கிறீர்கள். உங்கள் இடத்தில் வேறு யார் இருந்தாலும் அதைச் செய்திருக்க மாட்டார்கள் சஹானா. ஏதாவது பணம் கொடுத்திருக்கலாம். ஆனால் இந்த அளவு தயவு காட்டியிருக்க மாட்டார்கள். உங்களுக்கு திருப்பி நான் எந்த நல்லதை செய்யா விட்டாலும் உங்களுக்கு என்னால் கெடுதலாவது ஆகாமல் இருக்க வேண்டும் என்று மனதார நான் நினைக்கிறேன்....."

சஹானா எரிச்சலுடன் இடைமறித்தாள். "நான் நேர்மாறாய் நினைக்கிறேன். உங்கள் உயிரைப் பணயம் வைத்து என் குழந்தையைக் காப்பாற்றி இருக்கிறீர்கள். வாழ்நாள் எல்லாம் உங்களை இங்கே தங்க வைத்து சாப்பாடு போட்டாலும் அந்தக் கடனை என்னால் தீர்க்க முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை..."

அவன் ஒரு பெருமூச்சு விட்டு விட்டுக் கெஞ்சும் குரலில் சொன்னான். "எது எப்படியோ. நான் சொன்னதற்கு சரி என்று தயவு செய்து இரண்டு பேரும் ஒத்துக் கொள்ளுங்கள்"

சஹானா தலையசைத்தாள். மரகதம் சொன்னாள். "உனக்கு ஒன்றும் ஆகாது"

அவன் புன்னகை செய்தான். சிறிது நேரம் மூவரும் மௌனமாக இருந்தார்கள். பின் சஹானா கரகரத்த குரலில் சொன்னாள். "வருண் எப்படி நீங்கள் போவதை எடுத்துக் கொள்வான் என்று தெரியவில்லை. இந்த சில நாட்களில் அவன் உங்களுடன் நிறையவே ஒட்டிக் கொண்டு விட்டான். அவனுக்கு நீங்கள் தான் எப்படியாவது சொல்லிப் புரிய வைக்க வேண்டும்."

அக்‌ஷய் தலையசைத்தான்.

சஹானா கேட்டாள். "இங்கிருந்து போன பிறகு எங்கிருக்கிறீர்கள் என்பதையாவது தெரிவிப்பீர்களா?"

"நான் பொய் சொல்ல விரும்பவில்லை சஹானா. நான் உங்களைத் தொடர்பு கொள்வது உங்களுக்கு ஆபத்தில் தான் முடியும். அதனால்

என்னிடமிருந்து அதை எல்லாம் எதிர்பார்க்காதீர்கள்"

சஹானா ஒன்றும் சொல்லவில்லை. மரகதம் எழுந்து சமையலறைக்குப் போய் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

வருண் வந்த பிறகு அக்ஷய் அவனை அழைத்துக் கொண்டு மொட்டை மாடிக்குச் சென்றான். அங்கு அந்த நேரத்தில் யாரும் இருக்கவில்லை. அவனைக் கீழே உட்கார வைத்துத் தானும் அவன் எதிரே உட்கார்ந்தான்.

"வருண். இன்றைக்கு என்னைத் தேடிக் கொண்டு போலீஸ் உங்கள் வீட்டிற்கே வந்து விட்டார்கள்..."

வருண் கண்களில் பயம் தெரிந்தது. "அப்புறம்...."

"நான் உன் பாட்டியின் தங்கை மகன் என்கிற மாதிரி பேசி நம்ப வைத்து விட்டேன்...."

வருண் முகத்தில் நிம்மதி தெரிந்தது.

"ஆனால் நான் இனியும் உங்கள் வீட்டில் இருப்பது ஆபத்து வருண். நான் உன் பிறந்த நாள் முடிந்து போய் விடப் போகிறேன்"

வருண் முகத்தில் ஓங்கி அறைந்தது போன்றதொரு வலி தெரிந்தது. ‘போக வேண்டாம்’ என்று அவனைக் கெஞ்சி சம்மதிக்க வைக்க வருண் எண்ணினான். ஆனால் அக்‌ஷய் முகத்தில் தெரிந்த உறுதி அவன் இனி முடிவை மாற்றிக் கொள்ள மாட்டான் என்பதைப் புரிய வைத்தது.

அழும் குரலில் வருண் கேட்டான். "திரும்பி வருவீர்களா அங்கிள்"

‘மாட்டேன்’ என்று சொல்ல முனைந்த அக்‌ஷய் வருண் முகத்தைப் பார்த்து அதைச் சொல்ல சக்தி இல்லாமல் "தெரியவில்லை வருண்" என்றான்.

வருண் அவன் மடியில் ஏறி உட்கார்ந்து விசித்து விசித்து அழ ஆரம்பித்தான்.

அக்‌ஷய் கண்களும் லேசாகக் கலங்கின. என்ன சொல்லித் தேற்றுவதென்று அவனுக்குத் தெரியவில்லை. அவனைக் கட்டியணைத்துக் கொண்டு அவனை அழ விட்டான். வருண் அழுகை சிறிது நேரத்தில் குறைந்தது.

"நான் நாளைக்குத் தான் உன்னிடம் சொல்ல வேண்டும் என்று

நினைத்தேன். பிறகு உன் பிறந்த நாளில் நீ அழவோ, சோகமாக இருக்கவோ கூடாது என்று தான் சொல்ல வேண்டாம் என்று விட்டேன். எனக்கும் உன்னை விட்டுப் போவது வருத்தம் தான் வருண். ஆனால் நான் இனி இங்கு இருப்பது எனக்கும் ஆபத்து. உங்களுக்கும் ஆபத்து. அதனால் தான் போகிறேன். ஆனால் எங்கு போனாலும் என்ன ஆனாலும் உன் ஞாபகம் என் மனதில் என்றைக்கும் இருக்கும். நீயும் என்னை மறக்க மாட்டாய் தானே"

மீண்டும் கண்களில் அருவியாய் கண்ணீர் பெருக வருண் மறக்க மாட்டேன் என்று தலையசைத்தான்.

"எனக்கு உன் ஞாபகம் வரும் போதெல்லாம் நாம் சேர்ந்து சந்தோஷமாய் இருந்த சமயத்தை எல்லாம் நினைத்து சந்தோஷப் படுவேன். நீயும் அதே மாதிரி என் ஞாபகம் வரும் போதெல்லாம் அதையே நினைத்து சந்தோஷப்பட வேண்டும். சரியா?"

அது எத்தனை கஷ்டமான காரியம் என்பதை உணராத வருண் சரி என்று வெகுளித்தனமாகத் தலையசைத்தான்.

"நீ இன்றைக்கே உன் மனதை சமாதானப்படுத்திக் கொள்ள வேண்டும். நாளைக்கு முழுவதும் நாம் சந்தோஷமாக உன் பிறந்த நாளைக் கொண்டாடப் போகிறோம். நம் வாழ்க்கையில் நாம்

நினைத்துப் பார்க்க ஒரு மிக சந்தோஷமான நாளாய் உன் பிறந்த நாள் இருக்கப் போகிறது. சரியா?"

"எனக்கு நீங்கள் ஒரு சத்தியம் பண்ணித் தந்தால் தான் நான் சந்தோஷமாய் இருப்பேன்"

"என்ன சத்தியம்"

"நீங்கள் கண்டிப்பாய் ஒரு நாள் திரும்பி வருவீர்கள் என்று சத்தியம் செய்யுங்கள்" வருண் தன் கையை நீட்டினான்.

அக்‌ஷய் அவனையே சிறிது நேரம் பார்த்து விட்டு சத்தியம் செய்தான். "நான் உயிரோடிருந்தால் கண்டிப்பாக ஒரு நாள் திரும்பி வருவேன்"

வருணுக்கு அவன் சொன்ன வாக்கியத்தின் முதல் பகுதியின் முழு அர்த்தம் சரியாக விளங்கவில்லை என்றாலும் பிற்பகுதி சத்தியத்தால் அவன் மனம் அப்போதைக்கு அமைதியடைந்தது.

வருணின் பிறந்த நாள் விழாக் கொண்டாட்டத்தின் முழுப் பொறுப்பையும் அக்ஷய் தான் மேற்கொண்டிருந்தான். அந்த அடுக்குமாடிக் கட்டிடத்தில் உள்ள வருணின் அனைத்து நண்பர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் தன் பிறந்த நாளுக்கு வரும்படி வருண் அழைத்திருந்தான்.

வருணின் தந்தை இருந்த வரை அவன் சில குறிப்பிட்ட வீடுகளை மட்டும்தான் கூப்பிட அனுமதி உண்டு. வருணின் நண்பர்களிலேயே சிலர் பிறந்த நாள் விழாவுக்கு வர அனுமதி கிடையாது. "அந்தப் பையன் பொறுக்கி மாதிரி இருக்கிறான்", "இந்தப் பையன் அம்மாவின் கேரக்டர் சரியில்லை" என்று பலரும் தட்டிக் கழிக்கப்படுவார்கள். பிறந்த நாள் விழா முழுவதும் ஒருவித இறுக்கத்துடன் நடக்கும். அந்த விழாவில் இரண்டு மூன்று முறையாவது வருண் தந்தையிடம் திட்டு வாங்குவான். ஒரு முறை அனைவர் முன்னிலையிலும் அடி கூட வாங்கி இருக்கிறான்.

இந்த முறை இத்தனை பேரை அழைத்திருப்பது தெரிந்த போது சஹானா வருணிடம் சொன்னாள். "இத்தனை பேருக்கு நம் வீட்டில் இடம் எங்கே இருக்கிறது வருண்?"

"அக்ஷய் அங்கிள் இந்த தடவை மொட்டை மாடியில் பிறந்த நாள் கொண்டாடலாம் என்று சொல்லி இருக்கிறார்"

"மொட்டை மாடியில் எல்லாம் கொண்டாட வேண்டும் என்றால் முதலில் செகரட்டரியிடம் அனுமதி வாங்க வேண்டும் வருண்"

"அதை நானும் அங்கிளும் போய் வாங்கி விட்டோம். செக்ரட்டரி அங்கிளையும் கூப்பிட்டிருக்கிறோம்" சொல்லி விட்டு வருண் தாயைப் பார்த்து கண்ணடித்தான். மகன் முகத்தில் தெரிந்த சந்தோஷத்தைப் பார்த்து சஹானா புன்னகைத்தாள்.

பிறந்த நாள் அன்று காலையும் வருணுக்கு புதிய ஆடைகள் எல்லாம் போட்டு விட்டது அக்ஷய் தான். வருண் பள்ளிக்கூடம் சென்ற பின் ஒரு கணம்கூட அக்ஷய் ஓய்வாக உட்காரவில்லை. மொட்டை மாடியில் ஆயத்தங்கள் செய்வதில் இருந்து வேண்டிய உணவு வகைகளை வெளியே ஓட்டலில் இருந்து தருவிப்பது வரைக்கும் எல்லாவற்றையும் அவன் தான் பார்த்துக் கொண்டான். அவன் பலமுறை வெளியே செல்கையில் எல்லாம் சீருடை இல்லாத போலீசார் அவனைப் பின் தொடர்ந்ததை அவன் கவனித்த மாதிரியே காட்டிக் கொள்ளவில்லை.

வருண் பிறந்த நாளை ஒட்டி அக்ஷய் மரகதத்திற்கும், சஹானாவிற்கும் கூட ஆடைகள் வாங்கி இருந்தான். மரகதத்திற்கு அழகான அரக்கு நிறத்தில் பட்டுப்புடவையும், சஹானாவிற்கு

ரோஸ் நிறத்தில் ஒரு அழகான சுடிதாரும் வாங்கியதை வருண் பள்ளியில் இருந்து வரும்முன் அவன் தந்த போது இருவரும் திகைத்தார்கள்..

மரகதத்தின் கண்களில் நீர் கோர்த்தது. "பிறந்த நாள் வருணுக்குத்தானே. எனக்கெல்லாம் எதற்கு?"

"உங்கள் பிறந்த நாள் எப்போது என்று எனக்குத் தெரியாது. அந்த சமயத்தில் நான் இருக்கவும் மாட்டேன். அதனால்தான் வாங்கினேன். உங்களுக்கு இந்த நிறம் நன்றாய் எடுப்பாய் தெரியும் என்று தோன்றியது பெரியம்மா"

மரகதத்திற்கு தொண்டையில் ஏதோ அடைத்தது. அவளை ஒரு மனுஷியாக நினைத்தவனே அவன் ஒருவன்தான். அவளுக்கு அழகாய் இருக்கும் என்று இது வரை யாரும் எதுவும் வாங்கித் தந்ததாய் அவளுக்கு நினைவில்லை. அவள் அவசரமாக அங்கிருந்து நகர்ந்தாள்.

சஹானாவுக்கு அந்த ரோஸ் நிற சுடிதார் மிகவும் பிடித்திருந்தது. ஆனால் அவன் அதை வாங்கித் தருவதை எண்ணும் போது அவளுக்கு கோபம்தான் அதிகம் வந்தது. இங்கிருந்து நாளை போய்விடப் போகிறவன், இனி எப்போதும் தொடர்பு கொள்வது

முடியாது என்று வெளிப்படையாகச் சொன்னவன், என்றைக்குமாய் விலகி விடப் போகிறவன் இதை மட்டும் எந்த உரிமையில் வாங்கித் தருகிறான்?

சஹானா சற்று கோபத்துடன் கேட்டாள். "இதெல்லாம் எதற்கு?"

"ஏன் நீங்கள் மட்டும் தான் எனக்கு வாங்கித் தர வேண்டுமா? நான் வாங்கித் தரக்கூடாதா?"

"நான் வாங்கித் தந்ததற்கு நீங்களும் வாங்கித் தந்து கணக்கைத் தீர்க்கப் போகிறீர்களா?"

"இங்கே இருந்த கணக்கை நான் இந்த ஜென்மத்தில் தீர்க்க முடியும் என்று நினைக்கவில்லை சஹானா" அவன் அமைதியாகச் சொன்னான்.

'உண்மையில் அந்த வசனம் நான் சொல்ல வேண்டியது' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள். அவன் வந்த பின் அவளுடைய மகன் முகத்தில் தெரிந்த சந்தோஷம், மாமியார் முகத்தில் தெரிந்த சந்தோஷம் எல்லாம் அதற்கு முன் இருந்ததில்லை. ஏன் இந்த வீடே அவன் வரவால் மகிழ்ச்சிகரமாக மாறி விட்டது. வருணின் உயிரைக் காப்பாற்றியதோடு இதையும் சேர்த்துக்

கொண்டால் தராசின் மறுபக்கத்தில் எதை எவ்வளவு வைத்தாலும் சரியாகாது என்று நினைத்துக் கொண்டாள்.

"உங்களுக்குப் பிடித்திருக்கிறதா" அவன் ஆர்வத்துடன் கேட்டான்.

அந்த சுடிதாரைப் பிரித்துப் பார்த்த அவள் அதை ரசித்தபடி தலையசைத்தாள். திருமணத்திற்குப் பின் அவள் அழகான ஆடைகளை வாங்கியதாக அவளுக்கு நினைவில்லை. அவள் கணவன் தான் எப்போதும் அவளுக்காக ஆடைகளைத் தேர்ந்தெடுப்பான். எந்த விதத்திலும் தான் தேர்ந்தெடுக்கும் ஆடை தன் மனைவியின் அழகை அதிகப்படுத்தி விடக் கூடாது என்பதில் அவன் மிகவும் கவனமாக இருந்தான்.

அவளுக்கு சற்றும் பொருத்தமில்லாத ஆடைகள் வாங்கி வந்து அவளிடம் அக்ஷய் கேட்டது போலத்தான் கேட்பான். "பிடித்திருக்கிறதா?"

கேட்டு விட்டு அவளைக் கூர்ந்து ு கவனிப்பான். திருமணமான ஆரம்பத்தில் அதெல்லாம் அவளை மிகவும் வருத்தப்படுத்தியது, முகம் சுளிக்க வைத்தது என்றாலும் நாளாக நாளாக அவளுக்கு அந்தக் கசப்புகள் எல்லாம் குறைந்து கொண்டே வந்தது. அவன் சந்தேக புத்தியால் ஏற்பட்ட காயங்கள் பட்டு பட்டு மனம் மரத்தே

போனது. அவளுக்குள் இருந்த அழகுணர்ச்சி செத்தே போயிருந்தது.

அவனிடம் வாய் திறந்து பேசக்கூட அவளுக்கு வெறுப்பாக இருக்கும். வெறுமனே தலையாட்டுவாள்.

ஆனாலும் அவன் விட மாட்டான். கடை பில்லைக் காட்டுவான். "அந்தக் கடையில் இருந்ததிலேயே இது தான் விலை அதிகம்"

அதற்கும் அலட்சியமாகத் தலையாட்டுவாள். அதிக விலையில் மோசமான ஆடைகள் கிடைக்காதா என்ன!

அவளுக்கு அதைத் தூக்கி அவன் முகத்தில் எறியத் தெரியாமல் இல்லை. ‘எனக்கு என் டிரஸ் தேர்ந்தெடுக்கத் தெரியும். நீ உன் வேலையைப் பார்’ என்று சொல்லத் தெரியாமல் இல்லை. அதை வைத்து வாய்க்கு வந்தபடி பேசுவான். கத்துவான். குத்திக் காட்டுவான். ஆபாசமாகப் பேசுவான். வருண் வளர ஆரம்பிக்கும் கட்டத்தில் மகன் முன் இந்த அசிங்கங்களை அரங்கேற்ற அவளுக்குப் பிடிக்கவில்லை. 'இனி என்ன ஆக வேண்டும் எனக்கு' என்ற மனோபாவம் அவளுக்குப் பலப்பட ஆரம்பித்திருந்தது.

மேலும் அந்த அழகில்லா ஆடைகளை உடுத்துவதிலும் ஒரு உபயோகத்தை அவள் கண்டு வைத்திருந்தாள். கூட வேலை

செய்யும் சில வழியல் ஆண்களிடமிருந்தும், கூடப்பயணம் செய்யும் சில காமாந்தகர்களிடம் இருந்தும் அவளுக்கு அதிகம் உபத்திரவம் இருக்கவில்லை.

அக்ஷய் அவளுடைய நினைவுகளைக் கலைத்தான். "இன்றைக்கு சாயங்காலம் நீங்களும், பெரியம்மாவும் நான் கொடுத்த டிரஸ் தான் போட்டுக் கொள்ள வேண்டும். சரியா"

அவள் தலையசைத்தாள். என்றோ அவளுள் இறந்து போயிருந்த சில அழகான உணர்வுகள் மீண்டும் தளிர் விட ஆரம்பித்திருந்தன. அவன் அவளைக் கூர்மையாகப் பார்க்கும் போதெல்லாம், புன்னகை பூக்கும் போதெல்லாம் அதை அவள் உணர ஆரம்பித்திருந்தாள். ஆனால் எல்லாம் இன்றோடு ஒரு முடிந்து விடப் போகிறது என்று நினைக்கும் போது மனம் கனத்தது.

*************

சிபிஐ மனிதனுக்கு என்னவோ மனதில் ஒரு நெருடலாகவே இருந்தது. சஹானாவுடன் காரில் வந்த அமானுஷ்யன் அவளிடம் பணமும், உடைகளும் வாங்கியது, ஒரு சிக்னலில் இறங்கி மாயமானது எல்லாம் உண்மையாக இருக்கக் கூடியவையே என்றாலும் இதையெல்லாம் அவள் சொல்லாமல் அவள் மாமியாரின்

தங்கை மகன் சொன்னது திருப்தியளிக்கவில்லை. அங்கு சென்று விசாரித்த அந்த போலீஸ் சொல்வதைப் பார்த்தால் அவன் வாயாடியாகத் தோன்றினான். காதல் கல்யாணம் செய்யப் போகிறவன், அவளுடைய பக்கத்து வீட்டுக்காரனுக்குக் கூட அந்தக் காதல் சமாச்சாரம் எல்லாம் தெரியும் என்பதெல்லாம் அந்தப் புதிய ஆள் மீது சந்தேகத்தை வெகுவாகக் குறைத்தது என்றாலும் ஒரு மூலையில் இன்னும் சந்தேகம் சிறிது இருக்கத் தான் செய்தது. உடனடியாகப் போனில் பேசினான்.

"ஹலோ. நான் தான் பேசுகிறேன். சஹானாவின் அந்த சொந்தக்காரன் அங்கே இருக்கிறானா இல்லை போய் விட்டானா?"

"இருக்கிறான் சார். நேற்று பேசிய போதே அந்த சின்னப்பையன் பிறந்தநாள் முடிந்து நாளைக்குத் தான் போகிறதாய் சொன்னான். இன்றைக்கு காலையில் இருந்தே கடைகளுக்குப் போவதும், சாமான்கள் வாங்குவதுமாய் இருக்கிறான்"

"சஹானா?"

"அந்தப் பெண் வெளியே எங்கேயும் போகவில்லை சார். வீட்டிலேயே தான் இருக்கிறாள்"

"போன் டேப் செய்ய ஏற்பாடெல்லாம் செய்தாகி விட்டதல்லவா?"

"செய்தாகி விட்டது சார். நமக்குத் தேவையான தகவல் எதுவும் இது வரை போன் பேச்சில் கிடைக்கவில்லை...."

"அந்த பிறந்த நாள் விழா எப்போது?"

"இன்றைக்குத்தான் சார். சாயங்காலம் மொட்டை மாடியில் கொண்டாடுகிறார்கள் போல் இருக்கிறது. அலங்காரம் எல்லாம் அந்த ரோமியோதான் செய்து கொண்டிருக்கிறான்."

"எதற்கும் அந்த விழாவில் யார் யார் வருகிறார்கள் என்று கவனியுங்கள். அந்த சொந்தக்காரன் ரோமியோ நாளைக்குக் போனால் கண்டிப்பாக அவனைப் பின் தொடர ஆள்களை ஏற்பாடு செய்யுங்கள். அவன் மேல் கண் இருப்பது நமக்கு நல்லது என்று எனக்கு படுகிறது".

அந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் இது வரை இப்படிப்பட்ட பிறந்த நாள் விழா கொண்டாடப்படவில்லை என்கிற அளவு வருணின் பிறந்தநாள் விழா அமர்க்களமாகக் கொண்டாடப்பட்டது. மொட்டை மாடி அலங்கார விளக்குகளால் ஜொலித்தது. வருணின் அப்பா இருந்த போது தடை செய்யப்பட்ட நண்பர்கள் பலர் உற்சாகமாக வந்திருந்தனர்.

காலை பள்ளி செல்லும் போது அம்மா வாங்கித் தந்த புதிய ஆடையை அணிந்து கொண்டு போன வருண், மாலை விழாவிற்கு அக்‌ஷய் வாங்கித் தந்த ஆடையை அணிந்து கொண்டான். நண்பர்கள் அனைவரிடமும் அவன் "இது அக்‌ஷய் அங்கிள் வாங்கித் தந்தது" என்று பெருமையாகச் சொன்னது சஹானா காதில் விழுந்தது.

வீடியோ எடுக்கும் வேலையை வழக்கம் போல் மது தான் செய்தான். அந்தப் பிறந்த நாள் விழா முந்தைய பிறந்த நாள்களை விட எத்தனை வித்தியாசமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதை அவனால் நன்றாகவே உணர முடிந்தது. எப்போதும் இருக்கும் இறுக்கம் இந்த முறை இல்லை. சந்தோஷ சிரிப்பொலிகள் அந்தப் பகுதியையே நிறைத்தது.

எப்போதும் ஒதுக்குப் புறத்தில் மறைவாக இருக்கும் மரகதம் இன்று

வருண் மற்றும் அக்ஷய் பக்கத்தில் தைரியமாக நின்றிருந்தாள். அவளின் அரக்கு நிறப்பட்டுப்புடவை பல பெண்மணிகளின் கவனத்தைக் கவர பலர் அவளிடம் விசாரிக்க, அவளும் பெருமிதத்துடன் அக்ஷயைக் காட்டி "அவன் வாங்கித் தந்தது" என்று சொன்னதை மது கவனித்தான். சஹானாவும் ரோஸ் சுடிதாரில் மிக அழகாகத் தெரிந்தாள். பல வருடங்கள் கழித்து அவள் மீண்டும் அந்த நாட்களின் அழகோடு காணப்பட்டாள். அதுவும் அவன் வாங்கித் தந்ததாகத் தான் இருக்க வேண்டும் என்பதை மது யூகித்தான்.

அவனுக்கு ஒரு புறத்தில் சந்தோஷமாக இருந்தது. இன்னொரு புறத்தில் பொறாமையாக இருந்தது. தன்னை விட அதிகமாக அக்ஷய் அவளிடம் நெருங்கி விட்டதாகத் தோன்றியது. உடை மட்டுமல்லாமல் அவளுடைய மற்ற அலங்காரங்களும் புதிதாக இருந்தது. அதெல்லாம் புதியதொரு அர்த்தத்தைத் தந்தது.

அக்ஷய் வருணின் ஒரு புறம் நின்றிருக்க, மறு புறம் சஹானா நின்றிருந்தாள். அக்ஷய் அருகில் மரகதம் நின்றிருந்தாள். அவர்களுடைய உறவுகள் பற்றித் தெரியாத புது நபர் யாராவது பார்த்தால் கணவன், மனைவி, குழந்தை, பாட்டி என்று சந்தோஷமாக நிற்கும் குடும்பம் போலத் தான் தெரிந்தார்கள்.

வருண் கேக் வெட்டிய போது கூட முதல் கேக் அக்‌ஷயிற்குத் தான் கிடைத்தது. அடுத்ததாகத் தான் சஹானாவுக்கே கிடைத்தது. அவர்கள் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியைப் பார்த்து ஜெய்பால்சிங் மதுவிடம் வெளிப்படையாகவே சொன்னார். "மதுஜி. அந்த ஆள் இருந்த வரை இவர்களை நான் இந்த அளவு சந்தோஷமாகப் பார்த்ததில்லை. இதற்கெல்லாம் அக்‌ஷய் தான் காரணம் என்று நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்"

மது தலையாட்டினான். ஜெய்பால்சிங் தொடர்ந்து சொன்னார். "அந்த ஆள் இருந்த வரைக்கும் விழாவிற்கு வந்தவர்களுக்கு எல்லாம் இங்கிருந்து எப்போது போகலாம் என்கிற எண்ணம் தான் அதிகமாக இருக்கும். வந்தவர்களும் முதல் தடவையாய் குஷியான மூடில் இருக்கிறார்கள். இல்லையா?"

மது மறுபடியும் தலையாட்டினான். சிறிது நேரத்தில் எல்லோரும் அந்தாக்‌ஷரியில் கலந்து கொண்டார்கள். ஆண்கள் ஒரு புறம், பெண்கள் ஒருபுறம் அமர்ந்து கொள்ள பழைய, புதிய ஹிந்திப் பாடல்களின் இசை வெள்ளத்தில் எல்லோரும் மூழ்கினார்கள். அக்‌ஷய் கூட முகமது ரஃபியின் பாடல்களையும், சோனுநிகம் பாடல்களையும் சுமாராகப் பாடினான். மதுவும் ஆரம்பப் பொறாமை கரைந்து உற்சாகத்துடன் கலந்து கொண்டான்.

பின் குரல் வளம் உள்ள சிலர் தனியாகப் பாடினார்கள். ஜெய்ப்பால் சிங் ஒரு கட்டத்தில் சொன்னார். "வருணின் முதல் பிறந்த நாளில் சஹானா டைட்டானிக் பாடலை நன்றாகப் பாடினார். அதன் பிறகு அதைப் பாடவேயில்லை"

வருணின் முதல் பிறந்த நாள் அன்று வந்திருந்த வேறிரண்டு பேரும் அதற்குத் தலையாட்டினார்கள். வருண் ஆச்சரியத்துடன் அம்மாவைக் கேட்டான். "அம்மா உனக்கு டைட்டானிக் பாட்டு தெரியுமா? நீ நன்றாகப் பாடுவாயா?"

சஹானாவுக்கு தர்மசங்கடமாக இருந்தது. அவனுடைய முதல் பிறந்த நாளில் அவள் பாடிய பாட்டை ஒன்ஸ் மோர் என்று பலரும் இரண்டாவது முறை பாடச் சொன்ன போது அவள் கணவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. எல்லோரும் போன பின் அவளிடம் கேட்டான். "எவனை நினைத்துப் பாடினாய்?" . அதற்குப் பிறகு அவள் அந்தப் பாட்டை மட்டுமல்ல எந்தப் பாட்டையும் பாடியதில்லை.

வருண் சொன்னான். "அம்மா பாடும்மா ப்ளீஸ்"

வேண்டாம் என்பது போல் சஹானா தலையசைத்தாள். வருண் "ப்ளீஸ்" என்று சொல்ல ஜெய்பால் சிங்கின் மனைவியும் "ப்ளீஸ்"

என்றாள். அடுத்து பல ப்ளீஸ்கள் எழுந்தன. சஹானா வேறு வழியில்லாமல் பாட ஆரம்பித்தாள்.

Every night in my dreams

I see you, I feel you

that is how I know you go on.

Far across the distance

and spaces between us

you have come to show you go on. ......

அவளுடைய இனிமையான குரலில் அந்த ஆங்கிலப்பாடல் அந்த இரவில் அழகாக ஒலித்தது. சஹானா அக்ஷயின் பார்வையை அதிகம் உணர்ந்தாள்.

அடுத்த வரிகள் இதயத்தில் இருந்து வந்தன.

Once more, you opened the door

And you're here in my heart,

and my heart will go on and on.

Love can touch us one time

and last for a lifetime

and never let go till we're gone.

Love was when I loved you,

one true time to hold on to

In my life we'll always go on.

Near, far,

wherever you are,

I believe that the heart does go on .....

பலர் டைட்டானிக் திரைப்பட எண்ணங்களில் மூழ்கினார்கள். சிலர் அந்த வார்த்தைகளின் அழகின் வசப்பட்டிருந்தார்கள். மது சஹானாவைத் திகைப்புடன் பார்த்தான். அவளுக்கு அந்தப் பாடல் நன்றாகத் தெரியும் என்பது அவனுக்குத் தெரியும். அவள் பாடி பல முறை கேட்டும் இருக்கிறான். ஆனால் இவ்வளவு உயிரோட்டமாக அவள் பாடல் இதுவரை இருந்ததில்லை. அக்ஷயை அவன் பார்த்தான். அக்ஷய் சஹானா மீது வைத்த கண்களை எடுக்கவில்லை. சஹானாவோ வெற்றிடத்தைத் தான் பார்த்துக் கொண்டு இருந்தாள். ஆனால் கடைசி வரிகளில் அவளை அறியாமல் ஒரு வேதனை அவளுக்குள் புகுந்து பாட்டில் ஒலித்தது.

Once more, you opened the door

And you're here in my heart,

and my heart will go on and on.

You're here, there's nothing I fear

and I know that my heart will go on.

We'll stay, forever this way

you are safe in my heart

and my heart will go on and on

அவள் பாடி முடித்த போது கரகோஷம் வானை எட்டியது. "ஒன்ஸ் மோர்" கோரிக்கை பலமாக எழுந்தது. சஹானாவுக்கு இன்னொரு முறை பாடினால் அழுது விடுவோமோ என்ற பயம் வந்தது. பாட மறுத்தாள். ஓரிரு பெண்கள் அந்தப் பாடலைத் தாங்களே பாட முன்வர அந்த வரிகள் தெரிந்த சிலரும் சேர்ந்து கொள்ள பாடல் மறுபடி ஒலிக்க ஆரம்பித்தது.

Every night in my dreams

I see you, I feel you

that is how I know you go on......

விழா முடிந்து அனைவரும் கிளம்பிப் போன போது இரவு மணி பத்தாகி விட்டது. வீட்டுக்குள் நான்கு பேரும் மட்டுமே இருந்தபோது

அத்தனை நேர மகிழ்ச்சிக்கு மாறாக ஒருவித துக்கம் பிரதானமாகத் தங்கியது. எப்போதும் நண்பர்கள் போனவுடனேயே அவர்கள் தந்த பரிசுகளைப் பிரித்துப் பார்ப்பதில் ஆர்வம் காட்டும் வருண்கூட அதைத் தொடாமல் இருந்தான். நாளை அக்ஷய் போய் விடுவான் என்ற நிஜத்தின் கனத்தை அவனும் உணர ஆரம்பித்தான்.

இரவு உறங்கப் போகும் போது அக்ஷயிடம் வருண் கேட்டான். "அங்கிள் உங்களுக்கு பழைய நினைவெல்லாம் வந்து விட்டால் இப்போதைய நினைவெல்லாம் போயிடுமா?"

அந்தக் கேள்வியால் மனமுருகிய அக்ஷய் சொன்னான். "அப்படியெல்லாம் இல்லை"

"மூன்றாம் பிறையில் ஸ்ரீதேவி கமலஹாசனை மறந்து போன மாதிரி நீங்கள் என்னை மறந்துவிட மாட்டீர்களே"

அக்ஷய் அவனை இறுக்கமாக அணைத்துக் கொண்டான். "கண்டிப்பாய் மறக்க மாட்டேன். அதெல்லாம் சினிமா. நிஜமில்லை"

அக்ஷயை இறுக்கி அணைத்தபடி படுத்திருந்த அவனை அக்ஷய் உறங்காமல் நிறைய நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மனதிலும் துக்கம் படர ஆரம்பித்திருந்தது. யாரிவர்கள்? இத்தனை

குறுகிய காலத்தில் அவன் மனதில் ஏனிப்படி வேரூன்றி விட்டார்கள். இது ஒரு ஜென்மத்தின் பந்தமாகத் தெரியவில்லையே?

மறுநாள் வருண் எழுவதற்கு முன் அக்ஷய் கிளம்பி விட்டான். அந்த சிறுவனின் கண்ணீரை மறுபடியும் பார்க்கும் சக்தி அவனுக்கில்லை. தன் பொருட்களை எல்லாம் ஒரு சூட்கேஸில் போட்டுக் கொண்டு கிளம்பினான்.

மரகதம் குரலடைக்கச் சொன்னாள். "கடவுள் உனக்குத் துணை இருப்பார். தைரியமாய்ப் போ. உன் நல்ல மனதிற்கு உனக்கு ஒரு கெடுதலும் வராது.... எங்களை மறந்து விட மாட்டாயே"

அவளைப் பாசத்துடன் ஒன்றும் சொல்லாமல் அணைத்துக் கொண்டான் அக்ஷய். சஹானாவிடமும் அவனால் ஒன்றும் பேச முடியவில்லை. அவளருகே வந்து மௌனமாக ஆழமாக ஒரு பார்வை பார்த்து விட்டு "போகிறேன்" என்று மட்டும் தலையசைத்தான். கண்களில் லேசாக நீர் திரையிட அவளும் தலையசைத்தாள்.

அதிகாலை நேரத்தில் கனத்த இதயத்துடன் அந்த வீட்டிலிருந்து அக்ஷய் வெளியேறினான்.

## 39

அக்‌ஷய் தன்னைப் பின் தொடரும் போலீஸ்காரனை ஆரம்பத்தில் இருந்தே கவனித்து வந்தாலும் அதைக் காண்பித்துக் கொள்ளாமல் நடந்தான். சுமார் 15 நிமிடங்கள் வேகத்தைக் குறைத்தும், அதிகரித்தும் அவன் நடந்தபோது அந்த போலீஸ்காரனும் அதே போல் செய்து கிட்டத்தட்ட ஐம்பது அடி தூரத்திலேயே இருந்தான்.

அந்த போலீஸ்காரன் பார்வையில் இருந்து மறைவது அக்‌ஷயிற்கு முடியாத காரியம் இல்லை. ஆனால் அப்படி மறைந்தால் அவன் மேல் சந்தேகம் அவர்களுக்கு அதிகரிக்கும். அவனைப் பற்றி அதிகமாக சஹானாவிடம் குடைவார்கள். அவளைத் தொந்திரவு செய்வார்கள். அதே நேரத்தில் அவன் போகுமிடம் அந்தப் போலீஸ்காரன் அறிவதை அவன் அனுமதிக்கவும் முடியாது. என்ன செய்வது என்று யோசித்தவன் ஒரு முடிவுக்கு வந்தவனாக அருகில் இருந்த டெலிபோன் பூத்திற்கு நுழைந்தான்.

அந்த மீசைக்காரப் போலீஸ்காரருக்குப் போன் செய்தான். "ஹலோ சார்! நான் அக்‌ஷய் பேசுகிறேன். ரெயின்போ டிவி சஹானா வீட்டில்

பார்த்தீர்களே அந்த அக்ஷய் தான். சார், நான் இப்போது தான் சஹானா வீட்டிலிருந்து கிளம்பிப் போய்க் கொண்டிருக்கிறேன். என்னை ஒருவன் பின்தொடர்ந்து கொண்டே இருக்கிறான் சார்"

மீசைக்காரர் என்ன சொல்வது என்று யோசிப்பது அக்ஷயிற்குப் புரிந்தது.

அக்ஷய் தொடர்ந்தான். "எனக்கென்னவோ அவன் அந்த தீவிரவாதியாகவோ இல்லை அவன் அனுப்பிய ஆளாகவோ இருக்கலாம் என்று சந்தேகமாயிருக்கிறது சார். நான்தான் அவனைப் பற்றி எல்லா தகவல்களும் உங்களிடம் சொல்லி விட்டேன் என்பது தெரிந்து பழி வாங்க என்னைப் பின் தொடர்கிற மாதிரி இருக்கிறது சார்."

ஏதாவது கேட்க வேண்டுமே என்பதற்காக மீசைக்காரர் அவனிடம் கேட்டார். "பார்க்க எப்படி இருக்கிறான்"

"பார்க்க குல்ஃபி ஐஸ் விற்கிறவன் வேஷத்தில் இருக்கிறான். அவனுடைய தொப்பி, அழுக்கு பைஜாமா, குர்த்தா எல்லாம் பார்த்தால் அப்படித் தான் இருக்கிறது. அப்புறம் எனக்கு இன்னொரு சந்தேகமும் இருக்கிறது சார்"

"என்ன?"

"அந்த ஆள் மும்தாஜோட அப்பா அனுப்பிய ஆளாகக் கூட இருக்கலாம் என்கிற பயமும் எனக்கு இருக்கிறது.

"யாரது மும்தாஜ்"

"என் காதலி சார். ஆக்ராவில் இருக்கிறதாய் சொன்னேனே அவள்தான்"

"பயப்படாதீர்கள் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். நீங்கள் இப்போது எங்கே இருந்து பேசுகிறீர்கள்?"

அக்ஷய் இடத்தைச் சொன்னான்.

"நான் எங்கள் ஆட்களை உடனே அனுப்புகிறேன். அதுவரை அவனை சமாளியுங்கள். நீங்கள் இப்போது எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்"

"இப்போது ஆக்ராவுக்கு போய்க் கொண்டிருக்கிறேன் சார். மும்தாஜைப் பார்த்துப் பேசி இனி என்ன செய்வதென்று யோசிக்க வேண்டும். சார் அங்கே உங்களுக்கு யாராவது போலீஸ் நண்பர்கள்

இருக்கிறார்களா சார்? இருந்தால் எனக்கு உதவச் சொல்லுங்கள் சார். ஹலோ! ஹலோ!"

துண்டிக்கப்பட்ட இணைப்பிற்கு நன்றி சொல்லி விட்டு வெளியே வந்த அக்ஷய் அவசரமாக தெருவைக் கடந்தான். பின் தொடர்ந்தவன் தானும் தெருவைக் கடக்க யத்தனிக்கையில் ஒரு லாரி வேகமாக வரவே சற்று தாமதித்தான். லாரி கடந்து போன பின் பார்த்தால் எதிர்ப்புறத்தில் அக்ஷய் காணவில்லை. அங்கும் இங்கும் ஓடி அவனைத் தேடி அந்த போலீஸ்காரன் களைத்துப் போன போது அவன் செல்போன் அலறியது.

பேசியது மீசைக்கார அதிகாரி தான். "ப்ரேம். அவன் நீ பின் தொடர்வதைத் தெரிந்து கொண்டு விட்டான். எனக்கு போன் செய்தான். நான் வேறு ஆளை அனுப்புகிறேன். உனக்கு பதிலாக அவன் இனி பின்தொடரட்டும். அவன் வரும்வரை உன் பார்வையிலேயே அவனை வைத்திரு"

வியர்வையைத் துடைத்துக் கொண்டு அந்த போலீஸ்காரன் சொன்னான். "அவன் போன் செய்து விட்டு வெளியே வந்தவன் எங்கே போனான் என்றே தெரியவில்லை சார். எப்படியோ தப்பி விட்டான்."

***********

சிபிஐ மனிதன் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். அவன் எதிரே ஆச்சார்யாவின் மகள் வீட்டிற்கு வந்த போன் எண்களும், அங்கிருந்து பேசப்பட்ட போன் எண்களும் கொண்ட விவரங்கள் இருந்தன. அந்த விவரங்களில் இரண்டு தகவல்கள் அவனை அதிகமாய் சிந்திக்க வைத்துக் கொண்டிருந்தன. சில நாட்களுக்கு முன் டெல்லி டெலிபோன் பூத் ஒன்றிலிருந்து ஒரு போன்கால் அங்கு போயிருக்கிறது. அந்த போன்கால் பேசி முடிக்கப்பட்டவுடனேயே அங்கிருந்து ஆனந்தின் செல்போனில் பேசியிருக்கிறார்கள்.

ஏதோ ஒரு தகவல் ஆச்சார்யாவின் மகளுக்கோ, மனைவிக்கோ கிடைத்து அதை உடனடியாக அவர்கள் போன் செய்து ஆனந்திற்குத் தெரிவித்திருக்கிறார்கள். என்ன செய்தி அது? டெல்லி டெலிபோன் பூத்திலிருந்து போன் செய்தது யார்? அமானுஷ்யனாக இருக்குமோ?

நேற்று ஆனந்த் மறுபடி பெங்களூரிற்குப் போன் செய்து பேசியிருக்கிறான். தங்களுக்குத் தெரியாத ஏதோ ஒரு தகவல் பற்றி ஆனந்திற்கு லலிதாம்மா சொல்லியிருக்கிறாள், அதுபற்றித்தான் மீண்டும் நேற்று ஆனந்த் போன் செய்து பேசியிருக்கிறான். டெல்லி டெலிபோன் பூத்தில் இருந்து போன் செய்தது அமானுஷ்யனாக

இருந்தால் அதையே லலிதாம்மா ஆனந்திற்குத் தெரிவித்திருந்தால்? நினைக்கும் போதே ஒருவித பயம் எழ ஆரம்பித்தது.

ஆனந்த் செல்லில் இருந்து போன வேறு எண்களை எல்லாம் பார்த்தான். வித்தியாசமாக எதுவும் இல்லை. ஆனந்த் செல்லிற்கு வந்த எண்களும் வித்தியாசமாக எதுவும் இல்லை. முக்கியமாய் டெல்லி டெலிபோன் பூத்தில் இருந்தோ, வேறு பொது தொலைபேசியிலிருந்தோ எந்த போன் காலும் ஆனந்திற்கு வரவில்லை.

சிபிஐ மனிதனின் சிந்தனைகளை தொலைபேசி அலறிக் கலைத்தது.

"ஹலோ"

மீசைக்கார போலீஸ்காரர் இன்று காலை அக்‌ஷய் கிளம்பியதில் இருந்து ஆரம்பித்து அவன் காணாமல் போன வரை ஒன்று விடாமல் ஒப்பித்தார். சிபிஐ மனிதனுக்கு அவனைப் பற்றி கேட்ட விஷயங்கள் நெருடலாக இருந்தன. மேற்போக்காகப் பார்த்தால் எல்லாம் இயல்பாக இருந்தன. ஒருவன் பின் தொடர்கிறான் என்பதைக் கண்டுபிடித்த அந்த இளைஞனுக்கு அவன் தீவிரவாதியாகவோ, அவன் அனுப்பிய ஆளாகவோ, இல்லை காதலியின் அப்பா அவனைப் பின் தொடர ஏற்பாடு செய்த ஒரு ஆளாகவோ சந்தேகம்

வந்ததில் தவறில்லை. ஆனால் அவன் மின்னல் வேகத்தில் மறைந்த விதம் பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தியது. அது அமானுஷ்யனுடைய திறமைக்குப் பொருந்துவதாக இருந்தது. நிஜமாகவே அவன் அமானுஷ்யனாக இருந்தால் அவன் அந்த போலீஸ் அதிகாரிக்குப் போன் செய்து ஏன் சொல்ல வேண்டும்?

ஆரம்பத்தில் இருந்தே அந்த இளைஞன் சந்தேகத்தையும் கிளப்பி, 'சேச்சே அப்படியிருக்காது' என்று நினைக்க வைக்கிறவனாகவும் இருந்தான். போலீசைப் பார்த்தவுடன் பதுங்காமல் இருந்தது, போலீசிடம் அவன் முதலிலும், இப்போதும் வெளிப்படையாகப் பேசியது, முன்பே இந்த நாள்தான் போவேன் என்று சொல்லி அப்படியே கிளம்பியது, அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு அவனை நன்றாகத் தெரிந்திருந்தது எல்லாம் அவன் அமானுஷ்யனாக இருக்க முடியாது என்று நம்ப வைத்தன. ஆனாலும் கூட சிபிஐ மனிதனின் மனதில் ஏனோ இன்னும் நெருடல் இருந்து தான் வந்தது. இப்போது அவன் மாயமான விதம் அந்த நெருடலை அதிகப்படுத்தியது.

அவன் போனில் கேட்டான். "அவன் ஆக்ராவில் எங்கே போவதாகச் சொன்னான்."

"அதைச் சொல்லவில்லை. விட்டால் அவனுடைய காதல்

கல்யாணத்தை என்னையே நடத்தி வைக்க சொல்வான் போல இருந்ததால் நானே பேச்சை வளர்த்தாமல் போனை வைத்து விட்டேன். வாய் திறந்தால் மூடாத ரகம் சார் அவன்."

"எதற்கும் சஹானாவிடம் ஆக்ரா விலாசத்தை வாங்குங்கள். வேண்டாம். சஹானா இல்லாத போது அவள் மாமியாரிடம் பேசிப் பாருங்கள். அவன் அந்தம்மாளுக்குத் தானே நெருங்கிய உறவு. அந்தப் பெண் மும்தாஜ் விலாசத்தையும் வாங்கி அவனைக் கண்டுபிடித்து யாராவது ஒரு ஆள் அவன் மீது எப்போதும் ஒரு கண் வைத்திருங்கள்."

சிபிஐ மனிதன் போன் இணைப்பைத் துண்டித்தான். மனம் அமானுஷ்யனை சுற்றியே இருந்தது. சற்று முன் எழுந்த சந்தேகத்தின்படி ஆச்சார்யா குடும்பத்திற்கு டெல்லி டெலிபோன் பூத்திலிருந்து போன் செய்தது அமானுஷ்யனாக இருக்குமானால் அவன் பெங்களூருக்குச் சென்று லலிதாம்மாவையோ, இல்லை டெல்லியில் ஆனந்தையோ தொடர்பு கொள்ள சாத்தியம் அதிகம்.

சிபிஐ மனிதன் இந்த அனுமானத்திற்கு வந்தவுடன் போன் செய்து ஆனந்தைக் கண்காணிக்கும் ஆட்களை அதிகப்படுத்தினான். ஆனந்த் தங்கி இருக்கும் ஓட்டல் பகுதியில் அமானுஷ்யனைப் போன்ற தோற்றம் உள்ள நபர் நடமாடினால் உடனே பிடித்து

விசாரிக்க கட்டளையிட்டான்.

சிபிஐ மனிதன் சந்தேகப்பட்டது போலவே அக்ஷய் ஆனந்த் தங்கியிருக்கும் ஓட்டலை நெருங்கிக் கொண்டிருந்தான்.

## 40

அக்ஷய் கிளம்பிப் போன பிறகு சஹானாவின் வீட்டில் மயான அமைதி நிலவியது. வருண் கூட உறக்கத்தில் இருந்து எழுந்தவன் யாரிடமும் ஒன்றும் பேசவில்லை. அக்ஷயின் பெட்டி, துணிமணிகள் எதுவும் அறையில் இல்லை என்பதை எழுந்தவுடனேயே கவனித்தவன் ஒன்றுமே பேசாமல் தன் வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தான். மகன் முகத்தில் தெரிந்த துக்கத்தை சஹானாவால் சகிக்க முடியவில்லை.

தானாகக் குளித்து தானாக உடை மாற்றிக் கொண்டு பாட்டி மேசையில் வைத்த டிபனை விழுங்கி விட்டு ஒரு நடைப்பிணமாக வருண் பள்ளிக்கு கிளம்பினான். மகன் திடீரென்று வளர்ந்து விட்டது போல் சஹானா உணர்ந்தாள். அவளும் ஆபிசுக்குக் கிளம்பினாள்.

அவள் கிளம்பிப் போய் சரியாகப் பத்து நிமிடங்கள் கழித்து

மீசைக்கார போலீஸ்காரர் அந்த வீட்டின் அழைப்பு மணியை அழுத்தினார். கதவைத் திறந்த மரகதம் அவரைப் பார்த்ததும் பயத்தில் அப்படியே உறைந்தாள். நாக்கு அசைய மறுத்தது. பலவந்தமாய் அசைத்தாள். "சஹானா இல்லையே"

"பரவாயில்லை. நான் உங்களிடம்தான் பேச வேண்டும்."

ஒதுங்கி அவள் அவரை உள்ளே விட்டாள். அவர் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தார். "இன்றைக்கு காலையில் அக்ஷய் போன் செய்தார். அவரை யாரோ பின் தொடர்வது போல் இருக்கிறது என்றார். ஆக்ராவிற்குப் போவதாய் சொன்னார். அதற்குள் போன் கனெக்ஷன் கட் ஆகி விட்டது."

மரகதம் தலையசைத்தாள். அக்ஷய் பற்றி அவர் பேசியதுமே அவன் அந்த மீசைக்காரர் முதலில் வந்த போது அலட்டிக் கொள்ளாமல் இருந்தது அவளுக்கு நினைவுக்கு வந்தது. அப்போது அவன் சொன்னது அவள் மனதில் நன்றாகப் பதிந்திருந்தது.

"பயம்தான் முதல் எதிரி பெரியம்மா. அது மனதில் வந்து விட்டால் நாம் அகப்பட்டுக் கொள்வது நிச்சயம். எதிரிக்குப் பலம் கிடைப்பதே நம் பயத்தால்தான்."

மீசைக்காரர் சொன்னார். "நான் இப்போது வந்தது அக்ஷயின் ஆக்ரா விலாசம் வாங்க. அவரிடம் நான் பேச வேண்டி இருக்கிறது"

"விலாசம் என்கிட்டே இல்லையே"

அவர் அவளை சந்தேகத்தோடு பார்த்தார். அவளுக்கு வயிற்றைக் கலக்கியது. ஆனால் அக்ஷய் சொன்னதை நினைத்துக் கொண்டாள். பயம் கூடாது என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். 'என் அப்பா, புருஷன், மகன் எல்லார் கிட்டயும் நான் வேண்டிய அளவு பட்டாயிற்று. அதற்கு மேல் நீங்கள் என்னடா செய்ய முடியும்' என்று மனதில் அந்த மீசைக்காரரைக் கேட்டுக் கொண்டாள்.

பின் வாய் திறந்து சொன்னாள். "அவன் அந்த முஸ்லீம் பெண்ணைத் தேடிப் போய் இருக்கிறான். அந்தப் பெண் விலாசம் என்னிடம் அவன் தரவில்லை"

"அவர் வேலை எங்கே?"

"வேலை இல்லை. அமெரிக்காவில் வேலை போய்விட்டது. அந்த சமயம் அந்த முஸ்லீம் பெண்ணிற்கு கல்யாணம் செய்யப் போவதாய் கேள்விப்பட்டு இந்தியா வந்தான்."

"உங்கள் தங்கை எல்லாம் எங்கே?"

ஒற்றைப் பெண்ணாய் பிறந்த எனக்கு ஏது தங்கை என்று விழித்த மரகதத்திற்கு அக்‌ஷய் தன் தங்கை மகன் என்று சொல்லி இருந்தது அப்போது தான் நினைவுக்கு வந்தது. "அவள் அமெரிக்காவில் மகளுடன் இருக்கிறாள்."

"அக்‌ஷயின் செல் போன் நம்பர் என்ன?"

"செல்போன் இல்லை"

"இந்தக் காலத்தில் செல் போன் இல்லாத இளைஞர்கள் இருக்கிறார்களா?"

மரகதம் யோசிக்காமல் சொன்னாள். "இருந்தது. அதை வீசி விட்டான். அந்த முஸ்லீம் பெண்ணின் செல்போனை அவள் வீட்டில் பிடுங்கி வைத்துக் கொண்டார்களாம். அவளுக்கு செல் இல்லாதபோது எனக்கு மட்டும் எதற்கு செல்போன் என்று பைத்தியக்காரத்தனமாய் கேட்கிறான். என்ன செய்வது?"

மீசைக்காரர் அவளை ஆழமாய் பார்த்துவிட்டு எழுந்தார். அவர் அவள் சொல்வதை எந்த அளவு நம்பினார் என்பதை அவளால்

கணிக்க முடியவில்லை.

***********

அந்த ஓட்டல் வாசலில் டாக்சியில் வந்திறங்கிய அந்த மனிதன் நடுத்தர வயதில் உள்ள செல்வந்தனைப் போல் தெரிந்தான். அவன் கையில் ஒரு விலை உயர்ந்த சூட்கேஸ் மட்டும் இருந்தது. அதைத் தூக்கி செல்ல யாராவது ஒரு கூலியாள் கிடைப்பார்களா என்பது போல் சுற்றும் முற்றும் பார்த்தான்.

யாரும் இல்லாததைக் கண்டு லேசாக முகம் சுளித்தபடியே அந்த சூட்கேசைத் தானே எடுத்துக் கொண்டு ஓட்டலின் உள்ளே நுழைந்தான். சுற்றும் முற்றும் பார்த்த போதே வேஷங்களில் இருந்த இரண்டு போலீஸ்காரர்களைக் கண்டுபிடித்தான். செல்போனில் பேசுவது போல பாவனை செய்து கொண்டே ஓட்டலுக்கு எதிர்வரிசையில் இருந்த மரத்தில் சாய்ந்தபடி நின்றிருந்தான் ஒரு போலீஸ்காரன். இன்னொருவன் ஓட்டல் வாசலுக்கு சற்று தள்ளி காரில் யார் வரவுக்கோ காத்திருப்பவன் போல் டிரைவர் சீட்டில் அமர்ந்து ஓட்டல் வாசலைப் பார்த்தபடி இருந்தான்.

ஓட்டலின் உள்ளே நுழைந்த போது ரிசப்ஷன் ஹாலில் உள்ள சோபாவில் பத்திரிக்கையை மேலோட்டமாய் படிப்பது போல் ஒரு

போலீஸ்காரன் பைஜாமா குர்தாவில் அமர்ந்திருப்பது தெரிந்தது. சூட்கேஸோடு ரிசப்ஷன் டெஸ்கை அணுகியவன் "மதன் மோஹன். நான் ரூம் புக் செய்திருந்தேன்" என்றான்.

அறை எண் 205ல் வந்து கதவைத் தாளிட்டவன் உடனே சென்று ஜன்னல் வழியே பார்த்தான். மரத்தில் சாய்ந்து செல் போனில் பேசியவனும் காரில் அமர்ந்திருந்தவனும் இன்னும் அப்படியே தான் இருந்தார்கள். அவர்கள் சிபிஐ அதிகாரி ஆனந்தைத்தான் கவனிக்க அங்கிருக்கிறார்கள் என்பது அக்ஷயிற்குத் தெளிவாகத் தெரிந்தது. அறை எண் 203ல் இருக்கும் ஆனந்த் இன்னும் அறையில்தான் இருக்கிறான் என்பதில் சந்தேகமே இல்லை. அவனை ஏன் இவர்கள் கண்காணிக்கிறார்கள் என்பது அவனுக்கு விளங்கவில்லை.

ஜன்னல் திரையை மூடிவிட்டு குளிக்கச் சென்றான். குளிக்கும் போது வருண் நினைவு வந்தது. இந்நேரம் அவன் பள்ளிக்குக் கிளம்பியிருப்பான். மனதை மற்ற விஷயங்களுக்குத் திருப்ப முயன்ற அக்ஷய் தோற்றுப் போனான்.

குளித்து உடை மாற்றி விட்டு வந்தவன் மறுபடி ஜன்னல் வழியாகப் பார்த்தான். செல்காரனும் இல்லை. கார்காரனும் இல்லை. ஆனந்த் வெளியே போயிருக்க வேண்டும். அவனைப் பின் தொடர்ந்து அவர்களும் போயிருக்க வேண்டும்.

கதவைத் திறந்து வெளியே பார்த்தான். ஓட்டல் வராந்தாவில் யாரும் இல்லை. கையில் ஒரு வளைந்த கம்பியை மறைத்து எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். மெள்ள அறை எண் 203 கதவருகே நின்று அந்தக் கதவைத் தட்டினான். உள்ளே இருந்து எந்த பதிலும் இல்லை.

சுற்றியும் ஒரு முறை பார்த்து விட்டு கம்பியை உபயோகித்து எளிதாகக் கதவைத் திறந்து உள்ளே போய் மெல்ல கதவை சாத்தினான். உள்ளே எல்லாவற்றையும் கச்சிதமாய் வைத்திருக்கும் மனிதனின் அறையைப் பார்க்க முடிந்தது. வெளியே இருந்த துணிமணிகள் ஒழுங்காக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன.

இரண்டு சூட்கேஸ்கள் உள்ளே இருந்தன. ஒரு சூட்கேஸ் பூட்டப்படாமல் இருந்தது. அதில் துணிமணிகள் மட்டும் இருந்தன. இன்னொரு சூட்கேஸ் பூட்டப்பட்டிருந்தது. அதை அதே கம்பியை உபயோகித்து லாவகமாகத் திறந்தான். நிறைய டாக்குமென்டுகளும், ஃபைல்களும் உள்ளே இருந்தன.இரண்டை எடுத்துப் பார்த்தான். ஒன்று கொல்லப்பட்ட ஆச்சார்யா பற்றிய குறிப்புகளாக இருந்தன. இரண்டாவது சங்கேத மொழியில் தேதிவாரியாக எழுதப்பட்ட குறிப்புகளாக இருந்தன. ஆனந்த் கைப்பட எழுதியவையாகத் தோன்றின.

மீதியுள்ள ஃபைல்களைப் பார்க்க முனையாமல் வேறென்னவெல்லாம் இருக்கின்றன என்று பார்த்தான். ஒரு வயதான பெண்மணியின் போட்டோ இருந்தது. ஆனந்தின் அம்மாவாக இருக்க வேண்டும் என்று அக்‌ஷய் நினைத்தான். அந்தம்மாள் முகத்தில் ஏதோ ஒரு துக்கம் பலமாகத் தெரிந்தது. சூட்கேஸை முழுவதுமாக சோதனையிட்டான். அடியில் இரகசியமாக ஏதோ ஒரு உறை இருந்ததைக் கண்டுபிடித்து அதை வெளியே எடுத்துப் பார்த்தான். அதில் ஒரு அழகான பெண்ணின் போட்டோ இருந்தது. இரகசியமாய் வைத்திருப்பதைப் பார்த்தால் காதலியாகத் தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது.

திடீரென்று அறைக் கதவை யாரோ சாவியால் திறக்க முயற்சிப்பது தெரிந்தது.

************************************

41

ஆனந்திற்குத் தன்னைக் கண்காணிக்கும் ஆட்களின் எண்ணிக்கை அதிகமானது ஏன் என்று புரியவில்லை. சிபிஐ உயர் அதிகாரி ஒருவனுக்குத் தன்னை யாராவது பின் தொடர்ந்தாலோ,

கண்காணித்தாலோ தெரியாமல் போக வாய்ப்பேயில்லை என்று தெரிந்தும் அதற்கு ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருக்கிறது என்பது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்படித் தெரிந்தாலும் பரவாயில்லை என்று ஆரம்பத்தில் ஓரிரு ஆட்களை ஏற்பாடு செய்திருந்தவர்கள் இப்போது கூடுதலாக ஆட்கள் போட்டிருப்பது எதனால் என்று யோசித்தும் அவனுக்கு விளங்கவில்லை.

டாக்சியில் சிபிஐ அலுவலகத்திற்குப் போய்க் கொண்டிருந்தவனுக்கு திடீரென்று ஒரு முக்கியமான ஃபைலை அறையிலேயே விட்டு விட்டு வந்தது நினைவுக்கு வர டிரைவரிடம் பழையபடி ஓட்டலுக்கே திருப்பச் சொன்னான். அவனுடைய டாக்சி திரும்பிய போது மூன்று கார்கள் தள்ளி வந்து கொண்டிருந்த கார் ஒன்றும் அப்படியே திரும்பியது.

ஓட்டலில் இறங்கியவன் தன்னைப் பின் தொடர்பவர்களைப் பற்றியே எண்ணிக் கொண்டு தன் அறைக்குச் சென்றான். அறைக் கதவைத் திறந்ததுதான் அவன் அறிவான். அடுத்த கணம் அவன் கட்டிலில் வீசப்பட்டான். என்ன ஏது என்று புரிவதற்குள் ஒருவன் மின்னல் வேகத்தில் அவனருகே வந்து அவன் கழுத்தைத் தொட்டான். தாங்க முடியாத வலியில் கழுத்தை சிறிதும் அசைக்க முடியாத நிலையில் ஆனந்த் இருந்த போது முதலில் அவனுக்குத் தோன்றியது இதுவும் தன்னைப் பின் தொடர்பவர்களின்

கைவரிசையே என்பதுதான்.

ஆனால் அவனை இப்படி ஒரு நொடியில் செயலிழக்க வைத்தவன் கேட்ட கேள்வி அவனைத் திகைக்க வைத்தது.

"நீ ஏன் என்னைப் பிடிக்க முயற்சிக்கிறாய்?"

பேசினால் வலி கூடும் என்று தெரிந்திருந்தாலும் வலியைப் பொறுத்துக் கொண்டு ஆனந்த் கேட்டான்.

"யார்.. நீ?"

அக்ஷய் அவனருகே வந்தமர்ந்து புன்னகையுடன் சொன்னான்.

"அதை நீதான் சொல்ல வேண்டும்"

"எனக்கெப்படி... நீ யார்.... என்று... தெரியும்?"

"நான் உன் காணாமல் போன தம்பி, நாக மச்சம் இருக்கும், அப்படி இப்படி என்று ஆச்சார்யா மனைவியிடம் கதையளந்தாயே. தெரியாத ஆளைப் பற்றி யாரும் இப்படி கதையளக்க மாட்டார்கள்"

ஆனந்திற்கு தூக்கிவாரிப் போட்டது. அவனுக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை.

"அக்ஷய்"

அக்ஷய் திகைப்புடன் ஆனந்தைப் பார்த்தான். வருண் வைத்த பெயர் இவனுக்கு எப்படித் தெரியும்? இவர்கள் சஹானா வீட்டில் இருந்தவன்தான் அவன் என்று கண்டு பிடித்து விட்டார்களா?

திடீரென்று அக்ஷயின் கண்கள் வெறுமையாயின. அவன் சலனமேயில்லாமல் ஆனந்தைப் பார்த்தான். ஆனால் அந்தக் கணத்தில் அவன் பயங்கரமானவனாகத் தோன்றினான். மிக அமைதியாகக் கேட்டான்.

"அந்தப் பெயர் உனக்கு எப்படித் தெரியும்?"

ஆனந்திற்கு ஏனோ ரத்தம் சில்லிட்டது. ஏதோ ஒரு இனம் புரியாத பயம் அவனை ஆட்கொண்டது. அக்ஷய் இந்த அமைதியான தோற்றத்துடன் சலனமே இல்லாமல் கொலையே செய்து விட்டு போக முடிந்தவனாகத் தோன்றினான். ஆனந்த் எத்தனையோ பயங்கரவாதிகளைப் பார்த்திருக்கிறான். ஆனால் இவன் இந்த நேரத்தில் எதையும் பதட்டமேயில்லாமல் கச்சிதமாக செய்து விட்டு

வந்த சுவடே தெரியாமல் போகக் கூடிய அமானுஷ்யனாகத் தோன்றினான். இவன் நிஜமாகவே என் தம்பியா? இல்லை.

அக்ஷய் தன் வலது கையை லேசாக உயர்த்தியபடி மறுபடி கேட்டான்.

"சொல். உனக்கெப்படி என் அந்தப் பெயர் தெரியும்?"

இப்போது பேசாவிட்டால் அவன் கொலையே செய்து விடுவான் என்று ஆனந்திற்குத் தோன்றியது. கூடவே கோபமும் வந்தது.

"முட்டாளே உன் பெயர்.... உன் அண்ணனுக்குத் தெரியாதா?"

ஆனந்தின் குரலில் தெரிந்த கோபம் தான் அக்ஷயை அடுத்த தாக்குதல் செய்யாமல் தடுத்தது. அந்தக் கோபம் ஒரு சதிகாரனுக்கு கண்டிப்பாக வராது. ஆனால் வருண் தற்செயலாக வைத்த பெயர் எப்படி அவனுடைய உண்மையான பெயர் ஆகும்?

"நீ உண்மையைத் தான் சொல்கிறாய் என்பதை நான் எப்படி நம்புவது?"

ஆனந்த் இவனுக்கு எப்படி புரிய வைப்பது என்று திகைத்தான்.

கழுத்தை சிறிது அசைத்தாலும் வலியில் உயிர் போவது போல் இருந்தது. அசையாமல் கட்டிலில் விழுந்து கிடந்த அவன் வாயைத் திறக்க முடியாமல் அவஸ்தைப்பட்டான். கண்களாலேயே அதைத் தெரிவித்தான்.

அக்‌ஷய் அவனையே சிறிது நேரம் பார்த்தான். பின் அங்கு மடித்து வைக்கப்பட்டிருந்த டவல்களை எடுத்தான். ஒன்றை எடுத்து அவன் கைகளைப் பின்புறத்தில் இணைத்துக் கட்டினான். இன்னொன்றால் அவனுடைய கால்களைக் கட்டினான். கட்டும் போது ஏற்பட்ட அசைவில் கழுத்து வலி மேலும் அதிகமாகி ஆனந்த் அலறினான். இறுக்கமாகக் கட்டி முடித்த பின் அக்‌ஷய் அவன் கழுத்தை லேசாகத் தட்டி விட்டான். கழுத்து வலி இருந்த இடம் தெரியாமல் பறந்து போயிற்று. ஆனந்த் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

"நீ மறுபடி என்னிடம் ஏதாவது கதையளந்தால் சாவே பரவாயில்லை என்று நீ நினைக்கிற அளவுக்கு ஒரு நிலைமையைக் கொண்டு வந்து விடுவேன். ஜாக்கிரதை! இப்போது சொல் உன்னை எப்படி நான் நம்புவது?"

"நீ வேண்டுமானால் நம் அம்மாவை கேட்டுப் பார்"

அக்‌ஷய் சிரித்துக் கொண்டே கேட்டான்.

"ஓ இந்த நாடகத்தில் அம்மா வேஷத்தில் ஒருத்தியையும் முதலிலேயே ஏற்பாடு செய்து விட்டாயா?"

"என்ன ஆயிற்று உனக்கு? சொல்வதை எல்லாம் சந்தேகப்படுகிறாய்? நம்பிக்கை இல்லா விட்டால் என் செல்போனில் என் வீட்டு நம்பர் இருக்கிறது. அங்கே போன் செய்து கேள்"

அக்ஷய் அவநம்பிக்கையுடன் ஆனந்த் பேண்ட் பாக்கெட்டில் இருந்து செல்போனை எடுத்து வீடு என்று குறித்திருந்த எண்ணை அழுத்தினான். ஆனந்திற்கு இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. அம்மாவிடம் இவன் என்ன பேசுவான், எப்படிப் பேசுவான் என்று தெரியவில்லை.அம்மாவிற்குத் தெரியுமா பேசுவது காணாமல் போன இளைய மகன் தான் என்று.

"ஹலோ."

மறுபக்கத்தில் இருந்து குரல் வந்தது.

"மேடம் ஆனந்த் இருக்கிறாரா?"

"அவன் வேலை விஷயமாய் டெல்லி போயிருக்கிறான். நீங்கள் யார் பேசுவது?"

"நான் காணாமல் போனவர்களைக் கண்டு பிடித்துத் தரும் ஏஜென்சியில் இருந்து பேசுகிறேன். அவர் அவருடைய அண்ணா சின்ன வயதில் காணாமல் போனதாய் சொல்லி இருந்தார்."

அது வரை சுரத்தே இல்லாமல் பேசிய சாரதாவின் குரலில் திடீரென்று உயிர் வந்தது.

"அவன் அண்ணா இல்லை. தம்பி. என் சின்ன மகன்."

"ஏதோ மச்ச அடையாளம் சொல்லி இருந்தார். இடுப்பில் ஏதோ தேள் மாதிரி மச்சமோ எதோ சொல்லியிருந்தார்"

"இல்லை.நீங்கள் தப்பாக குறித்து வைத்திருக்கிறீர்கள். என் சின்ன மகன் முதுகின் மேல் பக்கம் நாக மச்சம் இருக்கும் சார்."

அக்ஷய் ஒரு கணம் பேச்சிழந்தான். பின் மெல்ல கேட்டான்.

"அவர் பெயர் என்ன மேடம்?"

"அக்ஷய் சார். அவன் அக்ஷய திரிதியை அன்றைக்குப் பிறந்தவன்.சார் அவனைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா." அவள் குரலில் தொனித்த துக்கம் அக்ஷயை ஏதோ செய்தது.

"இரண்டு நாள்களில் சொல்கிறேன் மேடம்."

"சார். எதாவது செய்து என் பிள்ளையைக் கண்டு பிடித்துக் கொடுங்க சார். உங்களைக் காலம் பூராவும் கடவுளாய் நான் கும்பிடுவேன்." சாரதா சொல்லி முடிக்கும்போது அழுதே விட்டாள்.

அக்ஷயிற்கு ஏதோ தொண்டையை அடைத்தது. பேச முடியாமல் இணைப்பை துண்டித்தான். அவனுக்கு தலை சுற்றியது.

## 42

அக்ஷயிற்கு கேட்டதை எல்லாம் மனதளவில் ஜீரணிக்க சற்று நேரம் தேவைப்பட்டது. அந்தத் தாயின் குரலில் தொனித்த துக்கமும், அவள் மிகச் சரியாக சொன்ன விவரங்களும் அவனை திகைப்பில் ஆழ்த்தியிருந்தன. கடந்த காலம் என்ன என்று தெரிந்துகொள்ள ஆசைப்பட்டவனுக்கு, கடந்த காலத்தின் கடந்த காலம் தெரிய வந்தது அவனை நிலை குலைய வைத்தது. ஆழ்ந்த சிந்தனையால் அவன் சிலைபோல் அமர்ந்திருந்தான்.

ஆனந்த் குழப்பத்தோடு அக்‌ஷயைப் பார்த்தான். 'இன்னும் என்ன யோசிக்கிறான்?' என்று நினைத்தவனாய் மெல்ல கேட்டான்.

"இந்தக் கட்டை அவிழ்த்து விடுகிறாயா?

சில வினாடிகள் ஆனந்தையே ஏதோ யோசனையுடன் வெறித்துப் பார்த்த அக்‌ஷய் சிந்தனையில் இருந்து மீண்டு புன்னகைத்தான். அவன் புன்னகைத்த போது அவனிடம் அழகான மாற்றத்தை ஆனந்த் கவனித்தான். ஆனால் ஏதோ வேஷத்தில் இருக்கிறான் என்பதை முதலிலேயே ஊகித்திருந்தவன் அவனது உண்மையான தோற்றம் எப்படியிருக்கும் என்று யோசித்தான்.

அக்‌ஷய் அவனுடைய கட்டுக்களை அவிழ்த்தபடி சொன்னான்.

"எனக்கு சினிமா ஹீரோ மாதிரி அழகாய் ஒரு அண்ணன் இருக்கிறான் என்பதே தெரியாமல் போய்விட்டது பார்"

அவன் பாராட்டால் எந்தவித பாதிப்பும் அடையாமல் கட்டுகளில் இருந்து விடுதலையாகி நிம்மதிப் பெருமூச்சு விட்ட ஆனந்த் எழுந்து கைகால்களை நன்றாக அசைத்து இயல்பு நிலைக்கு வந்தான்.

அவனுக்கு ஒரு பக்கம் மிக மிக சந்தோஷமாக இருந்தது. தம்பி கிடைத்தான் என்பது அவன் மனதில் இருந்த ஒரு பெரிய பாரத்தைப் போக்கியது. ஆனால் இன்னொரு பக்கம் அவன் மனதில் பயம் எழுந்தது. கண்ணிமைக்கும் நேரத்தில் அவனை எடுத்துக் கட்டிலில் வீசிய மனிதன், லேசாகத் தொட்டவுடனே உயிர் போகும் வலியை கழுத்தில் ஏற்படுத்திய மனிதன், சாவே பரவாயில்லை என்கிற அளவுக்கு ஒரு நிலையைக் கொண்டு வந்து விடுவேன் என்று உண்மையாகவே மிரட்டிய மனிதன் தன் சகோதரன் என்று நினைக்கும் போது என்ன மனிதனிவன் என்ற பயம் கலந்த திகைப்பு எழுந்தது.

அக்‌ஷய் அவன் எண்ணங்களைப் படிக்க முடிந்தவன் போல,

"சாரி. நான் நிஜமாகவே நீ என் அண்ணன் என்று நம்பவில்லை. அதனால் தான்....." என்று மன்னிப்பு கேட்டபடி அவனை கட்டியணைத்துக் கொண்டான்.

உடனடியாக வேறு ஒரு மனிதனாக மாறித் தன்னை அன்புடன் கட்டிக் கொண்டவன் உண்மையாகவே தன் தம்பிதானா என்பதை ஒருமுறை உறுதி செய்து கொள்வது நல்லது என்ற எண்ணம் ஆனந்திற்கு வந்தாலும் அதை வாய் விட்டு அவனிடம் கேட்க முடியவில்லை. இன்னும் அரைகுறை திகைப்பு ஆனந்திடம்

மிஞ்சியிருந்தது.

அக்ஷய் சொன்னான்.

"ஆரம்பத்தில் இருந்து சொல். நான் எப்போது எப்படி காணாமல் போனேன்"

தன்னை சுதாரித்துக் கொண்ட ஆனந்த் சொல்ல ஆரம்பித்தான். ஒரு பிள்ளையார் சதுர்த்தி சமயத்தில் பிள்ளையார்கள் ஊர்வலமாய் சென்று கொண்டிருந்த நாளில் வேடிக்கை பார்த்து கொண்டிருந்த மூன்று வயது அக்ஷய் காணாமல் போனதில் இருந்து ஆரம்பித்தான். நடைப்பிணமாய் மாறிய தாயின் தேடல் முயற்சிகளையும், மேற்கொண்ட கணக்கில்லாத விரதங்களையும் சொன்னான். அந்த தாயின் வாழ்க்கையில் காணாமல் போன மகனே மையமானதைச் சொன்னான்.

கூர்ந்து கவனித்தபடி கேட்டுக் கொண்டிருந்த அக்ஷயிற்கு அவன் குரலில் ஒரு ஆற்றாமையை உணர முடிந்தது. காணாமல்போன மகன் என்ன ஆனானோ என்ற கவலையில் அந்தத் தாய் இருக்கின்ற மகனை சரிவர கவனிக்கத் தவறி விட்டாள் என்பது புரிந்தது.

ஆனந்த் கேட்டான். "சரி நீ சொல். நீ எங்கே எப்படி வளர்ந்தாய்?"

அக்ஷய் லேசாக புன்னகைத்தபடி சொன்னான்.

"நான் அதையும் இனிதான் கண்டுபிடிக்கணும்"

ஆனந்த் எரிச்சலடைந்தான். "விளையாடுவதற்கு நேரம் காலம் இல்லையா?"

“விளையாடவில்லை. உண்மையைத் தான் சொன்னேன்" என்ற அக்ஷய் ஒரு நள்ளிரவில் துப்பாக்கிக் குண்டடி பட்டு புத்தவிஹாரத்தில் கண்விழித்ததைச் சொன்னான். "அது தான் எனக்கு நினைவு தெரிந்த முதல் கணம்."

தொடர்ந்து தன்னைத் தேடிவந்தவர்களைப் பற்றி சொன்னான். புத்த பிக்குகள் காப்பாற்றியதைச் சொன்னான். அங்கிருந்து கிளம்பியதைச் சொன்னான். வருண், சஹானா, மரகதம் பற்றி சொன்னான். அவர்கள் புகலிடம் தந்ததைச் சொன்னான்.
ஆனந்திற்கு ஏதோ சினிமாக் கதை கேட்பது போல் இருந்தது. அந்த புத்த பிக்குகளிடமும், சஹானாவிடமும் மனதார நன்றி சொன்னான். அம்மாவின் விரதங்களும் பிரார்த்தனைகளும் வீண் போகவில்லை என்று தோன்றியது.

"அப்படியானால் நீ ஆச்சார்யாவுடன் எப்படி சம்பந்தப்பட்டாய்?"

"தெரியவில்லை"

பழையது எதுவும் நினைவுகள் இல்லாதவனிடம் இந்தக் கேள்வியைக் கேட்டது அபத்தம் என்று ஆனந்திற்குத் தோன்றியது.

"சாரி"

"பரவாயில்லை. சரி நீ சொல். ஆச்சார்யாவைக் கொலை செய்தது அந்த பிடிபட்ட ஆள்தான் என்று நீயும் நம்புகிறாயா?"

"இல்லை" என்ற ஆனந்த் தங்கள் தரப்பு விவரங்களை தம்பிக்கு சொல்ல ஆரம்பித்தான்.

***************

ஆனந்த் உள்ளே சென்று நிறைய நேரம் ஆகியும் திரும்பாதது அவனுக்காக வெளியே காவல் காத்து நின்றவர்களுக்கு பெரிய சந்தேகத்தைக் கிளப்பியது. ஒருவருக்கொருவர் செல்லில் பேசிக் கொண்டார்கள்.

"அவன் நாம் பின் தொடர்வதைக் கண்டுபிடித்திருப்பான் என்று தான் தோன்றுகிறது. அதனால்தான் அவன் திடீரென்று ஓட்டலுக்கே திரும்பி வந்து விட்டான்."

"இருக்கலாம். ஆனால் உள்ளே போனவன் ஏன் வெளியே வரவில்லை. அவன் சுபாவப்படி அவன் அப்படி அறையில் அடைபட்டு கிடக்கும் ரகம் அல்லவே?"

"ஒரு வேளை அவன் வேறு வழியாகப் போயிருப்பானோ"

"இந்த ஓட்டலில் இருந்து வெளியே போக இது ஒன்று தான் வழி"

"வேறெதாவது வேஷம் போட்டுக்கொண்டு போயிருந்தால்."

"அப்படியும் போனமாதிரி தெரியவில்லை. எதற்கும் நாம் என்ன செய்வது என்று மேலிடத்தில் கேட்பது நல்லது என்று நினைக்கிறேன்"

"சரி"

உடனே அவர்களில் ஒருவன் சிபிஐ மனிதனுக்குப் போன் செய்தான். நடந்ததை எல்லாம் கேட்டபோது சிபிஐ மனிதனுக்கு உள்ளுணர்வு

எச்சரித்தது. நடப்பது எதுவும் நல்லதாக அவனுக்குப் படவில்லை.

"அவன் வேறு வழியாகவோ, வேறு வேஷத்திலோ போயிருக்க வாய்ப்பு இருக்கிறதா?"

"இல்லை சார். இந்த ஓட்டலில் இருந்து வெளியே போக வேறு வழி எதுவும் இல்லை. வேறு வேஷத்திலும் போயிருக்க வாய்ப்பில்லை. இந்த இரண்டு மணி நேரத்தில் ஓட்டலுக்குள்ளே வந்தவர்கள் மட்டும் வெளியே போய் இருக்கிறார்கள். மற்றபடி வெளியே போன இரண்டு மூன்று ஆட்கள் இந்த ஓட்டலில் இரண்டு நாளாய் தங்கி இருக்கிற ஆட்கள் தான்"

"வெளியே இருந்து அவன் அறையைப் பார்த்தீர்களா?"

'பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஜன்னல் திரை அவன் முன்பு கிளம்பிய போது போடப்பட்ட மாதிரியே தான் இருக்கிறது. அவன் அறைக்குப் போனபிறகு அதை விலக்கவில்லை"

சிறிது யோசித்து விட்டு சிபிஐ மனிதன் சொன்னான்.

"உடனடியாக அவனுடைய அறைக்குப் போய்ப்பாருங்கள். இனி தாமதிக்க வேண்டாம்"

43

ஆனந்த் ஜெயின் தன்னை அழைத்து ஆச்சார்யா கொலை வழக்கை ஒப்படைத்ததில் இருந்து ஆரம்பித்து விவரமாகச் சொல்ல அக்‌ஷய் உன்னிப்பாக அனைத்தையும் கேட்டான். ஆச்சார்யா வீட்டில் அவர் புதிதாக வாங்கி இருந்த ஒரு ஜென் புத்தகத்தினுள் டெல்லி வரைபடத்தில் ஏழு இடங்கள் குறிக்கப்பட்டிருந்தது என்று ஆனந்த் சொன்னபோது, அக்‌ஷய் அந்த இடங்களைச் சொல்லும்படி ஆர்வமாகச் சொன்னான்.

ஆனந்த் சொன்னான். "சாந்த்னி சௌக், ரயில்வே ஸ்டேஷன், பாரகம்பா ரோடு, லோட்டஸ் டெம்பில், சன்சாத் மார்க், கனாட் ப்ளேஸ், இந்தியா கேட்."

அக்‌ஷய் அந்த இடங்களைக் கேட்டவுடன் உள்ளே ஏதாவது பொறி தட்டுகிறதா என்று பார்த்தான். எந்த நினைவையும் அந்த இடங்கள் ஏற்படுத்தவில்லை.

ஆனந்த் ஆர்வமாக அவனைப் பார்த்தான். 'அக்‌ஷய் ஏமாற்றத்துடன் ஒரு நினைவும் வரவில்லை' என்ற பொருளில் தலையாட்டினான்.

ஆனந்த் தான் விட்ட இடத்தில் இருந்து மறுபடி தொடர்ந்தான். மகேந்திரனைப் பற்றி அவன் சொன்னபோது அவன் ஏற்படுத்திய சந்தேகத்தைச் சொன்னான்.

அக்ஷய் சொன்னான். "எனக்கு அவனைப்பற்றி விவரமாய்ச் சொல்"

"அரசியல் செல்வாக்கால் வேலை கிடைத்து வந்தவன், அடுத்தவர் தனிப்பட்ட விஷயங்களை வேவு பார்ப்பவன், கம்ப்யூட்டரில் புலி, ஆச்சார்யாவுடன் மிக நெருக்கமாக இருந்தவன், அடிக்கடி அவர் வீட்டுக்கு போய் வந்தவன், நான் சிபிஐ ஆபிசில் உள்ளே நுழைந்தாலே என்னை கழுகுப் பார்வையால் பார்ப்பவன்."

"உங்கள் டைரக்டர் ஜெயின் எப்படி?"

"ஆள் நல்ல மாதிரி"

"வேறு யாரும் ஆச்சார்யாவுடன் நெருக்கமாக இருந்ததில்லையா?"

"ராஜாராம் ரெட்டி கிட்டத்தட்ட ஆச்சார்யா வயது தான். பதவியும் இருவருடையதும் ஒரே மாதிரி தான். அவர் கூட ஆச்சார்யாவுடன் ஓரளவு நெருக்கமாய் இருந்தவர்தான்"

"அவர் எப்படி?"

"மிக நாணயமானவர். இரண்டு வருடங்களுக்கு முன்னால் ஒரு மந்திரியின் கிரிமினல் நடவடிக்கைகளை வெளியே கொண்டு வந்தவர். ஆனால் அந்த மந்திரி செல்வாக்கினால் கோர்ட்டில் அந்த கேஸ் புஸ்வாணமாகியது. அதில் அவர் நிறையவே மனம் உடைந்து விட்டார். ஆபிஸிற்கே நிறைய நாள் வராமல் இருந்தாராம். பின் எப்படியோ அவரை சமாதானப்படுத்தி மறுபடி கூட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அவர் இப்போது எதிலும் அவ்வளவு தீவிரமாய் ஈடுபாடு காட்டுவதில்லை"

"நீ என்னைப் பற்றி உங்கள் ஆபிசில் யாரிடமாவது சொன்னாயா?"

"இல்லை. ஜெயினிடம் கூட சொல்லவில்லை"

திடீரென்று அக்‌ஷய் உதடுகளில் விரலை வைத்து எச்சரித்தான்.

ஆனந்த் குழப்பத்துடன் மெல்ல கேட்டான். "என்ன?"

"உன் அறைக்கு வெளியே யாரோ இருக்கிறார்கள். கதவு பக்கம் நின்றுகொண்டு இருக்கிறார்கள்"

ஆனந்த் மெல்ல சொன்னான். "என்னை பின் தொடர்ந்து வந்த ஆட்களாய் இருக்கலாம். என்ன செய்யலாம்?"

"எப்படியும் உள்ளே வர முயற்சி செய்வார்கள். பிடித்து கட்டிப்போட்டு கேட்கிற விதத்தில் கேட்டால் யார் அனுப்பி வந்தார்கள் என்பதை சொல்லப் போகிறார்கள்."

ஆனந்த் தாழ்ந்த குரலில் சொன்னான். "அவர்கள் எல்லாம் ப்ரொஃபசனல்ஸ். உயிரே போனாலும் வாய்விட்டுச் சொல்ல மாட்டார்கள். அவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது அவர்களுக்குத் தரப்படும் முதல் கட்டளையே அதுதான். அவர்களைக் கண்டுபிடித்து விட்டோம் என்று தெரிந்தால் அவர்களுக்குப் பதிலாக வேறு ஆட்களை நியமிப்பார்கள். அதனால்தான் நான் கண்டும் காணாத மாதிரி இருக்கிறேன்"

அவன் சொல்வதும் உண்மை என்று அக்‌ஷயிற்குப் பட்டது. "அப்படியானால் அவர்களை அனுப்பி விட்டு வா"

ஆனந்த் எழுந்து கதவைத் திறக்கச் சென்றான். இரண்டு பேர் கதவருகே நின்று உள்ளே ஏதாவது சத்தம் கேட்கிறதா என்று கேட்கும் முயற்சியில் காதுகளை கதவில் வைத்துக் கொண்டு

நின்றிருந்ததால் கதவு திடீரென்று திறக்கப்பட்டவுடன் ஆனந்த் மேல் சாய்ந்து பின் சமாளித்துக் கொண்டு நின்றார்கள்.

ஆனந்த் கேட்டான். "யார் வேண்டும்"

இருவரில் ஒருவன் சமயோசிதமாக "மிஸ்டர் ஸ்ரீவாஸ்தவ்?" என்றான்.

"இல்லையே. உங்களுக்கு எந்த ரூம் வேண்டும்?"

"ரூம் நம்பர் 208"

"இது ரூம் 205"

அப்போதுதான் அறை எண்ணை கவனித்தவர்கள் போல் நடித்து விட்டு "தொந்திரவுக்கு மன்னிக்கவும்" என்று சொல்லி விட்டு வேகமாக அங்கிருந்து நகர்ந்தார்கள்.

கதவை சாத்திவிட்டு வந்த ஆனந்த் சொன்னான். "அவர்கள் தான்"

அக்ஷய் தலையசைத்து விட்டு கேட்டான். "சரி அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?"

ஆனந்த் சொன்னான். "நீ முதலில் அம்மாவைப் போய் பார்த்து விட்டு வா?"

"உன் சூட்கேஸில் இருந்ததுதானே அம்மாவின் ஃபோட்டோ"

"ஏன் அப்படி சோகமாக இருக்கிற ஃபோட்டோவை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறாய்"

"எப்போதாவது சந்தோஷமாகவோ, சிரித்தாலோ தானே அதை ஃபோட்டோ எடுக்க முடியும். எனக்கு நினைவு தெரிந்தது முதல் அம்மா அப்படித்தான் இருக்கிறார்கள். இனி உன்னைப் பார்த்த பிறகாவது மாறுகிறார்களா என்று பார்க்க வேண்டும்"

அக்ஷயிற்கு மனம் என்னவோ செய்தது. ஒரு நாளல்ல இரண்டு நாளல்ல கிட்டத்தட்ட 24 வருடங்கள் இப்படி இருப்பதென்றால்.

அக்ஷய் ஆனந்திடம் கேட்டான். "நான் உயிருடன் இருக்கிறேன் என்று அம்மா எப்படி நம்புகிறார்கள்?"

"வேறுா விதமாய் நினைக்கும் தைரியம் அவர்களுக்கு இல்லை. மூன்று வருஷங்கள் முன்னால் ஒரு சாதுவிடம் போய்க்கேட்டபோது

அவரும் நீ உயிரோடு இருப்பதாய் சொன்னார்."

அக்‌ஷய் உற்சாகத்துடன் கேட்டான். "சாதுவா? யாரது? அவரை உனக்கு எப்படி தெரியும்? நீ சந்தித்தபோது அவர் என்ன சொன்னார் என்பதை ஒன்று விடாமல் சொல் பார்க்கலாம்?"

ஆனந்த் தயக்கத்துடன் முதல் முறை அந்த சாது சொன்னதை எல்லாம் ஒன்று விடாமல் அப்படியே சொன்னான்.

"வேறேதோ தேசத்தில் இருக்கிறான். நிறைய புத்த துறவிகள் தெரிகிறார்கள். அவன் ஏதோ கற்றுக் கொண்டிருக்கிறான்.அவனை அபாயம் சூழ்ந்திருக்கிறது."

இந்த தகவல்கள் அக்‌ஷயை யோசிக்க வைத்தன. மூன்று வருடங்களுக்கு முன்பே அவனுக்கு புத்த துறவிகளுடன் தொடர்பு இருந்ததும் அப்போதே தனக்கு அபாயம் சூந்துள்ளதை அந்தச் சாது சொல்லி இருந்ததும் அவனுக்கு திகைப்பாய் இருந்தன.

அவன் கேட்டான். "அந்தச் சாதுவை நீ பிறகு பார்க்கவேயில்லையா?"

ஆனந்த் இரண்டாம் முறை பார்த்ததை சொல்வதா வேண்டாமா

என்று குழம்பினான். ஆனால் அவன் தயக்கத்தை வைத்தே அவன் அந்த சாதுவை மறுபடி பார்த்திருக்க்றான் என்பதை யூகித்த அக்‌ஷய் கேட்டான். "சரி சொல். இரண்டாவது தடவை பார்த்த போது அவர் என்ன சொன்னார்."

ஆனந்த் எச்சிலை விழுங்கினான். அவன் முகத்தில் துக்கம் படர்ந்தது. அவன் தன் தம்பியிடம் எப்படி இதை சொல்வான். எத்தனையோ வருடங்கள் கழித்து அவன் கிடைத்திருக்கிறான். இன்னும் பேசியே முடியவில்லை.

அக்‌ஷய் விடாமல் கேட்டான். "பரவாயில்லை சொல். என்ன சொன்னார்?"

ஆனந்த் இனி மறைப்பதில் அர்த்தமில்லை என்று எண்ணியவனாக தயங்கித் தயங்கி அவர் சொன்னதை அப்படியே சொன்னான்.

கேட்டவுடன் அக்‌ஷய் முகத்தில் புன்னகை அரும்பியது. இரத்த வெள்ளத்தில் கிடப்பதாக சாது ஞானக்கண்ணால் பார்த்தார் என்பதை வேதனையுடன் சொன்னதைக் கேட்டு தம்பி புன்னகைத்தது ஆனந்திற்குக் கோபம் வந்தது.

"ஏன் சிரிக்கிறாய். அவர் சொன்னதை நீ நம்பவில்லையா?"

"நாக மச்சம் முதற்கொண்டு சரியாகச் சொன்ன ஆள் இதை தப்பாய் சொல்வார் என்று நான் நினைக்கவில்லை"

"பின் ஏன் சிரித்தாய்?"

"இல்லை நீ அவசரமாய் அம்மாவை ஒரு முறை பார்த்து விட்டு வா என்றது சாவதற்குள் அம்மாவைப் பார்த்து விட்டு வா என்கிற அர்த்தத்தில் என்று புரிந்த போது சிரிப்பு வந்தது"

ஆனந்த் கண்கள் லேசாகக் கலங்கின. அக்ஷய் சொன்னதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால் அப்படி நினைக்க நேர்ந்ததே, அவனும் அதைப் புரிந்து கொண்டானே என்று நினைக்கையில் இதயம் ரணமானது. வாய் வார்த்தைக்காவது மறுக்க முயற்சித்தவன் அக்ஷயின் கூர்மையான பார்வையில் அதைச் செய்ய முடியாமல் தவித்தான்.

ஆனந்தின் கண்கள் கலங்கியதையும் என்ன சொல்லலாம் என்று தவித்ததையும் கண்ட அக்‌ஷய் புன்னகையுடன் அண்ணனைத் தட்டிக் கொடுத்தான்.

"அதில் ஒன்றும் தப்பில்லை. ஏன் என்றால் உன் நிலைமையில் நான் இருந்தாலும் அதைத் தான் செய்திருப்பேன்."

ஆனந்த் அப்போதும் சமாதானமாக முடியாமல் தவித்தான்.

அக்‌ஷய் வாய் விட்டு சிரித்தான். ஆனந்த் கேட்டான்."உன்னால் எப்படி இந்த நிலைமையிலும் சிரிக்க முடிகிறது?"

"ஏதாவது ஒரு நாள் எல்லோரும் இறந்துதான் ஆக வேண்டும் என்கிற உண்மை எனக்கு விளங்கி இருக்கிறதால்தான்"

எல்லா தத்துவங்களையும் அறிந்திருப்பதும், சொல்வதும் பெரிதல்ல. சொந்த வாழ்க்கையில் அடிபட நேரும்போது அறிந்த தத்துவமும், சொன்ன தத்துவமும் காற்றில் பறந்து விடுகிறது என்பதை ஆனந்த் நன்றாக அறிவான். அதனால் தம்பி அதை ஏற்றுக் கொண்ட விதம் அவனை பிரமிக்க வைத்தது.

அக்‌ஷய் ஆனந்திடம் தொடர்ந்து சொன்னான்."இன்னொரு விஷயம்

யோசித்துப் பார். அந்தச் சாது நான் ரத்த வெள்ளத்தில் விழுந்து கிடப்பதை ஞான திருஷ்டியில் பார்த்தார் என்று சொல்கிறாய். அவர் அது எந்தக் காலத்தில் என்று ஏதாவது சொன்னாரா? அது என்னுடைய எழுபதாவது வயதிலாகக் கூட இருக்கலாம். அப்புறம் அந்த சாதுவுக்கு இது வரை ஞான திருஷ்டியில் தெரிந்ததெல்லாம் நடக்காமல் இருந்ததில்லை என்று சொன்னால் கூட அப்படியே எதிர்காலத்தில் நடக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லையே. எதற்கும் ஒரு முதல் தடவை என்று ஒன்று இருக்கிறதல்லவா? ஏன் என்னுடைய கேஸ் அப்படிப்பட்டதாக இருக்கக்கூடாது?"

ஆனந்த் ஒன்றுமே சொல்லாமல் அவனையே பார்த்தான். இப்போதும் தோன்றியது. "அந்தச் சாது எதிர்கால விஷயங்கள் எல்லாவற்றையும் தெரிந்து கொள்வது நல்லதல்ல என்று சொல்லும் போதே நான் விட்டிருக்க வேண்டும்.."

ஆனந்தின் முகத்தைப் பார்த்து விட்டு பேச்சை மாற்ற விரும்பிய அக்ஷய் கேட்டான்."சில நாட்களுக்கு முன் வெடிகுண்டு வைத்ததாக ஒருவன் ஃபோட்டோவை டிவியில் காண்பித்தார்களே? அது பற்றி உங்கள் சிபிஐயில் என்ன சொல்கிறார்கள்?"

"அது எங்கள் டிபார்ட்மெண்ட் சம்பந்தப்பட்டதில்லையே. அதனால் பெரிதாக அது பற்றி கருத்து எதுவும் இல்லை. ஏன் கேட்கிறாய்?"

"அவர்கள் காண்பித்தது என்னுடைய ஃபோட்டோவைத் தான்"

ஆனந்த் திகைத்துப் போனான். அந்த புகைப்படத்தை அவனும் பார்த்து இருக்கிறான். ஆனால் இப்போதைய அக்‌ஷயின் தோற்றத்திற்கும் அதற்கும் சம்பந்தம் சிறிதுமில்லை. இப்போதைய நிலைமையின் பூதாகாரம் ஆனந்திற்கு புரிய ஆரம்பித்தது. இவனைக் கொல்ல அவர்கள் எதையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

அக்‌ஷய் அவனிடம் அந்த ஃபோட்டோ டிவியிலும் பத்திரிக்கைகளிலும் வந்ததில் இருந்து நடந்ததை விவரித்தான். அந்த சிறுவனின் குடும்பம், ப்யாரிலால் பற்றி எல்லாம் சொன்னான். ப்யாரிலால் வீட்டுக்கு இரண்டாவது முறை சென்று அறிந்ததையும் சொன்னான். அதையெல்லாம் சொன்ன போது 'அவர்களை மிரட்டி உண்மையை அறிந்து கொண்டேன்' என்று சொன்னானே ஒழிய எப்படி மிரட்டி சொல்ல வைத்தான் என்பதை அவன் சொல்லவில்லை. ஆனால் அவனிடம் அனுபவப்பட்ட ஆனந்திற்கு அது எப்படி என்று சொல்லத் தேவை இருக்கவில்லை. தன் கழுத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

அக்‌ஷய் கேட்டான்."வலிக்கிறதா?"

"வலி கழுத்தில் இல்லை. என் ஈகோவில். இத்தனை வருஷங்கள் என் சர்வீஸில் நான் இப்படி ஒரு நிலைமைக்கு ஆளானதில்லை. அக்‌ஷய் எனக்கு ஒன்று மட்டும் புரியவில்லை. உனக்கு பழையது எதுவும் ஞாபகம் வரவில்லை என்கிறாய். ஆனால் இந்த வித்தைகள் எல்லாம் உனக்கு எப்படி நினைவில் இருக்கிறது?"

"தெரியவில்லை ஆனந்த். எனக்கு அதெல்லாம் இயல்பாய் வருகிறது"

"சரி ஏன் நீ கேசவதாஸைப் பார்க்கப் போகவில்லை?"

"நான் அங்கே போவேன் என்று எதிர்பார்த்து அவருடைய செக்யூரிட்டியை அதிகப்படுத்தி விட்டார்கள். அதையெல்லாம் மீறி அந்த ஆளைப் பிடிப்பது பெரிய கஷ்டமான வேலை இல்லை. ஆனால் அவர்கள் எதிர்பார்க்காத நேரத்தில் போகலாம் என்று விட்டு விட்டேன். முதல் மூன்று நாள் அந்த ஆளுக்கு இருந்த பாதுகாப்பு கெடுபிடி எல்லாம் இப்போது இல்லை. இனி போகப் போக அதுவும் குறையும். அப்போது போகலாம் என்று இருக்கிறேன்."

ஆனந்த் சொன்னான்."அந்த ஆளிடம் ஜாக்கிரதையாக இரு. மிகவும் திறமைசாலி, தைரியசாலி என்றெல்லாம் அந்த ஆள் பெயர் எடுத்தவர்"

*********

அவர்கள் கேசவதாஸைப் பற்றி பேசிக் கொண்டிருந்த அதே நேரத்தில் கேசவதாஸும் அமானுஷ்யனைப் பற்றியேதான் நினைத்துக் கொண்டு இருந்தார். அந்த ஃபைலில் அவர் படித்திருந்த தகவல்கள் சரியாக இருக்குமானால் அவனுக்கு அந்தப் பாதுகாப்பை மீறி அவரை வந்து பார்ப்பது ஒரு பெரிய விஷயமல்ல. எனவே அவன் வருவான் என்று காத்திருந்தவர் ஏமாந்து போனார்.

மந்திரி அவனை ஒழிக்கப் போட்ட திட்டத்தில் தன்னிடம் முழுவதையும் சொல்லி விடவில்லை என்ற சந்தேகம் கேசவதாஸுக்கு இருந்து கொண்டே இருந்தது. இது போன்ற பதவியில் தாக்குப் பிடிக்க வேண்டுமானால் அரசியல் தலைவர்களுக்குப் பல காரியங்களை செய்ய வேண்டி இருக்கும் என்பதால் இது வரை எத்தனையோ அரசியல்வாதிகளுக்கு எவ்வளவோ செய்திருக்கிறார். ஆனால் அந்த சமயங்களில் எல்லாம் என்ன செய்கிறோம்? ஏன் செய்கிறோம்? என்றெல்லாம் தெளிவாக அவருக்குத் தெரிந்திருந்தது. ஆனால் இப்போதோ அந்த மந்திரி

முழுவதுமாகத் தன்னிடம் சொல்லவில்லை என்பதும் பின்னால் ரகசியமாக ஏதோ செய்து கொண்டிருக்கிறார் என்பதும் மனதில் மிகவும் நெருடலாக இருந்தது.

ப்யாரிலாலைக் கண்டு அவனிடம் விரிவாக சில விஷயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இரு நாட்களாக பலப்பட்டுக் கொண்டே இருந்தது. ஆனால் அவனை வரவழைத்துப் பேசினால் அது மந்திரிக்கு சந்தேகத்தைக் கிளப்பும் என்பதால், தானே அவனைப் போலீஸ் ஸ்டேஷனிலேயே சென்று சந்திக்க முடிவெடுத்தார். ஆனால் அங்கு மட்டும் நேரடியாகச் சென்றாலும் அதே சந்தேகம் வரும் என்பதால் திடீர் சோதனை செய்ய மூன்று போலீஸ் ஸ்டேஷன்களைத் தேர்ந்தெடுத்து அதில் ப்யாரிலால் ஸ்டேஷனும் வருமாறு பார்த்துக் கொண்டார். மற்ற இரண்டு ஸ்டேஷன்களில் சோதனையை முடித்து விட்டு ப்யாரிலால் ஸ்டேஷனுக்குச் சென்றார்.

அலுவலகத்தில் சில ஃபைல்களையும் ரெகார்டுகளையும் பரிசோதித்த அவர் சில ஃபைல்களை எடுத்துக் கொண்டு ப்யாரிலாலிடம் தனியாக அது பற்றி பேச அழைத்தார். அவர் அழைக்கும் போதே அவர் ஏன் அழைக்கிறார் என்பதை சந்தேகத்திற்கு இடமில்லாமல் புரிந்து கொண்ட ப்யாரிலால் மனதினுள் அமானுஷ்யனையும் அந்தக் கேஸில் தன்னை சிக்க

வைத்த அனைவரையும் மனமார சபித்துக் கொண்டே உள்ளே போனான்.

"உட்கார்" என்று எதிரே இருந்த நாற்காலியைக் காட்டிய கேசவதாஸ் சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் அவனையே ஆழ்ந்த சிந்தனையுடன் பார்த்தார்.

ப்யாரிலால் தர்மசங்கடத்துடன் நெளிந்தான். ஆனால் கேசவதாஸ் ஒன்றும் சொல்லாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய பார்வையில் இருந்து அவனால் அவருடைய சிந்தனையை ஊகிக்க முடியவில்லை.

திடீரென்று கேசவதாஸ் கேட்டார்."அவனைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

யார் என்று சொல்லாமலேயே யாரைப் பற்றி அவர் கேட்கிறார் என்பதைப் புரிந்து கொண்ட ப்யாரிலால் பெருமூச்சு விட்டான். அன்று இருட்டில் இருந்து கேள்விகள் கேட்டவனும் சரி, இன்று இவரும் சரி அவனைப் பற்றி அதிகம் அறிந்து கொள்ள ஆவலாக இருந்தார்கள். இருவருமே அவனைப் பார்த்திராதவர்கள் என்ற சந்தேகம் அவனுக்கு வந்தது. தன் சந்தேகத்தை வாய் விட்டே ப்யாரிலால் கேட்டான்."நீங்கள் அவனைப் பார்த்ததில்லையா?"

கேசவதாஸ் ஒரு சில வினாடிகள் மௌனம் சாதித்து விட்டு சொன்னார்."இல்லை"

"நீங்கள் அதிர்ஷ்டசாலி"

அந்த ஃபைலில் படித்தது கேசவதாஸிற்கு நினைவுக்கு வந்தது. அவனை சந்திக்க நேர்ந்ததே தங்கள் துரதிர்ஷ்டம் என்று அவனுடைய எதிரிகள் சொன்னதாகப் படித்திருந்தார். ப்யாரிலாலும் அதைத்தான் சொல்கிறான்.

"எனக்கு அவனை நீ பார்த்தது முதல் ஒன்று விடாமல் சொல்"

ப்யாரிலால் வெறுத்துப் போனான். இதே கேள்வியைத் தான் அந்த இருட்டில் இருந்தவனும் கேட்டான். கேட்டதற்குப் பதில் சொன்ன பின் மறுபடி அந்த சைத்தான் அவனைத் தேடி வந்தான். இன்னொரு தடவை வந்தால் என்ன செய்வான் என்பதை அவன் எச்சரித்துச் சென்றதும் நினைவுக்கு வந்தது. இவர்களுடன் சிக்கிக் கொண்ட தன் விதியை நினைத்து மனம் நொந்தான்.
அழாத குறையாக அவரிடம் சொன்னான்."சார் அவனைப் பற்றி நான் உங்களிடம் சொன்னது தெரிந்தால் என்னை வாழ்நாள் எல்லாம் கோமா ஸ்டேஜில் ஆக்கி விடுவேன் என்று

சொல்லியிருக்கிறான். அவன் கண்டிப்பாய் செய்யக் கூடியவன்தான்."

கேசவதாஸ் சொன்னார்."நீ என்னிடம் பேசினது எதுவும் நம் இரண்டு பேரைத் தவிர வேறு யார் காதுக்கும் போகாது ப்யாரிலால். நீ என்னை நம்பலாம். நான் வார்த்தையை சாதாரணமாகத் தர மாட்டேன். தந்தால் காப்பாற்றாமல் இதுநாள் வரை இருந்ததில்லை"

"சார் சொல்லாமலேயே தெரிந்து கொள்ளக்கூடிய ஆள் அவன்"

"இல்லை ப்யாரிலால். இது கண்டிப்பாய் ரகசியமாய் இருக்கும்"

கேசவதாஸைப் ப்யாரிலால் பரிதாபமாகப் பார்த்தான். பின் விதி விட்ட வழி என்று முதல் சந்திப்பில் நடந்தது எல்லாவற்றையும் சொன்னான். அவர் அவனை குடோனில் இருட்டில் விசாரித்தவன் கேட்டதையும் கேட்டார். சொன்னான்.

"அந்த ஆள் எதிர்பார்த்தது போல் அவன் திரும்பவும் உன்னைப் பார்க்க வந்தானா?"

தலைக்கு மேல் போனபின் ஜான் என்ன முழம் என்ன என்று அப்போது நடந்ததையும் சொன்னான்.

அங்கிருந்து கிளம்பும் போது கேசவதாஸ் சந்தேகம் வலுத்திருந்தது. அந்த மந்திரி சொன்னது போல் அவன் கண்டிப்பாக தீவிரவாதி அல்ல. ஆனால் அவனைப் பார்த்து அந்த மந்திரி பயப்படுகிறார். அடுத்த பிரதமராக வர வாய்ப்பு உள்ளதாகக் கருதப்படும் அவ்வளவு பெரிய ஆள் அவனிடம் பயப்பட என்ன காரணம்? ஏன் அவனை ஒழித்துக் கட்ட இவ்வளவு ஆர்வம் காட்டுகிறார் அவர்? விஷயம் எதுவாக இருந்தாலும் மந்திரிக்கு ஆதரவாகத் தான் கேசவதாஸ் நடப்பார் என்பது தெரிந்தாலும் கூட மந்திரி அவரிடம் அதை சொல்லாமல் இருக்க வேண்டுமானால் ஏதோ பெரிய விவகாரமாக இருக்கும் போல் அல்லவா தோன்றுகிறது?

## 45

"யாரந்தப் பெண்?" அக்ஷய் கேட்டபோது ஆனந்த் விழித்தான். "எந்தப் பெண்?"

"உன் சூட்கேஸில் அம்மா போட்டோ தவிர இன்னொரு போட்டோவை ஒளித்து வைத்திருந்தாயே அந்தப் பெண்"

ஆனந்த் முகம் லேசாகச் சிவந்தது. என்ன சொல்வது என்று

தடுமாறினான். அக்ஷய் சிரித்துக் கொண்டே சொன்னான். "ரொம்பவும் கஷ்டப்படாதே. எனக்கு புரிந்து விட்டது. அந்தப் பெண் பெயர் என்ன? என்ன செய்கிறாள்"

ஆனந்த் சொன்னான். "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை"

அக்ஷய் மீண்டும் சிரித்தான். "நான் ஒன்றும் சொல்லாமலேயே அப்படி எல்லாம் ஒன்றுமில்லை என்று சொல்கிறாயே. சரி சொல். அவள் பெயர் என்ன?"

"பெயர் நர்மதா. சென்னையில் ஒரு கல்லூரியில் லெக்சரராக வேலை செய்கிறாள். கல்லூரியில் ஒன்றாகச் சேர்ந்து படித்தோம். ஆனால் நீ நினைக்கிற மாதிரி ஒன்றும் இல்லை."

"கல்லூரியில் எத்தனையோ பேர் கூடப்படித்திருப்பார்கள். அப்படி இருக்கையில் ஒருத்தியின் போட்டோவை மட்டும் சூட்கேஸில் ஒளித்து வைத்திருக்கிறாய். கேட்டால் மழுப்புகிறாய்."

ஆனந்த் முகத்தில் சொல்ல முடியாத ஒரு சோகம் படர்ந்தது. "அவள் போட்டோ மட்டும்தான் என்னிடம் இருக்கிறது. அது என்னிடம் இருக்கிறதுகூட அவளுக்குத் தெரியாது. நான் அவளைப் பார்த்தே இரண்டு வருடம் ஆகி விட்டது. அதனால் இதைப் பெரியதாகச்

சொல்ல ஒன்றுமில்லை"

"ஏன் அந்தப் பெண்ணிற்குக் கல்யாணம் ஆகி விட்டதா?"

"இல்லை"

"அந்தப் பெண் உன்னைக் காதலிக்கவில்லையோ"

ஆனந்த் கண்களில் லேசாக நீர் திரை போட்டது. "என்னை அவள் காதலித்தாள்"

"ஏன் இறந்த காலத்தில் சொல்கிறாய்"

"அவள் என்னிடம் அவள் காதலைச் சொன்ன போது நான் அவளைக் காதலிக்கவில்லை என்றும், நல்ல நண்பனாய்த்தான் பழகினேன் என்றும் அவளிடம் சொல்லி விட்டேன்"

"ஏன்?"

"அவள் நல்ல கலகலப்பான சந்தோஷமான பெண். அவளை நான் கல்யாணம் செய்து கொண்டால் அவளை அப்படியே கலகலப்பாய் சந்தோஷமாய் வைத்துக் கொள்ள முடியும் என்று எனக்குத்

தோன்றவில்லை அக்‌ஷய். நம் வீட்டில் அந்த இரண்டும் இல்லாமல் போய் பல வருஷங்களாகிறது. ஒரு வேளை நீ காணாமல் போகாமல் இருந்தால் எல்லாம் மாறியிருக்குமோ என்னவோ? அதனால் அவளாவது யாராவது ஒரு நல்லவனைக் கல்யாணம் செய்து கொண்டு சந்தோஷமாய் இருக்கட்டுமே என்று தோன்றியது" சொல்கையில் ஆனந்த் குரல் கரகரத்தது.

அக்‌ஷய் கோபப்பட்டான். "நீ ஒரு முட்டாள்"

"உனக்குப் புரியாது அக்‌ஷய்" என்ற ஆனந்த் மேற்கொண்டு ஒன்றும் சொல்லாமல் அமைதியாக அமர்ந்திருந்தான்.

அக்‌ஷயும் மேற்கொண்டு அதைப் பற்றி எதுவும் சொல்லப் போகவில்லை. அவன் மனம் இப்போதைய எதிரிகள் பற்றி சிந்திக்க ஆரம்பித்தது. திடீரென்று சொன்னான். "நான் உன் செல்போனில் அம்மாவிடம் பேசி இருக்கக் கூடாது ஆனந்த்"

"ஏனப்படி சொல்கிறாய்?"

"உன்னைப் பின் தொடர ஆட்களை ஏற்பாடு செய்தவர்கள் ஏன் உன் போனையும் டேப் செய்ய ஏற்பாடு செய்திருக்கக் கூடாது?"

"ஒரு சிபிஐ அதிகாரியின் போனை டேப் செய்ய வேண்டுமென்றால் அதற்கு சிபிஐ டைரக்டர் அனுமதி கண்டிப்பாக வேண்டும் அக்‌ஷய். இன்னும் அது போன்ற சில வழக்கங்கள் நடைமுறையில் இருக்கின்றன. மற்ற போன்களை டேப் செய்வதுபோல் என் போனை அவர்கள் டேப் செய்ய முடியாது. டெலிபோன் டிபார்ட்மெண்டில் அந்த அனுமதிக் கடிதம் கண்டிப்பாகக் கேட்பார்கள். கிடைத்தவுடன் "உங்கள் அனுமதியுடன் இதைச் செய்கிறோம்" என்ற தகவலையும் சிபிஐ டைரக்டருக்கு ஈ மெயிலில் தெரிவித்தும் விடுவார்கள். அதனால் அதற்கு பயப்படத் தேவையில்லை. ஆனால் மாற்று வழிகளில் நான் எந்த எண்ணுக்குத் தொடர்பு கொண்டிருக்கிறேன் என்பதை எல்லாம் அவர்கள் சுலபமாகக் கண்டுபிடிக்க முடியும். அப்படித் தெரிந்து கொண்டாலும் என் வீட்டுக்குப் போன் செய்து அம்மாவிடம் நான் பேசுவது ஒரு பெரிய விஷயமாக அவர்கள் நினைக்க மாட்டார்கள்"

**********

சிபிஐ மனிதன் ஆனந்த் அறைக்குச் சென்று அவனால் கண்டுபிடிக்கப்பட்டு சமாளித்து திரும்பி வந்த கதையை விரிவாகக் கேட்டான். "முட்டாள்கள்" என்று மனதிற்குள் அடைமொழி கொடுத்தாலும் வாய் விட்டு அவன் ஒன்றும் சொல்லவில்லை. கடைசியில் கேள்விகளைக் கேட்டான்.

"நீங்கள் போன போது அவன் யாரிடமாவது போனிலோ, கூட இருந்தோ பேசிய மாதிரி இருந்ததா?"

சிறிது யோசனைக்குப் பின் பதில் வந்தது. "ஏதோ பேசிக் கொண்டு இருந்தது போல் கேட்டது. ஆனால் சரியாகச் சொல்ல முடியவில்லை"

"அவன் கதவைத் திறந்து வெளியே வந்த போது அவன் கையில் செல்போன் இருந்ததா?"

"இல்லை சார்"

"அவன் அறையில் அவனுடன் வேறு ஒரு ஆள் இருந்திருக்கலாமோ?"

"இருந்தது போல் தெரியவில்லை சார்"

"சரி இனி நீங்கள் யாரும் அவனைக் கண்காணிக்க வேண்டாம். அவனைக் கண்காணிக்க வேறு ஆட்களை நான் ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் அங்கிருந்து போகலாம்"

ஆனந்தைக் கண்காணிக்க வேறு ஆட்களை ஏற்பாடு செய்து விட்டு போனை வைத்து விட்டபோது சிபிஐ மனிதன் மனதில் ஏதோ ஒரு நெருடல் இருந்தது. உண்மையாகச் சொல்லப் போனால் இந்த நெருடல் சஹானாவின் விலாசம் கிடைத்து அவளைக் கேள்வி கேட்கப் போன ஆள் நடந்ததைச் சொன்ன கணம் முதலாகவே இருந்து வருகிறது. எதுவுமே இயல்பானதாக அவனுக்கு◌ுத் தோன்றவில்லை.

சஹானாவின் மாமியார் தன் தங்கை மகன் பற்றி சொன்னதெல்லாம் இந்தக் கால ரோமியோக்களின் காதலுக்குப் பொருந்துவதாகவே இருந்தது. ஆனாலும் எங்கேயோ இடித்தது. அப்படியே அவள் சொன்னது சரியாகவே இருந்தாலும் சஹானா அவள் மகனைக் காப்பாற்றிய அமானுஷ்யன் பற்றி முழு விவரங்களும் சொல்லி விடவில்லை என்ற எண்ணம் நீடித்தது.

அமானுஷ்யன் வெளியே எங்கேயோ சுதந்திரமாய் இருக்கிறான் என்ற உண்மையே மிக அபாயகரமானதாகத் தோன்றியது. மனம் ஏதேதோ சொல்லி பயமுறுத்த சிபிஐ மனிதன் உடனடியாக மந்திரிக்குப் போன் செய்தான்.

"ஹலோ. ஏதாவது தகவல் கிடைத்ததா?" என்று மந்திரி எடுத்தவுடன் கேட்டார்.

"பெரிதாக சொல்லிக் கொள்கிற மாதிரி எதுவும் இல்லை. உங்கள் போலீஸ் டிபார்ட்மென்டில் இருந்து ஏதாவது..."

"இல்லை. நீங்கள் சொன்னபடி கேசவதாஸ் செக்யூரிட்டியைக் கூட குறைத்து விட்டோம். ஆனால் அவன் அவரைப் பார்க்கவும் போகவில்லை."

"அவனுக்குப் பழையதெல்லாம் மறந்திருக்கலாம். ஆனால் மூளையே இல்லாமல் போய் விடவில்லை. நாம் அதை மறந்து விடக்கூடாது. அவன் நம் கையில் சிக்காமல் ஒளிந்து இருப்பது தலைக்கு மேல் தொங்கும் கத்தி போலத்தான். நாம் இனியும் அலட்சியமாய் இருக்கக் கூடாது"

"என்ன செய்யச் சொல்கிறீர்கள்?" மந்திரி குரலில் எரிச்சல் இருந்தது.

"அந்தத் திட்டத்தை உடனடியாக அமல்படுத்துவதுதான் நல்லது என்று தோன்றுகிறது"

"அதைச் சொன்னால் அவர்கள் கேட்க மாட்டேன்கிறார்கள். அந்தத் தேதியை மாற்ற மாட்டேன் என்கிறார்கள். நான் அந்தக் குறுந்தாடிக்காரனிடம் வேண்டிய அளவு பேசிப்பார்த்து விட்டேன்.

அவனும் புரிந்துதான் இருக்கிறான். ஆனால் அவனுக்கு மேலே இருப்பவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டேன்கிறார்களாம். நான் சரியாகத் தூங்கி பல நாள் ஆகிவிட்டது."

அவரிடம் சிறிது நேரம் பேசி விட்டு போனை வைத்த சிபிஐ மனிதன் கடவுள் ஏராளமான ஆட்களுக்கு மூளையைத் தர மறந்து விட்டதோடு அத்தனை ஆட்களையும் தன்னிடமே அனுப்பி வைக்கிற வேலையையும் செய்கிறாரோ என்று சந்தேகித்தான்.

மனம் மீண்டும் அமானுஷ்யனையே சுற்றிச் சுற்றி வந்தது. ஆனந்த் அறையில் சந்தேகப்படும்படி நீண்ட நேரம் தங்கியதற்கும் அமானுஷ்யன் காரணமாய் இருக்கலாமோ?

உடனடியாகப் போனை எடுத்து முன்பு தன்னிடம் பேசிய ஆளிடம் சிபிஐ மனிதன் பேசினான். "ஹலோ இன்று காலையில் அந்த ஓட்டலில் புதிதாகத் தங்க யாராவது வந்தார்களா?"

"அதிகாலையில் ஒரு தெலுங்குக் குடும்பம் வந்தது சார். பிறகு ஒரு கிழவர் வந்தார். அடுத்ததாக ஒரு பிசினஸ்மேன் போல ஒரு ஆள் வந்தார்"

"அவர்கள் யாராவது ஓட்டலை விட்டு வெளியே போனார்களா?"

"இல்லை சார்"

"தெலுங்குக் குடும்பத்தில் எத்தனை பேர் இருந்தார்கள்"

"ஒரு தம்பதி மூன்று குழந்தைகள் சார்"

சிபிஐ மனிதன் உடனடியாகச் சொன்னான். "எதற்கும் அந்தக் கிழவரும், அந்த பிசினஸ்மேனும் எந்த அறையில் தங்கினார்கள் என்று பார். அவர்கள் தங்கள் அறையில் இருக்கிறார்களா என்றும் பார். அவர்களில் யாராவது ஒருவர் ஆனந்துடன் ஏதாவது பேசுகிறார்களா, தொடர்பு கொள்கிறார்களா என்று கவனித்து சொல். வேண்டுமானால் புதிய ஆள் ஒருவனை கூப்பிட்டுக் கொள். சீக்கிரம் போ"

## 46

"அக்ஷய் உனக்கு நினைவு திரும்புவது மிக முக்கியம். ஏதோ பெரியதாக நடக்கப் போகிறது. அதைத் தெரிந்து கொண்ட ஆச்சார்யா வெளியே சொல்லி விடுவார் என்றுதான் அவரைக் கொலை செய்திருக்கிறார்கள். உன்னையும் அவர்கள் கொல்ல

முயற்சி செய்வதும் அதனால்தான். அது நடப்பதற்கு முன் உனக்கு நினைவு திரும்பினால்தான் நாம் ஏதாவது செய்ய முடியும்"

"எனக்கு புரிகிறது ஆனந்த். ஆனால் நான் என்ன முயற்சி செய்தும் நினைவு வரமாட்டேன்கிறது. எல்லா நினைவும் அழித்து வைத்த மாதிரி வெறுமைதான் மிஞ்சுகிறது"

"அன்றைக்கு ஆச்சார்யா வீட்டு போன் நம்பர் நினைவு வந்ததே. அதேபோல் முயற்சி செய்து பாரேன்"

"அன்றைக்கு அபூர்வமாய் நினைவு வந்தது. பிறகு வரவில்லை" அக்ஷய் சிறிது வருத்தத்துடன் சொன்னான்.

சிறிது நேரம் இருவரும் பேசவில்லை. பின் தன்னைச் சுதாரித்துக் கொண்டு அக்ஷய் சொன்னான். "சரி நான் எதற்கும் அம்மாவை ஒரு தடவை பார்த்து விட்டு வருகிறேன். நம் வீட்டு அட்ரஸ் சொல்."

ஆனந்த் சொன்னான். "நானும் கூட வரட்டுமா?"

"அவர்கள் இப்போது உன்னைத்தான் பின் தொடர்கிறார்கள். நீ என் கூட வந்தால் என்னையும் அவர்கள் அடையாளம் தெரிந்து கொள்வார்கள். அதனால் வேண்டாம்"

அவன் சொல்வதும் சரி என்றே ஆனந்துக்கு பட்டது. ஆனால் அம்மாவுக்குத் காணாமல்போன தன் மகனைத் திடீரென்று பார்க்கையில் எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ள ஆவலாக இருந்தது. அவன் அம்மாவை சந்திக்கும் நேரத்தில் தானும் கூட இருந்தால் நல்லது என்றும் தோன்றியது. மெல்லச் சொன்னான். "அக்ஷய் அம்மாவுக்கு இதயக் கோளாறு இருக்கிறது. ஜாக்கிரதையாய் பக்குவமாய்ச் சொல்."

அக்ஷய் அண்ணனைப் பார்த்து புன்னகையுடன் தலையசைத்தான். "சரி நீ போய் வராந்தாவில் அவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று பார். இனி நான் இங்கே இருக்கிறது ஆபத்துதான்."

"நீ சென்னைக்கு எப்போது போகிறாய்?"

"இன்று ராத்திரியே கிளம்புகிறேன்"

"சரி நாம் இனி எப்போது சந்திப்பது? எப்படிச் சந்திப்பது?"

"நானே வந்து உன்னை சந்திக்கிறேன்."

"சரி. உனக்கு பழைய நினைவு ஏதாவது வந்தால் எனக்கு உடனே

தெரிவி. எப்படி தெரிவிப்பாய்?"

"எப்படியாவது தெரிவிக்கிறேன்"

ஆனந்திற்குப் பிடி கொடுக்காமல் பேசும் தம்பி மீது சற்று எரிச்சல் வந்தது. ஆனால் அதே நேரத்தில் அவன் ப்ராக்டிகல் ஆகப் பேசுகிறான் என்பதும் அறிவுக்கு எட்டியது. எந்தந்த நேரத்தில் எப்படி எப்படி சௌகரியப்படுகிறதோ, எப்படி செயல்படுவது நல்லதோ அப்படி செயல்படுவதுதான் புத்திசாலித்தனம் என்பது அவனுக்குத் தெரியும். அதையெல்லாம் முன்கூட்டியே எதிர்பார்த்துக் கணக்குப் போட முடியாது என்பதும் தெரியும். ஆனால் ஏனோ கையாலாகாத, ஒருவித எரிச்சல் வருவதை அவனால் தடுக்க முடியவில்லை.

அக்‌ஷய் சொன்னான். "இனி இந்த ஓட்டலிலேயே நாம் வெளியே பார்த்துக் கொண்டாலும் அன்னியர்கள் தான் ஓகே. வெளியே பார்"

ஆனந்த் கதவைத் திறந்து வெளியே பார்த்தான். வராந்தாவில் யாரும் இல்லை என்று தலையாட்டினான். அக்‌ஷய் மிக வேகமாக அங்கிருந்து சென்று தனதறையில் தஞ்சம் அடைந்தான். அவன் உள்ளே சென்று கால் மணி நேரத்தில் யாரோ கதவைத் தட்டினார்கள்.

"கமின்" என்றான்.

ஒரு இளைஞன் உள்ளே நுழைந்தான். பார்த்தவுடன் இவன் வேவு பார்க்க வந்தவன் என்பது அக்ஷயிற்கு புரிந்தது. ஆனால் கோபத்தோடு கேட்டான். "கூப்பிட்டு எத்தனை நேரம் ஆயிற்று. காபி எங்கே?"

வந்தவன் முகம் சிறுத்தது. "நான் ரூம் பாய் அல்ல?"

"அப்படின்னா யார் நீ?"

"நான் விவேக். மிஸ்டர் பொன்னம்பலம் ரூம் இது தானே?" என்றபடியே அந்த அறையை பார்வையால் கூர்மையாக அலசினான்.

"யாரு பொன்னம்பலம்?"

"சாரி நான் ரூம் மாறி வந்து விட்டேன் போல இருக்கிறது"

அவன் மெல்ல வெளியேறினான். அவன் பின்னாலேயே சென்று வராந்தாவைப் பார்த்தபடியே அக்ஷய் எரிச்சலோடு

முணுமுணுத்தான். "என்ன ஓட்டல் இது. காபி கேட்டு அரை மணி நேரமாகிறது."

அக்‌ஷயின் அறைக்கு வந்த இளைஞன் அவனை ஓரக் கண்ணால் பார்த்தபடியே எதிர் அறை 212ஐ தட்டினான். ஒரு கிழவர் வந்து கதவைத் திறந்தார். உள்ளே எட்டிப்பார்த்தபடியே அவன் "மிஸ்டர் பொன்னம்பலம்" என்றான்.

"அப்படி யாரும் இங்கே இல்லையே. நான் வாசுதேவன்"

அந்த நேரத்தில் ஆனந்த் அறையைப் பூட்டிக் கொண்டு வெளியே போனான்.

அதற்கு மேல் நின்று வேடிக்கை பார்க்காமல் அக்‌ஷய் கதவை சாத்தினான்.

**********

அந்த நள்ளிரவு நேரத்தில் அந்தக் குறுகலான தெருவில் அதிக ஆள் நடமாட்டம் இருக்கவில்லை. குறுந்தாடி இளைஞன் இயல்பாக ஒரே வேகத்தில் நடந்து சென்று கொண்டிருந்தான். சற்று தூரத்தில் இருந்த பஞ்சாபி தாபாவில் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து கதைத்துக்

கொண்டிருந்த இருவரைத் தவிர தெருவில் ஆளே இல்லை. ஒரு முறைகூட குறுந்தாடி மனிதன் பின்னால் திரும்பிப் பார்க்கவில்லை. அவனை யாராவது பின் தொடர்கிறார்களா என்ற எண்ணம்கூட இல்லாததுபோல் அவன் நடந்து கொண்டிருந்தான். கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து கதைத்துக் கொண்டிருந்த ஆசாமிகள் அவனை ஒரு கணம் பார்த்துவிட்டுத் தங்கள் பேச்சைத் தொடர்ந்தார்கள்.

அவன் அந்தத் தெருக்கோடியின் இறுதியில் திரும்பிய போது இன்னொரு தெரு ஆரம்பித்தது. அங்கு ஒரு மூடிய மளிகைக்கடை வாசலில் டெல்லி குளிருக்கு கந்தல் ஆடைகளைப் போர்த்துக் கொண்டு ஒரு பிச்சைக்காரன் அமர்ந்திருந்தான். இவனைப் பார்த்ததும் அவன் தன் கையிலிருந்த அலுமினியப் பாத்திரத்தைப் பிச்சைக்காக நீட்டினான். ஆனால் அதைக் கவனிக்காதவன் போல குறுந்தாடிக்காரன் நடந்தான். அந்த பிச்சைக்காரன் இரண்டு நிமிடங்கள் அவனையே பார்த்துக் கொண்டு இருந்தான். அவன் நிறைய தூரம் போனபின் தன் கந்தலில் இருந்து ஒரு செல்போனை எடுத்து ஒரு எண்ணை அழுத்தினான். மறுபக்கத்தில் குரல் கேட்ட போது "யாரும் அவனைப் பின் தொடரவில்லை" என்று சொல்லி விட்டுப் பழையபடி கந்தலில் புதைந்தான்.

அந்தத் தெருவின் இறுதியில் இருந்த ஒரு பழங்காலத்திய சிறிய ஓட்டு வீட்டுக் கதவைத் தட்டினான். கதவு திறக்கப்பட்டது. கதவைத்

திறந்தவன் ஒரு பதினான்கு வயதுச் சிறுவன். குறுந்தாடிக்காரன் நுழைந்ததும் அவன் வெளியே போய் நின்று கொண்டான். உள்ளே ஒரு மங்கலான விளக்கு வெளிச்சத்தில் ஒரு நடுத்தர வயது ஆள் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தான். அவன் குறுந்தாடிக்காரனைப் பார்த்ததும் தன் எதிரே காலியாக இருந்த நாற்காலியில் அமரக் கைகாட்டினான்.

குறுந்தாடிக்காரன் பயபக்தியுடன் அங்கு அமர்ந்தான். ஒரு நிமிடம் அமைதியாக ஆழ்ந்த யோசனையில் ஆழ்ந்திருந்த அந்த நடுத்தர வயதுக்காரன் பின் தன் மௌனத்தைக் கலைத்தான். "சரக்கு வந்து விட்டது. பொருட்களை தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். நம் ஆபரேஷன் தேதியும் நெருங்கிக் கொண்டு இருக்கிறது. அந்த அமானுஷ்யனைப் பற்றிப் புதியதாய் எதாவது தகவல் இருக்கிறதா?"

"அவனுக்கு காரில் லிப்ட் கொடுத்த பெண்ணைக் கண்டுபிடித்து விட்டார்கள். அவள் அவனுக்கு டிரஸ் வாங்கித் தந்ததாய் ஒத்துக் கொண்டிருக்கிறாள். அவன் டில்லியில் கரோல் பாகில் தன் வீடு இருக்கிறதாய்ச் சொல்லி இருக்கிறான். ஆனால் டெல்லி வந்த பிறகு நடுவில் எங்கேயோ ஒரு சிக்னலில் இறங்கி ஓடி விட்டானாம்."

உணர்ச்சியே இல்லாமல் கேட்டுக் கொண்டிருந்த அந்த ஆள் கேட்டான். "இப்போது என்ன நிலவரம்?"

"இப்போது அவன் ஆனந்தை எப்படியாவது தொடர்பு கொள்வான் என்று எதனாலோ அந்த சிபிஐக்காரன் நினைக்கிறான். ஆனந்த் இருக்கும் ஓட்டல் முன்னால் போலீசும் நிற்கிறது. நம் ஆட்களும் நிற்கிறார்கள். எப்படியும் அவன் சீக்கிரம் சிக்குவான் என்று மந்திரி சொல்கிறார்"

கேட்டு விட்டு அந்த ஆள் முகம் லேசாக முகம் சுளித்தான். "சைத்தானைக் கூட நம்பலாம். ஆனால் அரசியல்வாதியை எப்போதும் நம்பக்கூடாது. வாய்ப் பேச்சில் தான் வல்லவர்கள். செயலில் அல்ல. நம் ஆபரேஷன் நாளுக்கு முன் அவன் பிணத்தைப் பார்த்து எரித்து விட்டால் பின் நிம்மதியாக இருக்கலாம்"

குறுந்தாடி மனிதன் அந்த வார்த்தைகளை மனதிற்குள் அசை போட்டான். 'பிணத்தைப் பார்ப்பது மட்டுமல்லாமல் எரித்து சாம்பலாக்கினால் தான் அவன் உண்மையாகவே செத்து விட்டான் என்று நம்ப முடியும்' என்பது போல் சொன்னது அமானுஷ்யன் விஷயத்தில் அவர்களுக்கிருந்த அபிப்பிராயத்தை தெளிவாகப் புரிய வைத்தது.

அந்த நடுத்தரவயதுக்காரன் அங்கலாய்த்துக் கொண்டான். "அவனுக்கு என்று ஏதாவது உறவு இருந்தால் அவன் நேசிக்கிற

மனிதர்களோ, உடன் பிறந்தவர்களோ, குழந்தைகளோ, அம்மா அப்பாவோ இருந்தால், அவன் எங்கே ஒளிந்திருந்தாலும் அவனை வெளியே வர வைத்து விடலாம். ஆனால் அவன் தனியனாய் போய் விட்டது நம் துரதிர்ஷ்டம்."

குறுந்தாடிக்காரன் ஒன்றும் சொல்லாமல் அமர்ந்திருந்தான். மற்றவன் தொடர்ந்து சொன்னான். "அந்த போலீஸ்காரர்கள் அவனைக் கண்டுபிடித்து விட்டால் உடனே நம் ஆட்கள் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறார்கள். அவனைக் கொல்லும் வேலையில் போலீசை முழுவதும் நம்புவது முட்டாள்தனம். இனி உனக்கு ஒரே வேலை அவன் எங்கிருக்கிறான் என்று தகவல் சொல்வதுதான். மீதியை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்"

47

அக்‌ஷய் இப்போது கல்லூரி மாணவன் போல ஸ்டைலான டிரஸ்ஸில் இருந்தான். கையில் ஒரு வளையல், ஒரு காதில் மட்டும் சின்ன ரிங், எதற்கும் கவலைப்படாத நடையில் அவன் சென்னையில் உள்ள ஆனந்தின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். இது வரை யாரும் அவனைப் பின்தொடரவில்லை. அந்த வீட்டின் முன்னும் யாரும் வேவு பார்ப்பது போலத் தெரியவில்லை.

அழைப்பு மணி அடித்துக் காத்திருந்தான். சாரதா கதவைத் திறந்தாள். "யார் வேண்டும்?"

ஒரு நடைப்பிணம் போல் மீளாத சோகத்தில் ஒடிசலாக இருந்த தன் தாயைப் பார்க்கையில் அவன் மனம் ஆழத்தில் என்னவோ செய்தது. "சாரதாங்கிறது"

"நான்தான். நீங்கள்?"

"என்னைக் கடவுள் அனுப்பினார். அந்தம்மா செய்கிற விரதங்கள், பிரார்த்தனைகள் எல்லாம் தாங்கவில்லை. அந்தம்மா எனக்கு ஓய்வே கொடுக்காமல் சும்மா கூப்பிட்டுக் கொண்டு இருக்கிறார். போய் எல்லாவற்றையும் கொஞ்சம் நிறுத்தச் சொல்லு என்று சொல்லி அனுப்பினார்."

சாரதாவிற்கும் நகைச்சுவை உணர்விற்கும் என்றுமே எந்த விதத்திலுமே சிறிய சம்பந்தம் கூட இருந்ததில்லை. அவள் திகைப்புடன் அவனைப் பார்த்தபடி நின்றாள். ஏதாவது சத்தமாய் சுலோகம் சொல்லி அக்கம் பக்கத்தாரைத் தொந்திரவு செய்து விட்டோமோ. இந்த இளைஞன் புதிதாக அருகில் குடி வந்து இருக்கிறானோ?

மன்னிப்பு கேட்கும் தொனியில் சொன்னாள். "நான் சத்தமாய் சுலோகம் சொன்னது தொந்திரவாய் இருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள். நீங்கள் காலேஜில் படித்து வருபவர் போல இருக்கிறது. படிக்கும் போது தொந்திரவு செய்து விட்டேன் என்று நினைக்கிறேன். இனி அந்த மாதிரி ஆகாது."

பெற்றவளின் வெகுளித்தனம் பார்த்து அக்ஷயின் கண்கள் கலங்கின. அம்மா நீ எந்த உலகில் இருக்கிறாய்? என்று மனதில் கேட்டுக் கொண்ட அவன் தன்னை சமாளித்துக் கொண்டு குறும்பாகச் சொன்னான். "அதெல்லாம் ஒன்றுமில்லை. கடவுள் அனுப்பினார் என்றால் ஏன் நம்ப மாட்டேன்கிறீர்கள். அவர் அனுப்பிதான் நான் வந்தேன்"

சாரதாவிற்கு அவன் பைத்தியமோ என்கிற சந்தேகம் லேசாக வந்தது. தெருவில் தெரிந்தவர்கள் யாராவது நடமாடுகிறார்களா என்று பார்த்தாள்.

அக்ஷய் சிரித்துக் கொண்டே சொன்னான். "இப்பவும் கடவுள் வருஷக் கணக்கில் பிரார்த்தனை செய்தாய் என்று உன் காணாமல் போன மகனை உன்னிடம் அனுப்பி வைத்தால் அவனை உன்னால் அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லையே சாரதா? என்று

கேட்கிறார்'"

சாரதா அப்படியே சிலையாக சமைந்து நின்றாள். அவளுடைய உலகமே ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றது. அவளால் தன் காதுகளை நம்ப முடியவில்லை. ஆனாலும் எதிரே இருப்பவன் இளைய மகன்தான் என்று பெற்ற வயிறு அடையாளம் காட்டியது. கணவரின் சாயல் அவன் முகத்தில் சிறிது இருப்பது மூளைக்கு எட்டியது. கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரையாய் வழிய அவள் ஆகாயத்தை நோக்கி கை கூப்பினாள். எத்தனை ஜென்மம் இனி தவமிருந்து அவள் கடவுள் காட்டிய கருணைக்கு நன்றி சொல்வாள்?

பின் தன் சுய நிலைக்கு வந்தவளுக்கு இது கனவா இல்லை நனவுதானா என்ற சந்தேகம் வந்தது. எதிரே நின்ற மகனை லேசாகத் தொட்டுப் பார்த்தாள். அவன் கன்னத்தைத் தொட்டாள். மெள்ள கையைத் தொட்டாள். அவன் கைகளைப் பிடித்துக் கண்களில் ஒத்திக் கொண்டாள். ஏதோ சொல்ல வாயைத் திறந்தாள். வார்த்தைகள் வரவில்லை. தாயின் பாசம் மிகுந்த ஸ்பரிசம் அவனை சிலிர்க்க வைத்தது.

அக்ஷய் மிக சுவாதீனமாக வீட்டினுள் நுழைந்து கதவைத் தாளிட்டான். அம்மாவைப் பிடித்து அழைத்துக் கொண்டுபோய்த்

தானே அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்து கொண்டான். அம்மாவையே குறும்பாகப் பார்த்துக் கேட்டான். "அது சரி யாரோ ஒருத்தன் வந்து உங்கள் மகன் என்று சொன்னால் நம்பி விடுவீர்களா? மகன் சிபிஐ ஆபிசராய் இருந்தும் உங்களுக்கு ஜாக்கிரதையாய் இருக்கத் தெரியவில்லையே?"

சாரதா திடீரென்று பேசும் சக்தியைப் பெற்றாள். "பெற்றவளுக்குத் தெரியும் அவள் குழந்தை யாரென்று" என்று சொன்னவள், அவனைக் குனிய வைத்து அவன் சட்டைக் காலரைப் பின்னுக்கு இழுத்து அவன் முதுகில் இருந்த நாக மச்சத்தைத் தடவினாள்.

அவள் கைகள் எதிர்பாராமல் பலமாகத் தன்னைக் குனிய வைத்ததைப் பார்த்த அக்‌ஷய் கேட்டான். "பார்க்க ஒடிசலாக இருந்தாலும் பலசாலியாக இருக்கிறீர்களே. உங்களுக்கு கராத்தே குங்ஃபூ கூடத் தெரிந்திருந்தாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை போல இருக்கிறதே"

மகனின் குறும்பான பேச்சைக் கேட்டு முதல் முறையாக சாரதா வாய் விட்டுச் சிரித்தாள். சிரித்தவள் அப்படியே அழ ஆரம்பித்தாள். பூஜையறையிலிருந்த கடவுள்கள் படங்களைப் பார்த்து கைகூப்பி நமஸ்கரித்தபடி தலை குனிந்து அழுதாள்.

"போச்சுடா. சாமி சொன்னதில் தப்பே இல்லை. ஐந்து நிமிஷம் கூட அவரை நீங்கள் ஃப்ரீயாக இருக்க விட மாட்டேன்கிறீர்கள்" என்ற மகனை இழுத்துத் தன் மடியில் படுக்க வைத்துக் கொண்டு அவன் தலையைக் கோதியபடி சாரதா தன் அழுகையைத் தொடர்ந்தாள். அவள் அழுகை நிற்க வெகு நேரமாயிற்று. அவன் கண்களும் கலங்க அவனும் அதற்கு மேல் பேசாமல் அவள் மடியிலேயே சிறிது நேரம் படுத்திருந்தான்.

பின் சுதாரித்துக் கொண்ட சாரதா "உன் அண்ணனுக்குப் போன் செய்து சொன்னால் சந்தோஷப்படுவான். முதலில் போன் செய்ய வேண்டும்"

"அவனைப் பார்த்து விட்டுத்தான் வருகிறேன். அவனைப் பார்த்ததில் இருந்து உங்களிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும் என்றிருந்தேன். உங்களுக்கேன் இந்த ஓரவஞ்சனை?"

"என்ன ஓரவஞ்சனை" அவள் முகத்தில் நிஜமாகவே ஏதாவது தவறு செய்து விட்டோமோ என்ற சந்தேகம் இருந்தது.

அக்ஷய் சிரித்தபடியே சொன்னான். "அவனை மட்டும் அவ்வளவு அழகாய் பெற்று விட்டு என்னை ஏன் அழகில்லாமல் பெற்று விட்டீர்கள்?"

"உனக்கு அழகில்லை என்று யார் சொன்னது? சிரிக்கிறப்ப நீ மன்மதன் மாதிரி இருக்கிறாய்"

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு" என்ற அக்ஷயை எழுப்பி உட்கார வைத்து விட்டு சாரதா மூத்த மகனுக்குப் போன் செய்ய விரைந்தாள்.

"ஹலோ ஆனந்த் தம்பி கிடைச்சுட்டான். உன்னை முதலில் பார்த்து விட்டுத்தான் இங்கு வந்தேன் என்றான். இவ்வளவு நாள் எங்கே இருந்தான் என்ன ஏது என்று ஒன்றும் கேட்கவில்லை. இனிமேல்தான் கேட்கணும். ஆனா ரொம்பவும் குறும்பு. வந்து கொஞ்ச நேரத்திலேயே என்னை சும்மா கிண்டல் செய்ய ஆரம்பிச்சுட்டான்."

சந்தோஷமும் சிரிப்பும் கொப்புளிக்கத் தாய் பேசியதை வாழ்க்கையில் முதல் முறையாக ஆனந்த் கேட்டான். அவள் பேசப் பேச அவன் கண்களிலும் கண்ணீர் தழும்பியது. பின் அக்ஷயும் அவனிடம் பேசினான். "ஐந்து நிமிஷம் அம்மா மடியில் என்னைப் படுக்க வைத்துக் கொண்டதோடு சரி. மகனே சாப்பிட்டாயா. காபி டீயாவது வேண்டுமா என்கிற மாதிரி கேள்விகள் எல்லாம் ஒன்றும் இல்லை. நான் கிளம்பி விடலாமா என்று இருக்கிறேன்."

அம்மா குரல் கேட்டது. "எனக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. இவன் காபி டீ கேட்கிறான். இருடா செய்து தருகிறேன். என்ன வேண்டும் உனக்கு?"

போன் பேசி விட்டு வைத்தபின் ஆனந்தும் அழுதான். யோசிக்கையில் இத்தனை வருடங்கள் தாயுடனேயே இருந்தும் அவனால் சாதிக்க முடியாத எத்தனையோ விஷயங்கள் அவன் தம்பியால் சாதிக்கப்பட்டு விட்டன என்பதை உணராமல் இருக்க முடியவில்லை. தாயிடம் கிண்டல், தாய் மடியில் படுத்தல், திட்டுதல், திட்டு வாங்கிக் கொள்ளுதல் போன்ற மகனுக்குரிய உரிமைகள் எதுவும் அவனுக்கு இது வரை கிடைத்ததில்லை. சென்று அரை மணி நேரத்திற்குள் தம்பி அதைத் சாதித்துப் பெற்று விட்டான் என்று அவனுக்குத் தோன்றியது.

அவன் சிந்தனைகளை போன் அலறிக் கலைத்தது.

"ஹலோ"

சிபிஐ டைரக்டரின் குரல் கேட்டது. "ஆனந்த் நான் மஹாவீர் பேசுகிறேன்."

"சொல்லுங்கள் சார்"

"சில நாட்களுக்கு முன் டெல்லி புறநகர் பகுதியில் வெடிகுண்டு வைத்த தீவிரவாதி என்று ஒருவனை விளம்பரப்படுத்தினார்களே ஞாபகம் இருக்கிறதா?"

ஆனந்திற்கு லேசாக வயிற்றைக் கலக்கியது. "இருக்கிறது சொல்லுங்கள் சார்"

"அவனைப் பற்றி ஒரு முக்கியத் தகவல் கிடைத்திருக்கிறது. நேரில் வர முடியுமா?"

ஆனந்தின் இதயத் துடிப்பு ஒரு கணம் நின்றது.

48

"நீ இவ்வளவு வருஷம் எங்கே இருந்தாய் அக்ஷய்? எப்படி இருந்தாய்?"

அம்மாவின் அந்தக் கேள்விக்கு அக்ஷய் உடனடியாக பதில் சொல்லவில்லை. பின் சிரித்துக் கொண்டே சொன்னான். "அது தான்

தெரியவில்லை"

சாரதா தன் இளைய மகனைப் பொய்க் கோபத்தோடு முறைத்தாள். "சும்மா விளையாடாதே. கிண்டலுக்கு ஒரு அளவில்லையா?"

தாயின் மேல் சாய்ந்து அமர்ந்து கொண்டிருந்த அக்‌ஷய் அவள் புடவைத் தலைப்பு நுனியில் முடிச்சு போட்டுக் கொண்டே சொன்னான். "விளையாடலைம்மா. எனக்கு நிஜமாகவே தெரியவில்லை"

புரியாமல் விழித்த தாயிடம் பொய்யையும் உண்மையையும் கலந்து அக்‌ஷய் சொன்னான். "அம்மா எனக்கு நினைவில் இருப்பதெல்லாம் சில நாட்கள் விஷயங்கள்தான். எனக்கு முதலில் நினைவு வந்து விழித்த இடம் ஒரு புத்த விஹாரம். அது இமயமலைச்சாரலில் இருக்கிறது. ஏதோ தலையில் அடிபட்டு நான் மலையிலிருந்து அந்த புத்த விஹார வாசலில் விழுந்திருக்கிறேன். அந்த புத்த விஹாரத்தின் பிக்குகள்தான் என்னைக் காப்பாற்றினார்கள். அவர்கள் நல்ல மனிதர்கள் அம்மா. என்னைக் காப்பாற்றிச் சில நாட்கள் அடைக்கலம் தந்தார்கள். ஆனால் தலையில் அடிபட்ட எனக்குத்தான் பழைய விஷயங்கள் எதுவும் ஞாபகம் இருக்கவில்லை. பெயர் கூட ஞாபகம் இல்லை. அங்கிருந்து கிளம்பி டில்லிக்கு வந்தேன். வரும் வழியில் எனக்கு ஒரு குடும்பம் எனக்கு

அறிமுகமானது."

சஹானா பற்றியும், வருண் பற்றியும், மரகதம் பற்றியும் அக்ஷய் சொன்னான். வருணும், மரகதமும் தன்னிடம் காட்டிய பாசத்தைச் சொன்னான். முன்பின் தெரியாத அவனுக்கு அவர்கள் தங்கள் வீட்டில் அடைக்கலம் தந்ததைச் சொன்னான். சஹானா மிக நல்ல பெண் என்பதையும், அவள் கணவன் அவளையும், வருணையும் நன்றாக வைத்துக் கொள்ளவில்லை என்பதை சொன்னான். தனக்கு அவளிடம் ஏற்பட்டிருந்த ஈர்ப்பையும், மற்ற நிகழ்ச்சிகளையும் அவளிடம் சொல்லவில்லை.

"அங்கே காணாமல் போனவர்களைப் பற்றிக் கண்டுபிடிக்கும் ஏஜன்சி ஒன்றிற்கு சஹானா என்னைப் பற்றி தகவல்கள் கொடுத்தாள். என் நாக மச்சத்தை அடையாளமாய் சொன்னாள். அவர்கள் எடுத்த முயற்சி என்னை ஆனந்திடம் கொண்டு வந்துவிட்டது. ஆனால் இது வரை நான் எங்கே இருந்தேன், எங்கே வளர்ந்தேன் என்பதுதான் தெரியவில்லை ...."

சாரதா கண்கலங்கினாள். அக்ஷய் கேட்டான். "என்னம்மா?"

"அந்த புத்த பிக்குகளும், சஹானாவும் உனக்கு காட்டின அன்புக்கு நான் என்ன செய்தால் அது கைமாறாகும்னு யோசிக்கிறேன்

அக்ஷய்"

"நீங்கள் எனக்காக செய்த பூஜைகள், இருந்த விரதங்கள் எல்லாம் வீண் போகலைம்மா"

சாரதா இன்னொரு முறை அழுது ஓய்ந்தாள்.

தாயும் மகனும் நீண்ட நேரம் பேசினார்கள். கடிகார முட்கள் அவர்கள் பேச்சைக் கேட்டபடியே நகர்ந்தன. சாரதா தன் பழைய நாட்களைப் பற்றிச் சொன்னாள். ஆனந்தைப் பற்றி நிறைய சொன்னாள். அவன் நன்றாகப் படித்ததைப் பற்றியும், பரிசுகள் வாங்கிக் குவித்ததைப் பற்றியும், அவனுடைய நல்ல குணங்களைப் பற்றியும் சொன்னாள். பழைய போட்டோக்களை எல்லாம் இளைய மகனுக்குக் காண்பித்தாள்.

ஆனந்த் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தங்கப்பதக்கம் வாங்கியதற்கு பள்ளியில் பாராட்டு விழா நடத்தி சாரதாவையும் அழைத்து கௌரவித்து இருந்ததை எடுத்த போட்டோ ஒன்றை அக்ஷய் கூர்ந்து பார்த்தான். போட்டோவில் பள்ளி முதல்வர், ஆனந்த் எல்லாம் புன்னகையுடன் சந்தோஷமாகத் தெரிந்தார்கள். ஆனால் சாரதா முகத்தில் மட்டும் ஏதோ ஒரு துக்கம் தெரிந்தது. அந்த துக்கத்திற்குக் காரணம் அவன்தான் என்பது அக்ஷயிற்குப் புரிந்து

மனம் கனத்தது.

"அம்மா. ஆனந்த் தங்கப்பதக்கம் வாங்கியதற்கான பாராட்டு விழாவில் உங்களைத் தவிர எல்லோரும் சந்தோஷமாக இருக்கிறார்கள்."

சாரதா சொன்னாள். "அப்போது என்று இல்லை, உன்னை இன்றைக்குப் பார்த்த நேரம் வரைக்கும் நான் எப்போதும் சந்தோஷமாய் இருந்ததில்லை, அக்ஷய்"

"அம்மா நீங்கள் செய்தது நியாயம் இல்லை"

சாரதா அவனைத் திகைப்புடன் பார்த்தாள்.

அக்ஷய் பொறுமையாக விளக்கினான். "உங்களுடைய ஒரு குழந்தை காணாமல் போய் விட்டது. அவனுக்கு நீங்கள் கிடைக்கவில்லை. அது விதி. உங்களுடைய இன்னொரு குழந்தை உங்களுடனே தான் இருக்கின்றான். ஆனால் காணாமல் போன குழந்தையையே நினைத்துக் கொண்டு கவலையில், இருக்கிற குழந்தையைக் கவனிக்காமல் இருக்கிறீர்கள். நீங்கள் கூடவே இருந்தும் அவனுக்கு உங்கள் பாசம் கிடைக்கவில்லை. இது நியாயமா?"

சாரதா குழப்பத்துடன் சொன்னாள். "நான் அவன் மேல் பாசம் வைக்கவில்லை என்று யார் சொன்னது?"

"இந்த போட்டோ சொல்கிறது. பாருங்கள். அவனுடைய சந்தோஷமான நேரத்தில் நீங்கள் கூடவே நின்றாலும் உங்கள் மனம் வேறெங்கேயோ இருக்கிறது. முகத்தில் துளி சந்தோஷம் இல்லை. ஆனந்த் மனம் எப்படி இருந்திருக்கும் என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்"

சாரதா ஒன்றும் சொல்லாமல் அவனையே பார்த்தாள். பின் அவனிடம் அழுது கொண்டே சொன்னாள். "அவன் ஒவ்வொரு வெற்றியிலும் நான் சந்தோஷப்படாமல் இல்லை அக்ஷய். அதே நேரத்தில் அம்மாவுக்கு இன்னொரு குழந்தை படிக்கிறதா, விளையாடுகிறதா, வேலை செய்கிறதா, பிச்சை எடுக்கிறதா என்று தெரியாமல் இருக்கும் போது◌ துக்கம் வராமல் என்னடா செய்யும். என் நிலைமையில் இருந்து கொஞ்சம் யோசித்துப் பார்"

அக்ஷய் சொன்னான். "ஆனாலும் அம்மா, இல்லாததையே நினைத்து துக்கப்பட்டு, இருப்பதன் அருமை தெரியாமல் இருப்பது ஒரு முட்டாள்தனம் இல்லையா?"

மகன் சொன்னதில் இருந்த நியாயம் ஒருபுறம் அவள் இதய ஆழத்தைத் தொட்டது. தன் மூத்த மகனுடைய உணர்வுகளை இவ்வளவு காலம் அலட்சியப்படுத்தி விட்டோமோ என்ற குற்ற உணர்வு எழ ஆரம்பித்த அந்த வேளையில், இன்னொரு புறம் அக்ஷய் சொன்ன விதத்தில் இருந்த ஒருவித எளிமை கலந்த கம்பீரம் அவளைப் பெருமை கொள்ள வைத்தது. என் மகன்!

**********

ஆனந்த் மஹாவீர் ஜெயினை நேரில் சென்று சந்திக்கும் வரை ஒருவித படபடப்புடனேயே தான் இருந்தான். சிபிஐ அலுவலகத்தில் நுழைந்த போது மகேந்திரனின் கழுகுப்பார்வையையும் ஆனந்த் கவனித்தான். மகேந்திரன் கையை உயர்த்தி அவனைப் பார்த்து புன்னகைக்க ஆனந்தும் புன்னகைத்து விட்டு ஜெயினின் அறைக்குள் நுழைந்தான்.

"என்ன சார்?"

"அந்த வெடிகுண்டு வைத்தவன் பற்றி நடக்கிற விசாரணை இன்னும் மிகவும் ரகசியமாய் தான் நடக்கிறது. குறைவான ஆட்கள், அதுவும் ஒரு குறிப்பிட்ட அதிகாரிக்கு நம்பிக்கையான ஆட்களை வைத்துத்தான் விசாரணையை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

அந்த ஃபைல் கூட அவர்களைத் தவிர வேறு யார் கையிலும் கிடைத்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்களாம்"

ஆனந்த் தலையசைத்தான்.

"அங்கே இருக்கும் எனக்கு வேண்டப்பட்ட ஒரு அதிகாரியிடம் நான் சொல்லி இருந்தேன். ஏதாவது முக்கியமான தகவல்கள் கிடைத்தால் சொல்லுங்கள் என்று. அவர் யாருக்கும் சந்தேகம் வராத மாதிரி ஏதாவது தகவல் கிடைக்கிறதா என்று பல விதங்களில் விசாரித்துப் பார்த்து இருக்கிறார். நேற்று அந்த விசாரிக்கும் ஆட்களிடம் வழக்கத்திற்கு மாறாக அவசரமும், பரபரப்பும் அதிகமாய் இருந்ததை அவர் பார்த்தவுடனே அவருக்கு சந்தேகம் அதிகமாய் இருக்கிறது. அந்த ஆட்களில் ஒருவனுடைய நண்பர் இவருக்கும் நண்பர். அவரிடம் இவர் 'ஏன் உங்கள் நண்பர் இவ்வளவு பரபரப்பாக இருக்கிறார்?' என்று கேட்டிருக்கிறார்."

"அந்த நண்பர் "அந்த வெடிகுண்டு வைத்தவனை உடனடியாகக் கண்டுபிடிக்க வேண்டும் என்று மேலிடத்தில் பிரசர் அதிகப்படுத்துகிறார்கள். அதுதான்" என்று சொல்லி இருக்கிறார்."

ஆனந்த் இதயத்தில் படபடப்பு கூடியது. திடீரென்று பிரசர் அதிகப்படுத்த என்ன காரணம் என்பது அவனுக்குப் பிடிபடவில்லை.

திடீரென்று எதாவது புதிய நிகழ்வு நடந்திருக்கிறதா?

ஜெயின் தொடர்ந்தார். "அந்தப் பொதுவான நண்பர் இவரிடம் இன்னொரு விஷயத்தைச் சொல்லி இருக்கிறார். "அந்த வெடிகுண்டு ஆள் கொஞ்சம் விவகாரமான ஆளாய் தான் இருப்பான் போல் இருக்கிறது. அந்த ஃபைலின் அட்டையில் இருந்த பெயர் வித்தியாசமாக இருந்ததைப் பார்த்து இது என்னடா இப்படி ஒரு பெயர் என்று கேட்டேன். அதற்கு அவன் இது அந்த குற்றவாளியின் பட்டப்பெயர் என்று சொல்லி விட்டுப் போய்விட்டான்" என்று. ஆனந்த் அந்த பட்டப்பெயர் எனக்கும் வித்தியாசமாய் தான் தெரிந்தது. அந்தப் பட்டப் பெயர் என்ன தெரியுமா?"

ஆனந்த் கேட்டான். "என்ன சார்?"





அந்தப் பெயரே ஆனந்த் மனதில் அன்று முழுவதும் ஒலித்துக் கொண்டிருந்தது. அக்‌ஷயிற்கு அந்தப் பெயரை வைத்தது யார் என்று அவனுக்குத் தெரியாது. ஆனால் அந்தப் பெயர் அவனுக்கு மிகப்

பொருத்தமானது என்பதில் ஆனந்திற்கு சந்தேகமே இல்லை. ஆனந்த் மனதில் அக்‌ஷயை சந்தித்த அந்த முதல் கணம் வந்து போனது. கண்ணிமைக்கும் நேரத்தில் அவனைத் தூக்கி கட்டிலில் வீசியது எப்படி என்று அவனுக்கு இன்னமும் விளங்கவில்லை. ஏதோ சில அபூர்வ வித்தைகளை அவன் அறிந்திருக்கிறான் என்று புரிந்தது. அவனைப் பற்றி நன்றாக அறிந்த யாரோ தான் அவனுக்கு அந்தப் பட்டப் பெயரை வைத்திருக்க வேண்டும்.

அவன் அந்த இமயமலைச் சாரலில் உள்ள புத்த விஹாரத்தில் வந்து விழுவதற்கு முன் யாராக இருந்தான், எங்கே வசித்தான், என்ன செய்து கொண்டிருந்தான் என்ற கேள்விகள் விடையில்லாமல் ஆனந்தை அலைக்கழித்தன. இப்போது திடீரென்று எதிரிகள் அவனைப் பிடிக்க அதிக தீவிரம் ஏன் காட்டுகிறார்கள் என்பது அவனுக்குப் புரியவில்லை.

ஆனந்த் வீட்டுக்குப் போன் செய்தான். அம்மா உற்சாகமாகப் பேசினாள். இளைய மகன் வந்ததன் மாற்றம் அவள் பேச்சில் நன்றாகவே தெரிந்தது. கடைசியில் அக்‌ஷயிடம் அவள் போனைத் தந்தாள்.

ஆனந்த் அக்‌ஷயிடம் கேட்டான். "உனக்கு அமானுஷ்யன் என்ற பெயரைக் கேட்டதும் என்ன தோன்றுகிறது அக்‌ஷய்"

அக்ஷய் சிறிது நேரம் யோசித்து விட்டு சொன்னான். "ஒன்றுமே தோன்றவில்லை. ஏன் கேட்டாய் ஆனந்த்."

"அதை நேரில் சொல்கிறேன். நீ முடிந்த வரை சீக்கிரம் வா. ஏதோ நடக்கப் போகிறது போல எனக்கு தோன்றுகிறது அக்ஷய்"

"நான் நாளைக்கே கிளம்பி வருகிறேன் ஆனந்த்"

"அம்மா...." என்றான் ஆனந்த். இளைய மகன் பல வருடங்கள் கழித்து கிடைத்திருக்கும் இந்த நேரத்தில், வந்த மறு நாளே அவன் கிளம்பினால் அவள் எப்படி எடுத்துக் கொள்வாள்? அவளால் தாங்க முடியுமா? அதுவும் அவனை அவள் மறுபடியும் சந்திக்க முடியும் என்ற நம்பிக்கை ஆனந்தின் அடிமனதில் இருக்கவில்லை.

அவனுடைய ஒரு சொல்லில் அத்தனை அர்த்தங்களும் புரிந்து கொண்டவன் போல் அக்ஷய் சொன்னான். "நீ கவலைப்படாதே. நான் பார்த்துக் கொள்கிறேன்"

***********

நர்மதாவின் போட்டோவை முன்பே பார்த்திருந்ததால் அக்ஷயிற்கு

அவளை அடையாளம் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருக்கவில்லை. போட்டோவில் இருந்ததை விட அழகாக இருந்தாள். கல்லூரி முடிந்து அனைவரும் வெளியே வந்து கொண்டிருந்த நேரத்தில் அவளை இடைமறித்தான்.

"நீங்கள் நர்மதா தானே?"

"ஆமாம். நீங்கள்?"

"நான் ஆனந்தின் தம்பி"

அவளுக்கு சட்டென்று புரியவில்லை. எந்த ஆனந்தின் தம்பி என்பது போல பார்த்தாள்.

"இப்போது சிபிஐயில் வேலை பார்க்கிறானே ஒரு ஆனந்த். அவன் தம்பி நான்"

அவள் அப்படியே சிலை போல சில வினாடிகள் நின்றாள். அவள் சுதாரித்துக் கொண்ட போது முகத்தில் சந்தோஷம் தெரிந்தது. "அவரின் காணாமல் போன தம்பியா?"

"ஆமாம்"

அவள் நீங்கள் எப்படிக் கிடைத்தீர்கள்? இவ்வளவு நாட்கள் எங்கிருந்தீர்கள் என்ற கேள்விகளை எழுப்பக்கூடும் என்று அக்‌ஷய் எதிர்பார்த்தான். ஆனால் அவள் பழைய கதைகளைக் கிளறாமல் இப்போதைய விஷயத்தை மட்டும் பேசினாள். ஆனந்தும் அம்மாவும் எவ்வளவு சந்தோஷப்படுவார்கள் என்பதை நினைக்கையில் சந்தோஷமாக இருக்கிறது என்று மட்டும் மனதாரச் சொன்னாள்.

அவன் சொன்னான். "நான் உங்களிடம் கொஞ்சம் தனியாகப் பேச வேண்டும்"

பக்கத்தில் இருந்த ஒரு ஓட்டலுக்கு காபி சாப்பிட இருவரும் சென்றார்கள். செல்லும் போது கேட்டாள். "ஆனந்த் எப்படி இருக்கிறார்?". கேட்கும் போது அவளையும் மீறி அவள் முகத்தில் ஒரு ஆழமான துக்கம் வந்து போனது.

"நன்றாய் இருக்கிறான். இப்போது ஒரு கேஸ் விஷயமாய் டெல்லியில் இருக்கிறான்"

ஓட்டலில் பெரிதாகக் கூட்டம் இருக்கவில்லை. காபிக்கு ஆர்டர் செய்து விட்டு அவனிடம் சொன்னாள். "சொல்லுங்கள்"

அவன் சுற்றி வளைக்காமல் கேட்டான். "நீங்கள் அவனை இன்னும் காதலிக்கிறீர்களா?"

அவள் முகத்தில் ஒரு அடிபட்ட வலி தெரிந்தது. இந்தக் கேள்வியை அவனிடம் இருந்து அவன் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை என்பது தெரிந்தது. அன்று காதலை மறுத்தவன் அதைப் பெருமையாய் தம்பியிடமும் சொல்லி இருக்கிறான் என்ற விதத்தில் அவள் நினைத்த மாதிரி தெரிந்தது.

சற்று கோபத்துடனும் சுய பச்சாதாபத்துடனும் சொன்னாள். "நான் ஒரு பைத்தியம். நட்புக்கும் காதலுக்கும் எனக்கு வித்தியாசம் தெரியவில்லை. அதற்கு என்னை மன்னித்து விடச் சொல்லுங்கள்"

"அவன் தான் பைத்தியம். நட்பு என்று உங்களிடம் சொல்லி விட்டு உங்கள் போட்டோவை எங்கே போனாலும் எடுத்துக் கொண்டே போகிறான்."

அவள் அவனை திகைப்புடன் பார்த்தாள். தான் கேள்விப்பட்டதை அவளால் நம்ப முடியவில்லை போலத் தெரிந்தது.

அக்ஷய் சொன்னான். "நான் காணாமல் போனதில் இருந்து அந்த வீடு ஏதோ இழவு வீடு மாதிரி இருக்கிறது. உங்களைக் கல்யாணம்

செய்து கொண்டு அந்த மாதிரி ஒரு துக்ககரமான சூழ்நிலையில் உங்களைத் தள்ள அவன் ஆசைப்படவில்லை. நீங்களாவது எங்கேயாவது சந்தோஷமாய் இருக்க வேண்டும் என்று நினைக்கிற அளவுக்கு உங்களை அவன் காதலிக்கிறான்......"

அவளால் பேச முடியவில்லை. அவள் கண்கள் நிறைந்தன. அந்த ஓட்டலில் அழுது விடக் கூடாது என்று அவள் அரும்பாடுபட்டாள்.

அவன் சொன்னான். "நான் உங்களைப் பார்க்க வந்தது அவனுக்குத் தெரியாது. அந்த முட்டாளைக் கல்யாணம் செய்து கொள்ள உங்களுக்கு சம்மதம் தானே? நான் முறைப்படி உங்கள் வீட்டில் பேச அம்மாவையும் அவனையும் அவன் சென்னை வந்தவுடன் அனுப்புகிறேன்"

அவள் அழுதே விட்டாள்.

*********

சிபிஐ மனிதன் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். மந்திரியின் போன் ஒரு மணிக்கு ஒரு தடவை வந்து கொண்டிருந்தது. "அவனைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா?" என்று கீறல் விழுந்த ரிகார்டு போல ஒரே கேள்வியை ஒவ்வொரு தடவையும் கேட்டார்.

இல்லை என்று பதில் சொல்லியே சிபிஐ மனிதன் சலித்துப் போனான். போலீஸ் தரப்பில் இருந்தும் எந்த முன்னேற்றமும் இல்லை. அவனுடைய ஆட்களும் எந்தப் புது தகவலுடனும் வரவில்லை.

அவனுக்கு ஆனந்தின் நடவடிக்கை பெருத்த சந்தேகத்தைக் கிளப்பியது. இன்று அவசர அவசரமாக வந்து ஜெயினைப் பார்த்து விட்டுப் போனவன் வேறு யாரிடமும் பேச்சுத் தரவில்லை. அவன் வேறு எங்கும் சென்று எவரையும் சந்திக்கவும் இல்லை. அந்த ஓட்டலில் அடைபட்டுக் கிடந்தான். அவன் போன் செய்ததும் சென்னையில் இருக்கும் அவன் வீட்டுக்குத் தான். வேறு யாருக்கும் போன் செய்யவுமில்லை.

ஜெயினும் அவனும் என்ன பேசினார்கள் என்பது அவனுக்குத் தெரியா விட்டாலும் ஆச்சார்யா கொலை வழக்கு சம்பந்தப்பட்ட பேச்சாகத் தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஜெயின் அது சம்பந்தமாக வேறு யாரிடமும் பேசக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தது போல் தெரிந்தது.

இனி நாட்கள் அதிகம் இல்லை என்கிற நிலையில் அமானுஷ்யன் பிடிபட்டால் ஒழிய நிம்மதியுடன் காயை நகர்த்த முடியாது என்று

மந்திரி, தாடிக்காரன், அவனுடைய கோஷ்டியினர் எல்லோரும் அபிப்பிராயப்பட்டனர். இது வரை ஒன்றும் செய்ய முடியாத அமானுஷ்யன் இனியும் ஒன்றும் செய்ய முடியாது என்று அவனுக்குப் புரிந்தாலும் மனதின் உள்ளே ஏதோ ஒரு நெருடல் அவனுக்கும் இருந்து வந்தது.

ஆனந்தும், அமானுஷ்யனும் சந்தித்திருக்க வேண்டும் அல்லது கூடிய சீக்கிரம் சந்திக்கக் கூடும் என்று அவன் உள்மனம் சொன்னது. அவன் உள்மனம் இது வரை பொய்த்ததில்லை. அவன் நீண்ட சிந்தனைக்குப் பின் ஒரு முடிவுக்கு வந்தவனாக போன் செய்தான். வெளியே இருந்து கண்காணிக்க ஆட்கள் இருப்பது போலவே ஆனந்த் அறைக்குப் பக்கத்திலேயே ஒரு அறை எடுத்துத் தங்கி ஓரிருவர் தொடர்ச்சியாகக் கண்காணிக்க கட்டளையிட்டான். மனம் ஓரளவு நிம்மதியடைந்தது.

50

"எங்கே போய் விட்டு வருகிறாய்?" மகன் வந்தவுடன் சாரதா கேட்டாள். அவளுக்கு அவன் வரும் வரை ஏனோ ஒரு இனம் புரியாத படபடப்பு இருந்தது. போனால் திரும்பி வருவானோ இல்லையோ என்ற அர்த்தமில்லாத பயம். இப்போது அவன் சின்னக் குழந்தை அல்ல என்று பல தடவை மனதிற்கு சொல்லிக்

கொண்டாலும் மனம் சொன்னதைக் கேட்பதாயில்லை. வாசலிலேயே நின்று அவன் வரும் வரை பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு அவனைப் பார்த்த பின் தான் மனம் அமைதியடைந்தது.

அக்ஷய் சொன்னான். "அண்ணியைப் பார்த்து பேசி விட்டு வந்தேன்"

"அண்ணியா?" சாரதா குழப்பத்துடன் கேட்டாள்.

"உங்கள் மூத்த மருமகளாகப் போகிறவள். பெயர் நர்மதா. காலேஜில் லெக்சரராக இருக்கிறாள். பார்க்க அழகாய் இருக்கிறாள். நல்ல பெண்"

சாரதாவின் திகைப்பைப் பார்த்த அக்ஷய் அவளை உட்கார வைத்து ஆனந்த் காதலிக்கும் பெண்ணைப் பற்றிச் சொன்னான். அவன் சூட்கேஸில் அவள் போட்டோவை வைத்திருந்தது, தன் காதலை அவளிடமே சொல்லாமல் மறைத்திருந்தது எல்லாம் சொன்னான்.

சாரதா கேட்டாள். "ஏன் மறைக்கணும்? தாராளமாய் அவளிடம் சொல்லி கல்யாணம் செய்துக்கலாமே"

அக்ஷயிற்கு ஆனந்த் சொன்ன காரணத்தைச் சொல்லி அம்மா மனதைப் புண்படுத்த முடியவில்லை. "உங்க மூத்த மகன் ஒரு பைத்தியம்மா. அது தான் காரணம்"

சாரதா கேட்டாள். "சரி நீ எதற்கு அவளைப் போய் பார்த்தாய்?"

"அண்ணியாக வரப் போகிறவள் எப்படி இருக்கிறாள் என்று நான் போய் பார்க்க வேண்டாமா. இந்த வீட்டில் எதையும் போய் முறையாய் செய்ய யார் இருக்கிறர்கள்? அவன் வேலை வேலை என்று அலையும் வேலைப் பைத்தியம். நீங்கள் சாமி, விரதம் என்று வேறு எதையும் கவனிக்காமல் இருக்கும் பக்திப் பைத்தியம். அதனால் தான் நானே போய் பேசி விட்டு வந்தேன். இனி ஆனந்த் சென்னை வந்த பிறகு நீங்களும், அவனுமாய் போய் பேசி நிச்சயம் செய்து விட்டு வாங்கள்"

சாரதா மகன் காதைப் பிடித்துத் திருகினாள். "ஏண்டா எங்களை பைத்தியம்னா சொல்கிறாய்"

"மன்னிச்சுக்கோங்கம்மா. பைத்தியத்தைப் பைத்தியம்னு சொன்னா கோபம் வரும்கிறதை மறந்துட்டேன்"

சாரதா வாய் விட்டுச் சிரித்தாள். வந்த மறு நாளே அண்ணனுக்காகப்

போய் பேசி விட்டு வந்த அவனை நினைக்கையில் அவளுக்குப் பெருமையாக இருந்தது.

"அது சரி ஏன் எங்கள் இரண்டு பேரை மட்டும் போய் பேசச் சொல்கிறாய்? நீ கூட வர மாட்டாயா?"

அக்ஷய் அவள் கையைப் பிடித்துக் கொண்டே சொன்னான். "அம்மா எனக்கு நாளைக்கே டெல்லிக்குப் போக வேண்டும். நான் இனி எப்போது வர முடியும் என்று தெரியலை"

சாரதா முகத்தில் இருந்த சந்தோஷம் எல்லாம் வடிந்து போனது. "என்னடா சொல்கிறாய்?"

அக்ஷயிற்கு எப்படிச் சொல்வது என்று புரியவில்லை. அம்மாவின் முகமாற்றம் அவனுள்ளே வலியை ஏற்படுத்தியது. நாளை போனால் அவளை மீண்டும் சந்திக்க முடியுமா என்று கூட அவனுக்குத் தெரியவில்லை.

"அம்மா. ஆனந்த் எனக்காக ஒரு டாக்டரிடம் அப்பாயின்மெண்ட் வாங்கி இருக்கிறான். அவர் டெல்லியில் பெரிய டாக்டர். அவர் தரும் சிகிச்சையில் எனக்கு பழைய நினைவுகள் திரும்ப வாய்ப்பு இருக்கிறது. அதற்கு எவ்வளவு நாள் ஆகும் என்று தெரியவில்லை."

சாரதா மகனையே வெறித்துப் பார்த்தாள்.

அக்‌ஷய் தொடர்ந்தான். "அம்மா. எனக்கு என்னுடைய பழைய நினைவுகள் எல்லாம் திரும்பினால் தான் நான் இனி என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானிக்க முடியும். நீங்கள் இவ்வளவு நாள் கவலைப்பட்ட மாதிரியே என்னை வளர்த்த அம்மா, அப்பா கூட நான் என்ன ஆனேன் என்று தெரியாமல் கவலையோடு இருக்கலாம். என்னை நேசித்த எத்தனையோ பேர் எனக்காக துக்கப்பட்டுக் கொண்டிருக்கலாம்....."

சாரதா கண்கள் கலங்கின. சிறிது யோசித்து விட்டுக் கேட்டாள். "நானும் டெல்லிக்கே வந்து விடட்டுமா. ஆஸ்பத்திரியில் உன் கூட இருக்க ஆள் வேண்டாமா?"

அக்‌ஷயிற்கும் லேசாகக் கண்கள் கலங்கின. தாய்ப் பாசத்திற்கு இணையாக வேறு எதையாவது சொல்ல முடியுமா? அவன் சொன்னான். "ஆனந்த் அந்த டாக்டரிடம் விவரமாகக் கேட்டு விட்டான். அவர் இப்போதைய சொந்தங்கள் யாரும் கூட இருந்தால் பழைய நினைவு வருவது சிரமம் என்று சொல்லி விட்டாராம். அந்த ஆஸ்பத்திரியில் என்னை விட்டால் பிறகு எனக்கு பழைய நினைவுகள் முழுவதுமாகத் திரும்பும் வரை அவனைக் கூட வர

வேண்டாம் என்று சொல்லி விட்டாராம். அந்த சிகிச்சை முடிய எத்தனை நாள் ஆகும் என்று தெரியவில்லை."

சாரதா வெகுளித்தனமாகக் கேட்டாள். "போனிலாவது பேசலாமா"

"இல்லைம்மா. அதுவும் கூடாதென்று டாக்டர் சொல்லி விட்டார்."

"என்னடா இப்படிச் சொல்கிறாய்?" சாரதா அழ ஆரம்பித்து விட்டாள். அவளை சமாதானப்படுத்த அவனுக்கு நிறைய நேரம் தேவைப்பட்டது. எல்லாம் ஒரு நாள் முடிந்து விடும், தனக்கு முழு நினைவும் திரும்பியவுடன் எல்லோரும் சந்தோஷமாக இருப்போம் என்று திரும்பத் திரும்ப சொன்னான்.

"அந்த நினைவு திரும்பினால் இப்போதைய நினைவு எல்லாம் போய் விடாதே" சாரதா பயப்பட்டாள்.

"அதெல்லாம் போகாது என்று டாக்டர் சொல்லி இருக்கிறார். அவரே சொல்லா விட்டாலும் ஒரு விஷயம் எனக்கு உறுதியாய் தெரியும்மா"

"என்ன?"

"உங்களை இனி என்னால் மறக்க முடியும்ீ என்று தோணலைம்மா.

எத்தனை உயரத்திலிருந்து நான் மறுபடி விழுந்தாலும் அது நடக்காதும்மா. இந்த ஜென்மத்தில் மட்டுமல்ல. அடுத்த ஜென்மத்திலும் கூடத்தான்."

சாரதா மகன் வார்த்தைகளில் மனம் நெகிழ்ந்து போனாள். அவனை இழுத்து தன் மடியில் படுக்க வைத்துக் கொண்டாள்.

"அம்மா நான் ஒன்று சொன்னால் கேட்பீர்களா?"

"சொல்லுடா"

"ஆனந்த் கல்யாணத்தை சீக்கிரம் நடத்தி விடுங்கம்மா. நான் சிகிச்சை முடிந்து வரும் வரை கூட நீங்கள் காக்க வேண்டாம்"

"நீ இல்லாமல் எப்படிடா அவன் கல்யாணத்தை நடத்துவது?"

அக்ஷய் சிரிக்காமல் சீரியசாக ஒரு கல்யாணத்தை நடத்துவது எப்படி என்று விவரிக்க ஆரம்பித்தான். ஆரம்பத்தில் மிக கவனமாகக் கேட்ட சாரதாவிற்கு மகன் கிண்டல் செய்கிறான் என்பது பின்பு தான் புரிந்தது. வாய் விட்டுச் சிரித்த சாரதா "உனக்கு குறும்பு அதிகம்டா" என்று சொன்னாள்.

சிகிச்சைக் காலம் எப்போது வரை நீடிக்கும் என்று தெரியாததால் ஆனந்தின் திருமணத்தை அனாவசியமாக அது வரை நீட்டிக்க வேண்டாம் என்று தான் நினைப்பதாக அக்‌ஷய் தாயிடம் சொன்னான். சாரதா அரைமனதுடன் தலையசைத்தாலும் அடுத்த கணமே சொன்னாள். "இல்லைடா. உனக்கு சீக்கிரமே நினைவு வந்து விட்டால் பிரச்னையே இல்லையல்லவா. உனக்கு சீக்கிரமே நினைவு திரும்பும் நீ வேண்டுமானால் பாரேன்?"

அம்மாவின் வெகுளித்தனம் அவன் மனதை நெகிழ வைத்தது.

அன்று சாரதா உறங்கவில்லை. மகன் மறுநாள் போகிறான் என்பதால் அவன் இங்கிருக்கும் நேரத்தை முழுவதும் பயன்படுத்திக் கொள்ள நினைத்தாள். தாயும் மகனும் நிறைய நேரம் மனம் விட்டுப் பேசினார்கள். அவள் மடியில் படுத்தபடியே அவன் திரும்பத் திரும்ப ஒன்றையே வேறு வேறு வார்த்தைகளில் சொன்னான். 'ஆனந்த், நர்மதாவுடன் நீங்கள் சந்தோஷமாய் இருங்கள் அம்மா. நான் அடிக்கடி வர முடியாவிட்டால் கூட அதற்காக வருத்தப்படாதீர்கள். நான் நலமாக ஓரிடத்தில் இருக்கிறேன் என்பதை ஞாபகம் வைத்திருங்கள்'

அவன் முடிந்த வரை இனி எப்போதும் வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டாலும் மகன் எங்கோ ஒரு மூலையில் நலமாக இருக்கிறான்

என்ற நம்பிக்கையோடு அம்மா நிம்மதியாக இருக்க வேண்டும் என்பதற்காக அவன் சொன்னதெல்லாம் அவள் மனதில் எந்த அளவிற்குப் பதிந்தததது என்று அவனுக்குத் தெரியவில்லை.

பேசிப் பேசி அவன் அப்படியே அவள் மடியில் உறங்கிப் போனான். அந்த தாய் மகனைப் பார்த்தபடியே நீண்ட நேரம் அமர்ந்திருந்தாள்.

மறு நாள் அக்‌ஷய் டெல்லிக்குக் கிளம்பிய அதே நேரம் சிபிஐ மனிதன் ஏற்பாடு செய்திருந்த மூன்று மனிதர்கள் ஆனந்தின் அறைக்கு நேர் எதிர் அறையை வாடகைக்கு எடுத்து தங்கி இடைவிடாமல் கண்காணிக்க ஆரம்பித்தார்கள்.

## 51

ஆச்சார்யாவின் மனைவி லலிதா ஆனந்திற்குப் போன் செய்து அவன் தம்பி கிடைத்து விட்டானா, ஏதாவது தகவல் அவனிடம் இருந்து கிடைத்ததா என்று கேட்டு போன் செய்திருந்தாள். ஆனந்த் அவன் கிடைத்து விட்டான், ஆனால் தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று சொல்லி நேரில் ஒருமுறை வந்து எல்லாவற்றையும் விவரமாகச் சொல்வதாக உறுதியளித்து விட்டு போனை வைத்தான்.

பின் அம்மாவிற்குப் போன் செய்தான். அவன் போன் செய்த போது அக்‌ஷய் கிளம்பிப் போயிருந்தான். சாரதா தான் பேசினாள். அவள் குரலில் உயிரில்லை. அம்மாவின் துக்கம் அவனையும் சங்கடப்படுத்தியது.

அவள் ஆதங்கத்துடன் மகனைக் கேட்டாள். "அவன் ஏன் ஆனந்த் என்னமோ மாதிரி பேசுகிறான். இனி திரும்பியே வராதவன் மாதிரி எல்லாம் பேசுகிறான். ஏனப்படி?"

ஆனந்திற்குத் தொண்டையை அடைத்தது. கஷ்டப்பட்டு வார்த்தைகளைத் தேடிப் பேசினான். "அவன் ஞாபக சக்தி போனதில் இருந்து அவனுக்கு மறுபடி அது போய் விடுமோ என்று பயம் அம்மா. அதனால் தான் அப்படி பேசுகிறான்..."

சாரதாவுக்கு ஓரளவு மனம் சமாதானம் அடைந்தது. பின் கேட்டாள். "அவனுக்கு சிகிச்சை செய்யப் போகிற டாக்டர் என்ன ஆனந்த் சொல்கிறார்?"

ஆனந்திற்கு எதுவும் விளங்கவில்லை. "எந்த டாக்டர்?"

"அவன் ஞாபக சக்தியை திருப்பிக் கொண்டு வர மருத்துவம்

பார்க்கிற டாக்டர். அந்த டாக்டர் என்ன சொல்கிறார்?"

அக்ஷய் என்ன காரணம் சொல்லி அங்கிருந்து கிளம்பி இருக்கிறான் என்பது ஆனந்திற்கு விளங்கியது. "கண்டிப்பாய் குணப்படுத்த முடியும் என்று சொல்லி இருக்கிறார் அம்மா. நல்ல கைராசிக்கார டாக்டர்"

சாரதா மனம் நிம்மதி அடைந்தது. "அது போதும் ஆனந்த் எனக்கு"

ஆனந்த் மெல்ல சொன்னான். "அம்மா....."

"என்ன ஆனந்த்?"

"நீங்களும் வழக்கம் போல் கடவுளை நல்லா பிரார்த்தனை செய்யுங்கள்"

ஆனந்த் போனை வைத்து விட்டான். ஆனந்திற்கு என்றுமே அவளுடைய அதிகப்படியான கடவுள் பக்தி, பிரார்த்தனைகள், விரதங்கள் எல்லாம் பிடித்ததில்லை. அவனே இப்போது அப்படி சொன்னது அவளை ஆச்சரியப்பட வைத்தது. ஒருவேளை அவளுக்குத் தெரியாமல் எதையோ இருவரும் மறைக்கிறார்களோ? ஆனால் அவளுக்கு அந்த எண்ணம் வந்த வேகத்திலேயே போய்

விட்டது. 'இது நாள் வரை தம்பியை அவன் பார்க்கவில்லை. அதனால் பெரியதாக அவனுக்கு அக்கறை இருக்கவில்லை. இப்போது தம்பியைப் பார்த்த பிறகு அவனுக்கு பாசம் அதிகமாகி விட்டது. அதனால் தான் அவன் வேகமாக குணமடைய வேண்டும் என்று ஆசைப்பட்டு பிரார்த்தனை செய்யச் சொல்கிறான்' என்ற எண்ணம் எழுந்தது. மனதில் இளைய மகன் கிளம்பிப் போன வருத்தம் இருந்தாலும் அதையும் மீறி ஒரு நம்பிக்கையும் தைரியமும் வந்தது. எல்லா வேலைகளையும் விட்டு விட்டு பூஜையறைக்குப் போனாள்.

********

சிபிஐ மனிதன் ஆனந்தின் செல்போனில் இருந்து பேசப்பட்ட எண்களையும், அவனுக்கு போன் வந்த எண்களையும், பேசப்பட்ட நேரங்களையும் ஆராய்ந்து கொண்டு இருந்தான். அவன் கவனத்தை முக்கியமாகக் கவர்ந்தது ஆனந்த் தன் வீட்டுக்குப் பேசிய நேரங்கள் தான். ஆனந்த் சென்னையில் இருந்து டெல்லிக்கு வந்த நாள் முதல் ஆரம்பத்தில் தினமும் தன் தாயிற்குப் போன் செய்து வந்த சமயம் இரவு நேரங்கள் தான். அதுவும் பேசப்பட்ட நிமிடங்கள்

பெரும்பாலும் மூன்று நிமிடங்களுக்குள் தான். ஆனால் கடந்த மூன்று நாட்களில் ஒரு நாளைக்கு இரண்டு முறை பேசியிருக்கிறான். ஒவ்வொரு முறையும் பேசியதும் குறைந்தது பத்து நிமிடங்களாகவாவது இருந்தது.

மேற்போக்காகப் பார்த்தால் அது ஒரு பெரிய விஷயமில்லை என்றே தோன்றியது. ஏதாவது குடும்ப விவகாரம் அல்லது தாயின் ஆரோக்கியக் குறைவு போன்ற விஷயங்கள் இருந்தது கூட காரணமாக இருக்கலாம். ஆனால் இன்று காலை ஆச்சார்யா மனைவியிடம் பேசி முடித்து உடனடியாக அவன் தன் வீட்டுக்குப் போன் செய்தது தெரிந்த போது ஏனோ உள்ளுணர்வு எச்சரிக்கை மணி அடிக்க ஆரம்பித்தது. இது அமானுஷ்யனால் வந்த அனாவசிய பயமா, இல்லை உள்ளுணர்வு தானா என்று அவனுக்கே குழப்பமாக இருந்தது. ஏனென்றால் இதே மாதிரி தான் சஹானா வீட்டில் இருந்த அவளுடைய மாமியாரின் தங்கை மகனும் ஒரு நெருடலான சந்தேகத்தைக் கிளப்பி இருந்தான். ஆனால் அதன் பின் அவர்கள் வீட்டு போனை ஒட்டுக் கேட்டும் பெரிதாக ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

ஆனால் ஆனந்த் விஷயத்தில் அலட்சியமாக இருப்பது நல்லதல்ல என்ற எண்ணம் அவனுக்கு பலமாகத் தோன்ற ஆரம்பித்தது. போனை எடுத்தான்.

மந்திரி குரல் பரபரப்பாகக் கேட்டது. "என்ன? ஏதாவது தகவல் கிடைத்ததா?"

"இல்லை. அந்த தாடிக்காரன் ஆள்களும் ஆனந்த் தங்கியிருக்கும் ஓட்டல் பக்கம் அலைகிறார்கள் என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. நீங்கள் எதற்கு அமானுஷ்யன் அங்கு வரலாம் என்று நமக்கு வந்த சந்தேகத்தை அவர்களிடம் சொன்னீர்கள்"

"நாம் சும்மா இருக்கிறோம் என்கிற மாதிரி அந்த தாடிக்காரன் சொல்லிச் சொல்லி என் உயிரை எடுத்தான். அதனால் தான் நீங்கள் சொன்னதை நான் அவனிடம் சொன்னேன். ஆனால் அந்த காட்டான்கள் அங்கே வந்து கூட்டம் போடுவார்கள் என்று யாருக்குத் தெரியும்."

பொங்கி வந்த கோபத்தை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு சிபிஐ மனிதன் சொன்னான். "அமானுஷ்யன் எப்படிப்பட்டவன் என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும். அப்படி இருக்கையில் அவர்களும் அங்கு வந்து திரிவது அவனைப் பிடிக்கிற வேலைக்கு இடைஞ்சல் தான்"

"எனக்குப் புரிகிறது. ஆனால் அவர்களிடம் யார் பேசுவார்கள்?

எனக்கே அவர்கள் நடந்து கொள்வதைப் பார்த்தால் சில நேரங்களில் ஆழம் தெரியாமல் காலை வைத்து விட்டோமோ என்று தோன்றுகிறது."

"எதற்கும் அந்த ஆனந்தின் செல்போன் பேச்சையும் டேப் செய்வது நல்லது என்று நினைக்கிறேன். அதிகாரபூர்வமான வழியில் போவதானால் எங்கள் டைரக்டருக்கும் தகவல் சொல்லி அனுமதி பெற வேண்டும். ஆனால் பணத்திற்காகவும், பயத்தினாலும் வெளியே யாருக்கும் தெரியாமல் நமக்கு செய்து தருகிற ஆள்கள் கிடைப்பார்கள்......"

"ஏன் திடீரென்று....?"

"இன்றைக்கு காலையில் ஆச்சார்யா மனைவி ஆனந்திடம் பேசி இருக்கிறாள். அவளிடம் பேசி முடித்தவுடனேயே ஆனந்த் தன் வீட்டுக்குப் போன் செய்து பேசி இருக்கிறான்....இதெல்லாம் என்ன என்று தெரியாமல் அவனைப் பின் தொடர்வதும், கண்காணிப்பதும் அர்த்தமில்லாதது என்று தோன்றுகிறது...."

ஒரு நிமிட மௌனம் சாதித்த மந்திரி பின் சொன்னார். "சரி அதையும் செய்து விடலாம்"

**************

டெல்லியின் புறநகர்ப் பகுதியில் ஆள் நடமாட்டமில்லாத வீதி ஒன்றின் கடைசி வீட்டிற்கு பன்னிரண்டு பேர் வேறு வேறு நேரங்களில் வந்து சேர்ந்தனர். அந்த வீட்டின் ஹாலில் வைக்கப்பட்டிருந்த நாற்காலிகளில் வந்து அமர்ந்தவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவில்லை. ஒரு சிலர் தெரிந்த முகங்களைப் பார்த்து லேசாகத் தலையசைத்தார்கள். மற்றவர்கள் அதைக் கூடச் செய்யவில்லை.

குறுந்தாடி மனிதன் கடைசியாக வந்து சேர்ந்தான். வந்தவன் ஒரு நிமிடம் ஒன்றும் சொல்லாமல் அவர்களைக் கூர்ந்து பார்த்தான். பின் சொன்னான்.

"நமக்கு ஆனந்த் என்கிற அந்த சிபிஐ அதிகாரியை அந்த சைத்தான் எப்படியும் தொடர்பு கொள்வான் என்கிற தகவல் வந்திருக்கிறது. நம் ஆள்களை ஆனந்த் தங்கி இருக்கும் ஓட்டல் பகுதிக்கு அனுப்பி இருக்கிறேன். அவர்கள் எல்லோரும் அந்த சைத்தானை அருகில் இருந்து பார்த்து பழகியவர்கள். அவன் அங்கே ஒரு வேளை வந்து, அவர்கள் அவனை அடையாளம் தெரிந்து கொண்டு விட்டால்

அவர்கள் உங்களில் மூன்று பேரைத் தொடர்பு கொள்வார்கள்......."

குறுந்தாடி மனிதன் பேரைச் சொல்லாமல் அவர்களில் மூன்று பேரை சுட்டிக் காட்டினான். "உங்கள் மூன்று பேருக்கும் இங்கிருக்கும் ஆட்களில் மூன்று மூன்று பேரை உதவிக்குத் தருகிறேன். இந்த மூன்று நால்வர் குழுவிற்கும் ஒரே ஒரு வேலை தான். அந்த சைத்தானைக் கொல்வது. பணம், ஆயுதம், உபகரணங்கள் எல்லாம் நீங்கள் எத்தனை வேண்டுமானாலும் உபயோகிக்கலாம். என்ன வேண்டும் என்று கேளுங்கள். நான் அதற்கு ஏற்பாடு செய்கிறேன். அவன் சாக வேண்டும் என்பது தான் நம் குறிக்கோள்... உங்களில் யார் அவனைக் கொன்று காண்பிக்கிறீர்களோ அவர்களுக்கு வாழ்நாள் எல்லாம் பணம் பற்றிய கவலையில்லாமல் வாழ வழி செய்யப்படும்....."

அவர்கள் அனைவரும் அவன் சொல்வதை மிகவும் கவனமாகக் கேட்டுக் கொண்டு இருந்தார்கள்.

அவன் தொடர்ந்து சொன்னான். "...இந்த முயற்சியில் நீங்கள் இறக்க நேரிட்டால் உங்கள் குடும்பத்தினர் பணக் கவலை இல்லாமல் வாழ்நாள் முழுவதும் வாழ வழி செய்யப்படும். இறந்த உங்களுக்கு சொர்க்கத்தில் ஒரு சிறப்பிடமும், பூமியில் பெரும்புகழும் இருக்கும் என்பதை நான் சொல்லத் தேவை இல்லை....."

அக்‌ஷயிற்கு அது கனவா இல்லை கடந்த கால நினைவா என்பது தெரியவில்லை. டெல்லிக்கு விமானத்தில் சென்று கொண்டிருந்த போது சிறிது கண்ணயர்ந்த போது தான் அது மனத்திரைக்கு வந்தது.

அவன் ஒரு புத்த விஹாரம் ஒன்றில் இருக்கிறான். அந்த புத்த விஹாரத்தில் ஒரு புத்தர் சிலை முன் மண்டியிட்டு அவன் தாங்க முடியாத துக்கத்தில் அழுது கொண்டிருக்கிறான். ஒரு முதிய பிக்கு புத்தர் சிலைக்கு அருகில் ஒரு பிரதான இருக்கையில் அமர்ந்து ஜபமாலையை உருட்டி தியானம் செய்து கொண்டு இருக்கிறார். அவன் துக்கம் அந்த முதிய பிக்குவை எந்த விதத்திலும் பாதித்தது போலத் தெரியவில்லை. அவன் அங்கே இல்லவே இல்லை என்பது போல் அவர் தன் தியானத்தில் இருக்கிறார். அவனுக்கு இறந்து போக வேண்டும் என்று ஏனோ தோன்றுகிறது. அப்போது அவர் கண்களைத் திறக்காமலேயே சொல்கிறார். "மரணம் எதற்குமே எப்போதுமே ஒரு தீர்வல்ல".

இன்னொரு இடம். ஒரு அரையிருட்டு ஹாலில் நிறைய பேர்

உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு எதிரில் அவன் நின்று பேசிக் கொண்டு இருக்கிறான். அவனுக்கு அருகில் இரண்டு தாடிக்காரர்கள், இருவருமே மத்திய வயதினர், அமர்ந்திருந்தார்கள். எல்லோரும் மிகுந்த கவனத்துடன் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவன் உருது மொழியில் ஏதோ கவிதை போல சொல்கிறான். கைதட்டல் பலமாக ஒலிக்கிறது.

அவன் விழித்துக் கொண்டான். அவனுக்கு அந்த இரண்டுமே ஒன்றுக்கொன்று சம்பந்தம் இருப்பது போல் தோன்றவில்லை. அவன் குண்டடி பட்டு அடைக்கலம் புகுந்த புத்த விஹாரத்திற்கும், இந்த புத்த விஹாரத்துக்கும் ஏகப்பட்ட வித்தியாசங்கள் இருந்தன. அந்த மூத்த பிக்குவும், இந்த மூத்த பிக்குவும் கூட வேறு வேறு நபர்களே. இதற்கு எந்த விதத்திலும் சம்பந்தம் இல்லாத உருதுப் பிரசங்கம் வேறொரு இடத்தில். அதில் அவன் சரளமாகப் பேசுகிறான். பேசியது என்ன என்பதிலும் அவனுக்குத் தெளிவில்லை. ஆனால் கவிதை போன்ற வரிகள் போலத் தான் தோன்றியது. அவனுக்குப் பக்கத்தில் இருந்த தாடிக்காரர்கள் இரண்டு பேர் யார் என்றும் தெரியவில்லை. அவனுக்குக் குழப்பமாக இருந்தது. தலை வலித்தது.

டெல்லியில் இறங்கியவுடன் வேறு ஒரு ஓட்டலுக்குப் போய் தங்கினான். அந்த ஓட்டலும் ஆனந்த் தங்கியிருந்த ஓட்டலும்

ஒன்றுக்கொன்று அரை கிலோமீட்டர் தொலைவில் தான் இருந்தன.

**********

ஆனந்த் தங்கி இருந்த ஓட்டலுக்கு ஒரு பெரிய விலை உயர்ந்த கருப்பு சூட்கேஸை எடுத்துக் கொண்டு ஒரு இளைஞன் நுழைந்தான். அவன் கையில் நான்கைந்து தடிமனான புத்தகங்கள் இருந்தன.

லிப்டில் ஏறி முதல் மாடிக்கு வந்து முதல் மாடியில் முதல் அறை 101 கதவைத் தட்டினான். கதவைத் திறந்த ஒரு இளைஞனிடம் ஆங்கிலத்தில் சொன்னான். "எக்ஸ்க்யூஸ் மீ. நான் லைஃப் விஸ்டம் பப்ளிகேசன்ஸ் சேல்ஸ் மேனேஜர். உங்களுக்கு ஆட்சேபணை இல்லா விட்டால் எங்கள் புத்தகங்கள் பற்றி உங்களிடம் இரண்டு நிமிடம் பேசலாமா?"

அந்த இளைஞன் "நான் பிசியாக இருக்கிறேன்" என்று சொல்லி கதவைத் தடாலென்று சாத்தினான்.

அந்த சேல்ஸ் மேனேஜர் அடுத்த கதவைத் தட்டினான். அதில் ஆட்கள் இல்லை. அடுத்த கதவைத் தட்டினான். அரை மணி நேரத்தில் அவனுடைய புத்தகங்களைப் பார்க்கவாவது ஒப்புக்

கொண்ட ஒரே நபர் 108ல் இருந்த ஒரு கிழவர் தான். அந்த அறையில் அரை மணி நேரம் இருந்து விட்டு வந்த சேல்ஸ் மேனேஜர் மற்ற அறை நபர்களில் சிலரிடம் திட்டு வாங்கிக் கொண்டு இரண்டாவது மாடிக்குப் போனான்.

201ல் ஆள் இல்லை. 202ல் கதவைத் திறந்த ஒரு ஆங்க்லோ இந்தியப் பெண்மணி தோட்டக்கலை சம்பந்தமான புத்தகங்கள் இருக்கிறதா என்று கேட்டாள். "அது இல்லை மேடம். வேறு...." என்று அவன் சொல்வதற்குள் "சாரி. தேவையில்லை" என்று கதவைத் தாளிட்டாள்.

203 அறைக் கதவைத் தட்டினான். மற்ற அறைக் காரர்களிடம் சொன்னதையே இங்கும் சொன்ன அவனை ஆனந்த் எரிச்சலோடு துரத்த முற்பட்ட போது வந்தவன் "ப்ளீஸ்" என்று சொல்லிக் கண்ணடித்தான். அப்போது தான் ஆனந்திற்கு வந்தது தன் தம்பி என்று புரிந்தது. ஆனால் காட்டிக் கொள்ளாமல் வேண்டா வெறுப்பாக உள்ளே விடுவதைப் போல உள்ளே விட்டு கதவைத் தாளிட்டான்.

"நீ இப்போது எங்கே தங்கி இருக்கிறாய்?" ஆனந்த் தாழ்ந்த குரலில் கேட்டான்.

ஓட்டல் பெயரையும், அறை எண்ணையும் அக்‌ஷய் சொன்னான்.

"நல்லது. இங்கே இப்போது கண்காணிப்பு கூடி இருக்கிறது. எதிர் அறை 210ல் மூன்று ஆட்கள் இருக்கிறார்கள். நீ இப்போது தட்டிய போது கூட அவர்கள் பார்த்துக் கொண்டே இருந்தார்கள்"

அக்‌ஷய் அதைப் பற்றி கவலைப்படவில்லை. "நான் முதல் மாடியில் இருந்தே ஒவ்வொரு அறைக் கதவாய் தட்டி விட்டு தான் வருகிறேன். அதை விடு. நீ அமானுஷ்யன் என்ற ஏதோ ஒரு பெயரைச் சொல்லி ஏதாவது ஞாபகம் வருகிறதா என்று கேட்டாயே. ஏன்"

ஆனந்த் ஜெயின் சொன்ன எல்லாவற்றையும் விவரமாய் சொன்னான். "உனக்கு அவர்கள் வைத்திருக்கிற பெயர் அது தான்" என்று சொல்லி முடித்தான்.

எல்லாவற்றையும் கேட்டு விட்டு அக்‌ஷய் அமைதியாய் யோசித்தான்.

ஆனந்த் கேட்டான். "உனக்கு பழையது ஏதாவது ஞாபகம் வந்ததா?"

அக்‌ஷய் விமானத்தில் அரைத்தூக்கத்தில் வந்த அந்த நி◌ிகழ்ச்சிகளைச் சொன்னான். "அது கனவா இல்லை நனவா என்று

தெரியவில்லை"

ஆனந்த் உடனே சொன்னான். "கனவாய் இருக்க வாய்ப்பில்லை. உன்னைப் பற்றி மூன்று வருஷங்களுக்கு முன் விசாரித்த போது அந்த சாது கூட நிறைய புத்த பிக்குகளைப் பார்த்த மாதிரி தான் சொன்னார்"

"அப்படியானால் அந்த உருதுவில் பேசினது?"

"அது தெரியவில்லை. அது வேறு ஒரு இடத்தில் நீ இருந்து பேசின உண்மை சம்பவமாகக் கூட இருக்கலாம். உனக்கு உருது தெரியுமா?"

அக்ஷய் யோசித்து விட்டு சொன்னான். "தெரியும். ஆனால் கவிதை சொல்கிற அளவுக்கு ஞானம் இருப்பது போல தெரியவில்லை. சரி விடு. அடுத்ததாக நாம் என்ன செய்யலாம். நான் அந்த கேசவதாஸைப் போய் பார்த்தால் என்ன?"

"அந்த ஆளுக்கு எவ்வளவு தூரம் தெரியும் என்று நமக்குத் தெரியாது அக்ஷய். அந்த ஆளுக்குக் கீழ் உள்ள சில அதிகாரிகள் தான் உன்னைப் பற்றிய கேஸை ரகசியமாய் கையாள்கிறார்கள். வேண்டுமென்றே இந்தக் கேஸை பல பிரிவுகளாய் பிரித்து

ஒவ்வொரு பிரிவையும் ஒவ்வொரு அதிகாரிகளிடம் கொடுத்த மாதிரி இருக்கிறது. ஒருவருக்குத் தெரிந்த விவரம் இன்னொருவருக்குத் தெரியக்கூடாது என்பதில் அவர்கள் மிக கவனமாக இருப்பது போல தெரிகிறது."

அக்‌ஷய் கடிகாரத்தைப் பார்த்து விட்டு எழுந்தான். "இனி நான் இதற்கு மேல் இங்கே இருந்தால் அவர்களுக்கு சந்தேகம் வரும். நான் போகிறேன். எனக்கு ஏதாவது தெரிவிக்க வேண்டி இருந்தால் நீ என் அறைக்கு எப்படியாவது தகவல் அனுப்பு. மற்றவர்களுக்கு தெரியாமல் எங்கிருந்தாவது போன் செய்ய முடியும் என்றால் இந்த செல்லிற்கு போன் செய்." அக்‌ஷய் ஒரு செல் நம்பரைத் தந்தான். "மனப்பாடம் செய்து விட்டு இதை எரித்து விடு. உன் பாக்கெட்டிலோ, ரூமிலோ வைக்காதே. நான் உனக்கு ஏதாவது தகவல் சொல்ல வேண்டுமென்றால் எப்படியாவது தெரிவிக்கிறேன்"

அக்‌ஷய் கிளம்பினான்.

ஆனந்த் தம்பியை அணைத்துக் கொண்டு சொன்னான். "ஜாக்கிரதையாய் இரு அக்‌ஷய்."

அக்‌ஷய் தலையசைத்தான். 'நான் நர்மதாவைப் பார்த்தேன்"

ஆனந்த் ஒரு கணம் பேச்சிழந்தான்.

அக்ஷய் புன்னகைத்தான். "அழகாய் இருக்கிறாள். நல்ல பெண்ணாய் இருக்கிறாள். நீ இனி தாமதிக்காதே. அவளை மாதிரி ஒரு நல்ல பெண் உனக்கு கிடைக்காது. சீக்கிரமே அவளைக் கல்யாணம் செய்து கொண்டு செட்டில் ஆகி விடு. வரட்டுமா?"

ஆனந்த் திகைப்பில் இருந்து மீள்வதற்குள் அக்ஷய் கதவைத் திறந்து வெளியே போய் விட்டான். "தேங்க்யூ சார். தேங்க் யூ வெரிமச்." என்று தலை குனிந்து சொல்லி விட்டு கதவை சாத்தினான்.

வெளியே வந்தவன் எதிர் அறை 210 வாசலில் நின்று கொண்டிருந்தவனைப் பார்த்து மிக மரியாதையாக வணக்கம் சொன்னான். "சார் நான். லைஃப் விஸ்டம் பப்ளிகேசன்ஸ்ல இருந்து வருகிறேன்....'

210 வாசலில் நின்றிருந்தவன் அதற்கு மேல் அவனைப் பேச விடவில்லை. "ஓடிப் போய் விடு" என்று சுருக்கமாக எச்சரித்தான். அதே நேரத்தில் அந்த எச்சரித்த மனிதனுக்கு சிபிஐ மனிதனிடம் இருந்து போன் வந்தது.

அறை எண் 210 வாசலில் நின்றிருந்தவன் இசைக்கும் செல்போனை எடுத்த போதும் அக்‌ஷய் அவனிடம் “சார்” என்று பணிவாக அழைக்க அந்த ஆள் கண்களில் தீப்பொறி பறந்தது. அந்த அனல் பார்வைக்குப் பயந்து அங்கிருந்து நகர்கிற மாதிரி அக்‌ஷய் நகர்ந்தான். அவன் மிக வேகமாகவும் அல்லாமல் மிக நிதானமாகவும் அல்லாமல் அந்த ஓட்டலில் இருந்து வெளியேறும் எண்ணத்தில் இயங்கினான்.

சிபிஐ மனிதன் அறை எண் 210 வாசலில் நின்றிருந்தவனிடம் புதிதாக ஏதாவது தகவல் இருக்கிறதா என்று கேட்டான். அவனால் தன் அலுவலகத்தில் ஏனோ நிம்மதியாக இருக்க முடியவில்லை. அவனுடைய உள்மனதில் ஏதோ ஒரு வகை நெருடல் தொடர்ந்து இருந்து வந்தது. அவனுடைய அனுபவத்தில் அது போன்ற நெருடல்கள் எப்போதும் வரப்போகும் அபாயத்திற்கு அறிகுறியாகவே இது வரை இருந்திருக்கின்றன என்பதால் அவன் அவற்றை அலட்சியம் செய்யவில்லை. தற்போதைய நிலவரம் என்னவாக இருக்கிறது என்று அறியும் பொருட்டு போன் செய்தான்.

அறை எண் 210 வாசலில் இருந்தவன் போகின்ற அக்‌ஷயைப் பார்த்தபடியே செல்போனில் பேசினான். “ஹலோ”. அவன் கண்கள் அறைக்குள் இருந்த இன்னொருவனிற்கு சமிக்ஞை செய்ய அந்த

ஆள் ஆனந்தின் அறையைக் கண்காணிக்கும் வேலையை எடுத்துக் கொண்டு வாசலில் நிற்க, போனில் பேச ஆரம்பித்தவன் அறையினுள் அமர்ந்து கொண்டு தாழ்ந்த குரலில் பேசினான்.

"சொல்லுங்கள் சார்"

"ஆனந்த் அறைக்கு யாராவது சந்தேகப்படும் படி வந்தார்களா? ஆனந்த் சாப்பிடவோ, வெளியேயோ செல்லும் போது அவனிடம் கேஷுவலாக யாராவது பேச்சுக் கொடுத்த மாதிரி இருந்ததா?"

"அப்படியெல்லாம் எதுவும் இல்லை சார்"

"அவன் அறைக்கு காபி, டிபன், சாப்பாடு எல்லாம் கொண்டு போகும் நபர்கள் எல்லாம் ஓட்டலில் முதலில் இருந்தே வேலை செய்பவர்களா? இல்லை சில நாட்களுக்கு முன் வேலைக்குச் சேர்ந்த புதிய ஆள் யாராவது இருக்கிறார்களா?"

"புதிய ஆள்கள் யாரும் வேலைக்கு சேரவில்லை சார். ஆனந்த் அறைக்கு காபி தவிர எதுவும் தருவிப்பதில்லை. டிபன், சாப்பாடு எல்லாம் ரெஸ்டாரண்டில் தான். அப்போதும் யார் கூடவும் பேசுவதில்லை."

"காபி கொண்டு போகிறவன் தவிர அவன் அறைக்கு வேறு யாருமே போகவில்லை. வெளியே ரெஸ்டாரெண்டில் சாப்பிடும் போதும் யாரிடமும் பேசவில்லை என்பதை உறுதியாக தானே சொல்கிறீர்கள்?"

"ஆமாம். இப்போது ஒரு ஐந்து நிமிஷத்திற்கு முன்னால் புத்தகம் விற்கிற சேல்ஸ்மேன் மட்டும் தான் சர்வரல்லாமல் அவன் அறைக்குப் போன ஒரே ஆள்"

சிபிஐ மனிதன் தன்னையும் மீறிக் கத்தினான். "என்னது புத்தகம் விற்கிற சேல்ஸ்மேனா? அவன் சேல்ஸ்மேன் தான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? இதையேன் என்னிடம் முதலிலேயே சொல்லவில்லை"

"அவன் கண்டிப்பாக சேல்ஸ்மேன் தான் சார். அவன் முதல் மாடியில் எல்லா அறைகளுக்கும் போய் புத்தகங்கள் விற்க முயற்சி செய்து விட்டு பிறகு தான் இங்கே வந்தான். இங்கேயும் ஆனந்த ஆரம்பத்தில் அவனை துரத்தப் பார்த்தான். ஆனால் அந்த ஆள் கெஞ்சிக் கூத்தாடிய பிறகு தான் உள்ளே விட்டான். அந்த ஆள் அவன் அறையை முடித்து விட்டு என் கிட்டே கூட வந்தான். நான் போகச் சொல்லியும் கேட்கவில்லை. உங்கள் போன் வந்த போது மிரட்டி தான் அவனைத் துரத்தினேன்."

சிபிஐ மனிதன் ஓரளவு சமாதானம் அடைந்தான். "சேல்ஸ்மேன்கள் வீடுகளுக்கு வருவதுண்டு. ஆபிஸ்களுக்கும் வருவதுண்டு. ஆனால் ஓட்டல் அறைகளுக்கு வருவது நான் இது இதுவரை கேள்விப்படாதது. அவன் ஆனந்த் அறையில் எத்தனை நேரம் இருந்தான்?"

"பதினைந்து நிமிஷம் இருந்திருப்பான் சார்"

சிபிஐ மனிதன் சிறிது நேரம் மௌனமாய் இருந்தான். ஆனால் அவன் மூளையில் ஏகப்பட்ட சிந்தனைகள் ஓடின. பிறகு கேட்டான். "அவன் முதல் மாடியிலோ, இல்லை இரண்டாம் மாடியிலோ வேறு யாருக்காவது புத்தகம் விற்று இருக்கிறானா?"

"இந்த மாடியில் வேறு யாரிடமும் விற்கவில்லை சார். முதல் மாடியில் 108 அறையில் விற்றிருக்கலாம் என்று தோன்றுகிறது சார். அந்த அறையில் அவன் அரை மணி நேரமாவது இருந்திருப்பான் என்று நம் ஆட்கள் சொன்னார்கள். அந்த அறையில் ஒரு கிழவர் இருக்கிறார் சார்."

"உடனடியாக நீங்களே அந்த கிழவனைப் போய் பாருங்கள். அந்த ஆளிடம் அவன் ஏதாவது புத்தகங்கள் விற்று இருக்கிறானா,

ஏதாவது ரசீது தந்திருக்கிறானா என்று கேட்டு விட்டு எனக்கு உடனடியாகப் போன் செய்யுங்கள். அது வரை உங்கள் அறையில் உங்களுக்கு பதிலாக இன்னொரு ஆளை இருக்க வைத்து விட்டுப் போங்கள்"

சிபிஐ மனிதன் உடனடியாக வேறு சிலருக்குப் போன் செய்து அந்த சேல்ஸ்மேன் பற்றி தெரிவித்து விட்டு சொன்னான். "அவன் அந்த ஓட்டல் ஏரியாவிலேயே தான் இப்பவும் இருக்க வேண்டும். ஐந்து நிமிஷத்திற்கு முன் தான் அந்த ஓட்டலில் இருந்தான். நான் சொல்கிற வரை அவனை உங்கள் பார்வையிலேயே வைத்திருங்கள். உதவிக்கு எத்தனை ஆள்கள் வேண்டுமானாலும் கூட்டிக் கொள்ளுங்கள். ஆனால் அவன் உங்கள் பார்வையிலிருந்து போய் விடக் கூடாது."

அடுத்த நிமிடம் அறை எண் 108 கதவை 210 அறைக்காரன் தட்டினான். கதவைத் திறந்த கிழவர் என்ன என்பதைப் போல அவனைப் பார்த்தார்.

மிக பவ்யமாக 210 அறைக்காரன் பேசினான். "தொந்திரவு செய்வதற்கு மன்னிக்க வேண்டும். சிறிது நேரத்திற்கு முன் யாராவது ஒரு புத்தக சேல்ஸ்மேன் வந்தாரா?"

"ஆமாம்"

"என் அறைக்கும் வந்தார். நான் வேண்டாம் என்று சொல்லி அனுப்பி விட்டேன். இப்போது போன் செய்த என் மனைவியிடம் தற்செயலாக அதைச் சொன்ன போது சமையல் அல்லது தோட்டக்கலை பற்றிய நல்ல புத்தகம் இருந்திருந்தால் வாங்கி இருக்கலாமே என்றாள். அதனால் தான் அந்த ஆளைத் தேடி வந்தேன்."

"அந்த ஆள் அப்போதே போய் விட்டாரே"

"அவரிடம் நீங்கள் ஏதாவது புத்தகம் வாங்கினீர்களா? அவர் ஏதாவது விசிட்டிங் கார்டு தந்தாரா"

"இல்லை. அவரிடம் யோகா புத்தகங்கள் தான் நிறைய இருந்தன. அதில் ரெண்டு புத்தகங்கள் எனக்கு பிடித்தும் இருந்தன."

"ஓ நீங்கள் வாங்கினீர்களா? ரசீது கொடுத்திருப்பாரே. அதில் அவர் செல் நம்பர் இருக்குமே. இருந்தால் தாங்களேன். போன் செய்து கேட்கிறேன் சமையல் அல்லது தோட்டக்கலை புத்தகங்கள் ஏதாவது இருக்கின்றனவா என்று"

"இல்லை. அவர் என்னிடம் என் அட்ரஸ் வாங்கிக் கொண்டு போனார். விபிபியில் அனுப்புவதாகச் சொன்னார். அவரிடம் இருக்கிற புத்தகம் எல்லாம் ஒவ்வொன்றாக தான் இருக்கிறதாம். மற்றவர்களுக்கும் காண்பித்து ஆர்டர் வாங்க வேண்டும் என்பதால் அதை விற்கவில்லை. ஒரு வாரத்தில் எனக்கு புத்தகங்கள் அனுப்புவதாக சொல்லி இருக்கிறார்"

"அவரிடம் சுமா ார் எத்தனை புத்தகங்கள் இருந்திருக்கும்?"

"சுமார் 15 இருக்கலாம். எல்லாமே யோகா தான்."

"நன்றி சார்" என்று சொல்லி விட்டுக் கிளம்பியவன் உடனடியாக சிபிஐ மனிதனுக்குப் போன் செய்தான்.

எல்லாவற்றையும் கேட்ட சிபிஐ மனிதன் அபாய அறிகுறிகளாக சில செய்திகளை மனதில் அடிக்கோடிட்டான். புத்தகங்கள் அவன் விற்கவில்லை. ஆர்டர் மட்டுமே எடுத்துள்ளான். ரசீதோ, விசிட்டிங் கார்டோ தரவில்லை. அந்த புத்தகங்கள் எல்லாமே அமானுஷ்யனின் விருப்பமுள்ள துறையான யோகா புத்தகங்கள்.

210 அறைக்காரனிடம் "எனக்கென்னவோ அவன் மேல் சந்தேகம் தான் வருகிறது. இன்னொரு தடவை பார்த்தால் கண்டிப்பாக

எனக்கு போன் செய்யுங்கள்" என்று சொல்லி விட்டு போனை வைத்த சிபிஐ மனிதன் அவசரமாக சற்று முன் தான் போன் செய்த மனிதனிற்கு மீண்டும் போன் செய்தான்.

"அந்த சேல்ஸ்மேனை உடனடியாகக் கொன்று விடுங்கள். பிணத்தை அப்படியே விட்டு விடாதீர்கள். பிணம் போலீசுக்குக் கிடைத்து விடக் கூடாது. அது நமக்கு வேண்டும். எல்லாம் வேகமாக நடக்க வேண்டும்"

'ஒருவேளை அந்த ஆள் நிஜமான சேல்ஸ்மேனாகவே கூட இருக்கலாம். ஆனால் இந்த இந்தியாவில் ஒரு புத்தக சேல்ஸ்மேன் செத்துப் போனால் அது ஒன்றும் பெரிய இழப்பில்லை.' என்று நினைத்த சிபிஐ மனிதன் பரபரப்பாக இனி வரும் போன் கால்களுக்காகக் காத்திருந்தான்.

## 54

அந்த ஓட்டலில் இருந்து அக்ஷய் வேகமாக வெளியேறிய போதும் மூன்று பேர் பின் தொடர்வதை அவன் கவனித்தான். அவன் மெல்ல நடந்தால் அவர்களும் மெல்ல நடந்தார்கள். அவன் வேகமாக நடந்தால் அவர்களும் வேகமாக நடந்தார்கள். கிட்டத்தட்ட அருகிலேயே இருந்தார்கள். அந்த மூவர் கையிலும்

செல் போன்கள் இருந்தன.

அக்ஷய் புன்னகைத்தான். அவனுக்கு ஏனோ அவர்களுடைய அருகாமை பயமுறுத்தவில்லை. அமைதியாக நடந்து கொண்டிருந்தான். பின் திடீரென்று ஓடிப் போய் ஒரு ஓடும் பஸ்ஸில் ஏறிக் கொண்டான். அந்த மூவரும் அவனுடைய அந்த செய்கையை எதிர்பார்க்கவில்லை என்பது அவர்கள் திகைத்து நின்ற விதத்திலேயே தெரிந்தது. ஆனால் மூவரும் சுதாரித்துக் கொண்டு ஓடி வந்து அந்த பஸ்ஸில் ஏறிக் கொண்டு அந்த கண்டக்டரிடம் வசவுகளை வாங்கிக் கொண்டார்கள்.

அந்த மூன்று பேரையும் மிக நுணுக்கமாக கவனித்த அக்ஷயிற்கு ஒரு உண்மை புரிந்தது. அவர்களில் இரண்டு பேர் போலீஸ் துறையாக இருக்க வேண்டும், மூன்றாமவன் போலீஸ் துறைக்கு சிறிதும் சம்பந்தம் இல்லாதவன். மூன்றாமவன் முகத்தில் ஒருவித குரூரம் தெரிந்தது. ஏதோ தீவிரவாதி போல தெரிந்தான். அந்த மூன்றாமவனை அந்த இரண்டு போலீசாரும் சற்று எரிச்சலுடன் பார்த்தனர். ஆனால் அவன் அதைக் கவனித்ததாய் தெரியவில்லை. அவன் பார்வை அக்ஷய் மேலேயே ஒட்டிக் கொண்டிருந்தது.

மூன்றாமவன் தன் செல்போனில் யாரிடமோ பேசி விட்டு வெளியே பார்த்தான். வெளியே பஸ்ஸை ஒட்டினாற் போல பைக்கில் ஒருவன்

வந்து கொண்டிருந்தான். அவன் ரகசியமாகத் தலையசைத்ததை அக்ஷய் கவனிக்கத் தவறவில்லை. அந்த பைக்கில் வருபவனும் மூன்றாவது மனிதனின் ஆள் தான் என்பதில் அக்ஷயிற்குச் சந்தேகம் இருக்கவில்லை. பஸ்ஸை விட்டு வெளியேயும் ஒருவன் வாகனத்தில் பின் தொடர்வது நல்ல சகுனமாக அவனுக்குத் தெரியவில்லை.

அதே நேரத்தில் அந்த போலீஸ்காரர்களில் ஒருவனுக்குப் போனில் தகவல் வந்தது. "அவனைக் கொன்று விடச் சொல்கிறார்கள். ஆனால் பிணம் நம் கையில் தான் கிடைக்க வேண்டும் என்கிறார்கள். முதல் காரியத்தை முடி. அடுத்ததை நாம் எல்லாரும் சேர்ந்து பின் யோசிப்போம். இப்போது எங்கே இருக்கிறீர்கள்?"

"பஸ்ஸில் இருக்கிறோம்"

"பஸ்ஸிலா?" குரலில் ஆச்சரியம்.

"ஆமாம். அவன் திடீரென்று ஓடி வந்து பஸ்ஸில் ஏறிக் கொண்டான். நாங்கள் இருவரும் ஓடி வந்து ஏறிக் கொண்டோம். அவர்கள் ஆளில் ஒருவனும் ஓடி வந்து ஏறிக் கொண்டான்".

"பஸ்ஸில் சுட்டு விடாதே. அது இன்றைய தலைப்புச் செய்தியாகி விடும். பிணத்தை நாம் எடுத்துக் கொள்வதும் கஷ்டம். கீழே

இறங்கிய பின் ஏதாவது அதிகம் ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் காரியத்தை முடி”

“சரி”

“அவன் மாய வித்தைக் காரன் என்று மேலிடம் சலிக்காமல் நினைவு படுத்துகிறது. ஒரு தடவை கண்ணில் இருந்து மறைந்து அடுத்ததாக நம் பார்வைக்கு வரும் போது ஏதாவது மாற்றம் செய்து புதிய ஆள் போல வருவானாம். ஏமாந்து விடாதீர்கள்”

“ஏமாற மாட்டோம் சார். இன்றைக்கு அவன் பிணம் நிச்சயம் உங்கள் கையில் கிடைக்கும். கவலைப்படாதீர்கள்”

**********

ஆனந்த் பொறுமையில்லாமல் காத்திருந்தான். அடிக்கடி ஃபேக்ஸ் மெஷினைப் பார்த்தான். அவனைப் போலவே மஹாவீர் ஜெயினும் பரபரப்போடு காத்திருந்தார்.

அரை மணி நேரம் முன்பு தான் அவர் ஆனந்தைத் தனது அறைக்கு அவசரமாக அழைத்தார். அவன் வந்த போது அவர் பரபரப்பாக இருந்தார்.

“என்ன சார்?”

“ஆனந்த். அன்று அமானுஷ்யன் என்ற ஒரு பெயர் சொன்னேன். ஞாபகம் இருக்கிறதா?”

”ஆமாம் சார்” ஆனந்த் மனதில் ஒருவித படபடப்பு எழுந்தது.

”மற்ற சிபிஐ யூனிட்களில் இருக்கும் என் நெருங்கிய நண்பர்கள் சிலரிடம் இந்தப் பெயரைச் சொல்லி அவர்கள் ரிகார்டுகளில் ஏதாவது இந்த பெயர் பற்றி இருக்கிறதா என்று கேட்டிருந்தேன். இப்போது சிறிது நேரத்திற்கு முன் என் மும்பை நண்பர் ஒருவர் போன் செய்து அவர்களுடைய ரகசிய ஃபைல்களில் அமானுஷ்யன் பற்றி நிறைய தகவல் இருக்கிறதாக சொன்னார். அதை அனுப்பச் சொன்ன போது என்னுடைய பர்சனல் க்ளியரன்ஸை மெயிலில் அனுப்பச் சொன்னார். அந்த அளவு ரகசியமாய் பாதுகாக்கப்படுகிறது போல தெரிகிறது. நான் மெயில் அனுப்பி இருக்கிறேன். இன்னும் சிறிது நேரத்தில் ஃபேக்ஸ் அனுப்புவதாகச் சொன்னார். சிறிது நேரத்தில் வந்து விடும். நமக்கு வேண்டிய தகவல்கள் அதில் இருக்கலாம்.”

இருவரும் காத்திருந்தார்கள். ஆனந்திற்கு ஒரு வினாடி யுகம் போல்

கழிந்தது. சிபிஐ ரிகார்டுகளில் ரகசியமாய் பாதுகாக்க வேண்டுமென்றால் அவனுடைய சகோதரன் சாதாரணமானவனாக இருக்க வாய்ப்பில்லை. அதே நேரத்தில் மிக நல்லவனாக அவன் இருந்திருக்கவும் வாய்ப்பில்லை. அந்த செய்தி அவன் வயிற்றில் புளியைக் கரைத்தது. ஆனாலும் அதே சமயத்தில் அவன் தம்பியின் கடந்த காலத்தை அவன் தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது என்பதால் ஆவலும் அவனுள் எழுந்தது.

இப்போது வரும் தகவல்களில் ஏதாவது ஒன்றாவது அவனுடைய அண்ணனாகத் தன்னை சுட்டிக் காட்டுமா என்று ஒரு கணம் எண்ணம் வந்து போனது. அப்படி இருந்தால் ஜெயினிடம் முன்பே சொல்லி விடுவது நல்லது என்று நினைத்தான். ஆனால் இந்த அலுவலகத்தில் இருந்து யாரோ உதவி செய்து தான் ஆச்சார்யாவின் கொலை நடந்துள்ளது என்ற சந்தேகம் இருக்கையில், அக்‌ஷயைக் கொலை செய்ய முயன்றவர்களுக்கும் இந்த அலுவலகத்தில் இருந்து உதவி போயிருக்க வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை. அதனால் ஜெயின் உட்பட இந்த அலுவலகத்தில் யாரிடமும் இந்த உறவை வெளியே காண்பித்துக் கொள்ளாமல் இருப்பது புத்திசாலித்தனம் என்று அறிவு எச்சரித்தது. யோசித்துப் பார்க்கையில் அக்‌ஷயின் கடந்த காலம் ஃபேக்ஸில் வரும் தகவலில் தெரியலாமே ஒழிய கடந்த காலத்தின் கடந்த காலமான அவனது மூன்று வயது வரை உள்ள வாழ்க்கையின் உறவுகள் வெளியே வர

வாய்ப்பில்லை என்பது புரிந்தது.

ஃபேக்ஸ் மெஷின் இயங்கியது. இதயத் துடிப்புகள் சம்மட்டி அடிகளாய் கேட்க ஆனந்த் வரும் தகவல்களைப் படிக்கத் தயாரானான்.

*********

ஆனந்தின் பரபரப்பை விட சிபிஐ மனிதனின் பரபரப்பு பல மடங்காக இருந்தது. அமானுஷ்யன் என்று சந்தேகிக்கும் மனிதன் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருக்கிறான் என்ற தகவல் சற்று முன் தான் வந்தது. போனில் தகவல் சொன்னவன் பஸ்ஸில் கொலை செய்ய வேண்டாம் என்றும் அவன் கீழே இறங்கிய பின் அதிக ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் கொலை செய்யலாம் என்றும் தெரிவித்ததாகச் சொன்னான்.

“சரியாகத் தான் சொன்னீர்கள். ஆனால் அவன் மாயாவி.....”

அந்த ஆள் இடைமறித்தான். ஆயிரம் தடவை கேட்ட விஷயத்தை இனியொரு முறை கேட்க அவனுக்கு விருப்பம் இல்லை. “....அதை நானும் நம் ஆட்களிடம் பல தடவை சொல்லி இருக்கிறேன். அவர்கள் இன்று பிணத்தை என் கையில் ஒப்படைப்பதாகச் சொல்லி

இருக்கிறார்கள். அப்புறம் இன்னொரு தகவல்…”

“என்னது?”

“அவர்களுடைய ஆள் ஒருவனும் பஸ்ஸில் தான் இருக்கிறான்….”

”இருக்கட்டும் விடுங்கள். இப்போதைக்கு அவர்களும், நாமும் அவன் சாக வேண்டுமென்று தான் எதிர்பார்க்கிறோம். அவர்கள் கொன்றாலும், நாம் கொன்றாலும் இரண்டு பக்கத்திற்குமே அது வெற்றி தான். சீக்கிரம் எனக்கு நல்ல செய்தி சொல்லுங்கள். நான் உங்கள் போன் காலிற்காகக் காத்திருப்பேன்”

போனை வைத்து விட்டு சிபிஐ கடிகாரத்தைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். கடிகார முள் அநியாயத்திற்கு மெதுவாக நகர்ந்தது.

## 55

அக்‌ஷய் செல் போனில் பேசிக் கொண்டிருந்த போலீஸ்காரனை ஓரக்கண்ணால் கவனித்தான். போனில் பேசிக் கொண்டிருந்த போது கூட அவன் அக்‌ஷய் மேல் வைத்திருந்த கண்களை நகர்த்தாமல் இருந்தான். பேசப் பேச அந்தப் போலீஸ்காரன் குனிந்து தன்

கால்களைத் தொட்டுப் பார்த்துக் கொண்டது போல இருந்தது. அங்கே அவன் தொட்டுப் பார்த்துக் கொண்டது துப்பாக்கியாக இருக்கலாம். அவன் யாரிடம் பேசிக் கொண்டிருந்தானோ அவன் 'ஆளை முடித்து விடு' என்று கட்டளை இட்டிருக்க வாய்ப்பு இருப்பதாக அக்‌ஷயிற்குத் தோன்றியது. இன்னொரு போலீஸ்காரன் போனில் பேசும் தன் சகாவையும் அக்‌ஷயையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தான். தீவிரவாதியும் அக்‌ஷய் மேல் வைத்திருந்த கண்களை அகற்றவில்லை.

ஒரு ஸ்டாப்பில் ஒரு பெரிய கூட்டமே பஸ்ஸில் முண்டியடித்துக் கொண்டு ஏறியது. உட்கார இடமில்லாமல் நெருக்கமாக பலர் நின்று கொண்டு பயணிக்க மறுபுறம் அமர்ந்திருந்த அக்‌ஷயைக் கண்காணிப்பதில் போன் பேசிய போலீஸ்காரனுக்குச் சிரமமாய் இருந்தது. அவனுடைய சகா அக்‌ஷயிற்குப் பின்னால் மூன்றாவது வரிசை சீட்டில் அமர்ந்து கொண்டு இருந்தான். தீவிரவாதி இரண்டாவது வரிசை சீட்டில் அமர்ந்து கொண்டிருந்தான். அவர்கள் இருவரும் அக்‌ஷயை நன்றாகவே கண்காணிக்க முடியும் என்றாலும் போனில் பேசிய போலீஸ்காரன் அக்‌ஷய் தன் நேரடிப் பார்வையில் இருப்பது தான் நல்லது என்று நினைத்தவனாய் எழுந்து அக்‌ஷய் அருகில் வரப் பார்த்தான்.

அப்போது பஸ் ஒரு சிக்னலில் நிற்க அக்‌ஷய் மின்னல் வேகத்தில்

அந்தக் கூட்டத்தில் தனக்கு வழி செய்து கொண்டு பஸ்ஸில் இருந்து இறங்கினான். அவன் திடீரென்று இறங்குவான் என்று எதிர்பார்க்காத மூவரும் ஒரு கணம் திகைத்து அமர்ந்திருந்து விட்டு கூட்டத்தைத் தள்ளி விலக்கிக் கொண்டு பஸ்ஸில் இருந்து இறங்க முற்பட்டார்கள். தீவிரவாதி தன் அவசரத்தில் ஒரு கிழவி காலை மிதித்து விட கிழவி தான் அறிந்த அத்தனை கெட்ட வார்த்தைகளையும் பயன்படுத்தி அவன் மீது வசைமாரி பொழிய ஆரம்பித்தாள். எப்படியோ மூன்று பேரும் கஷ்டப்பட்டு உடனடியாக இறங்கி விட்டார்கள். காலை மிதித்தவன் முழு வசவுகளையும் கேட்காமல் இறங்கினதில் அந்தக் கிழவிக்கு வருத்தம்.

அக்‌ஷய் வேகமாக தெருவைக் கடந்து அங்கு இருந்த சுரங்கப் பாதையில் இறங்கி வேகமாக நடந்தான். அவனைப் பார்வையில் இருந்து அகன்று விட அனுமதிக்கக்கூடாது என்ற எண்ணத்தில் மூவரும் ஓட்டமாய் அவன் பின் ஓடினார்கள். ஆனாலும் அக்‌ஷய் வேகமான நடையில் இருந்தானே ஒழிய ஓட முற்படவில்லை. சுரங்கப்பாதையில் இறங்கி அவர்கள் பார்வையில் இருந்து அவன் மறைந்தான்.

தீவிரவாதி உடனடியாக செல்போனை அழுத்தினான். தாங்கள் இருக்கும் இடத்தையும் அந்த சுரங்கப் பாதையில் அவன்

இறங்கியதையும் சொன்ன அவன் சுரங்கப் பாதையின் மறுபக்க வாயிலுக்கு ஆட்களைச் சேரச் சொன்னான். அதையேதான் போலீஸ்காரனும் செய்தான். பைக்கில் வந்து கொண்டிருந்த மற்ற தீவிரவாதியும் இவர்களுடன் வந்து சேர்ந்தான். சுரங்கப்பாதையில் இந்தப் பக்கம் நான்கு பேர் இறங்க, அதன் இன்னொரு வாயிலில் உடனடியாக இரண்டு தீவிரவாதிகளும், இரண்டு போலீஸ்காரர்களும் வந்து சேர்ந்தார்கள். இரு பக்கத்தினரும் கைகளில் துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டு தயார் நிலையில் இருந்தனர்.

சுரங்கப் பாதையில் அக்‌ஷய் வெளிச்சம் குறைவான இடத்தில் ஒரு கணம் நின்றான். சுரங்கப் பாதையில் ஒரு சில ஆட்களே நடந்து கொண்டிருந்தார்கள். பின்னால் ஓடி வரும் காலடிகளின் ஓசை கேட்டது. தன் கையில் வைத்திருந்த அந்தப் புத்தகங்கள் அடங்கிய கருப்பு சூட்கேஸைக் கீழே வைத்து சிலை போல் நின்று யோசித்தான்.

**********

ஃபேக்ஸில் வந்து கொண்டே இருந்த நீண்ட காகிதக் கற்றையைப் பார்த்து ஆனந்தும், மஹாவீர் ஜெயினும் திகைத்தனர்.

"நம் ஆள் மும்பையில் இவ்வளவு பிரபலமானவனாய் இருப்பான் என்று நான் நினைக்கவில்லை." என்று ஜெயின் ஆச்சரியப்பட்டார்.

ஆனந்த் மனக் கொந்தளிப்பில் ஒன்றும் சொல்லவில்லை. ஃபேக்ஸ் மெஷின் தன் வேலையை முடித்தவுடன் இருவரும் சேர்ந்து அந்த தகவல்களைப் படிக்க ஆரம்பித்தனர். இருவரும் காலத்தையும் தங்களையும் மறந்து போனார்கள் என்றே சொல்ல வேண்டும். ஒரு சுவாரசியமான வித்தியாசமான கதையைப் படிப்பது போல் இருந்தது.

படித்து முடித்த பின் ஜெயின் சொன்னார். "இவன் ஒன்றும் வெடிகுண்டு வைக்கிற தீவிரவாதி அல்ல. பின் ஏன் இவனை இவர்கள் அப்படி விளம்பரப் படுத்தினார்கள்."

ஆனந்த் ஒன்றும் சொல்லவில்லை. அவனால் பேச முடியவில்லை. அமானுஷ்யன் என்பது அக்‌ஷயிற்கு மிகப் பொருத்தமான பெயர் என்பதில் சந்தேகம் இல்லை. படித்ததை எல்லாம் பார்க்கும் போது அவன் மீது எதிரிகளுக்கு பயம் எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்று புரிந்தது. அவனைப் போன்றவன் பகையாக மாறினால் ஒருவனால் அவனை அழிக்கும் வரை நிம்மதியாக இருக்க முடியாது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் இன்று அதிகார வர்க்கமே அவனுக்கு எதிரியாக இருக்கிறதால் அவன் நிலைமை

கேள்விக்குரியது தான் என்று நினைக்கையில் மனதை ஏதோ பலமாக அழுத்தியது.

இத்தனை பக்கங்களில் அவன் பழைய சரித்திரம் எல்லாம், கிட்டத்தட்ட மூன்று வருடங்களுக்கு முன்பு வரை தெரிந்து விட்டது. ஆனால் அதற்குப் பிறகு அவனைப் பற்றிய தகவல்கள் இதில் இல்லை. அதற்குப் பிறகு அவன் என்ன செய்தான் என்பதில் தான் இப்போதைய கேள்விகளுக்கான விடை இருக்கிறது. ஆச்சார்யாவை அவன் எப்படி சந்தித்தான், அவருக்காக அவன் என்னவெல்லாம் செய்து தந்தான், இப்போதைய சிக்கலில் ஆச்சார்யாவும் இவனும் எப்படிச் சிக்கினார்கள், இவர்களது எதிரிகள் யார் என்ற கேள்விகளுக்கு இப்போதும் பதில் இல்லை.

ஆனந்த் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த மஹாவீர் ஜெயினுக்கு இந்த அமானுஷ்யனைப் பற்றிய தகவல்கள் ஆனந்தை மிகவும் பாதித்திருப்பது போல் தெரிந்தது. ஆனால் ஏன், எப்படி என்பது தான் தெரியவில்லை. ஆனந்த் எதையோ சொல்லாமல் மறைக்கிறான் என்று எண்ணிய மஹாவீர் ஜெயின் அதைப் பற்றி நேரடியாகவே அவனிடம் கேட்க நினைத்தார். ஆனால் பின் தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டார். சொல்லக் கூடாது என்று அவன் தீர்மானித்திருந்தால் அதை அவன் எக்காரணத்தை வைத்தும் சொல்லக் கூடியவன் அல்ல என்று இந்த சில நாள் பழக்கத்தில்

அறிந்திருந்ததால் கேட்காமல் இருந்து விட்டார். ஆனாலும் பொதுவாக அவனிடம் கேட்டார். "ஆனந்த், நீங்கள் அமானுஷ்யனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

ஆனந்த் உண்மையைச் சொன்னான். "இந்த தகவல்கள் எல்லாம் நம் மும்பை ஆபிசில் இருந்து வந்திருக்கா விட்டால் நான் இதை உண்மை என்று நம்பியிருக்க மாட்டேன்"

"நானும் தான். அவனை ஒரு தடவை நான் நேரில் பார்க்க வேண்டும் என்று தோன்றுகிறது ஆனந்த். உங்களுக்கு அப்படித் தோன்றவில்லையா?"

உண்மையாகவே இப்போது உடனடியாக அக்ஷயைப் பார்க்க வேண்டும் என்று ஆனந்திற்கு இருந்தது. அவனிடம் மூன்று வருடங்கள் முன்பு வரை உன் சரித்திரம் இதுதான் என்று சொல்ல வேண்டும் என்று எல்லாவற்றையும் ஆனந்த் சொல்லத் துடித்தான். 'ஒரு வேளை இந்தத் தகவல்கள் எல்லாம் அவன் தெரிந்து கொண்டால், கூடவே அவனுக்கு இதன் தொடர்ச்சி நினைவுகள் வந்தாலும் வரலாம்' என்ற எண்ணம் அவனுக்கு வர அவனுக்கு இருப்பு கொள்ளவில்லை.

மஹாவீர் ஜெயின் தன் பதிலுக்காகக் காத்திருக்கிறார் என்பது அவர்

முகத்தைப் பார்த்தவுடன் அவனுக்கு திடீரென்று உறைக்க சொன்னான். "எனக்கும் அப்படித் தான் தோன்றுகிறது சார்"

அவன் மீது வைத்த கண்களை எடுக்காமல் மஹாவீர் ஜெயின் கேட்டார். "இந்த அமானுஷ்யனுக்கும் ஆச்சார்யா கேஸிற்கும் ஏதாவது தொடர்பு இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா ஆனந்த்"

ஆனந்த் மிகக் கவனமாகப் பதில் சொன்னான். "இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம் சார். ஆனால் இருக்கலாம் என்கிற கோணத்தில் நாம் விசாரித்துப் பார்ப்பது நல்லது"

பின் மெல்ல அந்த காகிதக் கற்றையைத் தன் பக்கம் இழுத்து அமானுஷ்யனின் மும்பை வீட்டு முகவரி மற்றும் டெலிபோன் எண்ணை எழுதிக் கொண்டான்.

'அந்த வீட்டில் தற்போது யாருமே இருக்க வாய்ப்பில்லை என்றாலும் அந்த வீட்டில் அவனுடைய கடந்த மூன்றாண்டுகள் பற்றிய விவரங்கள் இருக்க வாய்ப்பு இருக்கிறது' என்று தோன்றியது.

உயிருக்கு ஆபத்து பின் தொடர்ந்து கொண்டு இருக்கும் அந்தக் கட்டத்தில் அசையாமல் நிற்பது புத்திசாலித்தனம் அல்ல தான். ஆனால் அக்‌ஷய் நின்றான். என்றோ அவனுக்கு யாரோ சொல்லி இருந்திருக்கக் கூடிய அந்த சொற்கள் அவன் மனதில் எதிரொலித்தது.

"என்ன செய்வது என்று குழப்பமாக இருக்கும் கட்டங்களில் எதுவும் செய்யாதே. சும்மாயிரு. சும்மா இருப்பதால் ஏதேதோ விபரீதம் நடந்து விடலாம் என்று உனக்குத் தோன்றலாம். ஆனால் சும்மா அமைதியாய் இருக்கும் போது உனக்குள்ளே ஒரு தீர்வு அல்லது தெளிவு கண்டிப்பாய் பிறக்கும்"

அவன் அந்த வார்த்தைகளில் ஒன்றிப் போய் அப்படியே அசையாமல் நின்ற போது அந்த சுரங்கப்பாதையில் அரையிருட்டில் மறைவாக நின்று கொண்டு இருந்த ஒரு இளைஞன் மின்னல் வேகத்தில் ஓடி வந்து அக்‌ஷயின் அந்த கருப்பு சூட்கேஸை எடுத்துக் கொண்டு முன்னால் ஓடினான்.

அக்‌ஷய் திகைத்துப் போய் அவனைப் பார்த்தபடி அப்படியே ஒரு கணம் நின்ற பின் வேகமாக அந்த அரையிருட்டில் சுவர் ஓரமாக நகர்ந்து நின்றான். அதே நேரத்தில் அக்‌ஷயைப் பின் தொடர்ந்து வந்தவர்கள் சூட்கேஸோடு ஓடும் அந்த இளைஞனைப் பின்

தொடர்ந்து ஓடினார்கள். கிட்டத்தட்ட அக்‌ஷயின் வயதும், உடல்வாகும் இருந்த அந்த இளைஞனிடம் கருப்பு சூட்கேஸும் இருந்ததால் முன்னால் ஓடும் அவனையே அக்‌ஷய் என்று அவர்கள் எண்ணினார்கள்.

அதில் ஒரு போலீஸ்காரன் மட்டும் ஒரு மாற்றத்தைக் கண்டு பிடித்து சொன்னான். "அவன் ஷர்ட்டிற்கு மேல் ஏதோ ரெயின் கோட் போட்டு இருக்கிறான்"

அதற்கு மற்ற போலீஸ்காரன் சொன்னான். "அவன் ஒரு மாயாவி என்ன வேண்டுமானாலும் செய்வான், எப்படி வேண்டுமானாலும் தோற்றத்தை மாற்றிக் கொள்வான் என்று சொல்லி இருக்கிறார்கள். அவன் இனி அந்த சூட்கேஸை எங்காவது எறிந்து விட்டுப் போனாலும் போகலாம். இப்படியே ஏதாவது மாற்றங்கள் செய்து கொண்டே போய் வேறு ஆளாய் அந்தப் பக்கம் மேலே வரும் போது இருப்பான். ஜாக்கிரதையாய் இருங்கள்"

அவன் அப்படிச் சொன்னது அந்த தீவிரவாதிகள் இருவருக்கும் கூட சரியென்றே பட்டது. போலீஸ்காரனும், தீவிரவாதியும் சுரங்கப் பாதையின் மறுபக்கத்தில் வந்து நின்றிருந்த தங்கள் சகாக்களுக்கு சூட்கேஸோடு ஓடி வரும் அமானுஷ்யனைப் பற்றி செல் போனில் அவசரமாகச் சொன்னார்கள்.

சுரங்கப்பாதையின் மறுபக்கம் துப்பாக்கிகளோடு நின்றிருந்தவர்கள் கருப்பு சூட்கேஸோடு படிகளில் ஓடி வரும் அந்த இளைஞனைக் குறிபார்த்து சுட்டார்கள். அந்த இளைஞனின் மார்பிலும், வயிற்றிலும் துப்பாக்கி ரவைகள் சரமாரியாக நுழைந்தன. ஒரு துப்பாக்கி ரவை அவன் கன்னத்தைத் துளையிட்டது. அவன் அலறிக் கொண்டே படிகளில் பின்னோக்கி சாய்ந்தான். அங்கிருந்த மக்களில் சிலர் அலறினார்கள். பலரும் அங்கு வந்து சேர்வதற்குள் அவசர அவசரமாக பின்னால் ஓடி வந்த நால்வரும் துடித்துக் கொண்டிருந்த அவன் உடலைத் தூக்கினார்கள். எங்கிருந்தோ வேகமாக வந்து சேர்ந்த ஒரு ஆம்புலன்ஸில் உடலைத் தூக்கிப் போட்டார்கள். நான்கு பேரும் அதில் ஏறிக் கொண்டார்கள். ஆம்புலன்ஸ் பறந்தது. சுட்டவர்கள் அந்த கருப்பு சூட்கேஸை வாரி எடுத்துக் கொண்டு ஒரு டாக்ஸியில் ஏறி வேகமாக அந்த ஆம்புலன்ஸைப் பின் தொடர்ந்தார்கள்.

சில நிமிடங்களில் அக்‌ஷய் நிதானமாக நடந்து அங்கு வந்து சேர்ந்த போது இப்படி எல்லாம் நடந்திருக்கிறது என்பதற்கு சாட்சியாகப் படிகளில் படிந்திருந்த ரத்தக்கறைகள் மட்டுமே இருந்தது. யாரோ போலீஸிற்குப் போன் செய்தார்கள். அங்கிருந்த மக்கள் அவர்களுக்குள் பரபரப்பாகப் பேசிக் கொண்டார்கள். அக்‌ஷயிடம் ஒரு பெரியவர் அங்கலாய்த்துக் கொண்டார். "காலம் ரொம்பவும்

கெட்டுப் போய் விட்டது. கலி முற்றி விட்டது. அதற்கான அறிகுறி தான் இதெல்லாம்".

தலையாட்டிய அக்‌ஷய் அங்கிருந்து அமைதியாக நடக்க ஆரம்பித்தான். இறந்து போன இளைஞனுக்காக அவன் மனம் வேதனைப்பட்டது.

**********

சிபிஐ மனிதன் இசைக்கும் செல் போனை பரபரப்புடன் எடுத்தான். "ஹலோ"

"சார் அவனை சுட்டு விட்டோம்"

சிபிஐ மனிதனுக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை. "உடல்..."

"உடலை ஒரு ஆம்புலன்ஸில் வைத்து போய்க் கொண்டு இருக்கிறோம். அவர்களும் எங்களுடன் தான் இருக்கிறார்கள். உடல் எங்களுக்கு வேண்டும் என்றால் அவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டேன்கிறார்கள். உடல் அவர்களுக்கு வேண்டுமாம்"

சிபிஐ மனிதன் பற்களைக் கடித்துக் கொண்டு சொன்னான். "காட்டு

மிராண்டிகள். சொன்னால் கேட்க மாட்டார்கள். சரி விடுங்கள். நீங்கள் இறங்கிக் கொள்ளுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்"

அவர்களிடம் பேசி முடித்த சிபிஐ மனிதன் மந்திரியிடம் உடனடியாகப் பேசித் தகவலைத் தெரிவித்தான். மந்திரிக்கு சந்தோஷம் தாங்கவில்லை. "என் வயிற்றில் பால் வார்த்தீர்கள்"

சிபிஐ மனிதன் சொன்னான். "ஆனால் அவன் உடலை அவர்கள் தரமாட்டேன்கிறார்கள். அவர்களுக்கு வேண்டுமாம்"

"விடுங்கள். அந்த சனியன்கள் என்னவோ செய்து கொண்டு போகட்டும்"

"இல்லை. அந்த உடலை நாம் நம் கண்ணால் பார்த்தால் தான் நமக்கு உறுதியாய் சொல்ல முடியும். நாம் சந்தேகத்தின் பேரில் தான் அந்த புஸ்தக சேல்ஸ்மேனைக் கொல்லச் சொன்னோம். அவன் அமானுஷ்யனாகவே இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை"

மந்திரிக்கு அது எச்சரிக்கை மணி அடித்தது. "நீங்கள் சொல்வதும் சரிதான். அவன் விஷயத்தில் நாம் நேராகப் பார்க்காமல் எதையும் சொல்ல முடியாது.

சரி...நாம் இரண்டு பேரும் நேரடியாக அந்த உடலை அவர்கள் இடத்திலேயே போய் பார்ப்போம்"

சிபிஐ மனிதன் அந்த தீவிரவாதிகள் பார்வையில் பட விரும்பவில்லை. மிகவும் பாதுகாப்பாகவே இயங்கும் அவன் அந்த தீவிரவாதிகளும் தன்னை அறியத் தேவையில்லை என்று நினைத்தான். மந்திரியிடம் சொன்னான். "நான் அங்கெல்லாம் வரவில்லை. நீங்களே போங்கள். இல்லாவிட்டால் உங்களுக்கு நம்பிக்கையான ஆள் யாரையாவது அனுப்புங்கள். அவன் முதுகின் மேல்பக்கத்தில் நாக மச்சம் இருக்கிறதா என்று உறுதி செய்து விட்டுச் சொல்லுங்கள்"

*********

ஆனந்த் தன் ஓட்டல் அறைக்கு வரும் போது வழக்கமான கண்காணிப்பாளர்களைக் கவனிக்கத் தவறவில்லை. இந்த அளவிற்குக் கண்காணிப்பாளர்களை வைத்துக் கொண்டு இவர்களுக்குத் தெரியாமல் தம்பியிடம் பேசுவது எப்படி என்று குழம்பினான். செல் போனில் அவன் தங்கி இருக்கும் ஓட்டலுக்கு தொடர்பு கொண்டு பேசுவது கூட ஆபத்தானது என்றும் தோன்றியது.

பின் ஒரு யோசனை தோன்ற ஒரு காகிதத்தில் "உன் விலாசம், உன் போன் நம்பர்" என்று எழுதி அதற்கு நேராக அவன் விலாசத்தையும் போன் நம்பரையும் எழுதினான். இது போல் வேறு தகவல்களும் கிடைத்திருக்கின்றன. முடிந்தால் என்னிடம் எப்படியாவது பேசு என்று அதற்குக் கீழே எழுதினான். அந்தக் காகிதத்தை மடித்து உறையில் இட்டு அந்த உறையை ஒட்டினான். உறையில் அக்‌ஷய் தங்கி இருக்கும் ஓட்டல் பெயர், அறை எண் எல்லாம் எழுதினான்.

பின் ரிசப்ஷனுக்குப் போன் செய்து "ஒரு காபி ப்ளீஸ்" என்றான்.

ஐந்து நிமிடத்தில் ஒரு ரூம் பாய் அவனுக்குக் காபி கொண்டு வந்தான். அவன் தான் பெரும்பாலும் அவன் அறைக்கு அதிகம் வருபவன். போன வாரம் தான் அவன் பெயரைக் கேட்டு வைத்திருந்தான். பெயர் பவன்குமார். வயது சுமார் இருபதுக்குள் இருக்கும்.

"பவன் எனக்கு ஒரு சின்ன உதவி செய்ய முடியுமா?" ஆனந்த் கேட்டான்.

"சொல்லுங்கள் சார்"

அந்த உறையை அவனிடம் காட்டி ஆனந்த் சொன்னான். "இந்த

ஓட்டலில் என் நண்பன் தங்கி இருக்கிறான். அவனிடம் முக்கியமாய் இந்த லெட்டரைத் தர வேண்டி இருக்கிறது. அவனிடம் சேர்த்து விட முடியுமா?"

"அவசரமா சார். எனக்கு ஏழு மணிக்கு தான் டியூட்டி முடிகிறது. அப்போது போய் கொடுத்தால் போதுமா"

"போதும். அவன் அறையில் இருந்தால் அவனிடம் நேராகக் கொடுத்து விடு. இல்லா விட்டால் ஓட்டல் ரிசப்ஷனில் அவன் வந்தவுடன் கொடுக்கச் சொல். செய்வாயா"

"கண்டிப்பாக சார்"

அந்த உறையுடன் ஒரு நூறு ரூபாய் தாளையும் சேர்த்து ஆனந்த் தர பவன் குமார் முகத்தில் ஒரே சந்தோஷம். மிக அருகில் இருக்கும் ஓட்டல் ஒன்றிற்கு போய் தருவதற்கு நூறு ரூபாயா என்று எண்ணி மகிழ்ந்தபடி வாங்கிக் கொண்டான். "தேங்க்ஸ் சார்" என்றான்.

'இதைப் பற்றி வேறு யாரிடமும் நீ எதுவும் சொல்ல வேண்டாம் சரியா"

இந்த வேலையில் ரகசியம் தான் முக்கியம் என்பதை உணர்ந்த

பவன்குமார் அந்த உறையை பத்திரமாகத் தன் பேண்ட் பாக்கெட்டினுள் வைத்துக் கொண்டான்.

"யாரிடமும் இதைப் பற்றி வாயே திறக்க மாட்டேன் சார். கொடுத்து விட்டு உங்களிடம் அப்போதே வந்து சொல்லணுமா சார். இல்லை, நாளைக்கு டியூட்டிக்கு வரும் போது சொன்னால் போதுமா சார்"

"நாளை சொன்னால் போதும்"

பவன் குமார் நகர்ந்தான்.

57

டெல்லி புறநகர்ப்பகுதியில் இருந்த ஒரு தோட்டத்திற்குள் அந்த மத்திய மந்திரியின் கார் மிக வேகமாக நுழைந்தது. அவர் காரிலிருந்து இறங்கும் போது குறுந்தாடிக்காரன் அவருக்கு வணக்கம் கூறி வரவேற்றான். தன் காருக்கு முன்னால் நின்றிருந்த ஆம்புலன்ஸைக் கவனித்த மந்திரி "பிணம் எங்கே?" என்று கேட்டார்.

"ஆம்புலன்ஸில் இருந்து இன்னும் எடுக்கவில்லை. உங்கள் போலீஸ்காரர்கள் நீங்களோ, போலீஸ் உயர் அதிகாரிகளோ

வராமல் பிணத்தை நகர்த்தக் கூடாது என்று பிடிவாதமாக நிற்கிறார்கள். அரை மணி நேரமாகி விட்டது...."

அப்போதுதான் மாற்றுடையில் இருந்த சில போலீஸ்காரர்களை மந்திரி கவனித்தார். அவர்கள் அவருக்கு சல்யூட் அடிக்க அவர் தலையசைத்தார்.

குறுந்தாடி ரகசியமாக அவர் காதில் சொன்னான். "எங்கள் முக்கியமான ஆட்கள் இங்கே வந்து அவன் பிணத்தைப் பார்க்க வேண்டும் என்று அவசரப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உங்கள் போலீஸ்காரர்கள் இருக்கும் போது தலையைக் காட்ட தயக்கப்படுகிறார்கள்."

மந்திரி சொன்னார். "அவன் அமானுஷ்யன் தானா என்று ஒரு தடவை பார்த்து உறுதியாகி விட்டால் பின் நானும் போய் விடுகிறேன். அவர்களும் போய் விடுவார்கள். ஆமாம் அந்தப் பிணம் உங்களுக்கு எதற்கு?"

"அந்தப் பிணம் தான் எங்களுக்கு வீரப்பதக்கம் மாதிரி"

மந்திரி சொன்னார். "அந்தப் புத்தக சேல்ஸ்மேன் அமானுஷ்யனாக இருக்க வேண்டும் என்று கட்டாயமில்லையே. நீங்களாவது அவன்

தானா என்று பிணத்தைப் பார்த்து உறுதி செய்து விட்டீர்களா?"

"இல்லை. நானும் இப்போது தான் வந்தேன். பஸ்ஸில் ஏறிய விதமும், இறங்கிய விதமும், டிமிக்கி கொடுத்து விட்டு ஓடிய விதமும் ஒரு அப்பாவி சேல்ஸ்மேனுடையதாக இருக்கவில்லை. கண்டிப்பாக அவன் அமானுஷ்யன் தான்"

மந்திரிக்கு அவன் சொன்னதில் அர்த்தம் இருப்பதாகப் பட்டது. "சரி சீக்கிரம் அவன் முகத்தையும் நாக மச்சத்தையும் காண்பியுங்கள். பார்த்து விட்டு நான் போய் விடுகிறேன். பிறகு நீங்கள் அந்தப் பிணத்தைக் கட்டி அழுங்கள்."

"நாங்கள் எப்போதும் பிணத்தைக் கட்டி அழுவதில்லை"

மந்திரி அவனுக்கு பதில் எதுவும் சொல்லவில்லை. "சரி பிணத்தைப் பார்க்கலாம்."

குறுந்தாடி தன் ஆட்களுக்குக் கட்டளையிட்டான். "பிணத்தை வெளியே எடுத்து வையுங்கள்."

போலீஸ்காரர்கள் மந்திரியைப் பார்க்க மந்திரி தலையசைக்க அவர்கள் குறுக்கிடாமல் நின்றார்கள். குறுந்தாடி மனிதனின் ஆட்கள்

ஆம்புலன்ஸில் இருந்து ஸ்ட்ரெச்சரோடு பிணத்தை வெளியே கொண்டு வந்தார்கள். மேலே வெள்ளைத் துணி போர்த்தப்பட்டிருந்தது.

குறுந்தாடிக்காரன் அந்த வெள்ளைத் துணியை லேசாக விலக்கிப் பார்த்தான். பார்த்த அந்தக் கணமே அருவறுப்பில் முகத்தைத் திருப்பிக் கொண்டான். கன்னத்தில் துளைத்திருந்த துப்பாக்கி ரவை முகத்தை பார்க்கவே சகிக்காதபடி குரூரமாக ஆக்கி இருந்தது. முகத்தைப் பார்த்து அவனை அடையாளம் காண்பது முடியாத காரியமாகத் தோன்றியது.

"என்ன?" என்று கேட்டபடி அருகில் வந்த மந்திரி தானும் அந்த கோர முகத்தைக் கண்டு அருவறுப்புடன் பின்னால் நகர்ந்தார். "முகத்தை நீங்கள் பார்க்காதீர்கள். கழுத்திற்குக் கீழே நாக மச்சம் இருக்கிறதா என்று பாருங்கள்"

குறுந்தாடி சைகை காண்பிக்க அவனுடைய ஆள் ஒருவன் முன் வந்து பிணத்தைப் புரட்டிப் போட்டு விட்டு ரெயின் கோட்டையும், சட்டையையும் கீழிறக்கினான். கழுத்தும் முதுகும் துப்பாக்கி காயங்களுடன் ரத்தத்தால் நனைந்து சிவந்திருந்தது. ஒரு ஈரத்துணியால் அவன் துடைத்துக் காட்டினான். காயங்கள் இருந்தனவே ஒழிய நாக மச்சம் இருக்கவில்லை.

குறுந்தாடியும், மந்திரியும் பேயறைந்தது போல ஆனார்கள். இருவருக்கும் பேச வார்த்தைகள் எழவில்லை. கடைசியில் பேச முடிந்தது மந்திரியால் தான். "இவன் அவன் அல்ல" அவர் குரல் பலவீனமாக ஒலித்தது.

குறுந்தாடி முகத்தில் அடக்க முடியாத கோபம் தெரிந்தது. அவன் அமானுஷ்யனைப் பின் தொடர்ந்த தன் ஆட்களைப் பார்த்தான். அவர்கள் இருவரும் வந்து பிணத்தை மறுபடி மல்லாக்காகப் படுக்க வைத்து பார்த்தார்கள். ஈரத்துணியால் பிணத்தின் கழுத்து, முதுகுப் பகுதியைத் துடைத்தவன் முகத்தில் சிதிலமாகாத பகுதியின் ரத்தக்கறையையும் துடைத்துக் காட்டினான்.

அவர்கள் மெதுவாகச் சொன்னார்கள். "நாங்கள் பின் தொடர்ந்த ஆள் இவன் அல்ல"

அமானுஷ்யனைப் பின் தொடர்ந்த போலீஸ்காரர்கள் இருவர்களும் திகைப்புடன் முன் வந்து பிணத்தைப் பார்த்து அதையே சொன்னார்கள்.

குறுந்தாடி கத்தினான். "அந்த சூட்கேஸைக் கொண்டு வாருங்கள்"

இருவர் அந்த சூட்கேசைக் கொண்டு வந்து திறந்து காட்டினார்கள். அதனுள் யோகா புத்தகங்கள் இருந்தன.

அதற்குள் மந்திரி போன் செய்து சிபிஐ மனிதனிடம் சோகச் செய்தியைச் சொன்னார். சிபிஐ மனிதன் சொன்னான். "அவர்கள் பின் தொடர்ந்தது அமானுஷ்யனைத் தான். அந்தச் சுரங்கப்பாதைக்குள் அவன் போகும் வரை சரியாகத் தான் பின் தொடர்ந்திருக்கிறார்கள். ஆனால் உள்ளே போனவன் மறைந்து விட்டான். அவனுடைய சூட்கேஸோடு சுரங்கப்பாதையின் மறுபக்கம் ஓடி வந்தவன் வேறு யாரோ. அப்படியானால் அமானுஷ்யன் இந்த ஆளை நம் ஆட்கள் கொண்டு வந்த பிறகு நிதானமாய் அந்த சுரங்கப்பாதையை விட்டு வெளியே வந்திருக்க வேண்டும்"

மந்திரி சொன்னார். "அவனுக்கு அமானுஷ்யன்னு பெயர் வைத்தவன் வாயிற்கு சர்க்கரை போட வேண்டும்.". இதைக் கேட்டு குறுந்தாடி மந்திரியை முறைத்தான்.

சிபிஐ மனிதன் சொன்னான். "முதலில் இப்போது செத்தவன் யார் என்று கண்டு பிடிக்க முடிகிறதா பாருங்கள். அவன் பாக்கெட்டுகளில் என்ன எல்லாம் இருக்கின்றன என்பதை நம் போலீசாரை விட்டுப் பார்க்கச் சொல்லுங்கள்." போனை வைத்த

சிபிஐ மனிதன் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தான்.

*****

அக்‌ஷய் அன்றைய நிகழ்ச்சிகளை எப்படி ஆனந்திடம் தெரிவிப்பது என்று யோசித்துக் கொண்டு இருந்த போதுதான் பவன்குமார் அவனிடம் வந்து ஆனந்த் தந்த உறையைத் தந்தான். அவனைப் பார்த்தவுடனேயே அவன் ஆனந்த் தங்கி இருக்கும் ஓட்டலில் வேலை செய்யும் ரூம்பாய் என்று அக்‌ஷய் அடையாளம் கண்டு கொண்டான். உறையைத் தந்து விட்டு திரும்பிப் போக யத்தனித்த பவன்குமாரிடம் அக்‌ஷய் சொன்னான். "ஐந்து நிமிடம் இருந்து விட்டுப் போகிறாயா?"

பவன் குமார் சரியென்று தலையசைக்க அக்‌ஷய் அவனை அங்கிருந்த நாற்காலியில் உட்காரச் சொல்லி விட்டு உறையைப் பிரித்துப் பார்த்தான்.

ஆனந்த் எழுதியிருந்ததைப் படித்த அக்‌ஷய் உள்ளே பரபரப்படைந்தாலும் வெளியே அமைதி மாறாமல் இருந்தான். ஒரு கணம் யோசித்து விட்டு பவன்குமாரிடம் அவன் கேட்டான். "உன் வீடு எங்கிருக்கின்றது? விலாசம் தர முடியுமா? நான் ஆனந்திற்கு ஏதாவது தெரிவிக்க வேண்டி வந்தால் உன் வீட்டிற்கு வந்து

தருகிறேன்."

பவன்குமார் தன் வீட்டு விலாசம் சொன்னான். அக்ஷய் அவன் வீட்டில் இருக்கக் கூட்டிய நேரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டான். பின் அவனும் ஒரு நூறு ரூபாய் தாளைத் தர பவன்குமார் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது. "நன்றி சார்" என்று கூறி அவன் விடை பெற்றான்.

அக்ஷய் அவன் போய் கால் மணி நேரம் கழித்து வெளியே போய் ஒரு எஸ்டிடி பூத்தில் இருந்து ஆனந்த் எழுதியிருந்த மும்பை எண்ணிற்குப் போன் செய்தான்.

அந்த எண்ணிற்கு டெல்லியில் இருந்து கால் வருவது அறிந்தவுடன் மும்பை டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் ஒரு மனிதன் பரபரப்பானான். இனி பேசப்போகும் பேச்சை டேப் செய்யத் தயாரானான்.

58

போன் மறுபக்கம் அடித்துக் கொண்டே இருந்தது. யாரும் எடுப்பதாகத் தெரியவில்லை. அக்ஷய் ஒருவித பரபரப்புடன் காத்திருந்தான். கடைசியில் யாரோ எடுத்தார்கள்.

"ஹலோ..." - மூச்சு வாங்கியபடி ஒரு ஆண் குரல் கேட்டது.

"ஹலோ" என்றான் அக்‌ஷய்.

அவன் குரல் கேட்டவுடன் மகிழ்ச்சி பொங்க மறுபக்கத்தில் போன் எடுத்த வயதான மனிதர் சொன்னானர். "அக்‌ஷய்....."

அந்தக் குரலைக் கேட்டவுடன் அவனை அறியாமலேயே அக்‌ஷய் சொன்னான். "பீம்சிங்..."

"ஏன் அக்‌ஷய் இவ்வளவு நாளாய் போன் செய்யவில்லை.? நன்றாகத் தானே இருக்கிறாய்?"

அந்தப் பெயர் ஞாபகம் வந்தது போல அக்‌ஷயிற்கு வேறு எதுவும் ஞாபகம் வரவில்லை. அக்‌ஷய் கவனமாய் பொதுவாகப் பேசினான். "நான் நன்றாகத் தான் இருக்கிறேன். அங்கே...?"

"இங்கே நான் எமன் எப்போது ஓலை அனுப்புவான் என்று காத்திருக்கிறேன். எனக்கு வயது எழுபதாகி விட்டது. இனி என்ன எனக்கு ஆக வேண்டி இருக்கிறது சொல் பார்க்கலாம். உனக்கு கல்யாணம் ஆனால் உன் மகனைப் பார்த்து விட்டுப் போகலாம் என்றிருக்கிறேன். நீ என்னடா என்றால் அந்த புத்த சாமியார்களிடம்

பழகி பழகி சாமியாராகியே விடுவாயோ என்று எனக்கு பயமாக இருக்கிறது. வீட்டு ஞாபகமே உனக்கு வருவதுமில்லை. இந்தப் பெரிய வீட்டை பார்த்துக் கொள்ள என்னால் முடியவில்லை......

பீம்சிங் என்ற அந்த மனிதர் இடைவெளி விடாமல் பேசிக்கொண்டே போனார். பேச்செல்லாம் அக்ஷய் சீக்கிரம் கல்யாணம் செய்து கொண்டு செட்டில் ஆகி விட வேண்டும் என்பதாகத் தான் இருந்தது. இல்லா விட்டால் அவன் அப்பா அம்மா ஆத்மா சாந்தியடையாது என்று பீம்சிங் அடித்துச் சொன்னார். கடைசியாய் அவர் கேட்டார். "எப்போது வருகிறாய் நீ"

"இன்னும் சில நாள் ஆகும் பீம்சிங்...."

"அக்ஷய்..." பீம்சிங் குரல் தாழ்ந்தது.

"என்ன?"

"இங்கு எப்போதும் யாரோ சிலர் நம் வீட்டையே வேவு பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். உனக்கு பிரச்னை எதுவுமில்லையே" பீம்சிங் குரல் தாழ்ந்தே இருந்தது.

"இல்லை பீம்சிங்..."

"எனக்கென்னவோ பழைய நாட்கள் போல பயமாக இருக்கிறது அக்‌ஷய்"

அக்‌ஷய் அமைதியாகச் சொன்னான். "எதற்கும் பயப்படுவது முட்டாள்தனம் பீம்சிங். பயம் நம்மை செயல் இழக்க வைக்கிறது. செயல் இழந்த மனிதன் எப்போதும் அபாயத்திற்கு உள்ளாகிறான்...."

பீம்சிங் பெருமூச்சு விட்டது போனில் நன்றாகக் கேட்டது. "நீ மாறவேயில்லை. எப்போதும் எதற்கும் தயாராகவே இருக்கிறாய். எனக்கு அன்றும் அது முடியவில்லை. இன்றும் முடிய மாட்டேன்கிறது....அந்த ஷாங்காய் மடாலய புத்த சாமியார் போன் செய்தார். உன்னைக் கேட்டார். இல்லை என்றவுடன் வந்தவுடன் போன் செய்யச் சொன்னார்.....ஆனால் நீ செய்யாதே. அந்த சாமியார்கள் சகவாசம் இனி வேண்டாம். உன் மனதிற்குப் பிடித்த மாதிரி ஏதாவது நல்ல பெண்ணைப் பார்த்தாயா?"

அக்‌ஷய் மனதில் சஹானா வந்து போனாள். அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் "சரி...பீம்சிங்.... நான் இரண்டு நாள் கழித்து போன் செய்கிறேன். அப்போது விவரமாய் பேசலாம்." என்று சொல்லி விட்டு போன் இணைப்பைத் துண்டித்தான்.

**********

சிபிஐ மனிதனும், மந்திரியும் பதிவு செய்யப்பட்ட அந்த உரையாடலை மிகக் கவனமாகக் கேட்டார்கள். சிபிஐ மனிதன் இரண்டாவது முறையும் அதை ஆரம்பத்தில் இருந்து கேட்க மந்திரி சலிப்போடு சிபிஐ மனிதனைப் பார்த்தார்.

ஆனால் சிபிஐ மனிதன் அவர் பக்கம் திரும்பாமல் கண்களை மூடியபடியே முழுப் பேச்சையும் மீண்டும் மிகக் கவனமாய் கேட்டான்.

கேட்டு முடித்தவுடன் கண்களைத் திறந்த சிபிஐ மனிதனிடம் மந்திரி கேட்டார். "நீங்கள் அன்று சொன்னீர்கள், அவனுக்கு நினைவு தவறி இருக்க வேண்டும் என்று. அவன் என்னடாவென்றால் தன் வீட்டுக்கு போன் செய்கிறான். அந்த வேலைக்காரன் பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறான். அந்த அளவுக்கு அவனுக்கு ஞாபகம் இருக்கிறது. இப்போது என்ன சொல்கிறீர்கள்?"

சிபிஐ மனிதன் ஒத்துக் கொண்டான். "எனக்கு குழப்பமாகத் தான் இருக்கிறது. அவனுக்கு நினைவு பூரணமாக இருந்தால் அவன் எப்போதோ அவனுக்குத் தெரிந்த விஷயங்களை வெளியே சொல்லி

இருக்கலாம். இப்போதெல்லாம் மீடியாக்கள் இது போன்ற விஷயங்களைத் தெரிந்து கொண்டு காசு பார்க்க அலைகிறார்கள். அப்படி இருந்தும் அவன் ஏன் அப்படி செய்யவில்லை.?"

"அவன் என்ன நினைக்கிறான் என்று ஒன்றுமே விளங்க மாட்டேன்கிறது. அவனைக் கொன்று விடலாம் என்றால் கையில் கிடைக்க மாட்டேன்கிறான். அப்படிக் கிடைத்தாலும் சாக மாட்டேன்கிறான். பயப்படவும் மாட்டேன்கிறான். அந்தப் போன் கால் எங்கிருந்து பேசி இருக்கிறான் பார்த்தீர்களா?"

"சாந்த்னி சௌக் ஏரியாவில் ஒரு பப்ளிக் பூத்தில் இருந்து பேசி இருக்கிறான். அந்த பூத்திற்கு உடனடியாக நம் ஆள்கள் போய் விசாரித்திருக்கிறார்கள். அந்த பூத் காரன் யாரோ கூலித் தொழிலாளி வந்து பேசி விட்டுப் போனதாக சொல்கிறான்."

"எத்தனை வேஷம் போடுகிறான். அதைக் கண்டுபிடிக்க முடியாத நம் ஆள்கள் எல்லாம் தண்டம் என்கிறான் அந்த தாடிக்காரன்"

"ஏன் அந்த புஸ்தக சேல்ஸ்மேனாக அமானுஷ்யன் போன போது பின்னால் போனதில் அவன் ஆள்களும் தானே இருந்தார்கள். எப்படி அந்த சுரங்கப் பாதையில் கோட்டை விட்டார்கள்?"

"அதை நானும் தான் கேட்டேன். கோபப்படுகிறான். ஆனந்தைப் பிடித்து கேட்கிற விதத்தில் கேட்டால் அமானுஷ்யன் பற்றி அவன் சொல்ல மாட்டானா? அதை ஏன் செய்ய மாட்டேன்கிறீர்கள் என்று கேட்கிறான்"

"அவன் ஒரு சிபிஐ அதிகாரி. அவனை எப்படி பிடித்து கேள்வி கேட்க முடியும்.?"

"இதற்கு முன் ஒரு சிபிஐ டெபுடி டைரக்டரையே கொன்றவர்களுக்கு இது ஒரு கஷ்டமா என்று கேட்கிறார்கள்"

சிபிஐ மனிதன் மந்திரியை திகைப்புடன் பார்த்தான்.

மந்திரி சொன்னார். "அமானுஷ்யனுக்குப் பதிலாய் யாரோ ஒரு சின்ன திருடன் அகப்பட்டு செத்ததில் அவர்களுக்கு கோபம். இப்போது அவர்கள் வெறியோடு இருக்கிறார்கள். அவர்களுடைய அந்த நாளுக்கு முன்னால் அமானுஷ்யனைப் பிணமாக்க என்ன விலையும் தரத் தயாராக இருக்கிறார்கள். இனியும் பணம் வேண்டுமானாலும் தருகிறார்களாம்......"

சிபிஐ மனிதன் கேட்டான். "அவன் தான் இது வரைக்கும் வாய் திறக்கவில்லையே. இனியா வாய் திறக்கப்போகிறான். ஏன்

அவர்கள் இப்படி பரபரக்கிறார்கள்?"

"அவர்கள் அவன் ஒரு காரணமாகக் காத்திருக்கலாம் என்று சந்தேகப்படுகிறார்கள். அவனைப் போல் ஒரு ஆளுக்கு நீங்கள் சொன்னது போல் அம்னீஷியா வர வாய்ப்பில்லை என்கிறார்கள்"

சிபிஐ மனிதன் எரிச்சலோடு கேட்டான். "சரி அந்தக் காரணம் என்னவாக இருக்கும் என்று நினைக்கிறார்கள்?"

"அந்த நாளுக்கான ஆயத்தங்கள் அவர்கள் ஆரம்பிக்கும் போது கையும் களவுமாய் பிடிப்பதற்காக அவன் காத்திருக்கலாம் என்று பயப்படுகிறார்கள்"

"முட்டாள்கள். இப்படியெல்லாம் கூட பயப்படுவார்களா என்ன"

மந்திரி வரண்ட குரலில் சொன்னார். "அவனைப் பற்றி என்று வரும் போது எந்த பயமும் அர்த்தமில்லாதது அல்ல என்று நினைக்கிறார்கள்"

சிபிஐ மனிதன் அந்த சொற்களில் இருந்த உண்மையை உணர்ந்து மௌனமானான்.

மந்திரி சொன்னார். "ஆனந்தைப் பிடித்து உண்மையை வரவழைக்க நமக்கு பயமாக இருந்தால் அந்த வேலையை அவர்கள் பார்த்துக் கொள்கிறார்களாம். நம்மை விலகி இருக்கச் சொல்கிறார்கள்"

"ஆச்சார்யாவைக் கொன்றவனாக ஒரு பலிக்கடாவைக் காட்டி இருக்கிறதில் சந்தேகம் வந்து தான் ஜெயின் ஆனந்திடம் இந்த விசாரணையை செய்யச் சொல்லி இருக்கிறார். அப்படி இருக்கையில் ஆனந்திற்கும் ஏதாவது ஆகி விட்டால் அவர் சந்தேகம் உறுதிப்பட்டு விடும். ஆச்சார்யா கொலைக் கேஸில் இருந்து மறுபடியும் ஆரம்பிப்பார்கள். போலீஸ் டிபார்ட்மென்டில் கூட சிலர் நாம் ஓவராய் போகிறோம் என்று நினைக்கலாம்...."

"இதெல்லாம் அந்தக் காட்டான்களுக்கு எங்கே புரிகிறது. அமானுஷ்யனைக் கோட்டை விட்ட ஆத்திரத்தில் இருக்கிறார்கள். அமானுஷ்யன் பிணத்தைக் கேட்கிறார்கள். இல்லா விட்டால் அவனைக் கண்டுபிடிக்க ஆனந்தைக் கேட்கிறார்கள். அதுவும் இல்லா விட்டால்...." மந்திரி நிறுத்தினார்.

சிபிஐ மனிதன் கேட்டான். "அதுவும் இல்லாவிட்டால்....?"

"ஆனந்தின் வாயில் இருந்து உண்மையை வரவழைக்க ஆனந்தின் தாயை கடத்துவதாக இருக்கிறார்கள்"

சிபிஐ மனிதன் திகைத்துப் போனான். "என்னது"

மந்திரி சொன்னார். "நானும் அதிர்ச்சியோடு இப்படி தான் கேட்டேன். அவர்கள் எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்கிற மாதிரி வழிகளைத் தேடி அலைகிறார்கள். அற்ப சகவாசம் பிராண சங்கடம் என்று ஒரு பழமொழியை எங்கம்மா எப்போதும் சொல்வாள். அதற்கு அர்த்தம் இப்போது தான் புரிகிறது"

"அமானுஷ்யனைப் பிடிக்கிறார்களோ இல்லையோ இவர்கள் பிடிபட்டு விடுவார்கள் போல் இருக்கிறது."

மந்திரி சிபிஐ மனிதனிடம் சொன்னார். "அந்த அமானுஷ்யனைக் கொன்று விட்டால் எல்லா பிரச்னைகளும் தீர்ந்து விடும். தயவு செய்து அதற்கு ஏதாவது செய்யுங்கள். அவர்கள் அதிகமாக பணம் தருகிறார்களோ இல்லையோ நான் என் சொந்தக் காசை எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறேன்...."

சிபிஐ மனிதன் ஒன்றும் சொல்லாமல் யோசித்தான். வாங்கிய

பணத்தை எல்லாம் திருப்பிக் கொடுத்து விட்டால் இதிலிருந்து விலகிக் கொள்ளலாம் என்று யாராவது உத்திரவாதம் தந்தால் அதற்குத் தயாராக அவன் இருந்தான். ஆச்சார்யாவைக் கொல்ல இவர்களுக்கு கூட்டாக நின்ற போது இத்தனை வில்லங்கங்கள் வரும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

மந்திரி கேட்டார். "இப்போது அவன் எங்கே இருப்பார் என்று நினைக்கிறீர்கள்?"

"ஏதாவது ஒரு ஓட்டலில் ஏதாவது ஒரு வேஷத்தில் தங்கி இருக்கலாம். டெல்லி மாதிரி ஒரு பெரிய நகரத்தில் ஓட்டல்களில் தேடுவது சுலபமான காரியம் இல்லை. அதை நாம் ஆரம்பத்திலேயே முயற்சி செய்து பார்த்தாகி விட்டது அல்லவா"

"சரி இனி என்ன தான் வழி"

சிபிஐ மனிதன் உடனடியாக பதில் சொல்லாமல் சிறிது யோசித்து விட்டு சொன்னான். "ஒருவிதத்தில் காட்டான்களானாலும் அவர்கள் சொல்வது தான் சரி. இவ்வளவு தூரம் நாம் வந்தாகி விட்டது. இனி என்ன ஆனாலும் நம் ரகசியங்கள் தெரிந்த அவனை சும்மா விட முடியாது. நான் முன்பு நினைத்தது போல அம்னீஷியா வந்தவனாக அவன் மாறி இருந்தாலும் அவனுக்கு எப்போது வேண்டுமானாலும்

எல்லாம் நினைவுக்கு வரலாம். அதனால் எந்த வழியாக அவனைப் பற்றி தெரிந்து கொள்ள முடிந்தாலும் சரி நாம் அதில் தயங்குவதில் அர்த்தம் இல்லை. அதற்கு உங்கள் அதிகாரத்தையும், பணத்தையும் தாராளமாக காட்ட வேண்டி வரும். ஆனால் அதை விட்டால் வேறு வழி இல்லை. இதற்கு தடங்கலாக ஜெயின் போன்றவர்கள் வந்தாலும் பரவாயில்லை. நாம் எதிர்த்து தானாக வேண்டும்"

"அப்படியானால் ஆனந்தையாவது அவன் அம்மாவையாவது அவர்கள் கடத்தினாலும் பரவாயில்லை என்கிறீர்களா?"

சிபிஐ மனிதன் ஆமென்று தலையாட்டினான்.

***********

பவன்குமார் அக்‌ஷயிடம் இருந்து வாங்கி வந்த கடிதத்தை ஆனந்த் படித்தான்.

"உன் அறைக்கு வந்த புத்தக சேல்ஸ்மேன் என்று சந்தேகப்பட்டு நேற்று ஒருவனைக் கொன்று விட்டார்கள். அதனால் நான் உன்னை சந்திக்க வருவது இப்போதைக்கு உசிதம் அல்ல. நீ எப்படியாவது அவர்கள் கண் பார்வையில் இருந்து தப்பி என்னை சீக்கிரம் வந்து பார்"

ஆனந்த் ஒரு கணம் திக் பிரமை பிடித்தது போல் ஆனான். மரணம் தம்பியின் பின்னால் செல்ல ஆரம்பித்து விட்டது என்பதற்கு அடையாளம் தானோ அந்த எவனோ ஒருவனின் மரணம். இந்த முறை தப்பியவன் எத்தனை காலம் இவர்களிடம் இருந்து தாக்குப் பிடிக்க முடியும்?

அந்த நேரத்தில் சாரதாவின் போன் வந்தது.

"ஏன் ஆனந்த் அக்ஷயை அந்த ஆஸ்பத்திரியில் சேர்த்தாயிற்றா?"

ஆனந்த் சொன்னான். "ஆயிற்று அம்மா"

"டாக்டர் என்ன சொல்கிறார்?"

"சிகிச்சையை ஆரம்பித்து இருக்கிறார். அவர் அவனுக்குப் பழைய நினைவு எல்லாம் கண்டிப்பாக வரும் என்று சொல்கிறார். ஆனால் எப்போது அது முடியும் என்பது நம் கையில் இல்லை என்கிறார். நீங்கள் அவனுக்காக நன்றாய் கடவுளை வேண்டிக் கொள்ளுங்கள் அம்மா. எல்லாம் சீக்கிரம் நல்ல படியாக முடிந்து விடும்...."

"அனுமாருக்காக தனியாய் ஒரு விரதம் ஆரம்பித்திருக்கிறேன்

ஆனந்த். அவர் சஞ்சீவி மலையைக் கொண்டு வந்து லட்சுமணனுக்கே நினைவு திரும்ப வைத்தவர். நம் அக்ஷயிற்கு அவர் செய்வது ஒரு பெரிய விஷயமா? எனக்கு நம்பிக்கை இருக்கு."

அம்மாவின் நம்பிக்கை அவனுக்கு ஒரு டானிக்காக இருந்தது.

"ஆனந்த்"

"என்னம்மா?"

"எனக்கு ஒரே ஒரு தடவை அவன் கிட்ட பேச ஆசையாய் இருக்குப்பா"

"நான் நாளைக்கே அவனைப் பேசச் சொல்கிறேனம்மா"

போனை வைத்த போது அவனுக்கு மனம் கனத்தது. அம்மாவை எவ்வளவு நாட்கள் ஏமாற்ற முடியும்?

உடனடியாகத் தம்பியைக் காணச் செல்வது என்று அவன் தீர்மானித்தான். உடை மாற்றிக் கொண்டு ஒரு ரெயின் கோட்டைப் போட்டுக் கொண்டு அக்ஷய் பற்றி வந்த ஃபேக்ஸ் காகிதங்களை எடுத்து ஒரு உறையில் போட்டுக்கொண்டு அதை தன் பனியனுக்குள் வைத்துக் கொண்டு வெளியேறினான்.

அவனை வேவு பார்ப்பவர்களும் தயாரானார்கள்.

ஆனந்த் ஓட்டலுக்கு வெளியே சென்று ஒரு ஆட்டோவில் ஏறிக் கொண்டான்.

"எங்கே சார் போகணும்"

ஆனந்த் ஆட்டோ டிரைவரைப் பார்த்தான். அந்த ஆட்டோ டிரைவர் இளைஞனாக இருந்தான். பார்வைக்கு நாணயமாகத் தெரிந்தான். அவனிடம் மெல்ல சொன்னான். "என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கிறது தெரிந்து சிலர் என்னை பின் தொடர்கிறார்கள். அவர்களுக்கு டிமிக்கி கொடுத்து விட்டு என்னைை பாதுகாப்பாய் எங்கே இறக்கி விட்டாலும் சரி. தூரம் எவ்வளவு ஆனாலும் பரவாயில்லை. மீட்டருக்கு மேலே நூறு ரூபாய் தருகிறேன்"

ஆட்டோ டிரைவர் தலையசைத்த படியே சுற்றிலும் முற்றிலும் பார்த்தான். அவன் கண்களுக்கு பின்னால் பைக்கில் ஒருவனும், முன்னால் கால் டாக்சியில் ஒருவனும் தெரிந்தார்கள். துடிப்புள்ள இளைஞனான அவனுக்கு சினிமாவில் வருவது போல் ஒரு பரபரப்பான சந்தர்ப்பம் கிடைத்தது சந்தோஷமாக இருந்தது. சினிமா கதாநாயகன் போல் தன்னை பாவித்துக் கொண்டான்.

அவன் ஆட்டோ அடுத்த கணம் காற்றாய் பறந்தது.

இதை எதிர்பாராத பைக் ஆசாமியும், கால் டாக்சி ஆசாமியும் திடுக்கிட்டாலும் சுதாரித்துக் கொண்டு அதே வேகத்தில் அந்த ஆட்டோவைப் பின் தொடர்ந்தார்கள். திடீரென்று வேகத்தைக் குறைத்து மிக மெதுவாக ஊர்ந்தும், திடீரென்று படுவேகமாகவும் போய் ஆட்டோக்காரன் தன் சாகசத்தைக் காண்பித்தான்.
அமானுஷ்யன் விஷயத்தில் ஏமாந்தது போல ஏமாந்து விடக்கூடாது என்று நினைத்த பைக் ஆசாமி போகும் போதே அவசர அவசரமாக செல்லில் சகாக்களைக் கூப்பிட்டான்.

ஆனந்த் சொன்னான். "அவன் இன்னும் சில ஆட்களைத் துணைக்குக் கூப்பிடுகிறான். அவர்கள் வந்து விட்டால் பார்வையில் இருந்து தப்புவது கஷ்டம். அதனால் எங்கேயாவது ஒரு கூட்டத்தில் என்னை விட்டு விடு. நான் கூட்டத்தில் கலந்து தப்பித்துக் கொள்கிறேன்."

அந்த நேரத்தில் ஒரு கல்யாண மாப்பிள்ளை ஊர்வலம் பாண்ட் வாத்தியத்துடன் கும்பலாக வர ஆட்டோக்காரன் அதன் அருகில் மிக வேகமாக கொண்டு போய் நிறுத்தினான். உள்ளே அமர்ந்த படியே அவன் கையில் பணத்தை திணித்து விட்டு தன் ரெயின் கோட்டை ஆட்டோவிலேயே விட்டு விட்டு அதை எடுத்துக் கொள் என்று

சொல்லி விட்டு வேகமாக இறங்கி கூட்டத்தோடு ஐக்கியமானான்.

ஆட்டோக்காரன் மீண்டும் மின்னல் வேகத்தில் அங்கிருந்து பறக்க, ஆட்டோக்காரன் அந்தக் கல்யாண ஊர்வலத்தைப் பார்த்து நிறுத்தி வேறு வழியாகப் போகிறான் என்று பின் தொடர்ந்தவர்கள் நினைத்தார்கள். அவர்கள் ஆனந்த் இறங்கியதைக் கவனிக்கவில்லை.

ஆட்டோக்காரன் சுமார் ஒரு கிலோ மீட்டர் பயணித்து விட்டு பீடாக்கடை ஒன்றின் முன் சாவகாசமாக நிறுத்தினான். அவன் பீடாவிற்கு ஆர்டர் செய்ய அவன் ஆட்டோவில் ஆனந்த் இல்லை என்பதை அருகே வந்த பின் தான் கண்டு பிடித்த பின் தொடர்ந்தவர்கள் கோபத்துடன் அவனிடம் "நீ ஏற்றி வந்த ஆள் எங்கே?" என்று கேட்டார்கள்.

"அந்த ஆள் அங்கேயே இறங்கி விட்டான்."

"எங்கே?"

"அந்தக் கல்யாண ஊர்வலத்தின் பக்கத்தில். அவன் அந்தக் கல்யாணத்துக்குத் தான் போக வேண்டுமாம். அதனால் அங்கேயே இறங்கி அவர்களுடன் சேர்ந்து கொண்டான். ஏன் கேட்கிறீர்கள்?"

அவர்கள் முகத்தில் ஈயாடவில்லை.

**********

ஆனந்தும் அவன் தாயும் பேசிய பேச்சை டேப் செய்த மனிதன் சிபிஐ மனிதனிடம் அதைத் தந்து சன்மானத் தொகை பெற்றான்.

60

ஒவ்வொரு முறை பார்க்கும் போதும் சின்னச் சின்ன வித்தியாசங்களுடன் கூடிய வேஷத்தில் தம்பியைப் பார்க்கையில் ஆனந்தால் ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை. ஒரு வேஷத்தில் அவனைப் பார்த்தவர்கள் இன்னொரு வேஷத்தில் அவனை அடையாளம் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டம் தான்.

அக்ஷய் கேட்டான். “எப்படி அவர்கள் பார்வையில் இருந்து தப்பித்து வந்தாய்?”

ஆனந்த் தப்பித்த விதத்தை விவரித்து விட்டுப் பின் சொன்னான். “இந்த தடவை அவர்களிடம் ஏதோ ஒரு வித்தியாசத்தை நான் உணர்ந்தேன் அக்ஷய். அவர்களிடம் கூடுதலாக ஆக்ரோஷம்

இருந்தது. அதை ஒரு விதமான வெறி என்று கூட சொல்லலாம். ஆபத்தான கட்டத்தில் இருக்கிறோம் என்றே எனக்குத் தோன்றுகிறது."

அக்‌ஷய் புன்னகையுடன் சொன்னான். "உயிர் இருக்கிற வரை ஆபத்திற்கும் சந்தர்ப்பம் இருக்கத்தான் செய்கிறது. அதை விடு. என் கடந்த காலம் என்ன? அதைச் சொல்."

ஆனந்த் அந்த ஃபேக்ஸ் தாள்கள் வைத்திருந்த உறையை அவனிடம் நீட்டினான். "... ஆனால் இதில் இப்போதைய நிலவரத்திற்கான பதில் இல்லை. மூன்று வருடங்கள் முன்பு வரை எல்லா விவரங்கள் மட்டும் தான் இருக்கிறது"

அக்‌ஷய் ஆர்வத்துடன் படிக்க ஆரம்பித்தான்.

***********

மும்பையில் நாகராஜ முதலியார் என்ற பெயர் மிகப் பிரபலம். தமிழ்நாட்டில் ஒரு குக்கிராமத்தில் பிறந்து வளர்ந்த நாகராஜன் என்ற பத்து வயது சிறுவன் குடும்பத்தின் வறுமையில் இருந்து தப்பிக்க 1950ல் திருட்டு ரயிலேறி பிழைப்பைத் தேடி மும்பை வந்து சேர்ந்தான். எடுபிடி வேலை, கூலி வேலை என்று கிடைத்த

வேலையைச் செய்து வயிற்றை நிரப்பி வந்த நாகராஜனுக்கு அவனைப் போலவே ஹைதராபாதிலிருந்து ஓடி வந்த இப்ராஹிம் சேட் என்ற சம வயது சிறுவனின் நட்பு கிடைத்தது.

கூர்ந்த அறிவு, அபார தைரியம், தளராத மன உறுதி மூன்றும் நாகராஜனுக்கும், இப்ராஹிமிற்கும் இருந்ததால் அந்த இருவருடைய நட்பு ஒரு வெற்றிகரமான கூட்டணியாக பிற்காலத்தில் மலர்ந்தது. இருவருக்கும் இடையே மிகப் பெரிய வித்தியாசம் ஒன்று இருந்தது. நாகராஜனிடம் எதைப் பற்றியும் கவலைப்படாத துணிச்சலான வேகம் இருந்தது என்றால் இப்ராஹிமிடம் எதையும் நன்றாக யோசித்து காய் நகர்த்தும் நிதானம் இருந்தது. சுமார் பதினாறு வயதான போது இருவரும் கூலிப்பிழைப்பையும், சிறு வேலைகளையும் செய்வதை விட்டு சின்னச் சின்ன திருட்டு வேலைகளை ஆரம்பித்தனர். அவர்கள் தலைமையில் பல இளைஞர்கள் சேர்ந்தனர். திருட்டு, பொருள் கடத்தல், பெரிய வியாபாரிகளிடம் பணம் வாங்கிக் கொண்டு பாதுகாப்பு தருதல் என்று பிற்காலத்தில் அவர்கள் கூட்டணி பெரிய சாம்ராஜ்ஜியமாகவே மாறியது.

இப்ராஹிம் சாய்ராபானு என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு மூன்று மகன்களுக்கு தந்தையானார். நாகராஜன் திலகவதி என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.

ஆனால் அவர்களுக்கு குழந்தை பாக்கியம் இருக்கவில்லை. கோடிக்கணக்கில் சொத்துகள் சேர்த்தும் ஒரு வாரிசு இல்லாத வருத்தம் மட்டும் நாகராஜன் மனதில் பெரிதாக இருந்தது.

ஒரு நாள் அவரும் அவர் மனைவியும் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்த போது சுமார் மூன்று வயது சிறுவன் ஓடி வந்து அவர் பக்கத்தில் நின்று கொண்டான். "அவன் என்னை அடிக்கிறான்" என்று கண்ணீர் மல்க அந்தச் சிறுவன் தமிழில் சொன்னான். யார் என்று நாகராஜன் எட்டிப் பார்த்தார். ஒரு முரட்டு ஆசாமி அந்த சிறுவனைத் தேடி வந்து கொண்டிருந்தான். அந்த முரடனின் தோற்றத்திற்கும், அந்த சிறுவனின் தோற்றத்திற்கும் சம்பந்தமே இல்லாததைப் பார்த்த நாகராஜன் அந்த முரடனிடம் “யாரிந்த பையன்?” என்று கேட்டான்.

“என் மகன் சார்” என்றான் அந்த முரடன்.

“உங்கப்பாவா இது” என்று அந்த சிறுவனைக் கேட்டார் நாகராஜன்.

“இல்லை” என்று பையன் மறுத்து தலையாட்டினான்.

"சும்மா சொல்றான் சார்” என்ற அந்த முரடன் அந்த சிறுவனைப் பிடித்து இழுத்தான்.

நாகராஜன் அந்த முரடனைத் தடுத்து சொன்னார். “சரி பையனை போலீஸில் ஒப்படைக்கிறேன். உன் மகனாய் இருந்தால் நிரூபித்து அவனை அவர்களிடம் இருந்து கூட்டிக் கொண்டு போ”

அந்த முரடனுக்குக் கோபம் வந்து விட்டது. “யோவ் நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போய்யா” என்று அவர் கையைத் தட்டி விட்டான்.

அடுத்த கணம் இடியாய் விழுந்த அடியில் அந்த முரடன் ஆடிப்போனான். அவனும் திருப்பி ஒரு அடி அடித்தது அவனுக்கு வினையாக மாறியது. நாகராஜன் இள வயதிலேயே அடிதடி சண்டை என்று பழக்கப்பட்டவர் என்பதால் அவனை அடித்துப் புரட்டி ஓடும் ரயிலில் இருந்து வீசி எறிந்தார். அந்த முரடனின் கூட்டாளிகள் இருவர் இதைப் பார்த்து சந்தடியில்லாமல் நழுவினர்.

நாகராஜன் மீண்டும் தன் இருக்கைக்கு வந்த போது அந்த சிறுவன் திலகவதி மடியில் இருந்தான்.

நாகராஜன் தமிழிலேயே அவனிடம் கேட்டார். “உன் பெயர் என்ன?”

"அக்ஷய்”

"யாரவன்? உன்னை ஏன் அடித்தான்?"

அக்‌ஷயிற்கு யார் என்று சொல்லத் தெரியவில்லை. ஆனால் அந்த முரடன் ஏன் அடித்தான் என்பதைச் சொன்னான். "அவன் எல்லார் கிட்டேயும் காசு கேட்கச் சொல்கிறான்"

இந்த சிறுவனைக் கடத்திக் கொண்டு வந்து பிச்சை எடுக்க வைக்க முயற்◌ி செய்திருக்கிறார்கள் என்பது நாகராஜனுக்குப் புரிந்தது. அக்‌ஷயிடம் விசாரித்த போது அவனுக்குத் தன் பெயரைத் தவிர வேறு எதுவும் சொல்லத் தெரியவில்லை. அவன் திலகவதியிடம் ஒட்டிக் கொண்டு அமர்ந்த விதத்தைப் பார்த்த அந்தக் கணத்தில் அவனைத் தன் மகனாக்கிக் கொள்வது என்று நாகராஜன் முடிவு செய்து விட்டார். திலகவதியும் சந்தோஷத்துடன் ஒத்துக் கொண்டாள். அக்‌ஷய் அவர்களுடைய மகனாக மும்பைக்குச் சென்றான்.

அவனுடைய முதுகின் மேற்புறத்து இருந்த அந்த நாகமச்சம் வித்தியாசமாக இருந்ததால் அதைச் சொல்லி விளம்பரப்படுத்தி இருந்தால் அக்‌ஷயை கண்டிப்பாக அவன் பெற்றோரிடம் சேர்த்து வைத்திருந்திருக்கலாம். ஆனால் நாகராஜன் தமிழர்களான தங்களிடம் தமிழ் பேசும் அந்தக் குழந்தை வந்து சேர்ந்தது

தெய்வமாகத் தங்கள் வேண்டுதலுக்குத் தந்த வரம் என்று ஆழமாக நம்பினார்.

திலகவதிக்கு மட்டும் அவனைச் செல்லமாக சீராட்டி வளர்த்த போதும் ஒரு உறுத்தல் இருந்தது. இவனைப் பெற்ற தாய் எவ்வளவு பாடுபடுவாள் என்பதை ஒரு பெண்ணான அவளால் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அவள் நாகராஜனிடம் தன் உறுத்தலைச் சொன்ன போது அவர் சொன்னார்.

"திலகா, இந்தக் குழந்தை நம் பார்வையில் பட்டிருக்காவிட்டால் எங்கேயாவது பிச்சை எடுத்துக் கொண்டு வளர்ந்திருக்கும். ஒரு கட்டத்தில் இந்தக் குழந்தையின் கை கால் எதையாவது வெட்டிக் கூட அந்த கும்பல் வெட்டிப் போட்டு இருக்க வாய்ப்பு இருக்கிறது. நாம் அதை ஒரு ராஜா மாதிரி வளர்க்கிறோம். இந்தத் தமிழ் பேசும் குழந்தை அந்த ரயிலில் எத்தனையோ நூற்றுக் கணக்கான ஜனங்கள் இருக்கையில் நம்மிடம் மட்டும் வந்து ஏன் சேர வேண்டும். யோசித்துப் பார். இது தெய்வமாக நம்மிடம் அனுப்பியது மாதிரி தான் எனக்குத் தோன்றுகிறது. இந்த நாக மச்சம் இருக்கிற குழந்தை நாகராஜனான என்னிடம் வந்தது விதி. இந்தக் குழந்தை இனி நம்முடையது. நீயாக தேவையில்லாமல் எதை எதையோ நினைத்து என்னிடம் வந்து சொல்லிக் கொண்டிருக்காதே. இனி இது பற்றி வேறு மாதிரியாக உன்னிடம் இருந்து நான் கேட்கக் கூடாது"

திலகவதி அதற்குப் பிறகு அதைப் பற்றி அவரிடம் பேசியதில்லை. ஆனாலும் அந்தக் குழந்தை வளர்ந்து செய்த குறும்புகளைப் பார்த்த போதும், அது புத்திசாலித்தனமாக எதாவது செய்யும் போதும் பெருமிதம் அடைந்த போதெல்லாம் அந்த உறுத்தல் மட்டும் வராமலில்லை. 'இதையெல்லாம் கண்டு மகிழ்ந்து அனுபவிக்க வேண்டிய இந்தக் குழந்தையின் தாய் எவ்வளவு துக்கத்துடன் தன் மகனைத் தேடிக் கொண்டிருக்கிறாளோ?'

அவர்கள் இருவரும் அக்ஷய் மீது உயிரையே வைத்திருந்தார்கள். அவனும் அவர்களிடம் மிகவும் பாசமாக இருந்தான். பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்த பின் அவன் என்றும் வகுப்பில் முதல் மாணவனாக வந்தான். ஆசிரியர்கள், சக மாணவர்கள் எல்லோரும் அவனை மிக நேசித்தார்கள். இதெல்லாம் நாகராஜனுக்கும் திலகவதிக்கும் மிகப் பெருமையாக இருந்தது. அவனை யாராலும் நேசிக்காமல் இருக்க முடியாது என்று பெருமையாக நினைத்தனர். ஆனால் அவன் பெரியவனாக வளர வளர அவர்கள் ஒரு பிரச்னையை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

அக்‌ஷய் பெரியவனாக வளர ஆரம்பிக்கையில் நாகராஜன் செய்யும் தொழிலை வெறுத்தான். அவன் அதை எப்போதுமே அவரிடம் வாய் விட்டுச் சொன்னதில்லை. ஆனால் சோகம் நிரம்பிய விழிகளோடு சில சமயங்களில் அவர் செயல்களைக் கவனிப்பான். அதை அவரும் திலகவதியும் கவனிக்கத் தவறவில்லை. ஆனால் அந்தத் தொழில் புலி மேல் செய்யும் பயணம் போலத் தான். பயணத்தை ஆரம்பித்த பின் பிடிக்கவில்லை என்றாலும் நடுவில் இறங்கி விட முடியாது. இதை அவன் ஒரு நாள் புரிந்து கொள்வான் என்று நாகராஜன் நினைத்தார்.

அக்‌ஷயிற்கு தந்தையின் தைரியம் குறித்தும் உடல் வலிமை குறித்தும் சிறு வயதில் இருந்தே பெருமிதம் உண்டு. ஒரு இக்கட்டான கட்டத்தில் ரயிலில் அந்த முரடனிடம் இருந்து அவனைக் காப்பாற்றிய அந்த வீரம் அவன் மனதில் ஆழமாகப் பதிந்து இருந்தது. எனவே அவனும் சிறு வயதில் இருந்தே உடல் வலிமையிலும், கராத்தே, குங்க்ஃபூ போன்ற சண்டைப் பயிற்சிகளிலும் அதிக ஆர்வம் காட்டினான்.

அதனால் அக்‌ஷய் படிப்பில் மட்டுமல்லாமல் பள்ளியில் கராத்தேயிலும் மிகத் தேர்ச்சி பெற்ற மாணவனாகத் திகழ்ந்தான். தனியாக குங்க்ஃபூ கற்றான். அதிலும் அவன் முதல் மாணவனாக இருந்தான். அவனுடைய குங்க்ஃபூ குரு நாகராஜனைத் தனியாக

அழைத்து ஒரு முறை சொன்னார். "ஒரு நாள் இந்த குங்க்ஃபூ திறமைக்காக இவனை உலகமே பாராட்டும். அந்த அளவு திறமை இவனிடம் இருக்கிறது". அந்த குங்க்ஃபூ குரு சர்வ தேசப் போட்டிகளில் நீதிபதியாக அடிக்கடி செல்பவர். அவரிடமிருந்து அந்த வார்த்தைகளைக் கேட்ட போது நாகராஜன் பூரித்துப் போனார்.

அவன் இப்ராஹிம் சேட்டின் மகன்களுடனும் சேர்ந்து விளையாடுவான். இஸ்மாயில், அமானுல்லா, அஸ்ரஃப் என்ற அந்த மூன்று பேரில் கடைசி மகன் அஸ்ரஃபிற்கு அக்ஷயின் வயது தான் இருக்கும். அவர்கள் அவனுடன் சீக்கிரமே நண்பர்களாகி விட்டார்கள். அவர்கள் குரான் படிக்கும் போது இவனும் அவர்களுடன் சேர்ந்து படிப்பான். இப்ராஹிம் சேட் குடும்பம் தொழுகைக்குச் செல்லும் போது அவனும் செல்வான். ஒரு ஓரமாக இருந்து அதே போல தொழுகை செய்வான். அதோடு நிறுத்தியிருந்தால் அவர்கள் நட்பு நீண்டு இருக்கும். ஆனால் அக்ஷய் ஒரு படி மேலேயே போனான்.

அவர்களில் ஒருவனாகவே ஆகி விட்ட அவன் குரான் பற்றி போட்டிகள் நடக்கும் போது அவர்களுடன் சேர்ந்து தானும் கலந்து கொள்வான். பெரும்பாலும் அவனுக்குத் தான் முதல் பரிசு கிடைக்கும். அவர்கள் ஒரு உருது ஆசிரியரிடம் உருது கற்ற போது

அவர்களுடன் சேர்ந்து அவனும் உருது படித்தான். உருதுவிலும் அவன் தேர்ச்சி சிறப்பாக இருந்தது. ஒரு முறை ஒரு போட்டியில் அவன் உருதுவில் பேசியதைக் கேட்டு அசந்து போன ஒரு இஸ்லாமிய அறிஞர் "இந்தப் பையன் ஒரு ஹிந்து என்பதை என்னால் நம்பவே முடியவில்லை" என்று ஆச்சரியப்பட்டார்.

அக்ஷயின் திறமைகள் இப்ராஹிம் சேட்டிற்கும் மகிழ்ச்சியைத் தந்தாலும், கலந்து கொள்ளும் ஒவ்வொன்றிலும் அக்ஷய் வெற்றி பெற்றதும், எல்லோரும் அவனை அளவுக்கு அதிகமாக பாராட்டியதும் இப்ராஹிம் சேட்டின் மகன்கள் மனதில் பொறாமையை வளர்த்த ஆரம்பித்தது. அவனுடன் விளையாட்டு, சண்டை, படிப்பு என்று எதிலும் ஜெயிக்க முடியாமல் போன அவர்களுக்கு அவனை நண்பனாகத் தொடர்ந்து எண்ண முடியாமல் போயிற்று.

மேலும் வளர்ந்து பெரிதான போது அவர்களுக்கு தந்தையின் தொழிலில் நல்ல ஈடுபாடு இருந்தது. சுலபமாக வந்து குவியும் பணம், எல்லோரும் காட்டும் பயம் கலந்த மரியாதை எல்லாம் அவர்களுக்குப் பிடித்திருந்தது. நாகராஜன் – இப்ராஹிம் சேட் உருவாக்கிய சாம்ராஜ்ஜியத்தை அவர்கள் மேலும் மேலும் விரிவு படுத்திக் கொள்ள எண்ணினார்கள். அக்ஷயோ தந்தையின் தொழிலில் எந்தப் பங்கு வகிக்கவும் விரும்பவில்லை. எனவே சிறு

வயதில் நெருங்கிய நண்பர்களாக இருந்த அவர்கள் பெரியவர்களான போது அவனிடமிருந்து விலக ஆரம்பித்தார்கள்.

அக்‌ஷயிற்கு குங்க்ஃபூ கலையின் மேல்மட்டப் பயிற்சிகள் அளித்த சில புத்த பிக்குகள் உடல் வலிமைக்கும் மேலாக ஆன்ம வலிமை ஒன்று இருக்கிறது அது எல்லா வலில்மைகளுக்கும் மேலானது என்று சுட்டிக் காட்டினார்கள். அக்‌ஷய் பட்டப்படிப்பு முடிந்த பின் அவர்களுடைய மடாலயங்களில் பல நாட்கள் தங்க ஆரம்பித்தான். இமயமலையிலும், சீனாவிலும், திபெத்திலும் கூடப் போய் அவன் சண்டைப் பயிற்சியில் நுணுக்கமான பல வித்தைகள் கற்றான். அவனுடைய குருமார்கள் அவனைப் போன்ற ஒரு மாணவன் தங்களுக்கு அதுவரை கிடைத்ததில்லை என்று நினைத்தார்கள்.

அது போன்ற பயிற்சிகள் முடிந்து அக்‌ஷய் திரும்பவும் வீட்டுக்கு வரும் போதெல்லாம் வீட்டில் வந்து போய்க் கொண்டிருந்த ரௌடிகள், கள்ளக்கடத்தல் காரர்கள், சமூக விரோத சக்திகள் எல்லாம் அவனுக்கு மேலும் அருவருப்பை அளித்தார்கள். பெற்றோர் நினைவு வரும் போதெல்லாம் வீட்டுக்கு அவன் வருவான். ஒரு நாளுக்கு மேல் தங்காமல் மறுபடி போய் விடுவான்.

அவன் அப்படிப் போவது நாகராஜனுக்கும் திலகவதிக்கும் மிகவும் துக்கமாக இருந்தது. திலகவதி கணவனின் எந்த செயல்களையும்

அது வரை கண்டித்தது இல்லை. விமரிசித்ததும் இல்லை. ஆனால் அகஷயின் பாரா முகம் பார்த்து ஒரு நாள் இரவு வருத்தத்துடன் கணவனிடம் சொன்னாள். "இத்தனை சம்பாதிப்பது யாருக்காக? அவன் பாசத்தை விட நமக்கு இந்த தொழில் முக்கியமா? எல்லாவற்றையும் சம்பாதித்து பிள்ளையைத் தொலைத்து விடப்போகிறோமோ என்று பயமாய் இருக்கிறது"

அன்று இரவு முழுவதும் நாகராஜன் உறங்கவில்லை. மனைவி சொன்னதில் இருந்த உண்மை அவருக்கு நன்றாகவே உறைத்தது. மகனுக்கு முன் வேறு எதுவும் முக்கியமில்லை என்று நினைத்த அவர் கடைசியில் தன் தொழிலிற்கு முழுக்குப் போட முடிவு செய்தார்.

மறு நாளே அவர் தன் முடிவை இப்ராஹிம் சேட்டிடம் தெரிவித்தார். "... அவனா இந்தத் தொழிலா என்று இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கிற நிலையில் இருக்கிறேன் இப்ராஹிம். அதனால் எனக்கு வேறு வழியில்லை. நான் இந்த தொழிலில் இருந்து விலகிக் கொள்ள முடிவு செய்து விட்டேன். என் பங்கை தான தர்மம் செய்து விட்டு அவன் கூட அவனோட அப்பா அம்மாவாக மீதிக் காலம் நானும் திலகாவும் வாழ நினைக்கிறோம்."

இப்ராஹிம் சேட் இதை எதிர்பார்த்தது தான். மனித சுபாவத்தை எடை போடுவதில் வல்லவரான அவர் அக்ஷய்

பெரியவனானவுடனேயே இப்படி நடக்கும் என்று எதிர்பார்த்தார். கணக்கு வழக்குகளை அவர் தான் பார்த்துக் கொண்டிருந்ததால் ஒரு வாரத்தில் கணக்கு பார்த்து நாகராஜனுக்கு சேர வேண்டியதைத் தந்து விடுவதாக வாக்களித்தார்.

அவர் வீட்டுக்கு வந்து நடந்ததைச் சொன்ன போது அவருடைய மூத்த பிள்ளைகள் இருவரும் அவரைக் கடுமையாக விமரிசனம் செய்தார்கள். "உங்களுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது. அந்த ஆள் தான தர்மம் செய்வதற்காக யாராவது கோடிக்கணக்கில் பணத்தை திருப்பித் தருவார்களா?"

"நாகராஜன் எனக்கு நண்பன் மட்டுமல்ல ஒரு சகோதரன் மாதிரி. அவனை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அவன் இடத்தில் நான் இருந்தாலும் இப்படித் தான் செய்திருப்பேன். இருப்பது ஒரே மகன். அவனுக்கு இந்தத் தொழில் பிடிக்கவில்லை என்றால் நாகராஜன் என்ன செய்ய முடியும். அந்தப் பணத்தை வைத்துக் கொண்டிருந்தாலும் அக்ஷய் ஒத்துக் கொள்ள மாட்டான். அதனால் தான் நாகராஜன் இந்த முடிவெடுத்து இருக்கிறான். ஒரேயடியாக இல்லா விட்டாலும் கொஞ்சம் கொஞ்சமாக அந்த பணத்தை அவனுக்கு திருப்பிக் கொடுத்து விடுவது தான் முறை"

"அந்த பையன் அவரோட சொந்த மகனா. யாரோ ஒரு அனாதை.

அந்த அனாதைக்காக இவ்வளவு நாள் நீங்கள் இரண்டு பேரும் கூட்டாக சேர்த்ததில் பாதி வாங்கி அந்த ஆள் தானம் தந்து விடுவாராம். அதற்கு நீங்கள் ஒத்துக் கொள்வீர்களாம். நன்றாக இருக்கிறது கதை"

வாக்குவாதம் நீண்டு கொண்டே போனது. கடைசியில் இப்ராஹிம் சேட் மகன்களிடம் கேட்டார். "கடைசியில் என்ன தான் சொல்கிறீர்கள்? நான் எப்படி அவனிடம் போய் உனக்குச் சேர வேண்டியதைத் தர மாட்டேன் என்று சொல்ல முடியும்? யோசித்துப் பாருங்கள்"

அவரது மூத்த மகன் இஸ்மாயில் சொன்னான். "ஒன்றும் சொல்ல வேண்டும். அந்த ஆளையே தீர்த்துக் கட்டுவது தான் புத்திசாலித்தனம்"

இப்ராஹிம் சேட் ஆடிப் போனார். "இஸ்மாயில். சைத்தானைப் போல் பேசாதே...."

இஸ்மாயிலும், அமானுல்லாவும் சேர்ந்து அவருக்கு மூளைச்சலவை செய்தார்கள். "நீங்கள் யோசித்துப் பாருங்கள். இது மாதிரியான தொழிலில் இருந்து ஒருவன் விலகுவது சாகும் போது தான். உயிருடன் இருக்கும் போது விலகினால் அவன் கண்டிப்பாக நமக்கு

எதிரியாகத் தான் இருக்க முடியும்....."

"கோடிக்கணக்கான பணத்தை அவரும் வைத்துக் கொள்ளப் போவதில்லை என்றால் அதை எல்லாம் நாமே வைத்துக் கொள்ளலாமே...."

"இந்தத் தொழிலில் தாக்குப் பிடிப்பது தான் தர்மம். விட்டு விட்டு ஓடுபவன் கோழை. அப்படிப்பட்ட கோழையை விட்டு வைப்பது இன்றைக்கு இல்லா விட்டாலும் என்றைக்கும் அபாயம் தான். நாளைக்கே அக்ஷய் சொல்லி அந்த ஆள் போலீசில் அப்ரூவர் ஆகி விட்டால்....?"

பல விதங்களில் அவரிடம் பேசி இஸ்மாயிலும் அமானுல்லாவும் இப்ராஹிம் சேட்டை வாயடைத்து விட்டார்கள். "இனி எல்லாவற்றையும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். நீங்கள் பேசாமல் இருந்தால் போதும்..."

தொழிலில் இருந்து விலக முடிவெடுத்த நண்பனையும், அவனுடைய சாமியார் மகனையும் ஆதரித்து இனி ஒன்றும் ஆகப் போவதில்லை, நாகராஜனுடைய பங்கை விட்டு தன் பங்கை மட்டும் மூன்று மகன்களுக்குப் பிரித்தால் அவர்களுக்குப் பெரிதாக ஒன்றும் கிடைத்து விடப்போவதில்லை என்றெல்லாம் கணக்குப் போட்ட

இப்ராஹிம் சேட்டின் மனசாட்சி லாபநஷ்டக்கணக்கு பார்த்து அடங்கிப் போனது.

இப்ராஹிம் சேட் கடைசியாக ஒரே ஒரு அறிவுரை தந்தார். "நம் ஆட்கள் யாரையும் இதில் ஈடுபடுத்தாதீர்கள்."

நாகராஜன் மறு நாளே தன்னிடம் இருந்த அடியாட்களுக்கு எல்லாம் கைநிறைய பணம் தந்து அனுப்பி விட்டார். வீட்டில் பலகாலமாய் வேலை செய்து கொண்டிருந்த பீம்சிங் என்ற வேலைக்காரனைத் தவிர வேறு வேலையாட்களோ, அடியாட்களோ இல்லாததை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு இஸ்மாயிலும் அமானுல்லாவும் திட்டம் போட்டு செயலில் இறங்கினர். வேறு கும்பல்களில் இருந்து முதலிலேயே நாகராஜன் மீது பகைமை உள்ள ஆட்களைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார்கள்.

அந்தக் கும்பல் ஒரு நாள் இரவு நாகராஜனுடைய வீட்டுக்கு வந்து அவரையும், தடுக்க வந்த அவர் மனைவியையும் துப்பாக்கியால் சுட்டுத் தள்ளி விட்டு ஓடினார்கள்.

அக்ஷய் மும்பை வந்து சேர்ந்த போது அவன் பெற்றோர் இருவரும் உயிருக்குப் போராடிய நிலையில் ஆஸ்பத்திரியில் இருந்தார்கள். அக்ஷய் அவர்களைப் பார்க்கும் முன் டாக்டரைப் பார்த்து கேட்டான். "டாக்டர் அவர்கள் இரண்டு பேரும் உயிர் பிழைக்க ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா? ஏதாவது செய்து காப்பாற்ற முடியுமா?"

டாக்டர் அவனை வருத்தத்துடன் பார்த்து சொன்னார். "இல்லை. அவர்கள் இந்த நேரம் வரை பிழைத்திருப்பது கூட மருந்தின் சக்தியால் அல்ல. இறப்பதற்கு முன் உன்னைப் பார்த்தாக வேண்டும் என்று கஷ்டப்பட்டு உயிரைத் தக்க வைத்துக் கொண்டிருப்பது போல் இருக்கிறது தம்பி. முதலில் அவர்களைப் பார்க்க சீக்கிரம் போ."

அக்ஷய் முதலில் திலகவதியைப் பார்த்தான். திலகவதி பேசும் நிலைமையில் இருக்கவில்லை. மகனை மலர்ந்த முகத்துடன் கண்ணாரப் பார்த்தாள். "அம்மா" என்று அழுகையினூடே அவன் அழைத்ததைக் கேட்டு பதிலாக லேசாகப் புன்னகை செய்தபடியே இறந்து போனாள்.

நாகராஜன் தன் சர்வ சக்தியையும் திரட்டிக் கொண்டு மகனிடம் விட்டு விட்டுப் பேசினார். "உனக்குப் பிடிக்காத தொழிலை... விட்டு

விட நினைத்தேன்...விட்டு விட்டு உன்னுடன் அமைதியாக வாழ ஆசைப்பட்டோம்..... விதி விடவில்லை...."

அக்ஷய் அவரது கைகளைப் பிடித்துக் கொண்டு குழந்தையைப் போல அழுதான். அவர் அழக்கூடாதென்று தலையசைத்தார். "இதில் வருத்தப்பட எதுவுமில்லை. துப்பாக்கி எடுத்தவனுக்கு..... ..... துப்பாக்கியால் தான் சாவு வரும்...அப்படி தான் எனக்கு வந்து விட்டது.... ஆனால் உன் அம்மா நல்லவள். அவளுக்கு முடிவு இப்படி வந்திருக்க வேண்டாம்...."

அக்ஷய் விதியின் கொடுமையை நினைத்து உருகினான். பின் சொன்னான். "அப்பா... நான் ஏதாவது உங்களுக்கு வருத்தம் தருகிற மாதிரி நடந்திருந்தால் மன்னித்து விடுங்கள் அப்பா"

நாகராஜன் மனப்பூர்வமாக சொன்னார். "அப்படிச் சொல்லாதே. எங்கள் வாழ்க்கையில் நடந்த ஒரே நல்ல விஷயம் நீ தான்..... நாங்கள் பெருமைப்படுகிற ஒரே சொத்தும் நீ தான்... அழாதே... உன் அழுகையைப் பார்க்கிற சக்தி எனக்கில்லை.... சந்..தோஷ.....மா....ய்......இ..ரு.........."

அதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை. மூச்சிரைக்க ஆரம்பித்தது. பத்து நிமிடங்களில் அவரும் இறந்து போனார்.

நாகராஜன் தம்பதியரின் உடல்களுக்கு மரியாதை செய்யவும், துக்கம் விசாரிக்கவும் பல தரப்பட்ட மக்கள் வந்தார்கள். இப்ராஹிம் சேட் குடும்பம் கூட வந்தது. இப்ராஹிம் சேட் உடல்கள் தகனம் வரை அக்‌ஷயின் கூட இருந்தார். அக்‌ஷய் தீ மூட்டிய போது வாய் விட்டு அழுதார்.

அவர் மயானத்திலேயே அக்‌ஷயிடம் சொன்னார். “நாகராஜன் எனக்கு நண்பன் மட்டுமல்ல, சகோதரன் மாதிரி தான். இந்தக் கொலையை யார் செய்திருந்தாலும் கண்டு பிடித்து பழி வாங்கும் வரை நான் ஓய மாட்டேன்.....”

அக்‌ஷய் சலனமே இல்லாமல் அவரைப் பார்த்தான்.

அவருக்கு அவனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆஸ்பத்திரியில் இருந்து பிணங்கள் வீட்டுக்கு வந்த நிமிடம் முதல் அவனை அவர் கவனித்தபடி இருந்தார். அவன் இப்படித் தான் சலனமே இல்லாமல் இருந்தான். ’நிஜமாகவே இஸ்மாயில் சொன்னது போல இவன் சாமியாராகி விட்டானா? உணர்ச்சியே இல்லாமல் இருக்கிறானே?’

போலீசார் விசாரிக்க வந்த போதும் அப்படியே பட்டும் படாமலும்

இருந்தான். யார் மீதாவது சந்தேகப்படுகிறீர்களா என்று அவர்கள் கேட்ட போது அமைதியாக யார் மேலும் சந்தேகம் இல்லை என்றான்.

கிளம்பும் போது இப்ராஹிம் சேட் சொன்னார். “என்ன உதவி வேண்டுமானாலும் நீ என்னிடம் தயக்கம் இல்லாமல் கேள் அக்‌ஷய்...”

அக்‌ஷய் தலையாட்டினான்.

எல்லோரும் சென்ற பிறகு அக்‌ஷய் நாகராஜனின் நெருங்கிய நண்பர்கள் சிலருக்குப் போன் செய்து பேசினான். அவர்களில் சிலர் இப்ராஹிம் சேட்டிற்கும் நண்பர்கள். அவர்கள் ஒருவித தர்மசங்கடமான மௌனத்தைக் கடை பிடித்தார்கள். நாகராஜனுக்கு மட்டும் நண்பர்களாக இருந்த ஓரிருவர் நடந்ததற்கு எல்லாம் பின்னணியில் இருந்த நபர்கள் சிலரின் பெயரைச் சொன்னதோடு இதற்கு இப்ராஹிம் சேட்டின் மூத்த இரு மகன்கள் தான் தூண்டுகோல் என்று வெளிப்படையாகச் சொன்னார்கள்.

அப்படிச் சொன்னவர்கள் ஏதாவது உதவி வேண்டுமா என்று கேட்ட போது அக்‌ஷய் அமைதியாகச் சொன்னான். “வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன்.”

அக்ஷய் போன் செய்து பேசிய நபர்களில் இப்ராஹிம் சேட்டிற்கும் நண்பர்களாக இருந்தவர்கள் அக்ஷய் போன் செய்து பேசியதை இப்ராஹிம் சேட்டிற்கும் தெரிவித்தார்கள். இப்ராஹிம் சேட்டின் மூளையில் அபாய மணி அடித்தது. எதற்கும் அசராமல் அமைதியாக இருந்த அக்ஷயின் நடவடிக்கையின் பின்னணியில் ஒரு எரிமலை வெடிக்கக் காத்திருப்பது போல் அவர் உணர்ந்தார்.

மகன்களை அழைத்துச் சொன்னார். “நீங்கள் மூன்று பேரும் சிறிது நாட்களுக்கு ஏதாவது வெளிநாடு போய் விட்டு வருவது நல்லது என்று எனக்குப் படுகிறது”

இஸ்மாயில் வாய் விட்டு குலுங்க குலுங்க சிரித்தான். “தனி மரமாய் அவன் நிற்கிறான். அவனைப் பார்த்துப் பயப்பட்டு நாங்கள் ஓடி ஒளிவதா? அவன் என்ன செய்து விட முடியும் என்று நினைக்கிறீர்கள்? குங்க்ஃபூ சண்டைக்கு வருவானா? இல்லை குரானில் கேள்வி கேட்டு போட்டிக்குக் கூப்பிடுவானா? அவனிடம் சண்டை போட்டு நாங்கள் தோற்றதெல்லாம் சின்ன வயதில். இப்போது நாங்கள் குங்க்ஃபூ சண்டைக்குப் போக மாட்டோம். எங்கள் துப்பாக்கி தான் பேசும். அவன் அப்பன் போன இடத்திற்கே போக ஆசையிருந்தால் அவன் வரட்டும். நாங்கள் சந்தோஷமாக அனுப்பி வைக்கிறோம்”

மகன் சொன்னது போல் அவன் தனிமரம் என்பதில் அவருக்கு ஒருவித ஆசுவாசம் இருந்தது. அவன் உதவிக்கு நாகராஜன் நண்பர்கள் சிலர் சேர்ந்தாலும் அவருடைய சாம்ராஜ்ஜியத்திற்கு முன் அவர்கள் ஒன்றுமில்லை. ஆனாலும் அவருக்கு ஏதோ ஒரு சின்ன பயம் அடிமனதை விட்டு அகலவில்லை. மகன்களுக்குத் தெரியாமல் சில அடியாட்களை அழைத்து மகன்கள் அருகில் எப்போதும் இருக்க வேண்டும் என்றும் பாதுகாக்க வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.

அக்‌ஷய் மூன்றே நாளில் தன் தந்தைக்கெதிராக பின்னப்பட்ட சதிவலையின் முழுத் தகவல்களும் அறிந்தான். வேலையாள் பீம்சிங் சொன்ன அடையாளங்களும், நாகராஜனின் நண்பர்கள் சொன்ன பெயர்களும் வைத்துக் கொண்டு தன் தந்தையின் பழைய அடியாட்களையும் விசாரித்து அனைத்தையும் தெரிந்து கொண்டான்.

நாகராஜனின் அடியாட்களில் சிலர் அக்‌ஷயிடம் சொன்னார்கள். “உங்கப்பா உப்பைத் தின்று வளர்ந்தவர்கள் நாங்கள். அவருக்காக உயிரையும் விடத் தயாராக இருக்கிறோம். நாங்கள் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்”

இப்ராஹிம் சேட்டின் மகன்கள் பயன்படுத்திய கொலையாளிகளின் தங்குமிடம் போக்குவரத்து போன்ற விவரங்கள் மட்டும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட அக்‌ஷய் "மீதியை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொன்னான்.

நாகராஜனின் அடியாட்களும் அவருடைய நண்பர்களும் அக்‌ஷயிற்காக இரக்கப்பட்டார்கள். இப்ராஹிம் சேட்டின் பலத்தின் முன் இப்போது அக்‌ஷய் வெறும் ஒரு துரும்பு என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவன் அவர்கள் உதவியைக் கூட மறுத்து தனியாக எதையும் சாதிக்க முடியாது என்பதில் அவர்களுக்கு சந்தேகமில்லை.

அவர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டார்கள். "இந்தத் தொழிலில் இருந்து விட்டுப் பின் விலகினால் எதிராளிகளிடம் இருந்து தப்பிக்க முடியாது என்பதற்கு நாகராஜனே ஒரு நல்ல உதாரணம்"

அக்‌ஷய் மிக அமைதியாகத் தனியறையில் நான்காம் நாள் முழுவதையும் கழித்தான். அலட்டிக் கொள்ளாமல் திட்டம் தீட்டினான். சரியாக ஐந்தாம் நாள் தன் வேலையை ஆரம்பித்தான்.

அவன் எதிரிகள் அரண்டு போனார்கள்.

63

முதல் தகவல் ஐந்தாம் நாள் அதிகாலை ஆறு மணிக்கு இப்ராஹிம் சேட்டிற்குக் கிடைத்தது. நாகராஜனை சுட்டுக் கொன்ற நபர்களில் ஒருவனை உடனடியாக ஆஸ்பத்திரிக்குப் போய் அவர் பார்த்தார். உயிர் இருக்கிறது என்பதற்கு அறிகுறியாக அவன் கண்கள் மட்டும் அசைந்தன. மற்றபடி அவன் ஜடம் போல் அசைவற்றுப் படுத்திருந்தான். அவன் கண்களில் பயம் மட்டுமே தெரிந்தது.

இப்ராஹிம் சேட் அவன் கூட இருந்தவர்களை விசாரித்தார். வழக்கம் போல் காலை டீ குடிக்க வெளியே சென்றவன் இந்த நிலையில் தெருவில் விழுந்திருந்தான் என்றும் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை என்றும் சொன்னார்கள்.

அடுத்த போன் காலை எட்டரை மணிக்கு வந்தது. நாகராஜனை சுட்டுக் கொன்ற இன்னொரு நபர் கழுத்தில் ஏதோ நரம்பு பிசகி தாங்க முடியாத வலியில் துடித்துக் கொண்டிருக்கும் தகவல் அது. மூளைக்குச் செல்லும் ஏதோ நரம்பும் சம்பந்தப்பட்டு இருப்பதால் ஏதோ பெருத்த சேதாரம் உள்ளே ஏற்பட்டிருக்க வேண்டும் என்று டாக்டர்கள் அபிப்பிராயம் தெரிவித்ததாகச் சொன்னார்கள். அவன்

என்னைக் கொன்று விடுங்கள் என்று மனமுருகக் கெஞ்சுவதாகச் சொன்னார்கள்.

மூன்றாவது போன் ஒன்பது முப்பத்தைந்திற்கு வந்தது. நாகராஜனைக் கொல்லச் சென்ற இன்னொரு ஆள் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதாகத் தகவல் சொன்னார்கள். என்ன ஆயிற்று என்று ஒருவருக்கும் தெரியவில்லை. உடலில் எந்த விதக்காயமும் இல்லை. ஆனால் உயிர் பிழைப்பது கஷ்டம் என்று சொன்னார்கள்.

இப்ராஹிம் சேட் அடுத்ததாக போன் மணி அடித்த போது பேசத் துணியவில்லை. என்ன நடக்கிறது என்பதை ஊகிக்க அவருக்கு அதிக நேரம் தேவைப்படவில்லை. மகன்களை அழைத்துச் சொன்னார். "அவன் உணமையைத் தெரிந்து கொண்டு விட்டான் என்றே தோன்றுகிறது. எனவே சிறிது காலம் கண் காணாத இடத்திற்குப் போய் தங்கி விட்டு வாருங்கள்."

மகன்கள் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. அவர்கள் அப்போதும் அவன் தங்களை எதுவும் செய்து விட முடியாது என்று நம்பினார்கள். அவன் தங்கள் அருகில் கூட வர முடியாது என்று திடமாக எண்ணினார்கள். "அவன் அருகில் வரும் வரை எங்கள் கைகள் பூப்பறித்துக் கொண்டு இருக்குமா என்ன? அவனைத்

தூரத்தில் பார்த்தவுடனே சுட்டுத் தள்ளி விடுவோம்" என்றனர்.

தன் அனுமதி இல்லாமல் எந்த முட்டாள்தனத்தையும் செய்து விட வேண்டாம் என்று மகன்களை எச்சரித்த அவர் மகன்களை வீட்டை விட்டு எங்கும் வெளியே போகக் கூடாது என்றும் உத்தரவு பிறப்பித்தார். குடும்பத்தினருக்கு காவலை அதிகப்படுத்தினார்.

ஐந்தாம் நாள் இறுதிக்குள் ஏழு பேர் கத்தியின்றி ரத்தமின்றி பெரிய மரணாவஸ்தையை அனுபவித்துக் கொண்டிருக்கும் செய்தி கிடைத்தது. அவர்கள் அனைவரும் நாகராஜனைக் கொல்லச் சென்றவர்கள் தான். அவர்கள் மரணமே மேல் என்று நினைக்கும் படியான நிலைமையில் இருந்தனர். டாக்டர்கள் அவர்களுக்கு எப்படி அறுவை சிகிச்சை செய்தாலும் மூளையின் செயல்பாட்டை அது பாதிக்காமல் இருக்க வாய்ப்பில்லை என்று சொன்னார்கள்.

மகன்கள் சொன்னது போல இந்த ஆட்கள் ஏன் எதுவும் செய்யவில்லை என்ற சந்தேகம் இப்ராஹிம் சேட்டிற்கும் வந்தது. அவன் அருகே வரும் வரை இவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? இந்தத் தொழிலில் எப்போதும் எதிரியின் தாக்குதலை எதிர்கொள்ளும் நிலையில் அல்லவா இருப்பார்கள். அப்படியிருக்கையில் எப்படி....?

அந்த ஏழு பேர் குடும்பத்தினரையும் சுற்றி இருந்தவர்களையும் நன்றாக விசாரித்த போது அந்த ஏழு பேருமே அவன் அருகில் வந்ததை அறியவில்லை என்றார்கள். ஏழு பேர்களில் மூன்று நபர்களுக்கு அருகில் இருந்தவர்கள் மட்டும் அவனைக் கவனித்ததைச் சொன்னார்கள்.

இப்ராஹிம் சேட் சந்தேகத்தோடு கேட்டார். "பார்த்தவர்கள் எப்படி அவனை நெருங்க விட்டீர்கள்?"

"அவன் தான் என்பது மூளைக்கு எட்டும் முன்னாலேயே அவன் வந்து வேலையை முடித்தும் விட்டான். அதுவும் அவன் லேசாகத் தொட்ட மாதிரி தான் இருந்தது. ஆனால் விளைவு இப்படி இருக்கும் என்பதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. என்ன நடக்கிறது என்று நாங்கள் புரிந்து கொள்வதற்கு முன்னாலேயே அவன் போயும் விட்டான்."

இப்ராஹிம் சேட் முதல் முறையாக தன் கணக்கு பொய்த்து விட்டதை உணர்ந்தார். சாமியாராகப் போகப் போகும் ஒற்றை மனிதன் என்று நினைத்தவன் பெரிய சைத்தானாக இருப்பான் என்று கனவிலும் நினைக்கவில்லை.

அக்‌ஷய் உயிருடன் இருக்கும் வரை தன் குடும்பத்தினர்

அபாயத்திலேயே இருக்க நேரிடும் என்ற உண்மை அவருக்கு நன்றாகவே உறைத்தது. பகைமையில் பாக்கி வைப்பதும் தீயில் மிச்சம் வைப்பதும் பேராபத்து என்று உணர்ந்த அவர் அக்ஷயைக் கொன்று விடத் தீர்மானித்தார். அதற்கென அவர் தகுந்த ஆட்களை அணுகிய போது அவர்கள் பின் வாங்கினர்.

"எவ்வளவு வேண்டுமானாலும் நான் பணம் தருகிறேன். எனக்கு நீங்கள் வேலையை முடித்துக் கொடுத்தால் போதும்." என்று இப்ராஹிம் சேட் சொன்ன போது அவர்கள் சொன்னார்கள். "பணத்தை செலவு செய்கிற நிலையிலாவது இருக்க வேண்டுமல்லவா?". அந்த ஏழு பேர் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் இருப்பதைப் பார்த்தவர்கள் அவர்கள். அக்ஷய் வசிக்கும் தெரு அருகில் செல்லக் கூ◌ிட அவர்கள் விரும்பவில்லை.

கடைசியில் தங்களுக்கும் பெரிய தாதாவான உஸ்மான் பாயை இப்ராஹிம் சேட் அணுகினார். இப்ராஹிம் சேட், நாகராஜன் சாம்ராஜ்ஜியம் மும்பை, பூனே மற்றும் அருகே உள்ள பகுதிகளில் வெற்றிகரமாக இயங்கியது என்றால் உஸ்மான் பாயின் செல்வாக்கு நாடெங்கும் இருந்தது மட்டுமல்லாமல் சர்வதேச அளவிலும் இருந்தது. அல்கொய்தா தீவிரவாதிகளிடம் கூட அவருக்கு செல்வாக்கு இருப்பதாக மும்பையில் பலர் உறுதியாக நம்பினார்கள்.

ஆனால் உஸ்மான் பாய் இப்ராஹிம் சேட்டிடம் தயவு தாட்சண்யம் இல்லாமல் சொன்னார். "இப்ராஹிம், நம் தொழில் சுத்தமில்லாதது தான். ஆனால் நமக்கு கூட சொல்லப்படாத சில விதிமுறைகள் இருக்கின்றன. நாம் நண்பர்களிடமும், நம்மை நம்பி வந்தவர்களிடமும் நியாயமாக நடந்து கொள்ள வேண்டியவர்கள். நாகராஜன் உங்களை ஏமாற்றவில்லை, காட்டிக் கொடுக்கவில்லை, உங்கள் வழியில் குறுக்கே நிற்கவில்லை. ஆனாலும் நீங்கள் அவரைக் கொன்றதை நீங்கள் எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. அவர் மகன் நடவடிக்கை எதிலும் நான் தவறு காணவில்லை. இன்னும் சொல்லப் போனால் எனக்கு அவனைப் பாராட்டவே தோன்றுகிறது. அவன் மட்டும் நம் தொழிலில் இருந்திருந்தால் அவனை எப்பாடு பட்டாவது என் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பார்த்திருப்பேன்."

உஸ்மான் பாயின் சொற்கள் ஈட்டியாக இப்ராஹிம் சேட் மனதில் பாய்ந்தன. மகன்கள் பேச்சைக் கேட்டு நடந்து கொண்ட விதத்திற்காக அந்தக் கணம் உண்மையாகவே வருந்தினார். ஆனால் இனி நடந்தது எதையும் மாற்ற இயலாத நிலையில் ஆரம்பித்ததை முடித்தே விட வேண்டிய கட்டாயத்தில் அவர் இருந்தார். அக்‌ஷயிடம் இருந்து தன் குடும்பத்தைக் காப்பாற்றுவது எப்படி என்று யோசிக்க ஆரம்பித்தார்.

உஸ்மான் பாய் கூட கை விரித்து விட்டார் என்று கேள்விப்பட்டவுடன் இப்ராஹிம் சேட்டின் மகன்கள் தந்தைக்குத் தெரியாமல் கலந்தாலோசித்தனர். இஸ்மாயில் தம்பிகளிடம் சொன்னான். "அவன் வர்மக்கலையில் எல்லா வித்தைகளையும் இமயமலையில் இருந்து கற்றுக் கொண்டு வந்திருக்கிறான் என்று ஆட்கள் சொல்கிறார்கள். நாம் எதிர்பார்த்ததை விட அவன் சாமர்த்தியசாலியாகத் தான் இருக்கிறான். ஆனாலும் நாம் இப்படி வீட்டில் அடைபட்டு உட்கார்ந்து கொண்டிருப்பது எத்தனை நாளுக்கு நடக்கும். நம் ஆட்கள் கூட நம்மை கேலியாகப் பேசுகிறார்கள். அவன் எப்போது வருவான் என்று பயந்து பயந்து ஒளிந்திருப்பதை விட அவனைக் கொன்று விட்டு நாம் நிம்மதியாக இருப்பது தான் புத்திசாலித்தனம்."

அமானுல்லா சொன்னான். "ஆனால் அவனைக் கொல்ல யாரும் முன் வர மாட்டேன்கிறார்களே."

இஸ்மாயில் சொன்னான். "அப்படியானால் நாமே அந்த வேலையைச் செய்ய வேண்டியது தான். அவனுக்கு அவன் அப்பனைக் கொன்றதில் நம் பங்கு இருக்கிறது என்பது தெரிந்த பிறகு அவனிடம் நாம் நடிக்க என்ன அவசியம் இருக்கிறது?."

"சரி நாம் அவனை எப்படிக் கொல்வது?"

"அவன் தூங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் நாம் அவன் வீட்டுக்குப் போய் சுட்டுக் கொன்று விடுவது தான் சுலபமான வழி. அவன் விழித்துக் கொண்டிருக்கும் போது தானே அபாயமானவன்."

"அவன் தூங்கிக் கொண்டிருக்கும் போது அவனுக்குத் தெரியாமல் வீட்டுக்குள்ளே போவதெப்படி?"

இஸ்மாயில் பெருமையாகச் சொன்னான். "அதற்கு நான் ஒரு வழி கண்டு பிடித்திருக்கிறேன்."

## 64

இஸ்மாயில் சொன்னதைக் கேட்டு அவனது சகோதரர்கள் பரபரப்படைந்தார்கள்.. "என்ன வழி?"

இஸ்மாயில் பெருமிதத்துடன் தன் திட்டத்தைச் சொன்னான்....

அக்‌ஷய் வீட்டில் பல ஆண்டுகளாக வேலை பார்க்கும் பீம்சிங் ஒருவன் தான் இன்னமும் அந்த வீட்டில் வேலை செய்கிறான். நாகராஜன் குடும்பத்திற்கு அவன் மேல் பரிபூரண நம்பிக்கை

உள்ளது. அவனுக்கு நெருங்கிய உறவினரான சகதேவ் என்கிற இளைஞனை இஸ்மாயில் நன்றாக அறிவான். அந்த சகதேவ் லூதியானாவின் அருகே ஒரு கிராமத்தில் வசிக்கிறான். அவன் மும்பை வரும் போதெல்லாம் பீம்சிங்கைப் பார்த்து பேசி அக்‌ஷய் வீட்டில் இரவு தங்கி மறு நாள் காலை போவது வழக்கம். அவனை சில்லறை வேலைகளுக்கு இஸ்மாயில் சில முறை உபயோகப்படுத்தியும் இருக்கிறான். அவன் பணத்திற்காக எதுவும் செய்யும் ரகத்தைச் சேர்ந்தவன்.

அவனை வரவழைத்து ஒரு நாள் இரவு வழக்கம் போல் அக்‌ஷய் வீட்டில் தங்க வைத்து நள்ளிரவில் வீட்டுக் கதவை ரகசியமாகத் திறந்து விடச் சொல்லி ரகசியமாக உள்ளே நுழைந்து உறங்கிக் கொண்டிருக்கும் அக்‌ஷயை (அருகில் செல்லாமல் தூரத்தில் இருந்தே) சுட்டுக் கொன்று விடலாம் என்பது தான் இஸ்மாயிலின் திட்டமாக இருந்தது. கேட்டு விட்டு இஸ்மாயிலை சகோதரர்கள் பெருமையுடன் பாராட்டினார்கள்.

இஸ்மாயில் சக்தேவிற்குப் போன் செய்து வரவழைத்தான். வீட்டுக்குள் இருந்து கதவைத் திறக்கும் வேலைக்கு ஐம்பதாயிரம் ரூபாய் தருவதாகச் சொன்ன போது சகதேவிற்குத் தன் அதிர்ஷ்டத்தை நம்ப முடியவில்லை. முன் பணமாக இஸ்மாயில் சகதேவிற்கு பத்தாயிரம் ரூபாயைத் தந்தான். கதவைத் திறந்த

கையில் மீதி நாற்பதாயிரம் தருவதாக இஸ்மாயில் வாக்களித்தான்.

நாகராஜனும் மனைவியும் கொல்லப்பட்டதை மட்டும் பத்திரிக்கைகளில் படித்து அறிந்திருந்த சகதேவிற்கு நாகராஜனைக் கொன்றவர்களின் தற்போதைய நிலை தெரிந்திருக்கவில்லை. இஸ்மாயில் சகோதரர்களும் அதைச் சொல்லி பயமுறுத்த விரும்பவில்லை. சகதேவிற்கு நாகராஜனின் மகனையும் சொர்க்கத்திற்கு அனுப்புவதில் எந்த ஆட்சேபணையும் இல்லாத காரணத்தால் அவன் மகிழ்ச்சியுடன் அன்று மாலையே அக்ஷய் வீட்டிற்குப் போனான்.

ஒரு காலத்தில் குறைந்தது நாலைந்து தடியர்களாவது அந்த வீட்டுக்கு வெளியே பாதுகாவலுக்கு இருப்பார்கள். இன்றோ வீடு வெறிச்சென்று இருந்தது. குறைந்த பட்சம் இரண்டு மூன்று நாய்களையாவது காவலுக்கு வைத்திருக்கலாம், அந்த அறிவு கூட இல்லை இந்த சாமியார்ப் பையனுக்கு என்று நினைத்துக் கொண்டே சகதேவ் அந்த வீட்டின் கதவைத் தட்டினான்.

கதவைத் திறந்த பீம்சிங் ஆழ்ந்த துக்கத்தில் இருந்தான். நீண்ட காலமாக நாகராஜனிடம் வேலை பார்க்கும் அவனுக்கு அது வேலை செய்கிற வீடு என்கிற மனோபாவத்தை நாகராஜன் குடும்பத்தினர் ஏற்படுத்தியதில்லை. குடும்பத்தினரில் ஒருவன் போலவே இருந்த

பீம்சிங்கிற்கு அநியாயமாக தன் எஜமானரையும், எஜமானியையும் கொன்றதில் தாங்க முடியாத துக்கம் இருந்தது. தன் உறவினனான சகதேவை வரவேற்று ஊரில் அனைவரும் சௌக்கியமா என்று கேட்டு விட்டு பின் பீம்சிங் பேசியதெல்லாம் நாகராஜனைப் பற்றியும், திலகவதியைப் பற்றியும் தான்.

கேட்டு காது புளித்துப் போன சகதேவ் அக்ஷயைப் பற்றி விசாரித்தான்.

"அக்ஷய் தங்கமான பையன். எப்படியோ மனதைத் தேற்றிக் கொண்டு எந்திரம் மாதிரி இருக்கிறான். சின்னதில் இருந்தே மனதில் இருப்பதை சட்டென்று வெளியே சொல்ல மாட்டான். பாவம் எப்போதாவது வெளியே போய் விட்டு வருவான். பின் அவன் அறையிலேயே ஐக்கியமாகி விடுகிறான்....."

இன்றிரவே சாகப் போகும் அக்ஷயிற்காகவும் நாளை நீ துக்கப்படப் போகிறாய் என்று பீம்சிங்கைப் பார்த்து நினைத்த சகதேவ் சொன்னான். "நானும் எத்தனையோ நாள் இந்த வீட்டில் சாப்பிட்டு இருக்கிறேன். அதனால் அக்ஷயைப் பார்த்து துக்கம் விசாரித்து விட்டுப் போவது தான் முறை என்று வந்தேன்."

பீம்சிங் அக்ஷயின் அறைக்கு சகதேவைக் கூட்டிக் கொண்டு

போனான். சகதேவ் தெரிவித்த அனுதாபங்களைப் பெற்றுக் கொண்ட அக்‌ஷயிடம் சகதேவ் மிக அக்கறை உள்ளவன் போல எச்சரிக்கையும் செய்தான். “சார். நீங்களும் ஜாக்கிரதையாக இருங்கள். உங்கள் அப்பாவின் எதிரிகள் உங்களுக்கு எந்த ஆபத்தையும் ஏற்படுத்தி விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்”.

அக்‌ஷய் தத்துவம் பேசினான். “சகதேவ் என் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் ஆயுள் முடிந்து விட்டது. இப்படி ஆகி விட்டது. எனக்கும் ஆயுள் இவ்வளவு என்று கடவுள் என்றோ தீர்மானித்திருப்பான். அந்த நேரத்திற்கு முன்னாலும் நான் சாக முடியாது. அதற்கு அப்புறமாகவும் நான் சாக முடியாது. அதனால் நான் இதைப் பற்றி எல்லாம் கவலைப்படுவதில்லை”

சொன்ன போது நிஜமாகவே அவன் முகத்தில் தெரிந்த கவலையின்மை சகதேவிற்கு அவனை ஏளனமாக நினைக்கத் தோன்றியது. ”அட முட்டாளே. தத்துவம் பேசியே இன்றைக்கு இரவு உயிரை விடப் போகிறாயடா” என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

அன்றிரவு இஸ்மாயில் தன் சகோதரர்கள் மற்றும் மூன்று நண்பர்களுடன் தன் வீட்டை விட்டு இரவு ஒரு மணிக்கு மேல் கிளம்பினான். இப்ராஹிம் சேட் அறிந்தால் கண்டிப்பாக விட

மாட்டார் என்பதால் அவருக்குத் தெரியாமல் கிளம்புவதில் அவர்கள் மிகவும் கவனமாக இருந்தார்கள். அக்‌ஷயின் வீட்டுக்கு அவர்கள் வந்து சேர்ந்த போது மணி நள்ளிரவு இரண்டாகி இருந்தது.

சகதேவ் மீதி நாற்பதாயிரம் வாங்கும் ஆர்வத்தில் உறங்காமல் அவர்களுக்காக காத்திருந்தான். பீம்சிங் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான். அக்‌ஷயும் இரவு உணவு முடிந்த உடனேயே மூன்று நான்கு கொட்டாவிகள் விட்டு மறுபடியும் தன் அறைக்கு உறங்கப் போய் விட்டான். அதனால் சகதேவன் ஜன்னல் வழியே பார்த்த படி அவர்கள் இஸ்மாயில் வரவிற்காக வழி மேல் விழி வைத்துக் காத்திருந்தான்.

அவர்கள் காரை தெரு முனையிலேயே நிறுத்தி விட்டு வந்தார்கள். அவர்களுக்காக காத்திருந்த சகதேவ் சத்தமில்லாமல் கதவைத் திறந்தான். அந்த வீட்டில் அவர்கள் உள்ளே நுழைந்தவுடன் அது வரை ஒளி தந்து கொண்டு இருந்த ஜீரோ வாட்ஸ் பல்பும் அணைந்து கும்மிருட்டு பரவியது.

அடுத்த கணம் இஸ்மாயிலின் நண்பன் “ஆ” என்று அலறினான்.

“ஏன் பயப்படுகிறாய்? இரு செல் போன் லைட்டைப் போடுகிறேன்” என்று அமானுல்லா சொன்னான். அந்த நண்பன் குரல் அதற்கு மேல்

கேட்கவில்லை. அமானுல்லா செல் போனை எடுக்க யாரோ அதைத் தட்டி விட்டார்கள். அந்த செல்போன் கீழே விழுந்தாலும் சில வினாடிகள் வெளிச்சத்தைத் தந்தது.

அந்த வெளிச்சத்தில் தான் ஆ என்று அலறிய இஸ்மாயிலின் நண்பன் கீழே விழுந்து கிடப்பதைப் பார்த்தார்கள். அந்த அரையிருட்டில் ஏதோ நிழல் போல ஒரு உருவம் லாவகமாய் அசைந்ததை இஸ்மாயில் பார்த்தான். அடுத்த படியாக அமானுல்லா தடாலென்று கீழே சரிந்தான்.

நடப்பது என்ன என்று இஸ்மாயிலிற்குப் புரிவதற்குள் மேலும் இரண்டு நண்பர்களும் அலறியபடி சுவரில் சாய்ந்து சிலை போல நின்றார்கள். கீழே விழுந்திருந்த செல்போன் வெளிச்சம் தருவதை நிறுத்தியது. இஸ்மாயிலும், அவனுடைய கடைசித் தம்பி அஸ்ரஃபும் தங்களை கழுத்தருகே யாரோ லேசாகத் தட்டியது போல உணர்ந்தார்கள். உடனடியாக அவர்களும் அலறியபடி செயல் இழந்தார்கள்.

சிறிது நேரத்தில் ஜீரோ வாட்ஸ் பல்பு மீண்டும் எரிய ஆரம்பித்தது. சகதேவ் தான் காண்பது கனவா இல்லை நனவா என்று அறியாமல் திகைத்தான். தரையில் இருவர், சுவரில் சாய்ந்தபடி இருவர், சிலை போல் நின்றபடி இருவர் ஏதோ மந்திரத்தால் கட்டுண்டது போல

ஏன் நிற்கிறார்கள், இவர்களுக்கு என்ன ஆயிற்று என்று புரியாமல் விழித்தவன் பார்வையைத் திருப்பிய போது சற்று தள்ளி அக்‌ஷய் அமைதியாக அங்கு நிற்பதைக் கண்டான்.

சகதேவிற்கு மெல்ல எல்லாம் புரிய ஆரம்பித்தது. விளக்கு தானாக அணையவில்லை. அக்‌ஷய் தான் மெயினை ஆஃப் செய்திருக்கிறான். அப்படி என்றால் அவர்கள் வருவார்கள் என்பதை முன்னமே அக்‌ஷய் ஊகித்து வைத்திருக்கிறான். பேசியது தத்துவமாக இருந்தாலும் செயல்பாடு எல்லாம் நேர் எதிராக இருந்திருக்கிறது. ஆனால் சகதேவிற்குப் புரியாத ஒரு விஷயம் இருந்தது. 'இந்த இருட்டில், இத்தனை குறுகிய நேரத்தில், இந்த ஆறு பேரையும் என்ன செய்து இந்த நிலைக்கு ஆளாக்கி இருக்கிறான்?'

அக்‌ஷய் ஆக்ரோஷத்தில் இருந்திருந்தாலோ, மூச்சிரைக்க நின்றிருந்தாலோ அது இயல்பாக சகதேவிற்குத் தோன்றியிருக்கும். ஆனால் எந்த வித சலனமும் இல்லாமல் சமபந்தமில்லாத நிகழ்வுகளை அசுவாரசியத்துடன் வேடிக்கை பார்க்கும் நபர் போல அவன் நின்றிருந்தது சகதேவின் அடி வயிற்றைக் கலக்கியது.

அக்‌ஷய் கேட்டான். "கதவைத் திறக்க அவன் உனக்கு எவ்வளவு கொடுத்தான்?'

சகதேவிற்கு வியர்க்க ஆரம்பித்தது. நாக்கு உள்ளே ஒட்டிக் கொண்டது போல இருந்தது. பரிதாபமாக அக்‌ஷயைப் பார்த்தான்.

"ஏன் அவர்களை மாதிரியே உன்னையும் ஏதாவது செய்தால் தான் நீ வாயைத் திறப்பாயா?"

சகதேவின் கிலி பன்மடங்காக உயர்ந்தது. நடுக்கத்துடன் கஷ்டப்பட்டு நாக்கை அசைத்தான். "பத்தாயிரம்"

"வெறும் பத்தாயிரமா?"

எச்சிலை மென்று விழுங்கிய சகதேவ் சொன்னான். "கதவைத் திறந்த கையோடு இன்னும் நாற்பதாயிரம் தருவதாய் சொன்னார்"

"தந்தானா?"

"இல்லை. அதற்குள் ……"

"மகாபாவி. நீ விளங்க மாட்டாய்" - உறக்கத்தில் இருந்து எழுந்து வந்து எல்லாவற்றையும் அறிந்த பீம்சிங் சபித்துக் கொண்டே அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

அக்ஷய் அமைதியாகச் சொன்னான். “சகதேவ் நீ உன் நண்பர்களைக் கூட்டிக் கொண்டு போய் அவர்கள் வீட்டில் விட்டு விடு”.

65

அதிகாலை நான்கு மணிக்கு தங்கள் காருடன் வேறு இரண்டு டாக்சிகளும் வந்து வாசலில் நின்று ஒலியெழுப்பிய போது தான் இப்ராஹிம் சேட் கண் விழித்தார். அவர் வெளியே வந்து பார்த்த போது சகதேவ் மட்டும் பரிதாபமாக காரில் இருந்து இறங்கி மந்திரித்து விட்டவனைப் போல் நின்றான். அவனை அடையாளம் கண்டு பிடிக்க இப்ராஹிம் சேட்டிற்கு சிறிது நேரம் தேவைப்பட்டது. குழப்பத்துடன் அவர் அவனிடம் சரமாரியாகக் கேள்வி கேட்டார். "நீ எப்படி எங்கள் காரில் இருந்து இறங்குகிறாய்? எப்போது எங்கள் காரை எடுத்துக் கொண்டு போனாய்? ஏன் இரண்டு டாக்சிகளை அழைத்து வந்திருக்கிறாய்?"

சகதேவ் கையால் மட்டும் சைகை செய்து காரினுள்ளே பார்க்கச் சொன்னான்.

"நீ எப்போது ஊமையானாய்?" என்று கேட்டபடியே காரினுள்

எட்டிப்பார்த்த இப்ராஹிம் சேட் பதறிப்போனார். முன் சீட்டில் அவர் மூத்த மகன் இஸ்மாயில் கழுத்தை சாய்த்துக் கொண்டு ஜடம் போல் அமர்ந்திருந்தான். பின் சீட்டில் அவன் நண்பன் ஜடமாய் படுத்திருந்தான். அவன் கழுத்து ஒரு பக்கத் தோளோடு ஒட்டியது போல் இருந்தது.

அவர்களைப் பார்த்த இப்ராஹிம் சேட்டிற்கு அவனுக்கு என்ன ஆயிற்று, யார் அதைச் செய்தது என்பதை உணர அதிக நேரமாகவில்லை.

பதட்டத்துடன் அவர் சகதேவ் பக்கம் திரும்பினார். "இவர்கள் இரண்டு பேரும் அவனிடம் எப்படிடா மாட்டினார்கள்?"

சகதேவ் பதில் சொல்லாமல் அந்த டாக்சிகளையும் பார்க்கச் சொல்லிக் கை காண்பித்தான். அந்த டாக்சிகளிலும் இரண்டிரண்டாக இருந்த ஜடங்களைப் பார்த்த இப்ராஹிம் சேட் அடைந்த அதிர்ச்சிக்கு அளவேயில்லை. அந்த வாகனங்களை அப்படியே புகழ்பெற்ற தனியார் மருத்துவமனை ஒன்றிற்குத் திருப்பி விட்ட அவர் சகதேவைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு இன்னொரு காரில் பின் தொடர்ந்தார்.

போகும் போது சகதேவிடம் அவர் கேட்டார். "என்னடா நடந்தது?"

சகதேவ் பல முறை முயற்சித்து கடைசியாகப் பேசிய போது சொன்ன முதல் வாக்கியம்- "அவன் மனிதனே அல்ல."

பின் மெள்ள மெள்ள நடந்ததை அவன் இப்ராஹிம் சேட்டிற்கு அவன் தெரிவித்தான். அவருடைய பிள்ளைகள் போட்ட திட்டம், அவனைப் பயன்படுத்தியவிதம், அக்‌ஷய் வீட்டில் நடந்தது எல்லாவற்றையும் இன்னமும் நம்ப முடியாத கிலியோடு அவன் விவரித்தான்.

கடைசியில் அவன் சொன்னான். ".......ஒட்டு மொத்தமாக ஐந்தாறு நிமிடங்கள் தான் இருட்டில் இருந்தோம். அவன் அதற்குள் ஆறு பேரை இப்படி செய்து விட்டான். விளையாட்டு மாதிரி செய்து முடித்து விட்டான். இவர்களை எல்லாம் காரிற்குத் தூக்கிக் கொண்டு வரக் கூட அவன் உதவி செய்தான்...என் கையில் இருந்த பத்தாயிரத்தையும், இஸ்மாயில் அண்ணன் எனக்குக் கொடுக்கக் கொண்டு வந்திருந்த நாற்பதாயிரத்தையும் பிடுங்கிக் கொண்டு விட்டான்..."

அவன் இழந்த பணத்தைப் பற்றிச் சொன்ன போது மட்டும் அவனுக்கு நாக்கு தழுதழுத்தது. ஆறு பேர் இந்த நிலைக்காளானதைச் சொன்ன போது இல்லாத துக்கம் ஐம்பதாயிரக்

கணக்கைச் சொன்ன போது மட்டும் அவனுக்கு வந்ததைக் கவனித்தார் இப்ராஹிம் சேட். முட்டாள்தனமான ஒரு திட்டம் தீட்டிய தன் மகன்கள் உதவிக்கு இப்படிப்பட்ட ஒரு அறிவுக் கொழுந்தையும் உபயோகித்து இப்படியொரு நிலைமைக்கு ஆளாகிக் கிடப்பதை எண்ணுகையில் அவருக்கு வாழ்க்கையே வெறுத்துப் போனது.

டாக்டர்கள் கையை விரித்தார்கள். பாதிக்கப்பட்ட ஆறு பேர்களில் ஒவ்வொருடைய பாதிப்பிலும் சிறிய சிறிய வித்தியாசம் இருந்ததாகத் தெரிவித்தார்கள். மூளைக்குச் செல்லும் சில நரம்புகளில் நுணுக்கமான சில முடிச்சுகள் விழுந்திருப்பதாகச் சொன்னார்கள். ஆபரேஷன் செய்தாலும் அதன் வெற்றிக்கு சுமார் முப்பது சதவீதம் தான் வாய்ப்பு இருப்பதாகச் சொன்னார்கள். சிறு சிறு அசைவு ஏற்பட்டாலும் தாங்க முடியாத வலியில் அவர்கள் துடித்தாலும் வாய் விட்டுச் சொல்ல முடியாத பரிதாபகரமான நிலையில் அவர்கள் கிடப்பதைப் பார்க்கப் பார்க்க இப்ராஹிம் சேட்டின் வயிறு பற்றி எரிந்தது.

இது போன்ற நிலைமைக்குத் தன் மகன்களை ஆக்கி விட்ட அக்‌ஷயை சும்மா விட்டால் தொழிலில் தனக்கு சிறிதும் மதிப்போ, மரியாதையோ இருக்காது என்பதை உணர்ந்த இப்ராஹிம் சேட் அக்‌ஷயை உடனடியாகத் தீர்த்துக் கட்ட முடிவு செய்தார். இது வரை

கிடைத்த அனுபவ அறிவு அவன் அருகில் ஆட்களை அனுப்புவது இது போல ஜடங்களாக அவர்களை மாற்றத் தான் உதவும் என்று அவருக்குச் சொன்னது. அதனால் அவன் இருக்கும் வீட்டிற்கு வெடிகுண்டு வைத்து அவனைக் கொல்ல அவர் முடிவு செய்தார்.

அவர்கள் தொழிலில் இது வரை வெடிகுண்டுகள் பயன்படுத்தி இருக்காததால் வெளியே இருந்து ஒருவனை வரவழைத்து அந்த வேலையை ஒப்படைத்தார். இரண்டு மணி நேரத்தில் தாதாவான உஸ்மான் பாயின் போன் அவருக்கு வந்தது. வெடிகுண்டுகளின் இலாகா அவருடையது, அந்த விஷயத்தில் அவருக்குத் தெரியாமல், அவருடைய ஒப்புதல் இல்லாமல், மும்பையில் யாரும் எங்கும் குண்டு வைக்க முடியாது என்கிற அளவு எல்லாவற்றையும் அவர் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். எனவே அவருக்குத் தகவல் கிடைத்ததும் உடனடியாகப் போனில் இப்ராஹிம் சேட்டிடம் சொன்னார்.

"இப்ராஹிம், உங்கள் மகன்களுக்கு மூளை இல்லை என்பது தெரிந்த விஷயம். ஆனால் உங்களிடம் இருந்து நான் இதை எதிர்பார்க்கவில்லை. அக்‌ஷய் வீட்டுக்கு வெடிகுண்டு வைத்தாலும் அவன் சாவானா என்பது வேறு விஷயம். அவன் வீட்டில் வெடிகுண்டு வெடித்தால் அதை இந்து முஸ்லிம் கலவரமாக மாற்ற அரசியல் கட்சிகள் எல்லா வேலைகளும் செய்யும். போலீஸ்

கெடுபிடி, காவல் எல்லாம் மும்பையில் அதிகமாகும். அது நான் நடத்தும் தொழிலிற்கு நிறையவே இடைஞ்சல் செய்யும். அதனால் இந்த வெடிகுண்டு திட்டம் மட்டும் விட்டு நீங்கள் வேறு என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். அதில் நான் தலையிட மாட்டேன்...."

அவரவருக்கு அவரவர் இலாப நஷ்டங்கள் பெரிது. இப்ராஹிம் சேட்டின் தனிப்பட்ட இலாப நஷ்டங்கள் பற்றி மற்றவர்களுக்கு அக்கறை இல்லை. இப்ராஹிம் சேட் இடிந்து போனார். இத்தனை வருடமாக வெற்றிகரமாக இயங்கி வந்த அவரிடம் அறிவு, அதிகாரம், அனுபவம், பணம் இருந்தும் சாமியார் என்று நினைத்திருந்த ஒரு இளைஞனிடம் தோற்றுப் போனதை இப்ராஹிம் சேட் உணர்ந்தார்.

வேறு வழியில்லாமல் அக்‌ஷயைப் பழிவாங்குவதை விட்டு விட்டு தன் மகன்களைக் காப்பாற்றும் வழிகளைப் பார்க்க ஆரம்பித்தார். ஆனது ஆகட்டும் என்று டாக்டர்களிடம் மூத்த இரு மகன்களுக்கு ஆபரேஷன் செய்யச் சொன்னார். நடந்த ஆபரேஷன் தோல்வியடைந்து இருவரும் கோமா நிலைக்குச் சென்றனர். இனி மரணம் எப்போது நிகழும் என்பதை டாக்டர்களாலும் சொல்ல முடியவில்லை. இப்ராஹிம் சேட் பாதி இறந்து போனார் என்றே சொல்ல வேண்டும்.

மூன்றாவது மகன் அஷ்ரபிற்கு ஆபரேஷன் செய்வது உசிதமில்லை என்பது புரிந்து வேறு வழிகளை ஆராய்ந்தார். ரிஷிகேசில் ஒரு வர்மக்கலை வல்லவர் இருக்கிறார் என்றும் அவர் உதவியைப் பெறுவது நல்லது என்றும் நண்பர் ஒருவர் தெரிவிக்க இப்ராஹிம் சேட் உடனடியாக அவரை விமானம் மூலமாக மும்பைக்கு வரவழைத்தார்.

அந்த வர்மக்கலை வல்லுனர் ஆபரேஷன் ஆகி கோமாவில் இருக்கும் இஸ்மாயிலையும், அமானுல்லாவையும் பார்த்தவுடனேயே இனி ஒன்றும் யாராலும் செய்வதற்கில்லை என்று சொல்லி விட்டார். "கத்தி பட்டால் உடல் உறுப்புகள் தங்கள் பிராணசக்தி பெருமளவை இழக்கின்றது. அதுவும் மூளைக்குச் செல்லும் நரம்புகள் வெகு நுட்பமானவை. இனி அவற்றை சரி செய்ய முடியாது......"என்று ஏதேதோ சொல்லிக் கொண்டு போனார். இப்ராஹிம் சேட்டிற்கு எதுவும் புரியவில்லை. தலையை மட்டும் ஆட்டினார்.

அந்த ஆளை மூன்றாவது மகனிடம் அழைத்துப் போனார். அஷ்ரபை சற்று நேரம் சோதித்து பார்த்த அவர் அதிசயித்தார். "மனித உடலின் முழு சூட்சுமங்களையும் உணர்ந்த ஒரு நபர் இதைச் செய்திருக்கிறார். இந்த அளவு நுணுக்கமான வேலையை நான் இது

வரை பார்த்ததில்லை. இதை சரி செய்யும் வேலையையும் அவரிடமே காலில் விழுந்தாவது ஒப்படையுங்கள். உங்கள் மகனை அவரைத் தவிர வேறு யாரும் காப்பாற்ற முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை."

இப்ராஹிம் சேட் பேச்சிழந்து போனார். பின் அவர் நடைப்பிணம் போல் ஆனார். சரியாக சாப்பிடவில்லை. யாரிடமும் பேசவில்லை. ஆஸ்பத்திரியில் ஐசியூ விற்கு வெளியே கல்லைப் போல் அமர்ந்திருந்தார். அவர் மனைவி சாய்ரா பானு அடைந்த துக்கத்திற்கு அளவேயில்லை. வேண்டிய அளவு அழுது தீர்த்தாள் அவள். பிறகு அவளுடைய குழந்தைகளின் தற்போதைய நிலையையும், அவள் கணவர் விரக்தியின் உச்சக்கட்டத்தில் அமர்ந்திருப்பதையும் கண்டு யோசித்து விட்டு கடைசியில் கணவரிடம் சொன்னாள். "அந்த ஆள் சொன்னது போல அக்ஷயிடம் போய்க் கெஞ்சினால் என்ன?"

இப்ராஹிம் சேட் வரண்ட குரலில் சொன்னார். "கெஞ்சப் போனவனும் இந்த மாதிரி ஜடமாய் தான் திரும்பி வரவேண்டி இருக்கும்"

"அந்தப் பையன் நல்லவன். நம் பிள்ளைகள் போல் அல்ல. வேண்டுமானால் நான் போய்க் கேட்கட்டுமா?"

இப்ராஹிம் சேட் ஒன்றுமே சொல்லாமல் மனைவியை வெறித்துப் பார்த்தார்.

அவர் மௌனத்தையே சம்மதமாக எடுத்துக் கொண்டு சாய்ரா பானு தனியாக அக்‌ஷயைப் பார்க்கச் சென்றாள்.

66

அக்‌ஷய் வீட்டில் சாய்ரா பானுவை முதலில் பார்த்தது பீம்சிங் தான். அவன் அவளைப் பார்த்ததும் வெடித்தான்.

"கொலை செய்ய நீங்களுமா வந்து விட்டீர்கள்?"

சாய்ரா பானு ஒரு கணம் கூனிக் குறுகிப் போனாள். ஆனால் ஒன்றும் பேசாமல் தலை குனிந்து நின்றாள். பீம்சிங் கடுமை குறையாமல் கேட்டான். "என்ன வேண்டும்?"

சாய்ரா பானு பலவீனமான குரலில் சொன்னாள். "எனக்கு அக்‌ஷயைப் பார்க்க வேண்டும்"

பீம்சிங் அவளை உட்காரச் சொல்லவில்லை. அக்‌ஷயிடம் அவள்

வந்திருப்பதைச் சொல்லப் போனான்.

அக்‌ஷய் வந்தவுடன் அவளை உட்காரச் சொன்னான். சாய்ரா பானு பலவீனமாகச் சொன்னாள். "பரவாயில்லை"

சிறிது நேரம் அவர்களுக்குள் ஒரு தர்மசங்கடமான மௌனம் நிலவியது. சிறு வயதில் அவன் அவள் வீட்டுக்கு அடிக்கடி போயிருக்கிறான். அவள் பிள்ளைகளுடன் விளையாடி இருக்கிறான். அவள் வீட்டில் பல முறை சாப்பிட்டிருக்கிறான். பெரியவனான பிறகு தான் அவள் வீட்டுக்கு அவன் போவது குறைந்து விட்டது. அவனை அவள் பல காலம் கழித்து நாகராஜன் –திலகவதியின் மரணத்திற்கு துக்கம் விசாரிக்க வந்த போது தான் பார்த்தாள். அவன் நிறையவே மாறி இருந்தான் என்று அவள் அப்போது நினைத்திருந்தாள்.

அன்று அவனுடைய துக்கத்தை அவன் வெளியே காட்டிக் கொள்ளாமல் எல்லோருடனும் அமைதியாகப் பேசிய விதம் அவன் மனப் பக்குவத்தைக் கோடிட்டுக் காட்டுவதாக அவள் அன்று நினைத்தாள்.

இன்றும் அவன் அமைதியாகத் தான் இருந்தான். ஆனால் இன்று அந்த அமைதி அவள் வயிற்றில் புளியைக் கரைத்தது. பீம்சிங் கேட்டது போல அவனும் கேட்டு விடுவானோ என்று பயந்தாள்.

நல்ல வேளையாக அவன் அப்படி எதுவும் கேட்டு விடவில்லை.

அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக அவன் கேட்டான். "என்ன சாப்பிடுகிறீர்கள்?"

"எதுவும் வேண்டாம்...."

"சரி என்ன விஷயம். சொல்லுங்கள்?"

அவள் கண்கள் குளமாகச் சொன்னாள். "என் பிள்ளைகள் சாகக் கிடக்கிறார்கள்"

அவன் அமைதியாகச் சொன்னான். "அடுத்தவர்களுக்கு என்ன ஆக வேண்டும் என்று ஆசைப்படுவதில் எப்போதும் கொஞ்சம் எச்சரிக்கை நல்லது. ஏனென்றால் அது அவர்களுக்கு ஆவதை விட வேகமாக நமக்கு ஆகி விடலாம். "

சாய்ரா பானு குனிந்த தலை திமிராமல் நின்றாள். பின் உடைந்த குரலில் சொன்னாள். "என் பிள்ளைகளுக்கு உயிர்ப்பிச்சை கேட்டு வந்திருக்கிறேன். "

"நான் அவர்களுக்கு அந்த அவகாசமாவது தந்திருக்கிறேன். ஆனால்

உங்கள் கணவரும், பிள்ளைகளும் எனக்கு அந்த அவகாசம் கூடத் தரவில்லை. என் அப்பா அம்மாவிற்கும் தரவில்லை. வாய் விட்டு அவர்கள் என்னிடம் கேட்டிருந்தால் நான் எல்லா சொத்தையும் அவர்களுக்கே விட்டுக் கொடுத்து இருப்பேன். என் அப்பா அம்மாவை என் சம்பாத்தியத்தில் காப்பாற்றி இருப்பேன். எனக்கு இப்படி சம்பாதித்த பணத்தை வைத்திருக்க முன்பே விருப்பம் இருக்கவில்லை.... உங்கள் மகன்கள் அனுப்பிய அந்த சகதேவ் வந்த விதமும், பேசிய விதமும் எனக்கு சந்தேகத்தைக் கிளப்பியதால் நான் எச்சரிக்கையாக இருந்தேன். இல்லா விட்டால் நானும் இன்னேரம் செத்துப் போயிருப்பேன். "

.

"அவர்கள் செய்தது அல்லா மன்னிக்கக் கூடிய காரியமல்ல. அவர்களை தண்டித்தது கூட நீயல்ல, அவர் தான் என்று தான் நான் இன்னமும் நம்புகிறேன். ஆனால் அவர்களுக்காக இல்லாவிட்டாலும் இந்த தாயிற்காக நீ கருணை காட்ட வேண்டும்....." சாய்ரா பானு கண்கள் கலங்கினாள்.

அவன் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தான்.

அவள் மூத்த இரண்டு மகன்களுக்கு ஆபரேஷன் முடிந்து அவர்கள் கோமா நிலைக்குப் போய் விட்டதைச் சொன்னாள். டாக்டர்கள் மரணம் என்னேரமும் வரலாம் என்று சொன்னதைச் சொன்னாள்.

அக்‌ஷய் வறண்ட குரலில் சொன்னான். "கத்தி பட்ட பின் அதை சரி செய்ய முடியாது. இனி யாரும் எதுவும் செய்வதற்கில்லை."

சாய்ரா பானு கேட்டாள். "அப்படியானால் அஷ்ரஃபையாவது....?"

அக்‌ஷய் ஒன்றும் சொல்லவில்லை. சாய்ரா பானு அவன் காலில் விழப் போனாள். அவன் தீயைத் தீண்டியது போல விலகிப் போனான். அவன் முகத்தில் முதல் முறையாக வேதனையைப் பார்த்தாள் சாய்ரா பானு.

"அம்மா நீங்கள் என்ன காரியம் செய்யப் போனீர்கள்?"

சிறு வயதில் அவள் பிள்ளைகளோடு சேர்ந்து அவனும் அவளை அப்படித் தான் கூப்பிடுவான். ஆனால் அவன் இப்போது அவளை அம்மா என்றழைத்தவுடன், அவன் முகத்தில் வேதனையைப் பார்த்தவுடன் அவள் கண்களில் இருந்து மடை திறந்த வெள்ளம் போல கண்ணீர் பெருகி வர ஆரம்பித்தது.

"அக்‌ஷய் என் ஒரு குழந்தையையாவது எனக்குத் திருப்பித் தா. இந்த அம்மாவிற்கு கொஞ்சமாவது கருணை காட்டு. பதிலுக்கு நீ என்ன வேண்டுமானாலும் கேள். நான் தருகிறேன்....."

"நீங்கள் என் அம்மாவைத் திருப்பித் தர முடியுமா?"

சாய்ரா பானு விக்கித்து நின்றாள். பின் குனிந்த தலையுடன் அங்கிருந்து கிளம்பினாள். அப்போது அக்‌ஷய் அழைத்தான். "அம்மா"

அவள் திரும்பினாள். அவன் கேட்டான். "அஷ்ரஃப் எந்த ஆஸ்பத்திரியில் இருக்கிறான்?"

அக்‌ஷய் அவளை அழைத்துக் கொண்டு அந்த ஆஸ்பத்திரிக்குப் போனான். இப்ராஹிம் சேட்டின் ஆட்கள் ஆஸ்பத்திரியில் அவனைப் பார்த்த உடனேயே பதுங்கினார்கள். இப்ராஹிம் சேட் அவனைத் திகைப்புடன் பார்த்தார்.

ஐசியூவில் இருக்கும் அஷ்ரஃப் அருகே சென்ற அக்‌ஷய் அனாயாசமாக அவன் கழுத்தருகே கைகளை வைத்து ஏதோ செய்தான். அடுத்த கணம் அஷ்ரஃப் இயல்பான நிலைக்கு மாறியது அவன் கண்களைப் பார்த்த உடனேயே சாய்ரா பானுவிற்குத் தெரிந்தது. அருகே நின்றிருந்த நர்ஸ் தன் கண்களை நம்ப முடியாமல் பிரமிப்புடன் அக்‌ஷயைப் பார்த்தாள்.

எழ முயற்சித்த அஷ்ரஃபிடம் அக்‌ஷய் சொன்னான். "கொஞ்ச நேரம் அப்படியே படுத்திரு. ஓரேயடியாக எழுந்திருக்க முயற்சி செய்யாதே. எங்கேயாவது சுளுக்கிக் கொள்ளும். முதலில் சின்னச் சின்ன அசைவுகள் செய். பிறகு எழுந்து கொள்"

அஷ்ரஃப் தான் காண்பது கனவா நினைவா என்று திகைக்க, சாய்ரா பானு நன்றி கலந்த கண்ணீருடன் கை கூப்பி நிற்க அக்‌ஷய் அமைதியாக அங்கிருந்து வெளியேறினான். அரை மணி நேரம் கழித்து கடைசி மகன் அவரருகே வந்து அமர்ந்த போது இப்ராஹிம் சேட் அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தார்.

இரண்டு நாள்கள் கழித்து அவருடைய மூத்த இரண்டு மகன்களும் இறந்து போனார்கள். அவர்களைப் புதைத்த மறு நாள் இப்ராஹிம் சேட் அக்‌ஷய் வீட்டிற்குப் போனார். நாகராஜனுக்குச் சேர வேண்டிய பங்கு பணத்தையும், பத்திரங்களையும் அக்‌ஷயிடம் தந்தார்.

"நீ சாய்ராவிடம் உன் அம்மாவின் உயிரைத் திருப்பித் தர முடியுமா என்று கேட்டாய் என்று சொன்னாள். அல்லா எனக்கு அந்த சக்தியைத் தந்திருந்தால் கண்டிப்பாக நான் என் உயிரைக் கொடுத்தாவது உன் அம்மா, அப்பா இருவருடைய உயிரையும்

திருப்பித் தர முய்ற்சி செய்திருப்பேன். என்னால் இப்போது முடிந்ததெல்லாம் நாகராஜனுக்கு சேர வேண்டிய பங்கைத் திருப்பித் தருவது தான். அவன் இதையெல்லாம் தர்மம் செய்து விட நினைத்திருப்பதாகச் சொன்னான். அதை நீயே உன் கையால் செய். முடிந்தால் என்னை மன்னித்து விடு"

அக்‌ஷய் இப்ராஹிம் சேட்டிடம் சொன்னான். "நான் ஒன்று சொன்னால் நீங்கள் நம்புவீர்களா?"

இப்ராஹிம் சேட் ஒரு கணம் அவனையே உற்றுப் பார்த்தார்.

"பழி வாங்குவதால் நம் துக்கம் குறைந்து விடுவதில்லை என்பதை நான் உணர்கிறேன். இஸ்மாயிலும் அமானுல்லாவும் இறந்ததைக் கேட்டு எனக்கு சந்தோஷப்பட முடியவில்லை...என்னால் அப்பா அம்மா மரணத்தை மட்டுமே நினைத்து இருக்க முடியவில்லை. சின்ன வயதில் சேர்ந்து விளையாடிய நாட்களையும் என்னால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.... முடிந்தால் நீங்களும் என்னை மன்னிக்க வேண்டும்..."

இப்ராஹிம் சேட் முகத்தில் அளவிட முடியாத துக்கம் தோன்றியது. அவருடைய குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடி, ஆர்வத்துடன் குரான் படித்து குடும்பத்து நபராக அவன் இருந்த நாட்கள் அவர்

நினைவில் நிழலாடியது. உடைந்த குரலில் அவர் சொன்னார். "என் ஒரு மகனை நீ எப்போது திருப்பித் தந்தாயோ அப்போதிருந்தே எனக்கு உன் மேல் இருந்த கோபம் போய் விட்டது. இப்போதைக்கு என்னைத் தான் என்னால் மன்னிக்க முடியவில்லை அக்‌ஷய். நான் சரியாக இருந்திருந்தால் இது எதுவுமே நடந்திருக்க வாய்ப்பில்லை...."

மேற்கொண்டு எதுவும் பேசாமல் இப்ராஹிம் சேட் தளர்ச்சியுடன் கிளம்பினார்.

67

மறு நாள் காலை அக்‌ஷய் வீட்டு முன் ஒரு கும்பலே கூடி நின்றது. அதில் பெரும்பாலானோர் பெண்கள். அவர்களில் சிலர் கைக்குழந்தைகளுடன் வந்திருந்தார்கள். சில வயதானவர்களும் வந்திருந்தார்கள். அக்‌ஷயைப் பார்க்க வேண்டும் என்று அவர்கள் சொன்ன போது பீம்சிங் பயந்து போனான். “இது என்ன புதுத் தலைவலி” என்று திகைத்தவன் அக்‌ஷயை அழைத்து வந்தான்.

அக்‌ஷயைக் கண்டவுடன் அத்தனை பேரும் சாஷ்டாங்கமாக வாசலிலேயே விழுந்து நமஸ்கரித்தார்கள். அக்‌ஷயின் கைத் திறத்தால் ஆஸ்பத்திரியில் ஐசியூவில் கிடக்கும் ஆட்களின்

குடும்பமும், உறவினர்களும் தான் அவர்கள் என்று புரிய அக்‌ஷயிற்கு சிறிது நேரம் தேவைப்பட்டது. இப்ராஹிம் சேட்டின் மகனை மன்னித்துக் காப்பாற்றியது போலவே தங்கள் வீட்டு நபரையும் மன்னித்து காப்பற்ற வேண்டும் என்று கண்ணீருடன் அவர்கள் வேண்டினார்கள்.

அக்‌ஷய் அவர்களைக் குணப்படுத்துவதாக வாக்களித்து அப்படியே செய்தான். குணமானவர்கள் இயல்பாக நடந்து வந்த போது அந்த குடும்பத்தினர் பட்ட மகிழ்ச்சி அளவில்லாதது. பலரும் அவன் காலில் விழுந்து வணங்கினார்கள். குணமானவர்கள் நேரடியாக அவன் பெற்றோரைக் கொல்ல துணை போனதற்கு மன்னிப்பு கேட்டார்கள். அவனைத் தெய்வம் என்று சிலர் சொன்னார்கள். சிலர் அவன் புகைப்படம் கேட்டார்கள்... அக்‌ஷயிற்கு ஏனோ முடிவில் ஒருவித சலிப்பே மிஞ்சியது. மும்பையில் அந்த வீட்டில் பெற்றோர் நினைவு அவனைப் பாடாய் படுத்தியது. அவன் இப்ராஹிம் சேட் திருப்பித் தந்த செல்வத்தை எல்லாம் தான தர்மம் செய்து விட்டு இமயமலையில் உள்ள ஒரு புத்த மடாலயத்திற்கு சென்றான்.....

**********

படித்து முடித்த அக்‌ஷயை ஆனந்த் ஆர்வத்துடன் பார்த்தான். அக்‌ஷய் முகத்தில் லேசாக சோகம் படர்ந்திருந்தது. அவனுடைய

வளர்ப்புப் பெற்றோர் நினைவு தான் அதற்குக் காரணமாக இருக்க வேண்டும் என்று அனுமானித்த ஆனந்த் மெல்ல கேட்டான். "உனக்கு இப்போது எல்லாம் நினைவுக்கு வருகிறதா?"

அக்‌ஷய் உடனடியாக ஒன்றும் சொல்லவில்லை. பிறகு ஆனந்தை ஆழ்ந்த யோசனையுடன் பார்த்தபடி சொன்னான். ".....அந்த புத்த மடாலயத்தில் தான் முதல் முதலாய் ஆச்சார்யாவை சந்தித்தேன்...."

***********

ஆச்சார்யாவிற்கு புத்த மதத்தின் மீது இருந்த ஈடுபாடு அலாதியானது. இந்துக் கோயில்களுக்குப் போவதை விட அதிகமாக அவர் புத்த மடாலயங்களுக்குச் செல்வதை மிகவும் விரும்புவார். அப்படிச் சென்று அங்கு தியானம் செய்யும் போது அதிகமாக அமைதி கிடைப்பதாக அவர் நம்பினார். வேலைப் பளுவை அவ்வப்போது அவர் இறக்கி வைத்து விட்டு இமயமலைச்சாரலில் உள்ள புத்த மடாலயங்களுக்கு செல்வதை வாடிக்கையாகக் கொண்டிருந்தார்.

அப்படி ஒரு முறை சென்ற போது தான் அக்‌ஷயை அவர் பார்த்தார். அவன் தியானத்தில் மணிக்கணக்கில் உடலை சிறிதும் அசைக்காமல் உட்கார்ந்திருந்த விதம் அவரை ஆச்சரியப்

படுத்தியது. அங்கு இருந்த ஒரு புத்த துறவியிடம் தன் ஆச்சரியத்தை அவர் வெளிப்படுத்தினார். அந்தப் புத்த துறவி புன்முறுவலுடன் சொன்னார். "அது ஒன்று மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ ஆசசரியப்படும்படியான விஷயங்கள் அவனிடம் இருக்கின்றன."

ஆச்சார்யாவிற்கு அவர் சொன்னது புதிராக இருந்தது. "உதாரணத்திற்கு சிலதை சொல்லுங்களேன்"

"ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு அவன் காற்று மாதிரி வேகமாகப் போவான். கண்ணை மூடித் திறப்பதற்குள் வேறு இடத்தில் இருப்பான்...."

"அது எப்படி?"

"சீனாவிலும் திபெத்திலும் சில வருடங்கள் இருந்து என்னென்னவோ கற்றுக் கொண்டு வந்திருக்கிறான். மனித உடம்பின் சூட்சுமங்கள் அவனுக்கு அத்துப்படி. லேசாகத் தொட்டோ, தட்டியோ பல பேரை அப்படியே செயல் இழக்கச் செய்து விடுவான்..... இன்னும் எத்தனையோ..."

ஆச்சார்யா அன்று அக்ஷய் தியானத்தில் இருந்து கண்விழிக்கும் வரை காத்திருந்தார். பின் வலிய சென்று அவனிடம் தன்னை

அறிமுகப்படுத்திக் கொண்டார். அவர் சிபிஐயின் டெபுடி டைரக்டர் என்ற விவரம் அவனைச் சிறிதும் பாதித்ததாகத் தெரியவில்லை. வெறுமனே தலையாட்டினான். அவனுடைய வெறுமையான மனநிலை யாரிடமும் நட்பு பாராட்டி பேசுவதில் ஆர்வத்தை ஏற்படுத்தவில்லை. ஆச்சார்யாவால் அன்று அவனுடைய மௌனத்தைக் கலைக்க முடியவில்லை.

அவர் அந்த மடத்து புத்த பிக்குகளிடம் அவனைப் பற்றி மேலும் விசாரித்த போது அவன் அங்கேயே சில காலம் தங்குவான் என்பது தெரிந்தது. மீண்டும் மறு வாரம் வந்தார். அக்ஷயிடம் பேசினார். அக்ஷய் தந்தி வாசகங்களாக பதில் சொன்னான். ஆனாலும் சளைக்காமல் மறு வாரமும் அவனிடம் பேச வந்தார். அவன் பொறுமை இழந்து கேட்டான். "ஏன் என்னை சும்மா தொந்திரவு செய்கிறீர்கள்?"

ஆச்சார்யாவிற்கு அறைந்தது போல இருந்தது. அவர் அவனிடம் கேட்டார். "நீ உன் அப்பாவிடம் கூட இப்படித் தான் பேசுவாயா?". ஏன் அப்படிக் கேட்டார் என்று அவருக்கே தெரியவில்லை. ஆனால் அந்தக் கேள்வி அவனை நிறையவே அசைத்தது என்பது மட்டும் புரிந்தது. சலனமே இல்லாமல் இருந்த அவன் முகத்தில் லேசாக ஒரு சோகம் படர்ந்தது. "என்ன வேண்டும் உங்களுக்கு?" என்று கேட்டான்.

"எனக்கு உன்னிடம் பேச வேண்டும்"

"எதற்கு?"

"காற்று மாதிரி வேகமாக நகரக்கூடியவன், தொட்டாலே ஒரு மனிதனை செயல் இழக்க வைக்கக் கூடியவன் என்றெல்லாம் கேட்ட பிறகு அந்த சக்தி படைத்த மனிதனைப் பற்றி தெரிந்து கொள்ளா விட்டால் என் தலை வெடித்து விடும்"

"முதலில் உங்களைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள். அதற்காகத் தானே இது போன்ற இடங்களுக்கு வருகிறீர்கள்"

"நம்மை விட அடுத்தவர் அதிக சுவாரசியமான ஆளாய் இருந்தால் அவரைப் பற்றித் தெரிந்து கொள்ளத் தானே ஆர்வம் கூடுகிறது"

அவன் சிரித்து விட்டான். அவர் பேசும் விதத்தில் ஏதோ ஒன்று அவனுக்கு நாகராஜனை நினைவுபடுத்தியது. முதல் முறையாக சிநேகத்துடன் சொன்னான். "சரி கேளுங்கள். உங்களுக்கு என்ன தெரிய வேண்டும்?"

"உன்னுடைய இது மாதிரியான அபூர்வ சக்திகளுக்கெல்லாம் யார்

குரு?"

"இமயமலையில் ஒரு குகையில் நான் சந்தித்த சித்தர், சீனாவில் ஷாவலின் கோயிலில் ஒரு வயதான குரு, திபெத்தில் ஒரு லாமா...இப்படி சில பேர்"

"இதை எல்லாம் கற்றுக் கொள்வது சுலபமா?"

"அதைத் தவிர உலகில் வேறு எதுவுமே முக்கியமல்ல என்று எல்லாவற்றையும் மறந்து விட்டு கற்றுக் கொள்ளும் போது எல்லாமே சுலபம். நமக்கு பல விஷயங்களுடன் அதுவும் ஒன்று என்கிற போது அது கற்றுக் கொள்ள முடியாத கலை"

அவன் பதில் அவரை யோசிக்க வைத்தது. அதைக் கற்றுக் கொள்வது தன்னால் என்றைக்கும் முடியாத காரியம் என்று அந்தக் கணத்தில் முடிவு செய்து விட்டார்.

"இதையெல்லாம் கற்றுக் கொள்ள உனக்கு எவ்வளவு காலம் தேவைப்பட்டது"

"சித்தரிடம் இரண்டு வருடம், சாவலின் கோயில் குருவிடம் மூன்று வருடம், திபெத்திய லாமாவிடம் இரண்டு வருடம்....."

ஆச்சார்யா மலைத்துப் போனார். "நீ சுலபம் என்று சொன்னதைக் கேட்ட போது எல்லாம் சேர்ந்து ஓரிரண்டு வருடங்களில் கற்று விட்டாய் என்று நினைத்தேன்.."

அவன் பதில் சொல்லாமல் புன்னகைத்தான்.

அவர் கேட்டார். "இத்தனை சக்திகள் கற்ற நீ இங்கே என்ன செய்கிறாய்?"

"இத்தனை சக்திகளும் மனதில் அமைதியைத் தரவில்லை. அதனால் அமைதியைத் தேடி இங்கே வந்திருக்கிறேன்..."

"இத்தனை சின்ன வயதில் என்ன உனக்கு பிரச்னை? ஏதாவது காதல் தோல்வியா?"

அவன் புன்னகைத்தான். இல்லையென்று தலையசைத்தான்.

"பிறகு என்ன?" அவர் விடவில்லை.

அவர் நாகராஜனை ஏதோ விதத்தில் நினைவுபடுத்தியதாலோ என்னவோ அவன் மனம் விட்டு அவரிடம் தன் கதையைச்

சொன்னான்.....

அவன் தன் தாய் தந்தை இறந்த விதத்தைச் சொன்ன போது கண்கலங்கினான். அப்போது அவரும் கண்கலங்கினார். அவன் எல்லாம் சொல்லி முடித்த போது ஒரு பிரமிப்பு அவரிடம் தங்கியது.

அவன் சொன்னான். "அப்பா அம்மாவைக் கொன்றவர்களை எல்லாம் பழி வாங்கினால் தான் மனம் நிம்மதி அடையும் என்று அப்போது தோன்றியது. அவர்களை எல்லாம் செயலிழக்க வைத்த போதும் அந்த கோபம் அடங்கவில்லை. ஆனால் சாய்ரா பானு அம்மா காலில் விழ வந்த போதும், அமானுல்லாவும், இஸ்மாயிலும் செத்த போதும் என்னால் சந்தோஷப்பட முடியவில்லை....."

ஆச்சார்யாவிற்கு அவனைப் புரிந்து கொள்ள முடிந்தது.

"என் அப்பா, அம்மா இறந்ததற்கும் நான் தான் காரணம். அவர்களை கொல்ல திட்டம் போட்ட இரண்டு பேர் இறக்கவும் நான் தான் காரணம். இந்த நிஜங்கள் மனதில் பாரமாக இருக்கும் போது அமைதி எங்கே சார் வரும்?"

"ஆனால் நீ மீதி எல்லாரையும் மறுபடி காப்பாற்றி இருக்கிறாய். அதுவே பெரிய விஷயம்...."

அவன் ஒன்றும் சொல்லவில்லை.

அந்த நாளிற்குப் பின் அவரும் அவனும் நெருக்கமாகி விட்டார்கள். அவனுக்கு அவர் நாகராஜனை நினைவுபடுத்தினார் என்றால் அவருக்கும் அவன் ஒரு மகன் போன்ற எண்ணத்தை ஏற்படுத்தினான். அவருக்கு ஒரு மகன் இருந்தால் எப்படி இருக்க வேண்டும் என்று கற்பனை செய்திருந்தாரோ அப்படி எல்லாம் அவன் இருந்தான். அவர்கள் நட்பு சில நாட்களிலேயே ஆழப்பட்டு விட்டது.

ஒரு நாள் ஒரு வித்தியாசமான, ஆபத்தான கோரிக்கையுடன் அவனிடம் அவர் வந்தார்.

68

"அக்ஷய் இன்னும் எத்தனை நாட்கள் நீ இப்படி இங்கேயே இருப்பதாக உத்தேசம்"

ஆச்சார்யாவின் கேள்விக்கு அக்ஷய் உடனடியாக பதில் சொல்லவில்லை. அவனுக்கே அவனுடைய எதிர்கால வாழ்க்கை ஒரு கேள்விக்குறியாக இருந்தது.

பிறகு சொன்னான். "தெரியவில்லை"

"எது எப்படி நடக்க வேண்டுமோ அது அப்படியே நடந்திருக்கிறது. நீ வெறும் கருவி மாத்திரம். அப்படி இருக்கையில் நீ தேவை இல்லாமல் குற்றவுணர்ச்சியோடு இருப்பது புத்திசாலித்தனம் அல்ல. உனக்கு இருக்கும் திறமைகளை வீணடித்துக் கொண்டு முடங்கிக் கிடப்பது சரியில்லை"

"நான் இப்போது என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?"

"சமூகத்திற்கு உபயோகமாகிற மாதிரி நீ எத்தனையோ செய்யலாம்...."

அவன் அவரைக் கேள்விக்குறியுடன் பார்த்தான்.

"சமூகத்தையே பாழாக்குகிற சமூக விரோதிகள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களை சட்டத்தின் முன் கொண்டு வந்து நீ தண்டனை வாங்கிக் கொடுத்து அவர்கள் செயல்களை நிறுத்தலாம்"

"அது உங்களைப் போன்ற ஆட்களின் வேலை தானே"

"உண்மை. ஆனால் சில சமயங்களில் சில இடங்களில் நிறையவே இடைஞ்சல்கள் எங்களுக்கு இருக்கின்றன. சில நேரங்களில் ஒரு தனிமனிதனுக்கு இருக்கிற சுதந்திரம் எங்களுக்கு இருப்பதில்லை. அதுவும் உன்னைப் போல பல திறமைகள் இருக்கும் தனிமனிதனால் முடிகிற விஷயங்கள், எங்களைப் போல கூட்டாக இயங்கும் மனிதர்களுக்கு முடிவதில்லை...."

அவர்களுக்கு இருக்கும் அரசியல் தலையீட்டைப் பற்றியும், அவர்களுக்கு உள்ளேயே சமூக விரோத சக்திகளுக்குத் துணை போகும் மனிதர்கள் இருப்பது பற்றியும் அவர் விவரித்தார். வெளியே யாருக்கும் சந்தேகமில்லாதபடி இருக்கும் அவனால் நிறைய உதவ முடியும் என்றும் சொன்னார். சில பெரிய பெரிய கேஸ்களில் சில யூகங்கள், கிடைக்கும் தகவல்கள் எல்லாம் அவனுக்குத் தந்தால் அவன் அதை வைத்து நிறையவே கண்டுபிடித்துத் தர முடியும் என்றார். அதில் ஆபத்துகளும் நிறையவே இருக்கும் என்றாலும் அவனைப் போன்ற பல சக்திகள் படைத்த மனிதனால் அதையெல்லாம் மீறி சாதிக்க முடியும் என்றார்.

ஒரு அர்த்தமும் இல்லாமல் போய்க் கொண்டிருக்கும் அவனுடைய வாழ்க்கையை ஏதோ ஒரு பயனை நோக்கி திருப்புவது நல்லது தான் என்று அவனுக்கும் தோன்றியது. மேலும் ஆபத்துகள் பற்றி அவன் சிறிதும் கவலைப் படவில்லை. அவன் இறக்க நேரிட்டால் கூட

நஷ்டப்பட ஒரு குடும்பம் கூட அவனுக்கு இல்லை. அக்ஷய் சம்மதித்தான்.

ஒன்றன் பின் ஒன்றாக அவர் அவனிடம் சில கேஸ்களின் விவரங்களை ஒப்படைப்பார். அவனும் அவருக்கு அந்த சமூக விரோத சக்திகளை அடையாளம் கண்டு பிடித்து கைது செய்யத் தேவையான அசைக்க முடியாத ஆதாரங்களை ரகசியமாக ஒப்படைப்பான். இப்படி நாட்கள் நகர்ந்தன. அவன் அனாயாசமாக அதனை எல்லாம் மிகவும் பொறுமையாகவும், தைரியமாகவும், கச்சிதமாகவும் செய்து முடித்தான். மாறுவேடங்களில் செல்வது, சமயத்திற்குத் தகுந்தது போல் வேகமாக கச்சிதமாக மாறிக் கொள்வது, ஆபத்தான கட்டடங்களுக்கு அசராமல் நிதானமாக உள்ளே நுழைவது எல்லாம் அவனுக்கு மிகவும் கை வந்த கலையாக இருந்தது.

கள்ள நோட்டு அடித்து புழக்கத்திற்கு விடும் பெரிய கும்பல் ஒன்றைப் பிடித்துக் கொடுத்ததும், போதைப் பொருள்களை கடத்தும் கும்பல் ஒன்றைப் பிடித்துக் கொடுத்ததும் அவன் ஈடுபட்ட கேஸ்களில் மிகப் பெரிய கேஸ்கள்.....

*************

அக்ஷய் சொல்லி முடித்தான்.

ஆனந்த் அவன் அடுத்தது சொல்வது கேட்க ஆவலாக இருந்தான். அக்ஷயோ அவனையே பார்த்தபடி அமைதியாக இருந்தான்.

ஆனந்த் பொறுமை இழந்து சொன்னான். "சரி சொல். அப்புறம் என்ன?"

அக்ஷயிற்கு நினைவுகள் மறுபடி வெறுமையானது போல் தோன்றியது. அந்த ஃபைலை படித்த பிறகு அதில் உள்ள விஷயங்களோடு தொடர்ச்சியாக கிட்டத்தட்ட இரண்டரை வருட காலச் சம்பவங்கள் கோர்வையாக இது வரை அவன் நினைவில் வந்து அந்த நினைவுச் சங்கிலி அத்துடன் அறுந்து போனது போல் தோன்றியது.

அவன் முகத்தில் இருந்து அதை ஊகிக்க முடிந்த ஆனந்திற்குப் பகீரென்றது.

பரபரப்போடு ஆனந்த் சொன்னான். "....சரி சொல்லு. அந்தக் கடைசி கேஸ் தான் நமக்கு மிக முக்கியம். அந்தக் கேஸ் என்ன, அதில் நீ என்ன கண்டு பிடித்தாய் என்றெல்லாம் யோசித்து சொல். அந்தக் கேஸ் தான் ஆச்சார்யா கொலை செய்யப்படக் காரணம்.

உன்னை அவர்கள் கொல்லத் துடிப்பதும் அந்தக் கேஸில் நீ ஏதோ கண்டுபிடித்து ஆச்சார்யாவிற்குத் தந்து இருப்பது தான். நீ உயிரோடு இருப்பது ஆபத்து என்று சிலர் நினைக்கிறார்கள். அவர்கள் யார்? யோசி அக்‌ஷய்....ப்ளீஸ்... அது நமக்கு மிகவும் முக்கியம்....யோசி..."

அக்‌ஷய் எவ்வளவு யோசித்தும் அவனால் எதையும் நினைவுக்குக் கொண்டு வர முடியவில்லை. அக்‌ஷய் இயலாமையுடன் சொன்னான். "சாரி. ஆனந்த்...."

ஆனந்த் தன் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு சொன்னான். "பரவாயில்லை. விடு அக்‌ஷய். இந்த அளவு நினைவிற்கு வந்ததல்லவா. இனி மீதியும் கண்டிப்பாக வரும். சிறிது நேரம் கழித்து யோசித்துப் பார்.....

அக்‌ஷய் மேலும் சிறிது மூளையைக் கசக்கிக் கொண்டு யோசித்து நினைவுகளைத் திரும்பக் கொண்டு வர முடியாமல் போகவே ஆனந்த் சொன்னது போல சிறிது◌ு நேரம் கழித்து யோசிக்க முடிவு செய்தான்.

ஆனந்த் கேட்டான். "எனக்கு ஒரு சந்தேகம்"

"என்ன?"

"இப்ராஹிம் சேட்டின் மூத்த இரண்டு மகன்களுக்கு ஆபரேஷன் செய்யாமல் அப்படியே விட்டிருந்தால் நீ அவர்களையும் கூட காப்பாற்றி இருப்பாயா?"

அக்‌ஷய் சொன்னான். "இந்தக் கேள்வியை நானும் எனக்குள்ளேயே பல தடவை கேட்டு இருக்கிறேன். அப்படி ஒரு சூழ்நிலை இருந்திருந்தால் நான் என்ன செய்திருப்பேன் என்று சொல்லத் தெரியவில்லை ஆனந்த். என் அப்பா, அம்மா இரண்டு பேரையும் கொல்ல திட்டம் போட்டது அவர்கள் இரண்டு பேரும் தான் என்பதால் நான் என்ன செய்திருப்பேன் என்பதை என்னால் சரியாகச் சொல்ல முடியவில்லை"

சகோதரர்கள் இருவரும் சிறிது நேரம் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தார்கள்.

அக்‌ஷய் தான் மௌனத்தை முதலில் கலைத்தான். "சரி இனி என்ன செய்வதாய் உத்தேசம். இத்தனை நாட்கள் உன்னை ரகசியமாக கண்காணித்த ஆட்கள் இப்போது வெளிப்படையாகவே பின் தொடர்கிறார்கள் என்றால் அது நல்லதற்கில்லை. நீ இனி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவர்களுக்கு நீ என்னைப்

பார்க்க வருகிறாய் என்பது நன்றாகவே தெரிந்து விட்டதால் தான் இந்த அளவு மும்முரமாக எதைப் பற்றியும் கவலைப்படாமல் வெளிப்படையாகவே வருகிறார்கள். நீ இனி திரும்பி உன்னறைக்குப் போனால் சிபிஐ அதிகாரி என்று எல்லாம் பார்க்க மாட்டார்கள். கண்டிப்பாக நேரடியாகத் தாக்குவார்கள். உன்னிடம் இருந்து என்னைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்து கொள்ள முயற்சிப்பார்கள்"

ஆனந்திற்கும் அது தெரிந்தே இருந்தது. அவர்களிடம் இருந்து அவனைத் தற்காத்துக் கொள்ள இப்போது ஒரே வழி ஜெயினின் உதவியை நாடுவது தான். அவருடைய அதிகாரத்தைப் பயன்படுத்தினால் மட்டுமே அவன் அறைக்குப் பாதுகாப்பாகத் திரும்ப முடியும். ஆனால் அவன் அவரிடம் சொல்லாத விஷயங்கள் நிறையவே இருக்கின்றன. அவன் அதை எல்லாம் இப்போது சொன்னால் முன்பே ஏன் சொல்லவில்லை என்ற கேள்விக்கும் தகுந்த பதில் தயார் செய்து கொள்ள வேண்டி இருக்கும்... ஆனந்தால் உடனடியாக என்ன செய்வது என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை.

பின் தம்பியிடம் சொன்னான். "அதை அப்புறமாய் யோசிக்கலாம். நீ முதலில் அம்மாவிடம் பேசு. அம்மா உன்னிடம் பேச வேண்டும் என்று சொன்னார்கள். இந்த கலாட்டாவில் சொல்ல மறந்து

விட்டேன். நீ பேசா விட்டால் தேவை இல்லாமல் எதை எதையோ யோசித்துக் கொண்டே உட்கார்ந்திருப்பார்கள். சரியாகச் சாப்பிடக் கூட மாட்டார்கள்."

அக்‌ஷய் சரியென்று சொல்ல ஆனந்த் தாயிற்குப் போன் செய்தான்.

போன் அடித்துக் கொண்டே இருந்தது. ஆனால் மறுமுனையில் பதில் அளிக்க ஆளிருக்கவில்லை.

ஆனந்த் முகத்தில் கலவரம் படர ஆரம்பித்தது.

## 69

ஆனந்த் சாரதாவிற்குப் போன் செய்த நேரத்திற்கு சுமார் மூன்று மணி நேரத்திற்கு முன்னால் ஒரு அதிகாரியைப் போலவும், கண்ணியமாகவும் தெரிந்த ஒரு நபர் சாரதாவின் வீட்டுக்கு வந்தான். சாரதாவிடம் தன் பெயர் பட்டாபிராமன் என்றும் சிபிஐயில் வேலை செய்வதாகவும் சொன்னான்.

சாரதா பட்டாபிராமன் ஆனந்தைத் தேடி வந்திருப்பதாக எண்ணி "ஆனந்த் டெல்லிக்குப் போயிருக்கிறானே" என்று சொன்னாள்.

"தெரியும். ஆனந்த் தான் என்னை டெல்லியில் இருந்து அனுப்பினார்...."

"போனில் அவன் உங்களை அனுப்புவது பற்றி எதுவும் சொல்லவில்லையே.... என்ன விஷயம்?..."

"உங்களை டெல்லிக்குக் கூட்டிக் கொண்டு வரச் சொன்னார்"

அக்ஷயிற்கு ஏதாவது ஆகி விட்டதோ என்று அவளது தாயுள்ளம் பதைத்தது. "அக்ஷயிற்கு ஏதாவது...?" என்று பயத்துடன் கேட்டாள்.

பட்டாபி புன்னகைத்தபடி சொன்னான். "அக்ஷய் நலமாய் தான் இருக்கிறார். நீங்கள் போனில் ஆனந்த் சாரிடம் அக்ஷயிடம் பேச வேண்டும் என்று சொன்னீர்களாம். அக்ஷயும் உங்களைப் பார்க்க வேண்டும் என்று சொன்னதால் ஆனந்த் சார் உங்களை டெல்லிக்கு அழைத்து வரக் கிளம்பினார். அவருக்கு ஆபிசில் திடீர் என்று வேறு அவசர வேலை வந்து விட்டதால் உங்களைக் கூட்டிக் கொண்டு வர என்னை அனுப்பினார்...."

இயல்பாகவே வெள்ளை உள்ளம் படைத்த சாரதாவிற்கு அவனை சந்தேகிக்கத் தோன்றவில்லை. அதுவும் இளைய மகனைப் பார்க்கப்

போகிறோம் என்ற மகிழ்ச்சியும் சேர்ந்து கொண்டதால் அரை மணி நேரத்தில் கிளம்பினாள்.

பட்டாபிராமன் அவளை விமானத்தில் அழைத்துக் கொண்டு டெல்லிக்கு விரைந்தான். போகிற வழியில் அவளிடம் மிகவும் மரியாதையாக நடந்து கொண்டான். சாப்பிட என்ன வேண்டும் என்று அடிக்கடி கேட்டான். மிக பவ்யமாகப் பேசினான்.

விமானத்தில் செல்கையில் சாரதா அவனிடம் கேட்டாள். "அக்ஷய் எப்படி இருக்கிறான்?"

"நலமாக இருக்கிறார்" என்று சொன்ன பட்டாபி மனதினுள் சொல்லிக் கொண்டான். "பல பேர் மனதில் கிலியைக் கிளப்பிக் கொண்டு இருக்கிறான் உங்கள் பையன்"

டெல்லியில் விமான நிலையத்தில் இறங்கியதும் பட்டாபிராமன் தன் செல்போனை எடுத்து சாரதா முன்னாலேயே ஆனந்திற்குப் போன் செய்வது போல நடித்தான்.

"சார் அம்மாவைக் கூட்டிக் கொண்டு வந்து விட்டேன். இனி உங்கள் அறைக்குக் கூட்டிக் கொண்டு வந்து விடட்டுமா சார்.... என்ன சார்.... ஏன் சார்?...அப்படியானால் எங்கே கூட்டிக் கொண்டு

வருவது சார்.... கெஸ்ட் ஹவுசிற்கா... சரி சார்... அப்படியே செய்கிறேன்....அக்ஷய் சௌக்கியம் தானே சார். சரி சார் அம்மாவிடம் சொல்கிறேன் சார்..."

சாரதா போனைத் தனக்குத் தரும்படி சைகை செய்தாள். ஆனால் இணைப்பைத் துண்டித்து விட்ட பட்டாபிராமன் "சார் பிசியாக இருப்பதால் பேசவில்லை என்று உங்களிடம் சொல்லச் சொன்னார்..." என்றான்.

"ப்ரவாயில்லை.... ஆனந்த் வேறு என்ன சொன்னான்?...."

"அவர் ஒரு முக்கிய கேஸ் விஷயமாகப் போயிருக்கிறார் அம்மா. அந்த வேலை இன்னும் முடியவில்லையாம்...உங்களை கெஸ்ட் அவுசிற்குக் கூட்டிக் கொண்டு போகச் சொன்னார். அவர் பின்பு அங்கு வருகிறாராம்....அக்ஷயும் சௌக்கியமாம்...."

"ஏன் அக்ஷயைப் பார்க்கவே நான் நேராகப் போகிறேனே"

"அங்கே நோயாளிகளைப் பார்க்க அனுமதி தரும் நேரத்தில் தான் நாம் போக முடியும் அம்மா. அதனால் இப்போது கெஸ்ட் அவுஸ் போகலாம். பிறகு ஆனந்த சார் வந்தவுடன் அவரும், நீங்களுமாகச் சேர்ந்து அக்ஷயைப் பார்க்கப் போங்கள்...."

சாரதா தலையசைத்தாள். அவனுடன் சேர்ந்து ஒரு டாக்சியில் புறநகர்ப் பகுதிக்குப் பயணித்த போது கூட அவளுக்கு தான் கடத்தப்படுகிறோம் என்ற எண்ணம் எழவேயில்லை.

********

வீட்டிற்குப் போன் செய்த போது தாய் போனை எடுக்காதது ஆனந்திற்கு பயத்தை ஏற்படுத்தியதைக் கண்ட அக்‌ஷய் சொன்னான். "அம்மா காய்கறியோ, மளிகை சாமானோ வாங்க கடைக்குப் போயிருக்கலாம்."

"இல்லை அக்‌ஷய். பக்கத்தில் இருக்கும் டிபார்ட்மெண்ட் ஸ்டோரிற்கு போன் செய்தால் அவர்கள் எப்போதும் கொண்டு வந்து கொடுத்து விடுவார்கள்....."

"அம்மா கோயிலுக்குப் போயிருக்கலாம்...."

"இந்த நேரத்தில் போக மாட்டார்கள் அக்ஷய்"

"சரி பாத்ரூம் போயிருக்கலாம்...நீ பத்து நிமிஷம் கழித்துப் போன் செய்"

ஆனந்த் தலையசைத்து விட்டு பத்து நிமிடங்கள் பொறுத்திருந்தான். அந்தப் பத்து நிமிடங்களில் சகோதரர்கள் இருவரும் ஒன்றும் பேசவில்லை. இருவருமே ஆழ்ந்த யோசனையில் இருந்தார்கள்.

பத்து நிமிடங்கள் கழித்து ஆனந்த் போன் செய்தான். மறுபக்கத்தில் பதில் இல்லை. மறுபடி பத்து நிமிடங்கள் கழித்துப் போன் செய்த போதும் பதில் இல்லை. ஆனந்த் பக்கத்து வீட்டுக்காரருக்குப் போன் செய்து விசாரித்தான்.

"மாமி நான் ஆனந்த் பேசறேன். நான் நிறைய நேரமாய் அம்மாவிடம் போனில் பேச முயற்சி செய்து கொண்டே இருக்கிறேன். ஆனால் அம்மா போன் எடுக்கவில்லை. போனில் ஏதாவது கோளாறா, இல்லை அம்மா எங்கேயாவது போயிருக்கிறார்களா என்று தெரியவில்லை. கொஞ்சம் பார்த்து சொல்லுங்களேன்...."

"உங்கம்மா வீட்டைப் பூட்டி விட்டு யாரோ ஒருத்தருடன் ஒரு

சூட்கேஸோடு போனதை நான் பார்த்தேனே ஆனந்த்"

"எப்போது?"

"ஒரு நாலு மணி நேரம் இருக்கும். ஏன் ஆனந்த ஏதாவது பிரச்னையா?"

"அப்படி எல்லாம் இல்லை மாமி. எங்கள் சொந்தக்காரர் வீட்டுக்குப் போய் இருப்பார்கள். நான் அங்கே போன் செய்து கொள்கிறேன்...நன்றி..."

ஆனந்த் போனை வைத்தான். அவன் கைகள் லேசாக நடுங்கின. ஸ்பீக்கர் மோடில் பேசியிருந்ததால் அக்ஷயும் பேச்சு முழுவதையும் கேட்டு இருந்தான். ஆனால் அவன் அமைதியாகவே இருந்தான்.

அக்ஷய் கேட்டான். "நிஜமாகவே அம்மா அப்படி போகிற மாதிரி நமக்கு சொந்தக்காரர் யாராவது இருக்கிறார்களா என்ன?..."

"இல்லை...". ஆனந்த் குரல் பலவீனமாக வந்தது.

**********

சிபிஐ மனிதன் பட்டாபிராமன் என்றழைக்கப்பட்ட மனிதனிடம் போன் பேசி விட்டு திருப்தியுடன் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு மந்திரிக்குப் போன் செய்தான். "ஒரு நல்ல செய்தி..."

"என்ன அந்த அமானுஷ்யன் கிடைத்து விட்டானா?"

"இல்லை. அவன் அம்மாவைக் கடத்திக் கொண்டு வந்தாகி விட்டது. இனி அவனும், ஆனந்தும் நம்மிடம் வந்து தானாக வேண்டும்...."

"சென்னையிலிருந்து வரும் போது அந்தம்மாள் ஏதும் பிரச்னை செய்யவில்லையா..."

"மூத்த மகன் அழைத்து இளைய மகனைப் பார்க்க வருவதாய் அந்த அம்மாள் இன்னமும் நினைத்துக் கொண்டிருக்கிறாள். மகன்கள் அளவுக்கு அம்மா புத்திசாலி இல்லை போல தெரிகிறது. அந்தம்மாளை பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துப் போகச் சொல்லி இருக்கிறேன்...."

மந்திரி திருப்தியுடன் சொன்னார். "நீங்கள் கச்சிதமாக வேலையை செய்து இருக்கிறீர்கள். இனி ஆனந்திடம் பேரம் பேசலாமா?"

"உடனடியாகப் பேசக்கூடாது. அவன் அம்மாவைத் தேடி அலைந்து களைத்து உடைந்து பயந்து போய் இருக்கிற சமயம் பார்த்து பேசினால் தான் உடனே நம் வழிக்கு வருவான். பொறுங்கள். நிதானமாய் பேசலாம்...."

70

டெல்லியில் புறநகர்ப் பகுதியில் அந்த வீடு தனியாக இருந்தது. அந்த வீட்டைச் சுற்றியும் காலியிடமே இருந்தது. நூறு மீட்டர் தொலைவில் ஏதோ ஒரு ஃபேக்டரி மட்டுமே கண்ணுக்கெட்டிய தூரத்தில் இருந்தது. வேறு வீடுகளோ, கட்டிடங்களோ அந்தப் பகுதியில் இருக்கவில்லை. இரண்டு படுக்கையறை கொண்ட அந்த வீட்டில் எல்லா வசதிகளும் இருந்தன. ஆனால் போன் வசதி மட்டும் இருக்கவில்லை.

அங்கு அவளை அழைத்துப் போன பட்டாபி ராமன் அவளுக்கு வீட்டை சுற்றிக் காண்பித்தான். சமையலறையில் எல்லா சாமான்களும் இருந்தன. "நீங்கள் என்ன வேண்டுமானாலும் சமைத்துக் கொள்ளலாம் அம்மா. உங்களுக்குப் பசிக்கும் என்று நினைக்கிறேன். வேண்டியதை சமைத்து சாப்பிட்டுக் கொள்ளுங்கள்." என்றான்.

"நான் ஆனந்த் வந்த பிறகு சேர்ந்தே சாப்பிடுகிறேன். உங்களுக்கு வேண்டுமானால் நான் இப்போது ஏதாவது செய்து தரட்டுமா?"

சாரதா அக்கறையுடன் கேட்ட போது ஒரு கணம் பட்டாபிராமன் என்றழைக்கப்பட்டவன் நெகிழ்ந்து போனான். இந்த அம்மாளைப் போய் நாம் ஏமாற்றுகிறோமே என்று தோன்றியது. ஆனால் மறு கணம் அந்த வருத்தத்தை உதறி எறிந்தான். இந்த வேலையில் 'செண்டிமெண்ட்ஸ்'க்கு இடமில்லை.

"வேண்டாம் அம்மா. எனக்கு இப்போது முக்கியமான வேலை வேறு இருக்கிறது. ஆனந்த் வந்த பின் நான் கிளம்பி விடுவேன். அவருக்காகக் காத்திருக்கிறேன்...."

பின் அவளை ஒரு அறையில் இளைப்பாறச் சொல்லி உட்கார வைத்து விட்டு வெளியே வந்து நின்று கொண்டான். சிறிது நேரத்தில் கோட்டு சூட்டுடன் இன்னொரு வயதான நபர் காரில் வந்து இறங்கினார்.

அவர் அவனிடம் கேட்டார். "பிரச்னை ஏதும் இல்லையே?"

"இல்லை. ஆனந்திற்காக காத்துக் கொண்டிருக்கிறாள் அந்தம்மாள்"

அவர் தலையை மட்டும் அசைத்தார். இருவரும் உள்ளே வந்தனர்.

பட்டாபி ராமன் சாரதாவிடம் அவரை அறிமுகப்படுத்தினான். "இவர் எங்கள் தலைமை அதிகாரி...."

சாரதா கை கூப்பி வணங்கினாள். 'இந்த ஆள் ஏன் இங்கு வந்தார்? ஆனந்த் ஏன் வரவில்லை' என்ற எண்ணம் அவளுக்கு வந்தது. அவள் எண்ணத்தைப் புரிந்து கொண்டது போல் அந்த அதிகாரி சொன்னார். "ஆனந்த் போன வேலை இன்னும் முடியவில்லை. வர நேரமாகும். அதற்கு முன் சில விஷயங்கள் தெரிந்து கொள்ள நான் வந்திருக்கிறேன்...."

சாரதாவுக்கு குழப்பமாக இருந்தது.

அந்த அதிகாரி பட்டாபி ராமனைப் பார்த்து சொன்னார். "நீங்கள் போகலாம் பட்டாபி"

பட்டாபி அவருக்கு சல்யூட் அடித்து விட்டு சாரதாவைப் பார்த்து தலையசைத்து விட்டுப் போனான். பட்டாபிராமன் போய் சில நிமிடங்கள் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்திருப்பது போல நடித்த அந்த அதிகாரியை ஒன்றும் விளங்காமல் சாரதா பார்த்துக் கொண்டிருந்தாள். கடைசியில் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு அந்த அதிகாரி "அம்மா உங்களிடம் நான் விரிவாகப் பேச வேண்டி இருக்கிறது. ஹாலிற்கு வாங்கள்" என்று அவளை ஹாலிற்கு

அழைத்து வந்தார். சாரதா குழப்பத்துடன் பின் தொடர்ந்தாள்.

ஹாலில் ஒரு சோபாவில் அவளை அமர வைத்து விட்டு அவர் சொன்னார். "உண்மையில் நானும் ஆனந்தும் சேர்ந்து வருவதாகத் தான் இருந்தது. ஆனால் சற்று நேரமாகும் என்பதால் ஆனந்த் "நீங்கள் போங்கள். அம்மாவிடம் விவரங்களைக் கேட்டுக் கொண்டிருங்கள். நான் வந்து விடுகிறேன்...." என்று சொல்லி விட்டார்....."

சாரதா திருதிருவென்று விழித்தாள். "என்ன விவரங்கள்?"

அவர் பதில் சொல்லாமல் ஒரு சிடியை எடுத்து அங்கிருந்த டிவியில் போட்டார். சிறிது நேரத்தில் டிவியில் டெல்லி புறநகர்ப்பகுதியில் வெடிகுண்டு வைத்த தீவிரவாதியைப் பற்றி புகைப்படத்துடன் வந்த செய்தி தெரிய ஆரம்பித்தது. அவர் சாரதா மீது வைத்த கண்களை சிறிதும் நகர்த்தவில்லை.

டிவியில் அந்த செய்தியைப் பார்த்த சாரதாவிற்கு அதில் வந்த புகைப்படம் தன் மகனுடையது என்று தெரியவில்லை. ஏதோ சம்பந்தமில்லாத செய்தியைப் பார்ப்பது போல அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கடைசியில் அவர் கேட்டார். "அம்மா இந்த ஆள் யாரென்று தெரிகிறதா?"

சாரதா வெகுளித்தனமாக சொன்னாள். "அவன் ஒரு தீவிரவாதி என்று சொன்னார்களே"

ஒன்றும் சொல்லாமல் அவளையே சிறிது நேரம் உற்றுப் பார்த்து விட்டு அவர் உணர்ச்சியே இல்லாத குரலில் சொன்னார். "உங்கள் இரண்டாம் மகன் அக்ஷயின் சாயல் அவனுக்கு இருக்கிறது போல் உங்களுக்குத் தோன்றவில்லையா?"

சாரதாவிற்கு தலையில் இடி விழுந்தது போல் இருந்தது. அவர் ஒரு பதிலை எதிர்பார்க்கிறார் என்பதை சிறிது நேரம் கழித்து தான் அவள் உணர்ந்தாள். "இது அக்ஷய் இல்லையே. வேறு யாரோ?..."

அவர் ஒன்றும் பேசாமல் போய் திரும்பவும் அந்த சிடியை ஓட விட்டார்.

சாரதா அந்தப் படத்தை மறுபடி உற்றுப் பார்த்தாள். உற்றுப் பார்க்கையில் சில ஒற்றுமைகள் அவளுக்குத் தென்பட்டன. அவளுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. ஆனால் ஆணித்தரமாக சொன்னாள். "என் பிள்ளை அப்படி எல்லாம் செய்ய

மாட்டான்...."

அவள் குரலில் தெரிந்த உறுதியை அவர் கவனித்தார். ஒன்றும் சொல்லாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அவள் சொன்னாள். " இவனுக்கும் அக்‌ஷயிற்கும் நிறையவே வித்தியாசம் இருக்கிறது, அக்‌ஷய் வயதிலும் சிறியவனாய் இருக்கிறான்"

அவர் சொன்னார். "அதையே தான் நானும், ஆனந்தும் நம்புகிறோம். ஆனால் போலீஸ் அவன் பற்றி சொல்லும் தகவல்கள் எல்லாம் அக்‌ஷயிற்கு எதிராக இருக்கின்றன. இதில் அக்‌ஷயிற்கு பழைய நினைவு வேறு போய் விட்டதும் நமக்கு சிக்கலாக இருக்கிறது. ஆனந்திடம் அவன் இப்போது நினைவுக்கு வந்ததை எல்லாம் சொன்னதை அவர் குறித்து வைத்திருக்கிறார். அக்‌ஷய் உங்களிடம் சொல்லியிருக்கும் விஷயங்களையும் கேட்டு வைக்கச் சொன்னார். ஒருவேளை உங்களிடம் அவன் சொல்லும் போது கொஞ்சம் அதிகமாகக் கூட நினைவுக்கு வந்திருக்கலாம் என்று ஆனந்த் நினைக்கிறார்... அக்‌ஷய் உங்களிடம் என்ன சொன்னான் என்பதை ஒன்று விடாமல் சொல்கிறீர்களா?"

அவள் சொல்ல ஆரம்பிக்கும் முன் சைகையால் நிறுத்தி சொன்னார்.

"ஒரு நிமிடம் இருங்கள். நான் நீங்கள் சொல்வதை டேப் செய்து கொள்கிறேன். ஆனந்த் வந்தவுடன் இன்னொரு தடவை நீங்கள் சொல்ல வேண்டியதில்லை. பிறகு ஆனந்த் குறித்து வைத்திருக்கும் தகவல்களுடன் இதையும் ஒப்பிட்டுப் பார்த்து நாங்கள் அக்‌ஷயை இந்த வழக்கில் இருந்து காப்பாற்ற வழியை யோசிக்கிறோம்"

சாரதாவிற்கு என்ன நினைப்பது என்றே தெரியவில்லை. அநியாயமாக அவள் மகன் இந்த வழக்கில் எப்படி மாட்டிக் கொண்டான், இது பற்றி ஆனந்த் ஏன் அவளிடம் சொல்லவில்லை என்று நினைத்தவளாக அக்‌ஷய் சொன்னதை எல்லாம் சொல்ல ஆரம்பித்தாள்.

அக்‌ஷயை புத்த பிக்குகள் காப்பாற்றியது, சஹானா என்ற பெண் அடைக்கலம் கொடுத்தது, அவளும், மரகதமும், வருணும் அவனிடம் பாசமாக இருந்தது, காணாமல் போனவர்களைக் கண்டு பிடிக்கும் ஏஜென்சி ஒன்றிற்கு சஹானா தகவல் கொடுத்தது, பின் ஆனந்த் தகவல் கிடைத்து தம்பியை அழைத்துக் கொண்டது எல்லாவற்றையும் அக்‌ஷய் சொன்னது போலவே அவள் சொல்ல அந்த நபர் அனைத்தையும் டேப் செய்து கொண்டார்.

அவர் அவள் சொல்லி முடித்த பிறகு எல்லாம் விளங்கியது போல தலையசைத்தார். பிறகு ஒன்றும் பேசாமல் செல் போனில் பேசுவது

போல நடித்தார். "ஆனந்த்....நான் அம்மா பேசுவதை எல்லாம் டேப் செய்து விட்டேன். உங்கள் வேலை முடிந்து விட்டதா.... என்ன இன்னும் நேரமாகுமா? சரி எப்போது தான் வருகிறீர்கள்?...சரி அம்மாவிடம் பேசுகிறீர்களா....?"

அவர் செல்போனை அவளிடம் தந்தார். அவள் ஆர்வத்துடன் வாங்கி பேச முயற்சித்து "என்ன ஒன்றுமே கேட்கவில்லையே" என்றாள்.

"இணைப்பு போய் விட்டது போல இருக்கிறது. இருங்கள். ஆனந்தே போன் செய்வார்"

சில நிமிடங்கள் ஆகிய பிறகும் ஆனந்தின் போன் வராததைக் கண்டு அவர் சொன்னார். "ஆனந்த் இருக்கும் இடத்தில் டவர் பிரச்னை என்று நினைக்கிறேன். கவலைப் படாதீர்கள். ஆனந்த் நேரிலேயே வந்து விடுவார்"

***********

ஒரு மணி நேரம் கழித்து அந்த டேப்பைப் போட்டு எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்து விட்டு சிபிஐ மனிதன் ஒரு எண்ணிற்குப் போன் செய்தான்.

"அந்த டிவிக்காரி மகன் வருணை உடனடியாக கடத்துங்கள்......"

71

வருண் தெருக் கோடியில் இருந்த கடையில் இருந்து சாக்லேட் வாங்கிக் கொண்டு வீடு திரும்பும் போது கடத்தப்பட்டான். எல்லாம் ஒரு நிமிட நேரத்தில் நடந்து முடிந்தது. பின்னால் இருந்து யாரோ ஒரு கைக்குட்டையை அவன் முகத்தருகில் கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு அவனுக்கு நினைவில்லை. அவனைத் தூக்கி ஒரு காரில் போட்டுக் கொண்டு அங்கிருந்து கடத்தல்காரர்கள் பறந்தார்கள். அந்த தெருவில் நடந்து சென்று கொண்டிருந்த ஒரு வயதான கிழவி தான் பார்க்கிற தொலைவில் இருந்தாள். அவளுக்கும் நடந்தது என்ன என்பது சரியாகப் புரியவில்லை. ஒரு நிமிடம் நின்று யோசித்து விட்டு அவளும் பயணத்தைத் தொடர்ந்தாள்.

***********

சாரதாவிற்கு நடப்பது எதுவும் சரியாகத் தோன்றவில்லை. அவளுக்கு அக்ஷயைப் பார்க்க ஆவலாய் இருந்தது. ஆனால் கூட்டிக் கொண்டு போக ஆனந்த் இன்னும் வந்தபாடில்லை. அவள்

பேசியதை எல்லாம் டேப் செய்து எடுத்துக் கொண்டு போன அதிகாரி போவதற்கு முன் ரகசியமாய் தாழ்ந்த குரலில் அவளிடம் சொன்னார்.

"நானும் அவசரமாய் போக வேண்டி இருக்கிறது. ஆனந்த் தன் வேலை முடிந்தவுடன் வந்து விடுவார். நீங்கள் ஏதாவது செய்து சாப்பிட்டு விட்டு அவர் வரும் வரை டிவி பார்த்துக் கொண்டு இருங்கள். பாதுகாப்பு காரணங்களுக்காக நான் வீட்டைப் பூட்டிக் கொண்டு போகிறேன். தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள். எங்கள் ஆட்களே இங்கு ஆனந்திற்கு முன்பாகவே வந்தாலும் அவர்களிடமும் அதிகம் பேசாதீர்கள்....வரட்டுமா"

அந்த அதிகாரி சொன்னதில் அவளுக்கு தலையும் புரியவில்லை, வாலும் புரியவில்லை. அவள் பதிலுக்குக் காத்திராமல் அவர் வீட்டை வெளியே பூட்டிக் கொண்டு போய் விட்டார். அவளுக்கு டிவி பார்க்கிற மனநிலை இருக்கவில்லை. அவள் மகன் மீது அநியாயமாய் தீவிரவாதி என்று பழி போட்ட போலீசார் மீது அவளுக்குக் கோபம் வந்தது. டிவியில் காண்பித்த ஆள் அவள் மகன் அக்ஷய் போல கண்டிப்பாக இல்லை. மிகவும் உற்றுப் பார்த்தால் மட்டும் ஏதோ சாயல் தெரிகிறது. அப்படி உற்றுப் பார்த்தால் ஒவ்வொருவரிடமும் எத்தனையோ சாயல் இருக்கலாம். அதை வைத்து இப்படி தவறாகச் சொல்லலாமா?

நேரம் செல்லச் செல்ல ஆனந்தும் வராமல் போகவே அவளுக்கு இருப்பு கொள்ளவில்லை. ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள். தூரத்தில் இருந்த ஒரு கட்டிடத்தைத் தவிர வேறு வீடோ, கட்டிடமோ அருகில் இல்லாததை அவள் அப்போது தான் கவனித்தாள். ஏன் இந்த மாதிரி இடத்தில் சிபிஐ காரர்கள் வீடு கட்டி வைத்திருக்கிறார்கள்? ரகசியத்திற்காகவா?

அவள் சமையல் அறையில் ஃபிரிட்ஜைத் திறந்து பார்த்தாள். தோசை மாவு, காய்கறிகள், பால் பாக்கெட்டுகள் எல்லாம் இருந்தன. ஃப்ரிட்ஜை மூடினாள். சமையலறையில் அரிசி முதற்கொண்டு அத்தனை மளிகை சாமான்களும், எல்லா வகையான பாத்திரங்களும் இருந்தன. கேஸ் ஸ்டவ் இருந்தது. கேஸ் சிலிண்டரும் முழுமையாக இருப்பது தெரிந்தது. எல்லாவற்றையும் பார்த்தால் இவர்கள் அவள் வருவதற்கு முன் தான் அத்தனையும் வைத்து விட்டுப் போயிருப்பது போல் தோன்றியது. எல்லாம் பல நாட்களுக்கு சமைக்கத் தேவையான அளவில் இருந்ததால் அவள் மனதில் லேசாக சந்தேகம் படர ஆரம்பித்தது.

நடந்ததை எல்லாம் ஆரம்பத்தில் இருந்து யோசித்து பார்த்தாள். பட்டாபிராமன் தன் வீட்டுக்கு வந்ததில் இருந்து ஆனந்திடம் அவள் பேசவில்லை என்பது நெருடலாக இருந்தது. அக்ஷயைப் பற்றி

அந்த பட்டாபிராமன் சொன்னது தவிர ஆனந்திற்கும் இவர்களுக்கும் தொடர்பு இருப்பதற்கு வேறெந்த ஆதாரமும் இல்லையே என்பது உறைக்க அவளுக்கு சிறிது நேரம் தேவைப்பட்டது. தான் கடத்தப்பட்டிருக்கலாமோ என்ற சந்தேகம் அரைகுறையாய் அவளுக்கு வந்தது. அவளைக் கடத்தி என்ன சாதிக்கப் போகிறார்கள்? அவளுக்கு மகன்களை நினைத்த போது தான் வயிற்றைப் பிசைந்தது. இருவரும் அவளைத் தேடி அழைவார்களே. போய் கும்பிடலாம் என்றால் இத்தனை வசதி இருக்கிற வீட்டில் ஒரு பூஜையறை கூட இல்லை.

டிவி போட்டு சிறிது நேரம் பார்த்தாள். ஆனால் மனம் அதில் லயிக்கவில்லை. அப்போது தான் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. பரபரப்புடன் எழுந்தாள். ஆனந்த் வந்து விட்டானோ?

இரண்டு ஆட்கள் ஒரு சிறுவனைக் கொண்டு வந்து அங்கிருந்த சோபாவில் கிடத்தினார்கள். அவளுக்கு அவர்களையும் தெரியவில்லை. அந்தப் பையனையும் தெரியவில்லை. குழப்பத்தோடு அந்த ஆட்களிடம் கேட்டாள்.

"யாரிந்த பையன்? இவனுக்கு என்ன ஆயிற்று?"

அவர்களில் ஒருவன் சுருக்கமாய் சொன்னான். "மயக்கம்."

சொன்னவர்கள் திரும்பவும் வீட்டைப் பூட்டிக் கொண்டு போய் விட்டார்கள். ஒரு கார் கிளம்பும் சத்தம் கேட்டது. சாரதா அந்த பையன் அருகில் அமர்ந்து கொண்டாள். ஒரு வேளை இவனையும் கடத்திக் கொண்டு வந்து விட்டார்களோ? ஏன் கடத்தினார்கள்? நினைக்க நினைக்க தலை சுற்றியது. இப்போது தான் தன்னையும் கடத்திக் கொண்டு வருவது தான் அவர்கள் நோக்கமாய் இருந்திருக்க வேண்டும் என்று அவளுக்கு உறுதியாயிற்று.

சிறிது நேரத்தில் அவன் கண் விழித்தான். சுற்றும் முற்றும் பார்த்து விட்டு பரபரப்போடு கேள்விகள் கேட்டான். "இது யார் வீடு?... நான் எப்படி இங்கே வந்தேன்..... நீங்கள் யார்?"

சாரதா தனக்குப் பதில் தெரிந்த கேள்விக்கு மட்டும் பதில் சொன்னாள். "நான் சாரதா?"

"நான் எப்படி இங்கே வந்தேன்?"

"இப்போது இரண்டு பேர் உன்னை இங்கே போட்டு விட்டு போனார்கள்?"

"யாரவர்கள்?"

"தெரியவில்லை"

"உங்கள் வீட்டில் யாரோ ரெண்டு பேர் என்னை கூட்டிக் கொண்டு வந்து விட்டால் என்ன ஏது என்று கேட்க மாட்டீர்களா பாட்டி"

"இது என் வீடு அல்ல?"

"அப்புறம் யார் வீடு?"

"தெரியவில்லை?"

"அப்படியானால் நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்?"

இவனைப் பார்த்தால் கிட்டத்தட்ட ஆறேழு வயது தான் இருக்கும் போல தெரிந்தது. ஆனால் விவரமானவன் போல தெரிந்தான். இருந்தாலும் இவனுக்கு தன் கதையைச் சொன்னால் விளங்கவா போகிறது என்று நினைத்த சாரதா சுருக்கமாகச் சொன்னாள். "என்னை ஏமாற்றி இங்கே கூட்டிக் கொண்டு வந்து விட்டார்கள். உன் பெயர் என்ன?"

அவன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. அவன் முகத்தில்

பயம் படர்ந்தது. "எனக்கு அம்மாவைப் பார்க்கணும்" என்று சொல்லியவன் அழ ஆரம்பித்தான். சாரதாவிற்கு அந்த சிறுவனைப் பார்க்க பாவமாக இருந்தது.

"அழாதே...."

சிறிது நேரம் கழித்து அழுகையை நிறுத்தி அவன் சொன்னான். "எனக்கு பசிக்குது..."

சாரதா சொன்னாள். "தோசை வார்த்து தரட்டுமா? சாப்பிடுகிறாயா?"

அவன் தலையாட்டினான்.

தோசை ஊற்றியபடியே அவனிடம் கேட்டாள். "உன் பெயர் என்ன?"

"வருண்"

அந்தப் பெயரைக் கேட்டவுடன் அவளுக்கு அக்ஷய் சொன்ன வருண் ஞாபகம் வந்தது. அவன் அந்தப் பையனுடன் தனக்கு இருந்த நட்பை அவளிடம் விரிவாகச் சொல்லி இருந்தான்... அவளை

அறியாமல் புன்னகைத்தாள்.

அதைக் கவனித்த வருண் கேட்டான். "ஏன் பாட்டி சிரிக்கிறீர்கள்?"

"என் சின்ன மகனுக்கும் வருண் என்ற பெயரில் ஒரு நண்பன் இருக்கிறான்.. அது ஞாபகம் வந்தது. அவனும் உன்னை மாதிரி சின்னப் பையன் தான்..."

"உங்கள் மகன் என்னை மாதிரி சின்னப் பையனா?"

சாரதா வாய் விட்டு சிரித்தாள். "என் மகன் சின்னப் பையனில்லை. அவன் நண்பன் தான் சின்னப் பையன். என் மகன் பெரியவன்."

வருணுக்கு அக்‌ஷயின் நினைவு வந்தது. "எனக்கும் பெரிய அங்கிள் நண்பனாய் இருந்தார்...அவர் பெயர் அக்‌ஷய்....அது நான் வைத்த பெயர்.." சொல்கையில் அவன் குரலில் சோகம் இருந்தது.

சாரதா யோசிக்காமல் சொன்னாள். "என் சின்ன மகன் பெயரும் அக்‌ஷய் தான்..."

திடீரென்று அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

சாரதா ஒரு வித படபடப்புடன் கேட்டாள். "உன் அம்மா பெயர் சஹானாவா?"

வருண் சொன்னான். "ஆமாம்....". இந்தப் பாட்டிக்கு எப்படித் தெரியும் என்று கேட்க நினைத்தவன் வேறு யோசனை வர பரபரப்புடன் கேட்டான். ."உங்கள் அக்ஷய் அங்கிளுக்கு நாக மச்சம் இருக்கிறதா பாட்டி?...."

72

சாரதா கடத்தப்பட்டிருக்கிறாள் என்பது உறுதியான பிறகு ஆனந்த், அக்ஷய் இருவராலும் நிறைய நேரம் எதுவும் பேச முடியவில்லை. பிறகு அக்ஷய் தான் மௌனத்தைக் கலைத்தான்.

"உனக்கு நானிருக்கும் இடம் தெரியும் என்பது அவர்களுக்கு உறுதியாகத் தெரிந்து விட்டது. உன்னிடம் இருந்து உண்மையை வரவழைக்கத் தான் அவர்கள் அம்மாவைக் கடத்தி இருக்கிறார்கள். எனக்கு புரியாதது என்ன என்றால் அம்மா எப்படி சிறிதும் யோசிக்காமல் யாரோ ஒரு ஆள் கூப்பிட்ட உடன் போய் விட்டார்கள்..."

ஆனந்த் சொன்னான். "அம்மாவை ஏமாற்றுவது ரொம்பவே சுலபம்

அக்ஷய். அதுவும் மகன் சிபிஐயில் இருக்கிறதால் தன்னை ஏமாற்ற யாருக்கும் தைரியம் வராது என்று நினைக்கிற ரகம் அவர்கள்..."

அக்ஷயிற்கு அம்மாவை நினைக்கையில் மனம் ரணமாகியது. "எல்லாம் என் ராசி என்று நினைக்கிறேன் ஆனந்த். நான் போகிற இடம் எல்லாம் பிரச்னை தான். பெற்றவர்களானாலும் சரி, வளர்த்தவர்களானாலும் சரி எல்லாருக்கும் ஆபத்து தான் வருகிறது...."

ஆனந்த் சொன்னான். "அப்படியெல்லாம் பைத்தியம் மாதிரி பேசாதே... இனி என்ன செய்யலாம் என்று யோசி"

அக்ஷய் தன் மனதில் எழுந்த துக்கத்தை பலவந்தமாக ஒரு ஓரத்தில் தள்ளி விட்டு அடுத்தது என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்க ஆரம்பித்தான். தன் தம்பி முகத்தில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தை ஆனந்த் கவனித்தான். உணர்ச்சிகளே இல்லாத முகமாக அவன் முகம் மாற ஆரம்பித்தது. அவன் கண்களில் ஒருவித அமானுஷ்யத் தனம் தெரிய ஆரம்பித்தது. இந்த புதிய அவதாரத்தில் அலட்டிக் கொள்ளாமல் அவனால் கொலையே கூட செய்ய முடியும் என்று ஆனந்திற்குத் தோன்றியது. அவனுடைய எதிரிகளில் ஓரிருவர் இந்த முகபாவனை வரும் போதெல்லாம் அவன் ஆபத்தானவன் என்று கிலியுடன் குறிப்பிட்டிருந்தது அந்த ஃபைலில் அவன்

படித்திருக்கிறான்....

அக்ஷய் சொன்னான். "ஆனந்த் சரித்திரம் திரும்பத் திரும்ப வரும் என்று சொல்வார்கள். என்னுடைய அதிர்ஷ்ட சரித்திரம் அப்படித் திரும்பத் திரும்ப வருவதில் எனக்கு விருப்பமில்லை. நம் அம்மாவுக்கு என்னால் ஒரு ஆபத்து என்பதை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. எதிரியை நேரடியாக சந்திக்க வேண்டிய நேரம் வந்து விட்டது என்று நினைக்கிறேன்...."

ஆனந்த் சொன்னான். "ஆனால் நமக்கு எதிரியே யாரென்று தெரியாதே அது தானே பிரச்னை..."

"நமக்குத் தெரியா விட்டாலும் யாருக்குத் தெரியும் என்பது நமக்குத் தெரியுமே. டிஐஜி கேசவதாஸிற்குத் தெரியும். அப்புறம் நீ உன் ஆபிசில் யாரையோ சந்தேகப்பட்டாயே அந்த ஆள் பெயரென்ன?...."

"மகேந்திரன்...."

"ஊம்.... அந்த மகேந்திரனுக்குத் தெரியும்.... அந்த இரண்டு பேரையும் பார்த்து கேட்கிற விதத்தில் கேட்டால் சொல்லாமலேயா போய் விடுவார்கள்...."

ஆனந்த் தம்பியுடன் ஆன முதல் சந்திப்பை நினைத்துப் பார்த்தான். கண்ணிமைக்கும் நேரத்தில் தன்னை செயலிழக்க வைத்த விதம் இப்போதும் அவனுக்கு விளங்காத புதிராக இருந்தது. இவன் கையாளும் விதத்தில் யாரும் இவனிடம் எதுவும் மறைக்க முடியாது என்பதில் அவனுக்கு சந்தேகமே இல்லை. ஆனால் பணயக் கைதியாய் அம்மாவை எதிரிகள் வைத்திருக்கிறார்கள், எதிரிகள் சாதாரண மனிதர்கள் அல்ல அரசாங்கமே அவர்கள் கையில் இருக்கிறது என்கிற யதார்த்த நிலை அவனை சற்று தைரியம் இழக்கவே வைத்தது.....

*********

சிறிது நேரத்தில் வருணும் சாரதாவும் மிக அன்னியோன்னியமாகி விட்டார்கள். தன் மகனுக்கு ஆதரவு தந்தது இந்த சிறுவனின் தாய் தான் என்கிற தகவல் சாரதாவுக்கும், அக்ஷய் அங்கிளின் தாய் இந்த பாட்டி என்ற தகவல் வருணுக்கும் கிடைத்த பின்னர் இருவரும் ஒரு குடும்பமாகவே ஆகி விட்டார்கள். அக்ஷயால் பந்தப்பட்ட இருவரும் ஒருவரை ஒருவரை எதிர்பாராமல் சந்தித்துக் கொண்ட மகிழ்ச்சியில் கடத்தப்பட்டு ஒரு வீட்டில் அடைத்து வைக்கப் பட்டு இருக்கிறோம் என்பதையே மறந்து சந்தோஷமாக சிறிது நேரம் பேசிக் கொண்டார்கள்.

பேச்சின் போது சாரதாவிற்கு அக்ஷய் அங்கிளின் முழுத் தகவலும் தெரியாது என்பதைப் புரிந்து கொண்ட வருண் தன் வயதிற்கு மீறிய முதிர்ச்சியுடன் விவகாரமான தகவல் எதுவும் சொல்லாமல் வாயை மூடிக் கொண்டான். தன் பிறந்த நாள் விழாவை எப்படி அக்ஷய் ஒரு மறக்க முடியாத ஒன்றாய் செய்தான், தனக்கு என்ன எல்லாம் வாங்கிக் கொடுத்தான் என்றெல்லாம் சொல்ல ஆரம்பித்தான். சாரதாவும் தன் மகன் அவனுடைய மூன்றாம் வயதில் எப்படிக் காணாமல் போனான், இப்போது திடீரென்று வந்து எப்படி எல்லாம் கிண்டல் செய்தான் என்றெல்லாம் சொன்னாள்.

பிறகு இருவருமே சிறிது அமைதியாக மாறிய போது தான் தங்களுடைய தற்போதைய நிலைமையின் பயங்கரம் மீண்டும் அவர்களுக்கு உறைத்தது. சாரதா வருத்தத்துடன் சொன்னாள். "ஏதோ வெடிகுண்டு வைத்த ஆளைப் பிடிக்க முடியாமல் அக்ஷய் மீது போலீஸ் பொய் வழக்கு போடப் போகிறது போல இருக்கிறது. அதை அவன் தான் செய்தான் என்று அவனை சம்மதிக்க வைக்க என்னைக் கடத்தி இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் ஏதோ அவனுக்கு தங்க இடம் கொடுத்த பாவத்திற்கு உன்னையும் கடத்தி வந்திருக்கிறது தான் வருத்தமாய் இருக்கிறது. அவனைப் பிடித்து விட்டார்களா என்று கூட எனக்கு சந்தேகமாய் இருக்கிறது....." அவள் கண்களில் நீ தேங்கியது.

ஆனால் வருணைப் பொறுத்த வரை அக்ஷயால் முடியாத செயல் எதுவுமில்லை. அதனால் அவன் உற்சாகமாக சொன்னான். "நீங்க கவலையே படாதீங்க பாட்டி. அக்ஷய் அங்கிளை அப்படி எல்லாம் சுலபமாய் பிடித்து விட முடியாது. அவர் நம் இரண்டு பேரையும் அலட்டிக்காமல் காப்பாத்தி விடுவார் பாருங்களேன்.... அவரை பத்தி உங்களுக்கு தெரியாது....."

**********

சிபிஐ மனிதன் போன் செய்து அந்த வீட்டுக்கு காவலுக்கு நிறுத்தி வைத்திருந்த ஆளிடம் நிலவரத்தை விசாரித்தான். "அந்த கிழவியும், பொடியனும் எதுவும் பிரச்னை செய்யவில்லையே"

"இப்போது தான் ரகசியமாய் அவர்களுக்கே தெரியாமல் அவர்களை ஜன்னல் வழியாகப் பார்த்து விட்டு வருகிறேன் சார். அவர்கள் இரண்டு பேரும் சொந்த வீட்டில் இருப்பது போல இருக்கிறார்கள். அந்தக் கிழவி அந்த பையனுக்கு தோசை ஊற்றிக் கொடுத்துக் கொண்டிருக்கிறாள். இரண்டு பேரும் பேசிக் கொண்டே இருக்கிறார்கள்...."

சிபிஐ மனிதனுக்கு அவர்கள் இருவரால் பிரச்னை எதுவும் இல்லை

என்பது திருப்தியாக இருந்தாலும் அவர்களுடைய நடவடிக்கை நம்ப முடியாததாக இருந்தது. அந்தம்மாள் சென்னையில் இருந்து கிளம்பி வந்தது முதல் இப்போது வரை நடந்து கொள்ளும் விதம் வரை எதுவும் இயல்பாக இல்லை. 'அப்புறம் அமானுஷ்யனைப் பெற்ற பெண்மணி இயல்பாக இல்லாமல் இருப்பதில் ஆச்சரியமில்லை'.

"என்ன பேசுகிறார்கள்?"

"அந்த அக்ஷயைப் பற்றி தான் சார். அந்தப் பையன் சொல்கிறான். 'அக்ஷய் அங்கிளை யாராலும் பிடிக்க முடியாது. அவர் நம்மை அலட்டிக்காமல் காப்பாற்றி விடுவார்' என்கிறான்."

சிபிஐ மனிதன் அடுத்த கேள்வி கேட்காமல் போன் இணைப்பைத் துண்டித்தான்.

***********

ஆரம்பத்தில் வருண் பக்கத்தில் இருந்த நண்பர்கள் வீட்டுக்குப் போயிருக்கலாம் என்று சந்தேகப்பட்ட சஹானாவிற்கு எல்லா இடங்களிலும் தேடியும், விசாரித்தும் வருண் கிடைக்காமல் போன பிறகு தான் பயம் கிளம்பியது. நேரம் ஆக ஆக அந்த பிளாட் ஆட்கள் அத்தனை பேரும் கூடி தேட ஆரம்பித்து பிறகும் அவன்

கிடைக்கவில்லை என்ற போது அவள் உடைந்து போனாள். அவளும் மரகதமும் வருணுக்கு என்ன ஆயிருக்கக் கூடுமோ என்ற பீதியில் ஆழ்ந்தார்கள்.

மது உடனடியாக அங்கே வந்தான். போலீசில் புகார் கொடுத்தான். தனிமையில் சஹானாவை அழைத்துக் கேட்டான். "உனக்கு இன்னும் என்ன ஆகி இருக்கும் என்ற சந்தேகமே வரவில்லையா சஹானா?"

"எனக்கு எதுவும் சிந்திக்க முடியவில்லை மது. சொல், நீ என்ன நினைக்கிறாய்?"

"வருணை யாராவது கடத்தியிருக்கலாம்"

"ஏதோ பணக்கார வீட்டுப் பையனைக் கடத்தினாலாவது அவர்களுக்கு ஏதாவது பெரிய தொகை கிடைக்கும். என் மகனைக் கடத்தினால் என்னால் என்ன பெரிதாகத் தர முடியும் மது?"

"அக்ஷய் என்ற மனிதனைப் பற்றி நீ அவர்களுக்குத் தகவல் தரமுடியும் அல்லவா"

சஹானா அவனை வெறித்துப் பார்த்தாள்.

"ஆமாம் சஹானா. இதற்கு எல்லாமே நீ அவனுக்கு இங்கே இடம் கொடுத்து வைத்திருந்தது தான் காரணமாயிருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது...."

சஹானாவிற்குத் தலை சுற்றியது.

73

சஹானாவின் நிலைமையைப் பார்த்த மதுவிற்கு அக்ஷய் மீது தான் கோபம் வந்தது. அக்ஷய் மீது வந்த கோபத்தை வாய் விட்டே மது சொன்னான். "நான் அன்றைக்கே அக்ஷயை இங்கே சேர்க்க வேண்டாம் என்று உன்னிடம் சொன்னேன். ஆனால் நீ தான் கேட்கவில்லை. இப்போது பார் எந்த மாதிரியான நிலைமையை அவன் ஏற்படுத்தி விட்டான்!"

ஆனால் சஹானாவிற்கு அந்த சூழ்நிலையிலும் அக்ஷயைத் தங்களுடன் அழைத்து வந்ததில் சிறிது கூட வருத்தம் தோன்றவில்லை. மதுவிடம் அவள் சொன்னாள். "அக்ஷய் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் வருணை நான் அன்றைக்கே நான் இழந்திருப்பேன் மது. அதனால் இப்போது கூட நான் அதற்கு வருத்தப்படவில்லை."

அவளுடைய மனதில் அக்‌ஷய் உறுதியாய் இடம் பிடித்திருந்ததைக் கவனித்த போது மதுவிற்குப் பொறாமையாக இருந்தது. எத்தனையோ காலம் பழகினாலும் சிலரால் பிடிக்க முடியாத இடத்தை வேறு சிலர் மிகக் குறுகிய காலத்திலேயே எப்படி பிடிக்க முடிகிறது என்று அவனால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

அவன் சொன்னான். "இப்போது அவர்களுக்கு நீ அக்‌ஷயிற்கு சில நாட்கள் அடைக்கலம் தந்திருக்கிறாய் என்பதைத் தெரிந்து கொண்டு விட்டார்கள் என்று தான் எனக்குத் தோன்றுகிறது. அதனால் தான் உன்னிடம் இருந்து முழு உண்மையைத் தெரிந்து கொள்ள அவர்கள் வருணைக் கடத்தி இருக்கிறார்கள். அதனால் ஒரு வேளை அவர்கள் உன்னிடம் நடந்தது எல்லாவற்றையும் கேட்டால் நீ சொன்னால் தான் வருணைக் காப்பாற்ற முடியும் சஹானா"

சஹானா சொன்னாள். "நான் அதை எல்லாம் ஒளிக்காமல் சொன்னாலும் அவர்களுக்கு இப்போது அக்‌ஷயைக் கண்டு பிடிக்க அது எப்படி உதவும் மது?"

மதுவிற்கும் அந்தக் கேள்வி மனதில் தோன்றாமல் இல்லை. இவள் சொல்லாமலேயே அவர்களுக்கு அவன் இங்கே தங்கியது தெரிந்திருந்தால் இனி இவளிடம் கேட்க என்ன இருக்கிறது?

அவர்கள் வருணை ஏன் கடத்தினார்கள்? யோசித்த போது அவனுக்கு ஒரே பதில் தான் கிடைத்தது. அக்ஷய் எங்கு தங்கியிருக்கிறான் என்பது சஹானாவிற்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள் போல் தோன்றியது. அதை அவன் வாய் விட்டுச் சொன்னான்.

சஹானா சொன்னாள். "ஆனால் அவன் எங்கே போனான், எங்கே இருக்கிறான் என்று எனக்குத் தெரியாதே"

மதுவிற்கு அவர்கள் அதை நம்புவார்களா என்பது சந்தேகமாக இருந்தது. ஆனால் அதைத் தெரிவித்து அவளை மேலும் பயப்படுத்த அவன் விரும்பவில்லை.

சஹானா கேட்டாள். "இனி என்ன செய்யலாம் மது?"

"எதற்கும் நம் டிவியிலும், பத்திரிக்கைகளிலும் வருண் போட்டோவைத் தந்து காணவில்லை என்று விளம்பரம் செய்யலாம் மது. யாராவது ஏதாவது தகவல் தருகிறார்களா என்று பார்க்கலாம். ..... அப்புறம் கடத்தியவர்கள் போன் செய்யும் வரை நாம் காத்திருக்கலாம்.... நமக்கு இப்போதைக்கு வேறு எதுவும் வழி தெரியவில்லை சஹானா"

அவள் தலையசைத்து விட்டு சத்தமில்லாமல் அழ ஆரம்பித்தாள்.

அதைப் பார்க்கையில் அவன் மனதில் இரத்தம் கசிந்தது. "கடவுளே இவளை ஏன் இப்படி சோதிக்கிறாய். இது வரை சோதித்தது உனக்கு போதவில்லையா?"

*********

அக்ஷய் கிளம்பத் தயாரானான்.

ஆனந்த் கேட்டான். "நீ இப்போது எங்கே கிளம்பி விட்டாய்?"

அக்ஷய் சொன்னான். "டிஐஜி கேசவதாஸையும், உன் ஆபிஸ் ஆள் மகேந்திரனையும் ஒரு தடவை பார்த்து விட்டு வருகிறேன். நீ அந்த மகேந்திரன் விலாசம் மட்டும் சொல்"

ஆனந்த் மகேந்திரன் விலாசத்தைச் சொல்லி விட்டு "ஜாக்கிரதை. உன்னை எல்லோரும் வலை வீசித் தேடிக் கொண்டிருக்கிறார்கள்" என்றான்.

அக்ஷய் கேட்டான். "என்னைப் பார்த்தால் அந்தப் போட்டோவில் அவர்கள் காண்பித்த ஆள் மாதிரியா தெரிகிறது"

ஆனந்த் இல்லை என்று ஒத்துக் கொண்டான். "ஆனால் உன்னால் எப்படி சின்னச் சின்ன மாறுதல் செய்து ஒரேயடியாய் வேறு ஆளாய் மாற முடிகிறது அக்‌ஷய்"

"வெளித் தோற்றம் மாற்றினால் மட்டும் போதாது ஆனந்த். உள்ளேயும் மாற்ற வேண்டும். நாம் கற்பனை செய்த ஆளாய் முழுவதுமாய் மாறி விட வேண்டும். அவன் எப்படி நடப்பான், எப்படி உட்காருவான், எப்படி சிந்திப்பான் என்று யோசித்து முழுவதுமாக அவனாகவே மாறி விட வேண்டும். அது தான் ரகசியம். சரி நீ என்ன செய்வதாய் இருக்கிறாய் ஆனந்த்"

"நான் இனியும் ஜெயினிடம் இருந்து எதையும் மறைக்க முடியாது அக்‌ஷய். அவருக்கு எல்லாம் சொல்லியாக வேண்டும். இல்லா விட்டால் தேவை இல்லாமல் என் மீதே அவர் சந்தேகப்படும்படி ஆகி விடும். அது மட்டுமல்ல நமக்கு அடுத்ததாக அவர் உதவியும் தேவைப்படும்."

"நீ அவர் மேல் நம்பிக்கை வைத்து இருக்கிறாயா. ஆனந்த்?"

"அவர் மேல் சந்தேகப்பட இது வரைக்கும் ஒன்றுமில்லை அக்‌ஷய். அவர் நாணயமான மனிதராக இருந்ததால் தான் தனிப்பட்ட

அக்கறை எடுத்துக் கொண்டு ஆச்சார்யா கொலை வழக்கில் என்னை விசாரணைக்கு அழைத்தார்."

"சரி நீ அவரிடம் எப்படி சொல்லப் போகிறாய்?"

"போனில் இதை எல்லாம் சொல்ல முடியாது. நேரில் போய் தான் விளக்கமாகச் சொல்ல வேண்டும். அதுவும் ஆபிஸில் போய் சொல்ல முடியாது. அங்கே தான் நம் உளவாளியும் இருக்கிறான். அதனால் அவர் வீட்டுக்குப் போய் சொல்லலாம் என்று இருக்கிறேன். அவர் வீட்டுக்குப் போக இரவு ஒன்பது ஆகி விடும். அதற்கு மேல் அவர் வீட்டுக்குப் போகலாம் என்று இருக்கிறேன். நானும் உன் மாதிரி ஏதாவது வேஷம் போட்டுத் தான் போக வேண்டும்....."

"சரி....அவர்கள் போன் உனக்கு வந்தாலும் வரலாம். அவர்கள் அம்மாவை ஒப்படைக்க வேண்டுமானால் என்னை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூட உன்னிடம் சொல்லலாம். பதில் பேசாமல் ஒத்துக் கொள். எங்கே எப்படி ஒப்படைக்க வேண்டும் என்று மட்டும் கேட்டு வைத்துக் கொள்...."

அக்ஷய் கிளம்பி விட்டான்.

மகேந்திரன் வீட்டைக் கண்டு பிடிப்பதில் சிரமம் இருக்கவில்லை.

நகரத்தின் பிரதான இடத்தில் உள்ள ஒரு அடுக்குமாடிக் கட்டிடத்தில் நான்காவது மாடியில் உள்ள ஃப்ளாட்டில் அவன் வசித்து வந்தான். அழைப்பு மணி அடித்தவுடன் ஒரு வயதான மனிதர் வந்து கதவைத் திறந்தார். மகேந்திரனின் தந்தையாக அவர் இருக்க வேண்டும் என்று அக்ஷய் அனுமானித்தான்.

"மகேந்திரன்....."

"அவன் கான்பூரில் அவன் நண்பன் மகேஷ் கல்யாணத்திற்கு போயிருக்கிறான். நீங்கள்...."

"நானும் அவன் நண்பன் தான். ராகுல்....."

"அவன் நாளை இரவு தான் வருவான்.... உள்ளே வாருங்களேன்...."

"இல்லை சார். எனக்கு வேறு ஒரு ஆளைப் பார்க்கப் போக வேண்டி இருக்கிறது. நான் நாளை மறு நாள் அவனைப் பார்க்கிறேன்....."

அக்ஷய் அங்கிருந்து கிளம்பி விட்டான். அங்கிருந்து கேசவதாஸின் வீடு சுமார் ஒன்றரை மைல் தான் இருக்கும். அதனால் நடந்தே செல்லலாம் என்று தீர்மானித்து அவன் கேசவதாஸ் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவன் மனம் அமைதி இல்லாமல் தவித்தது.

அம்மாவைக் காப்பாற்றும் வரை மனதிற்குக் கண்டிப்பாக அமைதி கிடைக்காது என்று தோன்றியது. வழியில் ஒரு டிவிக் கடை அருகில் நடக்கையில் தற்செயலாக விளம்பரத்திற்காக வைத்திருந்த டிவியில் ஒரு சிறுவனின் படம் காண்பிக்கப்பட்டது. வருண் படம் போலவே இருக்கிறதே என்று நினைத்து உற்று பார்த்தவன் அதிர்ந்தே போனான். அது வருண் படமே தான். காணவில்லை என்று அறிவித்துக் கொண்டிருந்தார்கள்.

வருண் சிறுவனானாலும் விவரமான பையன். கவனக் குறைவால் காணாமல் போகிறவன் அல்ல. அப்படி இருந்து காணாமல் போகிறான் என்றால் அவனையும் அவன் எதிரிகள் கடத்தி இருக்க வேண்டும் என்பதை அவனால் உடனடியாக ஊகிக்க முடிந்தது.

முதலில் அம்மா, இப்போது வருண். எதிரிகளின் பிடி இறுக ஆரம்பித்து விட்டது என்பதை அவன் உணர்ந்தான். அவனுக்கு உதவப் போய் சஹானா இப்படிப் பட்ட ஆபத்தில் மாட்டிக் கொண்டதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

ஆனந்திற்கு அவர்கள் போன் வரவேயில்லை. ஏன் அவர்கள் இன்னும் பேசவில்லை என்று அவன் கவலையுடன் யோசித்தான். போன் பற்றி யோசிக்கும் போது தான் தன்னுடைய போன் ஒட்டுக் கேட்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் அவனுக்கு வந்தது. வெளிப்படையாகவே அவனைப் பின் தொடர்பவர்கள் போன் ஒட்டுக் கேட்பதில் முறையான வழியைப் பின்பற்றவா போகிறார்கள். அவன் கடைசியாக அம்மாவுடன் என்ன பேசினோம் என்று யோசித்துப் பார்த்தான். அம்மா அக்‌ஷய் பற்றி பேசியது நினைவுக்கு வந்தது. ஒட்டுக் கேட்டிருப்பார்களேயானால் நிலைமை மேலும் சிக்கலாக மாறுவதை ஆனந்த் உணர்ந்தான். அது உண்மையானால் ஆனந்திடம் அக்‌ஷய் இருக்கும் இடத்தைத் தெரிந்து கொள்வதற்காக மட்டுமே அவர்கள் அம்மாவைக் கடத்தியிருக்க மட்டார்கள். அவன் தாய் அக்‌ஷயின் தாய் என்பதும் அவர்களுக்குத் தெரிந்து இருக்கலாம். அக்‌ஷயின் தாய் என்பதற்காகவே கூட அவர்கள் அம்மாவைக் கடத்தி இருக்கலாம்....

அவனால் ஓட்டல் அறையில் உட்கார முடியவில்லை. முகம் தெரியாத எதிரிகளை எப்படி சமாளிப்பது என்று அவனுக்குத் தெரியவில்லை. இதில் அம்மா அல்லது தம்பி இருவரில் ஒருவரைப் பலி கொடுக்க வேண்டி வரும் போலத் தோன்றிய போது அவனை அறியாமல் கண்கள் கண்ணீரால் நிறைந்தன. தனியாக இருப்பதால் சிறிது நேரம் தயக்கமில்லாமல் அழுதான்.

இரவு எட்டு மணி ஆன பிறகு ஓட்டலில் இருந்து மெல்ல கிளம்பினான். மஹாவீர் ஜெயின் வீட்டருகே வந்தவுடன் அவருக்கு பொது தொலை பேசி ஒன்றில் இருந்து போன் செய்தான்.

"ஹலோ சார். நான் ஆனந்த் பேசுகிறேன். ஆச்சார்யா கேஸில் உங்களுக்கு அவசரமாகச் சொல்ல வேண்டியது நிறைய இருக்கிறது. உங்களிடம் பேச வரட்டுமா?"

மஹாவீர் ஜெயின் களைப்புடன் சொன்னார். "நாளைக்கு ஆபிசில் பேசலாமே ஆனந்த். நான் இப்போது தான் வீட்டுக்கு வந்தேன் ...."

"ஆபிசில் பேச முடியாத சில விஷயங்கள் இருக்கின்றன சார். நான் இப்போது மிகப் பெரிய சிக்கலில் வேறு இருக்கிறேன்......"

ஜெயின் வீட்டிலும் ஆபிஸ் விவகாரங்களைப் பேசத் தயங்குவது தெரிந்தது. பின்னணியில் முகேஷின் பாடல்கள் லேசாக ஒலித்துக் கொண்டிருப்பது கேட்டது. இப்போது தான் களைப்பாறியபடி பாடல்களைக் கேட்க ஆரம்பித்திருக்கிறார் என்று புரிந்தது. மனிதர் மறுத்து விடப் போகிறார் என்று பயந்து ஆனந்த் அவசரமாகச் சொன்னான். "சார், என் அம்மாவைக் கடத்திக் கொண்டு போய் விட்டார்கள்..."

ஜெயின் அதிர்ச்சி அடைந்தார். "என்ன?... சரி உடனடியாக வாருங்கள்"

**************

அக்‌ஷயிற்கு வருணையும் சஹானாவையும் நினைக்க நினைக்க மனதை என்னவோ செய்தது. வருணைக் காணோம் என்று ஆன போது அவள் கண்டிப்பாக அதற்குக் காரணம் அக்‌ஷயின் எதிரிகள் தான் என்று ஊகித்து இருப்பாள் என்று புரிந்த போது மனம் மேலும் காயப்பட்டது. அவனுக்கு உதவப் போய் இப்படி மாட்டிக் கொண்டோமே என்று யோசித்திருப்பாளோ? அந்த குழந்தை என்ன செய்கிறானோ? அழுது கொண்டிருப்பானோ என்றெல்லாம் நினைக்க ஆரம்பித்த போது அவனுக்கு பைத்தியமே பிடிக்கிற மாதிரி இருந்தது.

"கடவுளே இந்த அற்ப உயிரை வேண்டுமானால் எடுத்துக் கொள். ஆனால் தயவு செய்து அந்தக் குழந்தையையும், என் அம்மாவையும் எதுவும் செய்து விடாதே!" என்று அவன் மனமுருக வேண்டினான்.

சற்று யோசித்த போது இந்த துக்கம், வருத்தம், சுய பச்சாதாபம் எல்லாம் எந்த விதத்திலும் உதவப் போவதில்லை என்று

தோன்றியது. அவன் முகம் சலனமே இல்லாமல் மாற ஆரம்பித்தது. அடுத்தது என்ன என்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்தவனாக சஹானாவிற்கு போன் செய்ய நினைத்தான். ஆனால் அவளிடம் நேரடியாகப் பேச அவனுக்கு தைரியம் வரவில்லை. அந்த நல்ல மனதிற்கு இத்தனை பெரிய துக்கத்தை உண்டாக்கி விட்டு எப்படி தான் பேசுவது?

மதுவின் செல் போன் எண் அவனுக்கு நினைவு இருந்தது. அவன் மதுவிற்குப் போன் செய்தான். மதுவின் குரல் களைப்பாகக் கேட்டது. "ஹலோ"

"மது. அக்ஷய் பேசுகிறேன்"

ஒரு நிமிடம் மது எதுவும் பேசவில்லை. அவனுக்கு அக்ஷயிடம் பேசப் பிடிக்கவில்லை. வருண் காணாமல் போனதில் இருந்து அவனுக்கு அக்ஷய் மீது கோபம் அதிகரித்திருந்தது. இவன் மட்டும் சஹானாவின் வாழ்க்கையில் நுழையாமல் இருந்திருந்தால் இத்தனை பிரச்னைகள் அவளுக்கு வந்திருக்காது என்று அவன் நினைத்தான்.

"மது..."

வேண்டா வெறுப்பாகச் சொன்னான். "சொல் அக்‌ஷய்"

"யாராவது வருண் விஷயமாய் சஹானாவைத் தொடர்பு கொண்டார்களா?"

அவனுக்கும் வருண் கடத்தல் விவரம் தெரிந்திருக்கிறது ...

"இது வரை இல்லை..."

"அப்படி தொடர்பு கொண்டால் எல்லா உண்மைகளையும் சொல்லி விடச் சொல். நான் அவளை முதலிலேயே மிரட்டி வைத்திருந்ததால் தான் அவள் என்னைப் பற்றி முதலிலேயே சொல்லத் தயக்கப்பட்டாள் என்று சொல்லச் சொல். தயங்காமல் என்னைப் பற்றி எவ்வளவு மோசமாகச் சொல்ல முடியுமோ அவ்வளவு மோசமாகச் சொல்லச் சொல். வருண் காணாமல் போன பிறகு என்னை அப்படிச் சொல்வதில் அவளுக்கு கஷ்டம் இருக்காது என்று நினைக்கிறேன்."

"அவளுக்கு இப்போது உன் மேல் கோபம் இல்லை அக்‌ஷய்". மதுவால் அந்த உண்மையைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

உணர்ச்சி வசப்பட்ட அக்‌ஷயிற்கு சிறிது நேரம் பேச்சு வரவில்லை.

பிறகு பேசும் போது அவன் குரல் கரகரத்தது.

"மது... சஹானாவிடம் சொல். என் உயிரைக் கொடுத்தாவது நான் வருணை அவளிடம் சேர்த்து விடுவேன். வருணை மட்டுமல்ல அவர்கள் என் அம்மாவையும் கடத்திக் கொண்டு போய் விட்டார்கள்...."

"உனக்கு உன் அம்மா, குடும்பம் பற்றி எல்லாம் நினைவுக்கு வந்து விட்டதா?"

"ஓரளவு நினைவுக்கு வந்திருக்கிறது.. அது ஒருபெரிய கதை மது... நான் நேரில் பார்க்கும் போது, சாரி எப்போதாவது பார்க்க முடிந்தால் சொல்கிறேன். எனக்கு ஒரு அண்ணனும், அம்மாவும் இருக்கிறார்கள்.... இப்போதைக்கு அண்ணாவும் என்னுடன் இருக்கிறான்.... அதனால் அவனுக்கும் ஆபத்து வந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டி இருக்கிறது...."

"உன் எதிரி யார் என்று தெரிந்ததா அக்ஷய்"

"மிகவும் முக்கியமான அந்த விஷயம் மட்டும் இன்னும் எனக்கு நினைவுக்கு வரமாட்டேன்கிறது மது. ஆனால் சீக்கிரமே அவர்களை நான் கண்டு பிடித்து விடுவேன் என்று நினைக்கிறேன். என்

எதிரியைத் தெரிந்தவர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கத் தான் நான் போய்க் கொண்டிருக்கிறேன்..."

மது சொன்னான். "அக்‌ஷய்.... ஜாக்கிரதையாய் இரு"

அக்‌ஷய் லேசாகச் சிரித்தபடி சொன்னான். "நான் நினைக்கிறேன். எனக்கு கெட்டதிலும் ஒரு நல்ல காலம் இருக்கிறது என்று..."

"ஏன் அப்படி சொல்கிறாய்?"

"என்னை வெறுக்கும் ஆள் கூட அக்கறையுடன் ‘ஜாக்கிரதையாய் இரு" என்று சொல்கிறதால் தான் அப்படி சொல்கிறேன்.

மதுவிற்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. தர்மசங்கடத்தைப் போக்க வேறு ஒரு கேள்வியைக் கேட்டான். "அதுசரி நீ ஏன் சஹானாவிடம் பேசாமல் என்னிடம் பேசினாய்?"

அக்‌ஷய் சொன்னான். "வருண் காணாமல் போன பிறகு அவளிடம் பேசும் தெரியம் எனக்கு வரவில்லை மது. அனாதை மாதிரி நின்ற நேரத்தில் எனக்கு ஆதரவு தந்த அவளுக்கு வருத்தத்தை விட வேறு எதையுமே திருப்பித் தராத நான் எப்படி பேசுவேன் சொல்."

அக்ஷய் போனை வைத்து விட்டான். மதுவுக்கு மனம் கனத்தது. அக்ஷய் நிலைமையில் இருந்து பார்த்தால் மிகவும் பாவமாக இருந்தது. அவன் குரலில் தெரிந்த வலி அவனை என்னவோ செய்தது. அக்ஷய் நிலையில் அவன் இருந்திருந்தால் அவனுக்குப் பைத்தியமே பிடித்திருக்கும். அப்படிப்பட்ட நிலையிலும் தைரியமாக அவனால் முடிந்த வரை அக்ஷய் போராடிக் கொண்டிருக்கிறான். ஆனாலும் அவன் பிரச்னைகள் நீண்டு கொண்டே போகின்றன. அதைப் பார்த்து அனுதாபப் படுவதற்கு பதிலாக அவன் மேல் கோபப் பட்டது நியாயமல்ல என்று மதுவின் மனசாட்சி சொன்னது. நீண்ட நேரம் அவன் அசையாமல் அப்படியே உட்கார்ந்திருந்தான். அவன் மனதில் அக்ஷய் சொன்ன ஒரு வாக்கியம் திரும்பத் திரும்ப ஒலித்தது.

"சஹானாவிடம் சொல். என் உயிரைக் கொடுத்தாவது நான் வருணை அவளிடம் சேர்த்து விடுவேன்....."

## 75

ஆனந்த் சென்ற போது மஹாவீர் ஜெயின் அவனுக்காக நிலை கொள்ளாமல் காத்திருந்தார். அவனுடைய தாயும் கடத்தப்பட்டிருக்கிறார் என்ற செய்தி அவரை நிறையவே உலுக்கி

இருந்தது. இந்த நாடு எங்கே போய்க் கொண்டு இருக்கிறது என்ற கேள்வி அவருக்குள்ளே பிரதானமாக எழுந்து நின்றது. அவன் வந்தவுடன் அவனைத் தன் தனியறைக்கு அழைத்துக் கொண்டு போனார்.

"உட்காருங்கள் ஆனந்த். உங்கள் அம்மாவை எப்போது கடத்தினார்கள்? எப்படி கடத்தினார்கள்? போலீசில் புகார் செய்தீர்களா? யார் கடத்தினார்கள் என்று ஏதாவது தகவல் கிடைத்ததா?"

அவரிடம் இருந்து சரமாரியாகக் கேள்விகள் வந்தன.

ஆனந்த் சொன்னான். "இந்த விசாரணையில் நான் உங்களிடம் எல்லாமே சொல்லி விடவில்லை சார். அதற்கு நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். என் நிலைமை அது போல் அமைந்து விட்டது....."

ஆனந்த் ஆரம்பத்தில் இருந்து ஆரம்பித்தான். அவனுடைய தம்பி சிறு வயதில் காணாமல் போனதில் இருந்து ஆரம்பித்தவன் எல்லாவற்றையும் விடாமல் சொன்னான். பல திருப்பங்களுடன் நடந்த சம்பவங்கள் ஏதோ நாவல் படிப்பதைப் போன்ற ஒரு பிரமையை ஜெயினிடம் ஏற்படுத்தின. அவன் முடித்த போது

அவருக்கு சிறிது நேரம் எதுவும் பேசத் தோன்றவில்லை.

கடைசியில் அவர் கேட்டார். "சரி இப்போது உங்கள் அம்மாவைக் கடத்தியவர்கள் ஏன் உங்களிடம் இன்னும் பேசவில்லை என்று நினைக்கிறீர்கள்..."

"நாம் சில சமயங்களில் விசாரிக்க வேண்டிய ஆளை வரவழைத்து விட்டு அவனிடம் கேள்வியைக் கேட்க ஆரம்பிக்கவே அதிக தாமதம் ஏன் சார் செய்கிறோம்?... அவன் தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் உடைத்து விட்டு என்னவோ, ஏதோ என்று பயப்பட வைக்கத் தானே? அதையே அவர்கள் செய்கிறார்கள் போலத் தெரிகிறது. அவர்கள் போன் வரும் போது நான் பயந்து உடைந்து, அவர்கள் சொன்னதற்கெல்லாம் தலையாட்டுகிற நிலைக்கு ஆளாகி இருப்பேன் என்று அவர்கள் நம்புகிறார்கள்...."

ஜெயின் அவனை இரக்கத்துடன் பார்த்தார். அவர்கள் எதிர்பார்ப்பு பொய்க்கவில்லை என்பது அவருக்குத் தெரிந்தது. அவருடைய குடும்ப நபர்களைக் கடத்திக் கொண்டு போயிருந்தால் அவரும் கூட அவன் நிலைமைக்குத் தான் சென்று இருப்பார். அந்த சிக்கலான நிகழ்வுகளுக்கு நடுவிலும் அமானுஷ்யன் என்று எதிரிகளால் அழைக்கப்படும் ஆனந்தின் தம்பி பற்றிய விவரங்கள் தெரிய வந்த

போது ஒருவித சுவாரசியமான பரபரப்பு அவருக்கு ஏற்பட்டது. அவனைப் பற்றி ஆனந்திடம் இன்னும் விரிவாகக் கேட்க நினைத்தாலும் இப்போதைய நிலையில் அதைக் கேட்பது தன் தகுதிக்கு உகந்ததல்ல என்று தோன்ற அவர் வேறு கேள்வி கேட்டார்.

"நம் எதிரிகள் யாராக இருக்கலாம் என்று நீங்கள் சந்தேகப் படுகிறீர்கள்"

"அரசாங்கத்தில் பெரிய பதவியில் இருக்கிறவர்கள் யாரோ இதில் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன் சார். அவர்களுடன் நம் டிபார்ட்மெண்ட் ஆட்களும் சேர்ந்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது.."

"இப்போதைக்கு உங்களுக்கு நம் டிபார்ட்மெண்டில் யார் மேல் சந்தேகம்?"

"மகேந்திரன் மேல் சந்தேகம் இருக்கிறது சார்.... ஆனால் ஆதாரம் எதுவும் நம் கையில் இல்லை.."

மகேந்திரன் மேல் ஆரம்பத்தில் எழுந்த சந்தேகம் இது வரை நீடிப்பதில் அவருக்கு எந்த கருத்து வேறுபாடும் இல்லை.

மகேந்திரனுடைய நடவடிக்கைகள் எப்போதும் சந்தேகத்திற்கு இடமளிப்பதாகவே இருந்திருக்கின்றன. அவனுக்கு அரசியல் வட்டாரத்திலும் செல்வாக்கு இருப்பதும் அனைவரும் அறிந்த விஷயம் தான்.

"இனி என்ன செய்யலாம் என்று நினைக்கிறீர்கள் ஆனந்த்.."

"இப்போதைக்கு அவர்கள் போன் வரும் வரை காத்திருப்பதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை சார்..."

"அமானுஷ்யன்... அதாவது உங்கள் தம்பி என்ன சொல்கிறார்?"

"அவர்கள் போன் செய்தால் என்ன சொன்னாலும் மறுத்துப் பேசாமல் ஒத்துக் கொள்ள சொல்கிறான்...." சொல்கையில் ஆனந்திற்கு குரல் கரகரத்தது.

அவன் நிலைமை அவருக்குப் புரிந்தது. என்றோ காணாமல் போன தம்பி இந்த நிலையிலும், இந்த சூழ்நிலையிலுமா அவனுக்குத் திரும்பக் கிடைக்க வேண்டும் என்று இரக்கப்பட்டவருக்கு இன்னொரு உண்மையை உணராமல் இருக்க முடியவில்லை. ஆனந்த் அவரிடம் இத்தனை நாட்கள் அமானுஷ்யன் (அவருக்கு அக்ஷய் என்ற பெயரை விட அமானுஷ்யன் என்ற பெயர் தான்

மிகவும் பிடித்திருந்தது) பற்றிய விவரங்கள் எதையும் கூறாமல் மறைத்ததற்குக் காரணம் அவர் மீதும் அவனுக்கு முழு நம்பிக்கை இல்லாமல் இருந்தது தான்... தன்னைக் கூட அவன் சந்தேகப்பட்டு விட்டானே என்ற வருத்தம் அவருக்கு ஏற்பட்டது. ஆனால் யோசித்துப் பார்த்த போது அவனை அவரால் குற்றம் சொல்ல முடியவில்லை. இப்போது யாரையும் நம்பும் நிலைமையில் யாரும் இல்லை. ஆச்சார்யா கொலை, ஆனந்தின் அம்மா கடத்தல் இதெல்லாம் ஜீரணிக்க முடியாத விஷயங்களாக அவருக்கு இருந்தன. எதிர்த்து எதுவும் செய்ய முடிந்த அளவு பண பலமும், அதிகார பலமும் பெற்று அரசியல்வாதிகள் செய்யும் அட்டூழியங்கள் தான் எத்தனை? சிபிஐ போன்ற பெரிய அமைப்பில் இருந்து கூட தங்கள் ஊழியர்களுக்கே ஏற்படும் அக்கிரமங்களை தவிர்க்க முடியவில்லையே என்று அவர் மனம் வெந்தார்.

"ஆனந்த் நான் இது◌ு பற்றி கேசவதாஸிடம் தனிப்பட்ட முறையில் வெளிப்படையாகப் பேசினால் என்ன? "

"எதற்கும் அக்ஷய் பேசி விட்டு வந்த பிறகு யோசிப்போம் சார்"

*********

இரவு அநியாயத்திற்கு நீண்டது. சஹானாவால் உறங்க முடியவில்லை. மகன் என்ன செய்கிறான், எப்படி இருக்கிறான், கடத்தியவர்கள் அவனை உபத்திரவிக்கிறார்களா என்பது போன்ற கேள்விகள் அவள் மனதில் பூதாகரமாக எழுந்தன. கற்பனையும் பயமுமாகச் சேர்ந்து மனதில் எழுந்த பதில்களோ அவளை கிட்டத்தட்ட பைத்தியமாக்கின.

மது சற்று முன் வந்து அக்ஷய் சொன்னதை எல்லாம் சொல்லி விட்டுப் போனது அவளை மேலும் துக்கப்படுத்தின. அவன் மேல் அவளுக்கு ஏற்பட்டிருந்த உணர்வுகள் இன்னும் ரகசியமாய் அவள் மனதில் பூத்தபடியே இருக்கின்றன. அவன் அவள் மனதில் அந்த ரகசிய மூலையில் ஒரு நிரந்தர இடத்தைப் பிடித்து விட்டிருந்தான்.

"சஹானாவிடம் சொல். என் உயிரைக் கொடுத்தாவது நான் வருணை அவளிடம் சேர்த்து விடுவேன்....." என்று அவன் சொல்லி இருந்தானாம்.

இதயத்தின் கனம் தாள முடியாமல் போன போது அது கண்ணீராய் வெளியே வர ஆரம்பித்தது. அவள் அழ ஆரம்பித்தாள். அவள் அழுவதையே சிறிது நேரம் துக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்த மரகதம் தன் தயக்கத்தை ஒதுக்கி விட்டு அவளருகே வந்து

சொன்னாள். "அழாதே சஹானா. அவர்கள் இரண்டு பேருக்கும் ஒன்றும் ஆகாது..."

சஹானா திகைப்புடன் தலை நிமிர்ந்தாள். அவளுக்கு இரண்டு பெரிய ஆச்சரியங்கள். முதலாவது அவளுடைய மாமியார் என்றுமே இது வரை அவளுடைய சோதனைக் காலங்களில் அவளுக்கு ஆறுதல் சொன்னதில்லை. அவள் என்றுமே பார்வையாளராகத் தான் இது வரை இருந்திருக்கிறாள். அவளுடைய கணவன் அவளை வார்த்தைகளால் காயப்படுத்திய போது எல்லாம், அவள் அவன் முன் அமைதியாக இருந்து அவன் இல்லாத போது அழுது துக்கித்த போது எல்லாம் மரகதம் அவளை எட்ட நின்று வேடிக்கை தான் பார்த்திருக்கிறாள். ஒரு முறை கூட மரகதம் தன் மகனைக் கண்டித்ததோ, மருமகளுக்கு ஆறுதல் சொன்னதோ இல்லை.

இரண்டாவது ஆச்சரியம், சஹானா அழுவது அக்‌ஷயிற்காகவும் தான் என்பதை மரகதம் கண்டுபிடித்து 'இரண்டு பேருக்கும்' ஒன்றும் ஆகாது என்று அழுத்தி சொன்னது தான். சஹானா தான் காண்பது கனவா நனவா என்று திகைத்தாள். அருகில் வந்து அமர்ந்த மரகதத்தின் முகத்தில் தெரிந்த கனிவு இது நனவு தான் என்பதை உறுதிப்படுத்தியது.

அந்த கனிவும், ஆறுதலான வார்த்தைகளும் அவள் அழுகையை

மேலும் அதிகப்படுத்த, மரகதத்தின் தோளில் சாய்ந்து சஹானா அழுதாள். மரகதம் ஒரு தாயாக அவளைத் தேற்றினாள். கண்டிப்பாக வருணுக்கும், அக்ஷயிற்கும் ஒன்றும் ஆகாது என்று தனக்கு உள்மனது சொல்வதாகவும், இது வரை அவளுடைய உள்மனது பொய்த்தது இல்லை என்றும் சொன்னாள். மாமியாருக்கு இப்படி எல்லாம் பேசத் தெரியுமா என்று சஹானா அந்த துக்கத்தினிடையேயும் வியந்தாள். ஆனால் சிறு வயதிலேயே தன் தாயை இழந்திருந்த அவளுக்கு இந்தப் பாசம் மிக மிக இதமாக இருந்தது.

நடு இரவு வரை இரண்டு பேரும் பேசிக் கொண்டிருந்தார்கள். பேச்சு அவர்கள் வாழ்க்கையைப் பற்றியதாக இருந்தது. மரகதம் மனம் விட்டு அவளுடன் பேசினாள். தன் சிறு வயதில் இருந்து அடக்கப்பட்டு வாழ்ந்த விதத்தைப் பற்றி சொன்னாள். அவளுடைய தந்தை, கணவன், மகன் எல்லோருமே அவளை அப்படி ஒரு நிலையிலேயே வைத்திருந்தார்கள் என்பதைச் சொன்னாள். வாய் திறந்தால் ஏதாவது பேச்சுக் குற்றமாகி விடும், பின் பிரச்னையாகி விடும் என்று பயந்து மௌனமாகவே வாழ்ந்து வந்ததைச் சொன்னாள். அவளுடைய மௌன அரணை அக்ஷய் எப்படி உடைத்து பாசத்தோடு பழகினான் என்பதைச் சொன்னாள்.

சஹானாவிற்கு மாமியாரின் யதார்த்த நிலை அப்போது தான்

விளங்கியது. அவள் ஏன் இது வரை மௌனமாகவும், எட்ட நின்றும் பழகி இருக்கிறாள் என்பது புரிந்தது. அவளை மனுஷியாகவே மதிக்காத அந்த உறவுகளுக்கு இடையே எப்படி கைதியாக வாழ்ந்திருக்கிறாள் என்று நினைக்கையில் தன்னுடைய இந்த நிலையையும் மறந்து மாமியாருக்காக இரக்கப்பட்டாள்.

சஹானாவும் மரகதத்திடம் மனம் விட்டுப் பேசினாள். அவள் தன் தந்தையைப் பற்றியும், அண்ணனைப் பற்றியும், மதுவைப் பற்றியும் சொன்னாள். பல வருடங்கள் ஒரே வீட்டில் சேர்ந்து வாழ்ந்த அந்த இருவரும் முதல் முதலாக உண்மையாக ஒருவருக்கொருவர் பரிச்சயப்பட்டார்கள். துக்கம் பகிர்ந்து கொள்ளப்படும் போது அது துக்கத்தை வெகுவாகக் குறைக்கிறது என்பதை உணர்ந்தார்கள்.

*******

மந்திரி சிபிஐ மனிதனுக்கு போன் செய்தார்.

"என்னை அந்த சைத்தான்கள் வேலை பார்க்க விடமாட்டேன்கிறார்கள். அவன் பிணம் எப்போது கையில் கிடைக்கும் என்று கேட்கிறார்கள். ஏதோ ஆர்டர் செய்த பொருள்

எப்போது கிடைக்கும் என்கிற மாதிரி இருக்கிறது. அந்த ஆனந்திற்கு போன் செய்து அமானுஷ்யனை சீக்கிரம் ஒப்படைக்கச் சொல்வது நல்லது என்று நினைக்கிறேன்...."

சிபிஐ மனிதன் சொன்னான். "தயிர் திரண்டு வரும் போது பானையை உடைத்து விட வேண்டாம். கொஞ்சம் பொறுங்கள்..."

"அந்த காட்டான்கள் பழமொழி கேட்கிற மனநிலையில் இல்லை. அந்த நாள் நெருங்குகிற போது அவன் உயிருடன் இருப்பது தலைக்கு மேல் இருக்கும் கத்தி என்று நினைக்கிறார்கள். வேண்டுமானால் இன்னும் சில கோடிகள் அதிகமாகத் தர அவர்கள் தயாராக இருக்கிறார்கள்..."

சிபிஐ மனிதன் மௌனமாக இருந்தான்.

உடனே அந்த மௌனத்தின் பொருளைப் புரிந்து கொண்ட மந்திரி "அவர்கள் கூடுதலாகத் தரும் கோடிகளை அப்படியே உங்கள் ஸ்விஸ் அக்கௌண்டில் போட்டு விடுகிறேன். எனக்கு அந்த நாசமாய் போனவனை ஒழித்து விட்டால் போதும்...."

சிபிஐ மனிதன் சொன்னான். "என் அனுமானம் சரியானால் அமானுஷ்யன் டிஐஜி கேசவதாஸை சீக்கிரமே சந்திப்பான்.

அவனை அங்கேயே சுட்டுத் தள்ளப் பார்ப்போம். அப்படி இல்லா விட்டால் உடனடியாக ஆனந்திற்குப் போன் செய்வோம். அதிகபட்சமாய் இரண்டு நாளுக்கு மேல் அவன் உயிரோடு இருக்க மாட்டான். அது உறுதி. அதற்கு முதல் கட்டமாய் கேசவதாஸைத் தயார் நிலையில் இருக்கச் செய்வோம் ...."

********************************

76

மந்திரி சந்தேகத்துடன் கேட்டார். "அன்றைக்கே அவன் கேசவதாஸைப் போய் பார்ப்பான் என்றீர்கள். ஆனால் அவன் போகவில்லை. இப்போது மட்டும் அவன் அங்கே போவான் என்று என்ன நிச்சயம்?"

"அப்போது நாம் அவருக்கு பாதுகாப்பை அதிகப் படுத்தி இருந்தோம். அதைப் பார்த்து தானோ இல்லை வேறெதாவது காரணத்தாலோ அவன் போகவில்லை. ஆனால் இப்போது அவன் கண்டிப்பாக அவரைப் போய்ப் பார்ப்பான் என்று என் உள்ளுணர்வு சொல்கிறது"

"அந்த ஆள் முதலிலேயே அந்த அளவு பாதுகாப்பு தருவதை ரசிக்கவில்லை. அந்த ஆள் குடும்பத்திலும் புகார் செய்கிறார்களாம்.

ஆனாலும் அதைப் பொருட்படுத்தாமல் வீட்டுக்கு வெளியே மட்டும் போலீஸ் காவல் இருக்கிறது. அதுவும் நான்கு போலீஸ் காரர்கள் மட்டுமே காவல் இருக்க அவர் ஒப்புக் கொண்டிருக்கிறார். இனி என்ன செய்வது? போலீஸ் பட்டாளத்தையே அங்கே குவித்து விடலாமா?..."

"பத்திரிக்கைக் காரர்களும், டிவிகாரர்களும் இப்போதெல்லாம் அனாவசியமாய் எல்லாவற்றிலும் மூக்கை நுழைக்கிறார்கள். அளவுக்கு அதிகமாய் எது செய்தாலும் அவர்களும் அங்கே வந்து விடுவார்கள். கேள்விகள் கேட்பார்கள். இப்போதைக்கு இந்த விஷயத்தில் நமக்கு எதிரி விளம்பரம் தான்..."

"சரி என்ன செய்யலாம் சொல்லுங்கள்?"

"போலீஸ்காரர்களிடம் சந்தேகப்படும் படி யார் அவர் வீட்டுக்குள் நுழைந்தாலும் சுட்டுத் தள்ள சொல்லுங்கள். மீதியை நாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம்...."

"சரி"

"ஒரு வேளை அவர்கள் கண்ணில் மண்ணைத் தூவி அவன் உள்ளே போய் விடவும் வாய்ப்பு இருக்கிறது....."

அதில் மந்திரிக்கு சந்தேகமே இல்லை. அவன் எதுவும் செய்வான்! "சரி அப்படி உள்ளே நுழைந்தால் அவனைச் சுட்டுத் தள்ள கேசவதாஸிடம் சொல்வோம்..."

"மலை உச்சியில் பல பேர் துப்பாக்கியால் சுட்டும் அவன் சாகாமல் தப்பித்து இருக்கிறான்..."

மந்திரிக்கு எரிச்சல் வந்தது. "அது தான் என்ன செய்வது என்று கேட்கிறேன். ஒரேயடியாய் சொல்லித் தொலையுங்கள்..."

"அப்படி அவர் சுட்டுத் தள்ள முடியாமல் போனால் அவன் கண்டிப்பாக கேட்கிற விதத்தில் கேட்பான். கேசவதாஸ் உண்மை சொல்லாமல் உயிரோடு தப்பிக்க வேண்டுமானால் அவன் நம்புகிற மாதிரி ஏதாவது பதில் சொல்லவும் வேண்டும். நம்மையும் காட்டிக் கொடுக்கக் கூடாது....."

"அப்படியானால் எனக்கு வேண்டாத வேறு எதாவது அமைச்சர் பெயரைச் சொல்லச் சொல்லட்டுமா?"

சிபிஐ மனிதன் புன்முறுவல் பூத்தான். அரசியல் ஒரு சாக்கடை என்று சும்மா சொல்லவில்லை. "வேறு அமைச்சர் பெயரைச் சொல்ல அந்த

கேசவதாஸ் ஒத்துக் கொள்ள மாட்டார். அவருக்கு நீங்களும் வேண்டும். மற்ற மந்திரிகளும் வேண்டும். அனாவசியமாக பிறகு தனக்கு பிரச்னை வருவதை அவர் விரும்ப மாட்டார்...."

"அதற்கு தான் உடனடியாக ஆனந்திற்கு போன் செய்வது நல்லது என்று சொல்கிறேன். அமானுஷ்யனை உடனடியாக நம்மிடம் ஒப்படைக்கச் சொல்லச் சொல்கிறேன். அந்த அனானுஷ்யன் அங்கே இங்கே போவதற்கு நேரம் எதற்குத் தர வேண்டும்...."

சிபிஐ மனிதன் பொறுமையாகச் சொன்னான். "கேசவதாஸ் பெயர் அவனுக்கு ப்யாரிலால் மூலம் தெரிந்து விட்டது. ஆனந்தும் அவனும் சந்தித்தாகி விட்டதால் அவன் அதை ஆனந்திடமும் சொல்லி இருப்பான். ஆனந்த் யார் யாரிடம் சொல்கிறான் என்பது நமக்குத் தெரியாது. அதனால் நம் வேலை முடிகிற வரையாவது கேசவதாஸை யாரும் குடைந்து கேட்காமல் இருப்பது நல்லது. அமானுஷ்யனே அவரிடம் கேட்டு அவர் சொல்கிற பதிலால் திருப்தி அடைந்து போனால் பிறகு பெரிய பிரச்னை இல்லை என்று நினைக்கிறேன். அதனால் அமானுஷ்யன் வந்து கேட்டால் என்ன சொல்ல வேண்டும் என்று கேசவதாஸிற்கு நாம் சொல்லித் தருவது நல்லது."

என்ன சொல்ல வேண்டும் என்று சிபிஐ மனிதன் விவரித்த போது

மந்திரி பிரமித்துப் போனார்.

சிபிஐ மனிதன் தொடர்ந்து சொன்னான். "அவன் அங்கிருந்து போன பிறகு நாம் ஆனந்திற்குப் போன் செய்யலாம். இடையில் ஏதாவது வில்லங்கம் வந்தாலும் கேசவதாஸை யாரும் குடையப் போக மாட்டார்கள். நீங்கள் உடனடியாகக் கேசவதாஸிற்குப் போன் செய்து பேசுங்கள்...."

*************

கேசவதாஸிற்கு திகைப்பு, ஆச்சரியம், கோபம், சந்தேகம் போன்ற பல உணர்ச்சிகள் பொங்கி எழுந்தன. அமானுஷ்யன் அவரைப் பார்க்க வரலாம் என்று உறுதியாக மந்திரி சொன்னதால் திகைப்பு, இத்தனை நாட்களாய் வராதவன் இப்போது ஏன் அவரைப் பார்க்க வர வேண்டும் என்று ஆச்சரியம், அவரை மந்திரி பகடைக் காயாய் பயன்படுத்துகிறதை எண்ணி கோபம், உண்மையில் என்ன நடக்கிறது, இந்த அமானுஷ்யன் அந்த மந்திரி வாழ்க்கையில் எப்படி குறுக்கிட்டான் என்று சந்தேகம் என வரிசையாக அவர் மனதில் எழுந்தன.

மந்திரி அமானுஷ்யன் ஒரு தீவிரவாதி என்றும் வழக்கமான

முறையில் அவனைப் பிடிக்க முடியாது என்பதால் இந்த பொய் வழக்கு அவன் மீது போடலாம் என்று ஆரம்பத்தில் சொன்ன போதே அவர் அதை நம்பவில்லை. தன் சுயநலத்தைத் தவிர நாட்டு நலத்தையும் சேர்த்து எண்ணும் மந்திரிகள் ஒருசிலர் இருக்கிறார்கள் என்றாலும் அந்த மந்திரி அந்த ரகம் அல்ல என்பதால் போலீஸ்காரர் வேலையை தான் ஏற்று செய்ய முன் வந்த அந்த நடிப்பு அவரிடம் எடுபடவில்லை. எத்தனையோ முறை அரசியல் வாதிகளுக்காக அவர் சட்டத்தை வளைத்து இருக்கிறார். ஆனால் அப்போதெல்லாம் உண்மையில் எதற்காக அதைச் செய்கிறோம் என்பது அவருக்குத் தெரிந்து இருந்தது. ஆனால் இப்போதோ ஒருசில விஷயங்களை அவருக்குச் சொல்லி, மீதி சில விஷயங்களை அவருக்கு கீழ் பணி புரியும் போலீஸ் அதிகாரிகள் சிலரை வைத்துச் செய்யும் இந்த தில்லு முல்லு அவருக்குப் பிடிக்கவில்லை.

அரசியல்வாதிகளை எதிர்த்து நிற்க செயல்படுவது சுலபமல்ல என்பது அவருக்குத் தெரியும். இந்த அரசியல் புயலில் நாணலாக வளைபவர்கள் மட்டுமே தாக்குப் பிடிக்க முடியும். வளைய மறுப்பவர்கள் ஒடிந்து போவார்கள் என்பது அவர் கண்கூடாகப் பார்த்த ஒரு யதார்த்த உண்மை. எனவே உண்மை என்ன என்று சொல்லி இருந்தால் கூட அவர் ஒன்றும் அந்த மந்திரியை எதிர்த்து எதுவும் செய்திருக்கப் போவதில்லை. பின் ஏனந்த மந்திரி இப்படி அவரிடம் மறைக்கிறார் என்பது அவருக்குப் புரியவில்லை.

இப்போது இன்னொரு மிகப் பெரிய கேள்வி அவர் மனதில் எழுந்து நின்றது. மந்திரி அமானுஷ்யன் வந்தால் சொல்லச் சொன்ன பதில் புத்திசாலித் தனமானது. அது பொய் என்று தெரிந்து கொள்ள அமானுஷ்யனுக்கு சில நாட்கள் கண்டிப்பாகத் தேவைப்படும். இப்படி ஒரு பதிலைச் சொல்லச் சொல்லும் அளவு அந்த மந்திரி பெரிய புத்திசாலி அல்ல. வேறு யாரோ தான் இது போல சொல்லச் சொல்லித் தந்திருக்க வேண்டும். திரை மறைவாய் காய்கள் நடத்தும் அந்த ஆள் யார்? அதுவும் அமானுஷ்யன் அடுத்தது என்ன செய்வான் என்று அந்த ஆள் முன்கூட்டியே தெரிந்து செயல்படுவது போல் இருப்பதும் பெருத்த சந்தேகத்தை கேசவதாஸ் மனதில் ஏற்படுத்தியது.

ஏதோ பெரிய சதித்திட்டம் இங்கு பின்னப்படுகிறது என்பது மட்டும் அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது. எதுவானாலும் நாளைக்கு தனக்குப் பிரச்னை ஏற்படுத்தி விட அனுமதித்து விடக் கூடாது என்று மட்டும் உறுதியாக நினைத்துக் கொண்டார்.

பெரும்பாலும் இன்று இரவே கூட அவன் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லி இருந்ததால் போலீசாரை அழைத்து சந்தேகப்படும் படி யாராவது அந்த வீட்டுக்குள் நுழைய முயன்றால் சுட்டு விடச் சொல்லி ஆணை இட்டார்.

காவலுக்கு இருந்தவர்களில் மூத்த போலீஸ்காரர் ஒருவர் வெளிப்படையாக அவரிடம் கேட்டார். "யாராவது வரக்கூடும் என்று எதிர்பார்க்கிறீர்களா சார்?"

கேசவதாஸ் அவரிடம் உண்மையைச் சொல்ல விரும்பவில்லை. "வரலாம். வராமலும் இருக்கலாம். எதற்கும் எச்சரிக்கையாக இருக்க மேலிடத்தில் சொல்கிறார்கள்"

'மேலிடம்' என்று சொல்லப்படுவது யாரை என்ற கேள்வியை அந்த போலீஸ்காரரும் கேட்கவில்லை. முதல் கேள்வியைக் கேட்டதையே கேசவதாஸ் ரசிக்கவில்லை என்பதை அவர் முக பாவனை வைத்தே அந்த போலீஸ்காரர் புரிந்து கொண்டு விட்டார்.

கேசவதாஸின் மனைவி கல்கத்தாவில் இருக்கும் தன் அண்ணா வீட்டுக்குச் சென்றிருப்பது இந்த சமயத்திற்கு அனுகூலமாக இருந்தது. அவள் மட்டும் அங்கு அவருடன் இருந்து அவனும் வந்து விட்டால் அவள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லி மாளாது. மனைவி வாயை அடைக்கும் வித்தையை அவர் இத்தனை காலம் அவளுடன் வாழ்ந்தும் கண்டு பிடித்து வைத்திருக்கவில்லை. அவருடைய பிள்ளைகள் அவரவர்கள் அறையில் இருந்தார்கள். காவலுக்கு இருந்த போலீசாரையும் மீறி அவன் வீட்டுக்குள்

நுழைவது கஷ்டம் தான் என்றாலும் அவன் ஃபைலைப் படித்திருந்த அவருக்கு அது முடியவே முடியாத காரியம் போல் தோன்றவில்லை. அப்படி வந்தால் அவனை எதிர் கொள்ள அவர் தயாரானார். இரண்டு மூன்று இடங்களில் துப்பாக்கியை மறைத்து வைத்து விட்டு ஒரு புத்தகத்தைப் பிரித்து படிக்கும் பாவனையில் அவர் காத்திருந்தார்.

அந்த நேரத்தில் தான் அக்ஷய் அவர் வீட்டிற்கு ஒரு பர்லாங் தூரத்திற்கு வந்து சேர்ந்திருந்தான்.

77

கேசவதாஸ் வீட்டிற்குக் காவல் இருந்த நான்கு போலீஸ்காரர்கள் அன்றிரவும் யாரும் வருவார்கள் என்று நம்பவில்லை. சில நாட்களுக்கு முன் அப்படி ஒரு ஆள் வரக்கூடும் என்று தகவல் வந்துள்ளது என்று கூறி அவர்களைத் தருவித்த போது இருந்த சுறுசுறுப்பு இப்போது அவர்களிடம் இருக்கவில்லை. டிஐஜி கேசவதாஸ் அரசியல்வாதி அல்ல. அதே போல் அனாவசியமாக யாரையும் பகைத்துக் கொள்ளும் ரகமும் அல்ல. அப்படிப்பட்டவருக்கு யாரிடமிருந்தாவது ஆபத்து வரக் காரணம் வேறெதுவும் கூட இருப்பதாக அவர்களுக்குத் தோன்றவில்லை. மேலும் வரக்கூடிய ஆள் யார், என்ன என்ற விவரங்களை எல்லாம் தெரிவிக்காததால் மேலிடம் என்று சொல்லப்படுகிற முட்டாள்கள்

எதையோ சொல்லி வெறுமனே அவர்கள் நேரத்தை வீணாக்குவதாக அவர்கள் நினைத்தார்கள்.

ஆனாலும் வீட்டருகே வரும் ஆட்களை அவர்கள் சந்தேகக் கண்ணோடு பார்த்து விரட்டி அடிக்கத் தவறவில்லை. இருவர் முன் வாசலில் இருக்க மற்ற இருவர் இரு பக்கமும் இருந்த காம்பவுண்ட் சுவர்களில் சாய்ந்து நின்றார்கள். அவர்கள் வீட்டு சுவருக்கும், வெளிக் காம்பவுண்ட் சுவருக்கும் இடையே உள்ள இடைப்பகுதியை அவ்வப்போது கவனித்தார்களே தவிர அந்த வழியாகப் பின் பக்கம் வரை வரத் தயங்கினார்கள். காரணம் பின் பக்க வீட்டில் இருந்த பெரிய டாபர்மேன் நாய். அது பின் சுவர் அருகே யாராவது வந்தால் மோப்ப சக்தியால் அதை உணர்ந்து அந்த வீட்டுக்குள்ளேயே நுழைந்து விட்டது போல கத்தி எச்சரித்தது. இரவு நேர அமைதியைக் கெடுக்க விரும்பாத காவல் போலீஸ்காரர்கள் அந்த நாயை மீறி பின் பக்க வழியாக யாரும் வந்து விட முடியாது என்பதைப் புரிந்து கொண்டார்கள். ஒரு அதிகாலை அந்த நாயுடன் வாக்கிங் வந்த பின் வீட்டு கோடீசுவரன் அந்த நாய் நாலு போலீஸ்காரர்களுக்கு சமம் என்று அவர்கள் காதுபடவே வழியில் பேசக் கிடைத்த மனிதரிடம் பெருமை அடித்துக் கொண்டான். அதனால் பின் பக்க காவலை அந்த டாபர்மேன் நாய் தங்களை விட நன்றாகச் செய்யும் என்று எண்ணி பின்பக்கத்தை விட்டு விட்டார்கள்.

ஆனால் அவர்கள் அமானுஷ்யன் என்றழைக்கப்பட்ட அக்ஷயிற்கும் விலங்குகளுக்கும் இடையே இருந்த நெருக்கத்தை அறியாதவர்கள். திபெத்தில் லாமாக்களுடன் பழகி இருந்த காலத்தில் அவர்களிடம் இருந்து அவன் கற்றுக் கொண்ட வித்தைகளில் ஒன்று மிருகங்களை தன் வசப்படுத்துதல்-குறைந்த பட்சம் அது தன்னைப் பாதிக்காமலாவது பார்த்துக் கொள்தல். அந்தக் காலத்தில் காட்டுப் பாதையில் செல்லும் போது கொடிய விலங்குகள் எப்படியும் எதிர்படும் சூழ்நிலை இருந்ததால் லாமாக்கள் விலங்குகளுக்கு தாங்கள் எதிரிகள் அல்ல நண்பர்கள் என்ற தகவலை உணர்த்தும் வித்தையை அறிந்திருந்தார்கள். கூர்மையான பார்வையாலும், மந்திர வித்தைகளாலும் தங்கள் அன்பை அந்த விலங்குகளுக்கு உணர்த்தும் கலையில் வல்லமை பெற்று இருந்தார்கள். அவர்களிடம் இருந்து அந்த வித்தையைக் கற்றுத் தேர்ந்த அக்ஷய் எத்தனையோ காலம் காட்டில் விலங்குகளிடையே அச்சம் இன்றி வாழ்ந்திருக்கிறான்.

விலங்குகள் மனிதர்களை விட எத்தனையோ உத்தமமானவை. அவை தேவையில்லாமல் யாரையும் தாக்குவதில் மகிழ்ச்சி அடைவதில்லை. தங்களுக்குத் தீங்கு விளவிக்காத பட்சத்தில் யாருக்கும் தீங்கிழைக்கவும் அவை முற்படுவதில்லை. நண்பர்களாக இருந்தவை திடீரென்று நிறம் மாதிரி எதிரிகளாக மாறி

விடுவதில்லை... மனிதர்களிடம் நிறைய கசப்பான அனுபவங்களைப் பெற்றிருந்த அக்ஷய் விலங்குகள் மீது உண்மையில் நிறைய மதிப்பும் நம்பிக்கையும் வைத்திருந்தான்.

கேசவதாஸ் வீட்டுக் காவல் போலீஸ்காரர்கள் பின்பக்கம் வரை ரோந்து போகாத காரணம் என்ன என்பதை ஊகித்து அறிந்த அக்ஷய் உள்ளே செல்ல பின் வழியே உகந்தது என்று விரைவிலேயே முடிவு செய்து பின் தெரு வழியாக பின் வீட்டு கேட் முன்னால் வந்து நின்றான். வேகமாகக் குரைத்த படி வந்த நாய் அக்ஷயைப் பார்த்தவுடன் மந்திரத்தால் கட்டுண்டது போல அமைதியாக அப்படியே நின்றது. அக்ஷய் கூர்மையாக அந்த நாயின் கண்களையே பார்த்து நின்றபடி தானந்த நாயிற்கோ, அதன் எஜமானனுக்கோ எதிரியல்ல என்பதை மௌன பாஷையில் உணர்த்தினான். அதைப் புரிந்து கொண்டது போல பின் வாங்கிய நாய் தன் வீட்டு வாசற்படியில் சென்று அமர்ந்து கொண்டது.

அதன் மீது வைத்த கண்களை எடுக்காமலேயே அக்ஷய் மெல்ல கேட் மீது ஏறினான். அந்த உயர் ரக நாய் அவன் என்ன தான் வசியப்படுத்தினாலும் அந்த வாசற்படியில் கால் வைத்தால் போதும், அந்த நாய் வசியத்தைக் கலைத்துக் கொண்டு தன் மீது பாய்ந்து குதறி விடும் என்பதைப் பார்வையிலேயே புரிந்து கொண்ட அக்ஷய் சுவரோரமாகவே நடந்து பின் புறம் வந்தான். பின் காம்பவுண்ட்

சுவர் மீது சத்தமில்லாமல் ஏறி கடக்கும் வரை அவன் கண்களும் நாயின் கண்களும் சந்திப்பிலேயே இருந்தன. அவன் அதன் கண்ணில் இருந்து மறைந்த பின்னும் கூட அந்த நாய் அந்த சுவரையே பார்த்தபடி அமைதியாக அமர்ந்திருந்தது.

தனதறைக் கட்டிலில் தலையணைகள் மீது சாய்ந்து அமர்ந்திருந்த கேசவதாஸ் ஜன்னல் கண்ணாடி வழியே ஒரு உருவம் வேகமாக நகர்ந்ததைப் பார்த்து விட்டார். உடனடியாக அது அவன் தான் என்பதும் தெரிந்து விிட்டது. அவர் தன் அறைக்கதவைத் திறந்து தான் வைத்திருந்தார். ஒருவேளை அவனைச் சுட்டு அவன் பிணத்தை ஒப்படைத்தால் பல லட்ச ரூபாயைப் பரிசாகத் தருவதாக வேறு அந்த மந்திரி சொல்லி இருந்தார். பின் வேறு விதங்களிலும் நன்றாக அவரைக் கவனிப்பதாகவும் சொல்லி இருந்தார். அவனைப் பார்த்தவுடனேயே சுட்டு விட்டால் என்ன என்று நினைத்தவராக துப்பாக்கியை தன்னருகே இருந்த போர்வைக்குள் மறைத்து வைத்திருந்தார். எந்தக் கணமும் எடுத்து அவனை சுட்டு விடலாம்.....

அவன் அறை வாசலில் அமைதியாக நின்றான். அவனை அவனுடைய ஃபைல் போட்டோவில் பார்த்தவர்கள் யாரும் தற்போதைய தோற்றத்தை வைத்துக் கண்டு பிடித்து விட முடியாது. வேறு ஆளாகவே தெரிந்தவன் உற்றுப் பார்த்தால் மட்டுமே அந்த சாயல்களைக் கண்டு பிடிக்க முடியும். அவனிடம் பயம் மட்டுமல்ல

எந்த உணர்ச்சிகளையும் அவரால் காண முடியவில்லை. சலனமில்லாமல் இருந்தான். விசாரணைக்குக் கைதியைக் காண வந்த மேலதிகாரி போல அவன் பாவனை இருந்தது. துப்பாக்கியை உபயோகிக்கலாமா என்ற எண்ணத்தில் இருந்தவர் அவனைப் பார்த்த பிறகு அது அபாயம் என்று உணர்ந்து அந்த எண்ணத்தை உடனடியாக மாற்றிக் கொண்டார்.

அவரைப் பார்த்தவுடனேயே அவர் அவனை எதிர்பார்த்து தான் இருக்கிறார் என்பதை உணர அக்ஷயிற்கு வெகு நேரமாகவில்லை. எதிரிகள் அவன் அங்கு வரக்கூடும் என்பதை ஊகித்து இன்று கூட எச்சரித்திருக்க வேண்டும். அவரிடம் அவனை ஆராய்ச்சி செய்யும் மனோபாவம் இருந்ததே ஒழிய பயம் தெரியவில்லை. அவர் கேட்டார். "யார் நீ?"

அக்ஷய் அமைதியாகக் கேட்டான். "நான் யார் என்று தெரியாதா?"

"தெரியாது"

"நீங்கள் தான் நான் டெல்லி புறநகர் பகுதியில் வெடிகுண்டு வைத்தவன் என்று என்னை விளம்பரப் படுத்தினீர்கள். நேரில் வந்தால் தெரியவில்லை என்கிறீர்கள்"

மனிதர்களை எடை போடுவதில் வல்லவரான கேசவதாஸ் இவனை வெடிகுண்டைக் கையாள்வதைப் போல் மிகக் கவனமாகக் கையாள வேண்டும், இல்லையென்றால் ஆபத்து தான் என்பதைப் புரிந்து கொண்டார். முழு உண்மையும் சொல்லாமல் அதே நேரத்தில் பொய்யாகவும் அவன் தெரிந்து கொள்ள முடியாதபடி உண்மையையும் பொய்யையும் கலந்து பேச்சுக் கொடுக்க அவர் முற்பட்டார்.

"அவனா நீ? எங்களுக்குக் கிடைத்த போட்டோவிற்கும் இப்போது நேரில் பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. அதனால் தான் தெரியவில்லை"

"ஆனால் என்னை எதிர்பார்த்தபடியே இருப்பது போல் அல்லவா தெரிகிறது"

"நீ என்னேரமும் வரலாம் என்று என் உள்மனம் சொல்லியது"

"இன்றைக்கா?"

"இன்றைக்கு என்று இல்லை பத்து நாளாகவே"

"ஏன்?"

"நீ இதற்கு முன் அப்படித்தான் சிலரைப் போய் பார்த்திருக்கிறாய்"

"நான் வெடிகுண்டு வைத்தேன் என்று யார் சொல்லி பொய் குற்றச்சாட்டு பதிவு செய்தீர்கள்?"

"என்னைப் போன்ற அரசாங்க ஊழியன் தாக்குப் பிடிக்க வேண்டுமானால் மேலிடத்தில் சொல்கிறபடி அனுசரித்துத் தான் ஆக வேண்டும். இல்லா விட்டால் என்னை அப்புறப்படுத்தி விடுவார்கள்"

"அதனால் யாருக்கு என்ன அநியாயம் வந்தாலும் உங்களுக்குக் கவலை இல்லை"

அவன் அமைதியாகத் தான் கேட்டான். ஆனால் குரலில் இருந்த ஏதோ ஒன்று பேச்சு அவருக்கு அபாயச் சங்கு ஊதியது. அவர் இந்த இடத்தில் உண்மை பேசுவது தான் நல்லது என்று நினைத்தார். "எனக்கு அவர்கள் உன்னைத் தீவிரவாதி என்றும் நியாயமான வழியில் உன்னைப் பிடிக்க முடியாது என்றும் சொல்லி இந்த வழியில் பிடிக்க ஏற்பாடு செய்யச் சொன்னார்கள். அவர்கள் சொன்னபடி நீ தீவிரவாதியாக இருந்தால் அதில் தப்பில்லை என்று நினைத்தேன்...."

"அவர்கள் என்றால் யார்?"

"அரசியலில் செல்வாக்கு மிக்கவர்கள்"

"அவர்களுக்குப் பெயரில்லையா?"

மந்திரி சொன்ன கேள்வி வந்து விட்டது. கேசவதாஸ் ஒரு நிமிடம் மௌனம் சாதித்து விட்டு சொன்னார். "பாதுகாப்பு செயலாளர் த்ரிபாதி"

"அவர் அவராகவே சொன்னாரா, இல்லை அவரும் அவருக்கும் மேல் இருப்பவர்கள் சொல்லி சொன்னாரா?"

"தெரியாது"

"நீங்கள் கேட்க மாட்டீர்களா?"

"கேட்கக் கூடாது என்றில்லை. கேட்டால் அவர்கள் சொல்ல மாட்டார்கள். அவர்கள் கேள்வி கேட்பதை விரும்ப மாட்டார்கள்"

அவரையே சில வினாடிகள் உற்றுப் பார்த்த அக்ஷய் கேட்டான். "சரி

என் அம்மாவையும், வருணையும் எங்கே கடத்தி வைத்திருக்கிறீர்கள்?"

கேசவதாஸ் அதிர்ந்து போனார். இது என்ன புது சிக்கல்? அவர் அவன் ஃபைலைப் படித்ததில் அவன் தாய், தந்தை இருவருமே மும்பையில் இறந்து விட்டார்கள் என்று தான் இருந்தது. இப்போது அம்மாவைக் கடத்தி வைத்து இருக்கிறதாகச் சொல்கிறான். செத்துப் போன அம்மா திரும்ப எங்கே வந்தாள்? யாரந்த வருண்?

ஆனால் இவன் சொன்னது உண்மையாக இருந்தால்-அவர்கள் உண்மையாகவே இவனுக்கு வேண்டியவர்களைக் கடத்தி வைத்திருந்தால்-கடத்தப்பட்டவர்களுக்கு ஏதாவது தீமை விளையுமானால்- இவனை விட அபாயகரமானவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது என்பதை உணர்ந்தார். முன்னொரு காலத்தில் மும்பையில் பல பேர் சாகவும் சாகாமல், உயிரோடு இருந்தும் பயனில்லாமல் ஆஸ்பத்திரிகளில் தீவிர சிகிச்சைப் பிரிவில் ஜடங்களாகக் கிடந்தது பற்றி நினைவுக்கு வந்தது. அன்று பலரை இவன் மன்னித்து விட்டிருக்கலாம்? இன்று அவன் முகத்தில் தெரிந்த சலனமில்லாத ஒருவித கொடூரத்தைப் பார்க்கையில் இன்று அவன் மன்னிப்பான் என்று அவருக்குத் தோன்றவில்லை.

அவருக்கு மந்திரி மீது கடுங்கோபம் வந்தது. தெரியாத்தனமாக

இவன் விஷயத்தில் சிக்கிக் கொண்டது ஆபத்தை விலைக்கு வாங்கிக் கொண்டது போல என்று புரிந்தது. ஆனால் கோபத்தை மந்திரி மீது காட்ட முடியாது. அவரைப் பகைத்துக் கொள்ளவும் முடியாது. எனவே இந்த அபாயகரமானவனிடம் இருந்து தப்பிக்க இவனைக் கொல்வது தான் ஒரே வழி, கொன்றால் பணமும் பதவி உயர்வும் கூட கிடைக்கும் என்பதால் கையெட்டும் தூரத்தில் போர்வைக்கு அடியில் வைத்த துப்பாக்கியை எடுத்து சுடுவது தான் எல்லா விதங்களிலும் உசிதம் என்ற முடிவுக்கு கேசவதாஸ் வந்தார்.

78

கேசவதாஸ் அக்‌ஷயை சுட்டுத் தள்ளுவதுதான் நல்லது என்ற முடிவுக்கு வந்த போது அவரை அறியாமல் அவர் பார்வை துப்பாக்கிக்கு மேல் இருந்த போர்வைக்குப் போக அவர் மேல் வைத்த விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்த அக்‌ஷய் அமைதியாக சொன்னான். "அந்தப் போர்வைக்கு கீழே வைத்திருக்கும் துப்பாக்கியை எடுத்து கீழே என் பக்கம் வீசுங்கள்".

கேசவதாஸ் திகைத்துப் போனார். துப்பாக்கியை எடுத்து வீசுவதற்குப் பதிலாக சுட்டு விட்டால் தான் என்ன என்ற எண்ணம் அவருக்கு மறுபடி வந்தது. ஒன்றும் சொல்லாமல் அவனைப் பார்த்தார். அவன் சாதாரண ஆளாக இருந்தால் அவருடைய

துப்பாக்கி சுடும் திறமைக்கு சில வினாடிகளும், ஒரு துப்பாக்கி ரவையும் போதும் அவனைப் பிணமாக்க. ஆனால் அவன் சாதாரணமானவன் அல்ல. எக்கணமும் உடனடியாக இயங்க முடியும் படி அவன் தயார் நிலையில் இருந்தான். அவனைப் பற்றி அந்த ஃபைலில் சிலர் குறிப்பிட்டிருந்ததும் அவர் நினைவுக்கு வந்தது. அவன் காற்றைப் போல இயங்கினான். கண்ணிமைக்கும் நேரத்தில் அவன் இடம் மாறினான் என்றெல்லாம் அனுபவப்பட்டவர்கள் சொல்லி இருந்தார்கள். அதுவும், அவன் கண்களில் தெரிந்த கூர்மையும், அவருக்கு துப்பாக்கி எடுத்து சுடுவதற்கு முன் அவன் அவரை செயல் இழக்க வைத்து விடக்கூடும் என்ற பயத்தை ஏற்படுத்தியது. பேசாமல் அவர் துப்பாக்கியை எடுத்து அவர் அவன் காலடியில் வீசினார்.

அவன் மறுபடியும் அமைதியாகக் கேட்டான். "என் அம்மாவையும் வருணையும் அவர்கள் எங்கே கடத்தி வைத்திருக்கிறார்கள்?"

அவர் சொன்னார். "எனக்கு அவர்கள் நீ சொன்ன ஆட்களைக் கடத்தி இருக்கிறார்கள் என்பதே இப்போது நீ சொல்லித் தான் தெரியும். அதனால் அவர்கள் எங்கே கடத்தி வைத்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது."

அவன் அவரைக் கூர்ந்து பார்த்தான். அவர் சொன்னார்.

"சத்தியமாய்தான் சொல்கிறேன். இந்தக் கடத்தலில் எனக்கு எந்த பங்கும் இல்லை"

அவர் சொல்வதை அவன் நம்பினான் என்றாலும் அதை வெளியில் காண்பித்துக் கொள்ளாமல் சொன்னான். "உங்களுக்குத் தெரியா விட்டால் பரவாயில்லை. உடனடியாக இப்போதே த்ரிபாதிக்குக்கு போன் செய்து கேட்டு சொல்லுங்கள்"

அவர் தயக்கத்துடன் அவனைப் பார்த்தார்.

அவன் சலனமே இல்லாமல் கேட்டான். "உங்கள் பிள்ளைகள் இரண்டு பேரும் அவர்கள் அறையில்தானே இருக்கிறார்கள்?"

அவன் சாதாரணமாகக் கேட்ட அந்த கேள்வி அவர் அடிவயிற்றைக் கலக்கியது. அவர் தன்னைப் பொருத்த வரை எந்த விஷயத்திற்கும் அஞ்சாதவர். அவருடைய தைரியம் போலீஸ் துறையில் பிரசித்தி பெற்றது. ஆனால் அவருடைய பிள்ளைகள் என்று வரும் போது அவர் பலவீனமாகி விடுவார். அவன் எதிரிகளை எப்படி கையாண்டிருக்கிறான் என்பதை அவன் ஃபைலில் இருந்து படித்திருந்தவர் ஆதலால் அவருக்கு ஒரேயடியாக வியர்த்தது. அவன் கேள்வியில் மறைந்திருந்த ஏதோ ஒன்று இவன் விஷயத்தில் தாமதிப்பதும் அபாயம் என்பதை தெரிவித்தது. அவர் அவசரமாகச்

சொன்னார். "த்ரிபாதி முந்தாநாள் தான் அமெரிக்காவிற்கு போயிருக்கிறார். இன்னும் நான்கு நாள் கழித்து தான் வருவார். அவர் அங்கே போனில் கிடைப்பது சுலபமில்லை...."

"நாட்டில் இல்லாத ஆள் என்பதால் தான் அவர் பெயரைச் சொன்னீர்களோ?"

"இல்லை....இல்லை..... உண்மையாகத் தான் சொன்னேன்"

"அந்த த்ரிபாதிக்கு என் மேல் என்ன கோபம்? ஏன் அப்படி நடந்து கொள்கிறார் என்பது தெரியுமா?"

"சத்தியமாகத் தெரியாது. அவராக இயங்குகிறாரா, இல்லை யாராவது சொல்லி அப்படி செய்தாரா என்றும் எனக்குத் தெரியாது"

அக்ஷய் அவரையே கூர்ந்து பார்த்தபடி சிறிது நேரம் நின்றான். பின் நிதானமாகக் கேட்டான். "நீங்கள் எல்லாம் மனிதர்கள் தானா? உங்கள் பதவிக்கான கண்ணியமும் இல்லை. தனி மனித தர்மமும் உங்களிடம் இல்லை. மேலிடம் என்ன சொன்னாலும் அதை அப்படியே செய்து விடுவீர்களா? உங்களுக்கு என்று மனசாட்சி கிடையாதா?"

விமரிசனம் கேசவதாஸிற்குப் புதியதல்ல. ஆனால் அவன் கேட்ட விதமும், கேவலமாய் பார்த்த விதமும் அவரை ஏனோ கூச வைத்தது.

அவன் தொடர்ந்து சொன்னான். "நீங்கள் உண்மை பேசுகிறீர்களா பொய் பேசுகிறீர்களா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். என் அம்மாவுக்கும், வருணுக்கும் ஒரு சின்ன பிரச்னை வந்தால் கூட அதை நான் பொறுத்துக் கொள்ள மாட்டேன். எனக்குத் தெரிந்து என் விஷயத்தில் தலையிட்டதாக நான் உறுதியாய் நம்பும் ஒரு மனிதர் நீங்கள் தான். அதனால் அவர்களுக்கு ஏதாவது நேர்ந்தாலோ, நீங்கள் என்னிடம் பொய் சொல்லி இருக்கிறீர்கள் என்று தெரிந்தாலோ கண்டிப்பாய் உங்கள் பிள்ளைகள் உங்களை அப்பா என்று கூப்பிடும் நிலையில் இருக்க மாட்டார்கள். அது மட்டுமல்ல இதில் சம்பந்தப்பட்ட மற்றவர்களையும் நான் சும்மா விடமாட்டேன். நான் சொல்வதில் உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருக்கிறதா?"

அவருக்கு சந்தேகம் சிறிதும் இருக்கவில்லை. தலையசைத்தார்.

"மீண்டும் சந்திப்போம்"

அவன் அங்கிருந்து போய் விட்டான். அவன் போகும் போது கீழே

இருந்த துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டு போனான். அவர் எழுந்து அவன் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவன் பின் வீட்டு வழியா◌ாகப் போவதையும், பின் வீட்டு நாய் எந்த ஒரு சத்தமும் இல்லாமல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்ததையும் பார்த்துக் கொண்டிருந்தவர் உடனடியாக மந்திரிக்குப் போன் செய்தார்.

அந்த சமயத்தில் மந்திரியிடம் குறுந்தாடி பேசிக் கொண்டிருந்தான். அமானுஷ்யன் தாயையும், அவனுக்கு உதவி செய்த பெண்ணின் மகனையும் கடத்தி வைத்து விட்டும் அவனை உடனடியாகத் தருவித்துக் கொல்லாமல் வெறுமனே காலம் கடத்துவது முட்டாள்தனத்தில் எல்லாம் மிக உயர்ந்த முட்டாள்தனம் என்பதை அவருக்குத் தெரிவித்துக் கொண்டிருந்தான். இனி பொறுப்பதற்கில்லை என்று தங்கள் தரப்பினர் சொல்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

அந்த நேரமாகக் கேசவதாஸின் போன் வரவே மந்திரி போனை எடுத்து பேசினார். "ஹலோ" ஸ்பீக்கர் மோடில் செல் போனை வைத்து குறுந்தாடியிடம் சைகையால் சொன்னார். "அவனைப் பற்றிய தகவல் தான்"

"சார்! அந்த ஆள் இங்கே வந்திருந்தான். இப்போது தான்

போனான்...." கேசவதாஸின் குரல் கேட்டது.

மந்திரிக்கு சிபிஐ மனிதன் சொன்னது பலித்ததில் ஒரு வித பரபரப்பு இருந்தது. "விவரமாகச் சொல்லுங்கள்"

கேசவதாஸ் தன் கோபத்தைக் கடைசியில் காட்டிக் கொள்ள தீர்மானித்து முதலில் நடந்ததை எல்லாம் அப்படியே சொன்னார். கடைசியில் தான் சொல்ல வந்ததை மிக உறுதியான குரலில் சொன்னார். "சார் நான் த்ரிபாதி பெயரைச் சொன்னதை அவன் முழுவதுமாய் நம்பினது போல் தெரியவில்லை. நீங்கள் அவன் குடும்பத்தாட்களை கடத்தினதைப் பற்றி என்னிடம் சொல்லாதது சரியல்ல ....."

மந்திரிக்குக் கோபம் வந்தது. "நீங்கள் யாரிடம் பேசுகிறீர்கள் என்பது நினைவிருக்கிறதா?"

கேசவதாஸ் சிறிதும் பயப்படவில்லை. "உங்களிடம் மட்டும் அல்ல என்னை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்தால் பிரதம மந்திரியே ஆனாலும் நான் இப்படித் தான் பேசுவேன். என்னைப் போன்றவர்கள் உங்களைப் போன்றவர்கள் சொல்வது எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு நடப்பது எங்கள் குடும்பத்திற்காகத் தான். அந்தக் குடும்பத்தாருக்கே ஆபத்து வந்தால்

அப்புறம் அப்படி நடப்பதில் என்ன அர்த்தம் சொல்லுங்கள் பார்க்கலாம்...."

"அவன் உங்கள் பிள்ளைகளை எதுவும் செய்யவில்லையே"

"அவன் எதுவும் செய்ய முடியாத அளவு என் பிள்ளைகளும், நானும் ஒன்றும் பாதுகாப்பாக இல்லை என்று அவன் காண்பித்துப் போய் விட்டானே சார்! அது போதாதா? அவன் மட்டும் நினைத்திருந்தால் என் குழந்தைகள் கோமா நிலையில் இப்போது இருந்திருக்கலாம். அதுவும் அவன் என்னை பயமுறுத்தி வேறு போயிருக்கிறான். நான் சொன்னது பொய் என்று தெரிந்தால் வேண்டிய விதத்தில் கவனிப்பதாய் எச்சரித்து விட்டுப் போயிருக்கிறான்..."

"கேசவதாஸ் நீங்கள் அனாவசியமாய் பயப்படுகிறீர்கள்"

"கையருகே துப்பாக்கி வைத்திருந்து கூட அதை உபயோகிக்க முடியாதபடி அவன் என்னை வைத்திருந்தான் சார். என் பின் வீட்டு நாய் காக்காய் அந்தப் பக்கம் பறந்தால் கூட குரைத்து ஆர்ப்பாட்டம் செய்யக்கூடியது. அது அவன் போகும் போது அந்த வீட்டுக்காரனே போவது போல் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா உட்கார்ந்திருந்ததை நான் என் கண்ணால் பார்த்தேன் சார். அவன் ஃபைலை நானும் படித்திருக்கிறேன் சார். இதற்கப்புறமும் நான்

பயப்படவில்லை என்றால் எனக்கு மூளை என்ற ஒன்றே இல்லை என்று அர்த்தம்"

"இப்போது என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?"

"அவனை உடனடியாகக் கொல்லப் பாருங்கள். அவன் பிணத்தை எரிப்பதைப் பார்க்கும் வரை அவன் அம்மாவுக்கும் அந்த பையனுக்கும் நகக் கீறல் கூட படாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் தயவு செய்து நெருப்போடு விளையாடாதீர்கள்...."

மந்திரி ஒன்றும் சொல்லாமல் யோசித்தார்.

கேசவதாஸ் வெளிப்படையாகச் சொன்னார். "இனியும் யோசிக்காதீர்கள். இனி ஒரு தடவை அவன் என்னிடம் வந்தால் நான் கண்டிப்பாக எல்லா உண்மையும் சொல்ல வேண்டி வந்து விடும். அதை மறக்காதீர்கள். அவன் உயிரோடு இருக்கும் வரை எல்லாருக்குமே ஆபத்து... அதனால் உடனைடியாக அவன் கதையை முடியுங்கள்."

மந்திரி செல் போனைக் கீழே வைத்து விட்டு ஆழ்ந்த ஆலோசனையில் ஆழ்ந்தார். அவருக்கு கேசவதாஸைப் பற்றி நன்றாகத் தெரியும். அந்த ஆள் அவ்வளவு சுலபமாக பயப்படக் கூடிய ஆள் அல்ல. அப்படிப் பட்ட ஆளே பயந்து போயிருக்கிறான் என்றால் அது அந்த சைத்தானின் சாதனை என்றே சொல்ல வேண்டும். அந்த குறுந்தாடி சைத்தான் என்று அடிக்கடி அழைத்து இப்போது அவருக்கும் அப்படியே அமானுஷ்யனை அழைக்கத் தோன்றுகிறது. அந்தப் பெயருக்கு அவன் பொருத்தமானவன் தான்.....

"சார். அவன் வந்து நம் திட்டத்தைத் தவிடு பொடி ஆக்கி விடுகிற வரை இப்படித் தான் யோசித்துக் கொண்டிருப்பீர்களா?" குறுந்தாடி காட்டமாகக் கேட்டான்.

"நீங்கள் எல்லாம் ஏன் பயப்படுகிறீர்கள்? நம் திட்டம் என்ன என்று தெரிந்து வைத்திருந்தால் அவன் இப்படி அங்கே இங்கே என்று அலைவானா? அவனுக்கு அந்த மலை உச்சியில் இருந்து விழுந்ததில் இருந்து முக்கியமான ஞாபகம் எல்லாம் போய் விட்டது போல தான் தோன்றுகிறது. அவன் அம்மா, அந்த சின்னப் பையன் எல்லாரும் கூட நம் வசம் தான் இருக்கிறார்கள். அவன் கண்டிப்பாக நமக்கு எதிராக இயங்க முடியாது"

"அந்த சிபிஐ காரன் மாதிரியே பேசாதீர்கள் சார். ஞாபகம் போனது மாதிரி இன்னொரு தடவை அவன் விழுந்து எழுந்திருத்தால் ஞாபகம் திரும்பக் கூட வரலாம். அதை மறந்து விடாதீர்கள். அந்த டிஐஜி சொன்னது மாதிரி அவனைக் கொன்று விட்டு வேறு வேலை பாருங்கள்...."

இன்னொரு முறை அவன் விழுந்து எழுந்தால் அவனுக்கு பழைய நினைவுகள் வந்து விடலாம் என்று குறுந்தாடி சொன்னது மந்திரிக்கும் சரியாகவே தோன்றியது. அவருக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. சிறிதும் தாமதிக்காமல் மந்திரி சிபிஐ மனிதனுக்குப் போன் செய்து கேசவதாஸ் சொன்னதை எல்லாம் விரிவாகச் சொன்னார். பின் சொன்னார். "...இத்தனை நாள் எனக்கு சல்யூட் அடித்து சொன்னதை எல்லாம் கேட்டு அப்படியே செய்த கேசவதாஸ் கூட எதிர்த்துப் பேச ஆரம்பித்து விட்டார். இங்கே தினமும் 'அந்த' ஆட்களும் என்னை வேறு எதுவும் செய்ய விடாமல் உயிரை எடுக்கிறார்கள். இப்போது கூட அந்த தாடிக்காரன் என் எதிரில் தான் உட்கார்ந்திருக்கிறான். ஓட்டலில் சாப்பிட ஆர்டர் செய்து விட்டு அதைத் தந்தால் தான் போவேன் என்று அடம்பிடிக்கிற மாதிரி அந்த சைத்தானின் பிணத்தைக் கேட்டு உட்கார்ந்து அடம் பிடிக்கிறான். உடனடியாக அவனைக் கொன்றால் தான் நான் நிம்மதியாகத் தூங்க முடியும். கேசவதாஸ் சொன்னது மாதிரி அவனை சீக்கிரமே கொல்வது தான் நல்லது.

உடனடியாக ஆனந்திற்குப் போன் செய்யலாம் என்று நினைக்கிறேன்..."

சிபிஐ மனிதன் சிறிது யோசனைக்குப் பிறகு சொன்னான். "சரி"

"அவனை எங்கே தருவிக்கிறது என்று யோசித்து வைத்திருக்கிறீர்களா?" மந்திரி கேட்டார்.

குறுந்தாடி அவசரமாக இடைமறித்தான். "அந்தக் கிழவியையும் பையனையும் எங்களிடம் ஒப்படையுங்கள். மீதியை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்..."

மந்திரி அவனையே பார்த்தபடி சிபிஐ மனிதனிடம் கேட்டார். "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? அந்த சைத்தான் சமாச்சாரத்தை இந்த சைத்தான்களிடம் ஒப்படைத்து விடலாமா?"

குறுந்தாடி மந்திரியை முறைக்க மந்திரி "சும்மா செல்லமாக சொன்னேன்" என்று வாயசைத்துக் காட்டினார்.

சிபிஐ மனிதன் சொன்னான். "யோசித்து சொல்கிறேன்"

மந்திரி திட்டவட்டமாகச் சொன்னார். "எதுவானாலும் ஒரு மணி

நேரத்தில் முடிவெடுங்கள்"

பதிலுக்குக் காத்திராமல் மந்திரி போன் இணைப்பைத் துண்டித்தார்.

**************

ஆனந்திற்கு அக்‌ஷய் வரும் வரை நிம்மதியாக இருக்க முடியவில்லை. ஜெயினிடம் பேசி விட்டு வந்த பிறகு ஓட்டல் அறையில் அடுத்ததாக என்ன என்று யோசிக்கக் கூட அவனால் முடியவில்லை. அம்மாவைக் கடத்தியவர்களும் ஏனோ இன்னும் அவனைத் தொடர்பு கொள்ளவில்லை. மகேந்திரனையும், கேசவதாஸையும் காணப்போன இடத்தில் அவனுக்கு ஏதாவது நேர்ந்து விடுமோ என்ற பயம் அவனுக்கு நேரமாக ஆக அதிகரித்துக் கொண்டே வந்தது.

ஆனால் நல்ல வேளையாக அக்‌ஷய் வந்து சேர்ந்தான். அவனைப் பார்த்தவுடன் அவன் விட்ட நிம்மதிப் பெருமூச்சு அக்‌ஷயை மனம் நெகிழ வைத்தது. பாசம் என்பது எவ்வளவு வலிமையானது என்று நினைத்துக் கொண்டான். அண்ணனைக் கேட்டான். "அவர்கள் போன் ஏதாவது வந்ததா?"

"இல்லை. நீ போனது என்ன ஆயிற்று?" ஆனந்த் பரபரப்போடு

கேட்டான்.

முதலில் மகேந்திரனைப் பார்க்க முடியாததையும் கேசவதாஸ் வீட்டிற்குப் போகும் வழியில் வருண் கடத்தப்பட்டதை அறிந்ததையும் அக்ஷய் சொன்னான். வருணும் கடத்தப்பட்டதை அறிந்ததை அவன் சொன்ன போது அவன் முகத்தில் தெரிந்த அளவு கடந்த வேதனை ஆனந்த் மனதை என்னவோ செய்தது.

பிறகு கேசவதாஸ் வீட்டில் நடந்ததையும் அக்ஷய் விவரித்தான். எல்லாவற்றையும் கேட்ட ஆனந்திற்கு சந்தேகம் வந்தது. "அக்ஷய்! கேசவதாஸ் த்ரிபாதி பற்றி சொன்னது உண்மையாக இருக்குமா? நீ போய் பார்க்க முடியாது என்பதற்காக வேண்டுமென்றே நாட்டில் இல்லாதவர் பெயரைச் சொல்கிறாரா?"

"தெரியவில்லை ஆனந்த்"

"நீ உன் வழக்கமான முறையைக் கையாண்டு கேட்டிருந்தால் உண்மை தெரிந்திருக்குமே"

"என் உள்ளுணர்வு அது வேண்டாம் என்று சொன்னது. அதனால் விட்டு விட்டேன்"

ஆனந்த் தம்பியுடன் பழகிய இந்த குறுகிய காலத்தில் அவன் தன் உள்ளுணர்வுக்குத் தரும் முக்கியத்துவத்தை நன்றாக அறிந்திருந்தான். அவன் உள்ளுணர்வு ஒரு விஷயத்தை உணர்த்தி விட்டால் அது எத்தனை தான் புத்திசாலித்தனமாகத் தெரியா விட்டாலும் உள்ளுணர்வு சொல்கிறபடியே தான் அவன் நடப்பான். அவனை எதிரிகள் துரத்திக் கொண்டு சென்ற வேளையிலும் சுரங்கப் பாதையில் ஓடிக் கொண்டிருக்கையில் திடீரென்று அவன் சிலையாக நின்றதும் அப்படி உள்ளுணர்வு சொல்லித் தான். உண்மையில் அவன் அப்படி நின்றது தான் அவன் உயிரையும் காப்பாற்றி இருக்கிறது....

அக்‌ஷய் சொன்னான். "ஆனால் கேசவதாஸிற்கு இந்த கடத்தல் விஷயம் நிஜமாகவே தெரியவில்லை போல தான் இருந்தது...."

"அந்த த்ரிபாதி பாதி தான் அவரிடம் சொல்கிறார் போல இருக்கிறது. மீதி வேறு ஆள் மூலமாக செய்கிற மாதிரி இருக்கிறது...."

"ஆனால் நான் போவேன் என்று எதிர்பார்த்து அந்த ஆள் காத்து இருந்த மாதிரி தான் தெரிந்தார். கேட்டால் அவர் அனுமானித்த மாதிரி சொன்னார்...."

"இல்லை அக்‌ஷய். எனக்கென்னவோ நம் அம்மாவைக் கடத்திய ஆள் தான் நீ அங்கு போவாய் என்று முன்பே அவரை எச்சரித்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது...."

"அப்படியானால் நம் எதிரி உண்மையிலேயே பெரிய புத்திசாலியாகத் தான் இருக்க வேண்டும்...."

சிறிது நேரம் அண்ணனும் தம்பியும் அமைதியாக இருந்தார்கள்.

பிறகு அக்‌ஷய் சொன்னான். "எனக்கு சிறிது நேரம் தியானம் செய்ய வேண்டும். நீ தூங்குவதானால் தூங்கு...."

ஆனந்த் பதில் ஏதும் சொல்வதற்கு முன் அறை மூலையில் ஒரு போர்வையை மடித்துப் போட்டு அதன் மீது அமர்ந்து அக்‌ஷய் தியானம் செய்ய ஆரம்பித்தான். சில நிமிடங்களில் அக்‌ஷய் அசையாமல் சிலை போல மாறி விட்டான்.

ஆனந்த் தம்பியை திகைப்புடன் பார்த்தான். தம்பியின் முகத்தில் பேரமைதி தெரிய ஆரம்பித்தது. ஆழ்ந்த தியான நிலைக்குப் போய் விட்டது தெரிந்தது. ஆனந்திற்கு தியானம் குறித்து பெரிய அனுபவம் இல்லை என்றாலும் இந்த நிலைக்குப் போவது அத்தனை சுலபம்

இல்லை என்பது மட்டும் புரிந்தது. தம்பி அவனுக்குப் புதிராகத் தெரிந்தான். இப்படி ஒரு நிலைக்கும் அவனால் சீக்கிரமே போக முடிகிறது. அதே போல அதே வேகத்தில் அடுத்தவரை கோமா நிலைக்கு அனுப்பவும் அவனால் முடிகிறது. இத்தனை எல்லாம் முடிகிற அவனுக்கு ஏன் பழைய நினைவுகள் வர மறுக்கின்றன. அதுவும் மிக முக்கியமான அந்த கடைசி வருடங்கள் பற்றி ஏன் வரவில்லை. அவனுடைய ஃபைலைப் படிக்கிற போது அந்த வருடங்கள் எல்லாம் உடனடியாக அவனுக்கு நினைவுக்கு வந்தன. ஆனால் அத்துடன் அந்த நினைவுச் சங்கிலி அறுந்தும் போய் விட்டதே. கடவுளே இந்த இக்கட்டான நிலைமையிலாவது அவனுக்குப் பழைய நினைவுகளைத் திருப்பி விடேன்....

அந்த நினைவுகளுடன் அமர்ந்திருந்தவன் அப்படியே உறங்கியும் விட்டான். உறங்கிய அவனையும், தியானத்தில் இருந்த அக்ஷயையும் ஆனந்தின் செல்போன் மணியோசை எழுப்பியது. கடத்தல் காரர்கள் அவர்களுடன் பேசத் தயாராகி விட்டார்கள்.

ஆனந்திற்கு நிகழ்காலத்திற்கு வர சில வினாடிகள் தேவைப்பட்டன. ஆனால் அக்ஷய் மின்னல் வேகத்தில் செல் போனை எடுத்து ஆனந்த் கையில் தந்து சொன்னான். "பேசு"

ஆனந்த் தன்னை சுதாரித்துக் கொண்டு "ஹலோ" என்றான்.

மறுமுனையில் இருந்து அலட்டிக் கொள்ளாத ஒரு அமைதியான குரல் கேட்டது. "ஹலோ மிஸ்டர் ஆனந்த்"

ஆனந்திற்கு செல் போனை எடுத்துக் கொடுத்த போதே அக்‌ஷய் செல்போனின் ஸ்பீக்கரை ஆன் செய்திருந்ததால் மறுபக்க பேச்சை அக்‌ஷயும் தெளிவாகக் கேட்க முடிந்தது.

ஆனந்த் பரபரப்போடு சொன்னான். "ஆமாம். நீங்கள் யார் பேசுகிறீர்கள்?"

"எக்ஸ் என்று வைத்துக் கொள்ளுங்களேன்."

"எக்ஸா. இது என்ன பெயர்?"

"பெயரில் என்ன இருக்கிறது ஆனந்த். ஒரு அடையாளத்திற்காக அப்படி வைத்துக் கொள்ளச் சொன்னேன். உங்களிடம் ஒரு விஷயம் பேசத்தான் போன் செய்தேன். உங்கள் அம்மா என் பாதுகாப்பில் தான் இருக்கிறார்கள்."

"ஹலோ, மிஸ்டர் எக்ஸ். ஏன் என் அம்மாவைக் கடத்திக் கொண்டு போய் வைத்திருக்கிறீர்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்?"

"ஆனந்த். நான் சுற்றி வளைத்துப் பேச விரும்பவில்லை. எங்களுக்கு உங்கள் தம்பி அக்ஷய் வேண்டும்?"

"ஏன்?"

"சும்மா தான். அவரை நீங்கள் ஒப்படைத்தால் உங்கள் அம்மாவை உங்களிடம் நாங்கள் ஒப்படைத்து விடுகிறோம்"

ஆனந்த் இதை முன்பே எதிர்பார்த்தது தான் என்றாலும் அதை நிஜமாகவே கேட்கையில் ஏனோ மனம் பதைத்தது. அவனுக்கு நாக்கு நகரவில்லை. வாழ்வின் கடைசிப் பகுதியில் இருக்கும் அம்மாவுக்காக, வாழ்க்கையை இன்னும் பெரிதாக ஆரம்பிக்காத தம்பியை எப்படி பலி கொடுப்பது என்ற கேள்வி சில மணி நேரங்களாக அவன் மனதில் எழாமல் இல்லை. அப்படியே தம்பியைப் பலி கொடுத்து தாயைத் திரும்பப் பெறுவது மீண்டும் புத்திர சோகத்தில் அவளைத் தள்ளுவது போலத் தானே? அதுவும் அவளைப் பொருத்த வரை மரணமே அல்லவா?

ஆனந்தையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த அக்ஷய் தானே

தன் எதிரியிடம் பேசத் தீர்மானித்தான். ஆனந்திடம் இருந்து செல் போனைப் பறித்து பேசினான். "முதலில் அம்மா உங்களிடம் தான் இருக்கிறார்கள் என்பது எனக்கு உறுதியாகத் தெரிய வேண்டும்."

ஆனந்த் திகைத்தான். தம்பி திடீரென்று அவர்களிடம் நேரடியாகவே பேசுவான் என்று எதிர்பார்த்திருக்கவில்லை. தம்பியின் முகத்தில் தெரிய ஆரம்பித்த ஒருவித அசாதாரணமான சலனமற்ற தன்மை ஒருவிதத்தில் அவனை பயமுறுத்தியது. இந்த நேரத்தில் அவன் வேறு ஆளாகவே தெரிந்தான்.

மிஸ்டர் எக்ஸூம் ஒரு கணம் அசந்து தான் போனார். பின் சுதாரித்துக் கொண்டு கேட்டார். "யார் பேசுவது?"

"யாருக்காக அந்தம்மாவைக் கடத்தினீர்களோ அதே ஆள் தான் பேசுகிறேன்"

நேரடியாக அவனிடமே பேசுவோம் என்று மிஸ்டர் எக்ஸ் எதிர்பார்க்காதது போல தோன்றியது. சில வினாடிகள் கழித்து மறுபடி குரல் கேட்டது. "அக்ஷய்?"

"ஆமாம். ஏன் குரலைக் கேட்டு கண்டுபிடிக்க முடியவில்லையா?"

ஒருவித அசட்டுச் சிரிப்பை மிஸ்டர் எக்ஸ் உதிர்த்தார். "ஒரு வேஷம், ஒரு குரல் என்று இருந்தால் உடனே கண்டுபிடிக்க முடியும் அக்‌ஷய். பல வேஷம் பல குரல் இருந்தால் கண்டு பிடிப்பது கஷ்டம் தானே?"

"குரலை நான் மாற்றவே இல்லையே மிஸ்டர் எக்ஸ். ஒரு வேளை என் குரலை நீங்கள் முதல் முதலாய் கேட்கிறீர்களோ?"

மிஸ்டர் எக்ஸின் அலட்டிக் கொள்ளாத அமைதி காணாமல் போயிற்று. அவனுடைய இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் முந்தைய பேச்சுக்கு பதில் பேசும் விதமாக மிஸ்டர் எக்ஸ் பேசினார். "உங்கள் அம்மா எங்கள் பாதுகாப்பில் பத்திரமாக இருக்கிறார். அப்படி இல்லாமல் நான் பேச முன் வருவேனா?"

"நான் அம்மாவிடம் பேச வேண்டும். பேசினால் தான் நம்ப முடியும்"

"அக்‌ஷய். நீங்கள் நம்பித் தான் ஆக வேண்டும். சந்தேகப்படும் நிலைமையில் நீங்கள் இல்லை."

"நம்பிக்கை எல்லாம் கண்ணியமானவர்களுடன் பழகும் போது தானாக வந்து விடும். உங்களிடம் நான் அதையெல்லாம் எதிர்பார்க்க முடியுமா?"

மிஸ்டர் எக்ஸிற்கு கோபம் வந்தது போலவும் என்ன சொல்வது என்று வார்த்தைகளைத் தேடுவது போலவும் தோன்றியது. ஆனந்த் தம்பியின் பேச்சைக் கேட்டு கவலைப்பட்டான். எதிராளியிடம் தான் தாய் மாட்டிக் கொண்டு இருக்கிறாள் என்பதை மறந்து விட்டு கோபமுறுத்தும் படி இவன் பேசுகிறானே.

"அக்‌ஷய் நீங்கள் நேராக நாங்கள் சொல்லும் இடத்திற்கு வந்தால் உங்கள் அம்மாவைப் பார்க்கவும் செய்யலாம். பேசவும் செய்யலாம்."

"முதலில் போனை அவர்களிடம் கொடுங்கள். நான் பேசிவிட்டு அப்புறம் நீங்கள் சொல்லும் இடத்திற்கு நேரில் வருகிறேன்"

மிஸ்டர் எக்ஸ் அக்‌ஷய் கை இந்த விஷயத்தில் ஓங்குவதை ரசிக்கவில்லை போல் தெரிந்தது. "அக்‌ஷய், ஒரு விஷயத்தை நீங்கள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் சொல்கிறபடி தான் நீங்கள் கேட்க வேண்டுமே ஒழிய நீங்கள் சொல்கிறபடி நாங்கள் கேட்க வேண்டியதில்லை. உங்கள் தாயார் தான் எங்களிடம் இருக்கிறார்களே ஒழிய எங்கள் தாய் உங்களிடம் இல்லை"

"உங்கள் தாயை விட முக்கியமான விஷயம் என்னிடமும் இருப்பதால் தானே நான் உங்களுக்குத் தேவைப்படுகிறேன்" அக்‌ஷய் மிக அமைதியாகச் சொன்னான்.

மிஸ்டர் எக்ஸ் வாய் விட்டு சிரித்தார். "அக்ஷய் உங்களிடம் இருக்கும் விஷயங்கள் உங்களுக்கு மறந்து போய் விட்டது எங்களுக்கும் தெரியும். சும்மா அட்டைக் கத்தி வீசாதீர்கள்ஂ"

அக்ஷய் அலட்டிக் கொள்ளாமல் சொன்னான். "மறந்தது என்றுமே மறந்ததாகவே இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை மிஸ்டர் எக்ஸ். எப்போது வேண்டுமானாலும் நினைவுக்கு வரலாம்"

"உங்களுக்கு நினைவுக்கு வந்து விட்டது என்று சொல்கிறீர்களா அக்ஷய்?"

"சாந்த்னி சௌக், இந்தியா கேட், கனாட் ப்ளேஸ், ரயில்வே ஸ்டேஷன், சன்சாத் மார்க், லோட்டஸ் டெம்பிள், பாரக்கம்பா ரோடு.....இதெல்லாம் என் நினைவில் நன்றாக இருக்கிறது மிஸ்டர் எக்ஸ். இன்னமும் உங்களுக்கு என் மேல் சந்தேகம் இருக்கிறதா?"

மிஸ்டர் எக்ஸ் கேட்டார். "என்ன இது டூரிஸ்ட் கைடாக மாறிவிட்டீர்களா? டெல்லியில் இருக்கும் இடங்களை மனப்பாடமாக சொல்ல ஆரம்பித்து விட்டீர்கள்?"

"ஓ உங்களுக்கு இந்த விவரம் எல்லாம் தெரியாதா? புரிய

வேண்டியவர்களுக்கு புரியும்."

மிஸ்டர் எக்ஸ் தர்மசங்கடத்தில் இருந்தது போல் தெரிந்தது. "கடைசியாய் என்ன சொல்கிறீர்கள்?" ஆரம்பத்தில் இருந்த அலட்டலில்லாத அமைதி இப்போது மிஸ்டர் எக்ஸின் பேச்சில் காணாமல் போய் இருந்தது.

"நான் அம்மாவிடம் பேசினால் தான் உங்களுடன் அம்மா இருக்கிறார்கள் என்று நம்புவேன். பேசிய பிறகு எங்கே எப்படி வரச் சொல்கிறீர்களோ அப்படியே வருகிறேன். நீங்கள் அதற்கு முன் ஏடாகூடமாய் நடந்து கொண்டால் அது உங்களுக்கு தான் அதிக ஆபத்து"

"சரி நான் மீண்டும் உங்களைக் கூப்பிடுகிறேன். உங்கள் அம்மாவையும் உங்களோடு பேச வைக்கிறேன். உங்கள் மொபைல் நம்பரைத் தருகிறீர்களா?"

"என்னிடம் மொபைல் போன் கிடையாது. ஆனந்த நம்பரிலேயே கூப்பிடுங்கள். பேசுகிறேன்..."

மிஸ்டர் எக்ஸ் போன் இணைப்பைத் துண்டித்தார்.

ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை தெளிவாக, பதட்டமே இல்லாமல் அக்‌ஷய் பேசியதைக் கவனித்து வந்த ஆனந்திற்கு உள்ளூர பாராட்டாமல் இருக்க முடியவில்லை. அவனாலும் அமைதியாக இருக்க முடியும். ஆனால் தாயை பணயக் கைதியாய் வைத்திருக்கிற ஆட்களிடம் அப்படி அழுத்தந்திருத்தமாய் அலட்டிக் கொள்ளாமல் பேச அவனால் கண்டிப்பாக முடிந்திருக்காது.

"நீ ஏன் அம்மாவுடன் பேச வேண்டும் என்றாய். அம்மாவைக் கடத்தியது அவர்கள் தானா என்று உனக்கு இன்னமும் சந்தேகமா?"

"இல்லை. நான் இன்னும் கொஞ்சம் அவகாசம் வாங்க முயற்சி செய்கிறேன். அதற்குத் தான் இந்த பில்டப் எல்லாம். அவர்களைப் பார்க்கப் போகும் முன் உன் மகேந்திரனைப் பார்த்து விட்டுப் போவது நல்லது என்று நினைக்கிறேன்."

"அவர்களிடம் அப்படியெல்லாம் பேசி கோபத்தில் அவர்கள் அம்மாவை ஏதாவது கஷ்டப்படுத்தினால்...?"

"அப்படி எல்லாம் ஆகாது. நீ சினிமா அதிகம் பார்த்து பயப்படுகிறாய். ஆனந்த் பயம் தான் முதல் எதிரி. பயத்தினால் நாம் நிறையவே குழம்பி விடுகிறோம். அம்மாவை கஷ்டப்படுத்தி அவர்கள் என்ன சாதிக்கப் போகிறார்கள்?"

"சரி அந்த இடங்கள் பற்றியெல்லாம் ஏன் சொன்னாய்?'

"கொஞ்சம் பீதியை அவர்களிடமும் கிளப்பத் தான். நீ ஆச்சார்யா வீட்டில் இருந்து எடுத்த அந்த லிஸ்ட் நினைவு வந்தது. அது எனக்கே தெரிந்த மாதிரி காட்டிக் கொண்டேன். எனக்கு எந்த அளவு நினைவு வந்திருக்கிறது என்று தெரியாமல் குழம்பித் தவிப்பார்கள். கொஞ்சம் பயமும் வரும். எதிரிக்கு பயம் இருப்பது நமக்கு நல்லது. நேரடியாய் சந்திக்கும் போதும் உடனடியாகக் கொன்று விடாமல் எனக்கு என்ன எல்லாம் தெரியும் என்பதைத் தெரிந்து கொள்ள நினைப்பார்கள். தெரிந்து கொள்கிற வரையில் என்னை உயிரோடு விட்டு வைக்கலாம்...."

தம்பியின் புத்திசாலித் தனம் பெருமையாய் இருந்த அதே நேரத்தில் கடைசியாய் அவன் சொன்னது கேட்டு ஆனந்திற்கு அழுகையாய் வந்தது.

## 81

மந்திரிக்கும் சிபிஐ மனிதனுக்கும் இடையே ஆன அந்த சந்திப்பு நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு மந்திரியின் வீட்டில் நடந்தது. மந்திரி என்றும் இது போன்ற சந்திப்புகளைத் தன் வீட்டில்

அனுமதிப்பதில்லை என்றாலும் முதல் முறையாக விதி விலக்கை அனுமதிக்கக் காரணம் அமானுஷ்யனுடன் போனில் நடத்திய பேச்சு வார்த்தையே.

இது போன்ற பேச்சு வார்த்தைகளை அமானுஷ்யன் விவகாரத்தில் நடத்தியது பெரும்பாலும் சிபிஐ மனிதனே என்றாலும் ஆனந்திடம் பேசும் போது தன் குரல் தன்னை அடையாளம் காட்டி விடும் என்ற காரணத்தால் சிபிஐ மனிதன் வேறொரு ஆளை அதற்கு ஏற்பாடு செய்திருந்தான். ஆனந்திடம் என்ன எல்லாம் பேச வேண்டும் என்றும், அமானுஷ்யனை எங்கே எப்படி ஒப்படைக்க வேண்டும் என்றும் விவரங்களை அந்த ஆளிடம் கொடுத்து பேச சிபிஐ மனிதன் பேசச் சொல்லிக் கொடுத்திருந்தான். போலீஸ் துறையில் அமானுஷ்யனைப் பிடிப்பதற்காக நியமிக்கப்பட்டு இருந்த கும்பலில் அந்த ஆளும் ஒருவன்.

ஒரு ரகசிய இடத்தில் இருந்து ஆனந்திற்கு அந்த ஆள் போன் செய்த போது உடன் இருந்தது சிபிஐ மனிதன் மட்டுமே. ஆனந்திடம் இருந்து அமானுஷ்யன் கைக்கு போன் போகும் வரை எல்லாம் சரியாகவே இருந்தது. ஆனால் அமானுஷ்யன் பேச ஆரம்பித்த போது எல்லாம் தாறு மாறாகப் போக ஆரம்பித்து விட்டது. அம்மாவிடம் பேசினால் தான் நம்புவேன் என்று அவன் சொன்னதிலிருந்து டில்லியின் 'அந்த' குறிப்பிட்டிருந்த இடங்களை

சொல்ல ஆரம்பித்த போது சிபிஐ மனிதனுடைய இதயத் துடிப்புகள் வேகமாகவும் சத்தமாகவும் நிகழ ஆரம்பித்தன.

எதையும் அவசியமில்லாமல் யாரும் தெரிந்து கொள்ளத் தேவை இல்லை என்ற கொள்கையுடைய சிபிஐ மனிதன் ஆனந்திடமும், அக்ஷயிடமும் பேசிய அந்த ஆளுக்குக் கூட பல தகவல்களைத் தெரிவித்திருக்கவில்லை. அக்ஷய் ஒரு பயங்கரவாதி, பழைய நினைவுகளை இழந்தவன், எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கிறான், ஆனந்தின் தம்பி போன்ற இன்றைய விவரங்களை மட்டுமே தந்து அக்ஷயைக் கண்டுபிடித்து, அவனைக் கொல்லும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த எத்தனையோ போலீஸ்காரர்களில் அந்த ஆளும் ஒருவர்.

அக்ஷய் அந்த இடங்களைப் பற்றி சொன்ன போது கூட அந்த ஆள் முகத்தில் எகத்தாளமே தெரிந்தது. ஆனால் சிபிஐ மனிதன் உடனடியாக ஒரு தாளில் "திட்டத்தில் மாறுதல்-மேற்கொண்டு அது பற்றி பேச வேண்டாம்-திரும்பவும் கூப்பிடுவதாக சொல்லுங்கள்" என்று எழுதி பேசிக் கொண்டிருந்த ஆள் முன் வைத்து பேச்சை நிறுத்தி விட்டான். அந்த ஆளை அனுப்பி வைத்த பிறகு உடனடியாக மந்திரிக்கு போன் செய்தான்.

மந்திரி கேட்டார். "என்ன ஆயிற்று?"

"நேரில் சொல்கிறேன். உடனடியாக உங்களைப் பார்க்க வேண்டும்"

மந்திரிக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. "என்ன சொல்கிறீர்கள்? போனிலேயே சொல்லுங்கள். எனக்கு இன்றைக்கு இரவு 11 மணி வரைக்கும் தவிர்க்க முடியாத வேலைகள் இருக்கின்றன"

"எல்லாவற்றையும் கேன்சல் செய்யுங்கள்"

"முடியாது. எல்லாம் வெளிநாட்டில் இருந்து வந்த அதிகாரிகள் சம்பந்தப்பட்டது. போன மாதமே முடிவு செய்தது"

"அப்படியானால் அதெல்லாம் முடிந்த பிறகு பேசுவோம்"

"என்ன தான் பிரச்னை?"

"ஆனந்திடம் பேசப் போய் அமானுஷ்யனிடமே பேசி இருக்கிறோம். நேரில் சொல்கிறேன்"

இணைப்பு துண்டிக்கப்பட்டது. அன்று மந்திரி பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பேசி, பல முக்கியமான விஷயங்களை முடிவு செய்தாலும் மனம் எல்லாம் அமானுஷ்யன் விவகாரத்திலேயே

இருந்தது. வீட்டிற்கே சிபிஐ மனிதனை வரவழைத்த அவர் அவனைப் பார்த்தவுடனேயே அடுக்கடுக்காக கேள்விகள் கேட்க ஆரம்பித்தார்.

அமானுஷ்யனிடம் பேசி விட்டு இழந்த மன அமைதியையும், சிந்திக்கும் திறனையும் திரும்பப் பெற்றிருந்த சிபிஐ மனிதன் அமைதியாக அமானுஷ்யனிடம் பேசிய பேச்சின் விவரத்தைச் சொன்னான். மந்திரியின் முகம் வெளிறியது. சிறிது நேரம் பேச்சிழந்த அவர் பிறகு கேட்டார். "நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவனுக்கு எல்லாம் நினைவுக்கு வந்திருக்குமா?"

"எனக்கு அதை நம்ப முடியவில்லை. வந்திருந்தால் அவன் எப்போதோ உங்களைக் காட்டிக் கொடுத்திருப்பான்"

"அப்படியானால் அவனுக்கு அந்த இடங்களைப் பற்றி எல்லாம் எப்படி சொல்ல முடிந்தது?"

"அது தான் புரியவில்லை. ஒருவேளை சமீபத்தில் அவனுக்கு ஞாபகம் வந்திருக்கவும் வாய்ப்பு இருக்கிறது"

மந்திரிக்கு அந்த ஏ.சி. அறையிலும் வியர்த்தது.

அதைக் கவனித்த சிபிஐ மனிதன் அமைதியாகச் சொன்னான். "ஆனால் நாம் பயப்பட எதுவும் இல்லை. அவன் அம்மாவும் அந்தப் பையனும் நம் வசம் இருக்கிற வரை நமக்கு எதிராக அவன் எதுவும் செய்ய மாட்டான்."

மந்திரிக்கு ஓரளவு தைரியம் வந்தது. "சரி இனி என்ன செய்வது?"

"அவனை நம்மிடம் வரச் சொல்லி தூரத்தில் பார்த்தவுடனேயே முதல் வேலையாக அவனைத் தீர்த்துக் கட்டலாம் என்று நினைத்தேன். ஆனால் அவனிடம் நாம் பேச வேண்டியதும் நிறைய இருக்கிறது. நம் திட்டத்தை இந்த தடவை மிகவும் கச்சிதமாக நடந்து கொள்ள வேண்டும். என்ன செய்ய வேண்டும் என்று ஓரளவு யோசித்து விட்டேன். அதில் அவன் தப்பிக்க வழியே இல்லாதபடி செய்ய இனியும் சிறிது ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதை இனி நான் பார்ீத்துக் கொள்கிறேன். அவனை சந்திக்கும் முன் நாம் ஜெயினை சமாளிக்க வேண்டும்"

"அந்த ஆள் என்ன செய்தார்?"

"ஒன்றும் செய்யவில்லை. இனியும் ஒன்றும் செய்து விடக் கூடாது என்பதற்காக அவரை நம் வழியில் குறுக்கிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. அவரை ஆனந்த் நேற்று பார்த்துப் பேசி

இருக்கிறான். நம் ஆள் ஒருவன் வேவு பார்த்து இந்த தகவலைத் தெரிவித்து விட்டான். ஆனந்த் கண்டிப்பாக அவன் அம்மா கடத்தல் சமாச்சாரத்தைச் சொல்லி இருப்பான். இனி நாம் அக்ஷயை நம்மிடம் ஒப்படைக்க என்னவெல்லாம் சொல்கிறோம் என்பதையும் அவன் அவரிடம் கண்டிப்பாக சொல்லாமல் இருக்க மாட்டான். ஜெயின் இனி சும்மா இருக்க மாட்டார். எனக்கு அவரை நன்றாகத் தெரியும். அவர் கண்டிப்பாக ஏதாவது செய்வார். நமக்கு அவர் இடைஞ்சலாக இருப்பார். அவரை அப்புறப்படுத்தா விட்டால் கண்டிப்பாக நமக்கு ஆபத்து."

"அவரைக் கொன்றால் அது இன்னும் பல கேள்விகளை எழுப்புமே?"

"கொல்ல வேண்டியதில்லை. அவரை உயிரோடு வைத்திருந்து நமக்கு இடைஞ்சல் செய்ய சக்தி இல்லாதவராக ஆக்கலாம். முதலில் நீங்கள் தாடிக்காரனிடம் 'அந்த மருந்தை' வாங்குங்கள்...."

மந்திரிக்கு ஆரம்பத்தில் ஒன்றும் விளங்கவில்லை. ஆனால் சிபிஐ மனிதன் அவருக்கு விளக்கியவுடன் அவர் முகம் மலர்ந்தது. "ஒரு கல்லில் இரண்டு மாங்காய்....."

*********

மகேந்திரன் தன் வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். நண்பனின் திருமணம் முடிந்து ஊர் திரும்பியவன் தன் வீடுள்ள நகர்ப்பகுதி வரை மின்சார ரயிலில் வந்து சேர்ந்த போது இரவு மணி ஒன்று. வீடு ஐந்து நிமிட நடை தூரத்தில் இருந்ததால் அவன் அந்த இரவு வேளையைப் பொருட்படுத்தாமல் ஆள் நடமாட்டமில்லாத அந்த தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தான். நடக்கையில் அப்பா காலையில் சொல்லி இருந்த தகவலையே மனம் அலசிக் கொண்டிருந்தது. "உன் நண்பன் ராகுல் உன்னைத் தேடி வந்திருந்தான்...."

அவனுக்கு ராகுல் என்ற பெயரில் எந்த நண்பனும் இப்போது கிடையாது. இரண்டாம் வகுப்பு படிக்கையில் தான் ஒரு ராகுல் அவன் நண்பனாக இருந்தான். அவன் அவன் அப்பாவுக்கு சண்டிகருக்கு மாற்றல் ஆகி விட்டதால்
அந்த வருடமே அங்கு சென்றும் விட்டான். அதன் பிறகு எந்த தகவலும் இது வரை அவனைப் பற்றி இல்லை. அவன் தற்போது தேடி வர வாய்ப்பே இல்லை. பின் வீட்டிற்கு வந்தது யார் என்று யோசித்தபடியே நடந்தவனை யாரோ ‘மகேந்திரன்" என்றழைத்தார்கள்.

திரும்பிப் பார்த்தான். அரையிருட்டில் இருந்து ஒருவன் வெளிச்சத்திற்கு வந்தான். அவனை இது வரை மகேந்திரன் பார்த்ததில்லை. "யார் நீங்கள்?"

"ராகுல்"

மகேந்திரன் கேட்டான். "நீங்கள் தான் நேற்று வீட்டுக்குப் போயிருந்தீர்களா?"

"ஆமாம்"

மகேந்திரன் அவனையே பார்த்துக் கொண்டு மூளையைக் கசக்கி யோசித்தான். 'இல்லை. இவனை இதற்கு முன் நிச்சயமாக பார்த்ததில்லை.'

"எனக்கு நீங்கள் யார் என்று தெரியவில்லையே"

"தெரிந்து கொண்டால் போயிற்று" என்றவன் கண்ணிமைக்கும் நேரத்தில் தொலைவில் இருந்து அருகில் வந்து சேர்ந்தான். மகேந்திரனுக்கு காண்பது கனவா நனவா என்று தெரியவில்லை. அவன் நடந்தும் வரவில்லை, ஓடியும் வரவில்லை. ஆனால் காற்று

வேகத்தில் வந்து அருகே நிற்கிறான்... பேயாக இருக்குமோ? அவன் இது வரை பேயை நம்பாதவன் என்றாலும் இப்போது அவனால் நம்பாமல் இருக்க முடியவில்லை. உடனடியாக அவன் கால்கள் நிலத்தைத் தொடுகின்றனவா என்று பார்த்தான். தொடுகிறது. அப்படியானால் இது பேயில்லையா, இல்லை பேயிற்கு கால்கள் நிலத்தைத் தொடாது என்பது பொய்யா?

மகேந்திரனுக்கு நாக்கு வரண்டது. கஷ்டப்பட்டு குரலைக் கண்டுபிடித்தான். "உங்களுக்கு.... என்ன...வேண்டும்?"

"சில உண்மைகள் தெரிய வேண்டும்?"

"என்ன... எந்த.... உண்மைகள்?"

"ஆச்சார்யாவைக் கொன்றது யார்?"

"எனக்குத் தெரியாது..... நீங்கள் யார்?"

"இப்போதைக்கு உன் நண்பன். ஆனால் உண்மையைச் சொல்லா விட்டால் எதிரியாகவும் மாறலாம்"

மகேந்திரன் ஒல்லியாக இருந்த இந்த ஆளை அடித்துத் தள்ளி விட்டு

ஓடி வேகமாக வீட்டுக்கு ஓடிப்போகலாமா என்று நினைத்தான். ஆனால் கண்ணிமைக்கும் நேரத்தில் பல அடி தூரத்தில் இருந்து அருகே வந்தவனை சாதாரணமாக நினைப்பது முட்டாள்தனம் என்று அறிவு எச்சரித்தது. யாரும் அந்த வழியாக வருகிற மாதிரியும் தெரியவில்லை.

அழாத குறையாகச் சொன்னான். "சத்தியமாகச் சொல்கிறேன். அவரை யார் கொன்றார்கள் என்று எனக்குத் தெரியாது"

அக்ஷய் சலனமே இல்லாமல் அவனையே பார்த்தபடி நின்றான். பின் சொன்னான். "ஆபிசில் நீ எல்லாரையும் வேவு பார்க்கிறவன் என்கிறார்கள். நீ ஆச்சார்யாவிடமும் நெருக்கமாக இருந்தவன் என்றெல்லாம் சொல்கிறார்கள். அப்படி இருக்கையில் நீ சொல்வதை என்னால் நம்ப முடியவில்லையே"

மகேந்திரன் ஒன்றுமே சொல்லாமல் அவனைக் கூர்ந்து பார்த்தான்.

அக்ஷய் அவன் கழுத்தை மின்னல் வேகத்தில் தொட்டான். அடுத்த கணம் வார்த்தைகளால் விவரிக்க முடியாத ஒருவித கொடுமையான வலி அவன் கழுத்து, தலைப் பகுதிகளைத் தாக்கியது. அவனால் கழுத்தை சிறிதும் அசைக்க முடியவில்லை. பேசவும் முடியவில்லை.... அவன் பீதியுடன் அக்ஷயைப் பார்த்தான். அவன்

கண்களில் உயிர்ப்பயம் தெரிந்தது.

ஓரிரு நிமிடங்கள் அந்த வலியின் கொடுமையை அவனை அனுபவிக்க விட்டு விட்டு மறுபடி அவன் கழுத்தைத் தொட்டு அவனைப் பழைய நிலைக்கு அக்ஷய் கொண்டு வந்தான்.

"இனியாவது நீ பேசுவாய் என்று நினைக்கிறேன்" அக்ஷய் அமைதியாகச் சொன்னான்.

82

கடுமையான வலியை சிறிது நேரமே அனுபவித்திருந்தாலும் மகேந்திரன் முகத்தில் பிரேத களை பரவியிருந்தது. மறுபடியும் வலி போய் விட்டது என்பதை நம்ப முடியாதவனாக அவன் தலையை ஒரு முறை அசைத்துப் பார்த்தான். பின் தன் கழுத்தைத் தடவிய படி அக்ஷயைப் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டே கேட்டான். "நீ... நீங்கள் தான் ஆச்சார்யாவின் ஹீரோவா?"

அக்ஷய் அவனைக் கூர்ந்து பார்த்தபடி கேட்டான். "உனக்கு என்னைத் தெரியாதா?"

"ஆச்சார்யா உங்களைப் பற்றி சொல்லித் தான் தெரியும்"

"என்ன சொன்னார்?"

"வாயு வேகம், மனோ வேகம் என்று சொல்வார்களே, அந்த வேகத்தில் அலட்டிக் கொள்ளாமல் இயங்க முடிந்த ஒரு அபூர்வமான மனிதன், கண் இமைக்கும் நேரத்தில் ஆக்கிரமிக்க முடிந்த ஒரு சூப்பர்மேன் என்றெல்லாம் சொன்னார். அப்போதெல்லாம் நான் நம்பவில்லை... ஆனால் இப்போது நம்புகிறேன்..."சொல்லும் போது அவன் கை தானாக அவன் கழுத்தை மறுபடியும் தடவிக் கொண்டது.

அக்ஷய் கேட்டான். "இதையெல்லாம் எப்போது சொன்னார்?"

"அவர் நன்றாக என்னிடம் பேசுவார். கம்ப்யூட்டரில் பல சந்தேகங்கள் கேட்பார். சில வேலைகளை கம்ப்யூட்டர் செய்யும் விதம் பார்த்து ஆச்சரியப்படுவார். குழந்தை போல் சந்தோஷப்படுவார். அப்படி ஒரு சமயத்தில் தான் உன்னைப் பற்றி... சாரி உங்களைப் பற்றி சொன்னார்."

"ஒருமையிலேயே கூப்பிடு பரவாயில்லை. என்ன சொன்னார்?"

"இந்த மாதிரி பல அற்புதங்கள் செய்யக்கூடிய ஒரு இளைஞனை அவருக்குத் தெரியும் என்றும் அவனை மாதிரி அவர் இது வரை இன்னொருவனைப் பார்த்தது இல்லை என்றும் சொன்னார். சில சமயம் உன்னை ஒரு மனிதனாகவே அவரால் நினைக்க முடியவில்லை என்று சொன்னார். அமானுஷ்யன் என்று உன்னை சிலர் கூப்பிடுவதாகச் சொன்னார். உன்னைப் பற்றி பேசும் போது அடைந்த பெருமிதத்தைப் பார்க்கையில் சொந்த மகனைப் பற்றி பேசிய தந்தையைப் போல எனக்குத் தோன்றியது....."

அக்‌ஷயிற்கு மனதை என்னவோ செய்தது. அவனை மகனாக யாரெல்லாம் நினைத்தார்களோ அவர்களுக்கெல்லாம் தீமையே விளைந்திருக்கிறது. எப்படிப் பட்ட ராசி அவனுக்கு இருக்கிறது என்று நினைத்த போது கஷ்டமாக இருந்தது. ஆனால் ஒரு கணத்தில் எல்லா உணர்ச்சிகளையும் அப்புறப்படுத்தி விட்டு கேட்டான். "இதையெல்லாம் எப்போது சொன்னார்?"

"ஆறு மாதத்திற்கு முன்னால் ஒரு முறை சொன்னார். அதற்கப்புறம் அவர் உன்னைப் பற்றி பேசவில்லை."

"சரி சொல். ஆச்சார்யாவை யார் கொன்றார்கள்?" கேட்டபடியே மகேந்திரனின் தோளில் கை வைத்தான். அவன் முகத்தில் சலனமே இருக்கவில்லை என்றாலும் ஏதோ ஒருவிதத்தில் அந்த சலனமின்மை

மகேந்திரனைப் பயமுறுத்தியது. தோளில் இருந்த கை கழுத்தைத் தொட அவனுக்கு மைக்ரோ வினாடிகள் போதும். மகேந்திரனுக்கு வியர்த்தது. "சத்தியமாய் சொல்கிறேன். அவரை யார் கொன்றார்கள் என்று எனக்குத் தெரியாது"

அக்‌ஷய் கேட்டான். "உனக்கு அப்போது கழுத்து சுளுக்கியது மிகவும் பிடித்து இருக்கிறதா? இன்னொரு தடவை லேசாகத் தட்டி விடட்டுமா?"

மகேந்திரன் அழாத குறையாகச் சொன்னான். "சத்தியமாக சொல்கிறேன். எனக்கு அவர் கொலை பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது?"

அக்‌ஷய் திடீரென்று கேட்டான். "உனக்கு என் அம்மாவைத் தெரியுமா?"

"உன்னைப் பற்றியே தெரியாது என்கிறேன். பின் எப்படி உன் அம்மாவைப் பற்றி எனக்குத் தெரியும்?" மகேந்திரன் குரலில் உண்மையான எரிச்சல் தெரிந்தது.

"சரி நீ ஆச்சார்யாவை யார் கொன்றிருப்பார்கள் என்று சந்தேகப்படுகிறாய்?"

மகேந்திரன் தர்மசங்கடத்தில் ஆழ்ந்தான். அக்‌ஷய் தொடர்ந்து சொன்னான். "உன்னைப் போல் அடுத்தவர்கள் விஷயத்தில் அதிக ஆர்வம் இருப்பவர்களுக்கு சுற்றியும் நடப்பது கண்டிப்பாக நன்றாகவே தெரிந்திருக்கும். சந்தேகப்படுகிற மாதிரி இருந்தால் நீங்கள் நன்றாக துருவவும் செய்வீர்கள். உங்கள் ஆபிசில் உள்ள யாரோ ஒருவர் உதவியுடன் தான் இந்தக் கொலை நடந்திருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அது யாராக இருக்கும்?"

மகேந்திரன் எச்சிலை மென்று விழுங்கினான். அக்‌ஷயின் கை அவனது தோளை லேசாக இறுக்கியது. மகேந்திரன் இனி தாமதிப்பது ஆபத்து என்று உணர்ந்து அவசர அவசரமாகச் சொன்னான். "எனக்கு... எனக்கு.... ரெட்டி மேல் தான் சந்தேகம்...."

அக்‌ஷய் திகைத்துப் போனான். ஆனந்த் ராஜாராம் ரெட்டி பற்றி அவனிடம் ஏற்கெனவே சொல்லி இருந்தான். அவர் நேர்மைக்குப் பெயரெடுத்தவர் என்றும் ஒரு மந்திரியை சிறிதும் பயப்படாமல் ஒரு வழக்கில் குற்றம் சுமத்தி நீதிமன்றத்தில் நிறுத்தினார் என்பதை ஆனந்த் தெரிவித்திருந்தான். அந்த வழக்கில் சில்லறை ஓட்டைகளைப் பெரிதாக்கி வக்கீல்களின் சாமர்த்தியத்தால் அந்த மந்திரி தப்பித்து நீதிமன்ற வளாகத்திலேயே அந்த மந்திரியின் அடியாட்கள் ராஜாராம் ரெட்டியை ஏளனம் செய்து

கொண்டாடினார்கள் என்றும் அவமானப்பட்டுப் போன ராஜாராம் ரெட்டி பல நாட்கள் சிபிஐ அலுவலகத்திற்கு வராமலேயே வீட்டில் அடைபட்டுக் கிடந்தார் என்றும் ஜெயின் தான் அவரை சமாதானப்படுத்தி அழைத்து வந்தார் என்றும் தற்போது ரெட்டி தன் வேலையில் பெரிய அக்கறை எடுத்துக் கொள்வதில்லை என்றும் ஆனந்த் கூறி இருந்தான்.

தான் தப்ி பிப்பதற்காக அப்படிப்பட்ட உத்தமரைக் குற்றம் சாட்டுகிறானே இவன் என்ற கோபம் அக்ஷயிற்கு வந்தது. அவன் முகபாவனையில் இருந்தே அவன் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்ட மகேந்திரன் அவசர அவசரமாகச் சொன்னான். "தயவு செய்து நான் சொல்வதை நம்புங்கள். ஒரு காலத்தில் அந்த ஆள் உத்தமன் தான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் இப்போதெல்லாம் அந்த ஆள் அப்படி இல்லை. அந்த ஆள் நடவடிக்கை எல்லாம் சந்தேகமாகவே இருக்கிறது....அடிக்கடி யாருடனோ ரகசியமாய் பேசுகிறார்.... ஆச்சார்யா கொலையிலும் அவருக்கு ஏதோ பங்கு இருப்பது போல தெரிகிறது"

அக்ஷய் அவனை சந்தேகத்துடன் கேட்டான். "எதை வைத்து அப்படிச் சொல்கிறாய்?"

"ஆச்சார்யா கொலை செய்யப்பட்ட நாள் ஆபிசில் இருந்தே நேரம்

கழித்து தான் போனார். அன்று நானும் ஏதோ வேலையாய் ஆபிசில் இருந்தேன். ஆச்சார்யா அன்றைக்குப் பரபரப்பாக இருந்தார். போவதற்கு முன் கடைசியாக ராஜாராம் ரெட்டி அறைக்குப் போய் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார். எனக்கென்னவோ அவர் ஏதோ ஒரு முக்கியமான கேஸ் பற்றிய தடயங்களை ரெட்டியிடம் சொல்லி இருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. அவர் போய் சிறிது நேரம் கழித்து ரெட்டியும் அவசரமாகக் கிளம்பிப் போனார். ரெட்டி அப்படிப் போன விதம் எனக்கு சந்தேகத்தை வரவழைத்தது....."

இறந்த அன்று ஆச்சார்யா கடைசியாக பரபரப்பாக ராஜாராம் ரெட்டியிடம் பேசி இருக்கிறார் என்ற தகவல் அக்‌ஷயை யோசிக்க வைத்தது. இவன் உண்மையைச் சொல்கிறானா இல்லை பொய் சொல்கிறானா?

*******

மஹாவீர் ஜெயின் ஆனந்த் பேசி விட்டுப் போன பிறகு முழுவதும் உறங்க முடியாமல் தவித்தார். ஆனந்தின் தற்போதைய நிலைக்கு ஒரு விதத்தில் அவரும் காரணம் என்று அவரது மனசாட்சி இடித்துரைத்தது. ஆச்சார்யா கொலைக்குத் துப்புத் துலக்க அவர் அவனை அழைத்து வராமல் இருந்திருந்தால் ஆனந்த் இந்த அளவு இதில் சிக்கி இருக்க மாட்டான், அவன் தாய் கடத்தப்பட்டிருக்க

மாட்டாள், அக்‌ஷயைக் காப்பாற்ற சிரமம் இல்லாமல் அவன் ஏதாவது செய்திருப்பான் என்றெல்லாம் அவருக்குத் தோன்றியது.

அப்படி இருக்கையில் ஆனந்தின் தாயும் கடத்தப்பட்டு அவன் தம்பியும் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கையில் வெறுமனே கை கட்டி வேடிக்கை பார்ப்பது இந்தியாவின் மிகப்பெரிய துப்பறியும் நிறுவனத்தின் தலைவன் என்ற நிலையில் தனக்கு அழகல்ல என்று தோன்றியது.

'இப்படி எல்லோரும் நடக்கும் தவறுகளைக் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றால் இந்த நாட்டை யாரால் தான் காப்பாற்ற முடியும்?'

ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்ற எண்ணம் அவருக்குள்ளே பலப்பட ஆரம்பித்தது. இல்லா விட்டால் அவரையே அவரால் மன்னிக்க முடியாது. ஆனால் என்ன செய்வது? எப்படி செய்வது? யோசித்துப் பார்க்கையில் இது விஷயத்தில் ராஜாராம் ரெட்டியின் ஆலோசனையைப் பெறுவது நல்லது என்று அவருக்குத் தோன்றியது. மனிதர் அனுபவஸ்தர், நாணயமானவர், இந்த நேரத்தில் என்ன செய்ய முடியும் என்பதை அவருடன் கலந்தாலோசித்தால் ஏதாவது நல்ல முடிவு எடுக்க முடியும் என்று அவருக்குத் தோன்றியது.

அதிகாலை வரை பொறுத்திருந்து விட்டு ஜெயின் உடனடியாக ராஜாராம் ரெட்டிக்குப் போன் செய்தார். போனில் ரெட்டியின் குரலும் களைப்பாகக் கேட்டது. ஒரு வேளை அவரும் இரவெல்லாம் உறங்கவில்லையோ. "சார் உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும். ஆபிசிற்கு எத்தனை மணிக்கு வருகிறீர்கள்?"

ரெட்டி அவர் குரலைக் கேட்டு சந்தோஷப்பட்டது போலத் தோன்றியது. "எனக்கு உங்கள் வீட்டுப் பக்கம் ஒரு வேலை இருக்கிறது. நானே உங்களுக்குப் போன் செய்து விட்டு நீங்கள் வீட்டில் இருந்தால் அங்கே வருவதாய் இருந்தேன். நீங்களே போன் செய்து விட்டீர்கள். நான் காலை எட்டு மணிக்கு அங்கே வருகிறேன். அங்கேயே பேசலாம்"

அவரிடம் பேசி முடித்த ஜெயினிற்குத் தெம்பாக இருந்தது. அவரிடம் எல்லா உண்மையையும் சொல்லி, கலந்தாலோசித்து இந்த வழக்கு விஷயத்தில் ஏதாவது உறுதியான முடிவைக் கண்டிப்பாக எடுக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டார் ஜெயின். ஆனால் ரெட்டியைக் கூப்பிட்டு பெரிய ஆபத்தை வலிய வர வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை ஜெயின் உணரவில்லை.

ராஜாராம் ரெட்டிக்கு மந்திரி போன் செய்தார். "நீங்கள் கேட்டதை நான் அனுப்பி இருந்தேன். கிடைத்ததா?"

"கிடைத்தது"

"ஜெயினைப் பார்க்க எப்போது கிளம்புகிறீர்கள்"

"இன்னும் அரை மணி நேரத்தில் கிளம்புவேன். நான் ஏதாவது ஒரு காரணம் சொல்லி அவரைப் போய் பார்க்க வேண்டும் என்று நினைத்திருந்தேன். ஆனால் அவரே போன் செய்தார், என்னிடம் பேச வேண்டும் என்று. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் ஆயிற்று...."

"அவர் என்ன பேச வேண்டும் என்று கூப்பிட்டார்?"

"தெரியவில்லை. போய்தான் பார்க்க வேண்டும்....."

"ஜாக்கிரதையாய் இருங்கள். யாரையாவது கூட அனுப்பட்டுமா?"

"வேண்டாம். கூட யாராவது இருந்தால் சந்தேகம் வரும். நானே போகிறேன்"

"அவர் வீட்டில் இருப்பவர்களை எப்படி சமாளிக்கப் போகிறீர்கள்?"

"அவர் மகன் இந்நேரம் ஆபிசிற்கு கிளம்பி இருப்பான். அவர் மனைவி ஒருத்திதான் இருப்பாள். அது பிரச்னையில்லை. நான் பார்த்துக் கொள்கிறேன்"

"நீங்கள் காரியம் முடிந்தவுடன் போன் செய்யுங்கள்" மந்திரி குரலில் பதட்டம் இருந்தது.

"சரி."

போனில் பேசி முடித்த ராஜாராம் ரெட்டி அமைதியாக சிறிது நேரம் அமர்ந்திருந்தார். மஹாவீர் ஜெயின் மீது அவருக்கு எந்தப் பகையும் இல்லை. இன்னும் சொல்லப் போனால் சிபிஐயில் ஆரம்ப காலத்திலிருந்தே அவருக்கு நெருக்கமாக இருந்தவர்கள் ஆச்சார்யாவும், ஜெயினும்தான். ஆரம்ப காலத்தில் அவர்களை அவருக்கு மிகவும் பிடித்திருந்த காரணம் அவர்களிடம் இருந்த அப்பழுக்கற்ற நேர்மைதான். அந்த நேர்மை இந்த சுயநலமும், பேராசையும் பிடித்த உலகில் மிக அபூர்வமானது.

ராஜாராம் சிறு வயதிலிருந்தே தனி மனித நேர்மையை மிக முக்கியமானதாக நினைத்தார். அந்த நேர்மை இல்லாமல் இந்த

தேசத்திற்கு யாரும் பெரியதாக நன்மை எதுவும் செய்து விட முடியாது என்று நம்பினார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை அவர் ஒரு சிறு துரும்பைக் கூட நேர்மை அல்லாத வழியில் சம்பாதித்தவர் அல்ல. நியாயமில்லாத வழிகளில் ஏராளமாக சம்பாதிக்க எத்தனையோ வழிகள் அவரைப் போன்ற உயர் அதிகாரிக்கு இருந்தாலும் அவர் அந்த வழிகளைப் பயன்படுத்தியவர் அல்ல. நம் நாட்டை மேம்படுத்த வேண்டுமானால் திறமையும் நேர்மையும் உறுதியாக இருக்கக் கூடிய தன்னைப் போன்ற மனிதர்களால்தான் முடியும் என்று நம்பினார். தனிப்பட்ட வாழ்க்கையில் எத்தனையோ பணத் தட்டுப்பாடு இருந்த போதும் எந்த சபலமும் தன்னை திசை மாற்றி விடாதபடி வாழ்ந்தும் வந்தார். எத்தனையோ பேருக்கு அவர் ஒரு உதாரண புருஷராக இருந்தார்.

இரண்டாண்டுகளுக்கு முன் அவர் எடுத்துக் கொண்டிருந்த ஒரு கிரிமினல் வழக்கில் மிகப் பெரிய குற்றவாளியாக ஆளுங்கட்சி மந்திரியே இருப்பதைக் கண்டு பிடிக்க நேர்ந்தது. அவர் கண்டு பிடித்து விட்டார் என்று தெரிந்த மந்திரி அவருக்கு எத்தனை கோடிகள் வேண்டுமானாலும் கொடுத்து அவரை விலைக்கு வாங்கப் பார்த்தார். ராஜாராம் ரெட்டி விலை போகத் தயாராக இருக்கவில்லை. இது போன்ற அதிகாரத்தில் இருக்கக் கூடிய ஆட்களுக்குக் கிடைக்கும் தண்டனை எல்லோருக்கும் பயத்தையும் படிப்பினையையும் தர வேண்டும் என்று எண்ணினார். மந்திரி

என்பதால் பிரதமர் அனுமதி அவசியமாக இருந்தது. ஆதாரங்களுடன் பிரதமரை சந்தித்தார்.

பிரதமரும் வன்முறை, கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபடும் சகாக்களை விரும்பாதவராக இருந்தார். அரசியலில் ஏராளமான சொத்துகளை அவரும் சேர்த்து இருந்தாலும் அதெல்லாம் வழக்கமான வசூல்களால் சேர்த்ததே ஒழிய வன்முறைக்கும், கிரிமினல் நடவடிக்கைகளும் துணை போய் சம்பாதித்தவை அல்ல. மேலும் ராஜாராம் ரெட்டி குற்றம் சாட்டிய மந்திரி உட்கட்சியில் எதிரணியில் இருந்த நபர். எனவே அவர் ஒரே கேள்விதான் ரெட்டியைக் கேட்டார். "அசைக்க முடியாத ஆதாரங்களை வைத்திருக்கிறீர்களா?"

ரெட்டி "ஆமாம்" என்றார். பிரதமர் தன் அணி சகாக்களுடன் கலந்து பேசிய் போது அவர்களும் எதிரணிக்குப் பாடம் கற்பிக்க இது நல்ல வாய்ப்பு என்று சொல்ல அந்த மந்திரி மீது வழக்கு தொடர அனுமதி வழங்கி விட்டார். அந்த குற்றவாளி மந்திரி மீது வழக்கு தொடரப்பட்டது.

அந்த சமயத்தில் நாடு முழுவதும் ராஜாராம் ரெட்டி பேசப்பட்டார். இது போல நேர்மையான அதிகாரி சிலர் இருந்தால் இந்த தேசத்திற்கு நிச்சயமாக நல்ல எதிர்காலம்தான் என்று

பத்திரிக்கைகளில் எழுதினார்கள். டெலிவிஷன்களில் பேசினார்கள். மந்திரி தன் சம்பாத்தியத்தை எல்லாம் தண்ணீராகச் செலவழித்து கவனிக்க வேண்டியவர்களை நல்ல முறையில் கவனித்து ஆதாரங்களைப் பலவீனமாக்க என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அதை எல்லாம் செய்தார். திறமையான வக்கீல்களை வைத்து வழக்கை வாதாடினார். சாட்சிகள் எல்லாம் மாறினார்கள். சிபிஐயில் ராஜாராமின் உதவியாளர் ஒருவரையும் மந்திரி விலைக்கு வாங்கினார். கடைசியாக போதிய ஆதாரமில்லை என்று வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

நீதி மன்ற வளாகத்தில் மந்திரியின் ஆட்கள் ராஜாராம் ரெட்டியைப் படு கேவலமாக ஏளனம் செய்தார்கள். குத்தாட்டம் ஆடினார்கள். ராஜாராம் ரெட்டிக்கு நடப்பதை எல்லாம் நம்ப முடியவில்லை. அவர் மனம் கொதித்தது. அவரைப் போலவே அவரை இது வரை பாராட்டியவர்களும் ஆத்திரம் அடைவார்கள் என்று அவர் உளமார எதிர்பார்த்தார். ஆனால் அவர் எதிர்பார்ப்பு பொய்த்தது. அந்த சமயத்தில் ஒரு பிரபல நடிகைக்கும், பிரபல சாமியாருக்கும் இடையே இருந்த ரகசிய தொடர்பு வெளியாகவே மீடியாக்கள் கவனமும், மக்கள் கவனமும் பிரதானமாக அதில் இருந்தது. இந்த செய்தி பத்தோடு பதினொன்றாக இருந்தது.

அப்படி ஏதோ சிறிது கவனம் செலுத்தியவர்களில் ஒருசிலர்

கடைசியில் அவரே அந்த மந்திரியிடம் விலை போய்தான் வழக்கை பலவீனப்படுத்தி விட்டார் என்று சொல்ல ஆரம்பித்தார்கள். அது பத்திரிக்கைகளிலும், டிவிகளிலும் வந்தது. பணத்திடமும், அதிகாரத்திடமும்தான் தோற்று விட்டதை ராஜாராம் கடைசியாக உணர்ந்தார். அது அவருக்குப் பேரிடியாக இருந்தது.

அப்போது அவருக்கு வீட்டுக் கடனும், கார் கடனும் இருந்தது. அவசரத் தேவைக்காக அவர் சேமித்து வைத்திருந்தது ரூபாய் பதினெட்டாயிரத்து எழுநூறு மட்டுமே. சிக்கனமாக வாழ்க்கை நடத்தியும் அவர் இரண்டு மகள்களின் கல்யாணம் முடிந்து அவரிடம் மிஞ்சியது அவ்வளவு மட்டுமே. இதை எல்லாம் கணக்கிட்டுப் பார்க்கையில் வாழ்க்கையில் மிகவும் முட்டாள் தனமாக இருந்து விட்டோம் என்று அவருக்குத் தோன்றியது. நடிகையின் அந்தரங்க வாழ்க்கைக்குக் காட்டும் அக்கறையில் ஐந்து சதவீத அக்கறை கூட நாட்டையே செல்லரித்துக் கொண்டிருக்கும் விஷயங்களில் காட்டாத இந்த சமூகத்திடமும், குற்றவாளிகளுக்கு சாதகமாக இருக்கும் வலுவில்லாத சட்ட திட்டங்களிலும் அவருக்கு ஒரு பெரும் வெறுப்பு தோன்றியது. அந்த அளவு வெறுப்பு அந்த மந்திரியிடம் கூட அவருக்குத் தோன்றவில்லை. சில நாட்கள் வேலைக்குக் கூடப் போகாமல் பித்து பிடித்தது போல அவர் வீட்டில் இருந்தார். ஜெயினும், ஆச்சார்யாவும் வந்து அவருக்கு ஆறுதல் சொன்னார்கள். ஜெயின் அவரை வற்புறுத்தி அலுவலகத்திற்கு மீண்டும் அழைத்து

வந்தார்.

ஆனால் அலுவலகத்திற்குத் திரும்பி வந்த ராஜாராம் ரெட்டியிடம் பெரியதொரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. உருவம் மட்டுமே பழையதாக இருந்தது. உள்ளம் புதிய அவதாரம் எடுத்திருந்தது. அவருடைய அசைக்க முடியாத பழைய நேர்மை இப்போது வேரோடு பிடுங்கி எறியப்பட்டிருந்தது. மீதமிருக்கும் மூன்று வருட வேலையில் இத்தனை வருடங்களிற்கும் சேர்த்து சம்பாதிப்பது எனவும், தனிப்பட்ட நலனை முழுவதுமாக வளர்த்துக் கொள்வது எனவும் அவர் முடிவு செய்தார்.

அவர் தலைமையில் நடை பெற்ற எல்லா குற்றப் புலனாய்வுகளிலும் அதிகமாய் சம்பாதிக்க முடிந்தவை, சம்பாதிக்க முடியாதவை என்று இரு பிரிவுகளாய் பிரிப்பார். பெரியதாய் சம்பாதிக்க முடியாத வழக்குகளை முறைப்படி முடித்து வைக்கும் அவர், சம்பாதிக்க முடிந்த வழக்குகளில் பேரம் பேச ஆரம்பித்தார். ஆனால் அது போன்ற பேரங்களை ஜெயின், ஆச்சார்யா போன்ற பழைய நண்பர்களுக்குத் தெரியாத அளவு மிக ரகசியமாய் செய்தார். எதில் எல்லாம் பெரும் பணக்காரர்களும், அரசியல்வாதிகளும் சம்பந்தப்படுகிறார்களோ அதில் எல்லாம் பேரம் பேசி கோடிக்கணக்கில் சம்பாதித்து அவர்களுக்கு வேண்டப்பட்டது போல் வழக்குகளை முடித்து வைத்தார். சில வழக்குகள் முடிந்த

விதத்தை ஜெயினும் ஆச்சார்யாவும் கவனித்தாலும் கூட அவர்கள் ராஜாராம் ரெட்டியை சந்தேகிக்கவில்லை. பழைய உறுதி தளர்ந்து போய் நடக்கிற படி நடக்கட்டும் என்று அவர் உதவியாளர்கள் வழக்கை முடிக்கிற விதத்தை ஏற்றுக் கொள்கிறார் என்றே அவர்கள் நினைத்தார்கள்.

இன்று அவர் வைத்திருக்கும் பணம் பல கோடிகள். இப்போதெல்லாம் எத்தனை பெரிய அநியாயங்கள் நடந்தாலும் அவர் அலட்டிக் கொள்வதில்லை. அதில் எத்தனை சம்பாதிக்கலாம் என்றே கணக்கு போட்டார். அந்த அநியாயங்களை செய்வதிலும் அவருக்கு வருத்தமில்லை. தனக்கு நடந்ததற்கு பழி வாங்குவதாகவே அதை எல்லாம் நினைத்தார்.

ராஜாராம் ரெட்டி கடிகாரத்தைப் பார்த்தார். ஜெயினை சந்திக்க வேண்டிய நேரம் வந்து விட்டது.

*******

மஹாவீர் ஜெயின் ராஜாராம் ரெட்டியை வரவேற்று தனதறைக்கு அழைத்துப் போனார். ஜெயினின் மனைவி ரெட்டியிடம் அவர் குடும்பத்தை விசாரித்து இரண்டு நிமிடங்கள் பேசி விட்டு போன பிறகு ஜெயின் அறைக் கதவை சாத்தி விட்டு வந்தார்.

"சார், ஆச்சார்யா கொலை வழக்கில் ஆனந்தை வரவழைத்தது இப்போது அவருக்கு பெரிய சிக்கலை ஏற்படுத்தி இருக்கிறது...."

ராஜாராம் ரெட்டி மிகுந்த ஆச்சரியத்தை வெளியே காட்டிக் கொண்டார். "என்ன ஆயிற்று சார்"

இது வரை ஆனந்த் தன்னிடம் சொன்னதை எல்லாம் ஜெயின் ரெட்டியிடம் சொல்ல ஆரம்பித்தார்.

84

அக்‌ஷய் மகேந்திரனை இன்னமும் சந்தேகத்துடனேயே பார்த்தான். "பொய் சொன்னால் என்னிடம் தண்டனை என்ன தெரியுமா?"

மகேந்திரனுக்கு இவனிடம் இருக்கும் தண்டனைகளை பரீட்சித்துப் பார்ப்பதில் ஆர்வம் இருக்கவில்லை. அவசர அவசரமாக சொன்னான். "சத்தியமாய் சொல்கிறேன் என்னை நம்பு. நான் நல்லவன் என்று சொல்லிக் கொள்ளவில்லை. ஆனால் என்னை நம்பியவர்களுக்கும், எனக்குப் பிடித்தவர்களுக்கும் நான் இது வரையில் துரோகம் செய்ததில்லை. ஆச்சார்யாவை எனக்கு மிகவும்

பிடிக்கும். வயதானவராக இருந்தாலும் அவருடன் பழகும் போது அவரை என் நண்பராகத் தான் நினைத்தேன். அவர் எனக்கு அந்த எண்ணத்தை ஏற்படுத்தினார்....."

"நீ ரெட்டியைப் பற்றி சொல்வதெல்லாம் உண்மை தானா?"

"உண்மை தான். அந்த ஆள் இப்போது பணத்திற்காக என்ன வேண்டுமானாலும் செய்வார். ஒரு காலத்தில் அவரால் ஒதுக்கி வைக்கப்பட்ட ஊழல் பேர்வழிகளாக இருந்த உதவியாளர்கள் எல்லாம் தான் இப்போது அவருக்கு பணத்தை சம்பாதித்துத் தருகிற ஏஜெண்டுகள். சில மாதங்களுக்கு முன் கூட ஒரு வழக்கை ஒரு பெரிய பணக்காரனுக்கு எதிராக ஒன்றுமில்லாமல் முடித்து விட்டார்கள். நான் ஆச்சார்யாவிடம் கூட சுட்டிக் காட்டினேன். ஆனால் அவர் சொன்னார். "அவர் அப்படிப்பட்டவர் அல்ல மகேந்திரன். அவரை பல வருஷங்களாய் எனக்குத் தெரியும். அவர் இப்போது பழைய உறுதியோடு இல்லை. ரிடையர் ஆகும் வரை மேல் போக்காக இருந்து விட வேண்டும் என்று தான் நினைக்கிறார். இன்னொரு முறை அந்த கசப்பான அனுபவம் பெற அவர் தயாராக இல்லை. இதெல்லாம் அவருக்கு கீழே வேலை பார்ப்பவர்கள் செய்திருப்பார்கள்". ஆனால் என்னால் ஏனோ அதை நம்ப முடியவில்லை"

அவன் பேசும் போது அவனை மிகவும் கூர்ந்து கவனித்து வந்த அக்‌ஷயிற்கு அவன் உண்மை சொல்வதாகவே தோன்றியது.

"உங்கள் டைரக்டர் ஜெயின் எப்படி?"

"நல்ல மனிதர். நாணயமானவர்"

"சரி ஆச்சார்யா கொலை பற்றி வேறு யாருக்கு விவரங்கள் தெரிந்திருக்கலாம்?"

"ஆனந்த் என்று ஒரு அதிகாரியை சென்னையில் இருந்து ஜெயின் வரவழைத்து அவனிடம் ஆச்சார்யா கொலை வழக்கை ஒப்படைத்து இருக்கிறார். அந்த ஆள் ஏதோ சில தகவல்களை கண்டு பிடித்திருக்கிற மாதிரி தெரிகிறது. நீ அந்த ஆளைப் பார்."

தனக்கும் ஆனந்திற்கும் இடையே உள்ள உறவு இவனுக்குத் தெரியவில்லை என்கிற போதே இவனுக்கும் ஆச்சார்யா கொலைக்கும் எந்த சம்பந்தமும் இருக்காது என்பது அக்‌ஷயிற்கு உறுதியாகியது. ஏனென்றால் ஆச்சார்யாவைக் கொலை செய்தவர்களுக்கு ஆனந்தின் தம்பி தான் அக்‌ஷய் என்பது தெரியும். அவனிடம் அந்த உண்மையைச் சொல்லப் போகாமல் அக்‌ஷய் சொன்னான். "நான் ஆனந்தைப் பார்த்தாகி விட்டது"

அவனாக இன்னமும் சேர்த்து சொல்வான் என்று மகேந்திரன் எதிர்பார்த்து அக்‌ஷயையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அக்‌ஷய் ஆனந்திடம் போய் பேசும் வரை இவனுக்கு அதிக தகவல்கள் தர வேண்டாம் என்று நினைத்துப் பேசாமல் இருந்தான்.

மகேந்திரன் சொன்னான். "என்னிடம் என்ன உதவி வேண்டுமானாலும் நீ தயங்காமல் கேட்கலாம். நான் கண்டிப்பாக ஆச்சார்யாவுக்காக செய்வேன். என் விசிட்டிங் கார்டை வைத்துக் கொள். எப்போது வேண்டுமானாலும் கூப்பிடலாம்..."

மகேந்திரனிடம் இருந்து விசிட்டிங் கார்டை வாங்கியபடியே அக்‌ஷய் நன்றி தெரிவித்தான்.

"பதிலுக்கு உன்னிடம் ஒரு உதவியை நான் கேட்கலாமா?" அக்‌ஷயிடம் மகேந்திரன் கேட்டான்.

"என்ன?"

"லேசாகத் தட்டி விட்டே இப்படி அசைய முடியாமல் செய்து, மறுபடி தட்டி விட்டு பழையபடி ஆக்கி விடுகிறாயே. இந்த வர்மக்கலை வித்தையை எனக்கு நீ சொல்லித் தருவாயா?"

அக்ஷய் புன்னகை செய்தான். "இந்த வித்தையைக் கற்றுக் கொள்ள எனக்கு மூன்றரை வருடம் ஆயிற்று. அந்த மூன்றரை வருடமும் நான் அதைத் தவிர வேறு எதையும் செய்யவில்லை"

*************

மகேந்திரன் ரெட்டியைப் பற்றி சொன்னதை எல்லாம் அக்ஷய் தெரிவித்த போது ஆனந்தால் அதை நம்ப முடியவில்லை.

"அக்ஷய், மகேந்திரன் உன்னிடம் இருந்து தப்பிப்பதற்காக சும்மா அவரைப் பற்றி கதையளந்திருக்கிறான் என்றே எனக்குத் தோன்றுகிறது"

அக்ஷய் மறுத்தான். "எனக்கும் ஆரம்பத்தில் எனக்கும் அவன் மேல் சந்தேகம் வந்தது. ஆனால் அவனை நான் கூர்ந்து கவனித்தேன். அவன் பொய் சொல்கிற மாதிரி தோன்றவில்லை"

அக்ஷயை ஏமாற்றுவது அவ்வளவு சுலபமில்லை என்பதால் மகேந்திரன் அவனிடம் பொய் சொல்லி இருக்க வாய்ப்பில்லை என்பதும் ஆனந்திற்கு உறைத்தது. அவன் சொல்வது உண்மையாக இருக்கும் பட்சத்தில்..... நினைக்கவே ஆனந்திற்குத் தலை சுற்றியது.

அக்ஷய் சொன்னான். "நீ எதற்கும் இந்த விஷயத்தை ஜெயின் காதில் போட்டு வைப்பது நல்லது ஆனந்த்"

ஆனந்த் சொன்னான். "என்னாலேயே நம்ப முடியவில்லையே அக்ஷய். அவர் கண்டிப்பாய் நம்ப மாட்டார்"

"ஆனாலும் சொல்ல வேண்டியதைச் சொல்லித் தானே ஆக வேண்டும்."

************

ஜெயின் நேற்றிரவு வந்து ஆனந்த் தன்னிடம் சொன்னதை எல்லாம் ரெட்டியிடம் சொன்ன போது அவர் எல்லாவற்றையும் திகைப்புடன் கேட்பது போலக் கேட்டுக் கொண்டார். கடைசியில் கேட்டார். "சார். அந்த அரசியல்வாதி யார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?"

"தெரியவில்லை"

"யாரோ நம் ஆட்களும் இந்த சதியில் சேர்ந்திருக்கிறார்கள் என்பதில் இப்போது எனக்கு சந்தேகமே இல்லை சார். அந்த சதிகாரன் யாராக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?"

"சரியாகத் தெரியவில்லை. ஆனால் ஆனந்திற்கு மகேந்திரன் மீது சந்தேகம் இருக்கிறது"

சிறிது யோசிப்பது போல் நடித்த ரெட்டி, "எனக்கும் அவன் மேல் சந்தேகமாய்தான் இருக்கிறது சார்" என்று சொன்னார்.

"சார். நாம் ஆனந்திற்கு உதவ ஏதாவது செய்தாக வேண்டும். இதற்கெல்லாம் நானும் ஒரு விதத்தில் காரணம் என்று என் மனசாட்சி உறுத்துகிறது"

"கண்டிப்பாக நாம் உதவ வேண்டும் சார். அப்படி உதவா விட்டால் நாம் மனிதர்களே அல்ல"

ஜெயினுக்கு அவரும் தன்னைப் போலவே நினைத்ததில் திருப்தியாக இருந்தது.

ராஜாராம் ரெட்டி மெல்ல கேட்டார். "ஆனந்த் இந்த வழக்கில் வேறு ஏதாவது கண்டு பிடித்திருக்கிறானா?"

அமானுஷ்யனைப் பற்றிய தகவல்களை எல்லாம் விரிவாகச் சொன்ன ஜெயினிற்கு ஆச்சார்யா வீட்டில் ஆனந்த் கண்டுபிடித்த

டில்லி வரைபடம் உடனடியாக நினைவுக்கு வரவில்லை. அவர் சொன்னார். "வேறு எதுவும் கண்டு பிடிக்கவில்லை சார்"

ரெட்டி திருப்தி அடைந்தார். மெல்ல கேட்டார். "அந்த அக்ஷயிற்கு பழையது எல்லாம் நினைவு வந்து விட்டால் பிரச்னையில்லை. சமீபத்தில் ஏதாவது அவனுக்கு நினைவு வந்ததா என்று விசாரித்தீர்களா?"

"எதுவும் ஆனந்த் சொல்லவில்லை"

"அக்ஷய் கேசவதாஸை பார்த்து பேசி விட்டு வந்த பிறகு ஆனந்த் உங்களுக்குப் போன் செய்யவில்லையா?"

"இல்லை. இன்றைக்கு போன் செய்யலாம்"

ராஜாராம் ரெட்டி ஆழமாக யோசித்தார். அக்ஷய் பழையது எல்லாம் நினைவு வந்ததாய் சொன்னது கேசவதாஸை சந்தித்து வந்த பிறகு பேசிய போது. கேசவதாஸை அவன் சந்தித்த பிறகு என்ன நடந்திருக்கிறது என்று ஜெயினிற்குத் தெரியாது. அவர்கள் போன் செய்து அக்ஷய், ஆனந்திடம் பேசிய விவரம் கூட இன்னும் ஜெயினுக்குத் தெரிவிக்கப்படவில்லை.... அப்படியானால் புதிய நிலவரம் ஜெயினுக்குத் தெரியாது. ஆனால் இதுவரை தெரிந்ததே

அபாயம் தான். இந்த ஆள் ஆனந்திற்கு உதவத் தயாராவது அதை விடப் பெரிய அபாயம்.....

ராஜாராம் ரெட்டி பெருமூச்சு விட்டார். "ஜெயின் சார். எனக்கு இந்த சிபிஐ வேலை, அரசியல்வாதிகள் சதி, அதற்கு நம் ஆட்கள் செய்கிற ஒத்துழைப்பு எல்லாம் பார்த்து சலித்துப் போய் விட்டது. நான் நேற்று பக்கத்து கிராமத்தில் ஒரு சக்தி வாய்ந்த காளி கோயிலில் போய் இந்த நாட்டுக்காகவும், நாட்டில் மீதி இருக்கிற ஒரு சில நல்ல மனிதர்களுக்காகவும் ஒரு விசேஷ பூஜை செய்து விட்டு வந்தேன். நல்லது ஏதாவது நடக்க வேண்டும் என்றால் அந்த கடவுள் பக்கபலமாய் இருந்தால் தான் நடக்கும். உங்களுக்காக பிரசாதம் கொண்டு வந்திருக்கிறேன். நீங்களும் சாப்பிடுங்கள். எல்லாம் நல்ல விதமாய் முடியும் பாருங்கள்"

தான் கொண்டு வந்திருந்த 'அந்த' மருந்தை ராஜாராம் ரெட்டி வெளியே எடுத்தார்.

## 85

ராஜாராம் ரெட்டி பயபக்தியுடன் நீட்டிய அந்த பிரசாதத்தை ஜெயின் பார்த்தார். பார்க்க பஞ்சாமிர்தமாகவும் இல்லாமல், அல்வா போலவும் இல்லாமல் இடைப்பட்ட ஒரு நிலையில் அந்த பிரசாதம்

இருந்தது. வாங்கிய ஜெயின் காளிதேவியை நினைத்து வணங்கியபடி அந்த பிரசாதத்தை எடுத்து வாயில் கண்களை மூடிப் போட்டுக் கொண்டார். சுவை என்னவோ போல் இருப்பதை ஜெயின் உணர்ந்தார்.

அந்த சுவையால் ஜெயின் முகம் ஒரு மாதிரியாகப் போனதைக் கவனித்த ரெட்டி அவர் அதைத் துப்பி விடப் போகிறாரோ என்று பயந்தார். "இந்த பிரசாதம் சில பருப்புகளுடன் மூலிகைகளும் கலந்து தயாரித்ததாம். இதை சாப்பிட்டால் பல நாள்பட்ட வியாதிகளையும் குணமாக்குகிறது என்று கிராமத்து ஆட்கள் சொல்கிறார்கள்"

ஜெயின் தலையாட்டியபடியே அதை விழுங்கினார். ரெட்டி திருப்தியுடன் அவரைப் பார்த்தார். குறுந்தாடிக்காரன் சரியாக ஐந்து நிமிடங்களிலேயே அது தன் வேலையைக் காண்பிக்க ஆரம்பித்து விடும் என்று சொல்லி இருக்கிறான். பார்க்க வேண்டும்........

ஜெயின் சொன்னார். "எனக்கு என்னவோ அந்த அமானுஷ்யனை ஒரு முறை நேரில் பார்க்க வேண்டும் என்று தோன்றுகிறது. அவன் கற்பனையல்ல நிஜம் என்று நேரில் பார்த்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஒரு தோணல்...."

ராஜாராம் ரெட்டியும் மனமார சொன்னார். "அந்த ஆசை எனக்கும்

இருக்கிறது ஜெயின் சார். இத்தனை பேரை ஒரு கலக்கு கலக்கும் அவனைக் கண்டிப்பாக நான் பார்க்கத் தான் போகிறேன்...”

’பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன்’ என்று சொல்வதற்குப் பதிலாக ’பார்க்கத் தான் போகிறேன்’ என்று சொல்கிறார் ரெட்டி என்று ஜெயின் தனக்குள் சொல்லிக் கொண்டார். அவருக்குத் தொண்டையை என்னவோ செய்தது. தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ஆனாலும் தொண்டை சரியாகவில்லை. அந்தப் பிரசாதம் தனக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்று அவருக்குத் தோன்றியது. அவருக்கு லேசாகத் தலை சுற்றுவது போல் இருந்தது. அதை ரெட்டியிடம் அவர் சொல்ல நினைத்தார். ஆனால் வார்த்தைகள் வரவில்லை. கண்கள் சொருக அவர் அப்படியெ சாய்ந்தார்.

ராஜராம் ரெட்டி ஜெயினை மெல்ல அழைத்தார். “ஜெயின் சார் என்ன ஆயிற்று?”

ஜெயினிடம் இருந்து பதில் எதுவும் இல்லை. ரெட்டி நிதானமாக எழுந்து ஜெயின் பக்கத்தில் இருந்த ’அந்த மருந்து’ மடித்த பொட்டலத்தை எடுத்து தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டார். அறையை முழுவதும் நோட்டமிட்டார். ஜெயினின் டேபிள் மேல் டைரி இருந்ததைக் கவனித்தார். அதைப் பிரித்துப்

பார்த்தார். ஜெயின் டைரியின் பக்கங்கள் பெரும்பாலும் காலியாகவே இருந்தன. எழுதியிருந்த சில பக்கங்களில் கூட உறவினர்களின் பிறந்த நாள் தகவல்களும், இன்சூரன்ஸ் பிரிமியம் கட்ட வேண்டிய தகவல்களும் தான் இருந்தன.

அதை அப்படியே அங்கேயே வைத்து விட்டு அறைக்கதவைத் திறந்து வெளியே வருகையில் மட்டும் ஆள் மாறி இருந்தார். "மேடம்... மேடம்..." என்று பதட்டத்துடன் அழைத்தார். ஜெயினின் மனைவி வந்தவுடன், "சார் என்னிடம் பேசப் பேச திடீரென்று மயக்கமாகி அப்படியே சாய்ந்து விட்டார்" என்று கூறியவர் ஜெயினின் மனைவி அறைக்கு கலக்கத்துடன் போவதைப் பார்த்தபடியே ஆம்புலன்ஸிற்குப் போன் செய்தார்.

***************

ஆனந்த் மஹாவீர் ஜெயினிற்கு இரண்டு முறை போன் செய்தும் அவர் போனை எடுக்கவில்லை. மூன்றாவது தடவை அவன் போன் செய்த போது ஜெயினின் மனைவி போனை எடுத்துப் பேசினாள். "ஹலோ"

"மேடம், நான் ஆனந்த் பேசுகிறேன். ஜெயின் சாரிடம் பேச வேண்டுமே"

திருமதி ஜெயினின் குரல் உடைந்திருந்தது. “அவர்... அவர்...ஐசியூவில் இருக்கிறார்...”

ஆனந்த் அதிர்ச்சி அடைந்தான். “என்ன ஆயிற்று அவருக்கு?”

“அவர் காலையில் ரெட்டி சாருடன் பேசிக்கொண்டிருந்தார். பேசப் பேச அப்படியே மயக்கமாகி விட்டார். கோமாவில் இருக்கிறது போல இருக்கிறார்.... நல்லவேளை ரெட்டி சார் இருந்ததால் அவர் உடனடியாக ஆம்புலன்ஸிற்கு போன் செய்து ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டோம்.... இப்போதும் ரெட்டி சாரும் என் கூட தான் இருக்கிறார்...”

ஆனந்தின் அதிர்ச்சி இருமடங்காகியது.

“ஒரு நிமிஷம் இருங்கள். ரெட்டி சார் பேசுகிறார்” என்றாள் திருமதி ஜெயின்.

செல் போன் கை மாறியது. “ஹலோ ஆனந்த் நான் ரெட்டி பேசுகிறேன்”

ஆனந்த் தன்னை சுதாரித்துக் கொண்டான். அக்‌ஷய் அந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தான். "ஒன்றுமே

தெரியாதவன் போல பேசி அவனிடம் ஏதாவது தகவல் கறக்க முடிகிறதா என்று பார்" என்று சைகையுடன் வாய் அசைத்துச் சொன்னான்.

ஆனந்த் தலையசைத்தான். "சார் திடீரென்று ஜெயின் சாரிற்கு என்ன ஆயிற்று?"

"தெரியவில்லை ஆனந்த். என்னிடம் உன்னைப் பற்றியும், உன் தம்பியைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தார். உங்களுக்கு வந்திருக்கிற ஆபத்தைப் பற்றி சொன்னவர் எப்படியாவது உங்களுக்கு உதவ வேண்டும் என்று எல்லாம் உணர்ச்சி வசப்பட்டுப் பேசிக் கொண்டிருந்தார். பேசப் பேச அப்படியே சாய்ந்து விட்டார்"

"டாக்டர்கள் என்ன சொல்கிறார்கள் சார்?"

"இன்னும் எந்தப் பெரிய டாக்டரும் பேசக் கிடைக்கவில்லை. ஐசியூவிற்கு வெளியில் தான் நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம் ஆனந்த்... நீ இப்போது எங்கே இருக்கிறாய்?"

அவர் கேள்வி அவன் காதில் அபாயச் சங்கு ஊதியது. அவர் கேட்டது எங்கே தங்கி இருக்கிறாய் என்ற அர்த்தத்தில் என்றாலும் அது புரியாதவன் போல் ஆனந்த் சொன்னான். "வெளியில் இருந்து

தான் பேசுகிறேன் சார்....”

“உன்னை நான் நேரில் பார்த்து நிறைய பேச வேண்டும் ஆனந்த். ஜெயின் சாருக்கு இப்படி ஆகி விட்டாலும் அவர் நினைத்த உதவிகளை நான் கண்டிப்பாக என்னால் முடிந்த வரையில் செய்வேன். வரும் போது உன் தம்பியையும் அழைத்துக் கொண்டு வா. அது ரகசியமாய் இருக்கும்படி நான் பார்த்துக் கொள்கிறேன். நாம் சேர்ந்து பேசி முடிவெடுப்போம்”

ஆனந்த் அக்‌ஷயைப் பார்த்துக் கொண்டே சொன்னான். “உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை சார்..... ஆனால் உங்களுக்கு ஏன் வீண் சிரமம் சார்?”

“இதில் சிரமம் எல்லாம் ஒன்றுமில்லை ஆனந்த். இதைக் கூட என்னால் செய்ய முடியவில்லை என்றால் நான் இன்னும் சிபிஐயில் இருந்து என்ன பயன் சொல் பார்க்கலாம்”

“ஆனால் நாங்கள் மோதுகிற இடம் பெரிய இடம் போல் தெரிகிறது. தேவையில்லாமல் உங்களை இதில் இழுத்து கஷ்டப்படுத்த மனம் வரவில்லை.... முதலிலேயே உங்களுக்கு ஒரு கசப்பான அனுபவம் இருக்கிறது”

“அது பரவாயில்லை. அதற்கு ஒரு பதிலடி தரத்தான் இப்போது நான் உதவ முன் வந்திருக்கிறேன் என்று வைத்துக் கொள்ளேன்”

“நன்றி சார். என் தம்பி இப்போது வெளியே போயிருக்கிறான் சார். அவன் வந்த பிறகு அவனிடம் கலந்தாலோசித்து உங்களிடம் பேசுகிறேன்”

“சரி ஆனந்த்.. ஆனால் சீக்கிரமே பேசு. நாம் இனியும் காலம் தாழ்த்துவது சரியல்ல”

ஆனந்த் மறுபடி நன்றி சொல்லி இணைப்பைத் துண்டித்து விட்டு தம்பியிடம் சொன்னான். “அக்‌ஷய். ஜெயின் சார் திடகாத்திரமாய் இருந்தவர். அனாவசியமாய் டென்‌ஷன் எடுத்துக் கொள்ளும் பேர்வழியும் அல்ல. தினமும் யோகா செய்பவர். அவர் இப்படி கோமாவில் போகக் காரணம் ஏதோ ஒரு விதத்தில் இந்த ரெட்டி தான் என்று எனக்கும் சந்தேகம் வருகிறது அக்‌ஷய். அதுவும் அவர் நம் இரண்டு பேரையும் நேரில் வரச் சொன்ன விதம், அவர் சொன்ன விதத்தில் இருந்த அவசரம் என் சந்தேகத்தை அதிகப்படுத்துகிறது.. ஆனால் இப்போதும் கூட அவர் மாதிரி ஒரு ஆள் நேர்மாறாக மாறுவார் என்பதை ஜீரணிக்கவும் என் மனதின் ஒரு பகுதிக்கு கஷ்டமாகத் தான் இருக்கிறது…”

அக்‌ஷய் சொன்னான். “நல்லவன் நல்லவனாகவே கடைசி வரை இருந்து விட வேண்டும் என்று எதிர்பார்ப்பதும், கெட்டவன் கடைசி வரை கெட்டவனாகவே இருந்து விடுவான் என்று சந்தேகப்படுவதும் முட்டாள்தனம்”

தம்பியின் வார்த்தைகளில் இருந்த யதார்த்த உண்மையை அங்கீகரித்தவனாகி தலையசைத்த ஆனந்த் கேட்டான். “எனக்குத் தெரிந்தவரை ஒரு கணத்தில் ஒரு மனிதனைக் கோமா நிலைக்குக் கொண்டு போக முடிந்த ஒரே ஆள் நீ தான். இந்த ரெட்டியும் அப்படித்தான் செய்து ஜெயினை கோமா நிலைக்கு அனுப்பி இருப்பாரா?”

“அந்த ஆள் எல்லாம் அதைக் கற்றுக் கொண்டிருக்க வாய்ப்பே இல்லை....” என்று சொல்லச் சொல்ல அக்‌ஷயின் தலைக்குள்ளே ஏதோ பொறி தட்டியது. யாரோ எங்கேயோ சொன்ன வாசகங்கள் தெளிவாகக் கேட்டன. “...இந்த மருந்தை நம் இயக்கத்தைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானி நான்கு வருட பரிசோதனைக்குப் பிறகு வெற்றிகரமாக கண்டுபிடித்து இருக்கிறார். இது சாப்பிட்ட ஐந்து நிமிடங்களிலேயே ஒருவனை கோமாவுக்கு கொண்டு போய் விட்டு விடும். இதில் ஒரு பெரிய விசேஷம் என்னவென்றால் அரை மணி நேரம் கழித்து உடலை எந்த பரிசோதனை செய்தாலும் இந்த மருந்தின் தடயமே உடலில் இருக்காது..... சாப்பிட்ட ஆள்

வருடக்கணக்கில் கோமாவில் இருப்பானே ஒழிய அவன் குணமாவது முடியாது.... ”

அந்த வாசகங்களைத் தொடர்ந்து பல கைதட்டல்கள் கேட்டன.

அக்‌ஷய் கண்களை மூடிக் கொண்டு அசையாமல் நின்றான். தம்பி திடீரென்று வேறு உலகிற்கே போய் விட்டது போலத் தோன்றவே ஆனந்த் திகைப்போடு அவனைப் பார்த்தான்.

86

தம்பியின் அந்த திடீர் மாற்றம் ஆனந்தை பயமுறுத்தியது. மறுபடியும் நினைவுகள் எல்லாம் போய் விட்டனவோ என்று எண்ணியவனாக அக்‌ஷயைத் தொட்டு லேசாக உலுக்கியபடி கேட்டான். “அக்‌ஷய்.. அக்‌ஷய்... என்ன ஆயிற்று?”

அக்‌ஷய் கனவில் இருந்து விழித்தவன் போல விழித்தான். அவனுக்கு சுயநினைவுக்கு வர சில வினாடிகள் தேவைப்பட்டன.

ஆனந்த் கவலையுடன் கேட்டான். “அக்‌ஷய் என்ன ஆயிற்று?”

அக்‌ஷய் தன் காதில் ஒலித்த அந்த வாசகங்களையும், அதற்குப் பின்

கேட்ட கைதட்டல்களையும் பற்றி சொன்னான்.

ஆனந்த ஆர்வத்துடன் கேட்டான். “அப்புறம் என்ன ஆயிற்று?”

அக்ஷய் சொன்னான். “அதற்குள் தான் நீ கூப்பிட்டு விட்டாயே!”

ஆனந்த் குற்ற உணர்வோடு சொன்னான். “நான் உனக்கு மறுபடி நினைவு போய் விட்டதோ என்று நினைத்தேன். இப்படி ஏதோ பழைய நினைவு வந்திருக்கிறது என்று தெரிந்திருந்தால் நான் உன்னைக் கூப்பிட்டு இருக்க மாட்டேன்.”

“பரவாயில்லை விடு. மறுபடியும் எப்போதாவது நான் அப்படி மாறினால் நானாய் பழையபடி மாறுகிற வரை கூப்பிடாதே”

ஆனந்த் தலையசைத்தான். ”உனக்கு ஞாபகம் வந்ததை யோசித்துப் பார்க்கிற போது அந்த ரெட்டி தான் வேறு ஏதாவது மருந்து என்று சொல்லி ஜெயினிற்குக் கொடுத்திருக்கலாம் என்றும் தோன்றுகிறது.”

“இருக்கலாம்”

“நீ கோமாவுக்கு மாற்றிய ஆட்களைக் குணப்படுத்திய மாதிரி

ஜெயினையும் குணப்படுத்த முடியுமா?"

"அவரைப் பார்த்தால் தான் எதுவும் சொல்ல முடியும்"

"அவர்கள் கண்டிப்பாக உன்னை அவர் பக்கத்தில் விட மாட்டார்கள்"

அக்ஷய் புன்னகைத்தான். "போக வேண்டும் என்று முடிவு செய்தால் எப்படியும் போய் விடலாம். அது ஒரு பிரச்னை அல்ல. பிரச்னை என்ன என்றால் அந்த மருந்து பற்றிய தகவல்கள் நமக்கு எதுவும் தெரியாதது தான். அந்த மருந்து பற்றிய தகவல் முழுவதும் தெரிந்தால் தான் எதையும் நிச்சயமாய் சொல்ல முடியும்"

ஆனந்த் முகத்தில் சோகம் படர்ந்தது. "ஜெயின் நல்ல மனிதர். அவருக்கு இப்படி ஆகாமல் இருந்திருந்தால் கண்டிப்பாக நமக்கு முடிகிற விதத்தில் எல்லாம் பக்கபலமாக இருந்திருப்பார்."

**************

ராஜாராம் ரெட்டி ஜெயினை கோமாவுக்கு வெற்றிகரமாகக் கொண்டு போனதை மந்திரிக்குப் போன் செய்து தெரிவித்த போது

மந்திரி மிக மகிழ்ச்சி அடைந்தார்.

“நல்ல செய்தி. இதே மாதிரி அந்த சைத்தான் செத்து விட்டான் என்ற செய்தியும் என் காதில் விழுந்தால் எல்லா பிரச்னையும் தீர்ந்து விடும்.... சரி அந்த ஜெயின் எதற்காக உங்களைக் கூப்பிட்டார்?”

”எல்லாம் அந்த சைத்தான் விவகாரம் பற்றி சொல்லத்தான்”

”என்ன?”

தன்னை ஜெயின் அழைத்து ஆனந்த் வந்து சொன்னதை எல்லாம் சொன்ன விவரத்தை அப்படியே ரெட்டி மந்திரிக்கு ஒப்பித்தார்.

“உங்களைத் தவிர ஜெயின் வேறு யாரிடமும் இதைச் சொல்லி இருக்க மாட்டாரே”

“சொல்லவில்லை. பயப்படாதீர்கள். இன்னொரு விஷயம். நான் ஆனந்திடம் பேசினேன்....” என்ற ரெட்டி ஆனந்த்இடம் போனில் பேசியதையும் தெரிவித்தார்.

“பிரமாதம். அந்த ஆனந்திற்கு உங்களைப் பற்றி தெரியாதது நல்லதாய் போயிற்று. நீங்கள் கூப்பிட்டபடி அவன் தன் தம்பியை

அழைத்து வருவானா?"

"தெரியவில்லை. அவன் தம்பியிடம் கலந்தாலோசித்து சொல்கிறேன் என்று மட்டும் சொன்னான்"

"நாம் அதையே நம்பி இருக்க முடியாது. நம் முதல் திட்டப்படியே அந்த சைத்தானை நம்மிடம் வரவழைப்பது தான் நல்லது. முதலில் அவன் கேட்டுக் கொண்டபடி அந்த கிழவியிடம் அவனை பேச விடுங்கள்"

"அதற்கு ஏற்பாடு செய்து விட்டேன்"

"அந்த சைத்தான் அந்த இடங்களை சரியாகச் சொன்னதை நான் அவர்களிடம் இன்னும் சொல்லவில்லை. இவ்வளவு தூரம் வந்து விட்ட பிறகு, அவர்கள் முழு வேலையை செய்து தயாராகி விட்ட பிறகு, அந்த இடங்கள் பற்றிய விவரம் அவனுக்கு நினைவில் இருக்கிறது என்று தெரிந்தால் அவர்கள் என்னை ஒரு நிமிடமும் என் வேலையைச் செய்ய விட மாட்டார்கள். முதலிலேயே அவர்களுக்கு அவன் என்றால் ஒரு தனி பயம் இருக்கிறது..."

"நீங்கள் பயப்படாதீர்கள். இப்போது அவனுடைய அம்மா நம்மிடம் இருக்கிற வரைக்கும் நமக்கு எதிராக அவன் எதுவும் செய்து விட

முடியாது.... அப்புறம் இன்னொரு விஷயம்- ஜெயின் கோமாவில் போய் விட்டதால் சிபிஐயில் தலைமைப் பதவிக்கு ஆள் இல்லை. அவர் சீக்கிரம் குணமாக வாய்ப்பில்லை என்பதால் யாரையாவது தற்காலிகமாவது அந்தப் பதவிக்கு நியமிக்க வேண்டும். இப்போது இருப்பவர்களில் நான் தான் மூத்த அதிகாரி...."

"அப்படியானால் உடனடியாக உங்களை அந்த பதவிக்கு நியமிக்க ஏற்பாடு செய்கிறேன். அந்த ஆனந்தை உங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கும் அது நல்லது..."

பேசி முடித்த பின் ராஜாராம் ரெட்டி புன்னகைத்தார். 'எல்லாம் நினைத்தபடியே போய்க் கொண்டிருக்கிறது.'

************

ஆனந்தின் செல்போன் பாடி அழைத்தது.

"ஹலோ"

"ஆனந்த், நான் எக்ஸ் பேசுகிறேன்"

"சொல்லுங்கள்"

“உங்கள் தம்பியிடம் போனைத் தருகிறீர்களா?”

ஆனந்த் அக்ஷயிடம் போனைக் கொடுத்தான்.

அக்ஷய் பேசினான். “ஹலோ”

“அக்ஷய், உங்கள் அம்மாவிடம் போனைத் தருகிறேன். பேசுங்கள்...”

அடுத்ததாக அம்மா பரபரப்புடன் பேசினாள். “அக்ஷய், எப்படி இருக்கிறாய்?”

“நான் சௌக்கியமாய் இருக்கிறேன். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?”

“எனக்கு இங்கே எந்தப் பிரச்னையும் இல்லை. எல்லா வசதிகளும் இருக்கிறது. பேச்சுத் துணைக்கு வருண் இருக்கிறான். சமையல் அறையில் எல்லாமே வைத்திருக்கிறார்கள். கடத்தல்காரர்களானாலும் மற்ற விதத்தில் நல்ல ஆள்கள். எந்தத் தொந்திரவும் செய்வதில்லை. பெரும்பாலும் ஆள்கள் கண்ணிலேயே பட மாட்டேன்கிறார்கள்...”

‘கடத்தல்காரர்கள் ஆனாலும் நல்லவர்கள்’ என்று அம்மா சொன்னது அக்ஷயைப் புன்னகைக்க வைத்தது.

“வருண் எப்படி இருக்கிறான்?”

“அவனும் சௌக்கியம். எப்பவுமே உன்னைப் பற்றித்தான் பேசிக் கொண்டு இருக்கிறான். டாக்டர் என்ன சொன்னார்?”

அக்ஷயிற்கு ஒரு கணம் புரியவில்லை. பின் சுதாரித்துக் கொண்டு சொன்னான். “கண்டிப்பாய் முழுவதுமாய் குணமாய் விடும் என்று சொல்லி விட்டார். இப்போது எனக்கு கொஞ்சம் கொஞ்சம் நினைவு வர ஆரம்பித்து விட்டது...”

“அது போதும் எனக்கு.....” அம்மா சொல்லச் சொல்ல எக்ஸ் ‘அம்மா பேசியது போதும் போனைக் கொடுங்கள்’ என்று இடைமறிப்பது கேட்டது. அம்மா ‘ஒரு நிமிஷம். என் மூத்த மகனிடமும் ஒரு நிமிஷம் பேசி விடுகிறேன்’ என்று சொல்லி அக்ஷயிடம் சொன்னாள். “கொஞ்சம் ஆனந்த் கிட்டே போனைக் கொடு அக்ஷய்”

அக்ஷய் போனை ஆனந்திடம் கொடுத்தான். சாரதா ஆனந்திடம் அவசரமாய் சொன்னாள். “ஆனந்த், அவனை ஜாக்கிரதையாய்

பார்த்துக் கொள். எனக்காக இவர்களிடம் அவனை அனுப்பி விடாதே. நான் எல்லாவற்றையும் வாழ்ந்து முடித்தவள். அவனும் நீயும் நல்லபடியாக இருந்தால் எனக்கு இனி இந்த உயிர் உட்பட எதுவும் வேண்டாம். இந்தப் பையன் வருணை மட்டும் காப்பாற்றி விடுங்கள். என்னைப் பற்றி கவலைப்படாதீர்கள்........"

அவள் சொன்னதைக் கேட்டு அவளுடைய பிள்ளைகள் இருவர் கண்களும் கலங்கின. எக்ஸ் பேச்சு அபாயகரமாகத் திரும்புகிறது என்பதை உணர்ந்து சாரதா கையில் இருந்த செல் போனைப் பிடுங்கினார். "ஆனந்த் இப்போது உங்கள் தாயும், அந்தப் பையனும் சௌக்கியமாய் இருக்கிறார்கள் என்பது உங்களுக்கும் உங்கள் தம்பிக்கும் புரிந்திருக்கும். இனியும் அவர்கள் சௌக்கியமாக இருப்பது உங்கள் கையில் தான் இருக்கிறது. இனி அக்ஷய் எங்கே எப்படி எப்போது வர வேண்டும் என்பதைச் சொல்லட்டுமா?"

87

ஆனந்த் சொன்னான். "சொல்லுங்கள்"

"நான் சொல்கிற இடத்தைக் குறித்துக் கொள்ளுங்கள்" என்று சொன்ன மிஸ்டர் எக்ஸ் டெல்லியிலிருந்து ஆக்ரா செல்லும் நெடுஞ்சாலையில் சுமார் எட்டு கிலோமீட்டர் தூரத்தில் இருந்து

பிரியும் ஒரு சாலையைக் குறிப்பிட்டு அதில் சுமார் ஏழு கிலோமீட்டர் பயணம் செய்தவுடன் ஒரு புதிய வணிக வளாகம் பாதி கட்டப்பட்ட நிலையில் இருக்கும் என்று சொல்லி அதை மேலும் சிறிது விவரித்தார்.

பின் தொடர்ந்தார். “.... அங்கு வேறெந்த பெரிய கட்டிடமும் கிடையாது. அதனால் அதைக் கண்டுபிடிக்க உங்களுக்கு சிரமம் எதுவும் கிடையாது. நாளை காலை சரியாக நான்கு மணிக்கு நீங்களும், அக்‌ஷயும் ஒரு வாடகைக் காரில் வந்து சேருங்கள். அங்கு நீங்கள் இறங்கிக் கொண்டு அந்தக் காரைத் திரும்ப அனுப்பி விடுங்கள். பின் சரியாக பத்து நிமிடங்கள் பொறுத்திருங்கள். அங்கே நாங்கள் உங்கள் அம்மாவையும், அந்தப் பையனையும் கூட்டிக் கொண்டு வருகிறோம். அப்புறம் என்ன செய்ய வேண்டும் என்பதை நான் உங்கள் செல் போனிற்கு கூப்பிட்டு சொல்கிறேன்.”

ஆனந்த் கேட்டான். “நாங்கள் எப்படி உங்களை நம்பி அங்கே வந்து தனியாக நிற்பது? ஒரு வேளை நீங்கள் அம்மாவையும், அந்தப் பையனையும் அங்கே கூட்டிக் கொண்டு வராமல் ஏமாற்றினால்? எங்களுக்கு என்ன பாதுகாப்பு?”

“தம்பி உடையான் படைக்கஞ்சான் என்று ஒரு பழமொழி உண்டு. அது யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ உங்களுக்கு

நிச்சயம் பொருந்தும் ஆனந்த். அக்‌ஷய் இருக்கையில் நீங்கள் பாதுகாப்பு பற்றி கவலைப்படுவது அர்த்தமில்லாதது. எங்களுக்கு உங்கள் அம்மாவிடமும், அந்தப் பையனிடமும் எந்த விரோதமும் இல்லை. உண்மையில் சொல்லப்போனால் எங்களுக்கு அவர்கள் தேவையில்லாத தலைவலி தான். எவ்வளவு சீக்கிரம் அவர்களை விட்டு விடுகிறோமா அவ்வளவு நல்லது என்றே நாங்கள் நினைக்கிறோம். அதனால் கண்டிப்பாக அவர்களைக் கூட்டிக் கொண்டு வருவோமா என்று நீங்கள் சந்தேகப்படத் தேவையில்லை. நீங்கள் வேறு யாரிடமாவது சொல்லி, அந்த டாக்சிக்காரனோ, உங்களுடைய வேறு ஏதாவது ஆட்களோ அங்கே பின் தொடர்ந்து வந்தாலோ, அங்கே எங்களுக்கு இடைஞ்சலாக இருந்தாலோ மட்டும் தான் நாங்கள் பேச்சு மாறுவோம்.....”

ஆனந்த் தம்பியைப் பார்த்தான். அக்‌ஷய் ‘சரி என்று சொல்’ என்று தலையசைத்தான். ஆனால் ஆனந்திற்கு தொண்டையை அடைத்தது. எதுவும் சொல்ல வார்த்தைகள் வராமல் தடுமாறினான்.

மிஸ்டர் எக்ஸ் அவன் மனநிலையைப் புரிந்து கொண்டது போல மிகவும் கனிவாகப் பேசினார். ”ஆனந்த், அங்கே உங்கள் அம்மாவையும் அந்தப் பையனையும் உங்களிடம் ஒப்படைத்து விட்டு உங்கள் தம்பியைக் கூட்டிக் கொண்டு போகிறோம் . அவரிடம் நாங்கள் பேச வேண்டியது, தெரிந்து கொள்ள வேண்டியது

நிறைய இருக்கிறது. அவர் ஒத்துழைத்தால் அவரை மூன்றே மூன்று நாட்கள் வைத்திருந்து பின் கண்டிப்பாக அனுப்பி விடுகிறோம். அதற்குப் பிறகு அவரால் எங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை. பிறகு எங்களால் உங்கள் யாருக்கும் எந்தத் தொந்தரவும் இருக்காது. ஒரு விதத்தில் நாங்கள் வியாபாரிகள். எங்களுக்கு லாபம் வர வேண்டும் என்று யோசிப்போமே தவிர மற்றவர்களுக்குப் பிரச்சனை ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்க மாட்டோம்."

ஆனந்திற்கு அம்மாவின் வார்த்தைகள் மீண்டும் காதில் ஒலித்தன. "ஆனந்த், அவனை ஜாக்கிரதையாய் பார்த்துக் கொள். எனக்காக இவர்களிடம் அவனை அனுப்பி விடாதே. நான் எல்லாவற்றையும் வாழ்ந்து முடித்தவள். அவனும் நீயும் நல்லபடியாக இருந்தால் எனக்கு இனி இந்த உயிர் உட்பட எதுவும் வேண்டாம்...."

ஆனந்தின் தயக்கம் அக்‌ஷயிற்கு எரிச்சலைத் தந்தது. அவன் ஆனந்திடம் இருந்து செல் போனை எடுத்து சொன்னான். "சரி. வேறெதாவது சொல்ல வேண்டுமா?"

அக்‌ஷயின் குரல் கேட்டதுமே மிஸ்டர் எக்ஸ் லேசாகத் தயங்கி விட்டு சொன்னார். "வேறெதுவும் இல்லை அக்‌ஷய். உங்கள் இரண்டு பேரிடமும் துப்பாக்கி, கத்தி எதுவும் இருக்கக் கூடாது. முதலிலேயே சொன்னது போல வேறெந்த ஆட்களும் உங்கள்

பின்னாலோ, முதலிலேயே அந்த பகுதிக்கு வந்தோ இருக்கக் கூடாது. அப்படி ஒரு ஆளைப் பார்த்தாலும் உங்கள் அம்மா அல்லது அந்தப் பையன் இரண்டு பேரில் ஒருவருக்கு உடம்பில் ஒரு உறுப்பு போய் விடும். அப்படி முட்டாள்தனமாக நீங்கள் எதுவும் செய்யாத வரை எங்களைப் போல கண்ணியமான ஆட்களை நீங்கள் பார்க்க முடியாது. உங்கள் அம்மாவே உங்களிடம் அதைச் சொன்னார்கள் பார்த்தீர்களா?"

அக்‌ஷய் சொன்னான். "நாங்களாக அந்த மாதிரி முட்டாள்தனம் எதுவும் செய்ய மாட்டோம். அம்மாவும், வருணும் ஆனந்திடம் பிரச்சனை இல்லாமல் ஒப்படைக்கப்பட்டால் போதும். அப்படியில்லாமல் நீங்களாக ஏதாவது முட்டாள்தனம் செய்தால் அதன் விளைவை நீங்கள் அனுபவித்தே ஆக வேண்டும். அதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்."

அக்‌ஷயின் அந்த வார்த்தைகள் மிஸ்டர் எக்ஸை கோபம் கொள்ள வைத்தது போலத் தோன்றியது. ஆனாலும் அவர் அதை அடக்கிக் கொண்டு சொன்னார். "நாங்கள் கடத்தல்காரர்கள் அல்ல. உங்களைக் கண்டு பிடிக்க முடியாமல் வேறு வழியில்லாமல் அவர்களைக் கடத்தினோமே ஒழிய அவர்களுடன் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. நீங்கள் எங்களுடன் வந்தால் கண்டிப்பாக சரியாக காலை மணி நான்கு பதினொன்றுக்கு அவர்கள் இருவரும்

உங்கள் அண்ணனிடம் ஒப்படைக்கப்படுவார்கள்.”

போன் இணைப்பு துண்டிக்கப்பட்டது. செல் போனைத் திரும்பவும் ஆனந்திடம் அக்‌ஷய் தந்தான். ஆனந்தின் முகத்தில் தாள முடியாத துக்கம் தெரிந்ததைப் பார்த்த போது அவனுக்கு மனம் நெகிழ்ந்தது. அவனருகில் அமர்ந்து அவன் தோளில் கையைப் போட்டுக் கொண்டு அவன் மீது சாய்ந்தபடியே சொன்னான். “நீ இப்படி சோகமாய் இருந்தால் எனக்கு கஷ்டமாக இருக்கிறது”

ஆனந்தின் கண்களில் நீர் கோர்த்தது. ஏதாவது சொல்ல நினைத்தான். ஆனால் அவனுக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை.

அக்‌ஷய் மெல்ல சொன்னான். “ஆனந்த், நீ ஒரு உண்மையைப் புரிந்து கொள்வது முக்கியம். கடவுள் எனக்கு குறித்த நேரத்திலிருந்து ஒரு வினாடி முன்பும் என்னை யாரும் கொல்ல முடியாது. ஒரு வினாடி பின்பும் என்னைக் காப்பாற்ற முடியாது. அப்படி இருக்கையில் நீ ஏன் பயப்படுகிறாய்? அவர்கள் என்ன கடவுளை விடவா சக்தி வாய்ந்தவர்கள்? நான் அங்கே போகிறேன் என்பதாலேயே அவர்கள் என்னை என்ன வேண்டுமானாலும் செய்து விட முடியாது ஆனந்த். அவர்களுக்கு என்னிடம் இருந்து சில சந்தேகங்களை தீர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. அது முடியும் வரை என்னை ஒன்றும் செய்து விட

முடியாது. எனக்கு கிடைக்கும் ஒவ்வொரு வினாடியையும் எப்படி உபயோகப்படுத்துவது என்று எனக்குத் தெரியும். நீ கவலைப்படாதே."

ஆனந்திற்கு கண்களில் கோர்த்திருந்த நீர் மடை திறந்த வெள்ளம் போல் வழிய ஆரம்பித்தது. குரல் தழுதழுக்கச் சொன்னான். "என் மூளைக்குப் புரிகிறது. ஆனால் என் மனதிற்குப் புரிய மாட்டேன் என்கிறது. அக்ஷய் நீ பத்திரமாய் திரும்பி வரும் வரை நான் அம்மாவை என்ன சொல்லி சமாதானப்படுத்துவேன்?

...அவர்கள் எல்லாம் சாதாரணமானவர்கள் இல்லை. பதவி, அதிகாரம், பணம் என்று எல்லா பலமும் அவர்களிடம் இருக்கிறது. நீ தனி ஒருவன் என்ன செய்வாய்?"

"உண்மையான எதிரி அவர்கள் அல்ல ஆனந்த். பயம் தான் உண்மையான எதிரி. நான் தனி ஒருவன் என்று எப்படி சொல்கிறாய்? என்னுடன் நம் அம்மாவின் பிரார்த்தனை இருக்கிறது. வருடக்கணக்கில் அம்மா எனக்காக செய்த பிரார்த்தனைகள் என்னை மும்பையில் காப்பாற்றி இருக்கிறது, இமயமலையில் காப்பாற்றி இருக்கிறது, இனியும் காப்பாற்றும். கவலைப்படாதே. தைரியமாயிரு. இனி என்னவெல்லாம் செய்யலாம் என்று யோசி"

அக்‌ஷயின் வார்த்தைகள் மேலோட்டமாய் வந்ததில்லை என்பதை ஆனந்தால் உணர முடிந்தது. முழு நம்பிக்கையோடும் அசைக்க முடியாத தைரியத்தோடும் அவன் பேசினான். ஒரு கணம் நம்பிக்கை வந்தது. இன்னொரு கணம் ஹரித்வாரில் அந்த சாதுவிற்கு ஞானதிருஷ்டியில் தெரிந்த அந்த காட்சி நினைவுக்கு வந்து பாடாய் படுத்தியது. ஆனால் அக்‌ஷய் சொன்னது போல கவலைப்பட்டு ஒன்றும் ஆகி விடப் போவதில்லை என்று எண்ணியவன் பலவந்தமாக எல்லா பயங்களையும் ஒதுக்கி விட்டு தம்பியிடம் பல நாட்களாய் தன் மனதில் இருந்த சந்தேகத்தை தீர்த்துக் கொள்ள கேட்டான். “உன்னை அவர்கள் அமானுஷ்யன் என்கிறார்கள். நீ ஒரு படைக்கு சமம் என்று அந்த எக்ஸ் சொல்கிறான். உன்னால் என்னவெல்லாமோ முடிகிறது. அப்படி இருக்கையில் உனக்கு ஏன் பழைய நினைவுகளை மட்டும் திரும்பக் கொண்டு வர முடியவில்லை?...”

அக்‌ஷய் அமைதியாகச் சொன்னான். “ஒரு விஷயத்தில் நூறு சதவீதம் முழுமையாய் இருக்கும் போது எதுவும் முடியும். என்ன தேவை என்றாலும் ஆழ்மனம் எல்லாவற்றையும் தெரியப்படுத்தும். ஆனால் கொஞ்சம் அமைதி இழந்தாலும், அளவுக்கு அதிகமான எதிர்பார்ப்பு புகுந்து விட்டாலும் மனம் என்கிற குட்டை குழம்பி விடும். குழம்பிய குட்டையில் அடியில் என்ன இருக்கிறது

என்பதைப் பார்க்க முடியாது அல்லவா? அதே போல் தான் எனக்கும் ஆகிறது என்று தோன்றுகிறது”

ஆனந்த் மனத்தாங்கலோடு சொன்னான். “ஆனால் இப்போது நினைவுக்கு வராதது இனி வந்து உனக்கு என்ன நல்லது செய்யப் போகிறது. அக்‌ஷய், நீ தயவு செய்து ஏதாவது முயற்சி செய். அவர்களிடம் போவதற்கு முன் நமக்கு ஏதாவது அதிகம் தெரிந்தால் அது உபயோகமாக இருக்கும். சிறிது நேரத்திற்கு முன்னால் கூட உனக்கு அந்த கோமாவை உருவாக்குகிற மருந்து பற்றி நினைவு வந்ததல்லவா? நமக்கு நாளை அதிகாலை வரை நேரமிருக்கிறது. அது வரை நீ முயற்சி செய் அக்‌ஷய்”

அக்‌ஷய் அண்ணனை அப்படியே இறுக்கி அணைத்துக் கொண்டான். ஆனால் சிறிது நேரம் ஒன்றும் சொல்லவில்லை. பிறகு சொன்னான். “சரி ஆனந்த். நான் ஆழ்நிலை தியானம் செய்து பார்க்கிறேன். நான் தியானத்தில் இருக்கும் போது எந்தக் காரணம் கொண்டு என்னைத் தொடாதே. மற்றபடி நீ என்ன சத்தம் செய்தாலும் என் தியானம் பாதிக்காது. நீ சுமார் ஒன்றரை மணி நேரம் கழித்து என் தியானத்தைக் கலைக்க ‘அக்‌ஷய்’ என்று என் பெயரைச் சொல்லி மட்டும் கூப்பிடு. அந்த ஒரு சொல் தான் என் தியானத்தைக் கலைக்கும். நான் சொன்னது நினைவு இருக்கட்டும். என்னைத் தொட்டு விடாதே....”

அக்‌ஷய் அண்ணனைப் பார்த்து புன்னகை செய்து விட்டு அறையின் மூலைக்குச் சென்று பத்மாசனத்தில் அமர்ந்தான். சில நிமிடங்களில் சிலை போல ஆனான். நேரம் ஆமை வேகத்தில் நகர்ந்தது. அக்‌ஷய் உட்கார்ந்த நிலையில் சிறிய மாற்றம் கூட இல்லை. அவன் வேறு ஒரு உலகத்தில் இருப்பது போல ஆனந்த் உணர்ந்தான். அவனைப் பார்க்கப் பார்க்க, அவனைப் பற்றி நினைக்க நினைக்க ‘அமானுஷ்யன்’ என்ற அந்த பட்டம் அவனுக்கு எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது என்று தோன்றியது. எத்தனை பேரால் இப்படி உட்கார்ந்து தியானம் செய்ய முடியும்?

சில நிமிடங்களில் ஆனந்தின் மனம் நாளைய நிகழ்ச்சிகளுக்குத் தாவியது. மனதைப் பயம் மறுபடி கவ்வியது. அவன் மனதார கடவுளைப் பிரார்த்தித்தான். “கடவுளே, என் அம்மாவுக்காகவாவது நீ அவனைக் காப்பாற்றியே ஆக வேண்டும். அவனுக்கு நீ தான் பக்க பலமாக இருக்க வேண்டும்....”

## 88

ஆனந்தின் செல்போன் இசைத்தது. ஒரு கணம் தம்பியின் தியானம் பாதிக்கப்பட்டு விடுவோமோ என்று ஆனந்த் பயந்தான். ஆனால் அதற்கு அவசியமே இருக்கவில்லை. அக்‌ஷயை அந்த

சத்தம் சிறிதும் பாதிக்கவில்லை. அவன் அப்படியே அசைவற்ற நிலையிலேயே இருந்தான். ஆனந்த் அவசரமாக செல்போனை எடுத்துப் பேசினான். "ஹலோ"

ராஜாராம் ரெட்டியின் குரல் கேட்டது. "ஹலோ ஆனந்த், நான் ராஜாராம் பேசுகிறேன்"

"சொல்லுங்கள் சார்"

"நீயும் உன் தம்பியும் எப்போது வருகிறீர்கள்? எங்கே சந்திக்கலாம்?"

ஆனந்த் சொன்னான். "இப்போது வர முடியாத சூழ்நிலை சார். அம்மாவைக் கடத்தியவர்கள் போன் செய்திருக்கிறார்கள். அங்கே தம்பியைக் கூட்டிக் கொண்டு போக வேண்டும்..."

ராஜாராம் ரெட்டி பரபரப்புடன் கேட்டார். "எப்போது? எங்கே?"

"சார் அதைச் சொல்ல வேண்டாம் என்று நான் பார்க்கிறேன். அம்மாவின் உயிரைக் காப்பாற்ற இப்போது ரகசியம் தேவைப்படுகிறது"

"ஆனந்த், இப்போது தற்காலிகமாக என்னை சிபிஐ டைரக்டராக நியமனம் செய்திருக்கிறார்கள். இப்போது என்னால் உனக்கும் உன் தம்பிக்கும் கண்டிப்பாக உதவ முடியும். அந்த கடத்தல்காரர்கள் என்ன சொன்னார்கள், சொல்"

ராஜாராம் ரெட்டி தன்னை ஆழம் பார்க்கிறார் என்று புரிந்த ஆனந்த் அது தெரியாதது போல் யதார்த்தமாகச் சொன்னான். "சார் என் தம்பியும், நானும் அம்மாவிற்கு எந்த ஆபத்தும் வர வேண்டாம் என்று நினைக்கிறோம். ஆனால் நீங்கள் இவ்வளவு தூரம் எங்களுக்காக அக்கறை எடுத்துக் கொள்வதற்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை"

அவன் சொன்னதைக் கேட்டு வருத்தப்படுவது போல் ரெட்டி நடித்தார். "முழு சிபிஐயையும் இந்த வழக்கில் ஈடுபடுத்தி உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன் ஆனந்த். இது உன் தாயிற்காக மட்டுமல்ல ஆச்சார்யாவிற்காகவும் தான்"

"புரிகிறது சார். ஆனால் இப்போதைக்கு அக்ஷய் அவர்கள் சொன்னது போலவே அங்கு போகப் போவதாகச் சொல்லி இருக்கிறான். அதனால் பிறகு எதாவது உதவி தேவைப்பட்டால் சொல்கிறேன் சார்"

ராஜாராம் அரை மனதோடு சொல்வது போல் சொன்னார். “சரி.. உன் தாயின் உயிரோடு விளையாட நான் விரும்பவில்லை.....” பின் திடீரென்று நினைவுக்கு வந்தது போலக் கேட்டார் ” உன் தம்பிக்கு ஏதாவது பழைய ஞாபகம் வந்ததா?”

ஆனந்த் கவனமாகச் சொன்னான். ”அவனுக்கு ஏதேதோ நினைவுக்கு வந்திருக்கிறது சார். ஆனால் எதையும் வாய்விட்டுச் சொல்ல மாட்டேன்கிறான். கேட்டால் ‘உனக்கு எவ்வளவு குறைவாய் தெரிகிறதோ, அந்த அளவுக்கு ஆபத்து குறைவு’ என்று சொல்கிறான். பிடிவாதக்காரன் சார். அதற்கு மேல் சொல்ல மாட்டேன்கிறான்”

”அப்படியானால் இப்போதைக்கு நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் சொல். அந்த மகேந்திரன் மேல் உனக்கு சந்தேகம் என்று ஜெயின் சொன்னார். எனக்கும் அவன் மேல் தான் சந்தேகமாக இருக்கிறது. அவனை வேண்டுமானால் நான் கண்காணிக்கட்டுமா?”

“செய்யுங்கள் சார். ஆனால் அதில் பெரிய பலனிருக்கும் என்று தோன்றவில்லை. அவன் புத்திசாலி. வெளிப்படையாக மாட்டிக் கொள்ளும்படி எதுவும் செய்ய மாட்டான்.”

“உன் தம்பி மகேந்திரனைப் போய்ப் பார்த்தானா?”

”இவன் அவனைப் பார்க்கப் போனான் சார். ஆனால் அவன் நண்பன் ஒருவன் கல்யாணத்திற்காக வெளியூர் போயிருப்பதாக வீட்டில் சொன்னார்கள். அதனால் அவனுக்கு மகேந்திரனிடம் பேச முடியவில்லை. உண்மையில் அவன் நண்பனைப் பார்க்கப் போனானோ, இல்லை எங்கள் அம்மாவைக் கடத்தி வைத்திருக்கிற இடத்திற்குப் போனானோ என்றும் தெரியவில்லை”

மகேந்திரனின் மேல் திரும்பிய இந்த சந்தேகம் ரெட்டியை சந்தோஷப்பட வைத்தது. வாழ்க மகேந்திரன்! “ஜெயின் அந்த கேசவதாஸை உன் தம்பி பார்க்கப் போனதாகச் சொன்னார். கேசவதாஸ் என்ன சொன்னார்?”

“அவர் ஏதோ ஒரு பெரிய அதிகாரி பெயரைச் சொன்னாராம். அது உண்மையா பொய்யா என்று தெரியவில்லை. அந்த அதிகாரி இப்போது வெளிநாட்டுப் பயணம் போய் இருக்கிறார்”

ராஜாராம் ரெட்டி தனக்குள் பேசிக் கொள்வது போலச் சொன்னார். “எல்லாமே கடைசியில் எந்த துப்பும் தராமலேயே போகிறதே!”

“அதே தான் சார் பிரச்சனை”

”இப்போது உன் தம்பி என்ன செய்கிறான்?”

ஆனந்த் தம்பியைப் பார்த்தான். சிலை போல் அமர்ந்திருந்த அக்‌ஷயின் முகத்தில் பேரமைதி தெரிந்தது. இப்போது பேசிக் கொண்டிருக்கும் எதுவும் அவன் காதுகளை எட்டவில்லை. ஒரு பெருமூச்சு விட்டு விட்டு ஆனந்த் சொன்னான். “தியானம் செய்தபடி இருக்கிறான். இப்போது நாம் பேசுவது கூட அவன் காதுகளில் விழவில்லை.”

”இப்படி தியானம் செய்யும் போது தான் அவனுக்குப் பழைய நினைவுகள் வருகிறதா?”

“அப்படிச் சொல்ல முடியாது சார். திடீர் திடீர் என்று மற்ற நேரங்களிலும் வருகிற மாதிரி தான் தெரிகிறது. அந்த மாதிரி நேரங்களில் அவன் ஏதோ வேறு உலகத்தில் இருப்பது போல் தெரிகிறது...”

“ஜெயின் சார் அவனுக்கு அமானுஷ்யன் என்று ஒரு பட்டப்பெயர் இருப்பதாகச் சொன்னார். அது பொருத்தமாகத் தான் தெரிகிறது. உன் தம்பியிடம் பேச வேண்டும் என்று ஆசைப்பட்டேன்....சரி

ஆனந்த், உனக்கு என்ன உதவி எப்போது வேண்டுமானாலும் தயங்காமல் கேள். நான் கண்டிப்பாகச் செய்கிறேன்.”

ராஜாராம் ரெட்டி போனை வைத்து விட்டார். அவர் உள்மனதில் ஒரு நெருடல் இருந்தது. ஆனந்த் கடத்தல்காரர்கள் சொன்ன விவரங்கள் எதையும் சொல்ல மறுத்தது, எந்த உதவியும் பெற மறுத்தது எல்லாம் அவருக்கு திருப்தியைத் தந்தாலும் அமானுஷ்யனிற்கு பழைய நினைவுகள் வர ஆரம்பித்து விட்டன என்று ஆனந்தும் உறுதி செய்தது அபாய மணியை அடித்தது. முன்பு போனில் மிஸ்டர் எக்ஸிடம் மட்டும் அல்லாமல் தன் தாயிடமும் அக்‌ஷய் நினைவுகள் திரும்பி விட்டதாகச் சொன்னதையும், டெல்லியின் ‘அந்த குறிப்பிட்ட’ இடங்களை மிகச் சரியாகச் சொன்னதையும் ஆனந்த் சொன்னதுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் சொல்வது உண்மை என்றே தோன்றியது.

அவனை ரகசிய இடத்திற்கு வரவழைத்தவுடன் முதல் வேலையாக அவனை சுட்டுத் தள்ளுவது என்ற ஆரம்ப திட்டம் இப்போது உசிதம் அல்ல என்று தோன்றியது. அவனுக்கு எத்தனை தெரியும், எவ்வளவு தெரியும், அதை எங்கேயாவது எழுதியோ சொல்லியோ வைத்திருக்கிறானா என்றெல்லாம் தெரிந்து கொள்ளாமல் கொல்வது பிற்காலத்தில் பெரிய பிரச்னைகளை உருவாக்கலாம். இப்போது சுப்ரீம் கோர்ட் வேறு கண்டதில் எல்லாம் தலை

இடுகிறது. அரசாங்கத்தைப் பொருத்த வரை இனி அவர்கள் ராஜ்ஜியம் தான் என்றாலும் விலை போகாத சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் தலைவலியாக இருப்பார்கள்....எனவே அவனைப் பார்த்துப் பேசுவது மிக முக்கியம்.....

அவருடைய சிந்தனைகளை செல்போன் இசை கலைத்தது.

மந்திரி தான் பேசினார். "ஆனந்திடம் பேசினீர்களா? அவன் என்ன சொன்னான்?"

பேசியதை எல்லாம் அப்படியே ரெட்டி தெரிவித்தார்.

மந்திரிக்கு திருப்தி ஏற்பட்டது. "பரவாயில்லை. ஆனந்தும் அந்த சைத்தானும் வாயைத் திறந்து கடத்தலைப் பற்றி பேசாமல் இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு பயம் இருக்கிறது என்று அர்த்தம். முட்டாள்தனமாக எதுவும் செய்ய மாட்டார்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

ரெட்டி ஆழ்ந்த யோசனையுடன் சொன்னார். "முட்டாள்தனமாக எதுவும் செய்ய மாட்டார்கள் என்பது சரி தான். ஆனால் புத்திசாலித்தனமாக எதுவும் செய்து விட்டால் அதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். அதை நாம் மறக்கக் கூடாது"

"நீங்களும் அந்த தாடிக்காரன் மாதிரி ஏன் பீதியைக் கிளப்புகிறீர்கள்? அவர்கள் என்ன செய்ய முடியும்?"

"நான் அவர்கள் இடத்தில் இருந்தால் என்ன எல்லாம் செய்வேன் என்று ஒவ்வொன்றாக யோசித்துக் கொண்டிருக்கிறேன். அதற்கு நாம் திரும்ப என்ன செய்ய வேண்டும் என்றும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அவனைப் பொருத்த வரை நாம் மிகவும் எச்சரிக்கையாய் இருப்பது முக்கியம் இல்லையா?"

"நீங்கள் சொல்வது சரிதான். அந்த சைத்தான் சாகிற வரை நாம் அஜாக்கிரதையாய் இருக்க முடியாது. ஆனால் நீங்கள் முன்னால் சொன்ன அத்தனை ஏற்பாடும் செய்தாகி விட்டது. இனியும் என்ன செய்ய வேண்டும் என்று உங்களுக்குப் புதிதாக எதாவது தோன்றினால் அதையும் அப்படியே செய்யலாம்...."

மந்திரி போனை வைத்த பிறகு ரெட்டி நிறைய நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். அவர்களுடைய இப்போதைய திட்டம் எந்தக் குறையும் இல்லாதது என்ற போதும் அமானுஷ்யன் சம்பந்தப்பட்டதால் ஏதோ ஒரு நெருடல் இப்போதும் தொடர்ந்தது. பயம் இல்லாதவனைப் போல வலிமையான எதிரி இல்லை. அமானுஷ்யனோ எப்போதும் பயத்தை வெளிப்படுத்தாதவன் என்று அவனுடைய பழைய

நிகழ்வுகள் சொல்கின்றன. அவனுடைய பலவீனம் என்று அவர் கண்டுபிடித்திருப்பது அவன் குடும்பம் தான். மும்பையில் தன் தந்தையைப் பறி கொடுத்த அவன் இன்று பெற்ற தாயையும் பறி கொடுப்பதை சகிக்க மாட்டான் என்று அவர் சரியாகக் கணித்திருந்தார். அவன் ஆபத்தானவன் என்றாலும் அவன் தாய் அவர்கள் பிடியில் உள்ள வரை அவன் அடங்கி இருப்பான் என்பதால் அவன் தாயை அவன் கதையை முடிக்கிற வரைக்கும் தங்களிடமே வைத்திருப்பது தான் தங்களுக்கு அவனிடமிருந்து பாதுகாப்பு என்பதையும் அவர் அறிவார். எனவே தான் அவனது தாயை ஒப்படைத்து அவனை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த பின்னர் அரை மணி நேரத்தில் மீண்டும் அவளைத் தங்களிடம் கடத்திக் கொண்டு வர அவர் ஏற்பாடு செய்து விட்டார். அவன் தாயை மீண்டும் பணயமாக வைத்துத் தான் அவனிடமிருந்து உண்மையைக் கக்க வைக்க வேண்டும். அவன் தாயிற்கு ஆபத்து என்றால் தான் அவன் சொல்கிறபடி கேட்பான். அவள் இல்லாவிட்டால் அவனைக் கட்டுப்படுத்துவது சூறாவளியைக் கட்டுப்படுத்துவது போல முடியாத காரியம் தான்.

’பயமே இல்லாத அமானுஷ்யன் தன் தாயை அவர்கள் என்னவெல்லாம் செய்வார்களோ என்று பயந்து நடுங்க வேண்டும். முதல் முறையாக அவன் முகத்தில் பயத்தைப் பார்க்க வேண்டும். அவர்களிடம் எல்லாம் சொல்லி விட்டு அவன் அவர்கள் தரும்

தீர்ப்புக்காகக் காத்திருக்க வேண்டும்.....' நினைக்க நினைக்க மனதில் இருந்த நெருடல் போய் முகத்தில் புன்னகை அரும்பியது. இரண்டு வருடங்களுக்கு முன் நிர்க்கதியாய் நின்ற சிபிஐ அதிகாரியான அவர் இன்று பலரை அப்படி நிற்க வைக்க முடியும் அளவு சக்தி வாய்ந்த மனிதராக உருமாறி இருக்கும் இந்த அபார வளர்ச்சி அவருக்குப் பெரும் திருப்தியைத் தந்தது.

**********

டெல்லியின் மையப்பகுதியில் இருந்த ஒரு பழைய லாட்ஜ் ஒன்றினுள் குறுந்தாடிக்காரன் நுழைந்தான். சுத்தம் என்ற சொல்லிற்கும் அந்த லாட்ஜிற்கும் சம்பந்தமே இல்லாதது போல் அந்த லாட்ஜ் இருந்தது. சுண்ணாம்பை அந்த சுவர்களுக்குக் காண்பித்து பல காலம் ஆகியிருக்கும் என்று அவன் கணித்தான். "இந்த ஆளிற்கு இதை விட ஒரு பழைய லாட்ஜ் கிடைக்கவில்லை போல் இருக்கிறது" என்று மனதினுள் சொல்லிக் கொண்டான்.

சில நாட்களுக்கு முன் ஒரு பாழடைந்த சிறிய வீட்டில் அவன் சந்தித்த அந்த மனிதன் மறுபடி சந்திக்க இங்கு அழைத்ததில் இருந்து அவன் மனதில் ஒருவித பயம் சூழ்ந்திருந்தது. அந்த மனிதன் அபாயகரமானவன் என்று நண்பன் ஒருவன் ரகசியமாக அவனிடம்

சொல்லி இருந்தான். அவன் சொன்ன செய்தி இன்னும் அவன் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டு இருந்தது.

“….. ஒரு ஆளைக் கூட்டிக் கொண்டு வர என்னிடம் சொன்னார் என்று நான் கூட்டிக் கொண்டு போனேன். அவனிடம் ஒப்படைத்த வேலையை அவன் ஏன் செய்யவில்லை என்று கேட்டார். அந்த ஆள் சொன்ன காரணங்களை எல்லாம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் கேட்டுக் கொண்டே இருந்தவர் திடீரென்று துப்பாக்கியை எடுத்து நெற்றிப் பொட்டில் சுட்டு விட்டார். அவன் அந்த இடத்திலேயே செத்து விட்டான். அவர் ஒன்றுமே நடக்காதது போல எழுந்து போய் விட்டார். அவருடைய ஆட்கள் ஓடி வந்து பிணத்தை குண்டு கட்டாய் கட்டி எடுத்துக் கொண்டு போனார்கள். நான் ஆடிப்போய் விட்டேன். எனக்கு கை கால் எல்லாம் நடுங்க ஆரம்பித்து விட்டது….”

அந்த அபாயகரமான மனிதன் அந்தப் பாழடைந்த வீட்டில் ஒரு வேலையை அவனிடம் ஒப்படைத்துச் சொல்லியிருந்தான். ”அவனை(அமானுஷ்யனை)க் கொல்லும் வேலையில் போலீசை முழுவதும் நம்புவது முட்டாள்தனம். இனி உனக்கு ஒரே வேலை அவன் எங்கிருக்கிறான் என்று தகவல் சொல்வது தான். மீதியை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்”

அந்த வேலையைச் செய்து முடிக்காமல் இந்த ஆளைப் பார்க்கப் போகிறோமே, பேச்சைக் கேட்டு விட்டு சுடுவானா, இல்லை கேட்காமலேயே சுடுவானா என்ற பயம் அடிவயிற்றைக் கலக்க லாட்ஜின் முதல் மாடியில் அந்த ஆள் தங்கி இருந்த அறைக் கதவை குறுந்தாடி தட்டினான்.

89

குறுந்தாடிக்காரன் கதவைத் தட்டியவுடனே அந்த அறைக் கதவு திறக்கப் படவில்லை. மாறாக பக்கத்து அறைக் கதவு திறந்து ஒரு ஆள் எட்டிப் பார்த்தான். பின் கதவை மறுபடியும் கதவை மூடிக் கொண்டான். ஒரு நிமிடம் கழித்து தான் தட்டிய அறைக்கதவு திறக்கப்பட்டது. கதவைத் திறந்த ஒரு ஆள் அவனை உள்ளே விட்டு வெளியே கதவைத் தாழிட்டுப் போய் விட்டான்.

தாடிக்காரனுக்கு பயத்தில் குப்பென்று வியர்த்தது. பக்கத்து அறையிலும் அவர்கள் ஆட்களே இருப்பது புரிந்தது. வந்துள்ளது அவன் தானா என்று ஒரு முறை உறுதி செய்து விட்டு அவன் தெரிவித்த பின் தான் இந்தக் கதவு திறந்திருக்கிறது என்பது தெரிந்தது. அவனை சுட்ட பின் தான் கதவைத் திறப்பார்களா, குண்டுக் கட்டாய் தூக்கிக் கொண்டு போக அந்த பக்கத்து அறைக்காரர்கள் வருவார்களா என்றெல்லாம் சந்தேகம் வந்து

அவனைப் பாடாய் படுத்தியது.

அந்த அபாயகரமான நடுத்தர மனிதன் கட்டிலில் உட்கார்ந்திருந்தான். உள்ளே நுழைந்த தாடிக்காரனை உணர்ச்சியே இல்லாமல் பார்த்தான்.

"உட்கார்" என்று எதிரே இருந்த அழுக்கான ப்ளாஸ்டிக் நாற்காலியைக் காட்டினான்.

கோடிக்கணக்கான பணத்தை பட்டுவாடா செய்யும் அளவிற்கு வசதியாக இருக்கும் இந்த இயக்கத்தில் மிக முக்கியப் பொறுப்பில் இருப்பவன் ஏன் இப்படி பிச்சைக்காரன் மாதிரி இந்த மாதிரி இடத்தில் தங்குகிறான்? என்று நினைத்துக் கொண்டே அந்த நாற்காலியில் தயக்கத்துடன் தாடிக்காரன் உட்கார்ந்தான்.

"அவன் எங்கே இருக்கிறான் என்று கண்டுபிடித்து விட்டாயா?"

குறுந்தாடி எச்சிலை மென்று விழுங்கினான். அந்த ஆள் உடனடியாக சுட்டு விடப் போகிறான் என்று பயந்தவன் அவசர அவசரமாக மந்திரியும் ரெட்டியும் அவன் அம்மாவைக் கடத்திக் கொண்டு போய் ஓரிடத்தில் வைத்திருக்கிறார்கள் என்றும் அவன் அம்மாவை விடுவிக்க அவனை வரச் சொல்லி இருக்கிறார்கள்

என்றும் நாளைக்கே அவன் அவர்கள் பிடியில் சிக்கிக் கொள்வான் என்றும் விவரமாகச் சொன்னான்.

அந்த மனிதனுக்கு அவன் சொன்னதில் பெரிய மகிழ்ச்சி ஏற்பட்டது போலத் தெரியவில்லை. ஆனால் அவன் சென்ற முறை போல முகத்தையும் சுளிக்கவில்லை. தாடிக்காரன் பயந்தது போல துப்பாக்கி எடுத்து சுட்டு விடவும் இல்லை. அவன் சொன்ன விவரங்கள் அந்த மனிதனுக்கு முதலிலேயே தெரியுமோ என்கிற சந்தேகம் தாடிக்காரனுக்கு வந்தது.

"அவர்கள் அவன் அம்மாவை ஏன் நம்மிடம் ஒப்படைக்கக் கூடாது, மீதியை நாம் பார்த்துக் கொள்ளலாமே"

"நானும் அப்படித்தான் சொல்லிப் பார்த்தேன். ஆனால் அந்த சிபிஐக்காரன் ஒத்துக் கொள்ள மாட்டேன்கிறான். மந்திரி அந்த சிபிஐக்காரன் கருத்துக்கு எதிராய் எதையும் செய்ய விரும்பவில்லை. அந்த சைத்தானை சாகடிப்பது நம்மைக் காட்டிலும் அவருக்கு முக்கியம் என்கிறார்"

ஒன்றுமே சொல்லாமல் அந்த மனிதன் அவனையே கண் சிமிட்டாமல் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு சொன்னான். "நாளைக்கு இரவிற்குள் அவன் பிணம் நம்மிடம் வந்து

சேராவிட்டால் வேறு சில பார்க்க விரும்பாத பிணங்களை அந்த மந்திரி பார்க்க வேண்டி இருக்கும் என்று சொல்"

குறுந்தாடிக்காரன் திகைப்புடன் பார்த்தான்.

அந்த ஆள் அவனிடம் அமைதியாகக் கேட்டான். "ஏன் அந்த மந்திரியிடம் எப்படி சொல்வது என்று உனக்கு தயக்கமாக இருக்கிறதா?"

அவசர அவசரமாக குறுந்தாடி மறுத்தான். "இல்லை. இல்லை. இப்போதே போய் சொல்கிறேன்"

"நீ போகலாம்"

********

ஒரு காலத்தில் அக்ஷய் தியானம் செய்வதைப் பார்த்து பல புத்த பிக்குகள் ஆச்சரியப் பட்டிருக்கிறார்கள். பூடான், சீன புத்த மடாலயங்களில் எத்தனையோ வித்தைகள் அவன் கற்றிருந்தான். அற்புத சக்திகளைப் பெற்றிருந்த சில மூத்த பிக்குகள் அவன் எல்லாவற்றையும் கற்றுக் கொண்ட வேகத்தைப் பார்த்து

மெச்சியிருக்கிறார்கள். துறவியாகும் எண்ணம் அவனுக்கு இல்லாமல் இருந்தாலும், புத்த பிக்குகள் அவன் ஒரு நாள் உலகம் போற்றும் புத்த மத போதகனாக வருவான் என்று நினைத்திருக்கிறார்கள்.

அதே போல தான் அவன் திபெத்தில் இருந்த போது பல ரகசிய வித்தைகளை அவனுக்குச் சொல்லித் தந்த திபெத்திய லாமாக்களும் அவனுக்கு மிக நல்ல எதிர்காலம் இருக்கும் என்று எதிர்பார்த்தார்கள். அவன் தியானத்தில் சமாதி நிலையில் எத்தனையோ முறை இருந்திருக்கிறான். மனம் ஒரு சிறு முணுமுணுப்பு கூட செய்திராத நிலைகளில் இருந்திருக்கிறான்.

ஆனால் மும்பையில் அவனை வளர்த்த பெற்றோர் மரணத்திற்குப் பிறகு அவனால் அந்த அற்புத நிலைகளுக்குப் போக முடிந்ததில்லை. ஆழமான பல நிலைகளுக்குப் போக முடிந்தாலும் அந்த அடித்தளம் வரை அவனால் போக முடியவில்லை. அவன் ஒரு முறை ஒரு மூத்த லாமாவிடம் காரணம் கேட்டான். அவர் உடனடியாக அதற்குப் பதில் சொல்லாமல் அவனை சிறிது நேரம் ஊடுருவிப் பார்த்தார். அவன் வாழ்க்கை முழுவதையுமே ஒரு புத்தகம் படிப்பது போல சில வினாடிகளில் அவர் படித்து முடித்தது போல இருந்தது. பிறகு ஒரே வார்த்தை சொன்னார். "கர்மா"

அவன் அவரை விடாது நச்சரித்துக் கேட்ட போது அவர் சொன்னார். "கற்றது எதுவுமே வீண் போகாது. வேண்டிய நேரத்தில் கண்டிப்பாக உதவும். ஆனால் நீ சந்திக்க வேண்டியது இனியும் நிறைய இருக்கிறது. நல்லதும், கெட்டதும்....". அதற்கு மேல் அவரிடம் இருந்து அவன் ஒரு வார்த்தை கூட பெற முடியவில்லை.

அந்த நேரத்தில் 'இருந்த இரண்டு உறவுகளையும் இழந்த எனக்கு இனி என்ன கெட்டது பார்க்க என் வாழ்க்கையில் இருக்கிறது' என்று அவன் பல முறை எண்ணி இருக்கிறான். ஆனால் அதன் பின் தொடர்ந்த பிரச்னைகளைப் பார்த்த போது அவனால் அந்த லாமாவின் கணிப்பை எண்ணி வியக்காமல் இருக்க முடிந்ததில்லை.

இப்போதும் அவன் தியானத்தில் ஆழமாக சென்று கொண்டிருக்கிறான். மனதின் மௌனமான நிலை இப்போது அவன் லட்சியமல்ல. ஆழ்மனதின் பழைய பதிவுகளைப் படிக்க முடிவது தான் அவன் இப்போதைய லட்சியம். பழைய நினைவுகள் எல்லாம் பறி போன பிறகு இமயமலைச்சாரலில் இருந்த அவன் விழித்தெழுந்த அந்த புத்த விஹாரத்தில் இருந்தே அவன் இதை முயன்று வருகிறான். ஆனால் பல முறை அவன் முயன்றும் அவன் ஆழ்மனம் அவனுக்கு கண்ணா மூச்சு காட்டிக் கொண்டிருந்ததே தவிர அதிகமான விவரங்கள் தரவில்லை. சிறிது நேரத்திற்கு முன் திடீரென்று வந்த கோமா மருந்து நினைவும், ஆனந்த் சொன்னதைப்

போல இப்போதைய இக்கட்டான நிலைமையும், அவனை மீண்டும் முயற்சி செய்ய வைத்திருக்கிறது.

கட்டாய எதிர்பார்ப்பு, பரபரப்பு, கவலை போன்ற உணர்வுகள் அவன் முயற்சியைத் தோல்வி அடைய வைக்கும் என்பதை அவன் அறிவான். தலைக்கு மேல் தொங்கும் மரணக்கத்தி பற்றி அவன் கவலைப்படவில்லை. விதி மேல் அவனுக்கு இருந்த அபார நம்பிக்கை 'நடக்க இருப்பதே நடக்கும்' என்ற எண்ணம் இந்த இக்கட்டான நிலையிலும் வலுப்பட்டு இருந்தது. அதனால் அவனுடைய இன்றைய முயற்சியில் அசாதாரணமான ஒரு அமைதி அவனுக்குள்ளே இருந்தது.

அவனது தியானம் ஆழப்பட்ட போது சிறு சிறு அமைதியான இடைவெளிக்குப் பிறகு அவன் மனதில் பழைய நிகழ்வுகள் வந்து போயின. ஆரம்பத்தில் வந்தவை அவன் எதிர்பார்த்தவை அல்ல என்றாலும் விருப்பு வெறுப்பில்லாத பார்வையாளனாக அவன் அவற்றைக் கவனித்தான்.

ஆறு வயது சிறுவனான அவனை அம்மா திலகவதி ஊஞ்சலில் உட்கார வைத்து ஆட்டிக் கொண்டிருக்கிறாள். "இன்னும் வேகமாய்.... இன்னும் வேகமாய்..." என்று சந்தோஷத்தோடு அவன் கத்திக் கொண்டிருக்கிறான்.

..... ...... ..... .....

மரணப்படுக்கையில் இருந்த தந்தை நாகராஜன் அவனிடம் சொல்கிறார். "எங்கள் வாழ்க்கையில் நடந்த ஒரே நல்ல விஷயம் நீ தான்..... நாங்கள் பெருமைப்படுகிற ஒரே சொத்தும் நீ தான்... அழாதே... உன் அழுகையைப் பார்க்கிற சக்தி எனக்கில்லை.... சந்..தோஷ.....மா....ய்......இ..ரு.........."

...... ...... ...... .....

சீன புத்த விஹாரத்தில் அவனுக்கு ஒரு மூத்த புத்த பிக்கு சண்டைப் பயிற்சிகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். "எப்போதுமே சக்தியை அளவுக்கு அதிகமாக விரயம் செய்யாதே. சீக்கிரமே நீ களைத்துப் போவாய். எவ்வளவு தேவையோ அவ்வளவு சக்தி மட்டும் பிரயோகித்தால் நீ நிறைய நேரம் தாக்குப் பிடிக்கலாம்"

....... ..... ...... ..... .......

ஒரு பாடல் அவன் இதயத்தின் ஆழத்தில் இருந்து எதிரொலித்தது.

"Every night in my dreams

I see you, I feel you

that is how I know you go on.

.... ..... ..... .....

Love can touch us one time

and last for a lifetime

and never let go till we're gone."

சஹானா அவனை நேராகப் பார்த்துப் பாடவில்லை என்றாலும் அந்தப் பாடல் அவனுக்காகவே பாடியது போலவே இப்போதும் உணர்ந்தான். பாடல் முடிந்த பின்னும் அவள் உருவம் மனதில் நிழலாடியது.... திடீரென்று வருண் கலங்கிய கண்களுடன் சத்தியம் வாங்கியது நினைவுக்கு வந்தது. "நீங்கள் கண்டிப்பாய் ஒரு நாள் திரும்பி வருவீர்கள் என்று சத்தியம் செய்யுங்கள்"

உடனே ஒரு வலியை அக்ஷய் உணர்ந்தான். அப்போதும் அவன் தன் அந்த வலியையும் ஒரு பார்வையாளனாகவே பார்த்தான்.

...... ...... ........ .....

மங்கிய விளக்கொளியில் ஒரு சிறு கூட்டம் நடந்து கொண்டிருந்தது.

ஒரு பேச்சாளர் சொல்லிக் கொண்டிருந்தார். "நம் இயக்கத்தின் தீவிர ஆதரவாளரும், சிறந்த பேச்சாளருமான அப்துல் அஜீஸ் அவர்களை பேச அழைக்கிறேன்".

எல்லோரும் கை தட்டினார்கள்.

அக்ஷய் பேச எழுந்தான்.

........ ....... ....... .....

ஒரு ப்ரவுசிங் செண்டரில் இருந்து அக்ஷய் வெளியே வருகிறான். அவன் கையில் ஒரு 'பென் டிரைவ்' இருக்கிறது. அதை சட்டைப் பையில் போட்டுக் கொண்டு நடக்க ஆரம்பித்தான். யாரோ அவனைப் பின் தொடர்கிறது போல் இருந்தது. இத்தனை நாட்கள் இது நடக்கவில்லை என்று நினைத்துக் கொள்கிறான். இனி ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொள்கிறான். பின் தொடர்பவனின் கண்காணிப்பில் இருந்து தப்பிப்பது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. இந்த 'பென் டிரைவை' பத்திரப்படுத்துவது தான் மிக முக்கியம் என்று தோன்றுகிறது.

...... ...... ......... ......

அவன் ஒரு பொதுத் தொலைபேசியில் பேசிக் கொண்டிருக்கிறான். "ஆச்சார்யா. இங்கே நான் ஆபத்தை உணர்கிறேன். நீங்கள் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்"

"பயப்படாதே அக்‌ஷய். எல்லாமே என் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது"

அவரது நம்பிக்கையான பேச்சு அவனுக்கு ஏனோ ஆறுதலைத் தர மறுத்தது.

"ஆச்சார்யா. என் உள்மனம் வேறு மாதிரியாகச் சொல்கிறது....."

அவரிடம் இருந்து ஒரு நீண்ட மௌனம். பின் சொன்னார். "சரி அக்‌ஷய். நான் ஜாக்கிரதையாகவே இருக்கிறேன்..."

....... ....... ....... ......

அவன் ஒரு ஓட்டல் அறையில் இருந்து ஜன்னல் வழியே வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறான். அறையில் விளக்கில்லாததால் வெளிச்சமில்லை. வெளியே பனிக்காற்று வீசிக் கொண்டு இருந்தது. இருண்ட ஆகாயத்தில் நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருப்பது மிகவும் ரம்மியமாக இருக்கிறது.

தெருவில் சத்தமில்லாமல் மூன்று கார்கள் அந்த ஓட்டல் முன் வந்து நின்றன. காரின் கதவைக் கூட உள்ளே இருந்தவர்கள் சத்தமில்லாமல் திறந்தார்கள். மூன்று கார்களில் இருந்தும் துப்பாக்கியோடு ஆட்கள் இறங்கினார்கள்.

அக்‌ஷய் இனி அங்கு இருப்பது ஆபத்து என்பதை உணர்ந்தான்.

...... ...... ......... .......

அங்கிருந்து கிளம்ப முற்பட்ட அக்‌ஷய் கடந்த காலத்தில் இருந்து நிகழ்காலத்திற்கு திடீரென்று வந்து சேர்ந்தான். கண்களைத் திறந்து பார்த்த போது எதிரில் உள்ள சோபாவில் உட்கார்ந்திருந்த ஆனந்த் அவனையே பார்த்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

ஆனந்த் 'என்ன ஆயிற்று?' என்பதைப் போல அக்‌ஷயைப் பார்த்தான்.

மும்பை பெற்றோர் நினைவையும், சஹானா-வருண் நினைவையும் தவிர்த்து மற்ற புதிய நினைவுகளைப் பற்றி அக்‌ஷய் ஆனந்திடம் விவரித்தான்.

ஆனந்த் கேட்டான். "யார் அந்த அப்துல் அஜீஸ்?"



"தெரியவில்லை. ஆனால் அந்தப் பெயரில் பேச எழுந்தது நான் தான்"

"என்ன பேசினாய் என்பது நினைவுக்கு வரவில்லையா?"

அக்ஷய் இல்லை என்று தலையசைத்தான். திரும்பவும் அந்த அறிவிப்பை எண்ணிப் பார்த்தான். "நம் இயக்கத்தின் தீவிர ஆதரவாளரும், சிறந்த பேச்சாளருமான அப்துல் அஜீஸ் அவர்களை பேச அழைக்கிறேன்". அது என்ன இயக்கம்? யாரந்த அப்துல் அஜீஸ்? வேறொரு ஆளின் இடத்தில் அவன் ஏன் பேசப் போனான்? ஏன் அவன் அப்துல் அஜீஸ் அல்ல என்பதை மற்றவர்கள் கண்டு பிடிக்கவில்லை? கேள்விகள் சரமாரியாக அவனுக்குள்ளே எழுந்தன. ஆனால் பதில் தான் எதற்கும் கிடைக்கவில்லை.

ஆனந்த் அடுத்த கேள்வியைக் கேட்டான். "அந்த 'பென் டிரைவ்' முக்கியம் என்று நீ உணர்கிறாய் என்றால் அதில் ஏதோ முக்கியமான

விஷயங்கள் இருந்திருக்க வேண்டும். நீ அந்த ப்ரவுசிங் செண்டரில் இருந்து வெளியே வரும் போது அது உன்னிடம் இருக்கிறது. அதில் உள்ள தகவல்களை அங்கே நீ யாருக்காவது அனுப்பி விட்டு வந்தாயா, இல்லை அந்த ப்ரவுசிங் செண்டரில் தகவல்களை சேகரித்து வந்தாயா? ஏதாவது நினைவுக்கு வருகிறதா யோசித்துப் பார்"

அக்ஷய் யோசித்துப் பார்த்தான். பின் சொன்னான். "தெரியவில்லை. ஆச்சார்யாவிடம் நான் பேசியதும் முன்பா பின்பா என்று கூடத் தெரியவில்லை. தனித்தனியாக நினைவுக்கு வந்ததால் இதில் எது முன்பு நடந்தது, எது பின்பு நடந்தது என்று தெரியவில்லை ஆனந்த். ஆனால் பிறகு ஆச்சார்யாவின் கம்ப்யூட்டரை அவர்கள் எரித்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது அந்த 'பென் டிரைவி'ல் உள்ள தகவல்களை நான் கண்டிப்பாக ஆச்சார்யாவிற்கு அனுப்பி இருந்திருக்க வேண்டும் என்றே எனக்குத் தோன்றுகிறது."

"ஒருவேளை ஆச்சார்யா டில்லியில் சில இடங்களைக் குறித்து வைத்திருந்தாரே அது கூட அந்தத் தகவல்களில் இருந்து எடுத்திருக்க வாய்ப்பு இருக்கிறது" ஆனந்த் சொன்னான்.

"இருக்கலாம்"

"அந்த 'பென் டிரைவ்' என்ன ஆயிற்று? நீ அந்த புத்த விஹாரத்தில் விழுந்த போது உன்னிடம் அது இருந்திருக்கலாமோ?"

"அந்த சமயத்தில் உடுத்தியிருந்த உடையைத் தவிர வேறு எதுவும் என்னிடம் இருக்கவில்லை ஆனந்த். ஒரு வேளை நான் கீழே விழும் சமயத்தில் என்னிடம் இருந்திருந்தால் அது இமயமலைச்சாரலில் எங்காவது கீழே விழுந்திருக்கலாம்."

ஆனந்த் தம்பியையே சிறிது நேரம் பார்த்திருந்து விட்டு கேட்டான். "உன் உள்மனம் என்ன சொல்கிறது?"

"அந்த ப்ரவுசிங் செண்டரில் இருந்து வெளியே வந்த போது என்னைப் பின் தொடர்ந்து யாரோ வந்தார்கள் என்று எனக்குத் தோன்றியதல்லவா? அதன் பிறகு உடனடியாக அவர்கள் என்னைத் தாக்கி இருந்தால் மட்டுமே நான் அந்த பென் டிரைவைப் பத்திரப்படுத்தாமல் இருந்திருப்பேன். எனக்கு சிறிது நேரம் கிடைத்து இருந்தால் கண்டிப்பாக அதை எங்கேயாவது நான் கண்டிப்பாக ஒளித்து வைத்திருப்பேன்..."

"நீ இமயமலைச்சாரலில் சுடப்பட்டு விழுந்தது நடு இரவில். அந்த மலைச்சாரலில் அந்த பகுதியில் ப்ரவுசிங் செண்டர் இருக்கிற

அளவுக்கு நகரம் எதுவும் இருக்கிற மாதிரியும் தெரியவில்லை. அதனால் நீ சுடப்படுவதற்கும் ப்ரவுசிங் செண்டருக்கு போன அந்த நிகழ்வுக்கும் இடையே கால இடைவெளி கண்டிப்பாக இருந்திருக்க வேண்டும். அதனால் அந்த 'பென் டிரைவை' பத்திரப்படுத்தி வைத்திருக்க வாய்ப்பு இருக்கிறது அக்ஷய்"

அக்ஷய் 'இருக்கலாம்' என்று தலையசைத்தான்.

"அப்படி நீ எங்கேயாவது ஒளித்து வைத்திருந்தால் எந்த மாதிரியான இடங்களில் ஒளித்து வைத்திருக்கலாம் என்று யோசித்துப் பாரேன்"

அக்ஷயிற்கு எதுவும் நினைவுக்கு வரவில்லை.

ஆனந்த் கேட்டான். "ஒருவேளை நீ தங்கியிருந்த ஓட்டலில் எங்காவது வைத்திருக்கலாமோ?"

"எல்லோருக்கும் வெளிப்படையாக சந்தேகம் வருகிற எந்த இடத்திலும் நான் வைத்திருக்க மாட்டேன். நான் அந்த ஓட்டலில் வைத்திருந்தால் கூட அங்கிருந்து வரும் போது அதையும் எடுத்துக் கொண்டு தான் வந்திருப்பேன்."

"அந்த ஓட்டல் பெயர் அல்லது ஓட்டல் இருக்கும் ஊர் எதாவது

நினைவுக்கு வருகிறதா?"

"இல்லை"

ஆனந்த் ஏமாற்றம் அடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் சொன்னான். "பரவாயில்லை விடு. இந்த அளவாவது நினைவு வந்ததே. இதை வைத்துக் கொண்டு ஏதாவது கண்டுபிடிக்க முடிகிறதா என்று பார்ப்போம். சரி இனி என்ன செய்யலாம் என்று யோசிப்போம்"

அக்‌ஷய் கடிகாரத்தைப் பார்த்தான். மணி பகல் 2.12 என்று காண்பித்தது. ஆனந்திடம் சொன்னான். "ஆனந்த் நாளை காலையில் அந்த இடத்திற்கு நான்கு மணிக்குப் போய் சேர வேண்டுமானால் இங்கே இருந்து நான் காலை மூன்று மணிக்கே கிளம்ப வேண்டும். அது வரை நமக்கு கிடைக்கிற நேரத்தை நாம் நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்"

"நானும் அதையே தான் நினைத்துக் கொண்டிருந்தேன். இனி என்ன செய்யலாம் சொல்"

"நம்பிக்கைக்குரிய மூன்றாம் நபர் யாராவது நமக்கு உதவிக்குக் கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது"

"என் நெருங்கிய நண்பர்கள் எல்லாம் சென்னையில் தான் இருக்கிறார்கள். வேண்டுமானால் அவர்களைக் கூப்பிடலாம்"

"அங்கே இருந்து வரவழைப்பதை விட இங்கேயே யாரையாவது அழைத்துக் கொள்ளலாம். வேண்டுமானால் மகேந்திரனை உதவிக்குக் கூப்பிட்டுக் கொள்வது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது ஆனந்த். இந்த மாதிரி நேரத்தில் அவனை மாதிரி ஆட்கள் நமக்கு நிறையவே உதவியாக இருக்க முடியும்"

ஆனந்திற்கு மகேந்திரன் மேல் இன்னமும் முழு நம்பிக்கை வரவில்லை என்றாலும் தம்பியின் ஆலோசனைக்குத் தலை அசைத்தான். "கண்டிப்பாக நாம் நம்முடன் அவனைக் கூட்டிக் கொண்டு போக முடியாது. அவர்கள் கண்டு பிடித்து விடுவார்கள். அது அம்மாவுக்கும் வருணுக்கும் தான் ஆபத்து. ஆனால் வேறு ஏதாவது விஷயத்தில் அவன் உதவி செய்ய முடியும். நான் இன்னொரு விஷயம் உன்னிடம் சொல்ல வேண்டி இருக்கிறது. நீ தியானத்தில் இருக்கும் போது ரெட்டி போன் செய்தார்....."

ஆனந்த் சொன்ன எல்லாவற்றையும் கேட்ட அக்ஷயிற்கு ஒரு சந்தேகம் வந்தது. "ரெட்டி மகேந்திரனை வேவு பார்க்க ஆள் ஏற்பாடு செய்வார் என்று உனக்குத் தோன்றுகிறதா?"

"அவர் என் திருப்திக்காகத் தான் மகேந்திரனைக் கண்காணிக்கட்டுமா என்று கேட்டிருக்கிறார். அவர் தேவை இல்லாமல் அவனை வேவு பார்க்க ஆளை ஏற்பாடு செய்ய மாட்டார் என்றே நினைக்கிறேன்"

"சரி நான் போய் அவனிடம் பேசி விட்டு வருகிறேன்" என்ற அக்‌ஷய் எழுந்தான். ஆனந்தின் செல்போன் ஒட்டுக் கேட்கப்படுகிறது என்ற சந்தேகம் இருப்பதால் வழக்கம் போல் தெருவில் உள்ள பொதுத் தொலைபேசியில் மகேந்திரனை அழைத்துப் பேசப் போனான்.

.மகேந்திரன் அவன் அழைத்த நேரத்தில் சிபிஐ அலுவலகத்தில் தான் இருந்தான். அக்‌ஷய் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வதற்கு முன்பே குரலை வைத்தே கண்டுபிடித்த மகேந்திரன் ஆர்வத்துடன் சொன்னான். "சொல் நண்பா."

அக்‌ஷயிற்கு அவன் நண்பா என்று அழைத்தது மனம் நெகிழ வைத்தது. "நீ இப்போது எங்கிருக்கிறாய்?"

"ஆபிசில் தான் இருக்கிறேன் நண்பா. சொல்"

"அன்று நீ என்ன உதவி வேண்டுமானாலும் உன்னிடம் கேட்கலாம் என்று சொன்னாய். இப்போது எனக்கு உன் உதவி

தேவைப்படுகிறது. செய்வாயா?"

"சொல். என்ன செய்ய வேண்டும்?" ஆர்வத்துடன் அவன் கேட்டான்.

"நேரில் வர முடியுமா? பேச நிறைய இருக்கிறது"

"கண்டிப்பாய் வருகிறேன். எங்கே வர வேண்டும் சொல். இப்போதே வருகிறேன்". அவனுக்கு உண்மையாகவே அக்ஷயை மீண்டும் ஒரு முறை சந்திப்பதில் உற்சாகம் இருந்தது. அந்த அபூர்வ மனிதனுக்கு உதவி செய்வதிலும், நண்பனாக ஆக்கிக் கொள்வதிலும் அவனுக்கு நிறையவே ஆர்வம் இருந்தது.

அக்ஷய் தாங்கள் தங்கி இருந்த ஓட்டலுக்கு வரச் சொல்லாமல் இரண்டு வீதிகள் தள்ளி ஒரு இடத்திற்கு வரச் சொன்னான். "முக்கால் மணி நேரத்திற்குள் வருகிறேன்" என்று உறுதியளித்த மகேந்திரன் குரலை தாழ்த்திக் கொண்டு சொன்னான். "ராஜாராம் ரெட்டியை எங்கள் டைரக்டராக தற்காலிகமாக நியமித்திருக்கிறார்கள்"

"தெரியும்"

"எங்களுக்கே இரண்டு நிமிடம் முன்னால் தான் தகவல் வந்தது. அதற்குள் எப்படி உனக்கு"

"நேரில் வா பேசலாம். அப்புறம் ...மகேந்திரன்"

"சொல்"

"வர சம்மதித்ததற்கு நன்றி" அக்ஷய் போனை வைத்து விட்டான்.

மிக ஆபத்தான கட்டத்தில் இருந்தாலும் மகேந்திரன் போன்ற ஒருவன் தானாக உதவிக்கு வர சம்மதித்தது ஒருவிதத்தில் அக்ஷயிற்கு ஆறுதலாக இருந்தது. ஆபத்து மரணத்தில் கூட முடியலாம். அதில் அவனுக்கு வருத்தமில்லை. அவனுக்கு நெருங்கியவர்கள் நன்றாக இருந்தால் போதும் என்று இப்போதும் நினைத்தான். மரணத்தையும் நெருங்கியவர்களையும் சேர்த்து நினைத்த போது சஹானா நினைவு வந்தது. போன் செய்து அவளிடம் பேசி விட்டுச் சென்றால் என்ன என்று தோன்றியது. இனி எப்போதுமே பேச முடியாமல் போனாலும் போகலாம்.....

*******

மந்திரி குரலில் என்றுமில்லாத ஒரு பயம் தொனித்தது. ராஜாராம்

ரெட்டியிடம் சுருக்கமாகத் தான் சொன்னார். "நேரில் வாருங்கள். பேச வேண்டும்"

ராஜாராம் ரெட்டி போன போது மந்திரி பதட்டத்தோடு இருந்தார்.

ரெட்டி கேட்டார். "என்ன விஷயம்?"

"நாளைக்கு இரவிற்குள் அமானுஷ்யனைப் பிணமாகத் தரச் சொல்லி கேட்கிறார்கள்.... தாடிக்காரன் இப்போது தான் சொல்லி விட்டுப் போனான்."

"அவர்கள் ஆரம்பத்தில் இருந்து அதைத் தானே சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். அதற்கு ஏன் இப்படி பதறுகிறீர்கள்?"

"...அப்படித் தரா விட்டால் நான் பார்க்க விரும்பாத பிணங்களையும் பார்க்க வேண்டி வரும் என்று சொல்கிறார்கள்"

ராஜாராம் ரெட்டி திகைத்தார். மந்திரிக்கே அவர்கள் நேரடியாக இப்படி மிரட்டல் விடுவது அவருக்குப் பிடிக்கவில்லை. "போலீஸ், அரசாங்கம் எல்லாம் உங்கள் கையில் இருக்கும் போது அவர்களால் என்ன செய்து விட முடியும்?"

மந்திரி பதட்டம் சிறிதும் குறையாமல் சொன்னார். "புரியாமல் பேசாதீர்கள். நான் எத்தனை பேருக்கு எத்தனை நாள் அந்த அளவு பாதுகாப்பு தந்து காப்பாற்ற முடியும்? அவர்களிடம் ஏகப்பட்ட ஆட்கள் தற்கொலைப் படையில் இருக்கிறார்கள். கையைக் காண்பித்தால் போதும். யாரையும் காலி செய்து விடுவார்கள்.... அது அவர்களுக்கு கஷ்டமான வேலை அல்ல"

அவர் சொன்னதில் இருந்த உண்மையை உணர்ந்தாலும் ரெட்டி அவரை சமாதானப்படுத்தினார். "கவலைப் படாதீர்கள். அவன் பிணத்தை கண்டிப்பாக அவர்களிடம் ஒப்படைக்கலாம். ஆனால் நாளை இரவே முடியுமா என்பது தான் சந்தேகம். ஏனென்றால் அவன் வாயைத் திறக்க எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்வான் என்று நமக்குத் தெரியாது."

"நீங்கள் அவன் அம்மாவை ஒப்படைக்கிற மாதிரி ஒப்படைத்து திரும்பவும் நம்மிடமே வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னீர்கள் அல்லவா? அந்தம்மாவை சித்திரவதைப் படுத்தினால் அவன் உடனடியாக வாயைத் திறக்காமலா போய் விடுவான்?" மந்திரி ஆர்வத்துடன் கேட்டார்.

"அவன் குணத்தை நான் அலசிய அளவிற்குப் பார்த்தால் அந்தம்மா மீது சிறு நகக் கீறல் கூட விழ அவன் அனுமதிக்க மாட்டான். அந்த

நிலைமையில் அவனுக்குத் தெரிந்த எல்லா உண்மையையும் அவன் சொல்லி விடுவான்...."

"அப்புறம் என்ன தான் பிரச்சனை?" பொறுமையிழந்து மந்திரி கேட்டார்.

ராஜாராம் ரெட்டி சொன்னார். "எப்போதுமே எதிரியைக் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது. அதனால் தான் யோசிக்கிறேன்...."

"எவ்வளவு யோசிக்க வேண்டுமோ அவ்வளவுமே இன்றே யோசித்து விடுங்கள். நம் திட்டத்தில் ஒரு குறையும் இருக்கக் கூடாது. நாளை காலை அவன் நம் கையில் சிக்கினால் இரவு வரைக்கும் அவனை சாகடிக்க நமக்கு நேரம் இருக்கிறது. அதற்குள் அவனிடம் இருந்து தெரிந்து கொள்ள வேண்டிய உண்மைகளைத் தெரிந்து கொண்டு விட வேண்டும். இல்லா விட்டால்..." மந்திரி தயங்கினார்.

ரெட்டி கேட்டார். "இல்லா விட்டால்....?"

"அவன் சொன்ன நாம் பார்க்க விரும்பாத பிணம் உங்களுடையதாகக் கூட இருக்கலாம்"

ராஜாராம் ரெட்டியின் முகத்தில் பேயறைந்த களை தெரிந்தது. மந்திரி தன்னை மிரட்டுகிறாரா இல்லை நிஜமாகவே தான் நினைப்பதைச் சொல்கிறாரா என்பதை அவரால் ஊகிக்க முடியவில்லை.

மந்திரி தாழ்ந்த குரலில் சொன்னார். "அவர்கள் நமக்கு பணம் நிறையவே தந்திருக்கிறார்கள். வாங்கிய பணத்திற்கு அவனைப் பிணமாக ஒப்படைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இல்லா விட்டால் அவனுடைய அம்மாவையும், அந்தப் பையனையுமாவது ஒப்படைக்கச் சொல்கிறார்கள். அப்படி செய்யா விட்டால் அவர்கள் எதிரிகள் பட்டியலில் நம் பெயர் தான் முதலிடத்திற்கு வரும் என்கிறார்கள். தாடிக்காரனே பயத்துடன் தான் இருக்கிறான் என்பது அவனைப் பார்த்தாலே தெரிகிறது. 'இந்த தடவை கோட்டை விட்டு விடாதீர்கள்' என்று சொல்லி கெஞ்சுகிறான்...."

ராஜாராம் ரெட்டி மந்திரியை ஆழ்ந்த யோசனையுடன் பார்த்தார். ஆனால் ஆரம்பத்தில் ஏற்பட்ட அதிர்ச்சி சிறிது சிறிதாய் அவருக்குக் குறைய ஆரம்பித்திருந்தது.

மந்திரி சொன்னார். "அவர்கள் கேட்கிற மாதிரி அந்த கிழவியையும்,

பொடியனையும் அவர்களிடம் ஒப்படைத்து விட்டு என்னவோ செய்யுங்கள் என்று விலகிக் கொண்டால் என்ன?"

"அவன் என்ன சொல்கிறான், எவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறான் என்பதைத் தெரிந்து கொள்ளும் அவசியம் நமக்கு நிறையவே இருக்கிறது. அவன் ஏதாவது ஆதாரம் வைத்திருந்தால் அதையும் வாங்கி அதில் நம்மைப் பற்றிய விவரம் என்ன இருக்கிறது, அதை அழிப்பது எப்படி என்றெல்லாம் யோசித்து செய்ய வேண்டி இருக்கிறது. அவர்களிடம் இந்த இரண்டு பேரையும் ஒப்படைத்தால் அவர்கள் அவர்களுடைய பாதுகாப்பையும், பழிவாங்குவதையும் தான் பார்ப்பார்களே ஒழிய நம்மைப் பற்றி எல்லாம் கவலைப்பட மாட்டார்கள். அதனால் தான் அமானுஷ்யனை நாமே கையாள்வது நமக்கு முக்கியமாக இருக்கிறது"

மந்திரிக்கு அவர் சொல்வது ஆம் என்று பட்டது. "அப்படியானால் நாளை இரவுக்குள் அவன் பிணத்தை அவர்களிடம் ஒப்படைக்க என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அதை எல்லாம் செய்யுங்கள். இதில் நாம் சின்ன தவறு கூட செய்து விடக்கூடாது" என்று சொன்னார்.

ரெட்டி முழு நம்பிக்கையோடு சொன்னார். "நம் திட்டத்தில் சிறிய தவறு கூட இல்லை. பயப்படாதீர்கள்"

"நம் திட்டத்தில் தவறில்லாமல் இருக்கலாம். ஆனால் அவன் எமகாதகன் என்பதை நினைக்கையில் தான் எனக்கு உதறலாக இருக்கிறது" என்று அங்கலாய்த்த மந்திரி ஒரு முக்கிய சந்தேகத்தை எழுப்பினார். "அந்த சைத்தான் நம்மிடம் வரும் முன் போனில் சொன்ன அந்த இடங்களைப் பற்றி ரகசியமாய் தெரிவித்து விட்டு வந்தால் என்ன செய்வது?"

"அதைப் பற்றி கவலைப்படாதீர்கள். அதைப் பெரிதாய் யாரும் நினைக்காதபடி நான் ஏற்பாடு செய்திருக்கிறேன்" என்று சொல்லி புன்னகைத்தார்.

*************

ஒரு நிமிடம் அமைதியாக நின்று யோசித்து விட்டு அக்‌ஷய் சஹானாவிற்குப் போன் செய்யத் தீர்மானித்தான். இன்னொரு முறை அவளிடம் பேச அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் இருக்குமா என்று அவனுக்கு நிச்சயமில்லை. அவளிடம் பேசாமலேயே போய் விட நேர்ந்தால் அவனையே அவனால் மன்னிக்க முடியும் என்று தோன்றவில்லை. மது மூலமாக அவளுக்குத் தகவல் அனுப்பி இருந்தாலும் அவள் செய்த உதவிகளை நினைத்துப் பார்க்கையில் அவள் மகன் திரும்ப வருவான் என்று நேரடியாகவே உறுதிமொழி

கொடுப்பது தான் நியாயம் என்று தோன்றியது. எண்களை அழுத்தினான்.

சஹானா பேசினாள். "ஹலோ"

அவள் குரலைக் கேட்ட போது மனதில் ஒரு சிலிர்ப்பை அக்ஷய் உணர்ந்தான்.

உடனடியாக எத்தனையோ உணர்ச்சிகள் அவனுள் அலைபாய்ந்தன. "நான் அக்ஷய் பேசுகிறேன்"

அவள் திடீரென்று ஊமையானது போல் தோன்றியது.

"சஹானா....." அக்ஷய் அழைத்தான்.

"..... சொல்லுங்கள்"

"வருண் நலமாய் இருக்கிறான். நாளைக்கு உங்களிடம் வந்து சேர்வான். இந்த இரண்டு நாளில் நீங்கள் எவ்வளவு கவலைப்பட்டு இருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும் .... நான் இப்படி எல்லாம் ஆகும் என்று சிறிதும் நினைக்கவில்லை. நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும்"

அவளும் பல்வேறு உணர்ச்சிகளின் கொந்தளிப்பில் இருந்ததால் மறுபடியும் பேச்சிழந்தாள். அவனை வரவழைக்க வேண்டி தான் வருணையும் அவன் தாயையும் கடத்தி இருக்கிறார்கள். அப்படி இருக்கையில் வருண் நாளை வருவான் என்று அவன் உத்தரவாதம் அளிக்கிறான் என்றால் இவன் அவர்களிடம் போகிறான் என்று தானே அர்த்தம். மகன் வரவில் தாயாக அவள் ஆனந்தப்பட்டாலும் அவன் அவர்களிடம் சிக்கிக் கொள்ளப் போகிறான் என்பதை நினைக்கையில் இதயத்தின் ஆழத்தில் இரத்தம் கசிந்தது.

அவனுக்கு அவள் மௌனம் கோபமாகத் தோன்றியது. அந்தக் கோபமும் நியாயமாகத் தோன்றியது. வருத்தத்துடன் சொன்னான். "உங்கள் கோபம் எனக்குப் புரிகிறது...."

அவளுக்கு உண்மையாகவே கோபம் வந்தது. அவனுக்கு குண்டடி பட்டு விழுந்த போது அவன் இழந்து போனது பழைய நினைவுகளை மட்டுமல்ல. அடுத்தவர்கள் மனதைப் புரிந்து கொள்கிற சக்தியையும் கூட இழந்து விட்டது போலத் தோன்றியது. ஆனால் அவன் தற்போது இருக்கிற ஆபத்தான நிலையில்- இனியொரு முறை அவன் பேசக் கிடைப்பானோ இல்லையோ என்ற சந்தேகப்பட வேண்டிய சூழ்நிலையில்- தன் கோபத்தைக் காட்ட விரும்பாமல் சொன்னாள். "எனக்கு உங்கள் மேல் கோபம் இல்லை. இது

எதுவுமே உங்களால் நடந்ததல்ல. முன்பின் தெரியாத போதே அவன் உயிரை நீங்கள் காப்பாற்றி இருக்கிறீர்கள். அதனால் இப்போதும் அவனை நீங்கள் காப்பாற்றி விடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது....."

அவளுடைய நம்பிக்கை அவன் மனதை நெகிழ வைத்தது. "நன்றி சஹானா.."

அடுத்து என்ன பேசுவது என்று இருவருக்கும் தெரியவில்லை. பேச எதுவுமே இல்லாத போது மட்டும் தான் மௌனம் நிலவும் என்பதில்லை. பேச ஏராளமாக இருக்கும் போதும் சில சமயங்களில் சிலரால் பேச முடிவதில்லை. ஒரு நிமிட மௌனத்திற்குப் பின் அவள் சொன்னாள். "மது சிறிது நேரத்திற்கு முன் போன் செய்தான். என்ன உதவி வேண்டுமானாலும் அவனிடம் கேட்க வேண்டுமாம். நீங்கள் போன் செய்தால் சொல்லச் சொன்னான்."

"மது சொன்னதே எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. நன்றி சொன்னேன் என்று அவனிடம் சொல்லி விடுங்கள்"

"அக்ஷய்! அது அவன் வெறும் வார்த்தைக்காக சொன்னதல்ல. நிஜமாகவே ஆத்மார்த்தமாக சொன்னது. நீங்கள் ஏதாவது வேலை சொன்னால் அவன் சந்தோஷப்படுவான். உங்களுக்கு இந்த

நேரத்தில் ஏதாவது விதத்தில் அவன் உபயோகமாகலாம்"

"சரி சஹானா. தேவைப்பட்டால் கண்டிப்பாகச் சொல்கிறேன்"

"அத்தை உங்களிடம் பேச வேண்டும் என்று சொல்கிறார்கள். பேசுங்கள்"

செல்போன் கைமாறி மரகதத்தின் குரல் கேட்டது. "அக்ஷய்! எப்படி இருக்கிறாய்?"

"நன்றாக இருக்கிறேன் பெரியம்மா" என்று புன்னகையுடன் சொன்னான் அக்ஷய்.

"உனக்கு உன் குடும்பம் பற்றி எல்லாமே தெரிந்து விட்டது என்று கேள்விப்பட்டேன். உனக்கு கல்யாணம் ஆகி விட்டிருந்ததா?"

இந்தக் கேள்வியை இந்த அவசரத்தில் மாமியார் கேட்டது தேவையில்லாதது என்று சஹானாவிற்குத் தோன்றினாலும் அந்தக் கேள்விக்கு அவன் என்ன பதில் சொல்கிறான் என்பதை அறிவதற்குள் இதயம் வேகமாய் படபடத்தது.

"இல்லை பெரியம்மா"

மரகதம் ஒரு பெரும் நிம்மதியை உணர்ந்தாள். மருமகளைப் பார்த்து ‘ஆகவில்லையாம்’ என்று வாயசைத்து சைகையுடன் சொன்னாள்.

அக்‌ஷய் மரகதத்திடமும் சொன்னான். "பெரியம்மா வருண் நாளைக்கு வீட்டுக்கு வந்து சேர்ந்து விடுவான். என்னால் உங்களுக்கு ஏற்பட்ட சிரமத்திற்கு நீங்கள் மன்னிக்க வேண்டும்"

மரகதம் குரல் தழுதழுக்க சொன்னாள். "நீ சொன்ன பிறகு அவன் வந்து விடுவான் என்பதில் எனக்கு சந்தேகம் இல்லை. நீயும் திரும்பி வர வேண்டும் அக்‌ஷய். நாங்கள் எல்லாருமாய் சேர்ந்து உனக்காகவும் காத்துக் கொண்டிருப்போம்"

அக்‌ஷய் எதுவும் சொல்ல முடியாமல் போனை வைத்து விட்டான்.

மரகதம் செல்போனை மருமகளிடம் கொடுத்து விட்டு தளர்ச்சியுடன் சமையல் அறைக்குள் தஞ்சமடைந்தாள். சிறிது நேரத்தில் அவள் வேலை செய்தபடியே கந்தர் சஷ்டி கவசத்தை முணுமுணுக்க ஆரம்பித்தது சஹானா காதில் விழுந்தது. இந்த கந்தர் சஷ்டி கவசம் அவனுக்காக என்று அவளுக்குப் புரிந்த போது கண்கள் ஈரமாயின.

************

சொன்னபடி மகேந்திரன் முக்கால் மணி நேரத்திற்கு முன்பாகவே வந்து சேர்ந்தான். அவனை யாரும் பின் தொடரவில்லை என்று உறுதிப் படுத்திக் கொண்ட அக்‌ஷய் அவனை ஓட்டல் அறைக்கு அழைத்துச் சென்றான். செல்லும் வழியில் அக்‌ஷய் அவனிடம் அதிகம் பேசவில்லை. மகேந்திரன் கேட்ட ஓரிரு கேள்விகளுக்கும் அவன் தந்தி வாசகங்களாக பதில் சொன்னான்.

ஓட்டல் அறையில் ஆனந்தைப் பார்த்த போது மகேந்திரன் திகைத்துப் போனான். அவனை உட்கார வைத்து ஆனந்த் எல்லாவற்றையும் சுருக்கமாகச் சொன்ன போது மகேந்திரனுக்கு ஏதோ விறுவிறுப்பான ஆங்கிலத் திரைப்படக் கதை கேட்பது போல இருந்தது. தாயின் கடத்தல் பற்றியும், அக்‌ஷயை ஒப்படைக்க வேண்டி இருப்பதையும் சொன்ன போது ஆனந்தின் குரல் உடைந்தது. ஆனால் அக்‌ஷய் யாருடைய கதையையோ யாரோ சொல்கிறார்கள் என்பது போல அமைதியாக இருந்தான்.

கடைசியில் ஆனந்த் சொன்னான். "…. இப்போதைக்கு நம்மிடம் இருப்பதெல்லாம் அனுமானங்கள் தான். ஆச்சார்யா குறித்து வைத்திருக்கும் டெல்லி இடங்கள் வெடிகுண்டு வெடிக்கப் போகும் இடங்களாக இருக்கலாம். ஆனால் அது எப்போது நடக்கப் போகிறது என்றும், யார், ஏன் செய்யப்போகிறார்கள் என்றும்

நமக்குத் தெரியாது. எதிரிகளின் வேகத்தைப் பார்த்தால் அது சீக்கிரமாகவே நடக்கலாம் என்று தெரிகிறது...."

மகேந்திரன் சொன்னான். "எதற்கும் அந்த இடங்களில் வெடிகுண்டு வெடிக்கலாம் என்று முன்கூட்டியே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எச்சரிக்கை செய்வது நல்லதல்லவா?"

"ஆரம்பத்தில் ஜெயின் சொல்லி, பொத்தாம் பொதுவாக இடங்களைச் சொல்லாமல் டெல்லியில் முக்கிய இடங்களில் குண்டு வைக்கப்பட இருக்கிறது என்று யாரோ தெரிவிப்பது போல தெரிவித்தோம். அது திருப்பதியில் மொட்டையைத் தேடுவது போல ஆகிவிட்டது. இப்போது சிறிது நேரத்திற்கு முன் இந்த இடங்களைச் சொல்லியே பெயர் தெரிவிக்காமல் தகவல்களைப் போனில் சொன்னேன். ஆனால் ...."

"ஆனால்....?"

ஆனந்த் ஏதோ சொல்ல வாயைத் திறந்தவன் டிவியில் ஓடிக் கொண்டிருந்த செய்தியைப் பார்த்து ஒலியை அதிகப்படுத்தினான். "...கடந்த 24 மணி நேரமாக டெல்லி, மும்பை, சென்னை, கல்கத்தா போன்ற நகரங்களில் வெடிகுண்டு வைக்கப்பட இருக்கிறது என்று கூறி சரமாரியாக போன்கால்களும், மொட்டைக் கடிதங்களும் வந்து

கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு தகவலும் மற்ற தகவலுக்கு முரணாக இருக்கின்றன. போலீசார் சொன்ன இடங்களுக்கெல்லாம் சென்று தகவல் பொய் என்று அறிந்த வண்ணம் இருக்கிறார்கள். இது போன்ற பொறுப்பற்ற பொய்யான தகவல்களை தர ஒரு கும்பலே ஈடுபட்டுள்ளது போல் தெரிகிறது. அந்த நபர்களைக் கண்டு பிடித்து சட்டப்படி தண்டிக்க ஒரு போலீஸ் குழு அமைக்கப்பட்டுள்ளது...."

ஆனந்த் ஒலியைக் குறைத்து விட்டு சொன்னான். "அக்ஷய் ஒருவேளை சொல்லி விடக்கூடும் என்று சந்தேகப்பட்டு அவர்கள் முந்திக் கொண்டு ஏகப்பட்ட பொய்யான செய்திகளை கட்டவிழ்த்து விட்டார்கள். அத்தனை செய்திகளுக்குள் நடுவில் இந்த உண்மையான செய்தியும் பொய்யானதாகவே எடுக்கப்பட்டிருக்கிறது. நம்மிடம் இப்போது நேரம் அதிகம் இல்லை. அக்ஷயிற்கு வந்திருக்கும் நினைவுகளும் அரைகுறையாகத் தான் இருக்கின்றன. நம் எதிரிகளோ புத்திசாலிகளாகவும், அதிகாரமும் செல்வாக்கும் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்...."

மகேந்திரன் அழுத்தமாகச் சொன்னான். "இந்தக் குறுக்கு புத்தி கண்டிப்பாக ரெட்டியினுடையது தான். அதில் சந்தேகமில்லை"

ஆனந்த் சொன்னான். "இருக்கலாம். இப்போது இந்த சிக்கலான

சூழ்நிலையில் நாம் இனி என்ன செய்வது என்பது தான் கேள்வி"

அக்‌ஷய் அமைதியாகச் சொன்னான். "முதலில் அம்மாவையும் வருணையும் காப்பாற்ற வேண்டும். அடுத்ததைப் பிறகு யோசிப்போம்"

மகேந்திரன் சொன்னான். "அதில் என்ன பிரச்னை இருக்கிறது? உன்னை ஒப்படைத்தால் ஆனந்திடம் உங்கம்மாவையும், வருணையும் ஒப்படைப்பதாய் அவர்கள் சொல்லி இருக்கிறார்களே. உண்மையான பிரச்னை என்ன தெரியுமா? உன்னை அவர்கள் மூன்று நாட்கள் வைத்திருந்து அனுப்பி விடுவதாகச் சொன்னதை நம்ப முடியவில்லை. உன்னை ஆபத்தில் இருந்து காப்பாற்றுவது தான் முக்கியமாய் நாம் கவனம் செலுத்த வேண்டியது"

அக்‌ஷய் அமைதியாகச் சொன்னான். "என்னைப் பற்றி யாரும் கவலைப்படாதீர்கள். நான் சமாளித்துக் கொள்வேன். குறுக்கு புத்தியும், அறிவுக்கூர்மையும் இருக்கிற நம் எதிரிகள் அம்மாவையும், வருணையும் ஒப்படைப்பதில் தான் எனக்கு இன்னும் சந்தேகம் இருக்கிறது. நாம் கவனம் செலுத்த வேண்டியது அவர்களைக் காப்பாற்றுவதில் தான்...."

ஆனந்தும் மகேந்திரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். 'நான் சமாளித்துக் கொள்வேன். என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்' என்று அக்‌ஷய் சொன்ன விதத்தைப் பார்த்தால் அவன் தன் மரணத்தைப் பற்றி சிறிதும் கவலைப்படவில்லை என்பதாகவே அவர்களுக்குப் பட்டது. ஆனால் அவர்களை அதைப் பற்றி மேலே யோசிக்க விடாமல் அக்‌ஷய் சொன்னான். "நமக்கு இப்போது முதல் பற்றாக்குறை நேரம் தான். அதனால் அதை வீணாக்காமல் அடுத்ததாக நாம் என்ன செய்யலாம் என்று யோசிப்போம்"

ஆனந்த் சொன்னான். "எனக்கு மிஸ்டர் எக்ஸ் சொன்னதில் ஒரு நெருடல் என்ன என்றால் நாம் போகிற டாக்சியைத் திருப்பி அனுப்பி விட வேண்டுமாம். உன்னை ஒப்படைத்து விட்டு அம்மா வருணை அழைத்துக் கொண்டு நான் வருவது எப்படி என்று அந்த ஆள் சொல்லவே இல்லை. அந்த அதிகாலை நேரத்தில் ஏதாவது டாக்சி கிடைக்கிற வரையில் நாங்கள் என்ன செய்வது?"

மகேந்திரன் சொன்னான். "ஒரு வேளை அவர்களுடைய ஆட்களே திரும்பவும் வந்து உங்கள் மூன்று பேரையும் துப்பாக்கி முனையில் மறுபடி கடத்திக் கொண்டு போனாலும் போகலாம்"

அக்ஷய் சொன்னான். "அதுவும் சாத்தியம் தான். முதலில் நமக்கு அந்த இடம் பற்றி விவரமாகத் தெரிந்தால் சரியாகத் திட்டமிடலாம்."

ஆனந்த் மகேந்திரனிடம் கேட்டான். "மகேந்திரன் நமக்கு அந்த இடத்தைப் பற்றி முழு விவரம் கிடைத்தால் தேவலை. ஏற்பாடு செய்ய முடியுமா?"

"அதில் ஒரு பிரச்சனையும் இல்லை ஆனந்த்...." என்று சொன்ன மகேந்திரன் தன் செல் போனில் இரண்டு நபர்களுக்குப் போன் செய்தான்.

ஒரு மணி நேரத்திற்குள் அவர்களுக்கு வேண்டிய தகவல்கள் கிடைத்தன. மகேந்திரன் தனக்கு வந்த தகவல்களை ஒரு தாளில் குறிப்பெடுத்துக் கொண்டான். பின் ஆனந்திடமும் அக்ஷயிடமும் சொன்னான்.

"அவர்கள் நம்மை விட ஒருபடி முன்னாலேயே யோசிக்கிறார்கள் என்பது தெளிவாகவே தெரிகிறது. என் இரண்டு நண்பர்கள் தனித் தனியாக அந்தப் பகுதிக்குப் போயிருக்கிறார்கள். பாதி கட்டி முடித்த அந்த வணிக வளாகத்தில் கட்டிடத் தொழிலாளர்கள் வேஷத்தில் கிட்டத்தட்ட 25 போலீஸ்காரர்களும், வேறு சில ஆட்களும்

இருக்கிறார்களாம். அதே போல் அதற்கு ஒரு மைல் சுற்று வட்டாரத்திலும் அங்கங்கே கண்காணிப்புக்கு ஆட்கள் இப்போதிலிருந்தே நிறுத்தப்பட்டிருக்கிறார்களாம். இதில் சுவாரசியமான விஷயம் என்னவென்றால் அந்த கட்டிட காண்ட்ராக்டருக்கும், கட்டிட சொந்தக்காரருக்கும் இடையே ஏதோ கருத்து வேறுபாடு ஏற்பட்டு கட்டிட வேலை மூன்று மாதமாய் நின்று போயிருக்கிறதாம். அதனால் இப்போது அங்கே ஏதோ வேலை பார்ப்பது போல் கூடியிருக்கிற ஆள்கள் எதிரியின் ஆட்கள் தான் என்பது நிச்சயம். அதிலும் யாராவது அங்கே சிறிது நின்றால் கூட கூப்பிட்டு என்ன ஏது என்று விசாரிக்கிறார்களாம். என் நண்பன் ஒருவன் ஏதோ வழி கேட்பது போல கேட்டு விட்டு நகர்ந்திருக்கிறான்"

தலையசைத்த ஆனந்த் "சரி அந்த தெருவைப் பற்றியும் பகுதியைப் பற்றியும் சொல்"

"ஆக்ரா நெடுஞ்சாலையில் இருந்து பிரியும் அந்த சாலை சுமார் எட்டு கிலோமீட்டர் நீளம் உடையது. கடைசியில் இருப்பது ஒரு தனியார் கல்லூரி தான். அதோடு சாலை முடிந்து விடுகிறது. ஏழாவது கிலோமீட்டர் தூரத்தில் தான் அவர்கள் நமக்கு சொன்ன கட்டிடம் இருக்கிறது. ஆக்ரா நெடுஞ்சாலையில் இருந்து முதல் 2 கிலோமீட்டர் வரை சில வீடுகள் இருக்கின்றன. மூன்றாவது

கிலோமீட்டரிலிருந்து கடைசி வரை இடையிடையே இப்போது தான் சில வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. அதனால் அந்த சாலையில் கல்லூரி ஆரம்பிக்கும் நேரத்திலும், கல்லூரி முடியும் நேரத்திலும் தவிர மற்ற நேரங்களில் அதிகமாய் போக்குவரத்தோ ஜன நடமாட்டமோ கிடையாது. அதிலும் இரவு 10 மணிக்கு மேல் காலை ஏழு மணி வரை அந்த சாலை சுத்தமாகவே வெறிச்சோடி தான் கிடக்கும்...."

ஆனந்த் சொன்னான். "அதனால் தான் அவர்கள் அந்த இடத்தை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்...... நம்மை வரச் சொல்லி இருக்கிற அந்த இடத்து கட்டிடத்திற்கு எதிரில் என்ன இருக்கிறது?"

"காலி இடம் தான்"

ஆனந்த் சொன்னான். "நாம் அங்கு போகும் போதும் கண்டிப்பாக அந்த கட்டிடத்தில் நிறைய ஆட்களை துப்பாக்கியோடு அவர்கள் மறைவாக நிறுத்தி வைத்திருப்பார்கள்".

மகேந்திரன் தலையசைத்தான்.

"இந்த சாலையில் குறுக்காக வேறெதாவது தெருக்கள் இருக்கின்றனவா?" அக்ஷய் கேட்டான்.

"ஒரே ஒரு தெரு தான் குறுக்கில் செல்கிறது. அது அந்த கட்டிடத்திற்கும் கல்லூரிக்கும் இடையே வருகிறது"

"அந்த தெரு எங்கே முடிகிறது?"

"அது அரை கிலோமீட்டர் தூரத்தில் ஒரு எம்.பி வீட்டோடு முடிகிறது. அந்தக் கல்லூரி அந்த எம்.பிக்கு சொந்தமானது. அதனால் அதற்கு பக்கத்தில் பெரிய பங்களா ஒன்றை அந்த ஆள் நீச்சல் குளத்தோடு கட்டி இருக்கிறார். அந்த ஆள் மாதம் ஒரு முறை வார இறுதி நாட்களில் அங்கு வந்து தங்கி இருப்பார்"

அக்‌ஷய் சொன்னான். "அந்த எம்.பி பற்றி சொல்"

அதை எதற்குக் கேட்கிறான் என்று விளங்கா விட்டாலும் மகேந்திரன் சொன்னான். "அந்த ஆள் ஆளுங்கட்சி எம்.பி. வயது 35. கல்யாணம் செய்து கொள்ளவில்லை. ஜாலி பேர்வழி. இப்போது அவர் பிரபல நடிகை ஒருத்தியுடன் தொடர்பு வைத்திருப்பதாக ஒரு கிசு கிசு இருக்கிறது...."

அக்‌ஷய் தொடர்ந்து அந்த பகுதியைப் பற்றி நிறைய கேள்விகள் கேட்டான். சில கேள்விகளுக்கு மகேந்திரன் தன் நண்பர்களை

மறுபடி அழைத்து பதில் தெரிந்து கொள்ள வேண்டி இருந்தது.

கடைசியில் மூவரும் என்ன செய்வது என்று ஆலோசித்தார்கள். ஆனந்த் சொன்னான். "என்ன செய்வதாக இருந்தாலும் நாம் அம்மாவும், வருணும் நம் வசம் வந்து சேரும் வரை ஒன்றும் செய்ய முடியாது. நாம் முன் கூட்டி ஆட்களை அங்கே அனுப்பி வைக்கவோ, அங்கு வேறெதாவது ஏற்பாடு செய்யவோ முடியாது. கண்டிப்பாக இன்று இரவில் இருந்தே அவர்கள் ஆட்கள் அங்கே இன்னும் அதிகமாக குவிந்து விடுவார்கள். என்ன செய்தாலும் அவர்களுக்குத் தெரிந்து விடும்....."

அதை ஆமோதித்த அக்‌ஷய் சொன்னான். "...அப்படியானால் என்ன செய்வதாக இருந்தாலும் அம்மாவும் வருணும் வந்து சேர்ந்த பிறகு செய்ய வேண்டும்..."

மூன்று பேரும் யோசித்தார்கள். பல விதமான திட்டங்கள் அவர்கள் மனதில் எழுந்தாலும் அதில் கூடவே சில சிக்கல்களும் இருந்தன. கடைசியில் ஒரு திட்டத்தை அக்‌ஷய் சொன்னான்.

கேட்டு விட்டு ஆனந்தும் மகேந்திரனும் யோசித்தார்கள். ஆனந்த் சொன்னான். "திட்டம் பரவாயில்லை. ஆனால் அதை செயல்படுத்தும் நேரத்திலும், விதத்திலும் சிறிய தவறு நடந்தால்

கூட நமக்கு ஆபத்து தான்...."

"நம் நிலைமையே இப்போது ஆபத்தில் தான் இருக்கிறது. அதனால் அதன் தீர்வில் ஆபத்தில்லாமல் இருக்காது."

"அக்‌ஷய், என்னைத் தவறாக நினைத்துக் கொள்ளாதே. இதை நம்மால் மட்டும் செய்ய முடியும் என்று தோன்றவில்லை" மகேந்திரன் வெளிப்படையாகச் சொன்னான்.

"அதற்கு இன்னொரு ஆள் நமக்கு உதவ முடியும்"

"யாரது"

"மது" என்று சொன்ன அக்‌ஷய் மது யார் என்று அவர்களுக்கு விளக்கினான்.

"நமக்காக அவன் செய்வானா?"

"செய்வான் என்று நினைக்கிறேன். எதற்கும் அவனைக் கேட்டுப் பார்க்கலாம்"

ஆனந்த் கேட்டான். "அவனை நம்ப முடியுமா அக்‌ஷய்"

அக்ஷய் சொன்னான். "நம்பலாம்"

அக்ஷய் வெளியே சென்று பொதுத் தொலைபேசி மூலம் மதுவிற்குப் போன் செய்தான். மது பேசினான். "ஹலோ"

"மது நான் அக்ஷய் பேசுகிறேன். சஹானாவிடம் நான் பேசிய போது நீ எனக்கு என்ன உதவி வேண்டுமானாலும் செய்யத் தயார் என்று சொன்னதாகச் சொன்னாள். அது ஒரு கண நேர இரக்கத்தில் சொன்னதா? இல்லை உண்மையாகவே சொன்னதா?"

"அக்ஷய் என்ன உதவி வேண்டும் கேள். செய்கிறேன்"

"நேரில் வா. சொல்கிறேன்" என்ற அக்ஷய் மதுவிற்கு வரவேண்டிய இடத்தை விவரித்தான்.

"உடனே கிளம்புகிறேன் அக்ஷய்"

அக்ஷய் நன்றி சொல்வதற்குள் மது போன் இணைப்பைத் துண்டித்து விட்டான்.

******

'வீடியோ கேம்ஸ்' விளையாடிக் கொண்டிருந்த வருணை சாரதா இரக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். கடத்திக் கொண்டு வந்தவர்கள் அவர்கள் இருவருக்கும் எந்த விதக் குறையும் இருக்கக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தார்கள். சாப்பிடும் பொருள்கள், வருணுக்கு விளையாட்டுப் பொருட்கள் மற்றும் காமிக்ஸ் புத்தகங்கள், சாரதாவிற்கு ஆன்மிக, கதைப் புத்தகங்கள், என்று அவர்களுக்கு தேவைப்பட்டவை என நினைத்ததை எல்லாம் போதுமான அளவு அங்கே வைத்திருந்தார்கள். ஆனாலும் விளையாடும் வயதுள்ள அந்த சிறுவனுக்கு அந்த வீட்டுக்குள்ளே அடைபட்டுக் கிடப்பது பெரிய தண்டனையாகவே இருந்தது. விளையாடி, காமிக்ஸ் படித்து அலுத்த போதெல்லாம் அவளிடம் வந்து அவன் பேசுவான். பேச்சு எப்போதுமே அக்‌ஷய் பற்றியே இருக்கும். "சின்ன வயதில் அக்‌ஷய் அங்கிள் என்னவெல்லாம் செய்வார், குறும்பு செய்வாரா?" என்றெல்லாம் கேட்பான்.

மகனுடைய சிறு வயதுக் குறும்புகளை ரசிக்கும் முன்னே அவன் காணாமல் போனதை அவள் சொன்னாலும் வருண் விடாமல் கேட்பான். "அவர் காணாமல் போவதற்கு முன்னால் என்னவெல்லாம் செய்தார்"

தன் மகன் மீது அவனுக்கிருந்த அளவு கடந்த பாசத்தை எண்ணி சாரதாவால் வியக்காமல் இருக்க முடியவில்லை. கண்டிப்பாக அக்‌ஷய் அங்கிள் தங்கள் இருவரையும் காப்பாற்றி விடுவார் என்பதில் அவனுக்கு எள்ளளவும் சந்தேகம் இருக்கவில்லை. அவன் அவ்வப்போது சாரதாவிற்கு தைரியம் சொன்னான்.

அவனிடம் பேச்சுக் கொடுக்கும் போது அவன் தன் தந்தை பற்றி பேச நேர்ந்த போதெல்லாம் முகம் வாடினான். அவன் சொன்ன ஒருசில நிகழ்வுகள் அவனுடைய தந்தை ஒரு மட்டமான மனிதன் என்பதை அவளால் கணிக்க முடிந்தது. "எப்படிப்பட்ட மனிதர்கள் எல்லாம் உலகில் இருக்கிறார்கள்" என்று நினைத்துக் கொண்டாள்.

அவள் மனம் அக்‌ஷயைப் பற்றி அதிகம் நினைத்தது. வருண் அளவிற்கு அவளால் தைரியமாக இருக்க முடியவில்லை. சற்று நேரத்திற்கு முன் ஒருவன் வந்து "நாளை காலை மூன்றரை மணிக்கு தயாராக இருங்கள். உங்களை உங்கள் வீட்டாரிடம் ஒப்படைத்து விடப்போகிறோம்" என்று சொல்லி விட்டுப் போனான். வருண் அதைக் கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டான். தாயைப் பிரிந்து இது வரை பிரிந்திராத அவனுக்கு வீடு திரும்புகிறோம் என்பது பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. ஆனால் அந்தக் கணத்தில் இருந்து சாரதாவிற்கு வயிற்றை ஏதோ ஒன்று பிசைய ஆரம்பித்தது. அக்‌ஷயிற்கு என்ன ஆகும் என்ற பயம் அவளை பலமாக

ஆட்கொண்டது. என்ன தான் மனதை வேறு பக்கம் திருப்பினாலும் மனம் திரும்ப அதே பயத்தில் நின்றது.

பெருமூச்சு விட்டவளாக வருணிடம் சொன்னாள். "வருண் சாப்பிடுகிறாயா? ஏதாவது தயார் செய்யட்டுமா?"

வருண் திரும்பி அவளைப் பார்த்தபடி கேட்டான். "நீங்களும் சாப்பிடுகிறீர்களா பாட்டி"

"எனக்கு வேண்டாம்"

"ஏன்?"

"நான் விரதம்"

"எதற்கு?"

அவனிடம் எப்படி விளக்குவது என்று புரியாமல் விழித்த சாரதா சுருக்கமாகச் சொன்னாள். "அக்ஷய் அங்கிளுக்கு எந்த பிரச்னையும் வரக்கூடாது என்று கடவுளை வேண்டிக் கொண்டிருக்கிறேன். அதற்கு விரதம்..."

"விரதம் இருந்தால் கடவுள் அவரைப் பார்த்துக் கொள்வாரா?"

"ஆமாம்"

"அப்படியானால் நானும் சாப்பிடாமல் விரதம் இருக்கிறேன். இரண்டு பேர் விரதம் இருந்தால் கடவுள் இன்னும் நன்றாகப் பார்த்துக் கொள்வாரில்லையா?"

சாரதா கண் கலங்கினாள்.

93

ராஜாராம் ரெட்டியால் அன்றிரவு உறங்க முடியவில்லை. அரை மணி நேரத்திற்கொரு முறை அந்தக் கட்டிடத்தின் சுற்றுப் புறத்தில் நிறுத்தி வைத்திருந்த ஆட்களிடம் போன் செய்து பேசினார். ஏதாவது சந்தேகப்படும் படியான நிகழ்வுகள் நடந்திருக்கின்றதா என்று கேட்டார். ஒன்றுமில்லை என்ற பதில் வந்த போது அதை அவரால் ஒத்துக் கொள்ள முடியவில்லை. குடைந்து கேட்ட போது அன்று இருவேறு சமயங்களில் இரண்டு இளைஞர்கள் அந்த வழியாக

ஸ்கூட்டரில் போனார்கள் என்று தெரிந்தது.

அவர்கள் அந்த கட்டிடத்தைப் பார்த்தபடி நின்றார்கள் என்றறிந்த போது ரெட்டி உஷாரானார். "விசாரித்தீர்களா அவர்களை" என்று கேட்டார்.

"அவர்களே எங்களை விசாரித்தார்கள் சார். ஒருவன் கல்லூரிக்குப் போகும் சாலை தானே என்று கேட்டான். இன்னொருவன் கட்டிக் கொண்டிருப்பது கல்லூரிக்கான ஹாஸ்டலா என்று கேட்டான்."

"சொன்னவுடன் போய் விட்டார்களா? இல்லை சிறிது நேரம் அந்தக் கட்டிடத்தையே பார்த்துக் கொண்டு நின்றார்களா?"

"பெரிதாய் கவனித்த மாதிரி தெரியவில்லை சார். உடனே போய் விட்டார்கள்"

"கேட்டவர்கள் கல்லூரியை நோக்கியே போனார்களா இல்லை திரும்பிப் போய் விட்டார்களா?"

"கல்லூரியை நோக்கி தான் போனார்கள் சார்"

"இப்போது கல்லூரி விடுமுறை தானே. பின் ஏன் போனார்கள்?"

"மாணவர்களுக்கு தான் விடுமுறையே ஒழிய ஆபிஸில் வேலை பார்ப்பவர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை இருக்கிறது போல தான் தெரிகிறது. இவர்கள் கல்லூரி விஷயமாய் ஏதோ கேட்டுத் தெரிந்து கொள்ளப் போனது போல் தான் தெரிகிறது"

பேசி முடித்த பிறகும் சந்தேகம் ஏனோ இருக்கவே செய்தது. ஆனால் ஆனந்த் சென்னைவாசியானதால் டெல்லியில் சிபிஐ அலுவலகத்தில் உதவக் கூடியவர்கள் யாரும் இல்லை. மேலும் அவன் இங்கு வந்த பிறகும் ஜெயினைத் தவிர வேறு யாரிடமும் நெருங்கியும் பழகவில்லை. அவனுக்கு உறவினர்கள் யாராவது டெல்லியில் இருக்கிறார்களா என்பது பற்றி துப்பறிந்து பார்த்த போது அப்படியும் யாரும் இருக்கவில்லை. சென்னை நண்பர்களை அழைத்து உதவி கேட்கும் அளவு அவனுக்கு நேரமில்லை. அப்படியே ஒரு வேளை அவர்கள் யாரையாவது பணம் கொடுத்துத் தெரிந்து வர அனுப்பி இருந்தாலும் கூட அதுவும் நல்லதற்குத் தான் என்று நினைத்தார். இங்கு முன்பே தயாராக இருப்பதை தெரிந்து கொள்வது அவர்கள் முட்டாள்தனமாக எதையும் செய்யாமல் தடுக்கும் என்று நினைத்தார்.

இருந்த போதிலும் அக்ஷய் போன்ற ஒருவன் ஆனந்த் போன்ற

இன்னொரு புத்திசாலியுடன் சேர்ந்து இயங்கும் போது ஒன்றுமே செய்யாமல் வெறுமனே வந்து மாட்டிக் கொள்வார்கள் என்று அவரால் ஒத்துக் கொள்ள முடியவில்லை. அவர்களுக்கு தாயையும் அந்தப் பொடியனையும் காப்பாற்றுவதற்கு அதை விட்டால் வேறு வழியில்லை என்றாலும் கூட ஏதாவது ஒரு நடவடிக்கையை அவர்களிடம் இருந்து எதிர்பார்த்தார்.

அவன் இடத்தில் தான் இருந்திருந்தால் என்னவெல்லாம் செய்திருப்போம் என்று யோசித்தார். ஒரு தாளில் அதை எல்லாம் எழுதினார். அதற்கு எப்படி முடிவெடுப்பது என்று யோசித்தார். அதையும் எழுதினார். உடனே அதற்கு ஏற்ற மாதிரி முன்னேற்பாடுகளை செய்தார். டாக்சியில் வருவதால் அந்த டாக்சி டிரைவரை தங்களுக்கு உதவ அவர்கள் ஏற்பாடு செய்ய வாய்ப்புண்டு என்று தோன்றவே போன் செய்து சொன்னார். "நாளை காலையில் அவர்களை இறக்கி விட்டு அந்த டாக்சி போகாவிட்டால், இல்லை அந்த டாக்சி டிரைவர் அந்தப் பக்கத்திலேயே எங்கேயாவது சுற்றிக் கொண்டிருந்தால் உடனடியாக அவனை சுட்டுத் தள்ளி விடுங்கள்..."

இன்னொரு போன் செய்து பேசினார். "அந்த கிழவியும், பொடியனும் என்ன செய்கிறார்கள். எதுவும் பிரச்சனை இல்லையே"

"இல்லை சார். ஒரு பிரச்னையும் இல்லை. இரண்டு பேரும் இன்றைக்கு இரவு சாப்பிடவில்லை"

"ஏனாம்?"

"அந்த ஆளைக் கடவுள் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டுகிறார்களாம்"

"முட்டாள்கள்" என்று இணைப்பை ரெட்டி துண்டித்தார். ஒரு காலத்தில் இது போன்ற சின்ன பாசமுள்ள விஷயங்கள் அவரை நிறையவே நெகிழ்த்தும். ஆனால் இப்போதோ முட்டாள்தனமாகவே அவருக்குத் தோன்றுகின்றன. மேலும் கடவுள் இருப்பதாக அவர் நினைக்கவில்லை. இருந்திருந்தால் ஒரு காலத்தில் நாணயமாக அவர் இருந்த போது அவரைக் காப்பாற்றி இருக்க வேண்டும்...

அவருடைய செல்போன் ஒலித்தது. "ஹலோ"

"எல்லாம் சரியாகத் தானே போய்க் கொண்டிருக்கிறது" மந்திரியின் குரல் கேட்டது.

"எல்லாம் கச்சிதமாய் இருக்கிறது. பயப்படாதீர்கள்"

"அப்படியானால் நாளைக்கு இரவுக்குள் அவன் பிணத்தை என்னால் பார்க்க முடியும். சரிதானே."

"கண்டிப்பாக..."

"அவன் பிணத்தைப் பார்த்த பின் நான் முதலாவதாக செய்யக் கூடிய வேலை என்ன தெரியுமா?"

"என்ன?"

"நிம்மதியாய் தூங்குவேன். நான் சரியாகத் தூங்கி நிறைய நாளாகி விட்டது ரெட்டி. எட்டு மணி நேரம் நிம்மதியாய் தூங்க முடிந்தால் அது போதும் எனக்கு"

ராஜாராம் ரெட்டி யோசித்துப் பார்த்தார். அவரும் தூங்கி பல நாளாகி இருந்தது...

******

மதுவும் வந்த பின்பு அக்‌ஷய் அவனை ஆனந்திற்கும் மகேந்திரனுக்கும் அறிமுகப்படுத்தி விட்டு, இது வரை நடந்தவற்றை சுருக்கமாகத் தெரிவித்து விட்டு உடனடியாகத் தன் திட்டத்தை

விளக்கினான். யார் யார் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொன்னான். ஆனால் அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை அவரவர்களுக்கே விட்டு விட்டான். பின் மதுவிடம் கேட்டான்.

"இதில் உன் பங்கு முக்கியம் மது. உன்னால் இதைச் செய்ய முடியுமா?

மது சொன்னான். "நான் இந்த தொழிலிற்கு வந்து ஏழு வருஷங்கள் ஆகின்றன. எனக்கு இது கூட முடியவில்லை என்றால் நான் இதில் இருக்க அருகதையே இல்லாதவன் என்றாகிறது. கவலையை விடு அக்ஷய். இந்த வேலையை நான் பார்த்துக் கொள்கிறேன்."

ஆனந்த் மதுவிடமும், மகேந்திரனிடமும் சொன்னான். "இதில் நீங்கள் யாரைப் பயன்படுத்துவதாக இருந்தாலும் அவர்கள் முழு நம்பிக்கையான ஆட்களாக இருப்பது முக்கியம். சிறிது பிசகினாலும் நம் காரியம் கெட்டு விடும்"

இருவரும் தலையசைத்தார்கள்.

மது அக்ஷயிடம் கேட்டான். "இதில் உன் பாதுகாப்புக்கு நீ எதையும் செய்யவில்லையே"

அக்ஷய் சிரித்தான். "அவர்கள் என்னிடம் பல தடவை ஏமாந்திருக்கிறார்கள். அதனால் என் விஷயத்தில் கொஞ்சம் கூட அஜாக்கிரதையாக இருக்க மாட்டார்கள். கண்டிப்பாக அங்கு போய் சேர்ந்தவுடம் பிசின் போல சில பேர்களாவது என்னுடன் ஒட்டிக் கொள்வார்கள்...."

ஒருவிதமான கனத்த மௌனம் அவர்களிடையே நிலவியது.

அக்ஷய் சொன்னான். "சரி மது, மகேந்திரன்- நீங்கள் கிளம்புங்கள். நீங்கள் செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது. சில மணி நேரமாவது தூங்கினால் தான் உங்களால் நாளைக்கு சரியாக இயங்க முடியும்..."

அவர்கள் இருவரும் கிளம்பினார்கள். கிளம்பிய இருவரிடமும் அக்ஷய் மனமார நன்றி சொன்னான். "இனி எப்போது பார்க்கப் போகிறோம் என்று தெரியவில்லை. உங்கள் உதவியை நான் எப்போதும் மறக்க முடியாது. எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை."

மகேந்திரன் சொன்னான். "நண்பர்களுக்குள் நன்றி சொல்வது தேவையில்லாதது"

மது அக்ஷயின் தோளைத் தட்டிக் கொடுத்தான். அவர்கள் போய் விட்டார்கள்.

அன்றிரவு அக்ஷய் உறங்க ஆயத்தமானான் ஆனந்திடம் சொன்னான். "ஆனந்த் நீயும் படுத்துக் கொள். நாளை காலை நாம் சீக்கிரமே எழுந்து கிளம்ப வேண்டும்..."

ஆனந்திற்கு உறங்க முடியும் என்று தோன்றவில்லை. "எப்படி உன்னால் தூங்க முடிகிறது"

"நாம் தூங்காமல் விழித்துக் கொண்டு இருப்பதால் என்ன லாபம்? சரியாகத் தூங்கா விட்டால் நாளை நம்மால் சுறுசுறுப்பாக இருக்க முடியாது....."

அகஷய் ஐந்து நிமிடத்தில் உறங்கி விட்டான். ஆனந்திற்கு தம்பியைப் பார்க்கும் போது நெப்போலியனைப் பற்றிப் படித்தது நினைவுக்கு வந்தது. நெப்போலியன் போர்க்களத்தில் கூட தூங்க வேண்டிய நேரத்தில் தூங்குவானாம்!.... நாளை என்ன நடக்கும்? திட்டமிட்டபடி எல்லாம் நடக்குமா? இவனை எதிரிகள் என்ன செய்வார்கள்? என்ற கவலைகள் கேள்விகளாக வந்தன. தம்பியையே பார்த்தபடி ஆனந்த் உறங்காமல் உட்கார்ந்திருந்தான்.

*********

ராஜாராம் ரெட்டி தன் ஆட்களுக்கு அதிகாலை மூன்று மணிக்குப் போன் செய்தார். "எல்லாம் சரியாகத் தானே இருக்கிறது? சந்தேகப்படுகிற மாதிரி சம்பவங்கள் எதுவும் இல்லையே"

"ஒரு பிரச்சனையும் இல்லை சார். நம் ஆட்கள் அந்தக் கட்டிடத்திலும் அதற்கு ஒரு கிலோமீட்டர் அந்தப் பக்கமும் இந்தப்பக்கமும் அங்கங்கே மறைவாக நிற்கிறார்கள். சாயங்காலம் சுமார் ஏழு மணிக்கு மேல் இந்தக் கட்டிடத்தைக் கடந்து ஒரு ஈ காக்காய் கூடப் போகவில்லை. தெருவே வெறிச்சோடித் தான் இருக்கிறது"

ராஜாராம் ரெட்டி திருப்தியடைந்தார். இன்னொரு போன் செய்தார். "அந்தக் கிழவியையும் பொடியனையும் அழைத்துக் கொண்டு கிளம்புங்கள்..."

*********

அதே நேரத்தில் ஆனந்தும் அக்‌ஷயும் லாட்ஜிலிருந்து கிளம்பினார்கள். கிளம்புவதற்கு முன் மகேந்திரனிடமும், மதுவிடமும்

அக்ஷய் பேசினான். லாட்ஜிலிருந்து ஒரு டாக்சி பிடித்துக் கொண்டு பாதி தூரத்தில் உள்ள ஒரு ரயில்நிலையம் போய் இறங்கிக் கொண்டு அங்கிருந்து இன்னொரு டாக்சி பிடித்துக் கொண்டு அவர்கள் சொன்ன இடத்திற்குக் கிளம்பினார்கள். ஒரே டாக்சி பிடித்துக் கொண்டு போனால் அந்த டாக்சி டிரைவரை திரும்பிப் போகும் வழியில் மடக்கி எங்கிருந்து அவர்களைக் கூட்டிக் கொண்டு வருகிறாய் என்று விசாரித்தால் அவர்கள் இருக்கும் பகுதி தெரிந்து விடும் என்பதால் முன்னெச்சரிக்கையாக இப்படி செய்தார்கள்.

போகும் போது இருவரும் நிறைய நேரம் ஒன்றும் பேசவில்லை. ஆக்ரா நெடுஞ்சாலையில் இருந்து அந்த கட்டிடம் உள்ள சாலையில் திரும்பிய பிறகு அக்ஷய் சொன்னான். "ஆனந்த் அம்மாவை நன்றாகப் பார்த்துக் கொள். வருணை மதுவிடம் சேர்த்து விடு"

ஆனந்த் தலையசைத்தான். பின் கரகரத்த குரலில் சொன்னான். "அக்ஷய் நீ கண்டிப்பாக சீக்கிரமாய் திரும்பி வர வேண்டும். நாங்கள் உனக்காக காத்துக் கொண்டிருப்போம். நீ இல்லாமல் நான் அம்மாவை சமாளிக்க முடியாது...."

அக்ஷய் ஒன்றும் சொல்லாமல் அண்ணனது கையை அழுத்தினான். "விதியில் என்ன எழுதியிருக்கிறதோ அது நடக்கும்..."

"விதியை மதியால் வெல்ல முடியும் என்று சொல்கிறார்கள்"

"அதற்கும் ஒரு விதி அப்படி இருக்க வேண்டும்" அக்‌ஷய் புன்னகையுடன் சொன்னான்.

அந்த சாலையில் சிறிது தூரத்திற்குப் பிறகு எந்த தெரு விளக்குமே எரியாததை இருவரும் கவனித்தார்கள். இந்த இருட்டும் எதிரிகளின் கைங்கரியமே என்பது புரிந்தது.

அந்தக் கட்டிடத்தை டாக்சி நெருங்கியது.
**********************

## 94

அந்தக் கட்டிடத்திற்கு அருகே இருந்த தெருவிளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. அதற்கு சிறிது தூரம் தள்ளி அரையிருட்டில் ஒரு காரும் அதன் பின்னால் சிறிது தூரம் தள்ளி ஒரு போலீஸ் ஜீப்பும் நின்று கொண்டிருந்தது.

ஆனந்த் முணுமுணுத்தான். "அவர்கள் முன்பே வந்து தயாராக நிற்கிறார்கள்"

டாக்சி நின்றதும் இருவரும் இறங்கினார்கள். பணத்தைத் தந்தவுடன் டாக்சி திரும்பவும் வந்த வழியே திரும்பிப் போனது. இருவரும் அமைதியாகக் காத்திருந்தார்கள்.

போலீஸ் ஜீப்பில் மறைவாக உட்கார்ந்திருந்த ராஜாராம் ரெட்டி செல் போனில் பேசினார். "அந்த டாக்சியை வேறு எந்த வாகனமாவது தொடர்ந்து வரவில்லையே"

"இல்லை சார்"

"அந்த டாக்சி அதே வேகத்தில் போய்க் கொண்டு தானே இருக்கிறது. வேண்டுமென்றே மெதுவாகவோ சந்தேகப்படுகிற மாதிரியோ போய்க் கொண்டு இல்லை அல்லவா?"

"இல்லை சார்."

"சரி அது ஆக்ரா நெடுஞ்சாலைக்குப் போன பிறகு எனக்கு சொல்லுங்கள்"

சிறிது நேரத்தில் தகவல் வந்தது. "சார் அந்த டாக்சி போயாகி விட்டது"

ராஜாராம் ரெட்டி அமானுஷ்யனை ஆர்வத்துடன் பார்த்தார். அவர் அவனைப் பார்ப்பது இது தான் முதல் முறை. அலட்டிக் கொள்ளாமல் அவன் சோம்பல் முறித்துக் கொண்டு நின்றிருந்தான். உடன் நின்றிருந்த ஆனந்த் சிறிது பதட்டமாகவே இருந்ததை அவரால் உணர முடிந்தது. ஆனால் அமானுஷ்யன் சலனமே இல்லாமல் தன் வீட்டு முன்னால் நிற்பது போல் நின்றிருந்ததைப் பார்க்கையில் அவருக்குப் பொறாமையாகவும் கோபமாகவும் இருந்தது. என்ன மனிதனிவன்?

அவனிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் மட்டும் இல்லா விட்டால் அந்தக் கட்டிடத்தில் மறைந்திருக்கிற ஆட்களிடம் அவனை சுடச் சொல்லி உத்தரவு பிறப்பித்திருப்பார். அவன் உடல் துப்பாக்கி ரவைகளால் சல்லடையாகத் துளைக்கப்படுவதை கண்ணாரக் கண்டு ரசித்திருப்பார். ஆனால் சிறிது காலம் அவன் உயிருடன் இருப்பது அவருக்கு இப்போது அவசியமாக இருக்கிறது. அருகில் அமர்ந்திருந்த நபரிடம் சொன்னார். "பேசுங்கள்".

ஆனந்தின் செல்போன் இசைத்தது. ஆனந்த் பேசினான். "ஹலோ"

"ஆனந்த். நான் எக்ஸ் பேசுகிறேன். நாங்கள் உங்கள் தாயாரையும், வருணையும் அழைத்து வந்திருக்கிறோம். நீங்கள் அக்ஷயை சிறிது தள்ளி நின்று கொண்டிருக்கும் காருக்கு அனுப்பி வையுங்கள்.

நாங்கள் அவர்களை அனுப்பி வைக்கிறோம்...."

ஆனந்த் சொன்னான். "முதலில் அம்மாவையும், வருணையும் எங்கள் கண்ணில் படுகிற மாதிரி நிறுத்துங்கள். அவர்கள் என்னை நோக்கி வரட்டும். அக்ஷயும் அந்த காரை நோக்கி வருவான்..."

மிஸ்டர் எக்ஸ் ராஜாராம் ரெட்டியைப் பார்த்தார். ராஜாராம் ரெட்டி தலையசைத்தார். மிஸ்டர் எக்ஸ் போலீஸ் ஜீப்பில் இருந்து இறங்கி கார் அருகே சென்று சைகை செய்ய காரில் இருந்த ஒரு ஆள் சாரதாவையும், வருணையும் இறக்கி அவர்களை அரையிருட்டில் இருந்து கூட்டிக் கொண்டு போய் நன்றாகத் தெரியும்படியான வெளிச்சத்தில் நிற்க வைத்தான்.

மிஸ்டர் எக்ஸ் ஆனந்திடம் கேட்டார். "நீங்கள் ஏதாவது துப்பாக்கி கத்தி போன்ற ஆயுதங்களை எடுத்து வரவில்லையே"

"இல்லை"

"சரி. எங்கள் ஆள் வந்து உங்கள் இருவரையும் பரிசோதிக்க வருவான். அனுமதியுங்கள்"

முகமூடி அணிந்த மனிதன் ஒருவன் வந்து ஆனந்த், அக்ஷய் இரண்டு

பேரையும் முழுமையாகப் பரிசோதித்தான். பின் கையை உயர்த்தி ஒன்றுமில்லை என்று சைகை காண்பித்தான்.

திருப்தி அடைந்த மிஸ்டர் எக்ஸ் ஆனந்திடம் சொன்னார். "இப்போது அவர்கள் வருவார்கள். அக்ஷயை அனுப்புங்கள். உங்கள் தம்பியிடம் சொல்லுங்கள். ஏதாவது அவர் அசம்பாவிதம் செய்யும் நோக்கம் வைத்திருந்தால் அது உங்கள் தாயாருக்கும், வருணுக்கும் தான் ஆபத்து. அந்தக் கட்டிடத்தில் மறைவாக எங்கள் ஆட்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். உங்கள் தம்பி துப்பாக்கி ரவைகளுக்குப் பலியாகாமல் தப்பிக்கிற அளவு வேகமாக இயங்குகிற வித்தை தெரிந்தவராக இருக்கலாம். ஆனால் உங்கள் அம்மாவும், அந்தப் பையனும் அப்படி இல்லை என்பதை அவர் நினைவு வைத்துக் கொள்வது நல்லது...."

"அவன் கண்டிப்பாக உங்களிடம் வந்து சேர்வான். எந்த விதத்திலும் தேவை இல்லாததைச் செய்யும் எண்ணம் அவனுக்கு இல்லை. ஆனால் நீங்களும் அந்த மாதிரி எண்ணம் வைத்திருக்க மாட்டீர்கள் என நம்புகிறேன்."

"சேச்சே. அப்படியெல்லாம் இல்லை."

"இந்த நேரத்தில் நான் என் அம்மாவையும், வருணையும் அழைத்துக்

கொண்டு திரும்ப எப்படிப் போவேன். நாங்கள் போக என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்..."

மிஸ்டர் எக்ஸ் சொன்னார். "உங்கள் தம்பியை இங்கிருந்து அழைத்துப் போகும் வரை நாங்கள் உங்கள் போக்குவரத்திற்கு உதவ முடியாது. நீங்கள் சிறிது காத்திருந்து அல்லது நடந்து போய் தான் ஏதாவது டாக்சி பிடித்துக் கொண்டு போக வேண்டும்"

அக்‌ஷய் ஆனந்திடம் இருந்து செல் போனை வாங்கி பேசினான். "அப்படியானால் ஒரு நிபந்தனை..."

"என்ன?"

"நான் அங்கு வந்தாலும் கூட ஆனந்த் அவர்களை அழைத்துக் கொண்டு சிறிது தூரமாவது போகும் வரை உங்கள் பக்கம் வந்தாலும் கூட உங்கள் வண்டியில் ஏற மாட்டேன். அவர்கள் போன பிறகு நீங்கள் என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். எனக்குக் கவலையில்லை"

மிஸ்டர் எக்ஸ் ரெட்டியைப் பார்த்தார். இந்த ஒரு இக்கட்டான நிலையிலும் கூட அவன் அவர்களிடம் நிபந்தனை விதிப்பதை ராஜாராம் ரெட்டி ரசிக்கவில்லை. ஆனால் அவர் இந்த நேரத்தில்

அவன் என்ன செய்ய முடியும் என்று பரீட்சித்துப் பார்க்க விரும்பவில்லை. சரி என்று சொல்லச் சொல்லி தலை அசைத்தார்.

"சரி. ஆனால் நீங்கள் அவர்கள் போன பிறகு எதுவும் செய்ய மாட்டீர்கள் என்று என்ன உத்திரவாதம்"

"நான் அங்கு வந்த பிறகு நான் ஓடிவிடாதபடி என்னை இரண்டு பேர் கெட்டியாக பிடித்துக் கொள்ளுங்கள். போதுமா? இந்த இடத்தை விட்டு என்னைக் கொண்டு போகும் முன் அவர்கள் பாதுகாப்பாகப் போய் விட்டார்கள் என்பது எனக்கு உறுதியாக வேண்டும். அவ்வளவு தான்"

எக்ஸ் ரெட்டியைப் பார்க்க ரெட்டி தலையசைத்தார்.

"சரி. நீங்கள் வாருங்கள். அவர்களும் அங்கு வருவார்கள்"

அக்‌ஷய் கிளம்புவதற்கு முன் ஆனந்தைக் கட்டி அணைத்துக் கொண்டு சொன்னான். "ஆனந்த். ஜாக்கிரதை"

ஆனந்திற்குத் தொண்டையை அடைத்தது. தலையசைத்தான். அக்‌ஷய் காரை நோக்கிச் செல்ல சாரதாவும், வருணும் எதிரிலிருந்து வந்தார்கள். நெருங்கிய போது சாரதா மகனைக் கண்ணீருடன்

பார்த்தாள்.

அக்‌ஷய் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு சொன்னான். "அம்மா கவலையே படாதே. அவர்கள் ஏதோ என்னிடம் தெரிந்து கொள்ள வேண்டுமாம். அதைத் தெரிந்து கொண்ட பிறகு விட்டு விடுவார்கள். சீக்கிரமே வந்து விடுவேன்"

சாரதா மகன் உறுதியாக சொன்னதைக் கேட்டு ஓரளவு நிம்மதி அடைந்தாள்.

பைனாகுலர் வழியே அவன் உதட்டசைவைப் பார்த்தே ஒரு நபர் அவன் சொன்னதை அப்படியே ராஜாராம் ரெட்டியிடம் சொன்னான்.

அக்‌ஷய் வருணை தூக்கி அணைத்து முத்தம் கொடுத்தான். வருணுக்கு அக்‌ஷயைப் பார்த்ததில் எல்லை இல்லாத சந்தோஷம். அவன் அக்‌ஷயிடம் சொன்னான். "அங்கிள் கண்டிப்பாக சீக்கிரமே வந்து விட வேண்டும். சரியா?"

அக்‌ஷய் சொன்னான். "கண்டிப்பாக வருகிறேன்"

கார் அருகே நின்றிருந்த நபர் வேகமாகக் கை அசைத்து சீக்கிரம்

வரும்படி சொன்னான். அக்ஷய் அவர்களிடம் சொன்னான். "சீக்கிரம் போங்கள்."

அவர்கள் ஆனந்தை அடைந்த போது அக்ஷய் காரை அடைந்தான். மறைவாக இருந்த இரண்டு பேர் அவனை உடும்புப்பிடியாகப் பிடித்துக் கொண்டார்கள். இன்னொருவன் அக்ஷயின் பின்னால் நின்று கொண்டு துப்பாக்கி நுனியால் அவன் முதுகை அழுத்தினான்.

ஆனந்த் தாயும் வருணும் வந்தவுடன் சொன்னான். "அம்மா நாம் வேகமாக இங்கிருந்து போக வேண்டும். வேகமாக நடங்கள். வருண் உனக்கு வேகமாக நடக்க முடியுமா?"

வருண் பெருமையாகச் சொன்னான். "வேகமாக ஓடவும் ஓடுவேன். ஓடட்டுமா"

ஆனந்திற்கு அவனைப் பிடித்து விட்டது. "வேண்டாம். வேகமாக நட போதும்" என்று புன்னகையுடன் சொன்னான்.

இருட்டில் வந்த வழியே அவர்களை ஆனந்த் அழைத்துச் சென்றான்.

மிஸ்டர் எக்ஸ் அக்ஷய் அருகில் வந்து சொன்னார். "இனி நாம்

போகலாமா?" அக்‌ஷய் தலையசைத்தான்.

அமானுஷ்யனின் கைகள் மிகவும் ஆபத்தானவை என்பதால் ரெட்டி முதல் வேலையாக அவன் கைகளை கட்டிப்போடச் சொல்லி இருந்தார். "உங்கள் கையைக் கட்டிக் கூட்டிக் கொண்டு வர உத்தரவு." என்றவர் ஒரு ஆளைப் பார்த்துக் கண்ணசைக்க அந்த ஆள் ஒரு தடிமனான கயிறு கொண்டு வந்து அக்‌ஷயின் இரண்டு கைகளையும் பின்னுக்கு இழுத்து உறுதியாகக் கட்டி விட்டான். அக்‌ஷயிடம் எதிர்ப்பிருக்கும் என்று முன்னெச்சரிக்கையுடன் தான் மிஸ்டர் எக்ஸ் இருந்தார். எதிர்ப்பு இருக்கும் பட்சத்தில் அவனை அடக்க அவனைச் சுற்றிலும் பலர் தயாராக இருந்தனர். ஆனால் அக்‌ஷய் ஒரு எதிர்ப்பையும் காட்டாமல் அமைதியாக இருந்தான். அவனை அவர்கள் அந்தக் காரில் உட்கார வைத்தார்கள்.

அதே நேரத்தில் போலீஸ் ஜீப்பில் இன்னும் மறைவாகவே அமர்ந்திருந்த ராஜாராம் ரெட்டி தன் செல் போன் மூலமாக ஆக்ரா நெடுஞ்சாலையில் பெரிய வேனில் ஐந்து பேர்களுடன் உட்கார்ந்திருந்த ஒருவனுக்குக் கட்டளை பிறப்பித்தார். "நீங்கள் தயாராக இருங்கள். நாங்கள் உங்களைக் கடந்த பிறகு நீங்கள் வரலாம். ஆனந்த், வருண் இருவரையும் விட்டு விட்டு அந்தக் கிழவியை மட்டும் குண்டுக்கட்டாய் தூக்கிக் கொண்டு நம் இடத்திற்கு வந்து விடுங்கள்"

"சரி சார்"

ராஜாராம் ரெட்டி திருப்தி அடைந்தார். எல்லாம் சரிவர தான் போய்க் கொண்டு இருக்கிறது. அந்த டிவிக்காரியின் மகனை இனியும் வைத்துக் கொண்டு இருப்பது ஆபத்தாக அவருக்குத் தோன்றியது. அமானுஷ்யனுக்கு உதவியதற்காக அவளை இந்தக் கடத்தல் மூலம் பயமுறுத்தியாகி விட்டது. இனி இதில் அனாவசியமாக அவள் மூக்கை நுழைக்க மாட்டாள். அப்படி செய்தால் என்ன ஆகும் என்று புரியவைத்தும் ஆகி விட்டது. இனியும் அந்த பையனை கடத்தி வைத்துக் கொண்டு தேவையில்லாமல் மீடியாக்காரர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டாம் என்பதால் தான் அந்த சிறுவனை விட்டு விடச் சொன்னார். இந்தக் கிழவி போதும் அக்ஷயின் வாயில் இருந்து எல்லா உண்மைகளையும் வரவழைப்பதற்கு! அவர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

95

ராஜாராம் ரெட்டியின் செல் போன் சமய சந்தர்ப்பம் தெரியாமல் இசைத்தது. இந்த நேரத்தில் யார் என்று யோசித்தபடி செல்லை

எடுத்துப் பார்த்தார். இரண்டு நிமிஷங்களுக்கு முன்னால் அவர் அக்‌ஷயின் தாயைக் கடத்த கட்டளை இட்ட வேன்காரன் தான். 'இவ்வளவு தெளிவாகச் சொன்னோமே இன்னும் என்ன சந்தேகம் இவனுக்கு' என்று எண்ணியவராக பேசினார். "ஹலோ. என்ன?"

"சார். ஆறேழு கார், வேன்களில் பத்திரிக்கைக்காரர்களும், டிவிக்காரர்களும் எங்களுக்கு முன்னால் அங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது தான் எங்களைக் கடந்தார்கள்..."

ராஜாராம் ரெட்டிக்கு எதுவும் விளங்கவில்லை. "என்ன உளறுகிறாய்?"

"உளறவில்லை சார். நிஜமாகவே தான்... நாங்கள் என்ன செய்யட்டும்?"

"நீங்களும் அவர்களுடனே வந்து கொண்டிருங்கள். உங்கள் வேலையை அவர்கள் கண்ணில் படாமல் செய்ய முடிகிறதா என்று பாருங்கள்"

ராஜாராம் ரெட்டி குழப்பத்துடன் இணைப்பைத் துண்டித்தார். மறுபடி போன் இசைத்தது. அந்த சாலையில் அவர் நிறுத்தியிருந்த இன்னொருவன் அதே செய்தியைச் சொன்னான். தொடர்ந்து

மேலும் இரண்டு ஆட்கள் இதையே போன் செய்து சொன்னார்கள். யார் கண்ணிலும் படாமல் மறைந்து இருக்க அவர்களுக்குக் கட்டளையிட்ட ராஜாராம் ரெட்டி உடனடியாக எக்ஸிற்குப் போன் செய்தார்.

"அந்த சைத்தான் இன்னும் உங்கள் பிடியில் தானே இருக்கிறான்?"

"ஆமாம் சார். கைகளைக் கட்டிப் போட்டிருக்கிறோம். காரில் அவனுக்கு இரண்டு பக்கமும் இரண்டு பேர் உட்கார்ந்திருக்கிறார்கள். ஒரு பிரச்னையும் இல்லை. ஏன் சார் கேட்கிறீர்கள்?"

"பிரச்னை அங்கே இல்லை. இப்போது தான் வந்து கொண்டிருக்கிறது. நிறைய பத்திரிக்கைக்காரர்களும், டிவிக்காரர்களும் இங்கே வந்து கொண்டு இருக்கிறார்களாம். முதலில் அவனைப் பத்திரப்படுத்துங்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் அவனைத் தப்பிக்க விடாதீர்கள். அவனை யார் கண்ணிலும் காட்டி விடாதீர்கள்"

எக்ஸ் திகைத்துப் போனார். "அவர்கள் எதற்கு இங்கே வருகிறார்கள்?"

ரெட்டி எரிச்சலுடன் சொன்னார். "அவர்கள் அதை இன்னும் எனக்குத் தெரிவிக்கவில்லை.... முதலில் அந்தக் காரை பின்னால் கொண்டு வந்து இருட்டில் ஜீப்பிற்கும் பின்புறம் நிறுத்துங்கள். நீங்கள் முன்னால் போய் என்ன என்று பாருங்கள்... போலீஸ் ஜீப் பக்கம் யாரும் வந்து விடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். நான் யார் கண்ணிலும் பட விரும்பவில்லை." சொன்ன ரெட்டி போலீஸ் ஜீப்பில் ஒரு ஓரத்தில் மறைவாக நகர்ந்து உட்கார்ந்தார்.

போலீஸ் சீருடையிலேயே இருந்த உயர் அதிகாரியான மிஸ்டர் எக்ஸ் கார் டிரைவருக்கு அப்படியே கட்டளை இட்டார். அமானுஷ்யன் முகத்தைப் பார்த்தார். 'இவன் வேலையாக இருக்குமோ?' அவன் முகத்தில் சலனமே இல்லை. அமைதியாக இருந்தான். அவனை மேலும் இருவர் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள்.

கார் போலீஸ் ஜீப்பையும் கடந்து இருட்டில் மறைந்து நின்றது. மிஸ்டர் எக்ஸ் சிறிது தூரம் முன்னுக்கு வந்து நடுத்தெருவில் நின்று கொண்டார். இரண்டே நிமிடங்களில் அவரை நெருங்கிய வாகனங்கள் நின்றன. அவற்றிலிருந்து தடதடவென்று இறங்கிய பத்திரிக்கையாளர்கள், டிவிக்காரர்களும் அவரை மைக்குகளுடனும், காமிராக்களுடனும் நெருங்கினார்கள்.

"சார் நாங்கள் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையா?"

"என்ன கேள்விப்பட்டீர்கள்?" எக்ஸிற்கு பதட்டமாக இருந்தது.

சரமாரியாக கேள்விகள் அவரை சூழ்ந்து நின்ற நிருபர்களிடமிருந்து வர ஆரம்பித்தன. "எம்.பி சாந்தகுமார் யாதவிற்கும் நடிகை காமினிக்கும் இன்று அவர் வீட்டில் ரகசியத் திருமணம் அவர் வீட்டில் இன்று அதிகாலையில் நடக்கிறது என்பது உண்மையா?"

"அவர் முன்கூட்டியே பாதுகாப்பிற்காக உங்களை அழைத்து தான் நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்களா?"

"திருமணத்திற்கு இரண்டு பேருடைய குடும்பத்தார்களும் வந்திருக்கிறார்களா? இரண்டு பேர் சம்மதத்துடன் தான் இந்த திருமணம் நடைபெறுகிறதா?"

மிஸ்டர் எக்ஸிற்கு ஒரு விதத்தில் தங்கள் தகிடுதத்தம் தெரிந்து இவர்கள் வந்து விடவில்லை என்று நிம்மதியாக இருந்தாலும் இன்னொரு விதத்தில் தலை சுற்றியது. "இது என்ன புதிய தலைவலி"

அதே எண்ணம் தான் ராஜாராம் ரெட்டியின் ஆளான

வேன்காரனுக்கும் ஏற்பட்டது. சில வாகனங்கள் அவனை முந்திச் சென்றன. சில பின்னால் வந்து கொண்டிருந்தன. முன்னால் சென்று கொண்டிருந்த வாகனங்கள் ஏனோ சற்று இடைவெளி விட்டே போய்க் கொண்டிருந்தன. பின்னால் வந்து கொண்டிருந்த ஒரு வாகனம் மட்டும் மிக அருகில் வந்து கொண்டிருந்தாலும் அதன் பின் வந்து கொண்டிருந்த வாகனங்களும் ஒன்றுக்கொன்று இடைவெளி விட்டே வந்து கொண்டிருந்தன. ஒரு வேளை ஆனந்த் தன் தாயை அழைத்துக் கொண்டு எதிரில் வந்தாலும் இறங்கி அவன் தாயை அவர்கள் அறியாமல் பிடித்து வேனில் போட்டுக் கொள்ள முடியாது. மேலும் வண்டியைத் திருப்புவதற்கும் இந்த சூழ்நிலையில் முடியாது. அவர்கள் வந்தால் என்ன செய்வதென்று எண்ணுகையில் நிஜமாகவே எதிரே ஆனந்த், சாரதா, வருண் வந்து கொண்டிருந்தார்கள்.

வேன்காரன் தன் சகாக்களைப் பார்த்தான். அவர்கள் அவனைப் பார்த்தார்கள். இதற்குள் எதிரில் சென்று கொண்டிருந்த வாகனங்கள் அதே இடைவெளியைத் தக்க வைத்துக் கொண்டு நின்றன. வேன்காரனும் தன் வேனை நிறுத்தினான். பின்னால் வந்து கொண்டிருந்த வாகனங்களும் அப்படியே நின்றன. அந்த வாகனங்களின் விளக்குகள் சொல்லி வைத்தாற் போல அணைக்கப்பட்டன. வேன்காரன் மட்டும் தான் விளக்குகளை அணைக்கவில்லை. வாகனங்களில் இருந்து இறங்கி பல நிருபர்கள்

மைக்குகள், காமிராக்களோடு முன்னோக்கி ஓடினார்கள். அந்த நேரத்தில் தான் ஆனந்தும், சாரதாவும், வருணும் அவர்களைக் கடந்தார்கள்.

ராஜாராமிடம் பேசிய வேன்காரன் தலையை வெளியே நீட்டி பார்த்தான். என்ன நடக்கிறது என்பதே அவனுக்கு விளங்கவில்லை. குழப்பத்துடன் அவன் இருக்கையில் ஆனந்தும், சாரதாவும், வருணும் பின்னால் இருந்த இருட்டில் மறைந்தார்கள்.

வேன்காரன் உடனே முடிவெடுத்தான். ஒருவனிடம் முன்னால் போய் என்ன நடக்கிறது என்று பார்க்கச் சொன்னான். வேறு மூன்று பேரிடம் ஆனந்தைத் தொடரச் சொன்னான். சந்தர்ப்பம் கிடைக்கையில் அவனை அடித்துப் போட்டு அவன் தாயைப் பிடித்துக் கொண்டு எங்காவது ஒளிந்து நிற்கச் சொன்னான்.

அவன் சொன்னது போல அவர்களும் இறங்கி முன்னுக்கு ஒருவனும், பின்னுக்கு மூன்று பேரும் ஓடினார்கள். பின்னுக்கு ஓடியவர்களில் ஒருவன் முன்னோக்கி வந்து கொண்டிருந்த ஒரு குண்டான நிருபர் மேல் மோதி கீழே விழுந்தான். அந்த நிருபர் கெட்ட வார்த்தைகளால் திட்டி விட்டு முன்னுக்கு சென்றார். எதிர்பாராத இந்த மோதலில் கீழே விழுந்த சகாவை எழுப்பி நிறுத்தி விட்டு அவர்கள் மூவரும் முன்னுக்கு ஓடினார்கள். ஆனால்

ஆனந்தோ, அவன் தாயோ, அந்த சிறுவனோ தென்படவில்லை.

"எங்கே போனார்கள்?" என்று ஒருவன் கேட்டான்.

"நிறைய தூரம் போயிருக்க வழியில்லை. ஓரத்தில் எங்காவது ஒளிந்திருக்கிறார்களா என்று பார்" என்றான் இன்னொருவன். சிறிது நேரம் சாலை ஓரத்தில் இருந்த மரங்களின் பின்னால் இருக்கிறார்களா என்று மூவரும் பார்த்துக் கொண்டிருக்கையில் கடைசியில் இருந்த கார் ஒன்று வேகமாக வந்த வழியே திரும்பிப் போய்க் கொண்டிருந்தது.

அதே நேரத்தில் மிஸ்டர் எக்ஸ் அந்த நிருபர்களை சமாளித்துக் கொண்டு இருந்தார். "....யாரோ உங்களுக்குத் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். சாந்த குமார் யாதவின் வீட்டில் இப்போது யாருமே இல்லை. அதனால் அவர் இங்கே காமினியை ரகசியத் திருமணம் செய்து கொள்ள வந்திருக்கிறார் என்று சொல்வது வெறும் வதந்தி தானே ஒழிய அதில் உண்மை இல்லை"

ராஜாராம் ரெட்டி இந்த திடீர் அமளி தங்கள் திட்டத்திற்கு ஆபத்தானது என்பதை உணர்ந்தார். அவர் பயந்தது போலவே வேன்காரன் போன் செய்து அவர்களைக் காணவில்லை என்றும்

கடைசியில் வந்து கொண்டிருந்த ஒரு கார் திரும்பிச் சென்றதைப் பார்த்ததாகவும் சொன்னான்.

ராஜாராம் ரெட்டி உடனடியாக அக்‌ஷய் இருந்த காரில் ஒருவனுக்கு போன் செய்தார். "உடனடியாக காரை கல்லூரிக்குள் எடுத்துச் செல்லுங்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் அவனை தப்ப விடாதீர்கள். அவன் ஒருவேளை தப்பினால் கடுமையான விளைவுகளை நீங்கள் சந்திக்க வேண்டி இருக்கும். இப்போது எதிரே உள்ள கார்கள் சீக்கிரம் முன்னேறி வரும். அவர்கள் அந்த எம்.பி வீடு இருக்கும் குறுக்குத் தெரு தாண்டி வர மாட்டார்கள். ஆனால் அந்தத் தெருக்கு அவர்கள் வருவதற்குள் தெருவைத் தாண்டி கல்லூரிக்குள்ளே போய் பாதுகாப்பாய் இருங்கள். சீக்கிரம்..."

அக்‌ஷய் இருந்த கார் வேகமாக கல்லூரியை நோக்கி முன்னேறியது.

ராஜாராம் ரெட்டி எதற்கும் இருக்கட்டும் என்று அவசரத் தேவைக்கு ஒரு போலீஸ் வேனையே கல்லூரியில் நிறுத்தி வைத்திருந்தார். கூப்பிட்டவுடன் மின்னலாக வந்து சேர வேண்டும் என்ற கட்டளையையும் பிறப்பித்திருந்தார்.
அவர்களுக்குப் போன் செய்தார். "இப்போது நம் கார் ஒன்று கல்லூரிக்கு வரும்.அந்தக் காரை உள்ளே விட்டு காவலுக்கு கல்லூரி வாசலில் இரண்டு போலீஸ்காரர்களை நிறுத்தி விட்டு முன்னுக்கு

வாருங்கள். அந்த எம்.பி வீடு இருக்கும் தெருவையும் தாண்டி எந்த மனிதனோ, வாகனமோ கல்லூரியின் பக்கம் சென்று விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். மிகவும் ஜாக்கிரதையாக இருங்கள்"

அக்ஷய் இருந்த கார் மின்னல் வேகத்தில் கல்லூரிக்குள் நுழைய போலீஸ் வேன் அதே வேகத்தில் வெளியே வந்தது. கல்லூரியின் வெளிக்கததவை சாத்தி விட்டு இரண்டு போலீஸ்காரர்கள் துப்பாக்கியோடு நின்று கொண்டார்கள். போலீஸ் வேன் முன்னேறி எம்.பி வீட்டுத் தெரு அருகே நின்றது. நாலைந்து போலீஸ்காரர்கள் இறங்கி கல்லூரிக்குத் தொடர்ந்து செல்லும் சாலையை மறித்த படி நின்று கொண்டார்கள்.

அதே நேரத்தில் மிஸ்டர் எக்ஸிடம் ஒரு பெண் நிருபர் கேட்டார். "இந்த அகால நேரத்தில் நீங்கள் இங்கே அவர் வீட்டுக்குப் போகும் பாதையில் நின்று கொண்டிருப்பது எதற்கு என்று நாங்கள் தெரிந்து கொள்ளலாமா?"

ரெட்டி உடனடியாக எக்ஸிற்கு போன் செய்தார்.

மிஸ்டர் எக்ஸ் "மன்னிக்கவும்.." என்று நிருபர்களிடம் சொல்லி விட்டு செல் போனை எடுத்தார்.

ரெட்டி போனில் தான் செய்து வைத்திருக்கும் ஏற்பாடுகளைச் சொன்னார். அவர்களை சமாளிக்க என்ன சொல்ல வேண்டும் என்பதையும் சொல்லி விட்டுக் கடைசியில் சொன்னார். "எந்தக் காரணத்தைக் கொண்டும் எந்த வண்டியையும் முன்னேற விடாதீர்கள். ஏற்கெனவே ஆனந்த் அந்தக் கிழவி, பையனைக் கூட்டிக் கொண்டு ஒரு வண்டியில் தப்பிச் சென்று விட்டான்..."

மிஸ்டர் எக்ஸ் செல் போனை திரும்பவும் சட்டைப் பையில் வைத்து விட்டு கைக்குட்டை எடுத்து வழிய ஆரம்பித்த வியர்வையைத் துடைத்துக் கொண்டார். பின் நிருபர்களிடம் சொன்னார். "யாரோ எங்களுக்கு ஒரு தீவிரவாதி ஒளிந்து கொண்டிருப்பதாக போன் செய்ததால் நாங்கள் இங்கே வந்தோம். உங்களுக்கு வந்திருக்கிற இந்த தவறான தகவலைப் பார்த்தால் எங்களுக்கு வந்த அந்த தீவிரவாதி குறித்த தகவலும் பொய்யாய் இருக்க வாய்ப்பிருக்கிறது...."

ஒரு வயதான நிருபர் சக நிருபர்களிடம் சொன்னார். "எதற்கும் எம்.பி யாதவ் வீட்டுக்குப் போய் பார்த்து விட்டால் நமக்கு விஷயம் தெளிவாக விளங்கி விடும்"

மிஸ்டர் எக்ஸ் உறுதியாகச் சொன்னார். "தீவிரவாதி குறித்த அச்சுறுத்தல் கிட்டத்தட்ட இதே இடத்தைக் குறிப்பிட்டுச் சொல்லி

இருப்பதால் எந்த வண்டியும் முன்னேற அனுமதி தர முடியாது. நீங்களும் போகாமல் இருப்பது என்று நினைக்கிறேன்"

மிஸ்டர் எக்ஸ் தெருவின் நடுவில் நின்றதால் வாகனங்களில் அவரைக் கடக்க முடியாது என்பதை உணர்ந்த அவர்கள் மிஸ்டர் எக்ஸையும் கால்நடையாகவே தாண்டியபடியே சொன்னார்கள். "ஒருவேளை தீவிரவாதி இருந்தால் நாங்களே கண்டுபிடித்துத் தருகிறோம். கவலைப்படாதீர்கள். திருமணமானாலும், தீவிரவாதி ஆனாலும் உண்மையை சிறிதே நேரத்தில் கண்டுபிடித்து விடுகிறோம்..."

மிஸ்டர் எக்ஸ் வேறு வழியில்லாமல் அவர்களைப் பார்த்துக் கொண்டு நின்றார்.

96

மது வேகமாக காரை ஓட்டிக் கொண்டிருந்தான். அவனருகில் வருணும் பின் சீட்டில் ஆனந்தும் சாரதாவும் அமர்ந்திருந்தார்கள். சாரதா சோகத்துடன் பின் கண்ணாடி வழியாக வந்த வழியையே பார்த்துக் கொண்டிருந்தாள். இளைய மகன் பற்றிய பயம் அவளை மறுபடியும் பிடித்துக் கொண்டது. ஆனந்தின் மனம் தாயின்

சோகத்தைப் பார்த்து ரணமானது.

"பயப்பட அவசியமே இல்லைம்மா. அவன் சீக்கிரமே வந்து விடுவான்"-அவன் தாயைத் தைரியப்படுத்தினான்.

சாரதா முழுவதும் நம்பிக்கை ஏற்படா விட்டாலும் தலையாட்டினாள். ஆனால் அவள் கண்களில் லேசாய் நீர் திரண்டிருந்தது.

வருண் பெருமையாய் சொன்னான். "அங்கிளை யாரும் எதுவும் செய்ய முடியாது. அவருக்காக பாட்டி முழு விரதம் இருந்தார்கள், நான் பாதி விரதம் இருந்தேன்...."

மது கேட்டான். "அதென்ன பாதி விரதம்?"

"நான் எப்போதுமே இரண்டு தோசை சாப்பிடுவேன். ஆனால் நேற்று ராத்திரி வெறும் பால் மட்டும் தான் சாப்பிட்டேன். அதுவும் பாட்டி கட்டாயப்படுத்தினதால் தான் சாப்பிட்டேன்"

மதுவும் ஆனந்தும் புன்னகைத்தார்கள்.

சிறிது தூரம் சென்ற போது மகேந்திரன் வேறொரு காரில்

அவர்களுக்காகக் காத்திருந்தான். அவர்களைப் பார்த்த பிறகு அவன் ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டான். அவன் ஆனந்திடம் சொன்னான். "இப்போதைக்கு அம்மாவிற்கும் வருணிற்கும் ஒரு பாதுகாப்பான இடம் ஏற்பாடு செய்திருக்கிறேன். அவர்கள் இந்தக் காரில் அங்கு போகட்டும். நமக்கு இன்னும் வேலை இருக்கிறது."

******

ராஜாராம் ரெட்டி நிருபர்களின் படையெடுப்பைப் பார்த்து விட்டு போலீஸ் ஜீப்பில் இருந்து இறங்கி மறைவாக நின்று கொண்டார். நிருபர்கள் கூட்டம் முன்னேறி எம்.பி வீடு நோக்கி நகர்ந்தது. மிஸ்டர் எக்ஸ் பரிதாபமாக அவர்களைப் பின் தொடர்ந்தார். எம்.பி யின் வீட்டுக்குத் திரும்பும் குறுக்குத் தெருவில் சிலர் திரும்ப சிலர் திரும்பாமல் எதிரில் இருந்த போலீஸ்வேன் மற்றும் முன்னால் இருந்த போலீஸ்காரர்கள் மீது காமிராவைத் திருப்பினார்கள்.

மிஸ்டர் எக்ஸ் ஓடோடி முன்னுக்கு வந்து தடுத்தார். "எதற்கு இவர்களை வீடியோ எடுக்கிறீர்கள்?"

ஒரு நிருபர் கேட்டார். "இவர்கள் ஏன் இங்கு நிற்கிறார்கள்?"

இன்னொரு நிருபர் கேட்டார். "இவர்கள் இங்கு காவலுக்கு நிற்பது எம்.பி யாதவ் திருமணம் எந்த தொந்திரவும் இல்லாமல் நடப்பதற்காக என்று எடுத்துக் கொள்ளலாமா?"

எக்ஸ் மனதில் அவர்களை மிக தரக்குறைவாக அர்ச்சித்தாலும் வெளிப்படையாக பொறுமையுடன் சொன்னார். "அது தான் சொன்னேனே ஒரு தீவிரவாதி இங்கு இருக்கிறான் என்ற தகவல் வந்ததால் வந்தோம் என்று. எங்களுக்கும் எம்.பி யாதவின் திருமணத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லை..."

"அப்படியானால் எம்.பி யாதவ் திருமணம் நடைபெறப் போவது உண்மை தான் இல்லையா?"

"நீங்கள் யாதவ் கேட்டுக்கொண்டதற்காக வந்தீர்களா இல்லை நடிகை காமினி கேட்டுக் கொண்டதற்காக வந்தீர்களா?"

இனி வாய் திறந்தால் கெட்ட கெட்ட வார்த்தைகளால் அவர்களை வெளிப்படையாகவே திட்டி விடுவோம் என்ற பயத்தில் மிஸ்டர் எக்ஸ் ஒன்றும் சொல்லாமல் போலீஸ் ஜீப்பை நோக்கி நகர்ந்தார். 'ரெட்டி ஏதாவது வழி சொல்கிறாரா என்று பார்ப்போம்.

சில நிருபர்கள் போலீஸ் வேன் முன்னால் கல்லூரி செல்லும்

சாலையை மறித்துக் கொண்டு நின்ற போலீஸ்காரர்களிடம் கேள்விகள் கேட்க அவர்கள் செவிடர்கள் போல பதில் பேசாது நின்றார்கள். மற்ற நிருபர்கள் கூட்டம் எம்.பி யாதவின் வீட்டை அடைந்து அந்த வீட்டு காவலாளியிடம் சர்ச்சிக்க ஆரம்பித்தது.

மிஸ்டர் எக்ஸ் தன்னை நோக்கி வருவதைக் கண்ட ராஜாராம் ரெட்டி அவர் பின்னால் எந்த நிருபரும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின் சற்று முன்னுக்கு வந்தார்.

"என்ன சார் இது?" மிஸ்டர் எக்ஸ் அங்கலாய்த்தார்.

"எல்லாம் அவன் வேலை தான்..."

மிஸ்டர் எக்ஸ் நிருபர்கள் மேல் இருந்த கோபத்தில் ரெட்டியிடம் வெளிப்படையாகவே சொன்னார். "அந்த டிவிக்காரி மகனை நாம் கடத்திக் கொண்டு வந்திருக்கக் கூடாது. மீடியாவில் இருப்பவர்களை பகைத்துக் கொள்வது புத்திசாலித்தனம் அல்ல. இப்போது பாருங்கள் ஏதோ ஒரு வதந்தியை அந்த டிவிக்காரி கிளப்பி ஒரு கூட்டத்தையே இங்கே அனுப்பி வைத்திருக்கிறாள். அந்தப் பையனை விட்டு அந்தக் கிழவியைப் பிடித்துக் கொண்டு போகச் சொன்னீர்களே அதாவது நடந்ததா?"

"அந்தக் கிழவி, பையனை கூட்டிக் கொண்டு அந்த ஆனந்த் மாயமாகி விட்டான்"

"என்னது?" மிஸ்டர் எக்ஸ் வாயைப் பிளந்தார். "...அப்படியானால் அமானுஷ்யன்....."

அவனும் தப்பித்திருப்பான் என்று நினைக்க முடிந்த எக்ஸை எரித்து விடுவது போல் ரெட்டி பார்த்தார். பின் கல்லூரிக்குள் அவனை அனுப்பி வைத்திருப்பதை அவரிடம் தெரிவித்து சொன்னார். "..எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தக் கூட்டம் கல்லூரிப்பக்கம் போய் விடக்கூடாது என்பதற்காக தான் போலீஸ்காரர்களை இங்கு வந்து நிற்கச் சொல்லி இருக்கிறேன்."

"நல்லது செய்தீர்கள். நாசமாய் போன இந்த டிவிக்காரர்கள் பத்திரிக்கைக் காரர்கள் போன பிறகு நாம் போகலாம்"

ராஜாராம் ரெட்டி இவரைத் தேடி நிருபர்கள் திரும்பி வந்தால் தன்னையும் அடையாளம் கண்டு கொள்வார்களோ என்று பயந்தவராய் சொன்னார். "அவர்கள் எல்லாம் உங்களோடு என்னையும் சேர்த்து வீடியோ எடுத்து விடப் போகிறார்கள். நீங்கள் போய் அவர்களை எல்லாம் சீக்கிரம் அனுப்பப் பாருங்கள்"

***********

மகேந்திரன் மதுவிடம் சொன்னான். "அக்‌ஷய் சொன்ன திட்டம் இதோடு முடிந்தது என்றாலும் நாம் ஏதாவது அக்‌ஷயிற்கு உதவ முடியுமா என்று யோசிக்க வேண்டும். இப்போது அங்கே என்ன நிலவரம் என்று கேட்டு சொல்லுங்களேன்"

மது யாதவ் எம்.பி வீட்டருகே நிருபர்களுடன் கலந்து நின்றிருந்த தன் நண்பனுக்குப் போன் செய்து நடப்பு தகவல்களை அறிந்து சொன்னான். "அந்தக் கார் இப்போது அங்கே இல்லையாம். போலீஸ் ஜீப், போலீஸ் வேன் மட்டும் தான் இருக்கின்றனவாம். அந்தக் கார் கல்லூரி பக்கம் போனதாய் தெரிகிறது. அந்தப்பக்கம் போய் விடக் கூடாது என்பதில் போலீஸ் கவனமாக இருக்கிறது. நிறைய போலீஸ்காரர்கள் சாலையை மறித்துக் கொண்டு நின்றிருக்கிறார்களாம். "

ஆனந்த் கேட்டான். "இப்போது அங்கே இருப்பவர்களில் எத்தனை பேருக்கு இந்த எம்.பி கல்யாணம் பற்றிய தகவல் பொய் என்று தெரியும்?"

மது சொன்னான். "மொத்தத்தில் ஐந்தாறு பேருக்கு உண்மை தெரியும். மற்றவர்களுக்குத் தெரியாது. அந்த ஐந்தாறு பேர்களும் நானும் தான் இந்த வதந்தியை ரகசியமாய் கசிந்த உண்மை என்று சொல்லி கிளப்பிக் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறோம்...."

ஆனந்த் சொன்னான். "அக்‌ஷயைக் காப்பாற்ற நாம் ஏதாவது செய்ய வேண்டுமானால் நாம் இப்போதே செய்ய வேண்டும். அவனுக்குத் தப்பிக்க ஏதாவது வழி இருந்தால் இந்த களேபரத்தில் தான். அவர்கள் அக்‌ஷயைக் கூட்டிக் கொண்டு இங்கிருந்து போய் விட்டால் நாம் எதுவும் செய்ய முடியாது"

மகேந்திரன் கவலையுடன் சொன்னான். "இந்தக் கல்யாணம் வெறும் வதந்தி என்று தெரிந்து எல்லோரும் சீக்கிரமே அங்கிருந்து கிளம்பி விடுவார்களே"

மது சொன்னான். "இத்தனை தூரம் வந்தவர்களுக்கு அவர்களை அங்கே நிறுத்துவது ஒன்றும் பெரிய விஷயமில்லை....". உடனடியாகப் போன் செய்து முதலில் பேசிய நண்பனிடம் மறுபடியும் பேசினான்.

*********

மதுவின் நண்பன் மதுவிடம் பேசி முடித்து விட்டு சத்தமாய் சொன்னான். ".....சாலையை மறித்துக் கொண்டு போலீஸ்காரர்கள் நிற்பதைப் பார்த்தால் எனக்கென்னவோ நடிகை காமினியும், யாதவும் கல்லூரிக்குள்ளே போய் ஒளிந்திருப்பதாய் அல்லவா தோன்றுகிறது."

எக்ஸிற்கு அடக்க முடியாத கோபம் வந்தது. "அவர்கள் என்ன குற்றவாளிகளா அங்குமிங்கும் போய் ஒளிவதற்கு. என்ன முட்டாள் தனம் இது..."

ஒரு பெண் நிருபர் யோசனையுடன் சொன்னாள். "இவர்கள் யாதவ் வீட்டுக்குப் போகும் வழியைத் தடுக்காமல் அந்தக் கல்லூரிக்குப் போகும் வழியைத் தடுத்து நிற்கும் போதே எனக்கு சந்தேகம் வந்தது....."

எக்ஸ் கோபம் அடங்காமல் சொன்னார். "அது தான் சொன்னேனே. தீவிரவாதி அச்சுறுத்தல் காரணமாகத் தான் இங்கே வந்திருக்கிறோம். யாதவ்-காமினி விவகாரத்திற்காக அல்ல..."

"அப்படியானால் தீவிரவாதிகள் அந்தக் கல்லூரியில் இருப்பதாக

நம்புகிறீர்களா?"

பேச்சு அபாயகரமாகத் திரும்புவதை எக்ஸ் உணர்ந்தார். இருட்டில் மறைந்து நின்று கொண்டிருக்கும் ரெட்டி இந்த வேளையில் சமயோசிதமாக எதாவது சொல்லி தப்பிக்க வைப்பாரா என்று ஆசையுடன் எக்ஸ் எதிர்பார்த்தார். ஆனால் ராஜாராம் ரெட்டி பிசின் போட்டு ஒட்டியது போல் ஜீப்புடன் ஒட்டி நின்றாரே ஒழிய அவர்கள் பக்கம் வரவில்லை.

ஒரு நிருபர் காமிராவைப் பார்த்துப் பேச ஆரம்பித்தார். படப்பிடிப்பு அது செய்யப் பட்டது.

"வணக்கம் நேயர்களே. ரெயின்போ டிவிக்காக உங்கள் முன் இருப்பது மல்லிகார்ஜுன். எம்.பி சாந்தகுமார் யாதவிற்கும் நடிகை காமினிக்கும் இடையே ரகசியத் திருமணம் நடைபெற உள்ளது என்று கேள்விப்பட்டு யாதவின் புறநகர் வீட்டுக்கு நாம் வந்திருக்கிறோம். நமக்கும் முன்னே இந்த அதிகாலை போலீஸ்காரர்கள் பெருமளவு வந்து குவிந்திருப்பதில் நமக்கு அதிர்ச்சி. பாராளுமன்ற உறுப்பினர்கள் தேவைக்கு ஏற்ப போலீஸ் இலாகா செயல்படுகிறதா என்ற கேள்வி நம் முன்னே எழுகிறது. போலீஸ்காரர்களோ அதை மறுத்து தீவிரவாதிகள் குறித்து ஏதோ தகவல்கள் அவர்களுக்கு கிடைத்து அதற்காகவே வந்திருப்பதாகச்

சொல்கிறார்கள். சாந்தகுமார் யாதவின் வீட்டில் யாரும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. ஆனால் அவருக்குச் சொந்தமான அருகே உள்ள கல்லூரிக்குப் போகும் வழியை மறைத்துக் கொண்டு போலீஸ்காரர்கள் நிற்கிறார்கள். இப்போது நம் முன் சில கேள்விகள் முக்கியமாக நிற்கின்றன. சாந்த குமார் யாதவ் நிருபர்கள் வரவை அறிந்து நடிகை காமினியுடன் கல்லூரிக்குள் போய் விட்டாரா, அவரை மறைக்கவே இந்த காவல் துறை உதவுகிறதா என்பது முதல் கேள்வி. அப்படி இல்லை தீவிரவாதிகள் குறித்து தகவல் கிடைத்து தான் போலீஸ் பட்டாளம் வந்துள்ளது என்றால் அந்தத் தீவிரவாதிகள் கல்லூரியில் ஒளிந்திருப்பதாக இவர்கள் எண்ணுகிறார்களா? அப்படியே அவர்கள் ஒளிந்திருந்தாலும் அவர்களைச் சென்று பிடிப்பதற்குப் பதிலாக இவர்கள் அந்த வழியில் யாரும் போகாமல் காவல் காத்து நிற்பது எதற்காக? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் அறிய இங்கே இருக்கும் உயர் காவல் அதிகாரியை நாம் கேட்போமா...."

சொல்லிக் கொண்டே மைக்கை மிஸ்டர் எக்ஸிடம் நீட்டினார் அந்த நிருபர். காமிராவும் அவர் பக்கம் திரும்ப எக்ஸ் பரிதாபமாக விழித்தார்.

நிலைமை மோசமாகிக் கொண்டே போவதை அறிந்த ராஜாராம் ரெட்டிக்கு இது எதிரிகளின் திட்டமிட்ட வேலை என்பதில்

சந்தேகமில்லை. எக்ஸ் சொன்னபடி டிவிக்காரி இதில் அவர்களுக்கு ஒத்துழைப்பைத் தந்திருக்கிறாள்.

உடனடியாக அக்‌ஷயின் கூடவே இருந்த நபருக்குப் போன் செய்தார். "அவன் உங்கள் பாதுகாப்பில் தானே இன்னமும் இருக்கிறான்"

"ஆமாம் சார். அவன் கையைக் கட்டி ஒரு வகுப்பறைக்குள் வைத்திருக்கிறோம். அவனை சுற்றி நான்கு பேர் இருக்கிறோம். வகுப்பறைக்கு வெளியே நான்கு பேர் இருக்கிறோம். எல்லாம் எங்கள் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது சார். கவலைப் படாதீர்கள்"

ராஜாராம் ரெட்டி நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

## 97

டிஐஜி கேசவதாஸ் அதிகாலை எழுந்திருக்கும் பழக்கம் உடையவர். எழுந்து காலைக்கடன்களை முடித்து விட்டு ஒரு லிட்டர் தண்ணீர் குடித்து விட்டு மேலோட்டமாய் டிவி செய்திகளை ஐந்து நிமிடம் பார்த்து விட்டு அருகே இருக்கும் மைதானத்தில் ஐந்து கிலோ மீட்டர் தூரம் நடப்பது அவருடைய நீண்ட கால வழக்கம்.

அன்றும் அப்படித்தான் அதிகாலையில் மேலோட்டமாய் டிவி செய்திகளைப் பார்க்க ஆரம்பித்தார். ஆனால் ஐந்து நிமிடம் பார்ப்பது போய் அது அரை மணி நேரத்திற்கும் அதிகமாக நீண்டது. காரணம் அவருக்கு அடுத்த நிலையில் இருக்கும் போலீஸ் அதிகாரியை டிவி செய்தியில் பார்த்தது தான்.

சாந்தகுமார் யாதவ், நடிகை காமினி இருவருக்கிடையே நடக்க இருக்கும் ரகசியத் திருமணத்திற்கு பாதுகாப்பு தரத்தான் போலீஸ் படையே அங்கு கூடி உள்ளதா, இல்லை உண்மையாகவே தீவிரவாதியைப் பிடிக்க அங்கு போலீஸ் கூடியிருக்கிறதா என்ற கேள்வியை நிருபர்கள் எழுப்பி அவரிடம் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திணறிக் கொண்டிருந்தார். யாராவது உதவிக்கு வர மாட்டார்களா என்று அடிக்கடி பக்கவாட்டில் பார்த்துக் கொண்டு இருந்தது வெளிப்படையாகத் தெரிந்தது. உண்மையிலேயே அவருக்கு உதவ முடிந்த யாரோ அந்தப் பக்கம் இருக்கக் கூடும் என்றும் கேசவதாஸ் அனுமானித்தார்.

காமிரா கல்லூரிக்குச் செல்லும் வழியை மறித்துக் கொண்டு குறுக்காக நின்ற போலீஸ் வேன் மற்றும் போலீஸ்காரர்களை நிதானமாக வலம் வந்தது. கேசவதாஸிற்கு கோபம் பொங்கி வந்தது. அவருடைய துறையில் அவருக்குக் கீழே இருக்கும் அதிகாரிகள்

தாங்களாகவே முடிவு எடுத்து அவருக்குத் தெரிவிக்காமல் இயங்குவது அவருக்கு சிறிதும் பிடிக்கவில்லை. அரசியல்வாதிகளின் கைகளில் பகடைக்காய்களாகவே போலீஸ் துறை பல நேரங்களில் செயல்படுகிறது என்றாலும் அதன் தலைமைப் பொறுப்பில் இருப்பவருக்கே தகவல் தராமல் தான் தோன்றித் தனமாக அடுத்த நிலை அதிகாரிகளை வைத்து அதைச் செய்வது எல்லை மீறிய செயலாக அவர் நினைத்தார். கூடி இருக்கும் போலீஸ் பட்டாளத்தைப் பார்க்கையில் அவருக்கு அது அமானுஷ்யன் விவகாரமாகவே இருக்கும் என்று தோன்றியது. கையாலாகாத கோபத்துடன் நடப்பதை கூர்ந்து கவனித்தார்.

*********

மிஸ்டர் எக்ஸ் சொல்லிக் கொண்டிருந்தார். "..... பாதுகாப்பு காரணங்களாக சில கேள்விகளுக்கு நாங்கள் வெளிப்படையாக பதில் சொல்ல முடியாதவர்களாக இருக்கிறோம். சமூகப் பொறுப்புடன் இங்கிருந்து கலைந்து போகும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் ஆரம்பத்தில் சந்தேகப்பட்டது போல கண்டிப்பாக எம்.பி சாந்த குமார் யாதவ், நடிகை காமினி அவர்களுடைய திருமணம் இங்கு நடைபெறவில்லை. யாரோ உங்களைப் பொய் வதந்தி பரப்பி ஏமாற்றி இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்....."

எது தீவிரமாக மறுக்கப்படுகிறதோ அது உண்மையாக இருக்கக்கூடும் என்ற அடிப்படை சந்தேகத்தின் காரணமாக நிருபர்கள் கலைகிற மனநிலையில் இருக்கவில்லை. நேரடி ஒளிபரப்பில் செய்தியைப் பார்த்து விட்டு அது வரை அங்கு வந்திராத நிருபர்கள் பல பத்திரிக்கைகளில் இருந்தும் டிவி சேனல்களில் இருந்தும் மேலும் வந்து குவிய ஆரம்பித்தார்கள்.

லேசாக விடியவும் ஆரம்பித்து விட்டது. அந்தத் தெரு நெடுக நின்று கொண்டிருந்த வாகனங்களைக் கண்ட ராஜாராம் ரெட்டி கோபத்தில் பற்களைக் கடித்தார். அமானுஷ்யனின் தாயையும், டிவிக்காரி மகனையும் தவற விட்டது வேறு அவருடைய கணக்கிடும் திறமைக்கு ஒரு கரும்புள்ளியாக இருந்தது. இனி மற்றவர்கள் கண்களில் இருந்து மறைந்திருக்க வாய்ப்பு இல்லை என்பதையும் உணர்ந்த அவர் கடைசியாக வந்த மற்ற நிருபர்களைப் போலவே தானும் கடைசியாக செய்தி அறிந்து என்ன நடக்கிறது என்று பார்த்துப் போக வந்தது போல நடிக்க தீர்மானித்தார்.

மற்றவர்கள் கண்களுக்குப் படுவதற்கு முன் மீண்டும் அமானுஷ்யனுடன் இருப்பவர்களில் ஒருவனுக்குப் போன் செய்தார். "அவன் என்ன செய்கிறான்?"

"உட்கார்ந்து கொண்டிருக்கிறான் சார். ஏதோ தியானம் செய்கிற மாதிரி கண்களை மூடிக்கொண்டிருக்கிறான்."

"அவன் கைகளின் கட்டு சரியாக இருக்கிறதா என்று பார்த்தீர்களா?"

"இருக்கிறது சார். அவன் எங்கள் பிடியில் இருந்து தப்பிப்பது கனவிலும் முடியாத காரியம்"

ராஜாராம் ரெட்டிக்கு அவன் பேச்சில் இருந்த கர்வம் எரிச்சலைத் தந்தது. "அவன் பார்ப்பதைப் போல அல்ல. அழுத்தக்காரன். மும்பையில் பல தாதாக்களுக்கு தண்ணீர் காட்டியவன். அவனிடம் எச்சரிக்கையாக இருங்கள். ஏமாந்து விடாதீர்கள். அவன் மீது எப்போதும் உங்கள் இரண்டு கண்ணும் இருக்கட்டும்"

"சரி சார்" என்று சொல்லி விட்டு போனை வைத்த ஆளிற்கு ராஜாராம் ரெட்டியைப் போன்ற பெரிய ஆள் இந்த அளவுக்கு பயம் இருப்பது ஆச்சரியமாக இருந்தது. அக்‌ஷயைக் கூர்ந்து பார்த்தான். அக்‌ஷய் கைகள் பின்னால் கட்டப்பட்டிருந்த அந்த நிலையிலும் எந்த அசௌகரியத்தையும் வெளிக்காட்டாமல் கண்களை மூடிக்கொண்டு அமைதியாக இருந்தான். அவனை நாற்காலியில் உட்கார வைத்து விட்டு சுற்றிலும் அவர்கள் நின்றிருந்தார்கள். அவர்களில் இருவர் துப்பாக்கியை அவனை நோக்கி நீட்டியபடி இருந்தார்கள்.

ராஜாராம் ரெட்டியிடம் பேசியவனிடம் அவனுடைய சகா கேட்டான். "என்னவாம்?"

அவன் அலட்சியமாக ரெட்டி சொன்னதைச் சொல்லி விட்டு சிரித்தான். அவனுடைய சகாவும் சிரித்தான். "இவன் என்ன சூப்பர் மேனா இல்லை தமிழ் சினிமா ஹீரோவா?" கேட்டு மற்றவர்களும் சிரித்தார்கள். அவர்கள் அக்ஷயின் பூர்வீகக் கதையை அறியாதவர்கள்.

அக்ஷய் அமைதியாக அவர்கள் சிரிப்பைக் கேட்டுக் கொண்டிருந்தான். எதிரியைப் பற்றி முழுமையாக அறியாமல் இருப்பது ஒரு பலவீனம் என்றால் அவனை விட பலம் வாய்ந்தவர்கள் என்று தங்களைத் தாங்களே எண்ணிக் கொள்வது அதை விடப் பெரிய பலவீனம். இது போன்ற பலவீனங்கள் ஒரு மனிதனை அஜாக்கிரதையாக இருக்க வைக்கும். அக்ஷய் கண்களைத் திறந்தான்.

அவர்கள் எச்சரிக்கையானார்கள். அவர்களுடைய துப்பாக்கிகள் உஷாராயின. அவன் அமைதியாக ஜன்னல் வழியே பார்த்தான். ஜன்னல் வழியே கல்லூரி வாசல் தெரிந்தது. அங்கு இரண்டு போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. முன்பு

அங்கிருந்த போலீஸ் வேன் இப்போது இல்லை.

'அருகில் நான்கு பேர், அறைக்கு வெளியே நான்கு பேர் என்று மொத்தம் எட்டு பேர்' என்று கணக்கு போட்டான். மறுபடி கண்களை மூடினான். இவர்களை சமாளித்து தப்பிக்க முடியுமா என்று அவன் கவலைப்படவில்லை. அம்மாவையும் வருணையும் ஆனந்த் பத்திரமாகக் கூட்டிக் கொண்டு போயிருப்பானா என்ற கேள்வி தான் மனதில் முக்கியமாக இருந்தது.

அவன் கண்களை மூடியவுடன் கூட சிறிது நேரம் அவர்கள் துப்பாக்கியை அவன் மீது குறி வைத்ததை விலக்காமல் அவனையே பார்த்துக் கொண்டு நின்றார்கள். அவன் சிறிது நேரத்தில் சிலை போல ஆனான். பின்புறம் கைகள் கட்டப்பட்ட நிலையிலேயே அசையாமல் உட்கார்ந்து இருந்த அவனை அவர்கள் ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். 'என்ன மனிதனிவன்? சாமியார் போல உட்கார்ந்திருக்கிற இந்த ஆளுக்குப் போய் இவ்வளவு பயப்படுகிறார்களே?' என்று நினைத்தார்கள்.

************

கேசவதாஸைப் போலவே டெல்லி லாட்ஜில் அமர்ந்திருந்த அந்த மனிதனும் டிவி காட்சிகளைப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

மிஸ்டர் எக்ஸ் நிருபர்களிடம் பரிதாபமாகப் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்து அவன் முகத்தில் அருவருப்பு படர்ந்தது. எழுந்து போய் மேசை மீது இருந்த மூன்று செல்போன்களில் ஒன்றை எடுத்து எண்களை அழுத்தினான்.

"என்ன நிலவரம்?"

"அந்தக் கிழவியும் பொடியனும் தப்பி விட்டார்கள்"

"அந்த சைத்தான்?"

"அவனை கல்லூரிக்குள் கொண்டு போய் வைத்திருக்கிறார்கள். ஒரு அறைக்குள் அவனை நான்கு பேர் பாதுகாப்பில் வைத்திருக்கிறார்கள். அறைக்கு வெளியே நான்கு பேர் காவல் இருக்கிறார்கள்...."

"என்ன? அவ்வளவு தானா?"

"அவன் கைகளைக் கட்டி இருக்கிறார்கள் சார். அவனுடைய எல்லா வித்தையும் அவன் கைகளில் தான் இருக்கிறது சார். கைகளைக் கட்டிப் போட்ட பிறகு அவனால் அங்கிருந்து தப்பிக்க முடிகிறது சாதாரணமான விஷயம் இல்லை சார்"

'அவனும் சாதாரணமான மனிதனில்லை' என்று நினைத்தவன் அடுத்த சந்தேகத்தைக் கேட்டான். "அந்த நிருபர்கள் கல்லூரிக்குப் போக போலீஸ் விடுமா?"

"என்ன ஆனாலும் அவர்களை விட மாட்டார்கள் போலத் தான் இருக்கிறது. அந்த சிபிஐ ஆள் கறாராய் சொல்லி இருக்கிறார்."

"கல்லூரிக்குப் பின் பக்கம் என்ன இருக்கிறது"

"பாதை எதுவும் இல்லை. பெரிய மதில் சுவருக்குப் பின்னால் சுமார் பதினைந்து ஏக்கரில் பெரிய முள் காடு தான் இருக்கிறது. அந்த முள்காடு தாண்டி ஒரு பெரிய சாக்கடை இருக்கிறது. அது வழியாக யார் வருவதும், போவதும் கஷ்டம் தான் சார்"

அவன் சொன்னதை மனதில் அசை போட்டு அந்த மனிதன் நிறைய யோசித்தான். இந்த எதிர்பாராத சம்பவங்கள் எதில் கொண்டு போய் முடியும் என்பதை அவனால் யூகிக்க முடியவில்லை. அவர்களுடைய திட்ட நாள் வேறு மிக அருகில் இருக்கிறது.... தலைமையிடம் தற்போதைய நிலைமையைத் தெரிவிப்பது உசிதம் என்று நினைத்தவனாய் வெளிநாட்டில் இருக்கும் தன் தலைவனுக்கு போன் செய்தான். தற்போதைய நிலைமையை விவரித்தான். கடைசியில்

சொன்னான். "....இப்போதும் அவனை உடனடியாகக் கொல்வதை விட்டு விட்டு அவனிடம் ஏதோ உண்மையை வரவழைக்க எண்ணி இருக்கிறார்கள். அதற்குள் அவன் தப்பி விடுவான் என்று என் உள்ளுணர்வு சொல்கிறது"

அவன் சொன்னதை எல்லாம் இடைமறிக்காமல் கேட்டு விட்டு மறு பக்கத்தில் இருந்து பதில் வந்தது. "அவனைக் கொல்வதற்கு முன் அவனிடம் இருந்து சில விவரங்களை வரவழைக்கும் அவசியம் இப்போது நமக்கும் வந்திருக்கிறது"

"என்ன சொல்கிறீர்கள்"

"அவன் நம் கூட்டங்களை மட்டுமல்ல நம் ரகசிய இடங்கள் அனைத்தையும் கூட வீடியோ எடுத்திருக்கிறான் என்று தகவல் வந்திருக்கிறது."

"இருக்க வாய்ப்பில்லையே. ஆச்சாரியாவிற்கு அவன் அனுப்பிய எல்லா தகவல்களையும் கம்ப்யூட்டரில் பார்த்து விட்டு தானே அழித்து இருக்கிறோம்"

"அவன் ஆச்சாரியாவிற்கு அனுப்பாத தகவல்களும் அவனிடம் இருக்கின்றன என்கிறார்கள். அந்த தகவல்களை அவன் எங்கேயோ

பத்திரமாய் ஒழித்து வைத்திருக்கிறான். அதைக் கண்டுபிடித்து அழித்து விடாவிட்டால் அவனைக் கொன்றாலும் நமக்கு என்றைக்கானாலும் ஆபத்து தான்."

"அப்படியானால் என்ன செய்வது?"

"உடனடியாக மந்திரிக்குத் தகவல் அனுப்புங்கள். அவனை நாமும் விசாரிக்க வேண்டி இருக்கிறது என்று சொல்லுங்கள். நம் ஆட்களையும் கூட்டத்தோடு கூட்டமாய் அங்கே அனுப்பி வையுங்கள்...."

"ஒருவேளை இந்த கலாட்டாவில் அவன் தப்பி விடவும் வாய்ப்பு இருக்கிறது"

"இந்த சந்தேகம் எனக்கு முதலிலேயே இருந்ததால் தான் சலீமை நான் முதலிலேயே இதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். பத்து நிமிடத்தில் உங்களை வந்து பார்ப்பான். இப்போதைய நிலவரத்தை அவனிடம் சொல்லுங்கள். மீதியை அவன் பார்த்துக் கொள்வான்..."

"சலீம் இப்போது......?"

"டெல்லியில் தான் இருக்கிறான்......"

"ஒரு சர்வதேச வாடகைக் கொலையாளியைப் பயன்படுத்தித் தான் அந்த சைத்தானைக் கொல்ல வேண்டுமா? நம்மில் யாருமே தகுந்த ஆட்கள் இல்லையா?"

"ஆட்கள் இருக்கலாம். ஆனால் நம்மிடம் இப்போது நேரம் அதிகம் இல்லை. இருக்கிற நேரத்தில் வேலையை முடிக்க அவனால் தான் முடியும்"

## 98

சலீம் டெல்லிக்கு வந்து மூன்று நாட்கள் ஆகின்றன. ஐந்து நட்சத்திர ஓட்டலில் தான் தங்கி இருந்தான். இந்த மூன்று நாட்களிலும் அவன் ஓட்டல் அறையை விட்டு வெளியே போனது ஒரு சில மணி நேரங்கள் தான். அறைக்குள் இருந்த நேரங்களில் அமானுஷ்யனின் ஃபைலை முழுமையாகப் படித்தான். நிறைய மனிதர்கள் அமானுஷ்யனுடன் பழகிய தங்கள் அனுபவங்கள் பற்றி சொன்னதை எல்லாம் விரிவாகப் படித்தான். சிலவற்றை திரும்பத் திரும்ப படித்தான். அவனுடைய லாப் டாப்பில் அவன் நிறைய வீடியோக்கள் பார்த்தான். எல்லாமே அமானுஷ்யன் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள். அமானுஷ்யனின் நடை, உடை,

பாவனையை கூர்ந்து கவனித்தான். அமானுஷ்யனை மையமாகக் கொண்ட நிகழ்வுகளை பல முறை பார்த்தான். இந்த மூன்று நாளில் அவன் அமானுஷ்யன் என்றழைக்கப்பட்ட மனிதனைப் பற்றி பரிபூரணமாக அறிந்திருந்தான். எல்லாம் அறிந்த போது அவனுக்கு அமானுஷ்யன் மேல் ஒரு தனி மரியாதை பிறந்திருந்தது. ஒரு கலைஞனுக்கு இன்னொரு கலைஞன் மேல் பிறக்கும் மரியாதையைப் போன்றது அது. இன்னும் சொல்லப்போனால் தன்னை விட சிறந்தவன் என்று அறியும் போது வரும் மரியாதை அது.

சலீம் முதல் முதலில் ஒரு கொலை செய்த போது அவனுக்கு வயது 18. இன்று அவனுக்கு வயது 31. 18 வயதிலிருந்து 25 வயது வரை அவன் செய்த கொலைகள் 22. எல்லாக் கொலைகளும் அவன் பணத்திற்காக செய்தது தான். ஆனால் அவன் ஒன்றில் கூட இது வரை பிடிபட்டதில்லை. அது அவன் செல்வாக்கை அதிகப்படுத்தி அவன் வாங்கும் தொகையையும் பல மடங்காக்கியது. அதன் பின் அவன் மிக முக்கிய பிரபல ஆட்களை லட்சக்கணக்கான டாலர்கள் வாங்கி கொல்வதற்கு மட்டுமே சம்மதித்தான். 25 வயதிற்கு மேல் 31 வயது வரை செய்த கொலைகள் நான்கு தான். நான்கில் ஒருவன் ஒரு ஐரோப்பிய கோடீசுவரன், இன்னொருவன் சிறிய ஆப்பிரிக்க நாடு ஒன்றின் சர்வாதிகாரி, ஒருத்தி பிரபல பாப் பாடகி, கடைசியாக கொன்றது ஒரு மபியா தலைவனை. ஒரு கொலை முடிந்து அடுத்த

பெரிய தொகைக்கான வேலை வரும் வரை ஆடம்பரமாக மது, மங்கை, உல்லாசப்பயணம் என்று கழிப்பான்.

ஆனால் வேலையை எடுத்துக் கொண்டு முடிக்கும் வரை அவன் வித்தியாசமான மனிதனாகி விடுவான். மது, மங்கை, மனதைத் திருப்பும் வேறு எந்த ஒரு தூண்டிலும் அவனை திசை திருப்ப முடியாது. அவன் முழு கவனமும் அந்த வேலையில் தான் இருக்கும். அவன் செய்யும் வேலையை மிகவும் கச்சிதமாகச் செய்து முடிப்பான். பின் கிடைத்த தொகையை அடுத்த வேலை வரும் வரை கவலை இல்லாமல் செலவழித்து வாழ்க்கையை அனுபவிப்பான்.

அவனை உலகத்தின் ஒரு பயங்கர தீவிரவாத இயக்கம் ஒன்று இரண்டு வாரங்களுக்கு முன் தொடர்பு கொண்டு அமானுஷ்யனைத் தீர்த்துக் கட்ட முடியுமா என்று கேட்ட போது அவனுக்கு அது அவமானப்படுத்தியது போல இருந்தது. உலகப் பெரும் புள்ளிகளைக் கொன்ற அவனை பெரிதாக யாருக்குமே தெரியாத ஒரு மனிதனைக் கொல்லச் சொல்வது கேவலப்படுத்துவது போல இருந்தது. ஆனால் அந்த இயக்கத் தலைவனே கூப்பிட்டு இதைக் கேட்ட போது அவன் சொன்னான். "உங்கள் இயக்கத்திலேயே எத்தனையோ சாமர்த்தியமான ஆட்கள் இருக்கிறார்களே"

"இவன் அதிசாமர்த்தியமானவன்"

"மனித வெடிகுண்டுகள் உங்களிடம் சர்வ சகஜமாக இருப்பார்களே. அவர்களை விட்டு அவனை அழித்து விடலாமே. அவன் ஒன்றும் பாதுகாப்புடன் இருக்கும் பிரபல ஆள் அல்லவே"

"நெருங்க முடிந்தால் தானே எதுவும் செய்ய முடியும். அப்படியே நெருங்க முடிந்தாலும் யாரும் எதையும் செய்வதற்கு முன் அவன் எதாவது செய்து விடுவான்"

இந்த வார்த்தைகள் வேறு யாராவது ஆளிடம் இருந்து வந்திருந்தால் அவன் கண்டிப்பாக அந்த நபரின் கையாலாகாத்தனம் என்று நினைத்திருப்பான். ஆனால் அங்கு அப்படி அவனால் நினைக்க முடியவில்லை.

தன் கூலித் தொகையைச் சொல்லி அவர்களைப் பின்வாங்க வைக்கப் பார்த்தான். தொகையை சொன்னவுடன் அந்த இயக்கத் தலைவனின் புருவங்கள் உயர்ந்தாலும் மறுப்பு சொல்லாமல் ஒத்துக் கொண்டான். ஆனால் அவன் சொன்னான். "உண்மையில் அவனைக் கொல்ல நாங்கள் வேறு ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். இந்தியாவின் சக்தி வாய்ந்த அரசியல்வாதி ஒருவரின் கீழ் சிபிஐ, போலீஸ் எல்லாம் இந்த வேலையில் இறங்கி இருக்கிறது..."

"அப்புறம் என்ன?"

"ஒருவேளை அவர்களால் முடியா விட்டால் நீ எங்களுக்கு அந்த வேலையை முடித்துக் கொடுக்க முடியுமா?"

"முடியாது என்று சொல்வதைக் கேவலமாக நினைப்பவன் நான். இன்னும் ஒரு வாரம் நான் டெல்லியில் தான் இருப்பேன். அவர்களால் முடியா விட்டால் என்னிடம் சொல்லுங்கள். பார்த்துக் கொள்கிறேன்."

"நான் எதற்கும் அவனைப் பற்றிய எல்லா விவரங்களையும் உனக்கு அனுப்பி வைக்கிறேன். அதைப் படித்துப் பார்த்து நீ தயாராக இரு. தேவைப்பட்டால் உன்னிடம் சொல்கிறோம். எங்கள் இயக்கத்தின் முக்கியமான ஆள் உன்னை தொடர்பு கொள்வான். நீ தயார் நிலையில் இருப்பதற்காக மட்டுமே நாங்கள் உனக்கு நீ கேட்ட தொகையில் 10 சதவீதம் தருகிறோம்"

பணத்தையும் விட உன்னால் முடியுமா என்று கேட்கக்கூடிய அளவிற்கு இருக்கும் அந்த அமானுஷ்யன் பற்றி தெரிந்து கொள்வதற்காகவே சலீம் சம்மதித்தான். மறுநாளே அவன் தங்கியிருந்த அறைக்கு வந்து ஒரு ஆள் பெரிய பெட்டியைத் தந்து விட்டுப் போனான்.

அந்தப் பெட்டியில் இருந்தவை எல்லாமே அமானுஷ்யன் பற்றி தான். ஆரம்பத்தில் இருந்த ஆர்வம் அமானுஷ்யனைப் பற்றித் தெரியத் தெரிய அதிகமாகிக் கொண்டே போனது. ஒரு பெரிய காகிதத்தில் அமானுஷ்யனின் + மற்றும் – குறியிட்டு எழுதியவன் + குறியின் கீழ் நிறைய எழுத வேண்டி இருந்தது. – குறியில் இரண்டே இரண்டு தான் எழுதினான். 1) உண்மையிலேயே நல்லவன் 2) வலுவான மனசாட்சி இருப்பவன். சலீம் அகராதியில் இந்த இரண்டுமே இந்தக் காலத்தில் பெரிய குறைபாடுகள் தான்.

+ல் நிறைய எழுதிக் கொண்டே வந்தவன் கடைசியில் இரண்டு விஷயங்களுக்கு அடிக்கோடு இட்டான். ஒன்று மனக்கட்டுப்பாடு, இரண்டு கர்வம் துளியும் இல்லாமை. இரண்டும் மிகவும் கஷ்டமானவை என்பதை அவன் அறிவான். இந்த பட்டியலில் இல்லாத விஷயங்கள் இன்னும் இருப்பதாக அவனுக்குப் பட்டது. சீனத்திலும், திபெத்திலும், இமயமலையிலும் அவன் என்னவெல்லாம் கற்றுக் கொண்டிருக்கிறான் என்று அறிந்தவர் யாரும் இல்லை. மின்னல் வேகத்தில் இயங்குவான், தொட்டால் ஏதாவது நுண்ணிய நரம்பைத் தட்டி விட்டு தாங்க முடியாத வலியிலும், கோமாவிலும் விட்டு விடுவான் என்பதைத் தவிர வேறு பெரிதாக எதையும் யாரும் அவன் திறமைகளைப் பற்றித் தெரிந்து வைத்திருக்கவில்லை.

கடைசி தகவலாக அவன் பழையதை எல்லாம் மறந்திருக்கலாம் என்று சந்தேகப்படுவதாக எழுதி இருந்தார்கள். மலையின் மேல் இருந்து விழுந்ததால் அப்படி ஆகி இருக்க வேண்டும் என்றும் இல்லா விட்டால் அவனுக்குத் தெரிந்திருக்கும் விஷயங்களை வைத்து அவன் அவர்களை சுலபமாகக் காட்டிக் கொடுத்திருப்பான் என்று எழுதி இருந்தார்கள்.

அவனைப் பற்றி படித்ததையும் வீடியோவில் பார்த்ததையும் சலீம் யோசித்துக் கொண்டிருக்கையில் தான் அந்த போன் வந்தது. எந்த விதமான முன்னுரையும் இல்லாமல் தகவல் வந்தது அமானுஷ்யன் விவகாரத்தில் அவன் உதவி அவர்களுக்குத் தேவைப்படுகிறது என்று. அவனும் சுற்றி வளைக்காமல் சொன்னான் பேசிய தொகையில் 30 சதவீதம் அவனுடைய சுவிஸ் வங்கிக் கணக்கில் போட வேண்டும் என்று. ஒத்துக் கொண்டு அவன் பார்க்க வேண்டிய ஆள் பற்றி விவரம் கூறப்பட்டது.

ஐந்து நிமிடங்கள் கழித்து அவன் வங்கிக் கணக்கை இண்டர்நெட்டில் பார்த்த போது பணம் வரவாகி இருந்தது. உடனே சலீம் கிளம்பினான். அவன் பார்க்க வேண்டிய ஆள் பக்கத்து தெருவில் ஒரு லாட்ஜில் இருந்தான். பத்து நிமிடத்தில் அங்கு இருந்தான். அந்த சுத்தமில்லாத லாட்ஜில் சந்தித்த சலனமில்லாத

மனிதன் அவனை உட்காரக் கூடச் சொல்லாமல் தற்போதைய நிலவரத்தைச் சொல்ல ஆரம்பித்தான். அந்த இடத்தையும் விவரித்தான்.

சலீமிற்கும் அங்கிருந்த அழுக்கு நாற்காலியில் உட்கார மனமிருக்கவில்லை. நின்று கொண்டே அவன் சொல்வதை கவனமாகக் கேட்டான். டிவியில் இன்னமும் கல்லூரியில் இருப்பது எம்.பி யாதவும், நடிகை காமினியுமா இல்லை தீவிரவாதி யாராவதா என்ற சர்ச்சை நடந்து கொண்டிருந்தது.

அந்த மனிதன் சலீமிடம் கேட்டான். "அவன் அங்கிருந்து தப்ப முடியும் என்று நினைக்கிறாயா?"

"அது அவன் கூட இருக்கும் ஆட்களைப் பொருத்தது. அவனைப் பற்றி முழு விவரம் தெரிந்த ஆட்களாய் இருந்தால் அவனால் என்னவெல்லாம் செய்ய முடியும் என்று தெரிந்தவர்களாய் இருந்தால் அவனால் அங்கிருந்து தப்பிப்பது கஷ்டம். இல்லா விட்டால் அவன் ஏதாவது செய்து தப்பிக்க வாய்ப்பு இருக்கிறது"

சலீம் அமானுஷ்யனைப் பற்றி முழுவதுமாகத் தெரிந்து வைத்திருக்கிறான் என்று நினைத்தவனாய் அந்த மனிதன் சொன்னான். "உடன் இருப்பது போலீஸ் மற்றும் சிபிஐ ஆட்கள்.

அவர்கள் சாமர்த்தியசாலிகளாகத் தான் இருப்பார்கள். ஆனால் அவர்களுக்கு இவனைப் பற்றி எந்த அளவு தகவல் தெரியும் என்பது தெரியவில்லை."

"எதிரியைப் பற்றி தெரியாமல் இருப்பவர்களை சாமர்த்தியசாலிகள் என்று சொல்வது பொருத்தமில்லை"

அந்த சமயத்தில் டிவியில் ராஜாராம் ரெட்டி சொல்வது கேட்டது. ".... இந்த இடத்தில் கூடிய கூட்டத்தை டிவியில் பார்த்து விட்டு தான் நானும் இங்கே வந்தேன். நீங்கள் எல்லாரும் சந்தேகப்படுவது போல எம்.பி யாதவோ, காமினியோ இங்கே இல்லை. எம்.பி யாதவ் தற்போது துபாயில் இருக்கிறார். நடிகை காமினி சிம்லாவில் ஒரு படப்பிடிப்பில் இருக்கிறார். இப்போது தான் நான் அவர்களுடன் பேசினேன். சந்தேகம் இருந்தால் நீங்களும் இதை உறுதி செய்து கொள்ளலாம்...."

"அப்படியானால் கல்லூரிக்குள் இருப்பது தீவிரவாதி ஒருவனா இல்லை பலரா?" ஒரு பெண் நிருபர் கேட்டார்.

"தெரியவில்லை. பொதுவாய் தகவல் வந்திருக்கிறது. அது எந்த அளவு உண்மை என்றோ, இருந்தாலும் அது ஒருவனா இல்லை பலரா என்றோ தெரியாது"

"தீவிரவாதி இருக்கிறானா இல்லையா என்று அங்கே போய் பார்க்காமல் போலீஸ் பட்டாளம் இங்கே பாதையை மறைத்துக் கொண்டு நிற்பது எதற்கு?"

இன்னொரு நிருபர் கேட்டார்.

"சில போலீஸ்காரர்கள் அங்கே சோதித்துப் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். ஒருவேளை அப்படி தீவிரவாதிகள் அங்கிருந்தால் அவர்களைக் கையும் களவுமாய் பிடிக்கவும் செய்வார்கள். நீங்கள் எல்லோரும் அங்கே சென்றால் அந்தக் கலாட்டாவில் தீவிரவாதிகள் தப்பிக்கவோ, உங்களில் யாரையாவது பிணயக்கைதியாகப் பிடித்துக் கொள்ளவோ வாய்ப்பு இருக்கிறது என்பதால் தான் போலீஸ்காரர்கள் உங்களை அனுமதிக்காமல் இருக்கிறார்கள். புரிந்து கொள்ளுங்கள்..."

ராஜாராம் ரெட்டி பொறுமையாக நிருபர்களை சமாளித்துக் கொண்டிருக்க மிஸ்டர் எக்ஸ் கைக்குட்டையால் வியர்வையைத் துடைத்துக் கொண்டே பெருமூச்சு விட்டார்.

சலீம் டிவியில் அதைப் பார்த்துக் கொண்டே கேட்டான். "அவன் தான் கையில் கிடைத்தாயிற்றே. இன்னும் ஏன் அவனைக்

கொல்லாமல் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள்"

"அவனிடம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் அவர்களுக்கும், எங்களுக்கும் நிறைய இருக்கிறது"

"அப்படியானால் அங்கேயே அவனை விசாரிக்கச் சொல்லுங்கள். தெரிய வேண்டியதை தெரிந்து கொள்ளச் சொல்லுங்கள். அவனை வேறு எங்காவது கொண்டு போய் விசாரிக்கலாம் என்று நினைத்தால் அவன் அந்த போக்குவரத்து நேரத்தில் கண்டிப்பாக தப்பித்துக் கொள்ளும் அபாயம் இருக்கிறது." சலீம் உறுதியாகச் சொன்னான்.

சலீம் சொன்னது புத்திசாலித்தனமாகப் படவே உடனடியாக அவன் குறுந்தாடி மனிதனுக்குப் போன் செய்தான். "எங்கிருக்கிறாய்?"

"சம்பவ இடத்தில் தான். நீங்கள் சொன்னபடி நம் ஆட்களும் இருக்கிறார்கள். கூட்டத்தோடு கூட்டமாய் இருக்கிறோம்"

சலீம் சொன்னதை அவனிடம் சொல்லி விட்டுத் தொடர்ந்தான். "...மந்திரி மூலம் சொல்ல நமக்கு நேரம் போதாது. ரெட்டியிடம் ரகசியமாய் நேரடியாகவே சொல். நாமும் அவனை விசாரிக்க வேண்டி இருக்கிறது என்று சொல்"

பேசி விட்டு செல் போனை கட்டிலில் வீசிய அவன் அடுத்தது என்ன என்பது போல சலீமைப் பார்த்தான்.

"நான் அங்கே போகிறேன்"

"நீ அவன் அங்கிருந்து தப்பித்து விடுவான் என்று எதிர்பார்க்கிற மாதிரி தெரிகிறது. எதனால் அப்படி நினைக்கிறாய்?"

"அவனைப் பற்றித் தெரிந்ததனால் தான்"

சலீம் போய் விட்டான்.

99

கேசவதாஸ் இன்னமும் டிவி முன் தான் அமர்ந்திருந்தார். டிவியில் ராஜாராம் ரெட்டியைப் பார்த்த போது அவருக்கு ஏற்பட்ட திகைப்பு கொஞ்ச நஞ்சமல்ல. இந்த ஆளுக்கு இங்கு என்ன வேலை என்ற கேள்வி அவர் மனதில் உடனே எழுந்தது. இதற்கு ஒரே பதில் தான் இருக்க முடியும் என்பது அவருக்குப் புரிந்தது. சிபிஐயும் அமானுஷ்யன் விஷயத்தில் சம்பந்தப்பட்டு இருக்கிறது. ராஜாராம்

ரெட்டியைப் பார்க்கப் பார்க்க மனதில் ஏதோ நெருட ஆரம்பித்தது. இந்த ஆள் தான் இப்போது சிபிஐயின் தலைவர் என்பதும் பழைய டைரக்டர் கோமாவில் படுத்து விட்டதால் இவரை நியமித்திருக்கிறார்கள் என்பதும் நினைவுக்கு வந்தது.

கோமா என்றாலே அவருக்கு அமானுஷ்யன் நினைவு தான் முதலில் வரும் நிலைக்கு அவர் வந்திருந்தார். ஜெயினின் கோமா அவன் கை வண்ணமாக இருக்குமோ என்ற சந்தேகம் பலக்கவே சிபிஐயில் தனக்கிருக்கும் நண்பர் ஒருவருக்கு உடனடியாக போன் செய்து பொதுவாகப் பேசுவது போல் பேசி ஜெயினின் கோமா பற்றி விசாரித்தார். ஜெயினிற்கு கோமா ஏற்பட்ட போது கூட இருந்தவர் ராஜாராம் ரெட்டி தான் என்று தெரிந்த போது அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது. மனிதர் மிக நல்லவர் என்று பெயரெடுத்தவர் ஆயிற்றே என்று ஒரு கணம் யோசித்தார். ஆனால் இப்போது அமானுஷ்யன் விவகாரத்தில் அவர் இருப்பது டிவி மூலம் உறுதியாக, ஜெயினின் கோமா சமயத்திலும் பக்கத்தில் இருந்தது அவர் தான் என்ற தகவலும் தெரிய பழைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டார்.

அவருக்கு அந்தக் கல்லூரியில் அமானுஷ்யனைப் பிடித்து வைத்திருக்க வேண்டும், அதனால் தான் அங்கே போக நிருபர்களை அனுமதிக்காமல் இருக்கிறார்கள் என்று தோன்றியது. போலீஸ்,

மந்திரி, சிபிஐ மூன்று பெரிய அதிகார மையங்களையும் பகைத்துக் கொண்டு அமானுஷ்யன் தப்பித்து பிழைக்க முடியும் என்று தோன்றவில்லை. ஆனால் அதை அவரால் 100 சதவீதம் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. அவன் விஷயத்தில் எதையும் அவரால் கணிக்க முடியவில்லை.

ஒருவேளை தப்பித்தால் அவன் கண்டிப்பாக அவரைத் தேடி வர வாய்ப்பு உண்டு. முன்பே மிரட்டி விட்டுப் போனவன் திரும்பி வந்தால்... என்ற எண்ணம் விஸ்வரூபம் எடுக்க உடனடியாக மனைவியையும், குடும்பத்தையும் எங்காவது தூரத்திற்கு அனுப்ப முடிவெடுத்தார்.

**********

ராஜாராம் ரெட்டியை மெல்ல குறுந்தாடி மனிதன் நெருங்கினான். ராஜாராம் ரெட்டி கூட்டத்திலிருந்து மெல்ல பின் வாங்கினார். பொது இடத்தில் அவனைப் போன்ற நபர்களுடன் தொடர்பு வைத்திருப்பது தெரியக் கூடாது என்று நினைக்கும் அவருக்கு அவன் அருகில் வந்தது எரிச்சலைத் தந்தது. ஆனாலும் அவன் நெருங்கவே, தெரிந்ததாகவே காட்டிக் கொள்ளாமல் அவனைக் கேள்விக் குறியுடன் பார்த்தார்.

அவன் தாழ்ந்த குரலில் சொன்னான். "அவனை அங்கேயே விசாரிக்கச் சொல்கிறார்கள். அவனை வேறெங்காவது கூட்டிக் கொண்டு போய் விசாரித்தால் அவன் தப்பித்து விடுவான். அது மட்டும் வேண்டாம் என்கிறார்கள்"

டிவியில் நேரடி ஒளிபரப்பு செய்து இப்படிக் கண்டவனுக்கெல்லாம் தெரிய வைத்து அவனுக்குப் பதிலும் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்குத் தன்னைத் தள்ளிய அந்த நிருபர் கூட்டத்தைராஜாராம் ரெட்டி மனதார சபித்தார். ஏதோ நிருபர் ஒருவர் ரகசியமாகக் கேட்பதற்கு அப்படியே பதில் சொல்பவர் போல ஒரு தோற்றத்தை உருவாக்கி விட்டு சொன்னார். "இந்த நிருபர்கள் கூட்டத்தை விட்டு நாங்களே அவன் பக்கம் போகாமல் தவிக்கிறோம். இதில் எப்படிப் போய் அவனை விசாரிப்பது? இப்போது அவனைப் பிடித்து கட்டிப் போட்டிருக்கிறோம். அவனை வேறிடத்திற்குக் கூட்டிக் கொண்டு போகும் போது கைகால்களை நன்றாக இறுக்கிக் கட்டி வாயையும் துணியால் மூடி தான் குண்டுக்கட்டாய் தூக்கிக் கொண்டு போகப் போகிறோம். அவனிடம் விசாரித்து விட்டு உங்களிடம் பிணத்தை சீக்கிரமாய் தந்து விடுகிறோம்"

"அவனிடம் எங்களுக்கும் விசாரிக்க வேண்டி இருக்கிறது"

ராஜாராம் ரெட்டி சொன்னார். "அப்படியானால் நாங்கள் விசாரித்து விட்டு உங்களிடம் அவனை ஒப்படைத்து விடுகிறோம். அப்புறம் உங்கள் பாடு, அவன் பாடு" என்றவர் அதற்கு மேல் அவனிடம் பேச விரும்பாமல் எக்ஸிடம் போய் ஏதோ கலந்தாலோசிப்பது போல் பேசினார்.

குறுந்தாடிக்காரன் தனியாகப் போய் லாட்ஜில் இருந்த ஆளிற்குப் போன் செய்து ரெட்டி சொன்னதைச் சொன்னான். ரெட்டி சொன்னது போல நகர முடியாதபடி இறுக்கிக் கட்டி எடுத்துச் சென்றால் அமானுஷ்யன் எதுவும் செய்ய முடியாது என்ற யதார்த்த நிலை லாட்ஜில் இருந்த ஆசாமிக்கும் புரிந்தாலும் ஏனோ ஒரு இனம் புரியாத அவநம்பிக்கையும் கூடவே வந்தது. அவன் ஒரு நிமிடம் யோசித்து விட்டுச் சொன்னான். “என்ன ஆனாலும் அவர்கள் அவனைக் கூட்டிக் கொண்டு போகும் போது நீங்களும் கூடவே போங்கள். அவனிடம் ஜாக்கிரதையாக இருங்கள்”

ஒரு நிருபர் எக்ஸையும், ரெட்டியையும் பார்த்து கேள்வி கேட்டார். "இப்போது இந்தக் கல்லூரியில் இருக்கலாம் என்று நினைக்கும் தீவிரவாதி அல்லது தீவிரவாதிகள் யார்? எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்?"

ரெட்டி சொன்னார். "அதைப் பற்றி தான் நான் இவரிடமும் கேட்டுக்

கொண்டு இருந்தேன். தீவிரவாதிகள் இருப்பது உண்மை தானா, இருந்தால் இருப்பது ஒரு ஆளா, இல்லை பல ஆட்களா, அவர்கள் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், என்று போலீசுக்கும் தெரியவில்லை. கல்லூரியின் உள்ளே சோதனை செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிறிது நேரத்தில் நிலவரம் தெரிந்து விடும்."

இன்னொரு நிருபர் கேட்டார். "இது போல் எத்தனையோ பொய் புகார்கள் வருகின்றன என்று நேற்று தான் போலீஸ் அதிகாரிகள் சொன்னார்கள். அப்படி இருக்கிற போது இதை மட்டும் உண்மையாக இருக்கக்கூடும் என்று நம்பி வந்து சோதனை போடுவதற்குக் காரணம் ஏதாவது இருக்கிறதா?"

வேறொரு நிருபர் கேட்டார். "ஒரு வேளை வெடிகுண்டு ஏதாவது வைத்திருப்பார்களோ?"

ரெட்டிக்குக் கோபம் பொங்கி வந்தது. உண்மையான செய்திகளைப் போடுவதற்கு பதிலாக செய்திகளை உருவாக்கிப் போடுவது தான் இவர்களுடைய வேலையோ? இவர்கள் அடிக்கும் கூத்துக்கு எல்லையே இல்லையா? கோபத்தை அடக்கிக் கொண்டு சொன்னார். "எல்லாவற்றையும் சிறிது நேரத்தில் அறிந்து கொள்ளலாம். அதுவரையில் பொறுமையாக இருங்கள்"

ரெட்டி எக்ஸை தனியாக அழைத்துக் கொண்டு பேசினார். "என்ன செய்யலாம். இந்த கூட்டம் நம்மை விடுவதாயில்லை"

"மொத்தத்தில் என் நேரம் சரியில்லை என்று நினைக்கிறேன். கேசவதாஸ் சாருக்குத் தெரியாமல் இந்த வேலைகளை எல்லாம் செய்கிறோம். இப்போது டிவியிலேயே வந்து விட்டது. என்ன சொல்வாரோ தெரியவில்லை. அந்த அமானுஷ்யனை சாகடிக்கும் முன்னால் நம்மை சாகடித்து விடுவான் போல் இருக்கிறது"

"கேசவதாஸ் பற்றி கவலைப்படாதீர்கள். மந்திரியைக் கை காண்பியுங்கள். அவர் அடங்கி விடுவார். இப்போது நாம் இங்கே மாட்டிக் கொண்டிருக்கிறோம். எப்படி தப்பிப்பது என்று பாருங்கள். அந்தக் கல்லூரிக்குப் பின் பக்கம் என்ன இருக்கிறது? அந்த வழியாக அவனைக் கூட்டிக் கொண்டு போக முடியுமா?"

"கல்லூரிக்குப் பின் பக்கம் பெரிய மதில் சுவர் இருக்கிறது. பத்தடிக்கும் மேல் இருக்கும். அதற்குப் பின்னால் ஒரு முள் காடு இருக்கிறது. அதையும் தாண்டினால் சாக்கடை. அதனால் பின் பக்கம் போவதை மறந்து விடுங்கள். முன்னால் இந்த சனியன்களைத் தாண்டி தான் போக வேண்டும். அதற்கு ஏதாவது ஒரு வழியை யோசியுங்கள்"

ராஜாராம் ரெட்டி தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தார்.

நடப்பதை எல்லாம் தூர இருந்து பார்த்துக் கொண்டு இருந்த சலீம் விரைவாக அங்குள்ள நிலவரத்தைக் கணித்து தன் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி யோசித்தான். அமானுஷ்யன் உண்மையிலேயே கல்லூரிக்குள்ளே இருந்து தப்பிப்பது சாத்தியம் என்றால் அவனுக்கு வேலை. அமானுஷ்யன் தப்பிப்பானா? மாட்டானா? எப்படியாவது தப்பிக்கிறான் என்று வைத்துக் கொண்டால் என்ன செய்வான் என்று யோசித்தான். இந்தக் கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்து விட்டால் வெகு சுலபமாக அவன் அங்கிருந்து மாயமாகி விடுவான். ஆனால் அந்தக் கல்லூரியில் இருந்து அந்த போலீஸ் பட்டாளம் வேனோடு நின்று கொண்டிருக்கும் இடம் நிறைய தூரம் இருக்கிறது. அவன் வருவது தெரிந்தால் அத்தனை பேரும் திரும்பி சுட்டு விடுவார்கள். அதனால் அவன் கூட்டத்தோடு கலந்து விடுவது இப்போதைக்கு முடியாத காரியம். ஒருவேளை இந்த நிருபர் கூட்டம் கல்லூரி வரை போய் சூழ்ந்து கொண்டால் மட்டுமே அவன் இவர்களோடு கலந்து விட முடியும். ஆனால் என்ன ஆனாலும் இவர்களை கல்லூரி பக்கம் விடுவதில்லை என்று போலீஸ் உறுதியாக இருப்பது தெரிகிறது? கல்லூரிக்குப் பின் பக்கம் என்ன இருக்கிறது என்று அங்கிருந்த சிலரிடம் விசாரித்தான். அவர்கள் சொன்னார்கள். மதில்சுவர் முள் காடு, சாக்கடை எல்லாம் மற்ற

நபர்களை தடுத்து நிறுத்தலாம். ஆனால் அமானுஷ்யனை....?

அவனைப் பற்றி பலரும் பல விதமான பரபரப்பான எண்ணங்களுடன் இருக்கையில் அக்ஷய் கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் இருந்தான். கிட்டத்தட்ட அரைத் தூக்கத்திற்குப் போய் விட்டான் என்றே சொல்ல வேண்டும். அவன் கடந்த கால நினைவு ஒன்று மின்னலாக வந்து போனது.

அவன் ஒரு வங்கி முன் நின்று கொண்டிருக்கிறான். அந்த வங்கிக்கு எதிரில் ஒரு பெரிய சர்ச் இருந்தது. யாராவது தன்னைக் கவனிக்கிறார்களா என்று சுற்றிலும் முற்றிலும் பார்த்து விட்டு வங்கிக்குள் அவன் நுழைகிறான்.

வங்கி அதிகாரி ஒருவர் அவனை வரவேற்றார். "வாருங்கள் அஜீஸ் சார். டெபாசிட் ஏதாவது போடுகிறார்களா? இல்லை வழக்கம் போல லாக்கரை உபயோகப்படுத்த வந்திருக்கிறீர்களா?"

அக்ஷய் சிரித்தான். "கண்டிப்பாக டெபாசிட் போடுகிறேன். எனக்கு வர வேண்டிய தொகை இன்னும் ஏனோ வரவில்லை. வந்தவுடன் நான் செய்யும் முதல் வேலை உங்களுக்கு டெபாசிட் தருவது தான். இப்போது லாக்கர் வேலையாகத் தான் வந்திருக்கிறேன்."

அதிகாரி சிரித்தபடி சொன்னார். "சரி. இந்த ஊரில் எங்கள் வங்கி மாதிரி வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்கிற வங்கி வேறெதுவும் இல்லை என்பது உங்களுக்கும் தெரியும். சீக்கிரம் எங்களுக்கு பெரிய தொகை டெபாசிட் தரவேண்டும். உங்கள் லாக்கர் எண் என்ன?"

நினைவுச் சங்கிலி மறுபடி அறுந்தது. அக்ஷய் கண் விழித்தான். நிலவரத்தை மறுபடி கவனித்தான். அவன் அருகில் இருந்த போலீஸ்காரர்கள் அவர்களுக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் மிக அருகிலேயே இருந்தார்கள். அறைக்கு வெளியே இருந்த போலீஸ்காரர்கள் ஒரு பெஞ்சில் அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

போலீஸ்காரர்கள் பேசியதைக் காது கொடுத்தான்.

"இன்னும் அங்கே கூட்டம் கலையவில்லையா?"

"இல்லை."

"கூட்டம் இங்கே வராதே"

"நம் ஆட்கள் வர விட மாட்டார்கள்"

"நம் ஆட்கள் எங்கே நிற்கிறார்கள்?"

"அரை கிலோமீட்டர் தள்ளி"

இவர்களிடமிருந்து தப்பித்தாலும் முன் வழியே போக முடியாது என்று அக்‌ஷய் கணக்குப் போட்டான். அரை கிலோ மீட்டர் அத்தனை பேர் கண்ணிலும் மண்ணைத் தூவி கடந்து விட முடியாது! தப்பித்துப் போனாலும் பின்னால் தான் போக வேண்டும். பின்னால் பெரிய சுவர் இருக்கிறது . அதற்கும் பின்னால் என்ன இருக்கிறது என்று தெரியவில்லை...

அவர்கள் அவனைப் பார்ப்பதை உணர்ந்து மீண்டும் அவன் கண்களை மூடினான்.

100

அக்‌ஷய் கண்களை மூடி அடுத்த மின்னல் வேக நடவடிக்கைக்குத் தயாரானான். அவனுடைய குருவின் வார்த்தைகள் அவன் காதில் இன்னமும் ஒலித்தன. "எந்த முக்கிய செயலுக்கும் முன்னால் முதலில் ஆழ்ந்த அமைதிக்குப் போ. அந்த அமைதி தான் அந்த முக்கிய

செயலுக்கு சக்தியை சேகரித்துக் கொடுக்கிறது. பல்லியைப் பார்... சிங்கத்தைப் பார்.... அது தன் இரையைத் தாக்குவதற்கு முன் எப்போதுமே ஒரு கணம் அசையாமல் அமைதியாக தன் சக்தியைச் சேகரித்து வைத்துக் கொண்டே பின் இயங்க ஆரம்பிக்கிறது. அது தேவை இல்லாமல் தன் சக்தியை வீணடிப்பதில்லை. ஒரே சக்தி வாய்ந்த தாக்குதலில் இரையைப் பிடித்து சக்தியற்றதாக்கி விடுகிறது.... தான் தாக்கப் போவதை எந்த விதத்திலும் வெளியே காட்டிக் கொள்வதில்லை. எல்லா ரகசியங்களும் உன்னை சுற்றி உள்ள இயற்கையிலும், இயற்கை படைத்த உயிர்களிலும் பொதிந்து கிடக்கின்றன. நீ கவனிக்க மட்டும் செய்தால் போதும். உன்னால் கற்றுக் கொள்ள முடியும்....."

கற்றுக் கொள்வது என்றுமே சுலபமாக இருந்ததில்லை. மாதக்கணக்கில் சரியான அளவான உணவு உண்டு, தொடர்ச்சியான பயிற்சிகள் செய்து ஒரு கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்ந்து கற்ற வித்தைகள் அவை. ஆனால் ஒவ்வொன்றையும் கற்று தேர்ந்து அந்த குருவின் கண்களில் வார்த்தை இல்லாத ஒரு பெருமிதம் தெரிகையில் கிடைத்த சந்தோஷம் எல்லை இல்லாதது.

அவன் குரு எப்போதும் சொல்வார். "நீ சொன்னபடி உன் உடல் கேட்க வேண்டும். அதுவே அது உன் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதற்கு அறிகுறி..... உன் உடல் ஒரு வரப்பிரசாதமாக

இருக்கும் போதே அதை நன்றாக பாதுகாத்து பலப்படுத்திக் கொள். அது உன் கவனக்குறைவுகளால் சக்தி இழக்குமானால் அதை விடப் பெரிய சாபக்கேடு உனக்கு வேறு இருக்க முடியாது. அப்படி சீர்குலையுமானால் அதைத் தவிர வேறு எதை நினைக்கவும் உனக்கு நேரமிருக்காது."

அக்ஷய் அந்த அறிவுரையை என்றுமே மறந்ததில்லை. அவன் உடல் அவனுக்கு என்றுமே ஒரு வரப்பிரசாதமான ஆயுதமாகத் தான் இருந்திருக்கிறது. திபெத்திலும் சீனாவிலும் அவன் பயிற்சி பெற்ற காலங்கள் அவனால் மறக்க முடியாத காலங்கள். உடலின் உண்மையான சக்தி உரம் படைத்த உடலில் இல்லை, நினைத்த விதத்தில் வளையவோ, வேகமாக நகரவோ முடிந்த திறனில் தான் இருக்கிறது என்ற பாடம் கற்றது அவனுக்கு பிற்காலத்தில் பேருதவிகளைச் செய்திருக்கின்றது. இன்றும் செய்யப் போகிறது...

அடிக்கடி அரைத்தூக்கத்தில் ஆழ்வதும், பின் கண் திறந்து பார்ர்பதுமாக இருந்த அக்ஷய் என்ற அந்த இளைஞனை அந்த போலீஸ்காரர்கள் சட்டை செய்வதை நிறுத்தி இருந்தார்கள். பார்க்க பலசாலியாகவும் தெரியவில்லை. ஒல்லியாக இருந்தான். இரண்டு போலீஸ் அடியைக் கூட அவன் தாங்குவானா என்பது சந்தேகமே. ஆனால் உயர் அதிகாரிகள் எச்சரித்ததன் காரணமாக அவன் மீது ஒரு கண்ணை எப்போதும் அவர்கள் வைத்திருந்தார்கள். இரண்டு

கைகளையும் பின்னுக்கு வேறு கட்டி இருக்கிறார்கள். அவனிடம் ஆயுதமும் இல்லை. அவர்களோ துப்பாக்கிகளோடு இருக்கிறார்கள். அவனோ ஒருவன், அவர்களோ பலர். இதெல்லாம் அவர்களுக்கு நேரம் செல்ல செல்ல ஒருவித அலட்சியத்தைத் தந்திருந்தது. வெளியே காவலுக்கு இருந்த போலீஸ்காரர்கள் அங்கிருந்த பெஞ்சில் சாவகாசமாக உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டு இருந்தார்கள்....

திடீரென்று அக்ஷய் எழுந்து நின்றான். மின்னல் வேகத்தில் அந்த வகுப்பறையில் நாற்காலி, மேசைகள் இல்லாத பக்கவாட்டு இடத்திற்குக் குதித்தான். ஒரு வட்டம் போல உடலை வளைத்து பந்து போல அங்கு உருண்டான். அவன் கால் விரல்களும் கை விரல்கள் போலவே அனாயாசமாக இயங்கின. கைகளின் கட்டுகளை அவிழ்த்து விட்டன். அந்த போலீஸ்காரர்கள் திகைத்துப் போய் செயலிழந்து நின்றார்கள். அவர்கள் இது போன்ற காட்சியை இது வரை எங்கும் கண்டதில்லை. அவர்கள் சுதாரிப்பதற்குள் அவன் அவர்களை நெருங்கினான். என்ன செய்கிறான் என்று அவர்கள் உணர்வதற்குள், துப்பாக்கியை இயக்க முனைவதற்குள் அவர்கள் நால்வரையும் செயலிழக்க வைத்தான். நான்கு பேரும் கைகால்களை அசைப்பதற்கோ, குரல் எழுப்புவதற்கோ முடியாமல் அப்படியே சிலை போல நின்றிருந்தார்கள்.

வகுப்பறைக்கு வெளியே தங்களுக்குள் அரசியல் பேசிக் கொண்டிருந்த நான்கு போலீஸ்காரர்கள் பேச்சு சுவாரசியத்தில் உள்ளே நடப்பதை அறியாமல் இருந்தார்கள். அடுத்த முப்பது வினாடிகளில் அந்த நான்கு பேர் நிலையும் உள்ளே இருந்தவர்களின் நிலை போலவே ஆயிற்று. உள்ளேயும், வெளியேயும் இருந்த அந்த போலீஸ்காரர்களின் முகத்தில் தெரிந்த அதிர்ச்சியையும், பீதியையும் கவனித்த அக்‌ஷய் அந்த வகுப்பறையின் கரும்பலகையில் சாக்பீசால் எழுதினான். "கவலைப்படாதீர்கள். டாக்டர்கள் சரி செய்யும் அளவில் தான் நீங்கள் இருக்கிறீர்கள்"

அறையிலிருந்து வேகமாக வெளியேறிய அக்‌ஷய் பதுங்கிப் பதுங்கி கல்லூரியின் பின்புறம் சென்றான். அந்த மிகப்பெரிய சுவர் அவனுக்கு ஒரு தடையாக இருக்கவில்லை.

**********

மிஸ்டர் எக்ஸிற்கு கேசவதாஸின் போன் வந்தது. "என்ன நடக்கிறது?"

"தீவிரவாதிகள் அந்த கல்லூரியில் பதுங்கி இருக்கலாம் என்ற தகவல் வந்து இங்கே வந்திருக்கிறோம் சார். நம் ஆட்கள் அங்கே தேடிக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் தான் ....."

"எத்தனை நேரமாகத் தேடுவார்கள். உடனடியாக ஏதாவது செய்யுங்கள். சில பத்திரிக்கைக்காரர்கள் எனக்கு நேரடியாக போன் செய்து நிலவரம் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். என்னால் இங்கு உட்கார முடியவில்லை....."

செல் போனை மறுபடி சட்டைப் பையில் வைத்த மிஸ்டர் எக்ஸ் ரெட்டியை பரிதாபமாகப் பார்த்தார்.

ரெட்டி கேட்டார். "என்னவாம்?"

எக்ஸ் கேசவதாஸ் சொன்னதைச் சொல்லி விட்டு தொடர்ந்தார். "சார். இந்த நிருபர்களை இனியும் நிறைய நேரம் சமாளிக்க முடியும் என்று எனக்கும் தோன்றவில்லை. என்ன செய்யலாம்?"

"வேறு வழியில்லை. அவனை எப்படியாவது இங்கிருந்து கூட்டிக் கொண்டு போவது தான் நல்லது. கையை மட்டுமல்ல, காலையும், வாயையும் கட்டி தூக்கிக் கொண்டு போக தயாராக வைக்க சொல்லலாம்..." என்று சிறிது தாமதமாக முடிவுக்கு வந்த ராஜாராம் ரெட்டி அக்‌ஷயைப் பிடித்து வைத்திருந்த ஆட்களில் ஒருவனுக்கு போன் செய்தார். மணி அடித்துக் கொண்டே இருந்தது. அவன் எடுப்பதாகத் தெரியவில்லை. ராஜாராம் ரெட்டியின் முகம் வெளிற

ஆரம்பித்தது. போனை எடுக்காததற்கு ஒரே காரணம் தான் இருக்க முடியும்.....

********

ஒருவேளை அமானுஷ்யன் தப்பிப்பதாக இருந்தால் பின் பக்கமாகத் தான் தப்பிக்க முயற்சிப்பான் என்று சலீம் கணக்குப் போட்டது பொய்க்கவில்லை. மறைவாக இருந்தபடி அவன் அமானுஷ்யன் வரவிற்காகக் காத்திருந்தான். அவன் அரை மணி நேரம் காத்திருந்த பிறகு அமானுஷ்யன் அந்தக் கல்லூரியின் சுவரின் உச்சியில் தெரிந்தான்.

அவனைப் பற்றி எத்தனையோ படித்தும், அவன் வீடியோக்களை அதிகம் பார்த்தும் இருந்தாலும் அறியாத சில விஷயங்களை அவனை நேரில் பார்க்கையில் தன்னால் அறிந்து கொள்ள முடியும் என்று சலீம் உறுதியாக நம்பினான். அவனுடைய தொழிலில் எதிரியைப் பற்றி அக்கு வேறு ஆணி வேறாக அறிந்து கொள்வது மிகவும் அவசியம். அதை அவன் கச்சிதமாகச் செய்யாமல் இருந்ததில்லை. எனவே அமானுஷ்யனை அவன் கூர்மையாக கவனித்தான்.

அமானுஷ்யன் அனாயாசமாக மேலிருந்து கீழே குதித்தான்.

குதித்தவன் தன் உடலை வித்தியாசமாக வளைத்து மிதந்து வருவது போல் வந்து தரையை அடைந்தான். அந்த முள் புதர்களுக்கிடையே உடலை சிராய்த்துக் கொள்ளாமல் அங்கிருந்து நகர்ந்தான். அமானுஷ்யன் நகர்ந்த விதத்தில் வேகம் இருந்தது. ஆனால் அவசரமோ, பதட்டமோ சிறிதும் இருக்கவில்லை.

பார்த்துக் கொண்டிருந்த சலீம் முடிந்த வரையில் அவனைப் போலவே செல்ல முயற்சி செய்தான். ஆனால் முள் புதர்களிடையே அமானுஷ்யன் அளவுக்கு வேகமாகச் செல்வதில் அவனுக்கு சிரமம் இருந்தது. இருந்த போதிலும் அவன் சமாளித்தபடி மறைவாகப் பின் தொடர்ந்தான். ஒரே அளவு இடைவெளியை தக்க வைத்துக் கொண்டு சத்தமில்லாமல் சலீம் பின் தொடர்ந்தான்.

அக்‌ஷயிற்கு தான் பின் தொடரப்படுவது ஆரம்பத்திலேயே தெரிந்து விட்டது. வழக்கமாக வரும் நபர்கள் அல்ல என்பதும் அவனுக்குப் புரிந்தது. அவனைப் பின் தொடர்பவன் இது போன்ற வேலையில் கைதேர்ந்தவன் என்பது சில அடிகள் நகர்ந்தவுடனேயே அவன் உணர்ந்தான். இன்னொரு தகவலும் பின் தொடர்பவன் சாதாரணமானவன் அல்ல என்பதை அவனுக்கு உணர்த்தியது. அவன் கல்லூரிக்குப் பின்புறம் தான் தப்பிக்க முயல்வான் என்பதைக் கணக்குப் போட்டு அவனுக்காகக் காத்திருக்கும் அளவு அனுமானிக்க முடிந்தவன் கண்டிப்பாக சாதாரணமானவனாக

இருக்க முடியாது. கொல்ல நினைப்பவனுக்கு இந்த இடத்தைப் போல ஆள் நடமாட்டமே இல்லாத முட்புதர் நிறைந்த பகுதியைப் போல கச்சிதமான இடம் வேறு கிடைப்பது கஷ்டம். எனவே பின் தொடர்பவன் உடனடியாகக் கொல்லும் எண்ணமுடையவனாக இருந்தால் ஆரம்பத்திலேயே துப்பாக்கியை உபயோகப்படுத்தி இருக்க முடியும் என்றாலும் அப்படிச் செய்யாமல் இருப்பது அவன் வேறு ஏதோ திட்டத்துடன் இருப்பதை உணர்த்தியது.

வேகமாக நடந்த அக்‌ஷய் பெரிய சாக்கடைக் கால்வாய் அருகே வந்து சேர்ந்தான். அகலமான சாக்கடைக் கால்வாயை மின்னல் வேகத்தில் அனாயாசமாக அவன் கடந்தான். கடந்தவன் வேகமாக தூரத்தில் இருந்த ஒரு சேரியை நோக்கி நடக்க ஆரம்பித்தான். சலீம் அவனை அதிசயமாகப் பார்த்தான். வரும் பொழுது அவனும் அந்த சாக்கடையைத் தாண்டி வந்தவன் தான் என்றாலும் தாண்டிய பிறகு அவன் மூச்சு வாங்கியபடி ஒரு நிமிடம் இளைப்பாற வேண்டி இருந்தது. ஆனால் எந்த வித இளைப்பாறுதலும் இல்லாமல் நடந்து சென்ற அமானுஷ்யன் அவனைத் திகைக்க வைத்தான்.

சலீமும் வேகமாக அந்த சாக்கடைக் கால்வாயை நீளத் தாண்டினான்.

அவன் கடந்து விட்ட போது அமானுஷ்யனைக் காணவில்லை. எங்கே மாயமாக மறைந்தான் என்று தெரியவில்லை.

சாக்கடையைத் தாண்டும் போது சில வினாடிகள் தான் அவன் கண்ணை மூடினான். அந்த கண்ணிமைக்கும் நேரத்தில் அவன் எங்கே சென்றான் என்பது தெரியவில்லை.

அதே நேரத்தில் அக்‌ஷய் சேரியின் ஒரு குடிசையின் பின்பக்கத்தில் இருந்து அவனைக் கவனித்துக் கொண்டிருந்தான். மந்திரியோ அந்த தீவிரவாத இயக்கமோ ஒரு கைதேர்ந்த வாடகைக் கொலையாளியைத் தன் பின்னே அனுப்பி இருக்கிறது என்பதை அவனால் ஊகிக்க முடிந்தது. கூட்டாளி யாரும் இல்லாமல் தனியாக அந்த மனிதன் வந்ததும், பின் பக்கம் தான் அவன் வருவான் என்பதைக் கணித்ததும், அந்த அகலமான சாக்கடைக் கால்வாயை ஒரேயடியாகத் தாண்டியதும் அறிவும், திறமையும் உள்ள ஒரு ஆள் தான் அவன் என்பதை நிச்சயமாகச் சொல்லியது. அக்‌ஷயைப் பற்றி எல்லா உண்மையையும் அறிந்தவனாக இருந்தால் தான் அவன் என்ன செய்வான் என்று ஊகிக்க முடிந்திருக்கும். எனவே அவனைக் கொல்லவோ, பிடித்துத் தரவோ அனுப்பப்பட்ட அந்த ஆள் அவனைப் பற்றிய எல்லா விவரமும் தெரிந்தவனாகத் தான் இருக்க வேண்டும். அப்படியானால் தப்பித்தவன் அடுத்ததாக எங்கே செல்வான் என்பதை அவன் ஊகிக்க முடிந்தவனாகவும் இருக்க வேண்டும். அந்த கணிப்பு அக்‌ஷய் உதடுகளில் ஒரு புன்முறுவலைத் தருவித்தது. ஏனென்றால் அடுத்ததாக எங்கே போவது என்று அவனுக்கு இன்னும் தெரியவில்லை....

சலீம் ஒருவித ஏமாற்றத்துடன் தன்னை சுற்றிலும் பார்த்தான். அந்த சேரி மக்களுக்கு அரசாங்கம் வேறொரு இடத்தில் இடம் தந்திருந்ததால் பெரும்பாலானோர் இடம் பெயர்ந்திருந்தனர். ஏதோ ஒரு சில குடிசைகளில் தான் ஆட்கள் ஒரு சிலர் இருந்தார்கள். அவன் ஏதாவது ஒரு குடிசைக்குள் போய் விட்டானா இல்லை சேரியிலேயே வேறு ஏதாவது பாதையில் சென்று கொண்டிருக்கிறானா? வேகமாக அங்கும் இங்கும் ஓடி ஏதாவது பாதையில் தெரிகிறானா என்று பார்த்தான். எங்கும் காணவில்லை.

சலீமிற்கு வலது காலில் முள் கீறி இருந்தது. இன்னும் மூச்சு வாங்கிக் கொண்டிருந்தது. இந்த இரண்டுமே அமானுஷ்யனுக்கு ஆகி இருக்காது என்று நினைக்கையில் அவனுக்கு அவமானமாக இருந்தது. அவன் எங்கே போய் இருப்பான் என்று ஒரு நிமிடம் நின்று ஆலோசித்தான். அமானுஷ்யன் நிலைமையில் இருந்து சலீம் ஆலோசித்தான். "அடுத்தபடியாக அவன் போகுமிடம் எதுவாக இருக்கும்?". யோசித்தபடி அவன் நடக்க ஆரம்பித்தான்.

அவன் சிறிது தூரம் சென்று வலப்பக்கமாக ஒரு சந்தில் திரும்புகையில் அமானுஷ்யன் தூரத்தில் வேகமாகச் சென்று கொண்டிருந்தான். சலீமிற்கு மீண்டும் புத்துணர்ச்சி வந்தது. அவன்

அமானுஷ்யனை மீண்டும் பின் தொடர ஆரம்பித்தான்.

## 101

சிறிது நேரத்தில் சேரியைத் தாண்டி ஒரு கடைத் தெருவிற்கு அமானுஷ்யன் போய் சேர்ந்தான். அவன் பின்னால் ஒருவன் தொடர்வது குறித்து சந்தேகம் ஏற்பட்டது போலவே காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் சலீமும் அவனை மிக ஜாக்கிரதையாகவே பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தான்.

அக்‌ஷய் திடீரென்று ஒரு பொதுத் தொலைபேசி அருகே நின்று விட்டு சுற்றும் முற்றும் பார்த்து விட்டு அதை உபயோகித்து ஆனந்திடம் பேசினான். "ஹலோ ஆனந்த் நான் அக்‌ஷய் பேசுகிறேன்"

ஆனந்த் திகைத்தான். 'எந்தக் காரணத்தைக் கொண்டும் அக்‌ஷய் அவனுடைய செல்போனிற்குத் தொடர்பு கொள்ள மாட்டானே. அதை ஒட்டுக் கேட்க முடியும் என்பதை அவன் அறிவானே. பேசுவதாய் இருந்தால் மது அல்லது மகேந்திரன் அவர்களுக்குத் தெரிவித்தால் அவர்கள் நேரில் வந்து தகவல் தெரிவிப்பார்களே'

என்ற யோசனை அவனுக்கு வந்தது.

அதே நேரம் சலீம் லாட்ஜ் ஆசாமிக்கு அவசரமாகப் போன் செய்து அவர்கள் இருக்கும் இடத்தை விளக்கி விட்டு சொன்னான். "....அந்த போனில் இருந்து அவன் யாரிடமோ பேசுகிறான். உடனடியாக அந்த போன் நம்பரையும், அவன் யாரிடம் என்ன பேசுகிறான் என்பதையும் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யுங்கள்"

லாட்ஜில் இருந்த ஆசாமி சற்று திகைப்புடன் கேட்டான். "அப்படியானால் அந்த சைத்தான் அங்கே அவர்கள் பிடியில் இருந்து தப்பி விட்டானா?"

சலீம் சொன்னான். "ஆமாம். நான் சொன்னதை செய்து கிடைத்த தகவலை உடனடியாக எனக்குத் தெரிவியுங்கள்....." உடனடியாக அவன் பேச்சைத் துண்டித்து விட்டு அமானுஷ்யனைக் கவனிக்க ஆரம்பித்தான்.

அக்ஷய் போனில் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்தான்.

"ஆனந்த் நீ அம்மா வருண் எல்லாம் நலம் தானே"

"உம்... பாதுகாப்பாக இருக்கிறோம்"

"சரி ஜாக்கிரதையாக இருங்கள். நானும் தப்பி விட்டேன். எனக்கு பழைய ஞாபகங்கள் எல்லாம் வந்து விட்டன. நான் முக்கியமான தடயம் ஒன்றை ஒரு இடத்தில் ஒளித்து வைத்திருக்கிறேன். அதை எடுத்துக் கொண்டு வர நான் அந்த ஊருக்குப் போகிறேன். நம்மிடம் நேரம் போதாது. அதை நான் எடுத்துக் கொண்டு வராவிட்டால் சில ஆபத்துகளை நாம் தடுக்க முடியாது. அதனால் நான் அங்கே போகிறேன். அப்புறமாய் போன் செய்கிறேன்."

அக்‌ஷய் போனை வைத்தான். மறுபடி நடக்க ஆரம்பித்தான். சலீம் பின் தொடர்ந்தான்.

**********

ராஜாராம் ரெட்டி கல்லூரிக்குச் செல்லாமலேயே ஆம்புலன்ஸிற்குப் போன் செய்து உடனடியாக வரவழைத்தார். அமானுஷ்யனிற்கு காவல் இருந்த வாத்து மடையர்கள் எந்த நிலையில் இருப்பார்கள் என்பதை அறிய அவர் போய் பார்க்கத் தேவை இருக்கவில்லை. அவனுடைய பழைய வரலாறு தெரிந்த அவருக்கு அதை துல்லியமாக கணிக்க முடிந்தது. அவருக்குள் கிளம்பி இருந்த கோபமும், அவமான உணர்வும் அவருடைய சிந்திக்கும் திறனைக்

குறைத்து விட்டிருக்கவில்லை. அவர் சிலருக்குப் போன் செய்து கல்லூரியின் பின் பக்கம் விரைந்து போகச் சொன்னார். அவனை சல்லடை போட்டு தேடச் சொன்னார்.

ஆம்புலன்ஸைப் பார்த்த நிருபர்கள் "தீவிரவாதியை விசாரணைக்கு முன்பே சுட்டு விட்டீர்களா?" என்று வேறு கேட்டு அவருடைய வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டார்கள். மிஸ்டர் எக்ஸ் அவர் காதில் மெல்ல கேட்டார். "பேசாமல் இந்த சனியன்கள் மீது துப்பாக்கிசூடு நடத்தி விடலாமா?"

"உள்ளூர் சேனலில் தெரிந்தது உலகம் பூராவும் தெரிய வேண்டுமா?" என்று முறைத்த ராஜாராம் ரெட்டி நிருபர்களிடம் சொன்னார்." இன்னும் சிறிது நேரத்தில் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்கிறோம். உங்களை அந்தக் கல்லூரிக்குச் சென்று பார்வையிடவும் அனுமதி அளிக்கின்றோம். அது வரை தயவு செய்து பொறுமையாக இருங்கள். உங்கள் கற்பனைக் குதிரையைத் தட்டி விடாமல் உள்ளதை மட்டுமே வெளியிட உங்களிடம் வேண்டிக் கொள்கிறோம்"

அவர் செல் போன் இசைத்தது. ஆனந்திடம் அமானுஷ்யன் பேசியதை டேப் எடுத்திருக்கிறோம் என்ற தகவலை அவரிடம் தெரிவித்தார்கள். ராஜாராம் ரெட்டி இனி அங்கே நிருபர்களுக்குப்

பதில் சொல்லிக் கொண்டு நிற்பதில் அர்த்தமில்லை என்று முடிவு செய்து அவர்களை சமாளிக்கும் பொறுப்பை எக்ஸ் தலையிலேயே போட்டு விட்டு அங்கிருந்து அவசரமாக இடம் பெயர்ந்தார்.

மந்திரி அவருக்காகக் காத்திருந்தார். அவர் நடந்து முடிந்த நிகழ்ச்சிகளால் நொந்து போயிருந்தது அவர் முகத்தில் நன்றாகவே தெரிந்தது. "நான் நீங்களும் இப்படி கோட்டை விடுவீர்கள் என்று நினைக்கவேயில்லை" என்று குத்தலாக அங்கலாய்த்துக் கொண்டார்.

ராஜாராம் ரெட்டி அரசியல்வாதிகளின் சகவாசம் அற்பத்தனமானது என்று நினைத்தார். ஆனாலும் பொறுமையாக நடந்ததை விவரித்து விட்டுச் சொன்னார். "....அவனைப் பிடித்து வைத்திருந்த ஆட்களிடம் நான் கிளிப்பிள்ளைக்கு சொல்வது போல் சொல்லி வைத்திருந்தேன். அவன் ஒரு ஜகதலப் பிரதாபன், கவனமாக இருங்கள், கவனமாக இருங்கள் என்று சொல்லியும் கோட்டை விட்டால் நான் என்ன தான் செய்ய முடியும்."

"அவன் எப்படி தான் தப்பித்தானாம்?"

"அவர்கள் பேசுகிற நிலையில் இருந்தால் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.... சரி நடக்க வேண்டியதைப் பார்க்கலாம். முதலில்

அவன் ஆனந்திடம் என்ன பேசினான் என்பதைக் கேட்கலாம்"

அமானுஷ்யன் ஆனந்திடம் பேசியதைக் கேட்ட போது மந்திரியின் முகம் வெளுத்தது. "அந்த தீவிரவாதக் கூட்டம் முதலில் யாரை சாகடிக்கும் என்று தெரியவில்லை. இந்த சைத்தான் சொல்கிறபடி செய்தான் என்றால் சர்வநாசம் தான்...." நினைக்கையிலேயே அவருக்கு உடல் லேசாக நடுங்கியது.

ராஜாராம் ரெட்டி எதுவும் சொல்லாமல் யோசித்தார். இந்த போன் பேச்சு அவருக்கு ஒரு புதிராக இருந்தது. ஆனந்த் போனை அவர்கள் ஒட்டுக் கேட்க ஆரம்பித்ததில் இருந்து இது நாள் வரை அமானுஷ்யன் ஆனந்திடம் செல் போனில் பேசியதில்லை. அவர்கள் ஒட்டுக் கேட்க வாய்ப்பு இருக்கிறது என்ற காரணமாகக் கூட இருக்கலாம். வேண்டுமென்றே பேசினானா, இல்லை தெரிந்தாலும் பரவாயில்லை என்ற எண்ணத்தோடு பேசினானா, இல்லை....

அவரால் உடனடியாக அவன் எண்ணத்தைத் தீர்மானிக்க முடியவில்லை.

வேறொரு எண்ணம் அவர் மூளையில் பளிச்சிட அவர் அவசரமாக செல் போனை எடுத்து எண்களை அழுத்தினார். "ஹலோ... அந்த ஆனந்த் செல் போனில் சிறிது நேரத்திற்கு முன் பேசியதை வைத்து

அவன் எந்த பகுதியில் இருக்கிறான் என்பதைக் கண்டுபிடித்து அந்தப் பகுதிக்கு ஆட்களை அனுப்புங்கள்".

*********

சலீம் அக்‌ஷயைப் பின் தொடர்ந்து சரியாக மூன்று நிமிடங்கள் போயிருப்பான். அக்‌ஷய் தெருவை குறுக்காகக் கடந்தான். அவனைப் பின் தொடர்ந்த சலீம் இடையே வந்த லாரிக்காக சில வினாடிகள் காக்க வேண்டி வந்தது. லாரி கடந்த பின் அக்‌ஷய் சலீம் கண்களுக்குத் தென்படவில்லை. சலீம் திகைத்துப் போனான். சரியாக மூன்று வினாடிகள் தான் அந்த லாரி அவனை மறைத்திருக்கும். அதற்குள் எங்கே போனான் என்று கூர்மையாக தெருவின் எதிர்புறம் பார்வையைச் செலுத்தினான். தெருவோரக் கடைக்காரர்களையும். அந்தக் கடைகளில் பொருள்களை வாங்கிக் கொண்டிருந்த சில ஆட்களையும் கூர்மையாக கவனித்தான். அவர்களில் ஒருவனாக அந்த அமானுஷ்யன் இருக்க முடியுமா என்று பார்த்தான். அவர்களில் அமானுஷ்யன் இல்லை.

அந்தக் கடைகளைத் தாண்டி ஒரு சிறிய சந்து இருந்ததை அப்போது தான் சலீம் கவனித்தான். வேகமாகத் தெருவைக் கடந்து அந்த

சந்தை அடைந்தான். அந்த சந்து அடுத்த தெருவைச் சென்றடைந்தது. அதன் வழியே சென்று அடுத்த தெருவை அடைந்தான். அந்தத் தெருவிலும் அமானுஷ்யனைக் காணவில்லை. அந்தத் தெருவிலும் குறுக்குத் தெருக்கள் நிறைய இருந்தன. எதன் வழியாகப் போயிருக்கிறானோ!

அவன் பின் தொடரப்படுவதைக் கண்டுபிடித்து விட்டான் என்றே சலீமிற்குத் தோன்றியது. அதனால் தான் ஒரு லாரி குறுக்கிட்ட அந்த சொற்ப சமயத்தில் அவன் வாயு வேகத்தில் சென்று மறைந்து விட்டிருக்கிறான். அகில உலக அளவில் வெற்றிகரமாக இயங்கி வரும் சலீமிற்கு அவனைக் கோட்டை விட்டது அவமானமாக இருந்தது. ஆனால் அதை மனதில் ஓரந்தள்ளி விட்டு தன் செல் போனை எடுத்து லாட்ஜ் ஆசாமியிடம் பேசினான்.

"அவன் என்ன பேசினான், யாரிடம் பேசினான் என்று தெரிந்ததா?"

லாட்ஜ் ஆசாமி அமானுஷ்யனிற்கும் ஆனந்திற்கும் இடையே நடந்த உரையாடலை அப்படியே சொன்னான். சொல்லி விட்டு "இனி என்ன செய்யப் போகிறாய்?"

"அவனை உயிரோடவோ, பிணமாகவோ உங்களிடம் ஒப்படைக்கப் போகிறேன்"

அவன் குரலில் தெரிந்த உறுதி லாட்ஜ் ஆசாமிக்குப் பிடித்திருந்தது. "அதை எப்படி செய்யப் போகிறாய்?"

"அது உங்களுக்கு அனாவசியம்" என்று சலீம் பேச்சை முடித்துக் கொண்டான்.

இந்தத் திமிர் லாட்ஜ் ஆசாமிக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அதைப் பற்றி சிறிதும் கவலைப்படாத சலீம் அமானுஷ்யனை 'அந்த' ஊரில் கையும் களவுமாகப் பிடிக்க எண்ணியபடியே நடந்தான்.

அக்‌ஷய் அவன சற்று தூரத்தில் இருந்தே பின் தொடர ஆரம்பித்தான்.

அவன் சற்று முன் லாரி குறுக்கிட்ட போது அருகே இருந்த சந்தில் ஒரு கடைக்குள் சென்று அந்தக் கடையின் மூலையில் இருந்த ஒரு பொருளை வாங்கும் சாக்கில் அதைப் பார்த்துக் கொண்டிருந்தான். வேகமாக சந்தில் யாரோ ஓடி வரும் சத்தம் கேட்ட போது அவன் எதிர்பார்த்தபடியே அந்த சந்தில் சலீம் தான் ஓடி வருகிறான் என்பது புரிந்தது. அவன் கடந்த பிறகு கடையில் இருந்து வெளியே வந்த அக்‌ஷய் சந்தின் கோடியில் சலீம் செல் போனில் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்து காத்திருந்தான். பேசி முடிந்த பின் சலீம்

அந்த சந்தை விட்டு தெருவில் நடக்க ஆரம்பித்ததைப் பார்த்து ரகசியமாக அவனைப் பின் தொடர்ந்தான். சாதாரண சமயங்களில் தான் பின் தொடரப்படுவது கண்டிப்பாக சலீமிற்குத் தெரியாமல் போக வாய்ப்பில்லை. ஆனால் பரபரப்புடன் அவன் இருந்த மனநிலையில், அதுவும் அமானுஷ்யனே தன்னைப் பின் தொடர்வான் என்ற சந்தேகம் எழாத நிலையில், அவன் அதை அறியவில்லை.

சலீம் சிறிது தூரம் சென்ற பின் எதிரே ஒரு டிராவல் ஏஜென்சி கடை இருப்பதைக் கவனித்தான். அதன் பெயர் பலகையில் ரயில் விமான டிக்கெட்டுகள் தரும் அதிகாரபூர்வ நிறுவனம் என்றும் எழுதி இருந்ததைப் பார்த்தான். அமானுஷ்யன் இந்த வழியாகச் சென்றிருந்தால் உடனடியாக 'அங்கே' போவதற்கு இங்கே டிக்கெட் செய்திருக்க வாய்ப்பு இருக்கிறது என்று தோன்றியது. அவசரமாகப் போக நினைப்பவர்கள் அருகில் இருக்கும் சந்தர்ப்பத்தைத் தான் உடனே பயன்படுத்துபவர்கள். அந்த எண்ணம் தோன்றியவுடனேயே அதனுள்ளே சென்று முன்னால் இருந்த பெண்ணிடம் கேட்டான். "இப்போது ஐந்து நிமிடங்களுக்கு முன்னால் யாராவது வந்து டிக்கெட் கேட்டார்களா?"

அந்தப் பெண் அவனை பார்த்து நெற்றியை சுருக்கியபடி கேட்டாள். "ஏன் கேட்கிறீர்கள்?"

"இல்லை என் நண்பன் எனக்காக இங்கே வந்து டிக்கெட் செய்வதாகச் சொன்னான். சற்று நேரம் முன்னால் இப்படி வருவதைப் பார்த்தேன். பிறகு பார்த்தால் ஆளைக் காணவில்லை. அதனால் தான் கேட்டேன்."

"பத்து நிமிடங்களுக்கு முன் ஒரு வயதான அம்மாள் தான் வந்து ஹைதராபாதிற்கு விமான டிக்கெட் வாங்கிக் கொண்டு போனார்கள். உங்களுக்கு எங்காவது போக டிக்கெட் வேண்டுமா?"

சலீம் யோசித்தான். எப்படியும் அங்கே அமானுஷ்யன் போய் சேர்வான் என்பதால் உடனடியாக அங்கே போய் அவனைப் பிடிக்க முயற்சி செய்வது உத்தமம் என்று தனக்குள் சொல்லிக் கொண்டவனாய் "ஜம்முவிற்கு ஒரு விமான டிக்கெட் வேண்டும். அடுத்த விமானத்திற்கே கிடைத்தால் பரவாயில்லை..."

அடுத்த ஐந்தாவது நிமிடம் அவன் டிக்கெட்டை சட்டைப் பையில் போட்டபடியே வெளியே வந்தான். அவன் போய் சிறிது காத்து விட்டு அக்ஷய்ௗ உள்ளே நுழைந்தான். அந்தப் பெண்ணிடம் கேட்டான். "இப்போது ஒருவன் வந்து போனானே அவன் எங்கு டிக்கெட் வாங்கினான்."

அந்தப் பெண் சற்று முன் வந்தவன் கேட்டது இவனையாகத் தான் இருக்க வேண்டும் என்று நினைத்தாள். நண்பர்கள் கண்ணாமூச்சி விளையாடுகிறார்கள் என்று நினைத்து புன்னகை செய்தவளாய் சொன்னாள். "ஜம்முவிற்கு அடுத்த விமானத்தில் டிக்கெட் செய்தார். ஏன் உங்களுக்கும் அதில் டிக்கெட் வேண்டுமா?"

அக்‌ஷய் அவளைப் பார்த்து புன்னகை செய்தபடி சொன்னான். "எனக்கும் ஜம்முவிற்கு போக வேண்டும். ஆனால் அவன் போகும் விமானத்திற்கு அடுத்த விமானத்தில் கிடைத்தால் போதும்"

## 102

டிக்கெட்டுடன் வெளியே வந்த அக்‌ஷய் அடுத்த தெருவில் இருந்த ஒரு பொதுத் தொலைபேசியில் மதுவை அழைத்துப் பேசினான். அவன் குரலைக் கேட்டவுடன் மது அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

"அக்‌ஷய். அங்கே இருந்து தப்பித்து விட்டாயா? நிஜமாகவே எங்கள் பிரார்த்தனை வீண் போகவில்லை. முக்கியமாய் உன் அம்மாவின் பிரார்த்தனை..."

அந்த சந்தோஷம் அவன் மனதை நெகிழ வைத்தாலும் அப்போதைய அவசர நிலை காரணமாக அக்ஷய் அவன் வருணையும், தாயையும் காப்பாற்ற எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்காக மனமார நன்றி சொல்லி விட்டு உடனடியாக விஷயத்திற்கு வந்தான். "...மது உடனடியாக ஆனந்தை இப்போது இருக்கும் ஏரியாவில் இருந்து வேறெங்காவது போய் விடச் சொல். கண்டிப்பாக அவர்கள் அவன் இருக்கும் பகுதியை இன்னேரம் தெரிந்து கொண்டிருப்பார்கள்.... இனி அவன் செல்போனில் பேசாமல் இருப்பது தான் நல்லது. அப்புறம், வருணையும், சஹானாவையும் பாதுகாப்பாக வைத்துக் கொள். பக்கத்து வீட்டு ஜெய்பால்சிங்கிடமும் மற்ற அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களிடமும் சொல்லி வை. யாராவது சந்தேகப்படுகிற மாதிரி வந்தால் கொஞ்சம் கவனிக்கச் சொல்."

"சரி அக்ஷய். உனக்கும் ஒரு பாதுகாப்பான இடத்தை நான் பார்த்து வைத்திருக்கிறேன்...." என்று சொல்லி அந்த இடத்தை விவரிக்க முயன்ற மதுவை அக்ஷய் இடைமறித்தான்.

"மது எனக்கு முக்கியமான வேலைகள் நிறைய இருக்கின்றன. அதையெல்லாம் முடிக்காமல் நான் பாதுகாப்பாக எங்கேயும் ஒளிய முடியாது. நான் இப்போது ஜம்மு போய்க் கொண்டிருக்கிறேன்...."

"அங்கே தான் நீ சொன்ன தடயத்தை ஒளித்து வைத்திருக்கிறாயா?

அந்த இடமெல்லாம் உனக்கு ஞாபகம் வந்து விட்டதா?"

"அதெல்லாம் அவர்களுக்காக ஆனந்திடம் சொன்ன கதை. நான் அந்த ஊரில் எங்கே வைத்திருக்கிறேன் என்றெல்லாம் எனக்கு நினைவுக்கு வரவில்லை. அங்கே போனால் எனக்கு ஞாபகம் வரலாம். போய் தான் பார்க்க வேண்டும். சரி நீங்கள் எல்லாம் ஜாக்கிரதையாய் இருங்கள். ஏதாவது புதிய தகவல் கிடைத்தால் கண்டிப்பாக போன் செய்கிறேன்...."

அடுத்ததாக மகேந்திரனுக்குப் போன் செய்தான். மதுவின் அதே அதீத சந்தோஷம் மகேந்திரனிடமும் தெரிந்தது. அவனிடமும் நன்றி தெரிவித்து விட்டு அக்ஷய் சொன்னான்.

"மகேந்திரன். எனக்கு அவர்கள் படுகிற அவசரத்தைப் பார்த்தால் ஏதோ முக்கியமாய் இரண்டு மூன்று நாளில் நடந்து விடும் போல தான் தோன்றுகிறது. அவர்கள் ஏதோ ஒரு குறிப்பிட்ட நாளைக் குறித்து வைத்திருக்கிறார்கள் என்றால் அது ஏதாவது விசேஷ நாளாய் இருக்கலாம். இந்த வாரத்தில் அது போல் ஏதாவது முக்கிய நினைவு நாளோ, யாராவது முக்கிய புள்ளி டெல்லிக்கு வரும் நாளோ இருக்கிறதா என்று பார்த்து வை. நான் உனக்கு நாளைக்கு போன் செய்கிறேன்."

*******

ராஜாராம் ரெட்டியும், மிஸ்டர் எக்ஸூம் அமானுஷ்யனால் தாக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக் கொண்டு இருந்த போலீஸ்காரர்களைப் பார்க்கப் போய்க் கொண்டு இருந்தார்கள். மிஸ்டர் எக்ஸ் அமானுஷ்யன் தப்பித்த பிறகு ஒரு மௌனியாக மாறி விட்டார். ஒரு பக்கம் கேசவதாஸ், இன்னொரு பக்கம் மந்திரி, மூன்றாவது பக்கம் அமானுஷ்யன், நாலாவது பக்கம் நிருபர்கள் என்று நாலா பக்கமும் சிக்கல்கள் வந்தது அவரை விரக்தியடைய வைத்திருப்பதாக ராஜாராம் ரெட்டிக்குத் தோன்றியது.

ராஜாராம் ரெட்டியாலும் அமானுஷ்யன் தப்பித்ததை ஜீரணிக்க முடியா விட்டாலும் அவனைத் திரும்பப் பிடித்து ஜெயித்துக் காட்ட வேண்டும் என்ற ஒரு வெறி அவருக்குள் கிளம்பி விட்டிருந்தது. அவருடைய திறமைக்கு சவால் அவன் விட்டிருப்பதை அவரால் சகிக்க முடியவில்லை. அவர் டிவி காமிராக்கள் முன் வந்த போதே இதைப் பார்த்தவுடன் கண்டிப்பாக ஆனந்திற்கு அவர் மேல் சந்தேகம் வராமல் இருக்க வாய்ப்பில்லை என்பதை உணர்ந்திருந்தார். அது தவிர்க்க முடியாதது என்பதை அவர் அறிவார். அவன் செல் போனிற்கு அவர் பிறகு பல முறை தொடர்பு கொள்ள முயன்ற போது அது "ஸ்விட்ச்டு ஆஃப்" என்ற தகவலையே தர ஆரம்பித்தது. ஆனந்த் பேச்சை வைத்து அவன் இருக்கும்

பகுதியைக் கண்டறிந்த அவர் அங்கு அவன் அகப்பட்டால் பிடித்து வர ஆட்களை அனுப்பியதற்கு அடுத்தபடியாக அவர் ஜம்முவிற்கும் அமானுஷ்யனைப் பிடிக்க ஆட்கள் அனுப்பின பிறகு தான் அவசரமாக எக்ஸை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குக் கிளம்பினார்.

மருத்துவமனையில் அவர்களுக்கு முன்பே நிருபர்கள் காத்திருந்தார்கள். மிஸ்டர் எக்ஸ் எரிச்சலுடன் கேட்டார். "எல்லோரையும் அப்படியே குண்டு கட்டாகத் தூக்கி போலீஸ் வேனில் போட்டு கவனிக்க வேண்டிய விதத்தில் கவனித்தால் என்ன?"

"எல்லாம் இன்னும் இரண்டு மூன்று நாள்களில் சரியாகி விடும். அப்புறம் நம் ராஜ்ஜியம் தான். அது வரை பொறுமையாக இருங்கள்"

அவர்கள் இருவரும் வந்திறங்கியதைக் கண்ட நிருபர்கள் அவர்களை வந்து சூழ்ந்து கொள்ள ராஜாராம் ரெட்டி புன்னகையுடன் அவர்களை சமாளித்தார். "நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்று எங்களுக்குத் தெரியும். நாங்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் போலீஸ்காரர்களைப் பார்த்து விட்டு வந்து உங்களிடம் விரிவாக நிலவரத்தைச் சொல்கிறோம். அது வரை அமைதியாகக் காத்திருங்கள்..."

ஆனாலும் ஓரிரு நிருபர்கள் தங்கள் அவசர சந்தேகங்களைக் கேட்க எக்ஸ் பல்லைக் கடிக்க ரெட்டி அனைவருக்கும் பொதுவாக "பொறுமை பொறுமை" என்ற படியே மருத்துவமனைக்குள் நுழைந்தனர். அவர்களைக் கண்டதும் மூத்த டாக்டர் ஒருவர் பெருமூச்சு விட்டபடி சொன்னார். "அந்த நிருபர்களை உள்ளே விடாமல் இருக்க நாங்கள் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல."

எக்ஸ் ஆத்திரம் குறையாமல் சொன்னார். "அத்தனை பேர் நாக்கையும் வெட்டி நீங்கள் ஆபரேஷன் செய்தால் முழு செலவையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது. செய்கிறீர்களா?"

ஆரம்ப காலங்களில் அமைதியாக அலட்டிக் கொள்ளாமல் இருந்த எக்ஸ் இந்த ஒரு நாளில் இப்படி மாறி விட்டதை எண்ணிய போது அந்த நேரத்திலும் மனதுக்குள் சிரித்துக் கொள்ளாமல் இருக்க ரெட்டியால் முடியவில்லை. அதை வெளியே காட்டாமல் டாக்டரை ரெட்டி கேட்டார். "அவர்கள் எப்படி இருக்கிறார்கள்?"

"சரி செய்து விட்டோம். ஆனால் நீங்கள் சொன்னபடியே அவர்களை தனி ஐசியூவில் தான் வைத்து இருக்கிறோம். பார்க்கிறீர்களா?"

ராஜாராம் ரெட்டி தான் முன்பிருந்தே பேசிக் கொண்டிருந்த போலீஸ்காரனிடம் மட்டும் பேச விரும்பினார். அவனை மட்டும் ஒரு தனியறைக்கு தருவித்தார். அவன் முகத்தில் பிரேத களை தெரிந்தது. அவர்களைப் பரிதாபமாகப் பார்த்தபடி நின்றான்.

"என்ன நடந்தது?"

அவன் நடந்ததைச் சொன்ன போது அவனால் இன்னமும் நடந்ததை நம்ப முடியவில்லை என்பது புரிந்தது. பந்து போல் சுழன்று கொண்டே கால் விரல்களால் கையைக் கட்டியிருந்த கட்டை அவன் அவிழ்த்த விதத்தையும் மின்னல் வேகத்தில் அவர்கள் அனைவரையும் செயலிழக்க வைத்ததையும் பழைய திகைப்புடனேயே விவரித்தான்.

பந்து மாதிரி சுழன்ற வித்தையை அமானுஷ்யன் இதற்கு முன் வெளிப்படுத்தியதாக அவன் ஃபைலில் தகவல் இல்லை.

எக்ஸ் வெளிப்படையாக சொன்னார். "சார் முதலில் அவனுக்கு என்னவெல்லாம் தெரியும் என்பதை தெரிந்து கொள்ளாமல் அவனை சமாளிப்பது கஷ்டம் தான்."

அந்த போலீஸ்காரன் தன் கருத்தைச் சொன்னான். "சார் அவன்

நினைத்திருந்தால் எங்களைக் கொன்று கூட இருக்கலாம். எங்களை சரி செய்த டாக்டர் இந்த வர்ம முடிச்சு சூட்சுமமானது என்றும் கொஞ்சம் பிசகி இருந்தாலும் மரணம் வந்திருக்கும்" என்றும் சொன்னார். அதுவும் எட்டு பேரையும் அவ்வளவு சீக்கிரம் அவ்வளவு கச்சிதமாகவும் நுணுக்கமாகவும் கையாண்டிருக்கிறான் என்பதை டாக்டர்களால் நம்ப முடியவில்லை.

அவனை விட்டிருந்தால் அவன் அமானுஷ்யன் புராணத்தை முழுவதுமாக விடாமல் சொல்லி இருப்பான். ஆனால் ரெட்டி அவனைப் போகச் சொல்லி விட்டார். மிஸ்டர் எக்ஸ் தன் கழுத்தை மெல்ல தடவிக் கொண்டார்.

ராஜாராம் ரெட்டி மூத்த டாக்டரை அழைத்துப் பேசி இன்னும்ௗ இரண்டு நாள் ஐசியூவிலேயே அந்த எட்டு பேரையும் வைத்திருக்குமாறும் வெளியே யாருக்கும் தெரியாதபடி பார்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார். பின் எக்ஸிடம் நிருபர்களிடம் சொல்ல வேண்டியதைத் தெரிவித்தார்.

எக்ஸ் வெளியே வந்து ரெட்டி சொன்னபடியே அறிக்கை வெளியிட்டார். கல்லூரிக்குள் ஒரு தீவிரவாதி ஒளிந்து கொண்டிருந்தது உண்மையே என்றும் அவன் பயங்கரமானவன் என்றும் போலீஸ்காரர்களைத் தாக்கி விட்டு அவன் தப்பித்து

விட்டான் என்றும் தெரிவித்தார். போலீஸ்காரர்கள் இன்னமும் ஐசியூவில் தான் தீவிர சிகிச்சையில் இருக்கிறார்கள் என்றும் அவர்கள் உயிருக்கு ஆபத்தில்லை என்றாலும் அவர்கள் இப்போது பேசும் நிலைமையில் இல்லை என்றும் சொன்னார்.

"அந்த தீவிரவாதி யார் என்று தெரிந்ததா?"

"சரியாகத் தெரியவில்லை. ஆனால் ஒரு போலீஸ்காரர் சைகையால் தெரிவித்ததைப் பார்க்கையில் அந்த தீவிரவாதி சில நாட்களுக்கு முன் டெல்லி புறநகர்ப்பகுதியில் குண்டு வைத்தவன் தான் என்று சந்தேகப்படுகிறோம்..."என்று சொல்லி விட்டு அக்ஷயின் போட்டோவை அங்கிருக்கும் நிருபர்களுக்கு வினியோகித்தார்.

"இந்த தீவிரவாதி பற்றி துப்பு கொடுப்பவர்களுக்கு பெரிய தொகையை சன்மானமாக அளிக்க இருக்கிறோம். பிரச்னைக்குரிய கேள்விகளை மட்டுமே கேட்காமல் இவனைப் பிடிப்பது போன்ற நல்ல காரியங்களிலும் நீங்கள் ஈடுபடுவீர்கள் என்று நம்புகிறோம்"

இந்தக் கடைசி வரி ரெட்டி சொல்லிக் கொடுத்ததல்ல. இது எக்ஸ் சுயமாகச் சொன்னது. போலீஸ்காரர்களுக்கு ஏற்பட்ட காயம் எப்படிப்பட்டது என்பது போன்ற கேள்விகளைக் கேட்க முற்பட்ட நிருபர்களைப் பார்த்து "இப்போதைக்கு இவ்வளவு தான். கூடுதல்

தகவல் கிடைத்தால் கண்டிப்பாகச் சொல்கிறோம்" என்று சொல்லி விட்டு எக்ஸும், ரெட்டியும் வேகமாக அங்கிருந்து கிளம்பினார்கள்.

எக்ஸ் ரெட்டியிடம் சொன்னார். "நாம் இப்படித் தான் முதலிலும் அவன் போட்டோவை விளம்பரம் செய்தோம். ஆனால் அவன் கிடைக்கவில்லை"

"அப்படி விளம்பரம் செய்ததனால் தான் அந்த டிவிக்காரியுடன் அவனைப் பார்த்த ஒரு கடைக்காரன் நமக்கு துப்பு தந்தான். அதை மறந்து விடாதீர்கள்..." என்று ரெட்டி சொல்லச் சொல்ல மந்திரியின் போன் வந்தது. "உடனே வாருங்கள்" என்று மட்டும் சொன்னார்.

இப்போது என்ன புதிதாக என்று எண்ணியவராக ரெட்டி மந்திரியை சந்திக்கச் சென்றார். மந்திரியுடன் மத்திய உளவுத் துறைத் தலைவர் இருந்தார். அந்தத் தலைவர் சிபிஐயின் தற்காலிகத் தலைவர் வருகையை அவ்வளவாக விரும்பவில்லை என்பது அவரது முகபாவத்திலேயே தெரிந்தது.

மந்திரி ராஜாராம் ரெட்டியை உட்காரச் சொல்லி விட்டு உடனடியாக விஷயத்திற்கு வந்தார். "சார் ஒரு திடுக்கிடும் தகவலைக் கொண்டு வந்திருக்கிறார். சர்வதேசக் குற்றவாளிகளில் ஒருவனான வாடகைக் கொலையாளி சலீம் டெல்லிக்கு

வந்திருப்பதாக ஒரு தகவல் கிடைத்திருக்கிறதாம். அதை போலீஸ், சிபிஐ, பன்னாட்டு உளவுத் துறைகளுக்கெல்லாம் தெரிவிப்பது நல்லது என்கிறார்"

ராஜாராம் ரெட்டி சிறிது யோசித்து விட்டு சொன்னார். "எதற்கும் இரண்டு நாட்கள் பொறுப்பது நல்லது. பிறகு அதைச் செய்யலாம். இப்போது இன்னொரு பெரிய தீவிரவாதி பற்றி செய்தியை நாம் வெளியிட்டிருக்கிறோம். அதோடு இதையும் வெளியே சொல்லி குழப்ப வேண்டாம்"

மந்திரி தலையசைத்து அவர் சொல்வது தான் என் கருத்து என்பதைக் காட்டிக் கொண்டார். மத்திய உளவுத் துறைத் தலைவர் கேட்டார். "யார் அந்த பெரிய தீவிரவாதி?"

"சில நாட்களுக்கு முன் டெல்லி புறநகர்ப் பகுதியில் குண்டு வைத்தவன் தான். அப்போது அவனுடைய போட்டோவைக் கூட வெளியிட்டிருந்தோம்..."

"அவன் அமானுஷ்யன் என்ற புனைப்பெயருடையவன். பம்பாய் வாசி. அவன் தீவிரவாதி என்றால் நீங்களும் நானும் தீவிரவாதி தான்"

மந்திரியும் ரெட்டியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ரெட்டி அமைதியாகச் சொன்னார். "ஒரு காலத்தில் நல்லவராக இருந்து பின் அடியோடு மாறி விடுபவர்களை நாம் பார்த்திருக்கிறோம்"

அவரையே ஆழமாகப் பார்த்த உளவுத்துறைத் தலைவர் சொன்னார். "வாஸ்தவம்"

அப்போது தான் அந்த வாக்கியம் தனக்கு நன்றாகப் பொருந்துகிறது என்ற உண்மை ரெட்டிக்கு உறைத்தது. ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் சொன்னார். "அந்த அமானுஷ்யன் இப்போது தீவிரவாதியாக மாறி இருக்கிறான் என்ற ஆதாரபூர்வ தகவல் கிடைத்திருக்கிறது"

மந்திரி உறுதியாகச் சொன்னார். "நீங்கள் அந்த சலீம் பற்றி என் அனுமதி இல்லாமல் யாருக்கும் தெரிவிக்க வேண்டாம்"

உளவுத்துறைத் தலைவர் தலையசைத்து விட்டுச் சொன்னார். "இன்னும் சில நாட்களில் நம் தலைநகரில் பல குண்டுகள் வெடிக்கலாம் என்று தகவல் கிடைத்திருக்கிறது. இப்போது பல தகவல்கள் போலீசிற்கும் கிடைத்திருக்கிறது என்று சொன்னாலும் அதில் ஏதாவது ஒன்று உண்மையாக இருக்கலாம் என்று

நினைக்கிறோம்"

மந்திரி முகத்தில் ஈயாடவில்லை. ரெட்டி கேட்டார். "அந்தக் குண்டு வெடிப்பிற்கும் சலீமிற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறது என்று நினைக்கிறீர்களா?"

"இல்லை அவன் ஏதோ தனி வேலையாக வந்தது போலத் தான் இருக்கிறது"

"எங்களுக்கும் வெடிகுண்டு வெடிப்பு பற்றி தகவல் வந்ததில் ஒன்று உண்மை என்று தோன்றுகிறது. அந்த ஒன்று தான் நீங்கள் சொன்ன அமானுஷ்யனை சம்பந்தப்படுத்துகிறது' என்று அமைதியாக ரெட்டி சொன்னார்.

## 103

கேசவதாஸ் டிவியில் அமானுஷ்யனின் புகைப்படத்தைப் பார்த்தார். டில்லி புறநகர்ப்பகுதியில் வெடிகுண்டு வைத்த தீவிரவாதி, ஒரு கல்லூரியில் வெடிகுண்டு வைக்க முயன்று அவனைப் பிடிக்க வந்த போலீஸ்காரர்களைத் தாக்கி விட்டு தப்பி விட்டான் என்றும் அவனைப் பிடித்துத் தருபவர்களுக்கு ஒரு கோடி

வரை பரிசு அளிக்கப்படும் என்றும் தெரிவித்தார்கள். இத்தனை பெரிய தொகை சர்வதேச தீவிரவாதிகளைப் பிடித்துத் தருபவர்களுக்கு மட்டும் தான் பெரும்பாலும் அளிக்கப்படுகிறது. இவனிற்குப் போய் இப்படி அறிவித்தது அநியாயத்தின் உச்சம் என்று தோன்றியது. ஆனால் உண்மைக்கு இந்த தேசத்தில் பெரிய ஆதரவில்லை என்று அவர் அறிவார். அரசியல்வாதிகள் உண்மையைப் பொய் ஆக்குவதிலும், பொய்யை உண்மை ஆக்குவதிலும் வல்லவர்கள். அவர்கள் ஆளுங்கட்சியினராக இருந்தால் காவல் துறை கண்டிப்பாகத் துணை போயே ஆக வேண்டும். வேறு வழியில்லை.

அவனுடைய புகைப்படத்தைப் பார்க்கையில் அவருக்கு அந்த மந்திரியின் அவசரமும், பயமும் புரிந்தது. அதை நினைக்கையில் அமானுஷ்யன் மீது அவருக்கு உண்மையான மரியாதையும் தோன்றியது. என்ன சாமர்த்தியம் இருந்தால் இத்தனை பேருக்குத் தண்ணீர் காட்டி இருப்பான், அந்த மந்திரிக்குத் தீராத தலைவலியாக இருப்பான்? இவனைப் போல் சிலர் இருந்தால் தான் பயம் என்பது என்ன என்று அந்த மந்திரி போன்ற அதிகாரவர்க்கத்திற்குத் தெரியும் என்று எண்ணிய போது அவருக்கு திருப்தியாக இருந்தது. ஆனால் அதே நேரத்தில் தானே அவனுக்குப் பயந்து மனைவியையும் குடும்பத்தையும் வெளியூருக்கு அனுப்பி விட்டு உட்கார்ந்திருப்பது ஒரு மாதிரியாகத் தான் இருந்தது என்றாலும் தன்னை விடப் பல

மடங்கு பலம் வாய்ந்தவர்களே அப்படி பயந்து சாகும் போது இது ஒரு பெரிய விஷயம் அல்ல என்ற ஒரு ஆறுதலும் வந்தது.

ஆனால் மனைவி மட்டும் போகும் போது அவரைக் கண்டபடி திட்டி விட்டுப் போனாள். "இப்படி யாருக்கோ பயந்து நான் அடிக்கடி போய் ஒளிய முடியாது. எனக்கு இங்கே ஆயிரம் வேலை இருக்கிறது. இதுவே கடைசி தடவை. இன்னொரு தடவை இப்படி அனுப்பாதீர்கள். அந்த ஆளைக் கண்டுபிடித்து சீக்கிரமே ஒளித்துக் கட்டுங்கள்."

அவருடைய செல்போன் பாடியது. எடுத்துப் பேசினார். மறுபக்கம் பேசியது உளவுத்துறை தலைமை அதிகாரி. அவர் மந்திரியையும், ராஜாராம் ரெட்டியையும் பார்த்துப் பேசியதையோ, சலீம் என்ற சர்வதேச வாடகைக் கொலையாளியைப் பற்றியோ கேசவதாஸிடம் தெரிவிக்காமல் அமானுஷ்யனைப் பற்றியே கவனமாகப் பேசினார்.

"....சார். அந்த தீவிரவாதி பற்றிய போட்டோவை இப்போது காட்டிக் கொண்டிருக்கிறீர்களே அவன் நிஜமாகவே தீவிரவாதி தானா?"

கேசவதாஸும் மிகுந்த கவனத்துடன் பேசினார். "உண்மையில் அந்த கேசை மற்றவர்கள் தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொல்கிறதைப் பார்த்தால் அவன் தீவிரவாதி போலத்

தான் இருக்கிறது. அவர்களிடம் ஆதாரமும் இருக்கிறது."

"ஆனால் அவன் அமானுஷ்யன் என்ற பட்டப்பெயரில் மும்பையில் இருந்த ஒரு நல்ல மனிதன். அவன் அப்பா ஒரு தாதாவாக இருந்தார். ஆனால் அவன் நேர் மாறாக இருந்தவன்...."

"ஆனால் எப்பேர்ப்பட்டவர்களும் ஒரு காலத்தில் மாறி விடுகிறார்கள் என்பதை நாம் பல தடவை பார்த்திருக்கிறோம்"

"வாஸ்தவம் தான்...."

"உங்களுக்கு அவனைப் பற்றி வேறு ஏதாவது தகவல் கிடைத்திருக்கிறதா?" கேசவதாஸ் ஆர்வத்துடன் கேட்டார். ஏதாவது கிடைத்திருந்து அவர் சொன்னால் அமானுஷ்யனைப் பற்றிய முடிச்சுகள் சிலவாவது விலகும் என்ற நப்பாசை அவருக்கு இருந்தது.

ஆனால் உளவுத் துறை அவருக்கு உதவவில்லை. "சொல்கிற மாதிரி எதுவும் கிடைக்கவில்லை"

உளவுத்துறை அதிகாரி அதிகம் பேசாமல் போனை வைத்து விட்டார். அவருக்கு இப்போதும் அந்த அமானுஷ்யன் மேல் எந்த சந்தேகமும் இல்லை. சலீம் போன்ற சர்வதேச வாடகைக்

கொலையாளி வந்ததைக் கூட கண்டு கொள்ளாமல் அமானுஷ்யனைப் போன்றவன் மீது அதிகார வர்க்கம் பாய்வதில் அவருக்கு உடன்பாடு இல்லை. அதனால் தான் சம்பந்தப்பட்ட மந்திரியிடம் தகவலைச் சொன்னார். காவல்துறையின் தலைமை அதிகாரியிடமும் இப்போது பேசினார். இவர்களில் யாராவது ஒருவர் அவரைப் போலவே எண்ணி இருந்தால், இந்த விஷயத்தில் நாட்டின் பாதுகாப்பிற்கே அச்சுறுத்தல் இருக்கிறது என்பதற்கு அவரிடம் வலுவான ஆதாரங்கள் இருந்திருந்தால், அவர் அடுத்ததாக பிரதமர் அலுவலகத்தைக் கண்டிப்பாக தொடர்பு கொண்டிருப்பார். ஆனால் மந்திரி, போலீஸ், சிபிஐ எல்லாமே ஒரே நிலையை மேற்கொள்ளும் போது அவர் மேற்கொண்டு செய்ய ஏதுமில்லை.

தன் பாதுகாப்பிற்காக எதற்கும் இருக்கட்டும் என்று நினைத்தவராய் மந்திரியிடம் நேரில் தெரிவித்ததை எழுத்திலும் எழுதி 'மிக ரகசியம்-மந்திரி பார்வைக்கு மட்டும்' என்று குறிப்பிட்டு அதை பிரத்தியேக நபர் மூலமாக அனுப்பத் தீர்மானித்தார். அவர் தெரிவித்திருக்கிறார் என்பதற்கு ஆதாரம் உண்டாக்கிக் கொண்டதுடன் அவர் அமானுஷ்யனை மறந்தார்.

ஆனால் கேசவதாஸிற்கோ இப்போதும் அமானுஷ்யன் குறித்த பல கேள்விகள் மனதில் எழுந்து குழப்பின. அவன் இந்த மந்திரியை எப்படி பகைத்துக் கொண்டான்? இந்த ரெட்டி எப்படி இதில்்

சம்பந்தப்படுகிறார்? அமானுஷ்யனை அவர்கள் அந்தக் கல்லூரியில் பிடித்து வைத்திருந்ததாகத் தோன்றியதே எப்படிப் பிடித்தார்கள்? எப்படி தப்ப விட்டார்கள்? அமானுஷ்யன் அடுத்ததாக அவரைத் தேடி வருவானா? இப்போது உளவுத்துறை அதிகாரி போன் செய்தது அவரை ஆழம் பார்க்கத்தான் என்று தோன்றினாலும் அவராவது அமானுஷ்யன் எந்த விதத்தில் மந்திரியோடு சம்பந்தப்படுகிறான் என்று அறிவாரா?...

******

ஆனந்தும் மகேந்திரனும் சேர்ந்து அக்‌ஷய் சொன்னது போல சமீபத்தில் ஏதாவது முக்கிய நாள் வருகிறதா என்று பல வழிகளில் இண்டர்நெட்டில் தேடினார்கள். மது சில மணி நேரங்களுக்கு முன்னால் நேரில் வராமல் ஒரு நம்பகமான ஆள் மூலம் அவர்களுக்கு கடிதம் அனுப்பி அக்‌ஷய் சொன்னதை அப்படியே எழுதி இருந்தான். அத்துடன் தன்னையும் சிலர் பின் தொடர்ந்து கண்காணிக்கிறார்கள் என்றும் அதனால் நேரில் வரவில்லை என்றும் தெரிவித்திருந்தான்.

சாரதாவை மதுராவில் உள்ள ஒரு பிருந்தாவன மடத்தில் ஒளித்து வைத்திருந்தார்கள். அங்கு நடக்கும் பஜனைகளில் தன்னை மறந்து அவள் ஈடுபட்டிருந்தாள். வருணையும், சஹானாவையும்

பாதுகாக்கும் ஏற்பாடுகளை மது கவனித்துக் கொண்டான். அவர்களும் கண்காணிக்கப் பட்டார்களே ஒழிய பழையது போல கடத்தப்படும் சம்பவம் ஏதும் நிகழவில்லை. அல்லது அவர்கள் அப்படி நிகழாமல் பார்த்துக் கொண்டார்கள். மது ஏதாவது பொய் வழக்கில் அவர்களை சிக்க வைக்கக் கூடும் என்றும் சந்தேகத்துடன் எதிர்பார்த்தான். ஆனாலும் மீடியாவுடன் தேவையில்லாத விளம்பரம் வேண்டாம் என்று ரெட்டியும் மந்திரியும் நினைத்ததால் அந்தப் பயம் அவர்களுக்குத் தேவை இருந்திருக்கவில்லை.

ஆனந்தும் மகேந்திரனும் தங்கள் தேடலின் முடிவில் இரண்டு நாட்களை முதலில் தேர்ந்தெடுத்தார்கள். ஒன்று மறுநாள். அன்று ஆப்கானிஸ்தான் நாட்டின் ஜனாதிபதி டெல்லிக்கு வருகை தரவிருந்தார். இரண்டாவது நான்காம் நாள். காஷ்மீர் தனிநாடு கேட்டுப் போராடி இறந்த தடை செய்யப்பட்ட இயக்கம் ஒன்றின் தலைவனின் மூன்றாம் ஆண்டு நினைவு நாள். இரண்டுமே தீவிரவாதிகளின் வெடிகுண்டு நடவடிக்கைகளுக்கு காரணமாக இருக்க முடியும் என்றாலும் முதல் நாளை ஆனந்த் உடனடியாக ஒதுக்கி வைத்தான்.

"அவர் வரும் நாளில் இத்தனை இடங்களில் குண்டு வைப்பதற்கு முகாந்திரம் இல்லை. ஆச்சார்யா குறித்து வைத்திருக்கும் இடங்களில் பல ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி செல்லும்

இடங்களுக்கு சம்பந்தமில்லாதவை"

அந்த நான்காம் நாளை மகேந்திரன் ஒதுக்கி வைத்தான். "அந்த ஆளின் மற்ற நினைவு நாளில் இங்கே எதுவும் நடக்கவில்லை. அப்படி இருக்கையில் இந்த மூன்றாம் நினைவு நாளில் மட்டும் ஏதாவது செய்ய எந்த பிரத்தியேக காரணமும் இல்லை"

இருவரும் நிறைய யோசித்தார்கள். வெடிகுண்டு வைக்க ஏதாவது ஒரு நாள் என்று அவர்கள் எடுத்துக் கொண்டிருந்தால் அவர்கள் எப்போதோ வைத்து விட்டிருக்க முடியும். அப்படி இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நாளுக்காகக் காத்திருக்க வேண்டுமென்றால் அது ஏதாவது ஒரு வகையில் பிரத்தியேக நாளாகத் தான் இருக்க வேண்டும். அது என்ன நாள்?

மகேந்திரன் மேலும் ஒரு மணி நேரம் தேடி ஓரிடத்தில் தங்கினான். "ஆனந்த், இந்த செய்தியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

ஆனந்தும் அந்த செய்தியைப் படித்தான். காஷ்மீர் பள்ளத்தாக்கில் சென்ற வருடம் நடந்த ஒரு துப்பாக்கிச் சூட்டில் தலிபான் தீவிரவாதிகள் தங்கி இருந்த ஓரிடத்தை வெடிகுண்டு வைத்து தகர்த்த செய்தி அது. அந்த தகர்ப்பில் தலிபான் முக்கியத் தலைவன் அப்துல் ரஹ்மான் என்பவன் படுகாயம் அடைந்தோ, மரணம்

அடைந்தோ இருக்க வாய்ப்பு இருக்கிறது என்று செய்தி சொன்னது. ஆனால் உடல் கிடைக்கவில்லை. தலிபான் தரப்பில் அந்த மரணம் குறித்து மறுத்தோ, ஆமோதித்தோ எந்த விளக்கமும் இல்லை.

மகேந்திரன் சொன்னான். "....ஆனால் அந்த நாளுக்குப் பின் அப்துல் ரஹ்மானை யாரும் பார்த்ததாகத் தகவல் இல்லை. தீவிரவாதத்தில் தீப்பொறி பறக்க அடிக்கடி பேசும் அவன் அதற்குப் பிறகு பேசிய பேச்சு பற்றிய தகவல் கூட இல்லை. அவன் ஒரு வேளை நிஜமாகவே இறந்திருந்தால் நாளை மறு நாள் அவனுடைய முதலாவது நினைவு நாள்...."

ஆனந்த் யோசித்தான். அவன் உள்ளுணர்வு சொன்னது. "நாளை மறுநாள் தான் அவர்கள் தாக்கப்போகும் நாளாக இருக்க வாய்ப்பு இருக்கிறது. வெடிகுண்டு தாக்குதலில் இறந்த தங்கள் தலைவனுக்காக அவர்கள் அதே போல பல இடங்களில் வெடிகுண்டு வைத்துத் தாக்கி பழிவாங்க வாய்ப்பு இருக்கிறது"

"அந்த நாள் தான் அவர்கள் தாக்கப்போகும் நாள் மகேந்திரன்" என்று வாய்விட்டுச் சொன்னான்.

******

சலீம் டெல்லி விமானநிலையத்தை அடைந்த கணத்தில் இருந்து அந்த உணர்வு அவனுக்கு இருந்தது. அவன் கண்காணிக்கப்படுவது போன்ற உணர்வு. அவனுடைய தொழிலில் இந்த உள்ளுணர்வு மிக முக்கியம். அது தான் அவனுக்குப் பாதுகாப்பு. அது அவனிடம் வலிமையாக இருந்தது. எத்தனையோ முறை பிடிபடாமல் அவனைக் காப்பாற்றியுமிருக்கிறது. அவன் திரும்பியோ, சுற்றும் முற்றிலுமோ பார்க்க முனையவில்லை. அமைதியாக விமானத்தின் வரவுக்காக காத்திருந்தான். கண்களை மூடிக் கொண்டு அந்த உணர்வில் கவனம் செலுத்தினான். கண்காணிப்பது ஒரு நபரா, அல்லது ஒன்றிற்கும் மேற்பட்டவர்களா என்று தன் உள்ளுணர்வைக் கேட்டான். பலர் அல்ல என்று உள்ளுணர்வு சொல்லியது. ஒருவர் தான். அந்த ஒருவர் யார் என்று உடனடியாக அவனுக்குப் புரிந்தது. "அமானுஷ்யன்".

எவனைப் பின் தொடர்ந்து சென்று தவற விட்டானோ அவனே இப்போது இவனைப் பின் தொடர்ந்து வந்து கண்காணிக்கிறான். அவர்களுடைய பாத்திரங்கள் இப்போது எதிர்மாறாக மாறி விட்டன. டாக்சியில் இங்கு வந்து இறங்கும் வரை அந்த உணர்வு இல்லை, இங்கு வந்த பின் தான் அந்த உணர்வு வந்துள்ளது என்பதால் அவன் தனக்காக இங்கு முன்பே வந்து காத்திருக்கிறான்

என்பது புரிந்தது. அவன் கண்டிப்பாக ஜம்மு செல்வான் என்று யூகித்தே வந்தது போல்....

அந்த நேரத்தில் ஜம்மு செல்லும் விமானம் வந்து விட்டதாக விமான நிலைய அறிவிப்பாளர் ஒலிபெருக்கியில் அறிவித்தார். சலீம் என்ன செய்வது என்று யோசித்தான்....

104

நாளை மறு நாள் குண்டுகள் டெல்லியில் வெடிக்கும் என்று யூகித்த பின்னால் ஆனந்திற்கும், மகேந்திரனிற்கும் இருப்பு கொள்ளவில்லை. அக்ஷய் திரும்பி வரும் வரை, அல்லது முக்கியமான தகவல் ஏதாவது தரும் வரை சும்மா இருக்க முடியாமல் என்ன செய்வது என்று யோசித்தார்கள். ஆனால் மகேந்திரன் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஆனந்த் வெளியே செல்ல வேண்டாம் என்பதில் உறுதியாக இருந்தான். ஒரு தடவை அதிர்ஷ்டம் ஆனந்திற்கு உதவியது போல அடுத்த முறையும் உதவும் என்பதற்கு எந்த விதமான உத்திரவாதமும் இல்லை என்று நம்பினான். வெளியே சென்று ஏதாவது செய்வதானால் அதைத் தானே செய்யலாம் என்று நினைத்தான்.

அப்போது தான் அவனுக்கு திடீரென்று ஒரு நினைவு வந்தது. பரபரப்புடன் கேட்டான். "ஆனந்த், அக்‌ஷய் அவனுக்குப் பழைய நினைவு வந்த போது ஏதோ ஒரு கூட்டத்தில் வேறு ஏதோ பெயரில் பேச எழுந்ததாய் சொன்னானே அது என்ன பெயர்?"

"அப்துல் அஜீஸ். ஏன் கேட்கிறாய்?"

"அந்தப் பெயரை நான் ஆச்சார்யாவின் கம்ப்யூட்டரில் உள்ள ஒரு ஃபைலில் பார்த்திருக்கிறேன். அவர் அது சம்பந்தமாய் ஏதோ ஆராய்ச்சி செய்து கொண்டு இருந்தது போல இருந்தது"

ஆனந்த் சொன்னான். "ஆனால் இப்போது அது ஆச்சார்யாவின் கம்ப்யூட்டரில் இல்லை. அதையெல்லாம் எதிரிகள் முன்கூட்டியே அழித்திருக்கிறார்கள்"

மகேந்திரன் அதே பரபரப்புடன் சொன்னான். "சிபிஐயில் உள்ள ரகசிய டேட்டா ஃபைலில் அதை அவர் சேர்த்திருந்தால் அதை அவர்கள் அழித்திருக்க முடியாது. அதை அழிக்கவோ மாற்றவோ ஜெயின் சார் ஒருவருக்குத் தான் அதிகாரம் இருக்கிறது. அதை அவர் கண்டிப்பாக செய்திருக்க மாட்டார். அதனால் அது சிபிஐ ரகசிய டேட்டா ஃபைலில் கண்டிப்பாக இப்போதும் இருக்க வாய்ப்புண்டு"

"ஆனால் அதை நாம் எப்படி படிக்க முடியும்?"

"அதை என்னிடம் விடு ஆனந்த். நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று குறும்பாகக் கண்சிமிட்டிய மகேந்திரன் உடனடியாகக் கிளம்பினான்.

மகேந்திரன் சிபிஐ அலுவலகத்திற்குள் நுழைந்தவுடன் ராஜாராம் ரெட்டி அவனைக் கூப்பிட்டனுப்பினார். ஆரம்பத்திலிருந்தே அவனிடம் அவருக்கு நல்ல அபிப்பிராயம் இருந்ததில்லை. எனவே மிகவும் அவசியம் என்றால் ஒழிய அவர் அவனை அழைத்துப் பேசியதில்லை. அதனால் இப்போது அவர் கூப்பிட்டனுப்பியது அவனுக்கு பலத்த சந்தேகத்தைக் கிளப்பியது. அமானுஷ்யன் விவகாரத்தில் அவனுக்கும் ஏதாவது பங்கு இருக்கலாம் என்று யூகித்திருப்பாரோ?

அவன் அவர் அறைக்குச் சென்றான். ராஜாராம் ரெட்டி அவனை மிகுந்த மரியாதையுடன் வரவேற்று உட்காரச் சொன்னார். அவன் உட்கார்ந்தான்.

"மகேந்திரன். சென்னையில் இருந்து வந்த சிபிஐ ஆபிசர் ஆனந்தை நீ இந்த இரண்டு மூன்று நாட்களில் பார்த்தாயா?"

அவர் அவன் மேல் வைத்த கண்களை ஒரு கணமும் வேறுபக்கம் நகர்த்தவில்லை. அவன் சிறிது யோசித்து விட்டு சொன்னான். "ஜெயின் சார் இருந்த போது அவரிடம் அவர் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தது தான் கடைசி. அதுவும் நான்கைந்து நாள் இருக்கலாம். ஏன் கேட்கிறீர்கள் சார்"

ராஜாராம் ரெட்டி கவலையுடன் சொன்னார். "நான் அவருக்குப் போன் செய்தால் 'ஸ்விட்ச்டு ஆஃப்' தகவலே வருகிறது."

அப்படியா என்பது போல மகேந்திரன் அசுவாரசியத்துடன் பார்த்தான்.

ராஜாராம் ரெட்டி பெரிய ரகசியத்தை அவனுடன் பகிர்ந்து கொள்வது போல தாழ்ந்த குரலில் சொன்னார். "நம் ஆச்சார்யாவைக் கொலை செய்த உண்மையான நபரைக் கண்டுபிடிக்கிற வேலையில் அவர் ஈடுபட்டிருக்கிறார். அவர் தங்கி இருக்கிற ஓட்டல் ரூமிற்கும் அவர் வந்து இரண்டு நாளாகிறது என்கிறார்கள். எங்கே போனார் என்று தெரியவில்லை. ஜெயின் சாருக்கும் உடல் நிலை சரியில்லாமல் போன இந்த சமயத்தில் ஆனந்தும் காணாமல் போனது எனக்கு கவலையாக இருக்கிறது. அதனால் தான் உங்கள் பார்வைக்கு அவர் பட்டாரா, இல்லை உங்களிடம் இந்த இரண்டு நாள்களில் அவர் பேசினாரா என்று கேட்டேன்"

மகேந்திரனும் அவரைப் போலவே ஒரு ரகசியத்தை அவரிடம் பகிர்ந்து கொள்வது போல அவரிடம் சொன்னான். "சார், உண்மையில் ஆனந்த் ஆச்சார்யா கொலை வழக்கில் என்னைக் கூட சந்தேகத்தோடு தான் பார்த்தார். அதனாலேயே அவர் என்னிடம் அதிகம் பேச்சு வைத்துக் கொள்ளவில்லை."

ராஜாராம் ரெட்டி அவனைக் கூர்ந்து பார்த்தபடி அடுத்த கேள்வி கேட்டார். "நீங்கள் இன்று டிவியில் ஒரு தீவிரவாதி படத்தை போலீஸ் வெளியிட்டு வருகிறதே அதைப் பார்த்தீர்களா?"

மகேந்திரன் அலட்சியமாக சொன்னான். "பார்த்தேன் சார். அவன் யாதவ் எம்.பியின் கல்லூரியில் ஏழெட்டு போலீஸ்காரர்களைத் தாக்கி விட்டு தப்பி ஓடி விட்டான் என்று சொல்கிறார்கள். அதை நம்பக் கஷ்டமாக இருக்கிறது. அவன் என்ன சினிமா கதாநாயகனா சார் இத்தனை ஆட்களை அடித்துப் போட்டு தப்பிக்க."

ராஜாராம் ரெட்டி சொன்னார். "நான் அந்த ஆட்களை ஆஸ்பத்திரியில் பார்த்தேன். எல்லாம் பரிதாபமாகப் படுத்துக் கிடக்கிறார்கள். அதனால் செய்தி உண்மை தான்...."

ஆனாலும் நம்பக் கஷ்டமாக இருக்கிறது என்பது போல் பார்த்து

விட்டு மகேந்திரன் மௌனமாக இருந்தான்.

"மகேந்திரன் உன்னை யாராவது பின் தொடர்வதோ, உங்கள் வீட்டிற்கு சந்தேகப்படும் படி யாராவது வந்து போனதோ இந்த சில நாட்களில் நடந்திருக்கிறதா?"

மகேந்திரன் யோசித்தபடி இல்லை என்று ஆரம்பத்தில் தலையாட்டி விட்டு பிறகு தான் நினைவு வந்தவன் போல் சொன்னான். "...என்னை யாரும் பின் தொடர்ந்து வரவில்லை.... ஆனால் நாலைந்து நாட்களுக்கு முன்னால் நான் நண்பன் ஒருவன் கல்யாணத்திற்காக வெளியூர் போயிருந்த போது யாரோ ஒருவன் எங்கள் வீட்டிற்கு வந்து என்னை விசாரித்ததாக வீட்டில் சொன்னார்கள். அது என் நண்பனோ, எனக்குத் தெரிந்தவனோ இல்லை என்று மட்டும் உறுதி. ஆனால் நான் வந்த பிறகு என்னைப் பார்க்க ஒரு தடவை கூட அந்த ஆள் வரவில்லை. யார் என்பதே குழப்பமாக இருக்கிறது... எதற்கு சார் கேட்கிறீர்கள்?"

ராஜாராம் ரெட்டி கூசாமல் பொய் சொன்னார். "சில சிபிஐ ஆட்கள் அவர்களுக்கு அப்படி நடந்ததாக என்னிடம் தனிப்பட்ட முறையில் சொன்னார்கள். அது தான் நான் உங்களிடமும் கேட்டேன்..."

"இப்படியெல்லாம் நடப்பது எதனால் என்று நீங்கள்

நினைக்கிறீர்கள் சார்?"

"சரியாகத் தெரியவில்லை. ஆனால் ஆச்சார்யா கொலை வழக்குக்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது."

மகேந்திரன் ஆழ்ந்த யோசனையுடன் கேட்பது போல கேட்டான். "அப்படியானால் என் வீட்டுக்கு வந்தவன் கூட....?"

ராஜாராம் ரெட்டி தலையாட்டி விட்டு சொன்னார். "எதற்கும் ஜாக்கிரதையாக நீங்களும் இருங்கள்."

மகேந்திரன் போன பிறகு ராஜாராம் ரெட்டி யோசித்தார். அமானுஷ்யன் கேசவதாஸைப் பார்க்கப் போன போது மகேந்திரன் வீட்டிற்கும் போய் விசாரித்திருக்க வேண்டும். மகேந்திரன் அந்த சமயத்தில் விடுமுறையில் இருந்தது உண்மை. எனவே மகேந்திரன் அமானுஷ்யனிடம் அகப்படவில்லை. அவன் வந்த பின் அமானுஷ்யன் போவதற்கு முன் அந்தம்மாள் கடத்தப்பட்டதால் பிறகு மகேந்திரனைப் பார்க்கப் போவதைக் கை விட்டிருக்க வேண்டும். இரண்டு நாளாகவே மகேந்திரனை அவன் பார்த்து விட்டு மகேந்திரனும் அவனும் ஆனந்தும் சேர்ந்து காய்கள் நடத்துகிறார்களா என்று லேசாக சந்தேகப்பட்டது

உண்மையல்ல.....

அலைபேசி அலறியது. பேசியது மந்திரி தான். "அந்த உளவுத்துறைக்காரன் நேரில் சொன்னதை எழுத்திலும் எழுதி எனக்கு ஒரு ஆள் மூலம் அனுப்பி இருக்கிறான்."

உளவுத்துறையின் ஜாக்கிரதை உணர்வு தற்காப்பு நடவடிக்கை என்பது ரெட்டிக்குப் புரிந்தது. அதை மந்திரியிடம் சொல்லவும் செய்தார்.

மந்திரி கோபப்பட்டார். "அந்த ஆளை அப்புறமாய் கவனித்துக் கொள்கிறேன். ..... அந்த சலீம் பற்றி வேறு ஆள் மூலமாக விசாரித்தேன். அவனை வரவழைத்ததே அமானுஷ்யனுக்காகத் தான். வரவழைத்ததும் அந்த தாடிக்காரன் கூட்டம் தான். அவர்களுக்கு நம் மேல் நம்பிக்கை போய் விட்டது. அதனால் தான் அவர்கள் அவனைத் தருவித்திருக்கிறார்கள்."

ராஜாராம் ரெட்டி சிறிது நேரம் ஒன்றும் சொல்லவில்லை. இன்னும் அவருக்கு அமானுஷ்யனைத் தவற விட்டதில் அவமானமாகத் தான் இருந்தது. அந்த நிருபர்கள் கூட்டம் கூடாமல் இருந்திருந்தால் அமானுஷ்யன் இப்போது பிணமாகத் தானிருப்பான். ஆனால் இப்போதோ.... ஒரு பெருமூச்சு விட்டு விட்டு சொன்னார்.

"எப்படியோ அவன் செத்தால் சரி. அதை அந்த சலீம் செய்தாலும் சரி அந்த சனியன்கள் செய்தாலும் சரி தான்..."

*****************

சலீம் வேகமாக முடிவெடுக்க வேண்டி இருந்தது. இப்போது இதே விமானத்தில் அமானுஷ்யனும் பயணிப்பானா, இல்லை வெறுமனே அவனைக் கண்காணிக்க அவன் வந்தானா என்பதையும் சலீமால் தீர்மானிக்க முடியவில்லை. ஒருசில வினாடிகளில் தீர்மானித்த சலீம் விமானத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவன் முதுகில் இரண்டு கண்கள் துளைத்துக் கொண்டிருந்தன. ஆனால் ஒரு முறை கூட திரும்பிப் பார்க்காமல் சலீம் நடந்தான். விமானம் ஏறி உட்கார்ந்தான்.

அமானுஷ்யன் பின் தொடர்ந்து வந்து விமானத்தில் ஏறவில்லை. சலீம் மூளையில் சில சந்தேகங்கள், கணக்குகள் தோன்றி மறைந்தபடி இருந்தன. அமானுஷ்யன் உண்மையில் ஜம்முவிற்குப் போக வேண்டியவன் இல்லையா? ஜம்முவிற்குத் தான் போவான் என்ற அனுமானம் பொய்யா? ஆழமாக சிந்தித்தான். அமானுஷ்யன் கடைசியாக ஆச்சார்யாவைத் தொடர்பு கொண்டதெல்லாம்

ஜம்முவில் இருந்து தான் என்று அவனுடைய ஃபைலில் தீவிரவாதிகள் உறுதியாகச் சொல்கிறார்கள். அப்படி என்றால் அவன் ஏதாவது ரகசியமாய் ஒளித்து வைத்திருக்கிறான் என்றால் அது அங்கேயே தான் இருக்க வேண்டும்....

விமானம் கிளம்பியது. அமானுஷ்யன் வரவில்லை. சலீமிற்கு சற்று ஏமாற்றமாக இருந்தாலும் அமானுஷ்யன் இடத்தில் அவன் இருந்தாலும் அதைத் தான் செய்திருப்பான் என்பதால் வருத்தம் ஏற்படவில்லை. அமானுஷ்யன் இடத்தில் இருந்து அடுத்ததாக என்ன செய்வான் என்று யோசித்தான்.

முதலாவதாக அமானுஷ்யனாக அவன் இருந்திருந்தால் அவன் கண்டிப்பாக எங்கேயாவது பாதுகாப்பாக ஒளிந்து கொண்டிருப்பான். அவனைப் போலீசும், தீவிரவாதிகளும் வலை வீசித் தேடிக் கொண்டிருக்கையில் அவன் எங்கேயும் பயணம் செய்யாமல் ஓரிடத்தில் பதுங்கி இருப்பது தான் அவனுக்கு நல்லது. அவன் உண்மையாகவே ஏதாவது தடயத்தை ஒளித்து வைத்திருந்தால் அதை எடுத்து வரக்கூட வேறு யாருடைய உதவியையாவது நாடி இருப்பான். கல்லூரியில் அடைபட்ட விவகாரத்தில் கூட அத்தனை நிருபர்களையும் அதிகாலை நேரத்திலேயே அவனால் வரவழைக்க முடியும் என்றால் ஏதோ ஒரு நம்பிக்கையானவனைத் தேர்ந்தெடுத்து இங்கேயிருந்து இதை

எடுத்து வா, அல்லது எடுத்து இதைச் செய் என்று சொல்வது ஒன்றும் பெரிய கஷ்டமான காரியம் இல்லை.

இந்த எண்ணம் தோன்றியவுடனேயே அவனுக்கு இன்னொரு சந்தேகம் வந்தது. அப்படி நிஜமாகவே ஒருத்தனிடம் அந்த வேலையை அவன் ஒப்படைத்திருக்க வாய்ப்புண்டோ? அவனை ஜம்மு விமானத்தில் ஏற்றத் தான் அவன் வந்திருக்கிறானோ? சந்தேகம் தோன்றியவுடனேயே அவன் விமானத்தில் உள்ள பயணிகளைக் கவனித்தான். யாரும் சந்தேகம் கொள்கிற மாதிரி இல்லை.

ஆனால் போனில் ஆனந்திடம் அவன் சொன்னதென்னவோ தானே அந்த இடத்திற்குப் போவதாகத் தான். அவன் சொன்னது உண்மையாக இருக்குமானால் வேறு ஆளை அனுப்பாமல் அவன் தானாகப் போக வேண்டிய அவசியம் என்ன? அதற்கு ஒரே காரணம் தான் இருக்கக் கூடும். அவன் போனால் தான் அந்த தடயம் எடுக்க முடியும் என்ற நிலை இருக்கலாம். உதாரணத்திற்கு அவன் பேங்க் லாக்கரில் அந்தத் தடயத்தை வைத்திருந்தால் அவனே சென்று கையெழுத்திட்டு தான் அப்படி எடுத்து வர முடியும்.

இந்த எண்ணம் வந்த போது மற்றதெல்லாம் சரியாகவும் பொருத்தமாகவும் தோன்றியது. அமானுஷ்யனே போக வேண்டும்

என்ற கட்டாயத்தில் இருக்கிறான், ஆனால் பின் தொடரப்படுவதும் அவனுக்குத் தெரிந்து விட்டிருக்கிறது. அவன் போகக் கூடிய இடமும் எதிரிகள் யூகிக்கக் கூடிய இடமாக இருப்பதால் அப்படி பின் தொடர்ந்த ஆள் அந்த ஊரிற்குப் போகிறானா என்று கண்டுபிடிக்க முதலிலேயே விமான நிலையம் வந்து கண்காணித்திருக்கிறான். ஆம் என்று ஆனவுடன் அதில் பயணிக்காமல் விட்டு விடுகிறான்.....

சலீம் புன்னகைத்தான். அவன் கணிப்பு சரியென்றால் அமானுஷ்யன் அடுத்த விமானத்தில் ஜம்மு வர வாய்ப்பு இருக்கிறது.

ஜம்முவில் இறங்கியவன் விமான நிலையத்திலேயே காத்திருந்தான். டெல்லியிலிருந்து வரும் அடுத்த விமானத்திற்காக.

*********************************

105

மகேந்திரனுக்கு கம்ப்யூட்டர் மீதிருந்த ஆர்வம் மிகையானது. கம்ப்யூட்டர் புழக்கத்தில் வர ஆரம்பித்த காலத்தில் இருந்தே அவன் என்னேரமும் அதில் ஏதாவது செய்து கொண்டோ, அதைப்பற்றி ஏதாவது படித்துக் கொண்டோ இருப்பான். இண்டர்நெட் வந்த

பிறகு அவன் ஆர்வம் பல மடங்கு மேலும் அதிகமானது. எனவே சிபிஐ அலுவலகத்தில் அனைத்தும் கம்ப்யூட்டர் மயமான சமயம் அத்தனை பேருக்கும் அவன் தேவைப்பட்டிருந்தான். எந்த சந்தேகம் என்றாலும் அவனைக் கேட்பார்கள். அவன் தான் எல்லாருடைய சந்தேகங்களையும் தீர்ப்பவனாக இருந்தான்.

சிபிஐயின் பல டேட்டா ஃபைல்கள் உருவாக்கப்பட்டவர்களுடைய பாஸ்வர்டால் பூட்டப்பட்டிருக்கும். அவரவர் அந்தப் பாஸ்வர்டு தந்தால் ஒழிய அந்த ஃபைல்களைத் திறக்க முடியாது. ஜெயின் மற்றும் ராஜாராம் ரெட்டி இருவருடைய பாஸ்வர்டுகள் தவிர மகேந்திரனுக்கு அந்த அலுவலகத்தில் கிட்டத்தட்ட அனைவருடைய பாஸ்வர்டுகளும் தெரியும். அதைத் தெரிந்து கொண்டு அவ்வப்போது அவர்கள் உருவாக்கிய ஃபைல்களின் உள்ளே சென்று படிக்கவும் செய்வான். அவன் அப்படிப் படித்து எந்தக் கெட்ட காரியத்தையும் செய்யவில்லை என்பதால் அதில் எந்த தவறும் இல்லை என்ற எண்ணம் அவனுக்கு இருந்தது.

அவனுக்கு ஆச்சார்யாவின் பாஸ்வர்டும் தெரியும். இறந்து போனவருடைய ஃபைல்கள் சிபிஐ தலைமை டைரக்டரால் குறிக்கப்பட்டு அழிக்கப்பட்டால் ஒழிய அப்படியே இருக்கும். ஜெயின் ஆச்சார்யா ஃபைல்களை அழித்திருக்க வாய்ப்பில்லை என்ற அவனுடைய யூகம் பொய்யாகவில்லை. அவர் உருவாக்கிய

பல ஃபைல்களின் பெயர்களைப் படித்தான். அப்துல் அஜீஸ் ஃபைல் தவிர எல்லாம் பழைய அல்லது அவர்களது தற்போதைய தேடலுக்குத் தேவை இல்லாததாக இருந்தது.

சுற்றும் முற்றும் பார்த்தான். யாரும் அவனைக் கண்காணிப்பதாகவோ, திடீரென்று அவன் மேஜைக்கு வந்து விடுகிறவர்களாகவோ இருக்கவில்லை. ராஜாராம் ரெட்டி ஏதோ ஒரு வேலையில் மூழ்கி இருந்தார். சில நாட்கள் முன்பு வரை அவர் முகத்தில் ஒருவித திருட்டுத்தனத்துடன் கூடிய குள்ளநரித்தனம் அவனுக்குத் தெரியும். ஆனால் இப்போதோ அது சுத்தமாக இல்லை. ஏதோ ஒரு கவலை முகத்தில் படர்ந்திருந்தது. அக்‌ஷய் தப்பித்துச் செல்ல முடியும் என்று கனவிலும் நினைத்திராததன் விளைவு என்று எண்ணிக் கொண்டான்.

அப்துல் அஜீசின் ஃபைலைப் படிக்க ஆரம்பித்தான்.

அப்துல் அஜீஸ் ஆப்கானிஸ்தானத்தில் பிறந்து வளர்ந்தவன். தலிபான் தீவிரவாதிகள் கூட்டத்தில் அவன் மிக முக்கியமானவன். துப்பாக்கி சுடுவதில் அவனுக்கு மிஞ்சியவர்கள் யாரும் இல்லை என்கிற அளவு பிரபலமானவன். அதே நேரத்தில் கொரில்லா தாக்குதலிலும் அவன் நிபுணனனாக இருந்தான். இதெல்லாவற்றிற்கும் எதிர்மாறான ஒரு திறமை அவனிடம்

இருந்தது. அது தான் உருதுவில் கவிதை எழுதும் திறமை. அவன் குரலும் நன்றாக இருந்தது. அவனே கவிதை இயற்றிப் பாடுவான். இந்த நேர் எதிரான திறமைகளால் அவன் பலருக்கும் புதிராகவே இருந்தான். தயவு தாட்சணியம் இல்லாமல் பலரைக் கொன்று குவிக்க முடிந்த அவனுக்கு கவிதைகள் எழுதும் போதும் பாடும் போதும் கண்கள் கலங்குவது உண்டு.

பல தீவிரவாதிகளுடன் சேர்ந்து நாள்கணக்கில் சூழ்ச்சிகளிலும் திட்டங்களிலும் ஈடுபட்டு அவற்றை நிறைவேற்றும் அவன் அடிக்கடி மாதக் கணக்கில் காணாமல் போவதுண்டு. யாராவது ஒரு பெண்ணுடனோ, இல்லை ஏதாவது சில உருதுக் கவிஞர்களுடனோ மாதக்கணக்கில் வித்தியாசமான சூழ்நிலையில் இருந்து விட்டு திரும்பி வந்தால் பல வெடிகுண்டு தாக்குதல்களை மடமடவென்று அண்டை நாடுகளில் நிகழ்த்துவான். இப்படிப்பட்டவன் ஒரு முறை ஒரு பெண்ணோடு ஆப்கானிஸ்தானில் ஒரு மலைப்பகுதியில் இருக்கையில் எதிரிகளால் கொல்லப்பட்டதாக ஒரு வதந்தி வந்தது. அதைத் தலிபான்கள் மறுத்தாலும் சர்வதேச ரகசிய அமைப்புகள் அது உண்மை என்று நம்பின.

இந்தத் தகவல்கள் தான் விரிவாக அவனுடைய ஃபைலில் விளக்கப்பட்டு இருந்தன. எல்லாவற்றிற்கும் கீழே ஆச்சார்யா தன் குறிப்பை எழுதி இருந்தார். "அவன் இறந்தது உண்மை தான்

என்பதை நான் தனிப்பட்ட முறையில் பல அமைப்புகள் மூலமாக உறுதி செய்தேன். ஆனால் தலிபான்களோ, மற்ற தீவிரவாதக் கூட்டங்களோ அதை நம்பாததற்குக் காரணம் அவன் பிணம் கிடைக்காதது தான். அவர்கள் அடிக்கடி காணாமல் போகும் அவன் கண்டிப்பாக ஒருநாள் திடீரென்று வந்து சேர்வான் என்று அவர்கள் நம்புகிறார்கள். அவர்கள் நம்பிக்கையை மெய்ப்பித்தால் என்ன?"

அந்த ஃபைலில் அப்துல் அஜீஸின் போட்டோக்களும் சில இருந்தன. தோற்றத்தில் அவன் ஒல்லியாகவும் கிட்டத்தட்ட அக்‌ஷய் போலவும் தான் இருந்தான். எல்லாமாகப் பார்க்கையில் அவர் பின்னர் போட்ட திட்டம் மெள்ள மகேந்திரனுக்குப் புலனாகியது. அக்‌ஷயை அவர் அப்துல் அஜீஸாக்கி விட்டார். உருதுவில் புலமையும், அசாதாரண சண்டைத் திறமையும் கொண்ட அக்‌ஷய் சிறிது தோற்றத்தில் சில்லறை மாற்றங்கள் செய்தால் போதும் அப்துல் அஜீஸ் போலத்தான் தோன்றுவான். இப்போது அக்‌ஷய் அப்துல் அஜீஸ் ஆக மாறிய விதம் புரிந்தது. ஆனால் எதைக் கண்டு பிடிக்க எங்கு அவன் அப்துல் அஜீஸாக அனுப்பப்பட்டான் என்பது மட்டும் அவனுக்கு விளங்கவில்லை.

**********

சலீம் விமானத்தில் ஏறுவதை மாறுவேடத்தில் இருந்த அக்‌ஷய் கவனித்துக் கொண்டிருந்தான். தாடியுடன் ஒரு நடுத்தரவயது ஆள் வேடத்தில் இருந்த அவனுக்கு சலீம் கண்காணிக்கப்படுவதைக் கண்டுபிடித்து விட்டான் என்றே தோன்றியது. இத்தனைக்கும் சலீம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. ஆனால் சென்று கொண்டு இருந்த அவன் எடுத்து வைத்த காலடிகளில் இரண்டு காரணமில்லாமல் தாமதப்பட்ட விதம் அவன் சந்தேகத்தை உறுதிப்படுத்தியது. அக்‌ஷய் அவன் திரும்புவான், அல்லது சும்மா வேடிக்கை பார்ப்பது போலவாவது சுற்றும் முற்றும் பார்ப்பான் என்று எதிர்பார்த்தான். ஆனால் சலீம் அப்படியெல்லாம் செய்யாதது அவனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. ஒரு அபாயகரமான நபர் என்பது அவனுடைய முழுமையான கட்டுப்பாட்டிலேயே தெரிந்தது. விமானம் கிளம்பிப் போகும் வரை அவன் ஏதாவது வேஷத்திலாவது திரும்பக்கூடும் என்று நினைத்ததும் நடக்கவில்லை. அக்‌ஷயிற்குத் தோன்றியது. கண்டிப்பாக அக்‌ஷய் ஜம்மு போய் சேரும் போது சலீம் அவன் வரவிற்காகக் காத்திருக்கக் கூடும்.

விமானம் கிளம்பிப் போன பிறகு ஆனந்திடம் அவன் போனில் பேசினான். வேறொரு நபருடைய செல்ஃபோன் ஒன்றை முன்பே மது ஆனந்திடம் தந்திருந்தான். அதில் பேசுவது தான் பாதுகாப்பு என்று இருவரும் முன்பே முடிவு செய்திருந்தார்கள்.

ஆனந்திடம் பேசும் போது அவன் சலீமைப் பற்றிச் சொல்லவில்லை. தேவை இல்லாமல் ஆனந்தைப் பயமுறுத்துவதில் அர்த்தமில்லை என்று அக்‌ஷய் நினைத்தான். ஆனால் மதுவிடம் அவன் ஜம்முவிற்குப் போவதாகச் சொல்லி இருந்தது ஆனந்திற்கு சந்தேகத்தை எழுப்பி இருந்தது.

"நீ போக வேண்டிய ஊர் ஜம்மு தான் என்று எப்படித் தெரிந்தது அக்‌ஷய்?"

"திடீரென்று அந்தப் பெயர் தான் மனதில் திரும்பத் திரும்ப வந்தது. சரி நீயும் மகேந்திரனும் எதாவது கண்டுபிடித்தீர்களா?"

"நாளை மறு நாள் தான் அவர்கள் செயல்படப்போகும் நாள் போல தோன்றுகிறது அக்‌ஷய்" என்றவன் அவனும் மகேந்திரனும் அந்த முடிவுக்கு எப்படி வந்தார்கள் என்பதை விளக்கினான். பிறகு மகேந்திரன் அப்துல் அஜீஸ் பற்றியும் அறிந்து வர சிபிஐ அலுவலகத்திற்குப் போயிருப்பதையும் சொன்னான்.

அதை எல்லாம் கேட்டுக் கொண்ட அக்‌ஷய் கேட்டான். "அம்மாவும் வருணும் நீயும் பாதுகாப்பாக இருக்கிறீர்கள் அல்லவா?"

"ஆமாம்" என்றவன் தாயை மதுராவில் உள்ள ஒரு மடத்தில் பாதுகாப்பாக தங்க வைத்திருப்பதாகச் சொன்னான்.

அக்‌ஷயிற்கு நிம்மதியாக இருந்தது. "சரி ஆனந்த் நான் ஜம்முவிற்குப் போன பிறகு ஏதாவது புதிய தகவல் இருந்தால் போன் செய்கிறேன்" என்றான்.

"அக்‌ஷய்"

"என்ன ஆனந்த்"

"ஜாக்கிரதைடா....." ஆனந்த் குரல் கரகரத்தது.

"சரி ஆனந்த்". அக்‌ஷய் போனை வைத்து விட்டான். சகோதரனின் ஜாக்கிரதைடா என்ற ஒற்றை வார்த்தையில் இருந்த பலதரப்பட்ட ஆழமான உணர்ச்சிகளை அவனால் உணர முடிந்தது. அவனுடைய பாசம் மனம் நெகிழ வைத்தது. ஆனால் உணர்ச்சிப் பிரவாகத்தில் மூழ்க இது உகந்த நேரமல்ல...

*********

டெல்லியிலிருந்து அடுத்த விமானம் ஜம்மு வந்து சேரும் வரை ஒருவித பதட்டத்துடன் தான் சலீம் காத்திருந்தான். என்ன தான் உள்மனம் அமானுஷ்யன் அடுத்த விமானத்தில் வருவான் என்று உறுதியாகச் சொன்னாலும் மனதின் இன்னொரு பகுதி வராவிட்டால் என்ன செய்வாய் என்று கேட்க ஆரம்பித்திருந்தது. அமானுஷ்யனைப் போன்ற ஒரு நபரை அனுமானிப்பது அவ்வளவு சுலபமல்ல என்று அந்த மனம் திரும்பத் திரும்ப எச்சரித்தது. ஆனால் அவன் உள்மனம் அவனை இதுவரை ஏமாற்றியதில்லை என்பதால் அவன் பதட்டத்தையும் மீறி பொறுமையாகக் காத்திருந்தான்.

விமானம் வந்து சேர்ந்தது. கண்டிப்பாக அமானுஷ்யன் வேறு வேஷத்தில் தான் இருப்பான் என்பதில் சந்தேகம் இல்லை. அவன் புகைப்படம் டிவியிலும், பத்திரிக்கைகளிலும் வந்த பிறகு அவனுக்கு வேறு வழி இல்லை...

விமானத்தில் இருந்து இறங்கும் நபர்களை கூட்டத்தோடு கூட்டமாக நின்றிருந்து கூர்ந்து பார்த்தான். கண் சிமிட்டக் கூட அவனுக்கு தயக்கமாக இருந்தது. அந்த நேரத்தில் அமானுஷ்யனைத் தவற விட அவன் விரும்பவில்லை. எவ்வளவு தான் அமானுஷ்யன் கவனமாக ஒப்பனை செய்திருந்தாலும் அவனைக் கண்டுபிடிப்பது சலீமிற்குப் பெரிய கஷ்டமாக இல்லை. தாடியோடும், லேசான

தொப்பையோடும் இறங்கி வந்து கொண்டு இருக்கும் மனிதன் தான் அக்‌ஷய் என்பதை அவனுடைய கூர்மையான கண்கள் அடையாளம் காட்டி விட்டன. இனி என்ன ஆனாலும் சரி அவன் அமானுஷ்யனை தப்ப விடப் போவதில்லை என்று உறுதியோடு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தான் சலீம்.

எந்த விதமான சலனத்தையும் வெளியே காண்பிக்கா விட்டாலும் அக்‌ஷய் சலீமின் கூர்மையான பார்வையை உணர்ந்தான். இவன் கண்களில் இனி மண்ணைத் தூவி விட்டுப் போவது முன் போல அவ்வளவு சுலபமல்ல என்பது அவனுக்குப் புரிந்தது. ஒரு டாக்சியைப் பிடித்து சுமாரான வாடகையில் ஓட்டல் அறை கிடைக்கும் படியான ஏதாவது நல்ல ஓட்டலிற்கு அழைத்துச் செல்லச் சொன்னான்.

டாக்சியில் செல்லும் போது பின்னால் திரும்பிப் பார்த்தான். சலீம் இன்னொரு டாக்சியில் பின் தொடர்ந்து கொண்டிருந்தான். ஏதாவது செய்து அவன் பார்வையில் இருந்து தப்பிப்பது கஷ்டம் தான் என்றாலும் முடியாத காரியம் அல்ல. ஆனால் இந்த ஜம்முவில் என்ன தேடுகிறோம், எங்கு தேடுகிறோம் என்று எதுவும் பிடிபடாமல் இருக்கும் போது அவன் இப்போதைக்கு சலீம் கண்களில் இருந்து தப்புவதற்கு பெரிய முக்கியத்துவம் தரவில்லை. ஒரு ஓட்டலில் அறை எடுத்து தங்கி மீதியை சிந்திப்போம் என்று

எண்ணிய போது தான் அந்த மசூதியை வழியில் பார்த்தான்.

அந்த மசூதி அவனுக்கு மிகவும் பரிச்சயமுள்ளதாக அவனுக்குத் தோன்றியது. அவன் இங்கு பல முறை போயிருக்கிறான். இந்த மசூதி மிக முக்கியமானது. அவன் பழைய வாழ்க்கையில் இந்த மசூதி மிக முக்கிய பங்கு வகித்திருக்கிறது என்று தோன்றியது. அந்த எண்ணம் வலுப் பெற ஆரம்பித்தது. பின்னால் தொடர்ந்து சலீம் வராமல் இருந்திருந்தால் கண்டிப்பாக காரை நிறுத்தி மசூதியினுள் அக்‌ஷய் நுழைந்திருப்பான். அந்த இடத்தை நன்றாகப் பார்த்து மனதில் பதித்துக் கொண்ட அக்‌ஷய் தொடர்ந்து பயணம் செய்தான்.

பின்னால் வந்து கொண்டு இருந்த சலீம் அக்‌ஷய் மீது வைத்த கண்களை எடுக்காமல் இருந்ததால் அவன் அந்த மசூதியைப் பார்த்த விதத்தில் ஏதோ அங்கு இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான். அவனும் அந்த மசூதியையும் அது இருக்கும் இடத்தையும் நன்றாகப் பார்த்து வைத்துக் கொண்டான்.

******************************************

106

அக்‌ஷய் தங்கி இருந்த ஓட்டல் அறை ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான். ஓட்டலின் வாசல் தெரிந்தது. நான்கு பேர்

வாசலில் நின்று எதைப் பற்றியோ காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். வேறு யாரும் முன்னால் இல்லை என்றாலும் சலீம் எங்கேயாவது மறைவில் நின்று கொண்டிருக்க வேண்டும் என்று அவன் சந்தேகப்பட்டான். சலீம் யாருக்காவது போன் செய்து சொல்லி பலரை வரவழைக்க வாய்ப்பு இருந்தது என்றாலும் சலீம் அப்படிச் செய்யாதது அவனைப் பற்றி நிறைய தகவல் சொன்னது. தனியாக இயங்குபவன், எதிலும் மற்றவர்களை உதவிக்கழைக்கவோ, கூட்டு சேர்க்கவோ பிரியப்படாதவன் என்பது புரிந்தது. அதே நேரத்தில் பல ஆட்கள் சேர்ந்தாற்போல இருப்பதை விட அவன் அபாயமானவன் என்பதும் அக்‌ஷயிற்குத் தெரிந்தே இருந்தது. இந்த ஒரு நாளில் அவர்களிருவரும் ஒரு வகையில் நெருக்கமானவர்களாகி விட்டார்கள். ஒருவரின் நிழலாக இன்னொருவர் இருந்து வருகிறார்கள்.

இப்போது அந்த நிழலை விட்டுப் பிரிந்தே ஆக வேண்டும் என்று எண்ணியவனாக அக்‌ஷய் புன்னகை செய்தான். சில நிமிடங்களுக்கு முன் தான் ஓட்டலிற்குப் பின்னால் ஒரு வழி இருப்பதைக் கண்டு பிடித்தான். பின் புறம் ஒரு சின்ன சந்து இருந்தது. ஓட்டலின் வேலையாட்கள் அந்தப் பின் பகுதியை உபயோகிப்பதைக் கண்டுபிடித்தவன் அந்த வழியாக வெளியேறத் தீர்மானித்தான். அப்படி வேளியே வந்த போது சலீம் பின் வாசலிலும் காத்திருப்பானோ என்ற சந்தேகம் வந்தது. ஆனால் நல்ல

வேளையாக சலீம் அங்கு இல்லை.

அக்‌ஷய் வரும் வழியில் பார்த்திருந்த மசூதி ஓட்டலிலிருந்து கிட்டத்தட்ட ஒரு கிலோமீட்டர் தூரத்தில் இருந்தது. தன் பழைய வாழ்க்கையில் அந்த மசூதி ஒரு முக்கியப் பங்கு வகித்திருக்கிறது என்று தோன்ற ஆரம்பித்ததில் இருந்து முதலில் அங்கே போக வேண்டும் என்று அந்தக் கணமே தீர்மானித்திருந்தான். பின்புற சந்திலிருந்து பிரதான சாலைக்கு வந்து ஒரு டாக்சியில் அந்த மசூதியை அடைந்தான்.

மசூதியில் இருபது பேர் தொழுகைக்குத் தயாராக இருந்தார்கள். நுழைந்த அக்‌ஷய் இருபத்தியோராவது ஆளாக தொழுகைக்குத் தானும் தயாரானான். இறைவன் ஒருவன் என்பதில் அக்‌ஷயிற்கு என்றுமே இரண்டு அபிப்பிராயங்கள் இருந்ததில்லை. சிறு வயதிலிருந்தே தொழுகை செய்து பழகிய அவனுக்கு இன்று இறைவனின் அருள் நிறையவே தேவைப்பட்டது. வெடிகுண்டுகள் வெடிக்க குறுகிய காலமே இருக்கிறது, தடுக்கத் தேவையான எந்த ஆதாரமும் அவனுக்கு நினைவில்லை, இன்னும் எதிரிகளிடமிருந்து அவனுக்கும் அவன் குடும்பத்திற்கும் அச்சுறுத்தல் இருக்கிறது என்பதெல்லாம் அவனுக்கு பிரதிகூலமாக இருக்கையில் எல்லாவற்றிற்கும் தீர்வு இறைவனிடம் தான் இருக்கிறது என்று தொழ ஆரம்பித்தான். தொழுகையில் அவன் முழு மனதுடன்

ஐக்கியமானான்.

முகமது யூனஸிற்கு வரும் பிப்ரவரியுடன் எண்பது வயது முடிகிறது. அவர் இறைப்பணியில் தன்னை இணைத்துக் கொண்டு ஐம்பத்திரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இந்த மசூதியில் தொழ வருகிற அனைவரையும் அவர் மிக நன்றாக அறிவார். அவ்வப்போது யாத்திரீகர்களும் தொழுகைக்கு வருவதுண்டு. இன்று புதிதாக வந்தவனும் அப்படிப்பட்ட யாத்திரீகன் என்று தான் ஆரம்பத்தில் நினைத்தார். அவனை இதற்கு முன் அவர் பார்த்ததில்லை. ஆனால் அவன் தொழத் தயாரானது முதல் தொழுகை முடிகிற வரை இயங்கிய விதம் அவருக்கு இன்னொருவனை நினைவுறுத்தியது. அவனைக் கூர்ந்து கவனித்தார். ஒவ்வொரு அசைவும் ஒரு இயல்பான நளினமாக இருந்தது. தொழுத போது உண்மையில் அவன் ஆண்டவன் எதிரில் இருக்கிறார் என்று உணர்ந்து தொழுதது போல இருந்தது. இது நிச்சயமாக அவனே தான். தோற்றம் எத்தனை மாறி இருந்தாலும் அவருக்கு அதில் சந்தேகமே இல்லை. தாடியும் மற்ற ஒப்பனைகளும் அவரை ஏமாற்ற முடியாது.

சில மணி நேரங்களாக அவன் புகைப்படத்தை டிவியில் காட்டிக் கொண்டு இருக்கிறார்கள். சற்று முன் பத்திரிக்கையிலும் அவன் படத்தை அவர் பார்த்தார். அவனைத் தீவிரவாதி என்று

அறிவித்திருந்தார்கள். கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு சன்மானமாக பெரிய தொகையையும் அறிவித்திருந்தார்கள். ஆனால் அவன் கண்டிப்பாக தீவிரவாதி இல்லை என்று அவர் அறிவார். அவனிடம் எத்தனையோ நாட்கள் அவர் மனம் விட்டுப் பேசி இருக்கிறார். இஸ்லாமிய மதத்தில் அவன் அறியாத சூட்சுமம் இருக்கவில்லை. அதில் மட்டுமல்ல புத்த மதத்திலும், இந்து மதத்திலும் கூட அவன் ஆழமான ஞானத்தைப் பெற்றிருந்தான். மூன்று மதங்களிலும் இருந்த ஒற்றுமை, வேற்றுமைகளை அவரிடம் பல முறை பேசி இருக்கிறான். ஒவ்வொரு மதத்தைப் பற்றி அவன் பேசும் போதும் அவன் அந்த மதம் தான் என்று அவருக்கு நினைக்கத் தோன்றும். அப்துல் அஜீஸ் என்ற பெயரில் அறியப்பட்ட அவன் உண்மையில் எந்த மதத்தைச் சேர்ந்தவன் என்று அவனிடம் கேட்டிருந்தால் அவன் உண்மையைச் சொல்லியிருக்கக் கூடும். ஆனால் அவனை இஸ்லாமியனாக மட்டுமே நினைக்கத் தோன்றிய அவர் அவனிடம் அந்தக் கேள்வியைக் கேட்கத் துணியவில்லை.

சில தீவிரவாதிகளுடன் அவன் அங்கு ஆரம்பத்தில் வந்த போது அவனையும் அவர் தீவிரவாதி என்று தான் நினைத்தார். ஆனால் அவன் தொழும் போது அவன் முகத்தில் தெரிந்த பக்தி அப்பழுக்கற்றதாக இருந்தது. அது நடிப்பாக இருக்க முடியாது என்பதை அவர் உணர்ந்தார். அவருக்கு இந்த உலகில் மற்ற விஷயங்களைப் பற்றி தெரிகிறதோ இல்லையோ, தொழ

வந்தவர்களின் சிரத்தையும், உண்மைத் தன்மையும் தெரியாமல் இருந்ததில்லை. பல்லாண்டுகளாக அந்த இடத்தில் இருந்து கவனித்த அனுபவ அறிவு அது. வித்தியாசமாக இருந்த அவனிடம் அவர் ஆரம்பத்தில் அடிக்கடி பேச்சுக் கொடுத்தார். தீவிரவாத நண்பர்கள் கூட இல்லாத சமயமாகப் பார்த்து பேசினார். சிறிய பேச்சுகள் நீண்ட கருத்துப் பரிமாற்றங்களாக மாற ஆரம்பித்தன. உருதுவிலும் அவன் இலக்கிய ரசனையுடன் பேசி அவரை அசத்தினான். ஒரு நாள் அவர் அவனிடம் வருத்தத்துடன் கேட்டார். "அப்துல் நீ மிகவும் நல்லவனாகத் தெரிகிறாய். பின் ஏன் இந்த மாதிரி ஆட்களுடன் நட்பு வைத்துக் கொண்டிருக்கிறாய்?"

அவன் சொன்னான். "சில விஷயங்களை நீங்கள் தெரிந்து கொள்ளாத வரை அது உங்களுக்கு நல்லது"

பின் அவர் அவனிடம் அதைப் பற்றிக் கேட்கவில்லை. ஆனால் ஆன்மிகப் பேச்சுகள் மட்டும் அவர்களிடையே தொடர்ந்தன.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு நாள் நள்ளிரவில் அவன் அவசரமாக அவரைத் தேடி வந்தான். ஒரு சின்ன கவரைக் கொடுத்து விட்டு சொன்னான். "இதை வைத்திருங்கள். சில நாட்கள் கழித்து வாங்கிக் கொள்கிறேன்"

அவர் அதில் என்ன இருக்கிறது என்று கேட்கவில்லை. தந்ததை வாங்கி வைத்துக் கொண்டார். அன்று சென்றவனை அவர் இன்று தான் பார்க்கிறார். அதுவும் மாறு வேடத்தில்.

மற்றவர்கள் எல்லாரும் போகிற வரை அவன் அங்கு நின்றான். அவன் பார்வை அவர் மேல் வந்து தங்கியது. புன்னகைத்தான். புன்னகைக்கும் போது முகமே பிரகாசமாகி அழகாக மாறின அவனைப் பார்த்த போது அவர் நினைத்துக் கொண்டார். எத்தனை தான் மாறு வேடமிட்டாலும் இந்தப் புன்னகை இவனை அடையாளம் காட்டி விடும்.

அவனுக்கும் அந்த நல்ல மனிதரைப் பார்த்த போது அவருடன் மணிக்கணக்கில் பேசிய ஒருசில நினைவுகள் வந்தன.

அவர் அவனருகே வந்து மெல்ல கேட்டார். "அந்தக் கவர் வாங்கிப் போக வந்தாயா?"

அவன் தலையை மட்டும் அசைத்தான். அவர் சென்று அதை எடுத்து வந்து தந்தார். அவன் அவர் முன்பே அதைத் திறந்து பார்த்தான். அதில் ஒரு சாவி மட்டும் இருந்தது.

அவரிடம் நன்றி தெரிவித்து விட்டு சொன்னான். "நான்

அவசரமாகப் போக வேண்டி இருக்கிறது. அதனால் இன்னொரு நாள் வந்து பேசுகிறேன். இதைக் கொடுத்த போது நான் வேறு ஏதாவது சொன்னேனா?"

"இல்லையே. இதை வைத்திருங்கள். இன்னொரு நாள் வந்து வாங்கிக் கொள்கிறேன் என்று மட்டும் தான் சொன்னாய்"

அக்ஷய் அந்த முதியவரை வணங்கி விட்டுக் கிளம்பினான்.

முகமது யூனஸ் மனதார சொன்னார். "ஜாக்கிரதையாக இரு. அல்லா உனக்குத் துணை இருப்பார்"

********

சலீம் அக்ஷய் ஓட்டலில் இருந்து வெளியேறி விட்டிருக்க வேண்டும் என்பதை அவன் போய் அரை மணி நேரத்திலேயே கண்டுபிடித்து விட்டான். அக்ஷய் வெளியே வராததைக் கண்ட அவன் அந்த ஓட்டலிற்கு பின்புற வழி இருக்கிறதா என்று விசாரித்தான். ஆமென்று பதில் வந்த போது அவன் போய் விட்டான் என்பது அவனுக்கு உறுதியாகத் தெரிந்து விட்டது.

எங்கு போயிருப்பான் என்று யோசித்த போது அவனுக்கு அந்த

மசூதி நினைவு வந்தது. அமானுஷ்யன் அந்த மசூதியை சில நொடிகளே பார்த்திருந்தாலும் பார்த்த விதத்தில் அது முக்கியமான இடம் என்பது புரிந்து விட்டிருந்ததும் நினைவுக்கு வர உடனடியாக டாக்சியில் ஏறி அந்த மசூதிக்கு அவன் கிளம்பினான். டாக்சியை மசூதிக்கு எதிரிலேயே நிறுத்தச் சொன்னான்.

இறங்கி அவன் மசூதிக்கு உள்ளே போகலாமா வேண்டாமா என்று யோசித்த போது அமானுஷ்யன் மசூதியில் இருந்து வெளியே வந்து கொண்டிருந்தான். அவன் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்தது போல் இருந்தது. அவன் சலீமைக் கவனிக்கத் தவறி விட்டான் என்பதும் புரிந்தது. அமானுஷ்யனும் சில சமயங்களில் சாதாரண மனிதனைப் போல கவனக் குறைவாக இருக்கிறான் என்பதை உணர்ந்த போது சலீமிற்குத் திருப்தியாக இருந்தது. அப்படியே மறைவிடத்தில் பதுங்கி நின்றான்.

அவன் நினைத்தது போல அக்‌ஷய் அந்த நேரத்தில் கவனக்குறைவாகத் தான் இருந்தான். அவன் மனமெல்லாம் அந்த சாவியைச் சுற்றியே இருந்தது. அதனால் தான் அவன் எதிர்ப்புறம் இருந்த சலீமைக் கவனிக்கத் தவறினான். இந்த சாவி ஏதாவது பேங்க் லாக்கரின் சாவியாகத் தான் இருக்க வேண்டும் என்று எண்ணியவனுக்கு அந்த கல்லூரியில் வந்த பழைய நினைவுக் காட்சி நினைவுக்கு வந்தது. அது சர்ச் எதிரே இருந்த ஏதோ பேங்க்....

உடனே சற்று தள்ளி இருந்த டாக்சி ஸ்டேண்டிற்கு சென்றான். இரண்டு டாக்சி டிரைவர்கள் ஏதோ அரசியல் பேசிக் கொண்டிருந்தார்கள். அவனைப் பார்த்ததும் ஒரு டிரைவர் கேட்டான். "வாருங்கள். எங்கே போக வேண்டும்"

"பேங்க் போக வேண்டும்" என்ற அக்‌ஷய் திடீரென்று பேங்க் பெயர் மறந்து விட்டது போல நடித்துக் சொன்னான். "அந்த பேங்க்... அது தான்...சர்ச்சிற்கு எதிரே இருக்கிற பேங்க்..."

"ஜம்மு காஷ்மீர் பேங்க்"

"ஆ... அது தான்.... அங்கே போக வேண்டும்" என்று சொல்லி விட்டு அக்‌ஷய் டாக்சியில் ஏறி அமர டாக்சி கிளம்பியது.

டாக்சி கண்களில் இருந்து மறையும் வரை காத்திருந்த சலீம் டாக்சி ஸ்டேண்டிற்கு விரைந்தான். கிளம்பிப்போன டாக்சி டிரைவருடன் பேசிக் கொண்டிருந்த இன்னொரு டிரைவரிடம் போய் சொன்னான். "இப்போது டாக்சியில் போகிறானே அவன் என் நண்பன். அவனிடம் பேசலாம் என்று ஓடி வந்தால் அவன் போய் விட்டான். அவன் எங்கே போகிறான் என்று தெரியவில்லையே"

"அவர் ஜம்மு காஷ்மீர் பேங்க் போகிறார்."

சலீம் யோசிப்பது போல பாவனை செய்தான்.

"செயிண்ட் ஆண்டனீஸ் சர்ச்சிற்கு எதிரே இருக்கிறதே அந்த ப்ராஞ்ச்..."

அமானுஷ்யன் இத்தனை அபாயங்களுக்கு இடையில் நேரில் ஜம்முவிற்கு வருகிறான் என்ற போதே ஏதாவது பேங்க் லாக்கரில் ரகசிய ஆதாரங்கள் போன்றவற்றை வைத்திருக்க வேண்டும், அவன் நேரில் போனால் தான் அதை எடுக்க முடியும் என்ற நிலைமை இருக்க வேண்டும் என்று சலீம் ஊகித்தது சரியாகப் பொருந்துகிறது. அவன் அதன் சாவியை இந்த மசூதியில் யாரிடமாவது கொடுத்து வைத்து இப்போது திரும்பப் பெற்றிருக்க வேண்டும்... நினைக்க நினைக்க சலீம் திருப்தியுடன் புன்னகை செய்தான். இந்த முறை அவன் கண்டிப்பாக அமானுஷ்யனை வெல்லப் போகிறான்.

## 107

சலீம் உடனடியாக சற்று தள்ளிச் சென்று லாட்ஜ் ஆசாமிக்குப் போன் செய்தான்.

எடுத்தவுடன் லாட்ஜ் ஆசாமி கேட்டான். "அந்த சைத்தான் கிடைத்து விட்டானா?"

சலீம் சொன்னான். "கிடைத்து விட்டான். வெறுமனே அவனைக் கொல்வது என்றால் இதற்கு முன்னாலேயே நான் கொன்றிருப்பேன். அவனிடம் ஏதோ ரகசியம் கறக்க வேண்டும் என்று சொன்னதால் தான் செய்யவில்லை. இப்போது அவன் அந்த ரகசிய ஆதாரங்கள் வைத்து இருக்கும் இடம் எனக்குத் தெரிந்து விட்டது."

லாட்ஜ் ஆசாமி பரபரப்புடன் கேட்டான். "எங்கே"

"ஜம்முவில் செயிண்ட் ஆண்டனீஸ் சர்ச் எதிரே இருக்கும் ஜம்மு காஷ்மீர் பேங்கில் உள்ள லாக்கரில் வைத்திருக்கிறான். இப்போது அங்கே அவன் போய்க் கொண்டிருக்கிறான். ஒருவேளை அவன் அதை எடுத்துக் கொண்டு விட்டால் நீங்கள் அத்தனை பேரும் அழிந்த மாதிரி தான். அவன் எடுப்பதற்கு முன் நீங்கள் முந்த வேண்டும்....."

லாட்ஜ் ஆசாமி சில வினாடிகள் யோசிக்க சலீம் பொறுமையில்லாமல் சொன்னான் "....உடனடியாக அந்த

மந்திரிக்குப் போன் செய்து அந்த பேங்க் லாக்கரில் உள்ள ஆதாரத்தைக் கைபற்றச் சொல்லுங்கள். உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால் அவனை அங்கேயே கைதும் செய்ய முடியும். அவனை தீவிரவாதியாக விளம்பரம் செய்த அவர்களுக்கு இது சுலபம். இப்போது ஒவ்வொரு வினாடியும் உங்களுக்கு முக்கியமானது. மந்திரியிடம் பேசி விட்டு என்னிடம் பேசுங்கள்"

சலீம் பேசி முடித்த பிறகு லாட்ஜ் ஆசாமி சிறிதும் யோசிக்கவில்லை. வழக்கமாக குறுந்தாடிக்காரன் மூலமாகத் தான் மந்திரியிடம் அவன் தொடர்பு கொண்டிருக்கிறான். ஆனால் இந்த முறை நேரம் இல்லை என்பதால் நேரடியாக மந்திரியின் தனிப்பட்ட செல் போன் எண்ணிற்கு போன் செய்தான்.

அந்த நேரத்தில் மந்திரியுடன் ராஜாராம் ரெட்டியும் இருந்தார். லாட்ஜ் ஆசாமி சலீம் சொன்ன விவரங்களை சலீம் பெயரைச் சொல்லாமல் சொன்னான். அவன் சொல்லச் சொல்ல ஸ்பீக்கரை ஆன் செய்தார் மந்திரி. அதனால் அவன் பேசியதை ராஜாராம் ரெட்டியும் கேட்டார்.

கடைசியில் லாட்ஜ் ஆசாமி அமைதியாக ஆனால் உறுதியாகச் சொன்னான். "...பணத்தை வாங்கிக் கொண்டு இதுவரையில் அவன் விஷயத்தில் நீங்கள் எந்தக் காரியத்தையும் உருப்படியாகச்

செய்யவில்லை. பிடித்தும் கோட்டை விட்டீர்கள். நாங்கள் பொறுமையாக இருந்தோம். ஆனால் இப்போது நீங்கள் கோட்டை விட்டால் நாங்கள் பொறுத்துக் கொள்ள மாட்டோம். அதன் கடுமையான விளைவுகளை நீங்கள் சந்தித்தாக வேண்டும். ஒவ்வொரு வினாடியும் முக்கியம். உடனடியாக நடவடிக்கை எடுங்கள்...."

மந்திரி சொன்னார். "ஐந்து நிமிடங்களில் போலீஸ் அங்கே இருக்கும். கவலைப் படாதீர்கள்."

"சொல்லாதீர்கள். செய்யுங்கள்"

செல் போனைக் கீழே வைத்து விட்டு மந்திரி ராஜாராம் ரெட்டியைப் பார்த்தார். ராஜாராம் ரெட்டி சொன்னார். "அவன் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை. உடனடியாக நாம் செயல்பட வேண்டும்."

அவர்கள் மின்னல் வேகத்தில் இயங்கினார்கள்.

லாட்ஜ் ஆசாமி சலீமிற்குப் போன் செய்தான். "மந்திரி ஐந்து நிமிடத்தில் போலீஸ் அங்கே இருக்கும் என்கிறார்"

"நல்லது"

லாட்ஜ் ஆசாமி அவனிடம் கேட்டான். "அவர்கள் அவனைப் பிடித்து விடுவார்கள் என்றா நினைக்கிறாய்?"

"அது தான் சொன்னேனே அதிர்ஷ்டம் இருந்தால் பிடிக்கலாம். அப்படி இல்லாவிட்டாலும் அந்த லாக்கரில் இருப்பதைக் கண்டிப்பாகக் கைபற்றலாம்."

"நீ என்ன செய்யப் போகிறாய்?"

"உங்கள் ஆட்களுக்கு அதிர்ஷ்டம் இல்லாவிட்டால் நான் இருக்கிறேன். அவனைப் பிடிப்பது தான் கஷ்டமே தவிர அவனைக் கொல்வது அத்தனை பெரிய காரியமல்ல. அவன் சாவு என் கையால் தான்"

சலீம் குரலில் தெரிந்த உறுதி லாட்ஜ் ஆசாமிக்கு பெரும் ஆறுதலாக இருந்தது. அவனை நம்பவும் செய்தான். சலீம் கொன்ற பெரும்பாலான நபர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. பலரும் பலத்த பாதுகாப்பில் இருந்தவர்கள். அவர்களை அவன் கொன்றது மட்டுமல்ல யாரிடமும் அகப்படாமல் அலட்டிக் கொள்ளாமல் தப்பித்தும் இருக்கிறான். எனவே அமானுஷ்யனை அவனால் கொல்லமுடியும். ஆரம்பத்தில் ஒரு வாடகைக் கொலையாளியை

இதில் பயன்படுத்துவதில் அவனுக்கு சம்மதம் இருக்கவில்லை தான். ஆனால் இன்று அமானுஷ்யனைக் கண்டுபிடித்ததும், அவன் ரகசியங்களை எங்கு ஒளித்து வைத்திருக்கிறான் என்பதைக் கண்டுபிடித்ததும் எல்லாம் சலீம் தான். எனவே அமானுஷ்யனை அப்புறப்படுத்த சரியான ஆள் அவன் தான்....

இப்படியெல்லாம் சிந்தித்த லாட்ஜ் ஆசாமி தன் ஆட்களுக்கும் அமானுஷ்யன் போகக் கூடிய இடத்தைப் போன் செய்து தெரிவித்தான். எல்லா பக்கங்களில் இருந்தும் அமானுஷ்யனை நெருங்குவது நல்லது....

சலீம் தனக்கு ஜம்மு காஷ்மீர் பாங்க் பற்றி சொன்ன டிரைவரிடம் சொன்னான். "என்னை அந்த ஜம்மு காஷ்மீர் பாங்கிற்கு அழைத்துப் போகிறீர்களா? அவனை அங்கேயே போய் பார்க்கிறேன்."

**********

அக்ஷய் சென்று கொண்டிருந்த டாக்சி பழுதாகி அந்த டிரைவர் அதை செய்ய முயற்சி செய்து கொண்டிருந்தான். ஒரு இக்கட்டான கட்டத்தில் இப்படி கால தாமதமாவது அக்ஷயின் பொறுமையை சோதித்தது. ஆனால் அதை வெளியே காட்டாமல் அமைதியாக

அந்த டிரைவரையே கவனித்துக் கொண்டிருந்தான். பின் சொன்னான். "எனக்கு அவசரமாகப் போக வேண்டி இருக்கிறது. இப்போதைக்கு சரியாகுமா?"

டாக்சி டிரைவர் தலையை சொறிந்தான்.

அக்‌ஷய் சொன்னான். "பரவாயில்லை. நான் வேறு வண்டி பிடித்துப் போகிறேன்"

"வேறொரு வண்டி பிடிக்கத் தேவை இல்லை சார். அடுத்த தெருவில் தான் அந்த பாங்க் இருக்கிறது. ஒரு ஃபர்லாங்க் தூரம் தான். அந்த சிக்னலில் இடது புறம் போய் வலது பக்கம் திரும்பினால் நாலாவது கட்டிடம்..."

அக்‌ஷய் அவன் கேட்ட பணத்தைக் கொடுத்து விட்டுக் கிளம்பினான்.

*********

போலீஸ் உயர் அதிகாரிகள் புடைசூழ உள்ளே நுழைந்ததைப் பார்த்த பாங்க் மேனேஜர் திடுக்கிட்டுப் போனார். "என்ன விஷயம்?"

ஒரு அதிகாரி அக்‌ஷயின் போட்டோவை அவரிடம் காட்டினார். "இவனை அடையாளம் தெரிகிறதா?"

நேற்றிலிருந்தே டிவியிலும் பத்திரிக்கைகளிலும் காண்பித்து வந்த அந்த புகைப்படத்தைப் பார்த்திருந்த அந்த மேனேஜர் ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது அப்போதே நினைத்திருந்தார். அப்துல் அஜீஸ் என்ற அந்த இளைஞன் நல்லவன். கண்ணியமானவன். "இவர் எங்கள் வாடிக்கையாளர். நீங்கள் நினைக்கிற மாதிரி இல்லை. ஏதோ தவறு நேர்ந்து விட்டது என்று நினைக்கிறேன்"

அவர் கருத்தை அவர்கள் லட்சியம் செய்யவில்லை. அடுத்த கேள்வியைக் கேட்டனர். "இவன் இங்கே இன்று வந்தானா?"

"இல்லை. இவரைப் பார்த்து நிறைய நாளாகி விட்டது"

"இவனுக்கு இங்கே லாக்கர் இருக்கிறதா?"

அவர் தயக்கத்துடன் சொன்னார். "இருக்கிறது"

"அதைக் காட்டுங்கள். தீவிரவாத நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட முக்கிய தடயங்கள் அந்த லாக்கரில் ஒளித்து வைக்கப்பட்டு

இருக்கிறது என்று நாங்கள் சந்தேகப்படுகிறோம். அதைப் பறிமுதல் செய்ய வந்திருக்கிறோம்"

லாக்கரை உடைக்க ஆட்களோடு போலீசார் வந்திருப்பதைப் பார்த்த பாங்க் மேனேஜர் வேறு வழியில்லாமல் எழுந்தார்.

**********

சலீம் போகின்ற வழியில் அக்ஷய் சென்ற டாக்சி தெருவோரம் நிற்பதைப் பார்த்து திகைத்தான். என்ன ஆயிற்று?

சலீமின் டாக்சி டிரைவர் சொன்னான். "சார். அந்த டாக்சியில் ஏதோ பிரச்சினை போல இருக்கிறது. உங்கள் நண்பர் இங்கேயே இருக்க வேண்டும்"

சலீம் டாக்சியிலிருந்து இறங்காமல் அந்த டிரைவரிடம் சொன்னான். "அவன் இருக்கிறானா என்று உங்கள் நண்பரிடம் விசாரிக்கிறீர்களா?"

அந்த டிரைவர் டாக்சியில் இருந்து நிதானமாக இறங்கினான். அக்ஷயை அழைத்து வந்த டாக்சிக்காரனிடம் போய் கேட்டான்.

"என்ன ஆயிற்று?"

அக்‌ஷயை அழைத்து வந்த டாக்சிக்காரன் தன் காரின் பிரச்னைகளை விளக்க ஆரம்பித்தான். சலீம் பொறுமையில்லாமல் அந்தக் காரில் அமானுஷ்யன் இருக்கிறானா என்று இருந்த இடத்தில் இருந்தே ஆராய்ந்தான். அமானுஷ்யன் அந்த டாக்சியில் இல்லை.

கடைசியில் சலீமின் டாக்சி டிரைவர் கேட்டான். "உன் டாக்சியில் வந்தவர் எங்கே போனார்"

"அவர் நடந்தே போய் விட்டார். பக்கம் தானே"

"எப்போது போனார்"

"பத்து நிமிடம் இருக்கும்"

அமானுஷ்யன் பாங்க் போய் சேர்ந்திருப்பான் என்று சலீம் கணக்கு போட்டான். தன் டாக்சி டிரைவரிடம் சீக்கிரம் அங்கே தன்னை அழைத்துப் போகச் சொன்னான். டாக்சி பறந்தது.

ஜம்மு காஷ்மீர் பாங்க் முன்னால் ஒரு போலீஸ் ஜீப், ஒரு போலீஸ்

வேன், இருபதிற்கும் மேற்பட்ட போலீசார், நிறைய ஆட்கள் நின்றிருந்தார்கள். சலீம் சற்று தூரத்திலேயே டாக்சியை நிறுத்தச் சொன்னான்.

"என்னவோ பிரச்சனை போல இருக்கிறது சார். போலீஸ் குவிந்திருக்கிறது" என்று சொன்ன டிரைவரின் கருத்துக்குப் பதில் சொல்லாமல் அந்தக் கூட்டத்தை ஆராய்ந்தான். போலீசிற்கு இணையாக தீவிரவாதிகளின் ஆட்கள் இருந்தது அவனுக்குத் தெரிந்தது. பொது மக்கள் பலரும் தூர நின்று என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்தக் கூட்டம் போதும் அமானுஷ்யன் தப்பித்துக் கொள்ள...

அவன் செல்போன் அதிர்வுகளை ஏற்படுத்தியது. எடுத்துப் பேசினான். பேசியது லாட்ஜ் ஆசாமி தான். "அந்த சைத்தான் கிடைக்கவில்லை. ஆனால் அவன் லாக்கரில் வைத்திருந்த ஒரு பென் டிரைவ் கிடைத்து விட்டது. போலீசார் அதைக் கைப்பற்றி விட்டார்கள்"

சலீம் புன்னகை செய்தான். அமானுஷ்யனுக்கு கிடைத்திருக்கும் முதல் பின்னடைவு இது. இது வெறும் ஆரம்பம் தான் என்று அவன் கண்டிப்பாக அமானுஷ்யனுக்குப் புரிய வைப்பான்.

ஜம்மு காஷ்மீர் பாங்க் முன்னால் ஒரு போலீஸ் பட்டாளம் வந்திறங்கியதை அக்‌ஷய் தொலைவில் இருந்தே கவனித்தான். அந்த டாக்சி மட்டும் வழியில் நின்று விட்டிருக்கா விட்டால் இன்னேரம் அவர்களிடம் அகப்பட்டிருக்கக் கூடும் என்பதை உணர்ந்த போது அவன் மனம் ஒரு கணம் கடவுளுக்கு நன்றி செலுத்தியது. எங்கிருந்தோ அவனுக்காகப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கும் அவன் தாயின் பிரார்த்தனையின் பலன் தான் இது என்று நினைத்துக் கொண்டான்.

அதே நேரம் நாட்டையே காப்பாற்றக் கூடியதாக அவன் நினைத்திருந்த ஒரு பெரிய ஆதாரம் எதிரிகள் கையில் இன்னேரம் கிடைத்திருக்க வேண்டும் என்று எண்ணிய போதோ அவனுக்கு வருத்தமாக இருந்தது. ஆனால் எது நம் கட்டுப்பாட்டில் இல்லையோ அதைப் பற்றி வருத்தப்படுவதிலும் அர்த்தமில்லை என்று எண்ணியவனாக தூரத்தில் இருந்தே ஜம்மு காஷ்மீர் பாங்கை சுற்றி நடப்பதை கூர்மையாக கவனித்தான்.

அங்கே போலீஸ்காரர்கள் மட்டுமல்ல தீவிரவாதிகள் சிலரும் இருந்தார்கள். அவர்கள் வேடிக்கை பார்க்கின்ற மனிதர்களுடன்

கலந்து நின்றிருந்தார்கள். சில சிபிஐ அதிகாரிகளும், போலீஸ்காரர்களும் கூட மாறுவேடத்தில் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். இந்த வேகத்தில் போலீஸும், தீவிரவாதிகளும் சரியாக இங்கு வந்து சேர வேண்டுமென்றால் கண்டிப்பாக இது அவனைப் பின் தொடர்ந்த மனிதனால் தான் என்பதில் சந்தேகமில்லை. அவனுடைய புத்திசாலித்தனத்தை அக்ஷயால் மெச்சாமல் இருக்க முடியவில்லை. தூரத்தில் ஒரு டாக்சியில் இருந்து அவன் இறங்கியதையும், செல் போனில் பேசியதையும் கவனித்த அக்ஷய் அங்கே இனியும் தங்குவது நல்லதெல்ல என்பதை உணர்ந்து மெல்ல சில அடிகள் பின்வாங்கி அந்த இடத்தை விட்டு வேகமாக நகர்ந்தான்.

********

மந்திரி ராஜாராம் ரெட்டியிடம் சொன்னார். "அவன் கிடைக்கவில்லை. ஆனால் அவன் லாக்கரில் வைத்திருந்த பென் டிரைவ் கிடைத்திருக்கிறது."

ராஜாராம் ரெட்டி அவசரமாகச் சொன்னார். "அங்கிருக்கிற போலீஸ் அதிகாரிகளிடம் அந்த பென் டிரைவை எந்தக் காரணத்தைக்

கொண்டும் திறந்து பார்க்காமல் மிகவும் பாதுகாப்பாக இங்கே அனுப்பி வைக்கச் சொல்லுங்கள். யாரை எல்லாம் நூறு சதவீதம் நம்ப முடியுமோ அவர்களிடம் மட்டுமே அதை இங்கே கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பைத் தர வேண்டும் என்று சொல்லுங்கள்."

மந்திரி உடனடியாக ஜம்முவில் இருக்கிற தலைமை போலீஸ் அதிகாரிக்கு போனில் அப்படியே கட்டளை பிறப்பித்தார்.

பின் ராஜாராம் ரெட்டியிடம் சொன்னார். "அடுத்த விமானத்திலேயே அதை நமக்கு அனுப்பி வைக்கிறார்களாம்."

ராஜாராம் ரெட்டி திருப்தியுடன் தலையசைத்தார். பின் அங்கிருக்கும் தன் ஆட்களுக்குப் போன் செய்து அமானுஷ்யனை அந்த சுற்று வட்டாரங்களில் சல்லடை போட்டு தேடச் சொன்னார். போலீஸ் பட்டாளத்தை விமான நிலையம், ரயில்நிலையம், பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் குவித்து அவனைக் கண்டுபிடிக்கச் சொன்னார். எப்படியும் அவன் டில்லி திரும்பாமல் இருக்க மாட்டான் என்பதில் சந்தேகமில்லை. "அமானுஷ்யனை நாலா பக்கங்களில் இருந்தும் ஆட்கள் நெருங்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு பக்கம் அந்த சர்வதேசக் கொலையாளி, ஒரு பக்கம் போலீஸ், ஒரு பக்கம் சிபிஐ ஆட்கள், இன்னொரு பக்கம் தீவிரவாதிகள். இந்த முறை அமானுஷ்யன் அவர்களிடம் இருந்து தப்ப முடியாது"

********

சலீம் அந்த இடத்திலேயே அமானுஷ்யன் இருப்பதை உணர்ந்தான். அமானுஷ்யன் அந்த அளவுக்கு அவன் உள்ளுணர்வில் ஐக்கியமாகி விட்டிருந்தான். கண்களை மூடினால் போதும் அவன் எந்தப் பக்கம் இருக்கிறான் என்பதை அவனுடைய உள்ளுணர்வு சொல்லி விடும். சலீம் கண்களை மூடினான். அவன் உள்ளுணர்வு பொய்க்கவில்லை. அவனுக்கு எதிர்புறம் எங்கோ ஒரு மூலையில் இருக்கிறான்...உணர உணர ஏதோ ஒரு இழை அறுந்தது. அமானுஷ்யன் அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டான். சலீம் தன் எதிரே இருந்த ஜனக்கூட்டத்தைப் பார்த்தான். அவர்களில் அவனைப் போலவே அமானுஷ்யனைத் தேடிய ஆட்கள் நிறைய இருப்பதை அவன் கவனித்தான். ஆனால் அவர்கள் அந்தக் கூட்டத்தில் அவனைத் தேடிக் கொண்டிருந்தார்களே ஒழிய அவன் அங்கிருந்து நகர்ந்து விட்டிருந்ததை உணரவில்லை. அந்தக் கூட்டத்தில் புகுந்து விரைவாக எதிர்பக்கத்தை அடைய எண்ணிய சலீம் உடனடியாக லாவகமாகவும் வேகமாகவும் இயங்கினான்.

*******

அக்ஷய் எந்தப் பக்கம் போவது என்று தீர்மானிக்காமலேயே வேகமாக அங்கிருந்து சென்றான். அவன் கால்கள் தானாக அவனை ஏதேதோ தெருக்களில் அழைத்துச் சென்றன. கடைசியில் ஊருக்கு ஒதுக்குப் புறமாக ஓரிடத்திற்கு வந்து சேர்ந்தான். அங்கு நெடுஞ்சாலையின் வலது பக்கம் இருந்த புல்வெளியில் ஒரு ஒற்றையடிப் பாதை போக ஆரம்பித்தது. அவன் கால்கள் தானாக அந்த ஒற்றையடிப் பாதையில் நடக்க ஆரம்பித்தன. அவன் தன் பொய்த் தாடியை எடுத்து பக்கத்தில் இருந்த புதரில் தூக்கி எறிந்து விட்டு வேகமாக நடந்தான். ஒரு மைல் தூரம் சென்ற பின் சற்று தொலைவில் ஒரு புத்த விஹாரத்தை அவன் பார்த்தான். சற்று முன் அந்த மசூதி எழுப்பியதைப் போலவே இந்த புத்த விஹாரமும் சில நினைவலைகளை எழுப்பின. அவன் இங்கு நிறைய நாட்கள் இருந்திருக்கிறான்.... ஆனால் அவனுடைய போதாத காலம் எந்த நினைவலைகளும் சங்கிலித் தொடராக மற்ற தேவையான நினைவுகளைக் கொண்டு வரவில்லை...

அவன் அந்த புத்த விஹாரத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அதை நெருங்கிய போது ஒரு வயதான புத்த பிக்கு புத்த விஹாரத்திற்கு முன்னால் இருந்த சிறிய தோட்டத்தில் களைகளைப் பிடுங்கிக் கொண்டிருந்தார். அந்த புத்த பிக்குவின் முதுகுப் புறம்

மட்டுமே அவனுக்குத் தெரிந்தது என்றாலும் அவரை அவன் நன்றாக அறிவான். அவர் அவனுக்குக் குருவாக இருந்திருக்கிறார். அவனுடைய காலடி ஓசையைக் கேட்ட பிறகும் அவர் திரும்பவில்லை. அவர் வேலையை நிறுத்தவுமில்லை. ஆனால் அவன் நெருங்கிய போது சொன்னார். "அக்‌ஷய்"

அவர் அவன் காலடி ஓசையை வைத்தே கண்டுபிடித்தது அவனுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை. அவர் ஒரு அதிசய மனிதர்.

"எங்கிருந்தோ தப்பித்து வந்திருக்கிறாய் போலிருக்கிறது நீ ஓட்டமும் நடையுமாய் வந்த விதம்"

"ஆம் குருவே" சொன்னவன் அவர் காலில் விழுந்து வணங்கினான்.

ஒரு நிமிடம் அவன் பக்கம் திரும்பி கண்களை மூடி ஆசிர்வதித்த அவர் அவன் எழுந்த போது அவன் முகத்தில் இருந்த களைப்பைப் பார்த்து அவன் ஏதோ ஒரு பிரச்னையில் இருக்கிறான் என்று யூகித்தார். அவருடைய சிஷ்யர்களில் இவனளவு யாருமே அவரிடமிருந்து கற்றுக் கொண்டவர்களில்லை. சிறிது நேரமே தூங்கினாலும் ஆழ்ந்த தூக்கம் தூங்கி எழுந்து எப்போதும் புத்துணர்ச்சியுடனும் இருக்கும் அவனுடைய களைப்பு உறக்கக் குறைவால் அல்ல என்று அவர் அறிவார். வேலைகள் செய்வதில்

அமைதியான லயத்துடன் செய்கின்ற அவன் எத்தனை வேலைகள் செய்தாலும் வேலையால் களைத்துப் போகிறவனும் அல்ல என்பதையும் அறிவார்.

அமைதியாக அவனிடம் கேட்டார். "என்ன ஆயிற்று உனக்கு?"

வெளியே இருப்பது ஆபத்து என்பதை உணர்ந்த அக்‌ஷய் அவரை உள்ளே அழைத்துக் கொண்டு போய் அனைத்தையும் சொல்ல ஆரம்பித்தான். தற்போதைய சிக்கல் வரை சொல்லி அவன் முடித்த போது அவர் கையில் ஜபமாலை அமைதியாக சுழன்று கொண்டிருந்தது. அவர் எந்த உணர்ச்சியும் காண்பிக்கவில்லை. எதுவும் சொல்லவுமில்லை.

அக்‌ஷய் சற்று பொறுத்து விட்டு சொன்னான். "குருவே எத்தனையோ உயிர்கள் அபாயத்தில் இருக்கின்றன. இந்த வெடிகுண்டுகள் வெடித்தால் என்ன ஆகும் என்று தெரியவில்லை. வெடிகுண்டுகள் வெடிக்கப் போகின்றது என்பதை ஆதாரமில்லாமல் சொன்னால் இப்போது நம்ப ஆளில்லை. இருக்கின்ற ஒரு ஆதாரமும் கையில் கிடைக்காமல் போய் விட்டது. எனக்கு இந்தப் பிரச்சினைக்குக் காரணமான பழைய நினைவுகள் ஞாபகமும் வர மாட்டேன்கிறது. காலமோ அதிகமில்லை... எத்தனையோ வித்தைகள் தெரிந்த எனக்கு என் கடந்த காலத்தின் ஒரு பகுதியை

நினைவுபடுத்திக் கொள்ளும் வித்தை மட்டும் ஏனோ தெரியவில்லை குருவே" சொல்லும் போது அவன் குரலில் ஒருவித கையாலாகாத வருத்தம் தெரிந்தது.

அந்த புத்தபிக்கு அமைதியாகச் சொன்னார். "அடிபட்டதில் நினைவுகள் அழிந்து போவது ஒன்றும் பெரிய விஷயமில்லை. ஆனால் உன்னைப் போல எல்லாம் கற்றுத் தேர்ந்தவனுக்கு அவற்றை நினைவுபடுத்திக் கொள்ள முடியாமல் போனதற்குக் காரணம் அது மிக முக்கியம் என்கிற நினைவோடு, தெரிந்து கொண்டே ஆக வேண்டும் என்கிற கட்டாயம் சேர்ந்து, பதட்டத்தோடு நீ முயன்றது தான் அக்ஷய். எனவே தவறு உன் அணுகுமுறையில் தான் இருந்திருக்கிறது."

அக்ஷய் அதை ஒத்துக் கொண்டு தலையசைத்தான். அவனை அவர் மிகவும் கனிவுடன் பார்த்தார். தலைக்கனம் என்ற ஒரு முட்டாள்தனத்தை அவனைப் போல் பரிபூரணமாக இழந்த ஒருவனை அவர் சந்தித்திருப்பதாக அவருக்கு நினைவில்லை. அதுவும் இளமையிலேயே குறுகிய காலத்தில் அவன் கற்றுக் கொண்டிருந்த வித்தைகள் எதுவும் சாதாரணமானதல்ல. எல்லாவற்றையும் அறிந்த பிறகும் அவனுக்கிருந்த அடக்கத்தையும், தனது தவறுகளை ஒத்துக் கொள்வதில் அவனுக்குத் தயக்கமில்லாதிருந்ததையும் எல்லா சீடர்களுக்கும் அவர்

உதாரணமாகச் சொல்லத் தயங்கியதில்லை. இப்போதும் அவன் நிலைமையில் அவன் இத்தனை நிதானம் தவறாமல் இருப்பதே பெரிய விஷயம் என்றாலும் கூட அவர் தவறைச் சுட்டிக் காட்டிய போது என் நிலைமை அப்படி என்கிற மாதிரியான விவாதங்களை அவன் செய்யாததை அவர் கவனிக்கத் தவறவில்லை.

"வெடிகுண்டுகள் வெடிப்பதும் பல மனிதர்கள் சாவதும் உன் கையில் இல்லை அக்ஷய். இதை நீ தீர்மானிக்கப் போவதுமில்லை. ஒரு செயல் நடந்தே ஆக வேண்டும் என்றால் அது நடந்தே தீரும். உன் மூலம் அது தவிர்க்கப்பட வேண்டும் என்று இருந்தால் அதுவும் அப்படியே தவிர்க்கப்படும். இதில் நீ தீர்மானிக்க ஒன்றும் இல்லை. நீ கருவி மாத்திரம். கருவிகள் காரியங்களைத் தீர்மானிப்பதில்லை. காலம் அதிகமில்லை என்று சொன்னாய். ஒரு யுக காலமே ஒருவனிடம் இருந்தாலும் நடக்க முடியாததை நடத்த முடியாது. நடக்க வேண்டும் என்று என்று இருந்தால் ஒரு வினாடி காலம் இருந்தாலும் அது தாராளமாகப் போதும். எனவே குழப்பிக் கொள்ளாமல் போய் அந்த மகா புத்தர் முன்னால் சென்று தியானம் செய். எதையும் எதிர்பார்க்காதே. எதையும் மறுக்கவும் செய்யாதே. பிரார்த்தனை செய்து தியானத்தை ஆரம்பி. நடக்க வேண்டியதை அவர் நடத்துவார்...."

அவர் வார்த்தைகள் அக்ஷயின் மனதில் விவரிக்க முடியாத ஒரு

பேரமைதியை ஏற்படுத்தின. மறுபடி அவரை அவன் வணங்கினான்.

மகாபுத்தர் சிலையின் முன் அமர்ந்து பிரார்த்தித்து விட்டு தியானத்தில் ஆழ்ந்தான். அடுத்த சில நிமிடங்களில் அவன் அனைத்தையும் மறந்தான். வெடிக்கப் போகும் வெடிகுண்டுகளை மறந்தான். அவன் நேசிக்கின்ற மனிதர்களை மறந்தான். அவனுடைய எதிரிகளை மறந்தான். பழைய நினைவுகள் வர வேண்டும் என்கிற வேண்டுதலையும் மறந்தான். எதையும் எதிர்பார்க்காத, எதையும் மறுக்காத மனநிலையுடன் தியானத்தில் லயித்துப் போனான்.

அவனையே பார்த்துக் கொண்டு அந்த வயதான பிக்கு நின்றிருந்தார். அவர் கையில் ஜபமாலை சுற்றிக் கொண்டிருந்தது.

அதே நேரம் சலீம் அக்‌ஷய் வந்திருந்த வழியே வந்திருந்து அந்த நெடுஞ்சாலையில் சிந்தித்தபடி நின்றிருந்தான். வருகின்ற வழியில் வழிப்போக்கர்களிடம் தாடி வைத்திருந்த அக்‌ஷயின் அடையாளங்களைச் சொல்லி அவனைப் பார்த்திருக்கிறீர்களா என்று கேட்டு ஆமென்று சொன்னவர்கள் காட்டிய வழியில் பயணித்து இது வரை வந்து விட்டான். ஆள் நடமாட்டமே இல்லாத

இந்தப் பகுதியில் இனி யாரைக் கேட்பது என்று சுற்றும் முற்றும் பார்த்தான்.

109

அக்‌ஷயைப் பொறுத்த வரை காலம் நின்று போனது போலிருந்தது. காற்றில் மிதப்பது போன்ற உணர்வில் அவன் எத்தனை நேரம் இருந்தானோ அவனுக்குத் தெரியாது. தலையில் ஏதோ ஒரு இறுக்கம் லேசானது போல உணர்ந்தான். அவன் முயற்சி இல்லாமலேயே மறந்து போயிருந்த பழைய நினைவுகள் ஒன்றன் பின் ஒன்றாக நினைவுக்கு வர ஆரம்பித்தன....

ஒரு நாள் அவனிடம் பேச வந்த ஆச்சார்யா முகத்தில் ஆழ்ந்த கவலை இருந்தது.

"என்ன ஆயிற்று சார்?" அக்‌ஷய் கேட்டான்.

உடனடியாக அவர் பதில் சொல்லவில்லை. யோசனையுடன் சொன்னார். "எனக்கு ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. அதை நம்புவதா வேண்டாமா என்று தெரியவில்லை. நம்பவும் முடியவில்லை. நம்பாமல் ஒதுக்கி விடவும் முடியவில்லை."

அக்ஷய் அவரிடம் மேற்கொண்டு எதுவும் கேட்காமல் அவரை சிந்திக்க விட்டான். குழப்பத்தில் இருக்கிறவரிடம் கேள்வி கேட்டால் தெளிவான பதில் வராது. அவரே சிந்தித்து ஒரு முடிவுக்கு வரட்டும் என்று அமைதியாக இருந்தான்.

அவராகவே சிறிது நேரம் கழித்து சொன்னார். "காஷ்மீர் தீவிரவாதிகள் தலிபான்கள் உதவியுடன் நம் நாட்டில் நாச வேலைகள் செய்ய புதிய திட்டம் தீட்டிக் கொண்டிருப்பதாக எனக்கு தகவல் வந்திருக்கிறது....".

சுதந்திரம் கிடைத்த நாளில் இருந்தே காஷ்மீரம் இந்தியாவில் ஒரு தலைவலியாகவும், கேள்விக்குறியாகவும் இருந்து வருகிறது. சமீப காலமாக காஷ்மீர் பெயரைச் சொல்லிக் கொண்டு தீவிரவாதிகள் தங்கள் வெறியாட்டங்களை நடத்துவது அதிகமாக இருக்கிறது. சமீபத்தில் தான் மும்பையில் ஒரு வன்முறை நடந்து முடிந்திருக்கிறது. மறுபடியுமா?

அவன் வாய் விட்டு தன் எண்ணங்களைச் சொல்லா விட்டாலும் அதைப் படித்தது போல அவர் சொன்னார். "இத்தனை காலம் நடந்தது போல இல்லை இது. அந்த தீவிரவாதிகளுடன் நம் நாட்டு முக்கிய அரசியல்வாதி யாரோ கை கோர்த்து இருக்கிறார், அதனால்

அழிவு அளவில்லாமல் இருக்கும் என்ற தகவல் கிடைத்திருக்கிறது."

"யார் எதிர்க்கட்சி அரசியல்வாதியா?"

"இல்லை ஆளுங்கட்சி அரசியல்வாதியாம்"

"ஆளும் கட்சி அரசியல்வாதியே ஏன் நாட்டில் கலவரத்தை ஏற்படுத்தப் போகிறார்?"

"அது தான் தெரியவில்லை. ஆனால் எனக்குத் தகவல் சொன்ன ஆள் நம்பகமான ஆள் தான்."

"யார் அந்த அரசியல்வாதி என்பதையும் சொன்னானா?"

"அது அவனுக்குத் தெரியவில்லை. தீவிரவாதிகளின் தலைவர்கள் மட்டுமே தெரிந்து வைத்திருக்கக் கூடிய ரகசியம் அது என்று சொல்கிறான். இதன் மூலம் இந்திய நாட்டின் தலைவிதியையே மாற்றிக் காட்டுவோம் என்று சொல்கிறார்களாம்."

"சரி உளவுத் துறை என்ன சொல்கிறது?"

ஆச்சார்யா பெருமூச்சு விட்டார். "அவர்கள் காதிற்கு எதுவும்

எட்டினது போல் தெரியவில்லை. அப்படி எட்டினாலும் ஆளும் கட்சி சம்பந்தப்பட்டால் அவர்கள் கண்டும் காணாமலும் கூட இருந்து விடலாம்".

ஆச்சார்யா அந்த செய்தியால் நிறையவே பாதிக்கப்பட்டிருந்தார் என்பது தொடர்ந்த நாட்களிலும் அவனுக்குத் தெரிந்தது. ஏதோ யோசனையில் எப்போதும் இருந்தார். ஏதாவது செய்து நடப்பதைத் தடுக்க வேண்டும் என்கிற எண்ணம் அவரிடம் மேலோங்கி நின்றது. கடைசியில் அப்துல் அஜீஸ் என்ற துருப்புச் சீட்டோடு அவர் ஒரு நாள் வந்தார்.

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த அந்த தலிபான் தீவிரவாதி பற்றிய ஒரு ஃபைலை அவனிடம் தந்து படித்துப் பார்க்கச் சொன்னார். அவனும் படித்துப் பார்த்தான்.

கடைசியில் அவர் சொன்னார். "... அடிக்கடி மாதக் கணக்கில் காணாமல் போய் மறுபடி களத்திற்கு வந்து சேரும் அப்துல் அஜீஸ் யாரிடமும் மிகவும் நெருக்கமாகப் பழகுகிறவன் அல்ல. அவன் எதிரிகள் அவன் பிணத்தைக் கூட வெளியே விட்டு வைக்கவில்லை. அதனால் அவன் இறந்து விட்டான் என்பதை முழுவதுமாக தலிபான்கள் நம்பவில்லை. என்றாவது ஒரு நாள் தங்கள் முன் வந்து நிற்பான் என்று தான் இருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கைப்படி

நடத்திக் காட்டினால் என்ன?"

அக்ஷயிற்கு உருதுவில் புலமை இருப்பது மிகவும் சாதகமான அம்சம் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். அக்ஷய் அப்துல் அஜீஸாக அவதாரம் எடுத்து அங்கு சென்று ரகசியங்களைத் தெரிந்து கொண்டு வர வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார்.

அக்ஷய் சொன்னான். "அப்துல் அஜீஸிற்கு மிகவும் நெருங்கிய ஆட்கள், அவன் நண்பர்கள், உறவினர்கள் எல்லாம் சுலபமாக நான் அப்துல் அஜீஸ் அல்ல என்று கண்டு பிடித்து விடுவார்கள்...."

"அப்துல் அஜீஸிற்குக் குடும்பம் என்று ஒன்று கிடையாது. மிகவும் நெருக்கமானவர்கள் எல்லாம் பெண்கள் தான். அவர்களிடமும் ஒவ்வொரு தடவை ஒவ்வொருத்தியுடன் அவன் இருப்பான். அதுவும் ஒவ்வொரு தடவை ஒவ்வொரு வட்டாரத்தில் தான் தேர்ந்தெடுப்பான். அவர்கள் தலிபான் தலைமை வட்டத்தில் நுழைய முடியாதவர்கள். அப்துல் அஜீஸ் அங்கே போனால் தனியாகத் தான் போக முடியும். அந்த தலைமை வட்டம் மூன்று பேரைக் கொண்டது. அவர்களுடன் அப்துல் அஜீஸ் ஓரிரு வேலைகளில் சேர்ந்திருக்கிறான். அவ்வளவு தான். அவர்களுடனும் அவன் நெருக்கமாகப் பழகியவன் அல்ல. அவர்கள் மூன்று பேரைப் பற்றி உனக்கு எல்லா தகவலும் நான் தருகிறேன். தோற்றத்தில் சின்னச்

சின்ன வித்தியாசங்கள் அவர்களுக்குத் தென்பட்டால் அவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள். ஏனென்றால் அவன் தோற்றத்தையும் அடிக்கடி வித்தியாசமாக மாற்றிக் கொள்கிற வழக்கம் உடையவன். ஒரு முறை தலை முடியை நீளமாக வைத்துக் கொள்வான். அடுத்த முறை கிட்டத்தட்ட மொட்டை போல் முடியை வெட்டிக் கொள்வான். ஒரு முறை ஒருவிதமான குல்லாய் போட்டுக் கொண்டு திரிந்தால் இன்னொரு முறை நேர் எதிர்மாறான ஒரு குல்லாயுடன் இருப்பான். ஒருமுறை குண்டாக மாறுவான். திடீரென்று உடல் எடையை ஒரேயடியாகக் குறைத்துக் கொள்வான். இப்படி எல்லா விதங்களிலும் மாறிக் கொண்டே இருப்பான்....."

"குரல்?"

"அவனுடைய குரல் பிரத்தியேகமானதல்ல. ஒரு சாதாரண குரல். மிக மிக நெருக்கமானவர்கள் இல்லாததால் குரல் வித்தியாசத்தை பெரிதாக யாரும் கண்டுபிடித்து விட மாட்டார்கள். எதற்கும் அவன் வீடியோவையும் காண்பிக்கிறேன். கவனி. ஓரளவு நீ அப்படியே பேசலாம்...."

அப்துல் அஜீஸ் இருந்த மூன்று வீடியோ க்ளிப்கள் அவனுக்குப் போட்டுக் காட்டினார். அப்துல் அஜீஸ் பற்றி என்னவெல்லாம் அக்ஷய் தெரிந்து கொள்ள வேண்டுமோ அதையெல்லாம்

ஆச்சார்யா சொல்லிக் கொடுத்தார். அவனுடைய நடை உடை பாவனைகள் எல்லாம் நன்றாகவே மனதில் பதிந்த பின்னர் அக்‌ஷய் சம்மதித்தான். அப்துல் அஜீஸைப் போலவே மாறியும் காட்டிய போது ஆச்சார்யா அசந்தே போனார். சின்னச் சின்ன அசைவுகளில் கூட அப்துல் அஜீஸாக அக்‌ஷய் மாறி இருந்தான்.

அக்‌ஷயிற்கு மரணம் பற்றிய பயம் இருக்கவில்லை. பிடிபட்டு இறந்தாலும் அவன் கவலை இல்லாமல் இறப்பான். மும்பையில் தாய் தந்தை இறந்த பின் அவனுக்கு உறவு என்று எதுவும் இல்லை என்று நினைத்த காலம் அது. எனவே அவன் செல்லப் போகும் பயணம் மரணத்தை நோக்கிய பயணமாகவே இருந்தாலும் அவன் அதைப் பற்றி பெரியதாக நினைக்கவில்லை. நாட்டில் எத்தனையோ பேரைக் காப்பாற்ற முடிந்தால் பிறந்ததற்கு அதை விடப் பெரிய அர்த்தம் என்ன இருக்க முடியும் என்று நினைத்தான்.

ஒரு நாள் ஆப்கானிஸ்தான் மலைப்பகுதியில் சுற்றிக் கொண்டிருந்த அக்‌ஷயைப் பார்த்த ஒரு தலிபான் வீரன் துப்பாக்கியை அவன் முன் நீட்டியபடி கேட்டான். "யார் நீ"

அக்‌ஷய் உருதுவில் கவிதையாகச் சொன்னான்.

"என்னை யார் என்று கேட்டவனே

உன்னை யார் என்று உணர்ந்திருக்கிறாயா?

உன்னை நீ உணர்ந்திருந்தால்

என்னை யார் எனக் கேட்டிருப்பாயா?"

திருதிருவென விழித்த அந்த தலிபான் வீரனுக்கு உடனடியாகக் கோபம் வந்தது. துப்பாக்கியோடு அக்‌ஷயை நெருங்கியவன் கண்ணிமைக்கும் நேரத்தில் நெடுந்தூரம் தூக்கி வீசப்பட்டான். மலைத்துப் போய் அக்‌ஷயை உற்றுப் பார்த்தவன் கஷ்டப்பட்டு எழுந்தபடி முணுமுணுத்தான். "அப்துல் அஜீஸ்"

சிறிது நேரத்தில் அப்துல் அஜீஸ் வந்திருக்கிறான் என்ற செய்தி தலிபான் கூட்டத்திற்குள் பரவ ஆரம்பித்தது. உருதுக் கவிதையும் யாரையும் செயலிழக்க வைக்கும் சக்தியும் சேர்ந்து வேறு யாரிடம் இருக்க முடியும்?

அக்‌ஷயாக யாரையும் சந்திக்கச் செல்லவில்லை. சில மணி நேரங்களில் அவர்களாக அவனைத் தேடி வந்தார்கள். வந்தவர்கள் நான்கு பேர் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் ஆச்சார்யா குறிப்பிட்ட தலிபான் தலைமை வட்டத்தில் மூவரில் ஒருவன் என்பதை அக்‌ஷய் கண்டு பிடித்தான்.

அவன் கூர்மையாக அக்‌ஷயைப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

"நாங்கள் வெளியே எல்லாரிடமும் நீ உயிரோடு இருக்கிறாய் என்று சொன்னாலும் நீ செத்து விட்டிருப்பாய் என்று எங்களுக்குள்ளே பயந்து தான் போனோம். அந்த தாக்குதலில் இருந்து எப்படி தப்பித்தாய்"

அக்‌ஷய் உருதுவில் அழகாகச் சொன்னான். "மரணத்தை எதிரி நிச்சயிப்பதில்லை நண்பனே. அல்லா தான் நிச்சயிக்கிறார். நான் செய்ய வேண்டியது நிறைய இருப்பதாக அல்லா நினைத்திருக்கிறார் போல் இருக்கிறது. எப்படியோ உயிர் பிழைத்தேன்..."

"இத்தனை நாட்கள் எங்கிருந்தாய்?" சந்தேகத்தோடு அவன் கேட்டான்.

அக்‌ஷய் வாய் விட்டு சிரித்தான். "எந்தப் பெண்ணோடு நான் இத்தனை நாட்கள் இருந்தேன் என்று தெரிந்து கொள்ள ஏன் ஆசைப்படுகிறாய் நண்பனே".

தலிபான் தலைவன் உரிமையுடன் கோபித்துக் கொண்டான். "கண்ட கண்ட பெண்கள் சகவாசம் இல்லாமலிருந்தால் இன்னேரம் நீ எத்தனையோ சாதித்து இருக்கலாம். ஏன் தான் நீ இப்படி இருக்கிறாயோ?"

அக்ஷய் சிரித்துக் கொண்டே சொன்னான். "எத்தனை தான் துடைத்தாலும் வரிக்குதிரை தன் வரிகளை இழப்பதில்லை நண்பனே".

அந்த தலிபான் தலைவன் சிரித்துக் கொண்டே சொன்னான். "உண்மை தான்".

அவனுடன் வந்த மூன்று வீரர்கள் தங்கள் துப்பாக்கிகளோடு தயாராக தள்ளி நின்று இருந்தார்கள். தலிபான் தலைவன் அவர்களிடம் சொன்னான். "அப்துல் அஜீஸ் தான் இவன்".

அவர்கள் இறுக்கம் தளர்ந்து துப்பாக்கிகளை இறக்கினார்கள்.

# 110

அந்த தலிபான் தலைவன் அக்ஷயைத் தங்கள் இடத்திற்குக் கூட்டிக் கொண்டு போனான். மற்ற இரண்டு தலிபான் தலைவர்களும் முதலாமவனைப் போல் அல்லாமல் குறைவாகப் பேசுபவர்களாகவே இருந்தார்கள். அவர்களில் ஒருவன் அக்ஷயை மிகவும் கூர்ந்து கவனித்தபடியே இருந்தான். அக்ஷய் அவனிடம் சிறிதும் தயக்கமில்லாமல் புன்னகையுடன் கேட்டான். "ஏன்

அப்படிப் பார்க்கிறீர்கள்?"

"இந்த தடவை உன்னிடம் நிறையவே மாற்றம் தெரிகிறது" சொன்னவன் அவனை இன்னும் கூர்மையாகப் பார்த்தான்.

ஆனால் அக்ஷய் முகத்தில் இருந்த புன்னகையில் இம்மியும் குறையவில்லை. "மாற்றம் ஒன்றே மாறாதது அல்லவா?"

அக்ஷயைக் கூட்டி வந்த முதலாவது தலைவன் சிரித்துக் கொண்டே சொன்னான். "பேச்சில் மட்டும் உன்னை யாரும் ஜெயித்து விட முடியாது"

"இனி என்ன செய்வதாய் உத்தேசம்?" இன்னொரு தலைவன் கேட்டான்.

"இப்போதைக்கு ஒரு திட்டமும் இல்லை. இனி மேல் பார்க்க வேண்டும்"

அக்ஷய் அங்கு இரண்டு நாட்கள் தங்கினான். பழைய கட்டிடங்கள் மட்டுமே இருந்த பகுதியில் தங்கும் வசதி பெரிதாக இல்லை என்றாலும் அனைவரும் அதில் எந்த வருத்தமும் இல்லாமல் வாழ்ந்து வந்ததை ஆச்சரியத்துடன் அக்ஷய் கவனித்தான். அடிக்கடி இடம்

மாறக்கூடிய அவர்கள் இதை விட மோசமான இடங்களில் வாழ்ந்திருக்கவும் கூடும் என்பதிலும் அவனுக்கு சந்தேகமில்லை. அக்‌ஷயை அந்த இரண்டு நாட்களில் வேறுபல தலிபான் வீரர்களும் வந்து பார்த்தார்கள். அப்துல் அஜீஸ் என்ற மனிதனிடம் அவர்களுக்கு இருந்த ஒரு "ஹீரோ வர்ஷிப்" அவனிடம் அவர்களை வரவழைத்து இருக்கிறது என்பதை அக்‌ஷய் புரிந்து கொண்டான்.

அக்‌ஷய் அவர்களிடம் பொதுப்படையாகப் பேசியே சமாளித்தான். ஆனால் சொல்லி வைத்தது போல் அத்தனை பேரும் ஒரே கேள்வியை அவனிடம் கேட்டார்கள். "கடைசியாக எதிரிகள் தாக்குதலில் இருந்து எப்படித் தப்பித்தீர்கள்?"

அவன் என்ன பதில் சொல்கிறான் என்பதை அறிய அந்த தலிபான் தலைவர்கள் கூட ஆர்வம் காட்டியது தெரிந்தது. ஆனால் அக்‌ஷய் அதற்கு பதில் சொல்ல விருப்பமில்லை என்பதை மறைக்கவில்லை. "சில ரகசியங்கள் வெளியே தெரியாமல் இருக்கும் வரை நல்லது. அதுவே என் எதிர்காலத்திற்கும் பாதுகாப்பு" என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

"சொன்னால் நாங்களும் அதைப் பயன்படுத்தலாமல்லவா?"

அவர்களிடம் அக்‌ஷய் சொன்னான். "எப்போது தாக்குதல் வரும்

என்று தெரியாதது தான் நம் வாழ்க்கை. வரும் போது இருக்கும் சூழ்நிலைகளை நாம் முன்கூட்டியே யூகிக்க முடியாது. வரும் போது நமக்குக் கிடைக்கும் துரும்பு கூட நமக்கு ஆயுதம் தான். கண நேரத்தில் என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானித்து அதைச் செய்து தப்பிக்க வேண்டும். தப்பித்த பிறகு அதைப் பற்றி விவரிக்கிறது அனாவசியமான வேலை..."

அவன் பதில் எல்லோரையும் கவர்ந்தது. அவனை மிகுந்த மரியாதையோடு அந்த தலிபான் தலைவர்களில் இருவர் பார்த்தனர். சந்தேகக் கண்ணோடு ஆரம்பத்தில் பார்த்தவன் மட்டும் அமைதியாக இருந்தான். அங்கேயே இரண்டு நாட்கள் அவர்களுடன் தங்கியும் அவர்களிடமிருந்து அவன் தேடி வந்த தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. அவனாக அதைப் பேசி அவர்களுடைய சந்தேகத்தைக் கிளப்ப விரும்பவில்லை.

இரண்டு நாட்கள் கழித்து அவர்களில் முக்கியமானவர்கள் எல்லாம் ஒரு ரகசிய இடத்திற்குப் பயணித்தார்கள். ஜீப்பில் இரண்டு மணி நேரம் பிரயாணம் செய்து ஓரிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். "எங்கே போகிறோம்?" என்று அவன் கேட்டதற்கு "முக்கிய கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்திருக்கிறோம்" என்று மட்டும் சொன்னார்கள். அக்‌ஷயாக அதற்கு மேல் விசாரிக்கவில்லை. அந்தக் கூட்டத்திற்கு பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா நாடுகளில் இருந்தும் ஆட்கள்

வந்திருந்தார்கள். வந்திருந்தவர்களில் பலர் அக்ஷயைப் பார்த்தவுடன் ஆச்சரியப்பட்டார்கள். சிலர் சந்தோஷப்பட்டார்கள். அப்துல் அஜீஸை நேரில் பார்க்க முடிந்த திருப்தி அவர்களிடம் தெரிந்தது.

ரகசிய இடத்தில் நடந்த அந்தக் கூட்டத்தில் முதலில் அமெரிக்காவிற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. அமெரிக்காவின் தலைக்கனத்தைக் குறைக்க ஏதாவது விரைவில் செய்தாக வேண்டும், இல்லா விட்டால் புனிதப் போராளிகளின் தைரியம் குறைந்து விடக்கூடும் என்று சிலர் தெரிவித்தார்கள். சிலர் எந்த சக்தி புனிதப் போராளிகளின் தைரியத்தையும், உறுதியையும் குறைத்து விட முடியாது என்று சொன்னார்கள். அதைத் தொடர்ந்து சில நிமிடங்கள் சர்ச்சைகள் தொடர்ந்தன.

அமெரிக்காவிற்கு அடுத்ததாக இந்தியாவிற்கு கண்டனம் தெரிவித்தார்கள். காஷ்மீர் பிரச்னை பற்றி பேசினார்கள். சிலர் பாகிஸ்தான் அரசின் இரட்டை வேடத்தை சாடினார்கள். இப்படியே மற்ற நாடுகள் பற்றியும் பேச்சு வந்தது. கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் பேசிய பேச்சுகளில் அவரவர் கருத்துகளை ஆணித்தரமாகச் சொன்னார்கள். அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி பல கருத்துகள் பரிமாறப்பட்டன.

கடைசியில் அக்ஷயை முதலில் சந்தித்த தலிபான் தலைவன் பேசினான். பேச்சு மற்றவர்களின் கருத்துக்களுக்கு பதிலாக இருந்தது. முடிவில் சொன்னான். "... உங்கள் கருத்துகளை எப்படி செயலாக்குவது என்பது பற்றி நாங்கள் ஆலோசித்து முடிவெடுத்து பின்னர் தெரிவிக்கிறோம். இந்தக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினர் ஒருவர் வந்துள்ளார். யார் என்று உங்களுக்கே தெரியும். அவர் நம் இயக்கத்தில் இருந்தாலும் தனிப்பட்ட முறையில் சுதந்திரமாக இயங்குபவர். எமனையே ஏமாற்றி விட்டு வந்தவர்......" நிறைய அடைமொழிகளுடன் அப்துல் அஜீஸைப் புகழ்ந்து விட்டு அப்துல் அஜீஸ் பேசுவார் என்று கடைசியில் அறிவித்தான்.

அக்ஷய் பேச எழுந்தான். பலத்த கைதட்டல் கேட்டது. அக்ஷய் தூய்மையான உருதுவில் பேச ஆரம்பித்தான். அவர்கள் திட்டிய நாடுகளை எல்லாம் அவனும் திட்டினான். அவர்கள் திட்டிய தலைவர்களை அழித்து விட வேண்டும் என்று அவனும் வீர வசனம் பேசினான். கடைசியில் காஷ்மீர் பிரச்சினையைப் பற்றி தீவிரமாகப் பேசி காஷ்மீர் சுதந்திரம் பெறுவது முக்கியம் என்று விளக்கினான். இடையிடையே கவிதைகள் இழையோட அவன் பேசிய பேச்சு இடையிடையே பெரும் கைதட்டல்கள் பெற்றன.

அந்த தலிபான் தலைவன் அன்றிரவு அவனைத் தனியாக அழைத்துச் சொன்னான். "உன்னைப் போன்ற பேச்சாளர்கள் நான்கு பேர் நம்

இயக்கத்தில் இருந்தால் போதும் நாம் உலகத்தில் அசைக்க முடியாத சக்தியாகி விடுவோம். புதிய இளைஞர்களை நம் இயக்கத்தின் தீவிர உறுப்பினர்களாக மாற்ற உன்னைப் போன்ற பேச்சாளர்கள் தான் தேவை...."

அக்‌ஷய் சொன்னான். "எனக்கு பேச்சை விட செயல் தான் நரம்புகளை முறுக்கேற்றுகிறது. மூளைக்கு முழு வேலை கொடுக்கிறது. அதனால் அது மாதிரி வேலை ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்"

அவனிடம் உடனடியாக எதையும் சொல்லாமல் சிறிது நேரம் அவனையே பார்த்து விட்டு தலிபான் தலைவன் சொன்னான். "நீ இந்த அளவு காஷ்மீர் பிரச்சினையில் ஆர்வம் காட்டுவதால் ஒரு இரகசியம் சொல்கிறேன். இன்னும் சீக்கிரமாகவே காஷ்மீர் பிரச்சினை ஒரு முடிவுக்கு வந்து விடும்"

அக்‌ஷய் ஏளனமாகச் சொன்னான். "கவிஞன் நானாக இருந்தாலும் என்னை விட உனக்கு கற்பனை அதிகமாக இருக்கிறது நண்பனே..."

தலிபான் தலைவன் சிரித்துக் கொண்டே சொன்னான். "உண்மையைத் தான் சொல்கிறேன்."

"எப்படி காஷ்மீர் பிரச்சினை தீரும். இந்தியாவே மனம் மாறி நமக்கு காஷ்மீரத்தைத் தந்து விடுமா?"

"அப்படித் தருவதற்கான சூழ்நிலைகள் இனி உருவாக ஆரம்பிக்கும்"

"கனவு காண எல்லோருக்கும் உரிமை உண்டு" அக்ஷய் சொல்லி விட்டுச் சிரித்தான்.

தான் சொல்வதை இவன் நம்ப மாட்டேன்கிறானே என்று தலிபான் தலைவனுக்கு லேசாகக் கோபம் வந்தது போலிருந்தது. லேசாக முகம் மாறியது. "இந்தியாவின் அடுத்த பிரதமர் நமக்கு உறுதியளித்து விட்டார்"

இதென்ன புதிய கதை என்பதைப் போல அக்ஷய் அவனைப் பார்த்தான்.

"வீரேந்திரநாத் தெரியுமா உனக்கு?" தலிபான் தலைவன் கேட்டான்.

"இந்தியாவின் உள்துறை மந்திரி"

"அந்த ஆள் தான் அடுத்த பிரதமர் ஆகிறார். அவர் அப்படி ஆக நாம்

உதவப் போகிறோம். பதிலுக்கு அவரும் நமக்கு உதவப் போகிறார்....."

அக்ஷய் தன் அதிர்ச்சியை சிறிதும் வெளிக்காட்டாமல் சொன்னான். "நண்பனே. யாரை வேண்டுமானாலும் நம்பு. ஆனால் அரசியல்வாதியை மட்டும் நம்பாதே."

"இந்த ஆளைக் கண்டிப்பாக நம்பலாம். இந்த ஆள் பிரதமராக பெற்ற தாயை விலைக்குக் கொடுப்பான்."

அக்ஷய் கேள்விக்குறியோடு தலிபான் தலைவனைப் பார்க்க தலிபான் தலைவன் விளக்கமாய் சொல்ல ஆரம்பித்தான்.....

*****************

உள்துறை மந்திரி வீரேந்திரநாத் அந்த பென் டிரைவிற்காகப் பொறுமை இல்லாமல் காத்திருந்தார். வர வர அவருக்கு பொறுமையாக இருப்பது பெரும் கஷ்டமாக இருக்கிறது. அவருடைய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய காலம் மிக அருகில் இருக்கிறது. அது மட்டும் நடந்து விட்டால் இந்த நாட்டின் பிரதமர் நாற்காலியில் அவர் கண்டிப்பாக அமர்ந்து விடுவார். அதன் பிறகு அவர் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை.

எல்லாம் கச்சிதமாக நடக்கப் போகிறது என்று போட்ட அப்பழுக்கற்ற திட்டத்தில் அமானுஷ்யன் நுழையாமல் இருந்திருந்தால் எல்லாமே கச்சிதமாக நடந்து முடிந்திருக்கும். அவன் நினைவு வந்தவுடன் "எல்லாம் விதி" என்று சொல்லி அவர் பெருமூச்சு விட்டார்.

அதே விதி தான் அரசியலில் நுழைந்த சமயத்தில் அவருக்கு நிறையவே சாதகமாக இருந்தது. ஒவ்வொரு படியாக மின்னல் வேகத்தில் அவரை ஏற்றியதும் அதே விதி தான். இனிமையான பேச்சு, யாரையும் மரியாதையாக நடத்தும் விதம், அரசியலில் கவனமாகக் காய்களை நகர்த்தும் விதம், யாரையும் தனக்கு ஏற்ற மாதிரி உபயோகப்படுத்திக் கொள்ள தயங்காத மனம், மனசாட்சியை என்றோ இழந்திருந்த நிலை- எல்லாமாக விதியுடன் சேர்ந்து அவரை மத்திய மந்திரி பதவி வரை அழைத்து வந்திருந்தது. கடந்த தேர்தலின் முடிவில் பிரதமராகக் கூட அவர் ஆகியிருப்பார். ஆனால் விதி அடுத்த மனிதருக்கு சாதகமாக செயல்பட ஆரம்பித்தது.

கட்சித் தலைமை பிரதமர் பதவிக்கு அவர் பெயரையும் இன்னொருவர் பெயரையும் பரிசீலித்த போது தலைமைக் குழுவில் பலரும் இன்னொருவரையே சிபாரிசு செய்தனர். வீரேந்திரநாத்திற்கு எதிராக ஒரு தலைவர் வெளிப்படையாகச் சொன்னார். "இந்த ஆள்

பேராசை பிடித்தவர். பேச்சு கண்ணியமாய் இருக்கும். ஆனால் செயல் எதிர்மாறாக இருக்கும். இந்த ஆளைக் கட்டுப்படுத்துவது கஷ்டம். பதவியைக் கொடுத்து விட்டால் கண்டிப்பாக நமக்கு அடங்க மாட்டார். நமக்கு இப்போது வேண்டியது நாம் சொன்னபடி கேட்கக் கூடிய, அதே நேரம் மக்களிடம் நல்ல பெயர் வைத்திருக்கக் கூடிய ஆள். அதற்கு வீரேந்திரநாத் சரிவர மாட்டார்"

அதைப் பலரும் அங்கீகரிக்க பிரதமர் பதவி கையை விட்டுப் போனது. ஆனால் ஒரேயடியாக ஒதுக்கி விட முடியாத வீரேந்திரநாத்திற்கு உள்துறை மந்திரி பதவி கிடைத்தது. ஏமாற்றமாக இருந்தாலும் அவர் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் பிரதமர் பதவிக்கு வந்தவருக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு சரிய ஆரம்பித்த போது, எந்த முடிவையும் உறுதியாக எடுக்கத் தெரியாதவர், நிர்வாகத் திறமை போதாதவர் என்றெல்லாம் நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து கருத்துகள் வர ஆரம்பித்த போது வீரேந்திரநாத்திடம் பிரதமர் பதவி ஆசை மீண்டும் வலுப்பெற ஆரம்பித்தது. கட்சித் தலைமையிடம் அது பற்றிப் பேசிப் பார்த்தார். அவர்களிற்கும் பிரதமர் மீது இருந்த பழைய நம்பிக்கை போக ஆரம்பித்திருந்தது. ஆனாலும் உடனடியாக அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் "பொறுங்கள் பார்ப்போம்" என்று சொல்லும் நிலைக்கு வந்திருந்தார்கள். பிரதமர் பதவி இப்போது ஆட்டம் கண்டு விட்டது

என்று உணர்ந்ததும் ஏதாவது செய்து அந்த ஆளை அந்தப் பதவியில் இருந்து தள்ளிவிட்டு அந்த பதவியில் அமர ஆசை அவருள் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. அப்படி என்ன செய்வது என்று அவர் அலைபாய்ந்து கொண்டு இருந்த சமயத்தில் தான் தலிபான்கள் தொடர்பு கிடைத்தது. அவருக்கு ஒரு வழி பிறந்தது.

**********

அமானுஷ்யனைத் தேடி வந்த சலீம் அந்த நெடுஞ்சாலையின் வலது பக்கம் இருந்த ஒற்றையடிப்பாதையில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பார்த்தான். பாதையில் மரங்கள் தெரிந்ததே தவிர வேறு எதுவும் தெரியவில்லை. அமானுஷ்யன் இந்த வழியாகப் போயிருப்பானோ? சிந்தனையுடன் மறுபடி நெடுஞ்சாலையைப் பார்த்தான். நெடுஞ்சாலை நீண்டதே தவிர வேறு எந்த பாதைகளும் சுற்றும் முற்றும் இல்லை. மறுபடி அந்த ஒற்றையடிப் பாதையை ஆழ்ந்த யோசனையுடன் பார்த்த போது தான் சற்று தள்ளி இருந்த புதரில் ஏதோ ஒட்டிக் கொண்டிருந்து காற்றில் அசைந்து கொண்டிருந்தது தென்பட்டது. அருகில் சென்று பார்த்தான். அது அமானுஷ்யன் வைத்துக் கொண்டிருந்த ஒட்டுத்தாடி!

வீரேந்திரநாத்தின் பிரதமர் பதவி வெறியையும் அதற்காக அவர் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருந்ததையும் அக்‌ஷயிடம் சொன்ன தலிபான் தலைவன் தொடர்ந்து சொன்னான். "…. அதைப் பயன்படுத்திக் கொள்ள நாங்கள் தீர்மானித்தோம். முதலில் அவருக்கு நெருக்கமான சில அதிகாரிகள் மூலம் அவரைத் தொடர்பு கொண்டோம். பேசினோம். இந்தப் பிரதமர் கையாளாகாதவர் என்ற எண்ணம் மக்கள் மனதில் இன்னும் வலுப்படுகிற மாதிரி ஏதாவது செய்யுங்கள், உங்களுக்கு நானும் உதவுகிறேன் என்றார்…."

தலிபான் தலைவன் சொல்லிக் கொண்டே போனான். கேட்கும் போது அக்‌ஷயிற்கு பகீரென்றது. பதவிக்காக அரசியல்வாதிகள் எந்த அளவுக்குக் கேவலமாகப் போகிறார்கள் என்று நினைக்கையில் வருத்தமாக இருந்தது. கண நேரத்தில் முடிந்து விடக்கூடிய வாழ்க்கையில் மனிதன் எப்படியெல்லாம் நடந்து கொள்கிறான்….

"…..கடைசியில் காஷ்மீர் பள்ளத்தாக்கில் இந்திய ராணுவத் தாக்குதலால் வீர மரணம் அடைந்த நம் தோழன் அப்துல் ரஹ்மானின் முதலாம் ஆண்டு நினைவு நாளில் புதுடெல்லியைத்

தாக்க திட்டமிட்டோம். நம் சக்தியை இந்தியா அன்று உணரப் போகிறது. இந்தியாவுக்கு மட்டுமல்ல உலகத்திற்கே நாம் ஒரு பாடம் புகட்டப் போகிறோம்...."

சொல்லி விட்டு தலிபான் தலைவன் அக்‌ஷயை ‘இதற்கு என்ன சொல்கிறாய்?’ என்பது போலப் பார்த்தான்.

அக்‌ஷய் ஆழ்ந்து யோசிப்பதைப் போல பாவனை செய்து விட்டு சொன்னான். "...புதுடெல்லியில் நம் வேலையைக் காண்பிப்பது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. அந்த கலாட்டாவில் குளிர்காய்ந்து வீரேந்திரநாத் பிரதமராகக் கூட முடியும். ஆனால் அதற்குப் பிறகு நடப்பது எல்லாம் நமக்கு சாதகமாக இருக்கும் என்பதை என்னால் இன்னும் நம்ப முடியவில்லை...."

"ஏன் அப்படி சந்தேகப்படுகிறாய்?"

"அரசியல்வாதிகள் பதவிக்காக கண்ட வாக்குறுதிகள் எல்லாம் தந்து பதவிக்கு வந்த பிறகு அதை வசதியாக மறந்து பழகியவர்கள். அதனால் அரசியல்வாதியை நம்புவதற்கு முன்னால் ஆயிரம் தடவை யோசிக்க வேண்டும். இந்த வீரேந்திரநாத் பிரதமரான பிறகு நமக்கு உதவுவான் என்பது என்ன நிச்சயம்? அவர் வேலை முடிந்து விட்ட பின் மக்கள் மத்தியில் மிக உறுதியான பிரதமர் என்று காட்டிக்

கொள்ள நம் ஆதரவாளர்கள் அத்தனை பேரையும் தேடிப்பிடித்து உள்ளே போட்டாலும் போடுவார்...."

தலிபான் தலைவன் சொன்னான். "நீ சொல்வதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால் அந்த ஆளிற்கும் நமக்கும் வேண்டியவர்கள் அவர் இந்த விஷயத்தில் நம்மை ஏமாற்ற மாட்டார் என்கிறார்கள். நமக்கு அபிப்பிராயம் சொல்கிற அவர்கள் அவரை மிக நன்றாக அறிந்தவர்கள். நானும் உன்னைப் போலத் தான் சந்தேகப்பட்டேன். அதற்கு அவர்கள் நேரடியாகவே வீரேந்திரநாத்திடம் பேச நாளைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்...."

"வீரேந்திரநாத் ஆப்கானிஸ்தான் வருகிறாரா?"

"இல்லை ஜம்முவில் ஏதோ ஒரு நிகழ்ச்சிக்காக அவர் வருகிறார். அதனால் அவரை இந்தியா சென்று ஜம்முவில் சந்திக்கப் போகிறோம். அவருக்கு வேண்டப்பட்ட அதிகாரிகள் அங்கங்கே இருப்பதால் இந்தியாவிற்குள் நுழைவதோ, நம் மற்றைய காரியங்களைப் பார்ப்பதோ சிரமமில்லை"

அக்‌ஷய் தலையைக் கூட அசைக்காமல் சந்தேகத்தோடு பார்த்தான்.

தலிபான் தலைவன் சொன்னான். "சரி நீயும் நாளைக்கு எங்களோடு

வா. நேரில் பேசும் போது அந்த ஆளை நம்பலாமா வேண்டாமா என்பது உனக்கும் புரியும்."

அரைகுறை மனதோடு தலையசைப்பவன் போல அக்‌ஷய் தலையசைத்தான். அது சம்பந்தமான பேச்சு அத்தோடு நின்றது. அன்றிரவு அங்கேயே அனைவரும் தங்கினார்கள். வெளியே பார்ப்பதற்கு பாழடைந்த கட்டிடமாகத் தோன்றினாலும் அவர்கள் தங்கியிருந்த அந்த இடத்தின் உள்ளே சகல வசதிகளும் இருந்தன. பெரிய ஒரு ஹாலில் அனைவரும் படுக்க வசதி செய்திருந்தார்கள். அக்‌ஷய் அருகில் இருந்த படுக்கையில் அந்த தலிபான் தலைவன் படுத்தான்.

கண்களை மூடினாலும் அக்‌ஷயிற்கு உறக்கம் வரவில்லை. இனி என்ன செய்யலாம் என்ற சிந்தனையில் அவன் இருந்தான். திடீரென்று அருகே இருந்த தலிபான் தலைவனிடம் யாரோ வந்து தாழ்ந்த குரலில் பேசுவது கேட்டது. அக்‌ஷய் கண்களை மட்டும் லேசாகத் திறந்து பார்த்தான். அவனை சந்தேகக் கண்ணோடு ஆரம்பம் முதலே பார்த்த தலிபான் தலைவன் தான் அக்‌ஷய் அருகில் படுத்திருந்த தலிபான் தலைவனை எழுப்பிக் கொண்டிருந்தான். இவன் "என்ன?" என்று கேட்டதும் "வெளியே வா" என்று அவன் சொன்னதும் கேட்டது. இருவரும் அக்‌ஷயைப் பார்த்தார்கள். அக்‌ஷய் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போல நடித்தான். இருவரும்

வெளியே போனார்கள்.

அவர்கள் சென்றதும் அக்‌ஷய் மெல்ல எழுந்து சுற்றிலும் பார்த்தான். மற்றவர்கள் எல்லாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள். சத்தமில்லாமல் தானும் எழுந்து சென்று வெளியே எட்டிப் பார்த்தான். வெளியே நின்றிருந்த ஒரு ஜீப்பின் அந்தப் பக்கம் அதில் சாய்ந்து நின்றபடியே இருவரும் ஏதோ தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அக்‌ஷய் மின்னல் வேகத்தில் சென்று ஜீப்பின் இந்தப் பக்கம் குனிந்து ஒளிந்து கொண்டான். அவர்கள் குரலைத் தாழ்த்திப் பேசிக் கொண்டிருந்தது இப்போது அவனுக்குத் தெளிவாகக் கேட்டது.

"..... நீ அவன் அப்துல் அஜீஸ் தானா என்று ஏன் இன்னும் சந்தேகப்படுகிறாய் என்று எனக்குப் புரியவில்லை. தோற்றம், பேசும் தோரணை, உருதுக் கவிதை, சண்டைத் திறமை எல்லாம் சேர்ந்து பார்க்கையில் அவன் அப்துல் அஜீஸ் என்று உறுதியாய் தெரிகிறது. அப்படி சின்னச் சின்ன வித்தியாசம் தெரிகிறது என்றாலும் இதுவரை அவன் எப்போதும் ஒரு தடவை பார்த்தது போல் இன்னொரு தடவை பார்க்க இருப்பதில்லை. நீ இன்றைக்கு வந்திருந்த ஆட்களில் சிலர் மூலமாக அவனைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்றாயே அது என்ன ஆயிற்று?"

"வந்தவர்களில் மூன்று பேருக்கு அவனை ஓரளவு தெரியும். அவர்களும் அவனுடன் வேலை செய்திருக்கிறார்கள். அவர்கள் அவன் நடை, உடை, பாவனைகள் எல்லாம் பார்க்கையில் அப்துல் அஜீஸ் மாதிரி தான் தெரிகிறான் என்றார்கள். மற்றபடி அவன் மனமிருந்தால் நன்றாகப் பேசுவான், மனமில்லா விட்டால் அவ்வளவாகப் பேச மாட்டான் என்பதால் அவர்களுக்கு அதற்கு மேல் சொல்லத் தெரியவில்லை"

"சரி, இன்னும் உனக்கு என்ன சந்தேகம்?"

"அப்துல் அஜீஸின் ஒரு பிரதான குணாதிசயம் வந்திருப்பவனிடம் இல்லை."

"அது என்ன?"

"அப்துல் அஜீஸ் நிறையவே உணர்ச்சி வசப்படுவான். சில நேரங்களில் வெறி பிடித்தவன் போல் கொந்தளிப்பான். சில சமயங்களில் மென்மையின் உச்சத்திற்கே போவான். சில சமயங்களில் உருதுவில் கவிதை சொல்கையில் கண்கலங்குவான். கவிதை கலந்து பேசப் பேசத் திடீரென்று தீப்பொறி பறக்க ஆக்ரோஷமாய் பேசுவான். ஆனால் வந்தவன் பேசும் போது நான்

நன்றாகவே கவனித்து வருகிறேன். எப்போதுமே அவன் நிதானம் தவறினதை நான் பார்க்கவில்லை. இன்றைக்கே உருதுவில் கவிதை கலந்து தான் அருமையாகப் பேசினான். தீப்பொறி பறக்கத் தான் பேசினான். ஆனால் அத்தனைக்குப் பின்னாலுமே ஒரு சீரான தெளிவும், அலட்டிக் கொள்ளாத தன்மையும் தெரிகிறது. இது என்றைக்குமே அப்துல் அஜீஸிடம் இருந்தது இல்லை. அது தான் சந்தேகமாக இருக்கிறது ...."

மற்றவன் ஒரு நிமிடம் ஒன்றும் பேசவில்லை. சொன்ன விஷயத்தில் உண்மை இருக்கிறது என்று அவனும் யோசித்த மாதிரி இருந்தது.

"அப்படியானால் அவன் ஒரு ஒற்றனாக இருக்கும் என்று நினைக்கிறாயா? அமெரிக்காவோ, இந்தியாவோ அனுப்பியவனாக இருக்குமோ?"

"இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். ஆனாலும் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்வது நல்லது"

"என்ன செய்யலாம் என்று நினைக்கிறாய்?"

"சில சமயம் அவனுடன் கூட்டாக சில காரியங்கள் செய்திருக்கிறோம். அதில் சில விஷயங்கள் அப்துல் அஜீஸிற்கும்,

நமக்கும் மட்டும் தான் தெரியும்..."

"நான் நாளை இரவு வீரேந்திரநாத்திடம் பேசப் போகும் போது அவனையும் கூட்டிக் கொண்டு போகலாம் என்று நினைத்து அவனிடம் அதைச் சொல்லியும் இருக்கிறேன்... எதற்கும் நீ சொன்னதை நான் அலட்சியப்படுத்த விரும்பவில்லை. நாளை காலையில் முதல் வேலையாக அதைப் பற்றி அவனிடம் பேசி சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ளலாம்...."

அவர்கள் முடிவெடுத்து விட்ட தொனியில் பேச்சை நிறுத்திய போது அக்ஷய் வந்த அதே மின்னல் வேகத்தில் உள்ளே பறந்தான். தலிபான் தலைவர்கள் உள்ளே நுழைந்த போது அக்ஷயை விட்டுச் சென்ற அதே நிலையில்-ஆழ்ந்த உறக்கத்தில்-பார்த்தார்கள்.

அக்ஷய் மனநிலையோ புறத்தோற்றத்திற்கு எதிர்மாறாக இருந்தது. அப்துல் அஜீஸ் பற்றிய எத்தனையோ விவரங்கள் அவனுக்குத் தெரியும். அதே போல அந்த தலிபான் தலைவர்கள் மூவர் பற்றியும் அவன் வேண்டுமளவு அறிந்திருந்தான். ஆனால் அந்த மூவரும், அப்துல் அஜீஸும் கூட்டாகச் சேர்ந்து செய்த இரண்டு தீவிரவாதச் செயல்கள் பற்றி மேலோட்டமாக மட்டுமே அவன் அறிவான். ஒன்று பாகிஸ்தானில் அமெரிக்கத் தூதரகத்தின் முன்னே குண்டு வெடிக்கச் செய்தது, இன்னொன்று இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இரு

பத்திரிக்கையாளர்களை சாகசமாகப் பிடித்து குரூரமாகக் கொன்றது. இரண்டிலுமே தலிபான் தலைவர்களுக்கும், அப்துல் அஜீஸிற்கும் இடையே ஏதாவது தனிப்பட்ட சுவாரசிய நிகழ்வுகள் நிகழ்ந்திருந்தால் அதை அவன் அறிந்திருக்கவில்லை. அவர்கள் அதைப் பற்றி ஏதாவது கேட்டு அவன் அறியவில்லை என்று தெரிந்தால் பிரச்னை தான்.

அங்கிருந்து தப்பிப்பது அவனுக்குப் பெரிய விஷயமில்லை. அவனுக்குத் தெரிந்திருந்த பல சூட்சும வித்தைகள் மூலம் அவர்களிடம் பிடிபடாமல் தப்பித்து விடலாம். ஆனால் அவர்கள் மந்திரி வீரேந்திரநாத்துடன் சேர்ந்து தீட்டும் சதித் திட்டங்களை அவன் அறிந்து கொள்ள வேண்டுமானால் அவன் அவர்கள் கூட இருந்தாக வேண்டும். நாளை அவர்களுடன் செல்ல வேண்டும். அப்போது தான் அவன் அந்த சதித்திட்டங்களை வெளிப்படுத்தி தன் தாய்நாட்டுக்கு ஏதாவது சேவை செய்தது போல் ஆகும். எத்தனையோ அப்பாவி ஜனங்களை அவன் காப்பாற்ற முடியும். தலிபான் தலைவர்களை எப்படி சமாளிப்பது என்ற சிந்தனையே அவன் எண்ணமெல்லாம் நிறைந்திருந்தது. அவன் உறங்கவேயில்லை...

********

அமானுஷ்யனின் பொய்த் தாடியைப் பார்த்தவுடன் அவன் அந்த வழியாகத் தான் போயிருப்பான் என்பதை சலீம் தெரிந்து கொண்டான். அதன் பின் அவன் யோசிக்கவில்லை. அந்த வழியாக வேகமாக நடந்து சென்றான். வழியில் யாரும் கிடைக்கவில்லை. கிடைத்திருந்தால் அவர்களிடம் விசாரித்திருக்கலாம் என்று நினைத்தாலும் அமானுஷ்யன் இந்த வழியாகத் தான் போயிருக்க வேண்டும் என்பதில் அவனுக்கு சந்தேகமில்லை. அதனால் நடந்தான். சில நிமிடங்களில் தூரத்தில் ஒரு புத்த விஹாரம் அவனுக்குத் தெரிந்தது. கண்டிப்பாக அமானுஷ்யன் அதனுள்ளே தான் இருப்பான் என்று எண்ணிய போது அவனுக்கு ஒரு விதத்தில் ஆச்சரியமும் ஏற்படாமல் இல்லை. மசூதிக்கும் போகிறான், புத்த விஹாரத்திற்கும் போகிறான், போகிற இடங்களில் எல்லாம் இவனுக்கு வேண்டிய ஆட்கள் இருக்கிறார்கள், என்ன மனிதனிவன்? இத்தனைக்கும் இவன் முஸ்லீமும் அல்ல, புத்த மதத்தவனும் அல்ல!

ஆச்சரியத்தை அடுத்த கணமே ஒதுக்கி விட்டு அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று சலீம் யோசித்தான். அமானுஷ்யனைக் கொன்றால் தான் அவனையே அவன் மதிக்க முடியும். இத்தனை நாட்களில் தீர்த்துக் கட்டிய மனிதர்கள் எல்லாம் உலகப்புகழ் பெற்ற ஆட்களாக இருக்கலாம். பெரிய பாதுகாப்பு வளையத்தில் இருந்தவர்கள் ஆக இருக்கலாம். ஆனால் எந்தப் பாதுகாப்பு

வளையமுமே இல்லாத அமானுஷ்யன் அபாயகரமானவன். அவன் திறமைகளே அவனுக்குப் பாதுகாப்பு. அவன் அறிவே அவனுக்கு ஆயுதம். அவனைக் கொன்றால் மட்டுமே உண்மையான வெற்றி மகுடம் சூட்டியது போல. இப்படி எண்ண எண்ண அவன் நாடி நரம்புகள் எல்லாம் முறுக்கேறின.

112

மறுநாள் காலை தலிபான் தலைவர்கள் மூவரும் அக்‌ஷயைத் தனியாக பேச அழைத்தார்கள். அக்‌ஷயும் போனான். அவர்கள் மூவர் பார்வையும் அவன் மேல் ஆழமாகப் பதிந்திருந்தது. அவனை ஊடுருவிப் பார்ப்பது போல அவர்கள் பார்த்தார்கள்.

"என்ன?" என்று அலட்சியமாகக் கேட்டான் அக்‌ஷய்.

அவனை எப்போதுமே சந்தேகக் கண்ணோடு பார்த்த தலிபான் தலைவன் தான் முதலில் பேசினான். " அப்துல் அஜீஸ், இரண்டு வருடங்களுக்கு முன் இங்கிலாந்து பத்திரிக்கையாளர்கள் இரண்டு பேரைக் கடத்திக் கொன்றோமே ஞாபகம் இருக்கிறதா?"

"ம்..அதற்கென்ன?"

"அதில் ஒருவன் சாவதற்கு முன் உன்னிடம் ஒன்று சொன்னானே நினைவிருக்கிறதா?"

"இருக்கிறது. ஏன் கேட்கிறாய்?"

சிறிதும் அலட்டிக் கொள்ளாமல் எதிர் கேள்வி கேட்டவனை அந்த தலிபான் தலைவன் சந்தேகத்தோடு பார்த்தபடியே சொன்னான்.

"அவன் என்ன சொன்னான் சொல் பார்க்கலாம்"

அக்ஷய் பொறுமை இழந்தவன் போல் நடித்துக் கேட்டான். "அந்த பழைய கதை எல்லாம் இப்போது எதற்கு, முதலில் அதைச் சொல்"

அவர்கள் இதை எதிர்பார்த்திருக்கவில்லை என்பது அவர்கள் முகபாவத்தில் இருந்தே தெரிந்தது. அப்துல் அஜீஸாக இருந்தால் பதில் சொல்வான், வேறு நபராக இருந்தால் மென்று விழுங்குவான் என்று எதிர்பார்த்தவர்களுக்கு இந்த மூன்றாவது விதமான எதிர்கொள்ளலை எப்படி எடுத்துக் கொள்வது என்பது விளங்கவில்லை.

ஆரம்பத்தில் இருந்தே அவனை நம்பிய தலிபான் தலைவன்

அக்ஷயிடம் வெளிப்படையாகவே சொன்னான். "அவனுக்கு நீ அப்துல் அஜீஸ் தானா என்பதில் சந்தேகம். அதனால் தான் அப்படி கேட்கிறான். அவன் கேட்டதற்குப் பதில் தான் சொல்லி விடேன்..."

அக்ஷய் எரிமலையாய் வெடித்தான். "சொல்லலாம். ஆனால் அதோடு அவன் சந்தேகம் நிற்காது. அடுத்ததாய் பாகிஸ்தானில் அமெரிக்க தூதரகம் முன் நாம் குண்டு வெடித்தோமே அன்றைக்கு காலையில் என்ன டிபன் சாப்பிட்டோம் என்று சொல்லச் சொல்லுவான். இப்படியே ஒவ்வொன்றாய் கேட்டுக் கொண்டிருப்பான். இந்த முட்டாள்தனமான சந்தேகத்திற்கு எல்லாம் நான் வரிசையாக பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது."

"கொஞ்சம் அமைதியாய் இரு. ஏதோ சந்தேகம் வந்ததால் அவன் சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காக அப்படிக் கேட்டான். அதற்கு நீ இப்படி கோபித்துக் கொள்ளலாமா?"

சிறிது அமைதியடைந்தவன் போல நடித்த அக்ஷய் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு கேட்பது போலக் கேட்டான். "எதனால் சந்தேகம் வந்தது என்று நான் தெரிந்து கொள்ளலாமா?"

சந்தேகப்பட்ட தலிபான் தலைவன் நேரடியாகவே சொன்னான். "நீ எங்களுக்குத் தெரிந்த அப்துல் அஜிஸ் அல்ல. நிறையவே மாறி

விட்டிருக்கிறாய்"

"இங்கே மாறாமல் இருப்பது யார் அதைச் சொல் முதலில். நான் போன தடவை பார்த்த போது எப்போதும் பான் பராக் உன் வாயில் இருக்கும். இப்போது பான் பராக்கே நீ உபயோகப்படுத்துகிற மாதிரி தெரியவில்லை. அதை வைத்து நீ நீ அல்ல என்று நான் சந்தேகப்பட முடியுமா?"

டாக்டர் அவனுக்கு கான்சர் ஆரம்ப கட்டத்தில் இருக்கிறது, இனியும் அதை சாப்பிட்டால் அது மரணத்திற்கு அழைப்பு விடுகிற மாதிரி தான் என்று சொன்னதிலிருந்து அவன் பான் பராக் சாப்பிடுவதில்லை. இது மற்ற இரு தாலிபான் தலைவர்களுக்கும் கூட தெரியும். இது போன்ற விஷயங்கள் வெளியே கசிந்தால் அவர்கள் மேலுள்ள பயம் குறைந்து விடும் என்ற எண்ணத்தில் தங்கள் இயக்கத்தினருக்கே கூடத் தெரியாமல் அவர்கள் பார்த்துக் கொண்டார்கள். அதனால் அதை வாய் விட்டுச் சொல்ல அவன் தயங்கினான்.

அவன் பதில் சொல்ல சில வினாடிகள் பொறுத்து அவன் எதுவும் சொல்லாததால் தானே அக்‌ஷய் கோபம் குறையாமல் தொடர்ந்தான். "நான் எதிலாவது மாறியிருக்கிறேன் என்றால் ஒரு காலத்தில் இருந்தது போல் அதிகமாய் உணர்ச்சி வசப்படாமல்

இருப்பது இருக்கலாம். என்னை மாதிரி உங்களில் யார் மரணத்தின் விளிம்பு வரை போய் வந்தாலும் கண்டிப்பாக நீங்களும் மாறி இருப்பீர்கள். எல்லாமே எந்த நேரத்திலும் முடிவுக்கு வந்து விடலாம் என்று உணரும் போது உணர்ச்சி வசப்படுவதற்கும், கவலைப் படுவதற்கும் அர்த்தமில்லை என்பது புரியும்.... உனக்கு அப்படி ஒரு நிலைக்குப் போய் வரும் வரை புரியாது. அதைவிடு... நான் அப்துல் அஜீஸாக இல்லாமலிருந்தால் அவன் வேஷத்தில் இங்கு எதற்காக வர வேண்டும்?"

"ஒற்றனாகக் கூட இருக்கலாமல்லவா?"

அக்ஷய் மிகப் பெரிய ஜோக்கைக் கேட்டது போல குலுங்கிக் குலுங்கி சிரித்தான். கண்களில் தண்ணீர் வருகிற வரையில் சிரித்து விட்டு சொன்னான். "ஒற்றனாக வந்து ஒருவன் தெரிந்து கொள்ள நம்மிடம் என்ன இருக்கிறது. நாம் இருக்கிற இருப்பிடம் தெரியாதா நம் எதிரி நாடுகளுக்கு? நாம் அடிக்கடி இந்த வறண்ட மலைப்பகுதியில் இடம் மாறிக் கொண்டே இருந்தாலும் குறிப்பிட்ட இந்த சுற்று வட்டாரத்திலேயே தானே இடம் பெயர்கிறோம். நாம் சமீப காலத்தில் எந்தத் தாக்குதலிலும் ஈடுபடவில்லை என்பதால் இப்போது நம்மை விட அல்கொய்தா போன்ற அமைப்புகளின் மேல் தான் எதிரிகளின் அதிக கவனம் இருக்கிறது. அப்படி இருக்கையில் எந்த ஒற்றனும் இப்போது இங்கே வரக் காரணம் என்ன

இருக்கிறது? அதிலும் அல்லா கொடுத்த மூளையைக் கொஞ்சம் நீ உபயோகப்படுத்தி யோசித்திருந்தால் உனக்கு சந்தேகம் வந்திருக்காது..."

"எப்படி உபயோகப்படுத்தி யோசிக்கச் சொல்கிறாய்?"

"நானாகவா இங்கே வந்தேன். இயற்கையோடு இயற்கையாக நான் வளர்ந்த இந்தப் பகுதிகளில் சுற்றலாம் என்ற எண்ணத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த போது நீங்களாகத் தானே என்னைப் பார்க்க வந்து இங்கே கூட்டிக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?"

அவன் சொன்னதில் இருந்த உண்மைகள் அவர்களை யோசிக்க வைத்தது போல் இருந்தது. அவர்கள் ஆழ்ந்த யோசனையுடன் அவனைப் பார்க்க அவன் எழுந்து வெளியே போக முற்பட்டான்.

"எங்கே போகிறாய்?"

"எங்கேயோ போகிறேன். எனக்கு மனம் சரியில்லை. சிறிது நாள் இப்படியே சுற்றி விட்டு தேவைப்படுகிற போது ஏதாவது செய்கிறேன். நான் ஆரம்பத்தில் இருந்தே அப்படித்தானே..."

"அஜீஸ் நான் இன்றைக்கு இரவு வீரேந்திரநாத்தை சந்திக்கப்

போகும் போது நீயும் வா என்றேனே நீ கூட வருவதாய் ஒப்புக் கொண்டாயே"

"அதெல்லாம் இவன் என்னை சந்தேகப்படும் முன்பு. இப்போதைய மனநிலையில் உங்கள் எந்த வேலையிலும் மூக்கை நுழைக்க எனக்கு மனம் இல்லை. நீங்கள் எல்லோரும் போய் அந்த வேலையை வெற்றிகரமாக முடித்து விட்டு வாருங்கள்."

"அவன் சொன்னதைப் பெரிதுபடுத்தாதே. வீரேந்திரநாத்தை சந்தித்துப் பேசும் போது நீ இருந்தால் நன்றாக இருக்கும், வா....."

"ஆளை விடு நண்பனே. ஒரு வேளை நான் அங்கே வந்தால் அதை வேவு பார்க்கத் தான் இங்கே வந்தேன் என்று கூட இவன் நினைக்க ஆரம்பிக்கலாம்..."

அவர்கள் அவனை விடுவதாயில்லை. அக்ஷய் மனம் மாற மேலும் அரை மணி நேரம் எடுத்துக் கொண்டான். கடைசியில் கேட்டான். "இப்போது நாம் என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறாய்?"

"நீயும் எங்களுடன் வா"

அக்ஷய் சம்மதம் என்று களைப்புடன் தலையசைத்தான். "ஆனால்

நான் ஒன்றை இந்த நேரத்திலும் சொல்கிறேன் நண்பனே. எனக்கென்னவோ அந்த இந்திய மந்திரி மேல் நம்பிக்கை இல்லை. அவர் வேலை முடிந்த பின் வசதியாக நம்மை மறந்து விடும் வாய்ப்பு இருக்கிறது."

"ஒரு தலிபான் இயக்கத்திற்கு நம்பிக்கை துரோகம் செய்து விட்டு எந்த மனிதனாவது குடும்பத்துடன் சந்தோஷமாக இருந்து விட முடியும் என்று நினைக்கிறாயா நண்பனே"

"நான் நினைக்கவில்லை. ஆனால் அந்த ஆள் நினைக்கலாம்..."

"அதற்கு என்ன செய்யலாம் என்கிறாய்?"

"அந்த ஆளுடன் பேசுவதை வீடியோ எடுத்து விடலாம் என்கிறேன் ஒரு வேளை அந்த ஆள் பேச்சு மாறினால் அந்த டேப்பை பத்திரிக்கைகளுக்கும் டிவி சேனல்களுக்கும் அனுப்பி விடுவதாக நாம் பயமுறுத்தலாம். நாம் ஏதாவது செய்து விடுவோமோ என்பதை விட ஆட்சி போய் விடுமோ என்கிற பயம் அதிக வலிமையுடன் வேலை செய்யும்"

அவர்கள் மூவரும் அவனை மரியாதையுடன் பார்த்தனர். அவன் முன்யோசனை அவர்களுக்குப் பிடித்திருப்பது போலத் தெரிந்தது.

சந்தேகப் பட்ட தலிபான் தலைவன் கூட தன் சந்தேகத்தை ஒதுக்கி விட ஆரம்பித்திருந்தான்.

அக்ஷய் கேட்டான். "அவருடன் நாம் சந்திக்கும் இடம் அவர் தேர்வு செய்யும் இடமா, இல்லை நாம் தேர்வு செய்யும் இடமா?"

"நாம் தேர்வு செய்திருக்கும் இடம் தான்...."

"அப்படியானால் நல்லதாய் போயிற்று. அதற்கு ஏற்பாடு செய்யும் படி நம் ஆட்களிடம் சொல்லலாம். ஆனால் இது பரம ரகசியமாக இருக்க வேண்டும்..."

அப்படியே ஏற்பாடு செய்யப்பட்டது.

***************

வீரேந்திரநாத் கையில் அந்த பென் டிரைவ் கிடைத்த பிறகு தான் அவர் நிம்மதி அடைந்தார். எல்லோரையும் வெளியே அனுப்பி விட்டு அந்த பென் டிரைவை அவருடைய கம்ப்யூட்டரில் போட்டுப்

பார்த்தார். அவர் அந்த தலிபான் தலைவர்களைச் சந்தித்த அந்த நிகழ்ச்சி முழுவதும் அதில் பதிவாகி இருந்தது. முழு வீடியோவும் அவரையே மையப்படுத்தி இருந்தது. அன்று அவரிடம் அதிகமாகப் பேசியதெல்லாம் அப்துல் அஜீஸ் என்ற வேடத்தில் வந்த அமானுஷ்யன் தான். அவருடைய அரசியல் வாழ்வை அஸ்தமிக்க என்ன எல்லாம் அவர் சொல்ல முடியுமோ அதை எல்லாம் அவர் வாயாலேயே சொல்ல வைத்து அதை வீடியோ எடுக்க வைத்திருந்தான். படபடக்கும் மனத்துடன் அந்த வீடியோவைப் பார்த்தார்.

ஓரிடத்தில் அமானுஷ்யன் அவரிடம் கேட்டான். "சார் எந்த இந்திய அரசியல்வாதியும் வாய் விட்டு சொல்ல முடியாத வாக்குறுதியை எங்களுக்கு நீங்கள் தந்து இருக்கிறீர்கள். காஷ்மீரத்தை விட்டுக் கொடுக்கிறோம் என்று. அதை உங்கள் மக்கள் ஏற்றுக் கொள்வார்களா?"

அவர் தன் திட்டத்தைப் பெருமையுடன் சொன்னார். "அப்துல் அஜீஸ். அந்த விஷயத்தில் நீங்கள் என்னை முழுவதும் நம்பலாம். நான் ஆட்சிக்கு வந்தவுடன் காஷ்மீர் பள்ளத்தாக்கில் நீங்கள் சில கலவரங்களை ஏற்படுத்த நான் உதவுகிறேன். பின் பேச்சு வார்த்தைக்கு நானே வருகிறேன். மக்கள் கருத்தை உருவாக்க பல பிரபல பத்திரிக்கையாளர்களையும் என்னால் வாங்கி விட முடியும்.

அமைதி நீடிக்க வேறு வழி இல்லாமல் காஷ்மீரத்தை விட்டுக் கொடுப்பதாக நான் முடிவெடுக்க வெளிநாடுகளும் எனக்கு அறிவுறுத்துகிற நிலைமைகளை நானே ஏற்படுத்துகிறேன். கடைசியில் வருத்தத்துடன் அதை செய்வது போல செய்து முடிக்கிறேன். பாகிஸ்தான் உட்பட உலக நாடுகள் என்னைப் பாராட்டும்... யார் கண்டது, அமைதிக்கான நோபல் பரிசு கூட அடுத்த வருடம் எனக்குக் கிடைக்கலாம்..." சொல்லி விட்டு அவர் சிரித்த சிரிப்பை இன்று அவரால் ரசிக்க முடியவில்லை.

அவன் அவரிடம் கேட்டான். "சார் நாங்கள் உங்கள் நாட்டினுள்ளே நுழைந்து டெல்லியில் வெடிகுண்டுகள் வைப்பது பெரிய விஷயமில்லை. ஆனால் உங்கள் ரகசிய இலாக்காக்கள் எங்கள் செயல்களை மோப்பம் பிடித்து எங்களைத் தடுத்து விட்டாலோ, பிடித்து விட்டாலோ என்ன செய்வது?"

"நிர்வாகத்தில் முக்கியமான இலாக்காக்கள் அனைத்திலும் மேல் மட்டத்தில் என் ஆட்கள் தான் இருக்கிறார்கள். முக்கியமான எல்லாத் துறையிலும் எனக்கு சாதகமான என் ஆட்களை தலைமைப் பொறுப்பில் வைத்திருக்கிறேன் அல்லது இரண்டாம் இடத்திலாவது வைத்திருக்கிறேன். இதை நான் சில ஆண்டுகளாகவே திட்டமிட்டு செயல்படுத்தி வெற்றிகரமாக முடித்திருக்கிறேன். போலீஸ், சிபிஐ, உளவுத்துறை மூன்றிலுமே இரண்டாம் நிலையில் என் ஆட்களே

இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாமல் ஒன்றும் அங்கே நடக்காது. வெகு சீக்கிரம் அவர்கள் முதலிடத்திற்கும் வருவார்கள். அதனால் அதைப்பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள்...."

இந்த வீடியோவில் இருப்பது நானல்ல, போலி என்று சொல்ல முடியாதபடி விலை உயர்ந்த நுட்பமான கருவி மூலம் தெளிவாகப் படம் எடுத்திருந்தார்கள். அவர் தோற்றமும், பேச்சும் கச்சிதமாகப் படம் எடுத்திருந்தார்கள். அவர் தர்மசங்கடத்துடன் நெளிந்தார்.

அவர் பேசிக் கொண்டே இருக்கையில் அவர் பின்னால் பாதுகாவலுக்கு நின்றிருந்த அதிகாரி அவர் தோளைத்தொட்டு ஏதோ சொல்லக் குனிந்ததும் குனிந்தவர் மின்னல் வேகத்தில் அமானுஷ்யனால் தாக்கப்பட்டு சரிந்ததும் கூட அதில் பதிவாகி இருந்தது. படபடத்த இதயத்துடன் அந்த வீடியோவைப் பின்னோக்கி ஓட்டி மறுபடியும் பார்த்தார். சில வினாடிகள் தான் அந்த நிகழ்வு நீடித்தது. அமானுஷ்யனின் அமானுஷ்யத்தனத்தின் முதல் அனுபவம் அவருக்கு அப்போதே கிடைத்து விட்டிருந்தது.

அவருடைய பாதுகாவலர் அவர்கள் வீடியோ எடுப்பதை எப்படியோ பார்த்திருக்க வேண்டும் என்றும், அதைச் சொல்லத் தான் குனிந்திருக்க வேண்டும் என்றும் பின்னர் தான் அவர் ஊகிக்க முடிந்தது. அந்த நேரத்தில் அவர் துப்பாக்கி மூலம் தலிபான்

தலைவர்களைச் சுட்டுக் கொல்ல குனிவதாக நினைத்து தான் அவரைத் தாக்கியதாக அப்போது அமானுஷ்யன் சொன்னான். விழுந்து கிடக்கும் பாதுகாவலரை ஒன்றும் புரியாமல் பார்த்த வீரேந்திரநாத் "பரவாயில்லை... அவரை எழுப்புங்கள்" என்று பொதுவாகச் சொன்னார். எல்லோரும் அவரை எழுப்பி உட்கார வைத்தார்கள். உடலில் எந்தக் காயமும் இருக்கவில்லை, உயிர் இருந்தது என்றாலும் அவர் கோமா நிலையில் இருப்பது போல எந்த உணர்வும் இல்லாமல் இருந்தார்.

எல்லோரையும் போல ஆச்சரியத்துடன் அமானுஷ்யனும் அந்த ஆளைப் பார்ப்பதும் அதில் பதிவாகி இருந்தது. இப்போது நினைத்தாலும் வீரேந்திரநாத்திற்கு திக்கென்று தான் இருந்தது. அவருடன் பேசிக் கொண்டே இருந்த அமானுஷ்யன் எப்படி ஒருசில வினாடிகளில் அந்தப் பாதுகாவலரை கோமா நிலைக்குப் போக வைத்தான் என்பது புதிராகவே இருந்தது. அவன் நகர்ந்தது போலவே தெரியவில்லை. ஆனால் கண்மூடித் திறப்பதற்கு முன் அவன் அருகில் அதை முடித்து விட்டு அமைதியாக நின்றிருந்தான். அவனைப் பின்னர் தலிபான்கள் சைத்தான் என்று அழைத்ததது நினைவுக்கு வந்தது. உண்மையில் அவன் சைத்தான் தான். அந்த சைத்தான் சாகிற வரை அவருக்கு நிம்மதியில்லை. இந்த பென் டிரைவ் கிடைத்தது போல அவன் பிணமும் அவருக்குப் பார்க்கக்

கிடைத்து விட்டால் அவர் இனி எதைப்பற்றியும் கவலைப்படத் தேவை இல்லை....

113

வீரேந்திரநாத்தை சந்தித்து ஜம்முவில் பேசிய போது அக்‌ஷய் அந்த மனிதரின் பதவி, அதிகார ஆசையின் ஆழத்தை முழுமையாக அறிந்து கொண்டான். அவருக்குத் தர வேண்டிய பிரதமர் பதவியை கட்சியின் தலைமைக்குழு இன்னொருவருக்குத் தந்தது தான் உலகத்திலேயே நிகழ்ந்த மிகப்பெரிய அநியாயம் என்று அவர் உண்மையிலேயே நினைத்தார். மிகவும் கண்ணியமான மனிதராகவும், திறமை வாய்ந்தவராகவும் மக்களிடத்தில் பெயரெடுத்திருந்த அவரை விட்டு விட்டு மக்களிடம் பெரும் செல்வாக்கு இல்லாத ஒரு தலையாட்டி பொம்மையை பிரதமர் பதவியில் உட்கார வைத்த தலைமைக்குழு மேலும், பிரதமர் மீதும் அவருக்கு அளவில்லாத கோபம் இருந்தது. அவர்களுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்று அவர் தீவிரமாக ஆசைப்பட்டார். இதையெல்லாம் அவர் அவர்களுக்குத் தெரிவிக்கையில் அவர் கண்களில் தெரிந்த வெறி இந்த மனிதர் மிக அபாயமானவர் என்பதை அடையாளம் காட்டியது.

அளவுக்கு அதிகமான பேராசையும், பொறாமையும், கோபமும் கொண்ட மனநிலையில் இருந்த அவரைப் பேச வைப்பது அவனுக்கு கஷ்டமாக இருக்கவில்லை. தலிபான் தலைவர்களை விட அதிகமாக அவனே பேசினான். அவன் புத்திசாலித்தனமாக அவரைப் பேச வைத்து அவர் திட்டத்தை முழுவதும் விளக்கவும் வைத்து அவரைக் கையாண்ட விதம் அவர்களுக்கு மிகவும் பிடித்திருந்ததால் அவர்கள் அவனையே பேச விட்டிருந்தார்கள். எல்லாமே வீடியோவும் எடுக்கப்பட்டிருந்த போது தான் அந்த ரகசிய காமிராவை அவருக்குப் பின்னால் நின்றிருந்த பாதுகாவலர் ஒருவர் கண்டு பிடித்து விட்டார். அவர் பார்த்து விட்டு அதை மந்திரியிடம் சொல்லக் குனிந்ததை எதிர்முனையில் இருந்த தலிபான் தலைவர்கள் கவனித்து என்ன செய்வது என்று முடிவெடுப்பதற்குள் அக்‌ஷய் அந்த பாதுகாவலரைத் தாக்கி படுக்க வைத்தும் விட்டான். எல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்தும் விட்டது.

தன் புத்திசாலித்தனமான திட்டங்களைச் சொல்லி தலிபான் தலைவர்கள் முன்னால் பிரகாசிக்க முயற்சி செய்து கொண்டிருந்த மந்திரிக்கு ஒரு கணம் ஒன்றும் பிரியவில்லை. எதிரில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த அப்துல் அஜீஸ் அவர்களுக்கு இடையே இருந்த நீண்ட மேசையைத் தாண்டி அருகில் எப்படி வந்தான், தன் பாதுகாவலர் ஒருவர் ஏன் கீழே விழுந்து கிடக்கிறார் என்று விளங்காமல் வீரேந்திரநாத் "என்ன ஆயிற்று?" என்று கேட்டார்.

அக்ஷய் அந்தப் பாதுகாவலர் தலிபான் தலைவர்களைக் கொல்ல துப்பாக்கி எடுக்கக் குனிந்ததைப் பார்த்ததாகவும் அதனால் அந்த ஆளைத் தள்ளி விட தாவிக் குதித்ததாகவும் சொன்னான்.

"இது என்னுடைய ஆள். அப்படியெல்லாம் செய்ய மாட்டார். நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள் என்று நினைக்கிறேன்"

"பின் ஏன் அந்த ஆள் திடீரென்று குனிந்தார்"

அது அப்போது மந்திரிக்கும் விளங்கவில்லை. "தெரியவில்லையே. சரி நீங்கள் என்ன செய்தீர்கள்?"

"நான் அவரைத் தள்ளி விட்டேன் அவ்வளவு தான்"

"பரவாயில்லை, அவரை எழுப்புங்கள்" என்று மந்திரி தன் ஆட்களிடம் சொன்னார்.

அவர்கள் எழுப்பி உட்கார வைத்த அந்தப் பாதுகாவலருக்கு உயிர் இருந்தது என்றாலும் உணர்வில்லாமல் இருந்தார்.

அக்ஷய் வருத்தமாக சொன்னான். "விழுந்ததில் அவருக்கு தலையில்

அடிபட்டு இப்படி ஆகி விட்டார் என்று நினைக்கிறேன் பாவம்"

சிலர் அந்த ஆளை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள். அதற்குப் பின்பும் மந்திரியுடனான பேச்சு தொடர்ந்தது என்றாலும் மந்திரி பழைய வேகத்தில் இருக்கவில்லை. வெடிகுண்டு வெடிக்க கண்டிப்பாக எல்லா விதங்களிலும் உதவுவதாக மந்திரி சொன்னார். பரஸ்பரம் என்னென்ன செய்ய வேண்டும் என்று அவரும் தலிபான் தலைவர்களும் பேசிக் கொண்டார்கள். தன் அவசர புத்தியால் ஒருவர் இப்படி மருத்துவமனை போகும் அளவு ஆகி விட்டதே என்ற வருத்தம் காட்டுவது போல அக்‌ஷய் அதிகம் பேசுவதை நிறுத்திக் கொண்டிருந்தான்.

வீரேந்திரநாத் போன பிறகு தலிபான் தலைவர்கள் அக்‌ஷயை மனதாரப் பாராட்டினார்கள். சந்தேகப்பட்ட தலிபான் தலைவன் கூட அந்த சமயத்தில் சந்தேகம் தீர்ந்தான். அவர்கள் மூவரும் அவனிடம் கேட்டார்கள். "நீ எப்படி கண்மூடித் திறக்கும் முன்னால் அந்தப் பக்கம் போய் அந்த ஆளை வீழ்த்தினாய். அவன் எப்படி கோமாவிற்குப் போனான்."

அவர்கள் அறிந்த அப்துல் அஜீஸிற்கு கொரில்லா தாக்குதல் தெரியும் என்றாலும் இன்று அவன் நிகழ்த்திய சாகசத்தை அவர்கள் என்றும் அவனிடம் கண்டதில்லை.

"அந்த ஆள் வீரேந்திரநாத்திடம் வாய் திறந்து பேசினால் ஆபத்து என்று புரிந்த பிறகு நான் கொஞ்சமும் யோசிக்கவில்லை. இந்த வித்தை நான் சமீபத்தில் கற்றுக் கொண்டது. கடைசி தாக்குதலில் உயிர் போய் உயிர் வந்த பிறகு என்னைத் தற்காத்துக் கொள்ள நான் புதிதாகக் கற்றுக் கொண்ட வித்தை இது.."

"எங்கே கற்றுக் கொண்டாய்?"

அக்‌ஷய் எரிச்சலைக் காட்டினான். "நீங்கள் என்ன என்னை பேட்டி எடுக்கிறீர்களா? ஆக வேண்டிய வேலையைப் பாருங்கள்."

அவன் மனமிருந்தால் விவரமாகச் சொல்வான், மனமில்லா விட்டால் சிறிதும் சொல்ல மாட்டான் என்று ஏற்கெனவே அறிந்திருந்ததால் அவர்கள் பேசாமல் இருந்து விட்டார்கள்.

எடுத்த வீடியோ நிகழ்ச்சியை அவர்களுக்குத் தெரியாமல் ரகசியமாய் அவனொரு பென் டிரைவில் எடுத்து வைத்துக் கொண்டான்.

அவர்கள் ஆப்கானிஸ்தான் கிளம்பும் போது அவன் அவர்களுடன் செல்லவில்லை. "நாம் திட்டமிட்டபடி குண்டு வெடிக்கும் போது நான் இந்தியாவில் இருக்க விரும்புகிறேன். அதற்கு இன்னும் சில

நாட்கள் தானே

இருக்கின்றன. அதனால் இங்கேயே நான் இருக்கின்றேன்...." என்று அவன் சொன்ன போது அவர்கள் ஆட்சேபிக்கவில்லை.

******

ஆனால் மந்திரி வீரேந்திரநாத்தின் பாதுகாவலன் நிலைமையில் எந்த முன்னேற்றமும் ஏற்படாமல் போகவே மந்திரிக்கு எங்கேயோ பிசகு நடந்திருக்கிறது என்ற எண்ணம் வலுப்பட ஆரம்பித்தது. டாக்டர்களிடம் கேட்ட போது அவர்கள் இது சாதாரணமாக விழுந்ததால் ஏற்பட்ட நிலை அல்ல யாரோ மனித உடலின் முழு சூட்சுமத்தை அறிந்திருந்தவர் மிக கவனமாகக் கையாண்ட விதமாக இருக்கலாம் என்று சந்தேகப்படுவதாகச் சொன்னார்கள். கத்தி பட்டால் உயிர்சேதம் ஏற்படும், கத்தி உபயோகிக்காமல் இருந்தாலோ கோமாவில் இருந்து மீள முடியாது என்ற திரிசங்கு நிலைமை உருவாகியது.

அப்போது தான் மும்பையில் முன்னம் இருந்திருந்த டாக்டர் ஒருவர் தன் அனுபவத்தில் இதையே மும்பையில் ஒருவன் செய்திருப்பதாகவும், கடைசியில் அவனே அவர்களில் பெரும்பாலானோரை சரிப்படுத்தி விட்டதாகவும் சொன்னார்.

மந்திரி உளவுத்துறை மூலமாக அப்படிப்பட்ட மனிதனின் முழு வரலாற்றையும் வரவழைத்தார். அமானுஷ்யன் என்ற பட்டப்பெயரால் அழைக்கப்பட்ட அவனால் கோமா நிலைக்குப் போனவர்கள் சொன்ன வர்ணனைகள் எல்லாம் அப்துல் அஜீஸ் என்ற பெயரில் அவரிடம் பேசிய தலிபான் குழு நபர் போலவே இருந்தது. மின்னல் வேகம், காற்றின் வேகம் என்றெல்லாம் அவர்கள் சொன்னதைப் படித்த மந்திரிக்கு அவர் நேரில் கண்ட அனுபவமும் அப்படியே இருக்க சந்தேகம் வலுவடைந்தது.

உடனே அப்துல் அஜீஸ் பற்றிய தகவல்களை அறிய உளவுத் துறையை மந்திரி வீரேந்திரநாத் முடுக்கி விட்டார். உளவுத்துறை அந்த மனிதன் உண்மையிலேயே இறந்து விட்டதாக நம்பத்தகுந்த ஆதாரங்கள் கிடைத்து இருப்பதாக சொன்னது. மந்திரி உடனடியாக தலிபான் தலைவர்களைத் தொடர்பு கொண்டார். ஒரு போலி அப்துல் அஜீஸை பேச்சு வார்த்தைக்கு அழைத்து வரக்காரணம் என்ன, அவன் ஏன் அவருடைய பாதுகாவலரை அந்த நிலைமைக்கு ஆளாக்கினான் என்பதன் காரணத்தை அறிய விரும்புவதாக நேரடியாகவே கேட்டார். அவர்கள் அதை நம்ப மறுத்த போது உடனடியாக அவர் அப்துல் அஜீஸ் இறந்தது உண்மை என்பதற்கான உளவுத்துறை ஆதாரங்களையும், அமானுஷ்யன் பற்றிய விவரங்களையும் அனுப்பி வைத்தார். அப்போது தான் அமானுஷ்யனிடம் மந்திரி மட்டுமல்லாமல் தாங்களும் ஏமாந்து

போனது தலிபான்களுக்கு புரிந்தது.

அவசர அவசரமாக தலிபான்கள் இன்னொரு முறை மந்திரியை சந்தித்தார்கள். நடந்தவற்றை அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. மந்திரிக்கு வந்த கோபத்திற்கு அளவேயில்லை. ஆனால் இதற்கெல்லாம் அமானுஷ்யனே சூத்திரதாரி என்றும் அவன் தான் திட்டமிட்டவன் என்றும் சொல்லி அவர்கள் சமாளித்தார்கள். அவன் தான் இப்போதைக்குத் தங்கள் முதல் எதிரி என்றும் உடனடியாக அவனைத் தீர்த்துக்கட்டுவது தான் தங்கள் முதல் வேலை என்றும் சொன்னார்கள். ஒருவேளை மந்திரி தன் அதிகாரத்தை உபயோகித்து அவனைக் கொன்றால் பெரும் தொகை ஒன்றையும் கொன்றவனுக்குத் தரத்தயார் என்றும் சொன்னார்கள். மந்திரி கடைசியில் ஒருவழியாக கோபம் தணிந்தார். இந்திய மண்ணில் அவன் வந்து விட்டதால் அவரது அதிகாரத்தைப் பயன்படுத்தி அவனைக் கொல்வது சுலபம் என்று அவர்கள் கணக்கிட்டார்கள். ஆனால் அவனைக் கொல்வது அவ்வளவு சுலபமில்லை என்பதை அவர்கள் போகப் போக உணர்ந்தார்கள்.

******

எடுத்த வீடியோவின் பிரதியை ஆச்சார்யாவிற்கு ஈ மெயில் மூலம்

அனுப்பி விட்டு ஒரு ப்ரவுசிங் செண்டரில் இருந்து அக்ஷய் வெளியே வந்த போது முதல் முறையாக கண்காணிக்கப்படுவதை உணர்ந்தான். யாரோ ஒருவன் அவனைப் பின் தொடர்ந்தான். அந்த ஒருவன் பார்வையில் இருந்து தப்பிப்பது அவனுக்குக் கஷ்டமாக இருக்கவில்லை. தப்பித்தவன், அவன் அப்துல் அஜீஸ் அல்ல என்பதைக் கண்டுபிடித்து விட்டார்கள் என்பதை ஊகித்து விட்டான். இனி என்ன செய்வது என்று மிக தீவிரமாக அவன் யோசித்தான். மறுநாள் காலையில் ஆச்சார்யா கொலையான செய்தியைப் பத்திரிக்கைகளில் படித்தவுடன் அவருக்கு அனுப்பியிருந்த தடயத்திற்கும் அவர் கதி தான் ஆகி இருக்கும் என்பதை உணர்ந்தான். முதல் வேலையாக தன்னிடமிருந்த பென் டிரைவை வங்கி லாக்கரில் வைத்து சாவியை மசூதியில் இருந்த பெரியவரிடம் ஒப்படைத்தான்.

அவனை வலை போட்டுத் தேடிய எதிரிகள் அன்றிரவே ஒரு லாட்ஜில் தங்கி இருந்த அவனைக் கண்டுபிடித்து அவனைக் கொல்ல வந்தார்கள். அவன் அங்கிருந்தும் தப்பிப் போனான். மேலும் ஒரு நாள் மலைப்பகுதிகளில் பதுங்கி இருந்தான். ஆனால் எதிரிகள் அங்கும் அவனைக் கண்டுபிடித்து வந்து விட்டார்கள். அவனைத் துரத்திக் கொண்டே வந்தவர்கள் நள்ளிரவில் அவன் மலை உச்சியை அடைந்தவுடன் அவனைக் கொல்ல முயன்றனர். அவன் லாவகமாக நகர்ந்து தப்பிக்க அவர்கள் திட்டமிட்டு ஒரே

நேரத்தில் சிறிது சிறிது இடைவெளிகள் விட்டு துப்பாக்கியால் சுட்டார்கள். அவர்களது துப்பாக்கி ரவைகளில் இருந்து முழுவதும் தப்பிக்க முடியாமல் தோள்பட்டையில் காயப்பட்டவன் மலையுச்சியில் இருந்து கவனமாகக் குதித்தான். அதற்குப் பின் அவன் எழுந்த போது அவன் புத்த விஹாரத்தில் இருந்தான்.....

******

அவன் தியானத்தில் இருந்து கண்விழித்த போது அவனின் குருவான வயதான புத்த பிக்கு அவனைப் பார்த்தபடியே இன்னமும் நின்றிருந்தார். அவன் மனத்திரையில் வந்த அந்த பழைய காட்சிகளை எல்லாம் அவரும் எதிரில் நின்று பார்த்தது போல் அவனுக்குத் தோன்றியது.

"எல்லாம் நினைவுக்கு வந்ததா?" அவர் கேட்டார்.

ஆமாம் என்று அவன் தலையாட்டினான்.

புத்த பிக்கு சொன்னார். "உனக்காக வெளியில் ஒருவன் காத்துக் கொண்டிருக்கிற மாதிரி தெரிகிறது. அவன் கையில் துப்பாக்கி இருக்கிறது. நீயாக வெளியே வருவாயா இல்லை அவன் உள்ளே

வர வேண்டி இருக்குமா என்று யோசிப்பது போல இருக்கிறது..."

அக்ஷயும் அமைதியாக யோசித்தான்.

114

அக்ஷய் குருவிடம் சொன்னான். "குருவே நான் வெளியே போகும் முன் போனில் என் அண்ணனிடம் பேச வேண்டும். உங்கள் போனை உபயோகப் படுத்திக் கொள்ளலாமா?"

"புத்தரின் போனை பக்தனான நீ தாராளமாக உபயோகப்படுத்திக் கொள்ளலாம்"

பேச்சுக்காகக் கூட என்னுடைய என்ற சொல்லைப் பயன்படுத்தாத குருவைப் பெருமிதத்துடன் பார்த்த அக்ஷய் புத்த விஹாரத்தின் முன் பகுதி அறையில் இருந்த போனில் அண்ணனின் ரகசிய செல் போனிற்கு போன் செய்தான்.

"ஹலோ" ஆனந்தின் குரல் ஆவலுடன் ஒலித்தது.

அக்ஷய் அண்ணனிடம் தனக்கு முழு நினைவு திரும்பியதைச்

சொல்லி விட்டு முன்பு நடந்தது அனைத்தையும் சொன்னான். தற்போதைய நிலவரத்தையும் சொன்னான். சலீம் தன்னைத் தொடர்ந்து வந்து புத்த விஹாரத்தின் வெளியே நிற்பதை மட்டும் சொல்லவில்லை. அண்ணனை அனாவசியமாகப் பயமுறுத்த அவன் விரும்பவில்லை. "... அந்த பென் டிரைவை அந்த மந்திரியின் போலீஸ் அடியாள்கள் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். இப்போது நம்மிடம் எந்த ஆதாரமும் இல்லை. இன்னும் குண்டு வெடிக்க சில மணி நேரங்கள் தான் இருக்கின்றன. ஆனந்த் அப்பாவி ஜனங்கள் நிறைய பேர் சாகப்போவதைத் தடுத்தே ஆக வேண்டும். என்ன செய்யலாம்?"

ஆனந்த் சொன்னான். "இரு மகேந்திரன் ஏதோ பேச வேண்டுமாம்..."

மகேந்திரன் குரல் பரபரப்புடன் கேட்டது. "அக்ஷய். நீ பேசியதை நானும் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன்... நீ மெயிலில் அனுப்பிய அட்டாச்மெண்ட் இருக்கிறதா என்று நான் ஆச்சார்யாவின் இ-மெயிலுக்குள் போய் பார்த்து விட்டேன். அவர் பாஸ்வர்டு கண்டுபிடிப்பது ஒன்றும் கஷ்டமாய் இருக்கவில்லை. ஆனால் அந்த குறிப்பிட்ட மெயிலை நம் எதிரிகள் நமக்கு முன்பே போய் அழித்து விட்டிருக்கிறார்கள். இப்போது ஒரு வழி இன்னும் இருக்கிறது. உன் இ-மெயிலில் அனுப்பிய நகல் இருக்கிறதா என்று பார்க்கலாம். நீ பார்த்து சொல்கிறாயா?"

"நான் இப்போது எந்த ப்ரவுசிங் செண்டருக்கும் போக முடியாத சூழ்நிலையில் இருக்கிறேன். நீயே பார்த்து சொல்லேன். நான் மெயில் ஐ.டி, பாஸ்வர்டு இரண்டையும் சொல்கிறேன்..."

"சொல். நான் லாப்டாப் முன்னால் தான் இருக்கிறேன். இப்போதே பார்த்து விடுவோம்...."

அக்‌ஷய் சொல்லச் சொல்ல குறித்துக் கொண்ட அவன் சில வினாடிகள் கழித்து வருத்ததுடன் சொன்னான். "அக்‌ஷய் அவர்கள் உன் இ- மெயிலுக்குள்ளேயும் போய் அதை அழித்திருக்கிறார்கள். அவர்கள் இதை முன்பே செய்து வைத்திருக்கிற மாதிரி தான் தெரிகிறது."

"மகேந்திரன் நீங்கள் எல்லாரும் சேர்ந்து உங்களால் என்ன முடியும் என்று யோசித்து செய்யுங்கள். நம் கையில் எத்தனையோ பேர் உயிர்கள் இருக்கின்றன என்பது மட்டும் ஞாபகம் இருக்கட்டும். சரி நான் பிறகு பேசுகிறேன்"

"அக்‌ஷய் போனை வைத்து விடாதே. ஆனந்த் பேச வேண்டுமாம்...."

அடுத்ததாக ஆனந்த் குரல் உணர்ச்சிவசப்பட்டு கேட்டது. "அக்‌ஷய்.

இனி நாங்கள் எங்களால் முடிந்ததை செய்கிறோம். அதைப் பற்றிய கவலையை விடு. நீ உன்னைப் பார்த்துக் கொள். நீ பத்திரமாக வந்து சேர். நீ நினைத்தால் அது கண்டிப்பாக முடியும். உன்னை எல்லோரும் அமானுஷ்யன் என்று கூப்பிடுவது அர்த்தம் இல்லாமல் அல்ல..."

அக்‌ஷய் மனம் வைத்தால் கண்டிப்பாக தப்பித்து விடுவான், மனம் வைப்பது மட்டும் தான் பாக்கி என்கிற வகையில் ஆனந்த் பேசியதைக் கேட்ட அக்‌ஷயிற்கு வேடிக்கையாக இருந்தது.

"ஆனந்த், நீ ஒரு சாதுவிடம் போய் கேட்ட போது நான் இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டு இருந்ததை ஞான திருஷ்டியில் பார்த்து சொன்னதை மறந்து விட்டாயா?"

ஆனந்திற்கு என்ன சொல்வது என்று என்று தெரியாமல் கோபப்பட்டான். "நீ ஒன்றும் அவருக்கு இளைத்தவன் அல்ல. நீ மனம் வை. அந்த பழைய விதியை நீ மாற்ற முடியும். ஞாபகம் வைத்துக் கொள். உனக்காக அம்மா காத்துக் கொண்டிருக்கிறாள். வருணும் சஹானாவும் காத்துக் கொண்டு இருக்கிறார்கள்...."

சஹானாவின் பெயரை ஆனந்த் அழுத்திச் சொன்னது போல் இருந்தது. ஒரு கணம் அக்‌ஷயும் பேச முடியாமல் நின்றான்.

வருணின் பிறந்த நாள் இரவு அவள் பாடிய பாடல் வரிகள் அவள் குரலிலேயே மனதில் மறு ஒலிபரப்பு ஆனது.

Love can touch us one time

and last for a lifetime

and never let go till we're gone.

ஒரு கணம் தடுமாறிய அவன் மறுகணம் தன்னை சுதாரித்துக் கொண்டான். அவனுக்கு இப்போது அவன் தனிப்பட்ட விஷயங்களைப் பற்றி யோசிக்க நேரமில்லை.

"சரி ஆனந்த். பிறகு பேசலாம்" என்று போனை வைத்து விட்டுத் திரும்பினான். அவனுடைய குரு அவனையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தார். ஒரு கண நேரம் அவன் தடுமாறியதை அவரும் கவனிக்கவே செய்தார். அது அவரை யோசிக்க வைத்தது போல் இருந்தது. ஆனால் அவர் அதைப் பற்றி எதுவும் கேட்கவில்லை. அவனாகவும் எதுவும் சொல்லவில்லை.

அவன் அவரை வணங்கி விட்டுக் கிளம்பினான்.

**********

மந்திரி வீரேந்திரநாத் ராஜாராம் ரெட்டியிடம் சொல்லிக் கொண்டிருந்தார். "...வெடிகுண்டு வெடிக்கிற நேரம் நான் டெல்லியில் இருக்க வேண்டாம் என்று நினைக்கிறேன். நான் ஜம்முவிற்குப் போகலாம் என்றிருக்கிறேன். அவன் பிணத்தை நான் முதலில் பார்க்க வேண்டும். அப்போது தான் நிம்மதி..."

மந்திரி அவனைப்பற்றி பேசும் போதெல்லாம் ஒரு வித படபடப்பை அவரிடம் ராஜாராம் ரெட்டியால் கவனிக்க முடிந்தது. அவனை சந்தித்த நாளில் இருந்து ஆரம்பித்த அந்த படபடப்பை மந்திரியால் அகற்ற முடியவில்லை. ஆரம்பத்தில் அவனை இமயமலையில் கொல்ல மந்திரி ரெட்டியைத் தான் அவர் நாடினார். எல்லாவற்றையும் கச்சிதமாகச் செய்யவும், கச்சிதமாகச் செய்யும் ஆட்களைத் தேர்ந்தெடுக்கவும் முடிந்த ரெட்டிக்கே அமானுஷ்யன் சவாலாகத் தான் மாறி இருந்தான். ஆனால் பென் டிரைவ் கிடைத்த உடனேயே அவனை ஜெயித்து விட்டதாக ரெட்டி நிம்மதியடைய ஆரம்பித்திருந்தார்.

கைதேர்ந்த நிபுணர்களைக் கொண்டு ஆச்சார்யாவின் இ-மெயிலிலும், அமானுஷ்யனின் இ-மெயிலிலும் சம்பந்தப்பட்ட ஃபைலை அழித்திருந்த அவருக்கு அவனால் மந்திரியை எந்த விதத்திலும் காட்டிக் கொடுக்க முடியும் என்று தோன்றவில்லை.

டிவி, பத்திரிக்கைகள் மூலம் ஏதாவது தகவலைக் கசிய வைத்து விடுவார்களோ என்ற பயத்தில் டெல்லியின் பல இடங்களில் வெடிகுண்டு வைக்கப்படுவது குறித்த வதந்திகள், மொட்டைக் கடிதங்கள், அனாமதேய போன் கால்கள் என்று பத்திரிக்கைகளுக்கும், போலீசுக்கும் தொடர்ந்து வருமாறு பார்த்துக் கொண்டிருந்தார். ஒருவர் சொன்ன இடம் இன்னொருவர் சொல்லாத படி எல்லா இடங்களையும் யாராவது ஒருவர் சொல்லும்படி பார்த்துக் கொண்டதால் பெரும் குழப்பத்தில் ஊடகங்கள் இருந்தன. இத்தனைக்கும் நடுவில் அந்த டிவிக்காரி மூலமாக தகவல் சொல்லப்பட்டாலும் யாருக்கும் அதை நம்பத் தோன்றாது. மேலும் அதிகார மையம் மந்திரியிடம் வலுவாக இருப்பதால் அவரை அவன் எதுவும் செய்ய முடியாது என்பது அவர் கருத்தாக இருந்தது. ஆனாலும் மந்திரி சொன்னது போல அவனை அழித்து விட்டால் பின் எந்த யோசனையும் இல்லாமல் இருக்கலாம்...

"அந்த சைத்தானை நம் ஆட்கள் யாராவது ஜம்முவில் பார்த்திருக்கிறார்களா? தோராயமாகவாவது எங்கிருப்பான் என்று தெரியுமா அவர்களுக்கு?" மந்திரி கேட்டார்.

ராஜாராம் ரெட்டி சொன்னார். "அவர்கள் அவனை இன்னும் கண்டுபிடிக்கவில்லை"

மந்திரி எரிச்சலுடன் சொன்னார். "நேரா நேரத்திற்கு சாப்பிடுகிறார்கள். அதைத் தவிர உருப்படியாக எதுவும் செய்கிற மாதிரி தெரியவில்லை. அந்த வெளிநாட்டுக் காரன் சலீம்?"

"ஆரம்பத்திலிருந்தே அவன் தான் அமானுஷ்யனை சரியான கண்காணிப்பில் வைத்திருக்கிறான்."

மந்திரி சொன்னார். "அவன் தலிபான்களிடம் அமானுஷ்யன் பிணத்தைக் கண்டிப்பாக ஒப்படைக்கிறேன் என்று சொன்னானாம். உயிரோடு பிடித்துத் தருவது தான் கஷ்டம். கொன்று விடுவதில் எந்தப் பிரச்னையும் இல்லை என்றானாம். அவர்களுக்கு சலீம் மேல் நம்பிக்கை இருக்கிறது. அவன் எடுத்த காரியத்தை இது வரையில் கோட்டை விட்டதில்லையாம்."

"எதற்கும் நீங்கள் தலிபான் தலைவனிடம் பேசுவது நல்லது...தாடிக்காரனிடம் பேசுவது வீண்." என்ற ராஜாராம் ரெட்டி தலிபான் தலைவனிடம் என்ன சொல்ல வேண்டும் என்பதைச் சொன்னார்.

மந்திரிக்கு அவர் சொன்னது பிடித்திருந்தது. என்னமாய் சிந்திக்கிறார் மனிதன் என்று ஆச்சரியப்பட்டார் அவர்.

ஆரம்பத்திலிருந்தே ரெட்டியின் ஆலோசனைகள் இல்லாமல் இருந்திருந்தால் அவர் நிறைய விஷயங்களை சாதித்திருக்க முடியாது. உடனடியாக தலிபான் தலைவனுக்கு வீரேந்திரநாத் போன் செய்தார்.

********

ஆனந்த், மகேந்திரன், மது மூன்று பேரும் அடுத்து என்ன செய்வது என்று பதட்டத்தில் இருந்தார்கள். பத்திரிக்கைகளிலும், தொலைக்காட்சியிலும் வெடிகுண்டு வதந்திகள் வந்த வண்ணம் இருப்பதைப் பற்றியே சொல்லிக் கொண்டிருந்தார்கள். கிட்டத்தட்ட டெல்லியின் எல்லா பகுதிகளிலும் வெடிகுண்டுகள் வெடிக்கும் என்பது போல செய்திகளால் பீதி கிளம்பி இருந்தது. அரசாங்கமோ விஷமிகளின் இந்தப் போக்கைக் கண்டித்து அறிக்கை விட்டுக் கொண்டிருந்தது. கடிகார முள் நகர நகர அவர்கடைய பதட்டம் அதிகரித்தபடியே இருந்தது. பல விதமான திட்டங்கள் அவர்கள் மனதில் எழுந்தன. அந்த பென் டிரைவை எப்படியாவது அபகரித்து விட்டால் என்ன என்று கூட அவர்களுக்குத் தோன்றியது.

"வீரேந்திரநாத்தின் உயிரை எடுப்பது அதை விடச் சுலபம்" என்றான் மகேந்திரன்.

"ஒரே வழி பிரதமரை சந்திப்பது தான். ஆனால் உடனடியாக அவரைப் பார்ப்பது கஷ்டம். பார்த்தாலும் நாம் சொல்வதை அவர் நம்புவது அதை விடக் கஷ்டம்" மது சொன்னான்.

"ஆனாலும் முயற்சி செய்து பார்ப்பதில் தவறில்லை" மகேந்திரன் சொன்னான்.

"அவரை நெருங்கக் கூட முடியாது" மது சொன்னான்.

ஆனந்த் கேட்டான். "அரசியல் செல்வாக்கிருக்கும் யார் உதவியையாவது நாம் கேட்டால் என்ன?"

"சாதாரண செல்வாக்கெல்லாம் போதாது. உடனடியாக சந்திக்க வேண்டுமென்றால் பெரிய இடத்தைப் பிடிக்க வேண்டும்." மது சொன்னான்.

ஆனந்த் மகேந்திரனைக் கேட்டான். "மகேந்திரன், உனக்கு மந்திரி யாரையோ தெரியும், அவர் மூலம் உனக்கு நம் டிபார்ட்மெண்டில் நல்ல செல்வாக்கு என்று சொல்கிறார்களே. அதை இந்த விஷயத்தில் பயன்படுத்தினால் என்ன?"

மகேந்திரன் சொன்னான். "என் ஒன்று விட்ட மாமா ஒருவர் மத்திய இணை அமைச்சர். அவரைக் கேட்டுப் பார்க்கலாம் தான். ஆனால் அவர் கூட இந்த மாதிரி விஷயத்தில் நமக்கு உதவுவாரா என்பது சந்தேகம் தான். அவர் ஒருவேளை வீரேந்திரநாத் பிரதமரானால் அவரிடமிருந்து பெரிய இலாக்கா ஏதாவது கேட்டு வாங்கலாமே என்று நினைக்கக்கூடிய ஆள்..."

ஆனந்த் அங்கலாய்த்தான். "தேசத்தின் மேல் உண்மையான அக்கறை இருக்கும் அரசியல்வாதியே இங்கே இல்லையா?"

மகேந்திரன் சிறிது நேரம் யோசித்து விட்டு சொன்னான். "அவர் சுத்த மோசம் என்று சொல்ல முடியாது. அதே நேரம் நல்ல ஆள் என்றும் சொல்ல முடியாது. மதில் மேல் பூனை மாதிரி எப்படி வேண்டுமானாலும் மாறக் கூடிய ஆள்."

"எதற்கும் அவரிடம் பேசித்தான் பாரேன்" என்றான் மது.

"நாம் சொன்னதை வீரேந்திரநாத்திடம் சொல்லி விடக்கூடிய ஆள் அல்லவே அவர்?" ஆனந்த் சந்தேகத்தை எழுப்பினான்.

"சேச்சே அப்படி செய்ய மாட்டார். ஒரு காலத்தில் என் அப்பா அவருக்கு நிறைய உதவி செய்திருக்கிறார். அதனால் காட்டிக்

கொடுக்க மாட்டார். ஆனால் நமக்கு உதவாமலும் இருக்க வாய்ப்பும் இருக்கிறது. எதற்கும் பேசிப் பார்க்கிறேன்" மகேந்திரன் உடனடியாக அவருக்குப் போன் செய்து பேசினான்.

சுமார் கால் மணி நேரம் நிலவரத்தை சுருக்கமாகச் சொன்ன மகேந்திரன் "மாமா, இப்போதைக்கு நம் நாட்டைக் காப்பாற்ற உங்களால் தான் முடியும். பிரதமரிடம் நாங்கள் பேச வேண்டும். அதற்கு தயவு செய்து நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்"

அவர் ஆரம்பத்தில் தயங்கினார். "ஆதாரம் இல்லாமல் பேசி என்ன பயன்?"

"மாமா, வெடிகுண்டு வெடித்த பிறகு நாங்கள் சொன்னது உண்மை என்பது புரியும். ஆனால் அப்போது புரிந்து என்ன ஆகப்போகிறது. குறைந்த பட்சம் வெடிகுண்டு வெடிப்பதையாவது தடுக்க ஏதாவது செய்யுங்களேன்"

"நீ சொல்வது போல வீரேந்திரநாத் இதில் உடன்பட்டிருந்தால் நாம் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் இருக்கும்படி முதலிலேயே முக்கியமானவர்களுக்கு உத்தரவு பிறப்பித்திருப்பார். ஒரே வழி பிரதமர் தலையீடு தான். எதற்கும் அவரை நீங்கள் சந்திக்க ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கிறேன்." என்றவர் போனை

வைத்தார்.

சரியாக இருபது நிமிடங்களில் திரும்பவும் போன் செய்தார். "அவருடைய அப்பாயின்மெண்ட் கிடைக்காது என்று அவருடைய செகரட்டரி சொல்கிறார். இடைவெளியே இல்லாமல் தொடர்ந்து முக்கிய நிகழ்ச்சிகள் இருக்கின்றனவாம். நீங்கள் அல்ல நானே போனாலும் பார்த்து பேச முடியாது என்கிற நிலைமை."

மூவரும் இந்த இருபது நிமிடங்கள் கிடைத்த லேசான நம்பிக்கையும் சிதைந்து ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

115

மகேந்திரன் தன் நம்பிக்கையைத் தளர விடுவதாக இல்லை. அவன் அந்த இணை அமைச்சரிடம் கெஞ்சும் தொனியில் சொன்னான். "மாமா நீங்கள் மனம் வைத்தால் முடியாதது இல்லை. ஏதாவது ஒரு வழி சொல்லுங்களேன்."

"நானே நேரில் போனால் கூட பிரதமரை சந்திக்க முடியாது என்கிற அளவுக்கு எல்லாம் இடைவெளி இல்லாத முக்கியமான நிகழ்ச்சிகள் என்கிற போது என்ன செய்வது சொல்?"

"மாமா...ஒரு வேளை உங்களுக்கு தனிப்பட்ட அவசரம் ஒன்று இருந்து கண்டிப்பாக பிரதமரைப் பார்த்தே ஆக வேண்டும் என்ற நிலைமை இருந்தால் நீங்கள் இந்த சூழ்நிலையில் என்ன செய்வீர்கள்?"

இணை அமைச்சர் ஒன்றும் சொல்லவில்லை.

மகேந்திரன் தொடர்ந்து சொன்னான். "மாமா, எந்த சூழ்நிலையிலும் பிரதமரை சந்திக்க முடிந்த யாராவது ஒருத்தர் உதவியை நாட மாட்டீர்களா? அப்படி யாராவது இருந்தால் அவர்களையாவது நாங்கள் சந்திக்க தயவு செய்து ஏற்பாடு செய்யுங்களேன். எங்களுக்காக கேட்கவில்லை மாமா, எத்தனையோ அப்பாவிகளுக்காகக் கேட்கிறோம்..தயவு செய்யுங்கள்"

"நீ புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாய்.... சும்மா தொந்திரவு செய்கிறாய். எதற்கும் யோசிக்கிறேன், எதாவது செய்ய முடிகிறதா என்று பார்க்கிறேன்" சொல்லி விட்டு அவர் போன் இணைப்பைத் துண்டித்தார்.

கடிகார முள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் வேகமாய் நகர நகர அவர்கள் படபடப்பு அதிகரித்தது.

மது கேட்டான். "அவர் சும்மா நமக்காகச் சொல்கிறாரா, இல்லை நிஜமாகவே எதாவது முயற்சி எடுப்பாரா?"

"முடியவே முடியாது என்றால் அதை என்னிடம் முதலிலேயே சொல்லி இருப்பார். யோசிக்கிறேன் என்றால் நிஜமாகவே யோசிக்கிறார் என்று தான் அர்த்தம். பார்க்கலாம்..."

இருபத்தேழு நிமிடங்களில் அவர் போன் செய்து பேசினார். "மகேந்திரன். நான் கட்சி தலைமைக்குழு உறுப்பினர் சதுர்வேதியிடம் பேசி இருக்கிறேன். அவர் இப்போது தன் வீட்டில் தான் இருக்கிறார். அவரைப் போய் பாருங்கள். அவர் மனம் வைத்தால் பிரதமரை சந்திக்க வைக்கலாம். அவர் உங்களை நம்புவது முக்கியம். அவரும் கை விரித்தால் நான் எதுவும் செய்ய முடியாது. இனி நீ எனக்கு போன் செய்யாதே. நான் எடுக்க மாட்டேன். நான் இதுவரை உங்களுக்கு செய்த இந்த உதவி வீரேந்திரநாத்திற்குத் தெரிந்தால், பிறகு அவர் பிரதமரானால் என் அரசியல் வாழ்க்கைக்கே உலை வைத்து விடுவார். ஆனாலும் துணிந்து நான் இதைச் செய்திருக்கிறேன் என்றால் அது உனக்காகவோ, இந்த தேசத்து அப்பாவிகளுக்காகவோ அல்ல. உன் அப்பாவிற்காகத் தான். ஆனால் இதற்கு மேல் இதில் நான் தலையிட விரும்பவில்லை" அவன் நன்றி சொல்வதற்கு முன் அவர் போன்

இணைப்பைத் துண்டித்து விட்டார்.

அவர்கள் சதுர்வேதி வீட்டிற்குப் பறந்தார்கள்.

83 வயதான சதுர்வேதி இளைஞராக இருந்த போது சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர். சுதந்திர இந்தியாவில் உத்திரப்பிரதேச மாநிலத்திலும் மத்தியிலும் மந்திரி பதவிகளை வகித்தவர். மக்கள் செல்வாக்கு அதிகமில்லை என்றாலும் கட்சியில் செல்வாக்கு மிகுந்தவர். தற்போது மந்திரி பதவி எதுவுமில்லை என்றாலும் மந்திரிகளைத் தேர்ந்தெடுக்கிற அதிகாரமுள்ள கட்சித் தலைமைக் குழுவின் முக்கியமான உறுப்பினராக இருப்பவர்.

இவர்கள் சென்ற போது அவர் வீட்டின் வரவேற்பறையில் கட்சிக்காரர்கள் சிலரிடம் பேசிக் கொண்டிருந்தார். வியர்க்க விறுவிறுக்க அவர்கள் நுழைந்ததைப் பார்த்தவுடன் அவர்கள் யாரென்று அவர் புரிந்து கொண்டது போல இருந்தது. உடனே பேசிக்கொண்டிருந்த ஆட்களிடம் சொன்னார். "சரி நாளைக்கு வாங்க"

திடுதிப்பென்று அவர் அப்படி சொன்னதும் ஏமாற்றமடைந்தாலும் அவர்கள் மறு பேச்சு பேசாமல் எழுந்தனர். அவர்களில் ஒருவன் இவர்களை முறைத்தான். அந்த ஆட்கள் போனவுடன் சதுர்வேதி

சொன்னார். "உட்காருங்கள். முதலில் உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள்."

அவர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்ட போது அவர்களைத் தன் சோடாபுட்டிக் கண்ணாடி வழியே துளைத்து விடுவது போல பார்த்தார். பிறகு அவர்களிடம் எல்லாவற்றையும் ஆரம்பத்திலிருந்து சொல்லச் சொன்னார். அவர்கள் சொல்லச் சொல்ல இரண்டு தடவை கொட்டாவி விட்டார். அவருக்கு அவர்கள் சொல்வது புரிந்ததா என்பதே சந்தேகமாக இருக்கும்படி உணர்ச்சியே இல்லாமல் கேட்டுக் கொண்டிருந்தார்.

வீரேந்திரநாத்தின் திட்டங்களையும் அதை வெளிப்படுத்தி விடுவான் என்ற பயத்தில் அக்க்ஷயைத் தீவிரவாதியாக விளம்பரப்படுத்தி அழிக்கப் பார்ப்பதையும் விவரமாகக் கேட்ட சதுர்வேதி கடைசியில் சொன்னார். "வீரேந்திரநாத் எங்கள் கட்சியின் விசுவாசமான உறுப்பினர். இந்த நாட்டின் உள்துறை மந்திரி. இப்போதில்லா விட்டாலும் இந்த நாட்டிற்கு இன்னொரு சமயமாவது பிரதமராக வரக்கூடியவர். அவரைப் பற்றி நீங்கள் சொல்வதெல்லாம் நிஜம் தானா? இல்லை அவர் மீது உங்களுக்கு ஏதாவது காழ்ப்புணர்ச்சியா?"

மகேந்திரன் சொன்னான். "அப்படியெல்லாம் இல்லை சார். இது

எல்லாம் கற்பனை செய்து சொல்லக்கூடிய விஷயம் அல்ல. அது உங்களுக்கே தெரியும்."

சதுர்வேதி ஒன்றும் சொல்லாமல் சில வினாடிகள் அவர்களையே பார்த்தார். அவர்களை நம்புவதா வேண்டாமா என்று அவர் இன்னும் தீர்மானிக்காதது போல் இருந்தது. பிறகு கேட்டார். "அந்தப் பையன் பாம்பே நாகராஜன் மகனாய் வளர்ந்தவன் என்று தானே சொன்னீர்கள்"

"ஆமாம் சார்"

சதுர்வேதி மெல்ல எழுந்து தன் தொலை பேசி புத்தகத்தில் ஒரு எண்ணைத் தேடிக் கண்டுபிடித்து அந்த எண்ணிற்கு போன் செய்தார்.

"இப்ராஹிம் நான் சதுர்வேதி பேசறேன்"

"ஐயா என்னை நினைவு வைத்துக் கொள்ள நான் என்ன பாக்கியம் செய்தேன் என்றே புரியவில்லை. பேசி பல வருடங்கள் ஆனதால் என்னை மறந்து விட்டீர்கள் என்றே நினைத்தேன்."

"அப்படியெல்லாம் இல்லை. கட்சிக்குள் ஏகப்பட்ட பிரச்சினைகள்.

அதை சமாளிப்பதே பெரும்பாடு ஆகி விடுகிறது. வேறெதற்கும் நேரம் கிடைப்பதில்லை. எனக்கு ஒரு விஷயத்தில் உன் அபிப்பிராயம் தேவைப்படுகிறது.."

"சொல்லுங்கள் ஐயா"

"உன் சிநேகிதன் நாகராஜன் வளர்த்த பையன் இருந்தானே, பெயர் ஏதோ அக்‌ஷய் என்றார்கள், அவன் ஆள் எப்படி?"

மறுமுனை மௌனமாகியது.

சதுர்வேதி தொடர்ந்து சொன்னார். "உன் இரண்டு மகன்கள் சாகக் காரணமாக இருந்தவனைப் பற்றிக் கேட்கிறேன் என்று நினைக்காதே. அவன் ஒரு தீவிரவாதி என்று இங்கே போலீஸ் தேடிக் கொண்டிருக்கிறது. அதனால் தான் எனக்கு நம்பிக்கையான உன்னிடம் கேட்கிறேன். சொல் அவன் தீவிரவாதியாக மாறி விட்டான் என்பதில் ஏதாவது உண்மை இருக்குமா?"

இப்ராஹிம் சேட் உணர்ச்சி பூர்வமாகச் சொன்னார். "அவனைத் தீவிரவாதி என்று யார் சொன்னாலும் அல்லா மன்னிக்க மாட்டார் ஐயா! செத்துப் போன என் மகன்கள் மேல் ஆணையாக சொல்கிறேன். அவன் பத்தரை மாற்றுத் தங்கம் ஐயா"

"நன்றி இப்ராஹிம். இன்னொரு நாள் நான் சாவகாசமாகப் பேசுகிறேன்"

இப்ராஹிம் சேட்டிடம் பேசி முடித்த பிறகு சிறிதும் யோசிக்காமல் சதுர்வேதி பிரதமரின் செகரட்டருக்கு போன் செய்தார். "நான் சதுர்வேதி பேசுகிறேன். இப்போது பிரதமர் என்ன செய்து கொண்டிருக்கிறார்."

"அவர் அருணாசலப்பிரதேச முதலமைச்சருடன் ஏதோ முக்கிய விஷயமாக பேசிக் கொண்டிருக்கிறார். இன்னும் அரை மணி நேரம் அவருக்கு அப்பாயின்மெண்ட் இருக்கிறது ஐயா"

அருணாசலப் பிரதேச முதலமைச்சர் அவர்கள் கட்சிக்காரர் தான். சதுர்வேதி சொன்னார். "உடனடியாக பிரதமருக்குப் போனைக் கொடு. நாட்டு பாதுகாப்பு விவகாரம் பற்றி அவசரமாகப் பேச வேண்டி இருக்கிறது...."

சதுர்வேதி ஆணையை மீற முடியாத செகரட்டரி உடனடியாக பிரதமருக்கு இணைப்பைத் தந்தார்.

பிரதமரின் குரல் மரியாதையுடன் கேட்டது. "ஐயா சொல்லுங்கள்"

சதுர்வேதி தற்போதைய பிரச்சினையை ரத்தினச் சுருக்கமாக ஐந்தே நிமிடத்தில் சொன்னார். அவரைப் பார்த்துக் கொண்டிருந்த மூவரும் அந்தக் கிழவர் முக்கியமான செய்திகள் எதையும் விட்டு விடாமல் அதே நேரத்தில் குழப்பாமல் முழுமையான நிலவரத்தை சுருக்கமாகச் சொன்ன விதத்தை எண்ணி அதிசயித்தார்கள். கொட்டாவி விட்டுக் கொண்டு கேட்ட போதிலும் மனிதர் முழு கவனத்துடன் கேட்டிருக்கிறார்.

கடைசியாக சதுர்வேதி சொன்னார். "...நான் அந்தப் பையனுக்கு வேண்டப்பட்ட மூன்று பேரை அனுப்புகிறேன். கேட்டு என்ன செய்ய வேண்டுமோ செய்யுங்கள். முதலிலேயே நம் ஆட்சி மேல் மக்களுக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை. இவர்கள் சொல்வது போல் குண்டும் வெடித்தால் அது நம் நிலைமையை இன்னும் மோசமாக்கி விடும். நமக்கு இப்போது நேரம் அதிகம் இல்லை.... அவர்கள் உடனடியாக அங்கே வருவார்கள். பாதுகாப்பு அதிகாரிகளிடம் சொல்லி வையுங்கள்...."

போனை வைத்து விட்டு சதுர்வேதி மூவரிடமும் சொன்னார். "எதற்கும் உடனடியாக பிரதமரைப் பாருங்கள். இனி என்ன செய்ய வேண்டும் என்று அவர் தான் தீர்மானிக்க வேண்டும். அந்த ஆள் கையாலாகாத ஆள் என்று பெயர் எடுத்திருந்தாலும் முட்டாள்

அல்ல. நாளைக்கு மக்களுக்கு பதில் சொல்லப் போவது அவர் தான் என்பதால் ஏதாவது சரியான முடிவெடுப்பார்."

ஆனந்த் கண்கலங்கியே விட்டான். இந்த அளவு இந்த மனிதர் உதவக்கூடும் என்று அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. "உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை சார்"

உணர்ச்சிவசப்பட்டு பேசின அவனைத் தட்டிக் கொடுத்தபடி சதுர்வேதி சொன்னார். "நான் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டவன். மக்கள் எதிர்பார்க்கிற அளவுக்கு நான் மகா உத்தமனாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் நாட்டையே அழிக்கக் கூடிய சக்தியைக் கண்டிப்பாக ஆதரிக்க மாட்டேன்...சீக்கிரம் போங்கள்"

********

பிரதமர் சதுர்வேதியிடம் பேசி முடித்த பிறகு அருணாசலப் பிரதேச முதல்வரிடம் சொன்னார். "சதுர்வேதி ஐயா ஒரு முக்கியமான விஷயமாய் பேசினார். நாட்டு பாதுகாப்பு சம்பந்தமான திடீர் பிரச்சினை ஒன்று வந்திருக்கிறது....."

அருணாசல முதல்வர் உடனடியாக எழுந்து கொண்டார். "சரி சார்.

மீதியை நாம் கடிதம் அல்லது போன் மூலமாக முடித்துக் கொள்ளலாம். வருகிறேன்"

பிரதமர் உடனடியாக தன் செகரட்டரியை அழைத்து சொன்னார். "உளவுத்துறை தலைவர், டிஐஜி கேசவதாஸ், வெடிகுண்டு இலாக்கா தலைவர் மூன்று பேரையும் கால் மணி நேரத்திற்குள் இங்கே வந்து சேரச் சொல்லுங்கள். தேசியப்பாதுகாப்பு சம்பந்தமான விஷயம் என்று சொல்லுங்கள். அடுத்த அப்பாயின்மெண்டை அந்தக் காரணம் சொல்லியே கேன்சல் செய்யுங்கள்..."

செகரட்டரி ஓடினார்.

*******

பிரதமர் அலுவலகத்தில் இருந்து போன் வந்ததும் டிஐஜி கேசவதாஸ் பிரதமர் பேசப்போவதில் அமானுஷ்யன் விவகாரம் கண்டிப்பாக இருக்கும் என்று யூகித்தார். தீவிரவாதியாக அவனை சித்தரித்து உயிரோடோ, பிணமாகவோ அவனைப் பிடித்துத் தருபவர்களுக்கு தரும் பரிசுத் தொகையை நாளுக்கு நாள் உயர்த்திக் கொண்டே போனதைப் பார்த்து வரும் அவருக்கு அதை யூகிக்க அதிக நேரமாகவில்லை.

பிரதமர் கேட்டால் "எனக்கே முழுவதும் தெரியாது, எல்லாம் எனக்கு அடுத்த நிலையில் இருப்பவர்களுக்குத் தான் தெரியும் என்று சொல்வதை விட வெட்கக்கேடான விஷயம் ஒன்றும் இருக்க முடியாது" என்று நினைத்தவர் உடனடியாக சம்பந்தப்பட்ட தன் அடுத்த நிலை அதிகாரிக்குப் போன் செய்தார்.

"பிரதமர் ஆபிசில் இருந்து போன் வந்திருக்கிறது. உடனடியாக என்னை வரச் சொல்லி இருக்கிறார்கள். எதைப் பற்றி என்று தெரியவில்லை. போனால் தான் தெரியும். எனக்கு அமானுஷ்யன் விவகாரமாக இருக்கலாமோ என்று சந்தேகம் வருகிறது. உண்மையில் என்ன தான் நடக்கிறது?"

இந்த செய்தி மறுமுனைக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது என்பது அவர் திக்கித் திணறி ஏதேதோ அர்த்தமில்லாமல் பேசியதைக் கேட்கையிலேயே தெரிந்தது. எரிச்சலடைந்த கேசவதாஸ் சொன்னார். "நான் முன்பே மந்திரி வீரேந்திரநாத்திடம் சொல்லி இருந்தேன். அவனைப் போன்றவர்கள் அபாயமானவர்கள் என்று. அவர் அலட்சியமாக இருந்து விட்டார். இப்போது தேவை இல்லாமல் நான் பதில் சொல்ல வேண்டி இருக்கிறது. அவனைப் போன்றவர்களை விட்டு வைப்பதும், பற்றி எரியும் தீயை அணைக்காமல் இருப்பதும் ஒன்று தான்.... சரி நம் ரிக்கார்டு படி

அவனைப் பற்றி என்ன சொல்ல வேண்டும் சொல்லுங்கள்...."

என்ன எல்லாம் எழுதி வைத்திருக்கிறார்களோ அதை அப்படியே வாசித்துக் காட்டினார் அந்த உயர் அதிகாரி.

"சரி சரி.... நான் அங்கே இருந்து வந்தவுடன் கூப்பிடுகிறேன்" என்று எரிச்சலுடன் சொன்ன கேசவதாஸ் பிரதமர் அலுவலகத்திற்குக் கிளம்பினார்.

கேசவதாஸிடம் பேசி முடித்த அந்த அதிகாரி உடனடியாக மந்திரி வீரேந்திரநாத்திற்கு இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

116

வீரேந்திரநாத் ஜம்மு விமான நிலையம் இறங்கிய உடனேயே கிடைத்த செய்தி அவரைத் திகைக்க வைத்தது. அவருக்குத் தெரிந்த வரை இன்றைய தினம் பிரதமருக்கு ஏகப்பட்ட வேலைகள் இருந்த தினம். கலந்து கொள்ள பல நிகழ்ச்சிகள் உள்ள தினம். நேரடியாகப் பேச சில முக்கியமான மனிதர்களுக்கு முன்கூட்டியே அனுமதி தந்திருந்த தினம். அப்படி இருக்கையில் அவற்றில் சிலவற்றை ஒதுக்கி விட்டு திடீரென்று கேசவதாஸை அழைக்கிறார் என்றால்....

உடனடியாக ராஜாராம் ரெட்டிக்குப் போன் செய்து தகவலைச் சொன்னார். "... அந்த ஆள் இது அமானுஷ்யன் விவகாரமாகத் தான் இருக்கும் என்று நினைப்பதாகச் சொல்கிறாராம். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

ராஜாராம் சில வினாடிகள் தாமதித்து விட்டுச் சொன்னார். "இருக்கலாம்..."

வீரேந்திரநாத்திற்குத் தூக்கிவாரிப் போட்டது. "என்ன இப்படி சொல்கிறீர்கள்?"

"என் உள்ளுணர்வு அப்படித் தான் சொல்கிறது"

வீரேந்திரநாத்திற்கு வயிற்றைக் கலக்கியது. அவருக்குத் தெரிந்து ராஜாராம் ரெட்டியின் உள்ளுணர்வு சொன்னது எதுவும் இது வரை பொய்த்ததில்லை. "இப்போது என்ன செய்வது?"

"முதலில் கேசவதாஸ் அவரிடம் பேசி விட்டு வரட்டும். விஷயம் என்ன என்பது தெரியும். பிறகு பார்க்கலாம். கேசவதாஸ் நம்மிடம் சொல்வார் தானே"

"அந்த ஆள் தான் அன்றைக்கே அமானுஷ்யனைக் கொன்று விடச்

சொன்னவர். இப்போது கூட "நெருப்பில் மீதம் வைப்பது போல அவனை விட்டு வைத்தது அபாயம்" என்று சொன்னாராம்... அதனால் அவர் கண்டிப்பாக சொல்வார். அவர் குடும்பத்தை ஏதாவது செய்து விடுவேன் என்று அவன் பயமுறுத்தியதை அவர் விரும்பவில்லை...."

"அப்படியானால் நாம் அவர் திரும்பி வரும் வரை பொறுமையாக காத்திருக்கலாம்... அதற்குள் அமானுஷ்யனைக் கொன்று விடுவது நல்லது. திரும்பவும் அவனைப் பற்றி ஏதாவது தகவல் வந்ததா?"

"தலிபான் தலைவன் போன் செய்தால் அந்த சலீம் போனை எடுக்க மாட்டேன்கிறானாம். அவன் ஒரு வேலையில் ஈடுபட்டிருக்கையில் யாரிடமும் தேவை இல்லாமல் பேச மாட்டானாம். யார் பேசுவதும் அவனுக்குப் பிடிக்காதாம். ஆனாலும் தலிபான் தலைவன் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டே இருப்பதாக சொன்னான்....."

"அவசரமாய் போனில் உன்னிடம் பேச வேண்டும். தயவு செய்து பேசு என்று ஒரு எஸ் எம் எஸ் அனுப்பச் சொல்லுங்கள்.... நம் ஆட்களையும் அங்கே அவனை ஜல்லடை போட்டு தேடச் சொல்லி இருக்கிறேன். கேசவதாஸ் போய் விட்டு தகவல் வந்ததும் எனக்கு உடனடியாகச் சொல்லுங்கள்"

"சொல்கிறேன்... எனக்கு ஒரே ஒரு சந்தேகம்..."

"என்ன?"

"அந்த அமானுஷ்யன் சைத்தான் எப்படியாவது டெல்லி போயிருக்க மாட்டானில்லையா?"

"அது மட்டும் நடந்திருக்க வாய்ப்பே இல்லை. நம் ஆட்களிடம் அவனை ஜம்முவில் கண்டுபிடிக்கிறீர்களோ இல்லையோ அவன் ஜம்முவை விட்டு டெல்லிக்கு வராதபடி பார்த்துக் கொள்ளுங்கள் என்று உத்தரவு போட்டிருக்கிறேன். விமான நிலையம், ரயில் நிலையம் என்று நம் ஆட்கள் கண்கொத்திப் பாம்பாய் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவன் ஜம்முவில் இருப்பது உறுதி. அவன் சமாதியும் அங்கேயே இருக்கிற மாதிரி பார்த்துக் கொள்வது நம் எல்லோருக்கும் நல்லது"

*********

ஆனந்த், மகேந்திரன், மது மூவரும் பிரதமரின் அலுவலகத்தில் நுழைந்தவுடன் அவசர அவசரமாக உள்ளே அழைத்து செல்லப்பட்டனர். அறையில் பிரதமருடன் இரண்டு பேர்

இருந்தார்கள். அவர்கள் மூச்சு வாங்குவதைக் கண்ட பிரதமர் ஒரு நிமிடம் ஓய்வு எடுக்கச் சொன்னார். "இன்னும் ஒருவர் வர வேண்டி இருக்கிறது. அவர் இரண்டு நிமிடங்களில் வந்து விடுவார்...."

அவர் சொன்ன நபர் டிஐஜி கேசவதாஸ் தான். அவர் சொன்னபடி கேசவதாஸ் இரண்டே நிமிடங்களில் அங்கே வந்து சேர்ந்தார். பிரதமர் அறையில் உளவுத் துறை தலைவரும், வெடிகுண்டு இலாக்கா தலைவரும் இருப்பதைப் பார்த்தவுடன் திடுக்கிட்டவர் அதை வெளியே காண்பித்துக் கொள்ளவில்லை. அடுத்ததாக இது வரை சந்தித்திராத வேறு மூன்று நபர்களைப் பார்த்தார். ஒருவனை மட்டும் எங்கேயோ பார்த்தது போல் இருந்தது. மூளையைக் கசக்கிய போது ஏதோ டிவியில் பார்த்த நினைவு வந்தது. மற்ற இருவரும் அவர் அறியாதவர்கள். ஒரு இருக்கையில் அமர்ந்தவர் பிரதமரைக் கேள்விக்குறியோடு பார்த்தார்.

பிரதமர் அந்த மூவரிடமும் கேசவதாஸையும், மற்ற இரு உயர் அதிகாரிகளையும் அறிமுகப்படுத்தி விட்டு சொன்னார். "நீங்கள் மூவரும் யார் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு சொல்ல வந்ததை விவரமாகச் சொல்லுங்கள்"

கேசவதாஸை அங்கு சிறிதும் எதிர்பார்த்திராத மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ஆனால் இனி யோசிக்க நேரம்

அவர்களுக்கு இல்லை என்பதால் ஆனந்த் தான் சொல்ல வந்ததை விவரமாகச் சொல்ல ஆரம்பித்தான். அவன் சொல்லச் சொல்ல பிரதமர் உட்பட அனைவரும் அதிர்ச்சி அடைந்தது தெரிந்தது. கேசவதாஸின் அதிர்ச்சி நடிப்பா, இல்லை உண்மையா என்று அவர்களுக்குத் தெரியவில்லை.

அவன் முடித்த பின்பும் சிறிது நேரம் அவர்கள் பேச்சிழந்தே இருந்தார்கள். பிரதமர் கேசவதாஸ், உளவுத்துறை தலைவர், வெடிகுண்டு இலாக்கா தலைவர் மூவரிடமும் சொன்னார். "உங்களுக்கு இவர்களிடம் ஏதாவது கேட்க இருந்தால் கேட்கலாம்.."

வெடிகுண்டு இலாக்கா தலைவர் கேட்டார். "வெடிகுண்டு வெடிக்க இருக்கும் இடங்கள் என்று நீங்கள் சொன்ன இடங்கள் ஒவ்வொன்றிலும் குறிப்பாக எங்கே வெடிக்கும் என்பது உங்கள் தம்பிக்குத் தெரியவில்லையா?"

"அந்த இடங்களைத் தீர்மானித்த போது அவன் அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்திருக்கிறான். ஆனால் அதிலும் குறிப்பாக எங்கே என்று அவர்கள் தீர்மானித்த சமயத்திற்கு முன்பே அவனை அவர்கள் கண்டுபிடித்து விட்டார்கள். அதனால் அந்த குறிப்பான இடங்கள் தெரியவில்லை...."

பிரதமர் கேசவதாஸையும், உளவுத்துறை தலைவரையும் பார்த்தார். அவர்கள் தங்களுக்குக் கேட்க எதுவுமில்லை என்று தலையாட்டினார்கள். பிரதமர் ஆனந்த் பக்கம் திரும்பினார். " ஒரு நாட்டின் உள்துறை மந்திரி மீது குற்றம் சாட்டி இருக்கிறீர்கள். நீங்கள் சொன்னதை எல்லாம் எனக்கு இப்போதும் நம்ப முடியவில்லை. ஆனாலும் வெடிகுண்டுகள் விஷயத்தில் நான் அலட்சியமாக இருக்க விரும்பவில்லை. அதனால் நீங்கள் சொன்ன இடங்களில் வெடிகுண்டுகள் வெடிக்காமல் இருக்க என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதை எல்லாம் கண்டிப்பாக நாங்கள் செய்வோம் என்பதை உங்களுக்கு நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.... உங்கள் தகவலுக்கு நன்றி. அது உண்மையாக இருக்கும் பட்சத்தில் நாடே உங்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறது. நீங்கள் கிளம்பலாம். இனி நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்"

மூவரும் நன்றி சொல்லி விட்டுக் கிளம்பினார்கள்.

அவர்கள் போனவுடன் பிரதமர் அந்த அதிகாரிகளைப் பார்த்துக் கேட்டார். "நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர்கள் சொன்னதை நம்புகிறீர்களா?"

உளவுத்துறை தலைவர் சொன்னார். "அந்த அமானுஷ்யன், அது தான் அந்த அக்‌ஷய், தீவிரவாதி அல்ல என்பதில் எங்கள் துறைக்கு

எந்த சந்தேகமும் இல்லை. அதை நான் உள்துறை மந்திரியிடமே தெரிவித்தும் இருக்கிறேன். அவருக்கு அவன் மேல் ஏதாவது தனிப்பட்ட விரோதம் இருக்கலாம். மற்றபடி அவர் இந்த அளவு நாட்டையே அழிக்கக் கூடிய வேலைக்குப் போவாரா என்பதில் எனக்கு இன்னும் சந்தேகம் இருக்கிறது"

வெடிகுண்டு இலாக்கா தலைவர் கவனமாகச் சொன்னார். "உள்துறை மந்திரி பற்றி அவர்கள் சொன்னது எந்த அளவு உண்மை என்பது எனக்குத் தெரியாது. ஆனால் வெடிகுண்டு சம்பந்தப்பட்ட விஷயத்தில் அவர்கள் சொன்னதில் உண்மை இருக்கலாம் என்று தோன்றுகிறது. ஏனென்றால் சாதாரணமாக பொய்யாய் அங்கே வெடிகுண்டு வைக்கப்பட்டு இருக்கிறது, இங்கே வெடிகுண்டு வைக்கப்பட்டு இருக்கிறது என்கிற வதந்தி ஏதாவது ஓரிடத்தைச் சொல்லி தான் வரும். இப்போது சில நாளாக எல்லா இடங்களையும் சொல்லி வருகிற தொடர் வதந்திகளைப் பற்றி யோசித்தால் ஏதோ சில உண்மையாக வெடிக்கப் போகிற இடங்களை மறைக்க எல்லா இடங்களையும் சொல்கிறது பொருத்தமான திட்டமாகத் தான் தெரிகிறது."

"அப்படியானால் உங்கள் திறமையான ஆட்கள் அத்தனை பேரையும் அவர் சொன்ன அந்த இடங்களில் குவியுங்கள். இடங்களைக் கண்டுபிடித்து வெடிகுண்டு எதுவும் வெடிக்காமல்

பார்த்துக் கொள்ளுங்கள். நம்மிடம் இப்போது நேரம் அதிகமில்லை. வெடிக்கப் போகும் நாள் மட்டும் தான் இப்போது தெரிந்திருக்கிறதே தவிர நேரங்கள் தெரியவில்லை... இதில் நம்பிக்கையான ஆட்களைப் பயன்படுத்த வேண்டும். நாம் உஷாரானது தெரிந்தால் அவர்கள் நிச்சயித்து விட்ட நேரத்திற்கும் முன்னாலேயே வெடித்து விடும் சாத்தியம் இருக்கிறது. நீங்கள் உடனடியாகப் புறப்படுங்கள். உங்கள் வேலை ஆக எந்த உதவி வேண்டுமானாலும் நீங்கள் கேளுங்கள். மறு கேள்வி கேட்காமல் உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது என் பொறுப்பு.."

வெடிகுண்டு இலாக்கா தலைவர் எழுந்தார்.

பிரதமர் சொன்னார். "வீரேந்திரநாத் விவகாரம் உண்மையோ, பொய்யோ தெரியவில்லை. ஆனால் நம்மைத் தவிர வேறு யாருக்கும் இது கசிந்து விடக்கூடாது. நாட்டு நலன் மேல் அக்கறை இருக்கிற உங்கள் மூவருக்கும் இதற்கு அதிகமாக நான் சொல்லத் தேவை இல்லை என்று நினைக்கிறேன்.."

மூவரும் தலையாட்டினார்கள். வெடிகுண்டு இலாக்கா தலைவர் வேகமாக வெளியேறினார். பிரதமர் கேசவதாஸைப் பார்த்தார். வந்ததில் இருந்து வாய் திறக்காத அவர் வேறு வழியில்லாமல் கவனமாகப் பேச ஆரம்பித்தார். "அமானுஷ்யன் விவகாரம் என்

நேரடிப் பார்வையில் துப்பு துலக்கப்படவில்லை என்பது உண்மை. ஆனால் அதைச் செய்து எனக்கு ரிப்போர்ட் செய்கிற அதிகாரிகள் உள்துறை மந்திரியால் விலைக்கு வாங்கப்பட்டவர்களா என்பதில் எனக்கு இன்னமும் சந்தேகம் இருக்கிறது. இருந்திருக்க முடியாது என்பதையும் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. இனி ஆழமாக அலசினால் மட்டுமே உண்மை தெரியும்"

"அந்த சிபிஐ டைரக்டர் ஜெயினை ராஜாராம் ரெட்டி தான் கோமாவிற்கு போகச் செய்தார் என்கிறார்கள். அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். அந்த ராஜாராம் ரெட்டி நல்லவர் என்று முன்பு கேள்விப்பட்டிருக்கிறேன்....."

கேசவதாஸ் உளவுத்துறை தலைவரைப் பார்த்தார். உளவுத் துறை தலைவர் சொன்னார். "அது எந்த அளவு உண்மை என்று தெரியாது. ஆனால் இந்த அமானுஷ்யன் விஷயத்தில் அவர் ஈடுபாடு காட்டுவது தெரியும். வீரேந்திரநாத்திற்கு இப்போது அவர் நெருக்கமாக இருப்பதும் தெரியும்."

பிரதமர் கேசவதாஸிடம் கேட்டார். "இனி எப்படி இந்த விஷயத்தை கையாள்வது என்றிருக்கிறீர்கள்?"

"நானே தனிப்பட்ட முறையில் இந்த அமானுஷ்யன் விவகாரத்தை எடுத்துக் கொள்ளலாம் என்றிருக்கிறேன் சார். அவர்கள் சொன்னது உண்மையாக இருக்கும் பட்சத்தில் இதை நாம் கையாள்வதில் சிறிய தவறு வந்தாலும் அதற்கு நாம் பெரிய விலை தர வேண்டி இருக்கும்...."

"சரி அப்படியானால் நீங்கள் போகலாம். எனக்கு அவ்வப்போது என்ன நிலவரம் என்று தெரிவித்துக் கொண்டிருங்கள்...."

டிஐஜி கேசவதாஸ் கிளம்பினார்.

அவர் போனவுடன் பிரதமர் உளவுத்துறை தலைவரிடம் கேட்டார். "இத்தனை விஷயங்கள் நடந்திருக்கின்றன. எப்படி இதெல்லாம் உளவுத்துறையின் கவனத்திற்கு வராமல் போயிருக்கிறது?"

உளவுத்துறைத் தலைவர் சொன்னார். "ஏதோ சில நாசவேலை சக்திகள் நம்மைத் தாக்கலாம் என்று எங்களுக்குத் தெரிய வந்தது. ஆனால் உள்துறை மந்திரியே சம்பந்தப்பட்டிருப்பார் என்ற அளவுக்கு என்னால் சிந்திக்க முடியவில்லை. ஆனால் சமீப காலமாக அவர் நடந்து கொள்வது கொஞ்சம் சந்தேகமாகத் தான் இருக்கிறது..."

தொடர்ந்து சலீம் என்ற சர்வ தேச வாடகைக் கொலையாளி விவகாரத்தை உள்துறை மந்திரிக்குத் தெரிவிக்கப் போனதை விவரித்து சொன்னார்.

"...நான் அவன் நாசவேலை ஏதோ செய்ய இங்கே வந்திருக்கிறானோ என்று சந்தேகப்பட்டேன். இப்போது யோசித்தால் அந்த அமானுஷ்யனைக் கொல்லக் கூட இருக்கலாம் என்று தோன்றுகிறது. சலீம் விஷயத்தை உள்துறை மந்திரி அப்படியே அமுக்கப் பார்த்தது அந்த சந்தேகத்தை உறுதி செய்கிறது"

*******

வெளியே கிளம்பின அக்ஷயை நிறுத்திய வயதான பிக்கு சொன்னார்.

"அக்ஷய். முதலில் நான் போகிறேன்...."

"எதற்கு?"

"இந்த புத்த விஹாரத்தைத் தேடி ஒரு விருந்தாளி வெளிநாட்டில் இருந்து வந்திருக்கிற மாதிரி தெரிகிறது. நான் சென்று சில வார்த்தைகள் பேசா விட்டால் அது மரியாதையாக இருக்காது" சொல்லி விட்டு அவனை ஆழமாகப் பார்த்தார்.

அவர் பார்வையைப் படிக்க முடிந்த அக்‌ஷய் மறுத்து எதுவும் சொல்வதற்கு முன் அவர் வெளியே சென்று விட்டார்.

புத்த விஹாரத்திலிருந்து ஒரு கிழட்டு பிக்கு வெளியே வருவதைக் கண்ட சலீம் அவரை நோக்கி வர ஆரம்பித்தான்.

கையில் ஜபமாலையைச் சுழற்றியபடியே வந்த மூத்த பிக்கு குனிந்து அவனை மரியாதையுடன் வணங்கினார். "வாருங்கள், வாருங்கள். உள்ளே வாருங்கள்"

சலீம் அவரை ஊடுருவிப் பார்த்தபடி சொன்னான். "நான் என் நண்பன் ஒருவனைப் பின் தொடர்ந்து வந்தேன். அவன் இப்போது உங்கள் புத்த விஹாரத்திற்குள் இருக்கிறான். அவனுக்காகத் தான் காத்திருக்கிறேன். அவனை உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அவன் பெயர் அக்‌ஷய். அவனை அமானுஷ்யன் என்றும் கூப்பிடுவார்கள்"

கேசவதாஸ் அவசர அவசரமாக ஜம்முவிற்குக் கிளம்பிக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் தான் அமானுஷ்யன் கேஸைக் கவனித்துக் கொண்டு இருந்த அந்த உயர் அதிகாரியின் போன் வந்தது.

"சார். பிரதமர் அலுவலகத்தில் உங்களைக் கூப்பிட்டு என்ன சொன்னார்கள்?"

மிகுந்த எதிர்பார்ப்போடும், படபடப்போடும் வந்த கேள்விக்கு கேசவதாஸ் உடனடியாகப் பதில் அளிக்கவில்லை. அவருக்குள் கோபம் குமுறிக் கொண்டு வந்தது. மந்திரியோடு சேர்ந்து கொண்டு இது வரை என்னென்னவோ செய்து வந்த அந்த அதிகாரிக்கு அதை கேசவதாஸிடம் சொல்ல வேண்டும் என்று இது வரை தோன்றாததும், ஆனால் அதே நேரத்தில் அவரிடம் இருந்து செய்திகள் கறக்க மட்டும் அதீத ஆர்வம் இருப்பதும் அவர் பொறுமையை சோதித்தது.

அவரிடம் பதில் எதிர்பார்த்து வராததால் அந்த அதிகாரி மெல்ல

சொன்னார். "மந்திரி வீரேந்திரநாத் தான் என்னைக் கேட்டு போன் செய்யச் சொன்னார்"

"இப்போது அவர் எங்கே இருக்கிறார்"

"ஜம்முவில்..."

"நான் அவரிடம் நேரடியாகச் சொல்ல வேண்டிய அளவு நிலைமை முற்றி விட்டது. நான் உடனடியாக ஜம்மு கிளம்புகிறேன். நேரில் வந்து சொல்கிறேன் என்று அவரிடம் சொல்லுங்கள்"

இந்த பதிலை அந்த அதிகாரி எதிர்பாராதது போல இருந்தது. அவர் தயங்கினார். கேசவதாஸ் வேறொன்றும் பேசாமல் இணைப்பைத் துண்டித்தார்.

**********

மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான, சுமார் 20 ஆட்களைத் தேர்ந்தெடுத்து அவசர அவசரமாக அவர்களை ஒரு ரகசிய சந்திப்புக்கு அழைத்தார் 'வெடிகுண்டு' இலாகா தலைவர்.

அவர்களிடம் ஆனந்த் தந்த இடங்களின் பட்டியலைத் தந்தார். "இந்த

பகுதிகளில் இன்னும் சில மணி நேரங்களில் வெடிகுண்டு வெடிக்கப் போகிறது என்ற நம்பகமான தகவல் கிடைத்திருக்கிறது. அந்தத் தகவல் யார் மூலமாகவாவது நமக்குக் கிடைத்து விட்டால் நாம் எச்சரிக்கையாகி விடுவோம் என்ற பயத்தில் தான் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் வெடிகுண்டு வெடிக்கப் போகிறது என்ற வதந்திகளை தேச விரோதிகள் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். இரண்டிரண்டு பேர்களை ஒவ்வொரு இடத்திற்கு தலைவர்களாக நியமிக்கிறேன். நீங்கள் உங்களுக்கு தேவைப்பட்ட ஆட்கள், நாய்கள், கருவிகள் எடுத்துக் கொண்டு உடனடியாகக் கிளம்புங்கள்.."

அவர்களில் ஒருவர் கேட்டார். "இந்தப் பகுதிகளில் வெடிக்கப் போகும் குறிப்பிட்ட இடங்கள் பற்றி ஏதாவது துப்பு கிடைத்திருக்கிறதா?"

"இல்லை. ஆனால் நீங்களே தீவிரவாதிகளின் நிலையில் நின்று பாருங்கள். நீங்கள் இந்தப் பகுதிகளில் வெடிகுண்டு வைப்பதாக இருந்தால் எந்தெந்த இடங்களில் எப்படி வைப்பீர்கள் என்று யோசியுங்கள். எந்தெந்த இடங்களில் அதிக சேதம் வரலாம் என்றும் யோசியுங்கள். இதிலெல்லாம் பதில் கிடைக்கலாம்... இது நம் நாட்டில் அதிகார வர்க்கத்தின் ஆசிர்வாதத்துடன் நடக்க இருப்பதாக சொல்லப்படுவதால் கவனமாக இருங்கள். முடிந்த அளவு ரகசியமாக

இயங்குங்கள். நாம் கண்டு பிடித்து விட்டோம் என்பது அவர்களுக்கு உறுதியாகத் தெரிந்து விடக்கூடாது என்பதற்காக இன்னும் பத்து குழுவை வேறு சில இடங்களுக்கும் அனுப்புகிறேன். அவர்கள் வெடிகுண்டு வைத்த இடங்களில் மட்டுமல்லாமல் வேறு இடங்களிலும் நாம் தேடுவது, எல்லாமே வழக்கமான தேடல் என்பது போன்ற அபிப்பிராயத்தை அவர்களிடம் ஏற்படுத்தும். சரி சீக்கிரம் கிளம்புங்கள் ...."

அவர்கள் வேகமாக நகர்ந்தார்கள். வெடிகுண்டு தலைவர் அவர்களைப் பார்த்து பெருமூச்சு விட்டார். எத்தனை குண்டுகள் கிடைக்கும், எத்தனை குண்டுகள் வெடிக்கும் என்று தெரியவில்லை! அவர் மனைவியின் அண்ணன் மகள் திருமணத்திற்கு இன்று இரவு கிளம்புவதாக இருந்தது. இனி போக முடிவது கஷ்டம் தான். மனைவியின் கோபமும் ஒரு வெடிகுண்டு வெடிப்பாகத் தான் இருக்கப் போகிறது.

**********

நிலைமை முற்றி விட்டது என்றும், நேரடியாகச் சொல்ல வேண்டிய விஷயம் என்றும் தெரிவித்து விட்டு கேசவதாஸ் ஜம்முவிற்கு கிளம்பியதைக் கேள்விப்பட்ட வீரேந்திரநாத்திற்கு வயிற்றைக் கலக்கியது. உடனடியாக ராஜாராம் ரெட்டிக்குப் போன்

செய்து தகவலைச் சொல்லி விட்டு கேட்டார். "என்ன நடந்திருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?"

ராஜாராம் ரெட்டி சொன்னார். "நான் பிரதமர் அலுவலகத்தில் எனக்கு இருக்கும் வேண்டப்பட்டவர்களை விசாரித்தேன். கேசவதாஸோடு, உளவுத்துறை தலைவரையும், வெடிகுண்டு துப்பு துலக்கும் இலாகா தலைவரையும் பிரதமர் அழைத்திருக்கிறார் என்று சொன்னார்கள். அவர்கள் அல்லாமல் வேறு யாரோ மூன்று பேர் வந்ததாகச் சொன்னார்கள். யார் அந்த மூன்று பேர் என்பது தெரியவில்லை. அந்த மூன்று பேரை இதற்கு முன்பு பார்த்ததில்லை என்கிறார்கள்"

"திடீரென்று அந்த சந்திப்புக்கு என்ன காரணம்? பிரதமர் அப்பாயின்மெண்டை மாற்றுகிற அளவு யார் இடையே போனார்கள்"

"சதுர்வேதி என்கிறார்கள்"

வீரேந்திரநாத்திற்கு குழப்பமாக இருந்தது. "சதிர்வேதி எப்படி இதில் சம்பந்தப்படுகிறார்?". அதை வாய் விட்டே சொன்னார்.

ராஜாராம் ரெட்டி சொன்னார். "எனக்கும் குழப்பமாகத் தான்

இருக்கிறது. ஆனால் இன்னும் சிறிது நேரத்தில் கேசவதாஸ் நேரில் வருகிறாரல்லவா? அவரிடம் பேசும் போது எல்லாமே தெரிந்து விடும். அதைப் பற்றிய கவலை விடுங்கள். அந்த அமானுஷ்யன் கதையை முடிப்பதில் மட்டும் இப்போது கவனம் கொடுங்கள். போதும்."

வீரேந்திரநாத் அங்கலாய்த்தார். "அந்த சைத்தான் செத்துத் தொலைய மாட்டேன்கிறானே, நான் என்ன செய்வேன்!"

********

சலீமிடம் பிக்கு பணிவாகச் சொன்னார். "அமானுஷ்யன் என்ற பெயர் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் அக்ஷய் எனது மாணவன். அவனுடைய நண்பன் என்று சொல்கிறீர்கள். பின் ஏன் வெளியே காத்து நிற்கிறீர்கள். தாராளமாக உள்ளே வரலாமே....."

அந்த வயதான பிக்குவின் வணக்கமும், பணிவும் சலீமிற்கு கிண்டல் செய்வது போல இருந்தது. அவன் முதலிலேயே எரிச்சலான மனநிலையில் இருந்தான். காரணம் அவனுக்கு சற்று முன் வரை தலிபான் தலைவனிடமிருந்து தொடர்ந்து வந்த செல்போன்

அழைப்புகள் தான். எப்போதுமே வேலையாக இருக்கும் சமயத்தில் அவன் போனில் பேசுவதை வைத்துக் கொள்வதில்லை. அது அவன் வேலையைப் பாதிக்க அவன் அனுமதிப்பதில்லை. அமானுஷ்யன் உள்ளே சென்றிருந்த நேரத்தில் விடாமல் அந்த தலிபான் தலைவன் போன் செய்த போது அவனுக்கு ஆத்திரமாக வந்தது. போனில் பேசும் சமயத்தில் அமானுஷ்யன் வெளியே வந்து காற்றாய் பறந்து விட்டால் என்ன செய்வது என்று அவன் பயந்தான். அதனால் செல்போனை எடுத்து அவன் பேச மறுத்தான்.

அவன் செல் போனில் பேசாததை அடுத்து தலிபான் தலைவன் எஸ் எம் எஸ் தகவல் அனுப்பினான். "தயவு செய்து பேசு. அவசரம்".

சலீம் அமானுஷ்யன் வெளியே வராததால், பார்வையை புத்த விஹார வாசலில் நிலைக்க விட்டபடி தலிபான் தலைவனிடம் பேசினான். ஆரம்பத்திலேயே எச்சரிக்கை செய்தான்.

"நீங்கள் என்னைத் தொந்திரவு செய்கிறீர்கள். ஒரு வினாடி நான் அவனைத் தவற விட்டாலும் அவனைத் திரும்பப் பிடிப்பது முடியாத காரியம். அப்படி என்ன தலை போகிற அவசரம்"

தலிபான் தலைவன் அவசர அவசரமாகக் கெஞ்சும் தொனியில் பேசினான். "சலீம். கோபப்படாதே. நீ ஏன் போனை எடுத்துப்

பேசவில்லை என்பது எனக்குத் தெரியும். நீ பயப்படுவதும் நியாயமே. அவன் சிறிது அசந்தாலும் காற்றாய் பறந்து விடுவான் என்பது தெரியும். அதனால் தான் உனக்கு போன் செய்தேன். நீ எங்கே இருக்கிறாய் என்பதைச் சொல். உனக்கு உதவிக்கு நான் ஆட்கள் அனுப்புகிறேன்..."

சலீமிற்கு அவன் உதவிக்கு ஆட்கள் அனுப்புவதாகச் சொன்னது அவமானப் படுத்துவது போல் இருந்தது. "நான் இது வரை எந்த வேலையிலும் அடுத்தவர் உதவியைப் பெற்று கூட்டாக வேலை செய்ததில்லை. அதற்கு அவசியம் நேர்ந்ததில்லை..."

"ஆனால் நீ அமானுஷ்யன் மாதிரி ஒரு ஆளை இதுவரை கையாண்டதும் இல்லை"

சலீம் கோபத்துடன் கேட்டான். "ஏன் அவனை நான் தனியாகக் கையாள்வேன் என்பதில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?"

"ஐயையோ அப்படியெல்லாம் இல்லை. உன் திறமையில் எனக்கு பூரண நம்பிக்கை இருக்கிறது. எங்கள் ஆட்கள், போலீஸ் ஆட்கள் எல்லாம் சேர்ந்தும் கூட அவனை சரியாகப் பின் தொடர முடியவில்லை. ஆனால் நீ ஒருவன் தான் அவனை இது வரை சரியாக பின் தொடர்ந்துள்ளாய். அதுவே பெரிய விஷயம். ஆனால்

ஒருவேளை அவனை உன்னால் கொல்ல முடியாமல் போனால் நாங்கள் எடுத்த எல்லா முயற்சிகளும் வீணாகி விடும். போன தடவையே அவனைப் பின் தொடர்ந்து சென்று ஒரு மலையுச்சியில் அவன் அதிகம் நகர முடியாத இடத்தில் பல பேர் சேர்ந்து சுட்டு கூட ஒரே ஒரு குண்டு தான் அவன் உடம்பில் பட்டிருக்கிறது. அப்படியும் அவன் உயிர் பிழைத்து விட்டான். அதனால் நாங்கள் இந்த தடவை சிறிய தவறு கூட செய்ய விரும்பவில்லை...:

" என்ன தான் சொல்ல வருகிறீர்கள்?"

"இப்போது அவன் எங்கே இருக்கிறான்?"

"ஒரு புத்த விஹாரத்திற்குள் போயிருக்கிறான். நான் வெளியே நிற்கிறேன்"

"அந்த புத்த விஹாரம் எங்கே இருக்கிறது என்று சொன்னால் நல்ல திறமை வாய்ந்த எங்கள் ஆட்களையும் போலீஸ்காரர்களையும் உதவிக்கு அனுப்பி வைக்கிறோம். எப்படி அவனைக் கொல்வது என்பதை நீயே தீர்மானி. ஆனால் உனக்கு எல்லா விதங்களிலும் அவர்கள் உதவுவார்கள். நீ சொல்கிறபடி கேட்பார்கள். தயவு செய்து மறுத்து விடாதே. பேசியபடி முழு பணத்தையும் தந்து விடுகிறோம். உன் சுயமரியாதையைக் குறைப்பதாக நீ நினைத்து விடாதே. சிறிய

இடம் கிடைத்தாலும் அவன் நழுவி விடுவான். அதை நாம் அனுமதிக்கக் கூடாது. அதனால் தான் சொல்கிறேன்"

ராஜாராம் ரெட்டியின் ஆலோசனைப்படி மந்திரி தெரிவித்ததை அப்படியே தலிபான் தலைவன் ஒப்பித்தான். அவனுக்கும் என்ன காரணம் கொண்டும் அமானுஷ்யனைத் தப்ப விடக்கூடாது என்பதில் மாற்றுக் கருத்து இருக்கவில்லை. அதனால் தான் அவன் கெஞ்சிக் கேட்கும் தொனியில் சொன்னான்.

அவன் தனியொருவனாக இருந்து அமானுஷ்யனைக் கொல்ல முடியாது என்று அவர்கள் தீர்மானித்து விட்டார்கள் என்பதை நினைக்கும் போதே சலீமின் ரத்தம் கொதித்தது. ஆனால் அதே நேரத்தில் அவர்களின் அவசரமும், பயமும் அவனுக்கு விளங்காமலில்லை.

சலீம் சிறிது யோசித்து விட்டு சொன்னான். "சில நேரங்களில் அதிக ஆட்கள் நிறைய பலம். ஆனால் சில நேரங்களில் அதிக ஆட்கள் அதிக இடைஞ்சல்."

"உனக்கு இடைஞ்சல் தராதபடி அவர்கள் நிற்கச் சொன்ன இடத்தில் நிற்பார்கள். செய்யச் சொன்னதை செய்வார்கள். அவன் பலர் பார்வையில் இருப்பது நல்லது தானே"

"அப்படியானால் நான் சொல்லும் இடத்தில் வந்து நிற்கச் சொல்லுங்கள். அதில் இருந்து ஒரு அடி முன் வந்தாலும் இந்த வேலையிலிருந்து விலகிக் கொள்வேன்."

"தயவு செய்து அப்படி சொல்லாதே. நீ சொல்கிற இடத்திலேயே நிற்பார்கள். ஒரு அடி அதிகமாக முன் வைக்க மாட்டார்கள். சரியா? எங்கே அவர்கள் நிற்க வேண்டும். சொல்"

சலீம் புத்த விஹாரத்திற்குத் திரும்பும் இடத்தில் பிரதான சாலையில் ஆட்களை நிற்கச் சொன்னான். அவர்களில் முக்கியமான ஆட்கள் இருவரின் செல் போன் எண்களை எஸ் எம் எஸ்ஸில் அனுப்பச் சொன்னான்.

தலிபான் தலைவன் சம்மதித்தான். அவனிடம் சலீம் பேசி முடித்த அடுத்த நிமிடம் தான் வயதான புத்த பிக்கு புத்த விஹாரத்திலிருந்து வெளியே வந்தார். வாழ்க்கையில் முதல் முறையாக ஒரு வேலையைக் கூட்டாகச் செய்ய வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டது அவனுக்கு அவமானமாக இருந்த அந்த நேரத்தில் வந்த புத்த பிக்கு அவனைப் பிரார்த்தனை செய்ய வந்தவனை வரவேற்பது போல வரவேற்றது அவன் கோபத்தை அதிகப்படுத்தியது.

அவன் அந்த முதிய பிக்குவிடம் சொன்னான். "அவன் வெளியே வராவிட்டால் மட்டுமே நான் உள்ளே வர வேண்டி இருக்கும். அவன் வெளியே வருவானா?"

"வர வேண்டிய நேரத்தில் வருவான்"

அந்த பதில் அவன் கோபத்தை மேலும் கிளப்பியது. அவர் சொல்லும் போது முகபாவத்தில் கிண்டல் தெரியா விட்டாலும் அவன் அவர் கிண்டலை உணர்ந்தான்.

"வர வேண்டிய நேரம் எது?"

"அதை அவன் மட்டும் தான் அறிவான்"

சலீம் துப்பாக்கியை எடுத்து அவர் முகத்தருகே நீட்டினான். "எகத்தாளம் பேசினால் தலை சுக்குநூறாக சிதறி விடும் ஜாக்கிரதை"

அந்த முதிய பிக்குவை அந்த துப்பாக்கி எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. "என்னைக் கொல்வது உனக்கு பெருமை சேர்க்கும் என்றால் அதை நீ தாராளமாய் செய்யலாம்"

பிக்குவின் வார்த்தைகள் ஊசியாய் குத்தின. உலகப் பிரபலங்கள், சக்தி வாய்ந்தவர்கள், நெருங்க முடியாதவர்கள் என்றெல்லாம் அறியப்பட்டவர்களைக் கொன்ற அவனுக்கு அந்த நிராதரவான கிழட்டு பிக்குவைக் கொல்வது பெருமையா? இந்தக் கிழவரிடம் பேச ஆரம்பித்ததே தவறு என்பதை சலீம் உணர்ந்தான்.

"முதலில் அவனை வெளியே அனுப்புங்கள். இல்லா விட்டால் உங்கள் புத்தர் கோயிலுக்குள் பிணம் விழும்"

"அவனை நண்பர் என்று சொல்கிறீர்கள், துப்பாக்கியோடு வந்திருக்கிறீர்கள், பிணம் விழும் என்கிறீர்கள். எல்லாமே முரணாக இருக்கிறதே"

"சரி நண்பன் அல்ல. அவன் என் எதிரி"

"ஆனால் அவன் உங்களை நண்பனாகவே நினைத்திருக்க வேண்டும். அவன் உங்களை எதிரியாக நினைத்திருந்தால் நீங்கள் எப்போதோ எங்கேயோ கோமாவில் படுத்துக் கிடந்திருப்பீர்கள்"

சலீம் கோபத்தின் உச்சத்திற்கே போனான். அமானுஷ்யன் கருணையால் தான் அவன் இப்போது நின்று பேசிக் கொண்டிருக்கிறான் என்று சொன்ன பிக்குவை உடனடியாக சுட்டு

விட்டு புத்த விஹாரத்திற்குள் நுழைந்தால் என்ன என்று நினைத்தான்.

அப்போது தான் அமானுஷ்யன் அந்த புத்த விஹாரத்தை விட்டு வெளியே வந்தான்.

118

ஜம்மு விமானநிலையத்தில் வந்திறங்கிய கேசவதாஸ் உடனடியாக வீரேந்திர நாத்திடம் போனில் பேசவில்லை. மாறாக அமானுஷ்யன் விவகாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தங்கள் சப் இன்ஸ்பெக்டர் ஒருவருக்குப் போன் செய்தார்.

"ஹலோ நான் கேசவதாஸ் பேசுகிறேன்"

அந்த சப் இன்ஸ்பெக்டர் கேசவதாஸ் போனை எதிர்பார்க்கவில்லை. சற்று தடுமாறி விட்டு சொன்னார். "..சொல்லுங்கள் சார்"

"அமானுஷ்யன் செத்து விட்டானா இல்லையா?"

அமானுஷ்யன் விஷயத்தில் இது வரை கேசவதாஸ் நேரடியாக தலையிடாதவர் ஆனதால் சப் இன்ஸ்பெக்டர் மறுபடி தடுமாறியது போல் தெரிந்தது. "இல்லை சார்"

"நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? இப்போதைய நிலவரம் என்ன?"

"நான்...நான்... இப்போது அவன் இருக்கும் இடத்திற்குத் தான் போய்க் கொண்டிருக்கிறேன் சார்..."

"எந்த இடம்? விவரமாகச் சொல்லுங்கள்..."

சப் இன்ஸ்பெக்டருக்கு என்ன சொல்வது என்று ஒரு கணம் புரியவில்லை. வீரேந்திரநாத்தின் விசுவாசியான அவர் ஆரம்பத்தில் இருந்தே அமானுஷ்யன் பற்றிய முழு விவரங்களை மற்ற உயர் அதிகாரிகள் கேசவதாஸிடம் சொல்லாமல் இருந்ததை அறிவார்.

கேசவதாஸ் எரிச்சலுடன் சொன்னார். "நான் இப்போது ஜம்முவில் தான் இருக்கிறேன். நிலைமை நம் கட்டுப்பாட்டை மீறிப் போய்க் கொண்டிருக்கிறது. நம் தலை மேல் கத்தி தொங்கிக் கொண்டிருக்கிறது. சீக்கிரம் சொல்லுங்கள் ஏதாவது செய்தாக வேண்டும்"

கேசவதாஸ் ஜம்மு வந்திருக்கிறார் என்பதும், இப்போது அமானுஷ்யன் விவகாரத்தை நேரடியாக கவனிக்க ஆரம்பித்து விட்டார் என்பதும் புரிந்த பிறகு அந்த சப் இன்ஸ்பெக்டர் அதற்கு மேல் தயக்கம் காட்டவில்லை. தற்போது தான் அமானுஷ்யன் இருக்கும் இடம் சலீம் மூலம் தெரிய வந்தது எனவும், அவன் சொன்ன இடத்தில் நிற்க அவரும் வேறு சிலரும் போய்க் கொண்டு இருப்பதாகவும் தெரிவித்தவன், நிற்கப் போகும் இடத்தின் இடக்குறிப்பையும் தெரிவித்தான்.

"சரி. முக்கியமான தகவல் ஏதாவது கிடைத்தால் உடனடியாக எனக்குத் தெரிவியுங்கள். மந்திரி எங்கே இருக்கிறார்?'

"மந்திரி கெஸ்ட் ஹவுஸில் இருக்கிறார். அவன் பிணமானவுடன் உடனடியாக முதலில் அவருக்குத் தான் தெரிவிக்க வேண்டுமாம். சொல்லியிருக்கிறார்"

"சரி நான் அவரிடம் சிறிது பேச வேண்டி இருக்கிறது. பேசுகிறேன்... சொன்னதை மறக்காதீர்கள். எந்த முக்கியத் தகவலானாலும் உடனடியாகத் தெரிவியுங்கள்.."

அடுத்ததாக கேசவதாஸ் மந்திரி வீரேந்திரநாத்திற்குப் போன்

செய்தார்.

கேசவதாஸ் குரலைக் கேட்டவுடன் பரபரப்புடன் வீரேந்திரநாத் கேட்டார். "பிரதமர் உங்களை அழைத்துப் பேசினார் என்றார்களே, என்ன சொன்னார்?"

"போனில் சொல்ல முடியாத விஷயம் அது. நான் நேரில் வந்தே சொல்கிறேன். அதற்குள் அமானுஷ்யன் கதை முடிந்தால் தான் நல்லது."

"அவனைப் பற்றி பிரதமர் எப்படி அறிந்தார்?"

"அது தான் சொன்னேனே, போனில் அதைப் பற்றி பேச வேண்டாம். சிறிது நேரத்தில் நேரிலேயே வந்து சொல்கிறேன்..." என்றவர் மறுபேச்சு பேசாமல் இணைப்பைத் துண்டித்தார்.

வீரேந்திரநாத்திற்குப் பைத்தியமே பிடித்து விடும் போல் இருந்தது. திரும்பவும் கேசவதாஸிற்கே போன் செய்து பேசலாமா என்று யோசித்தவர் தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு ராஜாராம் ரெட்டிக்குப் போன் செய்து நடந்ததைச் சொன்னார்.

"அந்த ஆள் புதிர் போட்டுப் பேசுவது எனக்கு பைத்தியம் பிடிக்கிற

மாதிரி இருக்கிறது. நேரில் வந்து பேச அப்படி என்ன இருக்கும் என்று நினைக்கிறீர்கள்"

ராஜாராம் ரெட்டி அமைதியாகச் சொன்னார். "அவரிடம் இது வரை அமானுஷ்யன் பற்றி அரைகுறையாய் நீங்கள் சொல்லி இருப்பதற்கு முடிந்த வரை உங்களிடமும் அப்படியே சொல்லி வெறுப்பேற்ற நினைப்பது போல தெரிகிறது. அப்படியே இருக்கட்டும் விடுங்கள். சில நிமிஷங்களில் நேரில் வந்து சொல்லத் தானே போகிறார். முக்கியமாய் இங்கே டில்லியில் எங்கேயாவது வெடிகுண்டு வெடிக்கும் என்பது அவர்களுக்குத் தெரிந்து விட்டது போலத் தான் தெரிகிறது."

"ஐயையோ"

"ஆனால் அந்த இடம் எது என்று அவர்களாக அனுமானித்து தேட ஆரம்பித்து இருக்கிறார்கள். வெடிகுண்டு வைக்கப் போகிற இடங்களை மட்டுமல்லாமல் வேறு இடங்களையும் பொத்தாம் பொதுவாகத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் பயப்பட வேண்டியதில்லை. வெடிகுண்டு வெடிக்கப் போகிற இடங்களில் ஓரிரு இடங்களை அவர்கள் கண்டுபிடிக்கவும் செய்யலாம். இதைச் சொல்லத் தான் கேசவதாஸ் நேரில் அங்கே வந்ததாகத் தெரிகிறது. அவன் அங்கே சாகாமல் தப்பித்தால் நாளை தனக்கும் பிரச்சினை

என்பதால் உங்களைப் போலவே அவரும் நேரடியாக அவன் முடிவை உறுதி செய்ய வந்தது போல் இருக்கிறது. அமானுஷ்யன் இருக்கும் இடத்திற்கு நம் ஆட்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். அதனால் எல்லாம் சீக்கிரமே முடிவுக்கு வந்து விடும். கவலைப்படாதீர்கள்."

"ஏதோ உங்களிடம் பேசும் போது கவலைப்பட அவசியமே இல்லை என்று தோன்றுகிறது. ஆனால் சிறிது நேரத்திலேயே பழையபடி கவலை, பயம் வந்து விடுகிறது."

"எப்போது சலீம் கூடுதலாய் நம் ஆட்களையும் உதவிக்குப் போக ஒத்துக் கொண்டானோ, அப்போதிருந்தே நான் கவலைப்படுவதை விட்டு விட்டேன். அவன் குணாதிசயத்திற்கு அப்படி செய்ய சம்மதிப்பது கஷ்டம் என்று தான் நினைத்திருந்தேன். ஆனால் அவனும் அமானுஷ்யன் விஷயத்தில் ஏமாந்து விட வேண்டாம் என்று முடிவெடுத்து விட்டான் என்று தான் தோன்றுகிறது. அதனால் அமானுஷ்யன் எப்படி பறந்தாலும் இத்தனை பேரை ஒருசேர சமாளிக்க முடியாது கவலைப்படாதீர்கள்"

ஒரு வழியாக மந்திரியை சமாதானப்படுத்தி விட்டு செல் போனைக் கீழே வைத்த ராஜாராம் ரெட்டி வெறும் பேச்சுக்காக மட்டும் அப்படிச் சொல்லவில்லை. உண்மையிலேயே அதை நம்பினார்.

காரணம் நல்லவராக இருந்த போது அவரைக் காப்பாற்றாத விதி அவர் கெட்டவராக மாற ஆரம்பித்த பிறகு அவருக்கு சாதகமாகத் தான் இருந்திருக்கிறது. பணம் சம்பாதித்ததிலும் அளவில்லை. சொத்துக்கள் சேர்த்ததிலும் அளவில்லை. உட்கார்ந்து சாப்பிட்டாலும் அவர் தன் குடும்பத்தோடு ராஜ வாழ்க்கை வாழ முடியும்.

விதி சாதகமாக இருப்பதற்கு அவருக்குக் கிடைத்த மிகப் பெரிய நிரூபணம் ஆச்சார்யா ஜெயினிற்குத் தெரிவிக்கும் முன் விரேந்திரநாத்தின் திட்டங்களை ரெட்டிக்குத் தெரிவித்தது தான். ராஜாராம் ரெட்டி மாறி விட்டிருப்பதை அறியாமல் இருந்த ஆச்சார்யா ஆபிசில் இருந்து ரெட்டி கிளம்பிக் கொண்டிருந்த போது அவசரமாக வந்து ரகசியமாய் அமானுஷ்யன் அனுப்பி இருக்கும் ஆதாரபூர்வமான தகவலைச் சொன்ன போது ராஜாராம் ரெட்டி அதிர்ந்து போனாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் முழுவதுமாகக் கேட்டுக் கொண்டார்.

"இப்படியெல்லாம் கூட மனிதர்கள் இருக்கிறார்கள் என்பதே வேதனையாக இருக்கிறது" என்று பொய்யாய் ரெட்டி வருந்தினார்.

"தர்மம் தாமதமாக ஆனாலும் ஜெயிக்காமல் போகாது ரெட்டி. இப்படிப்பட்ட மனிதர்கள் இதற்கெல்லாம் தண்டனை பெறாமல்

போக மாட்டார்கள். அதனால் தானே அக்ஷய் ஆதாரபூர்வமான அத்தாட்சியை அனுப்ப முடிந்தது."

"உண்மை. இனி என்ன செய்வதாக இருக்கிறீர்கள்?"

"ஜெயின் சாரிடம் சொல்லலாம் என்றால் அவர் சீக்கிரமே இன்று போய் விட்டார். நாளை காலையில் எல்லா ஆதாரங்களையும் அவரிடம் ஒப்படைக்கலாம் என்றிருக்கிறேன்"

"சார், அது வரையில் இதைப் பற்றி வேறு யாருக்கும் சொல்லாதீர்கள். இந்தக் காலத்தில் யாரை நம்பலாம், யாரை நம்பக்கூடாது என்பதை நாம் சுலபமாகக் கண்டுபிடிக்க முடிவதில்லை"

"உண்மை தான் ரெட்டி சார். நான் வேறு யாரிடமும் வாய் திறக்கப் போவதில்லை" என்றார் ஆச்சார்யா.

வெளியே வந்த ரெட்டி அவசர அவசரமாக வீரேந்திரநாத்திற்குப் போன் செய்து நடந்ததை அப்போதே தெரிவித்தார். இருவரும் சேர்ந்து ஜெயினிடம் அந்த ஆதாரங்கள் செல்லும் முன் ஆச்சார்யாவைக் கொல்லத் திட்டமிட்டார்கள்.

ராஜாராம் ரெட்டி ஆச்சார்யாவிற்குப் போன் செய்தார். ஆச்சார்யா சேகரித்திருக்கும் தகவல்களுக்குக் கூடுதலாக இன்னொரு தகவல் அப்போது தான் கிடைத்ததாகவும் உடனடியாக வீட்டுக்கு வந்து அதனைத் தருவதாகவும் சொன்னார். நம்பிய ஆச்சார்யா உடனடியாக வீட்டுக்கு வரச் சொன்னார். கொலையாளி ஒருவனைக் கூட்டிக் கொண்டு ஆச்சார்யா வீட்டுக்குச் சென்றார் ராஜாராம் ரெட்டி. காவலுக்கு இருந்த போலீஸ் கான்ஸ்டபிளிற்கு ரெட்டியை நன்றாகத் தெரிந்திருந்ததால் தனக்கோ ஆச்சார்யாவிற்கோ எந்த ஆபத்தும் வரும் என்று எதிர்பார்க்கவில்லை. அந்தக் கான்ஸ்டபிளை முதலிலும், வீட்டிற்குள்ளே போன பின் ஆச்சார்யாவை பின்பும் கொல்வது ரெட்டிக்கு ஒரு பிரச்சினையாகவே இருக்கவில்லை.

அதிகப்பிரசங்கித்தனமாக ஆச்சார்யா ஜெயினிற்கு போன் செய்து நாட்டையே அதிர வைக்கும் சில தகவல்களை ஆதாரபூர்வமாக ஒப்படைக்கிறேன் என்று ராஜாராம் ரெட்டி போவதற்கு முன் சொல்லாமல் இருந்திருந்தால் ஜெயினிற்கு எந்த சந்தேகமும் வந்திருக்காது. ஆனந்தை வரவழைத்திருக்கவும் மாட்டார். ஆனாலும் பரவாயில்லை பெரிதாக எந்த ஆபத்தும் ரெட்டிக்கு வந்து விடவில்லை.

தர்மம் தாமதமாகவாவது வெல்லும் என்று நம்பிய ஆச்சார்யா தர்மத்தைப் போலவே உடனடியாக இறந்து விட்டதை இப்போது

எண்ணிய போதும் ரெட்டிக்கு வேடிக்கையாக இருந்தது. "முட்டாள்".

********

அக்‌ஷய் மறைவில் நின்று கொண்டு சலீமிடம் முதிய பிக்கு பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தான். அவர் அவனிடம் கோபப்படும்படி ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார் என்பது சலீம் துப்பாக்கியை எடுத்து அவர் முகத்தருகே நீட்டிய போதே தெரிந்தது. சிறிது நேரத்தில் அவன் சுட்டே விடலாமா என்று கூட யோசித்ததும் புரிந்தது. மனித மனத்தின் செயல்பாடுகளை அறிந்த ஞானியான அவர் தன் சீடனுக்காக எடுத்துக் கொள்ளும் சிரமத்தைப் பார்த்த அக்‌ஷயிற்கு மனம் நெகிழ்ந்தது.

வந்திருக்கிறவன் அபாயகரமானவன் என்பதையும் திறமையானவன் என்பதையும் பார்த்தவுடனேயே புரிந்து கொண்ட பிக்கு சலீமின் கோபத்தை அதிகமாகக் கிளறி விட்டதற்கு உண்மையான காரணம், கோபம் ஒரு மனிதனின் சிந்திக்கும் திறனை நன்றாகவே பாதித்து விடும் என்பதனால் தான். அதே போல் ஒருவனுடைய கோபம் அவன் சக்தியை உறிஞ்சி விடும் தன்மை வாய்ந்தது. எனவே மிகவும் இக்கட்டான நேரத்தில் - சிந்திக்கும் தன்மையும், சக்தியும் உச்சத்தில் இருக்க வேண்டிய நேரத்தில் - கோபப்படுத்துவது அந்த

இரண்டையும் குறைத்து ஒருவனை பலவீனனாக ஆக்குகிறது. அப்படித்தான் பிக்கு அவனைப் பலவீனப்படுத்த முயன்று கொண்டிருந்தார்.

ஆனால் பின் தொடர்ந்து வந்தவன் முட்டாள் அல்ல என்பதால் என்ன நடக்கிறது என்பதை சீக்கிரமே புரிந்து கொள்ளக்கூடும் என்பதில் அக்‌ஷயிற்கு சந்தேகம் இல்லை. அப்படிப்பட்ட நேரத்தில் சிறிதும் யோசிக்காமல் அவன் அவரைக் கொன்று விட்டு அடுத்ததாக என்ன செய்ய வேண்டுமோ அதை செய்ய ஆரம்பிக்கலாம் என்றே அவன் நினைப்பான் என்று அக்‌ஷயிற்குத் தோன்றியது. முதியவரானாலும் பிக்கு லேசுப்பட்டவர் அல்ல என்பதால் அவ்வளவு சுலபமாக அவரை அவன் எதுவும் செய்து விட முடியாது என்றாலும் இந்த புனித புத்த விஹாரத்தின் முன் அசம்பாவிதம் எதுவும் நடப்பதை அக்‌ஷய் விரும்பவில்லை. எனவே மானசீகமாகத் தன் மேலிருந்த அன்பிற்காக குருவிற்கு நன்றி சொல்லி விட்டு வெளியே வந்தான்.

அக்‌ஷயைப் பார்த்ததும் சலீம் தன் கவனத்தை முழுமையாக பிக்குவிடம் இருந்து விலக்கி அக்‌ஷய் பக்கமே திருப்பினான். அவன் துப்பாக்கி தயாராக குறி பார்க்க ஆரம்பித்தது. அக்‌ஷய் மின்னல் வேகத்தில் நெடுஞ்சாலையை நோக்கி ஓடினான். சலீம் தன் சகல பலத்தையும் திரட்டி அவன் பின்னே ஓடிய படி துப்பாக்கியால்

சுடப்பார்த்தான். ஆனால் அனாயாசமாக ஓடிய அமானுஷ்யனைக் குறி பார்ப்பது சுலபமாக இல்லை. அந்தக் கிழட்டு பிக்குவிடம் கோபப்பட்டு பேசியே தன் சக்தியை சிறிது தொலைத்து விட்டோமோ என்று சலீமிற்குத் தோன்ற ஆரம்பித்தது. ஓடும் பாதை முடிவது நெடுஞ்சாலையில் தான் என்பதால் அமானுஷ்யனை எதிர்கொள்ள மற்றவர்களைத் தயார்ப்படுத்த சலீம் எண்ணினான். ஓடியபடியே செல்போனை எடுத்தவன் தலிபான் தலைவன் அனுப்பிய எண் ஒன்றிற்குப் போன் செய்தான்.

"இன்னும் ஒரு நிமிடத்தில் அவன் நெடுஞ்சாலைக்கு வந்து விடுவான். ஒன்றாக சேர்ந்து வழி மறித்து நில்லுங்கள். எல்லாரும் சேர்ந்து அவனைப் பார்த்து சகட்டு மேனிக்கு சுடுங்கள்...."

ஓடும் அக்‌ஷயையும், அவனைக் கொல்ல வந்தவனையும் பார்வையை விட்டு மறையும் வரை பார்த்துக் கொண்டு நின்ற பிக்கு புத்த விஹாரத்திற்குத் திரும்பினார்.

நெடுஞ்சாலையில் நின்றிருந்தவர்கள் சுமார் இருபது பேராவது இருப்பார்கள். பன்னிரெண்டு பேர்கள் போலீசார், எட்டு பேர்கள் தலிபான் ஆட்கள். சலீமிடம் போனில் பேசியவன் அவசரமாகக் கத்தினான். "அவன் இன்னும் ஒரு நிமிடத்தில் இங்கு வந்து விடுவானாம். நாம் சுட்டு அவன் உடம்பை சல்லடையாகத்

துளைத்து விடவேண்டும். தயாராகுங்கள்...."

அரை நிமிடத்தில் அவர்கள் அனைவரும் சேர்ந்து சாலையினை மறித்தபடி நின்று எதிரே இருந்த பாதையில் வரும் அமானுஷ்யனுக்காக துப்பாக்கியுடன் காத்திருந்தார்கள்.

## 119

அக்‌ஷய் கண்களுக்கு நெடுஞ்சாலை தென்பட்ட போது ஆட்கள் சாலை முழுவதும் வழி மறித்து நிற்பதைப் பார்த்தான். அனைவர் கைகளிலும் துப்பாக்கிகள் இருந்தன. இப்படியே நேராகப் போய் நெடுஞ்சாலையைச் சென்றடைவது தற்கொலைக்கு சமானம் என்பது புரிந்தது. பின்னால் திரும்பிப் போகலாம் என்றாலோ சலீம் இருக்கிறான். அத்தனை பேர்களை சமாளிப்பதை விட சலீம் ஒருவனை சமாளிப்பது ஓரளவு சுலபம் என்றாலும் அவன் திறமைகளை அக்‌ஷய் பரிசோதிக்க விரும்பவில்லை. பாதையின் இரு பக்கங்களிலும் தனியார் நிலங்கள் முள்வேலிக்குள் பத்திரமாக இருந்தன. அங்கே நிறைய மரங்களும், செடிகளும் இருந்தன.

அக்‌ஷய் சிறிதும் யோசிக்காமல் இடது புறம் இருந்த முள்வேலியை

அனாயாசமாகத் தாண்டி உள்ளே குதித்து ஓடினான். உயரமாக இருந்த முள்வேலியை இப்படிக் கடந்து மரங்களுக்குள் மறைவான் என்று எதிர்பாராத சலீம் ஒரு கணம் திகைத்தான். அவனுக்குத் தன் மீதே கோபம் வந்தது.

முன்னாலும் பின்னாலும் ஆபத்து இருக்கையில் யாரானாலும் பக்கவாட்டில் தானே பாய்வார்கள், இந்த முள்வேலி எல்லாம் இவனுக்கு ஒரு பெரிய விஷயமா, ஏன் இதை முன்கூட்டியே யூகித்து வைக்கவில்லை என்று தன்னைத் தானே கடிந்து கொண்டான் சலீம். எல்லாம் அந்த கிழட்டு பிக்குவிடம் வாயைக் கொடுத்ததால் வந்த வினை என்று தோன்றவும் செய்தது.

ஆனால் அதையெல்லாம் யோசிக்க நேரமில்லை, அமானுஷ்யனைக் கொல்ல வேண்டுமானால் ஒவ்வொரு வினாடியையும் வீணாக்காமல் பயன்படுத்த வேண்டும் என்று தனக்குள் அவன் சொல்லிக் கொண்டான். ஏனென்றால் அந்த வினாடியை அவன் சாதகமாகப் பயன்படுத்தி தப்பித்துக் கொள்வான் என்பதில் சந்தேகமேயில்லை.

வந்த போது சலீம் அந்த இடத்தை நன்றாகப் பார்த்து மனதிற்குள் பதிவு செய்திருக்கிறான். அது அவன் தொழிலின் காரணமாகத் தானாக அவனுள் ஊறிப் போயிருந்த ஒரு பழக்கம். தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது சுற்று வட்டாரம் அத்தனையும் மிக முக்கியம்.

எந்த இடத்தில் என்ன இருக்கிறது, எப்படி இருக்கிறது, யாரெல்லாம் இருக்கிறார்கள் என்பதை எல்லாம் சம்பந்தம் இருக்கிறதோ, இல்லையோ மூளை அப்படியே பதித்துக் கொண்டு விடும். ஏனென்றால் எதிர்பாராதது ஏதாவது ஒன்று நடந்து ஒரு திட்டத்தில் சிறிய மாற்றம் செய்ய நேரிட்டால் கூட இதில் முன்பு முக்கியமாகத் தோன்றாத ஏதாவது ஒரு விவரம் மிக முக்கியமானதாக மாறி விடலாம்.

அப்படி மூளையில் பதித்த விவரப்படி அந்த முள் வேலிக்குள் இருக்கும் இடத்தின் பரப்பு ஏறத்தாழ ஆறேழு ஏக்கர்கள் இருக்கக் கூடும். மரங்களும் காட்டுச் செடிகளும் நிறைந்த அந்த இடத்தின் மற்ற மூன்று பக்கமும் என்ன இருக்கின்றன என்று சலீம் யோசித்தான். அதைத் தாண்டினால் அந்தப் பக்கம் ஒரு பெரிய வணிக வளாகம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அங்கு முக்கால் பாகம் கட்டிட வேலை முடிந்திருக்கிறது. பின் பக்கம் ஒரு பெரிய குளம் இருக்கிறது. புத்தவிஹாரத்தின் முன் காத்திருந்த போது அதை அவன் கவனித்திருந்தான். முன் பக்கம் நெடுஞ்சாலை. கிட்டத்தட்ட 200 அடிகள் நெடுஞ்சாலைப் பகுதிப் பக்கம். நெடுஞ்சாலையிலும் நான்கு பக்கங்களிலும் உயரமான முள்வேலி இருந்தது.

இத்தனை தகவல்களையும் ஒருசில வினாடிகளில் கவனத்தில் எடுத்துக் கொண்ட சலீம், அமானுஷ்யன் இனி இந்த மூன்று

பக்கங்களில் எந்தப் பக்கம் போவான் என்று யோசித்தான். அவன் தண்ணீருக்குள் மறையும் சக்தி படைத்தவனாக இருந்தாலும் கூட பின்பக்கம் குளத்தில் குதிக்க வாய்ப்புகள் குறைவு. நெடுஞ்சாலைப் பக்கம் போக அங்கு காத்திருக்கும் எதிரிகள் அவனுக்கு அனுகூலமாக இல்லை. அவனுக்கு அனுகூலமாக இருக்கும் ஒரே பக்கம் வணிகவளாகம் கட்டிக் கொண்டிருக்கும் பக்கம் தான். அங்கு தான் போக வாய்ப்புகள் அதிகம்.

உடனடியாக சலீம் முன்பு பேசியவனுக்கே போன் செய்தான். "அவன் பக்கத்தில் இருக்கும் முள்வேலிக்குள் குதித்ததைப் பார்த்தீர்களா?"

"ஆமாம். எங்கள் ஆட்களில் மூன்று பேர் உள்ளே குதித்திருக்கிறார்கள். அதில் இரண்டு பேருக்கு முள் நன்றாக கீறி விட்டது. ஆனாலும் அவர்கள் அவனை விட மாட்டார்கள். நாங்களும் உள்ளே குதிக்கவா?"

சலீம் தன் கோபத்தை அடக்கிக் கொள்ள கஷ்டப்பட்டான். "நான் தான் யாரும் நான் சொல்லாத எதையும் செய்ய வேண்டாம் என்று சொன்னேனே. இனி நான் சொல்லாமல் ஒரு சின்ன அசைவு கூட செய்யக் கூடாது. யாரும் உள்ளே குதிக்க வேண்டாம். அவன் நிரந்தரமாக இந்த இடத்திலேயே தங்கி விடப் போவதில்லை. அவன்

திரும்பி வெளியே தான் வரப் போகிறான். அதனால் வேலிக்கு வெளியே நெடுஞ்சாலைப் பகுதியிலும், அந்தப் பக்கம் கட்டிக் கொண்டிருக்கும் கட்டிடத்தின் பக்கத்திலும் நில்லுங்கள். சீக்கிரம் போங்கள். தாமதம் செய்யாதீர்கள். தாமதித்தால் அவன் தப்பித்து விடுவான். அவனை நான் பின் தொடர்கிறேன்."

"சார்..."

"என்ன?"

"ஜாக்கிரதையாக இருங்கள். அவன் நிஜமாகவே சைத்தான். அவன் உங்களை நெருங்க விட்டால் நீங்கள் உள்ளேயே கோமாவில் போக வைத்து விடுவான்..."

சலீம் அதற்கு பதில் எதுவும் சொல்லவில்லை. பேசாமல் இணைப்பைத் துண்டித்தான். கதை பேச இது நேரமல்ல. இப்படி ஒரு அச்சுறுத்தல் இன்று இரண்டாம் முறைை◌யாக வருகிறது. முதலில் சொன்னது அந்த கிழட்டு பிக்கு. சலீமும் முள்வேலியைத் தாண்டி உள்ளே குதித்தான். அப்போது அமானுஷ்யன் தென்படவில்லை. மறைந்திருந்தான். போன் பேசிக் கொண்டிருந்த போதே அவன் நிறைய அடிகள் கடந்திருப்பான் என்பதை அவன் ஊகித்தான். ஆனாலும் சலீம் கவலைப்படவில்லை. அமானுஷ்யன்

சுற்றி வளைத்துச் சென்று காலத்தை வீணாக்க மாட்டான் என்பதால் நேராக வேகமாக எதிர்பக்கத்திற்கு சலீமும் முன்னேறினான்.

வலது பக்கத்திலிருந்து தடதடவென்ற சத்தம் கேட்டது. உள்ளே குதித்த அந்த மூன்று முட்டாள்கள் வரும் சத்தம் என்று சலீம் நினைத்துக் கொண்டான். அதில் ஒருவன் வழுக்கி விழுந்த சத்தமும் கேட்டது. கீழே விழுந்திருந்த சருகுகள் சமீபத்தில் பெய்திருந்த மழையில் அழுகி வழுக்க வைப்பதாக இருந்தது. சலீம் வழுக்காமல் நகர நிறையவே கஷ்டப்பட்டான். சிறிது சென்ற போது தூரத்தில் அமானுஷ்யன் அனாயாசமாக நடந்து செல்வது தெரிந்தது. அவன் நடக்கும் போது வழியில் இருந்த செடி கொடிகளை விலக்கி விடுவதில் கூட ஒரு நளினம் இருந்தது. வழியில் உள்ள குழந்தைகளை அப்புறப்படுத்துவது போன்ற ஒரு மென்மையான விலக்கல் அது.

அதைக் கவனித்த போது சலீமிற்கு அவனை மெச்சாமல் இருக்க முடியவில்லை. அவன் அந்த செடி கொடிகளைக் கூட நேசித்தது போல் இருந்தது. எதனுடனும் அவனுக்கு எதிர்ப்பு இல்லை, எதுவும் அவனுக்குத் தடை இல்லை என்பது போல் இருந்தது. அவன் அசைவுகளில் கூட ஒரு சின்ன தேவையற்ற அசைவு கூட இல்லை. அப்படிக் கூட அவன் தன் சக்தியை வீணாக்காமல் இருப்பதால் தான் அவன் களைப்பே இல்லாமல் இருக்கிறான் என்று

தோன்றியது. சலீம் அந்த சருகுகளில் வழுக்காமல் வேகமாக நடக்கப் பழகிக் கொண்டான். விரைந்து நெருங்கி வரும் அவனை அக்‌ஷய் திரும்பிப் பார்த்தான்.

எல்லா சூழ்நிலைகளுக்கும் ஏற்ற மாதிரி உடனுக்குடன் மாறிக் கொள்ளவும், பழகிக் கொள்ளவும் முடிந்த அவனை அக்‌ஷயும் மனதிற்குள் மெச்சினான். தூரத்தில் வேறு சிலர் வரும் காலடி ஓசையும் கேட்டது. ஆனால் அவர்களை அக்‌ஷய் பெரிதாக நினைக்கவில்லை. அவர்கள் கண்டிப்பாக அவனை நெருங்கி வரப் போவதில்லை. அக்‌ஷய் அந்தப் பக்கத்து முள்வேலியை நெருங்கினான். அதைத் தாண்டிக் குதித்தான்.

அவன் தாண்டிக் குதித்ததை சற்று தூரத்தில் சலீமின் கட்டளைப்படி துப்பாக்கியுடன் வந்து கொண்டிருந்த ஆட்கள் பார்த்து ஓடோடி வந்தார்கள். அக்‌ஷய் அவ்வளவு சீக்கிரம் அவர்கள் அங்கு வருவார்கள் என்று எதிர்பார்த்திருக்கவில்லை. முழுவதுமாகக் கட்டி முடிந்திருக்காத, வேலையாட்களும் யாருமில்லாத அந்த காலி வணிக வளாகத்திற்குள் வேகமாக நுழைந்தான்.

சலீம் தன் சர்வ பலத்தையும் சேர்த்து, தன் முழு மனதையும் தன் வேலையிலேயே ஒருமுகப்படுத்தி விரைவில் அந்த முள் வேலியைத் தாண்டி குதிக்கவும் போலீஸ் மற்றும் தலிபான் ஆட்கள் அங்கு வந்து

சேரவும் சரியாக இருந்தது. முன்பு அவனுடன் போனில் பேசியவன் ஓடி வந்து சொன்னான். "சார், அவன் உள்ளே போயிருக்கிறான்"

சலீம் மனதிற்குள் சபதம் செய்தான். "அமானுஷ்யன் உன் மரணம் இந்தக் கட்டிடத்தில் தான் நிகழப் போகிறது". பிறகு தன்னிடம் தகவல் சொன்னவனிடம் சொன்னான். "யாரும் உள்ளே வர வேண்டாம். வெளியே அவன் வந்தால் முன்பே சொன்னபடி சேர்ந்து சுடுங்கள். இந்தக் கட்டிடத்தை சூழ்ந்து நின்று கொள்ளுங்கள். அவன் வாசல் வழியாகத் தான் வருவான் என்பதில்லை. அவன் மேலேயிருந்து குதிக்கவும் செய்யலாம். எல்லோரும் மிகவும் கவனமாக இருங்கள். உங்கள் கவனத்தை சிறிது கூட சிதற விடாதீர்கள். நாம் அவன் பிணத்தைப் பார்க்காமல் இங்கிருந்து நகரப் போவதில்லை என்று உறுதியாக இருங்கள்"

சொல்லி விட்டு சலீமும் உள்ளே நுழைந்தான். அவன் சொன்னபடி அவர்கள் அந்த கட்டிடத்தை சூழ்ந்து நின்று கொண்டார்கள். அதற்குள் இன்னொரு ஜீப் நிறைய போலீசார் வந்து சேர்ந்தனர். அவர்களிடம் சென்று சலீம் சொன்னதை அவனிடம் பேசியவன் தெரிவித்தான். அவர்களுக்கும் அமானுஷ்யன் விஷயத்தில் சலீமின் ஆலோசனைப்படி நடப்பதே நல்லது என்று மேலிடத்தில் சொல்லி அனுப்பப்பட்டதால் அவர்களும் சுற்றி நின்ற கூட்டத்தில் இணைந்தார்கள். எல்லோரும் ஒழுங்கான இடைவெளியில் நின்று

கொண்டு அமானுஷ்யன் வெளியே எப்படி வந்தாலும் தீர்த்துக் கட்டி விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு நின்றார்கள்.

அந்தக் கட்டிடம் நான்கு மாடிக் கட்டிடம். அமானுஷ்யன் உள்ளே நுழைந்தவன் இப்போது எந்த மாடியில் இருக்கிறான் என்பது சலீமிற்குத் தெரியவில்லை. அவன் கவனமாக மெல்ல நடந்தான். கண்களையும், காதுகளைத் தீட்டிக் கொண்டான். இப்போது ஒவ்வொரு சப்தமும் முக்கியம். அதனால் தான் வெளியே நின்ற தடியர்களை அவன் உள்ளே வர அனுமதிக்கவில்லை. கேட்கும் சத்தம் அமானுஷ்யனுடையது தானா, இல்லை அவர்களில் ஒருவனுடையதா என்று குழம்ப அவன் விரும்பவில்லை.

இரண்டாம் மாடியில் ஏதோ ஒரு தகர டப்பா உருளும் சத்தம் கேட்டது. அது அமானுஷ்யன் வேலை என்பது புரிந்தது. ஆனால் அமானுஷ்யன் எந்த அவசரத்திலும் எந்த பொருளையும் தெரியாமல் இடறி விடுவான் என்பதை அவன் நம்பத் தயாரில்லை. சிறிது ஏமாந்தாலும் அமானுஷ்யன் தன்னை ஆக்கிரமித்து கோமா நிலைக்கு உள்ளாக்கி விடலாம் என்பதை அறிந்திருந்த அவன் உடனடியாக இரண்டாம் மாடிக்கு ஓட முயற்சிக்கவில்லை. ஆனால் இரண்டாம் மாடியில் உள்ள தகர டப்பா ஒன்றை உருட்டுகிற அளவு அருகில் இருக்கிறான் என்பது மட்டும் புரிந்தது. ஆனால் அமானுஷ்யன் நடக்காமல் எங்கேயோ நின்று கொண்டிருக்கிறான்

என்பதை நடக்கும் சத்தமின்மையை வைத்து சலீம் கண்டுபிடித்தான்.

இந்த இரண்டு நாட்களில் சலீம் அமானுஷ்யனைப் பற்றி நிறையவே தெரிந்து வைத்திருந்தான். முக்கியமாக அமானுஷ்யன் நடையின் வேகம், ஓடும் வேகம், ஆகியவற்றைப் பற்றி துல்லியமாக அறிந்து வைத்திருந்தான். ஓடும் போது அது அதிவேகமாக இருந்தாலும் அது ஒரு துல்லியமான, பயிற்சி செய்து பழகிய சீரான வேகமாக இருந்தது. நடக்கும் போதும் அதே போல ஒரு சீரான வேகமாக இருந்தது. இந்த சீரான வேகத்தில் செல்பவனை துப்பாக்கியால் கொல்வது சலீமிற்கு மிக எளிதான விஷயம். அவன் கொன்ற பிரபலங்களில் இருவர் வண்டியில் சென்று கொண்டிருந்த போது தான் அவன் கொன்றிருக்கிறான்.

மோப்ப நாய் போல முழுக் கவனத்தையும் குவித்து மெல்ல நிதானமாக நகர்ந்தான் சலீம். அமானுஷ்யன் ஒரு குறிப்பிட்ட தூரத்தில் வந்து விட்டால் கண்டிப்பாக அவன் கண்டுபிடித்து விடுவான். அந்த அளவு அவனுக்கு அமானுஷ்யன் ஆழ்மன நிலையில் நெருங்கி விட்டிருந்தான்....

அந்த நேரத்தில் கேசவதாஸ் அந்த கட்டிடத்தின் வெளியே வந்து சேர்ந்தார். சற்று முன் அந்த சப் இன்ஸ்பெக்டருக்கு போன் செய்த

போது அவர்கள் இருக்கும் இடத்தை அந்த சப் இன்ஸ்பெக்டர் சொன்னார். அவரைக் கண்டதும் ஓடி வந்த சப் இன்ஸ்பெக்டர் நிலவரத்தைச் சொன்னார். சலீம் உள்ளே போய் இருக்கிறான் என்றும் அவன் யாரையும் உள்ளே வர வேண்டாம் என்று சொல்லி இருக்கிறான் என்றும் சொன்னார்.

கேசவதாஸிற்கு கோபம் வந்தது. "அவன் வாடகைக் கொலையாளி. அவன் அமானுஷ்யனைக் கொல்லா விட்டாலும் வரவிருக்கும் பணம் மட்டும் தான் நஷ்டம். ஆனால் நமக்கோ அவன் சாகா விட்டால் இருக்கிற எல்லாமே நஷ்டப்பட்டு விடும். பிரதமர் வரை அவன் விவகாரம் போய் விட்ட பிறகு அவனை விட்டு வைத்து கதை சொல்ல விட்டால் கேவலமாகி விடும் நம் நிலைமை."

சப் இன்ஸ்பெக்டர் தடுக்கத் தடுக்க அதை இலட்சியம் செய்யாமல் கேசவதாஸும் அந்த கட்டிடத்திற்குள் நுழைந்தார்.

கேசவதாஸ் உள்ளே நுழைந்த போது மிக கவனமாக அதிக சத்தம் வராமல் பார்த்து நடந்த போதிலும் சலீம் இன்னொரு ஆள் நுழைவதை உணர்ந்தான். போலீஸ்காரனாகத் தான் இருக்க வேண்டும். இது போன்ற வேலையில் ஆட்களைக் கூட்டு சேர்த்துக் கொண்டால் வரும் பிரச்சினை இது தான். எவனாவது ஒருவன் சொல் பேச்சு கேட்க மாட்டான். அவனுக்கு எது சரி என்று

தோன்றுகிறதோ அதைத் தான் செய்வான்.

ஆனால் ஒருவிதத்தில் கேசவதாஸ் உள்ளே நுழைந்தது நல்லதாகப் போயிற்று. பின்னால் வருவது ஒருவர் அல்ல இரண்டு பேர் என்பதை உணர்ந்ததால் இரண்டாம் மாடியில் இருந்த அமானுஷ்யன் நடக்க ஆரம்பித்தது தெரிந்தது. அதே சீரான வேகம். சலீம் விரைந்தான் அந்த சத்தத்தை நோக்கி.

அக்‌ஷய் மற்ற எதிரிகளை சமாளித்தது போல வருபவனை மின்னல் வேகத்தில் நெருங்கி கோமாவில் ஆழ்த்த முயலாததற்கு முக்கிய காரணம் அந்த தந்திரம் சலீம் போன்ற மிக அதிக கவனம் உள்ளவனிடம் பலிக்காது என்பதனால் தான். மேலும் சலீம் அவனைப் பற்றி மிக அதிகமாக அறிந்து வைத்திருந்தது மட்டுமல்லாமல் தன்னைத் தற்காத்துக் கொள்வதில் வல்லவனாகவும் இருப்பதை அக்‌ஷயால் அனுமானிக்க முடிந்தது. இரண்டாவதாக நுழைந்த ஆள் யார் என்று தெரியா விட்டாலும் நிதானமான காலடி ஓசையைப் பார்த்த போது அந்த ஆளும் லேசுப்பட்ட ஆள் அல்ல என்பது தெரிந்தது.

வெளியே எட்டிப்பார்த்தான். அந்தக் கட்டிடத்தை ஏராளமான பேர் சூழ்ந்து கொண்டு நின்றிருந்தார்கள். அவர்கள் எல்லாரும் ஓரளவு சாமர்த்தியமான ஆட்களாகவே தெரிந்தார்கள். சலீமின் காலடி ஓசை

அவன் விரைந்து வருவதைத் தெரிவித்தது. அதே போலத்தான் இரண்டாவது காலடி ஓசையும். நான்காவது மாடிக்கு அக்‌ஷய் விரைந்தான்.

நான்காவது மாடி ஹாலில் வேகமாக அமானுஷ்யன் நடப்பதை அறிந்த போது சலீம் மூன்றாவது மாடியில் இருந்தான். காலடி ஓசையின் வேகத்திலிருந்தே மனக்கணக்கு போட்ட சலீம் ஒரு குறிப்பிட்ட வேகத்தில் சென்றால் அமானுஷ்யனை துப்பாக்கியால் சுட முடிந்த தூரத்தை அடைய முடியும் என்பது மட்டுமல்லாமல் தன் தனித்திறமையால் குறிதவறாமல் சுடவும் முடியும் என்பதை உணர்ந்தான்.

அதே போல் நான்காவது மாடியை அடைந்த போது அக்‌ஷய் தூரத்தில் கண்ணில் பட்டான். அதிர்ஷ்டம் தன் பக்கம் கடைசியில் வந்து நின்றதை உணர்ந்த சலீம் தன் துப்பாக்கியை அமானுஷ்யனுக்கு, அவன் நகரும் வேகத்தைக் கணக்கிட்டு, குறி வைத்தான்.

அந்தக் கணத்தில் அக்‌ஷயும் அபாயத்தை முழுமையாக உணர்ந்தான்.

**********************************

துப்பாக்கியை அமானுஷ்யனை நோக்கி குறி வைத்த சலீம் அந்த நேரத்தில் அடைந்த பெருமிதத்தை வாழ்நாளில் வேறெப்போதும் பெற்றதில்லை. அமானுஷ்யனைப் போன்ற எதிரியை வீழ்த்துவது என்பது அவன் சாதித்த மற்றெல்லா சாதனைகளுக்கும் சிகரமாக அமையப் போகிறது. அவன் பின்னால் வந்த காலடித்தடத்தை அவன் பொருட்படுத்தவில்லை. தலிபான் அல்லது போலீஸ்காரர்களில் ஒருவராகத் தான் இருக்கும். வந்த ஆளைப் பார்ப்பதில் ஒரு வினாடி அவன் கவனத்தைத் திருப்பினாலும் அந்த கவனச் சிதறலில் அவன் அமானுஷ்யனைத் தவற விட்டு விடக்கூடும்.

ஆனால் சுடுவதற்கு முன்பு தன் மீது வேறொரு குண்டு பாயும் என்று அவன் சிறிது கூட நினைத்துப் பார்த்திருக்கவில்லை. கேசவதாஸின் துப்பாக்கியில் இருந்து கிளம்பிய ரவை ஒன்று அவன் தலையைத் துளைத்ததைத் தொடர்ந்து அடுத்து வந்த குண்டு அவன் கழுத்தையும் துளைத்தது. நம்ப முடியாமல் திகைத்தது அவன் மட்டுமல்ல அவன் துப்பாக்கிக் குண்டிற்கு இரையாக இருந்த அக்ஷயும் தான். சலீம் அப்படியே குப்புற சாய்ந்து கொண்டிருந்தான். அப்போதும் கூட சலீம் தன்னை சுட்டது யாரென்று அறிந்து கொள்ள ஆசைப்படவில்லை. அமானுஷ்யனையே பார்த்தபடி அவன் கீழே

விழுந்தான். குப்புறக் கீழே விழுந்த போதிலும் அவன் முகம் மட்டும் அமானுஷ்யன் பக்கமே பக்கவாட்டில் திரும்பி இருந்தது.

அக்ஷய் திகைப்புடன் கேசவதாஸைப் பார்த்தான்.

கேசவதாஸ் கீழே விழுந்தவனைக் கவனமாகப் பார்த்து அவன் உயிர் போய்க் கொண்டிருக்கிறது என்பதை உறுதி செய்த பின்பே அக்ஷய் பக்கம் திருப்பினார். "நான் அவனை சுட்டிருக்காவிட்டால் அவன் உன்னை சுட்டிருப்பான்"

அக்ஷயிற்கு அவர் சொன்னது உண்மை என்பது புரிந்தது. எதையுமே வேகமாகக் கற்றுக் கொள்ள முடிந்த சலீம் இந்த இரண்டு நாட்களில் அக்ஷயைப் பின் தொடர்ந்த ஒவ்வொரு வினாடியும் அவனைப் பற்றி நிறைய தெரிந்து கொண்டே வந்திருக்கிறான். இது வரை ஒரு முறை கூட அவன் துப்பாக்கியை வீணாக்கவில்லை. கண்டிப்பாக சுட்டுக் கொன்று விட முடியும் என்று நூறு சதவீதம் உறுதியாகாமல் அவன் குறி பார்த்தவன் அல்ல. அப்படி இருக்கையில் அவன் இப்போது குறிபார்த்திருக்கிறான் என்றால் கேசவதாஸ் சொன்னது போல் சுட்டிருக்க வாய்ப்பு உண்டு.

அக்ஷயிற்கு ஏனோ சலீம் மீது ஒரு பச்சாதாபம் தோன்றியது. "எத்தனை திறமை இருந்தும் என்ன பயன்? எல்லாம் அழிவுக்குப்

பயன்படுத்தப் போய் அழிந்தே போய் விட்டானே!"

அவனுடைய அந்த இரக்க எண்ணத்தை சலீமும் உணர்ந்தது போல் இருந்தது. மரணத்தின் விளிம்பில் அந்த கடைசி கணத்தில் அக்‌ஷயின் பச்சாதாபம் காண நேர்ந்த சலீம் கடைசியாக ஒரு முறை அதிசயித்தான். "என்ன மனிதனிவன்?". அந்த வியப்போடு அவன் உயிர் போயிற்று.

கேசவதாஸும் அக்‌ஷயின் எண்ணத்தைப் படிக்க முடிந்ததால் சலீமைப் போலவே வியந்து தான் போனார். கொல்ல வந்தவனைக் கூட அவனால் வெறுக்க முடியவில்லை, வருத்தம் தான் படுகிறான் என்று தெரிந்த போது அவர் மனதில் ஒரு எண்ணம் மேலோங்கியது. "இவனை சாக விட்டிருந்தால் ஏழேழு ஜென்மத்திற்கும் எனக்கு விமோசனம் கிடைத்திருக்காது".

கேசவதாஸின் இந்த திடீர் மனமாற்றத்திற்குக் காரணம் இருந்தது. அமானுஷ்யன் ஃபைலைப் படித்த போது நல்லவன் என்று உணர்ந்தாலும் அவர் மந்திரி வீரேந்திரநாத்தின் பகையைப் பெற்ற அவன் பக்கம் சாய விரும்பவில்லை. அவனுக்கும் மந்திரிக்கும் இடையே ஏதோ தனிப்பட்ட பகை என்று நினைத்தாரே ஒழிய வேறு விவரங்கள் அவர் அறிந்திருக்கவில்லை. அதிகார வர்க்கத்தைப் பகைத்துக் கொள்ளும் எண்ணம் இல்லாத அவர் வேறு

வழியில்லாமல் மந்திரிக்கு எதிராக நடந்து கொள்ளும் எண்ணம் இல்லாதவராக இருந்தார். அவனால் தன் குடும்பத்திற்கு ஆபத்தும் வரலாம் என்ற பயமும் இருந்ததால் எப்படியாவது அவன் செத்து ஒழிந்தால் பிரச்னை இல்லை என்ற அபிப்பிராயமே இருந்தது. இந்த மனநிலை பிரதமர் அலுவலகம் செல்லும் வரை அவருக்கு இருந்தது.

பிரதமர் அலுவலகத்தில் ஆனந்த் வாயால் கேள்விப்பட்ட தகவல்கள் அவரை உண்மையிலேயே அதிர்ச்சி அடைய வைத்தன. தலிபான்கள் போன்ற தேசவிரோதிகளுடன் சேர்ந்து நாட்டில் பல இடங்களில் குண்டு வெடிக்கச் சதி செய்யத் துணிந்தவர் வீரேந்திரநாத் என்பதும், ஆரம்பத்தில் இருந்தே அதைத் தடுக்க முயன்று வந்தவன் அமானுஷ்யன் என்றும் அறிந்த போது அவன் மீது மிகப்பெரிய மரியாதை தோன்றியது. தனிப்பட்ட விரோதம் அல்ல அவன் குற்றம், அவனுடைய தேசப்பற்று தான் அவன் குற்றம் என்பதை உணர்ந்த போது அவர் தன் முந்தைய 'கண்டும் காணாத நிலை'க்காக உண்மையிலேயே வெட்கப்பட்டார். இத்தனை வேலைகளையும் செய்த வீரேந்திரநாத் இந்த விஷயத்தில் உண்மைகளை மறைத்து அவரையும் ஏமாற்றி இருக்கிறார் என்பதால் கோபமும் பட்டார். அவருடைய தலைமையில் இருக்கும் போலீஸ் துறையையும் அவருக்கு கீழ் இருக்கும் அதிகாரிகளைக் கொண்டு வீரேந்திரநாத் இந்த நாச வேலைக்கு உபயோகப்படுத்தி வந்ததும் அவருக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியது.

தான் முன்பு காட்டிய அலட்சியத்திற்கு பிராயசித்தம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் திடமாக எழவே அவர் ஜம்முவிற்கு உடனடியாகக் கிளம்பினார். தன் எண்ணம் வீரேந்திரநாத்திற்கும், அவரிடம் விலை போயிருக்கும் மற்றவர்களுக்கும் தெரியாமல் இருக்கும்படி அவர்களிடம் கவனமாக புதிராகப் பேசினார். அவர் மனமெல்லாம் அமானுஷ்யனிற்கு எதுவும் ஆகியிருக்கக் கூடாது என்பதிலேயே இருந்தது. நல்ல வேளையாக சரியான சமயத்தில் வர முடிந்தது.

அவர் அக்ஷயிடம் சொன்னார். "இவன் சர்வதேச வாடகைக் கொலையாளி. இவனுக்காக வருத்தப்பட வேண்டியதில்லை".

அக்ஷய் அதற்கு பதிலேதும் சொல்லாமல் தக்க சமயத்தில் வந்து உதவியதற்கு கேசவதாஸிற்கு நன்றி தெரிவித்தான்.

ஆனந்த் வந்து பிரதமர் அலுவலகத்தில் சொன்னதைத் தெரிவித்த கேசவதாஸ் பிறகு லேசான குற்றவுணர்ச்சியுடன் சொன்னார். "நான் முதலில் உனக்கும், வீரேந்திரநாத்திற்கும் ஏதோ தனிப்பட்ட தகராறு, அதனால் தான் அவர் அப்படி நடந்து கொள்கிறார் என்று நினைத்து தவறு என்று தெரிந்தும் கண்டு கொள்ளாமல் இருந்தேன். ஆனால் உண்மை தெரிந்த பிறகு நான் இதைக் கூட செய்யா விட்டால்

என்னையே நான் என்றைக்கும் மன்னிக்க முடியாது. இன்னும் அபாயம் முடிந்து விடவில்லை. சரி இனி அடுத்ததாக என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்போம். வெளியே ஒரு கூட்டம் இருக்கிறது. வீரேந்திரநாத் வேறு இப்போது ஜம்முவிற்கு வந்து உன் பிணத்தைப் பார்க்க காத்திருக்கிறார். ."

அவர் சொன்னதை யோசித்த அக்‌ஷய் பிறகு புன்னகையுடன் சொன்னான். "அப்படியானால் அவர் ஆசையை நிறைவேற்றி விடுவோம். என்னைப் பிணமாக அவர் பார்க்கட்டும்...."

கேசவதாஸ் அவனைக் கேள்விக்குறியோடு பார்த்தார்.

அக்‌ஷய் புன்னகை மாறாமல் சொன்னான். "அவர் இங்கே வரட்டும்"

கேசவதாஸிற்குப் புரிந்தது. அவர் சொன்னார். "அதை நான் செய்கிறேன். வெளியே இருக்கும் கூட்டத்தையும் நான் பார்த்துக் கொள்கிறேன். ஆனால் வீரேந்திரநாத்தை மட்டும் நீ தான் பார்த்துக் கொள்ள வேண்டும். அந்த ஆள் இறந்தால் தியாகி ஆகி விடுவார். உயிரோடு இருந்தால் என்ன ஆதாரம் கொடுத்தாலும் அதெல்லாம் எதிரிகள் உருவாக்கியது என்று திரும்பத் திரும்பச் சொல்லி உண்மையாக இருக்கலாமோ என்ற சந்தேகத்தை மக்களிடம் கிளப்பி விடுவார். அதனால் அவரிடம் மட்டும் கருணை காட்டி

விடாதே."

சலீமிடம் காட்டிய அந்த கடைசி இரக்கம் வீரேந்திரநாத்திடம் காட்டினால் ஆபத்து என்று அவருக்கு சொல்லாமல் இருக்க முடியவில்லை. அக்ஷய் புரிந்தது என்று தலையாட்டினான். இருவருமாக அடுத்தது என்ன செய்வது என்று கலந்தாலோசித்து வேகமாக ஒரு முடிவுக்கு வந்தார்கள். இருவருமாக சேர்ந்து சலீமின் சடலத்தை பார்வையில் படாத ஒரு இடத்திற்கு மாற்றினார்கள்.

கேசவதாஸ் வேகமாக வெளியே போக அக்ஷய் சலீமின் உடலில் இருந்து சிந்திய இரத்த வெள்ளத்தில் படுத்துக் கொண்டான். மனதில் அண்ணனிடம் சொன்னான். "ஆனந்த், உன்னிடம் அந்த சாது சொன்ன காட்சியும் பலித்து விட்டது. நானும் உயிரோடு இருக்கிறேன். உனக்குத் திருப்தி தானே"

கேசவதாஸ் வெளியே வந்து புன்னகையுடன் தன்னிடம் முன்பு பேசிய சப் இன்ஸ்பெக்டரை அழைத்து சொன்னார். "அமானுஷ்யன் இறந்து விட்டான்".

சப் இன்ஸ்பெக்டர் முகம் பிரகாசமாகியது. "உண்மையாகவா சார்"

"ஆமாம். சலீம் அந்த வேலையை கச்சிதமாக முடித்து விட்டான்.

ஆனால் இனி நான் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. நீங்கள் ஒரு ஆளும், அவர்களில் ஒரு ஆளும் மட்டும் உள்ளே வந்து பாருங்கள். பிறகு நானும் சலீமுமாக சேர்ந்து அமானுஷ்யன் பிணத்தை யாருக்கும் கிடைக்காத மாதிரி செய்து விடுகிறோம். நமக்கு நேரம் அதிகம் இல்லை. சீக்கிரம் வந்து பாருங்கள்"

சப் இன்ஸ்பெக்டர் சலீமிடம் போனில் பேசிய தலிபான் ஆளிடம் சென்று தகவலைச் சொல்ல அவன் முகத்திலும் மின்னல் வெளிச்சம். மற்றவர்களிடம் அப்படியே நிற்கச் சொல்லி விட்டு அவர்கள் இருவர் மட்டும் அமானுஷ்யன் பிணத்தைப் பார்க்க கேசவதாஸுடன் உள்ளே வந்தார்கள்.

இரத்த வெள்ளத்தில் கிடக்கும் அமானுஷ்யனைத் திருப்தியுடன் இருவரும் பார்த்தனர். "சைத்தான் ஒரு வழியாக ஒழிந்தான்" என்று தலிபான் ஆள் நிம்மதிப் பெருமூச்சு விட்டு சொன்னான். பிறகு நினைவு வந்தவனாகக் கேட்டான். "சலீம் எங்கே?"

கேசவதாஸ் சொன்னார். "அவன் சுவிட்சர்லாந்து போக விசா பற்றி மேலே பேசிக் கொண்டிருக்கிறான். அடுத்த வேலை அங்கேயா, இல்லை சுற்றுலா போகிறானா தெரியவில்லை. இவன் பிணத்தை அவன் திட்டப்படியே அப்புறப்படுத்தி விட்டு அடுத்த நிமிஷம்

அவன் பறந்து விடுவான்"

சப் இன்ஸ்பெக்டர் சொன்னார். "மந்திரி சார் இவன் செத்தவுடனேயே தெரிவிக்கச் சொல்லி இருக்கிறார். நான் சொல்லி விடுகிறேன்"

முதல் ஆளாகச் சொல்லி பதவி உயர்வு வாங்கி விட அவர் துடித்தார். கேசவதாஸ் தலையாட்டி விட்டு சொன்னார். "நீங்கள் பேசி விட்டுக் கொடுங்கள். பிறகு நான் பேசுகிறேன்...."

மூவரும் வெளியே சென்றார்கள். போகும் போதே தலிபான் போன் செய்து தன் தலைவனிடம் தகவலைச் சொன்னான். அதே போல் சப் இன்ஸ்பெக்டர் மந்திரிக்குப் போன் செய்தார். "சார் அமானுஷ்யன் கதை முடிந்தது."

எத்தனை தான் ஆசைப்பட்டு அந்த செய்திக்காக வீரேந்திரநாத் காத்துக் கொண்டிருந்தாலும் அதைக் கேட்ட போது அவருக்கு ஏனோ உடனடியாக நம்ப முடியவில்லை. "நீங்கள் அவன் பிணத்தைப் பார்த்தீர்களா? அவன் எப்படி செத்தான். விவரமாகச் சொல்லுங்கள்"

"நான் கண்ணால் பார்த்து விட்டுத் தான் சொல்கிறேன். சலீம் தான்

கொன்றான்....."

கேசவதாஸ் அதற்கு மேல் அந்த இன்ஸ்பெக்டரைப் பேச அனுமதிக்கவில்லை. செல்போனிற்காகக் கையை நீட்டினார்.

".இருங்கள் சார், கேசவதாஸ் சார் பேச வேண்டும் என்கிறார்...." என்று அந்த சப் இன்ஸ்பெக்டர் செல் போனை கேசவதாஸிடம் தர கேசவதாஸ் பரபரப்புடன் சொன்னார். "சார். சலீம் அவன் பிணம் யார் கையிலும் கிடைக்கக் கூடாது என்பதில் கண்டிப்பாக இருக்கிறான். அது தான் நல்லது என்று எனக்கும் தோன்றுகிறது. இங்கே செய்ய வேண்டிய வேலைகள் சில இருக்கின்றன. அதை அரைகுறையாய் முடித்தால் நாளைக்குத் தேவை இல்லாத பல கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டி வரும். அமானுஷ்யன் விவகாரம் பிரதமர் வரை போய் விட்டதால் கவனமாக எல்லாம் செய்ய வேண்டி இருக்கிறது. நீங்கள் அவன் பிணத்தைப் பார்க்க வேண்டுமா? இல்லை நாங்கள் அதை சலீம் சொன்னது போலவே அப்புறப்படுத்தி விடலாமா?"

வீரேந்திரநாத் அவசரமாகச் சொன்னார். "பொறுங்கள். நான் அவன் பிணத்தைப் பார்க்க வேண்டும். நானே நேரில் வருகிறேன்.... பிரதமருக்கு இவன் விவகாரம் எது வரையில் தெரியும்?"

"இங்கு வருகிறீர்கள் அல்லவா, நேரிலேயே சொல்கிறேனே. அதற்குள் முதல் வேலையாக இங்கே இருக்கிறவர்களை போகச் சொல்லி விடலாம் என்று பார்க்கிறேன். பொதுமக்களின் கவனத்தை அதிகம் கவர்ந்தால் கடைசியில் அமானுஷ்யன் பற்றியும் சலீம் பற்றியும் தேவையில்லாத பல கேள்விகள் எழலாம்"

"சரி சரி, அனுப்பி விடுங்கள். சும்மா அங்கே கூட்டம் சேர்த்த வேண்டாம். நான் உடனே புறப்பட்டு வருகிறேன். இடம் எங்கே என்று டிரைவரிடம் சரியாகச் சொல்லுங்கள். அவனிடம் போனைத் தருகிறேன்..."

அந்த டிரைவரிடம் வர வேண்டிய இடத்தை விவரித்து விட்டு கேசவதாஸ் சப் இன்ஸ்பெக்டரிடமும், தலிபானிடமும் சொன்னார். "இனி நாங்கள் இங்கே ஆக வேண்டியதைப் பார்த்துக் கொள்கிறோம். நீங்கள் எல்லாரும் இந்த இடத்தை விட்டுப் போய் விடுங்கள். உளவுத் துறை ஆட்கள் மோப்பம் பிடித்து இங்கே வரும் போது நீங்கள் எல்லாம் இல்லாமல் இருப்பது நல்லது."

அடுத்த சில நிமிடங்களில் அங்கே கூடியிருந்த போலீசாரும், தலிபான்களும் அங்கிருந்து பறந்தார்கள்.

வீரேந்திரநாத் இதயத்தில் இருந்து மிகப் பெரிய பாரம் விலகி இருந்தது. அமானுஷ்யன் பிணத்தைப் பார்க்கச் சென்று கொண்டிருந்த போது தான் ராஜாராம் ரெட்டிக்குப் போன் செய்து தகவலைச் சொன்னார். ராஜாராம் ரெட்டியும் பெரும் நிம்மதி அடைந்தார். "கடைசியில் அமானுஷ்யனும் மனிதன் தான் என்பது நிரூபணம் ஆகி விட்டது பார்த்தீர்களா?".

வீரேந்திரநாத் மிகவும் மகிழ்ச்சியோடு ராஜாராம் ரெட்டியுடன் சிறிது நேரம் பேசி முடித்தார். அமானுஷ்யன் பிணத்தைப் பார்க்கப் போகும் போது முழுமையான போலீஸ் பந்தோபஸ்து வேண்டாம் என்று நினைத்தபடியால் கூட இரண்டு பாதுகாவலர்களை மட்டும் கூட்டிக் கொண்டு கிளம்பி இருந்தார். அவர் மனதில் இந்த நாட்டின் பிரதமராக முடிசூடியே ஆகி விட்டிருந்தது. அமானுஷ்யன் என்ற ஒரு தடை விலகினால் பின் எந்த தடையும் இல்லை என்றே நினைத்திருந்ததால் அவர் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தார்.

அந்த பாதி கட்டப்பட்டிருந்த கட்டிடத்தின் முன் அவர் கார் நிற்கையில் கேசவதாஸ் ஓடோடி வந்து அவரை வரவேற்றார். வீரேந்திரநாத்திற்கு அக்ஷயைக் காணும் வரை இருப்பு கொள்ளாத தவிப்பு இருந்ததால் வேகமாக காரிலிருந்து இறங்கி "எங்கே அவன்?" என்று கேட்டார்.

"நான்காவது மாடியில் சார்"

அவர் வேகமாக கேசவதாஸுடன் நடக்க அவருடைய பாதுகாவலர்களும் அவரைத் தொடர்ந்தார்கள். கேசவதாஸ் தயக்கத்துடன் வீரேந்திரநாத்தின் காதுகளில் சொன்னார். "சலீம் உங்கள் பாதுகாவலர்கள் கண்களில் படுவதை விரும்பவில்லை...."

"அவன் இன்னும் போகவில்லையா?"

"அமானுஷ்யன் பிணத்தை அப்புறப்படுத்தாமல் போக அவன் விரும்பவில்லை. நீங்கள் வராமலிருந்திருந்தால் அவன் தன் வேலையை முடித்துக் கொண்டு போய் இருப்பான். நீங்கள் வருவதாக சொல்லி இருந்ததால் தான் காத்துக் கொண்டிருக்கிறான்....இவர்கள் மூன்றாம் மாடி வரை வரட்டும். நான்காம் மாடிக்கு வராமல் இருந்தால் சரி..."

வீரேந்திரநாத் என்ன சொன்னாலும் ஒத்துக் கொள்ளும் மனநிலையில் இருந்ததால் சரியென்றே சொன்னார். மூன்றாம் மாடி வரை வந்து கீழேயே பாதுகாவலர்கள் நிற்க மந்திரி மட்டும் கேசவதாஸுடன் நான்காம் மாடிக்கு வந்தார். தரையில் ரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்த அமானுஷ்யனைப் பார்த்த போது அவர் அடைந்த நிம்மதி அலாதியானது. எத்தனையோ நாள் அவரை

உறங்க விடாமல் செய்த சனியன் ஒழிந்தான் என்று நினைத்தவராக அவனை நெருங்கி அத்தனை வெறுப்பையும் சேர்த்து காலால் எட்டி உதைத்தார்.

அடுத்த கணம் ரத்த வெள்ளத்திலிருந்து ரத்தம் சொட்டச் சொட்ட அமானுஷ்யன் எழுந்தான். அவனுடைய மின்னல் வேக எழுச்சியைக் கண்ட அவரது அதிர்ச்சிக்கு எல்லையே இல்லை. அவர் வாய் விட்டுக் கத்த முனைவதற்குள் அமானுஷ்யன் அவரை செயலிழக்கச் செய்து விட்டான். கோமா நிலைக்குச் சென்று விட்ட வீரேந்திரநாத்தின் முகத்தில் கடைசி உணர்ச்சியான அதிர்ச்சி நிரந்தரமாகத் தங்கி விட்டது.

கேசவதாஸ் கண்ணசைக்க அக்‌ஷய் மறைவான இடத்திற்கு நகர்ந்தான். வீரேந்திரநாத்தை அப்படியே நிலத்தில் கிடத்தி விட்டு கேசவதாஸ் கீழே வந்து பாதுகாவலர்களிடம் சொன்னார். " திடீரென்று என்ன ஆயிற்று என்ற் தெரியவில்லை. மந்திரி அப்படியே மயக்கமாக விழுந்து விட்டார். படியேறியதாலோ என்னவோ தெரியவில்லை."

பாதுகாவலர்கள் மேலே விரைந்து வந்தனர். கோமாவில் கிடந்த வீரேந்திரநாத்தைப் பார்த்த போது அவர்கள் முகத்தில் பயம் பரவ ஆரம்பித்தது. அமானுஷ்யன் பிணத்தையும் அவர்கள் அங்கே

பார்க்கவில்லை. இரத்தம் மட்டுமே தரையில் நிறைய இருந்தது. இதே ஜம்முவில் முன்பு ஒரு பாதுகாவலர் இப்படி கோமாவிற்கு சென்றதை முதலிலேயே அறிந்த அவர்களுக்கு இது தற்செயல் என்று தோன்றவில்லை. அவர்கள் கண்களில் தெரிந்த பயத்தைக் கவனித்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் கேசவதாஸ் ஆம்புலன்ஸிற்குப் போன் செய்தார்.

*********

ராஜாராம் ரெட்டிக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை. அவருக்குத் தகவல் தெரிவித்த நபரிடம் மீண்டும் ஒரு முறை சொல்லச் சொன்னார்.

"சார். மந்திரி வீரேந்திரநாத்திற்கு திடீர் என்று உடம்பு சரியில்லாமல் போய் விட்டது. இப்போது கோமாவில் இருக்கிறார்...."

தொடர்ந்த பேச்சைக் கேட்கும் மனநிலையில் ராஜாராம் ரெட்டி இல்லை. போன் இணைப்பைத் துண்டித்து விட்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்தார். கனாட் ப்ளேஸ் பகுதியில் ஒரு வெடிகுண்டு வெடித்து ஏழு பேர் பலியான செய்தி உடனடிச் செய்தியாக ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. அதே சமயத்தில்

நிறைய இடங்களில் இருந்த வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்து விட்டதாக செய்தியாளர் பரபரப்புடன் சொல்லிக் கொண்டிருந்தார். பத்து இடங்களில் வைத்த வெடிகுண்டுகளில் ஒன்பது கண்டுபிடிக்கப் பட்டு செயலிழக்கப்பட்டு விட்டது புரிந்தது.

வீரேந்திரநாத் கோமாவில் இருக்கிறார் என்றால் அமானுஷ்யன் இறந்திருக்க முடியாது. அவரை வரவழைக்க கேசவதாஸ் ஒரு பொய்யை அவிழ்த்து விட்டிருக்கிறார் என்பது புரிந்தது. தற்போதைய நிலவரத்தை ஜீரணிக்க ராஜாராம் ரெட்டிக்கு சில நிமிடங்கள் தேவைப்பட்டன. அவர் இதயத்தை ஏதோ ஒரு கனம் அழுத்த ஆரம்பித்தது.

'அவர் ஒரு காலத்தில் நல்லவராக இருந்தார். அப்போது விதி அவருக்கு எதிராக இயங்கியது. இப்போது கெட்டவராக மாறி இருக்கிறார். இப்போதும் விதி அவருக்குப் பாதகமாகவே இயங்குகிறது......' நினைக்க நினைக்க கனம் கூடியது. இறப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன் ஆச்சாரியா சொன்ன வார்த்தைகள் இப்போது அவர் காதில் எதிரொலித்தன. "தர்மம் தாமதமாக ஆனாலும் ஜெயிக்காமல் போகாது ரெட்டி. இப்படிப்பட்ட மனிதர்கள் இதற்கெல்லாம் தண்டனை பெறாமல் போக மாட்டார்கள்."

அடுத்த செய்தியாக வீரேந்திரநாத் நோய்வாய்ப்பட்டது தொலைக்காட்சியில் ஒளிபரப்பாக ஆரம்பித்தது. செய்தியாளர் ஒருவர் சொல்லிக் கொண்டு இருந்தார். "....மந்திரி வீரேந்திரநாத் அவர்களுக்கும் ஜம்மு நகரத்திற்கும் ராசி சரியில்லை என்பதே பலருடைய கருத்தாக இருக்கிறது. சென்ற மாதம் அவர் இங்கு வந்த போது அவருடைய பாதுகாவலர் ஒருவரும் கோமாவிற்கு உள்ளானது குறிப்பிடத்தக்கது....."

அமைதியாக எழுந்து சென்று தன் மேசையின் அடியில் வைத்திருந்த கைத்துப்பாக்கியை எடுத்த ராஜாராம் ரெட்டி அதைத் தன் நெற்றிப் பொட்டில் வைத்து அழுத்தினார்.

## 121

ஜம்முவில் இருந்து டெல்லிக்கு கேசவதாஸுடன் வந்து சேர்ந்த அக்‌ஷயிற்காக ஆனந்த், மது, மகேந்திரன் மூவரும் காத்திருந்தனர். தம்பியை ஓடிச் சென்று கட்டியணைத்த போது ஆனந்த் கண்கலங்கி விட்டான். அக்‌ஷய் அண்ணனைத் தட்டிக் கொடுத்துக் கொண்டே மதுவிற்கும், மகேந்திரனிற்கும் நன்றி சொன்னான்.

மகேந்திரன் சொன்னான். "பெரிய வார்த்தை எல்லாம் சொல்லாதே. நீ செய்ததற்கு முன் நாங்கள் செய்ததெல்லாம் ஒரு விஷயமே அல்ல"

உடனடியாக அக்‌ஷயை பிரதமர் சந்திக்க விரும்பியதால் அக்‌ஷய் விமான நிலையத்திலிருந்தே அனைவருடனும் பிரதமர் அலுவலகத்திற்குப் போனான். பிரதமருடன் சதுர்வேதியும் இருந்தார்.

வரவேற்ற பிரதமர் அக்‌ஷயிற்கு ஒரு மலர்க் கொத்தைத் தந்து விட்டு சொன்னார். "நியாயமாய் பகிரங்கமாய் ஒரு பெரிய விருது தரவேண்டும் உங்களுக்கு. ஆனால் நடந்ததை எல்லாம் வெளியே சொல்ல முடியாத நிலை எங்களுக்கு. அப்படி சொன்னால் நாட்டு நலன், கட்சி நலன் இரண்டுமே பாதிக்கப்படும். ஆனால் விளம்பரம் இல்லாமல் உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம். நீங்கள் வாய் விட்டுக் கேட்டால் போதும்..."

அக்‌ஷய் அடக்கத்துடன் சொன்னான். "எல்லாம் நல்ல படியாய் முடிந்து விட்டதே எனக்கு பெரிய விருது கிடைத்த மாதிரி தான். இனி எதுவும் எனக்கு வேண்டாம்"

பிரதமர் மனம் நெகிழ சொன்னார். "என்னை சந்திக்கும் ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒன்றை எதிர்பார்த்து தான் என்னிடம் வருகிறான்.

இது பிரதமர் பதவிக்கு வந்தது முதல் என் அனுபவம். ஆனால் முதல் முறையாக நான் என்ன செய்யவும் தயாராக இருக்கிற போதும் எதையும் எதிர்பார்க்காமல் இருக்கிற மனிதனைப் பார்க்கிறேன். உங்களைப் பாராட்ட வார்த்தை இல்லை. கடவுள் உங்களுக்கு எல்லா நன்மையையும் தருவார்..."

சதுர்வேதி அக்ஷயிடம் சொன்னார். "இப்ராஹிம் சேட் உன்னைப் பத்தரை மாற்றுத் தங்கம் என்றார். இரண்டு மகன்களைப் பறி கொடுத்த எதிரி வாயால் அந்த வார்த்தையைக் கேட்க வேண்டும் என்றால் அதை விடப் பெரிய விருது இல்லை...."

அக்ஷய் மனம் நெகிழ சொன்னான். "நான் அவரை எதிரியாக நினைக்கவில்லை. இப்போதும் அவரை என் தந்தை ஸ்தானத்தில் தான் வைத்திருக்கிறேன்...."

சதுர்வேதி ஒரு கணம் பிரமித்துப் போனார். பேச வார்த்தைகள் எழாமல் அவர் அக்ஷயை அணைத்துக் கொண்டார். பிரதமர் தனித்தனியாக மது, மகேந்திரன், ஆனந்த் மூவருக்கும் நன்றி சொன்னார். கேசவதாஸையும் பாராட்டினார். பிரதமரும் சதுர்வேதியும் அவர்களை அனுப்பி விட்டு வீரேந்திரநாத்தைப் பார்க்கக் கிளம்பினார்கள். வீரேந்திரநாத்தை ஜம்முவில் இருந்து டெல்லியில் உள்ள பெரிய மருத்துவமனை ஒன்றிற்கு

வரவழைத்திருந்தார்கள். அங்கு சென்று கோமாவிலும் அதிர்ச்சி முகபாவனையிலேயே படுத்திருந்த வீரேந்திரநாத்தைப் பார்த்து விட்டு வெளியே வந்த பிரதமர் பத்திரிக்கையாளர்களிடம் தன் நண்பர் வீரேந்திரநாத் விரைவில் குணமடைவார் என்று நம்புவதாகத் தெரிவித்தார்.

பிரதமர் அலுவலகத்திலிருந்து வெளியே வந்த பிறகு கேசவதாஸ் அக்‌ஷயிடம் சொன்னார். "நீ தீவிரவாதி அல்ல, அப்பாவி, உண்மையான தேசவிரோத சக்திகள் சதித்திட்டமிட்டு உன்னை தீவிரவாதியாகப் பொய்யாய் சித்தரித்திருக்கிறார்கள் என்ற விதத்தில் டிவி, பத்திரிக்கைகளில் அறிவிப்பு செய்திருக்கிறோம். வெடிகுண்டு வெடித்த ஒரு இடத்திலும் பெரிய சேதம் என்று சொல்வதற்கில்லை. ஒன்பது இடங்களில் அவர்கள் சிக்கலான இடத்தில் தான் குண்டு வைத்திருந்தார்கள். ஆனால் படாத பாடு பட்டு அதையெல்லாம் நம் ஆட்கள் கண்டுபிடித்து அதை செயல் இழக்க வைத்திருக்கிறார்கள். அதனால் நாடு பெரிய ஆபத்திலிருந்து உன் தயவால் காப்பாற்றப்பட்டு விட்டது. " பிறகு அவர் அக்‌ஷயிற்கு தன் வீட்டுக்கு ஒரு முறை வர அழைப்பு விடுத்தார். "...ஆனால் இந்த முறை வாசல் வழியே வா. உனக்குப் பயந்து என் குடும்பத்தினரை நான் வெளிநாட்டிற்கு அனுப்பி இருந்தேன். அவர்கள் நாளை வந்து விடுவார்கள். அவர்கள் உன்னைப் பார்த்தால் சந்தோஷப்படுவார்கள்..."

சஹானாவின் வீட்டுக்கு அக்ஷயை அழைத்துச் சென்றவர்கள் அவனை இறக்கி விட்டு விட்டு 'இதோ வந்து விடுகிறோம்' என்று சொல்லி விட்டு காரில் எங்கேயோ போனார்கள். அந்த அடுக்குமாடிக் கட்டிடத்தின் முன் நிற்கையில் அக்ஷய் மனம் லேசாகியது. அந்த வீட்டின் நினைவுகள் இனிமையானவை. அந்த வீட்டின் மனிதர்களும் கூடத்தான்....

பக்கத்து ஃப்ளாட் ஜெய்பால் சிங் அவன் கண்ணில் படவில்லை. சஹானா வீட்டு அழைப்பு மணியை அழுத்தினான். சஹானா தான் கதவைத் திறந்தாள்.

அக்ஷய் எந்த ஆபத்தும் இல்லாமல் தப்பித்து விட்டான் என்பதை மட்டும் மது சொல்லி இருந்தானே தவிர அக்ஷயின் வரவை மது முன்கூட்டியே தெரிவித்திருக்கவில்லை.

திடீரென்று அவனை அங்கு பார்த்ததும் சஹானா உணர்ச்சிகளின் பிரவாகத்தில் தன்னை மறந்தாள். எத்தனையோ கட்டுப்படுத்திக் கொண்டும் கண்களில் நீர் திரள்வதை அவளால் தடுக்க முடியவில்லை. அவன் அவளையே பார்த்தபடி அமைதியாக நின்றான். இருவராலும் சிறிது நேரம் பேச முடியவில்லை.

உள்ளே நுழைந்த பின் அவனாக மவுனத்தைக் கலைத்தான். "பெரியம்மா இல்லையா?"

"இல்லை. கோயிலுக்குப் போயிருக்கிறார்கள்."

"வருண்?"

"பள்ளிக்கூடம் போயிருக்கிறான்"

மறுபடியும் சிறு மவுனம். பிறகு அக்ஷய் மெல்லக் கேட்டான். "சஹானா, நான் ஒன்றைக் கேட்டால் நீங்கள் கோபித்துக் கொள்வீர்களா?"

"இல்லை. கேளுங்கள்"

"என்னைத் திருமணம் செய்து கொள்கிறீர்களா?"

அவளுக்கு காதில் விழுந்தது நிஜம் என்று நம்ப முடியவில்லை. அளவிட முடியாத சந்தோஷம் ஒரு நாள் தனக்கு கிடைக்கும் என்பதை அவள் நம்புவதை விட்டு நாட்கள் பல ஆகியிருந்தன. கனவல்ல என்பதை அவள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. அப்படி உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு குரல்

தழுதழுக்கச் சொன்னாள். "இப்படி ஒரு நாள் கேட்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு கனவில் மட்டுமே இருந்திருக்கிறது..."

பின் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு வருத்தத்துடன் சொன்னாள். "....ஆனால் ஒத்துக் கொள்வதில் எனக்கு ஒரு நெருடல் இருக்கிறது"

"அது என்ன?"

"நான் ஒருவனுடன் வாழ்ந்தவள். எனக்கு ஒரு மகன் இருக்கிறான். நீங்கள் கல்யாணமாகாதவர் மட்டுமல்ல எந்தப் பெண்ணிடமும் நெருங்கிக் கூட பழகாதவர். பொருத்தம் நியாயமாகத் தோன்றவில்லை...."

"பொருத்தம் மனதைப் பொருத்தது சஹானா. நீங்கள் கல்யாணம் செய்து கொண்ட மனிதன் உங்கள் உடலைத் தொட்டிருக்கலாம். ஆனால் உங்கள் மனதைத் தொட்டதில்லை. இந்த நேசம், இந்தக் காதல் நம் இரண்டு பேருக்குமே புதியது தான். வருணைப் பொருத்தவரை அவனை நான் நேசிக்கிறேன் சஹானா. என் மகனைப் போல இப்போது மட்டுமல்ல எப்போதும் நேசிப்பேன். நாம் திருமணம் செய்து கொண்டால் என்றுமே அவன் தான் என் மூத்த மகனாக இருப்பான்...."

சஹானா அவன் அன்பான வார்த்தைகளில் கரைந்து போனாள். பெருகி வழிந்த கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறியவள் ஓடி வந்து அவனைக் கட்டி அணைத்துக் கொண்டாள். "இப்போது இவ்வளவு அன்பு காட்டுகிற நீங்கள் அன்றைக்கெல்லாம் ஏன் பட்டும் படாமலும் இருந்தீர்கள்?". அவளுக்குக் கேட்காமல் இருக்க முடியவில்லை.

அவளை அணைத்துக் கொண்டபடி அக்‌ஷய் சொன்னான். "சஹானா, நான் உயிரோடு திரும்புவேனா என்பதே எனக்கு சந்தேகமாய் இருந்த போது நான் எப்படி என் மனதில் இருந்ததை உன்னிடம் காண்பிக்க முடியும். யோசித்துப் பார். முதலிலேயே நீ வாழ்க்கையில் நிறையவே அடிபட்டிருக்கிறாய். திரும்பவும் வாழ்க்கையில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி மறுபடியும் பெரிய அடி விழுந்தால் நீ தாங்க மாட்டாய். அதனால் தான் அப்போதெல்லாம் அப்படி நடந்து கொண்டேன்...."

அவன் பன்மையைக் கை விட்டு ஒருமையில் பேசியதைக் கேட்ட போது அவள் அணைப்பு இறுகியது. அவள் மீது அவனுக்கிருந்த அந்த கரிசனம் மனதிற்கு அதிக இதமாக இருந்தது.

ஆனாலும் ஒரு ஆதங்கம் அவளுக்கு இருந்தது. "எடுத்தவுடன்

கல்யாணத்தைப் பற்றி பேசுவதற்குப் பதிலாக 'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்று ஒரு வாக்கியத்தை சொல்லத் தெரியவில்லையா?"

"சொல்லாமலேயே நாம் இருவரும் மானசீகமாக உணர்ந்த விஷயம் அல்லவா அது."

அவள் பொய்க் கோபத்துடன் அவனைக் கடிந்து கொண்டாள். "என்ன தான் உணர்ந்தாலும் ஒரு பெண் காதலன் வாயால் அதைக் கேட்காமல் திருப்தி அடைய மாட்டாள். என்ன பெரிய அமானுஷ்யன். எத்தனையோ தெரிந்து வைத்திருக்கிறீர்கள், இந்த சின்ன அடிப்படை விஷயம் கூடத் தெரியவில்லையே"

அக்ஷய் அழகாய் புன்னகை செய்து அவள் மனதை ஒருமுறை கிறங்க வைத்தபடி சொன்னான். "எனக்கு நிறைய விஷயம் தெரியாது தான். இனிமேல் தான் தெரிந்து கொள்ள வேண்டும்..."

அவள் காதலுடன் அவனைப் பார்க்க அவளுடைய சிவந்த உதடுகளில் அவன் தன் உதடுகளைப் பதித்தான். அவர்கள் காலத்தை மறந்தார்கள்.....

**********

ஆனந்த், நர்மதா திருமணமும், அக்ஷய், சஹானா திருமணமும் எளிமையாய் ஒரு கோயிலில் நடந்தன. நர்மதாவின் உறவினர்கள் சிலர், கேசவதாஸ் மற்றும் அவர் மனைவி, ஆச்சார்யாவின் மனைவி லலிதா, இப்ராஹிம் சேட், அவர் மனைவி சாய்ரா பானு, மது, மகேந்திரன், ஜெய்பால் சிங், மஹாவீர் ஜெயின், அவர் மனைவி ஆகியோர் திருமணத்திற்கு வந்திருந்தனர்.

மஹாவீர் ஜெயினின் கோமா, மருந்தால் ஏற்பட்டதால் மாற்று மருந்தாலேயே குணப்படுத்த முடியும் என்று உணர்ந்து அக்ஷய் தன் திபெத்திய குரு ஒருவரிடம் சென்று தக்க மூலிகை மருந்தைக் கொண்டு வந்து கொடுத்து அவரை குணப்படுத்தி இருந்தான். குணமான பின்னும் மஹாவீர் ஜெயினிற்கு ராஜாராம் ரெட்டி இப்படி எல்லாம் செய்தார் என்பதை ஜீரணிக்கக் கஷ்டமாகத் தான் இருந்தது. ராஜாராம் ரெட்டியின் தற்கொலைக்குத் தனிப்பட்ட காரணம் என்றே செய்திகளை வெளியிட்டிருந்தார்கள். மேல்மட்டத்தில் சில பேரைத் தவிர வேறு யாரும் நடந்ததை எல்லாம் அறிந்திருக்கவில்லை.

இப்ராஹிம் சேட்டிடம் சதுர்வேதி போன் செய்து அக்ஷய் அவரைத் தகப்பன் ஸ்தானத்திலேயே வைத்திருப்பதாய் சொன்னதைச்

சொன்ன போது அவர் அடைந்த துக்கம் கொஞ்ச நஞ்சமல்ல. அன்று அவர் தொழுகை நடத்திய போது அல்லாவிடம் மனமுருக அழுதார். அவன் திருமணம் பற்றிய தகவல் கிடைத்த உடனேயே மனைவியுடன் கிளம்பி வந்தவர் அவனை மனமார வாழ்த்தினார்.
சாய்ரா பானு சாரதாவிடம் சொன்னாள். "இது போல் ஒரு பிள்ளையைப் பெற நீங்கள் நிறைய புண்ணியம் செய்திருக்கிறீர்கள். தங்கமான மனசு"

மஹாவீர் ஜெயினின் மனைவி சாரதாவிடம் சொன்னாள். "உங்கள் மகன் எனக்குக் கடவுள் மாதிரி தான். அவர் இல்லை என்றால் இப்போதும் அவர் கோமாவில் தான் இருந்திருப்பார்."

மரகதம் கடைசி காலத்தில் தனக்கு ஒரு மகன் கிடைத்திருக்கிறான் என்று சாரதாவிடம் நிறைவுடன் சொல்லிக் கொண்டாள். அவனை சந்தித்திரா விட்டால் கடைசி வரை ஜடமாகவே வாழ வேண்டி இருந்திருக்கும் என்று சொல்லி கண்கலங்கினாள்.

ஒவ்வொருவரும் தனித்தனியாக மகனைப் புகழ்ந்ததில் சாரதா அடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. காலமெல்லாம் இருந்த விரதத்திற்கு கடவுள் அவன் மகனிற்கு இத்தனை நேசத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார் என்று மனதார சொல்லிக் கொண்டாள். 'இதற்கு நன்றிக்கடனாக இனி ஏதாவது ஒரு விரதம்

இருக்க வேண்டும்...'

ஜெய்பால் சிங் அக்ஷயிடம் ஆதங்கத்துடன் சொன்னார். "ஒரு கற்பனையான முஸ்லீம் பெண்ணைக் காதலிப்பதாகச் சொல்லி நம்ப வைத்து என்னை ஒரு காமெடியனாக்கி விட்டாயே"

வருண் அனைவரையும் விட உற்சாகமாகவும், சந்தோஷமாகவும் இருந்தான். அவன் அக்ஷயை விட்டு சிறிதும் நகராமல் அக்ஷய் அருகிலேயே பெருமிதத்துடன் இருந்தான். ஜெய்பால் சிங்கிடம் வருண் மெல்ல சொன்னான். "எனக்கும் நிறைய சக்தி இருக்கிறது என்று நினைக்கிறேன்...தெரியாமலேயே நான் அக்ஷய் என்று அவர் பெயரையே அவருக்கு எப்படி சரியாக வைத்தேன் பார்த்தீர்களா?"

ஜெய்பால்சிங் வாய் விட்டு சிரித்தார்.

மது அக்ஷயிடம் சொன்னான். "அக்ஷய். நான் சஹானாவை இப்படி ஒரு சந்தோஷத்தில் என்றுமே பார்த்ததில்லை. உனக்கு எப்படி நன்றி சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை."

அக்ஷய் மனைவியிடம் சொன்னான். "சஹானா, இப்படி ஒரு நண்பன் கிடைக்க நீ நிறையவே கொடுத்து வைத்திருக்க வேண்டும்".

சஹானா அவர்கள் இருவரையும் பெருமிதத்துடன் பார்த்தாள்.

**********

அக்‌ஷய் தன் குடும்பத்தினர் எல்லோரையும் ஜம்முவில் இருந்த தன் புத்த பிக்கு குருவிடம் கூட்டிக் கொண்டு போய் வணங்கினான். அவர் அவன் வரவில் மகிழ்ந்தார். சஹானாவைத் தனியாக அழைத்து சொன்னார். "நான் ஒன்று சொன்னால் நீ வருத்தப்படக்கூடாது"

"சொல்லுங்கள்"

"அக்‌ஷய் சாதாரணமான மனிதனில்லை. அவனை யாரும் சாதாரணமாக மாற்றி விடவும் கூடாது என்பது தான் என் பிரார்த்தனையும் கூட. என்றாவது ஒரு நாள், உன் குழந்தைகள் எல்லாம் வளர்ந்து பெரிதான பிறகு அவன் கடமைகளை எல்லாம் முடித்த பிறகு அவன் மனதில் கண்டிப்பாக ஆன்மிகத் தேடல் பெரிதாக எழும். அந்த நேரத்தில் நீ அவனை உன் அன்பால் கட்டுப்படுத்தி தடை செய்ய நினைக்கக் கூடாது. அவனை நீ சந்தோஷமாக அனுப்பி வைக்க வேண்டும். அவனால் இனியும் ஆக

வேண்டியது நிறைய இருக்கிறது. அந்தக் காலத்தில் நான் இருக்க மாட்டேன். அதனால் தான் இப்போதே சொல்கிறேன்"

அந்த முதிய பிக்குவிடம் மனதார சஹானா சொன்னாள். "அவருடன் சில காலம் வாழ்ந்தாலும் கூட எனக்கு அது போதும். மீதியுள்ள காலத்திற்கு அந்த நினைவுகளுடனேயே நான் கழித்து விடுவேன். நான் அவரை சந்திக்கும் வரை சந்தோஷம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாதவள். இன்றைக்கு நான் நிறையவே சந்தோஷமாக இருக்கிறேன். எனக்கு இது போதும். அவருடைய எந்த ஒரு தேடலுக்கும் நான் எப்போதும் இடைஞ்சலாக இருக்க மாட்டேன்"

முதிய பிக்கு கனிவுடன் அவளைப் பார்த்துச் சொன்னார். "அக்‌ஷய் மனதில் இடம் பிடிக்க ஒரு சாதாரண பெண்ணால் முடியாது என்று நான் நினைத்து இருந்தேன். நான் நினைத்தது பொய்யாகவில்லை. புத்தர் அருள் உனக்குப் பரிபூரணமாய் கிடைக்கட்டும்."

************

அடுத்ததாக தன் குடும்பத்தினரை ஆரம்பத்தில் தனக்கு அடைக்கலம் கொடுத்த புத்த விஹாரத்திற்கு அக்‌ஷய் அழைத்துக் கொண்டு

போனான். அவனைக் குடும்பத்தினரோடு பார்த்த புத்த பிக்குகள் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைந்தார்கள். இளைய பிக்கு சின்னக் குழந்தை போல ஓடி வந்து அக்‌ஷயைத் தழுவிக் கொண்டார். மூத்த பிக்கு அவரைக் கண்டிப்பான பார்வை பார்க்க பின் மெள்ள விலகினார்.

எல்லோரும் அந்த பிக்குகளை வணங்கி ஆசிகளைப் பெற்றார்கள். சாரதா அந்த மூத்த பிக்கு காலில் விழுந்து வணங்கி கை கூப்பி அழுதாள். "அக்‌ஷய் நீங்கள் எல்லாம் அவனை எப்படி காப்பாற்றினீர்கள் என்று சொன்னான். என் பிள்ளையைக் காப்பாற்றியதற்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை"

மூத்த பிக்கு எல்லாம் அந்த புத்தரின் சித்தம் என்பது போல மஹா புத்தரின் திருவுருவச் சிலையைக் காட்டினார்.

இளைய பிக்குவிடம் அக்‌ஷய் சொன்னான். "என்னிடம் இப்போதும் நீங்கள் கொடுத்த சால்வை பத்திரமாக இருக்கிறது. உங்கள் நட்பின் அடையாளமாக நான் அதை என் வாழ்நாள் முழுவதும் விலை மதிக்க முடியாத பொருளாய் வைத்திருப்பேன்"

இளைய பிக்கு சொன்னார். "உனக்கு என்ன ஆயிற்றோ என்று நான் நினைக்காத நாளில்லை. இந்த தனிப்பட்ட பாசம் நல்லதல்ல,

பிக்குகளுக்கு உகந்ததல்ல என்று குரு அடிக்கடி சொல்வார். ஆனாலும் என் மனத்திலிருந்து உன்னை விலக்க முடிந்ததில்லை. இப்போது உன்னை நேரில் பார்த்த பிறகு உனக்கு இனி ஆபத்தில்லை என்று தெரிந்த பிறகு மனம் நிம்மதியாகி விட்டது. இனி ஒழுங்காக தினமும் தியானம் செய்வேன்"

அக்‌ஷயிற்கு கண்கள் கலங்கி விட்டன.

அங்கிருந்து விடை பெற்ற போது அவன் மனம் லேசாக இருந்தது. சில நாட்களுக்கு முன் ஒரு நள்ளிரவில் இங்கு குண்டடி பட்டு விழுந்த அவன், இன்னொரு நள்ளிரவில் கடுங்குளிரில் இங்கிருந்து போகுமிடம் தெரியாமல், சுய விவரம் தெரியாமல் அனாதையாய் கிளம்பியும் இருக்கிறான். ஆனால் நேசிக்கின்ற மனிதர்களும், குடும்பமும் சூழ்ந்திருக்க இங்கு வந்து கிளம்பும் இப்படி ஒரு நாள் இவ்வளவு சீக்கிரம் வரும் என்று எண்ணியிருக்கவில்லை.

இந்த புத்த பிக்குகள், அம்மா, பெரியம்மா எல்லோரும் சேர்ந்து செய்த பிரார்த்தனையின் பலன் தான் இது என்பதில் அவனுக்கு சந்தேகமில்லை.

வெளியே நல்ல குளிராக இருந்தது. ஒரு புறம் சஹானாவும், இன்னொரு புறம் வருணும் அவனை ஒட்டியபடி நடந்தார்கள்.

பின்னால் ஆனந்தும், நர்மதாவும் இயற்கை அழகை ரசித்தபடி வர, அவர்களுக்கும் பின்னால் சாரதாவும், மரகதமும் பேசிக் கொண்டு வந்தார்கள். பின்னால் திரும்பி அவர்களைத் திருப்தியுடன் புன்னகையுடன் பார்த்து விட்டு அக்ஷய் மனைவியையும், மகனையும் தன்னுடன் மேலும் இறுக்கமாக சேர்த்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

சஹானா அவளுக்குப் பிடித்த பாடலை அவனுக்கு மட்டும் கேட்கும்படி பாடினாள்.

You're here, there's nothing I fear
and I know that my heart will go on.
We'll stay, forever this way
you are safe in my heart
and my heart will go on and on.

மனைவியைக் காதலுடன் பார்த்த அக்ஷயிற்கு அந்த நேரத்தில் தோன்றியது. "சொர்க்கம் என்பது எங்கோ இருக்கும் தனி இடமல்ல. நேசிப்பவர்களுடன் சேர்ந்திருக்கும் இந்த இடம் தான்...."

(முற்றும்)

மேலும் மின்நூல்களுக்கு
www.tamilnesan1981.blogspot.in

மேலும் மின்நூல்களுக்கு
www.tamilnesan1981.blogspot.in